
சங்கமம்
யத்தனபூடி சுலோசனா ராணி

# சங்கமம்

(நாவல்)

முதற் பாகம்

தெலுங்கு மூலம்

யத்தனபூடி சுலோசனாராணி

தமிழில்

கௌரி கிருபாநந்தன்


**கலா நிலையம்**

244, ராமகிருஷ்ணா மடம் சாலை,

மயிலாப்பூர், சென்னை-600 004.

# முன்னுரை

திருமதி யத்தனபூடி சுலோசனாராணி அவர்கள் எழுதிய "ஜீவன தரங்காலு" என்ற தெலுங்கு நாவல் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டு "சங்கமம்" என்ற தலைப்பில் வாசகர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ளது.

அழகும், அபிமானமும் நிறைந்த ரோஜா, அவளை மனப்பூர்வமாக ஆராதிக்கும் அனந்த— பிடிவாதத்திற்கு மறு பெயராகத் திகழ்ந்த விஜய்...

விதிவசத்தால் கணவனைப் பிரிந்து, நடைப் பிணமாய் வாழ்ந்து, துயரம் நீங்காமலேயே மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்ட சாவித்திரி...

தங்கையின்பால் பரிவும், பாசமும் கொண்ட சங்கரன், அவர் மனைவி சுந்தரி—தன்னுடைய அழகால் மற்றவர்களை ஈர்க்க முயலும் லாவண்யா...

இந்தக் காலத்தில் கொள்ளைகள் நடக்காதது எங்கே என்று தன்னுடைய செயல்களை, வாழ்க்கை யின் முறையை நியாயப்படுத்திக் கொள்ளும் சேந்து... உண்மை தெரிந்த பிறகும், அதை வெளியிட முடியாமல் பாசத்தால் தவிக்கும் தந்தை வேணுகோபாலன்...

மற்றும் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் பல கதாபாத்திரங்களுடன் அறிமுகம் செய்துகொள்ள, இந்த நாவலை கையில் எடுத்தாலே போதும்... காட்சிகள் நம் கண்களுக்கு முன்னால் திரைப் படமாய் ஓடும்.

மொழி பெயர்ப்புக்கு அநுமதி வழங்கிய திருமதி யத்தனபூடி சுலோசனாராணி அவர்களுக்கும், புத்தகமாக வெளியிட்ட கலா நிலையம் நிறுவனத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கௌரி கிருபாநந்தன்

24166
A114288

# வாழ்க்கை அலைகள்

## PART—I

## 1

பனிக்காலம்-அதிகாலை ஆறு மணிக்கு அடர்த்தியாக படர்ந்திருந்த பனிப்போர்வை கொஞ்சம் கொஞ்சமாய் விலகிக் கொண்டிருந்தது.

சென்ட்ரல் ரயில் நிலையம் - இன்னும் சற்று நேரத்தில் ரயில் ஒன்று ப்ளாட்ஃபாரத்தை வந்து அடையப் போவதற்கு அடையாளமாய் சிக்னல் தெரிந்தது...

நகரத்தில் நடக்க இருக்கும் இந்திய-ரஷ்ய நாடுகளின் கலாச்சார விழாவில் பங்கு பெற வந்து கொண்டிருக்கும் ரஷ்யக் குழுவினரை வரவேற்க, விழாத் தலைவர்களில் முக்கியமானவர்கள், பற்களை கிட்டிக்கச் செய்யும் அந்தக் குளிரையும் பொருட்படுத்தாமல், கைகளில் பூமாலைகளுடன் வரிசையாக நின்றிருந்தார்கள்...ஓரிரு நிருபர்களும், போட்டோகிராபர்களும் பரபரப்பாய் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். பழக்கத்லைதவிட மக்களின் கூட்டம் இருமடங்காய் இருந்தது.

பத்து நிமிடங்கள் கழித்து-தரையை அதிரச் செய்து கொண்டே ரயில் ப்ளாட்பாரத்தில் வந்து நின்றது. ரயில்

நிற்கும் முன்னே இந்திய-ரஷிய கலாச்சாரக்குழு என்று பானர் கட்டப்பட்டிருந்த கம்பார்ட்மெண்டை நோக்கி எல்லோரும் ஓடினார்கள்.

இதற்கிடையே போர்ட்டர்கள் - இரண்டாம் வகுப்புப் பெட்டிகளில் எப்படியோ புகுந்து பயணிகளின் பெட்டி படுக்கைகளை சுமப்பதற்காகக் கவர முயன்றார்கள்... தங்களை தொந்தரவு படுத்த வேண்டாமென்றும்—சற்று பொறுமையாக இருக்கச் சொல்லி சத்தம் போடும் பயணிகளின் கூக்குரல்களால் அங்கு களேபரமாய் இருந்தது.

ரஷியக் குழுவினர் வந்த கம்பார்ட்மெண்டுக்கு பக்கத்தில் இருந்த முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து வயதானவர் ஒருவர் மிக நிதானமாக இறங்கினார்—மற்றவர்களைப் போல் விடு விடு என்று இறங்க அவர் முயலவில்லை—கையில் லெதர் பேக் வைத்திருந்தார். மெதுவாக இறங்கியவர் கும்பலுடன் சேராமல் தனியாக நின்று கொண்டார்—தூக்கமின்மையால் அவருடைய கண்கள் உப்பியிருந்தன. கண்களில் கீழே தென்படும் கருவளையங்கள், அவருடைய உடல் நலம் சரியில்லையென்ற விஷயத்தை பறைசாற்றியது. சற்று கவனமாய் பார்த்தால் அந்தக் கண்களில் தென்படும் கருணை, அமைதி நம்மை ஈர்த்து விடும்—கையில் அணிந்திருந்த தங்க கைக்கடியாரம், வைர மோதிரங்களை பார்த்தால், அவர் பெரிய பணக்காரர் என்பதை எளிதாக ஊகித்து விடலாம்.

கையில் இருந்த லெதர் பேக்கில் மிக விலையுயர்ந்த பொருளேதோ இருப்பதால், அதை ரொம்ப கவனமாய் பிடித்துக் கொண்டிருந்தார்- யாரையோ எதிர்பார்த்து நின்றிருந்தார்—

அவருக்குச் சற்று தொலைவில்—காமெராக்களின் ஃப்ளாஷ்கள் பளிச்சென்று மின்னிக் கொண்டிருந்தன—பூக்களின் நறுமணம் எங்கும் பரவியது—அறிமுகப்படலமும்—கைக்குலுக்கல்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.



நடுநடுவில் கைதட்டல்கள் காதைப் பிளக்கச் செய்தன—அங்கு ஒரே கோலாகலமாய், சந்தடியாய் இருந்தது—இந்தச் சந்தடியை பொருட்படுத்தாதவராய் நின்றிருந்த அந்தப் பெரியவர்—இந்த இரைச்சல் முடியும் தருவாயை நோக்கி காத்திருப்பதோடு, தான் எதிர்பார்க்கும் நபர் வராததால் சற்று பொறுமையிழந்து காணப்பட்டார்.

கிட்டத்தட்ட கால்மணி நேரம் கழித்து அந்தச் சந்தடி குறைந்தது—மக்களின் கூட்டமும் குறைந்து விட்டிருந்தது—ரஷியக் குழுவினர் கழுத்தில் பூமாலைகளுடன் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அந்தக் குழுவினரை வரவேற்க வந்தவர்களில் முக்கியமானவனாக தென்பட்ட இளைஞன்—அவர்களுக்கு முன்னால் சென்று கொண்டு இருந்தான்—வெண்மை நிறம் பளிரிடும் உடைகளில், அழகாக வாரப்பட்ட கேசத்துடன், உயரம் சற்றுக் கூடுதல் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கும் உருவம்.

அவ்விளைஞனின் பின்னால் வந்து கொண்டிருந்த அவனது நண்பன, அவன் தோளில் கையைப் பதித்து நிறுத்தி விட்டு, ''விஜய், அங்கு நின்று கொண்டிருப்பது உங்க வேணுகோபால் அங்கில்தானே?'' என்று கேட்டான்.

விஜய் என்று அழைக்கப்பட்ட அந்த இளைஞன் நின்று தலையை திருப்பிப் பார்த்தான்—சுறுசுறுப்பாய் தீட்சண்யமாய் இருந்த அவன் கண்கள் வியப்பால் விரிந்தன—தலையை அசைத்துவிட்டு ' ஆமாம்—ஆமாம்—அவர் தான்—ஆனால் அவர் இந்த ரயிலில் வரப்போவதாக எனக்குத் தெரியாதே—நீ போய்க் கொண்டிரு...நான் ஒரு நிமிடத்தில் வந்து விடுகிறேன்'' என்றவன், சட்டென்று திரும்பி விடுவிடுவென்று அவரை நோக்கி நடந்தான்.

லெதர் பேக்கை பிடித்துக் கொண்டு, வேட்டியும் ஜிப்பாவும் அணிந்திருந்த, வேணுகோபால் என்று நண்பனால் சுட்டிக்காட்டப்பட்ட பெரியவரின் முகம்—விஜயைப் பார்த்ததும் மலர்ந்தது—கையை ஆதரவாய் முன்

நோக்கி நீட்டிக் கொண்டே "விஜய்—எனக்காக நீ வந்திருக்கிறாயா?" என்றார்.

விஜய் அவருடைய கையை, தன் இருகரங்களால் பற்றிக் கொண்டான்—"இதென்ன? நீங்க இந்த ரயிலில் வரப் போவது எனக்குத் தெரியவே தெரியாதே—" என்றான். அவன் குரலில் ஆச்சரியம் கலந்திருந்தது.

வேணுகோபாலனின் முகத்தில் கருநிழல்கள் படர்ந்தன. "தெரியாதா?-உன்னிடம் லாவண்யா சொல்லவில்லையா?"

"இல்லை—எனக்கு சுத்தமாக தெரியாது—நான் ரஷியக் குழுவினரை வரவேற்க வந்தேன்—உங்களைப் பார்த்ததும் வியப்படைந்து விட்டேன்—"

"நீ வேலை மும்மரத்தில் லாவண்யாவை சந்திக்கவே இல்லையோ?"

"நேற்று மாலை கூட ராதையைப் பார்க்கப் போயிருந்தேன். லாவண்யா கிளப்புக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். நாங்க இருவரும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை என்பது உண்மைதான்—ஆனால் நீங்க வரப்போவதாக ஒரு வார்த்தை சொல்ல எவ்வளவு நேரமாகி விடும்."

வேணுகோபாலன் பெருமூச்சை விட்டார் அவருடைய குரலில் வேதனையும், சோர்வும் கலந்து இருந்தது—"அப்படி யென்றால் நான் வருவதில் அவளுக்கு விருப்பமில்லைபோலும்—நான் இன்று வருவதாக உனக்குத் தெரியப்படுத்தச் சொல்லியும், ராதையை ஸ்டேஷனுக்கு அழைத்து வரச் சொல்லி டெலிகிராமில் தெளிவாக குறிப்பிட்டும் இருந்தேன்—என் வார்த்தையை மதிக்க வில்லை—நான் இல்லாத இந்த ஆறுமாத காலம் அவளை மாற்றவேயில்லை."

விஜயைப் பார்த்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சியானது பெரிய மகளின் பேச்சு வந்ததும் ஆவியாகி விட்டிருந்தது.

"உங்க உடல் நலம் இப்போ எப்படி இருக்கு?" பேச்சை மாற்றுவதற்காக சட்டென்று கேட்டான்—விஜய்.



"பரவாயில்லை—ராதைக்காகத்தான் இங்கே திரும்பி வரத் தோன்றியதே தவிர, அங்கிருந்து வர வேண்டும் என்ற உணர்வே ஏற்படவில்லை—அத்தனை மன அமைதியுடன் அங்கு காலத்தைக் கழித்தேன்."

"உங்களுக்காக ஸ்டேஷனுக்கு யாருமே வரவில்லையா?" சுற்றிலும் பார்த்துக் கொண்டே விஜய் கேட்டான்—

"என்னவோப்பா? இது வரை யாரும் தென்படவில்லை—வந்திருக்காங்களோ இல்லையோன்னு கூடத் தெரியாது—அதான் இந்த சந்தடி குறைந்த பிறகு தேடிப் பார்க்கலாமென்று ஓரமாய் நின்று கொண்டேன்—"

அவர் அப்படிச் சொல்லும்போதே—சுற்றிலும் பார்வையை ஓட்டிய விஜய்—"அதோ—ராமு வந்திருக்கிறான்—" என்றவன் கையை உயர்த்தி—"ராமு—இங்கே இந்தப் பக்கம்" என்று அழைத்தான்.

ராமு அருகில் வந்து இருவருக்கும் பவ்யமாக வணக்கம் தெரிவித்துவிட்டு நின்றான்.

"சின்னம்மா எங்கே? அழைத்து கிட்டு வரவில்லையா?" எதிர்பார்ப்பின் மிகுதியில் வேகமாய் கேட்டார்.

"இல்லீங்க... ரயில் லேட்டாக வரும் என்று சொன்னாங்களாம்... எப்ப வருமோ என்னவோ... சின்னம்மா வேண்டாம்...நீ மட்டும் போயிட்டு வான்னு லாவண்யாம்மா சொன்னாங்க..." தாழ்ந்த குரலில் பாதி வார்த்தைகளை முழுங்கிவிட்டவன் போல் முணுமுணுத்தான் ராமு...

வேணுகோபாலின் புருவங்கள் முடிச்சேறின. நெற்றி சுருங்கியது. ஒரு கணம் அவருடைய முகம் ரொம்ப ஏமாற்றம் அடைந்தது போல் தென்பட்டது. "பார்த்தாயா என் நிலைமை" என்பது போல் விஜயை நோக்கினார். கையிலிருந்த பேக்கை எடுத்து சரேலென்று ஜிப்பை திறந்து, உள்ளேயிருந்து, பளபளவென்று மின்னிக் கொண்டிருந்த நெக்லஸை எடுத்து விஜயிடம் காண்பித்தார்.

"பார்... விஜய்... நான் இங்கிருந்து போகும் போது ராதை இது வேண்டுமென்று ரொம்ப ஆசைப்பட்டாள்... இதுக்காக... ஒரு நாள் கூட தங்கும்படி ஆயிற்று. ரயிலை விட்டு இறங்கியதும் எதிர்கொள்ளும் குழந்தையின் கழுத்தில் போட்டு, அவளை மகிழச்செய்து அந்தக் காட்சியைக் கண்டு நான் சந்தோஷப்படவேண்டுமென்று எத்தனை ஆசையுடன் வந்தேன் தெரியுமா? லாவண்யா துளிக்கூட மாறவில்லை யென்றும், நடந்ததற்கு பச்சாத்தாபப்படவில்லையென் பதற்கு இதைவிட சாட்சியம் வேறு என்ன வேண்டும்? நாங்க இருவரும் தந்தையும்... மகளுமாய் படைக்கப்பட்டது எந்தக் காலத்து கர்மவினையோ? அவளை சொல்லு வானேன்? இதெல்லாம் என்னுடைய பிராரப்த கர்மா... இதிலிருந்து தப்பித்துக் கொள்வது முடிகிற காரியமா? சொல்லு" நெக்லஸை பெட்டியில் வைத்து ஜிப்பை இழுத்து மூடினார்.

அவர் அம்மாதிரி சொன்னதில் தென்பட்ட ஏமாற்றம், சோர்வு, மன அமைதியின்மை... இவையெல்லாம் ஒன்று கூடி விஜய் மனதை தளரச்செய்து விட்டன.

என்ன பதில் சொல்லுவதென்று உடனே தோன்ற வில்லை. அவரை வேதனைக்குள்ளாக்கிய லாவண்யா, அந்தக் கணம் எதிரே இருந்தால், இழுத்து கன்னத்தில் ஒரு அறை கொடுக்க வேண்டும் போல் ஆவேசமும், ஆத்திரமும் எழும்பிற்று. லாவண்யா என்று இல்லை... அவரை யார் வேதனைப் படுத்தினாலும் அந்த நபர் யாராக இருந்தாலும் கடினமாய் தண்டிக்கத் தோன்றும்.

விஜய் நயமாக ஏதோ சொல்ல முற்படுவதற்குள்... நண்பன் ஓடிவந்தான். "விஜய் இன்னும் எத்தனை நேரம் வா... அவங்கயெல்லாம் உனக்காக காத்துகிட்டு இருக் காங்க. க்ரூப் போட்டோவாம்... மேயர் உன்னைக் காணமே என்று விசாரித்துக் கொண்டிருக்கிறார்."



விஜய் பணிவுடன் வேணுகோபாலனிடம் விடை பெற்றுக் கொண்டே "மாலையில் வந்து உங்களை சந்திக் கிறேன்." என்றான்.

"ஆகட்டும்... போய் வா... நீயாவது கண்ணில் பட்டாய்... அதுவே எனக்கு மகிழ்ச்சியாய் இருக்கு..." விஜய் தோள் மீது லேசாக தட்டிக் கொடுத்து விடை கொடுத்தார்.

விஜய் போகும் போது அவனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த, அவருடைய கண்களில் ஒரு தந்தையின் பரிவு எட்டிப் பார்த்தது... விஜய்... தன் கண் முன் வளர்ந்த விஜய்... பதினாறு வயது இருக்கும் போது தந்தை இறந்து விட்ட பிறகு, பிறந்த வீட்டு சொத்து கொண்டு வந்த அகம்பாவத்தில் மாற்றான் தாய் அவனை இழிவாய் பேசி, தாழ்வாக மதிக்க... அந்த அவமானம் தாங்காமல் வீட்டைவிட்டு வெளியேறினான். எத்தனையோ கஷ்டங்களுக்கு இடையே படிப்பையும் தொடர்ந்தான். பட்டப்படிப்பு கடைசி வருடம் படித்துக் கொண்டிருக்கை யில், அவனுடைய மதிப்பை உணர்ந்த சித்தி... அவசரப் பட்டு அவனை தூற்றியதற்கு வெட்கி தானே வலியமாய் அவனிடம் சென்று மன்னிப்பு கேட்டுக் கொண்டாள்.

"இந்த வீட்டுக்கு நீ தான் மூத்தவன்... உன் உதவி எனக்கு ரொம்ப தேவையாய் இருக்கு... ஆண் துணை யில்லாத என்னை உறவினர்கள் பிடுங்கி எடுக்கிறார்கள்... நீ வந்தாலொழிய என்னால் உயிர் வாழ முடியாது. சொல்லு நீ வரப்போறியா, இல்லை... இங்கேயே புடவைத் தலைப்பில் தூக்கு போட்டுகிட்டு சாகட்டுமா?" என்று அடம் பிடிக்க, அவளுடைய கஷ்டத்தை உணர்ந்து, வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

அவன் எம். ஏ. முதல் வகுப்பில் பாஸ் செய்து, லக்லேஜுக்கு படிக்கும் போது... லாவண்யாவை அவனுக்கு மணம் முடித்து, தன்னுடைய வீட்டுப் பொறுப்பையும்,

சொத்து விவகாரத்தையும், அவனிடம் ஒப்படைக்க எண்ணி அவனிடம் தன் விருப்பத்தை வெளியிட்டார்.

"வேண்டாம்... உங்களை என் தந்தையை விட அதிகமாக மதிக்கிறேன். நமக்கிடையே உறவு முறை ஏற்படுத்தி அன்பை விலக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டாம்... லாவண்யாவின் சுபாவம் நான் நன்றாக அறிவேன். குணத்தில், சுபாவத்தில், எண்ணங்களில் எனக்கு நேர் எதிர், அது மட்டுமில்லை... நான் இப்போ திருமணம் செய்து கொள்வதாக இல்லை. அப்படிச் செய்து கொண்டாலும், என் தந்தை என் தாயை விருப்பப்பட்டுக் கல்யாணம் செய்து கொண்டது போல்... எனக்குப் பிடித்த ஏழை வீட்டுப் பெண்ணையே கைபிடிப்பேன். சொத்து படைத்த... அந்தஸ்தில் உயர்ந்த குடும்பத்திலிருந்து வந்த பெண்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்று என் சித்தியைப் பார்த்து நான் நன்றாக உணர்ந்து இருக்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள்... இந்த ஒரு விஷயத்தைத் தவிர... நீங்க எது சொன்னாலும் நான் மறுக்காமல் செய்கிறேன்" என்று பணிவாய், நயமாய், தன் விருப்பமின்மையை, எவ்வித தயக்கமுமின்றி தெரிவித்தான்.

வேணுகோபாலனின் மனம், திடீரென்று விஜயின் நினைவுகளால் இளகி விட்டது.

வீட்டுக்குத் திரும்பி வந்தாலும்... அவன் சித்தியிடமிருந்து சல்லிக்காசுகூட எற்றுக் கொள்ளவில்லை. படிப்புக்காக தேவையாய் இருந்த பணத்தை தன்னிடமிருந்து கடனாகப் பெற்று, விடுமுறை நாட்களில் உழைத்து சம்பாதித்து, கடனை அடைத்து விடுவான். அந்தச் சின்ன வயதில் அவனிடம் தென்பட்ட சுய மரியாதைக்கும், நேர்மையான பேச்சுக்கும் அவர் ஈர்க்கப்பட்டார்.

போகப் போக அவனை நன்றாகப் புரிந்து கொண்ட சித்தி இறக்கும் முன்... சொத்தையெல்லாம் தன் மகன் அனந்த் பெயருக்கு எழுதிவைத்தாலும், அதனை



நிர்வகிக்கும் பொறுப்பை விஜயிடம் ஒப்படைத்தாள். சொத்தில் பங்கு பிரித்து கொடுத்தால்... அதை மறுபடியும் அனந்திடமே ஒப்படைத்து விடுவான் என்ற பயத்தில் அவள் சொத்தை பராமரிக்கும் பாரத்தை விஜயிடம் ஒப்படைத்தாள். சொத்திலிருந்து வரும் வருமானத்தில் விஜய் ஏதேனும் செலவழித்தால், கேள்வி கேட்கும் உரிமையோ, அதை எதிர்க்கும் அதிகாரமோ அனந்துக்கு இல்லாமல் செய்து விட்டாள்.

ஆனால் சித்தி உயிருடன் இருக்கும் போது... எவ்வளவு பொறுப்பாக சொத்து விவகாரங்களை கவனித்து வந்தானோ.. இன்றும் அப்படித்தான், நிர்வகித்து வந்தான். அன்று எப்படி பணத்தை துச்சமாக மதித்தானோ இன்றும் அப்படித்தான்.

விஜய் வக்கீலாக முன்னுக்கு வந்து கொண்டிருந்தான். அவனை "லா" படிப்பதற்கு ஊக்குவித்தது தான்தான் என்று நினைவுக்கு வந்த போது, அவரது நெஞ்சு கர்வத்தால் விம்மியது.

விஜய் திறமை வாய்ந்தவன்— நல்ல இதயம் படைத்தவன்...

நல்ல இதயம் படைத்தவர்கள் திறமைசாலிகளாகவும் இருந்தால், இவ்வுலகில் நிறைய ஏழைகளுக்கு, நலிந்தோருக்கு நன்மை ஏற்படும். நியாயம் கிடைக்க வழி கோலிடும்... அதனால்தான் அவனை வக்கீலுக்குப் படிக்க உற்சாகப் படுத்தினார்.

எப்படிப்பட்ட மனிதர்களையும் வசப்படுத்திக் கொள்ளும் சாதுரியம் அவனிடம் இருந்தது. எதையும் சாதிக்க வேண்டும் என்ற பிடிவாதம் இருந்தது— நல்லது கெட்டத்தை பிரித்துப் பார்க்கும் விவேகம் எங்கு விட்டுக் கொடுக்க வேண்டுமோ—எங்கே பிடியை இறுக்க வேண்டுமோ நன்றாகத் தெரிந்தவன்— சின்ன வயதில் பொருளாதார ரீதியாக அவன் பட்டிருந்த கஷ்டநஷ்டங்கள்

அவனுடைய குணாதிசயத்தை வைரம் போல் பட்டை தீட்டியது.

எத்தனையோ பேருக்கு தான் உதவிபுரிந்து இருந்தாலும், விஜய் நினைவு வைத்துக் கொண்டாற்போல் எவரும் நினைவில் வைத்துக் கொள்ளவில்லை. விஜய் தனக்கு மருமகனாகியிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்— தன் வாழ்க்கை நிம்மதியாக, எவ்வித கவலையில்லாமல் கழிந்து விட்டிருக்கும். பிடிவாதம் நிறைந்த, துடுக்கான கர்வம் கொண்டவளும், செலவாளியான லாவண்யாவை கொஞ்சமாவது வழிக்குக் கொண்டு வந்திருப்பான் அதைவிட முக்கியமாக தன் உயிருக்கும் மேலான, ஊமைப் பெண் ராதைக்கு தனக்குப் பிறகு, அவனது நிழலில் தந்தை போன்ற அரவணைப்ப கிடைத்திருக்கும்... ஆனால் தன்னுடைய பிரச்னைகளுக்கு அவனுடைய வாழ்க்கையை பலியிடுவது எந்த விதத்தில் நியாயம்? இவ்விஷயத்தை நினைவு கூர்ந்தபோது, தன் வேண்டுகோளை நிராகரிக்க சங்கடப்பட்டு பணிந்துபோய், தம் இருவரின் வாழ்க்கையை துப்பரமாக்காமல் முன்பே தீர யோசித்து. நிராகரித்த அவனுடைய தைரியத்தையும். தெளிவான நோக்கையும் எண்ணியபோது — அவரால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

மகன் இல்லாத தன் வாழ்க்கையில், அந்த குறையே தெரியாமல், தன்னிடம் அன்பாக, பரிவாக, நடந்து கொள்ளும் விஜயைப் பார்க்கும் போதெல்லாம், அவருக்கு விஜயின் தந்தையும், தன் நண்பனுமான ரங்கநாதனை, கையெடுத்துக் கும்பிடத் தோன்றும்.

டிரைவர் ராமு அவருடைய பெட்டி, படுக்கையை இரு கைகளால் தூக்கிக்கொண்டு கிடுகிடுவென்று நடக்கத் தொடங்கினான். அப்பொழுது வேறு ஒரு ரயில் வந்து நின்றதால், மறுபடியும் ப்ளாட்ஃபாரம் முழுவதும் மக்கள் கூட்டம் நிரம்பியது...



சற்று பருத்த சரீரம் படைத்த வேணுகோபாலனால், அந்தக் கூட்டத்துக்கு இடையில் புகுந்து வேகமாய் நடக்க முடியவில்லை... விஜய் பற்றிய சிந்தனையில் மூழ்கி, கவனம் எங்கேயோ இருக்க, யார் மீதும் இடித்துக் கொள்ளாமல் அவர் சிரமப்பட்டு, நான்கைந்து அடிகள் தூரம்தான் சென்றிருப்பார். எதிர்பக்கத்திலிருந்து வேகமாய் வந்த ஒரு இளைஞன், அவர்மீது சடாரென்று மோதினான். அடி நேராக மூக்கில் பட்டுவிட்டதால் கண்கள் இருண்டு, உயிரே போனார் போலாயிற்று அவருக்கு...ஒரு கணம் உலகம் கிர்ரென்று சுழன்றது. பின்புறமாய் கீழே விழப்போனவர் எப்படியோ சமாளித்துக்கொண்டு, தள்ளாடி ஒரு நிலைக்கு வந்தார். தலைச்சுற்றல் நின்ற மறுகணம், அவர் தன் கையில் பேக் இல்லாததை உணர்ந்து கொண்டு விட்டார். சடாரென்று திரும்பிப் பார்த்தார்...

அந்த இளைஞன், அவரை வேண்டுமென்றே இடித்து, பேக்கை பறித்துக் கொண்டு, மக்கள் கூட்டத்தில் மின்னல் போல் மறையும் நேரம்...

பெருங்குரலில் கத்திவிட்டார்... "என் பேக்...பிடிங்க... திருடன்... தீஃப்... தீஃப்... பிடிங்க..."

மறுநிமிடம் ப்ளாட்ஃபாரம் முழுவதும் சத்தமும், கூச்சல்களுடன் நிறைந்துவிட்டது. எல்லோரும் ஏதோ நடந்து விட்ட அதிர்ச்சியில், திக்பிரமை அடைந்தவர்களாய் நின்று விட்டார்கள். அவர் மட்டும் ஓடமுடியாவிட்டாலும், சிரமப் பட்டு ஓடிக்கொண்டே "காச் ஹிம் அதில் டைமண்ட் நெக்லெஸ் இருக்கு" என்று பைத்தியம் பிடித்தவர்போல் கைகளை ஆட்டினார்.

பேக்கைப் பறித்துக் கொண்டவன்—ரொம்ப வேகமாய் ஓடி ப்ளாட்ஃபார்ம் மீது நின்றிருந்த ரயிலில் ஏறி, மறுபக்கம் இறங்கி ஓடத் துவங்கினான்—ஓடும்போதே—பேக்கின் ஜிப்பை திறந்து, அதிலிருந்த நகையை மட்டும் எடுத்து பேண்ட் பையில் திணித்துக் கொண்டு பேக்கை வீசி எறிந்து விட்டுத் தண்டவாளத்தில் வேகமாய் ஓடத் துவங்கினான்...

அவன் ஓடும் விதத்தைப் பார்க்கும்போது—கம்பிபோல் வளையும் ஆனால் உறுதியாக இருந்த அந்த உடல்வாகையும் பார்த்தால், அந்த ஓட்டம் என்பது அவன் ரொம்ப நாட்களாய் கற்றுக்கொண்ட பாடம் என்றும், அதில் அவன் கை தேர்ந்தவன் என்றும் புரிந்துவிடும்...ஓரிரு ரயில்வே போர்ட்டர்கள், பொது மக்களில் சிலர்...அவனைப் பிடிக்க முயன்று...அந்த வேகத்தை எட்டமுடியாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டு பின் தங்கிவிட்டார்கள்— அவர்களில் ஒருவன் "அதோ பேக்கை'வீசி விட்டான்" என்று கத்த, மற்றொருவர் ஓடிச் சென்று அதை எடுத்து உள்ளே பார்த்த போது, நகையைக் காணவில்லை.

இன்னும் கொஞ்சம் தூரம் ஓடியிருந்தால் அந்தத் திருடன் தப்பித்துக்கிட்டிருப்பானோ என்னவோ—ஆனால் அங்கு தண்டவாளத்தை பரிசோதித்துக் கொண்டிருந்த ரயில்வே ஊழியர் ஒருவர், தொலைவிலிருந்து இளைஞனின் ஓட்டத்தையும்...பின் தொடர்ந்தவர்களின் கூச்சல்களையும் கவனித்துவிட்டு, விஷயம் இன்னதென்று புரியாவிட்டாலும், பின்னாலிருந்து வந்து அந்த இளைஞனை கைகளால் பிணைத்து பிடித்துவிட்டார்...திடீரென்று சிறைபட்டதும்—அவன் தன்னை விடுவித்துக் கொள்ள போராடினான் கால்களால் உதைத்தான், தலையால் முட்டினான். அவன் இவனை மடக்க, இவன் அவனை அடிக்க, சற்றுநேரம் கைகலப்பு நிகழ்ந்தது. கடைசியில் ரயில்வே ஊழியர் அந்த இளைஞனை கீழே தள்ளிவிட்டு...அசைய முடியாதவாறு கரடிப்பிடியாய் அழுத்தமாய் பிடித்துக் கொண்டார். அந்தப் பிடியிலிருந்து அந்த இளைஞனால் விடுபட முடியவில்லை—அதற்குள் மற்ற ஜனங்களும் வந்து சூழ்ந்து கொள்ளவே—பணிந்து போவதைவிட வேறு வழியில்லாமல் போய் விட்டது, அந்த இளைஞனுக்கு.

பத்து நிமிடம் கழித்து, பேக்கையும், நகையையும்—அதைத் திருட முயன்ற அந்த இளைஞனையும் சேர்த்து, வேணுகோபாலனின் காலடியில் போட்டார்கள். அவர்



பேக்கைத் திறந்து, அதில் நகையை வைத்துவிட்டு—பெரிய ஆபத்து நீங்கியதுபோல் நிம்மதியாய் மூச்சை விட்டுக் கொண்டார்.

எதிர்பாராமல் தனக்கு இப்படி கஷ்டத்தைக் கொடுத்த அந்த இளைஞனைப் பார்த்ததும் அவருக்குக் கோபம் தாங்க முடியவில்லை, கையை நீட்டி அவனுடைய இரு கன்னங்களிலும் மாறிமாறி அடித்தார். "புத்தியில்லையா—ராஸ்கெல்—எருமை மாடு மாதிரி இருக்கே?" என்றார். இன்னும் அவனை திட்ட வேண்டும் என்று தோன்றினாலும் மூச்சு இறைத்ததால், வாயில் வார்த்தைகள் வரவில்லை.

அதற்குள் கும்பலாய் கூடி விட்ட மக்கள்—ஆளுக்கொரு விதமாய் விமரிசனம் செய்யத் தொடங்கினார்கள்.

"என்னவேலை அய்யா இது? உடலில் வலு இருக்கிறவன் உழைச்சு சம்பாதிக்கக் கூடாதா?" அதட்டுவது போல் சொன்னான் ஒருவன்—

"முகத்தைப் பாரு, ராஜா வீட்டுப் பையன் மாதிரி."

"உண்மைதான், இது மட்டும் தெரிந்திருக்காவிட்டால்.. காலேஜ் ஸ்டுடெண்ட் என்றே நினைத்திருப்போம்...அந்த மிடுக்கான உடையைப் பார்த்த யாருக்கும், பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளையோ என்ற எண்ணம்தான் வரும்."

"இப்போ காலமே அப்படித்தான் இருக்கு. பெரிய மனிதர்கள் எல்லாம் கொள்ளை அடிக்கறாங்க. கொள்ளை அடிக்கறவங்க பெரிய மனிதர்களாய் நடமாடறாங்க..."

"நம் நாட்டில் இப்படி வேலை வெட்டி இல்லாத பசங்க நிறைய இருக்காங்க. இப்படிப்பட்ட திருட்டுப் பசங்களை நடுரோட்டில் தூக்கில் போடணும். அப்பத்தான் மத்தவங்களுக்கு புத்திவரும். இந்தக் காலத்தில் திருடுவது என்பது ரொம்ப சுலபமாகிவிட்டது..."

"இந்த மாதத்தில் இப்படி நடப்பது இது மூன்றாவது தடவை" என்றார் ரயில்வே ஊழியர்.

அதற்குள் அங்கு வந்த போலீஸ்காரர் ஒருவர், இளைஞனை மேலும், கீழுமாய் பார்த்தார். "நீ தானா தம்பி...என் செல்லதுரையே..." என்றார் கிண்டலாய்.

"தெரிந்தவன் தானா?" யாரோ ஆர்வமாய் கேட்டார்கள்.

"அடடா! இவனைத் தெரியாமல் இருப்பதாவது... ஏற்கனவே எங்க விருந்தாளியாய் இருந்தவன் தான். நடதம்பிஸ்டேஷனுக்கு நட... இரண்டு நாட்களுக்கு முன்பு எக்ஸிபிஷனில் கரெண்ட் கட் செய்து பெண்களின நகைகளை திருடிய கும்பல் உங்களுதுதானே! கொஞ்சம் உங்களைப் பற்றிய தகவல் கொடுத்தால்—எனக்குப் பிரமோஷனாவது கிடைக்கும்" என்றவர், அருகில் இருந்தவர்களைப் பார்த்து, "சிட்டியில் ஒரு பெரிய கும்பல் ஒன்று உருவாகியிருக்கு. மக்கள் கூட்டம் சேர்ந்தால் போதும், இவர்கள் அங்கே சென்று, ஏதோ விதமாக கலவரமுண்டாக்கி, கைக்கு கிடைத்ததை சுருட்டிக் கொண்டு ஓடிவிடுவார்கள். எத்தனை முயற்சி செய்தாலும் இவர்களைப் பிடிக்க முடியவில்லை. இதனால் எங்க உயிர போகுறது. எங்க வேலைக்கே ஆபத்து வந்துவிடும் போலிருக்கு.. வா...கண்ணா...வா..." லட்டியால் அவனை நெட்டித் தள்ளினார்.

இத்தனை விதமான விமரிசனங்களுக்கு இலக்கான அந்த இளைஞன் குனிந்த தலை நிமிராமல், அப்படியே நின்றிருந்தான். ஒரு வார்த்தைக்கூட பேசாமல், கீழ் நோக்கிய பார்வையுடன்... கற்சிலையாய் இருந்தான். சற்றுமுன் நிகழ்ந்த கைகலப்பின் போது உதட்டில் காயம் ஏற்பட்டு தாடையில் வழிந்த ரத்தம் காய்ந்து விட்டிருந்தது. அதைத் துடைத்துக் கொள்ளகூட வழியில்லாமல் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன.

அவன் போட்டுக் கொண்டிருந்த உடைகள் ரொம்ப விலை உயர்ந்தவை. கறுப்பு ஜீன்ஸ் பேண்டும், க்ரீம் கலர் டீ ஷர்டும் அணிந்திருந்தான். கால்களில் விலை மிகுந்த ஷூஸ் இருந்தன... அவனைப் பார்த்தால் பத்தொன்பது அல்லது



இருபது வயதை மதிப்பிடலாம். இளம்தாடி அவனுடைய முகத்துக்கு வசீகரத்தைச் சேர்த்தது. சட்டென்று பார்க்கும் போது பணக்கார வீட்டுப் பிள்ளையோ என்ற நினைப்பை தோற்றுவிக்கும் உருவம். மின்னல் ஒளிவீசும் கண்கள்... செதுக்கினாற் போலிருந்த மூக்கு— அந்த சுருசுறுப்பு— இளம் பெண்களின் மனதில் இனிய கனவுகளை மலர வைக்கும் அந்த உருவத் தோற்றம்.

ரஷீகக்குழுவினரைப் போட்டோ எடுக்க நினைத்து, குளிருக்கு விழிப்பு வராமல், நேரம் கழித்து ஸ்டேஷனுக்கு ஓடோடி வந்து, ஏமாற்றமடைந்த போட்டோ கிராஃபரும், பத்திரிகை நிருபர் ஒருவருக்கு— ஏதோ ஒரு பரபரப்பு செய்தியாவது கிடைத்து விட்ட திருப்தியில்— அந்த இளைஞனை க்ளோசப்பில், இரண்டு மூன்று கோணங்களில் படம் பிடித்துக் கொண்டார்.

வேணுகோபாலன் எப்படியோ சிரமப்பட்டு, வெளியில் வந்து தனக்காக காத்திருந்த காரில் அமர்ந்து கொண்டார். அவருடைய மேனி இன்னமும் நடுங்கிக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட ஆறுமாதம், இடைவிடாமல் கேரளாவில் ஒரு கிராமத்தில் இயற்கை சிகிச்சை மேற்கொண்டும், சொந்த ஊரில் காலடி எடுத்து வைத்த முதல் கணமே தன் நிலைமை ஒன்றும் மாறவில்லையென்று அவருடைய இதயத் துடிப்பு வார்னிங் கொடுத்து விட்டது.

அவர் டெலிகிராம் கொடுத்திருந்த போதும், லாவண்யா அதை லட்சியப்படுத்தாமல், ஸ்டேஷனுக்கு சின்ன மகள் ராதையை அனுப்பி வைக்கவில்லை. அந்த ஏமாற்றத்தில் வேதனையுற்றிருந்த நேரத்தில், இந்த நகை திருட்டு முயற்சியும் சேர்ந்து கொண்டது. அவர் கண்களுக்கு முன் ஒல்லியாக, உயரமாக, உதட்டிலிருந்து கோடாக வழிந்த ரத்த கறையுடன், தலைகுனிந்து நின்ற அவ்விளைஞனின் உருவம் நிழலாடிற்று. அவருக்கு மறுபடியும் கோபம் கட்டுக்கு அடங்காமல் போயிற்று. பேக்கை பத்திரமாய்

மடியில் வைத்துக் கொண்டு, "திருட்டுப் பசங்க, இவர்களை எல்லாம் முதல் காரியமாய் கட்டுத் தள்ளணும்" என்று எண்ணிக்கொண்டார்.

கார் கிளம்பியது.

## 2

நகரத்தில் இருக்கும் நடுத்தர மக்கள் எல்லாம் அங்கு தான் வசிக்கிறார்களோ என்ற எண்ணத்தை தோற்றுவிக்கும்; திருவல்லிக்கேணியின் குறுகலான சந்துகள், தெருக்கள், குப்பைக்கூளங்கள், குழந்தைகளின் விளையாட்டுகள், காலைக்கடன்கள் எல்லாம் அங்கு திறந்த வெளியில் தான்.

ஒவ்வொரு தெருவிலும் கொஞ்சம்கூட இடைவெளி இல்லாமல் வீடுகள் கட்டப்பட்டிருந்தன— ஒவ்வொரு வீட்டிலும் பத்து போர்ஷன்களாவது இருக்கும். பத்து போர்ஷன்களிலும் வெவ்வேறு குணங்களைப் படைத்த மனிதர்கள் வசித்து வந்தார்கள். அந்த ஏரியாவின் பரப்பளவையும், அங்கு வசிக்கும் மக்களின் எண்ணிக்கையையும் கணக்கெடுத்த ஒரு நாளேடு, ஒரு சதுர அடிக்கு நான்கைந்து நபர்கள் வசிக்கிறார்கள் என்றும், இதனால் காலரா வைகரி போன்ற நோய்கள் வேகமாய் பரவும் என்றும் உடனே வசிக்கும் மக்களை வேறு காற்றோட்டமான இடங்களுக்கு மாற்ற வேண்டிய பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முழக்கமிட்டது. ஆனால் அதை யாரும் பொருட்படுத்தப் போவதில்லை என்று எல்லோருக்கும் தெரியும். அந்தத் தெருவை ஒரு முறை தொலைவிலிருந்து நோக்கினால், அகதிகளை சுமந்து செல்லத் தயாராக நிற்கும் ரயில் நினைவுக்கு வரும்.



அது போன்ற குறுகலான சந்து ஒன்றில் கடைசியாக அமைந்திருந்த வீட்டிலிருந்து காலை வேளையில் குரல்கள் உச்சஸ்தாயில் ஒலித்தன. அந்த வீட்டில் வசிக்கும் கணவன் மனைவி எதுக்காகவோ சண்டைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். தெரு வழியாகப் போகிறவர்கள், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், விஷயத்தைத் தெரிந்துக் கொள்ளும் ஆவலில் காதுகளைத் நீட்டிவைத்துக் கொண்டார்கள்.

அந்த வீட்டுத் தலைவரின் பெயர் சங்கரன். தொழில் பாட்டு வாத்தியார். அவருக்கு இருக்கும் இறுக்குத்தனத்தால் எல்லோரும் அவரை இருவாழ்த்தான் சங்கரன் என்று அடைமொழியுடன் அழைப்பார்கள்.

அவர் மனைவியின் பெயர் சுந்தரி. சுந்தரியின் சுபாவத்தை வரையறுத்துச் சொல்வது கடினம். அந்த வீட்டுக்கு அவர்கள் குடிவந்து பதினைந்து வருடங்களாவது முடிந்திருக்கும்! சுந்தரியின் சுபாவம் நிமிடத்துக்கு ஒரு முறை பச்சோந்தியைப் போல் நிறம் மாறும் என்று அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் பேசிக் கொள்வார்கள். அவளை எப்போதும் துதிபாடிக் கொண்டேயிருக்க வேண்டும். அப்படி புகழ்ந்தவர்களுக்கு, இல்லையென்று சொல்லாமல், கேட்டதை மறுக்காமல் கொடுத்து விடுவாள். அப்படி துதிபாட விருப்பமில்லாதவர்கள், பொறுமையில்லாதவர்கள் அவளுடைய பார்வையிலிருந்து தப்ப முடியாது. ஏதோ ஒரு சாக்கு வைத்துக் கொண்டு என்றாவது ஒரு நாள் அவர்களை சண்டைக்கு இழுத்து, அவமானப்படுத்தித் தன் பகையை சாதித்துக் கொள்வாள்.

அதனால் அவளுக்கு எதிரில் புகழ்ந்துவிட்டு, கொஞ்சம் கண் மறைவில், "ராட்சசி— சூர்பணகை — வெறும் நீசல்— நமக்கென்ன வந்தது நாம் நல்லவர்களாய் இருந்தால் சரி" என்று சொல்லுபவர்கள் தான் அதிகம்.

சுந்தரிக்குக் கணவனின் திறமையில் கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லை. அப்படி நம்பிக்கையில்லை என்ற

வருத்தமும் சங்கரனுக்குக் கிடையாது. இந்தக் குடும்பம் இந்த அளவுக்காவது ஓடிக் கொண்டிருக்கிறது என்றால், அது தன்னுடைய திறமையினால் தான் என்பதில் சுந்தரிக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

அந்த நம்பிக்கையை அக்கம் பக்கத்தில் வசிக்கும் பெண்கள் தம் தேவைகளைப் பொறுத்து வலுப்படுத்திக் கொண்டிருப்பார்கள்.

அவர்களுக்குக் குழந்தை கிடையாது. "உங்களுக்குக் குழந்தை பிறக்கும் வாய்ப்பு இல்லை" என்று டாக்டர்கள் பதினைந்து வருடங்களுக்கு முன் உறுதியாகக் கூறிவிட்ட பிறகும், சுந்தரிக்கு ரொம்ப நாள் வரை நம்பிக்கை போக வில்லை. குழந்தைக்காக அவள் செய்யாத நோம்பு இல்லை; கும்பிடாத கடவுள் இல்லை. குழந்தைக்காக சுந்தரி படும் பாட்டில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட, ஏன் அந்தப் பிரச்னையே இல்லாதவர் போல் சங்கரன நடந்து கொள்வார்.

கணவனை இழந்து பிறந்த வீட்டுக்கு வந்துவிட்ட உடன் பிறந்த தங்கை—சாவித்திரியின் மகள் சரோஜாவை யும், மகன் சந்திரனையும் அவர் என்றோ தன் குழந்தை களாக ஏற்றுக்கொண்டு விட்டார். இருக்கிற வசதியில் அவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுத்தார். சுந்தரிக்கு இதில் கொஞ்சம் கூட விருப்பமில்லை.

"அவ்வளவு விருப்பமிருந்தால், வேறு உறவினர் வீட்டுப் பசங்களை வளர்த்துக் கொள்ளலாமே— இந்த துரதிர்ஷ்டம் பிடித்தவங்க எதுக்கு" என்பாள்.

இந்த விஷயமாக, கடந்த பதினைந்து வருடங்களாய், வாரத்தில் ஒரு தடவையாவது அவர்களுக்கிடையே சண்டை வரும். சில சமயம் சண்டை முற்றிப் போகும்போது, சங்கரன் வீட்டை விட்டு வெளியேறிவிடுவார். நாலைந்து நாட்கள் வரை வீடு திரும்பமாட்டார். தன் நாத்தனாரான சாவித்திரி இந்த வீட்டை விட்டு போனாலொழிய தங்களை பிடித்த



சனி நீங்காது என்று சுந்தரியின் நம்பிக்கை. அதனால் இப்பவெல்லாம் எந்த சின்ன காரணம் கிடைத்தாலும், அதைக் கெட்டியாக பிடித்துக்கொண்டு, பெரிதாக சண்டை போட்டு அவர்களை வெளியேற்ற முயற்சி செய்து வருகிறாள். ஆனால் என்ன விசித்திரமோ தெரியவில்லை, இடைவிடாமல் அவள் செய்து கொண்டிருக்கும் இந்த முயற்சி, இன்று வரை ஏனோ பலனளிக்கவில்லை.

சுந்தரியின் கடினமான சொற்களைக் கேட்டு, குமுறி குமுறி அழுத சாவித்திரி ஒரிரு முறை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தாள். தங்கையின் முயற்சியை தடுத்துவிட்ட சங்கரன் ஒரே வார்த்தைதான் சொன்னார்.

"சாவித்திரி, அவள் ஒரு பைத்தியம். என்ன பேசுறோ மென்று அவளுக்கே தெரியாது நான் இருக்கும்போது நீ அவளுடைய பேச்சை லட்சியப் படுத்துவானேன்? உனக்கு மணிமணியாய் இரண்டு குழந்தைகள் இருக்காங்க. அவங்க வளர்ந்து ஆளாகிவிட்டால் போதும்...நாங்களே உன்னைச் சார்ந்து வாழும் நாள் வரும். உன் குழந்தைகளுக்காக, அவர் களின் எதிர்காலத்தை மனதில் வைத்துக் கொண்டாவது நீ தற்கொலை எண்ணத்தை மறந்துடணும். இனி இப்படிச் செய்ய மாட்டேன்னு எனக்கு வாக்கு கொடு..."

அண்ணனின், அன்பான ஆதரவான வார்த்தைகளுக்கு சாவித்திரியின் மனம் இளகிவிட்டது. அதன்பிறகு சுந்தரி எவ்வளவு குத்தி காண்பித்தாலும், சண்டை போட்டாலும் காதில் விழாதது போல் இருந்துவிட்டாள்...சுந்தரிக்கு இந்த விஷயம் தெரியாது.

இந்த முறை சுந்தரிக்கு மிகப்பெரிய காரணம் கிடைத்து விட்டது. அவளுடைய மருமகனான சந்திரன் நேற்று காலையில் ரயில் நிலையத்தில் நகையை திருட முயன்று, பிடிபட்டு விட்ட செய்தி அவனுடைய புகைப் படத்துடன் பேப்பரில் பிரசுரமாகியிருந்தது. சுந்தரி கிணற்றடியில்

தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தபோது, அடுத்த வீட்டுப் பாட்டியின் பேரனான ஆஞ்சநேயலு,காம்பவுண்ட் சுவற்றின் வழியாக எட்டிப் பார்த்து, அவளை அருகில் அழைத்து, போட்டோவை காட்டி செய்தியையும் படித்துக் காண்பித்தான்.

சுந்தரி வாளியை அங்கேயே வைத்து, அங்கிருந்தே, "இந்தச் செய்தியைக் கேட்டீங்களா?" கையை ஆட்டிக் கொண்டே உள்ளே வந்தாள்.

சங்கரன் நடு அறையில் கிடந்த கயிற்றுக் கட்டிலை செப்பனிட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு இந்தச் செய்தி ஏற்கனவே காதில் விழுந்து விட்டது.

அவருக்கு ஒரு பழக்கம் இருந்தது. தினமும் பொழுது நன்றாக விடிந்த பிறகுதான், மூக்கி முணங்கியபடி நீர்த்த காபியை அவர் கண்ணில் காட்டுவாள் சுந்தரி. ஆகையால் காலையில் எழுந்ததும் வாயை கொப்பளித்துவிட்டு, அப்படியே கிளம்பி, தெருமுனையிலிருந்த காபி-டீசெண்டரில் கடச்சுட காபியை, தொண்டைக்கு இதமாக குடித்துவிட்டு, சத்தம் போடாமல் வீட்டுக்கு வருவார். அன்றும் அப்படித் தான் போய்காபிக்காக ஆர்டர் கொடுத்துவிட்டு, உட்கார்ந்த போது, அந்த ஹோட்டல் முதலாளி அவரை சாடைகாட்டி அருகில் அழைத்து, "இது உங்க 'மருமகன்தானே" என்று அப்பொழுதுதான் வந்த பேப்பரில் முதல் பக்கத்தில் இருந்த சந்திரனின் போட்டோவை சுட்டி காண்பித்தார்.

சங்கரன் பதிலேதும் சொல்லாமல், பேப்பரை எடுத்துக் கொண்டு விவரமாக படித்துவிட்டு, பிறகு அதைப் பத்திர மாக மடித்து, முதலாளி பக்கத்தில் வைத்துவிட்டு, ஆர்டர் கொடுத்த காபியை குடிக்காமலேயே வீட்டுக்கு வந்து விட்டார். வந்ததுமே தங்கையின் காதிலும், மருமகளான சரோஜாவின் காதிலும் இந்த செய்தியைப் போட்டுவிட்டு, சாய்த்து வைத்திருந்த கயிற்றுக் கட்டிலை நேராக போட்டார். தோய்ந்துகிடந்த அதன் கயிறுகளை கவனமாய்



நிதானமாய் செப்பனிடத்தொடங்கினார். இனி இன்னிக்குத் தெருவில் முகம்காட்ட அவருக்கு விருப்பமில்லை.

இன்னிக்கும், நாளைக்கும் தெருபக்கம் போகாமல் இருந்துவிட்டால், நாளை மறுநாள் இந்த விஷயம் யாருக்கும் நினைவு இருக்காது. ஒரு விதமாய் பார்த்தால் இந்த உலகம் ரொம்ப நல்லது. அதற்கு வேறு வேலைகள் நிறைய இருக்கு. எந்த விஷயமாயிருந்தாலும், சட்டென்று பழசாகிவிடும்.

அதனால்தான், கட்டிலை சரி செய்யச் சொல்லி ஒரு மாதமாய் சுந்தரி தொண தொணத்த போதெல்லாம், காதில் வாங்காமல் அலட்சியப்படுத்தி வந்தார். இன்று அந்த வேலையை செய்யத் தொடங்கினார். வேலை வெட்டி யில்லாமல் வெறுமே வீட்டில் உட்கார்ந்து இருந்தால் சுந்தரி சந்தேகப்பட்டு கேள்விகளால் சோதனை பண்ணு வாள் என்று அவருக்குத் தெரியும்.

"உங்களைத்தானே?" அருகில் வந்து நின்றாள் சுந்தரி.

"என்ன விஷயம்?" ரொம்ப அமைதியாகக் கேட்டார் சங்கரன்.

"அய்யோ... அய்யோ... நீங்க இன்னும் இப்படி சாவகாசமா உட்கார்ந்து இருக்கீங்களே..." முகவாயை தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள் சுந்தரி..

"ஏன்? இப்போ என்ன ஆயிடுத்து? யாருடைய வீடாவது பற்றி எரியரதா? அப்படி எரிந்தால் சொல்லு. இருவரும் போய் தண்ணீர் ஊற்றி அணைத்துவிட்டு வரலாம்." எகத்தாளமாய் சொன்னார் சங்கரன்.

"யாருடைய வீடோ பற்றி எரிவானேன்? வந்த ஆபத் தெல்லாம் நம் வீட்டுக்குத்தான்..."

"அதென்னவென்று சரியாகச்சொல்லி அழக்கூடாதா?"

"உங்க அருமை மருமகன்! உங்க தங்கையின் அருமை மைந்தன்!"

"அந்த வர்ணனையெல்லாம் எதுக்கு? நம்ம சந்திரன் என்று அழைக்கக் கூடாதா?" நிதானமாகச் சொன்னார்.

"ஆங்! அழைக்கிறேன். எனக்குக் கொள்ளி வைக்கப் போறானென்று. இப்போ எல்லோருடைய தலையிலும் நெருப்பை அள்ளி கொட்டியிருக்கான்." கையை நீட்டி முழக்கிக் கொண்டே சொன்னாள் சுந்தரி.

சுந்தரி எதிர்பார்த்தது போலவோ, எண்ணியது போலவோ, சங்கரன் பதட்டப்படவில்லை. சாவித்திரி, "என்னவாச்சு அண்ணி? செந்துவுக்கு என்ன?" என்று கலவரமாய் அறையிலிருந்து ஓடிவரவில்லை.

சங்கரனையும், உள் அறையையும் மாறி மாறி பார்த்த சுந்தரிக்கு சந்தேகம் வந்துவிட்டது.

"உங்களுக்கு இந்தச் செய்தி முன்பே தெரியுமா?"

"தெரியும்" உரையாடலை நீடிக்க விரும்பாமல், சுருக்கமாய் சொன்னார் சங்கரன்.

சுந்தரியின் முகம் களையிழந்தது. பிறகு ஏதோ உண்மை புரிந்து விட்டவள்போல், கண்களை உருட்டித் தலையை ஆட்டினாள்.

"அப்படிச் சொல்லுங்க. என்னடா! இந்த மனுஷனும் இன்னிக்கு ஒழுங்காய் இருக்கிறாரே! திடீரென்று கட்டில் மீது கரிசனம் பிறந்து விட்டதேன்னு நான் நினைச்சுகிட்டு தான் இருந்தேன்" என்றாள்.

"வாயை மூடு!"

"வாயை மூடணுமா? நானா? எதுக்கு? என் மகன் திருடிவிட்டான் என்றா? என் பெயர் சந்தி சிரிக்கறது என்றா? எதுக்காக வாயை மூடிக்கணும் நான்?" ஆவேசத்தர மாய் கேட்டாள்.

சங்கரன் தலையை உயர்த்தி கோபமாய் பார்த்தார். "இல்லா விட்டால் தெருவில் நின்று கூச்சல் போடு" என்றார்.



"கூச்சல் போட எனக்கென்ன தலை எழுத்து? இதோ இன்னிக்குக் கடைசி தடவையாய் கேட்கிறேன். நீங்கள் முடிவை சொல்லும் வரை விடமாட்டேன். இந்த திருட்டுக் கும்பலுடன் நான் ஒரு நிமிடம் கூட இருக்க மாட்டேன். இருக்கவே மாட்டேன். காதில் விழுந்ததா!"

"இருக்க முடியா விட்டால் போயேன்" அலட்சியமாய் சொன்னார் சங்கரன்.

"நான் ஏன் போகணும்? இது என் வீடு. என் இஷ்டம். இருக்கிறதுக்கு வசதியில்லாதவங்க, ஆதரவு கொடுத்தவர் களின் பெயரைக் காப்பாத்தத் தெரியாதவங்க யாரோ அவங்க போகட்டும். நான் இனி சும்மா இருக்க மாட்டேன். முடிவா என்ன சொல்லப் போறீங்க? இதில் நீங்க சொல்ற தென்ன! நானே கேட்டு விடுகிறேன்" என்று கிடுகிடுவென்று நாத்தனாரின் அறை வாசலில் நின்று, கதவு மேல் கையை வைத்துக் கொண்டு, "இந்தாம்மா மகாராணி உன்னைத் தான்" என்று அழைத்தாள்.

உள்ளே இருந்து பதில் வரவில்லை.

சங்கரன் கை வேலையை அப்படியே போட்டு விட்டு, சட்டென்று தாவி மனைவியின் தோளைப் பற்றி, வலுக் கட்டாயமாக இழுத்து வந்தார். பற்களை கடித்துக் கொண்டு கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டே, "உனக்கு மூளை இருக்கா இல்லையா? ஏற்கனவே அவ குமுறி குமுறி அழுதுக்கிட்டு இருக்கா? நடுவில் உன்னோட ரோதனை என்ன?" அதட்டுவது போல் சொன்னார்.

சுந்தரியின் பொறுமையில் நெருப்பு பற்ற வைத்தது போலாயிற்று. பெருங்குரல் எடுத்துக் கத்தினாள். "அழுகையா? எதுக்கு? என்ன இழந்து விட்டாளாம்? உலகத்தில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, உறவுகளையும் துண்டித்துவிட்டு, வெட்கம் மானத்தை இழந்து விட்டவள். அவளுக்கு வேதனையாய் இருப்பதாவது? நாம் எதுவும் சொல்லும் முன்னே நீலி கண்ணீர் வடிக்கிறாள். அழ

வேண்டியது நான். மானம் போனது எனக்கு. இப்பவே தெருவில் நாலுபேர் நாலு விதமாய் கேட்கும் போது, நிமிர்ந்து பதில் சொல்ல முடியாமல், இன்னாராத்து மருமகன் என்று நாலு பேரர் சுட்டிக்காட்டும் போது வெட்கத்தால் கூனி குறுகிப் போகும் நிலை வந்ததற்கு நாம் தான் அழணும். அவனுக்கு அழுகை வருவானேன்?"

சங்கரன் மனைவியுடன் சண்டைப் போடுவதில் பயனில்லை என்று, கெஞ்சுவதில் இறங்கினார். நயமாகச் சொல்வது போல் சொன்னார்.

"என்ன செய்யலாம் சொல்லு சுந்தரி! நம் மகனாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? அரவணைத்துக் இட்டுப் போயிருக்க மாட்டோமா?"

அவ்வளவுதான், சுந்தரி காளி அவதாரம் எடுத்தாள். "என்ன? அவனையா? அந்தத் திருட்டுப் பையனா என் மகன்? அவன் என் மகனாய் இருந்தால், இப்படிப்பட்ட காரியத்தை செய்திருந்தால், என்றைக்கோ கழுத்தை நெறித்துக் கொன்றுப் போட்டிருப்பேன். இப்படி அறையில் போய் பதுங்கிகிட்டு இருப்பேன்னு நினைச்சீங்களா என்ன?"

"ஆங்! பேசுவதற்கென்ன? எத்தனை வேணுமானாலும் பேசலாம். நரம்பு இல்லாத நாக்கு எப்படி வேணும்னாலும் வளையும். அதான் கடவுள் குழந்தையே பிறக்காமல் செய்து விட்டாரோ என்னவோ" சாதாரணமாக சொல்லிவிட்ட சங்கரன், வாய் தவறி சொன்னதற்கு நாக்கைக் கடித்துக் கொண்டார். ஆபத்து வந்தே விட்டது! சுந்தரி அடிபட்ட பெண்புலியாக கர்ஜித்தாள்.

"என்ன? நீங்க சொல்லவந்தது தான் என்ன? எனக்குக் குழந்தையில்லைன்னு தானே? இல்லா விட்டால் போகட்டும். ஒன்றும் குடிமுழுகிப் போகலை. நான் 'ஊம்' என்று சொன்னால் போதும்—நூறு பேர் என் காலடியில் வந்து நிப்பாங்க. இந்தப் பேச்செல்லாம் அநாவசியம். நான் கேட்டதைப் பற்றி முதலில் முடிவு சொல்லுங்க."



சங்கரனின் கோபம் அதிகமாயிற்று. இருந்தாலும் அமைதியை கடைபிடித்து கட்டிலை சரிபார்க்கத் தொடங்கினார்.

"உங்களைத்தானே? ஏதானும் சொல்லுங்க."

"என்ன சொல்லட்டும்?"

"உங்களுக்கு நான் வேணுமா? அவங்க வேணுமா?

"நல்லாயிருக்கு. இடது கண் வேணுமா, வலது கண் வேணுமான்னு கேட்டால், யார்தான் என்ன சொல்ல முடியும்?"

ஆவேசமும், ஆத்திரமும் ஒன்றுசேர, சுந்தரி கேட்டாள், "அப்படின்னா நானும், அவங்களும் சமம் என்றுதானே சொல்றீங்க."

"இப்பவாவது அதைப் புரிஞ்சுகிட்டு, வாயை மூடினாயானால் நான் சந்தோஷப்படுவேன்."

சுந்தரிக்குத் துக்கம் பொங்கி வந்தது. "அந்த துரதிர்ஷ்டம் பிடிச்சவங்களும், நானும் உங்களுக்கு ஒண்ணாயிட்டமா? இது தானே நீங்க சொன்னது சரி! இன்னிக்கு நீங்க என் பிணத்தை தான் பார்க்கப் போறீங்க" மூக்கை சிந்திப் போட்டுக் கொண்டே சொன்னாள் சுந்தரி.

"செத்துருவேன்—செத்துருவேன் என்று சும்மா மிரட்டறவங்க, என்னிக்கும் சாக மாட்டாங்க. உனக்கு இங்கே இருக்கப் பிடிக்கலைன்னா, பணம் தர்றேன். இந்த நிமிஷமே வண்டி ஏறி உன் பிறந்த வீட்டுக்குப் போ- அங்கே உனக்கு சாகத் தயாராயிருக்கும் வயசான அம்மா இருக்கா, அண்ணன் தம்பி இருக்காங்க—சாவித்ரிக்கு என்னைத் தவிர, வேறு யாரும் கிடையாது என் உடம்புல உயிர் இருக்கும் வரை அவ என்கிட்ட தான் இருப்பா. மறுபடியும் இந்த விஷயத்தைப் பேசி எனக்கு எரிச்சலை ஏற்படுத்தாதேன்னு உனக்கு இதோட ஆயிரம் தடவை சொல்லி இருக்கேன். இப்போ கடைசி முறையா சொல்றேன். இனி அனாவசியமா என்னைத் தொந்தரவு செய்யாதே."

சங்கரன் எந்த விதமான தயக்கம் இல்லாமல் இப்படிச் சொன்னதும் சுந்தரி ஒரு நிமிடம் அழுகையை மறந்து, அப்படியே சிலையாக நின்று விட்டாள். பிறகு கோபமாய் பார்த்து,

"அவ்வளவு தானா?" என்றாள்.

"ஆமாம்."

சுந்தரி அப்படியே தரையில் சரிந்து, தலைப்பை எடுத்து முட்டாக்காக போட்டுக்கொண்டு, நெஞ்சின் மீது இரு கைகளாலும் அடித்துக்கொண்டு, "அய்யோ! கடவுளே! நான் என்ன செய்வேன்? என் குடும்பத்தை எனக்கு ஆகாமல் பண்ண வந்தவளை, இந்த வீட்டைப் பிடித்த சனியனை எப்படி விரட்டுவேன்? யாரானும் வழியைச் சொல்லுங்களேன்" என்று பெருங்குரலில் ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

"வாயை மூடு" சங்கரன் கத்தினார்.

"அய்யோ கடவுளே! என் வீடே எனக்கில்லாமல் போயிடுச்சே! என் வீட்டில் அழக்கூட சுதந்திரம் இல்லாமல் செய்துட்டாங்களே! நான் என்ன செய்வேன்? என் நெத்தியில் அந்த பிரம்மா என்ன எழுதியிருக்கானோ தெரியலையே? யாரானும் சொல்லுங்களேன்." என்று பிலாக்கணம் பாடினாள் சுந்தரி.

"ஆங்! ஆங்! இன்னிக்கு உன் முதுகுல அடி விழப்போற தன்னு மட்டும் எழுதியிருக்கான்."

"அடிக்கப் போறீங்களா? அடிங்க அடிங்க. அப்படியே கழுத்தை நெரிச்சுக் கொன்னுப் போட்டுடுங்க எல்லோருக்கும் என்னோட தொல்லை இல்லாமல் போய்விடும். மனசும் குளிரும்."

"இப்போ நீ வாயை மூடப் போகிறாயா இல்லையா?" சங்கரன் எழுந்து மூலையில் சாய்த்து வைத்திருந்த குடையை எடுத்து வந்தார்.



ஏற்கனவே அக்கம் பக்கத்தில் குடியிருப்பவர்கள் எட்டி எட்டிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

அதைப் பார்த்த சுந்தரி மேலும் குரலை உயர்த்தினாள். "உங்க கால்களில் வேணுமானாலும் விழுகிறேன், என் பேச்சைக் கேளுங்க. இந்தத் திருட்டுக் கும்பலுடன் நாம் குடுத்தனம் பண்ண முடியாது. என்னிக்காவது ஒரு நாள் நம் வீட்டையே கொள்ளை அடிச்சுடுவாங்க..." சுந்தரி வார்த்தைகளை இன்னும் முடிக்கக்கூட இல்லை...முதுகில் பட் பட் என்று அடிகள் விழுந்தன.

"அய்யோ! அம்மா! செத்துப் போயிட்டேன்."

"வாயை மூடு—மூடப் போறியா இல்லையா?" சங்கரன் மறுபடியும் குடையை உயர்த்தினார்.

அதற்குள் அறையிலிருந்து, மெலிந்த உடல்வாகும், வெளுத்துப் போன மேனி வண்ணமும் கொண்டு, எலும்புக் கூடுதான் நடந்து வருகிறதோ என்ற எண்ணத்தை தோற்றுவிக்கும் சாவித்திரி தடுமாறிக் கொண்டே வந்தவள், அண்ணாவின் கையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டாள்.

"அண்ணா—உனக்கு மூளை கலங்கி விட்டதா? இப்ப இந்தச் சண்டை எதுக்கு? கையெடுத்துக் கும்பிடுகிறேன். அண்ணியை ஒண்ணும் சொல்லாதே. நீ கொஞ்சம் வெளியில் போயிட்டு வா. என் பேச்சைக் கேளு" என்றவள் அண்ணனைப் பலவந்தமாக வாசற்கதவு பக்கம் தள்ளினாள்.

சங்கரன் தங்கையின் கையை விடுவித்துக் கொண்டு, சுந்தரியை கோபமாகப் பார்த்துவிட்டு,

"நான் எதிரில் இருந்தால் வாய்க்கு வந்தபடி பேசத் தோணும். நான் இனி வீட்டுப் பக்கமே வர மாட்டேன். எக்கேடு கெட்டுப் போங்க" என்றவர் கொக்கியில் மாட்டியிருந்த அங்கவஸ்திரத்தை எடுத்துத் தோள் மீது போட்டுக் கொண்டு வேகமாய் வெளியில் சென்று விட்டார்.

"அண்ணி! எங்களை மன்னித்துவிடு—" சுந்தரியை தேற்றுவதற்காக, நயமாக இரண்டு வார்த்தைகள் சொல்ல அருகில் வரப் போன சாவித்திரியை, பார்வையால் எரித்து விடுபவள் போல் பார்த்தாள் சுந்தரி.

"எனக்கும், என் கணவனுக்கும் ஆகாமல் பண்ண நீ போடும் நாடகம் யாருக்குத் தெரியாது? உன் குடித்தனம் எப்படியும் நாசமாகி விட்டது. என் குடித்தனத்தையும் நாசமாக்க வந்து விட்டாய். உன் பிடுங்கல் எப்போ என்னை விட்டுப் போகுமோ?" என்றவள், இரண்டு கைகளால் முகத்தை மூடிக் கொண்டு "அய்யோ கடவுளே! இந்த அநியாயத்தைக் கேட்க யாருமே இல்லையா?" என்று மறுபடியும் ராகம் போட்டு அழத் துவங்கினாள்.

எதிர் பாராத இந்த தாக்குதலுக்கு திக்பிரமை அடைந்த சாவித்திரி, கற்சிலையாய் சமைந்து விட்டாள். பிறகு மெள்ளமாய் சுவற்றைப் பிடித்துக் கொண்டு, தளர்ந்த நடையுடன் அறைக்குள் சென்று விட்டாள்.

சங்கரன் வீட்டை விட்டு வெளியேறியதும், அதுவரை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் செய்து கொண்டிருந்த வேலைகளை அப்படியே போட்டுவிட்டு, சுந்தரி அருகில் ஓட்டமாய் ஓடி வந்தார்கள். ஆளுக்கொரு விதமாய், விசாரிக்க முற்பட்டார்கள்.

"என்னவாச்சு சுந்தரி? என்ன விஷயம்?" விசாரித்தாள் எதிர் வீட்டு மீனாட்சி.

"உனக்குத் தெரியாதா? அவளோட நாத்தி மகன் சந்திரனை அரெஸ்ட் செய்திருக்காங்க. நேற்று ரயில்வே ஸ்டேஷனில் ஒரு ஆளோட பேக்கை திருடப்போய் மாட்டிக் கிட்டானாம்." சுந்தரி சார்பில் ஒருத்தி பதில் சொன்னாள்.

"அம்மாடியோவ் பட்டப்பகலிலா?" மீனாட்சி புருவங்களை உயர்த்தி, நெஞ்சு மீது கையை வைத்துக் கொண்டு தன் வியப்பை வெளியிட்டாள்.



"இருந்தாலும், புத்தி இப்படிப் போவானேன்? கடா மாடுமாதிரி வயசாச்சு. வேலைக்கிலை செய்து பிழைக்கக் கூடாதா?"

"வேலை செய்ய உடம்பு வணங்க வேண்டாமா?"

"ஆமாம். உயிருக்குத் துணிந்து இப்படித் திருடினால் போதும். ஒரு மாசம் கால் மேல் கால் போட்டுக் கொண்டு ராஜா மாதிரி சாப்பிடலாம்."

"என்னவோ பாவம்! நம்ம சுந்தரிக்குதான் வந்தது கஷ்டகாலம்."

"கஷ்டகாலம் வருவானேன்? வேண்டாதவர்களை வீட்டை விட்டுத் துரத்தினால் ஆச்சு" ஒருத்தி இலவசமாய் அறிவுரை வழங்கினாள்.

"நல்லாயிருக்கு. அவ சொன்னா போதுமா? எடுபட வேண்டாமா?" நீட்டி முழக்கினாள் இன்னொருத்தி.

"என்னவோப்பா! திருட்டுக் கும்பலுடன் குடித்தனம் செய்வது ரொம்பக் கஷ்டம். மடியில் நெருப்பு கட்டிக் கொண்டு இருப்பது போல்தான்."

"சுந்தரியின் வேதனை அதுதானே! இருந்தாலும் இவ ஒரு அப்பாவி, ஏமாந்தவள். அதுவே என்னைப் போல் ஒருத்தி இருந்தாளானால் நடக்கிற கதையே வேறு" சுந்தரியின் தலையை ஆதரவாய் வருடிக் கொண்டே தேற்றினாள் அடுத்த வீட்டு அம்புஜம்.

"எதுக்காக வீணாக வருத்தப்பட்டுக்கறே. அனாவசியமாய் உன் மனசும், உடலும் நலிந்து போவதைத் தவிர, எதானும் நடக்கப் போகிறதா!—நீ சொல்றதை உன் புருஷன் கேட்க மாட்டான். இதுதான் உண்மை. தங்கை சொல்றதுதான் வேதவாக்கு அவனுக்கு. அது தெரியாமல் இப்படி குடும்ப விவகாரத்தை தெருவுக்குக் கொண்டு வரலாமா? என்ன செய்யலாம் சொல்லு. தலையெழுத்துன்னு நினைச்சு சமாதானப்பட்டுக் கொள்வதைத் தவிர வேறு வழி என்ன இருக்கு?"

''ஆமாம் சுந்தரி—சவு இரக்கத்துடன் இருப்பவர்களுக்கு இது காலமில்லை. இல்லாவிட்டால் அவர்களுக்கு என்ன வந்தது சொல்லு. இருப்பதை வைத்து அவர்களுக்கே செய்தாலும் அந்த நன்றி கூட இல்லாமல் அந்தப் பையன் இப்படி உங்க குடும்ப மானத்தை கப்பலேற்றி விட்டான். அந்தப் பெண்ணைப் பார்த்தால் அது ஒரு திலுசு. எப்போ பார்த்தாலும் ஊரைச் சுற்றுவதை தவிர, வீட்டில் உனக்கு உதவி செஞ்சு நாங்க பார்த்ததில்லை'' என்ற அம்புஜம் மற்றவர்களின் ஒப்புதலுக்காக அவர்கள் பக்கம் பார்த்தாள்.

எல்லோரும் ஆமாம் என்பது போல் தலை அசைத்தார்கள்.

''குழந்தைகளைப் பெற்று விட்டால் போதுமா? சரியா வளர்க்க வேண்டாமா?'' உள் அறை பக்கம் பார்வையை செலுத்திக் கொண்டே ஒருத்தி சொன்னாள்.

''கடா மாடு மாதிரி தெருவில் மேயவிட்டு, அறையில் கட்டிலில் படுத்துக் கொண்டால் போதாதா?'' ஏகத்தாளமாய் மீனாட்சி சொன்னதும்,

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். இது போல் ஆளுக்கொரு விதமாய் வார்த்தைகளை அள்ளி வீசும்போது, வாசலில் ரிக்ஷா ஒன்று வந்து நின்றது.

''சுந்தரி, உன் நாத்தியின் மகள் வந்துட்டா'' சத்தம் போட்டு சொன்னாள் ஒருத்தி.

''இத்தனை காலை வேளையில் எங்கு போனாளாம்?'' இன்னொருத்தி தாழ்ந்த குரலில் கேட்டாள்.

''அவளுக்கென்ன? மகாராணி, எங்க வேணும்னாலும் போவாள். இத்தனைப் பெரிய பட்டணத்தில் போறதுக்கு இடமா இல்லை? அழைச்சுக்கிட்டுப் போறவா இருக்கணுமே ஒழிய...''

''ஷ்—சும்மா இரு—காதில் விழுந்து வைக்கப் போறது.''



''விழட்டுமே எனக்கென்ன பயம்? முந்தா நாள் என் வீட்டுக்காரர் இங்கிலீஷ் சினிமாவுக்குப் போனார். அங்கே, ஒரு செவத்தப் பையனுடன், அதான் அடிக்கடி வீட்டுக்கு வருவானே! அவனோடு வந்திருந்தாளாம். நாமென்ன இல்லாததையா சொல்றோம்? வேணும்னா முகத்துக்கு நேராக சொல்லவும் நான் தயார்'' மீனாட்சியின் குரலில் துணிச்சல் தென்பட்டது.

ரிக்ஷாவிலிருந்து இறங்கிய பெண்ணுக்குக் கிட்டத்தட்ட இருபத்து இரண்டு வயதிருக்கலாம். ஒல்லியான உடல் அமைப்பு. சட்டென்று பார்த்தபோதும், தொலைவிலிருந்து பார்த்தாலும் பதினெட்டு வயதுதான் மதிப்பிடத் தோன்றும். வெற்றிலைக் கொடி போன்ற உடல் வாகு. காவியங்களில் வர்ணிப்பதுபோல் விசாலமான கண்கள் இல்லாவிட்டாலும், மின்னல் ஒளி வீசும் கண்கள் எல்லோரையும் ஈர்த்துவிடும். சிரித்தாளானால் இதழ்கள் லேசாகப் பிரிந்து, மாதுளை முத்துக்கள் போன்ற அழகான பல்வரிசை தெரியும். ஆனால் அதிகமாக சிரிக்க மாட்டாள்.

வாழ்க்கையில் சுகத்தைவிட கஷ்டத்தை, கடினமான, கசப்பான உண்மைகளை சந்தித்து வந்தவளாய், இனிமையான கனவுகள் காணவேண்டிய வயதில், அதைப் பற்றிய எண்ணங்களே இல்லாமல், ஒவ்வொரு நிமிடமும் எதிர்காலத்தைப் பற்றிய கவலையுடன் வளர்ந்த பெண் போல் தோன்றுவாள். ஆனால் உள்ளத்தில் நடக்கும் போராட்டத்தின் பிரதிபலிப்பு முகத்தில் தென்படாத வண்ணம் கவனமாய் இருக்கக்கூடிய திறமை அவளிடம் இருந்தது.

சரோஜாவுக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும், சூழ்நிலையுடன், சுற்றுபுறத்தில் இருப்பவருடன், அருமை மாமியுடன், அதிர்ஷ்டத்துடன் போராடுவது வழக்கமாகி விட்டிருந்தது. அதனால் வயதை மீறிய அனுபவம், உண்மையைக் கண்டு கொள்ளும் அறிவு, எப்படிப்பட்ட நிலைமை வந்தாலும்

எதிர்க்கும் துணிச்சல், நெளிவு, சுளிவு எல்லாம் இயற்கையாக அவளிடம் அமைந்துவிட்டிருந்தது. முழு பெயர் சரோஜாவாய் இருந்தாலும், எல்லோரும் அவளை ரோஜா என்று அழைப்பார்கள். தொலைவிலிருந்து பார்க்கும்போது, சுகுமாரமாய், அன்றலர்ந்த மலரை நினைவுபடுத்தும் விதமாய் அழகாக மிளிரும் அந்தப்பெண், பெயருக்குத் தகுந்தாற் போல் மென்மையான சுபாவம் கொண்டவளோ என்ற எண்ணம் ஏற்படும். ஆனால் அருகில் வந்து அறிமுகம் ஏற்பட்டபின் சுபாவத்தை ஆராய்ந்து பார்த்தால், கூர்மையான முள்ளை விட கடினமான மனம், அந்த சுகுமாரத்துக் குப்பின் ஒளிந்து கொண்டிருப்பதை உணர முடியும்.

சரோஜா ரிக்ஷாவிலிருந்து இறங்கும் போதே, தன் வீட்டில் மாமியைச் சுற்றி கும்பலாய் அமர்ந்திருந்த மகளிர் கூட்டத்தைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அவளுக்கும், இந்த மகளிர் கூட்டத்துக்கும் என்றைக்குமே ஆகாது. அந்த கும்பலுக்கு முன நின்று, அவர்கள் சொல்லப்போகும் கடும் சொற்களை, குத்தல் பேச்சிக்களை, கேட்டுக் கொள்வதை விட, சட்டென்று திரும்பி, மறுபடியும் எங்கேயாவது போய் விடலாமா என்று ஒரு எண்ணம் அவளுக்கு வந்தது. அடுத்த கணமே தன் கோழைத்தனத்தை எண்ணி வெட்கினாள். இயல்பாக அவளிடம் குடி கொண்ட தைரியம், படமெடுத்து ஆடும் பாம்புபோல் சீறிற்று. "நான் ஏன் பயப்படவேண்டும்? என்ன செய்துவிட்டோமென்று தலை குனிய வேண்டும்?"

ரிக்ஷாக்காரனிடம் பணம் கொடுத்துவிட்டு, வீட்டை நோக்கித் திரும்பியவளின் முகம் அமைதியாகக் காணப் பட்டது. எந்த தயக்கமும் இல்லாமல் நேராக வீட்டுக்குள் நுழைந்தாள்.

பார்வையாலேயே ஆளை விழுங்கும் விதமாய் தீவிரமாக பார்த்துக்கொண்டிருந்த, அந்த மகளிர் கூட்டத்தை நோக்கி புன்முறுவலித்துவிட்டு, "இதென்ன, வேளையில்லாத வேலையில் இப்படி மீட்டிங் போட்டிருக்கீங்களே! ஏன்?



இன்னிக்கு உங்கவீடுகளில் சமையல் இமையல் கிடையாதா?" என்று கேட்டாள்.

எவ்வளவுதான், வலிய வரவழைத்துக் கொண்ட பணிவுடன் அவள் கேட்டபோதும், "உங்களுக்கெல்லாம் வேலை வெட்டி எதுவும் இல்லையா?" என்ற குத்தல் அந்தக் கேள்வியில் எட்டிப்பார்த்தது.

"எத்தனை வெட்கங்கெட்ட ஜென்மம்" ஒருத்தி பற்களை நறநறவென்று அரைத்தாள்.

"ஒரு பக்கம் பொழுது விடியும்போதே, நீ எங்கே போயிட்டு வர்றே?" இன்னொருத்தி அக்கறையாக விசாரித்தாள்.

"இங்கேதான்...சின்ன வேலை இருந்தது."

"என்ன வேலை?" நீட்டி முழக்கிய கேள்விக்கு, ரோஜா காதில் விழாததுபோல் மவுனித்தாள்.

"உன் தம்பி சந்துரு அரெஸ்ட் ஆயிருக்கானாமே?" அந்தத் தெருவில் எல்லோராலும் மாமீ என்று அழைக்கப் படும் அம்புஜம் கேட்டாள்.

"ஆமாம் மாமி!" கேள்வி கேட்ட தொனியிலேயே, நக்கலாய் பதில் சொன்னாள் ரோஜா.

"எனக்குத் தெரியாமல்தான் கேட்கிறேன்... இதென்ன பாழ்புத்தி அவனுக்கு?"

மிக மென்மையான இடத்தில் அடிபட்டுவிட்ட வேதனையின் சாயல், ரோஜாவின் முகத்தில் கணநேரம் தெரிந்தது. ஆனால் அடுத்த கணமே, அவளுடைய இயல்பான ஆணவத் துணிச்சல், அதை மறைத்து விட்டது. லேசாக முகவாயை உயர்த்தி, ரொம்ப அலட்சியமாய் பதில் சொன்னாள்.

"என்ன செய்யலாம் சொல்லுங்க மாமி, கடவுள் மனிதர்களை இந்த உலகிற்கு அனுப்பும்போது, ஒவ்வொருத் தருக்கும ஒவ்வொரு குணத்தைக் கொடுத்து அனுப்புவாராம்,

உங்களுக்கு எல்லோருடைய விஷயங்களையும் தெரிந்து கொள்ளனும்னு துடிப்பு இல்லையா? இதுவும் அதுபோல் தான். ஏன்னு கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்?''

கேட்டவளின் முகம் கறுத்துவிட்டது. ரோஜா தாய் இருந்த அறை பக்கம் போகப் போனாள்.

பின்னாலிருந்து குரல் கேட்டது. ''அப்படி திருட்டுத் தனம் பண்ணி—இழிவாய் வாழுறதை விட, எதிலேயாவது விழுந்து செத்துப் போவது மேல்.''

ரோஜா விருட்டென்று திரும்பினாள். கண்களில் தெரிந்த கோபம் கூர்மையான கத்தியைப்போல் மின்னியது. அரும் பாடு பட்டு, கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு, செயற்கையான அமைதி முகத்தில் தவழ, ''அப்படியானால் அத்தை! அந்த வார்த்தைகளை நீங்க மனப்பூர்வமாய் சொல்லியிருந்தால், நீங்களும், மாமாவும்தான் முதல்ல அந்தக் காரியத்தைச் செய்யணும்.'' என்றாள்.

''நானும்—மாமாவுமா! எதுக்கு?''

''எதுக்கு என்று உங்களுக்குத் தெரியாதா? கணவனை இழந்த பிறகு உங்களை அண்டிய உங்கள் தங்கையின் சொத்து ஆறே மாதத்தில் எப்படி கரைந்துவிட்டாதோ, உங்க வீட்டில் ஆடம்பர பொருட்களும், உங்க உடம்பில் நகைகளும் எப்படி திடீரென்று வந்தனவோ, நெஞ்சு வலியால் உங்கள் தங்கை இறந்து விட்டதாக அறிவித்து விட்டு, போலீஸார் வரும் முன், பிணத்தை எரித்துவிட அடித்தது ஏன் என்றும் எங்களுக்கு நல்லாத் தெரியும்.'' என்றவள் அருகில் இருந்தவளைப் பார்த்து, ''மீனாட்சி அத்தை! உங்க வீட்டில் இருக்கிற வெள்ளிக் கிண்ணங்கள், தட்டுகள், பித்தளை பாத்திரங்கள்...இதையெல்லாம், நீங்க சமையல் செய்த வீடுகளிலிருந்து திருட்டுத்தனமாய் எடுத்து வந்ததுன்னு, இவங்கயெல்லாம் நீங்க இல்லாதபோது பேசிக் கொள்வதை என் காதால் கேட்டிருக்கிறேன். அதுமட்டும் உண்மைன்னா.. நீங்க தூக்குலத் தொங்குவீங்களா?



விஷத்தைக் குடிப்பீங்களா? இல்லை...எது செய்தால் நல்லாயிருக்கும்னு பங்கஜம் அத்தைகிட்டே அட்வைஸ் கேட்பீங்களா?''

அங்கு இருந்த எல்லோரும் பக்கவாதம் வந்து விட்டாற் போல் கைகால்களை அசைக்காமல், திறந்தவாயை மூடாமல் அப்படியே பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

இதற்குள் அறையிலிருந்து, ''ரோஜா—ரோஜா—நீ இங்கே வா...'' என்று சாவித்திரியின் அழைப்பு சத்தலாய் கேட்டது.

தாயின் அறைப்பக்கம் போகப்போன ரோஜா சற்று நின்று அவர்களைப் பார்த்து, ''என்ன சொல்ல வந்தேன்னா, இந்தக் காலத்தில் திருடாதவங்கன்னு யாரும் கிடையாது. பிடிபட்டால்தான் திருடன், பிடிபடாதவன் ராஜா. அது தான் வித்தியாசம்!'' முகத்தில் அறைந்தாற்போல் சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள்.

எல்லோருக்கும் ஒரே நேரத்தில் சுய உணர்வு வந்து விட்டது போலும், ஆளுக்கொரு விதமாய் பேசத் தொடங்கினார்கள்.

''என்ன தைரியம், என்ன திமிரு?''

''அசல் நாம் சுந்தரிக்கு ஆறுதல் சொல்ல வந்தோமா, இல்லை, இந்த சிறுக்கியிடம் பேச்சு கேட்க வந்தோமா?''

''பார்த்தால் அப்படித்தான் இருக்கு.''

''இருந்தாலும், சுந்தரி அவர்களுக்கு ரொம்பதான் இடம் கொடுத்துவிட்டாள்.'

''நல்லாயிருக்கு! கொடுத்தா கொடுக்கட்டுமே. நடுவில் நமக்கென்ன வந்தது? நம்மை பழித்தால் சும்மா இருப்போமா?''

சமையல் வேலை செய்யும் மீனாட்சி மூக்கை சிந்திப் போட்டு, சொன்னாள். ''சுந்தரி அண்ணி! முனிக்கு உன்

மூகம் பார்த்து ஒன்றும் சொல்லாமல் விட்டேன். இல்லாட்டா... அவளோட நாக்கை இழுத்து வெச்சு அறுத்திருப்பேன். என் வாழ்க்கையில் இதுவரை யாரிடமும் இப்படி ஏச்சு பேச்சு கேட்டதில்லை. போனவாரம். நான் கொடுத்த ஐம்பது ரூபாயை, நாளைக்குள் திருப்பி கொடுக்கா விட்டால் மரியாதை கெட்டுவிடும். வாங்கிட்டு போகலாம். நாம் வேணும்னா சுந்தரியே நம் வீட்டுக்கு வருவாள். இந்த ஜென்மத்தில் இந்த வாசற்படியை மிதிக்கக் கூடாது.

சுந்தரி கண்கள் அகல விரித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எல்லோரும் சலசலவென்று பேசியபடி போய்விட்டார்கள். இந்த முறை சுந்தரிக்கு நிஜமாகவே துக்கமாக இருந்தது. தாங்க முடியாத ஏமாற்றமும் ஏற்பட்டது. சற்றுமுன் வரை அன்பாய், ஆதரவாய் பேசிக் கொண்டிருந்தவர்கள், இப்படி ஏசிவிட்டுப் போனதை ஏற்றுக் கொள்ள முடியாதவளாய், சாமி வந்தவள் போல் ஆடிக் கொண்டே நாத்தியின் அறைக்குள் வந்தாள்.

''ஏண்டியம்மா, நான் உனக்கு என்ன தீங்கு செய்து விட்டேன்? நாதியில்லாமல் போய் விட்டாயே என்று, உன்னையும் உன் குழந்தைகளையும் ஆதரித்தது தானே நான் செஞ்ச குத்தம்? நாயை அவித்துவிட்ட மாதிரி அவளை என் மீது உசுப்பி விடுறியா?''

சாவித்திரி ரோஜாவின் கையைப் பிடித்துக் கொண்டு இரு கன்னங்களிலும் அறைய முயன்று கொண்டிருந்தாள். ஆனால் ரோஜா தாய்க்கு எட்டாமல் தொலைவில் நின்று கொண்டாள்.

சாவித்திரி ஒன்றும் செய்ய இயலாதவளாய் சுந்தரியைப் பார்த்து, ''அண்ணி, அவ என் மகள் இல்லை. உன் மகள். உன் மகளாய் இருந்தால் என்ன செய்வாயோ, உன் இஷ்டம். அவளை கட்டுப்படுத்த என்னால் முடியவில்லை. அவளை கொலை செய்வாயோ, சூடு போடுவாயா, எது செய்தாலும்



எனக்கு சம்மதம் தான். நான் குறுக்கே வரமாட்டேன்', என்றாள்.

தாய்க்கும், மாமிக்கும் இடையே நின்றிருந்த ரோஜா இளக்காரமாய் சொன்னாள். ''நான் பெருக்குத்தான் உன் மகளே தவிர, சுபாவத்தில் மாமியைக் கொண்டிருக்கிறேன், என்று எல்லோரும் சொல்வாங்க இல்லையா! அது உண்மை தான். மாமியிடம் வளர்ந்ததால் எனக்கும் இப்படி வாய் நீண்டுவிட்டது. எனக்கு சூடு போடணும்னா, முதல்ல மாமி தனக்கு சூடு போட்டுக் கொள்ளணும்.''

''சீ...சீ... வெட்கங்கெட்ட ஜென்மம். மாமி சாடைதான் மருமகளுக்குன்னு என்னிக்கோ வேடிக்கையா சொன்னதை வெச்சுக்கிட்டு, இன்னிக்கு அதையே சொல்லி காண்பிக்கறியா? 'நீ' என்னோட வாரிசா? என் வீட்டுக்குக் கொள்ளி வைக்க வந்த ராட்சசியின் மகள் தானே தவிர...'' சுந்தரி... கைகளை நீட்டிப் பழித்துவிட்டுப் போய்விட்டாள்,

# 4

கால்மணி நேரம் சென்ற பிறகு, கட்டிலில் இடிந்தாற் போல் உட்கார்ந்து இருந்த சாவித்திரி, உதடுகள் நடுங்க, கேட்க முடியாமல் கேட்டாள். ''அந்த கடன்காரனைப் பற்றி மணியின் அப்பா என்ன சொன்னாரு ரோஜா?''

''இந்தத் தடவை அவ்வளவு சுலபமாய் விட்டுவிட மாட்டாங்களாம்... போனவாரம் பொருட்காட்சியில் நடந்த கலாட்டாவில், இவனை சேர்ந்த கும்பலுக்குப் பங்கு இருக்கும்னு அவர்களுக்கு சந்தேகமாயிருக்காம். அந்தக் கும்பலைப் பற்றி தகவல் இதுவரை தெரியவில்லை. இவன் மூலமாய் கண்டுபிடிக்க எண்ணியிருப்பது போல் இருக்கு-

இந்தத்தடவை தன்னால் ஒன்றும் செய்ய முடியாதுன்னு சொல்லி விட்டார்."

"கடவுளே!" சாவித்திரியிடமிருந்து ஈனமான குரல் வெளிப்பட்டது. திடீரென்று கைகளால் வற்றிப் போன தன் மார்பின் மீது வெறிபிடித்தாற்போல் அடித்துக் கொள்ளத் தொடங்கினாள். "எனக்கு சாவு ஏன் வரவில்லை? இந்த பாவப்பட்ட வாழ்க்கை இன்னும் எத்தனை நாள்? எதுக்காக வாழணும் நான்?"

ரோஜா சட்டென்று அருகில் வந்து தாயை அணைத்துப் பிடித்துக் கொண்டாள். ஹிஸ்டீரியா வரும்முன் சாவித்திரி இப்படி நடந்து கொள்வாள்.

"தூக்கில் போட்டு, அவன் செத்துட்டாங்கர நல்ல செய்தியை எனக்கு நீ எப்போ சொல்லப் போறாய் ரோஜா!" பற்கள் கிட்டித்துப் போக அழுகையை தொடர்ந்தாள் சாவித்திரி.

"அம்மா!" தடுப்பது போல் அழைத்தாள். கட்டிலில் தாய்க்கு அருகில் உட்கார்ந்து, அவளைத் தன் மடியில் வைத்துக் கொண்டு, தேற்றுவது போல், "அம்மா... அம்மா" என்று அழைத்தாள்.

சாவித்திரி சுய உணர்வை இழந்து விட்டவள் போல் விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள். தாயின் இரு கைகளையும் பலமாய்ப் பற்றிக் கொண்டாள் ரோஜா.

எத்தனையோ வருடங்களாக அந்த நெஞ்சில் குடி கொண்டு விட்ட துக்கம், இன்று மடைத்திறந்த வெள்ளம் போல் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த அழுகையினூடே புலம்பிக் கொண்டிருந்தாள்.

"கஷ்டங்கள் எப்போதுமே இருக்காது. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் விடியும்னு சொல்வாங்க. அது பொய் என்று தெரிஞ்சுபோச்சு. நான் உயிரோட இருக்கும் வரை ஏதோ ஒரு வேதனையை அனுபவித்துதான் ஆகணு



போலிருக்கு. நீங்க இருவரும் வளர்ந்து ஆளாகிவிட்டால் என் கஷ்டங்கள் தீர்ந்து விடுமென்றுதான் இத்தனை நாளும் எதிர்நீச்சல் போட்டு வந்தேன். அந்த ஆசையும் பொய்த்து விட்டது. அவனானால் அப்படி கெட்ட வழியில் போய் விட்டான்... நீ—நீ மட்டும் குறைந்து விட்டாயா? நான் எத்தனை சொன்னாலும் கேட்காமல், அந்த அவனுடன் நேரம் காலம் தெரியாமல் ஊரைச் சுற்றவில்லை? என் பேச்சு உனக்கு லட்சியம் இருக்கா? யாரோட பேச்சை நீ மதித்து இருக்கே? உன் வாழ்க்கையும் நாசமாகிவிட்டதுன்னு தெரிந்த அன்று — சந்தோஷமாய் தூக்கில் தொங்கி விடுவேன். அதுவரை சாகமாட்டேன்..."

"அம்மா," அழைத்து பிரஜோனம் இல்லையென்று தெரிந்தும் ரோஜா இருமுறை அழைத்தாள்.

பதில் வராமல் போகவே, இனி ஒன்றும் செய்ய இயலாதவளாய், தாயின் தலையை மடியில் வைத்துக் கொண்டு கற்சிலையாக உட்கார்ந்து விட்டாள். சாதாரணமாக, இயலாமை ஏற்படும் போது நிறைய பெண்கள் அழுது விடுவார்கள். ஆனால் ரோஜா அப்படி இல்லை. கட்டுப் படுத்த முடியாத கோபமும், தாங்க முடியாத ரோஷமும் அவளை ஆட்கொள்ளும்.

தாயின் இதயத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் எரிமலை பற்றி அவள் அறியாதவள் இல்லை. ஆனால் தன்னால் என்ன செய்ய முடியும்? சிறுவயதில் படிப்புக்காக தான் பிடிவாதம் பிடித்தபோது "ஆங்! பொட்ட பிள்ளைக்குப் படிப்பு எதுக்கு? ஒருவன் கையில் பிடிச்சுக்கொடுக்கறவனுக்கு அழகாக வீட்டு வேலை, சமையல்னு கற்று கொடுக்காமல்..." என்று மாமி சொன்ன சொல்லை பிடித்துக் கொண்டு தாயும், "வேண்டாம்—வேண்டாம்" என்று ஒத்துப் பாடினாள். வீட்டின் நிலைமை புரிந்துகொண்ட ரோஜாவுக்கு வற்புறுத்தி கேட்க துணிவில்லாமல் போய்விட்டது. போகட்டும் 'ஆண்பிள்ளை' என்று அவ்வளவு பாசம் பொழியும் சந்திரனையாவது நன்றாகப் படிக்க வைத்தார்

களா என்றால் அதுவும் இல்லை. ஜெயிலில் கம்பிகளுக்கு பின்னால் தலைகுனிந்து அமர்ந்து இருந்த தம்பியின் உருவம் ரோஜாவின் கண்கள் முன் நிழலாடிற்று. கண்களில் நீர் கிர்ரென்று சுழன்றது.

சந்திரன் சின்ன வயதில் எவ்வளவு அப்பாவியாய் இருந்தான்? விளையாடும் போது பசங்களுடன் சண்டை வந்தால், தானோ, மாமியோ போய் அவன் சார்பில் வாதாட வேண்டியிருந்தது. இயற்கையிலேயே ரொம்ப பயந்த சுபாவம். சங்கோஜப் பேர்வழி. இருந்தாலும் படிப்பில் கெட்டிக்காரனாய் இருந்தான். வகுப்பில் முதல்மாணவனாய் திகழ்ந்தான். நல்ல எதிர்காலம் இருப்பதாக ஆசிரியர்கள் அவனைப் பாராட்டும்போது, அதைக் கேட்டு வீட்டில் எல்லோரும் எப்படி சந்தோஷப்பட்டார்கள்? அந்த சின்ன வயதிலேயே படிப்பில், விளையாட்டில் அவன் வாங்கியிருந்த பரிசுகளைப் பார்க்கும்போது ரோஜாவுக்குப் பொறாமை கூட ஏற்பட்டதுண்டு. ஒரு கணம்தான். அடுத்த நிமிடமே, அவனுக்கும் தனக்கும் எந்த வேறுபாடும் கிடையாது என்று தோன்றும்.

பதினைந்து வயதில் பள்ளி இறுதியாண்டில் நல்ல மதிப்பெண்கள் பெற்று இருந்தான். அன்றிலிருந்துதான் அவனை சனி பிடித்துக்கொண்டுவிட்டது. அவனை மேலே படிக்கவைக்க பண வசதியில்லாமல் போய்விட்டது. வேலை பார்க்கவும் வயது குறுக்கே நின்றது. ரொம்ப நாள் வீட்டில் வெறுமே இருந்துவிட்டான். முதல் முதலில் நேர்மையாகத் தான் இருந்தான்.

ஆனால் போகப் போக அவனுடைய நடத்தையில் மாற்றம் ஏற்பட தொடங்கிற்று. வீட்டில் இருந்தால் ஏதாவது ஒரு சாக்கு வைத்துக் கொண்டு மாமி திட்டுவதையும் கரித்துக் கொட்டுவதையும் பொறுக்க முடியாமல், கூடுமான வரை வெளியில் கழிக்க பழகிக்கொண்டுவிட்டான். ஆனால் அப்படி வெளியில் சுற்றப் பழகியதில் வேண்டாத சகவாசங்கள் அவனுக்கு ஏற்படுமென்று ரோஜா கனவில் நினைக்கவில்லை.



சந்த்ரா சிகரெட் பிடிக்கிறான் என்று தெரிந்தபோது எவ்வளவு வருத்தப்பட்டாள். நேராய் மாமாவிடம் சென்று அவனை கண்டிக்கும்படி சொன்னாள். அவளுடைய புகாரை லேசாக எடுத்துக் கொண்டார் சங்கரன். "ஆங்! இந்தக் காலத்தில் யார்தான் சிகரெட் பிடிக்கலை? பசங்களை ரொம்பவும் கட்டுப்பாடாய் வளர்க்கக் கூடாது. கொஞ்சம் விட்டுப் பிடிக்கணும். நாளைக்கு அவனே பெரிய ஆபீசர் ஆன பிறகு சிகரெட் பிடிச்சால் வாயை மூடிகிட்டுதானே இருப்போம்?"

ரோஜாவுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. கடைசியில் தானே சந்திரனை கொல்லைப்புறம் அழைத்துச் சென்று நிற்க வைத்து கேட்டாள். திட்டினாள், எங்கிருந்து கிடைத்ததுன்னு தூண்டி துருவி கேட்டாள்.

யாரோ நண்பர்கள் கொடுத்ததாக முணுமுணுப்பது போல் சொன்னான். "இனி ஒரு நாளும் பிடிக்கமாட்டேன்" என்று வாக்குக் கொடுத்தான். ஆனால், ரோஜாவுக்குத் தெரியும், தன்மீது இருந்த மதிப்பின் பொருட்டு அந்த கணம் வாக்குக் கொடுத்துவிட்டானேயன்றி, அதன்பிறகு அவனால் அதைக் காப்பாற்ற முடியாதென்று! அப்படித்தான் நடந்தது.

கொடுமையான உண்மை என்னவென்றால், ஒரு விதமாய் பார்க்கப் போனால், சந்த்ராவுக்கு திருட்டை கற்றுக் கொடுத்ததும் மாமிதான். அவனுக்கு வயிறு நிரம்ப சாதம் போடமாட்டாள். பஜ்ஜி, முறுக்கு, பட்சணங்களை, அவனுக்குப் பிடித்தமான இனிப்புகளை செய்தாலும் அவனுக்கு சரியாய் கொடுக்காமலே, தீர்ந்து விட்டதென்று காலி சம்படத்தைக் காண்பிப்பாள். உள்ளே தனியாய் ஒளித்து வைத்துக்கொள்வாள். கடைசியில் சந்த்ரா துணிந்து விட்டான். போட்ட மூடி போட்டபடியே இருக்கும்—உள்ளே இருக்கும் தின்பண்டங்கள் மாயமாகிவிடும். திருடனுக்குத் தேள் கொட்டினாற்போல், சுந்தரி வெளியில் சொல்லவும்

முடியாமல், மெல்லவும் முடியாமல் உள்ளேயே புழுங்கிக் கொண்டிருந்தான். மாமியை அதுபோல் அழைப்பது அவனுக்கு வேடிக்கையாய் இருந்தது. ஆனால் ரோஜாவால் அதைப் பொறுக்க முடியவில்லை. தம்பியை நன்றாகத் திட்டுவாள். சந்திரன் முன் போல் வெட்கப்படவில்லை. அவமானமாய் உணரவில்லை.

"ஏன்? எதுக்கு எடுத்துக்கக்கூடாது? அவங்களுக்கு நல்லா வேணும்..." பிடிவாதமாய், அடம் பிடிப்பதுபோல் சொல்வான்.

அதன் பிறகு அவனுடைய போக்கில் கிடுகிடுவென்று மாற்றம் வரத் தொடங்கிற்று. நாலைந்து நாட்கள் சேர்ந்தாற்போல் வீட்டுக்கு வரமாட்டான், திரும்பி வந்த போது அவனிடம் வாட்சோ, ட்ரான்ஸிஸ்டரோ...ஏதோ ஒரு புதிய பொருள் காணப்படும். எங்கிருந்து கிடைத்தது என்று கேட்டால், நண்பர்கள் கொடுத்ததாகச் சொல்வான். அது எப்படிப்பட்ட நட்போ, அந்த நண்பர்கள் எப்படிப் பட்டவர்களோ...கவனித்து பார்க்கும்போது காலம் தாழ்ந்து விட்டது.

மாமிக்குத் தங்களைக் கொஞ்சம்கூட பிடிக்காது என்றும், மாமாவின் வருமானம் ரொம்ப குறைவுதான் என்றும், இந்தக் குடும்பத்துக்கு சுமக்க முடியாத பாரமாக தாம் இருப்பது அவளுக்குத் தெரியும். தெரிந்தும் இந்த வீட்டை விட முடியவில்லை, வேறு வழியில்லை. இருபது வருடங்களுக்கு முன், இரண்டு வயது பெண் குழந்தையாய் தன்னையும், ஆறு மாத கருவாய் செந்தூரவை வயிற்றிலும் சுமந்து கொண்டு அண்ணனிடம் ஆதரவு தேடி வரும் முன்பே, தன் தாய் யோசித்து இருக்க வேண்டும்.

ஆதரவற்றவர்களுக்கு இந்த உலகம் முள் படுக்கை போன்றது என்றும், அதில் வாழ்வது ரொம்ப கடினம் என்றும் அம்மாவுக்கு ஏன் தெரியவில்லை? போகட்டும் அண்ணனின் நிழலில் ஆதரவு தேடி வந்தாலும், தனக்கும்,



குழந்தைகளுக்கும் என்று கொஞ்சம் சுயநலத்துடன் செயல் படாமல், இருப்பதெல்லாம் அவர்களிடம் கொடுத்து விட்டது விவேகமற்ற செயல். அவளுடைய முட்டாள் தனத்திற்கு அவளுடன் சேர்ந்து நல்ல எதிர்காலம் இருந்த குழந்தைகளின் வாழ்வும் பலியாகி விட்டது.

கணவன் இல்லாமல் போய்விட்டால், உலக பற்றை ஏன் விட்டுவிட வேண்டும்? ஒன்றும் இல்லாத மீனாட்சி அத்தை, சமையல் பண்ணி பிழைத்துக்கொள்ளவில்லை! மகனுக்கும், மகளுக்கும் நல்ல வாழ்க்கையை அமைத்துத் தர வில்லை? அம்மாவுக்கு என்ன ஆயிற்று? சுதந்திரமாய் யோசிக்கும் சக்தி அவளுக்குக் கொஞ்சம்கூட இல்லை. தாயைப் பற்றி ரொம்ப கடினமாக யோசிப்பது நினைவுக்கு வந்ததும் ரோஜா வெட்கினாள். யாரிடம் தான் கோபத்தை பாராட்டுகிறாள்? எலும்பும் தோலுமாய், குழந்தைகள்மீது அளவற்ற பாசத்துடன், அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றிய கவலையுடன் உயிரை கையில் பிடித்துக் கொண்டு வாழும் இந்த தாயிடமா தான் கோபம் கொண்டது?...

செந்தூர எப்படியும் கை நழுவிவிட்டான். குறைந்த பட்சம் தானாவது அவளை சுகமாக வைத்துக் கொள்ளணும். ஆனால் எப்படி? எத்தனையோ முயற்சிகளுக்கு பிறகு கிடைத்த ட்யூஷன் வேலையும் இன்றுடன் முடிந்துவிட்டது. சந்திரனைப் பற்றித் தெரிந்ததும், அந்த மாமி, "இதோ பாரம்மா... உன் மேல் எனக்கு எந்த கோபமும் கிடையாது. உன் வீட்டு மனுசங்க நல்லவங்க இல்லை! பசங்களுக்கு வேறு ஏற்பாடு செய்துக்கறேன்..." என்றவள் பணத்தை கணக்கு பார்த்து கையில் கொடுத்துவிட்டாள். ரத்தம் வற்றிப் போய் வெளிறிவிட்ட முகத்துடன் ரோஜா வீட்டுக்கு திரும்பினாள். இந்த நிலையில் தாயை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது எப்படி என்ற கேள்வி அவளை துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது. ரோஜாவுக்கு எதிர் காலம் பெரிய கேள்விக் குறியாய், முட்கள் நிறைந்த பாதையாய் தென்பட்டு பயமுறுத்தியது.

# 5

பௌர்ணமி நிலவின் ஒளியில், கருநாகம் போல் மின்னிக் கொண்டிருக்கும் சாலைக்கு இருபுறமும், புதிய விதமாய் கட்டப்பட்ட பங்களாக்கள், உயரமான மதில் சுவர்களுடன், விசாலமான தோட்டத்துடன், ஒன்றுக்கொன்று போட்டி போடும் விதமாய் அமைந்திருந்தன. அந்த பங்களாக்களில் வசிப்பவர்கள், சமூகத்தில் உயர்வான இடத்தில் இருப்பவர்கள். பணமும், புகழும் அவர்களின் அந்தஸ்தை மேலும் உயர்த்தியது. அந்த வீடுகளில் வளர்க்கப்படும் ஒவ்வொரு நாய்க்கும் ஆகும் செலவில், ஒரு ஏழைக்குடும்பம் கஷ்டமின்றி தாராளமாக வாழ்ந்துவிடலாம்.

இரவு பத்துமணியாகிவிட்டது. மேலே சொல்லப்பட்ட வீதியில், மூன்றாவது பங்களாவில் எல்லா அறைகளிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. வேலைக்காரர்கள் குறுக்கும் நெடுக்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். அந்த வீட்டு எஜமானரின் இரவு உணவு இன்னும் முடியவில்லை.

அந்த வீட்டைச் சுற்றிலும் உயரமான காம்பவுண்ட் சுவரும், அழகான பூந்தோட்டமும் அமைந்திருந்தது. இரவில் மலரும் பூக்களிலிருந்து நறுமணம் எங்கும் பரவியிருந்தது.

உள்ளே ஹாலில் சோபாவில் சாய்ந்த வாக்கில் வீற்றிருந்த அந்த வீட்டு யஜமானர் வேணுகோபாலன் புத்தகத்தை படித்துக் கொண்டிருந்தார். அவர் மடியில் தலை வைத்து ராதை உறங்கி விட்டிருந்தாள். சின்னம்மா தூங்கிவிட்டதை கவனித்த வேலைக்காரன், அவளைத் தூக்கி உள்ளே படுக்க வைக்கும் எண்ணத்துடன் அருகில் வந்த போது, அவர் கை சாடை காட்டி மறுத்து விட்டதை



கவனித்து, திரும்பிப் போனான். புத்தகத்தை படித்துக் கொண்டிருந்த வேணுகோபாலன், நடுவில் சற்று நிறுத்தி, ஒரு கணம் மடியில் இருந்த சின்ன மகளின் முகத்தையும், அவள் கழுத்தில் மின்னிக் கொண்டிருந்த நெக்லஸையும், கண் இமைக்காமல் பார்த்தார். அந்த நகையைப் பார்க்கும் போது, அவர் கண்கள் முன், முந்தைய நாள் ரயில் நிலையத்தில் அதைத் திருடமுயன்றவனின் முகமும், வேண்டாமென்று உதற நினைத்தாலும் நினைவுக்கு வந்தது.

விஜயையும், அனந்தையும் இன்று வீட்டுக்கு சாப்பிட அழைத்திருந்தார் வேணுகோபாலன். அனந்து வந்துரொம்ப நேரம் ஆகிவிட்டிருந்தது. விஜய் இன்னும் வரவில்லை, மாலை ஆறு மணியிலிருந்து அவனுக்காக எதிர்பார்க்கத் தொடங்கினார். இரவு பத்து மணி ஆகி விட்ட போதும் அவன் வரும் அறிகுறியே தென்படவில்லை.

வேறொருவராயிருந்தால் அவருக்கு எரிச்சல் ஏற்பட்டு. மரியாதை பற்றிக் கூட கவலைப்படாமல்,தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டிருப்பார். ஆனால் விஜய் விஷயம் வேறு! ஏதாவது முக்கியமான வேலை வந்தாலொழிய, சொன்ன சொல் தவற மாட்டான். பங்க்சுவாலிட்டி என்றால் உயிர் அவனுக்கு.

அனந்த் வந்தாலும் பிரயோஜனப்படாது. வேணுகோபாலன் முன் முட்கள் மீது அமர்ந்தாற் போல் தென்படுவான் அனந்த். அண்ணன் தம்பி — இருவருக்கும் ஒரே விதமான உரிமை கொடுத்த போதும், அதை எடுத்துக் கொள்ளும் விதம் இருவரிடமும் மாறுபடும். அனந்த் வந்ததும் குசலம் விசாரித்துவிட்டு, காலேஜ் பற்றி விவரம் கேட்டு விட்டு, "மேலே லாவண்யா இருப்பாள், போய் பாரு—" என்றார் வேணுகோபாலன்.

"அப்பாடா" என்று எளிதாக மூச்சை இழுத்துக் கொண்டவனாய், அங்கிருந்து எழுந்து கொண்டான் அனந்த். அவன் போகும் திசையையே கண் இமைக்காமல்

நோக்கிய வேணுகோபாலன் பெருமூச்செறிந்தார். ஒரே மரத்தில் பூக்கும் மலர்களிலோ, காய்க்கும் காய்களிலோ அதிக வித்தியாசம் இராது. ஆனால் மனித வாழ்க்கையின் விசித்திரமென்னவோ, ஒரே தாய்க்குப் பிறந்த மக்கள் ஒரே விதமாய் இருப்பதில்லை... ஒரே தந்தைக்குப் பிறந்தவரா யினும் விஜய்க்கும், அனந்துக்கும் வித்தியாசம் பளிச்சென்று தெரியும்.

சின்ன வயதிலிருந்தே வீட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, பிரச்னைகளை எதிர்கொள்ளும் விஜய்...

எத்தனை வயது வந்தாலும் பொறுப்பற்றவனாய், கதை, சினிமா, கவிதை என்று இருக்கும் அனந்த்...

அனந்த் போன்றவர்களால் உணர்வுகளில் மாற்றம் வரலாமே தவிர காரியம் கொஞ்சம் கூட ஆகாது.

அண்ணன் தம்பி இருவரின் மனப்போக்கில் மட்டுமே யில்லாமல், உருவத்திலும் ரொம்ப மாறுபாடு இருக்கும்.

கட்டுப்பாடான, ஒழுக்கமான வாழ்க்கை நடத்துவதால் ஆரோக்கியமாய் தென்படுவான் விஜய். உயரத்துக்கேற்ற பருமன்; அவனுடைய நடையில் ஒரு விதமான கம்பீரம் மிளிரும்; சுபாவத்தில் மிருதுதன்மையும், அலட்சியமும் இழையோடியிருப்பதுத் தெரியும். எல்லோருடனும் பேசுவது போல் அவனிடம் உரிமையாய் பேசி விட முடியாது. ரொம்ப நெருக்கமாய் இருப்பது போல தென்பட்டாலும், அவனிடம் குடி கொண்டிருக்கும் கம்பீரம், ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருப்பது போன்ற உணர்வை தோற்றுவிக்கும்.

அனந்த் அப்படியில்லை. சின்னக் குழந்தை போல் சட்டென்று பிணைந்து விடுவான். எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் ஏற்பானேயன்றி தன்னால் மற்றவர்களுக்குத் துளிக் கூட கஷ்டம் வரவிட மாட்டான். மலர் போன்ற மென்மையான அவன் இதயம் இந்த உலகில் நடக்கும் அநியாயங்களைக் கண்டு பதை பதைக்கும். அவன் பார்வை



24166
4414288

யில் இந்த உலகில் இருக்கும் மனிதர்கள் எல்லோரும் ஒன்று தான். யதார்த்த உல [illegible] வாழ்பவன் அனந்த்.

அனந்த் மாடியில் லாவண்யாவின் அறையில் அமர்ந்து கொண்டு, நாட்டின் நடப்பைப் பற்றி அலசிக் கொண்டிருந் தான். படுக்கையில் தலையணையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு அவன் சொல்வதை காதில் சரியாகவாங்காமல், கையில் இருந்த பேப்பரையே கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் லாவண்யா. அந்த பேப்பரில் முதல் பக்கத்தில் ஹிந்தி சினிமா ஹீரோ போன்று உயரமாய் எடுப்பான நாசியும், திட்சண்யமான பார்வையும் கொண்ட ஒரு இளைஞனின் புகைப்படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. லாவண்யாவுக்கு அந்தப் போட்டோவை எத்தனை முறை பார்த்தாலும் திருப்தி ஏற்படவில்லை. அவன் வேறு யாரோ இல்லை, முந்தைய நாள் அவள் தந்தையிடம் நகையை திருட முயன்ற பெரிய மனுஷன்தான். எவ்வளவு துணிச்சல்? லாவண்யா வியப்படைந்தாள். பட்டப்பகலில் அப்படித் திருட எவ்வளவு தைரியம்வேண்டும்? எவ்வளவு திறமையாய் செயல்பட்டிருக்க வேண்டும்?

இந்தக் காலத்து இளைஞர்களுக்கு இவ்வளவு துணிச்சலும், சாகசமும் இருக்குமா? பார்க்கவும் அழகாய் இருக்கிறான். போட்டோவின் கீழே செய்தி போட்டிருந்ததால் திருடன் என்று தெரிந்ததே ஒழிய, அவனை விளையாட்டு வீரனாகவோ, புகழ் பெற்ற நபராகவோ தான் நினைக்கத் தோன்றியது. பேப்பரை மடித்து அனந்திடம் கொடுத்தவாறே "அனந்த்! இதைப் பார்த்தாயா?" என்றாள்.

நாட்டில் தலை விரித்தாடும் லஞ்சத்தைப் பற்றி லெக்சர் கொடுத்துக் கொண்டிருந்த அனந்த் சட்டென்று நிறுத்தி... "என்னது?" என்றான்.

"பாரு.." பேப்பரை கொடுத்துவிட்டு சரியாய் உட்கார்ந்து கொண்டு ஜன்னல் வழியாய் வெளியில் பார்க்கத் தொடங்கினாள்.

அவளுக்கு இருட்டில், கண் இமைக்காமல் வெறுமையாய் நோக்குவது ரொம்பவும் பிடிக்கும். அந்த சூனியத்தில் கனவுலகை சிருஷ்டித்துக் கொண்டு அதிலேயே வாழ முயற்சிப்பாள். கனவில் அவளது உலகம் எப்போதும் புதுமையாய், கவர்ச்சியாய் தோன்றும்.

லாவண்யாவிடம் இறந்து போன தாயாரின் பாதிப்பு நிறையவே இருந்தது. அவள் தாய் லலிதாவுக்கு வாழ்க்கை பற்றி வரையறுக்கப்பட்ட அபிப்பிராயங்கள் இருந்தன. அதில் முக்கியமானது, எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் எல்லாவிதமாகவும் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். அந்த குணம் அப்படியே மகளுக்கு வந்து விட்டது. லாவண்யா பிறந்து பதினான்கு வருடங்கள் கழித்து மறுபடியும் கருவுற்றபோது லலிதா ரொம்ப பயந்து விட்டாள். தன் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் என்று எண்ணியதோடு, அதையே பறைசாற்றவும் செய்தாள் விசித்திரமாய் அவள் சொன்னது போலவே, பிரசவத்தின் போது சிக்கல் ஏற்பட்டு ஆறு மாதம் கழித்து இறந்து விட்டாள்.

தாயின் உயிருக்கு யமனாய் வந்து பிறந்த ராதையைக் கண்டால் லாவண்யாவுக்குக் கொஞ்சம் கூட அன்பு கிடையாது. ஊமையாய் பிறந்து விட்ட ராதையை வேணுகோபாலன் தான் தாயும், தந்தையுமாய் கவனித்துக் கொண்டார். ஏற்கனவே சின்ன வயது முதல் தந்தையிடம் மதிப்பு குறைவாக இருந்த லாவண்யாவுக்கு, தாய் இறந்த பிறகு தந்தையிடம் துவேஷம் இருமடங்காயிற்று.

லாவண்யாவுக்கு நினைவுத்தெரிந்த நாள் முதலாய் தாயும், தந்தையும் ஏதோ ஒரு காரணத்துக்காக சண்டை போட்டு வந்தார்கள். லாவண்யாவுக்குத் தந்தையிடம்



வெறுப்பு ஏற்பட இது முக்கிய காரணமாய் அமைந்து விட்டது. அதன் பிறகு நடந்து விட்ட சின்னச் சின்ன நிகழ்ச்சிகளால் அந்த வெறுப்பு, உரமும் நீரும் ஊற்றி வளர்த்த மரம் போல் மகா விருட்சமாயிற்று. இளம் வயதில் இருந்த லாவண்யாவுக்கு, அடிக்கடி தம் வீட்டுக்கு வந்து போகும் விஜயிடம் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது.

வேணுகோபாலன் விஜயிடம் லாவண்யாவை மணம் புரிய பிரஸ்தாபித்தபோது, அவன் மறுத்து விட்டான். அவனை வற்புறுத்தியோ, தான் செய்த நன்மையை சுட்டிக் காட்டி, அதற்கு நன்றி கடனாகவோ இந்தத் திருமணத்துக்கு ஒப்புக் கொள்ளும்படி செய்யாமல், தன் தந்தை மவுனமாய் இருந்து விட்டது லாவண்யாவுக்கு, ஆத்திரமூட்டியது. தன் தந்தை சற்றுப் பிடிவாதமாய் இருந்திருந்தால் விஜய்க்கும் தனக்கும் திருமணம் முடிந்திருக்குமென்று லாவண்யா நம்பினாள். சொந்த மகளின் விருப்பதைப் பற்றி அக்கறை கொள்ளாமல், நண்பனின் மகனான விஜயின் அபிப்பிராயத்துக்கு மதிப்பு அளித்ததில் லாவண்யாவுக்கு இன்றும் தன் தந்தையிடம் சொல்லொண்ணாத மனத்தாங்கல்! அது மட்டுமில்லை. தன் பேச்சை ஏற்காத விஜயின் வருகையை தடுக்க முற்படாதது, அவளுடைய கோபத்தை இன்னமும் கிளறியது.

அதோடு நிற்காமல், ஏமாற்றமடைந்திருந்த மகளைத் தேற்றாமல், இன்னும் வேதனையை உண்டாக்குவது போல் மதுசூதன் என்ற இளைஞனுடன் அவளது திருமணத்தை நிச்சயம் செய்துவிட்டார். அவனை தனக்குப் பிடிக்கவில்லையென்று லாவண்யா முகத்துக்கு நேராய் சொன்ன பிறகும் அவர் தன் முடிவை மாற்றிக் கொள்ள வில்லை. மதுசூதன் மிகவும் நல்லவன் என்று அவருடைய எண்ணம். ஆண்களில் நல்லவர்கள் என்றால் உதவாக்கரை என்பது லாவண்யாவின் அசைக்க முடியாத தீர்மானம். அதுக்கு எடுத்துக்காட்டாய் தன் தந்தையையே சுட்டிக்

காட்டுவாள். அவருடைய நல்லதனத்தினால் தன் தாய் எப்படிப்பட்ட நரகத்தை அனுபவித்தாளோ, வியாபாரத்தில் எப்படி நஷ்டங்கள் வந்தனவோ, கடைசியில் விஜயின் புத்தி சாதுரியத்தினால் அந்த நஷ்டங்கள் எப்படி அடைப்பட்டனவோ, லாவண்யாவால் நூறு உதாரணங்களை அள்ளி வீசமுடியும்.

திருமண விஷயத்தில் மகளின் விருப்பத்தை தந்தை பொருட்படுத்தவில்லை. துடுக்கு சுபாவம் கொண்ட லாவண்யாவின் வாழ்க்கை மகிழ்ச்சியாய் இருக்க வேண்டுமென்றால் வாயில்லாத பூச்சியான மதுசூதன் தான் சரியானவன் என்று அவர் எண்ணினார்.

தன் தாய் உயிரோடு இருந்திருந்தால் இந்தத் திருமணம் நடந்திருக்காது என்று லாவண்யாவுக்குத் தெரியும். வீட்டிலிருந்து ஓடிப்போய்விட முயற்சி செய்தாள். அது நடக்கவில்லை.

திருமணமான பின் நான்கு மாதங்கள் வரை கணவன் மனைவி இருவரும் வேணுகோபாலன் வீட்டில்தான் தங்கியிருந்தார்கள். லாவண்யா ஒவ்வொரு விஷயத்திலும் அடம்பிடிப்பதையும், கணவன் மனைவி எதிரும் புதிருமாய் இருப்பதையும் அவர் கவனியாமல் இல்லை.

பத்து மாதங்கள் கூட முடியவில்லை. அலுவலக நிமித்தமாய் வெளியூர் சென்றிருந்த மதுசூதனின் வண்டி விபத்துக்குள்ளாகியதில் அவன் அந்த இடத்திலேயே இறந்து போனான். இந்தச் செய்தி கேட்டதுமே வேணுகோபாலன் இடிந்து போனார். லாவண்யாவின் கண்கள் மின்னல் போல் மின்னின. சனி விட்டது என்ற நினைப்புதான் மேலோங்கியது.

ஏற்கனவே நாகரீக மோகத்தில் மிதந்து கொண்டிருந்த லாவண்யா கையில் வளையலும், நெற்றியில் திலகமும் இல்லாமல் இருப்பதை புதிய ஃபாஷனாய் பழகிக் கொண்டு விட்டாள். இருபது வயதிலேயே வாழ்க்கையில் எந்த சுகத்தையும் அனுபவிக்காமல் விதவையாகி விட்ட மகளைப்



பார்க்கும் போது வேணுகோபாலனின் மனதில் வேதனை சூழ்ந்து கொள்ளும்.

மறுபடியும் திருமணம் செய்ய முயன்ற போது, லாவண்யா விருப்பப்படவில்லை. பிடிவாதமாய் மறுத்தாள். மறுபடியும் அம்முயற்சி செய்தால் தன் பிணத்தைத்தான் பார்க்க முடியும் என்று திட்டவட்டமாய் கூறிவிட்டதால், அவர் மேலும் வற்புறுத்தவில்லை. அந்தப் பேச்சையே எடுக்கவில்லை.

மனைவி இறந்து போகும் முன் அவளுக்கு வாக்கு கொடுத்தது போல் வேணுகோபாலன் தன் சொத்தின் மீது வரும் வருமானத்தில் பாதி பங்கு லாவண்யாவுக்குச் சேருவது போல் ஏற்பாடு செய்தார். அந்தப் பணம் மாதா மாதம் வங்கியில் அவளுடைய கணக்கில் சேர்ந்துவிடும்.

நாகரீக மோகம் தலைக்கேறிய லாவண்யாவுக்கு, புதிதாய் கைக்குக் கிடைத்த பணம், தவறான பாதைகளுக்கு வழி வகுத்தது. லேடீஸ் கிளப்பில் முதலிலிருந்தே அவளுக்கு முக்கியத்துவம் இருந்து வந்தது. பண விஷயத்தில் சுதந்திரம் வந்ததும், சிநேகிதர்களை தேர்ந்தெடுப்பதிலும் சுதந்திர மனப்போக்கை கடைபிடித்தாள்.

அழகும், பணமும் மிகுந்து சற்று வெகுளியாய் தென்பட்ட லாவண்யாவை வழிபடுபவர்கள் அதிகமாய் இருப்பதில் வியப்பேதும் இல்லை. ஆனால் தன் கடைக் கண் பார்வைக்காக ஏங்கும் இந்த மனிதர்களைக் கண்டால் லாவண்யாவுக்கு வெறுப்புதான் வந்தது.

தன்னை, தன் மனதை சரியாகப் புரிந்துகொள்ளும் நபர் ஒருவர் கூட தென்படாததில் லாவண்யாவுக்கு எரிச்சலும், வெறுப்பும் ஏற்படத் தொடங்கிற்று. அடிக்கடி அவளுடைய நண்பர்களின் வட்டம் மாறிக்கொண்டேயிருக்கும்.

சமீப காலமாய் அவளுடன் நெருக்கமாய் இருந்தவன் டாக்டர் கிஷோர் M D. முடித்துவிட்டு பிராக்டீஸ் தொடங்கியிருந்தான். அவனுடைய சாதுரியமான பேச்சில் லாவண்யா

ஈர்க்கப்பட்டாள். தன்னை அறியாமலேயே, அடிக்கடி அவனுடைய கிளினிக்கிற்குப் போக ஆரம்பித்தாள். சினிமா ஹாலில், பொது இடங்களில் இருவரும் இணைந்து காணப் பட்டதாக, வேணுகோபாலனுக்குச் செய்தி எட்டியது.

கிஷோருக்கு மனைவியும், இரண்டு குழந்தைகளும் இருப்பதாய் தெரிந்ததும், அவனைச் சந்திக்கக்கூடாது என்றும், பேசக்கூடாது என்றும் லாவண்யாவை கட்டுப் படுத்தினார். தந்தை வேண்டாமென்று மறுக்கும் காரியத்தை செய்து அவரை பழி தீர்த்துக் கொள்ளும் லாவண்யா, அலட்சியமாய் தலையை உலுக்கிவிட்டுப் போய்விட்டாள்.

திடீரென்று ஒரு நாள் கிஷோரின் மனைவி, குழந்தையை அழைத்துக் கொண்டு நேராய் வேணுகோபாலன் வீட்டுக்கு வந்துவிட்டாள். சின்ன மகனுக்கு ஜுரமாய் இருப்பதையும், தந்தைக்காக ஏங்கிக் கொண்டு இருக்கிறான் என்றும், தன் கணவர் நாலைந்து நாட்களாய்வீட்டுப் பக்கமே வரவில்லை என்றும், அவனுக்கு என்ன ஆயிற்றோ என்ற கவலையும், கிளினிக் செயல் படாததால் இனி எப்படி வாழ முடியும் என்றும் குரல் உயர்த்தி புலம்பினாள். வேலைக்காரர்கள் திறந்த வாயை மூடாமல் இந்த ரகளையை ஆர்வத்துடன் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். வேணுகோபாலனுக்கு அவமானத்தால் உயிரே போனார் போலிருந்தது.

உடனே விஜய்க்கு போன் செய்து விஷயத்தைத் தெரிவித்தார். விஜயும், டிரைவர் ராமுவும் சேர்ந்து தேடத் துவங்கினார்கள்.

கிஷோர் எங்கேயும் போய்விடவில்லை. சென்னை யிலிருந்து சிலமைல்கள் தள்ளி ஒரு கிராமத்தில் தன் நண்பன் வீட்டில்,லாவண்யாவுடன் விருந்தாளியாய் தங்கியிருந்தான். லாவண்யா, சினேகிதியின் கல்யாணத்துக்குப் போவதாய் வீட்டில் சொல்லிவிட்டு கிஷோருடன் சென்றிருந்தாள். விஜய் போய் லாவண்யாவை அழைத்து வந்தான்.



லாவண்யாவைக் கட்டுப்படுத்துவது சாத்தியமில்லை என்று தெரிந்தபோது வேணுகோபாலனுக்கு தன் இயலாமை யின் மீது கோபமும், ஆத்திரமும் வந்தன. லாவண்யா ஏன் இப்படிச் செய்கிறாள்? அவளுக்கு தன்னை பழிதீர்த்துக் கொள்ள வேறுவழியே கிடைக்கவில்லையா? ஏற்கனவே ரத்த அழுத்தம், நெஞ்சு வலியால் அவதிப்பட்டிருந்த அவரை இந்த நிகழ்ச்சி இன்னும் பலவீனமாக்கிவிட்டது.

நிலைமையை உணர்ந்த விஜய் அவரை ஓய்வு தேவை என்ற பெயரில் வீட்டுச் சூழலிலிருந்து தொலைவாக, வற்புறுத்தி அனுப்பிவிட்டான். அவருடைய பழைய நண்பரும், இயற்கை வைத்திய நிபுணர் இருக்கும் கிராமத் துக்கு விஜயின் பிடிவாதத்தால் சென்றார். போகும் முன் லாவண்யாவுக்குக் கையில் சல்லிக் காசு கிடைக்காதவாறு செய்துவிட்டுப் போனார். வீட்டில் நான்கு சுவர்களுக்கு நடுவில் கைதிபோல் சிக்கிக் கொண்டு விட்ட லாவண்யா, தன் அதிருப்தியை, வெறுப்பை, வீட்டிலிருக்கும் வேலைக் காரர்கள் மீதும், வாயில்லாத ராதை மீதும் தீர்த்துக்கொள்ள முற்பட்டாள். தாய் இல்லாத தன்னை இப்படி துன்புறுத்தும் தந்தையை தூஷித்து அவருக்குக் கடிதம் எழுதுவாள்.

அந்தக் கடிதங்களை கண்டு வேணுகோபாலன் வருத்தப் பட்டாலும், லாவண்யாவுக்கு அறிவுரை வழங்கி, பொறுமை யாய் பதில் எழுதுவார். பெண்ணின் வாழ்க்கை எவ்வளவு நாசுக்கானதோ, கவனமாக இல்லாவிட்டால் அது எப்படி நாசமாகிவிடுமோ, அவளுக்குப் புரியவைக்க முயன்று கொண்டிருந்தார்.

ஒவ்வொரு தடவையும் கையொப்பமிட்ட காசோலையோ பணத்தை எடுக்க உரிமை வழங்கும் அனுமதி பத்திரமோ, வருமென்று ஆசையாய் எதிர்பார்த்தாள் லாவண்யா. அப்படி எதுவும் இல்லையென்று தெரிந்ததும் கடிதம் முழுவதும் படிக்காமலேயே கிழித்துப் போட்டுவிடுவாள். தெரிந்தவர்களை வீட்டுக்கு அழைக்கச் செய்து, தாயில்லாத தால் தான் படும் கஷ்டங்களை கதை கதையாய்ஜோடித்துச்

சொல்லி, அவர்களுடைய இரக்கத்தைப் பெற முயன்று கொண்டிருந்தாள். அவர்களில் முக்கியமானவன் விஜய்.

விஜய், லாவண்யா சொல்லும் விஷயங்களை மணிக் கணக்காய் பொறுமையுடன் கேட்பான். தந்தையின்பால் அவளுடைய கடமையை மேன்மையால் நினைவூட்டுவான். விஜய் தன்னை மணந்துகொள்ளா விட்டாலும், நண்பனாய் நெருங்கி வருவதைக் கண்டு லாவண்யா மகிழ்ச்சி அடையத் தொடங்கினாள். என்றாவது ஒருநாள் அவன் தன் வசமாகாமல் போக மாட்டான் என்ற தைரியமும் வந்துவிட்டது. லலிதா, மகளுக்கு செல்லம் கொடுத்ததுடன் குழந்தை வளர்ப்பில் கவனமில்லாமல் இருந்துவிட்டதில் வேணு கோபாலனின் நிம்மதி பறிபோய் விட்டது.

அவருக்கு லாவண்யா பெரிய கேள்விக்குறியாய் நின்று விட்டாள். மறுமணத்துக்குதான் மறுத்துவிட்டாள், நடத்தையாவது ஒழுங்காக இருக்கக்கூடாதா? இந்த வேதனை அவரது நெஞ்சை தீயைப்போல் தகித்துக் கொண்டிருந்தது.

தெருவில் மோட்டார் சைக்கிள் நின்ற ஒலி கேட்டது. சூனியத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த லாவண்யா, அனந்த் பக்கம் திரும்பி, "விஜய் வந்து விட்டான் போலிருக்கு" என்றாள்.

அனந்த் லாவண்யாவின் பேச்சைக் காதில் வாங்கிக் கொண்டதாய் தெரியவில்லை. அவன் முகம் வெளிறிப்போய் இருந்தது. கண்கள் மட்டும் பேப்பரில் பிரசுரிக்கப்பட்ட செய்தியை திரும்பத் திரும்ப பார்த்துக்கொண்டிருந்தன.

"என்ன ஆச்சு அனந்த்? என்னவோ போல் இருக்கிறாயே? அந்தப் பையனை உனக்கு முன்பே தெரியுமா?" ஆர்வம் பொங்கக் கேட்டாள் லாவண்யா.

பதில் சொல்லத் தடுமாறினான் அனந்த்..."ஆம்! ஊஹூம் இல்லை..." என்றவன் பேப்பரை மடித்து பத்திரமாகக் கட்டில் மீது வைத்தான்.



லாவண்யா பேப்பரை எடுத்து, ஆர்வத்துடன் அதிலிருந்த போட்டோவை மறுபடியும் பார்க்கத் தொடங்கினாள். அடி மனதில் எங்கேயோ, அவனை ஒருமுறை நேரில் பார்க்க வேண்டும் என்ற கோரிக்கை உண்டாயிற்று.

கீழே ஹாலில் விஜய் உள்ளே வந்தான்.

"என்ன விஜய் இவ்வளவு தாமதமாகிவிட்டதே ஏன்?" வேணுகோபாலன் புத்தகத்தை மூடி வைத்தவாறே கேட்டார்.

விஜய் ஃபுல்ஹாண்ட் ஷர்டின் கையை சிறிது உயர்த்தி கடிகாரத்தைப் பார்த்தான். "அடடா பத்தரை ஆகி விட்டதே, வெரி சாரி! நீங்க எனக்காக காத்துக்கிட்டு இருக்கீங்களா? என்ன செய்யட்டும்? கிளம்பும்போது கிளப்பில் ஒருவன் மர்டர் கேஸை கொண்டு வந்தான் பணக்காரங்க வீட்டில் ரகசியமாகச் செய்யப்பட்ட கொலை ரொம்ப காம்ப்ளிகேடட் கேஸ். இதென்ன? ராதை தூங்கி விட்டாளா?" அருகில் வந்து கொண்டே கேட்டான்.

"உனக்காக எதிர்பார்த்து, தூங்கிவிட்டாள்."

"கொஞ்சம் இருங்க, அவளை உள்ளே படுக்க வைத்து விட்டு வர்றேன்." ஃபுல் சூட்டில் வந்தவன் கோட்டை கழட்டி சோபா மீது போட்டுவிட்டு, வேணுகோபாலனின் அருகில் வந்து, உறங்கிக்கொண்டிருந்த ராதையை மென்மையாய் எடுத்து தோளில் சுமந்து கொண்டு உள்ளே போகப் போனான்...

"வந்தாயா...மகாபிரபோ...உனக்காக பார்த்து பார்த்து எங்க உயிரே போய்விட்டது." படியில் இறங்கிக் கொண்டே சொன்னாள் லாவண்யா...

"சாரி லாவண்யா. கிளப்பில் நேரமாகிவிட்டது. இதோ வந்துடறேன்" புன்முறுவலுடன் சொன்னான் விஜய்.

லாவண்யாவைத் தொடர்ந்து, தலையைக் குனிந்து கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு, யோசனைகளில் மூழ்கிய வாறே, கீழே வந்தான் அனந்த்.

விஜய் ராதையை படுக்கையில் கிடத்தி, போர்வையை போர்த்திவிட்டு போகப் போனவன் சற்று நின்று பேண்ட் பாக்கெட்டில் இருந்த சாக்லேட் பாரை எடுத்து கட்டில் அருகில் இருந்த டீபாய் மீது வைத்தான். ராதைக்கு அந்த மில்க் சாக்லேட் என்றால் ரொம்பப் பிடிக்கும். எப்பொ வந்தாலும் விஜய் அவளுக்காக அதை வாங்கி வர மறக்க மாட்டான். இன்று வருவது தாமதமாகி விட்டதால், ராதை தூங்கி விட்டாள். காலை எழுந்ததுமே சாக்லேட் அவள் கண்களில் படும். விஜய் வந்து போனது அவளுக்குப் புரியும்.

நான்கு பேரும் சாப்பிட அமர்ந்து கொண்டார்கள். லாவண்யா தந்தையின் எதிரில் ரொம்ப தேவைப் பட்டாலோ, கோபம் வந்தாலோ தவிர அதிகம் பேச மாட்டாள். டயட்டிங் என்ற பெயரில் இரவு உணவையும் கொஞ்சமாய்த் தான் சாப்பிடுவாள்.

அனந்தின் நினைவு வேறு எங்கோ இருந்தது. கைவிரல்கள் தட்டில் அலைந்துக் கொண்டிருந்தனவே தவிர, சரியாக சாப்பிடவில்லை. வேணுகோபாலனுக்கு உணவு வேளை தவறிவிட்டதால், சாப்பிட்டால் ஜீரணமாகாதோ என்ற பயத்தில் பெயருக்கு உணவை உட்கொண்டார்.

நால்வரில் விஜய் ஒருவன்தான், நல்ல பசியுடன் உணவை கிடுகிடுவென்று சாப்பிட்டுக் கொண்டிருந்தான். கிளப்பில் நடந்த விசேஷங்களை சொல்லிக்கொண்டிருந்தான். ரொம்ப நிசப்தமாய் இருந்த அந்தச் சூழலில், அவனுடைய குரல் இனிமையாய் கம்பீரமாய் ஒலித்தது.

உணவை முடித்துக் கொண்டு எல்லோரும் ஹாலுக்கு வந்தார்கள். சட்டென்று நினைவுக்கு வந்தாற்போல் வேணுகோபாலன் கேட்டார்.

''அனந்தின் திருமண விஷயம் என்னவாயிற்று விஜய்? அந்த மெட்டூர் ராஜகோபாலனின் மகளை நிச்சயம் பண்ணி விட்டாற்போல்தானா?''



''ஆங்! கிட்டத்தட்ட முடிவு ஆனாற்போல்தான். எப்படியும் நீங்க வந்துடப் போறீங்கன்னு சற்று தாமதித்தேன். இரண்டு நாட்களில் அவரை வரச்சொல்லி கடிதம் போட்டு விடுவேன். அடுத்த மாதம் நல்ல முகூர்த்தம் இருக்கிறதாம்...''

அனந்த் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். ஏற்கனவே கலங்கியிருந்த அவன் முகம் இன்னமும் களையிழந்தது.

லாவண்யா ஓரக்கண்ணால் அவனிடம் தென்பட்ட மாறுதலை கவனித்துக் கொண்டிருந்தாள். ''அப்பொ— அனந்துக்கு அந்தப் பெண்ணை பிடித்து விட்டதாமா?'' ரொம்ப அக்கறையாகக் கேட்டாள்.

''அவன் கூச்சி...அவனுக்கு வேணுங்கிற பெண்ணை மணம் செய்து வைத்தால் வாழ்ந்தாற்போல்தான்.'' நாற்காலியின் பின்னால் சாய்ந்து, கால்களை நீட்டி ஒய்வாய் அமர்ந்திருந்த விஜய் சிரித்துக் கொண்டே சொன்னான். அவன் குரல் அலட்சியமாய் ஒலித்தாலும், கண்களில் தம்பியிடம் அன்பும், பரிவும் மிளிர்ந்து கொண்டிருந்தது.

அனந்த் அதை ஏற்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை. அவர்கள் பேசும் விஷயம் தனக்கு சம்பந்தமில்லை என்பது போல், உள்ளங்கையில இருந்த பாக்குத் தூளை கவனமாய் ஒவ்வொன்றாய் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

# 6

பகல் பன்னிரெண்டு மணி தாண்டிவிட்டது. இனி வீட்டில் அந்த வேளை சமையல் செய்யப் போவதில்லை என்பது போல் சுந்தரி கட்டிலில் சயனித்து விட்டாள். இன்று யாருக்கும் சாப்பிடும் பாக்கியம் கிடையாது என்பது தெளிவாய் விளங்கிற்று.

சங்கரன் வீட்டை விட்டுப் போய் நான்கு நாட்களாகி விட்டன. இதுவரை எந்த தகவலும் கிடையாது. சாவித்திரிக்கு தினமும் இரண்டு தடவையாவது ஃபிட்ஸ் வந்துக் கொண்டிருந்தன. இந்த நான்கு நாட்களும் ரோஜாவுக்கு நான்கு யுகங்களாய்க் கழிந்தன. சற்று முன்னே சாவித்திரிக்கு வலிப்பு வந்ததும், ரோஜா தண்ணீரை அருந்தச் செய்ததில் கட்டிலில் சோர்வுடன் தூங்கிக் கொண்டிருந்தாள். ரோஜா தெரு பக்கம் இருந்த ஜன்னலில் கால்களை மடக்கி உட்கார்ந்து கொண்டாள். வயிற்றில் பசி தீயாய் தகித்தது.

வாரத்தில் இரண்டு நாட்கள், சனிக்கிழமை ஏழுமலையானுக்கு, வியாழக்கிழமை சாயிபாபாவுக்கு விரதம் என்று சுந்தரி மாலை வேளையில் உலையை வைக்கவே மாட்டாள். நேற்று வியாழக்கிழமைக் சங்கரன் வீட்டில் இல்லாததால், வழக்கம் போல் செய்யும் ஒரு அழாக்கு உப்புமாவும் கிண்டப் படவில்லை. நேற்று இரவும் சாப்பிடவில்லை. இன்று காலையில் சாப்பாடே இல்லை. ரோஜாவுக்கு தண்ணீர் எத்தனை குடித்தாலும் பசி அடங்கவில்லை.

அரை மணி கழித்து, அடுத்த வீட்டு "நார்மடி" பாட்டி சுந்தரியை எழுப்பி உட்காரவைத்து, அவர்கள் வீட்டில் ஏதோ பூஜை நடந்ததாகச் சொல்லிக் கொண்டே, தான் கொண்டு வந்த புளியோதரை, சக்கரைப்பொங்கல், வாழைப் பழங்கள், தயிர்சாதத்தை வற்புறுத்தி உண்ணச் செய்தாள்.

சுந்தரி அதைச் சாப்பிட்டுக் கொண்டே இடையில் ராகம் போட்டு நீட்டி முழக்கினாள். "அவர் எங்கே இருக்காரோ என்னவோ? வாயை மூடிக்கிட்டு இருந்திருக்கணும் நான். மறுபடியும் என் கண்களில் தென்படுவாரோ இல்லையோ? அவருக்கு நான், எனக்கு அவர் என்பது தவிர எங்களுக்குன்னு வேறு யார் இருக்காங்க? குழந்தையா? குட்டியா? நான் செய்து போட்டால் கொட்டிக்க தயாராய் இருப்பாங்களே ஒழிய, நான் சாப்பிடவில்லைன்னு வருத்தப் படறவங்க யார் இருக்காங்க இந்த வீட்டில்? சொல்லுங்க..."



பாட்டி அவளை தேற்றுவது போல் சொன்னாள். "என்ன சுந்தரி? அப்படிப் பேசறியே! நாங்க எல்லாம் இல்லையா உனக்கு? வாய் நன்மையோ, ஊர் நன்மையோன்னு சொல்வாங்க சிலபேர் இருக்கிறாற்போல் விட்டேத்தியாய் நம்மால் வாழ முடியாது. அக்கம் பக்கம் மனுசங்களோட சகவாசம் நல்லதுக்கும், கெட்டதுக்கும் என்றைக்கும் வேணும்."

உள் அறையில் கட்டிலோடு கட்டிலாய் படுத்திருந்த சாவித்திரியின் செவியில் இந்த உரையாடல் விழுந்ததும், தலையை உயர்த்தி,கண்களை சுழற்றி மகளைத் தேடினாள்.

அவள் பயந்தது போல் ரோஜா அடுத்த வீட்டு பாட்டிக்கு பதில் சொல்ல எழுந்து செல்லவில்லை. அவளும் இந்த உரையாடலைக் கேட்டாள். இதே வேறொரு நாளாய் இருந்திருந்தால் போய் பாட்டியின் மொட்டை தலையில் குட்டுவது போல் சூடாக ஏதாவது சொல்லியிருப்பாள். ஆனால் பசியில் தலை சுற்றத் தொடங்கிய இந்த நேரத்தில் பொறுமையும் இல்லை, சக்தியும் இல்லை. இன்று இனி சாப்பாடு கிடையாது என்ற பயங்கரமான உண்மை அவளை தாக்கியது. இந்த உலகில் பசியின் கொடுமை ரொம்பபொல்லாதது. எத்தனை யோசித்தாலும், பசியைத் தணிக்கும் வழி தென்படாததால், இயலாமையில் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது. செய்வதறியாமல் ரோஜா தெரு பக்கம் பார்த்தாள். தெருவில் நடமாடும் ஜனங்கள் தெளிவாகத் தென்படவில்லை, விழி நீர் மறைத்தது.

தெருவில் குப்பைத் தொட்டியில் அடுத்த வீட்டிலிருந்து போடப்பட்ட எச்சில் இலைகளில் மீதமிருந்த உணவை தெரு நாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. தன்னை விட அந்த தெரு நாய் மேல் என்ற எண்ணம் தோன்ற, அந்த நினைப்பையே தாங்காதவள்போல் சட்டென்று பார்வையை திருப்பிக் கொள்ளப் போனவள், நின்றுவிட்டாள்.

தொலைவில், வெள்ளை பைஜாமா ஜிப்பாவில், தங்க ஃப்ரேம் கண்ணாடி அணிந்து கொண்டு இந்தப் பக்கமே

வந்து கொண்டிருந்தான் ஒரு இளைஞன். நகத்தைக் கடித்துக் கொண்டிருந்த ரோஜா, அதை விட்டு விட்டு, அந்த இளைஞனை உற்று நோக்கினாள். சந்தேகமே இல்லை, அது அனந்த்தான்.

கடவுளை நேரில் பார்த்தாற்போலிருந்தது ரோஜாவுக்கு. பசியின் வேதனை தெரியவில்லை. சட்டென்று எழுந்து வாசற்கதவு பக்கம் வந்தாள்.

"வந்தது யாரு ரோஜா?" மகள் இருந்தாற்போல் இருந்து சரேலென்று குதித்து ஓடவும், சாவித்திரிக்குச் சந்தேகம் வந்தது.

"அனந்த்தான் அம்மா—" ரோஜாவின் குரல் மகிழ்ச்சியுடன் ஒலித்தது.

விரும்பத்தகாத வார்த்தை கேட்டுவிட்டது போல் சாவித்திரியின் முகம் கடுகடுத்தது.

ரோஜா வராண்டாவில் நின்று கொண்டு அனந்துக்காக, மலர்ந்த முகத்துடன் எதிர் நோக்கினாள். அனந்த் நிதானமாய் அருகில் வந்தான்.

"அனந்த்!" ரோஜா அவனை வரவேற்றாள்.

முன் அறையில் படுத்திருந்த சுந்தரி இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து ரோஜா தயங்கினாளேயன்றி, அந்த கணம் அவளுக்கு அனந்தின் கையை இருகைகளால் பற்றிக் கொள்ள வேண்டுமென்பதுபோல் மகிழ்ச்சியில் துள்ளியது.

"ரோஜா!" சுற்றிலும் யாராவது இருக்கக்கூடும் என்பதுபோல் பார்வையை ஓடவிட்டான் அனந்த்.

"என்ன அனந்த்? இந்த நேரத்தில் வந்திருக்கே?"

அக்கம் பக்கம் ஒருவரும் இல்லையென்று நிச்சயித்துக் கொண்டு தொலைவில் படுத்திருந்த சுந்தரியின் காதில் விழாதென்று உறுதியாகத் தெரிந்த பிறகு, மெதுவாய் சொன்னான்.



"ரோஜா! என்னுடன் கொஞ்சம் வெளியில் வர முடியுமா? முக்கியமான விஷயம் பேசணும். ரொம்ப அர்ஜெண்ட்!"

"ஓ...கட்டாயம்" ரோஜா சட்டென்று சம்மதித்துவிட்டு "இரு.. இப்பவே வர்றேன்" என்று உள்ளே போனாள்.

எதுக்கு? ஏன்? என்று கேள்விக்கணைகளைத் தொடுக்கும் ரோஜா இன்று உடனே சம்மதித்து விட்டதில் அனந்துக்கு வியப்பு ஏற்பட்டது. தான் நினைத்த காரியம் நிறைவேற இது நல்ல சகுனம் என்ற நம்பிக்கை துளிர்க்க மனதிலேயே கடவுளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

உள்ளே வந்து செருப்பு மாட்டிக் கொண்டிருந்த மகளைப் பார்த்து சாவித்திரி எழுந்து கொண்டு, "எங்கே போகப் போறே?" என்று கேட்டாள்.

"இங்கேதானம்மா, உடனே வந்துடுவேன்" மறு பேச்சுக்கு இடமின்றி வெளியில் வந்துவிட்டாள்.

"இதோ பாரு ரோஜா. என் பேச்சை கேளு. இப்படி வா, போகாதே!" உள்ளிருந்து சாவித்திரியின் குரல் தடுப்பது போல் ஒலித்தது.

அனந்த் சந்தேகமாய் பார்த்தான்.

"ஒன்றுமில்லை, வா, போகலாம். வெளியில் வெயிலா இருக்கேன்னு அம்மா பயப்படுறாள், அவ்வளவுதான்" செயற்கையான புன்முறுவல் உதடுகளில் தவழ ரோஜா வழி நடந்தாள்.

அனந்த் அவளைத் தொடர்ந்தான்.

இருவரும் வீட்டை விட்டு வெளியே வந்தார்களோ இல்லையோ, பின்னாலிருந்து, "ஹாச்!" என்ற தும்மல் ஒலி கேட்டது. அதிர்ந்து போனவனாய் அனந்த் திரும்பிப் பார்த்தான். ரோஜாவின் பக்கத்து வீட்டு ஜன்னல் அருகில் பழிப்பதுபோல் இளித்துக்கொண்டு ஒருவன் நின்றிருந்தான். இன்னொரு முறை "ஹாச்" என்று பலமாய் தும்மினான்.

அனந்த் பயந்து போனவனாய், ரோஜாவை நெருங்கி வந்தான். "யாரவன்? நம்மைப் பார்த்து வேணும்னு தும்மறான்?" என்றான்.

"ஆஞ்சநேயுலுன்னு அடுத்த வீட்டுப்பாட்டியின் அருமை பேரன், குலக்கொழுந்து, செல்லப் பெயர் அஞ்சி. பெயருக்கு ஏற்ற குணம்."

அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் ரோஜாவும், அனந்தும் தெருவில் நடந்து போகும்போது, வினோத பிராணிகளைப் பார்ப்பது போல் உற்று உற்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரோஜா அதைப் பொருட்படுத்தாதவள்போல், காதலனுடன் உலாவரும் இளவரசியைப் போல், நிதானமாய், முகவாயை லேசாக உயர்த்தி மிடுக்காய் நடக்கத் தொடங்கினாள்.

அந்தத் தெருவைத் தாண்டி மெயின் ரோடு வந்ததும் அனந்த் கைகுட்டை எடுத்து, நெற்றியில் பொடித்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான். ஒரு முறை பலமாய் மூச்சை இழுத்துக்கொண்டே, "அம்மாடியோவ்! என்ன மனிதர்கள்? அவர்கள் அப்படி உற்றுப் பார்க்கும் போது, கால்களுக்கு விலங்குகள் இருப்பதுபோல் நடக்கவே முடியவில்லை" என்றான்.

"அவங்க எப்போதுமே அப்படித்தான்" அலட்சியமாய் சொன்னாள் ரோஜா.

"எப்படி உன்னால் அந்த முட் புதரில் இருக்க முடிகிறது ரோஜா?"

"இந்த உலகில் எல்லோருக்கும் உன்னைப்போல் பூந்தோட்டமான வாழ்க்கை அமையாது அனந்த்! முட் புதரை தொலைவிலிருந்து பார்க்கிறவங்களுக்குத்தான் பயம். அதிலேயே இருப்பவங்களுக்கு பயம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. முடிந்த வரை நம்மை முட்கள் குத்தி காயப் படுத்தாமல் விழிப்பாய் இருக்க வேண்டியதுதான்."



அனந்த் ரோஜாவைப் பாராட்டுவதுபோல் பார்த்தான். இருவரும் நாற்சந்தி அருகில் வந்தார்கள்.

"எந்தப் பக்கம் போகலாம்?" அனந்த் கேட்டான்.

"நீயே சொல்லு..."

"வெயில் தகிக்கிறது. பார்க்குக்குப் போகலாமா? மரத்தின் நிழலில் உட்காரலாம்."

"அம்மாடியோவ்! பார்க்குக்கா? அவ்வளவு தொலைவு இப்போ என்னால் வர முடியாது சீக்கிரம் வீட்டுக்குப் போகணும். அம்மா காத்துகிட்டு இருப்பாள்."

"பின்னெ எங்கே போகலாம்" யோசித்தான் அனந்த்.

"எங்கேயானாலும் சரி...கொஞ்ச நேரம் நிம்மதியாய், அமைதியாய் உட்காரக்கூடிய இடமாய் இருந்தால் நன்றாக இருக்கும்" ரோஜா சொன்னாள்.

அதே சாலையில், கடைசியில் புதிதாக திறக்கப்பட்ட ஹோட்டல், லக்ஷ்மி விலாஸ் கண்ணில் பட்டது. அனந்த் அதைச்சுட்டிக் காட்டிக்கொண்டே, "அங்கே போய் உட்காரலாம். ஒரு கப் காபி சாப்பிட்ட மாதிரியும் இருக்கும்" என்றான். அனந்த் வாயிலிருந்து ஹோட்டல் பெயர் வந்ததுமே, ரோஜாவுக்கு உயிர் வந்தது போலாயிற்று.

# 7

மதிய நேரமானதால் ஹோட்டலில் அவ்வளவாக கூட்டமில்லை. காலியாக இருந்த ஃபாமிலி அறையில் இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

சர்வர் அருகில் வந்ததும் அனந்த், "இரண்டு காபி" என்றான்.

''வெறும் காபிதானா?'' ஏமாற்றமடைந்தவள்போல் பார்த்தாள் ரோஜா.

''டிபன் சாப்பிடுகிறாயா? என்ன வரவழைக்கட்டும்?''

''நல்ல ஆளுப்பா நீ. இப்பொ என் சாப்பாடு நேரம். அர்ஜென்ட் வேலைன்னு சொன்னியேன்னு, சாப்பிட உட்காரப் போனவள் அப்படியே வந்துவிட்டேன். தட்டில் பரிமாறியதை சாப்பிடாமல் போய்ட்டேன்னு கோபத்தில் மாமி அதை இந்நேரம் நாய்க்குப் போட்டிருப்பாள்.''

அனந்த் நொந்து கொள்பவன்போல் பார்த்தான். உடனே சர்வர் பக்கம் திரும்பி, ''ஒரு சாப்பாடு'' என்றான்.

''ஒரு சாப்பாடா? நான் சாப்பிட்டுக்கிட்டிருந்தால், நீ பார்த்துகிட்டு இருப்பியா? இரண்டு சொல்லு'' என்றாள் ரோஜா.

''நான் சாப்பிட்டாச்சு ரோஜா.''

''சாப்பிட்டால் சாப்பிட்டுப் போ. அது எப்பவோ செரித்து விட்டிருக்கும். நீ கவலைப்படாதே, உன் பணத்தை வீணாக்கவிடமாட்டேன். உன்னால் சாப்பிட முடியாததை முன்னாடியே எடுத்து வச்சுடு. நான் தீர்த்துக்கட்டறேன்.'' என்றாள்.

அனந்த் சிரித்துவிட்டு, இரண்டு ஸ்பெஷல் சாப்பாடுக்கு ஆர்டர் கொடுத்தான், சாப்பாடு எடுத்து வர சர்வர் போய் விட்டான். அனந்த் கண்ணாடியை எடுத்து, கைகுட்டையால் துடைத்துக் கொண்டான். ரோஜா எதையோ சொல்ல முற்பட்டு மறுபடியும் நின்றுவிட்டாள்.

அதைக் கவனித்த அனந்த், ''சொல்லு ரோஜா'' எந்த விஷயத்தைச் சொல்ல நினைத்துத் தயங்குகிறாய்?'' என்றான்.

''அனந்த்! எங்க செந்தூ அரெஸ்ட் ஆகியிருக்கான் தெரியுமா உனக்கு?'' பார்வையை தாழ்த்திக் கொண்டு



மேஜை விளிம்பை விரலால் நீவிக் கொண்டிருந்தாள். ஒரு கணம் அவள் முகம் அவமானத்தால் கன்றி விட்டது. செந்தூ விஷயத்தை சொல்லிவிடத்தான் இத்தனை நேரம் துடித்துக் கொண்டிருந்தாள்.

''தெரியும்'' என்றான் அனந்த்.

சரேலென்று தலை உயர்த்தினாள். ''தெரியுமா? எதுக்காகவென்று கூடத் தெரியுமா?''

அனந்த் தெரியும் என்பது போல் தலை அசைத்தான். தனக்குத் தெரிந்தவர்களிடம் தான் செந்தூ நகையைத் திருட முயன்று பிடிப்பட்டுவிட்டான் என்ற விஷயத்தை மட்டும் சொல்லவில்லை.

நெஞ்சிலிருந்த பாரம் நீங்கினாற்போல் ரோஜா நிம்மதியாய் மூச்சை எடுத்துக் கொண்டாள்.

''நேற்று தெரிஞ்சவங்க வீட்டில் சாப்பிடப் போன போது, அங்கிருந்த பேப்பரில் பார்த்தேன். எனக்கு ஏதோ மாதிரி ஆகிவிட்டது. இந்த நிகழ்ச்சியால் நீ எவ்வளவு வேதனைப் பட்டுக் கொண்டிருப்பாயோ, என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. உடனே உன்னிடம் ஓடி வந்து, உனக்கு எந்த விதமாகவாவது நான் உதவ முடியுமா என்று கேட்க நினைத்தேன். என் பேச்சை தற்பெருமையாய் எண்ணமாட்டாயே ரோஜா!''

விழிகளில் நீர் திறையிட ரோஜா இல்லையென்பது போல் தலை அசைத்தாள். ''அப்படி எண்ணுவேன் என்று கனவில் கூட நினைக்காதே அனந்த். வேறு யாரிடமாவது செந்தூவின் பிரஸ்தாவனை தவறிப் போய் வந்து விட்டாலும், தலைகுனிவாக இருப்பதோடு உயிரே போனாற் போல் இருக்கும். உன்னிடம் அப்படியில்லை, எந்த விஷயத்தையும் மனம் திறந்து உன்னிடம் நேராய் என்னால் சொல்லிவிட முடியும்.''

''தாங்க்ஸ் ரோஜா... ரொம்ப ரொம்ப தாங்க்ஸ்... உன் மனதில் எனக்களித்திருக்கும் இடம் என்றும் மாறாமல்

இருக்கணும்னு கடவுளை வேண்டிக்கறேன். ரோஜா! என் பரிச்சயத்தை நீ எப்படி எடுத்துக் கொள்கிறாயோ எனக்குத் தெரியாது... உன் நட்பை மட்டும் நான் ரொம்ப அபூர்வமானதாய், உயிருக்கும் மேலாக எண்ணுகிறேன். செந்தூர் விஷயத்தில் என்னால் உதவ முடியும் என்று நீ நினைத்தால் சொல்லு, கட்டாயம் செய்கிறேன்..."

கண்களில் சுழன்ற நீர் வெளிவராமல் இருக்க ரோஜா முயற்சி செய்தாள். "நன்றி அனந்த் ஆனால் இந்த தடவை அவனை சுலபமாக விட்டு விட மாட்டார்கள் என்று சொல்கிறார்கள் இவன் பின்னாடி பெரிய கும்பல் இருப்பதாயும், அந்தக் கும்பலைச் சேர்ந்தவங்கதான் செந்தூர் போன்ற இளைஞர்களை தவறான வேலைகளில் ஈடுபடுத்துகிறார்கள் என்றும் தெரிந்தது. இந்தமுறை இவனை வைத்துக்கொண்டு அந்தக் கும்பல் பற்றி தகவல் தெரிந்து கொள்ள முயற்சி செய்கிறார்கள். நாம் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை."

குரலில் வருத்தம் தெரிய அனந்த் சொன்னான் "எவ்வளவு முட்டாள்தனம்? ஆனாலும் பட்டப்பகலிலா?"

ரோஜாவின் முகம் கோபத்தால் சிவந்து போயிற்று. "முட்டாள் தனமா? இல்லை... அனந்த் தலைகனம் கண்களை மறைத்து விட்டது. இது வரை செய்த திருட்டுகளில் பிடிபடாமல் இருந்ததில் துணிச்சல் வந்து விட்டது.

"ப்ச்... என்னவோ போ" இரக்கமாய் பார்த்தான் அனந்த். ரோஜா முகம் களையிழந்து காணப்பட்டதில் அவனுக்கு வேதனையாய் இருந்தது. விரக்தி மேலிட சொன்னான்.

"என்னவோ ரோஜா! இந்த சமுதாயத்தை, நடுத்தர மக்களின் வாழ்க்கையின் போக்கை கவனிக்கும் போது, எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறதோ என்ற பயம் ஏற்படுகிறது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் செந்தூர் போன்ற இளைஞர்கள் இப்படி தவறான வழிகளை



பின் பற்றுவதற்கு, குடும்பச் சூழலும், கல்வி முறையும்தான் காரணம் என்று உறுதியாய் சொல்லலாம்."

ரோஜா கோபத்தோடு "ரொம்ப நல்லாயிருக்கு நீ சொல்வது. நேர்மையாக வாழ வேண்டுமென்ற புத்தி மனிதனுக்கு இருக்கணுமே தவிர, அப்படி வாழ வழியில்லாமல் போகாது."

"திருடுவது கூட ஒரு தொழில்தான் என்பதை நீ மறந்து விட்டாய்."

"நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்."

"உண்மைதான் ரோஜா! நம் கல்வி முறையிலேயே குறைபாடு இருக்கு. இந்தக் கல்வி வாழ்க்கையில் பகல் கனவுகள் காண வழி வகுக்கிறதே தவிர, மன உறுதியை, வலிமையை உண்டாக்குவதில்லை. படித்து முடித்த பிறகு வெளி உலகில் கால் வைக்கும் போது, யதார்த்தமான உலகத்தை சந்திக்கும் போது, தாம் கண்ட கனவுகளும், எதிர் கொள்ளும் உண்மையான வாழ்க்கையும் ஒத்துப் போகாது. மனிதனுக்கு நேர்மை முக்கியமா, சுகம் முக்கியமா என்ற இருபான்மையான கொள்கையில் எதை கைப்பற்றுவது என்ற பிரச்னை எழும். மனதளவில் பலவீனமாய் இருப்பவன் நேர்மையை விட்டு விட்டு சுகத்துக்குதான் முக்கியத்துவம் கொடுப்பான்.

"அதுக்காக? திருடுவதை நியாயப்படுத்த முடியுமா?" ஆவேசமாய் கேட்டாள்.

"ஒரு நாளும் அப்படிச் சொல்ல மாட்டேன். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. இந்த உலகில் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு வேலை சுலபமாக செய்யக் கூடிய திறமை இருக்கும். நன்றாக பாடக் கூடியவன் வேகமாய் ஓட முடியாமல் இருக்கலாம்; ஓடக்கூடியவனால் பாட்டு எழுத முடியாது; பாட்டு எழுதத் தெரிந்தவன் நிலத்தை உழத் தெரியாதவனாய் இருக்கலாம்; அதனால் தங்களுக்குள் இருக்கும் திறமையைப் பயன்படுத்தி வாழ்க்கையை

சிறப்பித்துக் கொள்ள வேண்டும். சின்ன வயதிலிருந்தே வாழ்க்கையின் உண்மையான மதிப்பீட்டை உணரும் விதமாய் கல்வி முறை அமைய வேண்டும்."

ரோஜா கன்னத்தில் கையை வைத்து, அவன் சொல்வதை கண் இமைக்காமல் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஒரு விஷயத்தை யோசித்துப் பாரு! தகுதிக்கு மீறிய பணம், அந்தஸ்து தமக்கு சொந்தமாக வேண்டும்" என்று எத்தனை பேர் விரும்புகிறார்கள் தெரியுமா? கஷ்டப்படாமலேயே பணம் கிடைக்கணும், சுகமாக வாழணும் என்று நினைப்பவர்கள் எத்தனை பேர்? இல்லாவிட்டால் இந்த லாட்டரி சீட்டுகள், குதிரை ரேசுகள் எதுக்கு? யாரோ ஒருவருக்கு கிடைக்கும் அதிர்ஷ்டத்தை எண்ணி, அந்த வாய்ப்பு நமக்குக் கிடைக்காதா என்று நினைப்பார்களே தவிர, அவனுடைய அதிர்ஷ்டத்துக்குப் பின் எத்தனை பேரின் வயிற்றெரிச்சல் இருக்குமோ, யாரும் யோசிக்காமல் இருப்பது ஏன்? உழைக்காமல் பணம் வரணும் என்ற யோசனையே ஆரோக்கியமானதில்லை. எந்தச் சூழ்நிலையிலும் வரவேற்கத்தக்கதில்லை. இது மட்டும் கொள்ளை இல்லையா? அப்பாவி மக்களை ஏமாற்றுவது போலாகாதா? ஆங்கிலேயர்களின் பழக்க வழக்கங்களில் நேர்மையையும் நேரம் தவறாமையையும் பின்பற்றுவது போக, தேவையற்ற சுக போகங்களை பழகிக் கொண்டு விட்டோம். நல்ல கலாச்சாரம் கொண்ட சமுதாயம், தங்களுடைய மூல வேர்களை ஸ்திரமாக பற்றிக் கொண்டே, இன்னொருவரிடம் இருக்கும் நல்லதையே ஏற்றுக் கொள்ளும்... வேறொரு கலாச்சாரத்தை காபி அடிப்பதையே நாகரீகமாய் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த நாட்களில் மாரல் வேல்யூஸ்க்கு முக்கியத்துவம் குறைந்து வருவதில் வியப்பென்ன இருக்கு?"

தான் ரொம்ப ஆவேசமாய் பேசிவிட்டதை உணர்ந்தவனாய் அனந்த், சட்டென்று நிறுத்திவிட்டு சுற்றிலும் பார்த்தான்.



ரோஜா புன்முறுவலுடன் கைதட்டப் போனவள், தாம் இருப்பது ஹோட்டல் என்று நினைவு வந்ததும் நின்று விட்டாள்.

அதற்குள் சர்வர் உணவு தட்டுகளை கொண்டு வந்து மேஜைமீது வைத்துவிட்டுப் போனான். கடசுட இருந்தச் சாதம் கமகமவென்ற சாம்பார், கறி, கூட்டுகளைப் பார்த்ததும் அத்தனை நேரம் அடங்கியிருந்த பசி இருமடங்காகி விட்டது.

சொன்னது போலவே, அனந்த் தன்னுடைய தட்டிலிருந்த உணவில் முக்கால் பங்கை எடுத்து ரோஜாவின் தட்டில் வைத்துவிட்டான். பசித்திருந்த புலி இரையைப் பார்த்ததும், அதன்மேல் களிந்து உண்ணுவதுபோல், ரோஜா அந்த உணவை காலி செய்யத் தொடங்கினாள்.

சற்று நேரம் கழித்து அனந்த் சொன்னான். "ஒரு விஷயத்தைச் சொல்ல வந்த நான், அதை விட்டு வேறு விஷயத்தில் புகுந்து லெக்சர் கொடுத்துவிட்டேன் இல்லையா? ரோஜா எனக்கு இப்போ வந்த பிரச்னை என்ன தெரியுமா?"

"என்னவென்று நீ இன்னும் சொல்லவேயில்லையே?" பசித்திருந்த வயிறுக்கு அமிர்தமாய் இருந்த தயிர் பச்சடியை சாப்பிட்டுக் கொண்டே சொன்னாள்.

"என் அண்ணன் எனக்கு அந்த மெலட்டூர் பெண்ணை நிச்சயம் செய்து விட்டான்—"

"யாரு? ராஜகோபாலனின் மகள் கஸ்தூரி என்று சொன்னாயே?" ஆமாம் என்பதுபோல் தலை அசைத்தான் அனந்த்.

"குட்—நல்ல நியூஸ்...எனக்கு எப்போ டிரீட் கொடுக்கப் போறே. உன் கல்யாணத்துக்கு என்னால் வரமுடியாது. அதான், முன்னாடியே விருந்து சாப்பாடு போட்டுவிடணும் தெரிந்ததா?" தயிர் பச்சடியை காலி பண்ணுவதில் மும்மரமாய் இருந்துவிட்ட ரோஜா, தலை நிமிர்த்தி பார்க்க

வில்லையே தவிர, பார்த்திருந்தால் அவன் இதயம் எதுக்காகவோ துடித்திருப்பதை கவனித்திருப்பாள்.

"ரோஜா! எனக்குத் திருமணம் என்றால் உனக்கு... உனக்கு ஒன்றுமே தோணாதா?"

"நல்லாயிருக்கே? ஏன் தோணாது?" சீரியஸாகச் சொன்னாள் ரோஜா.

அனந்த் ஆர்வத்துடன் சற்றுக் குனிந்தான்... "சொல்லு என்னவென்று தோன்றும்?"

"ஒரு பக்கம் சந்தோஷம், ஒரு பக்கம் வருத்தம்..."

"வருத்தம் எதுக்குன்னு முதல்ல சொல்லு..."

அவன் கேட்ட தொனிக்கு ரோஜா தலையை உயர்த்திப் பார்த்தாள். பிறகு பொய் கோபத்துடன் சொன்னாள்.

"என்ன மனுஷன் நீ? அதுகூட உன்னால் புரிந்து கொள்ள முடியாதா?"

"ஹூம், நான் ஒரு முட்டாள் என்று உனக்குத் தெரியும் உன் வாயாலேயே விஷயத்தைத் தெளிவு படுத்தேன்."

ரோஜா பதில் சொல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ரோஜா, ப்ளீஸ்" தாமதத்தை பொறுக்க முடியாதவனாய் கேட்டான் அனந்த்.

"வருத்தமிருக்காதா பின்னே? நீ பாட்டுக்குக் கல்யாணம் செய்துக்கிட்டு உன் வழியைப் பார்த்துக்கிட்டு போய்விட்டால், எனக்கு யார் இந்த மாதிரி சாப்பாடு போடுவாங்க? கவிதைகளைக் கேட்கச் சொல்லி, அதுக்கு ஈடாய் சினிமாவுக்கு யார் அழைச்சுக்கிட்டுப் போவாங்க?" ரொம்ப அப்பாவியாய் கேட்டாள்.

உஷ்ண காற்று வேகமாய் முகத்தில் தாக்கியது போல் பின் வாங்கினான். அவன் முகம் களையிழந்தது. சற்று யோசித்துவிட்டு, கேட்டான், "ஒரு வேளை நான் திருமணம் முடிந்த பின்னும், உனக்கு இப்படி சாப்பாடு போட்டு



சினிமாவுக்கு அழைச்சுகிட்டுப் போவேன்னு வெச்சுக்கோ... அதற்கு எந்த இடையூறும் வராதுன்னு நினைச்சுக்கோ... அப்போ...?"

அவன் உதடுகளை அழுத்தி, இதயம் முழுவதும் கண்களில் பிரதிபலிக்க, ரோஜா வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைகளுக்காக காத்திருந்தான்.

அதைக் கவனித்த ரோஜா தன் மனதில் இருக்கும் எண்ணம் அவனுக்கு எட்டிவிடாமல் கவனமாய், செயற்கையான அலட்சியத்துடன் கேலி செய்தாள் "போ...போய்யா இந்தப் பேச்செல்லாம் இப்போதான். மனைவி வந்து விட்டால் கண்ணில் படவே மாட்டாய்...உன் போன்றவர்கள் மனைவியின் தலைப்பை பிடிச்சுக்கிட்டுதான் இருப்பாங்க."

"இல்லை ரோஜா ... உண்மையைச் சொல்கிறேன், கல்யாணத்துக்குப் பிறகும் நான் மனைவியைப் பொருட்படுத்தாதவனாய் இருந்தேன் என்றால்?"

"இப்போ இப்படித்தான் சொல்வீங்க. போகட்டும்...நீ அப்படி இருப்பாய் என்று நினைத்தாலும், என் மீது அபிமானத்தால் பழைய நட்பை நினைவில் வைத்துக் கொண்டாலும், உன் வருங்கால மனைவி ஒப்புக்கொள்ள வேண்டாமா? என்னிடம் சிநேகமாய் இருப்பதும் உன் சட்டைப் பையிலிருக்கும் பணம் எனக்கு ட்ரீட் கொடுப்பதிலும் செலவாகிறது என்று தெரிந்தால் போதும், மூக்கணாங்கயிறு போட்டு லகானை தன் கையில் வைத்துக்கொள்வாள். அப்போ உனக்கு இந்த ரோஜா, கூஜா யாரும் நினைவு இருக்க மாட்டார்கள் எப்பவாவது தெருவில் தென்பட்டாலும், பாராதது போல் தலையை திருப்பிக் கொண்டு போய் விடுவாய். அப்போ நான் தனி ஆளாகி விடுவேன்."

அனந்துக்கு ரோஜாவின் பேச்சு முதலில் பிடிக்கா விட்டாலும், கடைசியாக அவள் "தனியாள்" ஆகிடுவேன் என்று சொன்னதும், அதைச் சொன்ன விதமும் மனதை வசீகரித்தன. தான் இல்லாமல் ரோஜா தனியாளாகிவிடுவது

போல் உணருகிறாள். தனக்கு வேண்டிய பதில் கிடைத்தது போல் "சரி தான்! என்மீது உனக்கு நம்பிக்கை இல்லையே, அதான் நம் இருவருக்கிடையே வேறு யாரும் வேண்டாம். நான் திருமணமே செய்துக் கொள்ள மாட்டேன்..."

"நிஜமாகவா?" வியப்புடன் கேட்டாள்.

"உண்மைதான். நம் நட்பின் சாட்சியாக...உன்மீது ஆணையகா."

ரோஜா சங்கடமாகப் பார்த்தாள். "தாங்க்ஸ்! ஆனால் இத்தனை சின்ன விஷயத்துக்கு நீ இவ்வளவு பெரிய தியாகம் செய்ய வேண்டாம். நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்."

"இது தியாகம் இல்லை ரோஜா! அந்தப் பெண்ணை எனக்குப் பிடிக்கவில்லை."

"அப்படிச் சொல்லு. அதுதான் உண்மை விஷயமா?" விஷயம் புரிந்ததும் ரோஜா சிரித்துவிட்டாள்.

"உன்னிடம் அர்ஜெண்ட் விஷயம் என்று சொன்னேனே, இதைப் பற்றித்தான்—"

"ஒரு நிமிஷம் இரு. கையை அலம்பிகிட்டு வந்துடறேன்" தயிர்ப்பச்சடி இருந்த கிண்ணத்தை விரலால் வழித்துவாயில் போட்டுக் கொண்டாள்.

அனந்த் முகத்தைச் சுளித்து, "இப்படிக் கிண்ணத்தை வழித்துதான் சாப்பிடணுமா? யாராவது பார்த்தால் என்ன நினைத்துப்பாங்க?" என்றான்.

"நினைத்துக்க இதில் என்ன இருக்கு? பணம் கொடுக்கறோம், சாப்பிடறோம். அவ்வளவுதானே. இருந்தாலும் இங்கு யாருமே இல்லையே..." என்றாள், சுற்றிலும் பார்வையை சுழட்டிக் கொண்டே.

"யாரும் இல்லாமல் என்ன? சர்வர்கள் இல்லையா? உன் போக்கைப் பார்த்தால், அந்தக் கிண்ணத்தையும் கடித்து சாப்பிடுவாய் போலிருக்கு."

அழகிய பல்வரிசை தளுக்கென்று மின்ன, ரோஜா சிரித்தாள். "ரொம்பதான் கிண்டல் செய்யாதே. ஆனாலும் இந்தக் கிண்ணங்கள் என்ன சின்ன குழந்தைகள் விளையாடும்



சொப்பு சாமான் மாதிரி இருக்கு. இந்த ஹோட்டல்காரங்க ரொம்ப கஞ்ச பிசினாறிகள் போலிருக்கு."

"சின்னக் கிண்ணங்களா? அந்தக் கிண்ணத்தால் மூன்று தடவைபோட வைத்துக்கொண்டாய். மேலிருந்து அவங்களை பிசினாறிகள் என்று சொல்றியே?"

"நல்லாயிருந்தது,சாப்பிட்டேன். தவறென்ன இருக்கு?" பழிப்பது போல் சொன்னாள்.

"தவறு ஒன்னும் இல்லை. கிண்ணத்தில் இருப்பதைச் சாப்பிடுவது தப்பு இல்லை. இல்லாததை வழித்துச் சாப்பிடுவதுதான் அநாகரிகம்."

ரோஜா எழுந்து கை அலம்பப் போனவள் சற்று நின்று "இருந்தாலும் உன்னைப் போன்றவர்களால் இந்த ஹோட்டல்காரர்களுக்கு எவ்வளவு லாபம் தெரியுமா? ஒரு ரூபாய்க்கு சாப்பிட்டு விட்டு பத்து ரூபாய் கொடுத்து விட்டுப் போவீங்க. அதான் பார்த்துகிட்டு இருக்கும் போதே மாடி மாடியாய் கட்டிவிடுவார்கள்."

"அது அவங்களோட தப்பு இல்லையே?"

"இல்லைதான். நடு நடுவுல என்னைப் போன்ற பகாசுரர்கள் வந்து ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு பத்து ரூபாய்க்கு சாப்பிட்டுப் போகணும். அப்போ கணக்கு சரியாகி விடும்! என்ன நான் சொல்றது சரிதானே?"

அனந்த் சிரித்து விட்டான். ரோஜா போல் வாக்கு சாதுரியம் கொண்டவர்களை அவன் இதற்கு முன் கண்டதில்லை. அவளுடன் பேசும் போது, நிலவின் குளிர்ச்சியை உணர முடியும். எப்படிப்பட்ட களைப்பாய் இருந்தாலும், சட்டென்று நீங்கி விடும். குயிர் பிடித்தவளாய் கடினத் தன்மை படைத்தவளாய் தென்படும் ரோஜாவின் உள்ளே, இனிய சிநேகிதி மறைந்து இருப்பதை அனந்த் என்றோ கண்டு கொண்டான். அதன் காரணமாய் ரோஜாவுக்கு நெருங்கிய சிநேகிதனாய் இருந்து வருகிறான். அந்த இனிய சிநேகிதியை, வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ள வேண்டுமென்பது அவனது நெடுநாளைய விருப்பமும், வாழ்வின் லட்சியமும்.

ரோஜா கையை அலம்பிக் கொண்டு புடவைத் தலைப்பில் துடைத்துக் கொள்வதைப் பார்த்து "அடடா..." என்று தன்னிடமிருந்த கைக்குட்டையை எடுத்துக் கொடுத்தான்.

அதால் கையை துடைத்துக் கொள்ளப் போனவள் சட்டென்று அதைக் கவனித்துப் பார்த்தாள். ஒரு ஓரத்தில் பச்சை நிற நூலில் "வி" என்று தைக்கப்பட்டிருந்தது.

"வி என்றால்?"

சட்டைப் பையிலிருந்து இரண்டு கடிதங்களை எடுத்து சீரியஸாக படித்துக் கொண்டிருந்த அனந்த் தலை உயர்த்தாமலே...

"வி என்றால் விஜய்...

"விஜய்ன்னா உன்..."

"ஆமாம், என் அண்ணன்... விஜய்."

"என்ன விசேஷம்... இன்னிக்கு அண்ணன்னு ரொம்ப மரியாதையாய் சொல்றியே! எப்பவும் யமதர்மராஜன், கம்சன் என்று அடைமொழியுடன் தானே அழைப்பாய்?" ரோஜா சிரித்துக்கொண்டே கைக்குட்டையை திருப்பிக் கொடுத்தாள்.

அனந்த் கடிதங்களைப் படிப்பதில் மூழ்கியிருந்தான். ரோஜாவுக்கு அந்தச் சமயத்தில் அனந்த் கடவுள் போல் தென்பட்டான். இன்று அவன் மட்டும் வந்திருக்கா விட்டால் தன் பசி தீர்ந்திருக்காது என்று ரோஜாவுக்கு உண்மையைச் சொல்லிவிட வேண்டுமென்று தோன்றியது. ஆனால் அதற்குள் அனந்த், கையிலிருந்த இரு கடிதங்களில் ஒன்றை அவளிடம் கொடுத்து, "இதைப் படித்துப் பாரு ரோஜா" என்றான்.

கடிதத்தைப் பெற்றுக் கொண்ட ரோஜா பிரித்துப் படித்தாள்.



ஸ்ரீமான் ராஜகோபாலன் அவர்களுக்கு,

சரோஜா எனும் பேதைப்பெண் தெண்டனிட்டு எழுதிக் கொள்வது. தாங்கள் தங்களுடைய ஒரே மகள் கஸ்தூரியின் விவாகத்தை அனந்த் என்ற இளைஞனுடன் நடத்த இருப்பதாக, உறுதியாகச் செய்தி தெரிந்த பிறகு, இந்தக் கடிதத்தை எழுதாமல் என்னால் இருக்க முடியவில்லை. என்னுடைய துணிச்சலுக்கு மன்னிக்க வேண்டு கிறேன். தாங்கள் மாப்பிள்ளையாக முடிவு செய்த அனந்தும் நானும் ரொம்ப நெருங்கி பழகுகிறோம். எங்களுக்கிடையே இருக்கும் உறவைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் இதனுடன் இணைத்த மற்றொரு கடிதத்தைப் படித்துப் பாருங்கள். உங்களுக்கே புரியும்! வேண்டுமென்றால் இந்தக் கடிதங்களை அனந்திடமே காண்பித்து கேட்டுக் கொள்ளுங்கள். எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அனந்துக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமேயில்லை. அண்ணனின் பேச்சை மீற முடியாமல், ஒப்புக் கொண்டுள்ளான். அவனை நான் நன்றாக அறிவேன். உங்கள் மகள் மீது உங்களுக்கு கொஞ்சமாவது அன்பு இருந்தால், இந்த வரனை விட்டு விடுவது நல்லது. ஒரே இனம் என்ற அடிப்படையில் உங்கள் மகளிடம் எனக்கு இருக்கும் கடமையை நான் செய்து விட்டேன். இதற்கு மேல் தங்கள் விருப்பம்.

இப்படிக்கு தங்களுடைய நலனை விரும்பும்,

சரோஜா.

படித்து முடித்ததும், ரோஜாவின் கண்கள் வியப்பால் விரிந்தன. புருவங்களை உயர்த்தி அனந்தைப் பார்த்தாள்.

"இந்தக் கல்யாணத்திலிருந்து நான் தப்பிக்கணும்னா, இது ஒன்றுதான் வழி. இந்தக் கடிதத்தை உன் கைப்பட எழுதி, இதோ இதையும் இணைத்து நீ அனுப்பணும்."

இரண்டாவது கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள் ரோஜா. அந்தக் கடிதம் அனந்த் ரோஜாவுக்கு எழுதியது போல் இருந்தது.

*ரோஜா... என் இதயராணி...*

உன் கடிதம் கிடைத்தது. உன் பயம், பதட்டத்தைப் பார்க்கால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. அமாம்! மெலட்டூர் ராஜகோபாலனின் மகள் கஸ்தூரியுடன் என் திருமணம் முடிவு செய்த விஷயம் உண்மைதான். ஆனால் அன்பே! ஆருயிரே! இதில் பயப்பட ஒன்றும் கிடையாது என்று உறுதியாகச் சொல்கிறேன். அசல் விஷயம் என்னவென்றால், அந்த ராஜகோபாலன் ரொம்ப நிலமும், சொத்தும் உள்ளவர். அவர் எங்களுக்கு உறவினர் ஆனால், எங்க விஜய்க்கு அவர் மூலமாய் நிறைய கேசுகள் வரும். அவருக்கு ஒரே மகள், பெயர்தான் கஸ்தூரியே தவிர பார்க்க சூர்ப்பனகைப் போல் இருப்பாள். உன்னைப் பார்த்த என் கண்களுக்கு அப்படித்தான் தோன்றுகிறது படிப்பும் கிடையாது. வெறும் பட்டிக்காட்டு ஜென்மம். அந்த ராஜகோபாலன் இருக்காரே, அவர் ரொம்ப கஞ்சப் பேர்வழியாம் அவர் இதயம் பலவீனமாய் இருக்காம். எந்த நேரமும் இதயத் துடிப்பு நின்று விட வாய்ப்பு இருக்குன்னு டாக்டர் மூலமாய் தெரிந்து கொண்ட பிறகுதான் ஒப்புக் கொண்டேன். பத்து தலைமுறைகளுக்குப் போதுமான சொத்து அவருக்கு இருக்கு. அந்தக் கஸ்தூரி பெயருக்கு என் மனைவியாய் அந்தப் பட்டிக் காட்டில் இருந்து விட்டுப் போகட்டும். பணம் கையில் கிடைத்ததும், நீ தான் என் ராணி, நான் தான் உன் ராஜா. நான் கஸ்தூரியைத் திருமணம் செய்து கொண்டாலும், நமக்கிடையே இருக்கும்



உறவுக்கு எந்த விதமான பாதிப்பும் வராது என்று நான் உறுதி கூறுகிறேன். என் மீது உனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் சொல்லு! ஒரு பெண் என்ற முறையில் உனது அச்சத்தை என்னால் புரிந்து கொள்ள முடியும். இப்போதே நாம் பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம். நீ என்ன சொன்னாலும், அதன்படி நடக்க நான் தயாராக உள்ளேன். தயவு செய்து இப்போ எந்த கலாட்டாவும் செய்யாதே! நம்முடைய பொன்னான எதிர்காலம் நாசமாகிவிடும். அந்த மூன்று முடிச்சு மட்டும் அவள் கழுத்தில் போட்டு விட்டால் போதும்! அதன் பின் நம ராஜ்ஜியம், தான்! நீ என்னை சரியாகப் புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு
**உன் ஆனந்த்**

கடிதத்தைப் படித்து முடித்ததும், ரோஜா வாயடைத்துப் போனவளாய் அவனை நோக்கினாள்.

''இவ்வளவு சுற்றி வளைப்பானேன், விருப்பமில்லை யென்று ஒரு வார்த்தை நேராக உங்க அண்ணனிடம் சொல்லக் கூடாதா'' நிஷ்டூரமாய்ச் சொன்னாள் ரோஜா.

''சொல்லியாச்சு. ஒரு தடவையில்லை, நூறு தடவை. சும்மா கூட இல்லை... சாப்பிடாமல்... பட்டினிக் கிடந்தும் சொல்லிப் பார்த்தேன். அவன் கேட்டால்தானே?''

''உனக்கு விருப்பமில்லாத வரனை முடிப்பதில் அவருக்கு என்ன லாபம்?''

''லாப நஷ்ட கணக்கு எனக்குத் தெரியாது. எனக்குத் தேவையானதைத் தேர்வு செய்ய எனக்குத்தெரியாது என்ற அவனுடைய எண்ணம். அவனுடைய எண்ணம் தவறானது என்று நிரூபிக்க நான் முயற்சி செய்கிறேன்.''

"நல்லாத்தான் இருக்கு. ஆனால் நடுவில் நான் இப்படி தலையிடுவது என்பது..."

"ரோஜா! சந்தேகப்படறியா?"

"சந்தேகம் இல்லை அனந்த். இது ஏதானும் இலக்கு தவறி, என் மீதே வந்து விட்டால்?"

"வராது. வர விடமாட்டேன். என் மீது அந்தளவு கூட உனக்கு நம்பிக்கையில்லையா...?"

ரோஜாவால் பதில் சொல்ல முடியவில்லை. யோசிப்பது போல் உட்கார்ந்திருந்தாள்.

அனந்த் நிஷ்டூரமாய் சொன்னான். "ரோஜா! இதே உதவியை நீ என்னைக் கேட்டிருந்தால் நான் இப்படி யோசித்துக்கொண்டிருப்பேனா?"

"உன் விஷயம் வேறு அனந்த். நீ ஆண்பிள்ளை...நான்..."

"உன்மீது ஏதாவது பழி வந்துவிடுமென்பதுதானே உன் பயம்? நான் இல்லையா? அதுபோல் நடக்க விடுவேனா?"

"இந்தக் கடிதங்களை போஸ்ட் செய்தால் இந்தத் திருமணம் நின்று விடுமென்ற நம்பிக்கை உனக்கு இருக்கா?"

"கட்டாயம் நின்று விடும். நீயே பார்க்கப் போகிறாய்."

ரோஜா யோசனையோடு அவனைப் பார்த்தாள். சுகுமாரமாய், மென்மையாய் தென்படும் அவனுள் இருக்கும் நட்பு நிறைந்த உள்ளத்தைக் கண்டுகொண்டதால்தான் ரோஜா அவனிடம் இத்தனை உரிமை ஏற்படுத்திக் கொண்டாள். ரோஜா தலைகுனிந்து, கீழ் உதட்டைப் பற்களால் அழுத்தி, சற்று நேரம் யோசித்தாள். பிறகு ஒரு முறை கையில் இருந்த கடிதங்களை கவனத்துடன் படித்தாள். கடைசியில் அனந்தைப் பார்த்து, "சரி! அனந்த், உனக்கு உதவி செய்ய நான் தயார்."



அனந்த் முகம் மலர்ந்த தாமரைபோல் மாறியது.

"எனக்குத் தெரியும் ரோஜா, நீ..."

"கொஞ்சம் இரு அனந்த். என்னை முழுசாகச் சொல்ல விடு."

"சொல்லு!" அனந்த் பணிவுடன் கேட்கத் தயாராக உட்கார்ந்தான்.

"அனந்த் முதல்ல சொல்லு. இத்தனை நாளாய் என்னைப் பார்த்து வருகிறாய் இல்லையா, என்னைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?"

அனந்த் பரவசமாய் பார்த்துக்கொண்டே, "இதென்ன கேள்வி? என் பார்வையில் நீ ஒரு அழகான இளவரசி. சாபத்தின் காரணமாய் இவ்வுலகில் வாழ நேர்ந்த தேவதை."

ரோஜாவுக்கு இந்த பதில் மகிழ்ச்சி அளிக்கவில்லை. "இல்லை அனந்த்...அதெல்லாம் இல்லை...நான் ஒரு சராசரிப் பெண்தான். இன்னும் சொல்லப் போனால், சுயநலம் பிடித்தவளாய் கூட இருப்பேனோ என்னவோ! பிரதிபலன் இல்லாமல் எந்தக் காரியமும் நான் செய்ய மாட்டேன். நான் எந்த வேலை செய்தாலும் எனக்கு அதில் கொஞ்சமாவது ஆதாயம் இருக்கணும் சின்ன வயது முதல் எனக்கு இது தான் பழக்கம். புரிந்ததா?"

அனந்துக்கு புரிந்ததோ இல்லையோ, கடவுளுக்குத் தான் வெளிச்சம். வெளியில் மட்டும் தலையை அசைத்தான்.

ரோஜா சீரியஸாகச் சொன்னாள். "அனந்த்! இப்போ நாம் நண்பர்களாய் இல்லாமல், வியாபாரிகள் போல் பேசுவோம். உனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை. அதிலிருந்து தப்பிக்க என் உதவியை வேண்டுகிறாய் நான் உதவி செய்யத் தயாராய்தான் இருக்கேன் இதற்குப் பிரதிபலனாய் எனக்கு நீ என்ன தரப்போகிறாயோ சொல்லு?"

அனந்த் புரியாதவன்போல் பார்த்தான். உடனே சிரித்துவிட்டுச் சொன்னான், "ஒரு டஜன் சாத்துக்குடி. ஒரு

ஹார்லிக்ஸ் பாட்டில், ஹோட்டல் சாப்பாடு, பிறகு சினிமா...''

''இல்லை. அதெல்லாம் நீ எழுதிய கவிதை கேட்க நான் வாங்கும் லஞ்சம். இது பெரிய விஷயம், ஸ்பீசும் அதிகமாய் தான் இருக்கணும்.''

''என்ன வேணுமோ சொல்லு.''

''எதைக் கொடுத்தால் நல்லாயிருக்கும். நீயே யோசி.''

அனந்த் சற்று யோசித்துவிட்டு, புரிந்தாற்போல், ''ஆங்! காஞ்சிபுரம் பட்டுப்புடவை'' என்றான்.

''பட்டுப் புடவையா? இவ்வளவு ஏழ்மையில் இருக்கும் நான் அவ்வளவு விலை உயர்ந்த புடவையை உடுத்திக் கொண்டால் சிரிப்புக்கு இடமாகிவிடும்.''

''அப்படின்னா...வேறு என்ன தரட்டும்? தங்க நகை ஏதாவது?''

''ஹூம்! தங்க நகை வேண்டாம். ஒளித்துவைக்க முடியாமல் திண்டாடணும்.''

''ரொம்ப நாளாய் உனக்கு ஒரு வாட்ச் வாங்கித் தரணும்னு நினைத்தேன். அதை வாங்கட்டுமா?''

''கடியாரம் எனக்கு எதுக்கு? கடியாரத்தைக் கட்டிக் கொண்டு எங்கே போகப் போகிறேன்? நீ கொடுப்பது எதுவாக இருந்தாலும், எனக்குத் தேவையானபோது பயன்படணும்.''

அனந்த் யோசித்துவிட்டு, ''என்னவோப்பா! பணத்தைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லை.''

இத்தனை நேரத்துக்குப் பின் அவன் வாயிலிருந்து அந்த வார்த்தை வந்ததும் ரோஜா நிம்மதியாக மூச்சை விட்டாள்.

''ஆமாம் அனந்த்! நீ எனக்கு எதை வெகுமதியாக அளிக்க நினைக்கிறாயோ, அதன் விலையைப் பணமாய்



ஏதாவது வங்கிக் கணக்கில் போட்டுவிடு. இன்று மட்டும் இல்லை, இனிமேல் சினிமா, பீச் எதுவும் வேண்டாம். அதுக்காக நீ செலவு செய்யும் பணத்தை கணக்கு போட்டு என்னிடம் கொடுத்துவிடு. அப்படிச் செய்தால் என்னைக் காப்பாற்றினாற்போல், எவ்வளவோ உதவி செய்வது போல் ஆகும்...''

''ரோஜா!'' கலவரமாய் அழைத்தான் அனந்த்.

கம்மிய குரலில் மேலும் சொன்னாள்.

''ஆமாம் அனந்த். உன்னிக்கு மனம் திறந்து இப்படி ஒளிவு மறைவில்லாமல் சொல்வதை தவறாக நினைக்காதே. நான் ஏழ்மையில் இருப்பவள், அதிகம் படிக்காதவள். வேலை பார்க்க வேண்டுமென்றும், என் கால்களில் நான் நிற்க வேண்டுமென்ற விருப்பம் இருந்தாலும், எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.'' ரோஜா தலையைக் குனிந்து கொண்டாள். கை விரலால் மேஜை விளிம்பில் கோடு போட்டுக் கொண்டே சொன்னாள்.''

''ஒவ்வொரு நாளும் என் அம்மா விரதம் என்ற பெயரில் தொடர்ந்து பட்டினி கிடக்க நேரும் போது, பசியால் சோர்ந்து போனவளுக்கு ஏதாவது பழமோ, காயோ வாங்கித் தரணும் என்றும் வற்புறுத்தி சாப்பிட வைக்கணும்னு என் மனம் கிடந்து தவிக்கும். கையில் சல்லிக் காசு கூட இருக்காது. என் இயலாமையை நினைக்கும் போது என் மீதே எனக்கு வெறுப்பு ஏற்படும். செந்தா கைக்கு வராமல் போனது எங்க துரதிஷ்டம்.''

''ரோஜா! நிறுத்து, இனிமேல் பேசாதே '' ஆவேசமாய் சொன்னான் அனந்த். அவன் முகம் சிவந்து விட்டது.

''ரோஜா, சில சமயம் நீ தயங்குவதைப் பார்த்தால் ரெண்டு அறை கொடுக்கலாம்னு கோபம் வரும். நம்முடைய நட்பை நான் எவ்வளவு அபூர்வமானதாய் மதிக்கிறேனோ உனக்கே தெரியும். அதை முன்னிட்டு நீ. எதுவாய் இருந்

தாலும், எப்போ வேணும்னாலும் தயங்காமல் கேட்க லாம்னு உனக்கு ஆயிரம் தடவை சொல்லியாச்சு. ஆனாலும் நீ என்னை நம்பினாற்போல் இல்லை."

"இல்லை அனந்த், அப்படி இல்லை."

ரோஜாவின் பேச்சை இடைமறிப்பது போல் கையால் தடுத்துவிட்டுச் சொன்னான்.

"இப்போ கடைசி தடவையாய் சொல்றேன். அனந்த் என்ற நண்பன் இந்த உலகில் இருக்கும் வரை நீ எதுக்கும் கஷ்டப்படக்கூடாது. எந்த விஷயமும் சொல்லாமலே புரிந்து கொள்ளும் திறமை எனக்கு இல்லை என்று உனக்குத் தெரியாதா என்ன?"

சட்டைப்பையில் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்து, "இப்போதைக்கு நூறு ரூபாய் இருக்கு, போதுமா?" என்றான்.

"உன் இஷ்டம், விலையை முடிவு செய்வது உன் வேலை தான்."

"பேஷ்! நல்ல பெண்ணாயிருந்தால் நான் கொடுப்பதை நீ வாங்கிக் கொள்ளணும்."

"அனந்த்! நீ கொடுப்பது எதுவானாலும் சரி, தானம் கொடுப்பது போல் எண்ணினால் அது எனக்கு விஷத்துக்கு சமம் தெரியுமா?"

"ஓ...மைகாட்...வாட் எ ஸில்லி ஐடியா? நோ...நோ... அது போல் எப்பவும் எண்ணமாட்டேன்." வெளியில் அப்படிச் சொன்ன போதும், மனதில் "நான்ஸென்ஸ்—தானம் கொடுப்பதாவது? இதெல்லாம் அவளுக்குச் சேர வேண்டியதுதானே" என்று எண்ணிக் கொண்டான்.

"பாரு ரோஜா, நானும் வியாபாரியைப்போல் பேசுகிறேன். கடிதம் எழுதி போஸ்ட் செய்ய நூறு ரூபாய், அதன் பிறகு பலன் கிடைத்ததும் என் சந்தோஷத்தைப் பொறுத்து... சரிதானா?"



ரோஜா தூக்குக் கயிறு கழுத்தில் விழப்போனது போல் பார்த்தாள். அவளுக்கு என்னவோ போல் இருந்தது. என்ன தான் வியாபாரம் என்று பெயர் வைத்துக்கொண்டாலும், மனம் நம்ப மறுத்தது. அவனுடைய நல்லத்தனத்தை பயன் படுத்திக்கிறோமோ என்ற எண்ணம் ஏற்பட, உடனே தெளிவாய்ச் சொன்னாள்,— "பாரு அனந்த், என்னுடைய தேவையை முன்விட்டு உன் நல்லத்தனத்தை பயன்படுத்திக் கொள்ளும் எண்ணம் எனக்குக் கிடையாது. நான் செய்யும் உதவிகளின் விலையை நானே முடிவு செய்து சொல்கிறேன். அதுக்கு மேல் நீ கொடுக்க வேண்டாம்."

"ஓ ரோஜா! நீ ரொம்ப சென்ஸிடிவ் ஆக இருக்கே. இஸ் ஈஸ் நாட் குட் ஃபார் யூ.." என்றான் அனந்த். அவனுக்கு ரோஜாவின் அறிமுகம் ஆனது எந்த முகூர்த் தமோ தெரியவில்லை, நாளுக்கு நாள் ரோஜாவின்பால் அன்பும், அபிமானமும் வளர்ந்ததே தவிர குறையவில்லை.

ரோஜா, அவன் சொன்னது போல் அங்கேயே அனந்த் ரோஜாவின் பெயரில் அக்கவுண்ட் ஓப்பன் செய்து நூறு ரூபாய் போடப் போனான்.

"நூறு ரூபாய் போடாதே— எண்பது போடு—மீதி இருபதை என் கையில் கொடு."

"ஏன்?"

"வேலையிருக்கு—"

மறு பேச்சு பேசாமல் அனந்த் கொடுத்து விட்டான்... பணத்தை ஹேண்ட் பேக்கில வைத்துக்கொண்ட ரோஜா கீழ் உதட்டைப் பற்களால அழுத்திக்கொண்டே மனதில் எண்ணிக் கொண்டாள்.

'அனந்த்! இப்போ வேறு வழியில்லாமல் உன்னிட மிருந்து வியாபாரம் என்ற பெயரில் இப்படி வாங்கிக் கொண்டாலும், பிற்காலத்தில் எப்படியாவது இதை உனக்குத் திருப்பிக் கொடுத்து விடணும். இல்லாவிட்டால்

எனக்கு நிம்மதி இருக்காது, என மனசாட்சி என்னை மன்னிக்காது.

* * *

ரோஜா வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, நன்றாக இருட்டி விட்டது. சுந்தரி வீட்டில் இல்லை. அடுத்த வீட்டு நார்மடி பாட்டி வீட்டிலிருந்து, அவள் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. விளக்குப் போடாத இருட்டு அறையில் கட்டிலில் பல்லியைப்போல் ஒட்டிக்கொண்டு, அழுது அழுது நினைவு இழந்தாற்போல் கிடந்தாள் சாவித்திரி.

ரோஜா லைட்டைப் போட்டுக்கொண்டே, "அம்மா!" என்று அழைத்தாள். பதில் வரவில்லை.

ரோஜா தான் வாங்கி வந்த சாத்துக்குடியை உரித்து, சுளையைப் பிரித்தெடுத்து, பிரட்டை ஒரு தட்டில் வைத்துக் கொண்டு தாயை அணைத்தாற்போல் எழுப்பி உட்கார வைத்தாள். ஒவ்வொரு சுளையாய் ஊட்டிவிட்டு, ஹார்லிக்ஸை அருந்தச் செய்தாள். பசி மயக்கத்தில், சுய நினைவு இல்லாவிட்டாலும், கிடுகிடுவென்று சாப்பிட்ட தாயைப் பார்க்கும் போது ரோஜாவின் கண்கள் கசிந்தன.

"வாழ்க்கையில் எந்த சுகமும் அனுபவிக்காத இந்தத் தாய்க்காக, தான் எதையும் செய்யத் தயார். நீதி, தர்மம், நியாயம் இதைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன். அம்மாவுக்காக இந்த உலகத்துடன் ஆயிரம் கைகளுடன் சண்டை போடுவேன்" என்று சபதம் எடுத்துக் கொண்டாள் ரோஜா.

வாயைத் துடைத்து, படுக்கையில் சாய்ந்து படுக்க வைத்து, எழப்போன ரோஜாவின் கையைப் பற்றிக் கொண்டாள் சாவித்திரி.

"ரோஜா! உண்மையைச் சொல்லு... அந்த அனந்த் உன்னை என்ன செய்தான்?" என்றாள்.



"ஒன்றும் செய்யலை அம்மா. சேர்ந்து சாப்பிட்டோம். அவனுடைய பிரச்னைகளைச் சொன்னான். கேட்டுக் கொண்டேன் அவ்வளவு தான்!" பொறுமையாகப் பதில் அளித்தாள் ரோஜா.

சாவித்திரி ரோஜாவின் கையை சடாரென்று தள்ளி விட்டு, என்னிடமே பொய் சொல்றியா? உன்னிடமிருந்து எதையுமே பெறாமல் அவன் உனக்குப் பணம் எப்படிக் கொடுத்தான்?" என்றாள்.

ரோஜா நிதானமாய், பொறுமையாய் பதில் சொன்னாள். "அம்மா நீ நினைப்பதுபோல் அப்பாவி நான் இல்லைன்னு உனக்கு என்னிக்கு தெரியப் போகிறது? கடவுள் எனக்கு எதுவும் தராவிட்டாலும் நிறைய அறிவை கொடுத்திருக்கிறார். என்னைப் பற்றிக் கவலைப்படாதே! நீ நிச்சிந்தையாய்த் தூங்கு."

"ரோஜா! என் கண்ணே!" சாவித்திரி இரு கைகளையும் நீட்டினாள்.

சரேலென்று ரோஜா அந்தக் கரங்களுக்கிடையே ஒதுங்கி, தாயை அணைத்துக் கொண்டாள்.

"ரோஜா! நான் சொல்வதில் எதைக் கேட்டாலும் கேட்காவிட்டாலும், இதை மட்டும் நினைவில் வைத்துக் கொள். ஆணை ஒரு நாளும் நம்பாதே! அவங்களோட இனிமையான பேச்சுக்குப் பின்னால் உயிரையே எடுக்கக் கூடிய விஷம் இருக்குமென்பதை மறந்து விடாதே!"

தாயின் முதுகை பரிவாகத் தடவிக்கொண்டே ரோஜா சொன்னாள். "ஆண்களை மட்டுமே இல்லை, இந்த உலகில் யாரையுமே நம்ப மாட்டேன், என்னைத் தவிர" கண்ணீரை துடைத்துக்கொண்டே திடமான குரலில் பதிலளித்தாள் ரோஜா.

# 8

இது நடந்த பத்து நாட்களுக்குப் பிறகு, மதிய நேரம், ஆண்கள் வேலைக்குச் சென்று விட, பெண்டுகள் மட்டும் வீட்டில் இருந்தார்கள். அந்த நேரத்தில் தெருவில் ஜன நடமாட்டம் அதிகம் இல்லை. சுந்தரி, அம்புஜம் வீட்டில் அப்பளம் இடப் போகிறார்கள் என்று உதவி செய்யப் போயிருந்தாள். அவளுக்கும் அந்தப் பெண்கள் கூட்டத்துக்கும் ஏற்கனவே சமரசமாகி விட்டது. தாய் படுத்து இருந்த அறையில் ஜன்னலுக்கருகில் நாற்காலியில் மடியில் புத்தகத்தை வைத்துக் கொண்டு ரோஜா உட்கார்ந்து இருந்தாள். கடந்த ஒரு மணி நேரமாய்ப் புத்தகத்தில் மனதைச் செலுத்த எண்ணி தோல்வியுற்றிருந்தாள்.

சங்கரன் வீட்டை விட்டுப் போய் ரொம்ப நாட்கள் ஆனாலும் இன்னும் திரும்பவில்லை. ஏதோ நாடகக் கம்பெனிக்கு ஹார்மோனியம் வாசிக்கப் போயிருப்பதாகவும், ஒரு மாதம் வரை வீடு திரும்பப் போவதில்லை என்றும் கடிதம் மட்டும் வந்தது. இது போல் வீட்டிலிருந்து கிளம்பிப் போய், மனம் போன போக்கில் ஊரைச் சுற்றி விட்டு வருவது அவருக்கு வழக்கம்தான். சில நாட்கள் கழித்து, அழுக்கு உடைகளுடன், வளர்ந்துவிட்ட தாடி, ஒட்டிப் போன முகமும் இத்யாதிகளுடன் வீட்டுக்கு வருவார். வந்ததுமே அவரை யாரும் குசலம் விசாரிக்கக் கூடாது. நேராகக் கிணற்றடிக்குச் சென்று கால் கைகளை அலம்பிக் கொண்டு, ஜுரம் வந்த மாதிரி இழுத்துப் போர்த்திக் கொண்டு கட்டிலில் படுத்துக் கொள்வார். பிறகு எழுந்து, குளித்து, தானே உணவைப் பரிமாறிக் கொண்டு சாப்பிடுவார். அப்பொழுது கூட யாரும் அந்தச் சுற்று வட்டாரத்



தில் இருக்கக்கூடாது. இரண்டு நாட்கள் இப்படி விட்டேற்றியாய் இருந்த பிறகு, மெதுவாய் தானே எல்லோரையும் குசலம் விசாரிப்பார். இம்மாதிரி அடிக்கடி அவர் வீட்டை விட்டு வெளியேறுவதால் அவரிடம் பாட்டு கற்றுக் கொள்பவர்களும் நின்று விட்டார்கள். நாலைந்து பேர் மட்டும் அவர் மீது இருக்கும் கௌரவத்தினால் வந்த போது பாட்டைச் சொல்லிக் கொண்டு சம்பளம் வழங்குவார்கள்.

சங்கரன் வீட்டிலிருந்து போன இரண்டு மூன்று நாட்கள் வரை சுந்தரி கொஞ்சம் ராங்கியாகவே இருப்பாள். பிறகு அந்தக் கோபம் போனதுமே, ரோஜாவிடம் வந்து தான் தவறு செய்து விட்டதாயும், மற்றவர்களின் பேச்சைக் கேட்டுக் கணவனை அவமதித்து விட்டதாகவும், இனி இது போல் நடந்து கொள்ள மாட்டேன் என்றும் பிலாக்கணம் பாடுவாள். மாமா இல்லாத போது, வெளி வேலையெல்லாம் ரோஜா தான் கவனித்துக் கொள்வாள். செத்தாலும் சுந்தரி துணையில்லாமல் வெளியில் போக மாட்டாள். ஒரு முறை இந்த ஊருக்கு வந்த புதிதில் உறவினர் வீட்டுக்குப் போய் விட்டு வரும் போது, ரிக்ஷாக்காரன் வேறு வழியில் அழைத்துக் கொண்டு போய், கழுத்தில் இருந்த திருமாங்கல்யத்தைப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டான். வழி தெரியாமல் திண்டாடி எப்படியோ வீடு வந்து சேர்ந்தாள் சுந்தரி. அதன் பிறகு அவள் துணையில்லாமல் வெளியில் போக முயற்சி செய்யவில்லை. அதனால் இஷ்டம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சுந்தரிக்கு ரோஜாவுடன் சுமுகமாகப் பழகுவதைத் தவிர வேறு வழியில்லை.

வீட்டில் மளிகை சாமான் தீர்ந்து விட்டது. கையில் பணமும் இல்லை. கடன் கேட்டால் யாரும் தர மாட்டார்கள். என்ன செய்வது என்று கவலையுடன் உட்கார்ந்து இருந்த மாமியின் கையில் ரோஜா இருபது ரூபாய் நோட்டை வைத்தாள்.

பணத்தைப் பார்த்ததும் சுந்தரியின் முகம் மலர்ந்து விட்டது. "ஏது இந்தப் பணம் ரோஜா?"

"அனந்திடம் கடனாய்க் கேட்டு வாங்கினேன் மாமி" என்றாள் ரோஜா.

"அந்தப் பையன் ரொம்பத் தங்கமானவன்."

"நாம் கேட்ட போதெல்லாம் கடன் கொடுக்கும் அளவுக்குத் தங்கமானவன் இல்லை மாமி. பண விஷயத்தில் ரொம்ப கெட்டி. ரொம்ப கேட்ட பிறகுதான் கொடுத்தான்" என்றாள் ரோஜா.

சுந்தரியின் முகம் விழுந்து விட்டது.

ரோஜா அனந்த் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். அவனை அதற்குப் பிறகு பார்க்கவே இல்லை. அவன் போக்கே அப்படித்தான். வந்தால் தினமும் வருவான். மணிக்கணக்காய் பேசுவான். இல்லா விட்டால் கண்ணில் படவே மாட்டான். அந்தக் கடிதங்களின் முடிவு என்ன வாயிற்று என்று தெரிந்துகொள்ள ரோஜா ஆர்வமாய் இருந்தாள். மடியில் புத்தகம் கிடக்க, கன்னத்தில் கையை ஊன்றி, ஜன்னல் வழியாய் வெளியில் பார்த்துக் கொண்டிருந்த ரோஜா, அறையில் 'டப்' என்ற சத்தத்துடன் ஏதோ பொருள் உள்ளே வந்து விழுந்ததைக் கண்டு அதிர்ந்து விட்டாள். சின்ன மண் கட்டி கீழே விழுந்து தூளாகி இருந்தது. ரோஜா சட்டென்று தாயின் பக்கம் பார்த்தாள். சாவித்திரி சுவர் பக்கம் திரும்பி உறங்கிக் கொண்டிருந்தாள். ரோஜாவின் புருவங்கள் முடிச்சிட்டன. கவனமாய் அந்த மண்கட்டிப் பக்கமே பார்த்தாள். யார் இதை வீசி இருப்பார்கள்? பக்கத்து வீட்டில் இருக்கும் அந்தக் குரங்கு... ஆஞ்சநேயுலு... அவனாகத்தான் இருக்கும். இவனொருத்தன்! வாசற்பக்கம் போக வேண்டியதுதான் தாமதம், ஜன்னல் அருகில் நின்று பற்களைக் காட்டி இளிப்பான். அந்தச் சிரிப்பைப் பார்த்தால் ரோஜாவுக்குப் பற்றி எரியும். கம்பளிப் பூச்சி ஊர்வது போல் அருவருப்பாய் இருக்கும். என்றாவது ஒருநாள் அவன் கன்னத்தில் இழுத்து



ஒரு அறை கொடுக்க வேண்டுமென்று ரோஜா நிறைய தடவை எண்ணியிருக்கிறாள். ஆனால், அவனுடைய பாட்டி இருக்கிறாளே! அவளுடைய வாய் ரொம்ப பொல்லாதது! குரல் எடுத்து கத்த ஆரம்பித்தால், மைக் இல்லாமலேயே எட்டு ஊருக்குக் கேட்கும். பேரனுக்கு ஏதாவது ஆனால் அவள் செய்யும் அடாவடிக்கு எல்லையே இருக்காது. பெண் பிள்ளைகள் இது போன்ற விஷயத்தில் பெயரைக் கெடுத்துக் கொள்வது நல்லது இல்லை.

நகத்தைக் கடித்துக் கொண்டே என்ன செய்வது என்று ரோஜா யோசிக்கும் போதே, இன்னொரு கல் விழுந்தது. இந்த தடவை அது ரோஜாவின் பாதங்கள் வரை உருண்டு வந்து நின்று விட்டது. அந்த 'அஞ்சி'க்கு சுந்தரி வீட்டில் இல்லையென்றும், சாவித்திரி வீட்டில் இருந்தாலும் வெளியே வர மாட்டாள் என்றும் நன்றாகத் தெரிந்து விட்டது. அக்கம் பக்கத்திலும் சந்தடியில்லாததில் துணிச்சல் வந்து விட்டது போலும். இனி பொறுப்பது நல்லதில்லை என்று ரோஜா புத்தகத்தை எடுத்து வைத்து விட்டு மெதுவாகக் கொல்லைப்புறம் வந்தாள். ஆனால் அங்கு யாருமே தென்படவில்லை. ஆஞ்சநேயுலுவின் அறைக் கதவும் சாத்தித்தான் இருந்தது. அவன் இல்லாவிட்டால் வேறு யாராய் இருக்கும்? இவ்வளவு குறி பார்த்து கல் வீசும் தைரியம் யாருக்கு இருக்கும்? துணிச்சலை வரவழைத்துக் கொண்ட ரோஜா, கொல்லைப்புறக் காம்பவுண்ட் சுவர் வரை போய் மறுபக்கம் எட்டிப் பார்த்தாள் அந்தத் தெருவில் இந்த வீடுதான் கடைசி. அதற்குப் பிறகு முஸ்லிம்களின் சமாதிகள் இருந்தன. அதன் நடுவில் பெரிய அரச மரம் இருந்தது. அதனுடைய ஒரு கிளை இவர்கள் வீட்டுக் கொல்லை வரை விஸ்தரித்து இருந்தது. இரவு வேளையில் அந்த மரத்தைப் பார்த்தால் சுந்தரி பயத்தால் நடுங்கிச்சாவாள். சில சமயம் போக்கிரிப்பசங்க சுவரைத் தாண்டி உள்ளே குதித்து, ஊற்று மேடையில் வைத்த சொம்பு, பக்கெட் என்று தூக்கிக் கொண்டு போய் விடுவார்கள்.

ரோஜா சுவருக்குப் பக்கத்தில் நின்று "யாரு?" என்றாள்.

பதிலளிப்பதுபோல் மரக்கிளையில் சலசலப்பு கேட்டது. ரோஜா தலையை உயர்த்திப் பார்த்தாள். அடர்த்தியாக இருந்த இலைகளுக்குப் பின்னால் யாராவது மறைந்து இருந்தாலும் தெரியாது.

"யாரது?" இரட்டித்தாற் போல் கேட்டாள்.

இந்தத்தடவை இலைகளை நீக்கி, முகத்தில் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்த ஒரு முகம் எட்டிப் பார்த்து உதட்டின் மீது விரலை வைத்து, 'ஷ்' என்றது.

ரோஜாவின் இதயத்துடிப்பு ஒரு நிமிடம் நின்று மீண்டும் இயங்கியது. பயத்தில் ஓரடி பின்னால் நகர்ந்தவள் "யார் நீ?" என்றாள் அதட்டுவது போல்.

"ஷ் ..சத்தம் போடாதே ரோஜா!" தாழ்ந்த குரலில் சொன்னவன், கண்ணாடியை எடுத்துவிட்டுப் புன்முறுவல் செய்தான்.

ரோஜா நெஞ்சுமீது கையை வைத்துக் கொண்டு, "செந்து! நீயா?" நம்ப முடியாதவளாய், வியப்புடன் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

"ஏன்? இன்னும் நம்பிக்கை வரவில்லையா?"

"நீ...உன்னால்... இங்கே எப்படி வரமுடிந்தது? போலீஸில் விட்டுவிட்டாங்களா?" மகிழ்ச்சி வெள்ளமாய்ப் பெருக, கேள்விகளைக் கிடுகிடுவென்று கேட்டுவிட்டாள்.

சந்திரன் மறுபடியும் "ஷ்" என்றான். "அவங்க என்னை விடுதலை செய்யலை, நான்தான் அவங்களை விட்டு விட்டேன். ஜெயில் மாறும்போது தப்பித்துக் கொண்டு ஓடி விட்டேன்."



ரோஜாவின் முகத்தில் மகிழ்ச்சி, அணைந்துபோன விளக்காய் ஒளியிழந்தது.

"தப்பித்துக் கொண்டு வந்தாயா? அப்படியானால் அவங்க..."

"என்னைத் தேடிக்கிட்டு இருக்காங்க."

ரோஜாவின் கண் இமைகள் பயத்தில் படபடத்தன.

செந்து கொஞ்சம் கிழக்கிளையை நோக்கி நகர்ந்து இருந்தான். அப்படியும் அவன் முகமும், தோள்கள் மட்டும் தெரிந்தன.

"என்னைப் பற்றி நீங்க பயப்பட வேண்டாம், ரோஜா! னி எந்தக் கவலையும் இல்லை. அம்மாவும் நீயும் அழுதுக்கிட்டு இருப்பீங்கன்னு சொல்லிட்டுப்போகத்தான் வந்தேன்."

"அப்படின்னா?"

"நான் இப்போ தனியாள் இல்லை தெரியுமா? என் பின்னாடி ஒரு கூட்டம் இருக்கு. எங்க தலைவருக்கு மேலிடத்தில் நல்ல செல்வாக்கு இருக்கு என்னை யாரும் பிடிக்க மாட்டாங்க. ஒரு வேளை பிடித்தாலும் ஒண்ணும் செய்ய மாட்டாங்க..."

"என்னமோ செந்து ..நீ சொல்றது எனக்கு ஒண்ணும் புரியலை... மூளையில் ஏறவும் இல்லை."

"ஏறாவிட்டால் போகட்டும். நான் சுகமாய்த்தான் இருக்கேன் என்று மட்டும் நினைவில் வைத்துக்கொள். மற்றதை மறந்துவிடு..." சற்றுப் பொறுத்துச் சொன்னான், "காலையிலிருந்து ஒண்ணுமே சாப்பிடலை...பசிக்கிறது ரோஜா."

"கீழே இறங்கி உள்ளே வா, மாமி இல்லை... சாப்பிடலாம்."

"அம்மாடியோவ்! நடுவில் அந்த ராட்சசி வந்து விட்டால்?"

"வந்தா வரட்டுமே! நான் வேணா வாசலில் காவல் இருக்கேன். நீயும் அம்மாவைப் பார்த்தாற் போலிருக்கும்."

"ஊஹும்! அம்மா இப்போ என்னைப் பார்த்து அழத் தொடங்கினால், விட்டுட்டுப் போகும் துணிச்சல் எனக்கு இருக்காது. யாராவது பார்த்துவிட்டால் ஆபத்துதான். சாப்பாடு இருந்தால் இங்கே கொண்டுவா."

"இங்கேயா? எப்படி?"

"நான் வழி சொல்லித்தரேன். அந்தக் கயிறும் வாளியும் இப்படிக் கொண்டுவாயேன்."

ரோஜா ஓடிப் போய் வாளியும், கயிற்றையும் கொண்டு வந்தாள்.

"கயிற்றை மேலே தூக்கிப்போடு" என்றான்.

ரோஜா கயிற்றை வீசிப் போட்டாள். லாவகமாய் அதைப் பற்றிக் கிளையில் கட்டி விட்டவன், "போய் கிண்ணத்தில் சாதம் கலந்து கொண்டு வந்து அந்த வாளியில் வெச்சுடு நான் மேலே இழுத்துக்கறேன். சட்டுன்னு வரணும்" என்றான்.

"அட! எவ்வளவு மூளை வந்துடுத்து உனக்கு." ரோஜா உள்ளே ஓடினாள். கைகால்கள் ஓடவில்லை. பதட்டமாய் இருந்தது சங்கரன் ஊரில் இல்லாதபோது சுந்தரி எரி பொருளும், நேரமும் மிச்சப்படும் என்று இரண்டு வேளைக்கு சேர்த்து ஒன்றாய் சமைத்து விடுவாள். ரோஜா சட்டென்று ஒரு கிண்ணத்தை எடுத்து, சாதத்தைப்போட்டு, சாம்பாரை ஊற்றிப் பிசைந்தாள். காலையில் செய்த பாகற்காய் வதக்கலை மேலே வைத்து, மறுபடியும் கொல்லப்புரம் ஓடிவந்தாள்.

பாகற்காய் வதக்கலைப் பார்த்ததும் செந்தூரின் முகம் மலர்ந்தது... "நான்வரப்போறேன்னு உனக்கு முன்னாடியே தெரியுமா ரோஜா!" வாளியை மேலே இழுத்துக் கொண்டான்.



ரோஜாவுக்குக் கண்களில் ச்சரென்று நீர் சுழன்றது. சட்டென்று துடைத்துக்கொண்டு, "இன்னிக்குப் பாகற்காயை வதக்கும்போது, எத்தனை தடவை உன்னை நினைத்துக் கொண்டேன்!" என்றாள்.

"அதுக்குத்தானே அழைத்த மாதிரி வந்துவிட்டேன்."

சாப்பிட்டுக் கொண்டே சந்திரன் விவரங்களைச் சொன்னான்.

"ரோஜா! இனி நம் கஷ்டங்களுக்கு விடிவுகாலம் வந்தாற்போல்தான்...நான் உங்களுடன் இருக்க முடியாதே தவிர, உங்களை வசதியா வெச்சுக் காப்பாத்த முடியும். அடுத்த தடவை வரும்போது உன்னிடம் பணம் தருகிறேன். மாமியிடம் விட்டெறி... ரோஜா! உங்களுக்கு இங்கே சரியாக இல்லாவிட்டால், அம்மாவும், நீயும் தனியாய் இருங்க. அம்மா எப்படி இருக்கா? என்னைத் திட்டுகிறாளா? திட்டட்டும்...ரோஜா! நான் எத்தனை கஷ்டம் வேணும்னாலும் படத்தயார். ஆனால் அம்மாவும், நீயும் நான் விரும்புவதுபோல் சுகமாய், சந்தோஷமாய் இருக்கணும். அப்பத்தான் எனக்கு திருப்தி ஏற்படும்."

ரோஜாவால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"தந்தையில்லாதவங்கள் நிறையப்பேரைப் பார்த்திருக்கிறேன். ஆனால் நம்மைப்போல் நாதியில்லாதவங்களை எங்கும் பார்த்ததில்லை..." கண்ணீரை ஒற்றிக் கொண்டே சொன்னாள்.

"நாதி இல்லைன்னு ஏன் சொல்றே? உனக்கு நான்... எனக்கு நீ ..நமக்கு அம்மா இருக்கா. சூழ்நிலை என்கிறாயா? அதோடு சண்டை போடுவோம்! இந்த உலகில் அதிருஷ்டசாலின்னு தனியா ஒருவரும் இல்லை. அதே போல் துரதிருஷ்டசாலின்னும் ஒருத்தர் இருக்கமாட்டாங்க ரோஜா!"

தன்னைவிட இரண்டு வயசுச் சின்னவனான செந்தா சின்னப் பையனாய் நேற்று வரை தன்னைச் சுற்றிவந்த செந்தா, இவன்தானா என்று ரோஜாவுக்குப் பிரமிப்பு ஏற்பட்டது.

இன்னும் ஐந்து நிமிடங்கள் ஆகியிருந்தால், செந்தாவின் சாப்பாடு முடிந்திருக்கும். அவன் மோர் சாதம் சாப்பிடும் போது, நார்மடி பாட்டியின் வெங்கலக் குரல் கணீரென்று கேட்டது.

"இவங்க கையை ஒடித்து அடுப்பில் வைக்க! ஓரமாய்ப் பிடிச்சு வைத்திருந்த மடித்தண்ணியை யாரோ ஸ்வாஹா பண்ணிட்டாங்க! தாகத்துக்கு நாக்கு வரண்டுபோய், ஒரு வாய் தண்ணியைக் குடிக்கப் போனா, ஒரு சொட்டு இல்லை. அப்பளம் இடப் போகாமல் வீட்டிலாவது இருந்து தொலைச்சிருக்கணும் நான்." யாரையோ சபித்துக் கொண்டே, குடத்தை இடுப்பில் வைத்துக் கொண்டு இந்தப் பக்கமே வந்து கொண்டிருந்தாள்.

ரோஜா, சந்திரன் இருவருக்கும் தூக்கி வாரிப் போட்டது. சந்திரன் சட்டென்று பக்கெட்டுடன் இலைகளுக்குப் பின்னால் மறைந்து கொண்டான். ரோஜாவுக்கு அங்கிருந்து அகலும் அவகாசம்கூட கொடுக்காமல் நார்மடி அங்கு வந்து விட்டாள்.

நட்ட நடுப்பகலில், கொளுத்தும் வெய்யிலில், தனியாக அதிலும் காம்பவுண்ட் சுவருக்கு அருகில் நின்ற ரோஜாவை அந்தப் பாட்டி சந்தேகமாய்ப் பார்த்துக் கொண்டே, "இங்கே எதுக்கு நின்னுகிட்டு இருக்கே?" துப்பறிய வந்தவள் போல் கேட்டாள்.

"சும்மாதான் பாட்டி!" பணிவாய்ப் பதிலளித்தாள் ரோஜா.

என்றுமில்லாதபடி ரோஜா மரியாதையாய் பேசியது கண்டு பாட்டியின் சந்தேகம் வலுவடைந்தது.



"சும்மாவா... ஏன் வெய்யில் குளுகுளுன்னு நிலாவாகக் காயுதா? உன் மாமி வீட்டில் இல்லைதானே?"

"இல்லை."

"உன் அம்மா என்ன செய்துக்கிட்டு இருக்கா?"

"தூங்கிண்டு இருக்கா."

"ஆங்! அப்படிச் சொல்லு!" என்று சொல்லிக் கொண்டே, பாட்டி தயங்காமல் சுவருக்கு அப்பால் எட்டிப் பார்த்தாள். அங்கே யாரும் தென்படவில்லை.

பாட்டியின் சந்தேகம் என்னவென்று ஊகித்த ரோஜாவுக்கு ரோஷத்தால், அவமானத்தால் உள்ளம் பற்றி எரிந்தது.

மறுபடியும் கிணத்துக்கு அருகில் வந்த பாட்டி சுற்றிலும் பார்த்துவிட்டு, "வாளி எங்கே? உள்ளே வெச்சுட்டீங்களா? சித்த கொண்டு வாயேன்" என்றாள்.

ரோஜாவுக்கு உயிரே போனாற்போலிருந்தது. "என்ன ஆச்சோ, எனக்குத் தெரியாது பாட்டி."

பக்கெட் தென்படாவிட்டால், தற்போதைக்கு பாட்டி உள்ளே போய் விடுவாள் என்ற ஆசை மனதில் எழ துடுக்காய்ப் பதில் சொன்னாள் ரோஜா.

"நீங்க எடுக்கவில்லையா? பின்ன எங்கே போச்சு?" தீனிக்காக கழுக் கொம்பைச் சுற்றிச் சுற்றி வரும் பசுவைப் போல், பாட்டி கிணற்றைச் சுற்றிச் சுற்றி வந்தாள்.

"நாங்க எடுக்கலை, எனக்குந் தெரியாது" இரண்டாவது முறை அழுத்திச் சொன்னாள் ரோஜா.

"என்னவாகி இருக்கும்? சித்த முந்திதான் நான் குளிச்சுட்டு, குடத்தில் தண்ணி எடுத்துக்கிட்டுப் போனேன். அப்பொ கூட இங்கேதானே போட்டுட்டு போனேன்."

அந்த வாளி பாட்டி வாங்கியதுதான். கிணற்றிலிருந்து தண்ணீரை எல்லோரையும் விட அதிகமாக, நேரங்காலு

மில்லாமல் இறைத்து எடுத்துக் கொண்டு போவாள். அதான் சுந்தரி எப்பவோ வாங்கிப் போட்டிருந்த வாளி ஓட்டையானதும், பேரனிடம் சொல்லி வாளியை வாங்கி வரச் செய்தாள். சுந்தரி பணம் கொடுக்க முன் வந்த போதும் பெற்றுக் கொள்ளவில்லை.

''குரங்கு ஏதாவது தூக்கிட்டுப் போயிருக்குமோ? போன வாரம் நான் பார்க்கும் போதே கடலை மாவு டின்னைத் தூக்கிண்டு போச்சு.'' பாட்டி சந்தேகத்தைக் கிளப்பினாள்.

''என்னமோ பாட்டி, எனக்குத் தெரியாது.'' இந்த இக்கட்டிலிருந்து மீளுவது எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்தாள் ரோஜா.

மரத்தில் இலைகள் சலசலத்தன... பாட்டி தலையை உயர்த்திப் பார்த்தாள்.

''அதோ! இலைகள் அசையறது. சந்தேகமென்ன? குரங்காய்தான் இருக்கும். கட்டையில போக... போன வாரம் தான் முன்னங்கி பத்தை மாதிரி முப்பது ரூபாய் போட்டு வாங்கினேன், இது திருடிகிட்டுப் போகத்தானா?'' என்றவள், அவங்க வீட்டுப் பக்கம் போய், ''டேய் அஞ்சி... எங்கேடா போய்த் தொலைஞ்சே? சீக்கிரமாய் வா. தரித்திரம் பிடிச்சக் குரங்கு... கல்லாட்டம் இருந்த வாளியைத் தூக்கிண்டு போயிடுத்து...'' என்று உரக்கக் கத்தினாள்.

ஆஞ்சநேயுலு அறையின் ஜன்னல் கதவுகள் படீரென்று திறந்து கொண்டன. முதலில் ரோஜாவைப் பார்த்து இளிக்கப் போனவன், பாட்டியைப் பார்த்ததும் சட்டென்று நின்று ''என்ன ஆச்சு பாட்டி!'' என்றான்.

''என்ன, பாட்டின்னு அப்படி மரம் மாதிரி நிக்கறியே! சட்டுன்னு சுவரைத் தாண்டி வா. மரத்து மேல குரங்கு இருக்கு. வாளியோட...''



24166
414255

பெயருக்குத் த[illegible]தாற் போல் ஆஞ்சநேயலு சுவரைத் தாண்டிக் குதித்து வந்த[illegible]

ரோஜாவின் இதயம் [illegible] 'பாட்டி! சில குரங்குகள் கடிக்கவும் செய்யும். பாவம் உங்க பேரனைப் புடுங்கி வைக்கப் போறது. ஜாக்கிரதையாய் இருக்கச் சொல்லுங்க...'' மேலே இருக்கும் செந்தூவுக்கு ஐடியா கொடுப்பது போல் உரத்த குரலில் சொன்னாள்.

''அது டெக்கு, அதட்டினால் தானே ஓடிப் போய்விடும்'' அலட்சியமாய்ச் சொன்னாள் பாட்டி.

ஆஞ்சநேயுலுவுக்குக் குரங்கு என்றால் ரொம்ப பயம். ஆனால் ரோஜா முன் பயத்தைக் காட்டிக் கொண்டால், நன்றாய் இருக்காது என்று, எப்படியோ முயற்சி செய்து காம்பவுண்ட் சுவர் மீது ஏறி மரக்கிளையைப் பற்றிக் கொண்டான். அங்கிருந்தே அதட்டுவது போல் ''ச்... ச்... ஹை... ஹை'' என்றான்.

மேலிருந்து ''ஈச்— ஈச்'' என்ற சப்தம் கேட்டது.

''அம்மாடியோவ்! இதேதோ கருங்குரங்கு போலிருக்கு பாட்டி'' என்றான் ஆஞ்சநேயுலு பயந்தாற் போல்...

''அதுவாய் இருந்தா மட்டும் என்ன? தங்கமான வாளிடா... புத்தம் புதுசு .. கிளையைப் பிடிச்சு வேகமாய் ஆட்டு'' என்றாள் பாட்டி.

''கவனமாய் இருக்கச் சொல்லுங்க. வாளியைத் தலையில போட்டுடப் போறது'' என்றாள் ரோஜா, குரலை உயர்த்தி செந்தூவுக்கு எடுத்துக்கொடுப்பது போல்.

அஞ்சி தயங்கிக் கொண்டுதான் இருந்தான். பாட்டி மேலே போகச் சொல்லி வற்புறுத்திக்கொண்டே இருந்தாள். இதற்குள் வாளி தடாலென்று ஆஞ்சநேயுலுவின் தலைமேல் விழுந்துவிட்டது.

'அம்மாடியோவ்!' என்று ஆஞ்சநேயுலு அலறிக் கொண்டே நெற்றியைப் பிடித்துக் கொள்ளப் போய்

பாலென்ஸ், தவறி சுவர் மேலிருந்து தடாலென்று கீழே விழுந்தான்.

"ஐயோ—ஐயோ... கட்டையில போற குரங்கு! குழந்தையின் மண்டையை உடைச்சுடுத்து..." என்று பாட்டி ஓடிப்போய், தரையில் மூட்டைபோல் கிடந்த அஞ்சியைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டாள்.

ரோஜாவும் பதட்டத்துடன் அருகில் சென்றாள்.

"கண்ணா! நீ போகமாட்டேன்னு தானே சொன்னே. பாவி! நான்தான் உன்னை வற்புறுத்தி அனுப்பி வெச்சேன், கண்ணா! அஞ்சி, என் தங்கமே..." பாட்டி அழுது கொண்டே பேரனை அணைத்துக் கொண்டாள்.

அதற்குள் சுவருக்கு அப்பால் தடாலென்று யாரோ குதித்த சத்தம் கேட்டது.

ரோஜா சட்டென்று எழுந்து சுவருக்கு அப்பால் எட்டிப் பார்த்தாள். செந்தூர முஸ்லிம் சமாதிகளுக்கு இடையே ஓடிக் கொண்டிருந்தவன், பின்னால் திரும்பி, ரோஜா தென்பட்டதும் கையைக் காற்றில் அசைத்துவிட்டு மாயமாய் மறைந்துவிட்டான். இதயத்திலிருந்த பாரம் நீங்கினாற் போல் ரோஜா நிம்மதியாய் மூச்சை விட்டாள்.

நல்ல வேளையாக அஞ்சிக்குக் காயம் அதிகமாகப்படவில்லை. சுவரிலிருந்து விழுந்ததில் கால் சுளுக்கிக்கொண்டு விட்டது. பாட்டியின் உதவியால் எழுந்து கையைப் பிடித்துக் கொண்டு, நொண்டிக்கொண்டே வீட்டுக்குள் போய் விட்டான்.

ரோஜா வீட்டுக்குள் வந்தாள். அங்கே காலியாய் தென்பட்ட வெங்கலப்பானையைப் பார்த்ததும் திக்கென்று இருந்தது. மாமி வந்தால் என்ன சொல்வது? ரோஜா பயந்தது போலவே, யோசிப்பதற்கும் அவகாசம் இல்லாமல் வாசலில் சுந்தரியின் குரல் ஒலித்தது.

"என்ன நடந்தது பாட்டி, அஞ்சிக்கு என்னவாச்சு?"



பாட்டி நடந்ததை விவரித்துக் கொண்டிருந்தாள். ரோஜாவுக்கு மின்னல் போல் யோசனை வந்தது. கிணற்றடியில் தூங்கிக்கொண்டிருந்த நொண்டி நாயைக் கழுத்தைப் பிடித்து இழுத்து வந்து வெங்கலப் பானையின் முன் நிறுத்தினாள். அது பானைக்குள் தலையை விட்டு மிச்சமிருந்த சாதத்தை சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

"ஓ—ஓ—போ—போ—ஷு" நாயை விரட்டுவது போல் பாவனை செய்து உரத்த குரலில் சொன்னாள் ரோஜா.

"என்ன சத்தம்?" என்று சமையல் அறைக்குள் வந்த சுந்தரி, வெங்கலப் பானைக்குள் தலையை விட்டு சாதத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த நாயைப் பார்த்ததும், ஐயோ—ஐயோ... பானையிலேயே நாய் வாயை வெச்சுடுத்தே! நகரு. அப்படிச் சும்மா பார்த்துக்கிட்டு நிக்கறியே ரோஜா, நாலு சாத்து சாத்தாமல்..." மூலையிலிருந்த விளக்குமாறை எடுத்து நாயை நாலு போடு போட்டாள். பானையை விட்டு விட்டு நாய் வள்—வள் என்று கொல்லைப்புறம் ஓட்டமெடுத்தது.

சுந்தரி ரோஜாவைப் பார்த்து உரத்த குரலில் கத்தினாள். "கம்பை எடுத்து நாலு அடி அடிக்காமல், அப்படி வேடிக்கை பார்த்துக்கிட்டு நிக்கறியே?"

"என்ன செய்யட்டும் மாமி? கடித்துவிடப் போகிறதேன்னு பயமாய் இருந்தது."

சுந்தரி கண்களை விரித்துப் பார்த்து வியப்புடன், "கடிக்குமா? எப்பவும் வாலை ஆட்டிக்கிட்டு உன் பின்னாலேயே சுத்தும் நாய் உன்னைக் கடிக்குமா? அடிக்க இஷ்டமில்லாமல் சும்மா இருந்துவிட்டேன்னு சொல்லேன். ஐயோ ஐயோ — ஒரு படி சாதம்— வீணாயிடுத்தே..." என்றாள் நொந்துக்கொண்டே.

ரோஜா தாயின் அறைக்கு வந்தாள். சுந்தரியின் கத்தல்களுக்கு விழித்துக்கொண்ட சாவித்திரி, "என்ன விஷயம் ரோஜா?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை அம்மா" மென்மையான குரலில் பதிலளித்தாள் ரோஜா.

சமையல் அறையை அலம்பிவிட்டு, வெங்கலப் பானையைச் சுத்தமாகத் தேய்த்துக் கழுவி, அடுப்பைப் பற்ற வைத்து மறுபடியும் உலைவைக்கப் போன சுந்தரிக்குக் கிண்ணத்தில் சாம்பார் குறைந்து பாகற்காய் வதக்கல் தீர்ந்துவிட்டதும், மோர் கிண்ணத்தில் கரண்டி போட்டு இருப்பதும் கண்ணில் பட்டது. அப்படியே நின்றுவிட்டாள். புருவங்கள் முடிச்சிட தீவிரமான யோசனையில் ஒரு நிமிடம் ஆழ்ந்து விட்டாள். உடனே இண்டர் நேஷனல் திருட்டுக் கும்பலைக் கண்டுபிடித்த சி.ஐ.டி. போல் நடையை எட்டிப் போட்டாள். சாவித்திரியின் அறைக்குள் நுழைந்து இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு அதட்டலாய்க் கேட்டாள், "என்னம்மா சாவித்திரி! இதென்ன பாழ் புத்தி உனக்கு? இப்படித் திருட்டுத்தனமாய்ச் சாப்பிடுவாங்களாச் எப்போதிலிருந்து இந்தப் பழக்கம்?"

அப்பொழுதுதான் தூங்கி எழுந்த சாவித்திரிக்கு. சுந்தரி கேட்டது புரியவில்லை. புரிந்த ரோஜாவுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாததால் வாயைத் திறக்கவில்லை.

சுந்தரி ரோஜாவைக் கூர்மையாய்ப் பார்த்து, "நாய் சாப்பிட்டதுன்னு பொய் சொல்றியே மேலும்!" என்றாள்.

"என்னவோ எனக்குத் தெரியாது. நான் பார்க்கும் போதே நாய் உள்ளே இருந்தது" ரோஜா துடுக்காய்ப் பதிலளித்தாள்.

பாழாய்ப்போன வாழ்க்கை! என்றும் வராதவன்— செத்தா வந்தால், அவனுக்கு ஒரு பிடி சாதம் போடும் சுதந்திரம் கூட இல்லாத வாழ்க்கை...சீ...சீ... பகையாளிக்கும் வேண்டாம்.

"தாயும் மகளும் சேர்ந்து என் கண்ணைக் கட்டணும்னு நாயை வீட்டில விட்டீங்களா? நான் என்ன செத்துப் போய்



விட்டேனா? அந்த நொண்டி நாய் பாகற்காய் வதக்கலை முழுசா அப்படியே சாப்பிட்டுவிட்டதாமா? ஒரு சொட்டு சாம்பார் கூட சிந்தாமல் வக்கணையா பரிமாறிகிட்டு மூடி வெச்சுடுத்தா? எவ்வளவு மூளையடியம்மா அதுக்கு? அம்மாடியாராவது கேட்டால் வழிச்சுக்கிட்டுச் சிரிக்கப் போறாங்க..."

பொறுக்க முடியாமல் ரோஜா சொல்லிவிட்டாள். "மன்னிச்சுடு மாமி பசி தாங்காமல் நான்தான் சாப்பிட்டேன்..."

"நீயா? நீ சாப்பிட்டால் மட்டும் எவ்வளவு சாப்பிடுவாய்? இருந்தாலும் உன் வயிறைத் தொட்டுப் பார்க்கிறேன்" அருகில் வந்து ரோஜாவின் வயிற்றைத் தடவிப் பார்த்தவள், "எதுக்குப் பொய் சொல்றே? உனக்கு அந்த மாதிரி திருட்டுப்புத்தி கிடையாதுன்னும், வேணும்னா என்னைக் கேட்டுச் சாப்பிடுவேன்னும் எனக்குத்தெரியாதா? காலையிலேயே சாப்பிட வாம்மான்னா வர மாட்டேன்னு சொன்ன மகாராணி உன் அம்மாதானே! ஆமாம்! இதுவும் நல்ல உபாயம்தான்...நான் போடறதைவிட இப்படித் திருட்டுத்தனமாய்ச் சாப்பிடுவதே மேல். மற்றவர்களுக்கு இருக்கா இல்லையான்னு பார்க்காமல் கொட்டிக்கலாம். வெளியில் மட்டும் உபவாசம் இருப்பது போல் நடிக்கலாம்." நறநறவென்று பற்களை அரைத்துக்கொண்டே, "சாப்பிடுங்க அம்மா, நல்லா சாப்பிடுங்க .." என்று கையை நீட்டி முழக்கிவிட்டுப் போனாள்.

ஜுரத்தால் காலையிலிருந்து நினைவு நீச்ச இல்லாமல் படுத்துக் கிடந்த சாவித்திரி, எதிர்பாராமல் வந்த இந்தக் குற்றசாட்டைத் தாள முடியாதவளாய் விக்கி விக்கி அழத் தொடங்கினாள்.

ரோஜா அவளருகில் வந்து தோளில் கையைப் பதித்து தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"அம்மா அழாதே. சேந்தா வந்திருந்தான், பசிக்கிறதுன்னு சொன்னபோது நான் தான் சாப்பாடு போட்டு அனுப்பினேன்."

அத்தனை அழுகையிலும் சாவித்திரி, மகன் பெயரைக் கேட்டதும் மகுடி இசை கேட்ட பாம்பு போல் தலை உயர்த்திப் பார்த்தாள். ரோஜா சொன்னது முதலில் புரியவில்லை.

ரோஜா தாழ்ந்த குரலில் நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னாள்.

"அவன் தப்பித்துக் கொண்டு விட்டானா?" என்று சாவித்திரி கேட்டாள்.

"ஆமாம்மா..."

"அய்யோ! ரோஜா! ஒரு நிமிஷம் என்னைக் கூப்பிட்டு இருக்கக் கூடாதா? கண்ணாரப் பார்த்திருப்பேனே... போகட்டும்... எங்கே யிருந்தா என்ன? அவனுக்கு எங்கே நல்லாயிருக்கோ அங்கே இருக்கச் சொல்லு. உங்க இருவரையும் நான் திட்டவே மாட்டேன். என் குழந்தைகள் வைரம் போன்றவர்கள். அவர்களுடைய மதிப்பை இந்த உலகிற்குச் சரியாகக் காட்டத் தெரியாத இயலாமை என்னுதுதான். இருபது வருடங்களுக்கு முன் யாராவது என் கையைப் பார்த்து என் எதிர்காலம் இவ்வளவு பயங்கரமானதாய் இருக்கும்னு சொல்லியிருந்தால், அன்னிக்கே கொஞ்சு வைத்து செத்திருப்பேன். உங்க இருவரையும் கொன்று போட்டிருப்பேன்.

"நடந்து போனதைப் பற்றி இப்போ வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம் அம்மா?" என்று மென்மையாகச் சொன்னாள் ரோஜா.

"மனிதனிடம் நல்லதனம் இருக்கும் என்று நம்பி வாழ்க்கையை வீணாக்கிக் கொண்ட அறிவிலி நான். குழந்தைகளின் எதிர்காலத்தை என் கையாலேயே நாச



மாக்கி விட்டேன். என்னைப் போல் துரதிருஷ்டம் பிடிச்சவங்க இந்த உலகில் யாருமே இருக்கக் கூடாது ரோஜா."

"வாழ்க்கையில் நலிந்து போனவர்கள் கடைசியாய்க் கடவுளிடம் வேண்டிக் கொள்வது அதுதாம்மா" வெறுமை நிறைந்த குரலில் சொன்னாள் ரோஜா.

# 9

"அனந்த்! அனந்த்!!"

கீழிருந்து விஜய் குரல் காட்டுக் கத்தலாய்க் கேட்டது. குளிக்கப் போகும் முன் டவலை உடலில் சுற்றிக் கொண்டு தலைக்கு எண்ணை தடவிக் கொண்டே பாட்டை முணு முணுத்துக் கொண்டிருந்த அனந்த் சட்டென்று நிறுத்தி விட்டான்.

"அனந்த்!!!" திடுதிடுவென்று படி ஏறி மேலே வந்து கொண்டிருந்த விஜயின் குரல் இடி முழக்கம் போல் ஒலித்தது.

என்ன ஆச்சு? இப்பொழுதுதானே விஜய் நீட்டாக டிரெஸ் செய்து கொண்டு, கறுப்புக் கோட்டை கையில் எடுத்துக் கொண்டு கோர்ட்டுக்குக் கிளம்பினான்.

போகும்முன்...

"அனந்த்! இன்று மாலை எங்க கிளப்பில் விஜயா யாதவ் பாடப் போகிறாள். நீ வர்றியா?" என்று கிண்டல் தொனிக்கக் கேட்டான்.

அனந்த் முன்னொரு காலத்தில் வழிபட்ட தேவதைகளில் விஜயா யாதவ் ஒருத்தி. விஜய் அவ்விருவரின் நட்பை ஆரம்ப நிலையிலேயே துண்டித்து விட்டான். விஜய் என்ன

சொன்னானோ தெரியவில்லை. அந்தப் பெண் திடீரென்று அனந்திடம் உதாசீனமாய்ப் பழகினாள், மற்றவர்களிடம் இவனைப் பற்றி மதிப்புக் குறைவாய்ப் பேசியது தெரிந்ததும், அனந்த் வேதனையில் துடித்துப் போனான் அந்த வேதனையிலிருந்து தன்னால் மீளவே முடியாது என்று எண்ணினான். அந்த இருண்ட நாட்களில்தான் ரோஜாவின் அறிமுகம் கிடைத்தது. ரோஜாவின் நட்பு கிடைத்ததிலிருந்து இன்று வரை அனந்துக்கு, விஜயா யாதவ் பற்றி தான் வேதனைப்பட்டதை நினைத்தால், அர்த்தமில்லாததாகத் தோன்றும். அதனால்தான் இன்று கிளப்புக்கு விஜய் அழைத்தபோது.

"தாங்க்ஸ் அவனோட பாட்டு அவ்வளவு பிரமாதமாய் இருக்காது என்று என் உத்தேசம்" என்றான். விஜய் சிரித்து விட்டுக் கிளம்பினான்.

அனந்த் குளிக்கப் பாத்ரூமில் நுழைய போகும் சமயம், விஜயின் குரல் வீடே அதிரும்படிக் கேட்டது. ஓட்டம் போன்ற நடையுடன் மாடிக்கு வந்த விஜய் உள்ளே வந்தான். கண்ணாடி முன் நின்ற அனந்துக்கு, தனக்குப் பின்னால் விஜயின் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்ததும், உயிரே போய்விட்டது போலாயிற்று. விஜய் நரசிம்மாவதாரம் எடுத்தது போல் உக்கிரமாய் நின்றிருந்தான். அவன் கண்கள் நெருப்பை உமிழ்ந்து கொண்டிருந்தன.

"அனந்த்!!!"

"எ... என்ன?" தடுமாறிக் கொண்டே விஜய் பக்கம் திரும்பினான் அனந்த்.

பதிலளிப்பது போல் தன் கையிலிருந்த கவரை அனந்த் மேல் விசி எறிந்தான் விஜய் தன் மேல் பட்டுக் கீழே விழப் போன கவரை அனந்த் பற்றிக் கொண்டான். அதில் இருந்த கடிதங்களை எடுத்துப் பார்த்தான். அதில் மூன்று தாள்கள் இருந்தன. அதைப் பார்த்ததும் அனந்தின் முகம் மலர்ந்தது. ரோஜாவும், தானும் எழுதிய கடிதங்களை விடுத்து, மூன்றாவது கடிதத்தைப் படித்தான்.



அது மெலட்டூர் ராஜகோபாலன் எழுதியது! கடிதம் சுருக்கமாய், சொல்ல வேண்டியதை நேராய்ச் சொல்வது போல் இருந்தது.

விஜய்குமார் அவர்களுக்கு...

வணக்கம் சமீபத்தில் எனக்கு வந்த கடிதங்களை இணைத்து அனுப்புகிறேன். இந்தக் கடிதங்கள் வந்ததுமே, நானும் என் மச்சினனும் சென்னை வந்தோம் நீங்கள் வேலைகளில் பிஸியாக இருந்ததால் எங்களால் உங்களைச் சந்திக்க முடியவில்லை உங்க தம்பியிடமே கடிதங்களைக் காண்பித்தோம். ரொம்ப நல்ல பையன்! தான் செய்ததை உடனே ஒப்புக் கொண்டு விட்டான். மேலும் அவன் சரோஜா என்ற அந்தப் பெண்ணுடன் சினிமா, பீச் என்று சுற்றியதை எங்க கண்களாலேயே பார்த்து விட்டோம். இனி இது பற்றி பேச்சு வார்த்தை அநாவசியம் என் மகளுக்கு உறவிலேயே ஒரு வரனைப் பார்த்து நிச்சயம் செய்து விட்டோம். நல்ல வேளையாகக் கையைச் சுட்டுக் கொள்வதற்கு முன் தப்பித்துக் கொண்டு விட்டோம். இந்தப் புண்ணியம் சரோஜா என்ற அந்தப் பெண்ணைத்தான் சேரும். இனி நமக்கிடையே, கடிதப் போக்குவரத்து தேவையற்றது. இதுதான் என் கடைசிக் கடிதம்.

இப்படிக்கு,
மெலட்டூர் ராஜகோபாலன்.

பி.கு: உங்கள் தம்பி விரும்பிய விதமாய் அந்தப் பெண்ணுடன் அவன் திருமணம் முடிப்பது உங்களது கடமை உங்கள் தம்பியிடம் பேசிய போது, அவன் எவ்வளவு வேதனைப்படுகிறானோ, வேறு வழியில்லாமல் உங்கள் அதிகாரத்துக்கு

எப்படி தலை வணங்குகிறானோ, சுயமாய்ப் புரிந்து கொண்டோம்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் அனந்த் முகத்தில் மகிழ்ச்சி நாட்டியமாடத் தொடங்கிற்று... ஆனால் அதை வெளிப்படுத்த முடியாமல் திருடனுக்குத் தேள் கொட்டியது போல் மௌனமாய்த் தலை குனிந்து கொண்டான். போட்ட திட்டம் நல்லபடியாய் நிறைவேறி, அமோக வெற்றி கிடைத்ததில் அவன் இதயம் மகிழ்ச்சியில் பொங்கியது. சட்டென்று விஜய் இங்கிருந்து போய் விட்டால் தேவலை என்ற எண்ணம் வர, உதட்டைக் கடித்துக் கொண்டு, கீழ் நோக்கிய பார்வையுடன் அப்படியே நின்றிருந்தான்.

விஜய் கோபத்தின் உச்சத்தில் இருந்தான். அவனுக்கு நேர்ந்த அவமானம் சகிக்க முடியாதது கையில் இருந்த கோட்டை கட்டில் மீது வீசி எறிந்து விட்டு,

"சரியாகப் படிச்சியா?" என்றான்.

"படிச்சேன்."

அனந்தை நேராகப் பார்த்துக் கொண்டே கேட்டான் விஜய்.

"எப்போ வந்தார் அவர்!"

"நான்கு நாட்களுக்கு முன்பு!"

"என்னிடம் சொல்லவே இல்லையே!"

"அவரே சொல்லுவாருன்னு நினைச்சேன்!"

பாவம்! ராஜகோபாலன், விஜயை நேரில் சந்தித்து, சூடாக நாலு வார்த்தை கேட்டுவிடத்தான் முயன்றார். ஆனால் அனந்த் அவருக்கு அந்த வாய்ப்பு கிடைக்காமல் செய்து விட்டான். விஜய் வீட்டில் இல்லாத நேரம் இருப்பதாகச் சொல்லி, கிளப்புக்குப் போகாத நாளில் போயிருப்பதாகவும், கோர்ட்டில் கேஸ் இல்லாத சமயம்,



ஹைகோர்ட்டில் இருப்பான் என்றும் சொல்லி அவரை அலைக்கழிக்க வைத்துவிட்டான். கடைசியில் எரிச்சல் அடைந்த ராஜகோபாலன் ஊருக்குப் போய் விட்டார். அனந்த் ரயில் நிலையம் வரையில் சென்று ரயிலேற்றி விட்டுத்தான் வந்தான்.

விஜய் நேராக விஷயத்துக்கு வந்தான். "இந்த சரோஜா யாரு?"

"என் சிநேகிதி."

"புது பறவையா?"

அனந்த் பதில் பேசவில்லை.

"உங்க இருவருக்கும் எத்தனை நாளாய்ப் பழக்கம்?" குறுக்கு விசாரணை தொடங்கினான் விஜய்.

"கிட்டத்தட்ட ஒரு வருடமாய்."

"ஒரு வருடமாகவா?" நம்ப முடியாமல் வியப்புடன் நோக்கினான்.

"ஆமாம்."

சற்று நேரம் அறையில் மௌனம் நிலவியது. விஜய் சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு, ஜன்னல் கதவில் சாய்ந்து கொண்டு அனந்தையே கவனமாய்ப் பரிசீலித்தான். அவன் பார்வை தம்பியை எடைபோட்டுக் கொண்டிருந்தது. அனந்த் சொல்வது நிஜந்தானா? ஒரு வருஷமாய்ப் பழக்கம் இருக்கும் சரோஜாவைப் பற்றிய பேச்சு தவறிப்போல்கூட வந்ததில்லையே?

திடீரென்று, விஜய் நிதானமாய் மென்மையான குரலில் கேட்டான். "நீ அந்தப் பெண்ணுடன் சேர்ந்து ராஜகோபாலனுக்கு என் மீது பொய்க்குற்றம் சாட்டி கடிதம் எழுதிய நோக்கம் என்ன?"

"எனக்கு அந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லைன்னு உனக்குத் தெரியப்படுத்துவதுதான்."

"என்னிடம் நேராகச் சொல்லி இருக்கலாமே?"

"நீ கேட்பாய் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை."

"கேட்கிற வரைக்கும் சொல்லலாமே?"

"அதுக்குத் தேவையான நேரம் உனக்கும், விளக்கிச் சொல்லும் பொறுமை எனக்கும் கிடையாதுன்னு நன்றாகத் தெரிந்திருப்பதால்."

"சரி! இத்தனைக்கும் இந்த சரோஜாக்ஷி யாரு?"

"சொன்னேனே! என் சிநேகிதி. நட்பை மிஞ்சிய உறவு எங்களுக்கிடையே இருக்கு என்பதற்கு அந்தக் கடிதங்களே சாட்சி."

"நான் கேட்டது உங்களுக்கிடையே இருக்கும் உறவைப் பற்றி இல்லை. அந்தப் பெண் யாரு? குடும்பம் எப்படி?"

அனந்த் பதில் செல்லவில்லை.

"என்ன படித்திருக்கிறாள்?" கிளாஸ் மேட் ஆக இருக்குமோ என்ற சந்தேகத்தில் கேட்டான்.

"ஊஹூம்."

"படிக்கவில்லையா? பின்னே! பணக்கார வீட்டுப் பெண்ணா?" பார்ட்டியில், பிக்னிக்கில் அறிமுகமாகி இருக்கலாம் என்ற எண்ணம் வந்தது விஜய்க்கு.

"இல்லை."

"அவளுடைய அப்பா என்னவாக இருக்கிறார்?"

"எனக்குத் தெரியாது."

"வீடு எங்கே?"

"சொல்ல மாட்டேன்."

"சொல்ல மாட்டியா?"

அண்ணன் தம்பி இருவரும் ஒருவரை ஒருவர் நேராக பார்த்துக் கொண்டார்கள்.

"எதுக்காக?" வியப்புடன் கேட்டான் விஜய்.



"நீ ஏதேனும் சொல்லி அந்தப் பெண்ணோட மனதைக் கலைத்து விடுவாய். உன்னை எனக்கு நன்றாகத் தெரியும்."

"அவ்வளவு மன உறுதி இல்லாதவளா உன் சிநேகிதி?" என்று ஏகத்தாளமாய்க் கேட்டான் விஜய்.

அனந்த் மௌனமாய் இருந்து விட்டான். விஜய் பக்கம் பார்க்க விருப்பமில்லாதவனைபோல், திரும்பி கண்ணாடியில் பார்த்துக்கொண்டே தலைக்கு எண்ணை வைத்துக் கொள்ளத் தொடங்கினான். விஜய் வாட்ச்சைப் பார்த்துக் கொண்டான், கோர்ட்டுக்கு நேரமாகிவிட்டது. திடமான குரலில் சொன்னான், "மரியாதையா இன்றைக்கோ நாளைக்கோ அந்தப் பெண்ணை எனக்கு அறிமுகப்படுத்து. அவளோட குடும்ப விஷயங்களைப் பிறகு நானே சுயமாய்த் தெரிஞ்சுக்கறேன்."

"விஜய்! இந்த விஷயத்தில் மட்டும் என்னை மன்னித்து விடு. நீ சொல்வதுபோல் என்னால் செய்ய முடியாது. என் போக்கில் என்னை விட்டுவிடு. உனக்குப் புண்ணியமாய்ப் போகும்."

"நீ வெறும் அனந்தாக இருந்திருந்தால் அப்படியே விட்டிருப்பேன். ஆனால் உனக்குப் பின்னால் பத்து லட்சம் ரூபாய்க்கு சொத்து இருக்கு. அதிலிருந்து வருஷ வருமானம் இரண்டரை லட்ச ரூபாய் வரும். அது ஒழுங்காய் உனக்குப் பயன்படும்படிப் பார்க்கும் பொறுப்பு என்மீது இருக்கு. ஆனாலும் அனு! வாவர கழுத்தில் கட்டப்பட்ட பாறாங் கல் போல் நீ நடந்து கொள்கிறாய். என்னுடைய மூளையில் முக்கால் பங்கு உனக்காகத்தான் செலவு செய்கிறேன். கூடிய சீக்கிரம் என்னைப்போல் பொறுப்பாய் உன்னைக் கவனித்துக் கொள்ளும் பெண்ணைப் பார்த்து உனக்குத் திருமணம் செய்தால்தான் எனக்கு நிம்மதியாக இருக்கும்."

"கல்யாணம் செய்துகொள்ள நான் தயார்தான். ஆனால் நீ பார்த்த பெண்ணை மட்டும் இல்லை."

"போகட்டும்—உனக்கு எந்த மாதிரிப்பெண் வேணுமோ சொல்லு."

"எனக்கு வேண்டிய பெண்ணை நானே பார்த்து வெச்சுட்டேனே."

"யாரு? இந்த சரோஜாக்ஷி தானா?"

"விஜய்! நான் மிகவும் விரும்பும் நபரைப் பற்றி நீ இப்படி ஏகத்தாளமாய்ப் பேசுவது மரியாதை இல்லை. என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது."

"அடடா! 'விரும்பும்' என்ற வார்த்தையை உன் வாயால் இப்பத்தான் கேட்கிறேன். சற்று முன் சிநேகிதி என்றாய் சிநேகம் என்றால் சாதாரண நட்பு என்று எண்ணி விட்டேன்."

"விஜய்!!"

"அவ்வளவு விருப்பம் ஏற்பட அந்தப் பெண்ணிடம் அப்படி என்ன தான் இருக்கு?"

"ரொம்ப நல்லவள்."

"இந்த உலகில் இதுவரை நல்லவர்கள் அல்லாதோர் யாராவது உனக்குத் தென்பட்டிருங்காங்களா?"

"ரொம்ப புத்திசாலி."

"அந்த விஷயத்தை நானும் ஒப்புக்கறேன். எவ்வளவு புத்திசாலி இல்லா விட்டால், தன்னைப் பற்றிய விவரங்கள் துளிக்கூட உனக்குத் தெரியாமல், கல்யாணம் வரை உன்னை இழுத்துண்டு வருவாள்? அந்த வனஜாவும் இப்படித்தானே? நல்லவள்— நல்லவள் என்று புகழ்ந்து கொண்டே காதலிப் பதாய்க் கனவுகள் கண்டு, புதை குழியில் இறங்கி விட்டாய். அதிலிருந்து உன்னை மீட்பதற்கு நான் எவ்வளவு சிரமப் பட்டேன் தெரியுமா? பாராட்டுக் கிடைக்காத உழைப்பு. இதே வேறு யாராவது இருந்தால் என்னிடம் எவ்வளவு அன்பாய் இருப்பாங்க தெரியுமா? என் பேச்சுக்கு மதிப்பும்



கொடுத்திருப்பாங்க. ஆனா! நீ ரொம்ப நன்றியில்லா தவன்டா"

அனந்தின் முகம் சிவந்து விட்டது. தலையை உயர்த்தி விஜய் பக்கம் பார்த்தான். அந்தப் பார்வையில் நன்றியும், பணிவும் ததும்பிக் கொண்டிருந்தன.

"விஜய், உன் உபகாரத்தை நான் இந்த ஜென்மத்தில் மறக்க மாட்டேன்."

விஜய் ஏமாற்ற மடைந்தவனாய், "நீ சொல்றது எப்படி இருக்கு என்றால்... அப்போ அந்த வனஜாவிட மிருந்து உன்னைக் காப்பாற்றாவிட்டால், இப்போ இந்த சரோஜா கிடைத்திருக்க மாட்டாள். அதுக்கு நன்றி தெரிவிப்பது போல் இருக்கு."

"எக்ஸாட்லி" சொன்ன பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டான் அனந்த். அதுதான் தன்னுடைய எண்ணமாக இருந்தாலும், வெளியில் வேறு விதமாய்ச் சொல்லி இருக்க வேண்டும்.

"அவ்வளவு சீக்கிரம் நீ அந்தப் பாடத்தை மறந்து விட்டு, மறுபடியும் ஒரு பெண்ணின் வலையில் விழுந்து விட்டாய் என்றால், உன் புத்திசாலித்தனத்தின் மீது எனக்கு நம்பிக்கை குறையறது அனு."

"இல்லை! விஜய். இந்தத் தடவை நீ என் பேச்சை நம்பு. அந்தச் சூழ்நிலை வேறு, இந்த பரிச்சயம் வேறு. அப்போ நான் ஒரு மனிதனே இல்லைன்னு தோன்றுகிறது. ரோஜா ரொம்ப நல்லவள் விஜய்! அவளுக்கு என்னைக் கண்டால் ரொம்பப் பிடிக்கும்."

"உன்னை யாருக்குதான் பிடிக்காது. அனு! இளகிய மனம் படைத்தவன். நிறைய சொத்து இருப்பவன். எல்லோரும் உன்னிடம் நெருக்கமா இருக்கணும்னு ஆசைப் படுவதில் வியப்பேதும் இல்லை. அதுக்காக உன் மீது அபிமானம் வைத்திருப்பது போல் நடிப்பார்கள். அதுக்குப்

தான் உன்னைக் கவனமாய் இருக்கச் சொல்லி அடிக்கடி எச்சரித்துக் கொண்டிருப்பேன். ஒரு வருஷமாய் நீ அந்தப் பெண்ணுடன் சுற்றிக் கொண்டு, நட்பை வளர்த்து வந்த போதும், எனக்குத் தெரியாமல் இருக்கு என்றால், அது உன் புத்திசாலித்தனம் இல்லை என்றும், அந்தப் பெண்ணோடது தான் என்றும் தெரியறது. அனந்த்! உனக்கு இஷ்டம் இருந்தாலும் இல்லா விட்டாலும் நான் அந்தப் பெண்ணை பார்த்தே தீருவேன். பிறகு...''

''பிறகு... உனக்கு இஷ்டம் இருந்தாலும் இல்லா விட்டாலும் நான் ரோஜாவை கல்யாணம் செய்துக்கத்தான் போகிறேன்.''

என்றும் இல்லாத விதமாய் அனந்திடம் தென்பட்ட இந்தத் துணிச்சலைக் கண்டு, விஜய் வியப்படைந்தான். ரொம்ப நேரம் தம்பியைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

அனந்தின் கண்களில் நீர் தத்தளித்துக் கொண்டிருந்தது. ரோஜாவைப் பார்க்காமலேயே விஜய் அவளிடம் தவறான அபிப்பிராயம் ஏற்படுத்திக் கொண்டதையும், தாழ்வாகப் பேசியதையும் அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

கடைசியாய் விஜய் மிருதுவாய் ஆனால் திடமான குரலில் ''பாரு அனந்த்! நீ இப்படிப் பிடிவாதமாய் விரும்பும் பட்சத்தில், நான் மட்டும் ஏன் வேண்டாங்கணும்? நீயும் உன் சரோஜாவும் வீடு, வாசல், சாப்பாடு, தண்ணி எதுவும் இல்லாவிட்டாலும், பார்க்கு, சினிமாவுக்குப் போய்க் கொண்டு, கையுடன் கை இணைத்து டூயட்டைப் பாடிக் கொண்டு வாழ]முடியும் என்றால் எனக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. அப்போ தெரியும் உனக்கு. அந்த சரோஜாவுக்கு உன்னிடம் ஏற்பட்ட காதல் உண்மையானதா இல்லையா என்று...''

விஜய் சொல்வதை இனி கேட்க முடியாதவனாய் அனந்த், பாத்ரூமுக்குள் போய்ப் படாரென்று கதவைச்



சாத்திக் கொண்டான். அனந்திடம் இருக்கும் பலவீனம் என்னவென்றால், வாதனையில் அவனால் வெல்ல முடியாத போது, இயலாமையானது கண்ணீராய் வெளியேறும். இப்பவும் அப்படித்தான். விஜய் இன்னும் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று பாத்ரூம் கதவுகள் திறந்து கொண்டன. சிவந்துவிட்ட கண்களுடன், தலையை மட்டும் வெளியில் நீட்டி ''விஜய், முன்னாடியே சொல்லி விடுகிறேன். ரோஜாவை நீ அவமதித்ததாகத் தெரிந்தால் அந்த நிமிஷமே உனக்கும் எனக்கும் உறவு விட்டுப் போயிடும். அம்மா உனக்குப் பொறுப்பைக் கொடுத்தது என்னைச் சுகப்பட வைக்கத்தானே தவிர, எனக்கு இடைஞ்சல் செய்து, சங்கடத்தில் ஆழ்த்துவதற்காக இல்லை... சரோஜா விஷயத்தில் உன் இடையூறை நான் சகித்துக் கொள்ள மாட்டேன்.''

விஜய் புருவங்களை உயர்த்தி, வியப்பு அடைவது போல் நடித்து, சீரியஸாய் பார்த்தான். கதவுகள் சாத்திக் கொண்டன.

மறுபடியும் வாட்சைப் பார்த்துக் கொண்ட விஜய் நேரமாகி விட்டதென்ற எண்ணம் மேலிட, கட்டில் மீது இருந்த கறுப்புக் கோட்டை எடுத்துக் கொண்டு வாசற் பக்கம் நகரப் போனான்.

பாத்ரூம் கதவு மறுபடியும் திறந்து கொண்டது. அனந்த் முகத்தில் ஆவேசம் தணிந்திருந்தது. கண்களில் பச்சாத்தாப உணர்வு எட்டிப் பார்த்தது.

''விஜய்! ஒன் மினிட். ஐயாம் சாரி. என் பேச்சால் உன் மனம் வேதனைப்பட்டால் என்னை மன்னித்து விடு. இந்த உலகில், என் நலனை விரும்பும் முதல் நபர் நீதான் என்று எனக்குத் தெரியும். ஆனால் இந்த உலகில் எல்லாவற்றையும் விட... ஏன் என் உயிரையும்விட நான் காதலிப்பது சரோஜா ஒருத்தியைத்தான். இந்த விஷயத்தை இன்று இல்லா விட்டால், நாளைக்காவது நீ புரிந்து கொள்வாய்.''

அனந்த் வாயிலிருந்து, "காதல்" என்ற வார்த்தை வெளி வந்ததும், விஜய் தன்மீது கம்பளிப்பூச்சி ஊர்ந்தது போல் அருவெறுப்பாய்ப் பார்த்தான்.

"காதலா... இந்தக் கதைகளில்.. சினிமாவில் வருமே... அந்த..."

"அது இல்லை!" அனந்த் சீரியஸாக மறுத்தான்.

"பின்னே எது? எனக்குக் கொஞ்சம் விளாவாரியாய்ச் சொல்லேன்."

"சொல்ல மாட்டேன். சொன்னாலும் உனக்குத் தெரியாது. உன் போன்றவர்களுக்கு ஜென்மத்திலும் தெரியாத, கனவிலும் உணர முடியாத அபூர்வமான ஒரு உணர்ச்சி அது. அதனால் தான் சொன்னாலும் உனக்குப் புரியாது."

அனந்த் கதவைத் தாளிட்டுக் கொண்டு விட்டான். ஷவரில் நீர் விழும் சத்தம் கேட்டது... விஜய் வெளியே வந்து விட்டான். அவனுக்கு மனம் கலங்கினாற் போலாகி விட்டது. அந்த மேட்டூர் வரன் முடிவாகி விட்டதென்று நிச்சிந்தையாயிருந்தான். திடீரென்று மறுபடியும் பழைய நிலைக்கே திரும்பிவிட்டது.

சிற்றன்னை அனந்தின் சொத்து மேல் தனக்கு அதிகாரமும், பொறுப்பையும் ஒப்படைப்பதாக உயில் படிக்கப் பட்டபோது அவன் திடுக்கிட்டான். பண விவகாரத்தில் அனந்தை கட்டுப்பாட்டில் வைக்க அவள் எத்தனை அவஸ்தைப் பட்டாளோ, மன நிம்மதியில்லாமல் எப்படித் தவித்தாளோ, அவனுக்கு நன்றாகத் தெரியும். இனி அந்தக் கஷ்டங்களை யெல்லாம் அவன் பட வேண்டும். விஜய் பயந்தது போலவே நடந்தது. அனந்த் அவனுக்குத் தலைவலியாய் மாறினான். கூடிய விரைவில் பொறுப்பும், கடமையும் மிகுந்த பெண்ணாகப் பார்த்து அனந்தின் திருமணத்தை முடித்துவிட விஜய் தவித்துக் கொண்டிருந்தான்.



இந்தப் பண விவகாரத்தில் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின், சிற்றன்னை உயிருடன் இருக்கும் போது உயிர் நண்பர்களாய் இருந்த அண்ணன் தம்பிகளுக்கிடையே பள்ளதாக்குப் போன்ற இடைவெளி ஏற்பட்டது. தான் கேட்ட போதெல்லாம் விஜய் பணம் தருவானென்று கனவு கண்ட அனந்துக்கு விரைவிலேயே ஏமாற்றம் ஏற்பட்டது. சிற்றன்னை தன்மீது வைத்த பொறுப்பை விஜய் இம்மி பிசகாமல் அமலாக்குவான் என்று அனந்த் கனவிலும் நினைத்திருக்கவில்லை. விஜய் எல்லா விஷயத்திலும் சகஜமாய் இருப்பான். ஆனால், பணவிவகாரத்தில் மட்டும் ரொம்ப கறார் பேர்வழி. மாதா மாதம் அனந்துக்குத் தேவையானதைவிட கொஞ்சம் கூடுதலாகவே பணம் கொடுப்பான். ஆனால், கணக்குக் காண்பிக்க வேண்டும்.

ஓரிரு தடவை பொய்க்கணக்கைக் காட்டிப்போய் விஜயை ஏமாற்ற நினைத்த அனந்துக்கு, அந்த எண்ணம் பலிக்காததோடு, பிடிபட்டு நிறைய வசவுகளைக் கேட்க நேர்ந்தது. அதிலிருந்து விஜய் கணக்கு விஷயத்தில் இன்னும் கவனமாய் இருக்கத் தொடங்கினான்.

அனந்துக்குக் கால்கட்டுப் போடா விட்டால் இனி தாங்காது என்று எண்ணிய விஜய் மேட்டூர் பெண்ணை நிச்சயம் செய்திருந்தான். அவர்கள் ரொம்ப பணக்காரர்கள். ஒரே மகள். குடும்ப பாரம்பரியமும் நல்லது. விஜய் கண்ணோட்டத்தில் கஸ்தூரி அனந்துக்கு பொருத்தமானவள், படிப்பு அவ்வளவாக இல்லாவிட்டாலும் குடும்பத்தைப் பொறுப்பாக நிர்வாகம் செய்யும் திறமை இருந்தது. முக்கியமாய்க் கணவனே கண்கண்ட தெய்வம் என்ற நம்பிக்கை ரத்தத்திலேயே ஊறிவிட்ட வம்சத்தில் பிறந்தவள். அவர்களே பணக்காரர்களானதால், அனந்தின் சொத்து மேல் அக்கறை இருக்குமே தவிர, மோகம் இருக்காது. அனந்த் அந்தப் பெண்ணுடன் எல்லாத விதமாகவும் சுகமாக இருப்பான் என்றும், இந்தத் திருமணம் முடித்துவிட்டால் அவனைப்பற்றிய கவலையை விட்டுவிட்டு,

தான் நிம்மதியாக இருக்கலாமென்றும் விஜய் நினைத்திருந்தான். திடீரென்று அவனுடைய முயற்சிகளை, எதிர்பார்ப்புகளைத் தோல்வியுறச் செய்து, இந்த சரோஜா என்ற ராட்சசி எங்கிருந்தோ முளைத்தாள். யார் இந்த சரோஜா? அனந்துக்கும் இவளுக்கும் எப்படி அறிமுகமாச்சு? எவ்வளவு தூரம் வந்திருக்கும்?

எவ்வளவு தூரம் வந்திருக்குமோ அந்தக் கடிதங்கள் தெளிவாக விளக்கிக் கொண்டிருந்தன. அந்தக் கடிதங்களைப் பார்க்கும் போது, அனந்த் அந்தப் பெண்ணின் வலையில் நன்றாக சிக்கிக் கொண்டு விட்டது தெளிவாகத் தெரிந்தது. எவ்வளவு துணிச்சல் இருந்தால், அப்படி நேராக அனந்தின் வருங்கால மாமனாருக்குக் கடிதம் எழுதுவாள்? இந்த சரோஜாவின் பிடியிலிருந்து அனந்தை விடுவிக்க தான் எவ்வளவு திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமோ? எவ்வளவு அவதியுற வேண்டுமோ? விஜய்க்குத் திடீரென்று அனந்த் மீதும், சுவர்க்கத்தில் இருக்கும் சித்தப்பனை மீதும் சொல்லொண்ணாத எரிச்சல் வந்தது.

# 10

அனந்த், ரோஜா இருவரும் நடந்து கொண்டே வந்து பார்க்கில் அமர்ந்து கொண்டார்கள். இனியமாலை வேளை. டிசெம்பர் மாதமானதால் சீக்கிரமாய் இருட்டி விடும் போல் இருந்தது. இளம் வெய்யில் தங்க வண்ணத்தில் பளபளத்துக் கொண்டிருந்தது. மரத்தின் இலைகள் மீதும், எதிரில் அமைக்கப்பட்டிருந்த செயற்கை நீரூற்றின் மீதும் சூரிய கிரணங்கள் பட்டு, நாட்டியமாடிக் கொண்டிருந்தது.

"இனி நடந்தது போதும்பா, இங்கே உட்காருவோம்" களைத்தாற்போல் சொன்னாள் ரோஜா.



இருவரும் செயற்கை நீரூற்றின் எதிரில் இருந்த புல்வெளியில் உட்கார்ந்து கொண்டார்கள். சூழ்நிலையே அமைதியாய், மனதுக்கு நிம்மதி அளிப்பது போல் இருந்தது.

அனந்த் ரோஜாவுக்குப் பஸ்ஸை விட்டு இறங்கி வரும் வழியில் மெலட்டூர் ராஜகோபாலன் சரோஜா அனுப்பிய கடிதங்களைப் பார்த்து எப்படி அதிர்ந்து போனாரோ, இந்த வரன் வேண்டாமென்று தெரியப்படுத்தி விஜய்க்கு எப்படி கடிதம் எழுதினாரோ, அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் விஜய் முகம் எப்படி மாறியதோ எல்லாம் கதை கதையாக ஜோடித்துச் சொல்லி ரோஜாவைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான்.

சிரித்துச் சிரித்துக் களைத்துப்போன ரோஜா இனி சிரிக்க முடியாதவளாய் ஆயாசப்பட்டுக் கொண்டே, "போதும், இனி சொல்லாதே, வயிறை வலிக்குது" என்றாள்.

அனந்த் உதட்டில் வெற்றிப் புன்னகை நெளிந்தது. மூக்குக் கண்ணாடியை எடுத்து கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான்.

ரோஜா பயந்துவிட்டவள் போல் நடித்துக்கொண்டே, "எல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஒரு நல்ல நாளாய்ப் பார்த்து உன் அண்ணன் வந்து என் மீது போர் முழக்கம் செய்தால்...?" என்றாள்.

"அப்படி எதுவும் நடக்காது. நீ நிச்சிந்தையாய் இரு." என்றான் அனந்த்.

"உனக்கு எப்படித் தெரியும்? எப்படி நம்பறது?"

"உன்னுடைய இருப்பிடமே விஜய்க்குத் தெரியாமல் நான் கவனமாய் இருப்பேன்."

"நல்ல ஆள் தான் நீ" சிரித்துக் கொண்டே பார்த்தாள்.

ரோஜாவுக்கு இன்று ரொம்ப மகிழ்ச்சியாய், திருப்தியாய் இருந்தது. விஜயின் இரும்புக் கரங்களிலிருந்து

அனந்தைக் காப்பாற்றி விட்டான். நட்புக்காக ரோஜா எதுவும் செய்யத் தயாராய் இருந்தாள். அனந்த் சார்பில், விஜயுடன் நேருக்கு நேர் மோதக்கூடத் தயங்க மாட்டாள்.

தாயின் சொத்துக்கு வாரிசு அனந்த். நடுவில் இந்த விஜய் யாரு? நல்லது செய்கிறேன் என்ற பெயரில் வற்புறுத்தித் திருமணம் செய்ய நினைத்தால் யார்தான் சும்மா இருப்பார்கள்? அனந்துக்கு ஏற்படும் கஷ்டங்களுக்கெல்லாம் அவனுடைய அப்பாவித்தனம் தான் காரணம். இந்த அப்பாவித்தனத்தைப் பயன்படுத்திக்கொண்டு உபகாரம் என்ற பெயரில் விஜய் தன் சுயநலத்தை மறைத்து, திறமையாய் நாடகம் போடுகிறான் என்பது ரோஜாவின் எண்ணம்.

விஜயை நேரில் பார்க்காவிட்டாலும் அனந்தின் பேச்சுகளிலிருந்து அவன் ரொம்ப திறமையானவன் என்றும், எதிராளியின் மனதையோ, பேச்சையோ பொருட்படுத்தாதவனாய், ஆணவம் பிடித்தவனாய் ரோஜா முடிவு செய்து இருந்தாள். சர்வாதிகாரியாய் நடந்து கொள்ளும் விஜயிடமிருந்து அப்பாவியான அனந்தைக் காப்பாற்றுவது சிநேகிதியான தன் கடமை என்று நினைவு கூர்ந்தாள்.

ரோஜா என்ற உயிர்ச் சிநேகிதி அனந்துக்குப் பக்க பலமாய் இருக்கும் வரை அனந்தை யாரும் அதிகாரம் செய்ய முடியாது என்று, விஜய் எவ்வளவு சீக்கிரமாய்த் தெரிந்து கொள்வானோ அவ்வளவு நல்லது.

அனந்த், இதுகாறும் தன்னிடம் நட்பு ஏற்படுத்திக் கொள்ள விரும்பிய பெண்களின் மனதை விஜய் எப்படிக் கலைத்து விட்டானோ, இரக்கம் தோன்றும் விதமாய்ச் சொல்லத் தொடங்கினான். வனஜாவால் ஏற்பட்ட சங்கடம், அதிலிருந்து தன்னை மீட்க, விஜய் பட்ட சிரமங்களைப் பற்றி மட்டும் சொல்லவில்லை.

"என்னைத் தவிர உனக்கு வேறு நண்பர்களே கிடையாது என்றாயே?" என்று ரோஜா நிஷ்டூரமாய்ச் சொன்னாள்,



"இப்போ மட்டும் இருக்காங்களா? அதெல்லாம் தெரிந்தும் தெரியாத வயதில், அறிந்தும் அறியாத பரிச்சயங்கள். இப்போ முற்றிலும் மறந்துவிட்ட அறிமுகங்கள். உன்னைப் பார்த்த பிறகு அதெல்லாம் விட்டுப்போனதே என் அதிருஷ்டமாய்த் தோன்றுகிறது."

ரோஜாவின் முகம் 'சீரியஸாய்' இருந்தது. "என்னவோ? யாரால் சொல்ல முடியும்? என்னைவிட எல்லா விதத்திலேயும் உயர்ந்த பெண் தென்பட்டால், என்னைப் பற்றியும் அப்படித்தான் எண்ணுவாயோ என்னவோ?"

"ச்ச... ச்ச... அப்படியெல்லாம் இல்லை — நீ தனித்தன்மை..." தொலைவில் பார்த்துக் கொண்டே சொன்ன அனந்த் சட்டென்று நிறுத்தி விட்டான். அவன் கண்கள் திடீரென்று அகலமாய் விரிந்தன.

"என்ன அனந்த்? என்ன ஆச்சு?" அனந்திடம் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்துச் சட்டென்று ரோஜாவும் தலையைத் திருப்பி அந்தப் பக்கம் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

அனந்த் சடாரென்று தாவி இரண்டே எட்டில் பக்கத்திலிருந்த அடர்ந்த செடிகளுக்குப் பின்னால் மறைந்து கொண்டான்.

"என்ன? என்ன ஆச்சு அனந்த்?" கலவரமாய் சொன்ன ரோஜா தானும் எழப் போனாள்.

"ஷ்... பேசாதே... அங்கேயே உட்கார்" அங்கிருந்தே எச்சரிக்கை விடுத்தான் அனந்த்.

அனந்தின் நடவடிக்கை புரியாமல் குழம்பிவிட்ட ரோஜா, மற்றொரு முறை தலையைத் திருப்பி கேட் பக்கம் பார்த்தாள்.

தொலைவில் தெரிந்த மெயின் கேட் வழியாய், தங்கப் பதுமையாய் திகழ்ந்த எட்டு வயது பெண் குழந்தையை ஆளுக்கொரு பக்கமாய்ப் பிடித்துக் கொண்டு இரண்டு

ஆண்கள், மெதுவாய் இந்தப் பக்கமாக வந்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் நடை, அந்த நிதானம், பார்த்தால் பார்க்குக்குப் பொழுது போக்காய் வந்தவர்கள் போல் தோன்றிற்று. இருவரில் இடது பக்கம் இருந்தவர் சற்று வயதானவர். ஜரிகை வேஷ்டியும், ஜிப்பாவும் அணிந்திருந்தார். சற்று பருத்த சரீரம். வலது பக்கம் இருந்தவன் இளைஞன். வெண்மை நிற உடைகள். கண்களுக்கு கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். அடர்ந்த தலைமுடி, உயரமாய் இருந்தான். அவன் நடையில் ஒருவிதமான மிடுக்கு தென்பட்டது அவர்கள் ஏதோ பேசிக் கொண்டே இந்தப் பக்கம் வந்துகொண்டு இருந்தார்கள். ரோஜா முகத்தைத் திருப்பிக் கொண்டு நீரூற்றைப் பார்க்கத் தொடங்கினாள். அவர்கள் ரோஜாவைத் தாண்டிப் போய் விட்டார்கள். அவர்கள் அந்தச் சின்னப் பெண்ணைப் பிடித்துக் கொண்டிருந்த விதத்தைப் பார்த்தால், அவன் அவர்களின் உயிருக்குச் சமம் என்றே நினைக்கத் தோன்றியது.

அவங்க யாரு? அனந்த் எதுக்காகப் பயப்படுகிறான்? கேள்விகள் மனதில் சூழ்ந்துகொள்ள, பொறுமையாய் அவர்கள் போகும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

முன்னாடிப் போய்க் கொண்டிருந்தவர்களில் கறுப்புக் கண்ணாடி அணிந்தவன், எதுக்காகவோ, ஒரு முறை பின்னால் திருப்பி ரோஜா பக்கம் பார்த்தான். அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்த ரோஜாவுக்கு, சட்டென்று பார்வையை திருப்பிக்கொள்ளும் அவகாசம் இல்லாமல் போய் விட்டது. ரோஜா பார்த்துக் கொண்டிருந்த போதே அவர்கள் கண் மறைவாகி விட்டனர். சற்றுப் பொறுத்து அனந்த், ரோஜா அருகில் வந்து அமர்ந்தான்.

"அவங்க யாரு?" என்று ரோஜா பதட்டத்துடன் கேட்டாள்,



"கூலிங் கிளாஸ் போட்டிருந்தவன் என் அண்ணன் விஜய்."

"விஜய்!!" தூக்கி வாரிப் போட்டது ரோஜாவுக்கு... கண்கள் வியப்பால் விரிந்தன

"விஜய்... உன் அண்ணனா?"

"ஆமாம்."

"என்ன ஆளுய்யா நீ... முன்னாடியே சொல்ல வேண்டாமா? இன்னும் கவனமாய்ப் பார்த்திருப்பேன்." நல்ல வாய்ப்பு கை நழுவிப் போய்விட்டது போல் கோபமாய்ச் சொன்னாள் ரோஜா.

விஜய்... இவனா விஜய்!...

எப்போதும் அனந்த் வாயிலிருந்து ராட்சசன், யமன் போன்ற அடைமொழிகளால் விளிக்கப்பட்டிருந்ததால் ரோஜா மனதில் விஜய் என்றால் வேறு விதமான உருவத் தோற்றம் படிந்திருந்தது. அழகாய், மிடுக்காய், கம்பீரமாய் இருந்த இவனுக்கும் ரோஜா வரித்திருந்த உருவம் நேர் மாறாய் இருந்தது.

அனந்த் ரோஜா மனதில் ஏற்பட்ட எண்ண அலைகளை கவனியாதவனாய், சகஜமாய்ச் சொல்லிக் கொண்டே போனான்.

"வயதில் பெரியவராக இருந்தவர், வேணுகோபாலன். எங்க வீட்டுக்கு எதிரில்தான் அவங்க வீடு அவரும் எங்க அப்பாவும் உயிர் நண்பர்கள். ஒருவிதமாய்ப் பார்க்கப் போனால், என் தந்தை வற்புறுத்தியதால்தான், அவர் கல்கத்தாவிலிருந்த சொத்துக்களை விற்றுவிட்டு இங்கு டெக்ஸ்டைல் மில்லை வாங்கிக்கொண்டு. எங்களுக்கு அருகில் இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இங்கு செட்டில் ஆனார். ஆனால் துரதிருஷ்டம் என்னவென்றால் அவங்க வந்த சில மாதங்களுக்குள், எங்க அப்பா இறந்து விட்டார். எங்களுக்கிடையே தூரத்துச் சொந்தம் இருந்தாலும், நட்புதான் பிரதானமாய் இருந்தது.

"அந்தச் சின்னப் பெண் யாரு?"

"அவருடைய மகள்."

"மகளா?" ரோஜா வியப்புடன் நோக்கினாள்.

"ஆமாம். மகளென்றால் யாருமே நம்ப மாட்டார்கள். பேத்தி என்றுதான் நினைக்கத் தோன்றும். பெரிய மகள் பிறந்த பதினான்கு வருடங்கள் கழித்து இந்தப் பெண் பிறந்தாள். பிறந்த ஆறு மாதம் கழித்து தாய் இறந்து போனாள் பிரசவத்தின் போது ஏதோ சிக்கல் ஏற்பட்டதாம். பாவம்! அந்தப் பெண் ஊமை. அவள் என்றால் அவருக்கு உயிர்... தானே தாயும், தந்தையுமாய் வளர்த்தார். அந்தப் பெண், ராதைக்குக் துளி ஏதாவது வந்தாலும் அவர் பதைபதைத்து விடுவார்."

ரோஜாவின் நெஞ்சில் முள் குத்தியது போல் வலித்தது. இப்போ என்றில்லை. எப்போதும், எங்கும், எந்தத் தந்தையாவது தன் குழந்தைகளை அன்பாய்ப் பார்த்துக் கொண்டால், பார்த்துக் கொள்வதாய்க் கேள்விப்பட்டால், ரோஜாவின் மனம் பொறாமையால் பற்றி எரியும் தந்தை என்ற அந்த வார்த்தையின் அன்பு. அரவணைப்பு என்றுமே அவள் அறிந்திருக்கவில்லை.

இருவரும் சற்று நேரம் மௌனமாய் இருந்து விட்டனர். பிறகு அனந்த் விரக்தியாய் "என்னவோ ரோஜா பணம் இருந்தால் போதும்! எல்லாவிதத்திலும் சுகமாக இருந்து விடலாம் என்று எண்ணும் முட்டாள்களை அவரிடம் அழைத்துப் போய் காண்பிக்கணும். அவரைப் பார்த்தால் ரொம்ப பரிதாபமாய் இருக்கும் சின்னப் பெண் ஊமையாய் பிறந்துவிட்டாள், பெரிய பெண் லாவண்யா ஒரு அடங்காப் பிடாரி!"

"ஏன் அப்படி?"

"லாவண்யாவுக்கு விருப்பமில்லாத் திருமணம் செய்தார்கள். திருமணம் முடிந்து ஒரு வருடம் முடிவதற்குள்



கணவன் விபத்தில் இறந்து விட்டான். தாயைத் தவிர அவளைக் கட்டுப்படுத்துபவர்கள் யாரும் இல்லை. அவளும் முன்னாடியே இறந்து விட்டதால், இப்போ அவளுடைய இஷ்டம் தான். யாருடைய பேச்சையும் பொருட்படுத்த மாட்டாள். தந்தைக்கும், மகளுக்கும் சுத்தமாக ஆகாது."

"ஐயோ பாவம்!" இரக்கப்பட்டாள் ரோஜா. "மகன்கள் இல்லையா?"

"இல்லை. ஆனால் அந்தக் குறையை எங்க விஜய் போக்கி விட்டான். அவனுக்கு அவரிடம் ரொம்ப மதிப்பு. அவருக்கும் விஜய் என்றால் ரொம்ப உயிர். தெரியாதவங்க பார்த்தால் அவ்விருவரையும், தந்தை, மகனென்றுதான் நினைத்துக் கொள்வார்கள்.

ரோஜாவின் பார்வை தரையில் பதிந்தது. மனம் யோசனைகளில் மூழ்கிவிட்டது சிலசமயங்களில் தந்தையின் அன்புக்காக தன் மனம் எவ்வளவு ஏங்கி இருக்கிறது? வாழ்க்கையில் எந்தக்குறை வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், பெற்றோரின் அன்பும் ஆதரவும் கிடைக்காமல் இருப்பது எவ்வளவு வேதனைக்குரிய விஷயம்?

அந்த லாவண்யா ஒரு பைத்தியக்காரியா? தந்தையுடன் சண்டை போடுவானேன்? தனக்கே அவரைப் போன்ற தந்தை இருந்திருந்தால்?

என்னவோ போல் தென்பட்ட ரோஜாவைப் பார்த்ததும் அனந்த் கலவரமடைந்தான். "ரோஜா! ஏன் ஒரு மாதிரியாய் இருக்கே?"

"ஒன்றுமில்லை அனந்த்."

"ஒன்றுமில்லைன்னு நீ சொல்ற விதத்திலேயே தெரிகிறது, ஏதோ இருக்குன்னு."

ரோஜா பதில் அளிக்கவில்லை. கவிழ்ந்து விட்ட முகத்தை இன்னும் தாழ்த்திக் கொண்டாள்.

"சொல்லு ரோஜா, என்ன விஷயம்? நான் தெரிந்துக் கொள்ளக் கூடாதா?"

''அப்படி இல்லை அனந்த்.''

''சொல்லு! இல்லா விட்டால் என்மீது ஆணை...''

''உன்னுடன் இதுதான் பிரச்னை ...'' ரோஜா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, செயற்கையாக முறுவலித்தாள்.

''விஷயத்தைச் சொல்லு ரோஜா.''

கண்களில் ஊற்றாய் பெருகிய கண்ணீரைக் கட்டுப் படுத்த முயன்றுகொண்டே நீரூற்றின் பக்கம் பார்த்தாள். அனந்த் ரோஜாவையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''வேணுகோபாலன் தன் மகளை உயிருக்கும் மேலாய் எண்ணுவார் என்று நீ சொன்னது, எனக்கு என்னவோ போல் இருக்கு.''

''ரோஜா!'' அனந்த் புரியாதவன் போல் பார்த்தான்.

''அவர்தான் என்று இல்லை, அந்த வயதில் இருக்கும் ஆண்களைப் பார்க்கும் போது, அவர்களிடம் என் தந்தையைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற பைத்தியக் காரத்தனமான எண்ணம் தலை தூக்கும்.''

''ரோஜா! எத்தனையோ தடவை கேட்கணும்னு நினைத்தும், கேட்காமல் இருந்து விட்டேன். உன் தந்தை சின்ன வயதிலேயே இறந்து விட்டாரா?''

ரோஜா தலையைக் குறுக்காக அசைத்தாள். ''எனக்குத் தெரியாது அனந்த்! அவரைப் பற்றிய எந்த நினைவுகளும் என் நினைவுப் பெட்டகத்தில் இல்லை. தந்தையின் அன்புக்காக, ஆதரவுக்காக என் மனம் தவித்துக் கொண் டிருப்பதை என்னால் யாரிடமும் சொல்ல முடியாது. சின்ன வயதில் நானும், செந்தூவும் தெருப் பசங்களுடன் விளையாடும் போது, மற்ற குழந்தைகளுடைய அப்பாக்கள் ஆஃபீஸிலிருந்து திரும்பிவந்தால் போதும், எல்லாப் பசங்களும், 'அப்பா வந்தாச்சு... அப்பா வந்தாச்சு' என்று கலைந்து ஓடிவிடுவார்கள். தனியாக நின்றுவிட்ட நானும்,



செந்தூவும் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வருவோம்.

எனக்கு நன்றாக நினைவு இருக்கு. ஒரு நாள், அடுத்த வீட்டுப் பெண்ணும், நானும் சுவர் ஏறிக் குதிக்கும் போது விழுந்து விட்டோம். உண்மையில் அந்தப் பெண்ணைவிட எனக்குத்தான் அடி பலமாய் பட்டிருந்தது. சுவரிலிருந்து கீழே விழுந்ததும், அந்தப் பெண் வீறிட்டு அலறியதைக் கேட்டு அவளுடைய தந்தை ஓடோடி வந்தார். இரு கை களால் அவளைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டு, 'என் கண்ணே... அழாதே...' என்று சமாதானப்படுத்திக் கொண்டே வீட்டுக்குள் போனார். குழந்தையைச் சரியாகக் கவனித்துக் கொள்ளாததற்கு மனைவியையும் கோபித்துக் கொண்டார்.

நான் தவித்து விடபட்டேன். கால் சுளுக்கிக் கொண்டு விட்டது. நடக்க முடியவில்லை. எனக்காக யார் வருவாங்க? அம்மா வீட்டை விட்டு வெளியில் வர மாட்டாள். மாமிக்கு எங்களைப் பற்றி அக்கறை கிடையாது. கடைசியில் நொண்டிக் கொண்டே வீட்டுக்கு வந்தபோது, மாமியும் அம்மாவும் சேர்ந்து என்னைத் திட்டியது இன்னும் என் நினைவில் பசுமையாய் இருக்கு. அன்று இரவு நான் எனக்கு அப்பா இல்லாமல் போனதற்கு எவ்வளவு நேரம் அழுதேனோ? கூட விளையாடும் பசங்கள் எல்லோரும் அடிக்கடி அவர்களுடைய அப்பாக்களைப் பற்றிப் பேசும் போது, எனக்கும், செந்தூவுக்கும் என்னவோ போல் இருக்கும்.

ஒரு தடவை செந்தூவும், நானும் சேர்ந்து, அம்மாவிடம் போய், ''எங்க அப்பா எங்கே? எங்களுக்கு மட்டும் ஏன் அப்பா இல்லை?'' என்று கேட்டோம். அம்மா பதில் சொல்லாமல், இரு கரங்களிலும் முகத்தைப் புதைத்துக் கொண்டு விக்கி விக்கி அழத்துவங்கிவிட்டாள்.

அங்கேயே உட்கார்ந்துகொண்டு அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த மாமி, சரேலென்று ஒரே எட்டில்

அருகில் வந்து, என் பின்னலையும், செந்தூவின் காதையும் பிடித்துக் கொண்டு கொல்லைப் பக்கம் இழுத்துக் கொண்டு போனாள். 'உங்க அப்பா என்ன ஆனாரோ, நான் சொல்றேன். இப்போ உயிரோட இல்லை செத்துப் போய் பத்து வருஷம் ஆச்சு'' என்றாள்.

''பொய்'' குரலை உயர்த்தி, ரோஷத்துடன் கேட்டேன், ''எங்க அப்பா செத்துப் போனா அம்மா இன்னும் பொட்டு ஏன் வெச்சுக்கறாங்க? வளையல் ஏன் போட்டுக்கிறாங்க? காமாட்சி மாமிக்கு நான் குங்குமம் தரப் போன போது அவங்க புருஷன் இறந்துட்டாருன்னும், புருஷன் போனவங்க பொட்டு வச்சுக்க மாட்டாங்க, வளையல் போட்டுக்க மாட்டாங்கன்னு நீங்கதானே மாமி சொன்னீங்க.''

பதில் அளிக்க முடியாதவளாய், இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு என்னை நேராகப் பார்த்தாள். பிறகு என் தலையில் நறுக்கென்று குட்டி, கன்னத்தில் கிள்ளி, ''அடி சிறுக்கி! என் வாய்க்கே பூட்டுப் போடறியா? இன்னொரு தடவை இப்படிப் பேசினால், வாலை நறுக்கிவிடுவேன், சாண் உயரம் கூட இல்லை, கேள்வி கேட்கறதைப் பாரு!'' என்று முதுகிலும் நாலு போடு போட்டாள்.

''அக்காவை அடிக்காதீங்க மாமி. இனி எப்போதும் கேட்க மாட்டோம்'' செந்தூ அழுது கொண்டே என் சார்பில் வாக்குக் கொடுத்தான்.

அப்பத்தான் வீட்டுக்கு வந்த மாமா, என் அழுகையைக் கேட்டு, கொல்லைப்புறம் வந்தார். நீட்டி முழக்கி மாமி சொன்னதை முழுவதும் கேட்டவர், எங்க இருவரையும் வாசற்பக்கம் அழைத்துப் போனார். தன்னுடைய கட்டிலில் அமர்ந்து கொண்டு, எங்களைத் தன் இரு பக்கமும் உட்கார வைத்தார். ''உங்க அம்மாவின் அழுகையைத் தாங்க முடியாமல், மாமியின் ஏச்சு, பேச்சு பொறுக்க முடியாமல் உங்க அப்பா வீட்டை விட்டு ஓடிவிட்டார்,'' என்று மாமா



சொன்ன 'போது தேடினால் கிடைச்சுடுவாங்க... இல்லையா மாமா' என்றான் செந்தூ.

''கிடைப்பார்... ஏன் கிடைக்கமாட்டாரு? ஆனா தேடணும்னா போலீசாரின் உதவியைக் கேட்கணும். நிறைய பணம் செலவாகும். நம்மிடம் அவ்வளவு பணம் ஏது. சொல்லுங்க? நீங்க நல்லா படிச்சு, பெரியவங்கள் ஆன பிறகு, பணம் சம்பாதிப்பீங்க இல்லையா? அப்போ நாம்ப மூணு பேரும் சேர்ந்து தேடுவோம். சரிதானா?''

''நான் நல்லாப் படிப்பேன்'' என்றான் செந்தூ.

''நானும்'' என்றேன்.

''நல்லா படிக்கணும், மறந்துடாதீங்க'' அழுத்திச் சொன்னார் மாமா. இருவரும் தலையை ஆட்டினோம்.

ஆனால் பெரியவர்கள் ஆன பிறகு புரிந்து கொண்டோம். அன்று மாமா சொன்னது எங்களைச் சமாதானப்படுத்துவதற்காகச் சொல்லப்பட்ட கதை என்று. மாமி, எங்க அப்பா இறந்து விட்டார் என்பாள். மாமா, வீட்டிலிருந்து ஓடிவிட்டார் என்று சொல்வார். எது உண்மை யென்று எங்க அம்மாவுக்குத் தெரியும். ஆனால் அவள் சொல்ல மாட்டாள். அது பற்றிப் பேச்சை எடுத்தாலே நெஞ்சு வெடித்து விடும்படி அழுவாளே தவிர பதில் சொல்ல மாட்டாள்.'' விழிகளிலிருந்து நீர் கன்னத்தில் முத்துக்களாய் உருண்டோட, அழுத்தித் துடைத்துக் கொண்டாள் ரோஜா.

அனந்த் அவளை இரக்கம் ததும்பப் பார்த்தான். சுற்றிலும் சூழ்ந்து கொண்ட நிசப்தம், மரங்கள், இலைகள் வீசும் தென்றல் காற்று... இவையெல்லாம ரோஜாவின் இதயத்தில் இருந்த வேதனையைப் பகிர்ந்து கொள்வது போல் மௌனமாய் இருந்தன.

# 11

விஜய் பெயருக்குத் தகுந்தவன் என்று தெரிந்தவர்கள் ஏகமனதாய் ஒப்புக் கொள்வார்கள். அவனுடைய பிடிவாதமும் ரொம்பப் பொல்லாதது. எதையாவது நினைத்துக் கொண்டு விட்டால் அது நிறைவேறும் வரை உறங்க மாட்டான்.

அனந்தை வலையில் போட்டுக் கொண்ட இந்த சரோஜா யார் என்று தெரிந்து கொள்ள அவனும் எத்தனையோ விதமாய் முயற்சி செய்தான். ஆனால் சரியான தகவல் கிடைக்கவில்லை. அனந்திடம் நெருங்கிப் பழகும் நண்பர்களால் கூடச் சரியாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அனந்த் சில மாதங்களாய் மாறிவிட்டான். பார்ட்டி பிக்நிக் எதிலும் கலந்து கொள்வதில்லை. நண்பர்களையும் தவிர்த்து வந்தான். அவனுடன் ஹோட்டலில், பார்க்கில் தென்பட்ட பெண் யாரோ? எங்கே இருப்பாளோ யாருக்கும் தெரியவில்லை.

வேவு பார்க்கப் போனவர்களிடம் விஜய் விசாரித்தான்.

"பார்வைக்கு எப்படி இருக்கிறாள்?"

"சிவப்பாக, உயரமாக."

"கலர் இருக்கட்டும். மற்ற விவரங்கள்? தோற்றம்... குணம்?"

"தொலைவிலிருந்துதான் பார்த்தோம். சரியாகச் சொல்ல முடியாது."

சரியான தகவல் கிடைக்காததால், அதிருப்தி அடைந்த. விஜய் திரும்பி விட்டான். அந்தப் பெண் அவனுடன் படித்தவள் இல்லை. பார்ட்டி பிக்நிக்களுக்கு வருபவளும் இல்லை. பின் யாராய் இருக்கும்? எங்கிருந்து வந்திருப்பாள்?



ஒரு மாதம் கடந்த பின்பும் விஜய் முயற்சிகள் பலிக்கவில்லை. வேறு வழியில்லாதவன் போல் விஜய் அனந்திடமே வந்தான்.

"அந்தப் பெண்ணை எனக்கு தொலைவிலிருந்தாவது அடையாளம் காட்டு. நீ சொல்வதுபோல் அவளுக்குத் தேவையானது நீதான் என்றும், உன் பணமில்லை என்றும் எனக்கு உறுதியாகத் தெரிந்தால், நானே முன் நின்று உங்கள் இருவருக்கும் திருமணம் செய்து, உங்கள் சொத்தை உங்களிடம் ஒப்படைத்து விடுவேன்" என்று விஜய் நயமாகச் சொன்னதும், அனந்த் நம்பிவிட்டான். ரோஜாவை ஒரு முறை பார்த்தால் அதுவும் தன் மூலமாய் அவள் விஜய்க்கு அறிமுகமானால், எல்லாம் நல்லபடியாக நடக்குமென்று அனந்தின் நம்பிக்கை. கடைசியில் தொலைவிலிருந்து ரோஜாவைக் காண்பிக்க அனந்த் ஒப்புக் கொண்டான். தனக்குத் தெரியாமல் அவளிடம் பேசக்கூடாது என்றும், மரியாதை குறைவாக நடந்துகொள்ளக் கூடாதென்றும் இன்னும் நிறைய கண்டிஷன்கள் போட்டான். நல்ல பிள்ளை போல் விஜய் எல்லாவற்றுக்கும் தலை அசைத்தான்.

இருவரும் விஜயின் ஸ்கூட்டரில் புறப்பட்டார்கள். விஜய் அனந்த் சொன்ன வழியைப் பின்பற்றி, மார்க்கெட் தெருவில் இருந்த கரிகாய்க் கடைக்குச் சற்றுத் தள்ளி நிறுத்தினான். இருவரும் கிட்டத்தட்ட அரை மணிக்கு மேல் காத்திருந்தார்கள், ரோஜா வரவில்லை.

அனந்த் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, "இனி மேல் வர மாட்டாளாய் இருக்கும்" என்றான்.

"பரவாயில்லை! மறுபடியும் நாளைக்கு வரலாம்" என்றான் விஜய் தளர்ச்சி அடையாமல்.

மறு நாளும் ரோஜா வரவில்லை.

''இன்றும் வரவில்லையென்றால், அவங்க வீட்டில் கறிகாய் சமைக்காமல் வெறும் சாதம் சாப்பிடுகிறார்களோ என்னவோ'' என்றான் விஜய். ஸ்கூட்டரில் பின்னால் உட்கார்ந்திருந்த அனந்த் ரோஜாவின் வீடு இருக்கும் தெருவின் பெயரைச் சொல்லி, ''அந்தப் பக்கம் வண்டியை போக விடு.'' என்றான்.

விஜய் அந்தச் சந்தில் நுழைந்துகொண்டே, ''இந்தத் தெருவுக்கு பக்கத்துத் தெருவில்தான் என் க்ளையிண்ட் ஒருத்தன் இருக்கிறான்'' என்று இவனும் ஏதோ சொல்லப் போகும் போது அனந்த் திடீரென்று கத்திவிட்டான்.

''விஜய்! நிறுத்து—நிறுத்து—அதோ ரோஜா...''

''எங்கே?'' விஜய் சட்டென்று பிரேக் பிடித்து, ஒரு காலை தரைமீது ஊன்றி வண்டியை நிறுத்தினான்.

அனந்த் விரலால் சுட்டிக் காட்டினான். ''அதோ அந்த ரிக்ஷாவிலிருந்து சாமான்களை இறக்கிக் கொண்டிருக்கிறாளே, அந்தப் பெண்தான்.''

விஜய் பரிசீலனையாய்க் கண் இமைக்காமல் பார்த்தான். தெருவில கடைசியாய் இருந்த வீட்டுக்கு முன் உயரமாய், மின்னல் கொடியைப் போன்ற தோற்றமுடைய ஒரு பெண் தென்பட்டாள்.

ரோஜா ரிக்ஷாவிலிருந்து எண்ணை தூக்கு, மளிகை சாமான் பொட்டலங்களை ஒவ்வொன்றாய் இறக்கி, வராண்டாவில் வைத்துக் கொண்டிருந்தாள்.

விஜய்க்கு அந்தப் பெண்ணை எங்கேயோ பார்த்த நினைவு இருந்தது. எங்கே? எந்தச் சந்தர்ப்பத்தில் என்று நினைவு வர மறுத்தது. புருவங்கள் முடிச்சிட யோசித்துக் கொண்டிருந்தான்.

ரோஜா ரிக்ஷாக்காரனிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். ரிக்ஷாக்காரன் குரலை உயர்த்திக் கையை ஆட்டி ஆட்டி கத்திக்கொண்டிருந்தான்.



''கோயில் தெருன்னு சொல்லி இம்புட்டு தொலைவு இட்டுகிட்டு வந்தியே, மிதிச்சு மிதிச்சு காலெல்லாம் வலிக்குது.''

''கோவிலுக்குப் பக்கத்துத் தெருன்னு தெளிவாய்ச் சொன்னேன் நான்—'' என்று கோபமாய்ச் சொன்னாள் ரோஜா.

''சொன்னியோ என்னமோ! காதில் விழலை. இன்னும் ஒரு ரூபாய் சேர்த்துக் கொடு...''

''எதுக்குக் கொடுக்கணும்? காதில் சரியாய் வாங்காதது உன் தப்புதான்...'' ரோஜா பணத்தைக் கொடுக்கப் போனாள்.

அவன் அந்தப் பணத்தைத் தொடவில்லை... ''அது மட்டும் எதுக்கு? நீயே வச்சுக்க. சும்மாவே இஸ்துகினு வந்ததா நினைச்சுக்கிட்டுப் போறேன்.''

''வார்த்தையை அளந்து பேசு.''

அதற்குள் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் எட்டிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

விஜய் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

கிளம்பப் போன ரிக்ஷாக்காரன் திரும்பி, ''ஒரு ரூபாய் கூட கொடுக்காட்டா போறது...எட்டணாவாவது சேர்த்துக் கொடு டீ குடிச்சுக்கறேன்.''

''எட்டணா கூட மேலே தரமாட்டேன்.''

''கொடுக்காட்டா போ. உனக்கென்ன தெரியும் எங்க கஷ்டம்?''

''ரோஜா போனால் போறது, எட்டணா சேர்த்துக் கொடுத்துடேன். வேண்டாத ரகளை. எல்லோரும் பார்க்கிறாங்க...'' வாசலுக்கு வந்த சுந்தரி சொன்னாள்.

''பார்க்கட்டுமே மாமி! பார்த்தா நமக்கென்ன? வேலை வெட்டி இல்லாதவங்க வேடிக்கை பார்த்தால் நமக்

கென்ன வந்தது? அவன் முன்னாடியே மரியாதையாய், கஷ்டப்பட்டேன்னு சொல்லிக் கேட்டிருந்தா, கட்டாயம் கொடுத்திருப்பேன். இவ்வளவு சண்டை ஆன பிறகு செத்தாலும் தர மாட்டேன். கொடுத்தா அதை நம் நல்லதனமாய் எடுத்துக்க மாட்டான். அவன் செய்த ரகளைக்குப் பயந்து கொடுத்ததா நினைச்சுப்பான்.''

''அம்மாடியம்மா! நல்ல பொம்பிளைதான் போ. இப்படி கொடு என் கூலியை'' இனி பிரயோஜனப்படாது என்று உணர்ந்து கையை நீட்டினான் ரிக்ஷாக்காரன்.

ரோஜா பணத்தை எண்ணி அவனிடம் கொடுத்தாள்.

அனந்துக்கு அவமானத்தால் உள்ளம் குன்றிவிட்டாற் போலிருந்தது. ஒரு ரூபாய்க்காக ரோஜா நடுத்தெருவில் இத்தனை சண்டை போட்டது, அவனுக்கு உயிரே போனாற் போலிருந்தது. ஓடிப்போய் ரோஜாவின் வாயை மூட வேண்டும் என்ற அளவுக்கு ஆவேசம் வந்தது. ஓரடி முன்னால் வைக்கப் போனபோது, விஜயின் வலிமை நிறைந்த கரம் அவனைத் தடுத்து நிறுத்தியது.

''என்னைப் போகவிடு!'' அனந்த் சொன்னான்.

''வேண்டாம்.''

விஜய்க்கு அந்த ரகளையில் ரோஜா தயங்காமல் சண்டை போட்ட விதம்,மென்மையான குரலுக்குப்பின்னால் தென்பட்ட சடினத்தன்மை, அவனுக்குப் பிடித்திருந்தது. இந்தப் பெண் ரிக்ஷாக்காரனுடன் மட்டுமே இல்லை, தனக்கு அநியாயம் என்று பட்ட ஒவ்வொரு விஷயத்திலும் எதிர்த்துப் போராடும் தன்மை படைத்தவள் போல் தோன்றிற்று. கோபத்தால் கன்றி சிவந்து விட்ட முகம், ரோஷத்தில் பளபளத்துக் கொண்டிருந்த கண்கள், எல்லாம் கலந்து ரோஜாவின் உருவத்தை,மிக அழகாய் விஜய் மனதில் என்றைக்குமே அழியாத முத்திரையாகப் பதிந்து விட்டது;



ரிக்ஷாக்காரன் திட்டிக் கொண்டு, முணுமுணுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்க்கும் போது விஜய் மனதில் வேறொரு காட்சி நிழலாடிற்று.

எட்டணா கூட அனாவசியமாய் செலவு செய்யாத இந்தப் பெண் அனந்தை மணம் புரிய நேர்ந்தால், அவனுடைய வெட்டிச் செலவுகளை எப்படிச் சகித்துக்கொள்வாள்?

தொலைவில் ரோஜாவும், சுந்தரியும் மளிகை சாமான் களை உள்ளே எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

''பக்கத்தில் இருக்கும் அந்தம்மா யாரு?''

''சுந்தரி என்று, ரோஜாவின் மாமி. ரொம்பப் பொல்லாதவள்.''

''உன் சரோஜாஷியை விடவா?'' விஜய் குறும்பாகச் சிரித்தான்.

''இவ்வளவு தூரம் வந்து விட்டோம். வா அவங்க வீட்டுக்குப் போகலாம் உன்னை அறிமுகப்படுத்தறேன்.'' என்றான் அனந்த். அவனுக்குரொம்ப சங்கடமாய் இருந்தது. இது போன்ற சூழ்நிலையில் ரோஜாவைக் காண்பிக்க நேரும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. அவனுக்கு முன் கூட்டியே இது பற்றித் தெரிவித்திருக்க வேண்டும்.

ரோஜாவின் உண்மையான நடவடிக்கைகளைப் பார்த்தால் விஜய் மனம் மாறும் என்ற எதிர்பார்ப்பில், அவர்கள் வீட்டுக்கு அழைத்துப் போவதாய் அனந்த் சொன்னான். ஆனால் விஜய் சம்மதிக்கவில்லை. ரோஜா விடம் பார்க்க வேண்டியதைத் தான் பார்த்துவிட்டதாக அவனுக்குத் தோன்றியது. மனிதர்களின் நடத்தை, பத்து பேருக்கு நடுவில் ஒருவிதமாய், தனிமையில் இருக்கும்போது வேறு விதமாய் இருக்குமென்று அவனுக்குத் தெரியும்.

''இப்போ வேண்டாம்...சமயம் வரும்போது நானே அறிமுகப்படுத்திக்கொள்கிறேன்'' என்ற விஜய், வண்டியை ஸ்டார்ட் செய்து வீட்டுப்பக்கம் திருப்பினான்.

# 12

அனந்துக்கு காலேஜில் நடந்த பேச்சுப் போட்டியில் முதல் பரிசு கிடைத்தது. அதைச் சாக்கிட்டு ரோஜாவுக்கு டிரீட் தருவதாய்ச் சொன்னான். ரோஜா உடனே ஒப்புக் கொண்டாள். பிரச்னைகள், கவலைகள் நிறைந்த பாலைவனம் போன்ற தன் வாழ்க்கையில், அனந்தின் பரிச்சயம் ஒரு பாலைவனச் சோலை. அபூர்வமாய் கிடைத்த இந்த நட்பை நழுவ விடுவதில் ரோஜாவுக்கு விருப்பமில்லை.

அனந்த் ரொம்ப நல்லவன். இத்தனை நாட்கள் பழகியிருந்த போதிலும், ஒருநாள் கூட அவன் பேச்சிலாகட்டும், செயலில் ஆகட்டும் எல்லை மீறியதில்லை. அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் தங்களுடைய நட்பைப் பற்றி கதை கதையாய்ப் பேசிக் கொள்வதும், முடிந்தால் ஈட்டி போன்ற பேச்சுக்களால் காயப்படுத்துவதும் அவள் அறியாமல் இல்லை.

ரோஜா நிறைய தடவை மனதில் ஒரு பக்கம் இந்த சமுதாயத்தையும், மறுபக்கம் அனந்தையும் வைத்து நிறுத்திப் பார்த்தாள். தராசின் முள் அனந்த் பக்கம்தான் சாயும். தனக்கு எந்த விதமாகவும் உதவி செய்யாமலிருப்பதோடு, கொஞ்சம் அவகாசம் கிடைத்தாலும் அவமானித்து எள்ளி நகையாடும் இந்தச் சமுதாயத்தைத் தான் ஏன் லட்சியம் செய்ய வேண்டும்? அலட்சியமும், பிடிவாத குணமும் மேலிட, ரோஜாவுக்குக் கொஞ்ச நஞ்ச தயக்கமும் போய் விட்டது.

புதிதாகக் கட்டப்பட்ட ஹோட்டல் "அப்ஸரா" அதி நவீனமாய், எல்லா சௌகரியங்களும் நிறைந்ததாய் இருந்தது. அழகான, வேலைப்பாடு மிகுந்த நாற்காலிகள்



நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்டிருந்த ஃபாமிலி அறைகள் இவையெல்லாம் பார்த்து ரோஜா வியப்படைந்தாள். சின்னக்குழந்தையைப் போல் மகிழ்ந்து போனாள். "அட எவ்வளவு அழகாய் இருக்கு?" என்றாள், கண்களை அகலமாய் விரித்து.

ரோஜாவின் கண்களில் தென்பட்ட மின்னல் ஒளியைக் காண்பது அனந்துக்கு ரொம்பப் பிடிக்கும். கடவுள் அனுகிரகித்தால், ரோஜா தன்னை ஏற்றுக் கொண்டால், அவளுக்கு இந்த உலகம் முழுவதும் சுற்றிக் காண்பிக்க வேண்டுமென்பது அவனுடைய ஆசை.

அவளாகவே தன்னை நெருங்க வேண்டுமென்று அனந்த் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். எது புரிந்தாலும் புரியாவிட்டாலும் அவனுக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. ரோஜாவின் எண்ணம் தெரியாமல் தான் ஓரடி முன்னால் வைத்தால் போதும், ரோஜா பத்தடி பின்னால் போய் விடுவாள். அதனால் அவன் இது வரை நண்பனாய்த்தான் பழகி வந்தான். எத்தனையோ தடவை அவளைத் தன்னருகில் இழுத்து, அணைத்துக் கொண்டு, தன் விருப்பத்தை வெளியிட வேண்டுமென்று தீவிரமாய் தோன்றியது உண்டு.

தன் மனம் கட்டுக்கு அடங்காமல் போகிறதென்று தோன்றி மறு நிமிஷம் அனந்த் சட்டென்று ரோஜாவிடம் சொல்லிக்கொள்ளாமல் அங்கிருந்து போய்விடுவான். இதெல்லாம் ரோஜாவுக்குத் தெரியாது முதலில் வியப்படைந்து, கவலைப்பட்டாலும், பிறகு அவளுக்கு இது வழக்கமான விஷயமாகவும், ஏதாவது முக்கியமான வேலை நினைவுக்கு வந்திருக்கக் கூடுமென்றும் மனதில் எண்ணிக் கொள்வாள்.

இன்றும் அப்படித்தான். ரோஜாவின் கண்கள் நட்சத்திரங்களாய் ஜொலிக்க, ரொம்ப அழகாக இருந்தாள். சாதாரணமாய் எப்போதும் கத்திலைப்போல் கூர்மையாய்,

அலட்சியமாய் இருப்பாள் ரோஜா. இப்படித் தன்னை மறந்து, பரவசமாய் இருப்பதென்பது ரொம்ப அரிது.

அனந்த் முன்கூட்டியே ரிசர்வ் செய்திருந்ததால், பேரர் அவர்களை ஃபாமிலி ரூமுக்கு வழி காட்டினான்.

"என்ன சாப்பிடுவாய்?" மெனு கார்ட்டைப் பார்த்துக் கொண்டே கேட்டான் அனந்த்.

"சாப்பாடுதான்" உடனே சொன்னாள் ரோஜா.

"எப்பப் பார்த்தாலும் சாப்பாடுதானா? அந்த சாப்பாடு இங்கே கிடைக்காது."

"அப்போ நீயே சொல்லு."

அனந்த் மெனு கார்ட்டை எடுத்து சொல்லச் சொல்ல பேரர் குறித்துக் கொண்டான். டொமாடோ சூப், வெஜிடபிள் ரைஸ், தந்தூரி ரொடி, பீஸ் மசாலா... ஐஸ்க்ரீம்..."

பேரர் போனதும் ரோஜா பதட்டத்துடன் கேட்டாள். "அனந்த்! இதெல்லாம்..."

"வெஜிடேரியன்தான்" சிரித்துக் கொண்டே பதில் சொன்னான் அனந்த்.

சந்தேகம் தீர்ந்தவள் போல் நிம்மதியாய் பின்னால் சாய்ந்து கொண்டாள்.

பேரர் உணவுத் தட்டுகளை கொண்டுவந்து வைத்து விட்டுப் போனான்.

அனந்த் "நாப்கினை" மடியில் பிரித்துக் கொண்டவன், திடீரென்று சொன்னான், "ரோஜா! எங்க விஜய் உன்னைப் பார்த்தான்."

தண்ணீர் டம்ளரை எடுக்கப் போன ரோஜா திக்பிரமை அடைந்தவளாய், "என்னையா? விஜய் பார்த்தானா?"

"ஆமாம்... உன்னைத்தான்."



"எப்போ? எங்கே?" ஆர்வம் கொப்புளிக்கக் கேட்டாள். அன்று பார்க்கில் கறுப்புக் கண்ணாடி அணிந்துகொண்டு, உயரமாய், கம்பீரமாய்த் தென்பட்ட நபர்தான் விஜய் என்று தெரிந்த பிறகு, அவனை இன்னொரு தடவை அருகில் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் மேலோங்கியது.

அனந்த் கறுத்துப் போன முகத்துடன், "போன வாரம், ஒரு நாள் மாலை வேளை, நீ ரிக்ஷாக்காரனுடன் ஒரு ரூபாய்க்காக உலக யுத்தம் நடந்த அளவுக்கு சண்டை போட்டாயே அப்போ."

"எப்போ...ஓ..." ரோஜா சிரித்துவிட்டாள்.

அனந்த் வருத்தம் அடைந்தவனாய், "ரோஜா... சில விஷயங்களில் நீ எனக்காகவாவது உன் போக்கை மாற்றிக் கொள்ளணும் போயும் போயும் ஒரு ரூபாய்க்காக அன்று நீ... அதுவும் விஜய் பார்த்துக் கொண்டிருந்த போது..."

"நல்லாயிருக்கு! நீங்க அப்படித் திருட்டுத் தனமாய்ப் பார்த்துக்கிட்டு இருக்கீங்கன்னு எனக்கெப்படித் தெரியும்? உங்க விஜய் பார்த்துட்டு இருக்கான்னா எட்டணா என்ன? ஒரு ரூபாயே கொடுத்து அனுப்பியிருப்பேன். இருந்தாலும் உங்களுக்கு இந்தத் திருட்டு புத்தி ஏன்? நேராக எங்க வீட்டுக்கு வராமல், நல்ல ஆளுங்கப்பா..." ரோஜா பொய் சினத்தைக் காட்டினாள்.

அனந்த் பதில் சொல்லவில்லை.

சற்றுப் பொறுத்து ரோஜா கேட்டாள், "என்ன சொன்னான் உன் அண்ணன்?"

"உண்மையைச் சொல்லட்டுமா?"

"நல்லாயிருக்கு. இப்போ இல்லாட்டா நான் உண்மையை தெரிந்துக்கறது எப்போ?"

"நீ ராட்சசி போல் இருக்கியாம். உன்னுடன் நட்பை வளர்த்துக் கொண்டால் எரிகிற கொள்ளிக் கட்டையால்

தலையைச் சொறிந்து கொள்வது போலவாம். உடனே இந்த நட்புக்கு முற்றுப் புள்ளி வைக்கச் சொன்னான்.

ரோஜா நிமிர்ந்து உட்கார்ந்தாள். முகம் கன்றி விட்டது. நெஞ்சில் எரிந்து கொண்டிருந்த கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டு, செயற்கையாய் சிரித்தாள்.

"பேஷ்... ஒரு தடவை தொலைவிலிருந்து பார்த்தே அவ்வளவு நல்லா சொல்ல முடிந்த விஜயின் புத்தி கூர்மையை நான் பாராட்டுகிறேன்."

"அதுக்குத்தான், உண்மையைச் சொல்லட்டுமான்னு முதலிலேயே நான் கேட்டேன். அவன் என்ன சொன்னா எனக்கென்ன! நான் லட்சியப்படுத்தப் போவதில்லையே" சமாதானம் சொல்வது போல் சொன்னான் அனந்த்.

எதிராளியிடமிருந்து நம்மைப் பற்றிய உண்மைகளை அறிய நினைப்பது முட்டாள்தனம் தான் சில சமயம் அவை கசப்பாக, தாங்க முடியாத விமர்சனங்களாய் இருக்கும். அதை தெரிந்து கொண்டு வேதனைப்படுவதை விட கேட்காமல் இருப்பதே மேல். வாயாடி, பொல்லாதவள் என்று சின்ன வயதிலிருந்தே அக்கம் பக்கத்தாரால் அழைக்கப்படுவது ரோஜாவுக்குப் பழக்கம்தான். ஆனால் இன்று விஜய் வெளிப்படுத்திய அபிப்பிராயம் சகிக்க முடியாததாய், தனக்கு அநியாயம் நிகழ்ந்து விட்டது போல் தோன்றியது.

பேரர் கடைசி ஐட்டம் ஆக ஐஸ்க்ரீமை கொண்டு வந்து வைத்தான். ஏற்கனவே நிறைய சாப்பிட்டு விட்டது போல் அனந்த் திணறிக் கொண்டிருந்தான். ரோஜாவுக்கு இத்தனை சாப்பிட்டாலும், இவ்வளவு ருசியாய் இருந்த போதும், சாப்பாடு சாப்பிட்ட திருப்தி ஏற்படவில்லை. பேசிப் பேசி, களைத்து விட்டவன் போல் அனந்த் மௌனமாய் இருந்தான். ரோஜா நினைவில் மூழ்கியவளாய், நிதானமாய் ஐஸ்கிரீமை சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். இதற்குள் திடீரென்று 'அனூ' என்ற அழைப்பு மிருதுவான



குரலில் சதவு அருகில் கேட்டது. இருவரும் திடுக்கிட் டார்கள். வாசற்கதவுக்கு முதுகைக்காட்டி அமர்ந்திருந்த அனந்த் சட்டென்று தலையைத் திருப்பிப் பார்த்தான். அனந்துக்கு எதிரில் அமர்ந்திருந்த ரோஜா தலையை உயர்த்திப் பார்த்தாள். அறை வாசலில் விஜய் நின்றிருந்தான்.

விஜய் அனந்த் பக்கம் பார்த்து, "ஒரு நிமிஷம் என்னோட வரணும். சின்ன வேலையிருக்கு" என்றான் ஆணையிடுவதுபோல்.

அனந்த்... அனுமதி கேட்பது போல் ரோஜாவைப் பார்த்தான்.

"போ... போயிட்டு சீக்கிரம் வா" என்றாள் ரோஜா.

"இதோ ஒரு நிமிஷம். நான் இங்கே இருப்பது இவனுக்கு எப்படித் தெரிந்தது?" முணுமுணுத்தான் அனந்த்.

"நீயே கேள்." தாழ்ந்த குரலில் சொன்னாள் ரோஜா.

அனந்த் எழுந்து போனான். ரோஜா ரொம்ப நிதானமாக ஐஸ்கிரீமைச் சாப்பிடத் தொடங்கினாள். பத்து நிமிடங்கள் சென்றன. ரோஜாவுக்கு என்னவோ போல் இருந்தது.

இனிமையாய் போய்க் கொண்டிருந்த இந்த மாலைப் பொழுதில் விஜய் வரவு அபசகுனியாய்த் தோன்றிற்று விஜய் தன்னைப்பற்றி, அனந்திடம் தெரிவித்த அபிப்பிராயம் நினைவுக்கு வந்தது. தன்னை மதிக்காதவர் களைத் தானும் மதிக்காமல் இருப்பது ரோஜாவின் பழக்கம், இன்று விஜய் என்றால் மதிப்பு இல்லாமல் போனதோடு, வெறுப்புடன் கூடிய அபிப்பிராயம் ஏற்பட்டது. இதற்குள் காலடிச் சத்தம் கேட்டது. அனந்த் வந்து கொண்டிருக்க வேண்டும்.

"என்ன இவ்வளவு நேரம்? என்ன சொல்றான் உங்க யமதர்மன்?" தலையை சற்று உயர்த்திச் சொன்ன ரோஜா

சட்டென்று நின்று விட்டாள். கண்கள் அகலமாய் விரிந்தன. கையிலிருந்து ஸ்பூன் நழுவி விட்டது. வந்தது அனந்த் இல்லை, விஜய்.

''மே.. ஐ.. கமின்'' ரொம்பப் பணிவாய்க் கேட்டான் விஜய்.

ரோஜா இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டாவது முறை அனுமதி கேட்டான் விஜய். ரோஜா பதிலளிக்கவில்லை. தன்னை இல்லை என்பது போல் தலையைக் குனிந்து கொண்டாள். நழுவவிட்ட ஸ்பூனை எடுத்து, நிதானமாய் ஐஸ்கிரீமைச் சாப்பிடத் தொடங்கினாள். விஜய் நேராக உள்ளே வந்து, அனந்த் உட்கார்ந்திருந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

''எக்ஸ்க்யூஸ் மீ'' என்று ரோஜா அருகில் இருந்த மெனு கார்ட்டை எடுத்துப் பார்த்து, பேரர் வந்ததும், ''ஸ்ட்ராங் காபி'' என்று ஆர்டர் கொடுத்தான்.

பேரர் சென்று விட்டான். ரோஜாவுக்கு என்னவோ போல் இருந்தது. விஜய் கண்களுக்குக் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்ததால், அவன் முகத்தில் தென்பட்ட உணர்ச்சியைக் கண்டுகொள்ள முடியவில்லை. அவனை நேராகப் பார்க்காவிட்டாலும், அவன் தன்னைப் பாதாதிகேசம் கவனித்துக் கொண்டிருப்பதை அவளால் உணர முடிந்தது. அந்த எண்ணம் வந்ததும் அது வரை வாய்க்கு ருசியாய், இனிப்பாய் இருந்த ஐஸ்க்ரீம் கசப்பாய், சாப்பிடப் பிடிக்காமல் போய் விட்டது.

''என் பெயர் விஜய்... அனந்த் என்னுடைய தம்பி'' அறிமுகப்படுத்திக் கொண்டான் விஜய்.

''தெரியும்.''

''தெரியுமா! எப்படி?'' வியப்பு மேலிட கேட்டான்...

''இதற்குமுன் ஒரு தடவை அனந்த் தொலைவிலிருந்து காண்பித்து இருக்கிறான்.''



விஜய் நிமிர்ந்து உட்கார்ந்தான். ''அப்படியா! எனக்குத் தெரியாது... அவன் என்னிடம் சொன்னதில்லை.''

''அனந்த் செய்யும் ஒவ்வொரு வேலையும் உங்களிடம் சொல்லணுமா?''

''இல்லையே?'' சற்று நிறுத்தினான் விஜய்... ''ஏன் சொல்லக்கூடாதுன்னு நீங்க கற்றுத் தரீங்களா அவனுக்கு?'' என்றான்.

''ஒருவர் கற்றுக் கொடுத்தால் கற்றுக் கொள்பவன் இல்லை அனந்த்.''

''தாங்க்ஸ்! அவனைப் பற்றி அவ்வளவு நல்ல அபிப்பிராயம் வைத்ததற்கு.''

''நல்லவர்களைப் பற்றி எப்போதும் நல்ல அபிப்பிராயங்கள் தான் இருக்கும்.''

ரோஜாவின் சுபாவமே அதுதான். கோபமோ, எரிச்சலோ ஏற்பட்டால், வார்த்தைக்கு வார்த்தை தடுமாறாமல் பதில் சொல்லி விடுவாள். தன்னை 'ராட்சசி' என்ற இந்த விஜயிடம் மரியாதையாய் பேச வேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாக ரோஜாவுக்குத் தோன்றவில்லை.

பேரர் காபியை விஜய் முன் வைத்துவிட்டுப் போனான். விஜய் கறுப்புக் கண்ணாடியை கழட்டி மேஜை மீது ஒரு ஓரமாக வைத்தான். ரோஜா தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, பயமற்றவளாய், துணிச்சலுடன் அவன் முகத்தைக் கவனிக்கத் தொடங்கினாள். விசாலமான நெற்றி, நேர்த்தியான புருவங்கள், அடர்த்தியான கேசம்...

சர்க்கரையை எடுத்து காபியில் போட்டு கலக்கிக் கொண்டே விஜய் கேட்டான், ''உங்க அப்பா என்னவா இருக்காரு? அதான் என்ன செய்யறாங்க?''

''ஒண்ணும் செய்ய மாட்டாங்க.''

ரோஜாவின் பதிலில் இருந்த வேகத்தால் தாக்கப் பட்டவனாய்த் தலையை உயர்த்திப் பார்த்தான். கண நேரம் இருவரின் கண்களும் சந்தித்துக் கொண்டன. விஜயின் பார்வையை ரோஜா தான் பிடித்து நிறுத்தினாளோ ரோஜாவின் பார்வையை விஜய்தான் கட்டுப்படுத்தி னானோ தெரியவில்லை. கண நேரம் அப்படியே பார்வைகள் நிலைத்து நின்றன. கடைசியில் விஜய் பார்வையை மெதுவாக திருப்பிக் கொண்டான்.

"அவரை நான் சந்திக்கணும்."

"எதுக்கு?"

"வேலை இருக்கு."

"அவரை சந்திக்கணும்னா நீங்க சுவர்க்கத்துக்குதான் போகணும்."

விஜய் மறுபடியும் கண்களை உயர்த்திப் பார்த்தான். இந்தத் தடவை அவன் பார்வையுடன் தன் பார்வை சந்திக்காமல் கவனமாய் இருந்தாள் ரோஜா?

"அப்படின்னா?"

"இது கூட புரிந்து கொள்ள முடியாதா? எனக்கு தந்தை இல்லை."

"ஓ... ஐயாம் சாரி." மரியாதைக்காகச் சொன்னாற் போல் ஒலித்தது அவன் குரல். காபி குடித்துக் கொண்டே கேட்டான்,

"அண்ணன் தம்பி யாராவது இருக்காங்களா?"

"தம்பி இருக்கான்."

"என்ன செய்யறான்?"

"ஒண்ணும் செய்ய மாட்டான்."

"ஒண்ணும் செய்ய மாட்டானா? வயசென்ன இருக்கும்?"

"இருபது."



விஜய் வியப்புடன் நோக்கினான். ரோஜாவுக்கு உடல் பற்றி எரிந்தது.

"இருந்தாலும், ஏதோ ஒன்றை செய்ய வேண்டிய வயசுதானே! படிப்பு முடிந்து விட்டதா?"

"முடிந்து விட்டது."

"ஐஸீ."

மறுபடியும் நிசப்தம் நிலவியது. விஜய்க்கும் எரிச்சல் ஏற்படத் தொடங்கியது. அவன் இங்கு வரும் முன், அனந்தின் சுபாவம், அந்தஸ்தைப் பற்றி இந்தப் பெண்ணிடம் விவரித்து, நல்லவிதமாய், மனம் நோகாமல் பேசி, அனந்தை விட்டு விடும்படிக் கேட்டுக் கொள்ள எண்ணியிருந்தான். ஆனால் இந்த ரோஜா அதுக்கெல்லாம் மசியமாட்டாள் என்று புரிந்து விட்டது. அவனுடைய பொறுமையும் நசிந்து போயிற்று...

"உங்க விஷயம் பற்றி பேசணுமென்றால், உங்க சார்பில் பெரியவங்க யாரும் இல்லையா?"

"என் விஷயம் என்றால்?" எதிர்க்கேள்வி கேட்டாள்.

விஜய்க்குப் பற்றிக் கொண்டு வந்தது. "அனந்தை, நீங்க திருமணம் செய்து கொள்ள விரும்பும் விஷயத்தைப் பற்றி."

ரோஜா பதில் அளிக்கவில்லை.

"இருந்தாலும் உங்களைப் போன்றவங்க பெரியவங் களுக்குக் கீழ்படிந்து இருப்பாங்கன்னு எனக்குத் தோன்ற வில்லை. நீங்க ஒப்பு கொண்டால், நான் உங்களிடமே பேசறேன்."

ரோஜா தலை நிமிர்த்தவில்லை. காதில் விழாததுபோல் இருந்துவிட்டாள்.

"நீங்க எந்த வேலையைச் செய்தாலும், ஏதேனும் ஒரு கொள்கையுடன் செய்வீங்களா? இல்லை, சும்மா, பொழுது போக்காய், வேடிக்கைக்காகச் செய்வீங்களா?"

''எனக்கு ஏதாவது லாபம் இருந்தாலொழிய நான் எந்த வேலையும் செய்ய மாட்டேன்'' நேரடியாக தாக்குவதுபோல் வந்தது பதில்.

விஜய் கறுப்புக் கண்ணாடியைக் கையில் எடுத்து, அப்படியும், இப்படியும் திருப்பிக் கொண்டே கேட்டான்.

''அனந்துடைய வருங்கால மாமனாருக்கு கடிதம் எழுதியதில் உங்களுடைய எண்ணம்?''

''அனந்துக்கு விருப்பமில்லாத திருமணத்திலிருந்து காப்பாற்றத்தான்.''

''அதனால் உங்களுக்கு ஏற்படும் லாபம்?''

''இதில் லாப நஷ்ட கணக்கு என்ன இருக்கு?''

''இப்பத்தானே சொன்னீங்க, லாபம் இல்லாவிட்டால் எந்தக் காரியமும் செய்ய மாட்டேன் என்று.''

பிடிப்பட்டு விட்டவள் போல் பார்த்தாள் ரோஜா, விஜய் கண்கள் வெற்றிப்பெருமிதத்தில் குறும்பாய் மின்னின.

ரோஜா சமாளித்துக் கொண்டவளாய், ''நல்லாயிருக்கு, நண்பர்களுக்கு, நெருங்கியவர்களுக்கு அந்த விதிகள் பொருந்தாது.''

''ஓ...ஹோ...உங்க கொள்கைகளுக்கு, நேரத்துக்கு தகுந்தாற்போல் விதிவிலக்குகள் இருக்கும் போல.''

அவன் பேச்சில் இருந்த குத்தலையும், எகத்தாளத்தையும் உணர்ந்த ரோஜா பொறுமையுடன் சகித்துக் கொண்டு மௌனமாய் இருந்தாள்.

''அதாவது அனந்தை அந்தக் கல்யாணத்திலிருந்து தப்பவைப்பதில் உங்க சுயநலம் ஏதுமில்லை, அப்படித்தானே.''

''அது என் சொந்த விஷயம். முன்பின் தெரியாதவங்க கிட்ட என் சொந்த விஷயங்கள் பற்றிச் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை.''



''அனந்த் என் தம்பி; அவனுடைய கார்டியன் நான். ஒரே வார்த்தையில் சொல்லணும் என்றால், என் அனுமதி கிடைத்தாலொழிய அவனுடைய திருமணம் நடக்காது.''

''ஐ...ஸீ'' சற்று முன் விஜய் சொன்ன வார்த்தையை அதே தொனியைப் பின்பற்றுவதுபோல் சொன்னாள்.

விஜய் முகம் சிவந்துவிட்டது. சங்கடமாய் நெளிந்தவன், நாற்காலியில் பின்னால் சாய்ந்து ரோஜாவை மறுபடியும் கூர்ந்து பார்த்தான்.

ரோஜா அவனுடைய பார்வையை லட்சியம் செய்யாதவள் போல், ஸ்பூனால் மெதுவாய் ஐஸ்க்ரீமைச்சாப்பிடத் தொடங்கினாள். அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது, அவளுக்கு என்னவோபோல் இருந்தது. ஐஸ்க்ரீம் கப்பை எடுத்து அவன் முகத்தில் வீசவேண்டும் என்பதுபோல் கோபம் வந்தது. எதுக்காக இந்தப் பார்வை? வந்த விஷயத்தை சொல்லிவிட்டு உடனே போய்விட வேண்டியது தானே? அனந்த் எங்கே போய்விட்டான்? இன்னும் வரவில்லையே? என்ன ஆனான்? ஆயிரம் கேள்விகளும், சந்தேகங்களும் சூழ்ந்துகொள்ள திக்குமுக்காடி விட்டாள். எத்தனை நிதானமாய்ச் சாப்பிட்டாலும், ஐஸ்க்ரீம் தீர்ந்துவிடப் போவதைக் கவனித்து நின்றுவிட்டாள். விஜய் இப்படி எதிரில் உட்கார்ந்து, கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு இருக்கும் போது, தான் ஏதோ ராட்சசியாகவும், அண்டாவிலிருந்து பெரிய கரண்டியால் எடுத்துச் சாப்பிடுவது போலவும் உணரத் தொடங்கினாள். அவனுடைய பார்வைக்கே அது போன்ற வலிமையிருக்குமோ!

திடீரென்று விஜய் சொன்னான்.. அவன் முகம் கடினமாய், குரல் கம்பீரமாய் இருந்தது. ''அனந்த் உங்களுக்கு எந்த மாதிரி ஆசைகளை ஏற்படுத்தியிருப்பானோ எனக்குத் தெரியாது. ஆனால் சில காரணங்களால், அவனுடன் உங்க திருமணம் எந்தச் சூழ்நிலையிலும் நடக்காது என்று உங்களுக்குத் தெரியப்படுத்த, இந்த வாய்ப்பை நானாக

ஏற்படுத்திக் கொண்டு வந்தேன்...'' அவளையே கூர்ந்து பார்த்தான்.

அவன் எதிர்பார்த்ததுபோல் ரோஜா தலையை உயர்த்தவில்லை. கலவரமடையவில்லை. நாற்காலியில் சங்கடமாக நெளியவும் இல்லை.

நாங்க இருவரும் காதலித்துக் கொண்டோம். கல்யாணம் செய்து கொள்ள நினைக்கிறோம்... அதைத் தடுக்க நீ யாரு? என்று ஆவேசமாய் மொழியவும் இல்லை.

நெற்றியைச் சுருக்கி, சற்று எரிச்சலுடன் அவனை நோக்கினாள்.

விஜயின் ஆத்திரம் கட்டுக்கு அடங்காமல் போயிற்று. இந்தப்பெண்ணின் உத்தேசந்தான் என்ன? நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள். அனந்த் என்னைச் சேர்ந்தவன், தான் சொல்வதைத்தான் கேட்பான் என்ற தைரியமா? தன் பிடியில் அனந்த் இருக்கும் வரை மற்றவர்களுடன் தனக்கென்ன வேலை என்ற அலட்சியமா? உடல் பற்றிக் கொண்டு வந்தது. எழுந்து நின்றவன் சொன்னான்.

''பணக்கார வீட்டுப் பையனைக் கணவனாய் அடைய வேண்டுமென்ற உங்க கனவுகளை, ஆசைகளை என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் அனந்துக்கு மனைவியாய் வரவேண்டியவளுக்குத் தேவையான குணங்கள் உங்களிடம் எதுவும் இல்லை.'' விஜய் சட்டைப் பையிலிருந்து டைரி எடுத்து ஒரு தாளைக் கிழித்து, பேனாவால் கிடுகிடுவென்று ஏதோ கிறுக்கி, அந்தக் காகிதத்தை ரோஜாமீது வீசுவது போல் போட்டான்.

''அது என்னுடைய முகவரி. உங்க விருப்பங்களின் விலையை, அனந்தை விடுதலை செய்ய நீங்க எதிர்பார்க்கும் தொகையை குறிப்பிட்டு என் முகவரிக்குக் கடிதம் எழுதினால் அதை உங்களுக்கு, எப்படி எங்கே கொடுக்கச் சொல்றீங்களோ, அதன்படி கொடுத்து விடுவேன். அவனை இது போன்ற பெண்களிடமிருந்து விடுவிப்பது எனக்கொன்றும் புதிய விஷயம் இல்லை'' என்றான்.



A1149 288



ரோஜாவுக்கு அவன் [...] புரியவில்லை. தன்மீது பட்டு கீழே [...]த்தைச் சட்டென்று பற்றி, எடுத்துப் பார்த்தாள். ''விஜய்குமார்... ராஜா நிலையம், நெம்பர் 5, ஆண்டாள் தெரு, பெசன்ட் நகர், சென்னை'' என்று இருந்தது.

''பணத்தைக் கொடுத்த அடுத்த நிமிஷம் நீங்க எனக்கு அனந்த் உங்களுக்கு எழுதிய கடிதங்களைக் கொடுத்து விட வேண்டும்.'' டைரியை உள்ளே வைத்துக் கொண்டே விஜய் சொன்னான்.

''கொடுக்கா விட்டால்?'' கையில் இருந்த காகிதத்திலிருந்து பார்வையை உயர்த்தி அவனைப் பார்த்து இரட்டித்தாற்போல் கேட்டாள்.

''அதுக்கான விளைவுகளை நீங்க சந்திக்க வேண்டியிருக்கும்.''

''சரி.''

''அப்படின்னா?''

''நீங்க பணத்தால் என்னை விலைக்கு வாங்க முயற்சி செய்யறீங்க. நான் மசியுவேனா இல்லையா என்று பொறுத்திருந்து பாருங்களேன்.''

''உங்க எண்ணம்?''

''நீங்க விரும்பியது போல், அனந்தை நான் விடுவிப்பதென்பது கனவிலும் நடவாத காரியம்.'' ரோஜா கையில் இருந்த காகிதத்தை அவன் மீது விட்டெறிந்தாள்.

விஜய் சிலையாய் நின்று விட்டான். கண நேரம் தன் மீது பட்டு மேஜைமீது விழுந்த அந்தக் காகிதத்தையும், ரோஜாவையும் மாறிமாறி பார்த்தான். ரோஜா கொஞ்சம் கூடப் பயமில்லாதவளாய் நிச்சலனமாய் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

விஜய் தன் மனதில் ஏற்பட்ட சினத்தை, அரும்பாடு பட்டுக் கட்டுப் படுத்திக்கொள்வதை, இறுக்கமாய்த்

தென்பட்ட தாடை எலும்பும், உதடுகளும் உணர்த்திக் கொண்டிருந்தன. சற்று நேரம் ரோஜாவையே கண் இமைக்காமல் பார்த்த விஜய், சட்டென்று இரு கைகளையும் மேஜை மீது ஊன்றி, சற்று முன்பக்கமாய் குனிந்து, ரொம்ப மிருதுவாய், தாழ்ந்த குரலில் கேட்டான், "தேவையில்லாத இந்த நடிப்பு ஏன்? அசல் நீங்க திருமணம் செய்து கொள்ளும் ஜாதி இல்லை என்றும், ஒருக்கால் செய்துக் கொண்டாலும் அனந்த் போன்ற நபரை கணவனாய் உங்களால் கனவிலும் ஏற்க முடியாது என்பது உண்மை. உங்களுக்கு வேண்டியது அனந்த் இல்லை, அவனுடைய பணம் தான் என்றும், அந்தப் பணத்துக்காக எதையும் செய்ய நீங்க தயாராய் இருக்கீங்கன்னு இப்போ புரிகிறது." அவன் கண்களில் குறும்பு கொப்புளித்தது. குரலில் எக்காளம் தொனிக்க வார்த்தைகள் கூர்மையான கத்தியைப் போல் வெளி வந்தன.

"இருந்தாலும்... நமக்குள்ளே ஒரு பேச்சுக்காகச் சொல்றேன். கல்யாணம் செய்து கிட்டால் என்ன கிடைக்கும்? கணவன் — குழந்தைகள் — வேண்டாத தொல்லைகள். இப்படி பணக்காரப் பசங்களை வசப்படுத்தி கிட்டுப் பணம் வசூலான பிறகு, விட்டு விட்டு வேறொரு ஆளைப் பிடித்துவிடலாம், இளம் வயதிலேயே நல்லா சம்பாத்துவிடலாம், நான்கு விதமான மனிதர்களுடன் வெரைட்டியாய் வாழ்க்கை நடத்தினாற் போலவும் இருக்கும். எவ்வளவு நல்ல 'பிசினெஸ்'? என்ன சொல்றீங்க?"

இந்தக் கடினமான சொற்களைக் கேட்டு ரோஜா சிலையாகிவிட்டாள். கண்களை விரித்துப் பார்க்கலானாள். மூளை செயல்பட மறுத்தது.

"சொல்லுங்க... இப்பவாவது நான் சொல்றதுக்கு ஒப்புக்குவீங்களா? இல்லாவிட்டால்..."

"இல்லா விட்டால்?"

"உங்களைப் போன்ற முட்டாள் பெண் இந்த உலகில் எங்கேயும் இருக்க மாட்டாள்னு நினைத்துக் கொள்வேன்.



நீங்க சம்மதிக்காவிட்டால் நான் என்ன செய்வேன் தெரியுமா? நான் நினைத்தால் செய்ய முடியாதது எதுவும் கிடையாது. உங்களை எந்தக் கேஸிலாவது சிக்க வைத்து, ஜெயிலுக்கு அனுப்பி வைப்பேன். நாலு பேருக்கு முன்னால் தலை நிமிர்ந்து நடக்க முடியாமல் அவமானப் படுத்துவேன்."

நிமிர்ந்து உட்கார்ந்த ரோஜா, இன்னும் நேராக உட்கார்ந்து கொண்டாள்.

"ஆனால் எனக்கு அந்த எண்ணம் கிடையாதென்று முன்னாடியே சொல்லிட்டேன். யாருக்கும் தெரியாமல் உங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள நான் தயார்."

பற்களால் கீழ் உதட்டை அழுத்தியிருந்த ரோஜா துடுக்காகப் பதில் அளித்தாள்.

"அனந்தும் நானும் உயிர் நண்பர்கள். உங்கள் மிரட்டல்களுக்கு நான் அரண்டு போக மாட்டேன். கடவுளால்கூட எங்க நட்பை முறிக்க முடியாது. உங்க இஷ்டம் போல் நீங்கள் செய்து கொள்ளலாம்."

"ஒரு பெண்ணுக்கு இவ்வளவு துணிச்சல் நல்லது இல்லை." எச்சரிப்பது போல் சொன்னான்.

"ஒரு ஆண் என்ற அகம்பாவத்தில் வாய்க்கு வந்தபடி பேசுவது உங்களுக்கு நல்லது இல்லை..." வேகமாய் வந்தது பதில்.

விஜய் எழுந்து, சரியாய் நின்று கொண்டு, பொறுமையைக் கடைப்பிடித்தவனாய்ச் சொன்னான்.

"அன்று... தொலைவிலிருந்து பார்த்தபோது, அழகாய் இருப்பதோடு, கொஞ்சமாவது மூளையுள்ளவளாக இருப்பாய் என்று எதிர்பார்த்தேன். அதனால்தான் மதிப்பு அளித்து இவ்வளவு தூரம் உன்னுடன் பேச்சு வார்த்தை நடத்த வந்தேன். ஒரு பெண்ணுக்கு இவ்வளவு துணிச்சல், சாகசம் என்னிக்கும் உதவாது. விவேகமும், இங்கித ஞானமும் இல்லாவிட்டால், என்னிக்காவது நூல் அறுந்த காற்றாடியாய்த் திசைமாறித் தரையில் விழப்

போவது நிச்சயம். அனந்தக்கு மனைவியாய் வரப் போகிறவளுக்குப் பணிவு முக்கிய லட்சணமாய் இருக்கணும். குடும்ப பாரம்பரியம் நல்லதாய் இருக்க வேண்டும். அவனிடம் மதிப்பும் மரியாதையும் உள்ளவளாய் இருக்க வேண்டுமே தவிர, அவனுடைய சொத்தின் மீது மோகம் இருக்கக் கூடாது. இந்தக் குணங்கள் எல்லாம் உங்களிடம் இருக்கோ இல்லையோ நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.''

''தனக்கு வேண்டிய மனைவி எப்படி இருக்க வேண்டுமோ, அனந்த் முடிவு செய்து கொள்வான். உங்க முடிவுக்கு கீழ்படியணும் என்ற கட்டாயம் அவனுக்குக் கிடையாது. அவனுக்கு விருப்பமில்லாத திருமணத்தை செய்துக்கச் சொல்லி வற்புறுத்தும் அதிகாரம் உங்களுக்கும் கிடையாது. அவன்காம்மா உங்களுக்கு அதிகாரம் கொடுத்தது அவன் சொத்தின் மீது தானே தவிர, அவன் மீது இல்லை என்ற விஷயத்தை நீங்க எவ்வளவு சீக்கிரமாய் புரிந்து கொண்டால் அவ்வளவு நல்லது.''

விஜய் ஒரு கணம் பேச்சிழந்தவன் போல் கல்லாய்ச் சமைந்து விட்டான். தான் எவ்வளவு உறுதியாய் தன் அபிப்பிராயத்தை சொன்னானோ, அதுக்கு இரண்டு மடங்கு திடமாய் தன் முடிவை தெரிவித்து விட்டாள் ரோஜா. அறையில் சற்று நேரம் பயங்கரமான மௌனம் நிலவியது.

கடைசியில் விஜய் கறுப்புக் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டே சொன்னான். ''சரி... உங்களுக்கு நல்ல விதமாய் சொல்லலாம் என்று வந்தேன். அனந்தின் சொத்து மீது கண் வைத்திருக்கும் உங்களுக்கு எனது அறிவுரைகள் மூளையில் ஏறாமல் இருப்பதில் வியப்பேதும் இல்லை. உங்களுக்கு எப்படி பாடம் கற்பிக்கணுமோ, அனந்தை உங்க கையிலிருந்து எப்படி விடுவிக்கணுமோ தெரியாத முட்டாள் இல்லை நான், வர்றேன்...''

''விஷ் யூ குட் லக்'' என்றாள் ரோஜா.



போகப் போன விஜய், சாட்டையடிப்பட்டவன் போல் சரேலென்று திரும்பிப் பார்த்தான்.

ரோஜா அழுத்தமாய், திடமாய் சொன்னாள், ''எல்லையில்லாத உங்க அதிகாரத்திலிருந்து அனந்தை எப்படி தப்பிக்க வைப்பது என்று எனக்கும் தெரியும்.''

விஜய் கண்களில் தென்பட்ட சிவப்பையும், இறுகிய தாடை எலும்பின் அசைவையும் கவனித்த ரோஜா, கட்டுப்படுத்த முடியாத அளவு சினம் அவனுக்கு ஏற்பட்டதை உணர்ந்து கொண்டாள். அவனுடைய வலது கை அசையப் போனதைப் பார்த்தால் தன் மீது பாய்வானோ என்று பயந்தாள். ஆனால் ஒரே நிமிஷம்தான்.. விஜய் முகத்தில் கோபம் மின்னல் போல் மாயமாகிவிட்டது.

அழகிய பல்வரிசை... புன்னகையில் பளபளக்க, சிரித்துக் கொண்டே, வேடிக்கையாய் சொல்வது போல் சொன்னான்... ''குட்... உங்களை இந்த ஜென்மத்தில் என்னால் மறக்கமுடியாது. ஆங்! சொல்ல மறந்துவிட்டேன்... அனந்த் இப்பொ வர மாட்டான். நீங்க வீட்டுக்குப் போகலாம். 'விஷ் யூ பெஸ்ட் ஆஃப் லக்...'' என்றவன், பதிலுக்காகக் காத்திராமல் சரேலென்று திரும்பிப் போய் விட்டான். 'ஸ்பிரிங் டோர்' ரொம்ப நேரத்துக்கு ஊசலாடிக் கொண்டிருந்தது.

# 13

**ரோ**ஜா நிம்மதியாக மூச்சை இழுத்துக் கொண்டாள் என்ன மனிதன்? நியாய, அநியாய பாகுபாடு இல்லாமல், புதிதாகச் சந்திக்கிறோம் என்ற தயக்கமும் இல்லாமல், இப்படிச் சண்டை போடுகிறானே? யமன், கம்சன் என்று

அனந்த் மொழிந்தது உண்மையாகும் விதமாய் அப்படியே இருந்தான்.

ரோஜாவுக்கு ரொம்ப சோர்வாக இருந்தது. அவன் முன்னால் கடைப்பிடித்திருந்த தைரியமும், சக்தியும் அவளை விட்டுப் போய் விட்டன. நெற்றிப் பொட்டை அழுத்தி விட்டுக் கொண்டே யோசனையில் ஆழ்ந்தாள்... 'பேரர்' பில்லை ரோஜா அருகில் வைத்து விட்டுச் சென்றான்.

பில்லைப் பார்த்ததும் ரோஜா அதிர்ந்து விட்டாள். இதயத்துடிப்பு ஒரு நிமிடம் நின்று மீண்டும் இயங்கியது.

'அனந்த் வர மாட்டான். நீங்க போகலாம். விஷ்யூ பெஸ்ட் ஆஃப் லக்' விஜய் குரல் எக்காளமாய் எதிரொலித்தது, ரோஜாவுக்கு வியர்த்துக் கொட்டியது. என்ன செய்வது என்று புரியவில்லை. தன்னிடம் பணம் இருக்காது என்று தெரிந்தும் அனந்த் ஏன் இப்படிச் செய்தான்? இது அனந்தின் வேலையில்லை. அந்த விஜய்—அந்த ராட்சசன்... அவன் தான் வேண்டுமென்றே இப்படிச் செய்து இருக்கிறான். வேலை கெட்டு வந்து அவமானப்படுத்தியது போதாது என்று இந்த ஹோட்டலில் அவமானப்படட்டுமே என்று இப்படி விட்டு விட்டுப் போய்விட்டான். ரோஜாவுக்கு அழுகை வரும் போல் இருந்தது. அவளிடம் விலை உயர்ந்த பொருளேதும் இல்லை, அடமானம் வைக்க. இதயம் தடக்தடக் என்று வேகமாய் துடிக்க, நெற்றியில் பொடித்திருந்த வியர்வையை துடைத்துக் கொண்டாள். புயல் காற்றில் சிக்கிய சருகாய் மனம் படபடத்தது

விதவிதமாய் ஆர்டர் செய்து வயிறாரச் சாப்பிட்டுவிட்டு கூட வந்தவன் பில் கொடுக்காமல் போய் விட்டான் என்றும் தன்னிடம் பணம் இல்லையென்றும் சொன்னால் சிரிக்க மாட்டார்களா?

''நான் நினைத்தால் ஏதோ ஒரு கேஸில் சிக்கவைத்து உன்னை தள்ளி விடுவேன். அவமானப்பட வைப்பேன் என்று விஜய் சொன்ன வார்த்தைகள் காதுகளில் மறுமுறை ஒலித்தன. அவளுடைய முகம் களையிழந்தது. அந்த எண்ணமே நினைவு தப்பிப் போகும் அளவுக்குச் சோர்வை ஏற்படுத்தியது. இப்படியே ஜெயிலுக்குப் போக வேண்டி வருமோ!''



ரோஜாவுக்கு அந்தக் கணம் விஜய் கண்ணில் தென் பட்டால் அவன் முகத்தை நகத்தால் பிராண்டணும் என்ற அளவுக்குக் கோபமும் ஆவேசமும் ஏற்பட்டது...

இல்லை! விஜய் நினைத்ததுபோல் நடக்கக்கூடாது. எப்படியாவது தான் இந்த இடத்திலிருந்து, மரியாதையாய் வெளியேறணும். ரோஜா அங்கிருந்து வெளியேறும் வழிக்காக யோசித்துக் கொண்டிருந்தாள்.

இதற்குள் யாரோ ரூமில் எட்டிப் பார்த்து உள்ளே பெண் இருப்பதைக் கவனித்து, திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள்...ரோஜா தன்னறியாமல் கடவுளைப் பார்த்த மகிழ்ச்சி ஏற்பட, ''அஞ்சி'' என்று கத்திவிட்டாள். ஆஞ்சநேயுலு திரும்பிப் பார்த்தான்.

''அஞ்சி! இங்கே வாயேன்...'' ரோஜா மறுபடியும் அழைத்தாள்.

ஆஞ்சநேயுலு நம்ப முடியாதவன்போல் வியப்புடன் பார்த்தான். தன்னைத்தானோ ரோஜா இவ்வளவு இனிமையாய் அழைத்தாள்? அவன் கை கால்கள் இயங்க மறுத்தன.

''உன்னைத்தான்'' கூப்பிட்டாள்...

ஆஞ்சநேயுலு கனவில் நடப்பவன்போல் அருகில் வந்தான்.

''உட்காரு — பரவாயில்லை...நான் தனியாகத்தான் வந்தேன். இந்த ஹோட்டல் ரொம்ப நல்லாயிருக்கு இல்லையா?''

அஞ்சி ரோஜாவுக்கு எதிரில் அமர்ந்து கொண்டான். 'பேரர்' வந்ததும் ரோஜா தானே ஆர்டர் கொடுத்தாள்.

ஆஞ்சநேயுலுவுக்கு நடப்பது கனவா, நினைவா என்று புரியவில்லை. 'பேரர்' கொண்டு வந்ததை அவன் சாப்பிடும் போது, ரோஜா ரொம்ப அன்பாய், அக்கரையுடன் போன வாரம் கருங்குரங்கினால் அவனுக்கு ஏற்பட்ட காயங்கள் எப்படியிருக்கு'என்று குசலம் விசாரித்தாள். பில்லை மொத்த மாகச் சேர்த்து தரச்சொல்லி பேரரிடம் சொன்னாள். 'பேரர்' பில்லைக் கொண்டுவந்து ரோஜா அருகில்வைத்தான்.

"இருங்க, நான் கொடுக்கறேன்" மரியாதைக்காக சொன்னான் அஞ்சி.

"ஊஹூம் ...நானே தருகிறேன்" ரோஜா அழுத்திச் சொல்வதுபோல் வினவினாள்.

"ஊஹூம்! நீங்க தடுக்காதீங்க. நான் தர்றேன்" அஞ்சி சற்றுத் துணிந்து, உரிமையாய் ரோஜா கையில் இருந்த பில்லை பிடுங்கிக் கொண்டான்.

ரோஜா விருப்பம் இல்லாதவள்போல் பாவனை செய்து விட்டுக்கொடுத்தாள். பில்லைபார்த்ததும் ஆஞ்சநேயுலுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. பில்லையும், ரோஜாவையும் சந்தேகமாய்ப் பார்த்தான். 'பேரர்' அங்கேயே நின்றிருந்தான்.

ரோஜா எழுந்து கொண்டே, "சரி—நீ கொடுத்துவிட்டு வா...அதற்குள் ஒரு சிநேகிதிக்குப் போன் செய்துவிட்டு வர்றேன்." என்றவள் அவன் பதிலை எதிர்பார்க்காமல் வெளியேறினாள்.

அறையை விட்டு வெளியே வந்த ரோஜா,கிடுகிடுவென்று யாரோ துரத்தி வருவதுபோல், வேகமாய் ஹோட்டலை விட்டு வெளியே வந்து, தூக்கு தண்டனையிலிருந்து தப்பிய கைதியைப்போல் நிம்மதியாக மூச்சை உள்ளே இழுத்தாள்



# 14

மறுநாள் காலையிலேயே வந்துவிட்டான் அனந்த். அர்ச்சனைக்கூடையுடன் கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்த சுந்தரி தெருமுனையில் அவனுக்கு எதிரே வந்தாள். அதனால் நேராக வீட்டுக்கு வந்து வராண்டாவில் நின்று. "ரோஜா—ரோஜா" என்று குரல் கொடுத்தான்.

ரோஜா சமையல் அறையில் இருந்தாள்.

"ரோஜா வாசலில் யாரோ கூப்பிடுறாங்க" குளிக்கப் போன சாவித்திரி மகளுக்குத் தகவல் தெரிவித்துவிட்டு கொல்லைப்புறம் சென்று விட்டாள்.

"யாரு?" வெளியே வந்த ரோஜா அனந்தைப் பார்த்ததும், எரிந்து விழுந்தாள். "நீயா—போதும்பா—போதும்—உனக்கும். நீ இருக்கும் திசைக்கே ஒரு நமஸ்காரம்" கோபமாய் மொழிந்தாள் ரோஜா.

"ரோஜா! இவ்வளவு கோபம் எதுக்கு? பேசறது நீதானா?" கலவரப்பட்டுக் கொண்டே கேட்டான் அனந்த்.

"ஆமாம்—நான்தான்."

"என்ன நடந்தது?"

"என்ன— நடந்ததா? இன்னும் வெட்கமில்லாமல் கேட்க வந்திருக்கியா? உங்க விஜய் சொல்லவில்லை?"

"விஜய்! எனக்கொண்ணும் சொல்லலியே?"

"எதுக்குச் சொல்வான்?"

"அடடா! என்னைக் கொல்லாதே ரோஜா! சட்டுன்னு சொல்லு, என்ன நடந்தது?"

"நேற்று என்னைத் தனியா அந்த ஹோட்டலில் விட்டுட்டுப் போன பிறகு,என்ன நடந்திருக்குமோ உன்னால் ஊகித்துக்கொள்ள முடியவில்லையா?"

"ரோஜா...ப்ளீஸ்."

உடனே இங்கிருந்து போய்விடு. எங்க மாமி பார்த்தாங் கன்னா நல்லா இருக்காது."

"அவங்க இப்போ எங்கே வரப்போறாங்க? இப்பத்தானே கோவிலுக்குப் போகிறாள், வழியில் பார்த்தேன். இன்னிக்கு சனிக்கிழமை பெருமாள் கோவிலில் அந்தக் க்யூவில் நின்று சாமி தரிசனம் முடிந்து வருவதற்குள், நாம் மூன்றாவது உலக யுத்தத்தைப் பற்றிப் பேசி முடித்துவிடலாம். சொல்லு ரோஜா! என்ன நடந்தது? விஜய் ஏதாவது மரியாதைக் குறைவாய் நடந்து கொண்டானா?"

"அப்படி ஏதாவது நடந்தால், நல்லா புத்தி சொல்லி அனுப்பியிருப்பேன்."

"பின்னே? என்னதான் நடந்தது?" அனந்த் சோர்வடைந்தவனாய் அங்கிருந்த பெஞ்சியில் சரிந்து உட்கார்ந்தான்.

ரோஜாவின் கோபம் இன்னும் தணியவில்லை— "உனக்குத்தான் சொல்றேன்—போ...போன்னு துரத்தினா உட்கார்ந்துக்கறியே?"

"நீ விஷயம் என்னன்னு சொல்லும் வரை நான் போக மாட்டேன். சட்டுன்னு சொல்லு ரோஜா..." கெஞ்சுவது போல் கேட்டான் அனந்த்.

"நேற்று பத்து நிமிஷத்துலே திரும்பி வர்றேன்னு சொன்னவன், மறுபடியும் ஏன் வரலை?"

"அது தானே நான் சொல்ல வந்தது. என்னுடைய பழைய நண்பன் சந்திரன் இங்கு வந்திருக்கிறான். அவன் இருப்பது டில்லியில். சொந்த ஊருக்குப்போய் திரும்பும்போது சென்னைக்கு வந்திருக்கான். சமீபத்தில்தான் அவனுடைய திருமணம் நடந்தது. கல்யாணத்துக்கு என்னால் போக



முடியவில்லை. அவனுடைய மனைவி தன் அக்காவீட்டில் இதே ஊரில் தங்கியிருக்காளாம்...

அவன் என்னைப் பார்க்க எங்க வீட்டுக்குப் போன போது, விஜய்க்கு நான் எங்கே இருப்பேன் என்று தெரியவில்லை. டைபிஸ்ட் கோபால், "நேற்று போனில் அப்ஸரா ஹோட்டலுக்கு டேபிள் ரிசர்வு செய்யும்போது பக்கத்தில் இருந்தேன். ஒரு வேளை ஹோட்டல் அப்ஸராவில் இருக்கலாம்" என்று சொன்னானாம். விஜயும், சந்திரனும் விஜியோட ஸ்கூட்டரில் இங்கே வந்திருக்காங்க. என்னைப் பார்த்ததும் சந்திரன் பிடித்துக் கொண்டுவிட்டான். விடவேயில்லை. தன் மனைவி இருக்கும் இடம் அருகிலேயே இருப்பதாகவும், என்னை உடனே அழைத்துப் போய் அவளுக்கு அறிமுகப்படுத்தப் போவதாய்ப் பிடிவாதம் பிடித்தான்.

ஒருதடவை உள்ளே போய் சொல்லிவிட்டு வருவதாக நான் சொன்னபோது அவன் ஒப்புக்கொள்ளவில்லை. விஜயிடம், "நீங்க உள்ளே போய்க் கொஞ்சம் சொல்லிடுங்க சார்" என்று வேண்டுகோள் விடுத்தான். விஜயும், "போயிட்டு வா அனந்த்... அந்தப் பெண்ணிடம் நான் சொல்லிக்கிறேன். வேணும்னா நீ மறுபடியும் வரும்வரை நான் இங்கேயே இருக்கேன்" என்றான். எனக்குப் பேசவே வாய்ப்பு கொடுக்கலை, நான் விஜய் பக்கம் சந்தேகமாய்ப் பார்த்தபோது, "எனக்குத் தெரியும் அனந்த். மரியாதை குறைவாய் நடந்துக்க மாட்டேன். போய் வா..." என்று தைரியம் சொன்ன பிறகுதான் நான் போனேன். சந்திரனிடமிருந்து விடுபட்டு நான் திரும்பி வந்தபோது ஹோட்டலில் நீயும் இல்லை, விஜயும் இல்லை."

ரோஜா கவனமாய் அனந்த் சொன்ன விளக்கத்தைக் கேட்டாள். பிறகு தனக்கும் விஜய்க்கும் இடையே நடந்த உரையாடலைச் சுருக்கமாகச் சொன்னாள். பில் கொடுப்பதில் தனக்கு ஏற்பட்ட சங்கடம், ஆஞ்சநேயுலு வந்து உதவி செய்தது... எல்லாம் சொன்னாள்.

அனந்த் மூக்குக் கண்ணாடி எடுத்து துடைத்துக் கொண்டே சொன்னான். "ரோஜா! யார் மூலமாய் நேர்ந்தாலும், எப்படி நேர்ந்தாலும், உனக்கு ஏற்பட்ட சங்கடத்துக்கு நான் தான் பொறுப்பாளி, என்னை மன்னித்து விடு."

"இன்னிக்குக் காலையிலேயே ஆஞ்சநேயுலுவுக்குப் பணம் கொடுத்து விட்டேன். அது வேறு விஷயம். நான் அந்தப் பணத்தை அவனிடம் கொடுக்கும் போது, அவங்க பாட்டிக்கு ஒரே சந்தேகம். எப்பொ வாங்கினே? எதுக்காக வாங்கினேன்னு ஆயிரம் கேள்விகளைக் கேட்டு என் உயிரை எடுத்துவிட்டாள். அம்மாடியோவ்... அந்த ஹோட்டல்ல நேற்று எவ்வளவு பெரிய அவமானத்திலிருந்து தப்பிச்சேன் நான்?" சொல்லும் போதே ரோஜாவின் உடல் சிலிர்த்தது.

"ரோஜா... இதுக்கெல்லாம் காரணம் எங்க விஜய் தானே?"

"இன்னும் சந்தேகமா?" என்பது போல் பார்த்தாள்.

"விஜயைப் பழிவாங்கணும்னு உண்மையிலேயே, உனக்கு எண்ணம் இருக்கா?"

"இருக்கு."

"அப்படின்னா... எந்தத் தயக்கமும் இல்லாமல் என்னைக் கல்யாணம் செய்து கொள்."

ரோஜா அதிர்ந்து போனவளாய்ப் பார்த்தாள்.

"உண்மைதான் ரோஜா. மனப்பூர்வமாய்ச் சொல்றேன்."

அனந்த் உணர்ச்சி வசப்பட்டு இருப்பதையும், அவன் கண்கள் புதிய ஒளியுடன் மின்னுவதையும் கவனித்த ரோஜா, ரொம்ப நிதானமாய், மென்மையான குரலில் சொன்னாள்.

"வேண்டாம் அனந்த். எனக்கு அவமானம் நேர்ந்து விட்டது என்ற வேதனையில் நீ அளவுக்கு மீறி யோசிக்



கிறாய். ஆவேசத்தில் பேசுகிறாயே தவிர, வேறொன்றும் இல்லை. பரவாயில்லை. இப்படி அவமானங்களைச் சகித்துக்கறது எனக்குப் பழக்கம்தான். நீ வேதனைப் படத் தேவையில்லை. விஜய் எப்படி நடந்து கொண்டாலும், நம் நட்புக்கு எந்த இடையூறும் வராது. கடவுளால்கூட நம் நட்பைப் பிரிக்க முடியாது என்று என் நம்பிக்கை."

"இல்லை ரோஜா! நான் மனப்பூர்வமாய்த்தான் சொல்றேன். என் மனதில் ரொம்ப நாளாய் இருந்த இந்த எண்ணத்தை உன்னிடம் எப்படி வெளிப்படுத்தறதுன்னு, இத்தனை நாள் தவித்துக்கிட்டு இருந்தேன். இப்பொ சொல்லி விட்டேன். என் இதயத்தில் இருந்த சுமை குறைந்து விட்டது. உன் சாதகமான பதிலுக்காக வாழ் நாள் முழுவதும் காத்திருப்பேன். ரோஜா என் படிப்பைப் பற்றி உனக்குத் தெரியும். ஒரு தடவை என்னோடு நீ வந்தால் எங்க வக்கீலிடம் அழைத்துப் போய் என் சொத்து நிலவரம் என்னான்னு உனக்குப் புரியவைப்பேன். இனி என்னைப் பற்றி என்றால்... உனக்குத் தெரிந்தாற் போல், வேறு யாருக்கும் தெரியாது என்று நினைக்கிறேன்."

என்ன பதில் சொல்வது என்று ரோஜாவுக்குப் புரிய வில்லை. குளித்து விட்டு உள்ளே வந்த சாவித்திரி... "வந்தது யாரு ரோஜா?" என்றாள்.

"அனந்த் வந்திருக்கிறான் அம்மா" என்றாள். ரோஜா

அனந்த் எழுந்து கொண்டான். "நான் போயிட்டு வர்றேன் ரோஜா. இப்பொ நான் சொன்ன விஷயத்தைப் பற்றி நீ நிதானமாக யோசி. நம் இருவருடைய எதிர்காலம் இதில் அடங்கியிருக்கு. நீ சொல்லப் போகும் பதில்தான் என் வாழ்க்கைப் பாதையை நிச்சயிக்கும் என்பதை மட்டும் மறந்து விடாதே... வரட்டுமா" போகப் போனவன் சற்று நின்று தயங்கினாற்போல் பின்னால் திரும்பிப் பார்த்தான். "ரோஜா ஒருக்கால் உனக்குச் சம்மதம் இல்லைன்னா, நம் நட்பைக் கடவுளால் கூடப் பிரிக்க முடியாதுனு சற்று முன் நீ சொன்னதைப் பசுமையாய் நினைவில் வைத்துகிட்டிருப் பேன், சரிதானே..."

சரி என்பது போல் தலை அசைத்தாள் ரோஜா. அனந்த் கிளம்பிப் போய் விட்டான். ரோஜா தன்னையே மறந்து போனவளாய் ரொம்ப நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தாள். தான் அனந்தைத் திருமணம் செய்து கொள்வதா, ஒரு நாள்கூட ரோஜாவுக்கு அந்த எண்ணமே வந்ததில்லை. அனந்த் தன்னை இந்தக் கோணத்தில பார்ப்பதாகத் தெரிந்தபோது, ரோஜாவுக்கு என்னவோ போலாகி விட்டது.

வீட்டை விட்டு வெளியே வந்த அனந்தின் மனம் மகிழ்ச்சியால் நிரம்பி விட்டது. ரொம்பநாளாகத் தனக்குள் புதைத்து வைத்திருந்த எண்ணத்தை வெளியிட முடிந்ததில் மனம் இலேசாகி விட்டிருந்தது. அவனுக்கு ரோஜாவின் பலவீனம் புரிந்து விட்டது. தன்னால் விஜயின் அதிகாரத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்றும், அவனுடைய ஆளுமையின் கீழ் தவித்துக் கொண்டிருப்பதாக நடித்தால் போதும், ரோஜா அனுதாபப்பட்டு தன் பக்கம் வந்து விடுவாள். அனந்த் இந்த ஆதாரத்தைப் பற்றிக் கொண்டான். ரோஜாவை அடைய வேண்டுமென்றால், இதுதான் தனக்கு இருக்கும் ஒரே வழி.

• • •

விஜய் ஆஃபீஸ் அறையில் உட்கார்ந்து, மறு நாள் வாதிக்க வேண்டிய கேஸ் சம்பந்தப்பட்ட முக்கியமான பாயிண்டுகளை நோட் செய்து கொண்டிருந்தான். அந்தக் கேஸ் ரொம்ப சிக்கல் நிறைந்ததாய் இருந்தது. மறு பக்கத்தில் இருந்த லாயர் ரொம்பப் பெயர் பெற்றவர் இதில் ஜெயித்தால், பேர் பெற்ற லாயரைத் தோற்கடித்த புகழ் கிடைக்கும்.

விஜய் மனதை ஒருமுகப்படுத்தி கேஸைப் படித்துக் கொண்டிருந்தான். வாசற்கதவு அருகில் சப்தம் கேட்டது. விஜய் திரும்பிப் பார்க்கவில்லை. காலடிச் சப்தத்திலிருந்து வந்தது அனந்த் என்று தெரிந்துதான் இருந்தது.



வெறுமே சாத்தி இருந்த கதவுகள் படாரென்ற சத்தத்துடன் திறந்து கொண்டன.

"விஜய்!" உரத்த குரலில் அழைத்தான் அனந்த்.

"யெஸ்."

"ஒரு தடவை அந்த ஃபைலிலிருந்து திரும்பி இந்தப் பக்கம் பாரு. உன்னை ஒரு கேள்வி கேட்கணும்."

"கேட்டுக் கொண்டிருக்கிறேன். சொல்லு."

அனந்த் சொல்லவில்லை.

விஜய் பைலைப் பார்த்துக் கொண்டே சுழலும் நாற்காலியில் கிர்ரென்று சுழன்று வாசலுக்கு நேராகத் திரும்பினான்.

"யெஸ்" சட்டென்று சொல்லு என்பது போல் தொனித்தது அவன் குரல்.

"நேற்று என்னிடம் அத்தனை சொன்ன நீ, இப்படி ரோஜாவை அவமானப் படுத்தியதில் உன் உத்தேசம் என்ன?"

விஜய் தலை உயர்த்திப் பார்த்தான்.

"உனக்கு வெட்கமாயில்லை?" ரோஷத்துடன் கேட்டான் அனந்த்.

விஜய் புருவங்கள் மேலே எழும்பின.

"ஒரு பெண் என்று கூடப் பார்க்காமல் அப்படி நடந்து கொள்வாயா?"

"நான்... நான் என்ன செய்து விட்டேன்?"

"ரோஜாவை அந்த ஹோட்டலுக்கு நான்தான் அழைச்சிட்டுப் போனேன்னு உனக்குத் தெரியும்... என்னை வலுக்கட்டாயமாய் வெளியில் அனுப்பிவெச்ச உனக்கு, என் சார்பில் பில்லைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இல்லையா? முன்பின் தெரியாத இடத்தில், அந்தப் பெண்ணுக்கு என்ன நடந்திருக்கும், என்று நினைத்தாய்."

"என்ன நடந்தது?" ஒரு நிமிஷம் கையில் இருந்த பேப்பரை மறந்து விட்டு, ஆர்வமாய், லேசாக கலவரம் கலந்த குரலில் கேட்டான் விஜய்.

"கடவுள் அருளால் ஒன்றும் நடக்கவில்லை. ஏதாவது ஆகியிருந்தால்?"

"ஒன்றும் ஆகலை... இல்லையா? உன் சரோஜா ரொம்ப புத்திசாலின்னு நான் தான் ஒப்புக் கொண்டு விட்டேனே?" அலட்சியமாகச் சொன்னான் விஜய் அவன் முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் தெளிவாகத் தெரிந்தது.

"நீ இவ்வளவு கட்சி கட்டி, அவமானப்படுத்த நினைத்த அந்தப் பெண் ஒருநாள் இந்த வீட்டுக்கு மருமகளாக வருவாள் என்ற விஷயத்தை மறந்து விடாதே."

"நான் ஒருத்தன் இந்த வீட்டில் இருக்கும் வரை அது நடக்காது."

"நீயேதான் பார்க்கப் போகிறாய்." சவால் விடுவது போல் சொன்னான் அனந்த்.

"பார்க்கலாம்." விஜய் கிர்ரென்று சுழன்று மறுபடியும் மேஜை பக்கம் திரும்பினான்.

"சாரி டு டிஸ்டர்ப் யூ" பெயருக்கு மன்னிப்பு கேட்டு விட்டு அனந்த் போய் விட்டான்.

## 15

ரோஜாவுக்கு அன்று தபாலில் அனாமதேய கடிதம் ஒன்று வந்தது. அதில் இன்னாருக்கு என்றோ, கீழே கையெழுத்தோ இல்லை.

"என்னைப் பார்க்க வேண்டுமென்று நினைத்தால், வியாழக்கிழமை மாலை ஐந்து மணிக்கு மருந்து பக்கத்துப் பார்க்கில் வந்து சந்திக்கவும்..."



கீழே கையெழுத்துப் போட வேண்டிய இடத்தில் பிறை சந்திரன் படம் வரையப்பட்டிருந்தது. அந்தக் கையெழுத்தை அடையாளம் கண்டு கொண்ட ரோஜா, வியாழன் அன்று ஐந்து மணிக்குக் கிளம்பினாள்.

"இப்போ எங்கே கிளம்பி விட்டாய்?" என்று சாவித்திரி கேட்டாள்.

"வேறு எங்கே... இருக்கானே அந்த தருமப் பிரபு..." நடு அறையில் வாசற்படி அருகில் உட்கார்ந்து, அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த சுந்தரி எக்காளமாய்ச் சொன்னாள்.

அனந்தை குறிப்பிட்டுத்தான் மாமி அப்படிச் சொன்னாள் என்று புரிந்தாலும், மனதில் ஏற்பட்ட கோபத்தை அடக்கி, ரோஜா. மௌனமாக இருந்தாள்.

"சீக்கிரமாகவே வந்து விடுவேன் அம்மா" என்றாள் ரோஜா. சாவித்திரி சுவர் பக்கம் திரும்பி படுத்துக் கொண்டாள், பதில் அளிக்கவில்லை.

"எப்போ வேணும்னாலும் வாயேன். சாப்பிட வருவியோ, மாட்டாயோ சொல்லிவிட்டுப் போ. வடிச்சுக் கொட்டறதுக்கு இங்கே அரிசி கொட்டிக்கிடக்கலை. வரேன்னு சொன்னால் உலையில் அரிசி சேர்த்துப் போடுவேன்." என்றாள் சுந்தரி.

"வந்துவிடுவேன் மாமி" ரோஜா கிளம்ப முற்பட்டாள்.

"அடி ஆத்தீ... வயசு வந்தப் பெண் இப்படி ஊரைச் சுற்றினால், இந்த ஜென்மத்தில் கல்யாணம் ஆகுமா?" முகவாயைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள் சுந்தரி.

வெளியே போன ரோஜா திரும்பி வந்து அமைதியான குரலில், "போகட்டும் மாமி, இப்போ நீங்க யாரும் எனக்குக் கல்யாணம் செய்து வைக்கத் தயாராக இல்லையே. நான் இப்படி ஊரைச் சுற்றுவதால் நின்று போன வரன் ஏதும்

இல்லை. நீங்க எனக்காக ஒரு மாப்பிள்ளையைக் கொண்டு வந்த அன்னிக்கு நீங்க சொன்னபடியே எல்லாத்தையும் விட்டுட்டு வீட்டிலேயே உட்கார்ந்துக்கறேன்." என்று சொல்லிப் போய்விட்டாள்.

"இவ முன்னாடி வாயைத் திறக்க முடியாது. சூடு போட்ட மாதிரி எப்படிப் பேசுகிறாள்! வர வர அவளுக்கு வாய் ரொம்பத்தான் நீண்டு விட்டது" என்று ரோஜா சென்ற திசையைப் பார்த்துக் கொண்டே எரிந்து விழுந்தாள் சுந்தரி.

மருதி பக்கத்தில் இருந்த குழந்தைகள் பூங்கா, ரோஜா வீட்டிலிருந்து ரொம்ப தொலைவில் இருந்தது. ரோஜா அங்கு போகும் போது, வெய்யில் நன்றாக தாழ்ந்து விட்டது. பூங்காவில் குழந்தைகளின் கூட்டம் அதிகமாய் இருந்தது. சறுக்கு மரத்தில் சறுக்கும் குழந்தைகள், ஊஞ்சலில் விளையாடும் குழந்தைகள், பார்க்கு ரொம்ப ஆரவாரமாய், சந்தடியாய் இருந்தது. குழந்தைகளுடன் வந்த பெரியவர்கள் புல்வெளியில் உட்கார்ந்து கொண்டு குழந்தைகளின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தார்கள். பார்க்கின் நடுவில் வளர்க்கப்பட்ட பூஞ்செடிகளில் பூக்கள் மலர்ந்திருந்தன... ரோஜாவுக்கு அந்தப் பூக்களும், குழந்தைகளும் ஒரே இனம் போல் தோன்றிற்று. கள்ளங்கபடமில்லாமல் சிரித்துக் கொண்டு... ஆடிப் பாடி மகிழ்ந்து வெகுளியாய், அப்பாவியாய்...

குழந்தைப் பருவத்தில் மனிதன் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறான? அந்தப் பருவம் தாண்டியதும் மனதில் அதிருப்தி, போட்டி, பொறாமை குடி கொண்டு விடுமோ? சில பேரால் மட்டும் எத்தனை வயது வந்தாலும் மனதளவில் குழந்தைகளாய் நிர்மலமாய் எப்படி இருக்க முடிகிறது!

"ரோஜா" என்று பின்னாலிருந்து குரல் கேட்டதும், அதிர்ந்து விட்ட ரோஜா, திரும்பிப் பார்த்தாள். எதிரே



முஸ்லிம்கள் அணியும் உடைகளுடன், தலையில் குல்லாய், கண்ணுக்கு கறுப்புக் கண்ணாடி அணிந்த இளைஞன் ஒருவன் நின்றிருந்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்... நான்தான் சந்துரு..."

அந்தக்குரல்... புன்முறுவல் எல்லாம் சந்திரன்தான். ஆனால் ரோஜாவாலேயே அடையாளம் காண முடியாத அளவுக்கு வித்தியாசமாய் இருந்தது அவனது தோற்றம்.

"அப்படி ஓரமாக உட்காரலாம் வா" என்று சந்திரன் நடந்தான். ரோஜா பின் தொடர்ந்தாள். ஜன நடமாட்டம் அதிகமாய் இல்லாத இடமாகப் பார்த்து இருவரும் சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"எத்தனை நாள் இந்த அஞ்ஞாதவாசம்?" என்றாள் ரோஜா...

"உயிரோட இருக்கிற வரைக்கும்" சிரித்தான் சந்திரன்.

"சிரிப்பாய் இருக்கா உனக்கு?"

"சிரிச்சுகிட்டே வாழ கத்துக்கிட்டு இருக்கேன் ரோஜா."

"ஆமாம். நீ சிரிக்கிறாய்... என்னையும் அம்மாவையும் அழவைத்து... அப்படிக்தானே!"

சந்திரன் முகத்தில் சிரிப்பு மறைந்தது. வேண்டிக் கொள்வது போல் சொன்னான். "இருக்கிற இந்தக் கொஞ்ச நேரமும் என்னோட சண்டை போடாதே ரோஜா. என் மனதை நோக அடிக்காதே."

ரோஜாவின் மனம் இளகி விட்டது. "இப்போ நீ எங்கே தங்கி இருக்கே?"

"சொல்லக் கூடாது... அதெல்லாம் டாப் சீக்ரெட்."

"என்னிடம்கூடச் சொல்லக் கூடாதா?"

"எங்களுக்குள் நாங்களே சத்தம் போட்டு சொல்லக் கூடாது. அவ்வளவு ரகசியம்..."

இருவருக்கிடையே மௌனம் நிலவியது. அந்த நிசப்தத்தைச் சிதறடித்தவாறே கேட்டாள் ரோஜா.

"அம்மா உன்னைப் பார்க்க, எப்படித் தவிக்கிறாள் தெரியுமா?"

"அடுத்த தடவை அம்மாவையும் உன்னோட அழைச்சுக்கிட்டு வா..."

"நீ ஒரு தடவை வீட்டுக்கு வந்தால் என்னவாகும்?"

"முடியாது ரோஜா... என்னால் வர முடியாது. நான் வீட்டுக்கு வரணும்னா, நீங்க அந்த வீட்டை மாத்தணும், நான் சொல்ற இடத்தில் குடியேறணும்."

ரோஜா பயந்து விட்டவளாய் தம்பியின் கையைப் பற்றிக் கொண்டு சொன்னாள்.

"சந்துரா உன் பேச்சைக் கேட்கும் போது எனக்குப் பயமாக இருக்கு. நீ ஏதோ தவறான வழியில் போய்க் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. என் பேச்சைக் கேளு... போலீசாரிடம் சரணடைந்து விடு."

"அது கனவிலும் நடவாத காரியம். துரதிருஷ்டசாலிகளுக்கு எங்கே இருந்தாலும் வாழ்க்கை ஒன்றுதான் ரோஜா! துணிச்சலும் தைரியமும் இருக்கணுமே தவிர, இந்த உலகில் மனிதன் போகக் கூடாத வழி என்று எதுவும் கிடையாது. இருந்தாலும், ஒரு தடவை திருடன் முத்திரை குத்திவிட்ட பிறகு, மறுபடியும் சமுதாயத்தில் வாழ்வதும், அந்தக் கறையை போக்கிக் கொள்வதும் நடவாத காரியம். இந்த மனிதர்களுக்கு அவமானப்படுத்தத் தெரியும் அளவுக்கு மன்னித்து ஏற்றுக் கொள்ளத் தெரியாது."

"மற்றவர்களுடன் நமக்கென்ன வேலை? நீ, அம்மா, நானும் சேர்ந்து வாழ்வோம்."

"எப்படி? பசி, பட்டினியுடனா? கடன்களுடனா? வேண்டாம் எனக்கு அங்கே நல்லாத்தான் இருக்கு. நான்



கஷ்டப் பட்டாலும் உங்களைச் சுகமாக வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்கு."

ரோஜா பெருமூச்செறிந்தாள். சந்திரனைப் பார்த்ததில் அவளுக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை. அவன் மாறிவிட்டான். தன்னிடமிருந்து ரொம்ப தொலைவுக்கு, இனிமேல் நாமிருவரும் அக்கா தம்பியாய் சேர்ந்து, சிரித்து வாழும் பாக்கியம் தமக்குக் கிடையாதோ என்ற பயம் அவளைப் பற்றிக்கொண்டது.

சந்திரன் சட்டைப் பையிலிருந்து பணம் எடுத்து ரோஜாவிடம் கொடுத்துக் கொண்டே, "இந்தப் பணத்தை வாங்கிக்கொள் அம்மாவுக்கு வேண்டியதை வாங்கி தா... உனக்குத் தேவையானதை வாங்கிக் கொள்... ரோஜா! இனி அம்மாவுக்கு மகளானாலும், மகனானாலும் எல்லாம் நீதான்!"

ரோஜாவின் கண்களில் நீர் திரையிட்டது. பணத்தைக் கொடுக்கப் போன சந்துரின் கையை வேகமாய் தட்டி விட்டு, முகத்தை திருப்பிக் கொண்டு தொலைவில் பார்க்கத் தொடங்கினாள்.

"ரோஜா... இருக்கிற கொஞ்சம் நேரமும் என்னோட சண்டை போடாதேன்னு இப்பத்தானே சொன்னேன்..."

"முதலில் அந்தப் பணம் எப்படி வந்ததுன்னு சொல்லு."

"எப்படி வந்ததாவது? நான் கஷ்டப்பட்டுச் சுயமாய் சம்பாதித்தது இரவு பகல் என்று பாராமல் துணிந்து செயல்பட்டு உழைத்ததற்கு எனக்குக் கிடைத்த சம்பளம்."

"உழைப்பு... ரொம்ப உழைத்து விட்டாய் பாவம்... இப்படிச் சொல்ல உனக்கு வெட்கமாயில்லை? ஒருத்தரை கொள்ளை அடிக்கும் உழைப்புதானே உன்னோடது. இந்தப் பணம் யாருடைய வயிற்றெரிச்சலோ? யாருடைய கண்ணீரோ?"

"ரோஜா!"

"சிரமப்படு... உனக்காக, உன் சுகத்துக்காக...எவ்வளவு வேணும்னாலும் சிரமப்படு... அம்மாவுக்கும் எனக்கும் இந்தப் பணத்தில் ஒரு பைசாகூட வேண்டாம். இப்படி மற்றவர்களின் வயிறு எரிய வாழ்வதைவிட, பட்டினி கிடந்து உயிரை விடுவதே மேல்."

"ரோஜா! ப்ளீஸ்" சந்திரா ரோஜாவின் கையைப் பற்றிக் கொண்டான்.

வேகமாய்க் கையை விடுவித்துக் கொண்டவள் ஆவேசமாய் சொன்னாள், "கடைசி தடவையாகக் கேட்கிறேன். என் மீதும், அம்மா மீதும் உனக்குக் கொஞ்சமாவது அன்பு இருந்தால், என்னோட வந்து போலீசாரிடம் சரணடைந்துவிடு. நடந்ததைச் சொல்லி, நம் குடும்ப நிலவரத்தையும் சொன்னால், உன்னை மன்னிச்சுடுவாங்க."

சந்திரனின் உதடுகள் இறுகின.

"உன் மூஞ்சி.. உனக்கு உலகம் தெரியாது. என்ன சொன்னாலும் புரியாது."

"வருவியா... மாட்டியா... ஒரே வார்த்தையில் பதில் சொல்லு..." எழுந்து நின்று கொண்டாள்.

சந்திரன் ரோஜாவின் கையைப் பற்றி பலவந்தமாய் உட்கார வைத்தான். தாழ்ந்த குரலில் கேட்டான். "ரோஜா! முதல்ல இதுக்குப் பதில் சொல்லு. உனக்கு நான் வாழணும்னு இருக்கா? சாகணும்னு இருக்கா?"

"இதென்ன கேள்வி?"

"நீ பதிலைச் சொல்லு."

"உனக்குத் தெரியாதா?"

"தெரியும். நான் வாழணும்னுதான் விரும்புவாய்."

"உண்மைதான். ஆனால் இப்படி ஆபத்துகள் நிறைந்த சூழலில் இல்லை. சுகமாய், அமைதியாய் நூறாண்டுகள் வாழணும்னு நினைப்பேன்."



"உண்மைதான் ரோஜா! நான் மறுக்கவில்லை. ஆனால் நான் இறங்கியிருப்பது ஒரு புதைகுழியில். இதிலிருந்து என்னை யாராலும் காப்பாற்ற முடியாது. யாராவது காப்பாற்ற நினைப்பதாகச் சந்தேகம் வந்தாலும் போதும், என் உயிர் உடலில் இருக்காது. எங்கேயோ ஒரு இடத்தில் சௌக்கியமாய் இருக்கிறான் என்று என்னை விட்டு விட்டால், அதுவே என்னைக் காப்பாற்றினாற்போல. என்னை வற்புறுத்தாதே. நான் சொல்ல முடியாதவற்றைப் பற்றி விவரங்கள் கேட்காதே."

ரோஜா தலையைத் திருப்பி சந்திரனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். இருபது வயதுகூட நிரம்பாத அந்த முகத்தில் வேதனை, இயலாமை, கோபம், துக்கம் போட்டியிட்டன. துன்பத்தைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தாள்.

சந்திரன் ரோஜா மடியிலிருந்த பையை எடுத்து, அதில் பணத்தை வைத்து மூடிவிட்டு, மறுபடியும் அவள் மடியிலேயே வைத்துக் கொண்டே சொன்னான். அவன் குரல் வேதனையாய், விரக்தியுடன் வெளிப்பட்டது.

"இங்கே நான் மட்டுமில்லை, என்னைப் போன்ற நிறையபேர் எனக்குத் துணையாய் இருக்காங்க. எல்லோரும் அண்ணன் தம்பி மாதிரி இணைந்திருப்போம். கஷ்ட சுகங்களைப் பங்கிட்டுக் கொள்வோம். பிறந்த ஒவ்வொருத்தரும் என்னிக்காவது சாகத்தானே போறோம். ஒருத்தரைக் கொள்ளை அடிப்பது இழிவாக உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் இந்தக் காலத்தில் யார்தான் கொள்ளை அடிக்கலை. முன் காலத்தில் திருடர்கள் என்று தனி இனம் இருந்தது. இப்போ அந்தத் தொழில் எல்லோருக்கும் பொதுவாகி விட்டது. யார் எவ்வளவு நன்றாகக் கொள்ளை அடித்தால் அவ்வளவு புகழ், பணம்... நீ இருக்கும் சமுதாயத்தில் எல்லோரும் நல்லவங்கதானா ரோஜா? எங்களுக்கும் அவர்களுக்கும் ஒரே வித்தியாசம்தான்.

அவங்க முகத்துக்குத் திரைப் போட்டுப்பாங்க. எங்களுக்கு அது இல்லை... அவ்வளவுதான்.''

ரோஜா திக்பிரமை அடைந்தவளாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள். இப்படிப் பேசுவது தன் தம்பி சந்திரன்தானா?

விரக்தியுடன் தொடங்கிய அவனது வார்த்தைகள் கடைசியில் துவேஷத்தில் முடிந்ததை ரோஜா கவனிக்காமல் இல்லை.

கையில் இருந்த கடியாரத்தைப் பார்த்துக் கொண்டே சந்திரன் சொன்னான். ''இன்னும் இரண்டு நிமிஷங்கள் பாக்கியிருக்கு... சொல்ல மறந்து விட்டேன்... மாமி உங்களை ஒண்ணும் சொல்லாமல் இருந்தாலும் சரி... இல்லாவிட்டால் நீயும், அம்மாவும் தனியா வீடு பார்த்துக்குங்க. பணத்தைப் பற்றி நீங்க ஒண்ணும் யோசிக்க வேண்டாம்.''

''பார்க்கிறேன்... அம்மா ஒப்புக்கொண்டால்...'' கவலையுடன் தீனமாய்ச் சொன்னாள் ரோஜா.

''நீ சம்மதிக்க முயற்சி செய். நீ முயன்றால் கட்டாயம் சம்மதிப்பாள்.''

ரோஜா பதில் அளிக்கவில்லை.

சந்திரன் ரோஜாவின் புடவையைப் பார்த்துவிட்டுச் சொன்னான். ''நீ இன்னும் நல்ல புடவையாய் வாங்கிக் கொள் ரோஜா... இந்தக் காலத்தில் பணம் எப்படி வந்தது என்கிற கேள்வி யாருக்கும் தேவையில்லை. எப்படி வாழ்கிறான்? எவ்வளவு மதிப்புடன் வாழ்கிறான்? இதுக்குத் தான் முக்கியத்துவம் கொடுப்பாங்க.''

சந்திரன் மற்றொருமுறை மணியைப் பார்த்துக் கொண்டான். ''மணி ஆகி விட்டது. இன்னும் சற்று நேரத்தில் பச்சை நிற வேன் இங்கே வரும். அது வந்ததும் நான் கிளம்பிவிட வேண்டும். அதுவரை உன் கையைக் கொஞ்சம் பிடித்துக் கொள்கிறேனே ரோஜா...'' என்றான்.



ரோஜாவுக்கு ஏனோ கலவரமாய், தீனமாய் இருந்தது. ஒரு வேளை சந்திரன் அந்தப் புதைகுழியிலிருந்து வெளிவர முடியாமல் போய் விட்டால்?

சந்திரனின் கையைப் பற்றிக் கொண்டே யோசனைகளில் ஆழ்ந்துவிட்ட ரோஜாவுக்கு, தொலைவில் தென்பட்ட நபரைப் பார்க்கும் போது, ஏற்கனவே அறிமுகமான நபர் போல் தோன்றியது.

யாராக இருக்கும்? இதுவரை தான் கவனிக்கவில்லையே? யாரு? விஜய்!!! சந்தேகமே இல்லை அவன் தான். ராதையை ஊஞ்சலில் உட்காரவைத்து, மெதுவாய் ஆட்டிக் கொண்டு இந்தப் பக்கமே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

ரோஜா நிமிர்ந்து உட்கார்ந்தாள். எத்தனை நேரமாய் அவன் அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறானோ? ரொம்ப நேரமாய்ப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று அவன் நின்ற தோரணையே சொல்லிக் கொண்டிருந்தது.

சந்திரன் சொல்லிக் கொண்டிருந்தான். ''ரோஜா...சில சமயம் எவ்வளவு அழுகை வரும் தெரியுமா? நான் கனவில் கூட நினைத்திராத வாழ்க்கையில் போய் விழுந்துவிட்டேன். சில நாள் இரவில் தூக்கம் வராது. ரொம்ப வேதனையாய் இருக்கும். அப்பவே ஓடிவந்து அம்மா மடியில் படுத்து, சின்ன வயதில் இருந்ததுபோல் எந்தக் கவலையும் இல்லாமல் இருக்கணும்னு தோன்றும்... கூண்டில் அடைப்பட்ட பறவைபோல் உயிர் துடிதுடிக்கும் எனக்காக நீங்க இருக்கீங்க என்ற நினைப்பே எனக்கு வாழ்க்கையிடம் பற்றுதலை ஏற்படுத்தும். உங்களுக்காக வாழணும் என்ற பிடிவாதத்தை உண்டாக்கும். இல்லாவிட்டால் என்னிக்கோ தற்கொலை செய்துகிட்டிருப்பேன்.''

சந்திரனின் குரலில் வெளிப்பட்ட வேதனை, அவன் சொன்ன தொனி, வருத்தம் இவையெல்லாம் சேர்ந்து

ரோஜாவைக் கணநேரம் விஜயை மறந்துப் போகச் செய்தன.

"செந்து, உனக்காக நாங்க, எங்களுக்காக நீ இருப்பதை கனவில்கூட மறந்து விடாதே" ரோஜாவுக்கு விழிகளில் நிறைந்த கண்ணீர் பார்வையை மறைத்தது

தொலைவிலிருந்து ஹாரன் சப்தம் கேட்டது. சந்திரன் சட்டென்று தலையைத் திருப்பிப் பார்த்தான். பச்சை நிற வேன் இந்தப் பக்கமே வந்து கொண்டிருந்தது.

சந்திரன் ரோஜாவின் கையை ஒருமுறை அழுத்திவிட்டு மெதுவாய் விலவித்தான் "ரோஜா! எப்படியாவது வாய்ப்பு ஏற்படுத்திக்கொண்டு உன்னைச் சந்திப்பேன் ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதுவது சாத்தியப்படாது. எப்படியோ தகவலைத் தெரிவிக்கிறேன். நான் வரச் சொன்ன இடத்துக்கு வந்துவிடு. நீ வராவிட்டால் நான் ரொம்ப வருத்தப்படுவேன். நான் சுகமாக, சந்தோஷமாக இருப்பதாக அம்மாவிடம் சொல் மற்றதெல்லாம் சொல்லாதே. சொல்லமாட்டாயே, எங்கே பிராமிஸ் பண்ணு..." என்று கையை நீட்டிக்கொண்டே சொன்னான்.

ரோஜா பதில் சொல்ல முடியாதவளாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் சந்திரன் தாமதத்தைப் பொறுக்க முடியாதவனாய், ரோஜாவின் கையைத் தன் கையில் வைத்துக்கொண்டு "என்மீது ஆணை— அம்மாவிடம் சொல்லாதே" என்றான்.

சொல்ல மாட்டேன் என்பதுபோல் ரோஜா தலை அசைத்தாள்...

"என்னைப் பற்றிப் பைத்தியக்காரத்தனமா யோசித்து உன் மனதை பாழடித்துக் கொள்ள மாட்டாயே?"

ரோஜா கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டே தலையைக் குறுக்காக அசைத்தாள்.



"வர்றேன்—ரோஜா."

"மறுபடியும் சீக்கிரமாய்ச் சந்திக்கணும்."

"முயற்சி செய்யறேன்."

சந்திரன் ஓட்டம் போன்ற நடையுடன் வேன் அருகில் சென்றான். வேனில் ஏறும் முன் திரும்பி கையை ஆட்டினான். விழி நீர் கண்களை மறைக்க ரோஜாவும் கையை அசைத்தாள்.

சந்திரன் ஏறியதும் வேன் கிளம்பிப் போய் விட்டது.

ரோஜாவால் கண்ணீரை அடக்க முடியவில்லை. விரலால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, தம்பிக்குத் துணையாய் இருக்கும்படி, கடவுளை மனதிலேயே வேண்டிக் கொண்டாள்.

ரோஜா வாசற்கேட்டை நோக்கி நடந்து போகும்போது விஜய் ராதையின் கையைப் பற்றிக்கொண்டு மெதுவாய் அந்தப் பக்கம் வந்தான்...

அவனைப் பார்த்தும் பார்க்காதது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ரோஜா.

"சௌக்கியமா?" ரொம்ப அக்கறை கொண்டவன் போல் குசலம் விசாரித்தான்.

"ஏதோ உங்க தயவால்" துடுக்காய்ப் பதில் சொன்னாள் ரோஜா.

விஜய் அதைப் பொருட்படுத்தாமல், "தனியாகத்தான் வந்தீங்களா?" ரொம்ப மரியாதையாய்க் கேட்டான்.

ரோஜாவுக்கு உடல் பற்றி எரிவது போல் எரிச்சல் மூண்டது அவன் பார்த்திருக்கிறான். அப்படியிருக்கும் போது, கேட்பானேன்? என்ன சொல்வேன் என்று ஆழம் பார்க்க நினைத்திருப்பானாய் இருக்கும்.

"இல்லை—ஒரு பிரண்டுடன் சேர்ந்து வந்தேன்."

"சேர்ந்து வந்தீங்களா? இல்லை சந்திக்க வந்தீங்களா?" விஜய் புருவங்கள் போலி வியப்பைக் காட்டுவதுபோல் மேலே உயர்ந்தன.

"எதுவாக இருந்தாலும் உங்களுக்கு அநாவசியம்." துடுக்காய்ச் சொன்ன ரோஜா இரண்டடி முன் வைத்தாள்.

"லிஃப்ட் வேணுமா? நானும் காரில் வந்திருக்கிறேன். 'ட்ராப்' செய்கிறேன்."

"தாங்க்ஸ், தேவையில்லை."

அவன் உதடுகளில் அலட்சியமான முறுவல் நெளிந்தது.

"ஏன் சற்று முன் போன நண்பன், பார்த்துவிடப் போகிறானே என்ற பயமா?"

அருவருப்பு அடைந்த ரோஜா, எரித்து விடுபவள் போல் அவன் பக்கம் கோபமாய்ப் பார்த்தாள்.

"அந்த அதிருஷ்டசாலி யாரோ? நம்ம ஜாதி இல்லை' போலிருக்கே?" எகத்தாளமாய்க் கேட்டான்.

"ஆமாம்—நிச்சயமாய் உங்க ஜாதியில்லை." முகத்தில் அடித்தாற்போல், இரு பொருள்பட பதிலளித்தாள்.

"ஆமாம்— எனக்கும் தெரியும், பணத்தின் மீது மோகம் கொண்டு, அதுக்காக எதைச் செய்யவும் தயங்காதவர்கள் ஒரு இனம்—அந்த இனத்தில் நான் சேர மாட்டேன். உண்மையைச் சொல்லு. அவனுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?" நிற்க வைத்து கேட்பதுபோல் கேட்டான்.

ரோஜா கண நேரம் ஒன்றும் புரியாதவளாய்த் திகைத்து நின்றுவிட்டாள். உடனே சுதாரித்துக்கொண்டு, இரு மடங்கு அலட்சியத்துடன் சொன்னாள். "உங்களுக்கு அநாவசியம். வேலை வெட்டியில்லாமல், தாரதரம் தெரியாமல் பேசறவங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை."



தாங்கொணாத கோபத்துடன், கண்களில் அனல் தெறிக்க அவளைப் பார்த்தவன், "அனந்த்—இந்த முஸ்லிம் இளைஞன், இன்னும் எத்தனை பேர் இருக்காங்க உன் பிடியில்?" என்றான்.

அவனுடைய எக்காளத்திற்கும், கடின சொற்களுக்கும் நிர்தாட்சிணையமாய் இலக்காகிவிட்ட ரோஜா, வாயடைத்துப்போனவளாய், பதில் சொல்லத் தெரியாதவளாய் செயல் மறந்து, கண்களை விரித்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீ உண்மையிலேயே அனந்தைத் திருமணம் செய்துக்கணும் என்று மனப்பூர்வமாய் எண்ணி இருந்தால், கட்டாயம் இந்த பழைய சிநேகிதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பாய். இதிலிருந்தே உனக்கு வேண்டியது. அனந்த் இல்லையென்றும், அவனுடைய பணம் மட்டும் தானென்றும் தெளிவாய்த் தெரிந்து தான் இருக்கு. இந்த உண்மையை அந்த முட்டாளுக்கு எப்படி எடுத்துச் சொல்றதுன்னு எனக்குப் புரியவில்லை. கடைசித் தடவையாய்க் கேட்கிறேன். அனந்தை விடுதலை செய்வதற்கு, பிரதிபலனாக நீ என்ன கேட்டாலும் தருவேன். எது சொன்னாலும் மறு பேச்சு பேசாமல் கொடுத்துவிட நான் தயாராய் இருக்கேன்."

"எதுவாக இருந்தாலும் வருவீங்களா?"

விஜய்க்கு அந்தக் கணத்தில் அவள், அசாத்தியமான தைரியோ. அவமானப்படுத்தும் விதமாய் எதையாவதோ கேட்பாள் என்று தோன்றியது.

"பணத்துக்கு உட்பட்டது எதுவாக இருந்தாலும் சரி."

ரோஜா அவன் பக்கம் திரும்பினாள். நேராக அவன் முகத்தைப் பார்த்தாள். குரோதாக்னியால் விழிகள் பளபளக்க சற்றுமுன் தனக்கு நிகழ்ந்த அவமானத்தை, எகத்தாளத்தைத் திருப்பி அடிப்பது போல் சொன்னாள்;—

"இவ்வளவு சிரமம் உங்களுக்கு ஏன்? உங்களிடம் அன்னிக்கே சொல்லிவிட்டேன். எனக்கு வேண்டியது அனந்துடைய நட்பு மட்டும் தான். நீங்க கேட்கும் பணம் இல்லைன்னு.

இந்த உண்மையை உங்களுக்கு எப்படிப் புரிய வைக்கற துன்னு எனக்குத் தெரியலை. ஒரு தடவை சொன்னால் புரிந்து கொள்ள முடியாத நீங்கள் வக்கீலாய் எப்படித் தொழில் பார்க்கறீங்களோ? கடைசித் தடவையாய்ச் சொல்றேன், எத்தனைத்தடவை கேட்டாலும் என் பதில் இதுதான். அனந்திடம் எனக்கு இருக்கும் நட்பை நீக்க அந்தக் கடவுளே வந்தாலும் சரி முறிக்க முடியாது. உங்களால் முடிந்தால், திறமையிருந்தால், உங்க தம்பியின் மனதை மாற்ற முயற்சி செய்யுங்கள். அதுதானே தவிர இப்படி என் பின்னால்வந்து தொந்தரவு பண்ணவேண்டாம். இன்னொரு தடவை இப்படி நடந்துக்கிட்டால் 'நியூசென்ஸ் கேஸ்' கீழ்ப் போலீசாரிடம் ரிப்போர்ட் செய்வேன். உங்களுக்குக் கொஞ்சமாவது விவேகம் இருந்தால், கவன மாய் இருங்கள். புத்திசாலித்தனம் உங்களுக்கு மட்டுமே சொந்தமில்லை. மற்றவர்களுக்கும் இருக்கும்—வர்றேன்" என்றவள் திரும்பிப் பாராமல் மளமளவென்று நடந்து போய்விட்டாள்.

விஜய் கற்சிலையாய் நின்றுவிட்டான். முகத்தில் அடித் தாற்போல், இவ்வளவு கூர்மையாய், வேகமாய் யாரும் அவனிடம் இதுவரை பேசியதில்லை. "உங்களால் முடிந்தால் உங்கள் தம்பியின் மனதை மாற்றிக் கொள்ளுங்கள்" ரோஜாவின் வார்த்தைகள் அவன் காதுகளில் எதிரொலித் தன. என்ன தைரியம்? எவ்வளவு திமிர்? அனந்த் எழுதிய கடிதங்கள் தன் கையில் இருக்கு என்றுதானே இவ்வளவு ஆணவம்... விஜய் கண்கள் அக்னிப் பிழம்புகளாய் ஜொலித்தன.

அனந்துக்காகவாவது இவளைப் பழி வாங்கணும். அவளுடைய அகம்பாவத்தை அடக்கணும். தன்மானம் நிறைந்த அவனுடைய மனதை ஆழமாய்க் காயப்படுத்தி விட்டாள். இதுபோல் ஆயிரம் மடங்கு, ரோஜாவைத் தான் காயப்படுத்தணும். அது வரை இந்த அவமானம் தணியாது. மனதுக்கு அமைதி கிடைக்காது. விஜய் மனம் ரோஜாவைப் பழிவாங்கும் எண்ணத்தில் துடித்துக் கொண்டிருந்தது.



# 16

அன்றிரவு ரோஜா சரியாகத் தூங்கவில்லை. கனவில் சேந்தூரா ஓடிக் கொண்டிருந்தான். தான் அவன் பின்னா லேயே சேந்தூரா... சேந்தூரா! என்று கத்திக் கொண்டே ஓடிக் கொண்டிருக்கிறாள். ஆனால் அவன் நிற்கவில்லை. அவனுடைய வேகத்துக்கு அவளால் ஈடு கொடுக்க முடிய வில்லை. துப்பாக்கிகளை நீட்டிக் கொண்டு வரிசையாய்ச் சிப்பாய்கள் நின்றிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் சேந்தூரா ஓடிக்கொண்டிருந்தான்.

"சேந்தூரா! போகாதே...நில்... அங்கே பாரு..." பெருங் குரலில் கத்துகிறாள் அவள்.

திடீரென்று துப்பாக்கிகள் ஒலித்தன. ஓடிக்கொண் டிருந்த சேந்தூரா, வயிற்றைப் பிடித்துக்கொண்டு அப்படியே சரிந்தான். அவனைச் சுற்றி ரத்தம் குளமாய்த் தேங்கியது.

வீலென்று அலறிவிட்டாள் ரோஜா.

"ரோஜா! ரோஜா என்னம்மா ஆச்சு?" சாவித்திரி எழுந்து வந்து மகளின் தோள்களைப் பற்றி உலுக்கினாள்.

"அம்மா! அம்மா" மூச்சு வாங்க, தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள்.

"என்னவாச்சு ரோஜா, கெட்ட கனா ஏதாச்சும் கண்டியா?"

ரோஜா கண்ணை கசக்கிக் கொண்டாள். "ஆமாம்மா" சோர்வுடன் பதிலளித்தாள்.

"என்ன கனவு?"

ரோஜா சொல்லவில்லை. சாவித்திரியும் வற்புறுத்தவில்லை. ரோஜா ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

சேந்தூ...சேந்தூ... மனம் இன்னும் புலம்பிக்கொண்டு இருந்தது. தன் அடி மனதில் குடிகொண்டிருந்த பயம் தான் இப்படிப் பயங்கரமான கனவாக உருமாறியது என்று தெரிந்து இருந்தாலும், மனம் ஒரு நிலைக்கு வர மறுத்தது.

'கடவுளே அவனுக்கு எந்த ஆபத்தும் வராமல் காப்பாற்று. அவன் சுகமாக நோய் நொடி இல்லாமல் இருக்க வேண்டும்." என்று பிரார்த்தித்துக் கொண்டாள் ரோஜா.

மறுநாள் காலையில் எழுந்திருக்கும் போதே பொழுது விடிந்துவிட்டது. ரோஜா ஹாலுக்கு வந்து பார்த்தபோது, சங்கரன் கட்டிலில் இழுத்துப் போர்த்திப் படுத்திருப்பதைக் கவனித்தாள். அவள் மனம் இலேசாகி விட்டது. "மாமா வந்துவிட்டார். அவரிடம் சேந்தூ விஷயத்தைச் சொல்லி விட்டு எப்படியாவது, யாருடைய காலைப்பிடித்தாவது சேந்தூவை விடுவிக்கும் வழியைப் பார்க்கணும்" என்று முடிவு செய்தாள்.

சுந்தரி சாவித்திரியின் அறைக்கு வந்து, "ஐம்பது ரூபாய் இருந்தால் கொடு சாவித்திரி. உங்க அண்ணன் திரும்பி வந்தால், கோயில்ல பூஜை செய்யறதா வேண்டிக் கிட்டேன்" என்றாள்.

"ஐம்பது ரூபாயா? என்னிடமா?" சாவித்திரி திகைத்துப் போனவளாய்ப் பார்த்தாள்.

"ஒன்றும் தெரியாதவள் போல் பேசறியே! நெடு நெடுன்னு வளர்ந்த பெண் இருக்கிறாள். அவளுக்குச்



சம்பாதிக்கும் திறமையும் இருக்கு. உன்கிட்டே ஐம்பது ரூபாய் இல்லைன்னா நான் நம்புவேன்னு நினைக்கிறாயா?" வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் சொன்னாள் சுந்தரி.

அசல் விஷயம் என்னவென்றால், இரவு எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, சுந்தரி ரோஜாவின் "பேக்கைத் திறந்து பார்த்தாள். அதில் ரூபாய் நோட்டுகள் தென்பட்டன. அதைப் பார்த்ததுமே அவள் கோயிலில் பூஜை செய்ய எண்ணிவிட்டாள். அதற்குத் தகுந்தாற்போல் சங்கரனும் வீடு திரும்பிவிட்டார். அதான் கடன் என்ற பெயரில் சாவித்திரியிடம் பணம் கேட்டாள் சுந்தரி. சாவித்திரிக்கு இந்த விஷயம் எதுவும் தெரியாது.

"என்கிட்டே எங்க அண்ணி இருக்கு" என்றாள் பயந்து போனவளாய்.

தலைமுடியில் சிடுக்கு எடுத்துக்கொண்டிருந்த ரோஜாவைப்பார்த்த சுந்தரி, "உன்கையிலேயே பணம் இல்லையா?" என்று கேட்டாள்.

"இருக்கு மாமி!" அதற்குள் விஷயத்தை உணர்ந்து கொண்ட ரோஜா இனியும் மறுப்பதில் லாபமில்லை என்பதுபோல் ஒப்புக்கொண்டாள்.

"அப்போ...இப்படிக் கொடு."

ரோஜா பேக்கை திறந்து, சேந்தூ தன்னிடம் கொடுத்த பணத்தைத் தொடாமல், முந்தைய நாள் போஸ்டாபீஸிலிருந்து, தாயின் மருந்துகளுக்காக எடுத்து வந்த ஐம்பது ரூபாயை எடுத்து மாமியின் கையில் வைத்தாள்.

"இன்னும் ஐம்பது ரூபாய் கொடு" என்று அதட்டுவது போல் கேட்டாள் சுந்தரி...

"எதுக்கு மாமி?"

"தண்ணியில கரைந்து குடிக்க! வேற எதுக்கு? ஆயிரம் கேள்வி கேட்கிறாயே? தேவை இருக்கிறதினாலேதானே

கேட்கிறேன். சும்மா ஒண்ணும் கேட்கலை. உன் பணத்துலே சினிமாவுக்கும், ஊர் சுற்றவும் போகமாட்டேன்."

"இதுக்குமேல் நான் தரமாட்டேன் மாமி. இந்தப் பணத்துடன் எனக்கும் வேலையிருக்கு..." ரோஜா பொறுமையைக் கடைபிடித்தவளாய் அமைதியாகப் பதில் சொன்னாள்.

சேந்தா கொடுத்த பணத்தை அவனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, இப்படிச் சம்பாதித்தப் பணம் தமக்கு, தேவையில்லை என்றும், தங்களுக்காகக் கஷ்டப்படவேண்டாமென்றும் சொல்லிவிட, நேற்று இரவே ரோஜா முடிவு செய்திருந்தாள்.

"பார்த்தியா சாவித்திரி! உன் பெண் எவ்வளவு கண்டிப்பாய் பதில் சொல்கிறாள். இந்தப் புத்திசாலித்தனமும், மூளையும் எனக்கு இருந்திருந்தால், இத்தனை நாள் உங்களுக்கு செய்திருப்பேனா? இருக்கிற பணத்தை அவசரத்துக்குக் கேட்டால், அதுக்கு இவ்வளவு பேச்சுக் கேட்கணுமா?" என்று சுந்தரி சாவித்திரி பக்கம் திரும்பிக் கேட்டாள்.

சாவித்திரி எழுந்து வந்து ரோஜாவின் கையில் இருந்த பேக்கை ஒரே இழுப்பில் பிடுங்கிக்கொண்டு, அதை சுந்தரியிடம் கொடுத்தாள்.

"இதில் பணம் ஏதாவது இருந்தால், அது உனக்குத்தான் சொந்தம் அண்ணி...எடுத்துக்க..." என்றாள்.

"அம்மா!" ரோஜா அதை மறுப்பதுபோல் கத்தினாள்.

"நீ வாயை மூடு."

"உனக்குத் தெரியாதும்மா...இந்தப் பணம்..."

"வாயை மூடுன்னு சொன்னேன்."

சுந்தரி பேக்கை எடுத்துக்கொண்டு, வெற்றிகொண்டவள் போல் ரோஜாவைப் பார்த்துவிட்டு, அங்கிருந்து போய் விட்டாள்.



"அந்தப் பணம் உனக்கு ஏது?" களையிழந்த முகத்துடன் கேட்டாள் சாவித்திரி.

"மாமியின் கையில் விழுந்த பிறகு, இனி சொல்வது கூட அநாவசியம்."

"இப்படி வாழறதைவிட, எதிலேயாவது விழுந்து சாகக் கூடாதா ரோஜா. உன் குரல் வளையை நெறித்து உன்னைக் கொன்று தூக்கி எரியும் சக்தியை அந்தக் கடவுள் என் கைகளுக்கு எப்போ கொடுப்பாரோ?"

"எதுக்கும்மா தடவைக்குத் தடவை அப்படிச் சொல்றே? நான் ஒண்ணும் செய்யக்கூடாத வேலை செய்துவிடவில்லை. எனக்கு எந்த வழியும் கிடைக்காதப்ப நீ செய்ய நினைச்ச காரியத்தை நானே செய்துக்கறேன்..." என்று துக்கத்தால் குரல் கம்மிவிட, அழுகையை அடக்கிக் கொண்டு, கண்ணாடிப் பக்கம் திரும்பினாள் ரோஜா.

சுந்தரி கோவிலில் அபிஷேகம், அர்ச்சனை எல்லாம் செய்தாள். மாலையில் ஆர்பாட்டமாய்க் கணவன் அருகில் உட்கார்ந்து கொண்டு சத்யநாராயண பூஜை செய்தாள் வந்தவர்கள் திருப்தியாக சாப்பிட்டுவிட்டு, சுந்தரியின் தாராள குணத்தை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தி விட்டுப் போனார்கள்.

ரோஜாவுக்குச் சோரேல் என்று இருந்தது. ஜன்னலில் முழங்கால்களை கட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள். அந்தப் பணத்துக்காகச் சேந்தா எப்படி கஷ்டப்பட்டு இருப்பான்? அவன் உயிருக்கும் துணிந்து வேலை செய்து, சம்பாதித்த பணம் இப்படிச் செலவாகி விட்டது. ஒரு விதமாய்ப் பார்க்கப் போனால் அது பாவப்பட்ட பணம் தானே? அந்தப் பணத்தால் செய்யப்படும் பூஜைகள் கடவுளுக்குப் போய்ச் சேருமா?

இருக்கும் ஒரு ட்யூஷனும் போய் விட்டதில் ரோஜாவுக்கு ரொம்ப கஷ்டமாகி விட்டது. எத்தனை முயன்றாலும் வேறு

ட்யூஷன் கிடைக்கவில்லை. மாமியிடம் செய்யும் வீட்டு வேலையை, வேறு இடத்தில் செய்தாலாவது, அம்மாவுக்கும் தனக்கும் எந்தக் கஷ்டமும் இல்லாமல் வாழ்க்கை கழிந்து விடும். செந்தூ பெரியவனானால் தம் கஷ்டங்கள் தீர்ந்து விடும் என்று, படிப்பு விஷயத்தில் பெரியவங்க சொல்லுக்குக் கீழ்படிந்தாள். அன்றே பிடிவாதமாய் எதிர்த்துப் படிக்கப் போயிருந்தால், இன்று இப்படி அவஸ்தைப்பட வேண்டி இருக்காது. ஆனால் யாருக்குத் தெரியும்? ஒளிமயமான எதிர் காலம் இருக்கும் என்று எல்லோரும் நம்பி இருந்த செந்தூரின் வாழ்க்கை இப்படித் தடம் புரண்டு போகும் என்று யார்தான் நினைத்தார்கள்?

இப்பவும் தன்னிடம் உடல் வலிமை, உழைப்பு இருக்கு. அதைப் பயன்படுத்தி, தன்மானத்துக்கு இழுக்கு வாராமல் இருக்கும் எந்த வேலையும் செய்ய தான் தயார்! இந்த முறை அனந்தைப் பார்த்தால் தனக்கேதாவது வேலை... இல்லையில்லை... வாழ்க்கை நடத்த வழி வகுக்கும், சொந்தக் கால்களில் நிற்கக்கூடிய ஆதாரம் ஏதாவது காண்பிக்கச் சொல்லிக் கேட்கணும் அனந்தைக் கேட்டால் ஏதாவது ஒரு வழி கிடைக்காமல் போகாது. பரீட்சை மும்முரத்தில் இருந்த அவனைப் பார்த்து ரொம்ப நாளாகி விட்டது. அவனுடைய தேர்வுகள் முடிந்திருக்கும்... பி. ஏ. படிப்புடன் முற்றுப் புள்ளி வைக்கப்போவதாக முன்பே சொல்லி விட்டான். பணம் இருக்கிறவர்களுக்குப் படிப்பு அலட்சியம். இல்லாதவர்களுக்குப் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் இந்த உலகத்தின் போக்கே அதுதானே?

ரோஜாவுக்குச் சில சமயம் அனந்த் விரும்புவது போல் அவனைத் திருமணம் செய்துகொண்டால் என்ன என்று தோன்றும் ஆனால் உடனே உள் மனம் எதிர்ப்புத் தெரிவிக்கும். ஊஹூம்!... அனந்தைக் கணவனாய் தன்னால் கனவிலும் நினைத்துக் கொள்ள முடியவில்லை. அவனிடம் தனக்கு அபிமானம், அன்பு இருப்பது உண்மைதான். ஆனால் செந்தூரிடம் ஏற்படும் உணர்வு போன்றதுதான்



கணவனாய் வர இருப்பவனிடம் பார்த்ததுமே ஏற்படும் இனிமையான அதிர்வுகள், வெட்கத்தைத் தூண்டிவிடும் உணர்வு அலைகள், விருப்பங்கள் எதுவும் இல்லவே இல்லை. அனந்தைத் திருமணம் செய்து கொள்வது என்றால், ஒரு விதமாய் அவனுக்கு அநியாயம் செய்வது போல்தான்.

அனந்திடம் அப்பாவித்தனம், சகஜமாய்ப் பழகும் தன்மை, மற்றவர்களின் கஷ்டங்களைப் பார்த்து இளகி விடும் குணம்... இவற்றை ரோஜா அறியாதவள் அல்ல. பணத்தைத் தண்ணீராய்ச் செலவழிக்கும் அவன் சுபாவமும் அவளுக்குத் தெரியும். அவனைக் கல்யாணம் செய்து கொண்டால், அந்தப் பணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய தேவை ஏற்படும். அதுக்காக அவனுடன் சண்டை போட வேண்டிய நிலைமை உருவாகும் தான் அவனுக்கு மதிப்பு கொடுக்காமல், பணத்துக்கு மதிப்பு கொடுக்கத் தொடங்கினால், பிறகு வாழ்க்கை நரகமாகிவிடும். அனந்தைத் திருமணம் செய்து கொள்ளணும் என்றால், அவனிடம் ஈர்க்கக்கூடிய அம்சம் பணம் ஒன்றுதான் உண்மையைச் சொல்லப் போனால், புதையல் காக்கும் பூதம் போல் அந்தப் பணத்துக்கு விஜய் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருப்பதால், இந்த அளவுக்காவது இருக்கு. இல்லாவிட்டால் இந்நேரத்துக்கு அனந்த் தான தர்மங்களுக்குச் செலவழித்து விட்டு மேலும் கடனில் மூழ்கி இருப்பான். அவனுடைய வாழ்க்கை நல்ல படியாக அமைய வேண்டுமென்றால் சொத்தை நன்றாக நிர்வாகம் செய்யும் திறமை இருப்பவள் தான் மனைவியாக வர வேண்டும். கணவனாய் நினைத்தால் அவனிடம் தனக்குப் பிடிக்காத விஷயங்கள் நிறைய இருக்கு. நட்பு வேறு, கணவன் மனைவி உறவு வேறு. தன்னை மனைவியாய் அடைய வேண்டுமென்று அனந்த் விரும்புவதாகச் சமீபத்தில் தெளிவாகப் புரிந்து கொண்ட ரோஜா, அவன் மனம் நோகாமல், அந்த அபிப்பிராயத்திலிருந்து எப்படி மாற்றுவது என்று யோசிக்கத் தொட

கினாள். இது ரொம்ப நுட்பமான விஷயம்... ரொம்ப மென்மையாய் இதற்குத் தீர்வு காணவேண்டும். அனந்தைத் திருமணம் செய்து கொண்டால், தான் மனம் விட்டுப் பேச இந்த உலகில் ஒருவருமே இருக்க மாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்தாள் ரோஜா.

# 17

சென்னையில் அடிக்கடி ஒளியக் கண்காட்சி நடக்கும் கலை நிலையத்தில் இன்று ஃப்ளவர் ஷோ நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஃப்ளவர் ஷோவைப் பார்க்க வந்தவர்களில் பெண்கள் கூட்டம் அதிகமாய் இருந்தது.

பகல் நேரங்களைக் கழிப்பது பெரிய பிரச்னையாகி விட்ட லாவண்யாவுக்கு, இம்மாதிரி கண்காட்சிகள் என்றால் ரொம்ப மகிழ்ச்சியாய் இருக்கும். அன்று காலையிலேயே அழகாக அலங்கரித்துக் கொண்டு காரில் தனியாகக் கிளம்பி விட்டாள். அந்தக் கண்காட்சியில் லேடீஸ் கிளப்பின் சார்பில் ஒரு நாட்டிய நிகழ்ச்சியை நடத்த, லாவண்யா பொறுப்பை ஏற்று இருந்தாள். அதற்காக ஃப்ளவர் ஷோ நடந்த நாட்களில் லாவண்யா அங்கு சென்று ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

லாவண்யா கலை நிலையத்துக்குப் போகும் வழியில் கிஷோர் எதிரே வந்தான். அவனைப் பார்த்தும் பாராமல் போய்விட எண்ணியவளுக்கு, அவன் 'விஷ்' செய்ததால், வேறு வழியில்லாமல் காரை நிறுத்த வேண்டியதாயிற்று. சமீபகாலத்தில் லாவண்யாவுக்கு அவனைக் கண்டால் ரொம்ப எரிச்சலாய் இருந்தது. அவனுக்குத் தன்னிடம் விருப்பம் ஏற்பட்டதை உணர்ந்த போது லாவண்யாவுக்கு



முதல் முதலில் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால் போகப் போக அந்த விருப்பம் எல்லை மீறிப் போய் மனைவி மக்களை அலட்சியப் படுத்துவதோடு, கிளினிக்கையும், நோயாளிகளையும் புறக்கணித்த விஷயம் தெரிந்த போது அவன்பால் எரிச்சல்தான் ஏற்பட்டது. பெண்களிடம் அசடு வழியும் ஆண்கள் என்றால் லாவண்யாவுக்கு வெறுப்பு என்பது கிஷோருக்குத் தெரியாது.

இன்று கிஷோர் லிஃப்ட் கேட்டபோது, லாவண்யா விருப்பமில்லா விட்டாலும், அவனைக் காரில் ஏற்றிக் கொண்டாள். அவன் முன் போல் உரிமையுடன் பழக முற்பட்ட போது, உள்ளூர எரிச்சலுற்றாலும், வெளியில் சலனம் காட்டாமல் இருந்து விட்டாள்.

காரை விட்டு இறங்கும் போது கிஷோர் கேட்டான். "தேவிபாலாவில் நல்ல படம் இருக்கு. மாலை ஷோவுக்குப் போகலாமா?"

"ஊஹூம்... எங்க அப்பா ஊரிலிருந்து வந்த பிறகு வெளியில் போவதை நிறுத்தி விட்டேன். அவருக்கு உடம்பு வேறு சரி இல்லை..." பட்டுக் கொள்ளாமல் பதில் அளித்தாள் லாவண்யா.

கிஷோரை இறக்கிவிட்டு, கலை நிலையத்துக்கு வரும் போது, நன்றாகப் பொழுது சாய்ந்து விட்டது. அந்த இடம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

லாவண்யா உள்ளே நுழைந்தாள். பூக்களைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் பார்வைகள் செதுக்கிய சிற்பம் போல் மிளிர்ந்த லாவண்யா பக்கம் திரும்பின. இது போல் எல்லோருடைய கவனத்தையும் தன்பால் ஈர்த்துக் கொள்வது லாவண்யாவுக்கு ரொம்ப பிடித்தமான விஷயம்.

அவள் உடுத்திக் கொண்டிருந்த கரும்பச்சை பட்டுப் புடவை மிகவும் விலை உயர்ந்தது. அதைக் கட்டிக் கொண்ட விதத்திலும் நேர்த்தி தெரிந்தது.

பால் போன்ற வெண்மை நிறச் சங்கு கழுத்தில் சிவப்புக்கல் பதக்கம் கொண்ட முத்து மாலை அழகுக்கு அழகூட்டுவதாய் இருந்தது. போட்டுக் கொண்டிருந்த நகைக் கலைக்குச் சமமாய் அவள் கண்கள் ஒளி வீசிக் கொண்டிருந்தன.

எல்லோரும் தன்னையே கவனித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தும், உணராதவள் போல், பூக்களையே கூர்ந்து பார்த்துக் கொண்டு, முன்னேறிய லாவண்யா, தனக்கு எதிரில் வந்த குண்டு மனிதருக்கும், அவர் மனைவிக்கும் வழிவிட சற்றே நகர்ந்தாள். சட்டென்று நகர்ந்ததில் குதிகால் உயர்ந்த செருப்புகள் தடுக்கி கீழே விழப் போனாள்.

தன்னைத் தானே சமாளிக்க முயன்று கொண்டிருக்கும் போதே, யாருடைய கையோ, பின்னாலிருந்து அவளைப் பிடித்து, சரியாக நிற்க வைத்தது.

"ஐயாம் சாரி... தாங்க்யூ." பின்னால் திரும்பி, தனக்கு உதவி புரிந்தவனைப் பார்த்துச் சொன்னாள்.

"இட்ஸால் ரைட்" என்று அலட்சியமாய் மொழிந்தவன் அவளைத் தாண்டி ஓரடி முன்னால் வைத்தான்.

லாவண்யா ஒரு கணம் அவனையே பார்த்துக் கொண்டு நின்று விட்டாள். ஒல்லியாய், உயரமாய், க்ரே கலர் ஃபுல் சூட்டில் இருந்தான். அந்த இளைஞன் கண்களுக்குக் கறுப்புக்கண்ணாடி, அலை அலையாய் அடர்த்தியான கிராப் தலையுடன் இருந்தான்.

முன் நோக்கிப் போகப் போனவன் ஏனோ பின்னால் திரும்பிப் பார்த்தான். லாவண்யா தன் பக்கமே பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்து, புன்முறுவலித்தான். தன்னையறியாமல் லாவண்யாவும் புன்முறுவல் செய்தாள். அவன் மக்கள் கூட்டத்தில் கலந்து விட்டான். லாவண்யாவின் இதயம் வேகமாய்த் துடித்தது. மனமெல்லாம் என்னவோ போல் ஆகி விட்டது. அவன் சிரிப்பு அவளை



வசீகரித்து விட்டது. அவனை மற்றொரு முறை பார்க்க வேண்டுமென்ற விருப்பம் மேலோங்கியது. அவன் மறுபடியும் கட்டாயம் தென்படுவான் என்று தோன்றிற்று. லாவண்யா ஊகித்தது போலவே, அவன் எதிர் பக்கத்திலிருந்து பூக்களைப் பார்ப்பது போல், லாவண்யாவுக்கு வெகு அருகில் வந்து நின்று கொண்டான். லாவண்யாவின் இதயம் தன் வசமிழந்தது.

இருவரும் அடுத்தவர் இருப்பதைக் கவனிக்கவில்லை என்பது போல் பாவனை புரிந்து கொண்டு பூக்களையே கூர்ந்து பார்த்தனர்.

கடைசியில் அவன், "இந்தப் பூக்கள் ரொம்ப அழகாய் இருக்கு."

"ஆமாம்." உடனே சொன்னாள் லாவண்யா.

அவன் அதிர்ச்சி அடைந்தவன் போல் தலையை உயர்த்தினான். லாவண்யாவும் வியப்பு அடைந்தவள் போல் பார்த்தாள். இருவரும் எதிர்பாராமல் மறுபடியும் சந்தித்து கொண்டவர்கள் போல் "அட! ஆச்சரியமாய் இருக்கே" என்றார்கள்.

லாவண்யாவின் அதரங்களில் புன்முறுவல் நெளிந்தது. இருவரும் சேர்ந்து மற்ற ஸ்டால்களைப் பார்த்தார்கள். ரொம்ப நேரம் கழித்து வெளியே வந்தார்கள்.

"நீங்க எப்படிப் போவீங்க? கார் இருக்கா?" என்று கேட்டாள் லாவண்யா.

இதழ்களில் குறும்பு மின்ன அவன் சிரித்தான், "காரா? எனக்கா? ஊஹூம். நான் ரொம்ப ஏழை."

லாவண்யா ஒரு நிமிடம் விலை உயர்ந்த அவனுடைய உடைகளைப் பார்த்தாள். உடனே கலகலவென்று நகைத்தாள். "நல்ல ஆளு நீங்க. உங்களைப் போன்றவங்க தங்களை ஏழைன்னு சொன்னால், இந்த நாட்டில் பணக்காரங்ககிட்டே எவ்வளவு பணம் இருக்குமோ என்று

சந்தேகம் வந்து விடும். உங்களுக்கு இன்று கார் இல்லாமல் போனது என் அதிருஷ்டமாய் நினைச்சுக்கறேன். வாங்க நான் 'டிராப்' செய்கிறேன்'' என்றாள்.

''உங்களுக்கு வீண் சிரமம் எதுக்கு?'' தயங்குவது போல் சொன்னான்.

''இந்த மாதிரிச் சிரமங்கள் என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''சிரிக்கும் போது நீங்க இன்னும் அழகாய் இருக்கீங்க.''

''தாங்க்ஸ் ஃபார் த காம்பளிமெண்ட்.''

அவனுடைய பார்வை தன் கழுத்தில் இருந்த முத்து மாலைமீது நிலைத்து விட்டதை லாவண்யா உணரவில்லை. கண்களுக்குக் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்ததால், அவன் பார்வை எந்தப் பக்கம் இருக்கு என்பதை அவளால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இருவரும் வந்து காரில் உட்கார்ந்து கொண்டார்கள்.

காரை செலுத்திக் கொண்டே லாவண்யா கேட்டாள். ''உங்களுக்கு காபி குடிக்கும் பழக்கம் இருக்கா?''

''ஊஹூம்.''

''போகட்டும், யாருக்காவது காபி வாங்கித் தரும் பழக்கமாவது இருக்கா?''

''ஊஹூம்.''

''குட்.. உங்களுக்கு எல்லா நல்ல பழக்கங்களும் இருக்கு. நான் இதுக்கு நேர் எதிர்.''

அவன் பதில் சொல்லவில்லை.

லாவண்யா காரை பெரிய ஹோட்டலுக்கு முன் நிறுத்தினாள்.

அவன் மறப்பது போல் சொன்னான், ''நோ...நோ... நீங்க என்னை மன்னிக்க வேண்டும். எனக்கு வேறே எங்கேஜ்மெண்ட் இருக்கு இன்னொரு முறை கட்டாயம்...''



''இன்னொரு முறை நம்முடைய சந்திப்பு நிகழும் என்று நினைக்கிறீங்களா?''

''நீங்க விருப்பப் பட்டால் கட்டாயம் நிகழும்.''

''ஓ கே! என்னோட சேர்ந்து காபி சாப்பிட வேண்டும் என்ற 'பிராமிஸை' நினைவில் வைத்துக் கொண்டு, இப்போ உங்களை விட்டுடறேன். எங்கே உங்களை இறக்கி விடட்டும்?''

''பாண்டி பஜாரில்.''

அவன் சொன்ன வழியில் காரை செலுத்திக் கொண்டே கேட்டாள், ''உங்கள் பெயர்?''

''ஜேம்ஸ்.''

''உங்க வீடு எங்கே இருக்கிறது?''

''இங்கிருந்து ரொம்பத் தொலைவு.''

''ரொம்பத் தொலைவுன்னா!''

அவன் உதடுகளில் விரக்தி கலந்த புன்னகை மலர்ந்தது. ''உங்களால் வர முடியாத, என்னால் அழைத்துப் போக முடியாத தொலைவு... போதுமா!''

''நீங்க பேச்சில் ரொம்பக் கெட்டிக்காரர் போல் தெரிகிறது. குடும்பத்துடன் இருக்கீங்களா?''

''இல்லை... தனி ஆள் தான்...''

லாவண்யா நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டாள்.

''என்ன செய்யறீங்க?''

''உண்மையைச் சொல்லட்டுமா?''

காதுகளில் இருந்த முத்து ஜிமிக்கி அழகாக அசைய தலையை அசைத்தாள் லாவண்யா.

''இருட்டு வியாபாரம்.''

அவன் ஊகித்தது போல் லாவண்யா தலையை உயர்த்திப் பார்க்கவில்லை. பதட்டப்படவும் இல்லை.

சற்று நேரம் கழித்துப் புன்முறுவல் செய்தாள். "இப்பொ நம் நாட்டில் நிறைய பேர் அந்த வியாபாரத்தில் தான் இருக்காங்க. அதுக்கு ரொம்பத் திறமை வேண்டும். அது உங்களிடம் நிறைய இருக்குன்னு நினைக்கிறேன்."

அவன் புரியாதவன் போல் பார்த்தான்.

அவன் சொன்ன இடத்தில் லாவண்யா காரை நிறுத்தினாள். அவன் இறங்க முற்படும் போது லாவண்யா நினைவுப் படுத்தினாள். "எனக்குக் கொடுத்த வாக்கை மறந்துவிட மாட்டீங்களே."

"மறந்து போக முடியுமா?" அவன் பார்வை மற்றொரு முறை லாவண்யாவின் கழுத்தின் மீது நிலைத்தது.

"அப்பொ, நாளை காலை பத்து மணிக்கு ஃப்ளவர் ஷோ வாசலில் உங்களுக்காகக் காத்திருப்பேன்."

"தாங்க்ஸ்" அவன் கீழ இறங்கி கதவைச் சாத்தினான். லாவண்யா மின்னல் ஒளி வீசும் கண்களால் அவனை ஒருமுறை பார்த்துவிட்டு, காரை ஸ்டார்ட் செய்தாள். அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, லாவண்யாவின் கார், கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டது.

"அப்பப்பா! என்ன பெண் இவள்? ஆண்களிடம், பெண்கள் இவ்வளவு உரிமையுடன் எங்கேனும் பழகுவார்களா?" வியப்பு மேலிட மனதில் எண்ணிக் கொண்டான், ஜேம்ஸ் என்று சற்றுமுன் தன் பெயரைச் சொன்ன சந்திரன்.

புன்முறுவல் பூத்த லாவண்யாவின் ரோஜா நிற இதழ்களைவிட, சங்கு போன்ற கழுத்தில் மின்னிய விலை உயர்ந்த முத்து மாலை தான் சந்திரனின் கண்கள் முன் நாட்டியமாடிற்று.



# 18

அன்று அனந்த் வந்ததும் வராததுமாய் ரோஜாவைத் தன்னுடன் வெளியே வரச் சொல்லி அவசரப் படுத்தினான்.

"என்ன விஷயம்? என்ன நடந்தது?" சீக்கிரமாகத் தயாராகிக் கொண்டே, ஆர்வமும், பதட்டமும் கலந்த குரலில் கேட்டாள் ரோஜா.

"சொல்றேன். நீ சட்டுன்னு கிளம்பு. வெளியில டாக்ஸி 'வெயிட்டிங்கில்' இருக்கு."

ரோஜா உடனே கிளம்பி விட்டாள்.

சமீப காலமாய் ரோஜாவிடமிருந்து பத்தோ இருபதோ பணம் கிடைத்து வருவதால், சுந்தரி முன் போல் ரோஜாவைக் குத்திப் பேசுவதை விட்டுவிட்டாள். சாவித்திரி ரோஜாவின் நலனைப் பற்றிய கவலையை என்றோ விட்டு விட்டாள். சங்கரனுக்குச் சுருட்டு பிடிக்கும் பழக்கம் இருந்தது. இது தெரிந்த அனந்த் இரண்டு, மூன்று தடவை அவருக்காக உயர் ரகமான சுருட்டுக் கட்டைக் கொண்டு வந்து கொடுத்தான். அவரைப் பார்த்தால் போதும், எழுந்து நின்று மரியாதையாக, "வணக்கம் மாமா" என்று பவ்விசாக நிற்பான். வாழ்க்கையில் என்றும், எதற்கும் இது போன்ற மதிப்பு மரியாதை பெற்றிராத சங்கரன், திக்குமுக்காடிப் போய், "உட்கார்ந்து கொள் தம்பி, ரோஜா உள்ளே இருக்கிறாள் போலிருக்கு" என்பதுடன் "ரோஜா! ரோஜா! அனந்த் வந்திருக்கான பாரு" என்று உள்ளே குரல் கொடுப்பார்.

இந்த விதமாக அனந்த் அந்த வீட்டில் கொஞ்சம் கொஞ்சமாக உரிமையை வளர்த்துக் கொண்டான். ரோஜாவைச் சந்திக்க முன் போல் அவன் அவஸ்தைப்பட வேண்டாம். நேராக வீட்டுக்கே வந்து விடுவான்;

ரோஜா அனந்துடன் டாக்ஸியில் அமர்ந்து கொண்டே "எங்கே போகப் போகிறோம்?" என்று கேட்டாள்.

"சொல்றேன் இரு! டிரைவர் ஸெய்பலாமு" என்றான் அனந்த். அவன் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்படையாய்த் தெரிந்தது.

'என்ன விஷயம்னு சொல்லக்கூடாதா! 'சஸ்பென்ஸில்' என் உயிரே போய்விடும் போலிருக்கே" என்றாள்.

"விருந்து சாப்பிடும் முன், ருசியைப் பற்றிக் கேட்பானேன்?" என்றான்.

டாக்ஸி பத்து நிமிடங்கள் கழித்து ஒரு வீட்டின் முன் நின்றது. "யச்வந்த் ராவ்" என்ற 'நேம் பிளேட்'டைப் பார்த்த ரோஜா "வக்கீல் வீட்டுக்கு எதுக்கு அனந்த்?" சந்தேகமாய்க் கேட்டாள்.

"இறங்கு, முதலில்."

ரோஜா இறங்கியதும் அனந்த் டாக்ஸியைக் காத்திருக்கச் சொன்னான். இருவரும் படி ஏறினார்கள். அனந்த் வாசற்கதவு அருகில் இருந்த 'காலிங் பெல்லை' அழுத்தினான். பத்து, பன்னிரெண்டு மதிக்கத்தக்க பையன் ஒருவன் வந்து கதவைத் திறந்தான்.

"அப்பா இருக்காங்களா?" என்று கேட்டான் அனந்த்.

"இருக்காங்க." என்றான்.

"அனந்த் வந்திருக்கேன்னு சொல்லு." என்றான்.

பையன் தலை அசைத்துவிட்டு, அவர்களை அமரச் செய்து உள்ளே போய் விட்டான்.

"எதுக்கு அனந்த்?" கலவரமாய்க் கேட்டாள் ரோஜா.

"ஷ்—கொஞ்சம் இரு. அவரு வராப்பல இருக்கு." என்றான்.

ரோஜா வீட்டைப் பரிசீலித்துக்கொண்டு உட்கார்ந்தாள். வெளியில் இருந்து பார்ப்பதற்கு வீடு பழசாகத்



தெரிந்தாலும், உள்ளே நவீனமாய், வசதிகள் நிறைந்ததாய் இருந்தது.

சற்றுப் பருத்த உடலுடன், குள்ளமாய், இரட்டை நாடியாய், நரைத்துப் போன தலைமுடியுடன் வக்கீல் யச்வந்த் ராவ் வந்தார். அனந்த் சட்டென்று எழுந்து அவரை வணங்கினான். ரோஜாவும் எழுந்து நின்று கொண்டாள்.

அனந்த் ரோஜாவைப் அறிமுகப்படுத்தினான். "இந்தப் பெண் என்னுடைய வருங்கால மனைவி. பெயர் ரோஜா. ஒரு முறை என் சொத்து நிலவரங்களைப் பற்றி உங்கள் வாயால் தெரிந்து கொள்ள நினைக்கிறாள். சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளைக் காண்பித்து விடுங்கள்.

ரோஜா திகைத்துப் போனவளாய் அப்படியே நின்று விட்டாள். அவர் அனந்த் பக்கமும், ரோஜா பக்கமும் மாறி மாறிப் பார்த்தார். கம்பீரமாக இருந்த அவர் முகம் சாதுவான பூனைபோல் மாறியது. "உட்காருங்க" என்றவர், அலமாரியிடம் சென்று, சில தஸ்தாவேஜுகளைக் கொண்டு வந்து, சொத்து விவரங்களைப் படிக்கத் தொடங்கினார். நடுநடுவில் தலையை உயர்த்தி, கவனிக்கிறாளா என்பது போல் ரோஜா பக்கம் பார்த்தார்.

ரோஜாவுக்கு இதெல்லாம் என்னவோ போல் இருந்தது. அந்த வக்கீல் ஒரே பார்வையில் தன்னைத் தாழ்த்தி விட்டார். இந்த அனந்த் தன்னைக் கேட்காமல், கலந்து ஆலோசிக்காமல், தன் அபிப்பிராயம் தெரிந்து கொள்ளாமலே இப்படிச் செய்து விட்டானே!

வக்கீல் சொல்லிக் கொண்டிருந்த விவரங்களை கேட்பதில் ஆழ்ந்து போனாள்.

"செங்கல்பட்டிற்கு அருகில் முப்பது ஏக்கர் கரும்பு தோட்டம், தஞ்சாவூரில் இருபது ஏக்கர் நஞ்சை நிலம், ஷுகர் ஃபாக்டரியில் ஷேர்கள், சென்னையில் இரண்டு

வீடுகள், மார்க்கெட் தெருவில் எட்டு கடைகள் இருக்கு— இவற்றின் மாத வாடகை இருபது ஆயிரம் மேல் வரும். இதைத் தவிர வங்கியில் ஃபிக்ஸ்ட் டிபாஸிட்டில் எட்டு லட்சமும், சேவிங்க்ஸ் அக்கவுண்டில் பத்தாயிரம் ரூபாயும் இருக்கு.''

ரோஜா வாயடைத்துப் போனவளாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளால் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. அனந்த் இவ்வளவு பணக்காரனா இத்தனை சொத்துக்கு அதிபதியாய் இருக்கிறவனா? இவ்வளவு எளிமையாய், சகஜமாய் தன் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறான்! ரோஜா, அனந்த் பக்கம் திரும்பி, கண்கள் அகல விரிய அவனைப் பார்த்தாள்.

வக்கீல் சொத்து விவரங்களைப் படித்து முடித்த பிறகு ''உங்களுக்கு இன்னும் ஏதேனும் விவரங்கள் தேவையா?'' என்று கேட்டார்.

ரோஜாவால் பதில் பேச முடியவில்லை.

அனந்த் மேஜை மீது சற்றுக் குனிந்து சொன்னான். ''இந்தப் பெண்ணை நான் திருமணம் செய்து கொள்வதில் என் அண்ணனுக்கு விருப்பமில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனுடைய ஆட்சேபணை இருப்பதால், என் திருமணம் ஆன பிறகு... ஏதாவது...'' சந்தேகமாய்ப் பார்த்தான்.

வக்கீல் மறுப்பது போல் தலை அசைத்தார். ''ஊஹூம், ஒன்றும் தடைபடாது. உன் சொத்துமீது முழு உரிமையும் உனக்குத்தான். உங்க தாயார் உயிலில் உனக்குத் திருமணம் ஆகும் வரை சொத்து நிர்வாகம் விஜயிடம் இருக்க வேண்டும் என்றும், ஆன பிறகு அவனை கலந்து ஆலோசிக்காமல் நீ எதுவும் செய்யக்கூடாது என்றும் விரும்புவதாக எழுதியிருக்காங்க... விருப்பம் வேறு, உரிமை வேறு''

அனந்தின் முகம் மலர்ந்துவிட்டது.



''அப்படின்னா... எங்களுடைய திருமணத்துக்கு எந்த இடையூறும் வராது இல்லையா!''

''வராது'' அவர் இன்னொரு முறை ரோஜா பக்கம் பார்த்தார். ரோஜாவுக்கு அவருடைய பார்வை சுருக்கென்று தைத்தது. அந்தக் கண்களில் ரோஜாவிடம் துளிக்கூட மரியாதை தென்படவில்லை.

அனந்த் எழுந்து கொண்டே கேட்டான், ''விஜய் என் மீது வழக்கு ஏதாவது போட...''

''வாய்ப்பு இல்லை.''

அனந்த் கையை நீட்டி, ''தாங்க்ஸ் சார்! வர்றேன்'' என்றான். அவர் பட்டும் படாதவர் போல் அவன் கையைப் பற்றி குலுக்கினார்.

அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வரும் போது ரோஜாவுக்கு அவருடைய பார்வை, கூர்மையான அம்பு போல் முதுகைத் துளைப்பது போல் தோன்றியது. இருவரும் வெளியே வந்ததும் ரோஜா, ''அனந்த்! இதெல்லாம் என்ன?'' என்றாள்.

''சொல்லத்தானே போகிறேன்... வா...'' என்றும் இல்லாத விதமாய் அனந்த் உரிமையுடன் ரோஜாவின் கையைப் பற்றி, அவளை டாக்ஸி வரை அழைத்து 'ஏறு'' என்றான்.

ரோஜா அமர்ந்து கொண்ட பிறகு, அனந்தும் உட்கார்ந்து கொண்டு, டிரைவரிடம் ஏதோ முகவரியைச் சொல்ல டாக்ஸி வேகமாய்க் கிளம்பியது.

அனந்த் ரோஜாவின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு மென்மையாய்ச் சொன்னான். ''ரோஜா! என்னைப் பற்றிய விவரங்களை இப்போ உனக்குத் தெரியும். இந்த உலகில் நிறைய பேர் பணத்துக்காக எந்த காரியமும் செய்வார்கள். நீ பணத்துக்காவது என்னைக் கல்யாணம் செய்து கொள்.''

''அனந்த்!''

''சமீபகாலமாய் உன்னைப் பற்றித்தான் ஒவ்வொரு நிமிஷமும் யோசிச்சுக் கிட்டிருக்கேன். பாலைவனமாய் இருந்த என் வாழ்க்கையில் இளம் தென்றலாய் நீ வந்தாய்! புதிய ஆசைகள் துளிர்த்தன. மனம் முழுவதும் உற்சாகம் நிரம்பி விட்டது. உன்னிடம் ஏதோ சக்தியிருக்கு. அது என்னை ஆட்கொள்கிறது. நீ என்னுடையவளாக வேண்டும். நீ மாட்டேன்னு சொன்னால் என் வாழ்க்கையே சூனியமாகி விடும்.''

''அனந்த்! அப்படிச் சொல்லாதே.'' கலவரமாய்ச் சொன்னாள் ரோஜா.

''சம்மதம் என்று சொல்லு ரோஜா!''

''என்னை யோசிக்கவிடு'' என்றாள்.

''உன் யோசனை என்னிக்குமே முடிவடையாது. சுயமாய் முடிவு எடுக்க முடியா விட்டால், அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடு. நான் இல்லா விட்டாலும், என் பணமாவது உன்னை ஈர்க்கவில்லையா ரோஜா!'' என்றான்.

''உன் பணத்துக்காக உனக்கு மனைவியாக வருபவள் உன்னைச் சுகமாக வாழவிடமாட்டாள். உன்னை உனக்காகவே நேசிப்பவள் தான் உனக்கு மனைவியாய் வரணும்.''

''விஜய் போலவே பேசுகிறாய்.''

விஜயின் பிரஸ்தாபனை வந்ததும் ரோஜா நிமிர்ந்து உட்கார்ந்தாள். பிறகு நிதானமாய், தான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும், அவனுக்கு முழுவதுமாகப் புரிய வேண்டுமென்பது போல் நிதானமாகச் சொல்லத் தொடங்கினாள் ரோஜா.

''இதோ பாரு அனந்த்! விவரம் புரிந்த நாளிலிருந்து இன்றுவரை அக்கம் பக்கத்து மனிதர்களுடன், மாமியுடன்



24166
4114288

சூழ்நிலையுடன் போராடிக் கொண்டே வாழ்ந்தேன். இனி என்னால் முடியாது [illegible] திருமணம் ஆன பிறகாவது நிச்சிந்தையாய், நிம்மதியாய் கணவனின் நிழலில் வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். சொத்து, சுகம், ஆடம்பரம் எதுவும் வேண்டாம். அன்பும், அரவணைப்பும் வேணும். அன்பைப் பகிர்ந்து கொள்ளும் அனுபவம் வேண்டும்.''

''அதெல்லாம் என்னிடம் உனக்குக் கிடைக்கும் ரோஜா! நான் ப்ராமிஸ் செய்யறேன்.''

''எனக்கு நம்பிக்கை இல்லை அனந்த்!''

''நம்பிக்கை இல்லையா ஏன்?'' அனந்த் முகத்தில் ஏமாற்றம் தெளிவாய்த் தெரிந்தது.

''உன்னுடன் திருமணமான அடுத்த விநாடியிலிருந்து நான் உங்க விஜயுடன் சண்டை போடணும். அது என்னால் முடியாது.''

''அப்படி நடக்க விடமாட்டேன் ரோஜா! நமக்கு இடையே அவன் வர வாய்ப்பே இல்லை. எல்லாம் உன் இஷ்டப்படி தான் நடக்கும்.''

''வேண்டாம் அனந்த்! விஜயோட இல்லா விட்டால், உன்னுடனாவது சண்டை வரும்.''

''என்னுடனா! உனக்கா! நமக்குள் சண்டையா?'' அனந்த் சிரித்து விட்டான்.

இதற்குள் டாக்ஸி ஒரு வீட்டின் முன் வந்து நின்றது.

''இதென்ன? இங்கே எதுக்கு வந்திருக்கிறோம்? இது யாரோட வீடு? வெளியில் எட்டிப் பார்த்துக் கொண்டே கேட்டாள் ரோஜா.

''இறங்கு, சொல்கிறேன்'' என்றான் அனந்த். ரோஜா இறங்கினாள்.

அந்தச் சாலை விசாலமாய், துப்புரவாய் இருந்தது. கண்ணுக்கு எட்டிய வரை தென்பட்ட அந்தச்சாலைக்கு

இருபுறமும் பெரிய பெரிய பங்களாக்கள் இருந்தன. அழுக்கான சூழ்நிலையில், குறுகலான தெருவில் குடியிருந்த ரோஜாவுக்கு, ஒரு நிமிஷம் இந்தத் தெருவும், சூழ்நிலையும் சுவர்க்கம் போல் தோற்றமளித்தன. அனந்த் டாக்ஸிக்குப் பணம் கொடுத்து அனுப்பி விட்டான்.

## 19

"இந்த வீட்டுக்கு வரப்போகும் மருமகள் நீ! உன் வீட்டை ஒரு முறை பார்த்துக் கொள்!" என்றான் கேட்டைத் திறந்து கொண்டே.

அந்தத் தெருவில் இதுதான் சின்ன வீடாக இருக்க வேண்டும். உள்ளே காலடி எடுத்து வைத்த ரோஜா, ஒரு கணம் நாலாபக்கமும் கண்களைச் சுழற்றிப் பரிசீலித்தாள். சின்னதாக இருந்தாலும் அழகாகப் பராமரிக்கப்பட்டப் பூந்தோட்டம் வீட்டுக்கு இருபுறமும் காலியிடம் இருந்தது. வராண்டாவில் நான்கு பிரம்பு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

சட்டைப் பையிலிருந்து சாவியை எடுத்து அனந்த் பூட்டைத் திறந்து வாசற்கதவை அகலமாகத் திறந்தான். முன் அறையில் காலடி எடுத்து வைத்த ரோஜா ஒரு நிமிஷம் அப்படியே நின்றுவிட்டாள். தரையில் சிவப்பும் நீல வர்ணமும் கலந்த அழகிய, பூ வேலைப்பாடு மிகுந்த, விலை உயர்ந்த கம்பளம் விரிக்கப்பட்டு இருந்தது. அறை நடுவில் அழகான சோபா செட், கதவு, ஜன்னல்களில் தொங்கிய திரைச் சீலைகள், கீழே விரிக்கப்பட்ட கம்பளம் எல்லாமே மேட்சிங்காய் இருந்தன. அந்த அறை பார்க்க எளிமையாகவும், அதே சமயத்தில் அற்புதமாகவும் இருந்தது.



டிராயிங் அறையை ஒட்டி விஜயின் ஆபீஸ் அறை இருந்தது. முன் அறையைத் தாண்டி உள்ளே போனால், கொஞ்சம் பெரிய ஹால்... அதை அடுத்து சமையல் அறை.

"இதான் எங்க சமையல் அறை" வெறுமே சாத்தி இருந்த கதவுகளைத் திறந்து கொண்டே சொன்னான். அவன் பின்னாலேயே நின்றிருந்த ரோஜா உள்ளே எட்டிப் பார்த்தாள். வியப்பினால் அவள் கண்கள் அகல விரிந்தன. அந்த அறை மற்ற அறைகளைவிடத் தூய்மையாய் இருந்தது. மேடைமீது காஸ் ஸ்டவ், அழகாக அடுக்கி வைக்கப்பட்ட பாத்திரங்கள், தட்டுகள் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தன. அலமாரியில் மளிகை சாமான்கள் நிரம்பிய பாட்டில்கள், சமையலுக்குத் தேவையான அரிவாள்மனையிலிருந்து, தேங்காய் துருவி, கை துடைக்கும் துணி வரை... எல்லாம் கண்ணுக்கு எதிரில் நேர்த்தியாக அடுக்கி இருந்தன. புதிதாக உள்ளே வந்தவர்கள் கூட சட்டென்று சமையலை முடித்து விடலாம். பெண்கள் இருக்கும் வீட்டில் கூட இவ்வளவு சுத்தமும், நேர்த்தியும் இருக்காதோ என்னவோ! அந்த வீட்டையும், அதை அழகாக வைத்திருந்த நேர்த்தியையும் பார்த்தால், அந்த வீட்டுத் தலைவி இதெல்லாம் செய்துவிட்டு, வெளியில் சென்றிருப்பது போலவும் எந்தக் கணமும் திரும்பி விடுவாள் என்பது போலவும் தோன்றியது.

"இதெல்லாம் யாருடைய வேலை?" பாராட்டுவது போல் சொன்னாள் ரோஜா.

"வேறு யாரு? எங்க விஜய்தான்! அவனோட ரொம்ப கஷ்டம். எடுத்த பொருளை அதே இடத்தில் வைக்கணும். அவனுக்கு... சின்ன காகிதம் கீழே விழுந்தாலும், உடனே குப்பைக் கூடையில் போட்டுவிட்டுத்தான் மறுவேலை. சில சமயம், பொருட்களை இடம் மாற்றி வைத்து விட்டு நான் தான் திட்டு வாங்குவேன்..." என்றான் அனந்த்.

"நீ எந்த விஷயத்தில்தான் அவனிடம் கெட்டு வாங்காமல் இருக்கே" மனதில் எண்ணிக் கொண்டாள் ரோஜா.

இதெல்லாம் விஜயோட திறமையென்று அனந்த் சொன்னாலும், ரோஜாவின் மனம் அதை ஒப்புக்கொள்ள மறுத்தது. இருந்தாலும் இதென்ன? ஆண்கள் மட்டும் இருக்கும் வீடு என்றால், கனேபரமாய், பார்த்ததும் பெண் பிள்ளையில்லாத வீடு என்று தெரிய வேண்டாமா? இந்த வீடு இருக்கும் நேர்த்தியைப் பார்த்தால் இந்த வீட்டுத் தலைவனுக்கு ஒரு பெண்ணின் உதவி தேவைப்படாது போல் தோன்றுகிறது.

இவ்வளவு கச்சிதமாய், ஒழுங்கு முறையாய் வீட்டை நிர்வகிக்கும் அனுக்கு உண்மையிலேயே ஒரு பெண்ணின் தேவை ஏற்படாது என்பதோடு, அவள் இருந்தாலும் லட்சியப்படுத்த மாட்டான் என்று தோன்றியது. இம்மாதிரி இருப்பவர்கள் தனிமையில், மனைவியின் அருகாமையிலும் நெகிழமாட்டார்கள்... பிரம்மசாரிகளின் வீடு இவ்வளவு துப்புரவாய் இருந்தது ரோஜாவுக்குப் பிடிக்கவில்லை."

"உங்க விஜய்தான் இதெல்லாம் செய்தானா? பளபளக்கும் தட்டுகள், கிண்ணங்கள் அவன் தேய்த்து வைத்ததுதானா! வீட்டு வேலைகளை நன்றாகச் செய்வான் போலிருக்கே?" என்றாள் ரோஜா.

"எங்க விஜய் பாத்திரங்களைத் தேய்ப்பதா?" புரியாதவன் போல் பார்த்தான் அனந்த்.

"பின்னே? இதெல்லாம் அவனோட திறமையென்று சொன்னாயே?"

"ஓ! அதுவா. நல்லா இருக்கு நீ சொல்வது .. நான் சொன்னதன் அர்த்தம் அது இல்லை எங்கள் வேலைக்காரி லக்ஷ்மி செய்வாள், இவனுடைய மேற்பார்வையில்..." என்றான் அனந்த்.

"அப்படிச் சொல்லு... கடைசியில் இந்தத் திறமையெல்லாம் ஒரு பெண்ணோடது தானே!"



"லக்ஷ்மி எல்லோருடைய வீட்டிலும் இவ்வளவு நன்றாக வேலை செய்வாள் என்று நீ நினைத்தால், அது தவறான கணிப்பு ரோஜா!"

"உங்க லக்ஷ்மிக்கு எவ்வளவு வயசிருக்கும்? இந்த வீட்டில் இவ்வளவு சிரத்தை வைக்கணும் என்றால் விஜயிடம் அவளுக்கு ஏதாவது தனி அபிமானம் இருக்குமோ!"

ரோஜாவின் கண்களில் நிழலாடிய சந்தேகத்தைக் கண்டு கொண்டான் அனந்த் "பெண்களுக்கே சந்தேகம் அதிகம் என்பாங்க, அது உண்மைதான் போலிருக்கு." விளையாட்டாய் சொன்னான் அனந்த். "லக்ஷ்மிக்கு அறுபது வயதுக்கு மேல் இருக்கும். நல்ல வைரம் பாய்ந்த உடம்பு. வேலையில் இறங்கி விட்டாள் என்றால், பத்து ஆளுக்குச் சமம். நூறு பேர் வந்தாலும் பதில் சொல்ல அவளால் முடியும்! ஆனால் எங்க விஜயிடம் மட்டும்தான் கொஞ்சம் பணிவாய் நடந்து கொள்வாள்."

"எதுக்காக இந்தத் தனி மரியாதை?"

"முன்னொரு தடவை அவளுடைய மகன் கொலை வழக்கில் மாட்டிக் கொண்டு ஜெயிலுக்குப் போனான் விஜய் அந்தக் கேஸை எடுத்துக் கொண்டான் அவனோட திறமையினால் அவளுடைய மகனுக்குத் தூக்கு தண்டனை தப்பியது. இதுக்காக விஜய் பணம் ஏதும் பெற்றுக் கொள்ளவில்லை. அந்த நன்றி விசுவாசம் லக்ஷ்மிக்கு நிறையவே இருக்கு."

விஜய் போன்ற மனிதனுக்குக் கருணை உள்ளமும், இரக்கப்படும் இயல்பும் இருக்க முடியுமா? ரோஜாவின் மனம் ஏற்க மறுத்தது.

அனந்த் சமையலறையில் நுழைந்துகொண்டே கேட்டான், "உனக்குக் காபி வேணுமா? டீயா?"

"வெறும் காபிதானா?" கொஞ்சுவது போல் சொன்னாள் ரோஜா.

"டிபன் ஏதாவது வேணுமா? என்ன வேணுமோ சொல்லு. சட்டென்று பண்ணக் கூடியதாய்."

"ரவை உப்புமா."

"ஓ.கே! கிராண்டெட்."

அனந்த் அடுப்பைப் பற்றவைத்தான். ரோஜா மளமள வென்று தேவையான பொருட்களை எடுத்துக் கொடுத்தான். இஞ்சி, பச்சைமிளகாய், வெங்காயம் நறுக்கித் தந்தான்.

"இரண்டு தக்காளி போட்டால் நன்றாக இருக்கும்" அனந்த் சொன்னதும், ரோஜா தக்காளியைப் பொடிப் பொடியாக நறுக்கி வைத்தாள் அவள் மனம் வேறு ஏதோ யோசனையில் மூழ்கி விட்டது.

இந்த வீட்டை... முக்கியமாய் இந்தச் சமையல் அறையை அமைதியான சூழ்நிலையைப் பார்த்த எந்தப் பெண்ணுக்கும் 'இந்த வீட்டுத் தலைவியானால் நன்றாய் இருக்கும்' என்ற விருப்பம் ஏற்படாமல் போகாது.

உப்புமாவும், காபியும் பத்தே நிமிடங்களில் தயாராகி விட்டன. அனந்த் ப்ளாஸ்கில் காபியை ஊற்றி, உப்புமாவை தட்டுகளில் எடுத்து வைத்தான்.

"மாடிக்குப் போய் சாப்பிடலாம். அந்தப் போர்ஷனை யும் பார்த்த மாதிரி இருக்கும் எனக்கு வந்த பரிசுகளையும் காண்பிக்கிறேன்..." என்றான் அனந்த்.

ரோஜா தலை அசைத்துச் சம்மதம் தெரிவித்தாள். அனந்த் ட்ரேயை எடுத்துக் கொண்டு படியேற, ரோஜா வாட்டர் ஜெக், டம்ளர்களை எடுத்துக் கொண்டு அனந்தைப் பின்பற்றினாள்.

மாடி போர்ஷன், கீழே இருப்பதை விடச் சின்னதாக இருந்தது. தெரு பக்கம் பால்கனி. எதிர் எதிர் திசையில் இரண்டு அறைகள். ஒன்று விஜயின் 'ஸ்டடிரூம்' மற்றது



அவர்களின் படுக்கை அறை. மற்றஇடமெல்லாம் காலியாக விடப்பட்டிருந்தது. வெயில் காலத்தில் கட்டில் போட்டுக் கொண்டு படுத்துக் கொள்ளலாம்... விஜயின் 'ஸ்டடிரூமில்', ஒருபக்கம் கண்ணாடி பீரோ நிறைய சட்டப் புத்தகங்கள் அடுக்கி இருந்தன. மேஜை மீது ஃபைல்கள் எங்கேஜ்மெண்ட் பேட்... போன் இருந்தன... ஒரு ஓரமாய் பழங்காலத்து ஈஸிச்சேர் இருந்தது. களைப்பாய் இருந்த போது விஜய் அதில் ஓய்வு எடுத்துக் கொள்வானாம்.

அனந்த் வராண்டாவிலிருந்த டீபாயை எடுத்து வந்து, இரண்டு கட்டில்களுக்கு நடுவில் போட்டு அதன் மீது ட்ரேயை வைத்தான். கட்டில்கள் இரண்டும் ஒரே விதமாக இருந்தன. அதன் மீது விரிக்கப்பட்ட விரிப்புகள், தலையணைகள், கால் மாட்டில் மடித்து வைக்கப்பட்டிருந்த போர்வைகள், எல்லாம் வேண்டுமென்றே வாங்கியது போல் மாறுபாடு இல்லாமல் ஒரே விதமாய் இருந்தன.

"உட்கார்ந்து கொள் ரோஜா..." என்று அழைத்தான் அனந்த், தன்னுடைய கட்டில் மீது அமர்ந்துகொண்டே.

ரோஜா விஜயின் கட்டில்மீது பட்டும் படாதவாறு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள். கொஞ்சம் கொஞ்மாய் உப்புமாவை ஸ்பூனால் எடுத்து சாப்பிட்டுக் கொண்டே அறையை பரிசீலித்தாள்... இரண்டு கட்டில்கள் போடப் பட்டு இருந்தாலும்... அறை இன்னும் விசாலமாய்த்தான் இருந்தது. தரையில் பச்சை நிறக் கம்பளம் விரிக்கப்பட்டு இருந்தது. ஓரமாய் இரண்டு கோத்ரேஜ் பீரோக்கள் இருந்தன. இரண்டு கட்டில்களுக்கு நடுவில், தலைமாட்டில் சின்ன டேபிள்... அதன்மீது டேபிள் லேம்ப் இருந்தது. அட்டாச்ட் பாத்ரூம். அனந்த், விஜய் வீட்டிலிருக்கும் போது பெரும்பாலும் இந்த அறையில்தான் இருப்பார்களாம்.

"அனந்த் இதெல்லாம் உன்னுதுதானா?" ரோஜாவின் கண்கள் ஆர்வத்தால் மின்னின.

"எல்லாமே என்னோடதுதான்."

விஜய்க்கு இதில் எந்த உரிமையும் கிடையாதா?"

"எப்படி இருக்கும்? இதெல்லாம் எங்க அம்மாவின் பிறந்த வீட்டுச் சொத்து. விஜயோட அம்மா ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவங்க. அவள் இறந்த பிறகு, எங்க அப்பா அம்மாவை இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டு வீட்டோடு மாப்பிள்ளையாய் வந்து விட்டார். எங்க தாத்தா, அதான் அம்மாவின் அப்பா, ரொம்ப நல்லவரானதால், எங்க அப்பா சின்ன வயதிலேயே இறந்து விட்ட போதும், விஜய்க்கும், ஆதரவளித்து படிக்க வைத்தார்."

ரோஜாவுக்கு ஏனோ மகிழ்ச்சியாய் இருந்தது. "அப்படின்னா விஜய்க்கு இந்த வீட்டில் அவனுக்குன்னு எதுவும் கிடையாது அப்படித்தானே?" என்றாள்.

அனந்த் தலையைச் சொரிந்து கொண்டான்.

"ஒண்ணுமே இல்லாமல் என்ன? அவனுடைய அறையில் இருக்கும் அந்த குண்டு குண்டு புத்தகங்கள் எல்லாம் அவனோடது தான்."

"புத்தகங்கள் விஷயம் இருக்கட்டும். ஒரு வேளை உங்க இருவருக்குமிடையே கருத்து வேற்றுமை வந்தால்? எனக்கு அவனைக் கண்டால் பிடிக்கவில்லையென்றால்?"

"என் வருங்கால மனைவிக்கு அவனைக் கண்டால் பிடிக்கவில்லையென்று வைத்துக் கொள்! அப்போ நான் 'மிஸ்டர் விஜய்— கெட் அவுட்" என்றால் கட்டின துணி மணியோட வீட்டிலிருந்து வெளியேறித்தான் ஆகணும்."

அந்த எண்ணமே ரோஜாவுக்கு உற்சாகம் கொடுத்தது. ஒண்ணுமில்லாதவனுக்கு எதைப் பார்த்துக்கிட்டு அந்தத் திமிரு? எதுக்காக அந்த அசம்பாவம்?

"அனந்த் அவனோட வருமானம் எப்படி?" என்றாள். "வர்ற வருமானம், அந்தப் புத்தகங்கள் வாங்கவே சரியாக இருக்கும். ஒவ்வொன்றும் என்ன விலை தெரியுமா?"



ரோஜாவுக்கு இன்று ரொம்ப உற்சாகமாய் இருந்தது... விஜயின் உண்மை சொரூபம் புரிந்து விட்டாற் போல், மனமெல்லாம் சந்தோஷம் நிறைந்துவிட்டது. நாட்டியமாட வேண்டும் என்பதுபோல் பொங்கி வந்த உவகையைக் கட்டுப்படுத்திக் கொண்டே, காபியை பருகிக் கொண்டிருந்தாள். அனந்துடன் பேசியவாறே, அவனுக்கு வந்த பரிசுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.

ரோஜாவின் பார்வை சட்டென்று ஓரிடத்தில் நின்று விட்டது. விஜய் கட்டிலில் இருந்த தலையணையின் உறை ரொம்ப பழசாக, கிழியும் நிலையில் இருந்தது. நடுவில் எம்பிராய்டரி செய்யப்பட்ட ரோஜாப்பூவும், ஒரு ஓரத்தில் 'விஜய்' என்று தமிழில் கோணல் மாணலாய்த் தைக்கப் பட்டு இருந்தது.

நூலின் வர்ணமும் கெட்டத்தட்ட வெளுத்துப் போய், சில இடங்களில் நூல் பெயர்ந்தும் காணப்பட்டது. ரோஜா அந்தத் தலையணையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டே, "என்ன அனந்த்? இவ்வளவு பழசாய் இருக்கே? யாராவது அன்பளிப்பாக கொடுத்ததா?" என்று கேட்டாள்.

தனக்கு வந்த பரிசுகளை ரோஜாவிடம் காண்பித்து விட்டு, மறுபடியும் பீரோவின் உள்ளே வைத்துக் கொண்டிருந்த அனந்த், திரும்பிப் பார்த்து நெற்றியைச் சுளித்து "ஆமாம்" என்றான்.

"யார் கொடுத்தது?" விஜய் அவ்வளவு பத்திரமாய்ப் பாதுகாத்து வரும் இந்த நினைவுச்சின்னம் யாரோடதாய் இருக்கும் என்ற ஆர்வத்துடன் தலை உயர்த்திக் கேட்டாள்.

"அவனுடைய அம்மா தைத்தது."

ரோஜா திகைத்துப் போனவளாய்ப் பார்த்தாள்.

"எந்தக் காலத்ததோ, அந்த உறையைப் பார்த்தாலே தெரியவில்லையா? இன்றோ நாளையோ, அவனுடைய பிறந்த நாளோ, இல்லை, அவங்க அம்மா இறந்து போன

நானுன்னு நினைக்கிறேன். வருடத்தில் இந்த இரண்டு நாட்கள் மட்டும் அதை உபயோகித்துவிட்டு, மறுபடியும் பீரோவில் பத்திரமாய் வைத்து விடுவான். அர்த்தமில்லாத 'சென்டிமென்'டும் அவனும்... எனக்கு முட்டாள்தனமாய் படும்... அதை வண்ணானுக்குக் கூட போட மாட்டான். தானே தோய்த்து இஸ்திரி செய்து கொள்வான்''

அனந்த் பொறுமையின்றிச் சொன்ன இந்த விஷயத்தை ரோஜா ரொம்ப ஆர்வமாய்க் கேட்டுக் கொண்டாள். அவனுடைய அம்மா தைத்துத் தந்தது அது! இத்தனை வருடங்களாய் அதை பத்திரமாய் வைத்திருக்கிறானா? கடின இதயம் படைத்த அவனிடம் இது போன்ற மென்மையான உணர்வுகள் கூட இருக்கின்றனவா! ரோஜாவால் நம்ப முடியவில்லை.

அனந்த், விஜயின் சிறு வயது பற்றி, தனக்கு நினைவு இருக்கும் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ரோஜா அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதாகப் பாவனை புரிந்துகொண்டே, தலையணை உறைமீது விஜய் என்று எழுதியிருந்த இடத்தில் கொஞ்சம் காபியைச் சிந்திவிட்டு, அனந்த் பார்க்காதபோது அதை மறுபடியும் பழைய இடத்தில் வைத்து விட்டாள். அந்த காபி கறையைப் பார்க்கும்போது விஜய் முகம் எப்படியிருக்குமோ என்ற ஆர்வம் ரோஜாவுக்கு உண்டாயிற்று.

காபி குடித்து முடித்ததும், கட்டிலை விட்டு எழுந்த ரோஜா,ஜன்னல் அருகில் வந்து நின்றாள் திரைச்சீலையைச் சற்று நகர்த்தித் தெருவைப் பார்த்தாள். அங்கிருந்து பார்க்கும்போது, அந்தத் தெருவில் இருபுறமும் தென்பட்ட பங்களாக்கள், தம் யஜமானர்களின் சமுதாய அந்தஸ்தைப் பறைசாற்றுவது போல் கம்பீரமாய் காட்சி அளித்தன. ரோஜாவின் மனதில் தான் வசிக்கும் தெருவின் தோற்றம் நினைவுக்கு வந்தது. பொறாமையாகவும் இருந்தது



இரண்டு இடங்களுக்கும் உள்ள வித்தியாசம் மனதில் பளிச்சென்று உறைத்தது.

ரோஜா பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அனந்த் வீட்டுக்கு எதிர் வரிசையில் இருக்கும் பங்களா முன் நீளமான கறுப்பு நிறக் கார் ஒன்று வந்து நின்றது அந்தக் காரிலிருந்து கிட்டத்தட்ட ரோஜாவின் வயது இருக்கும் ஒரு பெண்ணும், அவளுடன் சுமார் பத்து வயது நிரம்பிய பெண்ணும் இறங்கினார்கள். இருவரின் கைகளில் பெரிய பெரிய பாக்கெட்டுகள் இருந்தன. அதைத் தவிர டிரைவர் சில பாக்கெட்டுகள் எடுத்துக் கொண்டு அவர்கள் பின்னால் சென்றான். ரோஜா கண் இமைக்காமல் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

இதற்குள் எப்போது வந்து நின்றானோ தெரியவில்லை! ரோஜாவின் பின்னால் வந்து நின்று அனந்த், ''ரோஜா! அந்த கறுப்பு நிற கார் நிற்கிறதே, அந்த வீடு வேணு கோபாலன் மாமாவோடது. காரிலிருந்து இறங்கியவர்கள் அவருடைய பெரிய மகள் லாவண்யா, சின்னவள் ராதை—''

ரோஜா பின்னால் திரும்பி அனந்தைப் பார்த்தாள். ''வேணுகோபாலன் என்றால்?'' நினைவு படுத்திக்கொள்வது போல் பார்த்தாள்.

''அன்னிக்கு நீ எங்க விஜயோடு பார்க்கில் பார்த்தாயே!''

''ஆமாம்'' ரோஜாவுக்குச் சட்டென்று நினைவுக்கு வந்துவிட்டது. ஏனோ தெரியவில்லை, அன்று பார்த்த வேணுகோபாலனின் கம்பீரமான உருவம் அவள் மனதில் ஆழமாய்ப் பதிந்துவிட்டது.

''அவருடைய மகள்கள்தான் ..'' என்றான் அனந்த்.

ரோஜா இந்தத் தடவை கவனித்துப் பார்த்தாள், அவர்கள் உள்ளே சென்று விட்டார்கள். ரோஜா அந்த வீட்டைப் பார்த்தாள். சுற்றிலும் ஒழுங்காகப் பராமரிக்கப்

பட்ட தோட்டத்துடன், பெரிய பங்களாவாகக் காட்சி அளித்தது.

"அனந்த் நீ அந்த மாதிரி பெரிய வீடு ஏன் வாங்கிக் கொள்ளக்கூடாது?"

"எந்த மாதிரி?"

ரோஜா விரலால் சுட்டிக்காட்டினாள்.

"இந்தச் சின்ன வீட்டையே பராமரிக்க முடியலை. நாளில் பெரும் பகுதியை வெளியில் கழித்துவிடும் எங்களுக்கு இதை விடப் பெரிய வீடு எதுக்கு?"

ரோஜாவுக்கு அனந்தின் பேச்சில் உடன்பாடு ஏற்பட வில்லை. இவ்வுலகில் நிறைய பேர் இப்படித்தான், கடவுள் கொடுத்த செல்வத்தைச் சிக்கனம் என்ற பெயரில், அனுப விக்கவே மாட்டார்கள். நடுத்தர குடும்பங்களின் நிலைமை இன்னும் மோசம். சிக்கனம், முன் ஜாக்கிரதை என்ற சுழலிலேயே சிக்கி, அதிலேயே வாழ்க்கையை முடித்துக் கொண்டு விடுவார்கள்.

திடீரென்று ரோஜாவுக்குத் தான் இங்கு வராமல் இருந்திருந்தால் நன்றாய் இருந்திருக்கும் என்று தோன் றியது. இதையெல்லாம் பார்த்த பிறகு, மனதில் ஏதோ அதிருப்தி, வெறுமை சூழ்ந்து கொள்ளத் தொடங்கியது. தான் விரும்பினால் இதெல்லாம் தனக்குச் சொந்தமாகும். சந்தேகமே இல்லை. ஆனால் அனந்தின் மனைவியாய் ஆக வேண்டும் என்றால் தன் உயிருக்கும் மேலான ஒன்றை அதற்கு ஈடாய்க் கொடுக்க வேண்டும். வாழ்க்கையில் தனக்கு இருக்கும் ஒரே ஒரு இனிய கனவைப் பணயமாய் வைக்க வேண்டும். எந்த நிலையிலும் ஒன்றை பெறுவதற் காக, மற்றொன்றை இழக்கக்கூடாது. அதிலும் உயிருக்கு மேலாய் மதிக்கும் ஒன்றை இழக்கக் கூடாது.

அனந்த் ரோஜாவின் கவனத்தை தன் பக்கம் திருப்ப வேண்டும் என்பது போல் கையை நீட்டி திரைச்சீலையை இழுத்து மூடினான்.



"ரோஜா!" என்று மென்மையாக விளித்தான்.

"என்ன அனந்த்?" சகஜமாக அவன் பக்கம் பார்த்தாள் ரோஜா.

"ரோஜா!" அனந்தின் குரல் வித்தியாசமாய் ஒலித்தது. கண்களில் புதிய ஒளி நிரம்பியிருந்தது.

திடுக்கிட்ட ரோஜா, கண் இமைக்கும் நேரத்தில், மனதில் ஏற்பட்ட கலவரத்தை,வெளியில் தென்படாதவாறு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"என்ன அனந்த்?" அவனிடம் ஏற்பட்ட உணர்வுகளை கவனியாதவள் போல், அப்பாவியாய்க் கேட்டாள்.

பதிலுக்கு அனந்த் தன் இரு கரங்களையும் நீட்டினான்.

"அனந்த்!"

"அருகில் வா ரோஜா."

சுற்றிலுமிருந்த தனிமை, அனந்திடம் எப்போதும் இருக்கும் கூச்சத்தையும், தயக்கத்தையும் விரட்டி விட்டது. தாபத்தால் அவன் கண்கள் மது உண்ட வண்டாய் மயங்கி இருந்தன.

அவனைக் கட்டுப்படுத்துவது சாத்தியமில்லை என்று ரோஜாவுக்குப் புரிந்து போயிற்று. சட்டென்று நகர்ந்தவள், பேக்கை எடுத்துக்கொண்டு, "நான் கிளம்பணும் அனந்த். ரொம்ப நேரமாகி விட்டது" என்றாள்.

"ஒரு நிமிஷத்தில் நாழியாகிவிடாது."

"அனந்த்! ப்ளீஸ்" கெஞ்சுவது போல் சொன்னாள் ரோஜா.

"ப்ளீஸ் ரோஜா —" வேண்டுவது போல் பார்த்தான் அனந்த்.

அவன் கைகள், வேட்கையுடன், சீற்றம் கொண்ட பாம்புகள் போல் முன்னால் நீண்டு இருந்தன. கொஞ்சம் நகர்ந்தாலும், ஒரே எட்டில் தாவி, தன்னைச் சிறைப்

படுத்தக்கூடும் என்பது போல் துடிப்புடன் இருந்த அந்தக் கைகளையே வெறித்துப் பார்த்தாள் ரோஜா.

அனந்திடம் என்றுமே தென்படாத இந்த உரிமை மீறல் அவன் முகத்தில் தெளிவாய் தென்பட்ட சந்தேகம்—இவைகளைக் கவனித்த ரோஜா உண்மையாகவே கலவர முற்றிருந்தாள். அவனைத் தன்னால் தடுக்க முடியாமல் போய்விடுமோ என்ற எண்ணம் வந்ததும், முதுகெலும்பில் நடுக்கம் ஏற்பட்டது.

"ஊஹூம் வேண்டாம்" வேகமாய் தலை அசைத்து விட்டு தன் மறுப்பை தெளிவாய் உணர்த்திய ரோஜா மறு பேச்சுக்கு இடமளிக்காமல், சடாரென்று மின்னல் போல் அறையை விட்டு வெளியேறினாள்.

"ரோஜா!" பின்னாலிருந்து அனந்தின் குரல், இடைமறிப்பது போல் கேட்டது.

சூறாவளிக் காற்றாய் வெளியே வந்து, அதே வேகத்தில் படியிறங்கிக்கொண்டிருந்த ரோஜா, சட்டென்று பிரேக் போட்டது போல் நின்றுவிட்டாள். வேக வேகமாய் இறங்கிக் கொண்டிருந்தவள், சடாரென்று நின்றுவிட்டதில், தள்ளாடி முன்னுக்கு விழப்போனவள், ரெயிலிங்கைப் பிடித்துக் கொண்டு எப்படியோ சமாளித்து, பதுமையாய் நின்று விட்டாள்.

எதிரே, மாடியிலிருந்து ஒலித்துக் கொண்டிருந்த குரல்கள் யாருடையதாய் இருக்கும் என்று யோசிப்பது போல் இடது புருவம் சற்றே உயர, விஜய் மெதுவாய் ஒவ்வொரு படியாய் ஏறி மேலே வந்துக் கொண்டிருந்தான். ரோஜாவைப் பார்த்ததும், அவனும் சடாரென்று நின்று விட்டான். இருவருக்குமிடையே இரண்டுபடிகள் இடைவெளி எஞ்சியிருந்தது. ரோஜாவின் கண் இமைகள் பேயைக் கண்டது போல் பயத்தில் படபடத்தன. விஜய் கண்களை விரித்து தன் கண்களையே நம்பாதவன் போல் ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.



"ரோஜா—ப்ளீஸ்—ஒருதடவை அருகில் வா! எப்படியும் கணவன், மனைவியாய் ஆகப்போறவங்க தம் வீடு—தம் அறைதவறென்ன இருக்கு?"

அனந்தின் குரல் கெஞ்சுவது போல் மாடியிலிருந்து ஒலித்துக் கொண்டிருந்தது. அக்கம் பக்கம் யாரும் இல்லை என்ற தைரியத்தில், அனந்த் சங்கோஜத்தை உதறிவிட்டு பேசிக் கொண்டிருந்தான்.

நிலநடுக்கம் ஏதாவது ஏற்பட்டு, தரை பிளந்து தான் அதில் புதைந்து விட்டால் நன்றாக இருக்கும் என்பது போல் உணர்ந்தாள் ரோஜா. செம்பஞ்சுக் குழம்பாய் சிவந்து விட்ட முகத்துடன், ரத்தம் தெறித்து விடுவது போல் கீழ் உதட்டைப் பற்களால் அழுத்தி ரெயிலிங்கை அழுத்தமாய் பற்றிக்கொண்டு, மூச்சை விடவும் பயந்தவள் போல் நின்றிருந்தாள் ரோஜா.

விஜய் ஒரு கணம், ரோஜாவையும், மாடி அறைப் பக்கமும் கண்கள் விரிய வினோதமாய் மாறி மாறி பார்த்தான். பிறகு அவனது பார்வை ரோஜா மீது நிலைத்து விட்டது. அந்தக் கண்களில் வானளாவிய அருவெறுப்பு நிரம்பி இருந்தது. ரோஜாவின் காற்றுப் பட்டால்கூட மாசு படிந்துவிடும் என்று பயந்தவன் போல், ரோஜா ஒதுங்கி வழி விட்டாலும், இன்னும் ஓரமாய் நகர்ந்து மாடிக்குச் சென்றுவிட்டான். இரண்டு நிமிடங்கள் இரண்டு யுகங்கள் போல் கழிந்தன. விஜய் உள்ளே போனான்.

அவனைப் பார்த்ததும், அனந்த் எப்படி திகைத்து நிற்பானோ, ரோஜாவால் நன்றாகவே உணரமுடிந்தது. ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அனந்த் சட்டென்று அறை வாசலுக்கு வந்து விட்டான்.

"அனந்த்!" பின்னாலிருந்து விஜயின் குரல் இடிமுழக்கமாய் ஒலித்தது.

"எ...என்ன?" சிவந்து விட்ட முகத்தைக் கைக்குட்டையால் அழுத்தமாய்த் துடைத்துக் கொண்டே கேட்டான்

அனந்த். அவன் தாபம் மயக்கம் எல்லாம் விஜயைப் பார்த்த அடுத்த நிமிடமே, காணாமல் போய்விட்டன.

“என்ன இது? வீடா இல்லை சத்திரமா?” விஜய் தரையில் இருந்த தண்ணீர் டம்ளரைக் காலால் எட்டி உதைத்த ஒலி, அது உருண்டு சுவரில் முட்டிக் கொண்டு நின்றுவிட்ட சத்தம், ரோஜாவின் செவிகளில் வந்து தாக்கியது.

அனந்த் பேசவில்லை. அறை முழுவதும் பயங்கரமான மௌனம் நிலவியது. அந்த நிசப்தத்தை கிழித்துக் கொண்டு சிங்க கர்ஜனையாய் விஜயின் குரல் ஒலித்தது.

“புத்தியிருக்கா உனக்கு? இதுபோன்ற கடைச் சரக்குகளை வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு வருவாயா? இன்னொரு தடவை இதுபோல் செய்தாயானால்...”

ரோஜாவின் தலையில் இடி விழுந்தது போல் இருந்தது. விஜய் இன்னும் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். பதிலுக்கு அனந்த் முணு முணுப்பது கேட்டது. அதற்கு மேல் கேட்க முடியாதவளாய், ரோஜா கிடுகிடுவென்று படி இறங்கி வந்துவிட்டாள்.

“இது போன்ற கடைச் சரக்குகளை...’ வேண்டுமென்று சொல்லப் பட்ட இந்த வார்த்தைகள், ரோஜாவின் இதயத்தில் கூர்மையான அம்பு போல் தைத்து விட்டது. அந்த வலியைத் தாங்க முடியாதவள் போல், விழிகளில் கிர்ரென்று நீர் சுழன்றது. விவரம் தெரிந்த பிறகு ரோஜா நிறைய அவமதிப்புகளைச் சந்தித்து இருக்கிறாள். ஆனால் விஜய் செய்த இந்த அவமானம் எல்லாவற்றையும் மிஞ்சி விட்டது. வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாதது. தனக்கு காது கேட்காமல் இருந்திருந்தால் நன்றாய் இருந்திருக்குமென்று ரோஜா முதல் தடவையாய் உணரத் தொடங்கினாள்.

ஹாலுக்கு நடுவில் வந்த ரோஜா, குரோதாக்னி ஜுவாலைக்கு நடுவில் மாட்டிக்கொண்டு, அதிலிருந்து தப்ப



முடியாதவள் போல், இயலாமையில் அங்கேயே நின்று விட்டாள்.

அனந்த் கீழே இறங்கி வந்தான்... “ரோஜா...ப்ளீஸ்... தவறாக நினைத்துக் கொள்ளாதே வர வர விஜயோட வாய்க்கு எல்லையே இல்லாமல் போய் விட்டது. நல்லது கெட்டது தெரியாமல் பேசுகிறான்.” கைகளைப் பிசைந்து கொண்டே அனந்த் சொன்னான். அவன் குரலில் சற்றுமுன் இருந்த மயக்கம் இறங்கிவிட்டது. எதிர்பாராமல் நடந்து விட்ட இந்த நிகழ்ச்சிக்குச் சமாதானம் சொல்லத் தெரியாமல் கலவரமடைந்து கொண்டிருந்தான்.

கண்களிலிருந்து வழியப் போன நீரை கட்டுப்படுத்த முயன்றுகொண்டிருந்த ரோஜா அவன் பக்கம் திரும்பினாள், நேராகப் பார்த்துக் கேட்டாள்.

“அனந்த்! ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லு... இது உன் வீடா? அவன் வீடா?”

“என் வீடுதான்.”

“அப்படியிருக்கும் போது என் வீடு... என் இஷ்டம்” என்று தெளிவாய் அவனிடம் நீ ஏன் சொல்லவில்லை?”

“சொல்லலாம் என்றுதான் நினைத்தேன் ரோஜா... ஆனால்... ஆனால்...திடீரென்று அவனைப் பார்த்ததும்...”

“உண்மையைச் சொல்... அவன் வீட்டில் இல்லையென்றும், இப்போதைக்கு வரமாட்டாங்கிற தைரியத்தில் தான் என்னை இங்கே அழைத்து வந்தாய்... அப்படித் தானே?”

“அ... அப்படி இல்லை ரோஜா!”

“போகலாம் வா! இன்னிக்கு உன் வீட்டுக்கு வலுக் கட்டாயமாய் அழைத்து வந்து எனக்கு நீ அளித்த இந்த விருந்தோம்பலை, இந்த ஜென்மத்தில் என்னால் மறக்க முடியாது.” ரோஜாவின் கண்களில் மறுபடியும் நீர் சுழலப்

போனது. சட்டென்று முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

"கடைச் சரக்காம்... கடைச் சரக்கு... அவனும் ஒரு பெண்ணாகப் பிறந்து, தந்தையில்லாமல் போய், தாய் எதுக்கும் உதவாமல் போக, அக்கம் பக்கத்தாருடன், வீட்டிலிருப்பவர்களுடன் வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிஷமும் போராடிக்கொண்டே, இருபது வருஷங்களை கழித்திருந்தால், எந்த மாதிரி ஆகியிருப்பானோ தெரிந்திருக்கும். எதைப் பார்த்துக் கொண்டு அந்த அகங்காரம்? அவனுக்கு என்ன இருக்கு என்று அந்தத் திமிரு?"

துக்கம் குறையக் குறைய ரோஜாவிடம் ரோஷம் தலை தூக்கியது. இருவரும் வெளியே வந்தார்கள். உடனே டாக்ஸியும் கிடைத்துவிட, ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

அனந்த் ரோஜாவின் கையைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டான். தழுதழுத்த குரலில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

"ரோஜா... இந்த முட்டாளை... யாரையும், என்னிக்கும் எதிர்த்துப் பேசாத இந்தக் கோழையை மன்னித்துவிடு. சின்ன வயதிலிருந்தே நான் இப்படித்தான்... யாரோ ஒருத்தருக்குப் பயந்து பயந்துதான் வாழ்ந்து வந்தேன். என் சின்ன வயதிலேயே எங்க அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லாமல் போய் விட்டதால் என்னைப் பார்த்துக் கொள்ள ஆயாவை வைத்திருந்தார்கள். அவள் எப்போதும் என்னை அதட்டிக் கொண்டே இருப்பாள். போகப் போக நான் எந்த வேலை செய்யலாமோ எதைக் கூடாதோ என்று எனக்குத் தெரியாமல் போய் விட்டது. அம்மாவிடம் எனக்கு நெருக்கம் கிடையாது. பணத்தை வீணாக்கிவிடப் போகிறேன் என்ற கவலையைத் தவிர, அவளுக்கும் என்னைப் பற்றிய எந்த ஆர்வமும் கிடையாது. உன்னிடம் உண்மையைச் சொல்வதற்கு அந்தக் கடவுள் என்னை மன்னிப்பாராக. அம்மா இறந்து விடப் போகிறாள் என்று



தெரிந்ததும் நிம்மதிதான் ஏற்பட்டது. ஒரு விதமாய்ச் சொல்லப் போனால் அதை எதிர் பார்த்தேன்னு கூடச் சொல்லலாம். இப்பவும் வீட்டில் எதைப் பார்த்தாலும் அவளுடைய சர்வாதிகாரம்தான் நினைவுக்கு வரும். அவள் இறந்த போது விலங்குகள் நீங்கியது போல் உணர்ந்தேன். ஆனால், என் கைக்குப் பணம் கிடைக்காமல் உயில் எழுதி வைத்ததும், விஜயிடம் என் பொறுப்புகளை ஒப்படைத்ததும் தெரிந்த போது சோர்வடைந்து விட்டேன். எனக்குத் தடைகள் ஏதும் இல்லைதான். ஆனால், கூண்டில் அடைபட்ட பறவையைப் போல் எனக்கு இன்னும் முழுச் சுதந்திரம் கிடைக்கவில்லை என்ற உண்மை மெள்ள மெள்ளமாய்ப் புரிய வந்தது...

சொத்து என் கைக்கு வராமல் செய்து விட்டார்கள். இல்லாவிட்டால், இயற்கையாய்த் தாய் மகனுக்கு இடையில் இருக்க வேண்டிய அன்புப்பிணைப்பை இல்லாமல் செய்துவிட்ட இந்தப் பணத்தை, என்றைக்கோ ஏழைகளுக்குத் தானம் செய்து விட்டு, எங்கேயாவது போயிருப்பேன்.

ரோஜா, இந்த உலகில் நான் விரும்பிய சுதந்திரம் உன்னிடம் மட்டும் தான் கிடைத்தது. உன்னுடைய நட்பு எனக்கு ரொம்ப அபூர்வமானதாகத் தோன்றும். அதனால் தான் வெட்கத்தை விட்டு, திரும்பத் திரும்ப என்னைக் கல்யாணம் செய்துக்கச் சொல்லி வேண்டுகிறேன். உன்னை மனைவியாய் அடைந்து, என் வாழ்க்கையை உன்னிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய நெடுநாளைய விருப்பம். கடவுள் என் தலையில் என்ன எழுதியிருக்கிறாரோ தெரியவில்லை"

அனந்த் குரல் கம்மி விட்டது. அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் கடினமான உண்மைகள் என்றும், அடி மனதிலிருந்து வெளிவந்த மனக்குமுறல்கள் என்றும் ரோஜாவுக்குப் புரிந்தது. இரக்கம் ததும்பும் பார்வையுடன் அவன் கையைப்

பற்றிக் கொண்டான். டாக்ஸி ரோஜாவின் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

திடீரென்று ரோஜா, ஏதோ நிச்சயித்துக் கொண்டவள் போல், திடமான குரலில் சொன்னாள், "நான் கல்யாணத்துக்கு ஒப்புக் கொள்கிறேன். ஏற்பாடுகளைச் செய்துவிடு..."

"ரோஜா!"

"உண்மையாகத்தான் அனந்த்... ஒரு தடவை ஒப்புக் கொண்டால் திரும்பிப் போகும் ஆள் இல்லை நான்."

"தெரியும் ரோஜா... உன்னைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்."

"இந்தக் கல்யாணத்தைப் பற்றி உங்க வீட்டு மனிதர்களுக்கோ, எங்க விஜய்க்கோ தெரிய வேண்டிய தேவையில்லை... திருமணம் ரகசியமாய், சுருக்கமாய் முடிந்து விடணும்."

"சரி ரோஜா, அதையெல்லாம் நான் பார்த்துக்கறேன். நீ சம்மதிக்க வேண்டுமே தவிர, விஜய் என்ன? அந்தக் கடவுளே வந்தாலும் நமக்குக் குறுக்கே வரமுடியாது."

அனந்தின் இதயம் மகிழ்ச்சியால் நிரம்பிவிட்டது. கண்கள் மின்னல் போல் ஒளி வீசின.

"'தாங்க்ஸ் விஜய்! மெனி மெனி தாங்க்ஸ் டு யூ' உன் உபகாரத்தை இந்த ஜென்மத்தில் மறக்க மாட்டேன். எதிர் பாராமல் நீ செய்த அவமானம், எப்பால் வராமல் மாறி விட்டது" மனதிலேயே விஜய்க்கு நன்றி தெரிவித்துக் கொண்டான் அனந்த்.



# 20

இரவு பத்து மணியைத் தாண்டிவிட்டது. வக்கீல் யச்வந்தராவ் வீட்டில், ஆபீஸ் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வக்கீலுக்கு எதிரில் மேஜைக்கு இந்தப் பக்கம் விஜய் அமர்ந்து இருந்தான். யச்வந்தராவ் மூக்குக் கண்ணாடியைச் சரிபடுத்திக் கொண்டே விஜயிடம் பேசிக் கொண்டிருந்தார்.

ரொம்ப நேரமாக அவ்விருவருக்கிடையே ஏதோ பிரச்சனையைப் பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்தது. சரியான தீர்வைக் காண முடியாமல் சோர்வு ஆட்கொண்டாற் போல், இருவரும் களைப்புடன் தென் பட்டார்கள்.

ஆழ்ந்த யோசனையில் இருந்த விஜய் கையில் இருந்த பேப்பர் வெயிட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் புருவங்கள் முடிச்சேறி இருந்தன.

கடைசியாக வக்கீல் சொன்னார் "என்ன பண்ணப் போகிறாய் விஜய்? அவன் சின்னப் பையனா என்ன? நாலு அடி கொடுத்து உள்ளே போட்டு பூட்டி வைக்க மேஜராகி விட்டவன். தன் விருப்பத்தை எந்த இடையூறும் இல்லாமல் செயல்படுத்த முடியும் என்று நன்றாகத் தெரிந்து கொண்டு தான், துணிந்திருக்கிறான். பெண்களோட வலையில் விழக் கூடாது என்கிற புத்தி அவனுக்கு இருக்க வேண்டாமா? எத்தனை நாட்களுக்கு நீ அவனைக் காப்பாற்றிக் கொண் டிருப்பாய்?"

"அதனால்தான் கூடிய சீக்கிரம் அவனுக்குக் கல்யாணம் முடித்துவிட நினைத்திருந்தேன். அந்த மெலட்டூர் பெண் கிட்டத்தட்ட முடிந்த மாதிரிதான் என்று நினைத்த போது இந்த இடைஞ்சல் வந்து விட்டது."

"இடைஞ்சல்கள் வந்து கொண்டுதான் இருக்கும். அதுக்கு முடிவு எங்கே? இத்தனைக்கும் நாளைக்கு என்ன செய்யப் போறே? எப்படிப் பார்த்தாலும் அந்தக் கல்யாணத்தை நடக்க ஒட்டாது தடுக்க வழி ஏதும் எனக்குத் தெரியவில்லை."

"அதைத்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். எப்படியோ நாளைய கல்யாணம் நடக்காமல் செய்தாலும்...பிறகு? நான் அடுத்த வாரம் டில்லிக்குப் போகணும். பதினைந்து நாட்கள் ஆகும் திரும்பி வர... அந்தப் பெண் அசாத்திய கெட்டிக்காரி. இவனும் அவசரக் குடுக்கை. நான் வருவதற்குள் எது வேணாலும் நடக்கலாம். இந்த யோசனைகளால் என் மண்டையே வெடித்துவிடும் போலிருக்கு."

லாயர் பதிலேதும் சொல்லவில்லை. விஜய் பேப்பர் வெயிட்டை மேஜையில் சுழற்றிக் கொண்டே சொன்னான். "அவன் தான் பிடிவாதமாய் இருக்கானே என்று நானும் அந்தப் பெண்ணைப்பற்றி விசாரித்தேன். எந்த விதத்திலும் கௌரவமாகவோ, உத்தியோகவோ தெரியவில்லை. தந்தை வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டாரா, இல்லை இறந்துவிட்டாரா என்று யாருக்கும் தெரியவில்லை. தம்பி இருக்கானே தவிர, அவன் ஒரு ரௌடி. சமீபத்தில் ஏதோ திருட்டு வழக்கில் பிடிபட்டு ஜெயிலில் இருக்கான். அந்தப் பெண்ணின் குணமோ கேட்கவே வேண்டாம். நானே நேரில் பார்த்திருக்கிறேன். இத்தனையும் தெரிந்த பிறகு அவன் முட்டாள்தனமாய் அந்தப் பெண்தான் வேணும்னு சொன்னா நான் வெறுமே பார்த்துண்டு எப்படி இருக்க முடியும்?"

"சும்மாயிருக்காமல் என்ன செய்ய முடியும் உன்னால்? அவனுடைய நலனுக்காக நீ செய்ய வேண்டியதெல்லாம் செஞ்சாச்சு... இனி அவனோட தலையெழுத்துன்னு நினைச்சு மனதைச் சமாதானப்படுத்திக் கொள். கடந்த





நாலு வருஷமாய் நானும் பார்த்துண்டுதானே இருக்கேன். நீ அவனுக்காகச் செலவழிக்கும் நேரத்தில் பத்தில் ஒரு பங்காவது உன் தொழிலுக்காகச் செலவு செய்தால், உன் வருமானம் இந்நேரம் இரு மடங்காவது ஆகியிருக்கும்."

விஜய் அறையில் குறுக்கும், நெடுக்குமாக நடந்தான். அவன் மூளை சுறுசுறுப்பாய், தீவிரமாய் யோசித்துக் கொண்டு இருந்தது. திடீரென்று சொன்னான்.

"இவன் யாரோடையும், இத்தனை நாள் நட்பை நீடிக்க மாட்டானே! அவனுக்கு எல்லாமே புதிசாய் இருக்கணும். உடைகளைக்கூட நாலைந்து முறை போட்ட பிறகு யாருக்காவது கொடுத்து விடுவான். உணவு விஷயத்தில் கூட ஒரு காய்கறியை ஒரே வாரத்தில் இரண்டு மூன்று தடவை செய்துவிட்டால், தட்டை தூக்கி எறியும் அளவுக்கு ஆர்ப்பாட்டம் செய்வான். அப்படிப் பட்டவனுக்கு இந்தப் பெண்ணிடம் நட்பு இத்தனை நாட்களாய் எப்படி நிலைத்திருக்கோ ஆச்சரியமாய் தானிருக்கு!

"வேறு என்ன? அது அந்தப் பெண்ணுடைய கெட்டிக்காரத்தனமும்... இவனோட முட்டாள் தனமும்தான்" என்றார் வக்கீல்.

"உங்களுக்கும் அப்படித்தான் தோன்றுகிறதா?"

"இருக்கிற விஷயம் அதுதானே இத்தனைக்கும் நாளைக்குக் கல்யாணம் எப்பவாம்?"

"காலை பதினொரு மணிக்கு ரிஜிஸ்டிரார் ஆபீசில் பதிவுத் திருமணம். பிறகு வடபழனி கோவிலில் பெயருக்காய்த் திருமணம்."

"கச்சிதமாகத்தான் ஏற்பாடு செய்திருக்காங்க."

"சொல்லேனே! அந்தப் பெண் அசாத்திய கெட்டிக்காரின்னு எல்லாப் பக்கமும் தன் உரிமைக்காகச் சாட்சியங்களைச் சேகரித்து வருகிறாள்."

"நம்ப டாக்டர் கொடுத்த மாத்திரையைக் காலையிலேயே காபியில் கலந்து கொடுத்து விடு. இரவு வரை நினைவு திரும்பாது."

"அப்படிச் செய்யத்தான் போகிறேன். ஆனால் பிரயோஜனம் என்ன? ஒரு நாள் கல்யாணத்தை நிறுத்தி விட்டால் நீங்கிவிடும் ஆபத்தா இல்லையே இது. நான் டில்லிக்குப் போயிருக்கும் சமயத்தில் கூட ஏதாவது நிகழலாம். எனக்கு வேலையே ஓடாது. நான் ஊருக்குப் போகும் முன், அவ்விருவரும் எப்போதும் கணவன் மனைவியாக முடியாதபடி ஏதாவது செய்து விட்டுப் போகணும்."

"அந்த சரோஜா வீட்டுக்குப் போய் மிரட்டினால்?"
"ஊஹூம்... பிரயோசனப்படாது..."

"ஏன்?"

"அந்த வீட்டில் இருக்கும் ஆண்பிள்ளைக்கு அதிகாரம் கிடையாது. நாடகப் பைத்தியம். வீட்டிலேயே இருக்க மாட்டார். எல்லாம் பொம்பிளை ராஜ்ஜியம்தான். அதுவுமில்லாமல் அந்தப் பெண் யாருக்கும் அடங்குபவளாக இல்லை."

லாயர் பைல்களைக் கவனிக்கத் தொடங்கினார். விஜய் வலது கையால் பேப்பர் வெயிட்டைத் தூக்கித் தூக்கிப் போட்டுப் பிடித்துக் கொண்டு, ஆழ்ந்து யோசித்துக் கொண்டே நடைபயின்றுக் கொண்டு இருந்தவன், சரேலென்று திரும்பினான். மின்னல் போன்ற யோசனை ஏதோ மூளையில் பளிச்சிட்டது போல் அவன் கண்கள் ஒளி பெற்று பளபளத்தன.

"ஒரு வேலை செய்தால்...?" என்றான்.

"என்ன வேலை?" தலையை உயர்த்திக் கேட்டார் அவர்.

விஜய் அருகில் வந்து பேப்பர் வெயிட்டை மேஜை மீது வைத்தான். மேஜையின் இருபக்கமும் கைகளை ஊன்றியவன்



சற்றுக் குனிந்து, அவருடைய கண்களை நேராகப் பார்த்துக் கொண்டே தெளிவாய்ச் சொன்னான்.

"அந்தப் பெண்ணை... நாளை நான் திருமணம் செய்து கொண்டு விட்டால்?"

கண்களை அகலமாய் விரிய, லாயர் திகைத்துப் போனவராய், "என்னது... நீ.. நீ...அவளை..." என்றார்.

"ஆமாம்! நாளைக்குத்தானே திருமணம் — கல்யாணம் நடக்கும் இடம் மாறும். மணமகன் மாறுவான். அதுதான் வித்தியாசம், அவன் கட்ட வேண்டிய மஞ்சள் கயிற்றை நான் கட்டுவேன். அனந்த் அந்தப் பெண்ணின் கையில் சிக்கிக் கொள்வதை விட, அவளையே என் கைகளில் சிக்க வைப்பேன்."

"விஜய்!" பைத்தியக்காரனைப் பார்ப்பது போல் பார்த்தார்.

விஜய் நிதானமாய் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டே சொன்னான். "ஆமாம்! இது தான் சிறந்த வழி. இப்படிச் செய்து விட்டால் எனக்கு நிம்மதி. டில்லியில்லை, கல்கத்தா போனாலும், பாம்பே போனாலும் எப்ப திரும்பி வந்தாலும் எனக்குப் பயம் இருக்காது."

"விஜய்! இதுபோல் எத்தனைப் பேரை நீ கல்யாணம் செய்து கொள்ள முடியும்?" ஆவேசமாய்ச் சொன்னார் அவர்.

"அனந்த் இன்னொரு பெண்ணிடம் சிக்கிக் கொள்ளும் ஆபத்தை வர விடமாட்டேன் நான். இந்த அதிர்ச்சியிலிருந்து அவன் மீளும் முன்பே நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் முடித்து விடுவேன்."

"விஜய்! உனக்கு மூளை கலங்கிவிட்டது. அவனோட நலனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்த நீ, உன் விஷயத்தை மறந்து போய் விட்டாய்."

"இதில் என் விஷயம் என்ன இருக்கு?"

"ஏன் இல்லை? அனந்தை ஆபத்திலிருந்து காப்பாற்றப் போய் நீ அதில் மாட்டிக் கொள்கிறாய்."

"இதில் எனக்கு வரும் ஆபத்து என்ன இருக்கு?"

"கல்யாணம்னா என்னன்னு நினைச்சே? விளையாட்டாய்த் தோணுதா உனக்கு? ஒரு பக்கம் அந்தப் பெண்ணோட குடும்பம் நல்லதில்லைன்னு சொல்லிக் கொண்டே....."

"நான் அந்தப் பெண்ணை எனக்காக கல்யாணம் செய்துக்கப் போறதில்லையே?"

"இல்லாவிட்டால் மட்டும்? அவனுடைய நடத்தை சரியில்லைன்னு சொன்னது நீ தான். நாளைக்கு அந்தப் பெண் இந்த விஷயத்தை வெளியில் சொல்லி ரகளை செய்தால், உலகம் வேறு விதமாய் எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கு... அருமையான உன் எதிர்காலம் பாழாகி விடும். உன் தொழில் இருக்கே, அதில் போட்டியும், பொறாமையும் ஜாஸ்தி. உன் வளர்ச்சியைக் கண்டு பொறுக்க முடியாதவங்க, எதை வேணும்னாலும் செய்வார்கள். அனந்தைக் காப்பாற்றணும் என்ற ஒரே கொள்கையோடு, எதிர்காலத்தை நினைக்காமல், இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு, உன் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளாதே. அனந்துக்கு என்ன? பணம் இருக்கு. எப்படி வேணும்னாலும் வாழ்வான். உனக்கு வக்கீல் தொழில்தான் ஆதாரம் என்பதை மறந்து விடாதே."

தன் நலனில் அவ்வளவு தூரம் அக்கறை கொண்டு அவர் செய்த எச்சரிக்கைகளுக்கு விஜயின் கண்களில் நன்றி உணர்ச்சி எட்டிப் பார்த்தது... ஆனால் தனக்கு ஏதோ நடந்து விடும் என்று அவர் பயப்படுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. "என்ன நடக்கும்? அந்தப் பெண் என்னை என்ன செய்து விடுவாள்?"

"எது வேணுமானாலும் செய்வாள்... நாளைக்கு நேராக உன் வீட்டுக்கு வந்து குடித்தனம் நடத்துவதாகச் சொன்னால் உன்னால் என்ன செய்ய முடியும்?"



விஜய் கண்களில் அருவெறுப்பு தென்பட்டது. அதை உதறுவது போல், தோள்களைக் குலுக்கினான், "வரட்டுமே! தேவையில்லாத பெண்ணை, விடுவித்துக் கொள்ளும் சாமர்த்தியம் இல்லாதவனா நான்?"

"இனி உனக்குச் சொல்ல என்னால் முடியாது."

"நீங்க செய்த எச்சரிக்கைகளுக்கு நன்றி... எனக்கு எந்த ஆபத்தும் வராது... நீங்க நிம்மதியாய் இருங்க."

"உன் இஷ்டம்."

"இதனால் அந்தப் பெண் அனந்தைத் திருமணம் செய்து கொள்ளாமல் தடுக்கலாமே தவிர, வேறு எந்த நோக்கமும் இல்லை... அதை, பிறகு அந்தப் பெண்ணிடம் நான் தெளிவாகச் சொல்லிடறேன்..."

"மாப்பிள்ளையை மாத்துவது அவ்வளவு சுலபமுனு எனக்குத் தோணவில்லை. அந்தப் பெண்ணுக்கு உடம்பில் சுயநினைவு இருக்கும்போது அவள் கழுத்தில் உன்னால் மூன்று முடிச்சு போட முடியாது."

"அவளுக்குச் சுய நினைவு இருந்தால்தானே?"

"அப்படின்னா?" அவர் தலையை உயர்த்திப் பார்த்தார்.

"நாளைக்கு நீங்களே நேரில் பார்க்கப் போறீங்க" விஜய் புன்முறுவலுடன் பதிலளித்தான்.

"கல்யாணம் நடக்கும் போது சுற்றிலும் மக்கள் இருப்பாங்க. அவங்களை எப்படிச் சமாளிப்பது?"

"அதெல்லாம் நான் பார்த்துப்பேன். மற்றவங்க எல்லாம் எனக்கு வேண்டியவங்களாய் இருப்பாங்க..." விஜய் நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டான். "நான் வர்றேன்... ரொம்ப நேரமாகி விட்டது. உங்களைச் சிரமப் படுத்தியதற்கு மன்னிக்கணும்."

"இதில் நான் பட்ட சிரமம் எதுவும் இல்லை. உங்கள் குடும்ப நண்பனாய் அனந்தின் திருமணம் நடைபெறாமல்

இருக்க, நீ எது சொன்னாலும் தான் செய்யத் தயாராய் இருக்கேன். ஆனால் இப்போ நீ சொன்ன வழி தான்...''

''அந்த முடிவில் மாற்றம் இல்லை.''

''அவசரப்படாதே! வீட்டுக்குப் போன பிறகு நிதானமாய் மற்றொரு முறை யோசித்துப் பாரு. நாளை நடக்கப் போகும் கல்யாணத்தை வேறு வழியில்கூட நிறுத்தி விடலாம்.''

விஜய் உதடுகளில் நன்றி கலந்த முறுவல் பூத்தது. போகப் போனவன் நின்றான், ''நாளைக்கு நீங்க என்னோடு வருவீங்க இல்லையா?''

''வராமல் இருப்பேனா? அனந்துக்காக இல்லா விட்டாலும் உனக்காகவாவது வரேன். நல்ல எதிர்காலம் இருப்பவன் நீ, என் தங்கைக்கு ஒரு மகள் இருக்கிறாள்... உன்னிடம் சொல்லவில்லையே தவிர, அவளை உனக்குக் கொடுக்கணும் என்று ஆசை வைத்திருந்தேன்...'' மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டே யச்வந்தராவ் சொன்னார்.

விஜய் சிரித்து விட்டு விடை பெற்றுக் கொண்டான்.

## 21

அன்றுதான் ரோஜா அனந்தின் திருமணம். வழக்கத்துக்கு விரோதமாக அதிகாலையிலேயே எழுந்து கொண்டான் அனந்த். ஷேவ் செய்து கொண்டு தலைக்கு ஷாம்பூ போட்டுக் கொண்டு ஏழுமணிக்கெல்லாம் தயாராகி விட்டான். தினமும் போடும் குர்தா, பைஜாமாவைத் தவிர்த்து, ஃபுல் சூட் போட்டுக் கொண்டான்.

விஜயும் சீக்கிரமாகவே எழுந்துக் கொண்டு விட்டான். அவனுக்கு இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. ரொம்ப



நேரம் மொட்டை மாடியில் உலாவிக் கொண்டிருந்தான். ரோஜாவைத் திருமணம் செய்து கொள்வதால் தனக்கு எந்தப் பக்கமும் இடையூறு வராமல் இருக்க, என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

உள்ளே, நாளை இந்நேரத்துக்கு ரோஜா தன்னுடையவள் ஆகி விடுவாள் என்ற நம்பிக்கையுடன், அனந்த் உறங்கிக் கொண்டிருந்தான். அனந்துக்காக அவளைத் தன் பிடியில் சிக்க வைத்துக் கொள்ள முடிவு செய்து, அதை எப்படி அமலாக்குவது என்று, யோசித்துக் கொண்டிருந்தான் விஜய். கிட்டத்தட்ட விடியற் காலை மூன்று மணிக்கு உள்ளே வந்து படுத்தான் விஜய். அப்போது சரியான தூக்கம் வரவில்லை. அரைகுறை தூக்கத்தில் கனவு வந்தது. அந்தக் கனவில் அவனுடைய தாய், அவனை எதுக்காகவோ தீவிரமாய்க் கோபித்துக் கொண்டிருந்தாள்.

விழிப்பு வந்த பிறகு கனவை நினைவு கூர்ந்தான் விஜய். எத்தனை யோசித்தாலும் தாயின் கோபத்துக்குக் காரணம் என்னவென்று நினைவு வரவில்லை.

அண்ணன், தம்பி இருவருக்கும் விஜய் சொன்னதன் பேரில் மாடிக்கே காலை உணவு கொண்டு வந்தாள் லக்ஷ்மி. இருவரும் சாப்பிட உட்கார்ந்து கொண்டார்கள். விஜய் என்றும் இல்லாத விதமாய் இரவு போட்டுக் கொண்ட பைஜமா, ஷர்ட்டுடன் இருந்தான். காலை ஒன்பது மணி வரை தூங்கி வழியும் அனந்த், இன்னிக்கு ஃபுல் சூட்டுடன் இருந்தான்.

லக்ஷ்மி விஜயைப் பார்த்து, ''என்ன தம்பி உடம்புக்கு சுகமில்லையா?'' என்று விசாரித்தாள்.

நன்றாக இருப்பதாகத் தலை அசைப்பில் தெரிவித்தான் விஜய்

டிபன் சாப்பிடும் போது அனந்த் தனக்கு அவசரமாய் ஐநூறு ரூபாய் வேண்டுமென்று கேட்டான்.

"ஐநூறு ரூபாயா!" விஜய் குரலில் வியப்பைக் காட்டினான்.

"ஆமாம். ஐநூறு ரூபாய்தான்! இந்தக் காலத்தில் பணத்துக்கு மதிப்பு எவ்வளவு குறைந்து விட்டது, உனக்குத் தெரியாதா?"

"யாராவது உனக்கு விழா எடுக்கப் போறாங்களா? இல்லை தானம், தர்மம் ஏதாவது செய்யப் போகிறாயா?"

"இரண்டும் இல்லை."

"வேறு எதுக்கு?"

"விஜய்! இன்று காலையிலிருந்து... இந்த... எதுக்கு? ஏன்? என்கிற கேள்விகளுக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை. நீயும் என்னைக் கேள்விகள் கேட்காதே."

"குட்... தனித்தன்மை படைத்த மனிதனாக மாறி வருகிறாய். அந்தச் சரோஜாஷிக்குத்தான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளணும்."

"விஜய்!"

"எதுக்கு அப்படிக் கூச்சல் போடுகிறாய்? இப்பொ நான் என்ன சொல்லி விட்டேன்? உன்னைப் பார்த்தால் எனக்கும் அவள் மீது அபிமானம் வந்து விட்டது. எவ்வளவு மாற்றி விட்டாள் உன்னை! உண்மையிலேயே எனக்குப் பொறாமையாய் இருக்கு. ஒரு தடவை அவளை நம் வீட்டுக்கு அழைச்சிட்டு வா, என் நன்றியைத் தெரிவித்துக்கிறேன்."

அனந்த் பதில் பேசவில்லை...

விஜய் பீரோவைத் திறந்து பணத்தை எண்ணி, அனந்திடம் கொடுத்தான்.

"தாங்க்ஸ்." என்றான் அனந்த்.

"போதுமா?"

"இன்றைக்குப் போதும்."



"அப்படின்னா இந்தப் பணத்தை இன்னிக்கே செலவு செய்யப் போகிறாயா? ஒரு ஐந்து ரூபாய் சம்பாதித்துப் பாரு. அப்பொதான் பணத்தோட மதிப்பு உனக்குத் தெரியும்."

அனந்தின் முகம் மலர்ந்து விட்டது. விஜய் இவ்வளவு எளிதில் பணம் கொடுத்து விடுவான் என்று அவன் எதிர்பார்க்கவில்லை; எதற்கும் இருக்கட்டும் என்று மார்வாடியிடமிருந்து வட்டிக்கு பணம் வாங்கி வைத்திருந்தான்.

"என்ன விசேஷம் அனந்த்? இத்தனை காலையிலேயே மாப்பிள்ளை போல் டிரெஸ் செய்து கொண்டு இருக்கே?"

விஜய் வாயிலிருந்து மாப்பிள்ளை என்ற வார்த்தை வந்ததும் அனந்துக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ஆனால் விஜய் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை. ரொம்ப சகஜமாய்க் காபியைக் கப்புகளில் ஊற்றிக் கொண்டிருந்தான். அவன் பார்வை காபி மீதே நிலைத்திருந்ததால், அந்தக் கண்களில் எந்த உணர்ச்சி இருந்ததோ தெரியவில்லை...

"எங்கேயாவது போகிறாயா?"

"ஆமாம்."

"எங்கே?"

அனந்த் பதில் சொல்லவில்லை.

"அடடா! மறந்துவிட்டேன். இப்பதானே இது போன்ற கேள்விகளைக் கேட்கக்கூடாதுன்னு சொன்னே! ஐயாம் சாரி! ஐ வித்ட்ரா மை க்வெஸ்சின்."

விடுதலை பெற்றவன் போல் பார்த்தான் அனந்த்.

"இன்று முழுவதும் எனக்கு ஓய்வே இருக்காது. மதியச் சாப்பாட்டுக்கும் வரமாட்டேன். என்னிடம் உனக்கு வேலை எதுவும் இல்லையே?" கடைக்கண்ணால் தம்பியைப் பார்த்துக் கொண்டே, விஜய் கேட்டான்.

அனந்தின் முகம் மலர்ந்தது, "ஊஹூம், எனக்கு வேலை இல்லை."

டிபன் சாப்பிடுவதற்குள், அனந்த் நான்கு தடவை மணியைப் பார்த்துக் கொண்டான். காபி குடிக்கு முன் கோட்டின் பையைத் தடவிப் பார்த்தவன், ஏதோ நினைவு வந்தவன் போல், வேகமாய் எழுந்து பீரோவைத் திறந்து சின்ன நகைப் பெட்டியை எடுத்தான். அதை விஜய் பார்த்து விடக்கூடாது என்பது போல், அந்தப் பக்கம் திரும்பி கோட் பையில் வைத்துக் கொண்டான்.

சரியாக, இது போன்ற சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தவன் போல் விஜய், தன் சட்டைப் பையிலிருந்து, ஒரு பொட்டலத்தை எடுத்து, அதில் இருந்த பவுடரை அனந்தின் காபியில் போட்டுவிட்டான். அனந்த இந்தப் பக்கம் திரும்பியபோது, விஜய் சக்கரையை எடுத்து அனந்தின் கோப்பையில் போட்டு ஸ்பூனால் வேகமாய்க் கலக்கி விட்டான்.

"வா அனந்த், காபியை எடுத்துக்கொள்."

சமத்துப்பிள்ளை போல் அனந்த் காபியை குடித்து விட்டான்.

விஜய் காபியை நிதானமாய்ப் பருகிக்கொண்டே, தம்பியின் முகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

பத்து நிமிடங்கள் சென்றன. சாக்ஸும், ஷூவையும் அணிந்துகொண்டு, இன்னொரு முறை கண்ணாடியில் தன் உருவத்தை பார்த்துக் கொண்டு, திருப்தி அடைந்த அனந்த் விஜயிடம் விடைபெற்றுக் கொண்டான். வாசற்கதவு வரை சென்றவன், வயிற்றை பிடித்துக்கொண்டு நின்று விட்டான். விஜய் பதட்டமடைந்தவன் போல் அருகில் வந்தான்.

தோளில் கையைப் பதித்து, "என்ன அனந்த்? என்ன ஆச்சு?" என்றான்.

"ஒன்றுமில்லை! வயிற்றில் ஏதோ சங்கடம். அவ்வளவு தான."



"சங்கடமாய் இருக்கா? ஏன்?"

விஜய் கேட்டு முடிப்பதற்குள், அனந்த் பாத்ரூம் பக்கம் ஓட்டமெடுத்தான். சாப்பிட்ட உணவெல்லாம் வெளியில் வந்துவிட்டது.

"இரவு எப்போ சாப்பிட்டாய்? வேளை தவறாமல் சாப்பிடணும்னு சொன்னா கேட்டால் தானே. உன் உடம்பைப்பற்றி உனக்கே அக்கறை இல்லாவிட்டால் எப்படி?" விஜய் அதட்டுவது போல் சொன்னான். "கொஞ்சம் உட்கார்ந்து கொள்."

"ஊஹூம்! உட்கார நேரமில்லை - விஜய்... எனக்கு வேலையிருக்கு" வாட்சைப் பார்த்துக் கொண்டே சொன்னான் அனந்த். அவன் ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குப் போகும்முன் ரோஜாவுக்காக நல்ல புடவையும் பூவும் வாங்க வேண்டுமென்று நினைத்திருந்தான்.

விஜய் பார்த்துக் கொண்டிருந்தான். அனந்த் வாசற்கதவைத் தாண்டப் போனவன், மறுபடியும் பாத்ரூம் பக்கம் போனான். இந்தத் தடவை கண்களை இருட்டிக்கொண்டு வந்தது. விஜய் தம்பியின் தோளைச் சுற்றிக் கையைப் போட்டு அணைத்தவாறே அவனைக் கட்டில் அருகில் அழைத்து வந்தான்.

"டாக்டருக்குப் போன் செய்யட்டுமா அனந்த்!"

"வேண்டாம்— வேண்டாம்— கொஞ்சம் தலையைச் சுத்தறது அவ்வளவுதான் — நான் போகணும்—போய்த் தானாகணும்..." என்றவன் கட்டிலில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்துகொண்டான்.

"கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கக்கூடாதா! அப்படி என்ன தலை போகிற காரியம்? அந்த மகாராணியைச் சந்திக்க தானே?" என்றான் விஜய்.

"உனக்குத் தெரியாது விஜய்... நான் போகணும்." அனந்த் எழப் போனவன்... விஜய் அவனுடைய இரு தோள்

களிலும் கைகளைப் பதித்து அழுத்தி உட்கார வைத்தான். மூடியிருந்த கண் இமைகளைப் பலவந்தமாய்த் திறக்க முயன்றுகொண்டே கோபமாய்ச் சொன்னான் அனந்த். "விஜய்! நான்தான் சொல்றேனே! உனக்கு ஒன்றும் தெரியாது... நான் போகணும். ரோஜா எனக்காக எதிர் பார்த்துக்கொண்டு இருப்பாள். இப்போ நான் போகா விட்டால், என்னை மன்னிக்கவே மாட்டாள். என் முகத்தில் விழிக்கக்கூட மாட்டாள்." அதற்குள் அவனுக்கு மயக்கம் வந்துவிட்டது. "வந்துவிட்டேன் ரோஜா! போகாதே" கத்தப் போனவன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளியில் வரவில்லை. கைகள் மட்டும் சூனியத்தில் துளாவின— அப்படியே கட்டிலில் சாய்ந்துவிட்டான்.

கண் இமைக்காமல் அனந்தைப் பார்த்துக் கொண்டிருந்த விஜய், அவனுக்கு நினைவு தப்பிவிட்டது என்று தெரிந்ததும், டாக்டருக்குப் போன் செய்து சொன்னான். அடுத்த தெருவில் இருந்த டாக்டர் பத்து நிமிடங்களில் வந்து அனந்தைப் பரிசோதித்து. "மாலையில் விழிப்பு வந்து விடும். எழுந்த பிறகு சூடாக ஒரு கப் பாலை குடிக்கச் செய்யுங்கள். போதும்" என்றார்.

அவரை வழி அனுப்ப வெளியே வந்த விஜய், அவருடைய பேக்கை காரில் வைத்துக்கொண்டே, "தாங்க்யூ டாக்டர், உங்க உதவியை என்றுமே மறக்க மாட்டேன்." என்றான்.

"இதில் நன்றி தெரிவித்துக்கொள்ள என்ன இருக்கு? உங்க ஃபாமிலி டாக்டராய் என் கடமையைச் செய்தேன். அவனென்ன சின்னப் பையனா, இரண்டு அடி கொடுத்து உட்கார வைக்க...? இந்தக் காலத்துப் பசங்களே இப்படித்தான்! சீக்கிரம் கல்யாணத்தை முடித்து விடுங்க. இப்படி இருக்கிறவங்க நாளைக்கு பெண்டாட்டி சொன்ன பேச்சுக்குக் கட்டுப்பட்டு இருப்பாங்க."

"என்னுடைய முயற்சியும் அதுதான் டாக்டர்."



டாக்டரை அனுப்பிவிட்டு உள்ளே வந்த விஜய், அனந்த் அருகில் சென்று, அவனுடைய உடைகளைத் தளர்த்தி, காற்றாட படுக்க வைத்தான். ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த தம்பியின் முகத்தையே பார்த்தான். "அனந்த்! இன்று நான் செய்யப்போகும் இந்தக் காரியத்துக்கு, நீ முதலில் வேதனை அடைந்தாலும், பிற்காலத்தில் எனக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியாது. உனக்காக மட்டுமே இன்று அந்தப் பெண்ணின் கழுத்தில் மூன்று முடிச்சு போடப் போகிறேன்." மனதில் எண்ணிக்கொண்டான் விஜய்.

கால் மணி நேரத்திற்குள் விஜய் மளமளவென்று தயாராகி, தான் வரும் வரை, அனந்தைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளும்படி லக்ஷ்மியிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, ஸ்கூட்டரில் லாயர் வீட்டுக்குக் கிளம்பினான்.

விஜய் லாயர் வீட்டை அடைந்தபோது யசவந்தராவ் தயாராக நின்றிருந்தார்... "விஜய்! என்ன முடிவு செய் திருக்கே?" என்று கேட்டார்.

"இன்னும் முடிவு செய்ய என்ன இருக்கு? நேற்றிரவே தீர்மானித்துவிட்ட விஷயம் தானே!" என்றான்.

"அப்படின்னா?" அவர் சந்தேகமாய்ப் பார்த்தார்.

"நான் அந்தப் பெண்ணை கல்யாணம் செய்து கொள்வதாய் முடிவு செய்துவிட்டேன்..." இளமுறுவலுடன் சொன்னான் விஜய்.

"விஜய்... கடைசி தடவையாய்ச் சொல்றேன்... நாம் எந்தக் காரியம் செய்தாலும் பின்னாடி வருத்தப்படக் கூடாது."

"நிச்சயமாய் வருத்தப்பட மாட்டேன்." திடமாய்ச் சொன்னான் விஜய்.

விஜயின் போக்கு அவர் அறியாதவர் இல்லை. அவன் ஒரு முடிவை எடுத்துவிட்டான் என்றால் யாராலும் அதை மாற்ற முடியாது. டிரைவர் காரை காரேஜிலிருந்து வெளியே எடுத்து வைத்ததும், விஜய் தன்னுடைய வண்டியைக் காரேஜில் வைத்து விட்டான்.

"வாங்க, உங்களையும், இன்னும் நான்கு பேரையும் கோவில் கிட்ட இறக்கிவிட்டு, நான் ரிஜிஸ்டிரார் ஆபீசுக்குப் போகிறேன்."

"மற்ற நான்கு பேர் யார்?"

"பெண்ணை அலங்காரம் செய்ய இரண்டு மாமிகள், கல்யாணம் நடக்கும் போது போட்டோ எடுக்க என் டைபிஸ்ட், சாஸ்திரிகள்."

"விஜய், இதெல்லாம் ஏதாவது தகராறில் நம்மையே தாக்கிவிட்டால்?" சந்தேகமாய்க் கேட்டார் அவர்.

"முழு பொறுப்பும் என்னோடது தான். உங்களுக்கு எந்தப் பிரச்னையும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன்."

இருவரும் ஏறி உட்கார்ந்த பிறகு கார் நகர்ந்தது...

• • •

அன்று காலை எழுந்தது முதல் ரோஜாவின் மனம் ஒரு நிலையில் இல்லை. இரவு முழுவதும் தூங்கவில்லை. இந்தத் திருமணத்தில் அவளுக்குக் கொஞ்சம்கூட விருப்பமில்லை. விஜய் தன்னை அவமானப் படுத்திவிட்டான் என்ற கோபத்தில், அனந்திடம் சம்மதம் தெரிவித்து விட்டாள். ஆனால் அது ஆத்திரத்தில் எடுத்துவிட்ட முடிவு என்று மறுநாளே தெரிந்து விட்டது. அனந்தைச் சிநேகிதனாய்த் தவிர, வேறு எண்ணத்துடன் பார்க்க அவள் உள்ளமும், உடலும் உடன்படவில்லை. அனந்தைத் திருமணம் செய்து கொண்டால் மட்டும், விஜயை எப்படிப் பழி தீர்த்துக் கொள்ள முடியும்? கல்யாணம் முடிந்த பிறகு, இனி தான் தலையிடுவது அநாவசியம் என்று விஜய் ஒதுங்கிப் போய் விட்டால்...யார் மீது பழி தீர்த்துக்கொள்ள முடியும்? விஜய்



மீது இருக்கும் கோபத்தில் அனந்தைத் திருமணம் செய்து கொள்வது அர்த்தமில்லாத விஷயம். விஜய் ஒதுங்கிக் கொண்ட மறு விநாடியிலிருந்து தனக்கும் அனந்துக்கும் சண்டை ஆரம்பமாகிவிடும். எந்தப் பணத்துக்காகத் தான் அனந்தைத் திருமணம் செய்து கொள்ள நினைத்தாளோ, அந்த பணம் தம்மிருவருக்குமிடையே பெரிய இடைவெளியை ஏற்படுத்தும். வேண்டவே வேண்டாம். தன்னுடைய கருத்துகளுடன் ஒத்துப் போக மாட்டான் என்று தெரிந்த பிறகும் அனந்தைக் கணவனாய் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

அனந்துக்கு எப்படியாவது புரியவைக்க வேண்டும். அவன் புரிந்து கொள்ள மறுத்தால்? இல்லை—இல்லை—அவன் அடுத்தவரின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும் யோசிப்பவன்.

எதற்கும் இருக்கட்டும் என்று, தன் மனதில் இருந்த எண்ணங்களை, திருமண வாழ்க்கை பற்றித் தனக்கு இருந்த கனவுகளை விவரித்து, கோர்வையாய், அனந்தின் மனம் நோகாத விதமாய்க் கடிதம் எழுதி பேக்கில் வைத்துக் கொண்டாள். ஒரு வேளை அனந்த் கோபத்தில், தான் சொல்ல வந்ததைக் காது கொடுத்து கேட்காவிட்டால், இந்தக் கடிதத்தை அவன் கையில் வைத்து விட்டு வந்து விடலாம்.

ரோஜா ரிஜிஸ்டிரார் ஆபீசுக்கு வந்தாள். அனந்த் இன்னும் வரவில்லை. அவனும் கடைசி நிமிடத்தில் தயங்கி இருப்பானோ!

கால் மணி— அரை மணி— ஒரு மணி நேரமும் தாண்டி விட்டது. அனந்த் இன்னமும் வரவில்லை. அவன் வராமல் இருந்தது ஒரு விதத்தில் நிம்மதியளித்தாலும், ஏன் வரவில்லையென்றும், காரணம் என்னவாக இருக்கக்கூடும் என்ற படபடப்பும் ஏற்படத் தொடங்கியது. சாதாரணமாய் வாக்கு தவறுபவன் இல்லையே அனந்த். அதுவும் இன்னிக்கு!

ஏதோ நடந்திருக்கும்...! பயமும், பதட்டமும் ஆட்கொள்ள ரோஜாவின் இதயம் வேகமாய்த் துடிக்கத் தொடங்கியது.

ரோஜா முதல் நாள் இரவு சாப்பிடவில்லை, தூங்கவும் இல்லை... அனந்துக்காகக் காத்திருப்பதிலேயே சோர்வடைந்த ரோஜாவால் நிற்கக் கூட முடியவில்லை. சற்று யோசித்தவள், ஒரு முடிவுக்கு வந்தவளாய், ரிஜிஸ்டிரார் ஆபீசுக்குள் சென்று அங்கிருந்த குமாஸ்தாவிடம், ஒரு வேளை அனந்த் வந்தால், தான் இதுவரை காத்திருந்து சென்று விட்டதாகத் தெரிவிக்கச் சொன்னாள். அவரும் சரியென்று தலை அசைத்தார்.

அலுவலகத்தை விட்டு வெளியே வந்துக் கொண்டிருந்த ரோஜா, யாரோ மிடுக்கான நடையுடன் எதிரில் வரவே, தலையை உயர்த்திப் பார்க்காமலே, ஒரு பக்கமாய் நகர்ந்து வழி விட்டாள்.

எதிரில் வந்த நபர் ரோஜா எதிர்பார்த்தது போல் அவளைத் தாண்டிப் போகவில்லை. நின்று "எக்ஸ்க்யூஸ்மீ" என்றான்.

வேறேதோ நினைவுகளில் மூழ்கியிருந்த ரோஜா, அந்த குரலைக் கேட்டதும் திடுக்கிட்டாற் போல், சரேலென்று தலையை உயர்த்திப் பார்த்தாள் எதிரே!!! விஜய் நின்றிருந்தான். ரோஜாவுக்கு உயிரே போனாற்போல் ஆயிற்று.

ரோஜாவைப் பார்த்ததும் அவன் பணிவாய் இரு கரம் கூப்பி வணங்கினான். ரோஜா பதில் வணக்கம் தெரிவிக்கவில்லை.

"நீங்க அனந்துக்காகக் காத்திருக்கீங்கன்னு நினைக்கிறேன்" என்று ரொம்பப் பணிவுடன் கேட்டான் விஜய்.

ரோஜா பேச்சிழந்தவளாய், கண் இமைக்கவும் மறந்து போனாற்போல், நேராக அவனையே பார்த்துக்கொண்



டிருந்தாள் விஜய் இங்கே எப்படி வந்தான்? அவனுக்கு எப்படித் தெரியும்? அனந்த் என்னவானான்?

ரோஜாவின் மன ஓட்டத்தைப் படித்தவன்போல் விஜய் பதிலளித்தான், "அனந்துக்கு உடல் நலம் சரியாக இல்லை... வர முடியவில்லையென்று சொல்லச் சொன்னான்."

"பொய்!"

"உண்மைதான் சொல்கிறேன்."

"நான் நம்ப மாட்டேன்."

ரோஜாவின் கண்களில் தென்பட்ட நம்பிக்கையின்மையைப் பார்த்ததும், விஜய் உதடுகள் குறும்புத்தனத்தை மறைத்துக் கொண்டு முறுவலித்தன. அம் முறுவலைப் பார்த்ததும், பற்றிக்கொண்டு வந்தது ரோஜாவுக்கு.

"உங்களுக்கு என் வார்த்தையில் நம்பிக்கை இல்லாவிட்டால், என்னுடன் வாங்க. நீங்களே நேரில் பார்த்துத் தெரிஞ்சுக்குங்க"

"தேவையில்லை" முகத்தில் அடிப்பதுபோல் சொன்ன ரோஜா, கிளம்பப் போனாள்.

விஜய் ஒரு ஓரமாய் நகர்ந்து நின்று வழிவிட்டான். பின்னாடியே வந்தான் விஜய்.

"அனந்த் உங்களுடைய உயிர் நண்பன். வருங்காலக் கணவனும் இல்லையா! அவனுக்கு உடல் நலம் சரியில்லையென்றால் கூட நீங்க பார்ப்பதற்கு வர மாட்டீங்களா?"

ரோஜா பற்களால் கீழ் உதட்டை அழுத்திக் கொண்டாள். சட்டென்று ஏதாவது ரிக்ஷா வந்தால் நன்றாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது.

விஜய் ரோஜாவைத் தாண்டி முன்னால் சென்று கார் கதவைத் திறந்து. ரொம்ப மதிப்பட்டவன் போல், "அப்படின்னா—நீங்க வரலைங்களா?" என்றான். விஜயின் குரலும், அவன் சொன்ன தொனியையும் பார்த்தால்,

உண்மையாகவே அனந்துக்கு உடல் நலம் சரியில்லையோ என்ற பயம் ஏற்பட்டது. ஆனால் இவனை எப்படி நம்புவது?

"என்ன உடம்பு?" போவதா வேண்டாமா என்று மனதில் யோசித்துக் கொண்டே, கேட்டாள்.

"காலரா" என்றான்.

ரோஜா சரேலென்று நிமிர்ந்துப் பார்த்தாள்.

விஜய் தெருப்பக்கம் பார்த்துக் கொண்டே, ரொம்ப சகஜமாய்ச் சொன்னான்.

நல்ல வேளையாக நான் வீட்டில் இருந்தேன். இல்லாவிட்டால் இல்விக்கு..."

"எங்கே இருக்கான்னு சொல்லுங்க. நான் போய்க் கொள்கிறேன்."

"தனியார் மருத்துவமனையில்."

"எங்கே இருக்கு அது?"

"சொன்னாலும் உங்களுக்குப்புரியறது ரொம்ப கஷ்டம் பழக்கமானவர்களுக்கே வழி தடுமாற்றமாய் இருக்கும். எதுக்கு வீணாகச் சிரமப்படறீங்க? நான் போய் அவனிடம் சொல்கிறேன். நீங்க இங்கே காத்துககிட்டு இருப்பீங்கன்னும் போய்ச் சொல்லி அழைச்சுகிட்டு வான்னு, என் உயிரை எடுத்ததால், உடல் நலமில்லாதவன் பேச்சை தட்ட முடியாமல் வந்தேன். எனக்கு முன்பே தெரியும், நீங்க வரமாட்டீங்கன்னு..." கண்களில் குறும்பு மின்ன மறுபடியும் சிரித்தான்.

ரோஜாவுக்கு ஆத்திரமாக இருந்தது. விஜயின் தோரணையைப் பார்த்தால், தான் வரவில்லை என்று சொன்னதற்கு, பத்து வார்த்தைகள் ஜோடித்து அனந்திடம் சொல்லுவான்போல் இருந்தது. தான் வருவதைவிட, வராமல் இருப்பதுதான் அவன் விரும்புவதுபோல் பேசுகிறான். ரோஜா தயங்கிக் கொண்டே நின்றாள்.



போனால் என்ன ஆகும்? தனியாக இல்லையே! கார் டிரைவரும் இருக்கிறான். என்ன செய்துவிடுவான்? ரோஜா தன் இடது கை விரல்களில், நீளமாய், கூர்மையாய் வளர்ந்து இருந்த நகங்களையும், விஜயின் முகத்தையும் ஒருமுறை பார்த்துக் கொண்டாள்.

"நான் கிளம்பட்டுமா?" விஜய் கார் கதவின் ஹேண்டிலைத் திருப்பிக் கொண்டே கேட்டான்.

ரோஜா பதட்டத்தில் இருந்தாள். தன் நன்மைக்காகத் தான் இன்று அனந்துக்கு உடல் நலம் சரியில்லாமல் போயிற்று பாவம்! அனந்த்.

விஜய் காரில் பின் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்டான். ரோஜா காரை நோக்கி இரண்டு அடிகள் எடுத்து வைத்தாள். அவள் தலையை நிமிர்த்திப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் விஜய் முகத்தில் மின்னிய வெற்றி பெருமிதத்தை கவனித்திருப்பாள். சந்தேகம் வந்திருக்கக் கூடும். ஆனால் விதி வேறு விதமாய் இருந்தது. ரோஜா கவனிக்கவில்லை. ரோஜா வந்து அமர்ந்து கொண்டதும், விஜய் டோரை 'லாக்' செய்தான். கார் கிளம்பியது. ரோஜா ஒதுங்கி ஓரமாய் உட்கார்ந்து கொண்டாள். இருவருக்குமிடையே இன்னும் இருவர் உட்காரும் அளவுக்கு இடைவெளி இருந்தது.

கார் அம்பு போல் வேகமாய்ச் சென்று கொண்டிருந்தது. சாலையில் மக்கள் நடமாட்டமே இல்லை என்று சொல்லலாம். அப்பப்போ ஏதாவது கார் வருவதும், போவதுமாய் இருந்தது.

திடீரென்று விஜய் சொன்னான். "மிஸ் ரோஜா... ஒரு நிமிஷம்..."

ரோஜா தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

"நீங்க எப்படியோ இருக்கீங்க. அனந்துடன் இன்று உங்கள் திருமணம் நடைபெறாததால், உங்களுக்கு மான

நஷ்டமோ—இல்லை—உயிருக்குக் கஷ்டமோ ஏற்படும் என்று பயப்படும் நிலைமையில் நீங்க இருந்தால்...'' சற்று நிறுத்தினான். அவன் கண்களில் குறும்பு கொப்புளித்தது. ரொம்பப் பணிவாய்ச் சொன்னான், ''நானும் பிரம்மசாரி தான். இன்னும் திருமணம் ஆகவில்லை. உங்களைத் திருமணம் செய்து கொண்டு உங்க வேதனையை என்னால் போக்க முடியும். என் சார்பில் உங்களுடன் சண்டைபோட யாரும் இல்லை. தனியாள் நான். உங்களைப்போல் சுதந்திரமானவன்.''

ரோஜா நிமிர்ந்து உட்கார்ந்தாள். கண்களில் ரோஷம் பளபளத்தது.

'அஃப் கோர்ஸ்'' உங்க தேவை தீர்ந்த பிறகு நாம் 'டைவோர்ஸ்' செய்து கொள்ளலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. உங்களுக்கும் என்னால் காரியம் ஆனாற்போல் இருக்கும். எனக்கும் உங்களிடம் ஏற்பட்ட மோகம் தீர்ந்தது போலிருக்கும்.''

படம் விரித்தாடும் பாம்பு போல் சீற்றம் கொண்ட ரோஜா, கடைசியாய் விஜய் சொன்னதைக் கேட்டதும், இனி பொறுக்க மாட்டாதவளாய்க் கையை நீட்டி பலமாய் விஜய் கன்னத்தில் அறையப் போனாள்.

விஜய், மின்னல் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு, தன் அருகில் வந்த ரோஜாவின கையைப் பலமாகப் பற்றிக் கொண்டான். ஒருவரை ஒருவர் விழுங்கிவிடும் அளவுக்குத் தீவிரமாய்ப் பார்த்துக் கொண்டார்கள். ரோஜா பற்களை அழுத்தித் தன் கோபத்தை கட்டுப்படுத்திக்கொண்டே, அவன் கையில் சிக்கியிருந்த தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் அது சாத்தியப்படவில்லை. விஜயின் வலிமை நிறைந்த கரங்களில் ரோஜாவின் மென்மையான கரம் நலிந்து போயிற்று.

வலி தாங்க முடியாமல் கண்களில் நீர் சுழன்ற போதிலும், கண்களில் ரோஷம் பளபளக்க அனல் வீசுவதுபோல்



பார்த்தாள் ரோஜா... விஜய் ரோஜாவின் கையை விடவில்லை. திறமையான வேட்டைக்காரன்போல் ரோஜாவை மெள்ளமெள்ள மாய்த் தன் அருகில் இழுத்துக் கொண்டான். ரோஜா அவன் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள தன் சக்தியெல்லாம் திரட்டி, முயற்சித்துக் கொண்டிருந்தாள். விஜய் தன் இடது கையை நீட்டி ரோஜாவின் தோளைச் சுற்றிப் போட்டு, தன் அருகில் இழுத்துக் கொண்டான். ரோஜாவின் தலையை தன் மார்போடு சேர்த்து, அணைத்துக் கொண்டான். ரோஜா அவனைத் தன் நகங்களால் காயப்படுத்த முயன்றபோதும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டது.

''பயப்படாதே டியர்—உன்னை நான் விழுங்கிவிட மாட்டேன். கொஞ்சம் நேரம் நினைவு இல்லாமல் செய்யப் போகிறேன். அவ்வளவுதான்'' விஜய் சமாதானப்படுத்துவது போல் சொல்லிக்கொண்டே, வலது கையால் சட்டைப் பையிலிருந்து சின்ன பாட்டிலை எடுத்தான்.

அவன் பிடி சற்று தளர்ந்ததும் ரோஜா, விஜயின் கையைப் பலமாகப் பற்கள் நன்றாகப் பதியும் அளவுக்கு அழுத்தமாய்க் கடித்துவிட்டாள்.

''அம்மா!'' இந்த முறை வேதனையில் அலறுவதும், கண்களில் நீர் சுழலுவதும் அவன் பங்காயிற்று. கண நேரம் தான். தாடை எலும்பு இறுக, பற்களை கடித்துக் கொண்டு ரோஜாவை அழுத்தமாய் பற்றிக் கொண்டே, பாட்டிலின் மூடியை திறந்து ரோஜாவின் மூக்கின் அருகில் பிடித்துக் கொண்டான். அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள, அம்பு அடிபட்ட மான் போல் துடிதுடித்தாள் ரோஜா. விஜயின் இரும்புக் கரங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை. ரோஜாவின் போராட்டம், கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிவிட்டது. சற்று நேரத்தில் நினைவிழந்த நிலையில், அவன் கைகளில் துவண்டு போனாள்.

"வேகமாய்ப் போகட்டும்" என்று டிரைவரிடம் விஜய் சொன்னதும், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாய் கார் வேகமாகப் போகத் தொடங்கியது.

# 22

சென்னையிலிருந்து இருபது மைல் தொலைவில் வடமேற்குத் திசையில் சின்ன கிராமம் ஒன்று இருக்கிறது. அந்தக் கிராமத்தில் "ரேணுகாம்பிகை"யின் கோவிலில், ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் திருவிழா நடக்கும். வெளியூர்களிலிருந்து காதல் ஜோடிகள் இங்கு வந்து கல்யாணம் செய்து கொண்டு போவது வழக்கமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

விஜய் ரிஜிஸ்டிரார், ஆபீசுக்குப் போகும் முன் லாயர், இரண்டு மாமிகள், சாஸ்திரிகள், டைபிஸ்ட் கோபால இவர்களை இந்தக் கோவிலில் இறக்கி விட்டுப் போயிருந்தான். அவன் ரோஜாவுடன் அங்கு போன போது, அவர்கள் எல்லாவற்றையும் தயாராக வைத்து விட்டு அவனுக்காகக் காத்திருந்தார்கள்.

கோவிலை ஒட்டி இரண்டு அறைகள் இருந்தன. ஒரு அறையில் பெரிய மரப்பெஞ்சி போடப்பட்டிருந்தது. நினைவு தப்பி இருந்த ரோஜாவை இரு கரங்களில் தூக்கி வந்த விஜய், அவளைப பெஞ்சின் மீது படுக்க வைத்தான். பக்கத்தில் இருந்த மாமிகளைப் பார்த்து, "பத்து நிமிடங்களில் முடியணும்" என்று சொல்லி வெளியேறி விட்டான்.

சாஸ்திரிகள் ஹோமம் வளர்த்துக் கொண்டிருந்தார். கோபால் காமிராவில் 'வியூ' சரிபார்த்துக்கொண்டிருந்தான்,



"விஜய்! இன்னொரு தடவை யோசித்துக் கொள்."
படபடவென்று துடிக்கும் இதயத்துடன் அமர்ந்திருந்த லாயர் பரந்தாமன் விஜயை எச்சரிக்கை செய்தார்.

விஜயின் புருவங்கள் முடிச்சிட்டுக் கொண்டன.

"கோபால்! என்னுடைய உடைகள் எங்கே?" என்று விஜய் கேட்டான்.

கோபால் புது உடைகளைக் கொண்டு வந்து கொடுத்தான். பஞ்சகச்சமும், மேலே அங்கவஸ்திரமும் உடுத்திக் கொண்டான் விஜய். மாமிகளில் ஒருத்தி, மை டப்பாவும், சாந்து பாட்டிலையும் கொண்டு வந்து கொடுத்தாள். மையை வேண்டாமென்று மறுத்து விட்டு, நீளமாய்ச் சாந்துப் பொட்டை இட்டுக் கொண்டான். ஹோமம் தயாராகி விட்டதென்று சாஸ்திரிகளிடமிருந்து அழைப்பு வந்தது.

விஜய் ரோஜா இருந்த அறைக்குப் போனபோது, ரோஜாவை மணப் பெண்ணாக அலங்கரித்து இருந்தார்கள். நெற்றியில் கல்யாண திலகம், கண்களில் இலேசாக மை, கன்னத்தில் திருஷ்டிப் பொட்டு, கால்களில் மருதாணி இடப்பட்டிருந்தது. நீளமான பின்னலில் மல்லிகைச் சரத்தைச் சுற்றி இருந்தார்கள்.

நினைவு தப்பிய இளவரசியைப் போல், இருந்த ரோஜாவைப் பார்த்ததும் விஜய் ஒரு கணம் அப்படியே நின்றுவிட்டான். அவன் இதயம் வேகமாய்த் துடித்தது. தான் செய்யப் போகும் இந்தக் காரியம் அவளுக்குத் தீங்கு இழைப்பது போல் ஆகுமோ என்று தோன்றிற்று. ஆனால் அடுத்த கணமே அந்த எண்ணம் மாறிவிட்டது. தன் அழகைப் பகடை காயாகப் பயன்படுத்தி, அனந்த போன்றவர்களை தன் வலையில் சிக்க வைத்துக் கொல்வது இவள் தானே என்ற எண்ணம் மேலோங்கியதும் அவன் இதயம் கற்பாறையாய் இறுகி விட்டது.

வக்கீலும், விஜயும் ரோஜாவைக் கைத்தாங்கலாய்ப் பிடித்து அழைத்து வந்தார்கள். சாஸ்திரிகள் மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினார்.

"அடடா! அதெல்லாம் எதுக்கு? இதொன்றும் உண்மையான கல்யாணம் இல்லையே? ஏதோ முக்கியமாகச் சொல்ல வேண்டியதைச் சொன்னால் போதும்" என்று விஜய் நெற்றியைச் சுருக்கினான்.

"பழக்க தோஷம் தம்பி..." சாஸ்திரிகள் துரிதமாகக் கல்யாண காரியங்களை நடைபெறச் செய்தார்.

கோபால் விஜய் சொன்னபடியே, ரோஜாவின் கழுத்தில் திருமாங்கல்யம் கட்டும் போது, அக்னியை வலம் வரும் போது, நெற்றியில் திலகம் இடும்போது, விதவிதமான கோணங்களில் போட்டோக்களை எடுத்தான். அவனிடம் சொன்னது போலவே, ரோஜாவின் கல்யாணம் சுருக்கமாய், ரகசியமாய் நடந்து முடிந்து விட்டது.

ரோஜாவுக்கு மயக்கமாய், தலை சுற்றுவது போல் இருந்தது கண்களைத் திறக்க முயற்சி செய்தாள் ஆனால் சாத்தியப்படவில்லை. தொலைவில் எங்கோ திருமண மந்திரங்கள் ஒலிப்பது கேட்டது. யாருடைய திருமணம் அது? அவளோடதா? தான் அந்த கல்யாணத்திற்குப் போயிருந்தாளா? ஏதோ இனிமையான நறுமணம் காற்றில் கலந்து இருந்தது அவளால் நிற்க முடியவில்லை. காற்றில் மிதப்பது போல், சூனியத்தில் இருப்பது போல் உடல் இலேசாகி விட்டிருந்தது.

கல்யாணம் முடிந்ததும், விஜய், ரோஜாவை இரு கரங்களால் தூக்கி அறையில் பெஞ்சுமீது படுக்க வைத்தான்.

பணக்காரங்க யாரோ காரில் வந்து, இங்கு கல்யாணம் செய்து கொள்ளப் போவதாய்ச் செய்தி தெரிந்ததும் அந்தக் கிராமத்தில் இருந்த கூலி வேலை செய்யும் மக்கள். திரண்டு கோயிலுக்கு வந்து விட்டார்கள். இந்த மாதிரி சமயங்களில் சாப்பாடோ, பணமோ இனமாய்க் கிடைப்பது வழக்கம்.



கூட்டமாய் வந்து நின்ற மக்களைப் பார்த்ததும் விஜய் திகைத்துப் போனான். பிறகு ஆளுக்கொரு ரூபாயைக் கொடுத்து அனுப்பிவிட்டான்.

ரோஜாவை இது போல் கல்யாணம் செய்து கொண்டது பாவம் என்றால், இப்படிப் பணத்தைத் தானம் செய்ததில், அந்தப் பாவம் நீங்கிவிடும் என்று மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டான் விஜய்.

பணத்தை வாங்கிக் கொண்ட ஜனங்கள் புது மணத் தம்பதிகளை வாயார வாழ்த்திக் கொண்டே போனார்கள்.

"கடைசியில் நினைச்ச காரியத்தைச் சாதித்து விட்டாய்... பலே ஆள்தான்!" என்றார் வக்கீல்.

விஜய் அவர் சொன்னதுக்கு எந்த விதமான விமரிசனமும் செய்யவில்லை. காதில் விழாதது போல் இருந்து விட்டான். வக்கீலுக்கு யாரையோ சந்திக்க வேண்டியிருந்ததால் உடனே கிளம்பி விட்டார். அவருடன் கோபாலையும், மற்றவர்களையும் அனுப்பி விட்டான் விஜய். அவர்களை இறக்கிவிட்டு கார் மறுபடியும் இங்கு வந்துவிடும். அதற்குள் ரோஜாவுக்கு விழிப்பு வந்து விடும். தான் சொல்ல நினைத்ததை அவளிடம் சொல்லி விடலாம என்று எண்ணிக் கொண்டான் விஜய்

விஜயையும், ரோஜாவையும் தனிமையில் விட்டு விட்டு மற்றவர்கள் கிளம்பி விட்டார்கள். மதியம் மூன்று மணியைத் தாண்டும் போது ரோஜாவுக்கு நினைவு திரும்பியது கண்களைத் திறந்து பார்க்கும் போது, தொலைவில் வாசற்கதவு அருகில் யாரோ அந்தப் பக்கமாய்த் திரும்பி பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நபர் யாரென்று அவளுக்குத் தெரியவில்லை. காரை பெயர்த்து இற்று போன மண் சுவர்கள்... இந்த அறையில் மரப்பெஞ்சின் மீது தான் எதுக்காக படுத்திருக்கிறாள்? இது கனவா? நினைவா? இந்தப் புதிய ஆள் யாரென்று புரியாமல், ரோஜாவின் இதயம் பயத்தில்

படபடத்தது. நா வரண்டு போனாற்போல் இருக்கவே பலவீனமான குரலில் "தண்ணீர்" என்றாள்.

விஜய் திரும்பிப் பார்த்தான். படித்துக் கொண்டிருந்த பேப்பரை மடித்து, அங்கு இருந்த நாற்காலியில் வைத்து விட்டு, அறையின் மூலையில் இருந்த பானையிலிருந்த தண்ணீரைத் தம்ளரில் எடுத்து வந்தான்.

ரோஜா, பயந்து போனவளாய், எழுவதற்குக் கூட சக்தி இல்லாதவள் போல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். நெற்றியில் கல்யாண திலகத்துடன் விஜய் முகம் வேடிக்கையாய்த் தென்பட்டது.

ரோஜாவின் அருகில் வந்த விஜய் 'குடி' என்றான்...

ரோஜா திடுக்கிட்டாள். இது கனவு இல்லை... நினைவு தான். "எனக்கு... எனக்கு என்ன ஆச்சு?" கனவுலகிலிருந்து யதார்த்தத்துக்கு வர முயன்று கொண்டே தெளிவற்ற குரலில் கேட்டாள் ரோஜா.

"உனக்கா?" ரோஜாவைக் கண நேரம் கூர்ந்து பார்த்தவன், மென்மையான குரலில் சொன்னான், "ஒண்ணும் ஆகலை... கல்யாணம் நடந்தது. அவ்வளவு தான்" அவன் குரலில் நயமும், கண்களில் குறும்புத்தனமும் போட்டியிட்டன.

அவன் சொல்வது ஒன்றுமே புரியாதவள் போல் ரோஜா இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். என்ன நடந்தது? அனந்தைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தாள். இதற்குள் ஏதோ விபத்து நடந்திருக்கு. ரோஜாவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் நினைவு வரத் தொடங்கியது.

"அனந்த் எங்கே?" கிணற்றுக்கடியில் இருந்து வந்தது போல் ரோஜாவின் குரல் பலவீனமாய் ஒலித்தது.

"இங்கே இல்லை."

"இங்கே இல்லியா? பின்னே நான் ஏன் இங்கே வந்தேன்?"



"நான் தான் அழைச்சுக்கிட்டு வந்தேன்."

"நீங்களா?"

"ஆமாம்."

"எதுக்கு?"

"உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள."

துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டது போல் துள்ளி எழுந்து உட்காரப் போனாள் ரோஜா. ஆனால் முடியவில்லை. உட்கார்ந்ததும், கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. கண்களைக் கையால் அழுத்தி மூடிக் கொண்டாள். "அம்மா" என்றாள்.

விஜய் அருகில் வந்து நின்று கொண்டான். "முதல்ல இந்தத் தண்ணீரைக் குடி... தலை சுற்றல் குறையும்..." டம்ளரை ரோஜாவின் உதட்டருகில் கொண்டு போனான்.

ரோஜா மறு பேச்சு பேசாமல், எந்த எதிர்ப்பையும் காண்பிக்காமல், அவன் கொடுத்த தண்ணீரை மளமளவென்று குடித்து விட்டாள். குளிர்ந்த நீர் தொண்டையில் இறங்கியதும், உயிர் வந்தது போல் இருந்தது.

"நன்றாக விழிப்பு வந்து விட்டதா?" என்று கேட்டான் விஜய். "கண்களைத் திறந்து இந்தப் பக்கம் பாரு."

ரோஜா மெதுவாய்த் தலையை உயர்த்தி அவன் பக்கம் பார்த்தாள். முதலில் தெளிவற்றுத் தெரிந்த அவன் முகம் மெள்ள மெள்ளமாய் முழுமையாய்த் தெரிந்தது.

"ஒரு தடவை குனிந்து உன் கழுத்தில் பார்த்துக்கொள்" என்றான்.

ரோஜா பார்த்துக் கொண்டாள். உடனே அவள் முகம் களையிழந்தது. மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்டு பளபளவென்று மின்னிக் கொண்டிருந்த திருமாங்கல்யம் அவள் கழுத்தில் கட்டப்பட்டிருந்தது. சட்டென்று தலையை உயர்த்தி விஜயைப் பார்த்தாள்.

விஜய் முகம் என்றுமே இல்லாத அளவு 'சீரியஸாய்' இருந்தது. தீட்சண்யமாய் இருந்த அவன் கண்கள், ரோஜாவின் முகத்தில் மாறிக் கொண்டிருந்த உணர்ச்சிகளை ஆர்வத்துடன் பரிசீலித்துக் கொண்டிருந்தன.

"என்ன இது? யாரோட வேலை இது?" பலவீனமாய் இருந்த அந்த நிலையிலும், கோபமாய்க் கத்திவிட்டாள் ரோஜா.

"என் வேலைதான்."

"நீங்களா? நீங்க..." ரோஜா தடுமாறியவளாய்ப் பார்த்தாள்.

"ஆமாம்! நான்தான் உன்னை ஏமாற்றி, பலவந்தமாய் உன்னைக் கல்யாணம் செய்துகிட்டேன்." சலனமில்லாமல் பார்த்துக் கொண்டே, நிதானமாய்ப் பதிலளித்தான் விஜய்.

செயல் மறந்து போனவளாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் ரோஜா.

விஜய் நிதானமாய், தெளிவாய், ஒவ்வொரு வார்த்தையும் அவளுக்குப் புரிய வேண்டும் என்பது போல் சொன்னான். "நான் உன்னைத் திருமணம் செய்து கொண்டேன். பயங்கரமான கனவுபோல் தோன்றும் இந்தக் காரியத்தை நான் ஏன் செய்தேன் தெரியுமா? அனந்துக்காக .. அனந்தைக் கல்யாணம் செய்து கொண்டு அவனுடைய சொத்தை அடையலாமென்று இருந்த நீ இப்போ என் கையில் சிக்கிக் கொண்டு வி_டாய். உடல் உழைப்பு தவிர வேறு எந்த சொத்தும் இல்லாதவனுக்கு மனைவியாகி விட்டாய். உன்னை நான் எவ்வளவு தூரம் வெறுக்கிறேன் என்று உனக்கே தெரியும்."

ரோஜா கண்கள் அகலமாய் விரிய, இமைக்கவும் மறந்தவளாய் இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்.



41/4288

விஜய் மறுபடியும் சொன்னான். "இப்போ உன் வாழ்க்கை என் கையில் இருக்கு. நம் இருவருக்கும் திருமணம் ஆனதற்குச் சாட்சியாய் என்னிடம் போட்டோக்கள் இருக்கு. சாஸ்திரிகள் சாட்சியம் சொல்வார். தேவைப் பட்டால் இந்த ஊர் ஜனங்கள் நம் திருமணம் நடந்தது உண்மைதான் என்று உலகம் முழுவதும் பறைசாற்று வார்கள். நீ எந்த விதமாகவும் என்னிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது."

ரோஜா பதில் அளிக்கவில்லை. ஒத்துக் கொள்ளவோ, மறுக்கவோ இல்லை.

"ஆனால் ஒரு நிபந்தனை. அனந்த் விஷயத்தில் நீ தலையிடாதவரை, நான் உன் ஜோலிக்கு வரமாட்டேன். நீ வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொள்வதாய் இருந்தால் உனக்கு இந்த போட்டோக்களை நெகடிவ்களுடன் கொடுத்து விடுகிறேன். மேலும் நீ கேட்ட பணத்தையும் தருவேன். ஆனால், நீ அனந்தின் தொடர்பை நட்பை துண்டித்துக் கொள்ளணும். அப்படி நீ செய்து விட்டால், நான் உன் பக்கமே வர மாட்டேன்."

ரோஜா பதுமைபோல் உட்கார்ந்து இருந்தாள்.

"நம் இருவருக்கும் இங்கு திருமணம் ஆனதற்குச் சாட்சியங்கள் என்னிடம் தான் இருக்கே தவிர, உன்னிடம் எந்த ஆதாரமும் கிடையாது. அதனால் உன்னால் என்னை எதுவும் செய்ய முடியாது. நீ அனந்திடம் இது பற்றிச் சொல்வாயோ, மாட்_ாயோ உன் விருப்பம்."

கார் வந்து நின்ற சத்தம் கேட்டதும், உரையாடலை நிறுத்தி விட்டு விஜய் வெளியே போனான். ரோஜாவுக்குத் தான் எங்கே இருக்கிறோம் என்று இன்னும் புரியவில்லை. தான் கனவு கண்டு கொண்டிருக்க வேண்டும். கனவில் விஜய் உருவம் வந்து தன்னைப் பயமுறுத்துகிறது.

இவ்வளவு உயிரோட்டமாய் நிற்கும் அவன் கனவு உருவமாய் எப்படி இருக்க முடியும்? அப்படி என்றால் அவன்

சொன்னதெல்லாம் உண்மைதானா? இந்தக் கல்யாணம் நிஜமாகவே நடந்ததா, ரோஜா தன் கழுத்தை தடவிப் பார்த்துக் கொண்டாள். மங்கலநாண் கையில் தட்டுப் பட்டது.

விஜய் சொன்னபடி டிரைவர் ஃப்ளாஸ்கில் காபி கொண்டு வந்து கொடுத்தார். விஜய் ஃப்ளாஸ்கை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தான்.

''காபி சாப்பிடலாமா?'' என்று ரோஜாவிடம் கேட்டான். ரோஜா பதில் அளிக்கவில்லை.

டம்ளரில் காபியை ஊற்றி அவளிடம் கொடுத்தான். ரோஜா மறுத்துவிடுவாளென்றும், வேகமாய்த் தள்ளி விடுவாளென்றும் எண்ணினான். ஆனால், ரோஜா மெதுவாகக் கையை நீட்டி டம்ளரை வாங்கிக் கொண்டாள். தன் முகத்தில் காபியை வீசக்கூடும் என்று பயந்தாற்போல் விஜய் ஒரு அடி பின்னால் நகர்ந்து கொண்டான்.

அவன் நினைத்ததற்கு நேர் மாறாய், ரோஜா காபியை மெதுவாகப் பருகத் தொடங்கினாள். டம்ளரைப் பிடித்திருந்த ரோஜாவின் கை சற்றே நடுங்கிக் கொண்டிருப்பதையும், உடலிலும் மெலிதான நடுக்கம் பரவியிருப்பதையும் விஜய் கவனத்திலிருந்து தப்பவில்லை. ரொம்ப சோர்வாய், களைப்புற்று தென்பட்ட ரோஜாவையே பார்த்துக் கொண்டிருந்த விஜய்க்குத் திடீரென்று தன் மீதே ஆத்திரமும் கோபமும் வந்தன.

பேண்ட் ஜோபியில் கைகளை நுழைத்துக்கொண்டு, ரோஜாவுக்கு வெகு அருகில் நின்றிருந்த விஜய்க்கு, தலை குனிந்து அமர்ந்திருந்த ரோஜாவின் தோற்றம் அவளுடைய அருகாமை, இருவர் மட்டுமே தனித்திருந்த அந்தச்சூழல், அவனை நிலை தடுமாற வைத்தன. அவள் அருகில் சென்று இறுக அணைத்துக்கொள்ள வேண்டுமென்ற வேட்கை அவன் மனதில் தோன்றியது. இது போன்ற செயல்கள் அவளுக்கு ஏற்கனவே பழக்கமாகியிருக்கும் என்றும், இதில் தவறு



எதுவும் இல்லை என்ற நினைப்பும் அந்த வேட்கையைத் தூண்டிவிட்டது. ஒரு கணம்தான். அவனுடைய விவேகம் விழித்துக் கொண்டு விட்டது. சீ! சீ! என்ன யோசித்துக் கொண்டிருக்கிறோம்? தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டவனாய் அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

ரோஜா காபி குடித்து விட்டு டம்ளரைப் பக்கத்தில் வைத்து விட்டாள். வாசல் கதவில் சாய்ந்து நின்ற விஜய், சிகரெட்டுக்காக, பேண்ட் பையில் தேடிக்கொண்டே, வெறுமையான குரலில் ''நீ அந்த வேஷத்தைக் கலைத்து விட்டால், இனி நாம் கிளம்பலாம்.''

''வேஷமா?'' என்பதுபோல் பார்த்தாள் ரோஜா.

''அந்த நெற்றி திலகமும், கன்னத்தில் திருஷ்டிப் பொட்டும்...''

ரோஜா நெற்றியில் இருந்த சாந்து பொட்டை எடுத்து விட்டாள். புடவைத் தலைப்பால் கன்னத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். மையானதால், எத்தனை அழுத்தித் துடைத்தாலும் கறுப்புக் கோடாய்க் கன்னத்தில் படிந்துவிட்டது.

கால்மணி நேரம் கழித்து, இருவரும் காரில் உட்கார்ந்து கொண்டார்கள். கார் வேகமாய்ச் சென்னையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. காரின் பின் சீட்டில் ஒரு மூலையில் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டாள் ரோஜா. தலையைக் குனிந்து இரு கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

காலையில் ரிஜிஸ்டிரார் ஆபீஸ் வாசலில் விஜய் எதிரில் வந்தது, ரொம்பப் பணிவாய் தன்னிடம் பேசியது, அனந்துக்கு உடல் நலமில்லை என்று அவன் சொன்னதை நம்பி, தான் அவனுடன் கிளம்பியது, வழியில் அவன் தன்னை அவமதித்துப் பேச, தான் கோபம் கொண்டு அவனை அடிக்க முற்பட்டது... எல்லாம் நினைவுக்குக் கொண்டுவா

முயன்றுகொண்டிருந்தாள். அவளுக்குத் தூக்கக் கலக்கமாய் தாங்க முடியாத சோர்வாய் இருந்தது.

கார் நகர எல்லைக்குள் நுழைந்துவிட்டது. மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததால், லேசாக இருள் பரவத் தொடங்கிவிட்டது. பெட்டிக்கடை ஒன்றைத் தாண்டி விட்டதை கவனித்த விஜய் காரை நிறுத்தச் சொன்னான். அவனிடம் சிகரெட் முழுவதுமே தீர்ந்துவிட்டது. டிரைவர் வண்டியைச் சாலை ஓரமாய் நிறுத்தினான்.

பணத்தை எடுத்து டிரைவரிடம் கொடுத்தான் விஜய். "சிகரெட் பாக்கெட் வாங்கி வாப்பா" என்றான். டிரைவர் இறங்கி கடைப்பக்கம் சென்று விட்டான்.

ரோஜாவுக்கும், அவனுக்கும் கிடைத்த தனிமை அவனுடைய இளமையைத் தூண்டிவிட்டது. கோரிக்கைக்கு ஒருகணம் அடிமை ஆகிவிட்ட அவன் மனம், இந்த முறை விவேகத்தை லட்சியம் செய்யவில்லை. டிரைவர் சற்று கண் மறைவாய்ப் போனதும், இரு கரங்களையும் நீட்டி, ரோஜாவின் தோள்களைப் பற்றித் தன்னருகில் இழுத்துக் கொண்டான். நினைவுகள் வேறு எங்கேயோ இருக்க, சோர்வாய், செயல் மறந்துபோன நிலையில் உட்கார்ந்து இருந்த ரோஜா, திடுக்கிட்டு தலை உயர்த்திப் பார்க்கும் போது, விஜய் முகம் அவள் முகத்துக்கு ரொம்ப அருகில் இருந்தது. ரோஜாவின் இடுப்பைச் சுற்றி கைகளைப் பிணைத்து, இன்னும் அருகில் இழுத்து, அணைத்துக் கொள்ளப் போன விஜய், ஒரு கணம் அந்த முகத்தைப் பார்த்தான். அந்தக் கண்களில் எப்போதும் அவனைத் தூண்டிவிடும் கோபமோ, ரோஷமோ தென்படவில்லை.

சோர்வாய், இயலாமையைப் பிரதிபலித்துக் கொண்டிருந்த அந்தக் கண்களைப் பார்த்ததும், அவன் சாட்டையடிபட்டவன் போல் நின்றுவிட்டான். எந்த விதமான போராட்டமோ, எதிர்ப்போ தெரிவிக்காமல் மிரண்டுவிட்ட சின்னப் பெண் போல், வாடிப்போன முகத்துடன்,



கன்னத்தில் கோடாய் தீற்றியிருந்த மைக்கறையுடன், திக்பிரமை அடைந்தவள் போல் பார்த்துக்கொண்டிருந்த ரோஜாவைப் பார்த்ததுமே அவனுக்கு இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல் வேதனை ஏற்பட்டது. வேட்கை தந்த துணிச்சலில், அவளை அருகில் இழுத்துக் கொண்ட விஜய், அதை முற்றிலும் மறந்து போனவனாய் மயக்கம் விடுபட்டவனாய், ரோஜாவை மெள்ளமாய் விடுவித்தான்.

விஜய் தன்னை எதற்காக திடீரென்று அருகில் இழுத்துக் கொண்டானோ, மறுபடியும் உடனே அவனுடைய பிடி தளர்ந்துவிட்டது ஏன் என்றோ ரோஜாவுக்குப் புரியவில்லை. யோசிக்கும் பொறுமையும் இல்லை. மறுபடியும் தன் இடத்துக்கு நகர்ந்து கொள்ளும் சக்தி கூட இல்லாதவள் போல், அவன் பக்கத்திலேயே, அப்படியே பதுமையாய் உட்கார்ந்து விட்டாள்.

டிரைவர் சிகரெட் பாக்கெட்டுடன் திரும்பினான். கார் நகர வீதிகளில் பயணித்துக் கொண்டிருந்தது. நன்றாக இருட்டி விட்டதால் தெரு விளக்குகள் எரியத் தொடங்கி விட்டன. மார்க்கெட் தெருவை கார் அடைந்தபோது விஜய் காரை நிறுத்தச் சொன்னான். கார் நின்று விட்டது.

ஹாண்டில்மீது கையை வைத்து, கதவைத் திறக்கப் போனவன், ரோஜா பக்கம் திரும்பிச் சொன்னான். "நான் சொன்னது நினைவிருக்கு இல்லையா! அனந்த் வழிக்கு நீ வராதவரை, உன் வழியில் நான் குறுக்கிட மாட்டேன்," என்றான்.

அவன் குரலில் அதிகாரமோ, கெஞ்சலோ, ஏகத்தாளமோ, எதுவும் இல்லை. சொல்ல வேண்டிய விஷயத்தை நேராய், எந்தத் தயக்கமும் இல்லாமல் சொன்னது போல் இருந்தது. ரோஜா பதிலுக்கு எதுவும் சொல்லவில்லை. அவனும் பதிலை எதிர்பாராதவன் போல், கதவைத் திறந்து இறங்கி விட்டான். ஒரு அடி முன்னால் வைத்து டிரைவரிடம், "இந்தப் பெண்ணை வீட்டில் இறக்கி விட்டு நீ

வீட்டுக்குப் போய்விடு" என்றவன் நடையை எட்டிப் போட்டு, மக்கள் கூட்டத்தில் கலந்துவிட்டான். ஜனநெருக்கம் அதிகமாய் இருந்த சாலையில் கார் போகத் தொடங்கியது.

"எந்தப் பக்கம்?" என்று டிரைவர் கேட்ட கேள்வியில் இவ்வுலகிற்கு மீண்டாள் ரோஜா.

அவனுக்கு வழியைச் சொல்லும் போது ரோஜாவின் பார்வை தன்னறியாமல் நெஞ்சின் மீது நிலைத்தது. மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட திருமாங்கல்யங்கள். மெதுவாய்த் தொட்டுப் பார்த்தாள். இது கனவா இல்லை நினைவா? விஜய் அதைத் தன் கழுத்தில் கட்டிவிட்டது. நிஜந்தான் என்பது போல், தெரு விளக்கிலிருந்து வந்த வெளிச்சத்தில் அவை பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தன. இரண்டு இதயங்களை, சாம்பத்திய வாழ்க்கையில் பிணைத்து, ஒரே பாதையில் சேர்ந்து பயணிக்க வழிவகுக்கும், பவித்திரமான திருமண பந்தம். தன்னை அவமானப்படுத்தும் எண்ணத்தில் விஜய் நியாய, அநியாய பாகுபாட்டையும் துறந்து விட்டிருக்கான்-எத்தனைக் கடினமான இதயம் படைத்தவன்?

திருமணம்—தன் வாழ்க்கையில் எஞ்சியிருந்த ஒரே ஒரு இனிமையான கனவு. எந்த இனிய கனவுக்காக அனைத்தையும் அவனுடைய சொத்தையும் பொருட்படுத்தவில்லையோ, அனந்தின் மென்மையான இதயம் வேதனைப்படும் என்று தெரிந்திருந்தும், நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு, அவனுடைய நட்பைக்கூட இழக்க தயாராய் இருந்தாளோ- அந்தக் கனவை விஜய் பகை தீர்த்துக்கொள்ளும் உத்தேசத்தில் ஒருமாய் நாசமாக்கி விட்டான்.

இந்த நாட்டில் பெண்ணாய்ப் பிறந்தவள், தனக்கு நடந்த திருமணம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், தலை குனிந்து அதை ஏற்றுக்கொள்வாள்.

ஆனால் தனக்குத் திருமணம் ஆன விஷயம் யாருக்குமே தெரியப்போவதில்லை. யாரும் அதைக் கண்டு கொள்ள



மாட்டார்கள். தன் கழுத்தில் மூன்று முடிச்சு போட்டவன் கூட அதை ஏற்கப்போவதில்லை என்பது எவ்வளவு கொடுமையான உண்மை? ரோஜாவின் கண்களில் நீர் ஊற்றென்று சுழன்றது. தன் வாழ்க்கையில் மட்டும் இவ்வளவு கோணங்கள் ஏற்படுவானேன்? தான் மற்ற பெண்கள் போல் இல்லையென்றும், தனக்கு யாரும், எந்தத் தீங்கும் இழைக்க முடியாது என்றும் ரோஜா நம்பியிருந்தாள். ஆனால் இன்று நடந்தது என்ன? விஜய் என்ன செய்து விட்டான்? தன் உயிரை எடுக்கவில்லை.. கற்பழிக்கவில்லை... ஆனால் வாழ்க்கையை எள்ளி நகையாடுவது போல் செய்துவிட்டான். எதிர் காலமே இருண்டு விடும் அளவுக்கு அவமானப்படுத்தி விட்டான். நினைவு தெரிந்த பிறகு முதல் முறையாய் வாழ்க்கையைச் சாலெஞ்சாக எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்தாள் ரோஜா.

ரோஜா வீட்டுக்குள் நுழைந்தபோது, சுந்தரி வீட்டில் இல்லை. சங்கரனும் இல்லை. காலையிலேயே வீட்டை விட்டுப் போன ரோஜா மாலைவரை திரும்பாததால், சாவித்திரி மகளைப்பற்றிய கவலையில் ஃபிட்ஸ் வந்து கட்டிலில் நினைவிழந்து படுத்திருந்தாள். வீட்டில் யாரும் இல்லையென்று தெரிந்ததும், ரோஜாவுக்கு அத்தனை நேரம் மனதில் அடக்கிவைத்திருந்த துக்கம், மடை திறந்த வெள்ளமாய் வெளிவரத் தொடங்கிற்று. இரு கரங்களில் முகம் புதைத்துக் கொண்டு, இதயத்தில் இருக்கும் வேதனை கண்ணீராய் வெளிவர, வாய் விட்டு அழத் துவங்கினாள்.

# 23

இரவு பத்து மணி நெருங்கும் போது அனந்துக்கு விழிப்பு வந்தது. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தவன், எழுந்து உட்கார்ந்து கொண்டான்... முதலில்

குழப்பமாக உணர்ந்தான். தன் உடலில் இருந்த புது உடைகளைப் பார்த்ததும், அன்று தனக்கு திருமணம் என்ற விஷயம் நினைவுக்கு வந்து விட்டது. மணியைப் பார்த்தான். இரவு பத்து. பாத்ருமில் ஷவர் சத்தம் கேட்டது. ''விஜய்!'' என்று குரல் கொடுத்தான்.

அப்பொழுதுதான் வீட்டுக்கு வந்த விஜய் குளித்துக் கொண்டு இருந்தான். அவன் வலது கையில் ரோஜா கடித்த இடத்தில் பல்குறி ஆழமாய்ப் பதிந்து விட்டது.

அனந்தின் குரல் கேட்டதும், வராண்டாவில் படுத்திருந்த லக்ஷ்மி, ''என்ன தம்பி?'' என்றவாறே சட்டென்று உள்ளே வந்தாள்.

''லக்ஷ்மி! நான் எத்தனை நேரமாய் இப்படி இருக்கேன்?'' என்று பலவீனமான குரலில் கேட்டான்.

''காலையிலிருந்து தம்பி!'' என்றாள்.

''காலையிலிருந்தா?'' அனந்தின் முகம் களையிழந்தது, மூளை செயல்பட மறுத்தது.

குளியலை முடித்துக் கொண்டு வந்த விஜய், அனந்த் உட்கார்ந்து இருப்பதைப் பார்த்து, மெதுவாக விசில் அடித்தான்.

''விஜய்! எனக்கு... எனக்கு என்ன ஆச்சு?'' அனந்த் அழுது விடுவான் போல் இருந்தது

''நினைவு தப்பிப் போச்சு... நன்றாகத் தூங்கி விட்டாய்.'' நேராகக் கண்ணாடி அருகில் சென்று தலை வாரிக் கொண்டே சொன்னான் விஜய். அனந்தின் உருவம் கண்ணாடியில் தெரிந்து கொண்டிருந்தது.

''ஓ... மைகாட்!'' இரு கரங்களால் அனந்த் தலையை பிடித்துக் கொண்டான்.

''ஏன்? என்ன நடந்துவிட்டது?''

''விஜய்! ரோஜா...ரோஜா எனக்காகக் காத்திருப்பாள். நான் வரேன்னு வாக்குக் கொடுத்திருந்தேன்...கடவுளே!''



விஜய் ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்தான். பிறகு நிலைமையை எளிதாக்க விருப்புவது போல் சிரித்துக் கொண்டே சொன்னான்.

''பரவாயில்லை... கவலைப்படாதே... உனக்கு உடல் நலம் சரியில்லை என்றும், வர முடியவில்லை என்றும் நான் சொல்லிவிட்டேன்.''

''நீயா!''

''ஆமாம்.''

நிம்மதி அடைந்தாற்போல் பார்த்தான் அனந்த். அதற்குள் சந்தேகம் வந்தது. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டே கேட்டான், ''நீயா? ரோஜா உனக்கு எங்கே தென்பட்டாள்?''

''எங்கே தென்படுவாள்? ரிஜிஸ்டிரார் ஆபீஸ் முன்னால்.''

''விஜய்!'' வானம் இடிந்து தலையில் விழுந்தது போல் இருந்தது. ''உனக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''எப்படித் தெரியும்?''

''தெரிஞ்சுக்கணும்னா எதுவும் தெரிந்து விடும்.''

அனந்த் முகத்தில் ஈயாடவில்லை. மின்னல் போல் ஏதோ யோசனை மூளையில் மின்ன, சட்டென்று எழுந்து கொண்டு, ''அப்படிச் சொல்லு... உனக்கு முன்னாடியே தெரியும் இல்லையா?'' என்றான்.

''தெரியும்... நீயும், உன் ரோஜாவும் சேர்ந்து லாயரிடம் போன போதே இதை எதிர்பார்த்தேன். நேற்று நீ மார்வாடியிடம் ஐநூறு ரூபாய் வாங்கியதை, அவன் போனில் எனக்குத் தெரிவித்து விட்டான். 'அஃப் கோர்ஸ்'... என் டைபிஸ்ட் உன்னை நிழலாய்ப் பின் தொடர்ந்து கொண்டிருந்தாள்.''

செயல் மறந்தவனாய்ப் பார்த்தான் அனந்த். கண்கள் அகல விரிய, அவன் கைப்பிடி இறுகியது. ரோஜாவைத் தான், திருமணம் செய்து கொள்ளப் போகும் விஷயம் விஜய்க்கு முன்னாடியே தெரிந்து விட்டது. அதான் என்றும் இல்லாத விதமாய்த் தனக்கு உடம்பில் கோளாறு ஏற்பட்டது. நான் முழுவதும் நினைவில்லாமல் இருந்திருக்கிறேன். இது விஜயின் வேலைதான், இந்தத் திருமணத்தைத் தடுக்க அவன் செய்த தந்திரம்!

பனித்திரை விலகுவது போல் உண்மை புரிந்து போய் விட, அனந்துக்கு ரொம்ப கோபம் வந்தது. எதிரில் ஸ்டூல் மீது அவனுக்காக லக்ஷ்மி கொண்டு வந்து வைத்த ஹார்லிக்ஸ் டம்ளரை, பலமாய்க் காலால் எட்டி உதைத்தான், பற்களை இறுக கடித்துக் கொண்டே விஜயைப் பார்த்தான்.

தலையை வாரிக் கொண்டிருந்த விஜய் திரும்பிப் பார்த்தான். அனந்த் முக பாவங்களைக் கவனித்தவன். பொறுமை இழந்து விட்டவன் போல், கடினமாய், "அனந்த்! கொஞ்சம் கட்டுப்பாடாய் நடந்து கொள்! இல்லாவிட்டால் மெண்டல் ஹாஸ்பிடலுக்குப் போன் செய்து, ஆம்புலன்ஸை வரவழைத்து விடுவேன்" என்றான்.

"நீ... நீ... ஒரு ராட்சசன்... எதை வேண்டுமானாலும் செய்வாய்."

"ஆமாம், உனக்கும் அந்தப் பெண்ணுக்கும் திருமணம் நடக்காமல் இருக்க, எது செய்யவும் தயங்கமாட்டேன்." விஜய் இந்த வார்த்தைகள் சொல்லும் போது, அவன் முகத்தில் அருவெறுப்பு, கோபம் போட்டிப் போட்டுக் கொண்டு பிரதிபலித்தன.

அனந்த், விஜய் பக்கம் இரண்டடி வைத்தான். வெந்து போன முகத்துடன், "உண்மையைச் சொல் விஜய்! ரோஜாவிடம் என்ன சொல்லிவிட்டு வந்தாய்? மறுபடியும் என்ன சங்கடம் ஏற்படுத்தி விட்டு வந்தாய்?"



சில நேரம் அனந்தின் முகத்தையே கூர்ந்து பார்த்த விஜய், தோள்களைக் குலுக்கிக் கொண்டான். "அவளிடம் நீயே கேட்டுக் கொள்" அலட்சியமாய்ச் சொன்னான்.

"சரி... அந்தப் பெண்ணின் வாயிலிருந்து உன் மூலமாய்த் தனக்கு ஏதாவது அவமானம் நேர்ந்தது என்று கேள்விப் பட்டால், அந்த விநாடியிலிருந்து நான் உன் தம்பியும் இல்லை, நீயும் என் அண்ணன் இல்லை... அது எப்படிப்பட்ட அவமானமாய் இருந்தாலும் சரி...வாரேன்."

அனந்த் அறையிலிருந்து வெளியேறப் போனான்.

"அனந்த்!" தடுப்பதுபோல் அழைத்தான் விஜய்.

அனந்த் நின்று பின்னால் திரும்பி, சபதம் செய்வது போல் சொன்னான், "நீ இன்றைக்கு நிறுத்தி விட்டாற் போல், எப்போதும் உன்னால் நிறுத்தி விட முடியாது. அந்தப் பெண்ணை என் மனைவியாய் அழைத்து வரும் வரை, நான் இந்த வீட்டில் காலடி எடுத்து வைக்க மாட்டேன். பிடிவாதம் உன் ஒருவனுக்கு மட்டுமே சொந்தமில்லை மற்றவர்களுக்கும் உண்டு."

விஜய் வாயைத் திறந்து பதில் அளிப்பதற்குள் அனந்த் வேகமாய் வெளியேறி விட்டான்.

"அனந்த்!" தடுத்து நிறுத்தும் உத்தேசத்தில் கத்தி அழைத்தான் விஜய்.

விஜய் வாசற்படி அருகில் வந்து பார்க்கும் போது அனந்த் படி இறங்கி போய்க் கொண்டிருந்தான்.

"அனந்த்! என் பேச்சைக்கேளு. நீ ரொம்ப பலஹீனமாய் இருக்கே... இரவு நேரம்... எங்கேயும் போகாதே." ஆணையிடுவது போல் சொன்னான் விஜய்.

விவரம் தெரிந்த பிறகு முதல்தடவையாய் அண்ணனின் பேச்சை அனந்த் லட்சியப் படுத்தவில்லை. வாசற் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்று விட்டான்.

கீழே நின்று கொண்டிருந்த லக்ஷ்மியைப் பார்த்தான் விஜய், "லக்ஷ்மி! சட்டுனு போய்ப் பாரு. தம்பி எங்கே

போறாளோ? நான் சட்டையை மாட்டிக்கிட்டு வந்துடறேன்."

லக்ஷ்மி வெளியே சென்று பார்த்தாள். விஜய் பைஜாமா ஷர்ட் உடுத்திக் கொண்டு படி இறங்கி வரும் போது, லக்ஷ்மி எதிரில் வந்தாள், வாயெல்லாம் பல்லாக.

"கவலைப்படாதீங்க, தம்பி, வேணுகோபாலன் அய்யா வீட்டுக்குத்தான் போயிருக்கார்."

விஜய் மனம் இலேசாகி விட்டது. வெளியே கிளம்ப, இருந்தவன், உள்ளே வந்து விட்டான்... கால் மணி நேரம் கழிந்து, விஜய் சாப்பிட்டு விட்டு எழுந்து கொள்ளும் போது போன் ஒலித்தது. விஜய் ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ" மறுமுனையில் வேணுகோபாலன் குரல் ஒலித்தது. "விஜய்!"

"யெஸ்"

"என்ன அனந்தோட ரகளை? திடீர்னு வந்து, உன்னோடு சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டதாகவும், இன்று இரவு மட்டும் தங்க இடம் கொடுங்கள் என்றும் ஏதேதோ சொல்றானே? என்ன விஷயம்? என்ன தான் நடந்தது?"

"அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. இரவு அங்கே தங்க விடுங்கள். நாளை காலையில் வந்து உங்களுடன் பேசுகிறேன்."

"மறுபடியும் பணத்துக்காக சண்டையா?"

"இல்லை."

"பெண்ணைப் பற்றியா?"

"ஆமாம்."

சற்று மௌனமாய் இருந்த பின் அவர் கேட்டார், "யார் அந்தப் பெண்?"



"சமீப காலமாய் உங்களுக்கு உடல் நலம் சரி இல்லாததால், உங்க சொந்த பிரச்னைகளாலேயே அமைதியில்லாமல் இருப்பதாலும், உங்களைத் தொந்தரவு செய்ய விரும்பாமல், நான் தெரிவிக்கவில்லை. விஜய் சுருக்கமாக விவரங்களைத் தெரிவித்தான்.

"அடடா! இவ்வளவு ரகளை நடந்து விட்டதா? திருமணம் வரை விஷயம் வந்தது என்றால், அந்தப் பெண் ரொம்ப புத்திசாலியாய் இருப்பாள் என்று தோன்றுகிறது."

"இன்று இந்தத் திருமணத்தை நிறுத்தி விட்டேன்னு என் மீது எரிந்து விழறான்... அதுதான் சண்டையே!"

"அனந்த் ரொம்ப அப்பாவி விஜய்! வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிறவன். நீதான் கவனமாய் இருக்கணும்."

"அதை அவன் ஒப்புக் கொள்ள மாட்டானே!"

"சின்னப் பையன். இந்த வயதில் தான் அவனுக்குச் சரியான வழிகாட்டி தேவைப்படும். சரி! நாளைக் காலையில், காபி சாப்பிட இங்கு வந்துவிடு... அனந்தை நான் சமாதானப்படுத்தறேன்."

"தாங்க்ஸ்" மனப்பூர்வமாய்ச் சொன்னான் விஜய். "லாவண்யா விழித்துக் கொண்டு இருக்கிறாளா?"

"ஆமாம்... என்ன விஷயம்?"

"அனந்த் சாப்பிடவில்லை. சூடான பாலோ ஹார்லிக்ஸோ ஒரு கப் கொடுக்கச் சொல்லுங்க."

"கொடுக்கச் சொலறேன்."

"குட் நைட், உங்களுக்கு சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்கணும்."

"பரவாயில்லை. நான் உனக்குக் கொடுக்கும் சிரமத்தைப் பார்க்கும் போது இது எந்த மூலை? நீ எப்போதும் அப்படி நினைக்காதே" என்று வேணுகோபாலன் போனை வைத்து விட்டார்.

ரிசீவரை வைத்துவிட்ட விஜய் ஒரு நிமிஷம் அப்படியே நின்று விட்டான். மறு நாள் அவன் ஆஜராக வேண்டிய கேஸ் ஒன்று இருந்தது. அதற்கான 'ஆர்க்யுமெண்ட்ஸை' அவன் இன்னும் தயாரித்துக் கொள்ளவில்லை. நாளை இரவே டில்லிக்குப் போக வேண்டும். சலவையிலிருந்து துணிகளை எடுத்து வர வேண்டும். காலை எழுந்தது முதல் மூச்சுகூட விட நேரமிருக்காது. ஒரு நிமிடம் அவனுக்கு ரொம்ப எரிச்சலாய் தாங்கொண்ணாத சோர்வாய் இருந்தது. முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

"பெரிய தம்பி! கதவைச் சாத்திக்குங்க... நான் வர்றேன்" கீழிருந்து லக்ஷ்மியின் குரல் கேட்டது.

விஜய் வெளியே வந்தான், "ரொம்ப நேரமாகி விட்டதே! தனியாகப் போக முடியுமா? நான் துணைக்கு வரட்டுமா?" என்றான்.

"எனக்கென்ன பயம் தம்பி...! போய் விடுவேன்" என்று லக்ஷ்மி சென்று விட்டாள்.

விஜய் வாசற்கதவைத் தாழ் போட்டு விட்டு, மாடிக்கு வந்தான். படுக்கையில் படுத்தவனுக்கு, களைப்பு அதிகமாகவே இருந்த போதும், உறக்கம் வரவில்லை. பக்கத்திலேயே கிடந்த பத்திரிகையை எடுத்துப் படிக்க முற்பட்டான். மனம் படிப்பில் லயிக்கவில்லை... மனம் வேறு எங்கோ இருந்தது. புத்தகத்தின் நடுவில ரோஜாவின் முகமே தென்பட்டுக் கொண்டிருந்தது. என்ன காரியம் செய்து விட்டேன்?

எல்லோரும் ரொம்ப புனிதமாய், மதிப்பு வாய்ந்ததாய் எண்ணும் திருமணத்தை, விஜய், அனந்துக்காக பகை தீர்த்துக் கொள்வது போல் செய்து விட்டான்.

இப்போ ரோஜா என்ன செய்து கொண்டிருப்பாள்? களைப்பால் தூங்கிவிட்டிருப்பாளா? இல்லை தன் மீது பகை தீர்த்துக் கொள்வது எப்படி என்று யோசித்துக் கொண்



டிருப்பாளா? விஜய் புத்தகத்தை மூடி வைத்து 'டேபிள் லைட்டை' அணைத்து விட்டான். அனந்தின் திருமணம் முடிந்து விட்டால்தான் தனக்கு நிம்மதி... அதற்குப் பிறகு தான் தன் வாழ்க்கையைப் பற்றி யோசிக்க முடியும். மெள்ள மெள்ளமாய் உறக்கம் அவனை ஆட்கொண்டது.

# 24

காலை எட்டு மணி...வேணுகோபாலன் தோட்டத்தை ஒட்டியிருந்த வராண்டாவில உட்கார்ந்து இருந்தார். அனந்த், லாவண்யாவும் அங்கே இருந்தார்கள். வராண்டாவில் கீழே புல்தரையில் ராதை ஸ்கிப்பிங் செய்து கொண்டிருந்தாள். வேணுகோபாலன் அவள் ஸ்கிப்பிங் செய்வதை எண்ணிக் கொண்டே, செடிகளுக்கு மாலி தண்ணீர் பாய்ச்சுவதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார். வேலைக்காரன், டிரேயில், காபி, பிஸ்கெட்ஸ் கொண்டு வந்து டீபாய் மீது வைத்து விட்டுப் போய்விட்டான்.

அப்பொழுதுதான் குளித்து விட்டு, வெண்மை நிற உடையில், அன்றலர்ந்த மலராய் இருந்தாள் லாவண்யா. சமீபத்தில் ஜேம்ஸுடன் அறிமுகம் கிடைத்த பிறகு, லாவண்யாவின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. அவள் கண்களில எப்போதும் குடி கொண்டிருந்த கோபம், எரிச்சல் இப்போ தென்படவில்லை. எல்லோரிடமும் அன்பாய் ஆதரவுடன் நடந்து கொள்கிறாள். காபியை கப்புகளில் ஊற்றி தந்தையிடமும், அனந்திடமும் கொடுத்துக் கொண்டிருக்கும்போது விஜய் வந்தான்.

"வா... வா... விஜய்..." அன்பாய் வரவேற்றார் வேணுகோபாலன்.

அண்ணனைப் பார்த்ததும், அனந்த் முகத்தைத் திருப்பிக் கொண்டு லாவண்யா பக்கம் பார்த்து உட்கார்ந்து

கொண்டான். விஜய் நேராக ஜானகியிடம் சென்று அவளிடம் சாக்லேட்டினை கொடுத்துவிட்டு வந்தான்.

கண் இமைக்காமல் தலையைத் திருப்பி, அவ்விருவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் லாவண்யா.

இதற்கு முன்பாய் இருந்தால் லாவண்யாவின் மனம் பொறாமையால் தீ போல பற்றி எரியும், உயரமாய், உயரத்துக்கேற்ற பருமனாய், மிடுக்காய் இருக்கும் விஜயின் தோற்றத்திடம் லாவண்யாவுக்கு ரொம்ப ஈர்ப்பு இருந்தது. தனக்குக் கணவனாய் வர வேண்டியவன் தனக்கு கிடைக்காமல் போய் விட்டான் என்ற ஏமாற்றம் அவனைப் பார்க்கும் போதெல்லாம் அடிமனதில் ஜ்வாலையாய் தகிக்கும். ஆனால் இப்போ, ஜெய்யின் அறிமுகம் ஏற்பட்ட பின் லாவண்யாவுக்கு விஜயைப் பார்க்கும் போது எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

விஜய் வேணுகோபாலன் அருகில் வந்தான்.

"என்ன தகராறு?" விஜயை உட்காரும்படி ஜாடை செய்துகொண்டே கேட்டார் வேணுகோபாலன்.

"அவனையே கேளுங்களேன்" என்று புன்முறுவலுடன் பதிலளித்தான் விஜய்.

வேணுகோபாலன் அனந்த் பக்கம் பார்த்தார்.

அனந்த் சபதம் செய்வதுபோல் சொன்னான். "விஜய் எந்தப் பெண்ணை மரியாதையில்லாமல் நடத்தி அவமானப் படுத்தினானோ, அந்தப் பெண்ணை என் மனைவியாய் அடையும் வரை நான் அந்த வீட்டில் அடியெடுத்து வைக்க மாட்டேன்."

"நான் ஒருத்தன் இருக்கும் வரை அந்தக் கல்யாணம் நடக்காது." கண்டிதமாய் சொன்னான் விஜய்.

"காரணம் என்னவென்று நீங்களே கேளுங்க" என்றான் அனந்த்.

அவர் விஜயை நோக்கினார்.



"அந்தப் பெண்ணுடைய நடத்தை எனக்குப் பிடிக்கவில்லை. பெண்களுக்கு புத்திசாலித்தனம் இருக்கணுமே தவிர துணிச்சல் இருக்கக்கூடாது. பணத்துக்காக அந்தப் பெண் என்ன வேணுமானாலும் செய்வாள் என்பதற்கு அனந்தின் வருங்கால மாமனாருக்கு அப்படி கடிதங்கள் எழுதியதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அவங்க குடும்பமும் நல்லது இல்லை. அந்தப் பெண்ணோட தம்பி ஜெயிலில் இருக்கானாம்" என்றான் விஜய்.

"அந்தப் பெண் ரொம்ப நல்லவள்." விஜய் ரோஜா மேல் சுமத்தும் குற்றச்சாட்டுகள் எல்லாம் உண்மைதான் என்றாலும் அவற்றை இல்லையென்று மறுக்க சரியான காரணம் சொல்லமுடியாமல் தடுமாறினான் அனந்த்.

"நிஜமாகவே, இவனுக்கு இதுவரை கெட்டவர்கள் என்று யாராவது இருக்கிறார்களா என்று கேளுங்கள்?" விஜய் முகத்தில் கோபத்தையும், எரிச்சலையும் கட்டுப் படுத்திக்கொண்ட உணர்ச்சி தென்பட்டது.

"இந்தப் பெண் எல்லோரையும் போல் இல்லை."

"யாரைப் பார்த்தாலும் இப்படித்தான் சொல்லி இருக்கிறாய்."

"எனக்கு வேண்டிய பெண்ணைத் தேர்வு செய்து கொள்ளத் தெரியாத முட்டாள் நான் என்று அவனோட எண்ணம்."

"உன் பணத்தைப் பார்த்து, உன்னிடம் நட்பு கொண்டவர்கள் எல்லாம், உன்னுடைய நண்பர்கள் இல்லையென்று தெரிவிப்பதுதான் என் எண்ணம்."

"நான் உன்னோடு பேசவில்லை."

"நானும் உன்னிடம் சொல்லவில்லை."

உரையாடல் எல்லை மீறுகிறதென்று உணர்ந்த வேணுகோபாலன் இடையில் புகுந்தார். "இப்படிப் பேச்சை வளர்த்துக்கொண்டு போவதால் பிரயோஜனம் என்ன?

யாராவது ஒருத்தர், அடுத்தவரின் கருத்துடன் ஒத்துப் போனால் நன்றாய் இருக்கும்."

அனந்த் எழுந்து நின்று ஆவேசமாய்ச் சொன்னான், "அம்மா போனிலிருந்து அவன் சொன்னதை எல்லாம் கேட்டு வந்திருக்கிறேன். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் என் பேச்சிற்கு மதிப்பு அளித்து, சும்மா இருக்கச் சொல்லுங்க."

"நடக்காத காரியம்! சித்தி என்னிடம் முக்கியமாய் கேட்டுக்கொண்டது இதுதான். இந்த விஷயத்தில் நான் சொன்னதைத்தான் கேட்கணும், மற்றதைக் கேட்காவிட்டாலும் பரவாயில்லை. விஜய் உட்கார்ந்து கொண்டே கச்சிதமாய் மறுத்துவிட்டான்.

அனந்த் ஏமாற்றமடைந்தவன் போல் நாற்காலியில் சரிந்தான். லாவண்யாவுக்கு அந்தக் கணம் அனந்திடம் எல்லையில்லாத இரக்கம் ஏற்பட்டது. விஜயைப் பார்த்து, அதட்டுவதுபோல், "என்ன விஜய்? ஏன் வீண் பிடிவாதம் பிடிக்கிறாய். அனந்த் அந்தப் பெண்ணை உயிருக்கு அதிகமாய்க் காதலிக்கிறானாம்."

"காதலா!" விஜய் அருவருப்பு அடைந்தவன் போல் பார்த்தான்.

"காதல்—இந்த நூற்றாண்டில் நீங்கள் எல்லாம் சேர்ந்து அதைக் கொச்சைப்படுத்தி விட்டீர்கள். இதற்கு சான் மன உறுதியும் தனித்தன்மை கொண்டவர்களுக்கும் இடையே ரொம்ப அபூர்வமாய் இருந்த விஷயம் அது. இந்தக் காலத்து இளைஞர்களின் பலவீனங்களுக்கு காதல் ஒரு முகத்திரை ஆகிவிட்டது."

விஜய் சொன்ன வார்த்தைகள், லாவண்யாவை மறைமுகமாய்த் தாக்கவே, முகம் சிவக்க, தலையைக் குனிந்து காபியை கலக்க முற்பட்டாள்.

வேணுகோபாலனின் அறிவுரைகள் முதல் முறையாய்த் தோல்வியுற்றன. அனந்த் தன் கருத்தை மாற்றிக்கொள்ள



வில்லை. விஜயும் சமரசத்துக்கு ஒப்புக்கொள்ளவில்லை... இருவரும் கிழக்கும் மேற்குமாய் நின்றார்கள். இருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமை தீரும்வரை, அனந்த் தன் வீட்டிலேயே தங்கும் விதமாய் ஏற்பாடு செய்தார்.

## 25

அனந்த் ரோஜாவைப் பார்க்க வேண்டுமென்று அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தான். ஆனால் ரோஜாவின் தரிசனமே கிடைக்கவில்லை. இரண்டு மூன்று முறை ரோஜா வீட்டுக்குப் போனபோது அவள் வெளியே போயிருப்பதாகத் தகவல் கிடைத்தது. ரோஜா தன் மீது கோபத்தில், வீட்டில் இருந்து கொண்டே இல்லையென்று சொல்ல வைப்பதாக அனந்த் சந்தேகப்பட்டான். அதுதான் உண்மையும்.

அனந்தின் நட்புக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்த ரோஜா அனந்த் வருவதைப் பார்த்துவிட்டு, நேராக சமையல் அறைக்குள் போனாள். "மாமி—அனந்த் வருகிறான். நான் வீட்டில் இல்லை என்று சொல்லிடுங்க."

உலகமே தலைகீழானது போல் நோக்கினாள் சுந்தரி.

"ஒன்றுமில்லை மாமி, அவன் மேல் எனக்குக் கோபம்! ஒரு நாள் வீட்டுக்காக இருபத்தைந்து ரூபாய் கடன் கேட்ட போது, இல்லையென்று சொல்லி விட்டான். பணத்துக்காகப் பேச்சை மாற்றுகிறவங்களோடு நான் ஏன் சிநேகமாய் இருக்கணும்?" என்று மாமி கேட்காமலேயே விளக்கம் கொடுத்தவள், அங்கிருந்து போய்விட்டாள்—அப்படிப் போய் சொல்லாவிட்டால், சுந்தரி கேள்வி கேட்டே உயிரை எடுத்து விடுவாள். அதற்குப் பதில் சொல்லும் பொறுமை இப்பொழுது ரோஜாவிடம் இல்லை.

சுந்தரி அனந்திடம், ரோஜா வெளியே போயிருப்ப தாகச் சொல்லி அனுப்பிவிட்டாள்.

இரண்டாவது முறை சங்கரன் வீட்டில் இருந்தார். ரோஜா, மாமாவிடம் தான் வீட்டில் இல்லையென்று அனந்திடம் சொல்லச் சொன்ன போது, அவர் வியப் படைந்தார்.

உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டே, பாடம் ஒப்பிப் பதுபோல், "ரோஜா வீட்டில் இல்லை. வெளியே போயிருக் கிறாள்" என்றார் சங்கரன்.

அவருடைய தொனியிலேயே புரிந்துகொண்ட அனந்த் "எனக்குத் தெரியும். வீட்டில் இருந்துகொண்டே இல்லை யென்று உங்களைச் சொல்ல வைக்கிறாள்" என்றான்.

சங்கரன் அதிர்ந்து போனவராய்ப் பார்த்தார். அனந்த் அவரிடம் விடைபெறாமலேயே சட்டென்று கிளம்பி விட்டான். ரோஜா இப்படி நடந்து கொண்டது சங்கர னுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.

இரண்டே எட்டில் அனந்தை எட்டிப் பிடித்தவர், அவனுடன் சேர்ந்து நடந்துகொண்டே, "உங்களுக்கு இடையில் என்ன நடந்ததன்னு எனக்குத் தெரியாது. நீ சொன்னதுபோல் ரோஜா வீட்டில்தான் இருக்கிறாள்."

"எனக்குத் தெரியும். ஒருமுறை ரோஜா என்னைப் பார்த்து, நான் சொன்னதைக் கேட்டால் போதும். வாழ்நாள் முழுவதும் நன்றியுடன் இருப்பேன்னு சொல் லுங்க" கண்களில் நீர் கழன்றது அனந்துக்கு.

சங்கரனுக்கு அவன்பால் இரக்கமும், ரோஜாவிடம் அளவில்லாத கோபமும் ஏற்பட்டன. வீட்டுக்கு வந்ததும் ரோஜாவைக் கோபித்துக்கொண்டார். ஆனால் எதனாலோ ரோஜா அதைப் பொருட்படுத்தவுமில்லை, காரணத்தையும் சொல்லவில்லை.

* * *



அனந்த் பிடிவாதமாய் ரோஜாவை நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்புக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந் தான். ஒரு தடவை காய்கறிக் கடை அருகே பார்த்தான். அவன் அழைப்பதற்குள், அவனைக் கவனித்துவிட்ட ரோஜா சட்டென்று மக்கள் கூட்டத்தில் மறைந்துவிட்டாள்.

கடைசியில் ஒரு நாள் ரோஜா ரேஷன் கடையில் சர்க்கரைக்காகக் க்யூவில் நின்றிருந்தாள். பெண்கள் வரிசையில் நின்றிருந்த ரோஜா அவனைக் கவனிக்கவில்லை. அனந்த் ரேஷன் கடைக்கு எதிரில் இருந்த துணிக்கடைக்குள் நுழைந்து தேவையில்லாவிட்டாலும் கைக்குட்டையை வாங்கிக்கொண்டு, அங்கேயே நின்றான்.

கிட்டதட்ட ஒரு மணி நேரம் கழித்து ரோஜா வெளியே வந்தாள். நின்று நின்று களைத்துப் போனவள், முகத்தில் படிந்திருந்த வியர்வையைப் புடவைத்தலைப்பால் துடைத் துக்கொண்டே, சர்க்கரைப் பையைச் சுமந்து வெளியே வந்தாள். கவனம் வேறு எங்கேயோ இருந்ததால், அனந்த் தன்னைப் பின் தொடர்ந்து வந்ததை ரோஜா கவனிக்க வில்லை.

பின்னாலிருந்து திடீரென்று, "ரோஜா!" என்றதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அனந்த் சட்டென்று ரோஜாவின் கையிலிருந்த சர்க்கரைப் பையைப் பிடுங்கிக் கொண்டான்.

"இதென்ன வேலை?" ரோஜாவின் கண்கள் கோபத்தில் மின்னின.

"நான் சொல்றதை நீ கொஞ்சம் காது கொடுத்துக் கேட்கணும் ரோஜா!" வேண்டுவதுபோல் சொன்னான் அனந்த்.

"இதுவரைக் கேட்டது போதும், இனி கேட்கும் பொறுமை எனக்கு இல்லை." ரோஜாவின் வார்த்தைகளில் சோர்ந்த [illegible] - இயலாமைதான் வெளிப்பட்டது.

"எந்தச் சூழ்நிலை வந்தாலும் நாம் இருவரும் நல்ல நண்பர்களாய் இருப்போம் என்று எத்தனை தடவை நீயே சொல்லியிருக்கே?"

"சொல்லேன் நிறைய தடவை சொன்னேன்... ஆனால் உன்னுடன் சிநேகமாய் இருக்கும் தகுதி எனக்கு இல்லைன்னு இப்பத்தான் தெரிந்துகொண்டேன். தயவு செய்து இந்த நடுத்தெருவில் ரகளை செய்யாதே. அந்தப் பையை இப்படிக்கொடு." கையை நீட்டினாள் ரோஜா.

சட்டென்று பையைப் பின்னால் மறைத்துக் கொண்டான் அனந்த். "கொடுக்க மாட்டேன். நீ என் பேச்சைக் கேட்டுத்தான் ஆகணும். ரொம்ப தொலைவுகூட வேண்டாம். இதோ—பக்கத்திலேயே என் நண்பனின் அறை இருக்கு. நான் இப்போதெல்லாம் சாப்பாடு நேரம் போக பாக்கி நேரம் அங்கு தான் இருக்கேன். அறை சாவி என்னிடம்தான் இருக்கு. வா போகலாம்" என்றான்.

ரோஜா மறுப்பதுபோல் தலையை அசைத்தாள்.

"நீ வந்துதான் ஆகணும் ரோஜா. உன்னுடன் அறிமுகம் ஆன இந்த ஒன்றரை வருடத்தில் நான் எதுக்கும் பிடிவாதம் பிடிக்கவில்லை. எப்போதும் நீ சொன்ன பேச்சை மதித்தேனே தவிர, நான் சொல்வதை நீ கேட்டாகணும்னு வற்புறுத்தியது கிடையாது. நாலுபேர் பார்த்தால் சிரிப்பார்கள். நீயும் சங்கடப்படுவாய் என்று தயங்குகிறேனே தவிர, உன் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்கக்கூட நான் தயார்."

"வேண்டாம் அனந்த்! அப்படிப் பேசாதே."

"இந்த ஒரு வாரமாய் நான் எவ்வளவு வேதனை அனுபவித்து வருகிறேன்னு, உன்னால் ஊகிக்கவே முடியாது ரோஜா!"

"என்னை மன்னித்துவிடு அனந்த்!" பார்வையை தாழ்த்திக்கொண்டே சொன்னாள் ரோஜா.



"உன்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டியது நான் தான் ரோஜா!"

"உன்மீது எனக்கு எந்தக் கோபமும் இல்லை அனந்த், எல்லோரும் பார்க்கிறாங்க. ப்ளீஸ், என்னை போகவிடு."

"ஊஹூம். நான் சொல்வதை முழுசாய் நீ கேட்கும் வரை நான் இந்தப் பையை உன்னிடம் தரமாட்டேன். இது இல்லாமல் நீ வீட்டுக்குப் போக முடியாது. உங்க மாமியின் வாய் எப்படிப்பட்டது என்று எனக்கு நன்றாகத் தெரியும்."

ரோஜா கோபமாய்ப் பார்த்தாள். அந்தக் கோபம் பிறகு இயலாமையாய் மாற, "நீயும், உன் அண்ணனும் எதுவும் செய்வீங்க. வா! போகலாம்" என்றாள்.

"குட், நல்ல பெண்ணாய்க் கிளம்பு. விஜய் பற்றி என் முன் பேச்சை எடுக்காதே." அவன் எதிர்பார்த்தது போல் ரோஜா என்ன நடந்தது என்றுகூடக் கேட்கவில்லை.

ஐந்து நிமிடங்களில் அனந்த் நண்பனின் அறையை அடைந்தார்கள். அனந்த் ஒரு கையால் பையைப பிடித்துக் கொண்டே பூட்டைத் திறந்தான். ரோஜா உள்ளே வந்தாள். சின்ன அறை அனந்த் பையை அலமாரியில் வைத்துவிட்டு ரோஜா பக்கம் திரும்பினான். "முதலில் என்னை மனப்பூர்வமாய் மன்னித்துவிடு ரோஜா!" என்றான்.

"சற்று முன்பே சொன்னேனே, உன் மேல் எனக்கு எந்தக் கோபமும் இல்லையென்று!"

"இல்லைன்னு வாயால் சொன்னால் மட்டும் போறாது. நீ பழைய ரோஜாவாய், மனம் விட்டு என்னுடன் பேசினால் தான் கோபம் இல்லைன்னு அர்த்தம்."

"அது மட்டும் சாத்தியமில்லை அனந்த். என்னால் பழைய ரோஜாவாய் மாறமுடியாது. நீ வருத்தப்பட்டாலும் சரி! என்னிடம் ஏதோ மாறுதல் வந்து விட்டது. அதை மறைத்துப்பழக என்னால் முடியாது."

"அனுபவங்கள் மனிதர்களை மாற்றிவிடும் ரோஜா!"

எனக்கு ஏற்பட்ட அநுபவங்கள், இந்த உலகில் எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது என்றாள்.

அனந்த் பதில் சொல்லவில்லை—ரோஜா தலையைத் திருப்பி தெருவைப் பார்த்துக் கொண்டே நின்றாள். இரண்டு நிமிடங்கள் ரோஜாவையே கண் இமைக்காமல் பார்த்த அனந்த், "ஆமாம் உண்மைதான்—உன்னிடம் பழைய குறும்புத்தனம் போய் விட்டது. நீ ரொம்பவும் மெலிந்துவிட்டாய் ரோஜா!"

ரோஜா பதில் அளிக்கவில்லை.

மறுபடியும் அனந்த் "ரோஜா உன் மனதில் வேறேதோ வேதனை இருக்கு அது நம்முடைய திருமணம் தடைப்பட்டதால் ஏற்பட்ட வேதனை மட்டும் இல்லை, உன் சுபாவம் எனக்குத் தெரியும். எதுவாக இருந்தாலும் முகத்துக்கு நேராகச் சொல்லிவிடுவது உன் வழக்கம். என்ன ஆச்சு ரோஜா? என்றும் இல்லாத விதமாய் உன் கண்களில் இந்த ஊமை வேதனை ஏன்?"

ரோஜா சட்டென்று தலையைத் திருப்பி இந்தப் பக்கம் பார்த்தாள். விழிகளில் நிறைந்த நீரைக் கட்டுப்படுத்த முயன்றாள்.

"அனந்த்! நான் போகிறேன்" என்றாள். அனந்த் இரண்டடி முன் வந்தான். "உண்மையைச்சொல்லு ரோஜா! என்ன கவலை உனக்கு? பணம் ஏதாவது வேணுமா?"

ரோஜா இரு கரங்களையும் இணைத்து வணங்கினாள். "ஒரு பைசா கூட வேண்டாம். நான் ரொம்ப சுகமாய், சந்தோஷமாய் இருககேன். என் பேச்சை நம்பு. பையை கொடுத்து விடு."

"இதோ கொடுத்து விடுகிறேன். இனி உன்னை இங்கே இருக்கச் சொல்லி கட்டாயப்படுத்த மாட்டேன். ஆனால் என் ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு, அன்று விஜய், உன்னை ஏதாவது அவமானப்படுத்தினானா?"



ரோஜா சட்டென்று தலையைத் திருப்பி, தெருவைப் பார்க்கத் தொடங்கினாள்.

"சொல்லு ரோஜா! என்ன சொன்னான்?"

"என்ன சொல்வான்? ஒன்றுமே சொல்லவில்லை? குரல் நடுங்காமல் இருக்க ரோஜா பெரும் முயற்சி செய்தாள்.

"அப்போ வீட்டில் ஏதாவது கஷ்டமா? சொல்லு ரோஜா, எனக்கு எது தெரிந்தாலும் தெரியா விட்டாலும், ஒன்று மட்டும் நிச்சயமாய்த் தெரியும். மனம் விட்டுப் பேச உனக்கு என்னைத்தவிர இந்த உலகில் வேறு யாரும் இல்லை. நான் சொல்வது பொய் இல்லியே?" என்றான்.

இல்லை என்பதுபோல் தலை அசைத்தாள் ரோஜா.

"என்ன ஆச்சு உனக்கு? உன் வேதனையில் பங்கு எடுத்துக்க முடியாத என் வாழ்க்கை வீண் என்று தோன்றுகிறது. இதுவே நானாக இருந்தால், எனக்குக் கொஞ்சம் துன்பம் வந்தாலும் சரி உன்னிடம் தான் முதலில் ஓடி வருவேன்."

"அனந்த்! உன்னிடம் எப்படிச் சொல்லுவேன் நான்?" ரோஜா இரு கரங்களிலும் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

வெள்ளம் போல் பொங்கி வரும் துக்கத்தைக் கட்டுப் படுத்த முயலுகிறாள் என்று உணர்ந்த அனந்த், வாசற் கதவை மெதுவாகச் சாத்தி விட்டு அங்கேயே நின்று கொண்டான். அவன் கண்களில் இரக்கம் தென்பட்டது. "சொல்லிவிடு ரோஜா! வேதனையை விழுங்காதே, அது உன்னைத் தகித்து விடும்."

"..............."

"போகட்டும், இதையாவது சொல்லு. என்னால் உனக்கு ஏதாவது உதவி செய்ய முடியும்னா... சொல்லு... செய்யத் தயாராய் இருக்கேன்." என்றான்.

''என் கண்ணிலேயே படாதே, என்னிடமிருந்து விலகிப் போய் விடு...'' என்றாள்.

''ரோஜா!'' அடிப்பட்டவன் போல் பார்த்தான்...

''நீ போகும் முன் என் வாழ்க்கையிலிருந்து விடை பெறும் முன் எனக்கு ஏதாவது வேலை பார்த்துக் கொடு..''

''வேலையா? உனக்கா?''

ரோஜா கண்ணீரை அழுத்தித் துடைத்துக் கொண்டு' தலை உயர்த்திக் கேட்டாள். ''ஆமாம் எதுவாக இருந்தாலும் சரி. என் கால்களில் நிற்கும் விதமாய், நானும், என் அம்மாவும் ஒருவர் உதவியின்றி வாழ்க்கை நடத்த வழி வகுக்கும் வேலை எதுவாக இருந்தாலும பரவாயில்லை'' என்றாள்.

''ஆனால்...''

''உன் சந்தேகம் எனக்குத் தெரியும். நான் பட்டப் படிப்பு படித்தவள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் நன்றாக சமைப்பேன், வீட்டை நன்றாகப் பராமரிக்கத் தெரியும், குழந்தைகளைப் பார்த்துக் கொள்வேன்...''

''வீட்டில் என்ன நடந்தது ரோஜா?''

''ஒன்றும் ஆகவில்லை ஆனால் ஆவதற்கு ரொம்ப நாட்கள் ஆகாது மாத வருமானம் கொஞ்சமாவது வந்து கொண்டிருந்தால், மாமா மாமி வீட்டில் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். சேந்தூ அரெஸ்ட் ஆனதிலிருந்து மாமி எரிமலை போல் ஆகி விட்டாள்.! எந்தக் கணமும் வெடித்து விடலாம். அந்த அவமானம் நேராமல் இருக்கணும்னா, கொஞ்சமாவது சம்பாதிக்க முடிந்தால் எனக்கு நிம்மதியாக இருக்கும்.''

''நான் முயற்சி செய்கிறேன் ரோஜா!''

''இந்த ஒரு உதவி செய்தால் போதும், உன்னை வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன்.''

''வேலை உனக்கு அவ்வளவு தேவையாய் இருக்கா?''



''ஆமாம், ரொம்பவும் தேவை. ஒரு வயது வந்த பிறகு, பெண்களாகட்டும், ஆண்களாகட்டும், வாழ்க்கையில் எப்படியாவது செட்டில் ஆகணும் அப்படி ஆகா விட்டால் அவர்கள் படும் வேதனை சொல்லி முடியாது.''

''உன் வேதனை எனக்குப் புரிகிறது. ஆனால் நான் அன்று எந்தச் சூழ்நிலையில் ரிஜிஸ்டிரார் ஆபீசுக்கு...''

ரோஜா இரு கரங்களையும் நீட்டி இடைமறிப்பது போல் சொன்னாள்...

''தயவு செய்து என் மீது உனக்குக் கொஞ்சமாவது மதிப்பு இருந்தால், எனக்கு உன்மீது துளியாவது அபிமானம் இருக்க வேண்டுமென்றால்... நீ... அந்தப் பேச்சை எடுக்காதே.''

''ரோஜா!''

''நடந்ததேதோ நடந்து விட்டது. அதைப் பற்றி நாம் இப்போ மட்டும் இல்லை, இனி எப்போதும் பேச வேண்டாம்.''

அனந்த் வாயடைத்துப் போனவனாய் அப்படியே நின்றுவிட்டான்.

''இனி நான் போகணும் அனந்த், ரொம்ப நேரமாகி விட்டது.''

அனந்த் மெதுவாய் அலமாரியிலிருந்து சர்க்கரைப் பையை எடுத்துக் கொடுத்து, ''நாளை ஒரு முறை என்னுடன் வெளியில் வர முடியுமா ரோஜா?'' என்று கேட்டான்.

''இல்லை அனந்த், நான் வர மாட்டேன்.''

''ஏன் வரமாட்டேங்கிறாய்?''

''அனந்த்! இந்த உலகில் பணத்தைச் சம்பாதிக்கும் வழிகள் கடினமாய் இருக்கலாம். நாம் முயற்சி செய்தாலும் அதிருஷ்டம் கூடி வராமல் போகலாம். ஆனால் இந்த மதிப்பு மரியாதை போன்ற விஷயங்கள் இருக்கே, அவற்றைச்

சம்பாதிப்பது நம் கையில்தான் இருக்கு. நான் இத்தனை நாள் முட்டாள் தனமாய் அதை எட்டி உதைத்தேன். பெண்கள் மதிப்பு, மரியாதை பெறுவது போல் நடந்து கொண்டால், இந்தச் சமுதாயம் அவர்களிடம் இத்தனைக் கடினமாய் இருக்காது."

புரியாதவன் போல் பார்த்தான் அனந்த். என்ன பேசுகிறாள் ரோஜா? சமுதாயத்தைப் பற்றிய பயம் அவளுக்கா? மதிப்பு, மரியாதை பற்றிய சிந்தனையா? எப்போதும் சமுதாயத்தைப் பற்றி எள்ளி நகையாடி, அலட்சியமாய்ப் பேசும் ரோஜாதானா இவள்!

அவன் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டவள் போல், ரோஜா சொன்னாள், "சொன்னேனே, ரொம்ப மாறி விட்டேன் என்று. இனி கிளம்பறேன்..."

"வேலை ஏதாவது கிடைத்தால்?"

"நேராக வீட்டுக்கு வந்து மாமாவிடம் தகவல் சொல்லிவிடு."

ரோஜா சென்று விட்டாள். அனந்தின் மனம் அப்படியே இடிந்து போய்விட்டது. என்ன காரியம் செய்துவிட்டோம்? ரோஜாவின் மனதில் ஆசைகளை விதைத்துவிட்டு, ஒரே யடியாய், நிர்மூலமாக்கி விட்டோம். அன்று வாக்கு கொடுத்தது போல் ரோஜாவைத் திருமணம் செய்து கொள்ள முடியாமல் போனது தன் துரதிருஷ்டம்தான். ரோஜா வேலைக்கு முயற்சி செய்கிறாள் ஏதாவது வேலை தன்னால் ஏற்பாடு செயய முடிந்தால், அதற்குப் பிறகாவது மனம் விட்டுப் பேச வாய்ப்பு கிடைக்கலாம். ஆனால் படித்தவர்களுக்கே வேலை கிடைக்காத இந்த நாட்களில் ரோஜாவுக்கு எந்த வேலை கிடைக்கும்? ஏதாவது வழி கிடைத்துதான் ஆக வேண்டும்.

* * *

ரோஜா வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டு இருந்தாள் அனந்த் எவ்வளவு வேதனை அநுபவிக்கிறானோ அவளால் உணர முடிந்தது ஆனால் வேறு வழியில்லை



இந்த சிநேகங்களே வேண்டாம். நாலுபேர் மதிப்புக் குறைவாய் பேசுவது வேண்டாம். வேறு யாரோ வெறுப்பது அதைவிட வேண்டாம்!

ரோஜா இந்த ஒருவாரமாய் ராப்பகலாய் யோசித்து, கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தாள். தன் கால்களில் தான் நிற்க வேண்டும். எப்படியாவது வேலை சம்பாதித்துக் கொண்டால், செந்தூரையும் வழிக்குக் கொண்டு வர முடியும்.

சங்கரன் மாமா சமீபத்தில் ஒரு நாடகக் கம்பெனியில் வயலின் வாசிக்க சேர்ந்து கொண்டார்—அது ஒவ்வொரு ஊராய் சுற்றும் கம்பெனி வீட்டை மறந்துவிட்டு, அவர் அந்தக் கம்பெனியில் ஐக்கியமாகி விட்டார். வீட்டைச் சமாளிப்பது பெரும் பாடாகிவிட்டது. மாமி மட்டும் என்ன செய்வாள்? இத்தனை நாட்கள் இருப்பதில் தமக்கும் அளித்து வாழவைத்தார்கள்.

இனி வரப்போகும் நாட்களில் வீட்டுப் பொறுப்பை தான் ஏற்றுக்கொள்ள வேண்டும், செந்தூரை நழுவிப்போய் விட்டதில் தன் பொறுப்பு இருமடங்காகி விட்டது. செந்தூர அரெஸ்ட் ஆன பிறகு, ட்யூஷன் வேலையும் போய் விட்டது. வாழ்க்கையில் அடிபட்டவர்கள் எப்படி நம்பிக்கையை இழந்து விடுவார்களோ, ரோஜாவும் அதுபோல் தன்னிடமே நம்பிக்கையை இழக்கத் தொடங்கினாள்.

# 26

அனந்த் பைத்தியக்காரனைப்போல் ஊரெல்லாம் சுற்றிச் சுற்றி, கால்கள் இற்றுப்போக, இருட்டும் நேரம் வேணுகோபாலன் வீட்டுக்கு வந்தான். மதிய உணவுக்கும் அவன் அவர்கள் வீட்டுக்குப் போகவில்லை, தனக்காக

அவர்கள் எதிர்பார்த்து இருப்பார்கள், சாப்பிட வரப் போவதில்லையென்று போனாவது செய்து இருக்கவேண்டும். அவர்கள் வீட்டில் விருந்தாளியாய் தங்கியிருப்பது மறந்து, அவர்களுக்கு இடைஞ்சல் கொடுத்ததற்கு வெட்கப்பட்டான். என்ன பதில் சொல்வது என்று யோசித்துக் கொண்டே வீட்டில் காலடி எடுத்து வைத்தான்.

உள்ளே இருந்து பேச்சுக்குரல் பலமாகக் கேட்டது. யாராவது வந்திருப்பார்களோ? யோசித்துக் கொண்டே வேணுகோபாலன் அறை வாசல் வரை சென்றுவிட்டான். அவனுக்கு ரொம்ப சோர்வாக இருந்தது. ஒரு நிமிஷம் அவரைப் பார்த்து, மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தன் அறைக்குச் சென்று விடும் எண்ணத்தில் உள்ளே போக முற்பட்டவன், வாசலிலேயே நின்றுவிட்டான்.

வேணுகோபாலனின் குரல் கோபமாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

"உனக்குப் புத்தியில்லை. இனிமேலும் வருமென்ற நம்பிக்கையும் இல்லை. நேற்று அநாவசியமாய் அத்தனை சின்ன விஷயத்துக்கு சமையல்காரியுடன் சண்டை போட்டு அவளை விரட்டி விட்டாய். இன்று வேலைக்காரியும் வரவில்லை. ராதை ஜுரத்தில் கண்ணைத் திறக்காமல் படுத்திருக்கும் போது, கிளப்புக்குப் போகக் கிளம்பி விட்டாயே? நீயும் ஒரு பெண்தானா?"

லாவண்யாவின் குரல் எரிச்சலுடன், அலட்சியமாய்க் கேட்டது. "கொஞ்சம் ஜுரம் வந்ததுக்கே நீங்க இப்படி ரகளை செய்யணுமா? கண்ணின் இமைபோல் பார்த்துக் கொள்ளும் தந்தை நீங்க இருக்கும்போது, நான் இருந்தாலென்ன? இல்லாவிட்டால் என்ன? சீ. சீ...சனியன் பிடிச்ச வாழ்க்கை, ஒரு நாள்கூட சந்தோஷமாய் இருக்க முடியாது."

"சனியன் பிடிச்ச வாழ்க்கையா?"

"இல்லாவிட்டால் என்ன? இந்த வீட்டில் எல்லா விஷயங்களையும் நான்தான் பார்த்துக்கணும். எனக்குன்னு



ஒரு சுகம் கிடையாது. யாருக்கு வேண்டும் இந்த வாழ்க்கை?"

"என்ன பேச்சு பேசுகிறாய் லாவண்யா? இந்த வீடு உன்னுது இல்லையா? நீ அதில் சம்பந்தப்படவில்லையா?"

"அஹா! சம்பந்தப்படாமல் என்ன? வீட்டுப் பொறுப்புகளை நான்தான் ஏற்றுக்கொள்ளணும். ஆனால் செலவுக்கு ஒரு நூறு ரூபாய் கேட்டால் போதும், வேலைக்காரியை விட மட்டமாகி விடுவேன். நீங்க என்ன வேணா நினைச்சுக்கோங்க. அம்மா போனதுமே, என் வாழ்க்கை நரகமாகி விட்டது. அவளோடயே என் சுகம், அமைதி எல்லாம் சாம்பலாகி விட்டன."

"லாவண்யா! ஏன் இந்த மாதிரி பேசுகிறாய்?"

"இருக்கும் உண்மையைத்தான் பேசுகிறேன். அம்மா போன பிறகு என் வாழ்க்கை இப்படியாகும் என்று தெரிந்திருந்தால், நானும் அன்றே செத்துத் தொலைந்திருப்பேன்" லாவண்யா அழத்தொடங்கினாள்.

"சரி...சரி உன்னை இருக்கச் சொன்னது என்னுடைய முட்டாள் தனம்தான், போ...போ...என் தலை எழுத்து என்னவோ, அதை நான் அனுபவிக்கிறேன். உன்னைச் சொன்னது தப்புதான்...இதெல்லாம் என்னோட பூர்வ ஜென்ம பாவம்..."

"உங்க கர்மாவுக்கென்ன வந்தது? என் துரதிருஷ்டம் தான். என் போன்ற வாழ்க்கை பகையாளிக்கும் கிடைக்கக் கூடாது. வெளியிலிருந்து பார்க்கிறவங்களுக்கு எந்தக் குறையும் தெரியாது. உண்மை விஷயம் யாருக்குத் தெரியும்?" அழுகையினூடே லாவண்யாவின் குரல் ஒலித்தது.

வெளியிலிருந்து இந்த உரையாடலைக் கேட்ட அனந்த், இந்தச் சமயத்தில் தான் உள்ளே போகலாமா, வேண்டாமா என்று இருக்கும் போதே, மறுபடியும் லாவண்யா சொன்னாள்.

"நான்கு நாட்களாய் உங்களைக் கேட்கிறேன், கிளப்பின் டொனேஷனுக்காக என் பேரில் நானூறு ரூபாய் கொடுப்பதாக வாக்கு கொடுத்து விட்டேன் என்று. நீங்க கொடுக்கவே இல்லை, எனக்கு எவ்வளவு தலை குனிவாய் இருக்குன்னு உங்களுக்குத் தெரியாது. அம்மா இருந்திருந்தால் இப்படி நடக்குமா?"

"இந்த மாதம் இதுவரை உனக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் கொடுத்து இருக்கிறேன்."

"ரூபாயை நான் ஒன்றும் முழுங்கி விடவில்லை. புடவைக் கடையில் பாக்கியைச் செட்டில் செய்தேன்... முன்பு மிஸெஸ் கௌதமியிடம் வாங்கின ஐநூறு ரூபாய் கடனைத் திருப்பிக் கொடுத்தேன். வேணும்னா போன் செய்து விசாரிச்சுக்குங்க."

"இனி அது ஒண்ணு தான் குறைச்சல்."

"என்னை இப்படிப் பாடாய் படுத்துவானேன்? எனக்குத் தரவேண்டியதைக் கொடுத்து, "என்னை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டால் போதுமே? ஒருத்தரை ஒருத்தருக்குப் பிடிக்காதபோது, ஒரே வீட்டில் வசிப்பதை விட, தனியாய் இருப்பது நல்லது. உங்களிடம் ஏற்கனவே சொல்லி இருக்கேன். என்னை ஏதாவது ஹாஸ்டலில் சேர்த்து விடுங்கள், நிம்மதியாக இருப்பேன்.."

"இந்தா நானூறு ரூபாய். எடுத்துக்கொள் என் கோபத்தைக் கிளப்பாதே."

"இதை முதலிலேயே கொடுத்திருந்தால் இந்த ரகளையே இருக்காது இல்லையா! கிளப்பில் புரோகிராம் கடைசிவரை இருக்கமாட்டேன், நடுவிலேயே வந்துவிடுவேன். என் பொறுப்பு எனக்குத் தெரியும், யாரும் சொல்லத் தேவையில்லை."

லாவண்யா வேகமாய் வெளியே வந்தாள்.



வாசற்கதவு அருகில் தயங்கினாற்போல் நின்றிருந்த அனந்தைப் பார்த்து, முகம் வெளுத்து, உடனே சமாளித்துச் சிரித்தாள்.

"பாரு அனந்த் ராதைக்கு லேசாக ஜுரம் வந்ததுக்கு. டாடி எப்படி ஆர்ப்பாட்டம் செய்றார் பாரு...வயது ஆக ஆக இவருடைய தொணதொணப்பு ஜாஸ்தியாயிடுத்து" என்றவள், வேகமாய் வெளியேறி விட்டாள்.

அனந்த் மெதுவாய் உள்ளே வந்தான். ராதைக்கு இரண்டு நாட்களாய் ஜுரமாய் இருக்கு என்றும், கவனமாய் இல்லாவிட்டால், நிமோனியாவில் கொண்டு விடும் என்று டாக்டர் எச்சரித்ததும் தெரியும்.

"வாப்பா அனந்த்...வா...வா...மதிய சாப்பாட்டுக்கு வரலியே ஏன்?" என்று கேட்டார் வேணுகோபாலன். ராதை அவர் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தாள். அவளுடைய நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான் அனந்த். "ஜுரம் இன்னும் குறையவில்லையா?" என்று கேட்டான்.

"நார்மலுக்கு வர இரண்டு மூன்று நாட்கள் ஆகும் என்று டாக்டர் சொல்லி இருக்கார்." எனச் சொன்னார்.

ராதை தாகம் என்பதுபோல் சாடை காட்டினாள்.

"குடிக்கத் தண்ணி வேணுமா? இரு கண்ணம்மா, நீ சமத்தாய்த் தலையணையில் தலை வைத்துப் படுத்துக் கொள், நான் உள்ளே போய்த் தண்ணியைச் சுடவைத்துக் கொண்டு வர்றேன்" என்று கொஞ்சுவதுபோல் சொன்னார் வேணுகோபாலன்.

சற்றுமுன் பெரிய மகளுடன் பேசிய குரலுக்கும், இந்த குரலுக்கும ஒற்றுமையே இல்லையென்று நினைத்தான் அனந்த். ராதைதந்தை மடியிலிருந்து இறங்க ஒப்புக்கொள்ளவில்லை.

"எப்படியம்மா தண்ணீர் கொண்டு வர்றது?" வேண்டுவதுபோல் நயமாகச் சொன்னார்.

''நீங்க இருங்க...நான் எடுத்துக்கொண்டு வர்றேன்.'' அவரைத் தடுத்துவிட்டு, சமையல் அறைப்பக்கம் போனான் அனந்த்

உள்ளே கால் வைக்கப்போனவன் அப்படியே நின்று விட்டான். அவன் கண்களில் அருவருப்புத் தோன்றியது. இது சமையல் அறைதானா? பொருட்கள் தாறுமாறாய்ச் சிதறிக் கிடந்தன. சாப்பிட்ட தட்டுகள் கழுவப்படாமல் 'சிங்கில்' இருந்தன. குழாய் சரியாக மூடப்படாமல் தண்ணீர் தாரையாய் ஒழுகிக் கொண்டிருந்தது. மூடியில்லாத சர்க்கரை டப்பா, காய்ந்து போன கரண்டிகள், திறந்து கிடந்த உணவுப் பண்டங்கள் எல்லாம் அப்படியே கிடந்தன. ஒரு வேளை வேலைக்காரி வராவிட்டால் வீட்டை இவ்வளவு அலங்கோலமாய் வைத்துக் கொள்ளணுமா? லக்ஷ்மி நாலு நாட்கள் வராவிட்டாலும், வீடு இப்படியா இருக்கும்! நிலைமை இப்படி இருக்கும் போது எந்தப் பெண்ணாவது இளப்புக்குப் போவாளா?

அனந்த் காஸ் ஸ்டவ்வைப் பற்ற வைத்து தண்ணீர் சுட வைத்து, ஆற்றி வேணுகோபாலனிடம் கொண்டு வந்து, ''இன்னிக்கு வேலைக்காரி வரவில்லையா?''

''இல்லைப்பா, அவளுடைய தங்கைக்குக் குழந்தை பிறந்திருக்கு. போய் பார்த்துவிட்டு வரேன்னு சொன்னதால் அனுப்பியிருக்கேன். நாளைக்கு வந்து விடுவாள்.''

''சமையல்காரி ஏன் வரவில்லை?''

''லாவண்யா பேக்கிலிருந்த பணம் காணவில்லையாம். அவள்தான் எடுத்திருப்பாள் என்று லாவண்யா சாதிக்கிறாள். அந்தம்மா தான் எடுக்கவில்லைன்னு சத்தியம் செய்கிறாள். உண்மை எது என்று அந்த கடவுளுக்குத்தான் தெரியணும்.''

லாவண்யாவின் போக்கு ரொம்ப விசித்திரமானது. வேலைக்காரர்களுக்கு அளவுக்கு அதிகமாய் சலுகை



கொடுத்துக் கொண்டாடுவாள், அவர்கள் எல்லை மீறி நடந்து கொண்டால் பெரிய ரகளை செய்து சண்டை போடுவாள். அதனால் இந்த வீட்டில் வேலைக்காரர்கள் ரொம்ப நாட்களுக்கு நிலைத்திருக்க மாட்டார்கள்.

ராகைக்குத் தண்ணீர் கொடுத்து, சரியாகப் படுக்க வைத்த வேணுகோபாலன், நெற்றிப் பொட்டை நீவிக் கொண்டே ''தலைவலி மண்டையைப் பிளந்து விடும் போலிருக்கு'' என்றார்.

அனந்த் உள்ளே போய் காபி கலந்து எடுத்து வந்தான். தன் அறையிலிருந்த தலைவலி மாத்திரையும் கொடுத்து ''காபி சாப்பிட்டு விட்டு, மாத்திரை போட்டுக்குங்க'' என்றான். அவருடைய கண்களில் நீர் தளும்பி விட்டது. ''அனந்த்... உனக்கு ஏன் இந்தச் சிரமம்?'' அவர் குரல் கம்மி விட்டது.

''உங்க வீட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு கவனமாய் நிர்வாகம் செய்ய ஒரு ஆள் உங்களுக்குத் தேவை. லாவண்யா விஷயம் நமக்குத் தெரிந்ததுதானே'' என்றான்.

''அந்தமாதிரி எத்தனை பேர் வந்தாங்க, எத்தனை பேர் போனாங்க... ஒவ்வொருத்தரோடும் ஒவ்வொரு விதமாய்ச் சிரமப்பட்டேன். இந்த வீட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றாற் போல், லாவண்யாவின் கோபத்துக்கும் ஈடு கொடுக்கக் கூடிய நபராய் இருக்கவேண்டும்... யார் கொடுக்கக் கூடிய நபராய் இருக்கவேண்டும்... யார் வருவாங்க? அப்படி யாராவது கிடைப்பாங்கன்னு கனவில் கூட நினைக்க மாட்டேன்.''

''கிடைப்பது கஷ்டம் தான். ஆனால், முயற்சி செய்தால்?''

''எல்லா முயற்சியும் செய்து, அலுத்துப் போய், இனி என் அதிருஷ்டத்தைக் கடவுளிடம் விட்டு விட்டேன். இந்த வாழ்க்கை இப்படி அமைதியில்லாமல் கழிய வேண்டியது தான்.''

பணமிருந்தால் போதும், எல்லா சுகங்களும் கிடைத்து விடும் என்ற தவறான எண்ணத்தில் இருக்கும் முட்டாள்களுக்கு இவருடைய வாழ்க்கையைக் காண்பிக்க வேண்டும். பணத்தால் கிடைக்காதவை இந்த உலகில் நிறைய இருக்கும் என்பதற்கு வேணுகோபாலனின் வாழ்க்கை ஒரு எடுத்துக் காட்டு.

அனந்த் தன் அறைக்கு வந்து உடை மாற்றிக் கொண்டு படுத்தானே தவிர, மனம் அமைதியின்றி தவித்தது. களைத்துப் போன அவன் மனம் ரோஜாவைப் பற்றியே யோசித்துக் கொண்டு இருந்தது. "என் கால்களில் நிற்கக் கூடிய வாய்ப்பு கிடைக்க வழி காட்டு" என்ற ரோஜாவின் முகமே கண் முன் நிழலாடிற்று. வேணுகோபாலனின் வேதனையுற்ற முகம் நினைவுக்கு வந்தது. ஏற்கனவே உடல் நலம் சரியில்லாதவருக்கு வாழ்க்கையில் எத்தனை பிரச்னைகள். ரோஜாவுக்கு வேலை பார்த்துத் தரணும்; வேணுகோபாலன் அங்களுக்கு வீட்டைப் பொறுப்பாய்க் கவனித்துக் கொள்ள ஆள் வேண்டும்; இந்த இரண்டு உதவிகள் தான் செய்து தர வேண்டும். யோசித்துக் கொண்டே படுத்திருந்த அனந்த் சரேலென்று எழுந்து கொண்டான் அவனுக்கு மின்னல் போன்ற யோசனை வந்தது.

வேணுகோபாலனுக்கு வீட்டைப் பார்த்துக் கொள்ள பொறுப்பான ஆள் வேண்டும். அந்த நபர் ரோஜாவாய் ஏன் இருக்கக் கூடாது? ரோஜாவைக் கட்டாயம் வேணுகோபாலனுக்குப் பிடிக்கும். ஆனால் ரோஜா! ரோஜாவைச் சம்மதிக்க வைக்கணும் இதில் மதிப்பு குறைவு ஒன்றுமில்லையென்று ஒப்புக் கொள்ளச் செய்யணும். எல்லாவற்றையும் விட முக்கியமாய் ரோஜா தன கண்முன்னே இருப்பாள். எவ்வளவு நல்ல ஐடியா!

ரோஜா இன்னாரென்று முதலில் சொல்லக் கூடாது. அவளுடைய தனித்தன்மையை வேணுகோபாலன் புரிந்து



கொண்டு, அவர் 'சப்போர்ட்' செய்தால், விஜய் கட்டாயம் தம் கல்யாணத்துக்குச் சம்மதித்து விடுவான் என்று எண்ணினான்.

அனந்த் வேகமாய் வேணுகோபாலன் அறைக்குள் வந்தான். ராதைக்கு மருந்து கொடுத்துவிட்டு, தானும் படுத்துக் கொள்ளும் ஏற்பாடுகளில் அவர் இருந்தார்.

திடீரென்று வேகமாய் உள்ளே வந்த அனந்தைப் பார்த்து "என்ன அனந்த்? என்ன ஆச்சு?" என்றார் பதட்டமாய்.

"எனக்கு ஒரு வழி கிடைத்து விட்டது" என்று உற்சாகமாய்ச் சொன்னான் அனந்த்.

"வழியா? எதுக்கு?"

"உங்க வேதனையை அடியோடு தீர்ப்பதற்கு!"

"என் வேதனையா?" அவருக்குப் புரியவில்லை

"ஆமாம், இந்த வீட்டு விஷயத்தில் நீங்க படும் கஷ்டங்கள்... நான் அது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தேன் மாதம் இருநூறு ரூபாய் செலவழிக்க நீங்க தயாராய் இருந்தால், உங்களுக்குத் தேவையான நபரை நான் அழைத்து வருகிறேன்."

அவர் கட்டிலில் அமர்ந்து கொண்டார். அனந்த் பக்கத்திலேயே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

"யார் அந்த நபர்?" வேணுகோபாலன் கேட்டார்.

"எனக்குத் தெரிந்த குடும்பத்தில் இருக்கிறாள்."

"இருக்கிறாள் என்றால்...பெண்ணா?"

"ஆமாம். ரொம்ப நல்லவள் பொருளாதார ரீதியாய் ரொம்ப நலிந்து விட்ட குடும்பத்தைச் சேர்ந்தவள்... அதிகமாகப் படித்தவள் இல்லை..."

"வயசு எவ்வளவு இருக்கும்?"

"இருபதுக்கு மேல் ஒன்றோ, இரண்டோ இருக்கலாம். ரொம்ப நல்லப் பெண்."

"இவனுக்கு நல்லவர்களாய் இல்லாதவங்க யாராவது கண்ணில் பட்டிருக்காங்களா?" என்று விஜய் சொன்னது தான் நினைவுக்கு வந்தது வேணுகோபாலனுக்கு.

"வீட்டுப் பொறுப்பு முழுவதும் பார்த்துக் கொள்வாள். தேவையானால் சமையலும் செய்து விடுவாள். அந்தப் பெண் வந்து விட்டால் உங்களுக்கு எந்தக் கஷ்டமும் இருக்காது அவளுடைய திறமையைப் பார்த்தால், நீங்களே எனக்கு நன்றி சொல்வீங்க."

நம்பமுடியாதவர் போல் பார்த்தார் வேணுகோபாலன். "என்னமோ அனந்த்... இளம் பெண் என்று சொல்கிறாய். அவளோட அம்மா, அப்பா ஒப்புக் கொள்வார்களா?"

"அவர்களைச் சம்மதிக்க வைக்கும் பொறுப்பு என்னோடது. நீங்க சரின்னு சொல்லுங்க போதும்."

"சரி. ஆனால் முன்னாடியே அவர்களிடம் உறுதியாய் சொல்லாதே... இந்தக் காலத்துப் பெண்களைப் பற்றி எனக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கு."

"எனக்கும் தெரியும். ஆனால் ரோஜாவைப் பார்த்த பிறகு நீங்க கட்டாயம் உங்க அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வீங்க..." என்று திடமாய்ச்சொன்னான் அனந்த்.

# 27

"இதில் தவறு என்ன இருக்கு ரோஜா? உனக்கு வேலை வேணும், அவருக்கு வீட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் ஆள் வேண்டும். படிப்பு அதிகமாக இல்லாத உனக்கு, வேறு



வேலை கிடைக்க வாய்ப்புகள் இல்லை. என்னைக் கேட்டால் இது ஒரு அருமையான வாய்ப்பு. கட்டாயம் இதுக்கு நீ சம்மதிக்கணும்." என்று ஆவேசமாய் மொழிந்தான் அனந்த்.

ஒரு மணி நேரமாய்ப் பார்க்கில் அவ்விருவருக்கும் இடையே விவாதம் நடந்து கொண்டிருந்தது. ரோஜா கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவன் பொறுமையாய்ப் பதிலளித்தான். எப்படியாவது ரோஜாவைச் சம்மதிக்க வைக்கும் எண்ணத்தில் திடமாய் இருந்தான் அனந்த்...

"ஆனால் அனந்த்..." மறுபடியும் ஏதோ சொல்லப் போனாள்.

அனந்த் இடைமறித்துச் சொன்னான். "இந்த ஆனால் எல்லாம் நீ விட்டு விடணும், காலம் மாறிவிட்டது. இந்தக் காலத்தில் பெண்கள் செய்யாத வேலை என்ன இருக்கு? இந்த உலகில் ஒவ்வொரு பெண்ணும் சுய சார்புடைய பெண்ணாய் உருவாகணும். அப்பொழுதுதான், அவளுக்குத் தன்மீது நம்பிக்கை வரும். நேர்மையாகச் செய்யக்கூடிய எந்த வேலையும் உயர்வானதுதான்."

ரோஜா பதில் சொல்லவில்லை. யோசனையில் ஆழ்ந் திருந்தாள்...வேலை பார்க்க வேண்டுமென்றும், தன்கால் களில் நிற்க வேண்டும் என்றும்தான் எண்ணியது உண்மை தான் ஆனால் இதுபோல் இன்னொரு வீட்டில் பொறுப்பை ஏற்றுக் கொள்ளணும் என்றால் தயக்கமாக இருந்தது. இது சரியாக வருமா! என்று ரோஜாவுக்குப் பயமாக இருந்தது.

அங்கே எந்தக் கஷ்டமும் இருக்காது என்றும், அவர்கள் ரொம்ப நல்லவர்கள் என்றும், அந்த வீட்டில் வேலைக்காரர் களை மேற்பார்வை பார்த்தால் போதும் என்றும் அனந்த் விவரித்துக் கொண்டிருந்தான். இது போன்ற வேலைகள் வெளி நாடுகளில் ரொம்ப சகஜம் என்றும் சொன்னான். வெளிநாட்டு கலாச்சாரம் வேறு, அந்தச் சமுதாயத்தின் கண்ணோட்டமும் வேறு... அதுவுமில்லாமல் விஜய் அந்த

வீட்டுக்கு அடிக்கடி வந்து கொண்டு இருப்பான். வேணுகோபாலனுக்கு விஜய் ரொம்ப வேண்டியவன் என்று அனந்த் எத்தனையோ தடவை சொல்லி இருக்கிறான். விஜய் நினைவு வந்தால் போதும், ரோஜாவின் இதயம் வேதனையால், வெறுப்பால் நிறைந்துவிடும்.

"அனந்த்! அங்கே உங்க விஜய் இருப்பான்..." சந்தேகமாய்ச் சொல்லப் போனாள்.

அனந்த் நடுவிலேயே துண்டித்து விட்டான். "நான்சென்ஸ். உன்னால் விஜய்க்குப் பதில் சொல்ல முடியாது என்றால் என்னால் நம்பமுடியாது. உன் மனதில் கோழைத்தனத்துக்கு இடம் கொடுக்காதே ரோஜா..."

ரோஜாவுக்கு ரோஷம் வந்தது. உண்மைதான், விஜயைப் பார்த்து தான் ஏன் பயப்படவேண்டும்? அவன் தன்னை என்ன செய்து விடுவான்? வேணுகோபாலனின் நிழலில் இருந்துகொண்டு, என்னிக்காவது அவனைப் பழி தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? அது நடக்குமா! எந்த விதமாகவும் தன் கையில் கிடைக்காத அந்த நபரிடம் எப்படி பழி தீர்த்துக்கொள்வது? சின்ன வயதிலிருந்தே தன்னை யாராவது ஏதாவது சொன்னாலோ, அவமானப்படுத்தினாலோ, அதற்கு இருமடங்கு துடுக்காய் பதில் சொன்னால்தான் ஆவேசம் தணியும் சுபாவம் ரோஜாவுக்கு. கொஞ்சம் அவமானம் ஏற்பட்டது போல் தோன்றினால் போதும், அதற்குப் பழி தீர்த்துக் கொள்ளும் வரை தூக்கம் வராது. அப்படிப்பட்டவளுக்கு விஜய் மூலமாய் நேர்ந்த இந்த அவமானத்தை, விஷம்போல் விழுங்குவதைத் தவிர வேறு எதுவும் அவளால் செய்ய முடியவில்லை. அந்த அவமானம் அக்னிக் குழம்பாய் உள்ளே தகித்துக் கொண்டிருந்தது.

அனந்த் கெஞ்சுவது போல் சொன்னான். "என் பேச்சைக் கேளு ரோஜா! இரண்டு மாதங்கள் வேலை பார். பிடிக்காவிட்டால நின்று விடலாம். நீ ரொம்ப நாளாய் நினைத்தாற்போல் தையல் மிஷின் வாங்க பணம் சேர்த்ததும் நின்று விடலாம். இல்லை, உனக்கு எந்த நிமிடம் பிடிக்கவில்லையோ அந்த நிமிடமே நின்று விடலாம். உன்னை யாரும் தடுக்க மாட்டார்கள்."



"என்னை யோசிக்க விடு அனந்த் எந்த வேலையும் செய்யும் முன் தீர யோசிப்பதுதான் நல்லது, அப்புறமாய் வருத்தப்படுவதை விட."

"ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ரொம்ப யோசிப்பதும் அவ்வளவு நல்லது இல்லை. சில சமயம், யோசிக்க, யோசிக்க சந்தேகங்கள் வந்து கொண்டே இருக்கும். நல்லதோ கெட்டதோ துணிந்து செயல்பட வேண்டிய நேரம் இதுதான்."

ரோஜா பதில் பேசவில்லை.

"அதுமட்டுமில்லை. வேணுகோபாலன் ரொம்ப நல்லவர். உனக்குத் தந்தை போன்றவர். என் உத்தேசம் என்னவென்றால், தந்தையின் அன்புக்காக ஏங்கும் நீ அவரிடம்..."

"அனந்த்!" ரோஜா கோபத்தில் சிவந்து விட்ட கண்களுடன் திரும்பிப் பார்த்தாள் கூர்மையாய் இருந்த அந்தப் பார்வையில் வேதனையும், வெறுப்பும் போட்டியிட்டன. "அனந்த்... தயவு செய்து இனி எப்போதும் தந்தை என்ற வார்த்தையைச் சொல்லாதே. இந்த உலகில் நான் வெறுக்கும் ஒரே வார்த்தை "தந்தை." எங்க நலனைப்பற்றி அக்கறையில்லாமல் ஓடிவிட்ட அந்த நபரை நினைத்தாலே எனக்கு வெறுப்பாய் இருக்கும். அனந்த்! எதை வேணுமானாலும் நான் பொறுத்துக் கொள்வேன், ஆனால், தம் பொறுப்பை மறந்துவிட்ட நபர்களின் நிழலைக் கூடப் பொறுக்கமாட்டேன். அவர்களிடம் எனக்குக் கொஞ்சம் கூடக் கௌரவம் கிடையாது."

என்றும் இல்லாத விதமாய் ரோஜாவின் பேச்சில் தென்பட்ட வெறுப்பை, தீவிரத்தைக் கவனித்த அனந்த் ஆச்சரியப்பட்டான்...

"எனக்குச் சாத்தியமாகாதே தவிர... என்னால் முடிந்தால், அந்த இருவருக்கு மட்டும் நல்லா பாடம் புகட்ட எண்ணுகிறேன்."

"யார் அவங்க?"

"ஒன்று என் பிறப்புக்குக் காரணமான என் தந்தை. அவருடைய பொறுப்பற்ற செயலுக்கு என் வாழ்க்கையும், செந்தாவின் வாழ்க்கையும் பலியாகிவிட்டன."

"இரண்டாவது நபர்?"

"அது... வந்து..."

"யாரு ரோஜா?"

"விஜய்!" நாக்கின் நுனிவரை வந்த வார்த்தை அங்கே நின்றுவிட்டது...

"நான் இல்லையே!" பயந்து விட்டவன் போல் பார்த்தான் அனந்த். அவன் கேட்ட விதத்தைப் பார்த்து ரோஜா சிரித்து விட்டாள்.

"இல்லை."

"நல்ல வேளை, தப்பிச்சேன்."

"நான் வெறுத்தால், உன்னால் வாழ முடியாதா அனந்த்!"

"ஊஹூம் ஒருநிமிடம் கூட என்னால் உயிருடன் இருக்க முடியாது."

"உனக்கு அந்த பயம் வேண்டாம். அந்த ஆபத்தை உனக்கு என்றுமே வரவிடமாட்டேன்."

அனந்த் முகம் மலர்ந்தது. "எனக்குத் தெரியும் ரோஜா."

ரோஜா அவனை அன்புடன் பார்த்துக் கொண்டே சொன்னாள். "அனந்த்! கடவுள் ரொம்ப கருணையுள்ளவர்,



செந்தா என்னை விட்டுப் பிரிந்த இந்தச் சூழ்நிலையில், அவனிடம் எனக்குக் கிடைக்கும் அன்பும், நெருக்கமும் உன்னிடம் நிறையவே கிடைக்கும் விதமாய்ச் செய்து விட்டார்—அதுக்கு நான் நன்றியைத் தெரிவிக்கணும்."

சிரித்துக் கொண்டிருந்த அனந்தின் முகம் கறுத்து விட்டது "ரோஜா! உன்னிடம் இது வரை ஆயிரம் தடவை சொல்லி இருக்கேன். செந்தாவுடன் சமமாய் என்னைப் பாவிக்க வேண்டாம் என்று... நான் உன்னைவிட நான்கு ஆண்டுகள் பெரியவன்! அதை மறந்து விடாதே."

"வயதில் பெரியவனாய் இருக்கலாம்! ஆனால், மனதளவில் பார்த்தால் என்னைவிட எட்டு வயது சின்னப் பையனாய்த் தென்படுகிறாய், என் கண்களுக்கு."

"நாம் அசல் பிரச்னையை மறந்துவிட்டு வேறு வழியில் போய்க் கொண்டிருக்கிறோம்..." கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே அனந்த் சொன்னான். "இங்கு வந்து இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது... இத்தனை பேசிய பிறகும் ஒரு முடிவுக்கு வரவில்லை."

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?" பழையபடி ஆகிவிட்டாள் ரோஜா.

"மறு பேச்சு பேசாமல் நான் சொல்வதற்கு ஒத்துக் கொள்."

"சரி! சம்மதிக்கிறேன். ஆனால் வீட்டில் சொல்லி அவர்கள் சம்மதம் கொடுத்தால்தான், உறுதியாகச் சொல்ல முடியும். எல்லாவோ அனந்த், சமீபகாலமாய் என்மீதே எனக்கு நம்பிக்கை போய்விட்டது" என்று ரோஜா சொன்னாள்.

"அதான் என்மீது நம்பிக்கை வைத்து, நான் சொல்வது போல் செயல்படு என்கிறேன்."

"குருடனுக்குக் குடிகாரன் வழிகாட்டுவது போல்தான்" என்று ரோஜா கலகலவென்று சிரித்தாள்.

# 18

அன்றிரவு அனந்த் சொன்ன விஷயத்தை வீட்டில் சொன்னாள் ரோஜா. சாவித்திரி ஒப்புக் கொள்ளவில்லை. ரோஜா அந்த வேலைக்குப் போனால், தான் ஏதாவது குளமோ, குட்டையோ பார்த்துக் கொள்வதாக மிரட்டினாள்.

சம்பளத்தைப் பற்றிக் கேட்டதும் சுந்தரியின் மனம் தளர்ந்துவிட்டது... இவ்வளவு சம்பளம் ஏன் தருகிறார்கள் என்ற சந்தேகம் வந்தாலும், சுயநலமும் பணத்தின் தேவையும் சந்தேகத்தை அடக்கிவிட்டதோடு வாயை மூட வைத்தன.

சங்கரன் மட்டும் உடனே ஒப்புக் கொண்டதோடு தங்கையை அதட்டினார். "நாம் அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்கும் நிலையில் இல்லை. வயது வந்த பெண், ஏதாவது வேலையில் ஈடுபட்டால்தான் நல்லது. அவளுக்கு நல்லது கெட்டது தெரியும். நம்மைவிட ஜாக்கிரதையாக இருப்பாள், போய் வரட்டும்."

அன்றிரவு சங்கரன் டிராமா கம்பெனியுடன் கிளம்பிக் கொண்டிருந்தார். திரும்பி வர ஒரு மாதம் ஆகலாம். ரோஜாவுக்கு இந்த வேலை கிடைத்தால் வீட்டில் கஷ்டம் இருக்காது. தான் இல்லாத போது சுந்தரி அவர்களை ஏதும் சொல்லாமல் இருப்பாள். ரோஜா கொண்டு வரும் வருமானம், சுந்தரியின் வாயை அடைத்து விடும் என்று அவருக்குத் தெரியும்.

இரவு எல்லோரும் உறங்கிய பிறகு ரோஜா, ஜன்னலில் உட்கார்ந்து கொண்டு, தான் செய்யப் போகும் வேலையைப் பற்றி மறுபடியும் யோசித்துப் பார்த்தாள்.



அனந்த் சொல்வது போல் அந்த வீட்டில் வேறு ஆண்கள் இல்லாததால், தனக்கு எந்த ஆபத்தும் இருக்காது. வேலையும் அதிகமில்லை. தேவை ஏற்பட்டால் வேலை செய்யவும் தான் தயங்குகிறவள் இல்லை. தன் வயது ஒத்த லாவண்யாவுடன் நட்பு ஏற்பட்டால், தன்னுடைய தனிமையும் நீங்கும். கட்டு மீறி தவிக்கும் மனதுக்குக் கடிவாளம் ஏற்படும். வாய் பேசமுடியாத ராதைக்குப் படிப்பு சொல்லித் தரலாம்.

வேணுகோபாலனை நினைக்கும் போது, ரோஜாவுக்கு மதிப்புடன் கூடிய எண்ணம் ஏற்படும். அவருடைய நிழலில் தனக்கு அமைதி கிடைக்கலாம். ஒரு வேளை தனக்குப் பிடிக்காவிட்டால், தையல் மிஷின் வாங்குவதற்குப் பணம் சேர்ந்ததும் வெளியில் வந்து விடலாம்.

ரோஜாவின் மனம் ஒரு முடிவுக்கு வந்து விட்டது.

* * *

"உனக்கு எந்த பயமும் வேண்டாம் ரோஜா! அவங்களும் நம்மைப் போன்றவங்கதான், லாவண்யா ரொம்பவும் கலகலப்பானவள். ஐந்து நிமிஷம் பேசினால் போதும் சிநேகிதி ஆகி விடுவாள். ராதையைப் பார்த்தால் நீ விடவே மாட்டாய்.. பேசத்தான் முடியாதே தவிர ரொம்ப கெட்டிக்காரி..."

வேணுகோபாலனின் வீட்டுக்குப் போகும் வழியில், டாக்ஸியில் அனந்த், ரோஜாவுக்கு தைரியமளித்துக் கொண்டிருந்தான். நினைத்ததைச் சாதித்து விட்டோம் என்ற பெருமை அவன் கண்களில் மின்னிக் கொண்டிருந்தது. ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தான்.

ரோஜா தைரியமாக இருக்க முயற்சித்தாள். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், அவளுக்குத் துளிக்கூட மகிழ்ச்சியாக இல்லை. பணம் படைத்தவர்கள் இல்லாதவர்களை எப்படித் தாழ்வாய்ப் பார்ப்பார்களோ!

அவன் அறியாதவள் இல்லை. என்னதான் அனந்த் உத்தியோகம் என்று பெயர் வைத்தாலும், அந்த வீட்டிற்கு வேலைக்காரியாய்த்தான் போகிறாள்.

எந்தப் பெண்ணின் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட திருப்பங்கள் இருக்காதோ என்னவோ... இயற்கையே சதி செய்து தன்னை இப்படி வேலை பார்ப்பதற்குத் தள்ளுவது போல் ரோஜாவுக்குத் தோன்றியது.

டாக்ஸி வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. அனந்த் ரோஜாவின் கையைப் பற்றி, தைரியமளிப்பது போல் லேசாக அழுத்தினான். ரோஜாவிடம் எந்த மாற்றமும் தென்படவில்லை. அந்தத் தொடுகை அவளை எந்த விதமாகவும் பாதித்ததாகத் தெரியவில்லை.

வீட்டின் முன் டாக்ஸி வந்து நின்றது. வெளியில் நின்று பேசிக் கொண்டிருந்த வேலைக்காரர்கள் இருவர், அனந்தைப் பார்த்ததும் பேச்சை நிறுத்திவிட்டு வணக்கம் தெரிவித்தார்கள்.

அவர்களைத் தாண்டி வந்ததும் அனந்த் சொன்னான். "வெள்ளை பேண்ட், ஷர்ட் போட்டுக் கொண்டு இருப்பவன் தான் டிரைவர், பெயர் ராமு. ரொம்ப நல்லவன். பனியன் வேஷ்டியில் இருந்தவன் சமையல்காரன்... புது ஆள்."

"இந்த வீட்டில் நான் மேற்பார்வை பார்க்கக்கூடிய வேலை என்ன இருக்க முடியும் அனந்த்?"

"நீ பார்க்கத்தானே போகிறாய். ஒரு நிமிஷமாவது உனக்கு ஓய்வு கிடைத்தால் என்னைக் கேளு" என்றான்.

இருவரும் உள்ளே போனார்கள். எவ்வளவு விசித்திரமான விஷயம்? அன்று அனந்த் வீட்டுக்கு வந்தபோது, தான் மறுபடியும் இந்தத் தெருவுக்கு வருவோம் என்று கனவிலும் நினைக்கவில்லை. தனக்கு ரொம்ப பிரமிப்பு ஏற்படுத்திய இந்த வீட்டில் நுழையும் தேவை தனக்கு ஏற்படும் என்று நினைக்கவும் இல்லை.



ஹாலில் சோபாவில் வேணுகோபாலன், லாவண்யா, ராதை மூவரும் இவர்களுடைய வரவை எதிர் நோக்கிக் காத்திருந்தார்கள். ரோஜா தன் இயல்பான மின்னல் பார்வையால் மூவரையும் அளப்பது போல் பார்த்தாள். வேணுகோபாலன் அன்று பார்க்கில் பார்த்தது போலவே கம்பீரமாய், வயதான தோற்றத்துடன் தென்பட்டார். அவர் மடியில் தங்கப் பதுமையாய் வீற்றிருந்தாள் ராதை. அவர்களுக்கு வலது பக்கம் சோபாவில் உட்கார்ந்திருந்த லாவண்யா, பெரிய பூக்கள் பிரிண்ட் செய்யப்பட்ட ஷிபான் புடவையில், ஸ்லீவ்லெஸ் ப்ளவுசில், கழுத்தில் முத்துமாலை மட்டும் அணிந்திருந்தாள். ரொம்ப அழகாய், நாசூக்காக இருந்தாள். அனந்த் சம்பிரதாயப்படி அறிமுகப்படுத்தினான்.

வேணுகோபாலன் ரோஜாவைக் கூர்ந்து பார்ப்பது போல் பரிசீலித்தார்.

லாவண்யா புன்சிரிப்புடன் எழுந்து வந்து ரோஜாவின் கையைப் பற்றிக் கொண்டாள். "அனந்த் அழைத்து வந்த நபர் என்பதால் நீங்களும் அனந்த் போல் நல்லவங்களாய் இருப்பீங்கன்னு நினைக்கிறேன்" என்றாள்.

ரோஜா புன்சிரிப்புடன் பதிலளித்தாள். "அபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொண்டு மனிதர்களைப் பார்ப்பதை விட, அவர்களைச் சந்தித்தப் பிறகு அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்வது நல்லதில்லையா!"

லாவண்யா கண நேரம் புரியாதவள் போல நெற்றியை சுருக்கினாள். உடனே தலையைப் பின்னால் சாய்த்து, "மார்வலெஸ்" என்றாள் உரத்த குரலில் சிரித்துக் கொண்டே.

ஒரு பெண் உரத்த குரலில் சிரிப்பதா? அதுவும் தந்தையின் எதிரில். ரோஜா சட்டென்று வேணுகோபாலன் பக்கம் பார்த்தாள். அவர் இதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

லாவண்யா ரோஜாவைத் தன் பக்கத்தில் அமரச் செய்தாள். ரோஜா ராதையைத் தன் அருகில் வரச் சொல்லி அழைத்தாள். ராதை வெட்கப்படுபவள் போல் தந்தையின் பின்னால் மறைந்து கொண்டு திருட்டுத் தனமாய் ரோஜா பக்கம் ஆர்வமாய்ப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

"போ...கண்ணம்மா, உன்னுடன் விளையாடவும், சிநேகிதியாய் இருக்கவும், இந்த அக்கா வந்திருக்கிறாள்." என்றார் வேணுகோபாலன்.

"இதோ பார் ராதை! இந்த அக்காவுக்கு நிறைய கதைகள் தெரியும் நீ அக்காவிடம் போனால் எல்லாம் சொல்லித் தருவாள்," என்றான் அனந்த்.

அப்படியா என்பது போல் ராதை ரோஜாவைப் பார்த் தாள். ரோஜா ஆம் என்பது போல் கண்களை மூடித்திறந் தாள். சற்றுப் பொறுத்து, வெட்கப்பட்டுக் கொண்டே ராதை ரோஜா அருகில் வந்தாள்.

"இந்த டிரெஸ் ரொம்ப நன்றாக இருக்கு. யாரு உனக்கு வாங்கித் தந்தது?" என்று கண்களில் வியப்பைக் காட்டிக் கேட்டாள் ரோஜா.

ராதை விரலை வாயில் போட்டுக் கொண்டே, இடது கையால் தந்தையைச் சுட்டிக் காட்டினாள்.

"அவளால் பேச முடியாது. எல்லாம் ஜாடை தான் .." என்றார் வேணுகோபாலன்.

"தெரியும், அனந்த் சொன்னான் என்று ரோஜா ராதையை அணைத்துக் கொண்டே சொன்னாள்

ரோஜாவுக்கு முதல் பார்வையிலேயே ராதையிடம் இரக்கமும், அபிமானமும் ஏற்பட்டன. சுவர்ண விக்கிரக மாய் இருக்கும், இந்தக் குழந்தைக்குப் பேச்சு வராமல் போனது, கடவுள் கொடுத்த சாபம் தான்.



லாவண்யா எல்லோருக்கும் டீயை எடுத்துவரச் செய்தாள்.

டீ குடிக்கும் போது திடீரென்று வேணுகோபாலன் கேட்டார்... ரோஜாவைப் பார்த்ததிலிருந்து, அவர் மனதில் இனம் புரியாத வேதனை ஏற்பட்டது.

"உன் தந்தையின் பெயர் என்னம்மா?"

டீ குடிக்கப் போன ரோஜா இந்தக் கேள்வியில் அதிர்ச்சி அடைந்ததைக் கண்டு அனந்த் சட்டென்று இடை மறித்து 'சங்கரன்' என்றான்.

"வீட்டுப் பெயர்?"

"திருவாழ்த்தான்" அனந்துக்குச் சங்கரன் வீட்டுப் பெயர் தெரியாது. அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்குக் கூட அவருடைய வீட்டுப் பெயர் தெரியாது. எல்லோரும் திருவாழ்த்தான் சங்கரன் என்றே அழைத்ததால், அனந்த் அதையே வீட்டுப் பெயர் என்று நினைத்து விட்டான்.

தந்தை பற்றி கேட்ட கேள்விக்குத் தான் பதில் சொல்லும் நிலைமை ஏற்படாமல் தன்னைக் காப்பாற்றிய தற்கு ரோஜா மனதிலேயே அனந்துக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள். ஆனால் வீட்டுப் பெயர் கேட்ட போது 'திருவாழ்த்தான்' என்று சொன்னதைக் கேட்டு, பொங்கி வந்த சிரிப்பை எப்படியோ அடக்கிக் கொண்டாள் லாவண்யா.

"என்ன வேலை பார்க்கிறார்?"

"பாட்டு வாத்தியார்" என்று அனந்த் தான் பதில் சொன்னான்.

"அப்படியா?" சோபாவில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டவர், யோசித்துக் கொண்டே மறுபடியும் ரோஜா பக்கம் பார்த்தார்.

"வாங்க... உங்களுக்கு எங்க வீட்டைக் காண்பிக் கிறேன்." லாவண்யா ரோஜாவை அழைத்துச் சென்றாள்.

ரோஜா ராதையின் கையைப் பிடித்துக் கொண்டே லாவண்யாவைப் பின் தொடர்ந்தாள்.

அவர்கள் மாடிப் பக்கம் போனதும் அனந்த் வேணுகோபாலன் பக்கம் திரும்பினான். "எப்படி இருக்கிறாள், உங்களுக்கு சம்மதம்தானே?" என்றான்.

"பரவாயில்லை நல்ல பெண்ணாகத்தான் தென்படுகிறாள். ஆனால் சொல்ல முடியாது அனந்த்... இந்தக் காலத்தில் மனிதர்கள், உடைகள் மாற்றுவது போல் குணத்தை மாற்றிக் கொள்கிறார்கள். எனக்கு வேண்டியது வேலை... சில நாட்கள் போனால்தான் அதைப் பற்றிச் சொல்ல முடியும்."

"ரோஜா விஷயத்தில் உங்களுக்கு அந்த பயமே வேண்டாம். அதுக்கு நான் உத்தரவாதம் கொடுக்கிறேன்."

"அந்தப் பெண்ணின் பெயர் ரோஜாவா?"

"முழுப்பெயர் சரோஜா. ஆனால் எல்லோரும் ரோஜா என்று அழைப்பார்கள்."

"பெயர் சரோஜா... ஆனால் எல்லோரும் ரோஜா என்று அழைப்பார்கள். இந்த வார்த்தைகள் அவருடைய உள் மனதில் பழைய நினைவுகள் அலை போல் எழும்பின. கூர்மையான முள் ஆழமாய்க் குத்திய வேதனை ஒரு கணம் கண்ணில் தென்பட்டு மறைந்தது... பிறகு அனந்த் அங்கு இருப்பதையே மறந்து போனவராய் யோசனையில் ஆழ்ந்து விட்டார்.

மாடியில் லாவண்யா ரோஜாவுக்கு ஒவ்வொரு அறையாய்க் காண்பித்துக்கொண்டே குடும்ப விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

லாவண்யாவின் பூர்வீகம் கல்கத்தாவாம். அனந்தின் தந்தையும் அங்கே இருந்தவர்தான். அவரும், வேணுகோபாலனும் உயிர் நண்பர்கள். முதல் மனைவி



4114288

இறந்த பிறகு [illegible] இரண்டாவது திருமணம் செய்துகொண்டு [illegible] மாப்பிள்ளையாய் இந்த ஊருக்கு வந்துவிட்டார். லாவண்யாவின் அம்மா வழி தாத்தா இறந்த பிறகு, வேணுகோபாலனும் கல்கத்தாவில் இருந்த சொத்துக்களை விற்று விட்டு இங்கு வந்து குடியேறி விட்டார். லாவண்யாவின் தாய்க்கு இங்கு வருவதில் துளிக் கூட விருப்பமில்லை. பதினைந்து வருடங்கள் கழித்து லலிதா லாவண்யாவின் தாய், கருவுற்றாள். இந்தப் பிரசவம் தனக்குக் கண்டம் என்றும், உயிர் பிழைக்க மாட்டேன் என்றும் சொல்லிக் கொண்டிருந்தாள்... சொன்னது போலவே ராதை பிறந்து, சில மாதங்களுக்குள் இறந்து விட்டாள்.

கல்கத்தாவில் சொத்துக்களை விற்று வந்த பணத்தில் இங்கு வியாபாரம் தொடங்கினார்கள். அதிருஷ்டமும் சேர்ந்து வரவும், தொட்டதெல்லாம் பொன்னாகத் துலங்கியது. ஆனால் என்ன லாபம்? வீட்டில் ஒருவருக்கும் மன அமைதி கிடையாது.

வேணுகோபாலன் இங்கு வந்த நான்கு மாதங்களுக்குள் அனந்த் தந்தை மாரடைப்பில் இறந்து போனார். ஒரே ஊரிலிருந்து இங்கு குடியேறிவிட்ட இரு குடும்பங்களுக்கு இடையே பலமான நட்பு, பாசமாய் நிலைத்து இருந்தது.

அனந்துக்கு மாற்றான் தாயின் மகன் ஒருவன் இருப்பதாகவும், அவன் பெயர் விஜய் என்றும், இரு குடும்பங்களின் வியாபார விஷயங்களை அவன்தான் பார்த்துக் கொள்வதாக லாவண்யா சொல்லிக் கொண்டிருந்தாள். விஜய் பற்றி பேச்சு வந்ததும் ரோஜா சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டு சுவற்றில் இருந்த காலண்டரைக் கவனமாய்ப் பார்க்கத் தொடங்கினாள்.

லாவண்யா மாடியில் வலது பக்கமாய் இருந்த அறைக் கதவை திறந்து கொண்டே, "இதுதான் என்னோட அறை

"உள்ளே வாங்க" என்றாள் உள்ளே காலடி எடுத்து வைத்த ரோஜா, மந்திரத்தால் கட்டுண்டவள் போல் அப்படியே நின்று விட்டாள். எல்லா அறைகளை விட இந்த அறை ரொம்ப நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. விலை உயர்ந்த கட்டிலும், மெத்தையும், ஜன்னலில் திரைச் சீலைகள், கட்டிலருகில் ரோஸ்வுட் மேஜை. அதன் மீது இருந்த ஃப்ளவர் வேஸ் எல்லாமே மிக அழகாய் அந்த வீட்டு ஐஸ்வரியத்தைப் பறைசாற்றுவது போல் இருந்தன.

"இந்த அறையும் என்னைப் போலவே அழகானது. ஆனால் வெறுமை நிறைந்தது. இந்த அறையில் படுத்துக் கொண்டு,சில சமயம் நான் எவ்வளவு தனிமை அனுபவித்துக் கொண்டிருக்கிறேனோ அந்த கதவுகளுக்குத்தான் தெரியும்" ஜன்னல் திரைச்சீலையை ஒரு பக்கமாய் நகர்த்திக் கொண்டே லாவண்யா சொன்னாள். ரோஜா ஜன்னல் வழியாய் கீழ் எட்டிப் பார்த்தாள்...

அங்கிருந்து பார்த்தால் கீழ... பார்டர் போல் வளர்க்கப் பட்ட பூச்செடிகளும், புல் வெளியும் தெரிந்தன. லாவண்யா ரோஜா அருகில் வந்து கைகளைப் பற்றிக் கொண்டே சொன்னாள்... "உங்களுக்கு இந்த வீடு பிடிக்கவில்லை யென்றும், இந்த வேலை வேண்டாமென்றும் சொல்ல மாட்டீர்களே?" என்றாள்.

ரோஜா சட்டென்று தலையைத் திருப்பி லாவண்யா வைப் பார்த்தாள்

"உங்களைப் பார்த்ததுமே எனக்காகத்தான் வந்தாற் போல் தோன்றுகிறது. அனந்த் உங்களைப் பற்றி சொன்ன போது நல்லவங்களாக இருப்பீங்கன்னு நினைச்சேன். ஆனால் இவ்வளவு, இளமையாய், சம வயதினராய் இருப்பீங்க என்று கனவிலும் எண்ணவில்லை. இந்த வீட்டில் தனிமையில் தவித்துக் கொண்டிருக்கும் எனக்குத்தான் உங்களுடைய நட்பு அதிகமாய்த் தேவைப்படும் என்று நான் சொன்னால் அதிகப்படியாய் எண்ணி விட மாட்டீர்களே?"



லாவண்யாவின் குரல் கம்மி விட்டது. ரோஜாவுக்கு என்னவோ போலாகி விட்டது.

"உங்களுக்கு நண்பர்கள் யாரும் இல்லையா?" ரொம்ப மிருதுவாய்க் கேட்டாள் ரோஜா.

"சிநேகிதர்கள் என்ற பெயரில் நிறையபேர் இருக்காங்க... ஆனால் அவர்களை எனக்குப் பிடிக்காது. உங்களுக்குச் சிநேகிதர்கள் இருக்காங்களா?"

ரோஜா சட்டென்று இல்லை என்பது போல் தலை அசைத்தாள்.

"அப்போ நாம் இருவரும் சிநேகிதர்களாகி விடலாம் என்ன சொல்றீங்க?" சிரித்துக் கொண்டே லாவண்யா சொன்னாள்.

சமையல்காரன் மாடிக்கு வந்து, "அம்மா உங்களுக்குப் போன் வந்திருக்கு" என்றான்.

"போனா? எனக்கா?" லாவண்யா நெற்றியைச் சுருக்கினாள். ஒரு நிமிடம் யோசித்தவள், "நான் வீட்டில் இல்லைன்னு சொல்லிடு" என்றாள்.

அவன் தலையைச் சொறிந்தான். "எப்படிங்க சொல்றது? வீட்டில் இருக்காங்களான்னு கேட்டபோது கூப்பிடறேன்னு சொல்லி விட்டேனே" என்றான்.

லாவண்யா அவனைச் சுட்டெரிப்பதுபோல் பார்த்தாள். "எதுக்கு அப்படிச் சொன்னே? யார் சொல்லச் சொன்னாங்க உன்னை?"

அவன் கலவரமடைந்து விட்டான். "எனக்கு என்னம்மா தெரியும்? அவசரமாய்ப் பேசணும்னு அவர் சொன்ன தால்"... முணுமுணுப்பது போல் சொன்னான்.

"இனி எப்போதும் அப்படிச் சொல்லாதே. நீ புது ஆளாய் இருப்பதால், இந்தத் தடவை விட்டு விடுகிறேன்.

இனி மேல் யாராவது போன் செய்தால், எனக்குத் தெரியாது, இருக்காங்களான்னு பார்த்துச் சொல்றேன்... உங்க பெயர் என்ன? என்று கேட்டுத் தெரிந்து கொண்டு வந்து சொல்லணும்... புரிந்ததா?'' ஆணையிடுவது போல் சொன்னாள் லாவண்யா.

புரிந்துவிட்டாற்போல் தலை அசைத்தான் சமையல்காரன். ''அது சரி! இப்போ போன் செய்தது யாரு? பெயரைக் கேட்டுக் கொண்டாயா?''

'யாரோ ஜேம்ஸ் என்று சொன்னாங்க.'' பயந்து பயந்து பதிலளித்தான்.

''ஜேம்ஸா!'' லாவண்யாவின் முகம் மலர்ந்து விட்டது.

''இதை முதலிலேயே சொல்லித் தொலைப்பதற்கு என்ன? இதோ பார்.. இந்த ஜேம்ஸ் என்பவர் அழைத்தால் மட்டும் என்னை உடனே வந்து கூப்பிடு வீட்டில் இல்லாவிட்டால் இல்லைன்னு உண்மையைச் சொல்லிவிடு... தெரிந்ததா! மறந்துவிடக் கூடாது இந்த வீட்டில் வேலைக்காரர்களுக்கு மறதியும் சோம்பேறித்தனமும் இருக்கக் கூடாது'' என்றவள், ரோஜாபக்கம் திரும்பி ''நீங்க இங்கேயே இருங்க.. நான் இப்பவே பேசிவிட்டு வந்து விடுவேன். ரொம்ப முக்கியமான விஷயம் பேசணும்.'' எனச் சொல்லிவிட்டுக் கீழே ஓடினாள்.

லாவண்யா கண்களில் தென்பட்ட மின்னல் ஒளியைக் கவனித்த ரோஜா, அந்த ஜேம்ஸ் லாவண்யாவுக்கு ரொம்ப பிரியமான நபராய் இருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டாள். லாவண்யா போன பிறகு ரோஜா அந்த அறையை மற்றொரு முறை பரிசீலனையாய்ப் பார்த்தாள்.

இந்த வீட்டில் எங்கு பார்த்தாலும் ஐஸ்வரியம் தாண்டவமாடுகிறது. வேஸ்ட் பேப்பர் கூடை கூட உசத்தியாய், விலை உயர்ந்ததாய்ச் செய்திருக்கு. இந்த நாட்டில் பணம் இல்லைன்னு சொல்றவங்க எல்லாம்



முட்டாள்கள் பணம் இருக்கு...பணக்காரர்களிடம் பணம் சேர்ந்து போகிறது... இல்லாதவர்களிடம் ஒரு பைசா சேராது.

தன் யோசனைகளைக் கண்டு வெட்கினாள் ரோஜா... இருக்கிறவர்களைக் கண்டு பொறாமைப் படுவானேன்? அவரவர் அதிருஷ்டம் அவர்களோடது ஒரு நிமிஷத்தில் வரேன்னு சொன்ன லாவண்யா கிட்டத்தட்ட அரை மணி நேரம் கழித்துதான் வந்தாள்.

ஓ...ஐயாம் சாரி... ரொம்ப நேரமாகி விட்டது நீங்க தவறா நினைத்துக் கொள்ளவில்லையே?'' சிவந்து விட்ட கன்னங்களும், மின்னல் ஒளி வீசும் கண்களுடன் லாவண்யா உள்ளே வந்தாள்.

''பரவாயில்லை,'' என்றாள் ரோஜா.

அந்த ஜேம்ஸ் யாரோ? என்ன பேசினானோ? லாவண்யாவின் கண்கள் நட்சத்திரங்களாய் ஜொலித்தன... ரோஜாவுக்கு இன்னொரு விஷயமும் புரிந்தது. லாவண்யாவின் இந்தச் சரளமாய்ப் பழகும் தன்மை, சிநேகிதர்களுக்கு மட்டும் தான் சொந்தம்... வேலைக்காரர்களிடம் எப்படிக் கடினமாய் நடந்து கொள்வாளோ, பேச்சில் எவ்வளவு அதிகாரம் கொடி கட்டிப் பறக்குமோ, சற்று முன் சமையல்காரனை கடிந்து கொண்டதிலிருந்தே புரிந்து கொண்டு விட்டாள்.

## 29

இரண்டு வாரங்கள் பறந்து விட்டன. ரோஜாவின் அன்றாட வாழ்க்கையில் இதுவரை நினைத்தும் பார்த்திராத மாற்றம் ஏற்பட்டது மலையிலிருந்து உருண்டு வந்து கொண்டிருந்த கல்லொன்று பள்ளத்தாக்கில் விழுந்துவிடாமல்,

திடீரென்று நிலை பெற்று நின்று விட்டாற் போல் தோன்றிற்று. வாழ்க்கையில் ஒரு பற்றுகோல் கிடைத்தாற் போல், நிம்மதியாக இருந்தது. மனரீதியாய் அமைதியில்லாதவர்களுக்கு, கை நிறைய வேலை இருந்து விட்டால், வேதனையிலிருந்து கொஞ்சமாவது விடுதலை பெறமுடியும் என்பதை ரோஜா உணர்ந்து கொண்டாள்.

ரோஜாவுக்கு இப்பொ தேவையில்லாத யோசனைகள் வருவதில்லை. எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படவோ, பயப்படவோ நேரமே இருப்பதில்லை. காலையில் எழுந்ததும், குளித்து தயாராகி, வேணுகோபாலன் வீட்டுக்கு வந்தாளானால், மாலை வீட்டுக்குப் போகும் வரை நேரம் போவதே தெரியாது. லாவண்யா, ரோஜாவுடன் ரொம்ப சகஜமாய், நட்புணர்வுடன் பழகி வந்தாள். வெகு விரைவிலேயே குடும்பத்தில் ஒரு நபராய், எல்லோருக்கும் பிரியமானவளாய் ரோஜா மாறிவிட்டாள்.

ரோஜா வேலையில் சேர்ந்திருக்கிறாள் என்று தெரிந்ததும், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், ஆயிரம் கேள்விகளால் சுந்தரியைத் துளைத்தெடுத்தார்கள். சுந்தரி சம்பளத்தைப் பற்றிச் சொன்னாளே தவிர வேலையைப் பற்றிச் சொல்லவில்லை. "ஏதோ எழுதற வேலையாம்... எழுதி எழுதி கை வலிக்குதுன்னு புலம்புகிறாள்." சுந்தரியின் குரலில் பாசம் பொங்கி வழிந்தது.

கேட்டவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ரோஜாவின் வேலை பற்றி அவர்களே ரசரகமாய் ஊகித்துக் கொண்டு பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள்.

ரோஜா எதையும் பொருட்படுத்தவில்லை... நேர்மையாய்ச் சம்பாதிக்க வழி வகுக்கும் எந்த வேலையும் சிறப்பானதுதான் என்பதில் ரோஜா அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தாள்.

வேணுகோபாலன் வீட்டில் ரோஜாவுக்கு ரொம்ப வேலை இருப்பதாகவும் சொல்ல முடியாது. சாப்பாடு



முடியும் வரை கொஞ்சம் வேலை இருக்கும்... பிறகு மாலை வரை ஓய்வுதான். மதியச் சாப்பாடு முடிந்ததும், வேணுகோபாலன் ஓய்வு எடுத்துக் கொள்வார். அந்த நேரத்தில் வீடு அமைதியாக இருக்கும். மாடியில் லாவண்யா, ரோஜா, பேசியபடியே பொழுதைக் கழிப்பார்கள். பெரும்பாலும் லாவண்யாதான் பேசுவாள். தன் சிறுவயதில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி, தாயைப்பற்றி ஏதாவது சொல்லுவாள். ரோஜா அலுப்பை ஒழித்து வைத்துக் கொண்டே ஆர்வமாய்க் கேட்டுக் கொள்வாள்.

லாவண்யாவுடன் இருப்பதை விட, ராதையுடன் இருப்பது ரோஜாவுக்கு ரொம்பப் பிடிக்கும். அவளுக்கு படிப்பு சொல்லித் தருவதும் அவளுடன் விளையாடுவதும் புதிய அனுபவமாய் மகிழ்ச்சியும், நிறைவும், தருவதாய் இருந்தது. வாயால் பேச முடியாவிட்டாலும் செயல்களால், கண்களால் தன் எண்ணங்களை வெளியிடுவாள் ராதை. தான் சொல்லித் தரும் விஷயங்களை கற்றுக் கொள்ள அவள் காட்டும் ஆர்வமும், துடிப்பும் பார்க்கும் போது ரோஜாவின் மனம் நெகிழ்ந்து விடும்.

வந்த சில நாட்களுக்குள்ளே லாவண்யாவுக்கும், அவள் தந்தை வேணுகோபாலனுக்கும் இடையே பாசப்பிணைப்பு இல்லாமல் போனதை புரிந்து கொண்டாள். தாய் இல்லாத வீட்டில் நெருக்கமும், பாசப்பிணைப்பும் அதிகமாய் இருக்க வேண்டிய அவ்விருவரும் இரு துருவங்களாய் இருப்பதும், முடிந்தவரை, ஒருவருக்கொருவர் எதிர்படுவதைத் தவிர்ப்பதும் ரோஜாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது... லாவண்யாவுக்குத் தந்தையிடம் மதிப்போ, மரியாதையோ கிடையாது. அவருக்கு மகளிடம் அன்பும், ஆதரவும் இருக்கோ இல்லையோ, அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆனால் சின்ன மகளிடம் பேசும் போது தென்படும் மென்மை, உரிமை பெரிய மகளிடம் பேசும் போது கொஞ்சம்கூட இருக்காது.

ரோஜா பழைய ரோஜாவாய் மாறிக்கொண்டு வந்ததற்கும், தன் வேதனையை மறந்து இவர்களுடன் இணைந்து விட்டதற்கும், அனந்த் மகிழ்ச்சி அடைந்தான். நினைத்ததைச் சாதித்து விட்டோம் என்ற திருப்தி அவனுக்கு ஏற்பட்டது.

ரோஜா இங்கு வந்து நாலைந்து நாட்களுக்குள் வேணுகோபாலனின் உடல் நிலை ரொம்ப முடியாமல் போய்விட்டது. கிட்டத்தட்ட மரணத்தின் விளிம்பை தொட்டுவிட்டு மீண்டு வந்தார் என்று சொல்ல வேண்டும்... அதைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் ரோஜாவுக்கு முதுகுத் தண்டில் சிலிர்க்கும்

அன்று மாலையில், லாவண்யா கிளப்புக்குச் சென்றிருந்தாள். வேணுகோபாலன் தோட்டத்தில் புல்வெளியில் ஈஸிச்சேரில் வீற்றிருந்தார். ராதை அவருக்கு எதிரே தரையில் உட்கார்ந்து, ரோஜா கற்றுக் கொடுத்த பாடத்தை எழுதிக் கொண்டிருந்தாள். ரோஜா சாத்துக்குடி ஜூஸையும், மருந்தையும் வேணுகோபாலனுக்காக கொண்டு வந்து கொடுத்தாள். அவர் அதைப் பருகிக் கொண்டு இருக்கும் போது, ரோஜா ராதையின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு அவள் எழுதுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். மாலை செடிகளுக்கு நீர் பாய்ச்சி இருந்ததனால், குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது.

சூழ்நிலையே ரம்மியமாய், களைப்பை நீக்குவது போல் இருந்தது. சாத்துக்குடி ஜூஸைப் பருகிக் கொண்டிருந்த வேணுகோபாலன், ரோஜாவிடம் அவளுடைய தந்தையை மறுநாள் அழைத்து வரும்படிச் சொன்னார். இதற்கு முன்பும் இரண்டு மூன்று தடவை தந்தையைப் பற்றிய பேச்சு வந்ததும், ரோஜா ஏதோ வேலையிருப்பது போல் பதில் சொல்லாமல் நகர்ந்து போய்விட்டாள். ஆனால், வீட்டுக்குப் போன பிறகு ரோஜாவுக்கு எப்படியோ இருந்தது. உண்மையைச் சொல்லாமல் அனந்த் ஏன்



இப்படிச் சொன்னான் என்று ரோஜாவுக்குப் புரியவில்லை. அதனால் ரோஜா இன்று அவரிடம் உண்மையைச் சொல்லி விட்டாள். தனக்கு தந்தையில்லையென்றும், தாய் மாமாவிடம் வளர்ந்து வருவதாய், வீட்டு விவரங்களை ஓரளவு சொல்லி விட்டாள்.

ஜூஸ் குடித்துக் கொண்டிருந்த வேணுகோபாலன் அப்படியே நிறுத்தி விட்டு, டம்ளரை எதிரே இருந்த முக்காலி மீது வைத்து விட்டார். ரோஜா தாயாரின் பெயரையும், தாய்மாமனின் பெயரையும் கேட்டார். ராதை எழுதியதை சரி பார்த்துக் கொண்டிருந்த ரோஜா தலையை உயர்த்தாமலேயே, அவர் முகத்தில் திடீரென்று தோன்றிய உணர்வுகளின் மாற்றத்தைக் கவனியாமலேயே விவரமாய்ப் பதில் சொன்னாள்.

வேணுகோபாலனின் முகம் வெளிறிப் போய் விட்டது. உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. உடல் நடுங்கத் தொடங்கியது. திடீரென்று மூச்சு விட சிரமப்பட்டுக் கொண்டே "ரோஜா!" என்று ஆயாசமாய் அழைத்தவர் இரு கரங்களையும் நீட்டினார்.

அந்த அழைப்பு கேட்டு, திடுக்கிட்டு தலையை உயர்த்திப் பார்த்த ரோஜா, திக்பிரமை அடைந்தவளாய் அப்படியே பார்த்துக் கொண்டு இருந்தாள். அந்த நிமிஷம் அவர் கண்களில் தென்பட்ட உணர்ச்சி, எப்போதும் மறக்க முடியாதது போல் இருந்தது.

ரோஜா பதட்டத்துடன் எழுந்து, அருகில் வந்தாள். "என்ன ஆச்சு? என்ன செய்கிறது?" என்று கலவரமாய்க் கேட்டாள்.

அவர் தலை உயர்த்தி ரோஜா பக்கம் பார்த்தார். வெள்ளத்தில் சிக்கிக் கொண்ட மனிதன் பற்றுகோல் கிடைக்காமல் தவிப்பது போல் இருந்தது அந்தப் பார்வை. அதிருஷ்டவசமாய் அனந்த் அந்தச் சமயத்தில் அங்கு வந்தான். அனந்தைப் பார்த்ததும் ரோஜா பதட்டமாய்க் குரல் கொடுத்தாள், "அனந்த்! சட்டுன்னு ஓடி வா..."

அனந்த் ஒரே எட்டில் ஓடி வந்தான்... அதற்குள் வேணுகோபாலன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் சரிந்துவிட்டிருந்தார்...

''கடவுளே... கடவுளே... ரோஜா!'' ஈனமாய் ஒலித்தது அவர் குரல். அதற்கு பின் காரியங்கள் துரித வேகத்தில் நடந்தன...

அனந்த் உள்ளே ஓடிப்போய் டாக்டருக்குப் போன் செய்தது, டாக்டர் வந்து அவரைப் பரிசோதித்து, இரண்டு இஞ்செக்ஷன்களைப் போட்டு விட்டு, அனந்திடம் ''ஹார்ட் ஸ்ட்ரோக்'' என்றார். அதுவரை சாதாரணமாய் பேசிக் கொண்டிருந்தவர், இப்படித் துவண்டு படுத்து கிடப்பதைப் பார்த்த ரோஜாவுக்கு, தாங்கொண்ணாத துயரம் ஏற்பட்டது.

சற்று நேரம் கழித்து டாக்டர் அனந்தின் உதவியுடன் வேணுகோபாலனை உள்ளே அழைத்துச் சென்று படுக்க வைத்தார். கட்டில் அருகில் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டார்.

அனந்த் அவருடைய தலைமாட்டில் கைகட்டி நின்றிருந்தான். ரோஜா, அழுதுகொண்டிருந்த ராதையைச் சமாதானப்படுத்திக் கொண்டே, டாக்டர் சொல்லப் போகும் விஷயத்தைக் கேட்கத் தயாராக இருந்தாள்.

சற்று நேரம் கழித்து, வேணுகோபாலனுக்கு வியர்த்துக் கொட்டியது. மெதுவாக விழிகளைத் திறந்துப் பார்த்தார். எதிரில் நின்றிருந்த ரோஜா மீது அவருடைய பார்வை நிலைத்துவிட்டது. அருகில் வரச் சொல்லி ஜாடை காட்டினார். ரோஜா அவர் அருகில் சென்றதும, அவர் ரோஜாவின் கையை அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டார்.

ரோஜா கலவரமுற்றவளாய், அனந்தையும், டாக்டரையும் பார்த்தாள். கண்களாலேயே அனந்த் ரோஜாவுக்கு தைரியம் சொன்னான். 'பல்ஸை'க் கவனித்துக் கொண்



டிருந்த டாக்டர், ரோஜாவை நகர வேண்டாமென்பது போல் ஜாடை காட்டினார். வீடு முழுவதும் மயான அமைதி நிலவியது போல் இருந்தது. ரொம்ப நேரம் கழித்து, ரோஜாவைப் பற்றி இருந்த அவருடைய கை தளர்ந்தது. உறக்கத்தில் ஆழ்ந்து விட்டாற்போல் சீரான மூச்சு வந்தது. எல்லோரும் வெளியில் வந்து விட்டார்கள்.

டாக்டர் ரோஜாவிடம் அவர்கள் கடைசியாக எதுபற்றி பேசினார்கள் என்று கேட்டார்.

''விசேஷமாய் ஒன்றுமில்லை... குடும்ப விஷயங்கள் தான்'' என்றாள் ரோஜா...

''அவருக்கு அதிர்ச்சி ஏதோ ஏற்பட்டிருக்கிறது. அதனாலேயேகூட வந்து இருக்கலாம். இன்றைக்குப் பெரிய கண்டம் தப்பியது... இன்னொரு முறை வந்தால்...'' வார்த்தையைப் பாதியில் நிறுத்தி விட்டார் டாக்டர். போகும் முன் டாக்டர் ராதையின் கன்னத்தில் லேசாகத் தட்டி விட்டு, ''உனக்காகத்தான் அவர் பிழைத்திருக்கிறார்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்.

அனந்த் லாவண்யாவுக்காக கிளப்புக்குப் போன் செய்தான், லாவண்யா அங்கு இல்லையென்றும், அன்று மாலை கிளப்புக்கு வரவேயில்லை என்றும் தகவல் சொன்னார்கள்.

''எங்கே போயிருப்பாள்? கிளப்புக்குப் போவதாய் என்னிடம் சொன்னாளே'' என்றாள் ரோஜா.

''யாருக்குத் தெரியும்? சமீபகாலமாய் லாவண்யாவின் போக்கே மூடு மந்திரமாய் இருக்கு.'' யோசனையில் ஆழ்ந்து போனவனாய் சொன்னான் அனந்த்.

அன்று இரவு லாவண்யா வரும் வரை தங்கிவிட்டாள் ரோஜா. லாவண்யா வந்ததும் அனந்த் நடந்ததைச் சுருக்கமாய் சொன்னான், லாவண்யா தந்தையின் அறைக்கு சென்று ஒரு முறை எட்டிப் பார்த்து நிசப்தமாய் வெளியில்

வந்து விட்டான். தந்தைக்கு அவ்வளவு சீரியஸாய் இருக்கும் போது லாவண்யா கொஞ்சம் கூடப் பதட்டப் படாதது ரோஜாவுக்கு என்னவோ போல் இருந்தது. ரொம்ப நேரமாகி விட்டதால் அனந்த் ரோஜாவை வீட்டு வரை கொண்டு விட்டுப் போனான்.

போகும் போது வழியில் ரோஜா அனந்திடம் "எவ்வளவு பெரிய ஆபத்து தப்பி விட்டது? நான் ரொம்ப பயந்து விட்டேன்" என்றாள். அவள் குரலில் பதட்டம் தென்பட்டது.

"டாக்டர் சொன்னாரே... கிட்டத்தட்ட சாவைத் தொட்டுவிட்டு வந்தார் என்று... இதயம் பலவீனமாய் இருந்தால் கொஞ்சம் கஷ்டம்தான். ராதையின் அதிருஷ்டம் தான் அவர் பிழைத்துக் கொண்டு விட்டார்." என்றான் அனந்த்.

"ராதையின் விஷயம் என்னவோ தெரியாது. நான்தான் அதிருஷ்டசாலி."

"ஏன் அப்படிச் சொல்கிறாய் ரோஜா?"

"ஆமாம் அனந்த்... நீ ஏற்படுத்திக் கொடுத்த இந்த பிடிமானத்தைத்தான் நம்பியிருக்கிறேன். இன்று அவருக்கு ஏதாவது ஆகியிருந்தால்?" ரோஜாவின் குரல் கம்மி விட்டது.

"ஆமாம், எனக்குத் தோன்றவே இல்லை..."

சற்று நேரம் அவரவர் தம் யோசனைகளில் ஆழ்ந்து விட்டார்கள்.

ரோஜாவின் வீடு சமீபித்துக் கொண்டிருக்கும் போது அனந்த், "ரோஜா! அவருக்கு வீட்டில் மன அமைதியே இல்லை.. நீ முடிந்தவரை அவர் அமைதியாய் இருக்கும் படிச் செய்ய முயற்சி செய்..."

"கட்டாயம் அனந்த்... அது என் கடமையாய் நினைக்கிறேன்..." என்று திடமாகச் சொன்னாள் ரோஜா.



# 30

மறுநாள் ரோஜா போகும்போது அவருக்குக் கொஞ்சம் தேவலையாகி இருந்தது. வழக்கத்தைவிட சீக்கிரமாகவே ரோஜா வந்துவிட்டபோதும், அதற்கு முன்பே அவர் ரோஜா வரவில்லையா என்று இரண்டு மூன்று தடவை கேட்டு விட்டதாக அனந்த், லாவண்யா இருவரும் சொன்னார்கள். ரோஜா உடனே அவருடைய அறைக்குச் சென்றாள்.

"ரோஜா!" அவளைப் பார்த்ததும் அவர் எழுந்து உட்கார்ந்து கொள்ள முயன்றார்.

"நீங்க எழுந்து கொள்ளக்கூடாது. ஓய்வாக இருக்கணும்" வேணுகோபாலனை செக்கப் செய்து கொண்டிருந்த டாக்டர் எச்சரிக்கை செய்தார்.

"ரோஜா! இப்படி வாம்மா...என் அருகில் வா...உன்னை நன்றாகப் பார்க்கணும்."

ரோஜா, டாக்டரின் கண் அசைவை புரிந்துகொண்டு வேணுகோபாலன் அருகில் போய் நின்றாள். வெளிறிப் போனாற்போல் இருந்த அவர் முகத்தில் ஆவேசம் பொங்கி வந்ததை கவனித்த ரோஜா ஒரு நிமிடம் அப்படியே நின்று விட்டாள். அவர் ரோஜாவின் கையை அழுத்தமாய் பற்றிக் கொண்டார். அந்தக் கண்களில் ஏதோ உணர்ச்சி. பாலைவனத்தில் தாகத்தால் தவித்துக் கொண்டிருந்தவனுக்கு, பாலைவனச்சோலை கண்ணில் பட்டு, மகிழ்ச்சியில் வாயடைத்துப் போனாற் போன்ற உத்வேகம். டாக்டர் ஊசி மருந்தை செலுத்த அருகில் வந்தார்.

கண்களை மூடிக்கொண்டே வேணுகோபாலன், டாக்டரிடம் இடது கையை நீட்டி, ஆவேசமாய் சொன்னார், "போடுங்கள் டாக்டர், எத்தனை ஊசிகள் வேண்டு

மானாலும் போடுங்கள்...வாழ்க்கையிடம் விரக்தி ஏற்பட்ட துன்னு நான் முன்பு சொன்னதை வாபஸ் வாங்கிக்கறேன். நான் வாழணும்...நிறைய வருஷம் வாழணும். நேற்று என் உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி டாக்டர்."

மூடியிருந்த இமைகளிலிருந்து கோடாக நீர் வழிவது கண்டு ரோஜாவும், டாக்டரும் திக்பிரமை அடைந்தார்கள்.

ரோஜா அன்று முழுவதும் அவர் அருகிலேயே இருந்தாள். ரோஜாவின் கையைப் பற்றிக் கொண்டே, "என்னை கடவுள் மன்னித்து விட்டார் நீ எனக்குக் கிடைத்து விட்டாய்" என்று தெளிவற்று முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

தனிமையில் இருந்த போது ரோஜா அனந்திடம், வித்தியாசமாய் இருந்த அவருடைய போக்கைப் பற்றிச் சொன்னாள். அனந்த் அதை அவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை.

"வயதானவர், உடல் நலம் சரியில்லாதவர், அன்புக்கும் பாசத்துக்கும் ஏங்கியிருந்தவர், நீ கொஞ்சம் அனுசரணையாய் நடந்து கொண்டதில் அப்படி ஆகிவிட்டாராய் இருக்கும்...ரோஜா! வயசானவங்க குழந்தைகளுக்குச் சமம் என்பதை மறந்துவிடாதே...அவரை எனக்குப் பல வருடங்களாகத் தெரியும். அவ்வளவு நல்ல மனிதரை நான் இது வரைக் கண்டதில்லை. அவர் உனக்குத் தந்தை போன்றவர் என்று நினைத்துக் கொள்."

"தந்தையா?" கசப்பை விழுங்கினாற்போல் ரோஜாவின் முகம் மாறிவிட்டது.

"உன் இஷ்டம். நீ எப்படி வேணுமானாலும் நினைத்துக் கொள். உன்னால் அவருக்கு வீட்டில் நிம்மதி கிடைக்க வேண்டும். அதுதான் என்னோட விருப்பம்...உன்னை வேண்டுவதும் அதுக்காகத்தான்."

"அப்படியே அனந்த்! நான் இல்லையென்று மறுக்கவில்லையே?" ஆயாசம் நிறைந்த குரலில் சொன்னாள் ரோஜா. அவளுக்கு என்னவோ போல் இருந்தது.



# 31

நாலைந்து நாட்கள் சென்றன. வேணுகோபாலனுக்கு சற்றுத் தேவலை என்றே சொல்லலாம். டாக்டர் அவரை நன்றாக ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி எச்சரிக்கை செய்தார். ரோஜா அவரை கண்ணின் இமைபோல் கவனித்துக்கொண்டு, பணிவிடை செய்யத் தொடங்கினாள்.

"உன் நன்றிக் கடனை இந்த ஜென்மத்தில் என்னால் தீர்த்துக் கொள்ள முடியாதம்மா" என்றார் வேணு கோபாலன்.

"அப்படிச் சொல்லாதீங்க. அந்த வார்த்தையைச் சொல்லவேண்டியது நான்தான்" சங்கடமாகச் சொன்னாள் ரோஜா.

"உண்மையைச் சொல்கிறேன் ரோஜா—இதுவரையில் எனக்கு ஏற்பட்ட வேதனைகளுக்குத் தற்கொலை செய்து கொண்டு விடலாம் என்று பலதடவை நினைத்ததுண்டு. அதை செயலாக்க முடியாத என் பலவீனத்தை நினைத்து வெட்கியதும் உண்டு. ஆனால் இப்போ எனக்குத் தோன்றுகிறது, நான் அப்படிச் செய்யாததால் எனக்கு எவ்வளவு பெரிய நன்மை ஏற்பட்டிருக்கு தெரியுமா? இந்த வயதான காலத்தில் எனக்கு இவ்வளவு அதிர்ஷ்டம் வருமென்றும், நீ இந்த விதமாய் என் வீட்டுக்கு வந்து எனக்கு ஆறுதல் அளிப்பாய் என்றும் நான் கனவிலும் நினைக்கவில்லை."

ரோஜாவுக்கு அவருடைய பேச்சுகள் புரியவில்லை. தலையும் வாலும் இல்லாத இந்த உரையாடலுக்கு ரோஜா ரொம்ப முக்கியத்துவம் அளிக்கவில்லை. அவளுடைய நேரம் பெரும்பாலும் அவருடைய அருகாமையில் கழிந்துவிடும். வேணுகோபாலன், ரோஜா வீட்டு விஷயங்கள் பற்றி யதேச்சையாகக் கேட்பதுபோல் கேட்டுக்கொள்வார்.

ரோஜாக்கு ஒரு தம்பி இருப்பதாகவும், தாய் உடல் சரியில்லாதவள் என்றும், அறையை விட்டு வெளியே வர மாட்டாள் என்றும், சங்கீத வைத்தியம் இருக்கும் தாய் மாமன் டிராமா கம்பெனியில் சேர்ந்து கொண்டு ஊரிலேயே இருப்பதில்லை என்ற விவரங்களை நடு நடுவில் கேட்டுத் தெரிந்து கொண்டார். ரோஜாவின் தம்பியைப் பற்றி தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டினார். மறு நாள் காலையில் அவனை அழைத்துவரச் சொன்ன போது ரோஜா சங்கடமாய் பார்த்தாள். சேந்தா ஊரில் இல்லை என்றும் ஏதோ வேலையாய் வெளி ஊருக்குப் போயிருப்பதாயும் சொன்னாள். போட்டோவையாவது கொண்டு வரச் சொன்னபோது, ரோஜா சரியென்பது போல் தலை அசைத்தாள். ஆனால் அந்த விஷயத்தை அங்கேயே மறந்து விட்ட ரோஜா, மறுநாள் போனதும், அவர் சின்னக் குழந்தையைப் போல் போட்டோவுக்காக கையை நீட்டியதும் அதிர்ச்சியும், வியப்பும் அடைந்தாள்.

சந்திரனின் போட்டோவை கொண்டுவராததற்கு அவர் அவ்வளவு ஏமாற்றமடைவார் என்று ரோஜா எதிர் பார்க்கவில்லை. அவனுடைய அலட்சியத்துக்கு கோபித்துக் கொண்டார். அதெல்லாம் அவருடைய வியாதி சம்பந்தப் பட்ட லட்சணங்களாய் எண்ணி விட்டாள் ரோஜா. தங்களுடைய குடும்ப நிலைமை சரியில்லை என்று கேள்விப் பட்டு இயற்கையில் கருணை இதயம் படைத்த அவர், தமக்கு எப்படியாவது உதவி செய்ய நினைக்கும் துடிப்புத் தான் அது என்று எண்ணிக் கொண்டாள். நெஞ்சு வலி வந்தவர்களுக்கு எது வந்தாலும் அதிகமாய் தான் இருக்கும் என்று அனந்த் சொன்னான். அவருக்கு அன்று மதியம் இலேசாக நெஞ்சுவலி வந்தது. டாக்டர் வந்து ஊசி போட்டு விட்டு, 'நீங்க ஓய்வு எடுத்துக் கொள்ளாவிட்டால் பிரயோஜனம் இல்லை... மதிய நேரத்தில் நீங்க தூங்குவ தில்லை என்று இந்தப் பெண் சொல்கிறாள். பின்னால்



வருத்தப்பட்டு பிரயோஜனம் இல்லை, பிறகு உங்கள் விருப்பம்'' என்றார்.

''இந்தப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருப்பதே எனக்கு ஓய்வுதான் டாக்டர்,'' என்றார் வேணுகோபாலன்.

டாக்டர் போகும் முன் ரோஜாவை தனியாக அழைத்து முடிந்தவரை நிறைய நேரம் அவர் தூங்கும் விதமாய் பார்த்துக் கொள்ளச் சொன்னார். ரோஜா டாக்டர் சொன்னபடியே நடந்து கொண்டாள்.

இன்னும் இரண்டு மூன்று நாட்கள் சென்றன. அவருடைய நிலைமை சீரடையத் தொடங்கிற்று. அவருடைய பேச்சில் இருந்த விபரீதமான போக்கு குறைந்தாலும், ரோஜாவிடம் அன்பாய், உரிமையாய் இருக்கத் தொடங்ினார். சந்திரன் ஊரிலிருந்து வந்ததுமே அழைத்து வரச்சொல்லி ஒருநாளுக்கு மூன்று தடவையாவது நினைவூட்டுவார் வீட்டிலும் ஓரளவுக்கு அமைதி நிலவியது.

ரோஜா வந்த பிறகு லாவண்யாவுக்குப் பெரிய பிரச்னை தீர்ந்தது. குடும்ப பொறுப்புகளிடமிருந்து விடு பட்டதில் ஓய்வு நேரம் நிறைய கிடைத்தது. ஜெய்லாடன் அறிமுகம் வளர வளர, ஓய்வு நேரத்தை கழிக்கும் பிரச்னையும் குறைந்து போயிற்று. பணத்துக்காக தந்தையை சந்திக்க வேண்டிய நிர்பந்தமும் இப்போ இல்லை. தேவை பட்டபோது ரோஜாவிடம் தகவல் சொல்லி அனுப்புவாள். ரோஜா அவரிடம் என்ன சொல்லு வாளோ தெரியாது! கேட்ட பணம் மட்டும் கையில் வந்து விடும்.

இத்தனை விதமாய் தனக்கு உதவி புரிந்த ரோஜா விடம் லாவண்யாவுக்கு இதுவரை யாரிடமும் ஏற்படாத அபிமானம் ஏற்படத் தொடங்கியது. மதிய நேரத்தில் இருவரும் ஒன்றாய் அமர்ந்திருக்கபோது, லாவண்யா ரோஜா கேட்காமலேயே தன் சொந்த விஷயங்கள் பற்றி ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லுவாள். சில சமயம் ரொம்ப

அந்தரங்கமாக சிருங்காரம் ரசம் மேலிட இருக்கும் அந்தப் பேச்சுகளை கேட்கும் போது ரோஜாவின் முகம் சிவந்து விடும். கேட்க முடியாதவளாய், ஏதோ வேலையிருப்பது போல் அங்கிருந்து நகர்ந்து விடுவாள்.

அன்று மதியம் மூன்று மணியிருக்கும்... வேணுகோபால னுக்கு தூக்கத்தில் சுளுக்கு சுளுக்கிக் கொண்டு விட்டது. அமிர்தாஞ்சனம் தடவி ஒத்தடம் கொடுப்பதற்காக, ரோஜாவிடம் வெண்ணீரை கொண்டு வரச் சொன்னார்.

சமையல்காரன் மதியச் சாப்பாடு ஆனதும் வீட்டுக்குப் போய் விட்டான். நான்கு மணி ஆன பிறகு தான் வருவான். அதனால் ரோஜா சமையல் அறைக்குச் சென்று, அடுப்பைப் பற்ற வைத்து, தண்ணீரை சுட வைத்தாள். நன்றாக கொதித்த பிறகு, கிண்ணத்தை ஜாக்கிரதையாக துணியால் பிடித்துக் கொண்டு எடுத்து வரும் போது வேணுகோபாலனின் அறையிலிருந்து பேச்சுக்குரல் கேட்டது.

"ஆமாம், கிட்டத்தட்ட செத்துப் பிழைத்தேன்" என்று யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தார். வந்தது யாராக இருக்கும்? அனந்த் இல்லை. அவனாக இருந்தால் உடம்பை பற்றி புதிதாகச் சொல்ல வேண்டிய தேவையில்லை. டாக்டராக இருக்குமோ! அவர் இந்நேரத்துக்கு வரமாட்டாரே? ரோஜா தயங்கிக் கொண்டே அறையில் காலடி எடுத்து வைத்தாள்.

வந்தவன் வாசலுக்கு முதுகைக் காட்டி, அவரைப் பார்த்து அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான். அவன் குரல் கம்பீரமாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

"வந்ததும் மே கோபால் சொன்னான்... உடைகளைக்கூட மாற்றிக் கொள்ளாமல் நேராக வந்துவிட்டேன்."

அந்தக் குரலை கேட்டதும் ரோஜா திடுக்கிட்டாள்... இதயத்துடிப்பு ஒரு நிமிடம் நின்றுவிட்டு மீண்டும் இயங்கியது.



பின்னாலிருந்து பார்க்கும் போது உயரமாய், உட்கார்ந்து இருப்பதில் கூட வெளிப்பட்டுக் கொண்டிருந்த கம்பீரம், வலிமை நிறைந்த அந்தத் தோள்கள், அலை யலையாய் புரண்ட தலைமுடி... வேறு யாரு? அழகான தோற்றத்துடன், அளவில்லாத திமிரும், அகம்பாவமும் யாருக்கு இருக்கோ அவன் தான்... வி...ஜ...ய்... ரோஜா மனதில் ஏற்பட்ட நடுக்கம், கைவிரல்கள் வரை பரவியது போல், பிடித்துக் கொண்டிருந்த கிண்ணமும் நடுங்க தொடங்கிற்று. ஒரு நிமிடம் வேணுகோபாலன் வாசற் பக்கம் கண்களை உயர்த்தி பார்க்காமல் இருந்திருந்தால் ரோஜா மின்னல் போல் திரும்பிப் போயிருப்பாள். ஆனால் அவர் பார்த்து விட்டார்.

"வாம்மா... வா... வெண்ணீர் எடுத்துக்கிட்டு வந்தியா?" என்றார்.

ரோஜா தலை அசைத்தாள்... விஜய் திரும்பிப் பார்த்தான். ரோஜா அவன் பக்கம் பார்க்கவில்லை. பார்க்கா விட்டாலும், அவன் திக்பிரமை அடைந்ததும், உதடுகள் லேசாக பிரிய, நம்பமுடியாதவன் போல் கண்கள் அகல விசித்திரமாய் நோக்குவது அவளால் உணரமுடிந்தது

"விஜய்! இந்தப்பெண் ரோஜா...முழு பெயர் சரோஜா. நம்ப அனந்த் அழைத்து வந்தான்." வேணுகோபாலன் உற்சாகமாய் அறிமுகப்படுத்தினார் விஜய் இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். இந்தக் கணம் அவன் வியப்படைந்தது போல், இனி எப்போதும், எந்த விஷயத்திலும் ஆச்சரியப்படமாட்டானாய் இருக்கும்.

ரோஜா உடலில் இருந்த சக்தியெல்லாம் திரட்டிக் கொண்டு, மூச்சை விட்டால் எங்கே உயிர் போய் விடுமோ என்று பயந்தவள் போல், மூச்சை அடக்கிக்கொண்டு, சகஜ மாய் இருக்க முயன்றாள். அவன் பக்கத்திலிருந்து நடந்து போய் வெண்ணீர் பாத்திரத்தை கட்டில் பக்கத்தில் இருந்த மேஜை மீது வைத்தாள்.

விஜய் வியப்பு அடைந்ததை வேணுகோபாலன் கவனியாமல் இல்லை. ஆனால் அதில் அவருக்குப் புதிதாக ஒன்றும் தோன்றவில்லை... திடீரென்று வீட்டுக்குள்ளே, உரிமையாய் ஒரு பெண் வந்ததால் ஏற்பட்ட வியப்புதான் என்று நினைத்து விட்டார். கட்டிலில் சாய்வாக உட்கார்ந்தவர் கண்களை உயர்த்தி ரோஜாவைப் பார்த்துக்கொண்டே சொன்னார். "இவன் விஜய்... நம் அனந்தின் அண்ணன்... எனக்கு மகன் போன்றவன்."

ரோஜா வலிந்த புன்னகையை வலுக்கட்டாயமாய் உதிர்த்தாள்.

"போய் சட்டுன்னு காபி போட்டு எடுத்துக்கிட்டு வா... விஜய் ஏர் போர்ட்டிலிருந்து நேராக இங்கே வந்திருக்கான்... காபி நல்ல ஸ்டாங்காய், சக்கரை குறைச்சலாய் இருக்கணும் அவனுக்கு."

ரோஜா தலை அசைத்துவிட்டு மனதிலேயே அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு வெளியே வந்துவிட்டாள். அறையைவிட்டு வெளியேவரும்போது ரோஜாவிடம் ஏற்பட்ட பதட்டம், அவளை அங்கிருந்து வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாய் வெளியேற அவசரப்படுத்தியபோதும், அவளிடம் சகஜமாய் இருந்த சுயமரியாதையும், பிடிவாதமும், ஓடப் போனவளை நிறுத்தி, மெதுவாக, கம்பீரமாய் நடக்கும்படி செய்தன. வாசற்படியைத் தாண்டியதும், நடுங்கிக் கொண்டிருந்த கால்களை கட்டுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ரோஜா ஒரு நிமிடம் அங்கேயே நின்றுவிட்டாள்.

அறையிலிருந்து பேச்சு குரல் கேட்டுக்கொண்டிருந்தது.

"ரொம்ப நல்ல பெண். இந்த சில நாட்களுக்குள் என் உயிருக்கு சமம் ஆகி விட்டாள். இந்த வயதான காலத்தில் அனந்த் எனக்கு செய்த உபகாரத்துக்கு எப்படி நன்றியை தெரிவிக்கறதுன்னு தெரியலை."



"ஐ...ஸீ" விஜய் குரல் கரகரப்பாக ஒலித்தது. அந்த குரலிலிருந்தே அவன் இன்னும் வியப்பிலிருந்து மீளவில்லை என்று உணர முடிந்தது.

மேற்கொண்டு உரையாடலைக் கேட்க விரும்பாதவளாய், ரோஜா மெதுவாக நகர்ந்து வந்து விட்டாள். காபியை கலந்து டம்ளரில் ஊற்றும்போது, சமையல்காரன் வந்துவிட்டான். அவனைப் பார்த்ததும் ரோஜாவுக்கு உயிர் வந்தாற்போல் இருந்தது. காபி டம்ளரை அவனிடம் கொடுத்து அனுப்பிவிட்டாள்.

சமையல் அறைக் கதவில் சாய்ந்து நின்று கொண்டாள் ரோஜா. இதயம் முழுவதும் உணர்வுகளின் கொந்தளிப்பு நிறைந்திருந்தது. அது கோழைத்தனமாக இருக்கலாம். இயலாமையாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும் புயலில் சிக்கிய இளம்தளிராய் ரோஜாவை நடுங்கச்செய்துக் கொண்டிருந்தது.

என்றாவது ஒருநாள் விஜய் வருவான் என்றும், தாம் இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ளும் சந்தர்ப்பம் வரும் என்றும் ரோஜா நினைத்துக் கொண்டுதான் இருந்தாள். ஆனால் அது இவ்வளவு சீக்கிரமாய், திடீரென்று நடக்குமென்று கனவிலும் நினைத்திருக்கவில்லை.

அவன் எதிர் படும்போது, அலட்சியமாய் இருக்க வேண்டும் என்றும், தைரியமாக நோக்க வேண்டும் என்றும் எண்ணிக் கொண்டிருந்தவளுக்கு, அந்த நேரம் வந்ததும் தைரியம் காற்றில் பஞ்சாய் பறந்துவிட்டது. தவறு செய்து விட்டவள் போல் கால்கள் நடுங்க, இதயம் வேகமாய் துடிக்க, நிற்கக்கூட தெம்பு இல்லாதது போல் பலவீனமாய் உணர்ந்தாள். தன் இயலாமையைக் கண்டு, தன் மீதே கோபம் வந்தது.

சமையல்காரன் முகத்தை கடுகடுவென்று வைத்துக் கொண்டு திரும்பி வந்தான்.

"ஏன்? என்ன ஆச்சு?" என்று கேட்டாள் ரோஜா.

"என்னம்மா? நீங்க சரியாய் கவனிக்கவில்லையா? நானும் பார்க்கவில்லை, காபியில் தூசி இருந்ததாம். அந்த அய்யா காபியை கொட்டிட்டாங்க. பெரிய அய்யா என்னை நன்னா திட்டி அனுப்பிச்சாங்க."

"காபியிலா? தூசி இருந்ததாமா?" ரோஜா சிரிக்கத் தொடங்கினாள்...

சமையல்காரன் கோபமாய் பார்த்தான். "இங்கே நீங்க சிரிக்கறீங்க... அவர் அங்கே என்னை திட்டியது. கேட்டால் நல்லாயிருந்திருக்கும். மறுபடியும் காபி கலந்து எடுத்து வரச் சொன்னார்."

"பால் தீர்ந்து போச்சு—வரணும்னு சொல்லு."

ரோஜா அங்கிருந்து வந்து விட்டாள். விஜய் காபியை கொட்டி விட்டது ஏன் என்று புரிந்து போயிற்று. தான் செய்து அனுப்பியது குடிக்க வேண்டிவருமே என்று.

அரை மணி கழித்து ரோஜா, ராதையின் அறையில் உட்கார்ந்து அவளுக்குத் தலை வாரிக் கொண்டிருந்தாள். வெளியில் காலடிச்சத்தம் கேட்டது. ரோஜா தலை உயர்த்தி பார்ப்பதற்குள் "ராதை!" என்ற அழைப்பு கேட்டது. பின்னிக் கொண்டிருந்த ரோஜாவின் கைகளை தள்ளிவிட்டு ராதை ஒரே ஓட்டமாய் ஓடினாள். அதற்குள் வாசற்கதவு அருகில் வந்துவிட்டான் விஜய்—எதிரே வந்த ராதையை இரு கரங்களால் தூக்கிக்கொண்டான்.

"ராதை! உனக்காக பேசும் பொம்மை கொண்டு வந்திருக்கேன், வீட்டில் இருக்கு. சாயந்திரம் வரும்போது கொண்டு வருகிறேன். நீ கீ கொடுத்தால் போதும், பேசிக்கிட்டே இருக்கும். அதுக்கும் உன்னைப் போலவே பெரிய கண்கள், இரட்டை பின்னலும் இருக்கு."

அவன் குரல் அன்பாய், மிருதுவாக ஒலித்துக்கொண்டிருந்தபோதும், பார்வை மட்டும் துப்பாக்கி குண்டுபோல்



ரோஜாவை துளைத்துக் கொண்டிருந்தது. நிர்தாட்சண்யமாய் இருந்த அந்த பார்வைக்கு இலக்காகி விட்ட ரோஜா, மெதுவாக எழுந்து நின்றாள். அவன் முகத்தில், அந்தக் கண்களில் தென்பட்ட கடினத்தைப் பார்க்கும்போது, ரோஜா இங்கு வந்து தனக்கொரு இடத்தை ஏற்படுத்திக் கொண்டதற்கு பதிலடி கொடுக்கவும், சூடான சொற்களால் காயப்படுத்தவும் வந்தவன் போல் தோன்றிற்று. அவன் வாயிலிருந்து வெளிவரப்போகும் கடின சொற்களுக்காக, தன் மனதை குத்திக் கிழிக்கப்போகும் அந்த வார்த்தைகளுக்காக, மூச்சைப் பிடித்துக்கொண்டு ரோஜா காத்திருந்தாள்.

திடீரென்று, பின்னாலிருந்து குரல் ஒலித்தது.

"ஹலோ விஜய்! வாட் எ வண்டர்?"

விஜய் சரேலென்று திரும்பிப் பார்த்தான். லாவண்யா அருகில் வந்து கொண்டே கேட்டாள்.

"ஊரிலிருந்து எப்போ வந்தே?"

"சற்று முன் தான். வந்ததுமே கோபால் சொன்னான். அப்பாவுக்கு உடல் நலமாக இல்லைன்னு... நேராக இங்கு வந்து விட்டேன்..."

"நல்ல வேளை... இன்று மட்டும் நீ வராவிட்டால் நான் செத்தே போயிருப்பேன்."

"ஏன்? என்ன விஷயம்?"

"என்ன விஷயமாவது? பூனாவிலிருந்து என்னுடைய நண்பர்கள் இன்னிக்கு ராத்திரி வர்றாங்க."

"யாரு? உங்க சாந்தி, அருணா, மிஸ் ஜோஷி—இவங்க தானே!"

"ஆமாம் அவங்கதான்... நீ ஊருக்குப் போகும் முன்பு கூடச் சொன்னேனே... சவுத் டூர் வர்றாங்க, என்னையும் வரச்சொல்லி கடிதம் போட்டிருப்பதாய்..."

நினைவு இருக்கு என்பது போல் தலை அசைத்தான் விஜய்.

"அவங்க இன்று இரவு காரிலும், வேனிலும் வர்றாங்க. இந்த ஊரில் இரண்டு நாட்கள் இருப்பாங்க. நீ கொஞ்சம் புரோகிராம் போட்டுக் கொடு" என்றவாறே ரோஜாவைப் பார்த்தாள் லாவண்யா. "ஓ... நீ இங்கே தான் இருக்கியா? ரோஜா இன்று இரவுக்கு ஸ்பெஷல் டின்னர் தயார் செய்யணும், என்ன செய்யணுமோ நான் சொல்றேன். நீ மேற்பார்வை பார்த்தால்போதும். கிட்டத்தட்ட பதினாறு பேர்—அப்பாவுக்கு வேறு உடம்பு சரியில்லை எப்படி சமாளிக்கப் போகிறேனோ தெரியவில்லை. விஜய்! சொல்ல மறந்து விட்டேன். இந்தப் பெண் ரோஜா, எங்க வீட்டில் எனக்குத் துணையாக இருக்க வந்திருக்கிறாள். அனந்த் தான் அழைச்சுகிட்டு வந்தான். ரொம்ப நல்ல பெண். அனந்த் தன் வாழ்க்கையிலேயே செய்த நல்ல காரியம் இது ஒன்றுதான்னு நினைக்கிறேன். ரோஜா! இவன் விஜய், அனந்தின் அண்ணன்...தொழில் ரீதியாய் வக்கீல். அதாவது நியாயமாய் இருப்பவங்களை அழவைத்து, அநியாயமாய் இருப்பவங்களை சப்போர்ட் செய்வான் என்று அர்த்தம். இன்னும் சொல்லப் போனால், என் துரதிர்ஷ்டமோ, அவனோட அதிர்ஷ்டமோ, எனக்கு கணவனாக வர இருந்தவன், தப்பித்துக்கொண்டுவிட்டான். இவனுக்கு என்னைப் பிடிக்கவில்லையாம். என்னைவிட அழகானவள், எந்த ரம்பையோ, ஊர்வசியோ வந்து இந்த உலகில் இவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பதாய் எண்ணம் அவனுக்கு."

"லாவண்யா!" இடைமறிப்பது போல் அழைத்தான் விஜய். ஆனால் லாவண்யா பொருட்படுத்தவில்லை. சுட்டுவிரலை உயர்த்தி விஜயை அதட்டினாள்.

"இதோ பார்... இப்பவே சொல்லிவிடுகிறேன்— நினைவில் வைத்துக்கொள். ஒருவேளை நீ நினைப்பதுபோல் அந்த ரம்பையோ, ஊர்வசியோ நிஜமாகவே இறங்கி வந்து



உன்னைக் கல்யாணம் செய்து கொண்டாலும், நான் உங்களை நிம்மதியாக குடுத்தனம் பண்ண விடமாட்டேன். உங்க இருவருக்குமிடையே சண்டை மூட்டி விடுவேன்."

"லாவண்யா!"

"பரவாயில்லை. எங்க ரோஜா ஒன்றும் நினைத்துக் கொள்ள மாட்டாள். என்னைப் பற்றி அவளுக்கு எல்லாம் தெரியும். அனந்த் தயவால் இத்தனை நாட்களுக்குப் பிறகு எனக்கு ஒரு சிநேகிதி கிடைத்தாள்." லாவண்யா அபிமானம் நிறைந்த கண்களால் ரோஜாவைப் பார்த்தாள்.

"என்ன ரோஜா? அப்படித்தானே! நீ ஒன்றும் நினைத்துக்க மாட்டாயே. விஜய் மீது எனக்கு, மனைவியாய் வர இருந்தவள் என்ற முறையில் அதிகாரம் செலுத்த எல்லா உரிமையும் இருக்கு."

விஜய் முகம் ஏற்கனவே சிவந்து போயிற்று... "என்ன விசேஷம்? வர வர உனக்கு வாய் ரொம்ப நீளமாகி விட்டது." என்றான்.

"ஏன்னா நான் 'ரொம்ப சந்தோஷமாய் இருக்கேன்' அதான்."

"அப்படியா?" எதனால் அந்த மகிழ்ச்சி? இப்படி வா... அந்த ரகசியம் என்னவோ எனக்கும் சொல்லு." என்ற விஜய் லாவண்யாவின் காதைப் பிடித்து, வெளியில் இழுத்துச் சென்றான்.

"அம்மா... காது வலிக்குது. விட்டு விடு" கத்தினாள் லாவண்யா.

"இன்னும் அழுத்தி பிடிச்சுக்கட்டுமா!" சொல்லிக் கொண்டிருந்தான் விஜய். சிரித்துக் கொண்டே ஒலித்த குரல்கள் கொஞ்சம் கொஞ்சமாய் காற்றில் தேய்ந்து போனது.

அறையில் தனித்து விடப்பட்ட ரோஜா, பதுமையாய் நின்று விட்டாள். வரக்கூடும் என்று நினைத்த நிலநடுக்கம்

வரவில்லை. இடி விழவில்லை. கும்ப மழை வருமென்று நினைத்தது சிறு தூறல் கூட இல்லாமல், மேகங்கள் இடம் மாறி விட்டன.

ரோஜாவுக்கு ரொம்ப சோர்வாய் இருந்தது. நகருவதற்குக்கூட திராணி அற்றவளாய், அப்படியே நின்று விட்டாள். விஜய் பார்வையில் எந்த சக்தியிருந்ததோ தெரியாது. அவனுடைய ஒரே பார்வையில் ரோஜாவின் சக்தி முழுவதும் வற்றிவிட்டாற்போல் இருந்தது.

லாவண்யாவின் காதைப் பிடித்து வெளியே வந்த விஜய் ரோஜா இருந்த அறையிலிருந்து தொலைவுக்கு வந்து விட்டதை உணர்ந்த பிறகு, லாவண்யாவிடம் கேட்டான்.

"இப்போ சொல்லு... இந்த பெண்ணை அனந்த் எப்போ அழைத்து வந்தான்? இவர்களுக்குள்ளே எப்படி அறிமுகமாயிற்றாம்?"

"நீ போன சில நாட்களுக்குள். அனந்துக்கு நல்லாத் தெரிந்த குடும்பமாம். ஏழ்மையில் இருக்காங்களாம். ரொம்ப நல்ல பெண் என்று சொன்னான்—அது மட்டும் நிஜந்தான்."

"அவ்வளவு தானா? அவர்கள் இருவருக்குமிடையே வேறு எதுவும் இல்லையாமா?"

லாவண்யா கடுகடுவென்று பார்த்தாள். "உன் புத்தி இப்படி போவானேன்? எனக்குத் தெரியும், வந்ததிலிருந்து பார்க்கிறேன். அப்படி ஒன்றும் இல்லை. அந்தப் பெண் ரொம்ப நல்லவள்." அழுத்திச் சொன்னாள் லாவண்யா.

"ஆமாம் — ஆமாம். அதான் அவ்வளவு சீக்கிரமாய் உனக்கு சிநேகிதி ஆகி விட்டாள்." சிரித்துக் கொண்டே சொன்னான் விஜய்.

அந்த சொற்களுக்கு பின்னால் தென்பட்ட கிண்டலை லாவண்யா உணராமல் இல்லை. ஆனால் அதைப் பொருட்படுத்தாதவளாய், "நீ இங்கேயே இரு. நான் இப்போதே



வந்து விடுகிறேன்" என்று சமையல் அறைப்பக்கம் ஓடினாள். அதற்குமுன் தலையை திருப்பி, "ஓடிப்போய் விடாதே, உன்னுடன் வேலையிருக்கு" என்று எச்சரித்தாள்.

மாட்டேன் என்பது போல் தலை அசைத்தான் விஜய். லாவண்யா சென்று விட்டாள்...

விஜய் மனம் வேகமாய் யோசித்துக் கொண்டிருந்தது. அவன் இருந்த குறைவான நேரத்துக்குள்ளேயே, ரோஜா இந்த வீட்டில் எவ்வளவு அபிமானம் ஏற்படுத்திக்கொண்டு விட்டாள் என்பது தெளிவாய்ப் புரிந்துவிட்டது. வேடிக்கை என்னவென்றால், சாதாரணமாய் வேணுகோபாலனுக்கு பிடித்த மனிதர்களை லாவண்யாவுக்குப் பிடிக்காது. அவளுக்குப் பிடித்தவர்களை வேணுகோபாலன் விரும்ப மாட்டார். இந்த ரோஜா புத்திசாலித்தனமாய், இருவரிடமும் நல்ல பெயரை வாங்கிவிட்டாள். இந்த விதமாக, இங்கு வருவதில் அவளுடைய உள் நோக்கமென்ன? சுயமரியாதையைக் கூட விட்டுவிட்டு வேலைக்காரியா இருக்கத் தயாராய் வந்திருக்கிறாள் என்றால், ஏதோ பெரிய காரணம் இருக்கவேண்டும்.

அன்று ஹோட்டலில் சொன்னாளே, ஏதாவது லாபம் இருந்தால் தவிர தான் எந்த காரியமும் செய்ய மாட்டேன் என்று. வேணுகோபாலனிடம் உரிமை ஏற்படுத்திக் கொண்டு, நல்ல பெயர் எடுத்து, அவர் மூலமாய் அனந்தை அடைய வேண்டுமென்று இருக்கிறாளோ? எவ்வளவு துணிச்சல் இந்தப் பெண்ணுக்கு? இவ்வளவு திறமை படைத்தவள், அரசியலில் மட்டும் புகுந்திருந்தால் நாட்டையே ஆண்டு இருப்பாள், தான் இப்போ, நடந்ததையெல்லாம் வேணுகோபாலனிடம் சொல்லுவதா — வேண்டாமா? இல்லை. என்ன செய்கிறாள் என்று பொறுமையாய் காத்திருப்பது நல்லதா? விஜய் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, நெற்றியை சுருக்கி யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

# 32

சூறாவளிக்காற்றாய் வந்தார்கள் லாவண்யாவின் நண்பர்கள். பெரிய வேனும் இரண்டு கார்களிலும் வந்து இறங்கினார்கள். ஹோட்டலில் தங்குவதாக அவர்கள் சொன்னபோது, லாவண்யா காதில் போட்டுக்கொள்ளாமல் வற்புறுத்தித் தன் வீட்டிலேயே தங்க ஏற்பாடு செய்தாள்.

லாவண்யா சென்ற வருடம் கோடை விடுமுறையில் பூனாவுக்குத் தன் சிநேகிதியான சாந்தி மாதுர் வீட்டுக்குப் போய் பதினைந்து நாட்கள் தங்கிவிட்டு வந்தாள். அங்கு கிளப்பில் இவர்களின் அறிமுகம் கிடைத்தது. ஒவ்வொரு வீட்டிலும் லாவண்யாவுக்கு விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சாந்தியும், லாவண்யாவும் வகுப்புத் தோழிகள். கல்யாணம் ஆன பிறகு சாந்தி பூனாவில் செட்டில் ஆகிவிட்டாள், லாவண்யாவுக்கு வீட்டில் போர் அடித்தபோது பூனாவுக்குப் போய் பத்து நாட்கள் இருந்துவிட்டு வருவது வழக்கமாக இருந்தது.

அவர்கள் தங்கியிருந்த இரண்டு நாட்களும் வீடு ரொம்ப கலகலப்பாக இருந்தது. ரோஜாவுக்கும், வேலைக்காரர்களுக்கும் ஒரு நிமிடம் கூட ஓய்வு கிடைக்கவில்லை. விருந்தாளிகளுக்கு வேணுகோபாலன் வீட்டில் இடம் போறாததால், அனந்த் வேறு வழியில்லாமல் தம் வீட்டுக்குப்போக வேண்டியதாயிற்று.

அனந்தும், விஜயும் தனிமையில் சந்தித்துக் கொள்ளச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. வந்த விருந்தாளிகளில் ஆண்கள் விஜய் வீட்டில் தங்கியிருந்ததால், விஜய்க்குத்



தம்பியுடன் பேசவும் நேரம் கிடைக்கவில்லை. அப்படியும் இரவு படுக்கப் போகும் முன் விஜய் தம்பியை நிற்கவைத்து கேட்டான். "என்ன அனந்த்! உங்க ரோஜாராணி ஒரேயடியாய் நமக்குள் ஒருத்தியாய் குடியேறிவிட்டாளே என்ன விசேஷம்?"

அனந்த் முகம் சிவந்துவிட்டது. விஜய் ரோஜாவைத் தாழ்த்திப் பேசியபோது, அவனுக்குக் கோபத்தைவிட வேதனைதான் ஏற்பட்டது. விஜய் என்றைக்காவது ரோஜாவைச் சரியாகப் புரிந்துகொள்வானா? தலையை நிமிர்த்தி, விஜயை நேராக பார்த்துக்கொண்டே சொன்னான்,

"விஜய்! ரோஜாவை அருகில் இருந்து கவனித்து வந்தால், நீ உன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வாய் என்ற எண்ணத்தில், நான்தான் அவளை அழைத்து வந்தேன். அவள் வரமாட்டேன்னு தான் சொன்னாள். நான்தான் வற்புறுத்தினேன். வேணுகோபாலனுக்கு ரோஜா இன்னாரென்று தெரியாது. முன்னாலேயே சொல்லத் தேவையில்லை என்று நானும் சொல்லவில்லை."

"ஏன்? எதுக்காக?" இரட்டிப்பதுபோல் கேட்டான் விஜய்.

இருவருக்கும் இடையே வாய்ச்சண்டை வர வாய்ப்பு இருக்கிறது என்று உணர்ந்த அனந்த், பின் அடைந்தவனாய், மௌனமாய் இருந்து விட்டான்.

விஜய் குரல் கடினமாக ஒலித்தது. "எனது அருமைத் தம்பியே! கவனமாகக் கேட்டுக்கொள். எந்த விஷயத்திலாவது என் அபிப்பிராயம் மாறலாமோ என்னவோ, உன் ரோஜாராணி விஷயத்தில் மட்டும் மாறவே மாறாது. அவளைப் பற்றி உன்னைவிட எனக்கு நன்றாகவே தெரியும். உனக்குக் கொஞ்சமாவது மூளையிருந்தால், உடனே அந்தப் பெண்ணிடம் உண்மையைச் சொல்லி, தேவையானால்

மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியில் வந்துவிடு. அநாவசியமாய் இந்த விஷயத்தை இழுக்க அடிக்காதே. ஏற்கனவே இந்த விஷயத்தில் எனக்குத் தலைவலியை உண்டாக்கி விட்டாய். இனி என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது.'' என்று கூறி விஜய் அங்கிருந்து போய்விட்டான்.

லாவண்யாவின் சிநேகிதர்களுக்கு ஊரைச் சுற்றிக் காண்பிப்பதற்கு விஜய் டிரைவின் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். லாவண்யா கேட்டுக் கொண்டதால் அனந்தும் அவர்களுடனே இருந்தான். அந்த இரண்டு நாட்களும் அவர்கள் செய்த கலாட்டாவில் வீடே அதிர்ந்து விட்டது. வேணுகோபாலன் அறைக்கதவை தாழ்போட்டுக் கொண்டு காதில் பஞ்சு அடைத்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டார். அவர்கள் வெளியில் போன போது மட்டும் கதவைத் திறந்து வைத்துக் கொண்டார்.

லாவண்யா ரோஜாவையும் தங்களுடன் வரச் சொல்லி வற்புறுத்தினாள். ஆனால் ரோஜா ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களுடைய நடவடிக்கை, பேச்சு முதலியவற்றைப் பார்க்கும் போது, ரோஜாவுக்கு அவர்களுடைய உலகமே வேறு என்று தோன்றிற்று

வந்தவர்களில் மிஸ் ஜோஷி என்ற பெண்ணின் பார்வை விஜய் மீதே நிலைத்து விட்டதென்று எல்லோருக்கும் புரிந்து போயிற்று. ஊரைச் சுற்றிப் பார்க்கப் போகும் போது, அந்தப் பெண் திறமையாய், டிரைவ் செய்து கொண்டிருந்த விஜய் பக்கத்திலேயே அமர்ந்து கொள்ளும் படிப் பார்த்துக் கொண்டாள். உணவு வேளையிலும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். வெளியில் போகும் போது, இடித்துக் கொள்ளும் விதமாய் நடக்கமுற்பட்டாள். பார்வையாலேயே தன்னை விழுங்கிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணின் அருகாமையில் விஜய் ரொம்ப சங்கடமாக உணர்ந்தான்.

''சௌத் டூர்'' போகும் முன் சாந்தி, லாவண்யாவைத் தங்களுடன் வரச்சொல்லி வற்புறுத்தினாள். வெளி ஊர்



களுக்குப் போவதில் சகஜமாய் விருப்பம் கொண்ட லாவண்யா உடனே சம்மதித்து விட்டாள். விஜயையும் வரச்சொல்லி அழைக்கும்படி மிஸ் ஜோஷி லாவண்யாவை பல தடவைக் கேட்டு விட்டாள். விஜய் ஒப்புக் கொள்ள மாட்டான் என்றும், அவனுக்குப் பத்து பேருடன் கலந்து பழகுவதில் அவ்வளவாக விருப்பம் கிடையாதென்றும் லாவண்யா சொன்னாள். அதுவும் இல்லாமல், வேலையில் பிஸியாக இருப்பதால் அவனுக்கு வெளி ஊர்களுக்கு வர நேரமே கிடைக்காது என்றும் சொன்னாள். மிஸ் ஜோஷி என்ன நினைத்துக் கொண்டாளோ என்னவோ, லாவண்யாவின் முன்னிலையில் தானே விஜயைக் கேட்டு விட்டாள். விஜய் ரொம்ப மகிழ்ச்சி அடைந்தவனாய் உடனே ஒப்புக் கொண்டு விட்டான். லாவண்யா உலகமே தலைகீழானது போல் பார்த்தாள். மிஸ் ஜோஷி வெற்றி பெருமிதத்துடன் லாவண்யாவை நோக்கினாள். விஜயும் மற்ற ஆண்களைப் போல்தான் என்று லாவண்யாவுக்குத் தோன்றியது. மிஸ் ஜோஷின் கடைக்கண் பார்வைக்கு, கொஞ்சிப் பேசிய பேச்சுகளுக்கு அவன் அடிமையாகி விட்டான் என்று எண்ணி விட்டாள்.

''சௌத் டூர்'' கிளம்பும் நாளும் வந்தது. எல்லோரும் தயாராகக் காத்திருந்தார்கள். விஜய் மட்டும் இன்னும் வரவில்லை. புரோகிராம் போட்டபடி சரியான நேரத்துக்குக் கிளம்பாவிட்டால் சாந்தியின் கணவன் மாதுர்க்குக் கோபம் வந்துவிடும். பிறகு வழியில் ஏதாவது இடைஞ்சல் வரலாம் என்பது அவருடைய எண்ணம். ஆனால் விஜய் கட்டாயம் வருவான் என்பதில் மிஸ் ஜோஷிக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. கடைசி நிமிடத்தில் அவசர அவசரமாய் வந்தான் விஜய்.

விஜய் நேராக சாந்தி மாதுர் இருந்த இடத்துக்குச் சென்றான். ''மன்னிக்க வேண்டும், அவசரமான வேலை ஒன்று வந்து விட்டதால் என்னால் வர முடியாது. என் சார்பில் அனந்தை அனுப்புகிறேன்.''

லாவண்யா சட்டென்று மிஸ் ஜோஷி பக்கம் பார்த்தாள். அது வரைப் பிரகாசமாய் ஜொலித்துக்கொண்டிருந்த மிஸ் ஜோஷியின் முகம் வெளிறிப் போய் அணைந்து போகும் விளக்கு போல் மங்கிவிட்டது.

எல்லோரும் கார்களில், வேனில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். விஜய், மிஸ் ஜோஷி அருகில் சென்று, தனிப்பட்ட முறையில் ரொம்ப பவ்யமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

"சாரி! மிஸ் ஜோஷி, ஐயாம் வெரி வெரி சாரி... ஐ திங்க் ஐயாம் மோஸ்ட் அன்ஃபார்ச்சுனேட்." அவன் குரலில் இருந்த வேதனையைக் கொஞ்சம் கவனித்துக் கேட்டிருந்தால், அது உண்மையானதுதானா என்ற சந்தேகம் வரும்.

கிளம்பும் முன், கடைசி வினாடியில் லாவண்யா பொறுக்க முடியாதவளாய், ஏதோ முக்கியமான விஷயம் சொல்ல வந்தவள் போல் செயற்கையாய்ச் சிரித்துக் கொண்டே விஜய் அருகில் வந்தாள்.

"விஜய்! என்ன விஷயம்? எப்போதும், யாரிடமும் காட்டாத அக்கறையை மிஸ் ஜோஷியிடம் காட்டுகிறாயே, பரவாயில்லை, எப்படியோ விஜயின் கல் நெஞ்சம் கூட இளகி வருகிறதே என்று நினைத்தேன்."

"என் இதயம் கல் ஒன்றும் இல்லை, உங்களைப் போன்றது தான். ஆனால் உன் சிநேகிதி மிஸ் ஜோஷி போன்றவர்களைப் பார்க்கும் போது அது பாறையாய் இறுகி விடும்" என்று புன்சிரிப்புடன் சொன்னான் விஜய்.

"பின்னே, நீ காண்பிக்கும் இந்த..." லாவண்யா பாதியிலேயே நிறுத்தி விட்டாள்...

விஜய் குறும்பாகப் பார்த்துக் கண்ணடித்து விட்டு சிரித்தான். லாவண்யாவின் சந்தேகம் உண்மைதான்... விஜய் மிஸ் ஜோஷியின் கடைக்கண் பார்வையில் சிக்கி



விட்டது போல் நடித்து வேடிக்கை செய்கிறான் இல்லாவிட்டால் பாப் செய்யப் பட்ட தலைமுடி, ஸ்லீவ்லெஸ் ப்ளவுஸ், தேபி தெரியும்படி இறக்கிக் கட்டிய புடவையுடன், பார்வையாலேயே ஆண்களை விழுங்கி விடும் மிஸ் ஜோஷிக்கும், பெண்களிடம் அழகை விட குணத்துக்கும், வெளிப்பூச்சுகளைவிட பணிவுக்கும், தனித்தன்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் விஜய்க்கும் எப்படி இணைப்பு ஏற்பட முடியும்? விஜய் அசாத்தியக் கெட்டிக்காரன், ஒரு பார்வையிலேயே எதிராளியிடம் உள்ள நிறைய குறைகளைக் கண்டு பிடித்து விடுவான். அவனுடன் பழகும் நிறைய பேருக்கு, அவன் தங்களிடம் காண்பிக்கும் மதிப்பு, மரியாதைகளுக்குப் பின்னாடி ஒளிந்து இருக்கும் அலட்சியம் எரிச்சலும் துளிகூடத் தெரியாது. ஒரு தடவை லாவண்யா இது விஷயமாக அவனிடம் சண்டையே போட்டாள்.

"இந்த நடிப்பு எதுக்கு? உனக்கு உண்மையிலேயே மதிப்பு இல்லாதவர்களிடம் இந்தச் சிநேகங்கள் எதுக்கு? உள்ளது உள்ளபடி, அவர்களோட முகத்துக்கு நேராகவே ஏன் சொல்ல மாட்டேங்கறே?"

விஜய் உடனே பதிலளிக்கவில்லை, ஒரு நிமிடம் நிதானமாய் யோசித்து லாவண்யாவைப் பார்த்துச் சொன்னான்.

"ஏன் என்றால் மனிதன் ஒரு சமுதாயப் பிறவி முடிந்த வரை தனக்கு இடைஞ்சல் இல்லாத விஷயங்களில் பார்த்தும் பார்க்காத மாதிரி இருக்கணும். நீ சொன்னாற் போல், என் அபிப்பிராயங்களை அப்படியே வெளியில் சொல்லி விட்டால், இந்த சொஸைட்டியில் எனக்கு நிறைய பேர் எதிரிகளாகி விடுவார்கள். எல்லோருடைய விஷயத்தையும் விட்டு விடு. உன்னையே எடுத்துக்கொள்! உன்னைப் பற்றி என் மனதில் இருக்கும் அபிப்பிராயத்தை உள்ளது உள்ளபடி சொல்லட்டுமா!"

"ஒன்னும் வேண்டாம்! இடத்தைக் காலி பண்ணு முதலில்." லாவண்யா அவன் தோள்களில் கைகளைப்

பதித்து விளையாட்டாய்த் தள்ளி விட்டாள். "நீ எனக்குக் கணவன் ஆகாமல் போனது என் அதிருஷ்டம்." சற்றுக் கோபத்துடனும், புன்சிரிப்புடனும் கலந்து சொன்னாள்.

"என் அதிருஷ்டமும் தான்." விஜய் உடனே ஒப்புக் கொண்டான். லாவண்யாவுடன் திருமணம் நடைபெறாமல் போன விஷயம் நினைவுக்கு வந்தபோதெல்லாம், பெரிய ஆபத்திலிருந்து தான் தப்பிவிட்டது போல் தோன்றும்.

# 33

ஆனந்த், லாவண்யா இல்லாததால் ரோஜாவுக்கு என்னவோ போல் இருந்தது. வீட்டில் அதிக வேலையும் இல்லை. ராஜாவுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பதில் பொழுதைக் கழிக்க நினைத்தாள். ஆனால் வேணுகோபால் ரோஜாவை முடிந்தவரை தன் அருகிலேயே இருக்கச் சொல்வார். ரோஜாவின் வீட்டு விஷயங்களைத் தூண்டி தூண்டி விசாரிப்பார். மாலையில் வீட்டுக்குப் போகும் முன் ரோஜா அவரிடம் விடைபெற வரும்போது, அவளுடைய கையைப் பற்றிக் கொண்டு "நாளை கட்டாயம் வருவாய் இல்லையா?" என்று சின்னக் குழந்தையைப்போல் கேட்பார். ரோஜாவுக்கு வியப்பாக இருக்கும்.

"உனக்குத் தெரியாது. நானோ 'ஹார்ட் பேஷண்ட்'. மறுபடியும் உன்னைப் பார்க்க முடியுமோ இல்லையோ என்றுதான் பயப்படுகிறேன்" என்பார். ரோஜாவுக்கு அவருடைய பேச்சுகள் புரியவில்லை.

செந்தூரைப் பார்க்க அவர் துடிதுடித்துக் கொண்டிருந்தார். தினமும் காலையில் ரோஜா வந்ததுமே அவர் கேட்கும் முதல் கேள்வி செந்தூரைப் பற்றித்தான்.



ஊரிலிருந்து இன்னும் வரவில்லை என்று ரோஜா சொல்லும் போது, அவர் முகத்தில் ஏமாற்றத்தின் நிழல் படிவது தெளிவாகத் தெரியும்.

ரோஜாவுக்கு அவருடைய பேச்சுக்களை கேட்கும்போது அந்த அறையிலிருந்து எப்போ வெளியேறப் போகிறோம் என்று காத்திருப்பது போல் தரையில் பார்வையைப் பதித்து நின்று கொண்டிருப்பாள். உண்மையைச் சொல்லி விட வேண்டுமென்று சில சமயம் தோன்றினாலும், இனம் புரியாத தயக்கம் அவளைத் தடுத்துவிடும்.

தனக்குத் தந்தை இல்லையென்றும், தாய்மாமன் வீட்டைப் பற்றி அக்கறை காண்பிக்காததால் தான் இந்த வேலைக்கு வரத் துணிந்துவிட்டாள் என்றும், தன் தாய்க்கு இதில் கொஞ்சம்கூட விருப்பம் இல்லையென்றும் பேச்சு வாக்கில் ரோஜா அவரிடம் சொல்லி விட்டாள்.

"என் அம்மாவுக்கு என் தனித் தன்மையைப் பற்றியோ மன உறுதி பற்றியோ நம்பிக்கை கிடையாது. எனக்கு ஏதோ ஆகிவிடுமென்று அவள் பயப்படுகிறாள். உடல் நலம் குன்றிய நிலையில், ஒவ்வொரு நிமிஷமும் என்னைச் சந்தேகித்துக் கொண்டு மன அமைதியில்லாமல் தவிக்கிறாள். அர்த்தமில்லாத அவளுடைய சந்தேகங்களுக்காக எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை தவறவிடுவதில் எனக்கு விருப்பம் இல்லை."

தன் வீட்டு மனிதர்களைப் பற்றிச் சொல்லும்போது, தந்தையிடம் தனக்கு இருந்த வெறுப்பையும், துவேஷத்தையும் ரோஜா மறைக்கவில்லை.

"இந்த உலகில் நான் ரொம்ப வெறுக்கும் நபர் ஒருவர் இருக்கிறார் என்றால் அது என் தந்தை தான்."

"என்றாவது ஒருநாள் அவரை நீ நேரில் சந்திக்கும்படி நேர்ந்தால்?"

ரோஜாவின் முகத்தில் அருவெறுப்பும், துவேஷமும் போட்டியிட்டன. "அவரையா, நானா! நேரில் சந்திப்பதா!

என்னிக்கும் நடக்காது. வேண்டாம், அந்த மாதிரி பயங்கரமான நிகழ்ச்சி என் வாழ்க்கையில் ஏற்படக் கூடாது என்று கடவுளைத் தினமும் வேண்டிக்கிறேன்."

அவரிடம் உனக்கு இவ்வளவு வெறுப்பு ஏன் ரோஜா? என்ன இருந்தாலும் அவர் உன்னைப் பெற்ற தந்தையில்லையா?"

"அதனால்தான் இவ்வளவு வெறுக்கிறேன் அவர் செய்த மன்னிக்க முடியாத குற்றம், தன் பொறுப்புகளைத் துறந்து விட்டுப் போனதுதான். அவரால் பணம் சம்பாதிக்க முடியாமல் போகலாம். ஆனால் வாயில்லாத என் அம்மாவை, இரண்டு குழந்தைகளுடன் இந்த உலகில் தனியாக விட்டுவிட்டுப் போன அந்த நபரை வெறுக்காமல் என்னால் இருக்கமுடியாது. என் இடத்தில் நீங்க இருந்தால், வாழ்க்கையில் நாங்க பட்ட அவமானங்களை நீங்க சந்தித்து இருந்தால், நீங்களும் இப்படித்தான் பேசுவீங்க." என்றாள்.

"ஆமாம் ரோஜா! என்னால் உன் வேதனையை புரிந்து கொள்ள முடியும்." பலவீனமான குரலில் சொன்னார் வேணுகோபாலன்.

இங்கு வந்து போவதற்குத் தன் காரைப் பயன்படுத்திக்கச் சொல்லி, ரோஜாவை அவர் வற்புறுத்தியபோது, அவள் ஒப்புக்கொள்ளவில்லை. "இங்கு பஸ் ஏறினால் வீட்டுக்கு அருகில் இறங்கப் போகிறேன். எனக்கொன்றும் இடைஞ்சல் இல்லை, நான் நிறைய நாட்கள் உங்க அருகாமையில் இருக்க நினைக்கிறேன். நீங்கள் தரும் இந்தச் சலுகை என்னை ரொம்ப சங்கடப்படுத்தும். என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கூறி மறுத்துவிட்டாள்.

வேறு வழியில்லாமல் வேணுகோபாலன் மௌனமாய் இருந்துவிட்டார். சில சமயம் ரோஜா வெய்யிலில் கன்றிவிட்ட முகத்துடன், வியர்வைத் துளிகளை துடைத்துக் கொண்டே, வீட்டுக்குள் நுழையும் போது, அவருடைய மனம் பதைபதைக்கும். அவர் இதயத்தில் புதைந்து கொண்டிருக்கும் ரகசியம் ஏதோ வெளியில் வரத்துடிக்கும், ஆனால் அதுக்குச் சரியான நேரம் இன்னும் வரவில்லை என்ற விவேகம் அதை அடக்கி, மறுபடியும் இதயத்தின் ஆழத்தில் புதைத்துவிடும். அவருடைய உள் மனப்போராட்டத்தைப் பற்றி ரோஜா என்றுமே அறிந்ததில்லை.



ரோஜாவின் தாய்க்கு உடல் நலமில்லை என்றும், 'ஹிஸ்டீரியா பேஷண்ட்' என்றும் பேச்சுவாக்கில் தெரிந்து கொண்ட வேணுகோபாலன், தங்களுடைய ஃபாமிலி டாக்டரை அழைத்து, ரோஜாவுடன் சென்று அவள் தாயைப் பரிசோதித்து வைத்தியம் பார்க்கச் சொன்னார். ரோஜா இதற்கு மறுத்த போது, அவர் ஆணையிடுவது போல் சொன்னார்.

"நீ இந்த விஷயத்தில் மறுப்பு தெரிவிக்கக் கூடாது. இது போன்ற சூழ்நிலையில் நீ என்று இல்லை யார் இருந்தாலும், நான் உதவி செய்திருப்பேன். உனக்குச் சந்தேகம் இருந்தால் விஜயிடமோ, அனந்திடமோ கேட்டுத் தெரிந்து கொள்... ரோஜா! என்னிடம் வேண்டிய அளவு பணம் இருக்கு. சாவை நெருங்கிக் கொண்டிருக்கும் நான் அதை என்ன செய்யப் போகிறேன்? லாவண்யாவின் ஆடம்பரச் செலவுகளில் ஆயிரத்தில் ஒரு பங்காவது உன் தாய்க்காக செலவாகுமா? இந்த ஒரு விஷயத்தில் மட்டும் எனக்கு மன அமைதி கிடைக்கும்படி நடந்து கொள்.

திடீரென்று அவர் இரு கரங்களையும் நீட்டினார். ரோஜா உடனே அந்தக் கைளைப் பற்றிக் கொண்டாள். உணர்வுகளின் கொந்தளிப்பால் அவருக்கு வியர்த்துக் கொட்டியது. அங்கேயே இருந்த டாக்டர் உடனே சொன்னார்.

"நீங்க நிச்சிந்தையாய் இருங்க. நீங்க சொல்லுறது போல் நான் அந்த அம்மாவுக்கு வைத்தியம் பார்க்கிறேன்...

இந்த விஷயத்தில் இந்தப் பெண் என்ன? அந்தக் கடவுளே வந்தாலும் என்னை தடுக்க முடியாது... போதுமா!"

வேறு வழியில்லாமல் ரோஜா டாக்டரைத் தங்களுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

வேணுகோபாலனின் விலை உயர்ந்த கார் ரோஜா வீட்டின் முன் நிற்கவும், அக்கம் பக்கத்தில் குடியிருப்பவர்கள், எட்டிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

"சாவித்திரிக்கு என்ன? கொடுத்து வைத்தவள். மகள் வளர்ந்து ஆளாகிவிட்டாள். எவ்வளவு பெரிய கார்? ரொம்ப பெரிய டாக்டராய்தான் இருப்பார் 'பீசும்' நிறைய இருக்கும். ஆனால் அதைப்பற்றி என்ன கவலை? யாரோ பெரிய மனிதரைப் பிடித்திருக்காளே."

டாக்டர் வந்து போன பிறகு, வீட்டுக்கு விசாரிக்க வந்த அக்கம பக்கத்து வீட்டுப் பெண்கள் பேசிய பேச்சுகள் இவை.

டாக்டர் மறுநாள் வேணுகோபாலனிடம், ரோஜாவின் தாய் ரொம்ப பலவீனமாய் இருப்பதாகவும், மனதளவில் தைரியத்தை இழந்து விட்டதாகவும், அவளுக்கு அமைதியின்மை, கவலையைத் தவிர வேறு வியாதியில்லை என்றும் சொல்லி விட்டார். டாக்டர் போனதும், அதுவரை எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்த வேணுகோபாலன் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டார். அவருடைய நெஞ்சு வெடித்து விடும் போல் வேதனை ஏற்பட்டது.

"சாவித்திரீ... சாவித்திரீ..." அவர் மனம் தவித்தது.

ரோஜாவின் தாய்க்காக டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துகளைக் கடையிலிருந்து வரவழைத்து வேணுகோபாலன் அவற்றை ரோஜாவிடம் கொடுத்துக் கொண்டே, உன் அம்மா இந்த மருந்துகளைச் சரியாக உட்கொள்ளும்படிச் செய்யும் பொறுப்பு உன்னுடையது. அடுத்த முறை டாக்டர் உன் அம்மாவைப் பார்க்கும் போது



அவளுடைய உடல் நிலையில் ஓரளவுக்காவது முன்னேற்றம் தெரியா விட்டால், அந்த தவறு உன்னுடையது தான். தண்டனையை எதிர்கொள்ள வேண்டிவரும்."

"தண்டனை என்னவோ... நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் ரோஜா.

வேணுகோபாலன் ரோஜாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார். தான் சொல்லப் போவதைக் கேட்ட பிறகு ரோஜாவின் முகத்தில் ஏற்படப் போகும் மாறுதலை முன்னாடியே ஊகித்தவராய் மெதுவாய்ச் சொன்னார், "ரொம்ப பயங்கரமானதுதான், நீ ரொம்பவும் வெறுக்கும் உன் தந்தையைத் தேடிக் கண்டு பிடித்து உன் கண் முன் நிறுத்துவேன். நீ அவருடைய மகள் என்று சொல்லி அவரிடம் உன்னை ஒப்படைப்பேன்."

அவர் எதிர்பார்த்தது போலவே சிரித்துக் கொண்டிருந்த ரோஜாவின் முகம், கசப்பை விழுங்கினாற் போல் மாறியது. சட்டென்று அவர் கையில் இருந்த மருந்து பாக்கெட்டைப் பிடுங்கிக் கொண்டாள்.

"கொடுமையான தண்டனைதான். ஆனால் நான் ரொம்ப கவனமாக இருப்பேன். ஒருக்கால் எங்க அம்மா இந்த மருந்துகளை விழுங்க மறுத்தால், இடுக்கியால் வாயைத் திறக்கச் செய்தாவது வாயில் போட்டு விடுவேன்" என்றாள்.

"குட்" ரோஜாவின் பேச்சைப் பாராட்டுவது போல் சிரிக்க நினைத்தாலும், அவரால் முடியவில்லை. உள் மனதில் எங்கேயோ சுருக்கென்று வலித்தது.

"உன் தந்தையிடம் உனக்கு அவ்வளவு வெறுப்பா ரோஜா?"

"வெறுப்பு மட்டுமே இல்லை... பகை... துவேஷம்."

"ரோஜா!!"

"அவருடைய பொறுப்பற்றத்தன்மைக்கு நாங்க எப்படி பலியாகி விட்டோமென்று உங்களுக்குத் தெரியாது. என

விஷயத்தை விடுங்க... செந்தூ... செந்தூ நினைவுக்கு வந்தா மட்டும்..." ஆவேசமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தவள், சட்டென்று நிறுத்தி விட்டாள்.

"செந்தூவுக்கென்ன ஆயிற்று? அவன் நன்றாக தானே இருக்கிறான்?" புது விஷயம் கேட்பது போல் அவர் தலையை உயர்த்திக் கேட்டார்.

ரோஜா பதில் சொல்ல முடியாதவளாய், கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்று விட்டாள்.

"சொல்லு ரோஜா... செந்தூவுக்கென்ன ஆயிற்று? உன் அப்பாவின் பொறுப்பற்ற தன்மையால் அவன் நஷ்டமடைந்தது என்ன?"

உடனே பதில் எதிர்பார்ப்பது போல் வேணுகோபாலன் கேட்டார்.

இன்னும் இரண்டு நிமிடங்கள் சென்றிருந்தால், அவர் குரலில் இருந்த அழுத்தத்திற்கு இணங்கியவளாய், வேறு வழியில்லாமல் ரோஜா சொல்லி விட்டிருப்பாள். ஆனால் துரதிருஷ்டவசமாக அதே நேரத்தில் விஜய் ராதையின் கையைப் பிடித்துக் கொண்டு அறையில் காலடி எடுத்து வைத்தான்.

பதிலுக்காக சற்றுக் குனிந்து, ரோஜாவையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த வேணுகோபாலன் காலடிச் சத்தம் கேட்டதும், வாசற்பக்கம் தலையைத் திருப்பி, விஜயைப் பார்த்ததும், சமாளித்துக் கொண்டு, "விஜய்...வா...வா..." என்று அழைத்தார்.

அவருடைய கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திலிருந்து விடுபட்டதற்கு ரோஜா மனதிலேயே கடவுளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மெதுவாய் அங்கிருந்து வெளியேறிவிட்டாள்.

ரோஜாவின் கையிலிருந்த பெரிய பாக்கெட்டைப் பார்த்ததும் விஜயின் புருவங்கள் முடிச்சேறின. அது



என்னவாக இருக்கக்கூடும் என்ற யோசனையுடன் பார்த்தான்.

அவர்களின் உரையாடல் தன்னைக் கண்டதும் நின்று விட்டதை அவனால் உணர முடிந்தது. அவர்கள் அவ்வளவு சீரியஸாக பேசிக் கொள்ளும் விஷயம் என்னவாக இருக்க முடியும்?

# 34

மறுநாள் காலையில் எழுந்ததும் ரோஜா வழக்கம் போல் மாமிக்குச் சமையலில் உதவி செய்தாள். குளிக்கப் போகும் முன் தான் கொண்டு வந்த மருந்துகளைத் தாயின் முன் பிரித்து வைத்தாள்.

"அம்மா! இந்த மருந்து, மாத்திரை, டானிக் எல்லாம் டாக்டர் எழுதிக் கொடுத்தார் நீ இதைச் சாப்பிட்டு வந்தால் ஓரளவாவது உன் உடம்பு தேறும்" என்றாள் ரோஜா.

சாவித்திரி மருந்துகளையும், ரோஜாவையும் மாறி மாறிப் பார்த்தாள். "இதெல்லாம் எங்கிருந்து வந்தது?"

"எங்கிருந்து வந்தது? நான் வேலை பார்த்து வருவதை மறந்து விட்டாயா அம்மா!" என்று ரோஜா வியப்புடன் கேட்டாள்.

"வேலையா! நீ செய்யும் காரியத்துக்கு வேலை என்று பெயரா! இந்த உலகில் படித்தவர்களுக்கே வேலை கிடைக்காமல் இருக்கும் போது, படிப்பு அதிகமில்லாத உனக்கு வேலை...இருநூறு ரூபாய் சம்பளம்... மேலும் இதெல்லாம் இலவசமாய்க் கிடைக்கும்... பேஷ்... இது

போன்ற காரியங்களுக்கு வேலைன்னு பெயரை வைத்துக் கொண்டால், இனி இந்த உலகில் அநியாயம் என்ற பெயரே இருக்காது.''

''அம்மா!''

''ஆஹா! ரொம்ப அதிருஷ்டசாலி நான். என் பெண் வயது வித்தியாசம் பாராமல் ஒரு வயதானவருடன்...

''அம்மா!'' ரோஜா சரேலென்று தாயின் அருகில் ஓடி வந்து, அவள் வாயை கையால் மூடி மேலும் பேசாமல் தடுத்து விட்டாள். வெளிறிப் போய்விட்ட முகத்துடன், குரல் நடுங்கச் சொன்னாள்.

''அம்மா... இந்த உலகில் உன் ஒருத்திக்காகத்தான் நான் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கேன். தம்பி மீது ஆணையாய் சொல்கிறேன். நீ இந்த மாதிரி பேசி என் மனதைக் காயப் படுத்தாதே. என்னைப் பற்றி எது வேணுமானாலும் நினைத்துக் கொள். ஆனால் கடவுள் போன்ற அவருடன் மட்டும்...'' ரோஜாவின் கண்களில் நீர் சுழன்றது. குரல் கம்மி, வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

சாவித்திரி மகளின் கையைப் பிடித்துத் தள்ளி விட்டுச் சென்றாள். ரோஜாவின் கண்ணீர் அவளை துளிக்கூட சலனப்படுத்தவில்லை.

''நான் சொல்றதென்ன? எல்லோரும்தான் சொல்றாங்க. இந்த அனந்த் என்ற பையன் வீட்டுப்பக்கமே வருகிற தில்லையே? வரவேண்டாம்னு சொல்லி விட்டாயா!''

''என்னம்மா நீ சொல்றது? அந்த அனந்த் தானே எனக்கு இந்த வேலையை ஏற்பாடு செய்து கொடுத்தான்.''

''ஏற்பாடு செய்தான். எதுக்கு? நம் குடும்பத்துக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தில்... ஆனால் நீ... பணக்காரன் கிடைச்சதும் உனக்கு அனந்த் வேண்டாதவனாகி விட்டான். அப்படித்தானே... ரோஜா... உன்னை என்ன செய்தாலும் பாவம் கிடையாது.''



ரோஜா திக்பிரமை அடைந்தவளாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். தாயின் மூளை கலங்கி விட்டதா! என்ன பேசுகிறோமென்று உணர்ந்து தான் பேசுகிறாளா!

சாவித்திரிக்கு மூச்சு இரைத்தது. ''உன்னால் என் வாயை மூட முடியும். ஆனால் ஊர் வாயை மூட முடியுமா உன்னால்? நீ ஒரு தடவை சமையலறைக்குப் போய் உன் மாமியைக் கேளு, நேற்று மீனாட்சி அவங்க எல்லாம் வந்து என்ன சொல்லி விட்டுப் போனாங்கன்னு. எனக்குத்தான் வெட்கம், மானம் இல்லை. அதான் இன்னும் உயிருடன் இருக்கேன். வேறு யாராவது இருந்தால் இந்நேரம் தூக்கில் தொங்கி இருப்பாங்க.''

ரோஜா தூக்கத்தில் நடப்பவள் போல் சமையலறை வாசலுக்குச் சென்றாள். கதவை இறுகப் பற்றிக் கொண்டு, ''மாமி... என்ன விஷயம்? அவங்க என்ன சொன்னாங்க?'' என்று கேட்டாள்...

சமையல் அறையில் உட்கார்ந்து கொண்டு கீரையை ஆய்ந்து கொண்டிருந்த சுந்தரி இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். ''ஆமாம்! சொன்னாங்க, சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு... உலகம் பொல்லாததுன்னு யார் சொன்னாங்களோ உண்மையைத் தான் சொல்லியிருக்காங்க மற்றவங்களோட பேச்சை நாம் பொருட்படுத்துவானேன்? நம்ப மனதுக்கு நாம் நேர்மையாய் இருக்கோம். அது போதாதா...'' உதட்டைச் சுழித்துக் கொண்டே சொன்னாள் சுந்தரி.

''என்ன சொன்னாங்க?'' என்று ரோஜா கேட்டாள்.

''ஏதோ சொன்னாங்க .. அதெல்லாம் உனக்கு எதுக்கு? சொன்னவங்க வந்து நமக்கு சாப்பாடு போடப் போறாங்களா?''

''சொல்லுங்க மாமி!''

"என் கண்ணில்லையா நீ... உன் அம்மாவுக்குத்தான் மூளையில்லைன்னா, உனக்கும் இல்லையா? ஒரு பிடி சோறு உன்னைச் சாப்பிட விடாமல் செய்யத்தான் உன் அம்மா இந்த ராமாயணத்தை ஆரம்பித்துவிட்டாள் போலிருக்கு. நீ குளிக்கப் போ, உனக்கு நேரமாகி விட்டது."

அறையிலிருந்து சாவித்திரி எழுந்து வந்தாள். அவளால் நிற்கக்கூட முடியவில்லை. உடல் தள்ளாடியது.

"எதுக்கு அண்ணி மறைக்கறீங்க? ஆமாம்... ஆமாம்... நீங்க எப்படிச் சொல்லுவீங்க? சொன்னால், அவன் அந்த கேடு கெட்ட வேலையை விட்டுவிடுவான், பிறகு உனக்குப் பணம் எனக்கு வராது." ரோஜா பக்கம் திரும்பியவள், பணம் எப்படிப்பட்டதோ பார்த்தாயா ரோஜா! மனிதர்களின் வாயை அடைத்துவிடும். உன் மாமியே மாறி விட்டானே."

சுந்தரியின் முகம் சிவந்து போயிற்று. கிடுகிடுவென்று கீரையை நறுக்கத் தொடங்கினாள்.

"நீதான் சொல்லேன். அவங்க அப்படி என்னதான் சொன்னாங்க?" பொறுமை இழந்தவளாய்த் தன் தாயைக் கேட்டாள் ரோஜா.

"என் வாயால் அதைச் சொல்ல முடியாது. நீ அந்த வேலையை விட்டுவிடு" என்று சாவித்திரி திடீரென்று இரு கரங்களையும் கூப்பி அழுதுகொண்டே சொன்னாள். "ரோஜா! என்னால் இந்த அவதூறு பேச்சுக்களைத் தாங்க முடியவில்லை. உன்னைக் கெஞ்சி கேட்டுக்கறேன், உனைப் பெற்ற பாவத்துக்கு என்னை இம்சிக்காதே நீ வேலையை விட்டுவிடு."

"எதுக்காக விடணும்? தேவையற்ற சந்தேகங்களால் உன்னை நீயே இம்சித்துக் கொண்டால், என்னால் ஒன்றும் செய்யமுடியாது. யாரோ ஏதோ சொன்னாங்கன்னு நான் ஏன் வேலையை விடணும் நான் அவருடைய நிழலை விரும்புவது வெறும் சம்பளத்துக்காக மட்டும் இல்லை."



ரோஜா அங்கிருந்து போகப் போனாள். சாவித்திரி ரோஜா மீது பாய்வது போல் வந்தாள்.

"என் பேச்சைக் கேட்க மாட்டியா?"

"மாட்டேன்" திடமாய்ப் பதில் அளித்தாள் ரோஜா.

"கேட்க மாட்டியா? எவ்வளவு தைரியம் உனக்கு? எவ்வளவு திமிரு? எப்படிக் கேட்கமாட்டாயோ பார்க்கிறேன். உன் காலை ஒடித்துப் போட்டு விடுவேன். உன் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவேன்."

ரோஜா விரக்தியாய் மொழிந்தாள். "நீ அந்த வேலையை இருபது வருடங்களுக்கு முன்பே செய்திருந்தால், உனக்கும் எனக்கும் இந்த வேதனை, கஷ்டம் எதுவும் இருந்திருக்காது இப்போ அப்படி நடக்காது."

"என்ன சொல்றே நீ! ... நீ... என்னை கையாலாகாதவன்னு குத்திக் காட்டறியா? என் வேதனையைப் பற்றி உனக்கென்ன தெரியும்? கட்டின புருஷன் ஏமாற்றி வாழ்க்கையை நாசமாக்கிய போது, சாப்பாட்டுக்கும் வழியில்லாமல், சாவதற்கும் சுதந்தரமில்லாமல் நீங்க ரெண்டு பேரும் என் வாழ்க்கைக்கு இடைஞ்சலாய் இருந்து விட்டு... இப்போ... நீ... நீ... என்னை மதிக்க மாட்டாயா?"

சாவித்திரி ரோஜாவின் பின்னலைப் பிடித்து அருகில் இழுத்தவள், ஹிஸ்டீரியா வந்தவள் போல் இரு கன்னங்களிலும் மாறி மாறி அடிக்கத் துவங்கினாள்.

"அய்யோ... அய்யோ... உன் கையைப் ஒடித்து அடுப்பில் வைக்க. இன்னிக்கு என்ன வந்தது உனக்கு? அந்தப் பெண்ணை அப்படிப் போட்டு அடிக்கிறியே?"

சுந்தரி கை காரியத்தை விட்டுவிட்டு ஓடிவந்தாள். ஆனால் சாவித்திரி எதையும் காதில் வாங்கும் நிலைமையில் இல்லை. ரோஜாவின் கழுத்தை கைகளால் அழுத்திக் கொண்டே, "அப்போ ஏன் கொன்று விடலைன்னு கேட்டியே. அப்போ செய்யாத காரியத்தை இப்போ

செய்யறேன். உன்னைக் கொன்றால்தான் எனக்கு நிம்மதி, பிறகு நானும் நிம்மதியாகச் செத்துடுவேன்."

"ஐயோ... ஐயோ... அவளைக் கொன்றுவிடப் போகிறாயா என்ன?" சுந்தரி சாவித்திரியின் கைகளை வலுக்கட்டாயமாய்ப் பிரித்து அவளைத் தள்ளிவிட்டாள். ரோஜாவின் தோள்களைப் பற்றி அருகில் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

சுந்தரி தள்ளியதில், சுவரில் போய் முட்டிக்கப் போன சாவித்திரி, எப்படியோ சமாளித்துக் கொண்டு நின்று, திரும்பினாள். குட்டிகளை ஈன்ற பெண் புலியின் கண்களைப் போல் அவள் கண்கள் பளபளவென்று மின்னின. "என் மகள்... என் இஷ்டம்... நான் என்ன வேணும்னாலும் செய்வேன். கேட்கிறதுக்கு நீ யாரு?"

என்றைக்கும் இல்லாத விதமாய் நாத்தனார் அப்படிப் பேசியதுகண்டு சுந்தரிக்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை. உடனே சமாளித்துக் கொண்டு எரிந்து விழுந்தாள். "எப்படி? எப்படி? உன் மகளா! இப்படிச் சொல்ல உனக்கு வாய் எப்படி வந்தது? என்னிக்காவது உன் மகளுக்குச் சோறு ஊட்டி வளர்த்து இருக்கியா? ஒரு நாளாவது தலை வாரிப் பின்னி இருக்கியா? குளிப்பாட்டி விட்டாயா? அப்போ இல்லாத அதிகாரம் இன்னிக்கு வந்துவிட்டதா உனக்கு? கிட்டினாலும் அவளை வளர்த்து ஆளாக்கினது யாரு? நீ இந்த வீட்டிற்கு வந்ததில் இருந்து, உன் மகள் என்பதைவிட, என்னுடைய மகளாய்தான் வளர்ந்திருக்கா. அவள்மீது உரிமை இருக்குன்னு சொன்னால், எனக்குத்தான் இருக்குமே தவிர உனக்கு இல்லை. நான் செய்யச் சொன்னா வேலை செய்வா, வேண்டாம்னா விட்டு விடுவா. நடுவில் உன்னோட நாட்டாமை எதுக்கு? இதோ நன்றாகக் கேட்டுக்கொள். இனி அவள்மீது உன் கைபட்டால் தெரியும் சேதி. ஏன்? உன் அருமை மகன் செய்ததைவிட வேண்டாத வேலை செய்து விட்டாளா?



அவன் செய்த அநியாயங்களுக்கு உனக்கு ரோஷம் வரவில்லையே? எப்போதும் எந்த விஷயத்தையும் காதில் போட்டுக் கொள்ளாத உனக்கு இந்த விஷயம் மட்டும் புத்தியில் உறைப்பானேன்? அவ்வளவு ரோஷப்படுகிறவளாக இருந்தால், நீ என்னிக்கோ இந்த வீட்டை விட்டுப் போயிருக்கணும். உன் மனதில் இருக்கிற அசல் விஷயம் எனக்குத் தெரியாதா? அவள் ஏதோ ரெண்டு காசு சம்பாதிச்சு கொண்டுவர்றதை நான் அனுபவிச்சுகிட்டு இருக்கேன். அதனால் உனக்குப் பொறாமை..."

கடைசியாய் சுந்தரி வீசிய பழிச்சொற்களைத் தாங்க முடியாத சாவித்திரி, பைத்தியம் பிடித்தவள் போல் பார்த்துவிட்டு, அங்கிருந்து மெதுவாய் நகர்ந்து விட்டாள்.

என்றும், யாராலும், அடிவாங்கியிராத ரோஜா, இன்று வேதனை பொங்கி வர, மாமியின் நெஞ்சில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள். என்றுமில்லாத விதமாய் ரோஜா இப்படிச் சின்னக் குழந்தை போல் அழுவதைப் பார்க்கும் போது சுந்தரியின் மனம் இளகி விட்டது. விரல் அடையாளங்கள் பதிந்து விட்ட ரோஜாவின் கன்னங்களை மென்மையாக வருடி விட்டு, "என் கண்ணே! அழாதே! உன் அம்மாவுக்கு வர வர மூளை மங்கிக் கொண்டு வருகிறது. நீ கண்ணில் தென்பட்டால் போதும், ஹிஸ்டீரியா வந்தவள் போல் கத்துகிறாள். போ... போய்க் குளித்துவிட்டு வா... அவள் சொன்னதை எதுவும் மனசுல வெச்சுக்காதே. இந்த வேலை, கிடைச்சது நம் அதிர்ஷ்டம்தான்... நீ அந்த நாலு காசு சம்பாதிக்கத் தொடங்கிய பிறகு தான், வேளைக்கு ஒழுங்காய்ச் சாப்பிடுகிறோம். உலகத்துக்கு என்ன? வாய்க்கு வந்தபடி பேசும். அப்படிப் பேசறவங்க எல்லாம் நம்முடைய சூழ்நிலையில் இருந்தால், அவங்களும் இதே வேலையைத்தான் செய்வாங்க. மத்தவங்க பேச்சை நாம பொருட்படுத்துவானேன்?" நயமாக, ஆறுதலளிப்பது போல் சுந்தரி சொன்னாள்.

பத்து நிமிடம் கழித்து சுந்தரி ரோஜாவை வற்புறுத்தி பாத்ரூமில் தள்ளிக் கதவைச் சாத்தினாள்.

சுந்தரிக்கு, சாவித்திரி மேல் ஆத்திரமாய் வந்தது. வயசு வந்த பெண்ணை கை நீட்டி அடிக்கலாமா? காலா காலத்தில் கல்யாணம் செய்து வைக்க முடியாத போது, இன்னும் அவளைத் துன்புறுத்தலாமேலா? இத்தனைக்கும் ரோஜா என்ன தப்பு செய்து விட்டாளாம்? ஆண் பிள்ளை போல் வீட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, நல்லது கெட்டது கவனித்துக் கொண்டு இருப்பவளை, யாரோ ஏதோ சொன்னாங்கன்னு வாய்க்கு வந்தபடி பேசலாமா?

சுந்தரிக்கு ரோஜாவிடம் எப்போதுமே கொஞ்சம் அபிமானம் உள்ளூர இருந்து வந்தது. வீட்டில் இல்லாமையால், கஷ்டங்களில், யாரையும் எதையும் சொல்ல முடியாத போது ரோஜாவை திட்டியும், கோபித்துக் கொண்டும் இருக்கிறாள். இப்போ, வேலை கிடைத்த பிறகு ரோஜா தன்னைப் பொருட்படுத்தமாட்டாள் என்றும், பழைய விஷயங்களை நினைவில் வைத்துக் கொண்டு தன்னை இளக்காரமாய் பேசுவாள் என்றும் சுந்தரி எதிர்பார்த்தாள்

முதல் மாத சம்பளம் வாங்கியதும் ரோஜா மாமியின் கையில் அப்படியே கொடுத்து விட்டு, ''மாமி... இது என் முதல் சம்பாத்தியம்...உங்க புடவைக்கு ஐம்பது ரூபாய், மற்றது வீட்டுக்கு'' என்று சின்னக் குழந்தை போல் உற்சாகம் பொங்கும் குரலில் சொன்னபோது, சுந்தரியின் இதயம் கரைந்துவிட்டது ரோஜாவிடம் தான் நடந்து கொண்ட முறைக்கும், அக்கம் பக்கத்தாரிடம் அவளைப் பற்றி புகார் செய்ததையும் நினைத்து வெட்கப்பட்டாள். அவள் உள் மனதில் புதைந்திருந்த அன்பு ஊற்று இந் நிகழ்ச்சியால் மீட்டுக் கொண்டு வெளியே வந்தது. ரோஜா மற்றப் பெண்கள் போல் இல்லை என்று திடமாய் நம்பிய சுந்தரி முன்போல் அக்கம் பக்கத்தாரிடம் வீட்டு விஷயங்களை சொல்வதை நிறுத்திவிட்டாள்.



பாத்ரூம் கதவில் சாய்ந்து உட்கார்ந்து விட்ட ரோஜாவுக்கு உலகமே தனக்கெதிராய் நிற்பது போல் தோன்றியது. ''ஆஹா! ரொம்ப அதிருஷ்டசாலி தான். என் பெண் வயது வித்தியாசம் பாராமல்...'' எவ்வளவு மறக்க முயன்றாலும் தாயின் குரல் செவிகளில் வந்து மோதியது. அவளால் அழுகையை நிறுத்த முடியவில்லை. பெரிய பாறாங்கல் நெஞ்சின்மீது வைத்தது போல் இதயம் கனத்தது. தன் தாய் தன்னை கொஞ்சம் புரிந்து கொள்ள முடிந்தால் கொஞ்சம் வெளியில் வந்து உலகத்து நடப்புகளை, போட்டி பொறாமைகளை தெரிந்து கொண்டால்?... ஊஹூம்! அவள் எதையுமே செய்ய மாட்டாள்... தன் அப்பாவித் தனத்தால், முட்டாள் தனத்தால் தன்னைத் தானே இம்சித்துக் கொள்கிறாள். மற்றவர்களையும் காயப்படுத்துகிறாள்.

எப்படியோ, ஒருவாறு குளியலை முடித்துக் கொண்டு ரோஜா வெளியில் வந்தாள் உள் அறையில் சாவித்திரி, ரோஜா சற்றுமுன் ஸ்டூல்மீது வைத்திருந்த மருந்து பாட்டில்களை, ஒவ்வொன்றாய் எடுத்து சுவற்றில் வீசி, அவை உடைந்து கீழே விழுவதைப் பார்த்து, திருப்தியாய், பகை தீர்த்துக் கொள்வது போல் பார்த்துக் கொண்டிருந்தாள். நடுநடுவில் சிரித்துக் கொண்டும், முணுமுணுத்துக் கொண்டும் இருந்தாள்...

''அம்மா?'' ரோஜா சட்டென்று உள்ளே போகப் போனாள். ஆனால் சுந்தரி அவளைத் தடுத்து விட்டாள். ரோஜா மாமியைக் குழப்பமாகப் பார்த்தாள்.

''அவள் இப்போ சுய நினைவில் இல்லை... நீ அருகில் போனால் இன்னும் அதிகமாகி விடும்'' என்றாள் சுந்தரி.

ரோஜா கற்சிலையாக நின்றுவிட்டாள். தாயிடம் சென்று, அணைத்து ஆறுதல் சொல்லி, அவளை அமைதிப் படுத்த நினைத்தாலும், மாமி சொல்வது போல் தன்னைப் பார்த்தால் இன்னும் தீவிரமாய் நடந்து கொள்வாள் என்று

தோன்றியதால், திரும்பி விட்டாள். அரை மணி நேரம் கழித்து ரோஜா, மாமி வற்புறுத்தியதால் சாப்பிட்டதாகப் பேர் பண்ணிவிட்டு வேணுகோபாலன் வீட்டுக்குக் கிளம்பினாள்.

சாவித்திரிக்கு மறுபடியும் ஃபிட்ஸ் வந்து விட்டது இந்தத் தடவை தீவிரமாய், நடுநடுவில் குறட்டை போன்ற ஒலி அவளிடமிருந்து வந்து கொண்டிருந்தது. இளைத்து கறுத்து விட்ட உடலும், நரைத்து விட்ட தலைமுடியுடன், பார்ப்பதற்கு பைத்தியக்காரியைப் போல் தோற்றமளித்த தாயைப் பார்க்கும் போது ரோஜாவின் இதயம் கசிந்து உருகிவிடும்.

இந்த உலகில் குழந்தைகளின்பால் பெற்றோருக்கு எந்தப் பொறுப்புகள் இருக்குமோ ரோஜாவுக்குத் தெரியாது. ஆனால் தாய் தந்தையிடம் குழந்தைகளுக்கு இருக்கும் பொறுப்பு ரொம்ப அபூர்வமானது. வயதான காலத்தில் பெற்றோருக்கு மன அமைதியும், சுகத்தையும் தராத குழந்தைகள் குற்றவாளிகள் தான்! தன் தாய்க்காக தன்னால் முடிந்ததை செய்ய வேண்டுமென்று ரோஜா துடித்துக் கொண்டிருந்தாள். தனக்கு வேலை கிடைத்தது. பொருளாதார வசதியும் சற்று மேம்பட்டால், தாயின் உடல் நலமும் சீரடையும் என்று ரோஜா எதிர்பார்த்தாள். ஆனால் தாய் தான் செய்யும் வேலைபற்றி எதிர்ப்பு உணர்வு கொண்டதோடு, தன்னைத் தவறாக எண்ணிவிட்டது ரோஜாவுக்குப் புதிய பிரச்னையை ஏற்படுத்தியது.

24166
4114288

## 35

இரண்டு மூன்று நாட்கள் சென்றன. சாவித்திரி மகளுடன் பேசுவதையே நிறுத்தி விட்டாள். ஒரிரு முறை ரோஜா பேச முயன்ற போதும், "போ... போ... நான் யாரு



உனக்கு? என்னோடு ஏன் பேசறே? உண்மையிலேயே நீ என் மகளாய் இருந்தால், உனக்கு நான் வேண்டுமென்றால் அந்தக் கேடுகெட்ட வேலையை விட்டிருப்பாய். ஆமாம். ஆமாம்! நான் சொல்றதை நீ கேட்க வேண்டிய தேவை என்ன? உன் மாமி சொன்னது போல் நான் உன்னை வளர்த்தேனா, ஆளாக்கினேனா? என்ன செய்து விட்டேன் என்று நீ என் பேச்சைக் கேட்கணும்?" என்று விரட்டுவது போல் பேசினாள்.

"அம்மா!" வேதனையுடன் விளித்தாள் ரோஜா.

"அம்மாவாம் அம்மா! உன் அம்மா என்னிக்கோ செத்துப் போய் விட்டாள். இப்போ இருக்கிறது வெறும் உடல் மட்டும் தான்... சாவதற்குத் துணிச்சல் இல்லாத வெட்கங்கெட்ட உடல்" சாவித்திரி சுவர் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அன்றைக்கு, "அது உன் மகளில்லே, என்னுடைய மருமகள்" என்று மாமி சொன்ன வார்த்தைகள், தாயின் மனதை எவ்வளவு காயப்படுத்தி விட்டனவோ, ரோஜாவுக்குத் தெரியாமல் இல்லை. தாய்க்கு மன அமைதி கிடைக்க வேண்டுமென்றால் தான் இந்த வேலையை விட்டு விட வேண்டும்.

ரோஜா வேறு எதையும் விட்டுவிடத் தயாராக இருந்தாள்! ஆனால் தன் மனதுக்கு எவ்வளவோ ஆறுதலாய் நிம்மதியாய் இருக்கும் வேணுகோபாலனின் நிழலை மட்டும் விட்டுவிட அவள் தயாராக இல்லை. பணமும் சமுதாயத்தில் நல்ல செல்வாக்கும் கொண்ட அவர் மூலமாய்ச் சேந்தானின் வாழ்க்கையைச் சீரமைத்து சரியான வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்ற கோரிக்கை அவள் மனதில் வேரூன்றி விட்டிருந்தது. தாயின் சுபாவம் அவள் நன்றாக அறிந்தது தான்.

தாயின் சொற்களைப் பொருட்படுத்தாமல் இருப்பதா இல்லை நாளுக்கு நாள் க்ஷீணித்துக் கொண்டிருக்கும்

அவளுடைய உடல் நிலையைக் கருதி வேலையை விட்டு விடுவதா! ரோஜாவுக்கு பெரிய பிரச்னை எதிரில் நின்றது. தாயின் உடல் நலமும், வேணுகோபாலனின் ஆதரவும்... இரண்டுமே முக்கியமானதாகத் தோன்றின.

அன்று வேணுகோபாலன் ஒரு மருந்து பாட்டிலை ரோஜாவிடம் கொடுத்து "இந்த மருந்து அன்று கிடைக்கவில்லை. இன்றுதான் ஸ்டாக் வந்திருக்காம். நரம்பு தளர்ச்சிக்கு ரொம்ப நல்லதாம். காலையிலும், இரவிலும், இரண்டு வேளையும் தவறாமல் கொடு. உன் அம்மாவுக்கு இப்போ எப்படி இருக்கு? மருந்துகளை ஒழுங்காகச் சாப்பிடுகிறாளா?" என்று கேட்டார்.

ரோஜா சட்டென்று முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள். கண்ணில் பொங்கிய நீரை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"ரோஜா! என்னம்மா? இந்தப் பக்கம் திரும்பு" பதட்டமாய்க் கேட்டார் வேணுகோபாலன்.

மூன்று நாட்களாய் மறைத்து கொண்டிருந்த பாரத்தை, இனி தாங்க முடியாதவளாய், ரோஜா எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். பேச்மறந்தவர் போல், கண்கள் அகல பார்த்துக் கொண்டிருந்தார் வேணுகோபாலன். அவர் முகம் ரத்தம் வற்றிவிட்டாற் போல் வெளிறிப் போய் விட்டது. அவரைப் பார்க்கவும் ரோஜா தவறு செய்து விட்டவள் போல் உணர்ந்தாள்.

"தேவையில்லாத விஷயங்களைச் சொல்லி உங்களைக் கஷ்டப்படுத்தி விட்டேன்... உங்களிடம் இதையெல்லாம் சொல்ல வேண்டாம் என்றுதான் நினைத்தேன். ஆனால் என் மன வேதனையை உங்களைத் தவிர வேறு யாரிடமும் சொல்லமுடியாதோ என்று தோன்றியது. அம்மா என்னுடன் பேசுவதை நிறுத்திவிட்டாள் என்று நினைவுக்கு வரும் போது எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டாற்போல்



இருக்கும். ஒரு பிரச்னை தீர்ந்தது என்று நினைத்தால், வேறு பிரச்னை உருவாகிவிடும் என் வாழ்க்கையில்."

வேணுகோபாலன் அவள் சொல்வதைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

"ரோஜா இங்கே என் அருகில் வாம்மா" கையை நீட்டிக் கொண்டே அழைத்தார். அந்த அழைப்பில் பதட்டம், வேதனை, அன்பு எல்லாம் கலந்து வெளிப்பட்டது.

ரோஜா அருகில் வந்தாள். ரோஜாவின் கையை அழுத்தமாய்ப் பற்றியவர் "இந்த உலகில் நீ உயிருக்கு மேலாக நினைப்பவர்கள் யாராவது இருக்காங்களா?"

"வேறு யார் இருக்காங்க? என் அம்மாவும், செந்தூவும்."

"அவர்கள்மீது ஆணையாய் நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தரணும்."

"சொல்லுங்க."

"எந்தச் சூழ்நிலை வந்தாலும் என்னை விட்டு விலகிப் போக மாட்டேன் என்றும், இங்கு வருவதை நிறுத்த மாட்டேன் என்றும் சத்தியம் செய்து தரணும்" கையை நீட்டிக் கொண்டே சொன்னார்.

ரோஜா அவரை வியப்புடன் பார்த்தாள். பிறகு தாழ்ந்த குரலில், தனக்குத்தானே சொல்லிக் கொள்வது போல் சொன்னாள்.

"நீங்க ஏன் இப்படிக் கேட்கறீங்கன்னு எனக்குப் புரியவில்லை. இந்த வேலை எனக்கு ரொம்ப தேவையாய் இருக்கு. உங்களுடைய அருகாமையில் நான் எவ்வளவு ஆறுதல் அடைகிறேன் என்பதை, உங்களால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. நீங்களாகவே என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினால் ஒழிய நான் உங்களை விட்டுப் போக மாட்டேனோ என்னவோ!"

ரோஜா...ரோஜாம்மா...''அவர் சட்டென்று ரோஜாவின் இருகரங்களில் தன்முகத்தைப்புதைத்துக் கொண்டார். ரோஜாவின் உள்ளங்கையில் அவருடைய கண்ணீரின் ஈரம் படிந்தது என்ன செய்வது என்று புரியாதவளாய், ரோஜா அப்படியே நின்று விட்டாள். வேணுகோபாலன் ரோஜாவின் கையை விடுவித்து, தலையை உயர்த்தாமலேயே பக்கத்திலிருந்த பேப்பரை எடுத்துக் கொண்டே ''போம்மா—ஒரு கப் ஹார்லிக்ஸ் அனுப்பி வை'' என்றார். ரோஜா மெதுவாய் வெளியே வந்து விட்டாள்.

அவருடைய உணர்வுகளின் கொந்தளிப்பைக் கவனித்த ரோஜா வியப்படைந்தாள். ஏற்கனவே இதய நோய் உள்ளவர்,எந்தச் சின்ன விஷயத்துக்கும் உணர்ச்சிவசப்படக் கூடியவர், தான் கவனமாய் இருக்கணும். இது போன்ற விஷயங்களைச் சொல்லி, அவர் மனதுக்கு வேதனை அளிக்கக் கூடாது.

இந் நிகழ்ச்சியால், இருவருக்குமிடையே நெருக்கம் அதிகமாயிற்று. இதுவரை என்றும், யாரிடமும் உணர்ந்திராத அன்பு, பாசம், அபிமானத்தை உணரத் தொடங்கினாள் ரோஜா.

# 36

**லா**வண்யா சவுத்டூரை முடித்துக் கொண்டு திரும்பி வந்த போது. வீட்டில் ஊகித்தும் இராத மாறுதல்கள் தென்பட்டன. தான் இல்லாத இந்த சில நாட்களில் ரோஜா தன் தந்தைக்கு நெருங்கியவளாய் ஆனதோடு, வேலைக்காரர்களிடமும் தனி இடத்தை பிடித்துக் கொண்டு விட்டாள். யாருக்கு எது வேணும்னாலும் அவளைத்தான்



ாகட்கத் தொடங்கினார்கள். அவர்கள் ரோஜாவிடம் ஒரு விதமான சிரத்தையுடன், மரியாதையுடன் பழகுவது மிகத் தெளிவாகப் புரிந்தது- முன் பின் அறிந்திராத ரோஜாவிடம், சில நாட்களுக்குள்ளேயே, தன் தந்தைக்கு இவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டது, லாவண்யாவுக்கு நம்ப முடியாததாய் விசித்திரமாய்த் தோன்றியது. பெற்ற மகளாயிருந்தும், என்றும் தனக்கு கிடைக்காத உரிமையை அன்பினை அவர் ரோஜாவுக்கு அளித்துக் கொண்டிருந்தார். லாவண்யாவுக்கு ரோஜாவிடம் பொறாமை ஏற்படத் தொடங்கிற்று.

ராதையும் ரோஜாவுக்கு ரொம்ப நெருக்கமானவளாகி விட்டாள். இதெல்லாம் தான் டூருக்குப் போனதால் வந்த வினை என்று லாவண்யா எண்ணத் தொடங்கினாள். லாவண்யாவின் மனதில் கனிந்து இருக்கும் பொறாமை பற்றியோ, சந்தேகத்தையோ ரோஜா அறிந்திருக்கவில்லை. தெரியும் வாய்ப்பும் இல்லை ஏன் எனறால் லாவண்யா ரோஜாவிடம் வழக்கம் போல்தான் பழகிக் கொண்டிருந்தாள். ஆனால் ரோஜா அறியாமல், அவளை வேவு பார்க்கத் தொடங்கினாள்.

இதற்கு முன் வீட்டுப் பொறுப்புகளைச் சுமையாய், தன் சுதந்திரத்துக்கு இடைஞ்சலாய் நினைத்திருந்த லாவண்யா, ரோஜாவின் வருகையால் அந்தப் பொறுப்பு, நீங்கி விட்டதை எண்ணி மகிழ்ச்சி அடைவதற்கு மாறாய், அந்த வீட்டில் தன் இடத்தை இழந்து விட்டது போல் உணரத் தொடங்கினாள். எப்போதும் தந்தையிடம் குற்றம் காணும் லாவண்யா இந்த விஷயத்திலும், அவர் தனக்கு அநியாயம் செய்து விட்டது போல் ஊகித்துக் கொண்டு, அவரை மேலும் வெறுக்கத் தொடங்கினாள். இன்னொரு விஷயமும் அவள் கவனத்திலிருந்து தப்பவில்லை. வேலைக்காரர்கள் இதற்கு முன் போல் தன தயவுக்காக ஏங்குவதில்லை. தன் கண் அசைவுகளுக்கு ஏற்றாற்போல் நடந்து கொள்வதில்லை, இந்த நிலைமையை லாவண்யாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. யாரையும், எதையும் சொல்ல முடியாத

வளாய், தேவையில்லாமல், ஏதோ சாக்கு வைத்துக் கொண்டு வேலைக்காரர்களைத் திட்டி தன் கோபத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள்.

ரோஜாவுக்கு லாவண்யாவின் மனநிலை புரியவில்லை. லாவண்யா காண்பித்துக் கொண்டிருக்கும் சிநேகத்துக்குப் பின்னாடி வேறு ஏதோ எண்ணம் இருப்பது போல் தோன்றினாலும், அது என்னவென்று தெளிவாகப் புரியாமல் குழப்பமடைந்தாள். வாழ்க்கையில் எல்லாம் இருந்தும், சில சுகங்களை நிரந்தரமாய் இழந்து விட்ட லாவண்யா, மனதளவில் ரொம்ப அதிருப்தியாய் இருப்பதாகவும், அதனால் தான் இப்படி நடந்து கொள்கிறாள் என்றும் எண்ணிவிட்ட ரோஜா, அவளுடன் இன்னும் நட்பால், ஆதரவுடன் நடந்து கொள்ள முயன்றாள். ரோஜாவின் இந்த முயற்சியை சந்தேகக் கண்களுடன் பார்த்த லாவண்யா, வேறு விதமாய்ப் புரிந்து கொண்டாள் ரோஜா நட்பின் பெயரில் தன்னைப் பிடியில் வைத்துக் கொள்ள நினைப்பதாய் எண்ணிய லாவண்யா, ரோஜாவிடம் நட்பாய் இருந்து கொண்டே, இரு பொருள்பட பேசத் துவங்கினாள்.

வந்த புதிதில் ரோஜா, லாவண்யாவை நீங்க என்று அழைத்த போது, "நான்சென்ஸ்! சம வயதில் இருக்கிறோம்? என்னை பன்மையில் கூப்பிட வேண்டாம். ஒருமையில் அழைத்தால் தான் நமக்குள் நெருக்கம் இருப்பது போல் தோன்றும்" என்று வற்புறுத்தி ரோஜா தன்னை ஒருமையில் அழைக்கும்படிச் செய்த லாவண்யாவுக்கு, இன்று அந்த அழைப்பு முள்ளாய்க் குத்தியது.

தான் அவசரப்பட்டு ரோஜாவுக்கு உரிமை கொடுத்து விட்டாள். தன் பர்சனல் விஷயங்களையும் ஒளிவுமறைவில்லாமல் அவளிடம் சொல்லி விட்டாள். தான் அவளிடம் சொன்ன விஷயங்களை பேச்சுவாக்கில் தன் தந்தையிடம் கூறிவிடுவாளோ என்று சந்தேகப்படும் லாவண்யாவுக்கு,



ரோஜாவுடன் சிநேகமாய் இருப்பது போல் நடிப்பதும் கஷ்டமாகத்தான் இருந்தது. கூடிய சீக்கிரத்தில் ரோஜாவை ஏதாவது ஒரு சாக்கு வைத்து, இந்த வீட்டிலிருந்து வெளியேற்றி விடணும் என்ற நினைப்பு அவளிடம் அடிக்கடி தோன்றத் தொடங்கியது.

* * *

ரோஜா வழக்கம் போல்வேணு கோபாலன் வீட்டுக்குப் போவதற்காகப் பஸ்டாபில் நின்றிருந்தாள். சைக்கிளில் வேகமாய் வந்த ஒரு பையன், ரோஜா அருகில் வந்தான்.

"உங்க பேர் ரோஜா தானே?" என்றான்.

ரோஜா ஆம் என்பது போல் தலை அசைத்தாள். அந்தப் பையன் கையில் இருந்த கடிதத்தை ரோஜாவின் கையில் திணித்துவிட்டு "செந்தூ கொடுக்கச் சொன்னாங்க" என்றவன், சிட்டாய்ப் பறந்து விட்டான்.

ரோஜா கசங்கி இருந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்.

"ரோஜா,

நான் இன்று இரவு ஊருக்குப் போகிறேன். இன்னும் சில நாட்கள் வரை உன்னைப் பார்க்கச் சௌகரியப்படாது என்று நினைக்கிறேன். இதைப் பார்த்ததும் நீ உடனே ஸ்டேஷனுக்கு வா. நான் அங்கே உனக்காகக் காத்திருப்பேன்.

செந்தூ."

ரோஜாவின் இதயம் படபடத்தது. உடனே தான் நின்ற பஸ் ஸ்டாப்பை விட்டு எதிர் பக்கமாய் இருந்த பஸ் ஸ்டாப்புக்குச் சென்று ரயில் நிலையத்துக்குப் போகும் பஸ் வந்ததும் அதில் ஏறினாள். இரவு ஊருக்குப் போகப் போகிறவன், இப்பவே ஸ்டேஷனில் இருப்பானேன்? ரோஜாவுக்குப் புரியவில்லை. எப்படியாவது

வேணுகோபாலலைச் சந்திக்க செந்தாவைச் சம்மதிக்க வைக்கணும். அந்தக் காரியமும் கூடிய சீக்கிரம் நடக்கணும். செந்தா விஷயத்தில் வேணுகோபாலன் தனக்கு உதவி செய்வார் என்று ரோஜாவுக்குத் திடமாய்த் தோன்றிற்று.

ரயில் நிலையத்தின் அருகில் பஸ்ஸை விட்டு இறங்கியதும் செந்தா தென்பட்டான். கண்களுக்கு கூலிங் கிளாஸ், வெள்ளை நிற உடையில், சட்டென்று பார்த்தால் பணக்கார வீட்டுப் பிள்ளை போல் தோற்றமளித்தான். ரோஜாவைப் பார்த்ததும், புன்முறுவலுடன் அருகில் வந்தான்.

"என்ன? அப்படிப் பார்க்கிறாய்?" சிரித்துக் கொண்டே கேட்டான்.

"உன்னைத்தான்—ரொம்ப மாறிவிட்டாய்" என்றாள் ரோஜா. இப்பொ இருவரையும் பார்த்தால் ரோஜா பெரியவள் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.

"நீ என்ன இப்படி இளைத்து விட்டாய்?" சீரியஸாகக் கேட்டான் சந்திரன்.

"நான் ஒன்றும் இளைக்கவில்லை. நல்லாத்தான் இருக்கேன்" என்றாள் ரோஜா. சமீபத்தில் எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள்.

இருவரும் ஸ்டேஷனை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

"எவ்வளவு மணிக்கு உனக்கு ரயில்?"

"மாலை நான்கு மணிக்கு."

"எந்த ஊருக்கு?"

"பாம்பே."

"எப்போ திரும்பி வருவாய்?"

"சொல்ல முடியாது."



ரோஜா ஏமாற்றமடைந்து விட்டவள் போல் பார்த்தாள். சந்திரன் ப்ளாட்ஃபாரம் டிக்கெட் வாங்கி வந்தான். "பன்னிரெண்டு மணிக்கு இங்கே வரும் லோகல் டிரெயினில் ஒரு ஆள் வரப் போகிறான். அவனைச் சந்திச்ச பிறகு, நாம் வெளியே போகலாம், அதுவரை இங்கேயே இருப்போம்." என்றான்.

திடீரென்று ரோஜா கேட்டாள். "செந்தா—நீ என் விருப்பம் ஒன்றைத் தீர்த்து வைக்கணும்."

"என்னவென்று சொல்லு ரோஜா!"

"உன்னை ஒரு பெரியவரிடம் அழைத்துச் செல்ல நினைக்கிறேன். அவரும் உன்னைச் சந்திக்க ஆவலுடன் இருக்கிறார்."

"யார் அந்தப் பெரிய மனிதர்?"

ரோஜா உற்சாகமாய் எல்லாம் விவரமாகச் சொன்னாள். நடந்து கொண்டிருந்த சந்திரன் சட்டென்று நின்று ரோஜா பக்கம் திரும்பினான். "என்ன? நீ ஒருத்தர் வீட்டில் வேலை செய்கிறாயா?"

"வேலைன்னா—உண்மையில் எனக்கு வேலை எதுவும் கிடையாது. வெறும் மேற்பார்வை மட்டும் தான்."

சந்திரன் சந்தேகமாய் பார்த்தான். "ரோஜா! வேலை எதுவும் இல்லைங்கிறாய்...அன்பாக இருக்கிறார்கள் என்று சொல்கிறாய்...சம்பளமும் தாராளமாய்க் கொடுப்பதைப் பார்த்தால், எனக்கு ஏனோ சரியாகப்படவில்லை."

"அதான் உன்னை அவரைச் சந்திக்கச் சொல்கிறேன். அவர் ரொம்ப நல்லவர், கடவுள் போன்றவர்."

"அம்மா இதுக்குச் சம்மதித்தாளா?"

தாயின் பெயரைக் கேட்டதும் ரோஜாவின் முகம் வாடி விட்டது. நடந்ததைக் கூறினாள். எல்லாம் கேட்ட பிறகு சந்திரன் சொன்னான், "உண்மைதான் ரோஜா! முன்பின் தெரியாத உன் மீது அவருக்கு ஏன் இந்த அக்கறை?"

''நீயும் அதைத்தான் சொல்கிறாயா? அதனால்தான் உன்னை அவரைச் சந்திக்கச் சொல்கிறேன். அவரை உனக்குப் பிடிக்காவிட்டால் நான் வேலையை விட்டு விடுகிறேன்'' பொறுமையின்றி சொன்னாள் ரோஜா.

சந்திரன் ரோஜாவின் கையை தன் கையில் எடுத்துக் கொண்டான். ''உனக்குஒருத்தர் சொல்ல வேண்டிய தேவை யில்லையென்றும், நீ ரொம்ப ஜாக்கிரதையாய் இருப்பாய் என்றும் எனக்குத் தெரியும். ஆனால் சில சூழ்நிலைகளில், நம்ப புத்தி சாதுரியம், கவனம் எதுக்கும் பயன்படாது.''

''எனக்கும் தெரியும். நான் மறுக்கவில்லை. செந்தூ! நான் உன்னை வேறெதுவும் கேட்கமாட்டேன். நீ ஊரிலிருந்து வந்ததுமே அவரை ஒரு முறை சந்திக்கணும்.''

செந்தூ தயங்கினாற் போல், ''என்னைப் பற்றி அவருக்கு...'' சந்தேகத்துடன் நிறுத்தினான்.

ரோஜா தலையைக் குறுக்காக அசைத்தாள்— ''ஊஹூம்.. தெரியாது. நீ வெளி ஊரில் வேலை பார்ப்ப தாகச்சொல்லியிருக்கிறேன்.''

நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டான் சந்திரன். ''சரி...நான் ஊரிலிருந்து வந்த பிறகு உனக்குத் தகவல் கொடுக்கிறேன், அவரை எங்கே எப்போ சந்திக்க வேண்டு மென்று. நீ அவரிடம் தெரிவிக்கலாம்.''

''எங்கேயோ எதுக்கு? நேராக அவங்க வீட்டுக்கே போகலாம். நீ எப்போ திரும்பி வரப் போகிறாய்?''

''குறிப்பிட்டுச் சொல்வது கஷ்டம்.''

''அப்படின்னா?''

''நான் இன்னிக்கு ஒரு முக்கியமான வேலையாக ரயிலில் போகிறேன். அந்த வேலை நடைபெறுமா இல்லையா என்பதைப் பொறுத்து, நான், திரும்பி வருவது முடிவு செய்யப்படும்.''



''என்ன வேலை?'' ரோஜா சந்தேகமாய்க் கேட்டாள்.

சந்திரன் சிரித்தான். விரக்தியும், அலட்சியமும் கலந்த சிரிப்பு அது.

''நாளை உனக்கே தெரியும். அதோ ரயில் வர்றது. ரோஜா நீ இங்கே நிற்காதே! தொலைவில் இருக்கும் புத்தகக் கடையில் ஏதாவது புத்தகத்தை பார்த்துக் கொண்டிரு. நான் இந்த ரயிலில் வரப்போகும் ஒருவரைச் சந்திக்கணும். நீ என் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காதே. அவனுடன் வேலை முடிந்த பிறகு நானே உன்னிடம் வர்றேன்.''

சந்திரனின் கண்களில் திடீரென்று சுறுசுறுப்பு வந்தது. குரலில் இது வரை இருந்த மிருதுத் தன்மை மறைந்து விட்டது. ரோஜா பேசுவதற்கும் இடமளிக்காமல் தொலைவில் சென்று ப்ளாட்பாரம் மீது வந்து கொண் டிருந்த ரயிலை எதிர்நோக்கி நின்றான். ரோஜா புத்தகக் கடையில் நின்று புத்தகங்களைப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

லோக்கல் டிரெயின் ஆனதால் அதிகக் கூட்டம் இல்லை. பத்திரிகையைப் புரட்டிக் கொண்டே யதேச்சையாகப் பார்ப்பது போல் ரோஜா சந்திரன் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள். ரயிலிலிருந்து கட்டம் போட்ட லுங்கியும் தாடியுமாய், ரவுடி போல் தோற்றமளித்த ஒருவன் இறங்கினான். அவன் சந்திரனைப் பார்த்ததும், குனிந்து காலைத் தொட்டு வணங்கப் போனான். சந்திரன் அவனுடைய தோளைப் பற்றி எழுப்பினான். இருவரும் ஏதோ பேசிக் கொண்டே ரோஜாவைத் தாண்டிப் போய் விட்டார்கள். தப்பித் தவறிகூட சந்திரன் ரோஜா பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. கிட்டத்தட்ட அரை மணி கழித்து சந்திரன் திரும்பி வந்தான்.

''யாரு அந்த ஆள்?'' சந்திரன் வந்ததுமே ரோஜா கேட்டாள்.

"இனி போகலாமா?" என்றான் சந்திரன்.

"அவன் யாருன்னு கேட்டேன்?"

"ஷ்...மெதுவாகப் பேசு. எனக்குத் தெரிந்தவன்..." எரிச்சலடைந்து விட்டவன் போல் சொன்னான் சந்திரன்.

ரோஜா மௌனமாய் இருந்து விட்டாள். சந்திரனைப் பார்த்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சியானது ஆவியாகி விட்டது போல் மறைந்து போயிற்று. அந்த இடத்தில் பயம், சந்தேகம், வேண்டாத யோசனைகள் வரத் தொடங்கின.

"எனக்குப் பசிக்கிறது, நீ சாப்பிட்டாயா?" என்று கேட்டான் சந்திரன்.

ஆச்சு என்பது போல் தலை அசைத்தாள் ரோஜா.

"பரவாயில்லை, வா... சேர்ந்து சாப்பிடுவோம். நாம் சேர்ந்து சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு இல்லையா?" சிரித்துக் கொண்டே சொன்னான். அந்த சிரிப்புக்குப் பின் தென்பட்ட சோகத்தை ரோஜா உணராமல் இல்லை. இருவரும் வெளியே வந்தார்கள், சந்திரன் டாக்ஸியை அழைத்தான்.

இதுவரை சந்திரனுடன் சேர்ந்து இருந்த ரோஜா, ஒரு விஷயத்தைக் கவனித்தாள். பார்ப்பதற்குச் சந்திரன் சகஜமாய் இருப்பது போல் தென்பட்டாலும், எங்கேயாவது போலீசாரைப் பார்த்து விட்டால், அவன் கண்கள் கவனமாய், சந்தேகமாய்ப் பரிசீலித்துக் கொண்டிருந்தன

டாக்ஸி ஒரு பழைய ஹோட்டல் முன் நின்றது. இருவரும் உள்ளே போனார்கள். ஹோட்டலில் கூட்டம் அதிகமாக இல்லை. ஹோட்டல் முதலாளிக்கும், சர்வர்களுக்கும் சந்திரனை தெரிந்திருக்க வேண்டும். வரவேற்று உபசரித்தார்கள். சந்திரன் ரோஜாவை ஃபாமிலி ரூமுக்கு அழைத்துச் சென்றான்.

"நான் வேலையில்லாத போது இங்கேதான் தங்கி யிருப்பேன்" என்றான் சந்திரன்.



"அந்த முதலாளிக்கு நீ யாரென்று தெரியுமா?"

"அவனும் எங்களைச் சேர்ந்தவன்தான்."

முள் மேல் உட்கார்ந்திருப்பது போல் உணர்ந்தாள் ரோஜா. சர்வர் சாப்பாடு கொண்டு வந்து வைத்தான்.

"எனக்குப் பசியில்லை. வேண்டாம்" பிடிவாதமாக மறுத்து விட்டாள் ரோஜா.

சந்திரன் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது, ரோஜா சொன்னாள்.

"சந்துரு! எந்த ஜென்மத்தில் என்ன பாவம் செய்தோமோ இப்படித் தனித் தனியாகப் பிரிந்து போய் விட்டோம். இதை நினைவில் வைத்துக் கொண்டு இனி மேலாவது நாம் யாருக்கும் கெடுதல் செய்யாமல் இருக்கணும்."

சந்திரன் கையை நீட்டி இடைமறிப்பது போல் சொன்னான்... "அம்மா... தாயே ..ரோஜா இந்த கொஞ்ச நேரமாவது உன்னுடன் மகிழ்ச்சியாக இருக்க நினைக்கிறேன்... உன் அறிவுரைகளால் என் உயிரை எடுக்காதே – ப்ளீஸ்!"

"அறிவுரைகளா? நன்றாகப் புத்தி சொல்றவங்க இல்லாமல் இப்படி ஆகிவிட்டாய்... இன்னிக்கு நீ ஊருக்குப் போகாவிட்டால் என்ன ஆகிவிடும்?"

ஆள்காட்டி விரலை கழுத்துக்குக் குறுக்காக இழுத்து, கொன்று விடுவார்கள் என்பது போல் ஜாடை காட்டினான் சந்திரன். ரோஜா கலவரமடைந்தவளாய்த் தம்பியைப் பார்த்தாள்.

"உண்மையாகவா?"

"உண்மைதான்! அவர்கள் எங்களுக்குக் கொடுத்த வேலைகளை நாங்க சரியாகச் செய்யாவிட்டால், அலட்சியமாக இருந்து விட்டோம் என்று தெரிந்தால் அவ்வளவு

தான்... அது பற்றி பேசவேண்டாம். அம்மா எப்படி இருக்கா? என்னை எப்பவாவது நினைவு படுத்திக் கொள்வாளா?''

''நீ அடிக்கடி வீட்டுக்கு வந்து போனாலே, அம்மாவின் உடல் நலம் சீரடைந்து விடும். அவளுடைய உயிரெல்லாம் உன்மீது தான்.''

''நீங்க அந்த வீட்டை மாற்றி விடுங்க. அப்பத்தான் என்னால் வீட்டுக்கு வர முடியும். இப்போ நீங்க இருக்கும் தெருவில் டி. எஸ். பீ. யும் குடியிருக்கிறார். அவர் கண்களில் நான் பட்டு விட்டால், அவ்வளவுதான்!''

''இப்படி எத்தனை நாட்களுக்கு ஆபத்துடன் வாழ்க்கை நடத்தப் போகிறாய்?''

''உயிர் இருக்கிற வரைக்கும். சுகமாய், அமைதியாய் இருப்பவர்களுக்கு மட்டும் வாழ்க்கை சாசுவதமா? அவர்களுக்கு மரணம் வராதா?''

''உனக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது. நீ ஊரிலிருந்து வந்ததும் நான் சொன்ன பெரியவரைச் சந்திக்கணும்.''

''கட்டாயம் சந்திக்கிறேன்... எனக்காக இல்லை... உனக்காக... நீ சொல்ற அளவு நல்லவர்தானா என்று பார்க்க.''

''பிராமிஸ்?'' கையை நீட்டினாள் ரோஜா.

''பிராமிஸ்...'' கையில் அடித்து சத்தியம் செய்தான். ''ரோஜா! நீயும் மற்ற பெண்களைப் போல் சுகமாக சந்தோஷமாக வாழணும், என்னைப் போல் ஏறுமாறான வாழ்க்கையாய் இருக்கக் கூடாது. நீ சொன்ன பெரியவரைச் சந்தித்து, எனக்குப் பிடிக்கா விட்டால், நீ வேலையை விட்டு விடணும்... சரிதானா?''

''சரி'' என்று ஒப்புக்கொண்டாள்.

• • •



ரோஜா வீட்டுக்கு வரும் போது, வீட்டின் முன் வேணுகோபாலனின் கார் நின்றிருந்தது. உள்ளே ராதை உட்கார்ந்து இருந்தாள்.

''நீங்க வரலியேன்னு அம்மா பதட்டப்படறாங்க ஏன் வரலைன்னு கேட்டுட்டு வரச் சொன்னாங்க.'' என்றான் டிரைவர்.

''ஒரு வேலையாய் வெளியில் போனேன். இப்பவே வர்றேன், கொஞ்சம் இரு'' என்றவாறே ரோஜா உள்ளே போனாள்.

''எங்கே போயிருந்தாய் ரோஜா! இவங்க வந்து ஒரு மணி நேரமாவது ஆகியிருக்கும்'' என்று சுந்தரி கேட்டாள்.

''பேங்கிற்குப் போயிருந்தேன் மாமி... வா... ராதை... போகலாம்..'' என்றாள் ரோஜா.

''குழந்தை குத்துவிளக்காட்டம் பளிச்சுன்னு இருக்கா... பாவம் பேச்சு வராமல் செய்து அநியாயம் செய்து விட்டார் கடவுள்!'' இரக்கமாய்ச் சொன்னாள் சுந்தரி.

ரோஜா போன போது வேணுகோபாலன் வாசலுக்கே வந்து விட்டார். ''எதுக்காக இவ்வளவு நேரம்? என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

''கொஞ்சம் வேலையிருந்ததால் நேரமாகி விட்டது.''

''இனி ஒரு நாளும் இப்படிச் செய்யாதே எவ்வளவு பயந்து விட்டேன் தெரியுமா? உங்க அம்மாவுக்கு எப்படி இருக்கு?''

''பரவாயில்லை.''

அவரிடமிருந்து நெடிய மூச்சு ஒன்று வெளிப்பட்டது

''இனிமேல் உனக்கு வேலை ஏதாவது இருந்தால் முன்னாடியே சொல்லி விடு. ரோஜா...'' நாற்காலியில் சரிந்து விட்டார். முகம் முழுவதும் வியர்த்துக் கொட்டியது.

சரியென்பது போல் தலை அசைத்தாள் ரோஜா.

மறுநாள் மதியம் வேணுகோபாலன் பேப்பர் படித்துக் கொண்டிருந்த போது ரோஜா அவருக்காக ஹார்லிக்ஸ் கொண்டு வந்து கொடுத்தாள்.

"ரோஜா! இதைப் படித்தாயா. நேற்று இரவு பாம்பே போகும் ரயிலில் ஃபர்ஸ்ட் க்ளாஸ் கம்பார்ட்மெண்டில் பயணம் செய்யும் கணவன் மனைவியைக் காயப்படுத்தி, நகை, பணத்தை கொள்ளையடித்து இருக்கிறார்கள். யார் செய்தார்கள் என்று தெரியவில்லை. போலீசார் விசாரித்து வருகிறார்கள்" என்றார் வேணுகோபாலன்.

இதயத் துடிப்பு ஒரு நிமிடம் நின்று விட்டது போல் இருந்தது ரோஜாவுக்கு. பாம்பே போகும் ரயிலில் என்றால் செந்தா போனது அந்த ரயிலில் தானே? ஹார்லிக்ஸ் கோப்பையை அவரிடம் கொடுத்து விட்டு, அந்தப் பேப்பரை எடுத்துக் கொண்டு நேராக தனதறைக்கு வந்தாள் ரோஜா. நின்று கொண்டே பேப்பரில் இருந்த செய்தியை ஒரு தடவைக்கு இரண்டு தடவை படித்தாள்.

"என்ன வேலை உனக்கு?" என்று கேட்ட போது, "நாளை உனக்கே தெரியும்" என்று சந்திரன் சொன்னது காதில் எதிரொலித்தது. அப்போதே சந்தேகம் ஏற்பட்டாலும் இவ்வளவு பயங்கரமானதாக இருக்கும் என்று நினைக்கவில்லை. கடவுளே! அவனை இந்தப் புதைகுழியிலிருந்து எப்படி மீட்பது?

ரோஜா செயல் மறந்து போனவளாய் ரொம்ப நேரம் அப்படியே நின்று விட்டாள். செந்தா தான் திரும்பி வரும் விவரத்தைச் சரியாகச் சொல்ல முடியாமல் போன காரணம் ரோஜாவுக்குப் புரியத் தொடங்கியது. எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டாள். அவனை அந்த ரயிலில் போக விட்டிருக்கக் கூடாது. அவனை எப்படியாவது நல்ல வழிக்குக் கொண்டு வரணும். அதுவும் கூடிய சீக்கிரத்தில். இல்லாவிட்டால் தன் வாழ்க்கைக்கே அர்த்தமில்லாமல் போய்விடும் ரோஜாவின் இதயத்தில் வேதனை சூழ்ந்து கொண்டது.



# 37

தேர்வின் முடிவுகள் வந்து விட்டன. அனந்த் பி.ஏ. பாஸ் செய்து விட்டான். கல்கத்தாவில் இருக்கும் சாந்தி நிகேதனில் மேற்படிப்பு படிக்க வேண்டுமென்பது அவனுடைய நெடுநாளைய விருப்பமாக இருந்தது. ஆனால் இப்போ, மேற்படிப்புக்காக விஜய் அவனை அப்ளிகேஷன் போடச் சொன்ன போது, அனந்த் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. காதில் போட்டுக் கொள்ளாதது போல் வெறுமே இருந்து விட்டான். அவனுக்கு ரோஜாவை விட்டு தொலைவாகப் போக வேண்டுமென்று தோன்றவில்லை. அவனுடைய லட்சியக் கனவுகள் எல்லாம் ரோஜா மீதே நிலைத்திருந்தன.

அண்ணன் தம்பி இருவருக்கிடையே மறுபடியும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. சாந்தி நிகேதன் போக விரும்பாத தன் காரணத்தைச் சொல்லச் சொன்னான் விஜய்.

"காரணம் என்று ஏதுவும் கிடையாது. விருப்பம் இல்லை... அவ்வளவுதான்." பிடிவாதமாய் பதிலளித்தான் அனந்த்.

ஆனால் அனந்த் போக விரும்பாதது ஏன் என்று ஓரளவுக்கு எல்லோருக்கும் தெரியும். லாவண்யா, எகத்தாளமாய் ரோஜா முன்னிலையில் வெளிப்படுத்தியும் விட்டாள்.

"அனந்துக்கு எல்லா நிகேதன்களும் இங்கேயே இருக்கும் போது, வேறு எங்கேயோ போக வேண்டிய தேவை என்ன? விஜய் ஒரு முட்டாள். இது கூட தெரிந்து கொள்ள முடியவில்லை."

ரோஜாவின் முகம் சிவந்து விட்டது. சமீபகாலமாய் லாவண்யா அடிக்கடி இது போல் குத்தலாய்ப் பேசுவதை ரோஜா உணர்ந்து தான் இருந்தாள்.

வேணுகோபாலன் மூலமாய் அசல் விஷயம் கேள்விப் பட்ட ரோஜா, ஒரு தடவை அனந்த் தனிமையில் இருக்கும் போது கேட்டாள்.

"அனந்த்! உண்மையைச் சொல்லு. ஏன் போக மாட்டேங்கிறாய்?"

"உனக்காகத்தான் ரோஜா. இந்த சூழ்நிலையில் உன் அருகில் இருக்க வேண்டியது என் கடமை என்று தோன்று கிறது. என்னை நீ பைத்தியம் என்று எண்ணி விட்டாலும் சரி..."

"அனந்த்!" ரோஜாவின் கண்களில் ஈரம் படர்ந்தது. "நீ எங்கே இருந்தாலும், என் அருகில் தான் இருப்பாய். என்னைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம். உன் எதிர் காலத்துக்கு நான் இடைஞ்சலாய் இருக்கேன் என்ற எண்ணத்தை யார் மனதிலும் தோற்றுவிக்காதே. எனக்கு ஏதாவது தேவையாய் இருந்தால் முன்னாடியே உனக்குக் கடிதம் எழுதுகிறேன்" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"உன் இஷ்டம் ரோஜா."

"இந்த உலகில் நிறைய பேர், பணம் இல்லாமல் படிக்க வேண்டும் என்ற வேட்கையைப் பலவந்தமாய்க் கட்டுப் படுத்திக் கொள்வார்கள். எல்லாவிதமான வாய்ப்புகள் இருந்தும், உன்னைப் போன்றவர்கள் படிப்பை அலட்சியப் படுத்துவது எனக்குப் பிடிக்காது."

"ஆல்ரைட்! ஒப்புக் கொள்கிறேன், போய்ப் படிக்கிறேன்."

ரோஜா அவனை அன்புடன் பார்த்து, "நீ ரொம்ப நல்லவன் அனந்த்" என்றாள்...



ரோஜாவின் கண்களில் மின்னிய ஒளியையும், குரலில் தென்பட்ட பாசத்தையும் கவனித்த அனந்த், சற்று துணிந்து, "ரோஜா! இந்த நல்லவன் உன்னுடையவனாய் மாறுவது எப்போ? நாம் இருவரும் கணவன் மனைவி ஆக நான் இன்னும் எவ்வளவு நாள் தவம் புரியணும்?" என்று கேட்டான்.

அனந்த் வாயிலிருந்து கல்யாண பேச்சு வந்ததும் ரோஜாவின் முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்து விட்டது. பயங்கரமான நினைவு ஏதோ எட்டிப் பார்த்தது போல் இதயம் படபடத்தது.

"ரோஜா!" கலவரமாகப் பார்த்தான்.

"நீ போய் வா அனந்த்.. பிறகு பார்த்துக் கொள்ளலாம்."

அனந்த் திருப்தி அடைந்தவன் போல் பார்த்தான். ரோஜாவுக்குத் தன்னிடம் நம்பிக்கை ஏற்பட இன்னும் சில நாட்கள் தேவைப்பட்டால் தான் காத்திருக்க தயார்.

அனந்த் திடீரென்று சாந்தி நிகேதனுக்குப் போவதற்கு ஒப்புக் கொண்டதும், எல்லோரும் வியப்படைந்தார்கள்.

"ஆமாம்... ஆமாம்... அந்த மகாராணி ஆணையிட்டால் தான் உன் காதில் ஏறும் போலிருக்கு!" என்று விஜய் எகத்தாளமாய்ச் சொன்னான்.

அனந்த் திடீரென்று தன் முடிவை மாற்றிக் கொண்ட தற்கு ரோஜா தான் காரணம் என்று அவனால் எளிதாகவே ஊகிக்க முடிந்தது. தன் பேச்சைத் துளிக்கூட லட்சியம் செய்யாமல் அனந்த் ரோஜாவின் வார்த்தைக்கு அவ்வளவு மதிப்பு கொடுத்ததில் விஜய்க்குப் பொறாமையாய் இருந்தது.

அனந்த் கிளம்பும் நாள் நெருங்கி விட்டது. ரோஜா விடம் ஆயிரம் தடவை நினைவு படுத்தினான் அனந்த்.

"அடிக்கடி கடிதம் எழுதணும் ரோஜா! உனக்கு எந்த கஷ்டம் வந்தாலும், என்னிடம் சொல்லாமல் வேணு கோபாலன் வீட்டு வேலையை விட்டுவிடக் கூடாது.

"விடமாட்டேன்" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் ரோஜா.

அனந்த் வேணுகோபாலனிடமிருந்து விடைபெறும் முன் ரோஜாவைப் பற்றிப் பத்து தடவை எச்சரித்து விட்டான்.

"ரோஜாவுக்கு கொஞ்சம் கோபம் அதிகம். நீங்க தவறா நினைக்காதீங்க."

"ரோஜாவுக்குக் கோபம் வருமா? நான் எப்பவும் பார்த்ததுஇல்லையே?" என்றார் அவர்.

"ஒரு வேளை உங்களுக்கு ரோஜாவின் தேவையில்லா விட்டால், என்னிடம் முன்கூட்டி தெரியப்படுத்தாமல், அவளை அனுப்பி விடாதீங்க. அவள் ரொம்ப கஷ்டத்தில் இருக்கிறாள். திடீரென்று சம்பளம் வராவிட்டால் ரொம்ப சிரமப்படுவாள்."

"உனக்கு அந்தப் பயமே வேண்டாம். அவள் போகிறேன் என்று சொன்னாலும், நான் போக விட மாட்டேன், சரி தானா..." வேணுகோபாலன் வாக்கு அளிப்பது போல் சொன்னார்.

அனந்த் நிம்மதியாக உணர்ந்தான். வேணுகோபால னுக்கு ரோஜாவை ரொம்ப பிடித்து விட்டது. அவரிடம் ஒப்புதல் வாங்கி விட்டால், விஜயை ஜெயிப்பது சுலபமாகி விடும். சில நாட்கள் போனால் விஜயும் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வான் என்ற நம்பிக்கை திடமாய் ஏற்படத் தொடங்கிற்று.



# 38

அனந்த் அன்றுதான் கிளம்புகிறான். ரொம்ப நாட் களாய் அவனுடைய தாய்மாமன் தன் வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்துக் கொண்டிருந்தார். விஜய் அனந்திடம் இது பற்றி வற்புறுத்திய போது, இதோ அதோ என்று காலம் தாழ்த்தினானே தவிர, அனந்த் போகவேயில்லை. இந்தத் தடவை அனந்த் மாமாவின் ஊருக்குச் சென்று இரண்டு மூன்று நாட்கள் தங்கி விட்டு, பிறகு நேராக சாந்தி நிகேதன் போகும் விதமாய் விஜய் பயண ஏற்பாடுகளைச் செய்திருந்தான்.

வேணுகோபாலனின் காரில் இருவரும் ஏர்போர்ட் வந்தார்கள். விமானம் கிளம்ப இருப்பதாகவும், பயணிகளை சீட்டில் வந்து அமரச் சொல்லி, ஒலிபெருக்கியில் அறிவிப்பு கேட்டது.

அனந்த் திடீரென்று சொன்னான். "விஜய்! நான் போகும் முன் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்."

"முக்கியமான விஷயமா? கடவுளே! நீ சீரியஸாகப் பேசுகிறாய் என்றால் எனக்கேதோ பெரிய ஆபத்து வரப் போகிறது என்று அர்த்தம். என்ன விஷயம்?"

அனந்த் ஒன்றும் பேசாமல் அண்ணனின் முகத்தை கூர்ந்து பார்த்தான்.

"சொல்லு...அப்புறம் உனக்கு நேரமாகிவிடும். பாதி சொல்லி விட்டு நீ ப்ளேன் ஏறிவிட்டால், சஸ்பென்ஸ் தாங்காமல் நானும் ப்ளேனுக்குப் பின்னாடி ஓடி வரும்படி ஆகிவிடும்." விஜய் சிரித்துக் கொண்டே சொன்னான்.

அனந்த் பேச்சிழந்தவன் போல் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

"சொல்லு, அனா...என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான் ஒன்றும் சொல்ல மாட்டேன். என்ன விஷயம்?" அன்பாகப் பார்த்துக் கொண்டே நயமாய்க் கேட்டான் விஜய்.

அனந்த் முகத்தில் உணர்வுகளின் கொந்தளிப்பு தெரிந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டவன் போல், "விஜய்!" மறுபடியும் நின்று விட்டான்.

"சொல்லு...விஷயம் எதுவாக இருந்தாலும் நான் ஒன்றும் சொல்ல மாட்டேன்...பிராமிஸ்...சரிதானா!"

"அது வந்து...ரோஜாவைப் பற்றி..."

"ரோஜாவைப் பற்றியா?" அந்தப் பெயரைக் கேட்டதும் விஜய் முகத்தில் இருந்த சிரிப்பு மாயமாகி விட்டது.

"ஆமாம்...ரோஜா பற்றித்தான். ரொம்ப நாளாய் உன்னிடம் இந்த விஷயம் சொல்லணும்னு நினைத்தாலும், நேரம் வராமல், தைரியமும் போதாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன். விஜய்! என்னை மன்னித்து விடு. நான்...உன்னை ரொம்ப ஏமாற்றி விட்டேன். நான் எழுதிய காதல் கடிதங்கள் என்று ரோஜாவிடம் எதுவும் இல்லை. ரோஜா மெலட்டூர் ராஜகோபாலனுக்கு அனுப்பி வைத்த கடிதங்கள் இரண்டும் நான் எழுதியவைதான். எனக்கு அந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லையென்பதால், என் வற்புறுத்தலால் ரோஜா எழுதினாள். விருப்பமில்லாத திருமணத்திலிருந்து என்னைத் தப்ப வைக்க...எனக்காகத் தான் அப்படிச் செய்தாள்.. அதைவிட வேறு எண்ணம் அவளுக்கு இல்லவே இல்லை."

விஜய் இடி விழுந்தவன் போல் பார்த்துக் கொண்டிருந்தான்.



"விஜய்...இந்த ஒரு விஷயத்தில் என்னை மன்னித்து விடு...இனி ஒரு நாளும் எந்த விஷயத்திலும் பொய் சொல்ல மாட்டேன். இன்னொரு விஷயம்......நான் ரொம்ப தொலைவுக்குப் போகப் போகிறேன். நீ அந்தப் பெண்ணை எடை போடுவதற்கு ஒரு வருஷகாலம் இருக்கு. ரோஜாவின் குணம், நடத்தை உனக்கு திருப்தியளித்தால், உன் ஆசிகளுடன் நாங்கள் கணவன் மனைவியாய் மாறுவோம்..."

"அனந்த்!" திடீரென்று யாரோ சுத்தியால் முதுகில் குத்தி விட்டது போல் இருந்தது விஜய்க்கு.

அனந்த் விஜய் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கவனியாமலே சொன்னான், "ரோஜாவுக்குப் பணத்தின் மீது ஆசை இருந்திருந்தால் எங்க திருமணம் என்றோ முடிந்திருக்கும்.. விஜய்...ரோஜா பணத்துக்கு மதிப்பு கொடுப்பவள் இல்லை...மனிதர்களைத்தான் மதிப்பாள்."

விஜய் காதுகளில் இதெல்லாம் விழவில்லை...விழுந்தாலும் புரிந்து கொள்ளும் நிலையில் அவன் இருக்கவில்லை. திகைத்துப் போனாற் போல் நின்று விட்டவன், தம்பியைப் பார்த்துக் கேட்டான்.

"என்ன சொன்னே? நீ எழுதிய கடிதங்கள் எதுவும் அந்தப் பெண்ணிடம் இல்லவே இல்லையா?"

"இல்லை...ரோஜாவுக்கு நான் என்றுமே கடிதம் எழுதியது கிடையாது. அந்தத் தேவையே எனக்கு வந்ததில்லை." மறுப்பது போல் தலை அசைத்தான் அனந்த்.

விஜய்க்கு அந்தக் கணம் அனந்தின் கன்னத்தில் இழுத்து ஒரு அறை விட வேண்டும் என்ற அளவுக்கு ஆவேசம் வந்தது.

மைக்கில் கடைசி முறையாய் பயணிகளை வரச்சொல்லி அறிவிப்பு ஒலித்தது.

"வர்றேன் விஜய்" கூட நிற்க விரும்பாதவன் போல் அனந்த் விடுவிடுவென்று சென்று விட்டான்.

விஜய் கற்சிலையாய் நின்று விட்டான். அனந்த் எழுதிய காதல் கடிதங்கள் எதுவும் ரோஜாவிடம் இல்லவே இல்லை. எல்லாம் வெறும் நாடகம்...ஏமாற்று வேலை...அனந்தின் திருமணத்தை தப்ப வைக்க போட்ட திட்டம்...விஜய்க்கு மூளை கலங்கி விட்டாற் போல் இருந்தது. திடீரென்று காற்றே இல்லாதது போல் மூச்சு முட்டியது. விமானம் மெதுவாய் ரன் வேயில் நகரத் தொடங்கியது. விஜய் இரண்டடி முன்னே வைத்தான். சிறகுகளை விரித்த ராட்சப் பறவை போல் விமானம் ஆகாயத்தில் எழும்பி, விஜய் பார்த்துக் கொண்டிருந்த போதே புள்ளியாய் மறைந்து விட்டது.

அனந்த் போய் விட்டான்...பயங்கரமான எரிமலைக் குழம்பில் தன்னைத் தள்ளிவிட்டு, தன் வழியில் தான் சென்று விட்டான். விஜய் விமான நிலையத்திலிருந்து எப்படி வெளியேறினானோ, காரை எப்படிச் செலுத்தினானோ, வீட்டை எப்படி அடைந்தானோ அவனுக்கே தெரியவில்லை...எல்லாம் யந்திர ரீதியில் நடந்து விட்டதே தவிர அவனுக்குச் சுயநினைவே இல்லை.

ரோஜா, அனந்த் இருவரும் சேர்ந்து தன்னை ஏமாற்றி விட்டார்கள் என்ற விஷயத்தை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவனுக்கு அந்தக் கணமே ரோஜாவைத் தேடிப்போய், தோள்களை பற்றி உலுக்கி, உண்மையைச்சொல்ல வைக்கவேண்டுமென்று தோன்றியது. ரோஜா ஒரு தடவை கூடத் தன்னிடம் எதுவும் இல்லையென்று ஏன் சொல்லவில்லை? இருப்பது போலவே நடந்து கொண்டது ஏன்? கடைசியில் அத்தனை அவமானம் நடந்த பிறகும், எப்படி சகித்துக் கொண்டாள்? அனந்துக்காகவா?

அனந்த் என்றால் நிஜமாகவே ரோஜாவுக்கு அபிமானம் இருக்குமோ? அவ்விருவரும் உயிருக்குயிராய் நேசிக்கிறார்களா? விஜய்க்குத் திடீரென்று தாங்க முடியாத சோர்வாக இருந்தது. இந்த உலகில் தனக்காக அப்படி யோசிப்பவர்கள்



ஒருவராவது இருக்கிறார்களா? ஒருத்தரும் கிடையாது. தான் என்னவாகிப் போனாலும் யாருக்கும் அக்கறை இல்லை...எவ்வளவு துரதிருஷ்டம்? ரோஜா, அனந்துக்கு இடையே இருந்த அன்புப் பிணைப்பை நினைக்கும் போது விஜய்க்குப் பொறாமையாக இருந்தது.

ஸ்டடி ரூமில், மேஜைமீது முழங்கைகளை ஊன்றி தலைமுடியை விரல்களால் பற்றிக் கொண்டு உட்கார்ந்து இருந்த விஜய்க்கு மறுநாள் கோர்ட்டில் ஆஜராக வேண்டிய கேஸ்கள் நினைவுக்கு வந்தன. சம்பந்தப்பட்ட பைல்கள் மேஜை மீது கிடந்தன. லாயர் யச்வந்தராவின் தந்தை இறந்து போனதால் அவர் கிராமத்துக்குச் சென்றிருந்தார். தான் வரும் வரை தன்னுடைய கேசுகளையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை விஜயிடம் ஒப்படைத்து இருந்தார். தன் வேலைகளிலேயே பிசியாக இருந்த விஜய்க்கு, இந்தக் கூடுதல் பொறுப்புகளால் மூச்சு விடக்கூட நேரமில்லாமல் போய்விட்டது. மனதைத் துளைத்துக் கொண்டிருந்த யோசனைகளைப் புறக்கணித்து விட்டு ஃபைலைக் கையில் எடுத்தான் விஜய். அன்று இரவு படுக்கையில் படுத்தானே தவிர விஜய்க்குத் தூக்கம் வரவில்லை. மறுபடியும் மறுபடியும் அதே நினைப்புதான்... என்ன காரியம் செய்து விட்டான்?

சின்ன வயதிலிருந்தே எங்கேயாவது, யாருக்காவது அநியாயம் நிகழ்ந்தால அவனுக்குப் பொறுக்காது. தன்னால் முடிந்தவரை அதைச் சரி செய்யப் பாடுபடுவான். இந்தச் சுபாவத்தினால் போகப் போக அவன் சங்கடத்தில் விழுந்த நேரங்களும் இருந்தன. நண்பர்கள் பகைவர்களாய் மாறினார்கள்.

அவனுடைய பார்வையில், மனிதப் பிறவி என்று எடுத்து விட்டால் கொஞ்சமாவது சமுதாயத்துக்கு நன்மை செய்யணும்... சமுதாயத்தில் இருக்கும் சீர்கேடுகளைத் துடைத்தெறிய முடியாவிட்டாலும், நம்மைச் சுற்றியாவது

அநியாயம் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நம்மால் பிறருக்கு எந்த விதமான துன்பமும் வராமல் கவனமாக இருக்க வேண்டும்.

சத்தியத்தை நம்பி, அதன் வழியில் நடந்து கொள்ளும் அவன் என்ன காரியம் செய்துவிட்டான்? ஒரு பெண்ணைத் தவறாகப் புரிந்து கொண்டு, நிந்தித்து விட்டான். ரோஜா மற்ற பெண்களைப் போல் இல்லாமல் இருக்கலாம். அவள் எப்படிப்பட்ட பெண்ணாக இருந்தாலும், அவளை அவமானப்படுத்தத் தனக்கு அதிகாரம் கிடையாது... தன்னால் பெரிய தவறு நடந்து விட்டது.

அந்தக் கணமே ரோஜாவிடம் சென்று மனப்பூர்வமாய் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும் போல் இருந்தது விஜய்க்கு. மறு நாள் எழுந்ததுமே வேணுகோபாலன் வீட்டுக்குப் போக தீர்மானித்துக் கொண்டான். ஆனால் காலை ஆனபோது அவனால் போக முடியவில்லை. மாலைக்குத் தள்ளிப் போட்டான். மாலையிலும் போகவில்லை. ஒரு முறை கிளம்ப முற்பட்டவன் ஏனோ போகாமல் நின்று விட்டான். இப்படியே மூன்று நாட்களாகி விட்டன, அவன் போகவில்லை.

வேணுகோபாலன் அன்று மாலையில் போன் செய்தார், அவர் குரல் தீவிரமாய் ஒலித்தது... "விஜய்... என்ன விஷயம்? கண்ணிலேயே படமாட்டேங்கிறாய்?"

"யச்வந்தராவ் ஃபைல்களையும் நானே பார்த்து வருகிறேன். அதான் நேரமே கிடைக்கவில்லை..."

"நானும் அதைத்தான் நினைத்தேன். ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலை செய்தால் எப்படி? இரவு சாப்பிட இங்கே வந்து விடு."

"சரி."

ஆனால் விஜய் போகவில்லை. இருட்டிய பிறகு வேலைக்காரியிடம் கடிதம் எழுதி அனுப்பிவிட்டான். கிளம்பில்



தனக்கு வேலையிருப்பதால் வர இயலவில்லை என்றும் தவறாக எண்ண வேண்டாமென்றும் குறிப்பிட்டு இருந்தான். எந்த உணர்ச்சியும் இல்லாமல், ரோஜாவின் முகத்தைப்பார்க்க வேண்டுமென்றால், அவனுக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் தேவைப்பட்டது.

• • •

காலையில் வேலை முடிந்த பிறகு ரோஜா வீட்டுக்குக் கிளம்ப முற்பட்டாள். அப்போதுதான் கடையிலிருந்து திரும்பி வந்த லாவண்யா, பையிலிருந்து வெள்ளை நிற சில்க் துணியை எடுத்து ரோஜாவிடம் கொடுத்தாள்... "உனக்கு எம்ப்ராய்டரி வருமா?" என்று கேட்டாள்.

வரும் என்பது போல் ரோஜா தலை அசைத்தாள்.

"இந்தக் துணியில் நல்ல டிசைனாக தைத்துத் தா. ரொம்ப சீக்கிரமாகவும், கவனமாகவும் செய்யணும்... ஒரு பிரெண்டுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கணும்."

"யார் அந்த ஃபிரெண்ட்? நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் ரோஜா.

"எல்லாவற்றுக்கும் காரணம் தெரிந்து கொள்வதை விட்டு விட்டு சொன்ன வேலையை, வாயை திறக்காமல் செய்யக் கற்றுக்கொள். நான் எவ்வளவு உரிமை கொடுத்தாலும், சில விஷயங்களில் நீ உன் எல்லையில் இருப்பது நம் இருவருக்கும் நல்லது. மறுபடியும் இந்த விஷயத்தை நினைவு படுத்தும் விதமாய் நடந்து கொள்ளாதே." கோபமாக, அலட்சியமாக மொழிந்த லாவண்யா, அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.

செயல் மறந்து போனவளாய் உட்கார்ந்து விட்டாள் ரோஜா. வீட்டுக்கு வந்த பிறகும் லாவண்யாவின் வார்த்தைகள் முள்ளாய் உறுத்தியது. லாவண்யா ஏன் இப்படி நடந்துகொள்கிறாள்? திடீரென்று அவள் மாறிய காரணம்தான் என்ன? எத்தனை யோசித்தாலும் ரோஜாவுக்குப் புரியவில்லை. ஒன்று மட்டும் உண்மை,

லாவண்யாவுடன் கருத்து வேற்றுமை வந்தால், தான் அந்த வீட்டில் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது. முடிந்தவரை லாவண்யாவின் சொற்களைப் பொருட்படுத்தாமல், சிநேகமாய், அன்பாய் இருக்க ரோஜா நிச்சயித்துக் கொண்டாள்.

லாவண்யா கொடுத்த சில்க் துணியில் இரண்டு ரோஜா பூக்களை, அதன் கீழ் ''வித் லவ்'' என்று வரைந்து கொண்டு ரோஜா தைக்க ஆரம்பித்தாள். ரொம்ப கவனமாக, அழகாகத் தைத்து, லாவண்யாவை மகிழ்விக்க நினைத்தாள்.

அன்று மாலை ராதை லாவண்யாவின் அறையில் விளையாடிக் கொண்டிருந்தாள். ரோஜா அங்கேயே உட்கார்ந்து, தைத்துக் கொண்டிருந்தாள்... லாவண்யா கட்டிலில் படுத்துக் கொண்டு, மிஸ் ஜோஸியின் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். சமையல்காரன் வந்து வேணுகோபாலனைப் பார்க்க, நான்கைந்து பேர் வந்திருப்பதாகவும், அவர்களுக்கு என்ன டிபன் செய்வதென்று வந்து சொல்லச் சொன்னான்.

ரோஜா தைத்துக் கொண்டிருந்த துணியை மேஜை மீது வைத்து விட்டு, கீழே சென்றாள்... ராதையும் ரோஜாவின் பின்னால் சென்றாள்.

வேணுகோபாலனைச் சந்திக்க வந்தவர்கள், கம்பெனி விஷயமாகப் பேச வந்திருந்தார்கள். அவர்களுடன் விஜயும் வந்திருந்தான். கம்பெனி ஷேர்களை லாபம் வந்தால் விற்று விடும் எண்ணத்தில் வேணுகோபாலன் இருந்தார் அந்த முயற்சிகள் எல்லாம் விஜய் மூலமாய் நடைபெற்று வந்தன.

ஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த விஜய் நடுவில் எழுந்து உள்ளே வந்தான். என்றும் இல்லாத விதமாய், இன்று வீட்டுக்குள் வரும் போது, ஏதோ தயக்கமாக, சங்கடமாகத் தோன்றியது.



ரோஜாவைப் பார்க்க வேண்டுமென்று அவன் மனம் ஒரு நிமிடம் துடித்தது... ஆனால் மறுகணமே அந்த எண்ணத்தை உள்ளம் வெறுத்தது.

''ராதை எங்கே?'' உள்ளே வந்து கொண்டே விஜய் கேட்டான். விஜயைக் கண்டதும் லாவண்யா எழுந்து உட்கார்ந்தாள்.

ராதையைத் தேடிக் கொண்டிருந்த விஜயின் கண்கள், மேஜை மீது இருந்த எம்பிராய்டரி துணிமீது நிலைத்தன... அருகில் சென்று அதைக் கையில் எடுத்து கவனமாகப் பார்த்தான்... ''நூல்களின் வண்ண சேர்க்கை ரொம்ப அருமையாய் இருக்கு... யாரோட செலக்ஷன் இது?''

''ரோஜாவுடையது... யாரோ ஃபிரண்டுக்கு அன்பளிப்பாய் கொடுக்கணுமாம்... கொஞ்சம் ஓய்வு கிடைத்தாலும், அதைத் தைக்க உட்கார்ந்து கொள்கிறாள்.'' என்றாள் லாவண்யா.

விஜய் கண்கள் ''வித் லவ்'' என்ற இடத்தில் நின்றன. அவனையே கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்த லாவண்யா, குறும்பாகக் கேட்டாள். ''உனக்கும் அது போல் வேணும்னா சொல்லு. நான் தைத்து தரேன்.''

''தாங்க்ஸ்... வேண்டாம்...'' சீரியஸாகச் சொன்ன விஜய் துணியை மேஜை மீது போட்டு விட்டு அங்கிருந்து நகரப் போனான்.

''இதோ... இந்தச் செய்தியைக் கொஞ்சம் கேட்டுக் கொள். மிஸ் ஜோஸியிடமிருந்து கடிதம் வந்திருக்கு. அவளுக்கு இங்கு வந்து நான்கு நாட்கள் தங்கணுமென்று ஆசையாய் இருக்காம். வரச்சொல்லி கடிதம் எழுதட்டுமா?'' என்று உரத்த குரலில் லாவண்யா கேட்டாள்.

போய்க் கொண்டிருந்த விஜய் சரேலென்று திரும்பி லாவண்யா அருகில் வந்தான். ''அந்த விஷயத்தை என்னிடம் கேட்பானேன்?'' என்றான் கோபமாக.

"உன்னிடம் கேட்காமல், வேறு யாரிடம் கேட்கட்டும். அந்தப் பெண் வர்றதே உனக்காகத்தான். இதோ இந்தக் கடிதத்தைப் பாரு. எழுதியது என் பேருக்குத்தானே! தவிர, அதில் இருப்பதெல்லாம் உன்னைப் பற்றித்தான்" லாவண்யா கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.

ஒரு கணம் கடிதத்தையும், லாவண்யாவையும் மாறி மாறி பார்த்த விஜய் பதில் சொல்லத் தேவையில்லையென்பது போல், சரேலென்று திரும்பி, அங்கிருந்து சென்று விட்டான்.

## 39

**ரோ**ஜாவிடம் அனந்த் எழுதிய காதல் கடிதங்கள் எதுவும் இல்லைன்னு தெரிந்த போது, விஜய் மனம் நிம்மதி அடைந்தது. உண்மைதான்! ஆனால் அதில் முழு அமைதி கிடைக்கவில்லை. அனந்த் சொன்ன விஷயம் உண்மை தானா? இதை நம்பலாமா என்ற சந்தேகம் ஒரு பக்கம், அவ்விருவரும் தன்னை முட்டாளாக்கி விட்டார்கள் என்ற கோபம் மறுபக்கம், அவன் மனதை எரிமலையாய் மாற்றியது. அவ்வளவு கொந்தளிப்பிலும், ரோஜா நட்புக்காக, அனந்த் பக்கம் துணையாய் நின்ற விதம் அவனைக் கவர்ந்தது.

எவ்வளவு துணிச்சல்? அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு தைரியம்? ஹோட்டலில் முதல் முறையாய்ப் பார்க்கும் போதே ரோஜாவிடம் ஏதோ தனித்தன்மை இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. சுறுசுறுப்பாய், அழகாய் இருந்த அந்தக் கண்களில், எதிராளியின் பார்வையைக் கவர்ந்து இழுக்கும் உயிரோட்டம் இருந்தது. அந்தத் துணிச்சலும், பிடிவாதமும் மட்டும் இல்லையென்றால், அந்தப்



பெண்ணிடம் இயற்கையிலேயே எல்லோருக்கும் அபிமானம் ஏற்படும்.

அனந்திடம் தவிர அவன் பணத்திடம் அந்தப் பெண்ணுக்கு எந்தவிதமான மோகமும் இல்லாத பட்சத்தில் அவனுக்கு ஆட்சேபணை இருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் உண்மை என்னவென்று எப்படி தெரிந்து கொள்வது? ரோஜாவின் மனதில் அனந்த் பற்றி உண்மையான அபிப்பிராயம் என்னவென்று தெரிந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

அனந்த் சொன்னது போல் ஒரு வருடம் கழித்து அவ்விருவருக்கும் தன்னால் திருமணம் செய்து வைக்க முடியுமா? எந்தத் தயக்கமும் இல்லாமல் அந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியுமா? ஏதோ இனம் புரியாத உணர்ச்சி அவனைத் தடுப்பது போல் இருந்தது.

விஜய் மனதில் சில சமயம், அன்று பார்க்கில் ரோஜாவுடன் பார்த்த முஸ்லிம் இளைஞன் நினைவுக்கு வந்து எரிச்சலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. ரோஜாவுக்கும், அவனுக்கும் இடையே என்ன உறவு இருக்க முடியும்? அவனுடன் ரோஜா அன்று உரிமையாய், நெருங்கிப் பழகியதைக் கண்ணாரக் கண்டு இருக்கிறான். எதுக்காக என்று தெரியாவிட்டாலும், இருவரும் எந்த விஷயத்திலேயோ விவாதம் செய்து கொண்டிருப்பது புரிந்து போயிற்று.

அனந்துடன் நட்பு ஏற்பட்ட பிறகு, அவனுடைய சிநேகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணி இருப்பாளோ? அதுவே உண்மையானால் நாளை வேறு ஒருவனுக்காக அனந்தை விடமாட்டாள் என்பது என்ன நிச்சயம்? புடைவை நகைகளை மாற்றுவதுபோல் ஆண்களை மாற்றிக் கொள்ளும் பெண்கள் என்றாலும், பெண்களைத் தாழ்வாக மதிக்கும் ஆண்கள் என்றாலும் விஜய்க்கு வெறுப்பு அதிகம். ரோஜா எந்த உத்தேசத்தில் அனந்தை விரும்புகிறாள்? அதை எப்படித் தெரிந்து கொள்வது? விஜய்க்கு வழி தெரியவில்லை.

# 40

லாயர் யச்வந்தராவின் கேசுகளையும் சேர்த்துப் பார்ப்பதால் தனிக்கூட ஓய்வு இல்லாமல் தொடர்ந்து வேலை செய்ததில், விஜய்க்கு அலைச்சலால் தலைவலி ஜலதோஷம் பிடித்துக் கொண்டன. தலை பாரமாய் இருந்ததால் அன்று கோர்ட்டுக்குப் போகாமல் வீட்டிலேயே இருந்து விட்டான். யச்வந்தராவ் இரண்டு நாட்களுக்கு முன்பு ஊரிலிருந்து வந்ததும், அவருடைய ஃபைல்களை அவரிடம் ஒப்படைத்து விட்டான்.

மதியத்துக்குப் பிறகு, கட்டிலில் படுத்து, புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான் விஜய். சின்ன தூக்கம் போட்டால் தேவலை என்று உறங்க முற்பட்டபோது, லக்ஷ்மி வந்து லாயர் யச்வந்தராவ் வந்திருப்பதாகத் தெரிவித்தாள். விஜய் எழுந்து கீழே போகலாம் என்று நினைப்பதற்குள், அவரே மாடிக்கு வந்து விட்டார். விஜய்க்கு உடல் நலம் சரியில்லையென்று லக்ஷ்மி மூலமாய் தெரிந்து கொண்ட லாயர் அறைக்குள் வந்ததும், அவனுடைய உடல் நலத்தைப் பற்றி பதட்டத்துடன் விசாரித்தார்.

விஜய் கட்டிலிருந்து எழப் போனபோது, "வேண்டாம்... வேண்டாம்...படுத்துக் கொள்... சும்மா பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்" என்று தடுப்பது போல் சொன்னார். விஜய் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

தான் இல்லாத சமயம் தன் கேசுகளைப் பார்த்துக் கொண்டதற்கு நன்றியைத் தெரிவித்து, சற்று நேரம் பொது விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவர், நடுவில



கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். "அடடா! ரொம்ப நேரமாகி விட்டது. நீ ரெஸ்ட் எடுத்துக்கொள்" என்று கிளம்ப முற்பட்டவர், திடீரென்று மறுபடியும் உட்கார்ந்து கொண்டார். கையில் இருந்த பேக்கை திறந்து, "விஜய்! சொல்ல மறந்து விட்டேன், அன்று காரில் இந்த பர்ஸ் இருந்ததாக டிரைவர் என்னிடம் கொடுத்தான். அப்பவே உன்னிடம் இதைக் கொடுத்து விடலாம்னு போன் செய்தால், உன்னைப் பிடிக்க முடியவில்லை. மறுநாள் நான் ஊருக்குப் போய்விட்டதால், இது என்னிடமே தங்கி விட்டது" என்று, கறுப்பு வண்ணத்தில் மடித்து வைத்த புத்தகம்போல் இருந்த பர்ஸை எடுத்து கட்டில் மீது வைத்தார்.

அந்தப் பர்ஸைப் பார்த்ததும், விஜய் திடுக்கிட்டான். அவன் முகம் மாறிவிட்டது. யச்வந்த் ராவ் முகமும் சீரியஸாக இருந்தது. விஜய் இதயத்தில் இனம் புரியாத உணர்வுகள் அழுத்துவது போல் இருந்தாலும், வெளியில் மட்டும் அலட்சியமாய் இருப்பது போல் தென்பட்டான்.

"நான் வர்றேன் விஜய்" என்று அவர் விடைபெற்றுக் கொண்டு எழுந்தார். அவர் வேண்டாமென்று மறுத்த போதிலும், வாசல் வரை சென்று அவருக்கு விடை கொடுத்தான். அவரை அனுப்பி விட்டு அறைக்கு வந்த விஜய் கண்கள், கட்டில்மீது கிடந்த அந்தப் பர்ஸ்மீது ஒரு கணம் நிலைத்து விட்டன.

அன்று ரோஜா இதைக் காரில் மறந்து விட்டாள் போலும்! இதை அவளிடம் எப்படிச் சேர்ப்பது? தானே கொண்டு போய் கொடுப்பதா? இல்லை யாரிடமாவது கொடுத்து அனுப்புவதா? விஜய் மனதில் எண்ணங்கள் சூழ்ந்து கொண்டன. வேண்டாமென்று நினைத்தாலும், அன்று நடந்த நிகழ்ச்சி மறுபடியும் மறுபடியும் கண்கள் முன் நிழலாடிற்று... தன்னுடைய ராட்சசச் செயலுக்குத் தன்மீது வெறுப்பும் வேதனையும் ஏற்பட்டது.

சின்ன வயதிலிருந்தே இப்படித்தான்... சாதாரணமாக அவனுக்கு கோபம் வராது. வந்தது என்றால் நல்லது கெட்டது யோசிக்கும் திறனை இழந்து விடுவான்.

இதற்குள் அறைக்குள் எட்டிப் பார்த்த லக்ஷ்மி, "தம்பி... காபி கொண்டு வரட்டுமா?" என்று குரல் கொடுத்தாள்.

"கொண்டு வா" விஜய் கட்டில்மீது அமர்ந்து கொண்டான்.

பர்ஸைக் கையில் எடுத்துக் கொண்டு இப்படியும் அப்படியும் புரட்டிப் பார்த்தான். ரொம்ப சாதாரணமான பர்ஸ். பழசாக இருந்தது. இரண்டு மூன்று இடத்தில் தையல் போட்டிருந்தது. ரோஜா மறுபடியும் இந்தப் பர்ஸ் பற்றி விசாரிக்கவில்லையே? விஜய் ஜிப்பைத் திறந்து உள்ளே பார்த்தான்.

உள்ளே ரூபாய் நோட்டுகள் ஒன்றிரண்டு .. கொஞ்சம் சில்லரை, ஒரு கவர் இருந்தன. கவரை எடுத்துப் பார்த்தான் கவர் ஒட்டப்பட்டு இருந்தது பெயர் எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை. ஒரு நிமிடம் தயங்கிய விஜய், உறையைக் கிழித்து, உள்ளிருந்து கடிதத்தை எடுத்துப் பார்த்தான்.

பாதி தயக்கமும், பாதி ஆர்வமுமாய் கடிதத்தைப் படிக்கத் தொடங்கிய விஜய், முதல் நான்கைந்து வரிகளைப் படித்ததும் எல்லாம் மறந்து அதில் மூழ்கி விட்டான். பத்து நிமிடம் கழித்து லக்ஷ்மி காபி கொண்டு வந்து அங்கு வைத்ததும், 'சீக்கிரமாய் குடிங்க தம்பி. ஆறிப்போய் விடும்'' என்று எச்சரித்ததும் அவன் மூளையில் உறைக்கவில்லை. மற்றொரு முறை விஜயை எச்சரிக்கை செய்ய நினைத்த லக்ஷ்மி, விஜய் நிமிர்ந்து உட்கார்ந்திருந்த விதம், சீரியஸாக இருந்த முகத்தைப் பார்த்து, அவனிடம் பேச துணிச்சல் இல்லாதவனாய்ப் பேசாமல் அங்கிருந்து போய் விட்டாள்.



விஜய் ரோஜாவின் கடிதத்தை மற்றொரு முறை படித்தான். கடிதம் அனந்துக்கு எழுதப்பட்டிருந்தது.

அனந்த்,

என் இந்தக் கடிதத்தைப் படிக்கும் முன், நாமிருவரும் உயிர் நண்பர்கள் என்றும், எந்த சக்தியும் நம்முடைய நட்பைப் பிரிக்க முடியாது என்றும் நான் ஆழமாக நம்புவதை நீ நினைவில் கொள்ள வேண்டும். என் மனதில் தோன்றும் எந்த அபிப்பிராயத்தையும் தயங்காமல், கூச்சப்படாமல் உன்னிடம் சொல்லும் உரிமையும், அதிகாரமும் எனக்கு இருக்கு என்ற தைரியம்தான் இந்தக் கடிதத்தை எழுத என்னைத் தூண்டியது.

அனந்த்! நீ என்னைப் புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கையில், கடைசி நிமிடத்தில் இப்படிச் செய்யலாமா என்ற சந்தேகத்தையும் விட்டு விட்டு, துணிந்து உண்மையைச் சொல்கிறேன்

இந்தத் திருமணத்துக்கு ஒத்துக் கொள்வதில் நான் ரொம்ப அவசரப்பட்டு விட்டேன்.

அன்று உங்க வீட்டில் விஜய் என்னை அவமானப்படுத்திய போது அந்தக் கோபத்தில், பகைமை உணர்வில், ஒரு கணம் என்னை நானே மறந்து விட்டேன்.

அனந்த்! நான் உன்னைத் திருமணம் செய்து கொள்வது என்றால், அது உனக்காக மட்டும்தான் இருக்கணும். உன்மீது விருப்பம இருந்து, முழு மனதுடன் உன்னைக் கணவனாக ஏற்கவேண்டும். அவ்வளவுதானே தவிர, யார் மீதோ பகையை தீர்த்துக் கொள்வதற்காக, உன் மனைவியாய் என்னால் ஆக முடியாது அப்படி ஆக நினைத்தால், அது நம் இருவருக்கும் இடையே இருக்கும்

நட்பை களங்கப்படுத்துவது போல் ஆகிவிடும். நான் உனக்கு நல்ல சிநேகிதியாக இருக்க முடியுமே தவிர, நல்ல மனைவியாக இருக்கமாட்டேன் என்று எனக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. இந்த உலகில் எனக்கு ரொம்ப நெருக்கமானவன் நீ ஒருவன் தான். எனக்கு ரொம்ப அபூர்வமான இந்த நட்பை, திருமணம் என்ற பெயரில் நிரந்தரமாக இழக்க என்னால் முடியாது.

அனந்த்! அது மட்டும் இல்லை, இந்தத் திருமணத்தை மறுப்பதில் என்னுடைய சுயநலமும் கலந்து இருக்கு. என் இதயத்தின் அடியில் புதைந்து விட்ட ஒரு கோரிக்கையை, இன்று வெட்கத்தை விட்டு உன் முன் வைக்கிறேன்.

அனந்த்! திருமணம் என்பது என் போன்ற துர்பாக்கியசாலிகளின் வாழ்க்கையில் இனிமையான கனவு, என் இந்தக் கனவு என்றுமே நடக்காது என்றும், வெறும் கானல் நீர் என்பதும் எனக்குத் தெரியும்.

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து, என்னைச் சுற்றி இருந்த குடும்பங்களைக் கவனித்து வந்திருக்கிறேன். நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்குத் திருமணம் என்றால் காலங்காலமாய் வந்து கொண்டிருக்கும் ஒரு பழக்கம் என்பதைத் தவிர, வேறு அர்த்தம் தெரியாது. தமக்காக வாழ்க்கையை நடத்தாமல், யாருக்காகவோ சுமப்பது போல் வாழ்ந்து வருவார்கள். இவர்களுடைய பார்வையில் திருமணம் என்பது பெண்ணுக்கு ஒரு துணை—ஆணுக்கு ஒரு தேவை, அவ்வளவுதான். கணவன் என்றால் சம்பாதிப்பவன் மனைவி என்றால் வீட்டை நிர்வகிப்பதோடு, கணவனுக்காக எப்போதும் காத்திருப்பவள்,



இப்படியே இவர்களுடைய வாழ்க்கை, ஒருவரைப் பற்றி மற்றவருக்கு எதுவும் தெரியாமலேயே முடிந்து போய்விடும். சுபாவம், குணம், விருப்பு, வெறுப்பு எதுவும் தெரியவே தெரியாது

எனக்குத் திருமணம் ஆகாவிட்டாலும் பரவா இல்லை, இதுபோன்ற திருமணம் மட்டும் வேண்டாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. வயது ஆக ஆக, இந்த எண்ணமும் என் மனதில் பலமாக வேரூன்றி விட்டது. திருமணம் என்பது அழகிய கனவாய் மாறுவதோடு, தனி உலகமாய் உருவாகியது. எனக்குக் கணவனாக வரவேண்டிய நபரிடம் நான் விரும்பும் தகுதிகள் என்னவென்று சொல்லட்டுமா?

ஏழையாய் இருந்தாலும் பரவாயில்லை, திறமைசாலியாக இருக்கணும்.

என்னை உயிருக்குச் சமமாக நேசிக்கவேண்டும். தன்னுடைய மகிழ்ச்சி, சுகம், அமைதி எல்லாம் என்னிடம் தேடிக் கொள்ள வேண்டும். என் வாழ்க்கையின் ஒளிக்கு விளக்காய் அவர் இருக்கணும். இந்த உலகில் எந்தச் செல்வத்தாலும் கிட்டாத சுகம் அவருடைய அருகாமையில் எனக்கு கிடைக்க வேண்டும். எங்க இருவருக்கும் இடையே அன்பைத் தவிர வேறு எதுக்கும் முக்கியத்துவம் இருக்கக் கூடாது.

ஒரு மனைவியாக என் பொறுப்புகள் என்ன வென்று எனக்குத் தெரியும். அதே போல் ஒரு கணவனின் பொறுப்புகளை முழுவதுமாக உணர்ந்தவராய் இருக்க வேண்டும்.

இதுதான் என் கனவு. என்றைக்கும் நினைவு ஆகாத இந்தக் கானல் நீரை எண்ணி மகிழ்ச்சி அடைவதில் எனக்கு ஒரு திருப்தி.

நான் விரும்பிய நபர் எப்படியும் கிடைக்க மாட்டார். நான் கன்னியாகவே இருக்கப் போவது உண்மை...நான் தான் முன்னாடியே சொன்னேனே...ஏதோ ஒரு கல்யாணம் என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

அனந்த்! உங்க விஜயைப் பழி தீர்த்துக் கொள்ளும் முயற்சியில், எனக்கு ரொம்ப பிடித்தமான இந்த இனிய கனவை என்னால் நாசமாக்க முடியாது.

இந்தத் திருமண விஷயத்தைத் தவிர, உன் சிநேகிதியாய் விஜயோடு மட்டும் இல்லை. இந்த உலகத்தையே எதிர்க்க நான் தயாராக இருக்கேன்.

அனந்த்! நீ என்னைப் புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. என்னை மன்னித்து விடு என்று மனப்பூர்வமாய் வேண்டுகிறேன். இவ்வுலகில் உன்னைத் தவிர எனக்கு வேறு யாரும் இல்லை என்பதை மறந்து விடாதே.

உன்
ரோஜா.

ரோஜா அனந்துக்கு எழுதிய கடிதத்தை விஜய் பல முறை படித்தான். ஆனாலும் அவனுக்குத் திருப்தியாக இல்லை. இன்னும்...இன்னும் படிக்க வேண்டும் போல் இருந்தது.

அனந்தைத் திருமணம் செய்து கொள்ள ரோஜா சுமுகமாக இல்லை, இது உண்மை...ஆனால் அவன் கண்கள் அந்த விஷயத்தைவிட, ரோஜா எழுதியிருந்த இனிய கனவின் மீதே நிலைத்து விட்டன. தன் மனதில் இருக்கும் எண்ணங்களை ரோஜா வார்த்தையில் வடித்தது போல் இருந்தது. இது எப்படி சாத்தியமாகும்? ஒரே எண்ணம்,



ஒரே விருப்பம் இரு மனிதர்களிடம் ஒரே விதமாக உருவகம் பெற முடியுமா? எவ்வளவு விசித்திரமான விஷயம்?

இத்தனை நாட்களும் தான் யோசிப்பதுபோல், யாரேனும் யோசிக்க மாட்டார்கள் என்றும், அதிலும் பெண்களிடம் இது போன்ற எண்ணங்கள் வர வாய்ப்பே இல்லையென்றும் நினைத்து வந்திருந்தான். அவனுக்கு மூச்சு முட்டுவது போல் இருந்தது. உடனே உடைகளை மாற்றிக் கொண்டு வெளியில் கிளம்பினான்.

பார்க்கில் உட்கார்ந்து கொண்ட விஜய், சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்து மற்றொருமுறை கவனமாகப் படித்தான். ரோஜா எழுதிய அந்த வரிகளைப் படிக்கும்போது அவன் இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. தன்னுடைய மனதில் ஆழமாகப் புதைந்திருந்த எண்ணங்கள், ரோஜாவின் பேனா வழியாக எழுத்துக்களாக உயிர் பெற்றிருந்தன.

இந்த உலகில் எத்தனை பெண்கள் இருக்கிறார்கள்? இந்தப் பெண் ரோஜாவாக இல்லாமல், வேறொரு பெண்ணாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், அவளை தன்னுடையவளாய் அடைந்திருப்பான். ஆனால் ரோஜா விஷயத்தில் அது நடவாத காரியம்.

மெதுவாகப் பின்னால் சாய்ந்த விஜய், ஒரு கையைத் தலைக்கு அடியில் வைத்துக் கொண்டு, புல்வெளியில் மல்லாந்து படுத்துக்கொண்டான். நீல வானத்தின் வெண் மேகங்கள் பஞ்சு பொதிகளாய் நகர்ந்து கொண்டிருந்தன. மகிழ்ச்சியும், வேதனையும் ஒரே சமயத்தில் அவனை ஆட்கொண்டன.

அவனுக்கென்னவோ தான் செய்த குற்றம் இரு மடங்கு ஆகிவிட்டது போல் தோன்றியது. அன்று இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு, அனந்திடம் மறுப்பு தெரிவிக்க

வந்தான் போதும்... தனக்கு எப்படித் தெரியும்? என்றும் எதற்குக்கூட கெடுதலை செய்யாத அவன், அந்தப் பெண்ணுக்குத் தீங்கு செய்து விட்டான்.

அனந்த் ரோஜா இருவரும் சேர்ந்து தன்னை ஏமாற்றி விட்டார்கள் என்ற விஷயம் நினைவுக்கு வந்த போது, அவன் மனம் ரோஷத்தால் பற்றி எரிந்தது. அனந்துக்குத் தான் புத்தியில்லை என்றால், ஒரு பெண் முன் பின் யோசிக்காமல் இப்படிச் செய்யலாமா?

விஜய் மனதில் எழும்பிய கோபாக்னியை, ரோஜா எழுதிய கடிதம் அமைதி படுத்தியது. தெரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தாலும் தன்னால் ஒரு தவறு நடந்து விட்டது. இதற்குப் பிராயச்சித்தம்தான் என்ன?

யோசனைகளில் மூழ்கியிருந்த விஜய், ''விஜய்! நீதானா?'' என்ற குரல் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். எதிரே வேணுகோபாலன் வந்து கொண்டிருந்தார். அவருக்கு சற்றுத் தள்ளி ராதையின் கையைப் பிடித்துக் கொண்டு ரோஜா வந்து கொண்டிருந்தாள்.

வேணுகோபாலன் விஜய்க்கு எதிரே உட்கார்ந்து, கொண்டே ''என்ன விஜய்? சமீபத்தில் கண்ணில் படவே இல்லையே? நீ வீட்டுக்கு வந்து எவ்வளவு நாட்களாச்சு தெரியுமா?'' என்று நிஷ்டூரமாய்ச் சொன்னார்.

விஜய் எழுந்து உட்கார்ந்தான். அவன் முகத்தில் வேகமாக ரத்தம் பாய்ந்தது... கையில் இருந்த கடிதத்தை வேகமாக பேண்ட் ஜேபியில் தள்ளிவிட்டான்.

ரோஜா விஜய் பக்கம் பார்க்கவும் இல்லை. வேணுகோபாலன் அருகில் வந்து உட்காரவும் இல்லை. ராதையின் கையைப் பிடித்துக் கொண்டு, தொலைவாகச் சென்றாள். பௌண்டனைச் சுற்றி இருந்த சுவர்மீது உட்கார்ந்து கொண்டு ராதையிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். இந்தப் பக்கம் முதுகைக் காட்டி



உட்கார்ந்து இருந்த ரோஜாவை, விஜய் முதல் தடவையாக கோபமோ, வெறுப்போ இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''விஜய், உனக்கு அவசரமான வேலைகள் இல்லாத போது, ஒரு அரை மணி நாம் அமைதியாக, தனிமையில் உட்கார்ந்து பேசணும். உன்னிடம் ரொம்ப முக்கியமான விஷயம் சொல்லணும்'' என்றார் வேணுகோபாலன்.

விஜய் சரி என்பது போல் தலை அசைத்தான். ஆனால் அவர் என்ன சொல்கிறார் என்பதை அவன் மனம் உணரவில்லை.

இன்று ரோஜாவைப் பார்க்கும் போது அவனுக்கு எப்படியோ இருந்தது. அவள் அனந்துக்கு எழுதிய கடிதத்தை தான் படித்துவிட்டதாகச் சொல்லி விட்டால் என்ன ஆகும்? தன் கனவும் அதுதான் என்று அவளிடம் சொல்ல முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! விஜய்க்குத் திடீரென்று வேணுகோபாலன் தன்னையும், ரோஜாவையும் தனிமையில் விட்டுப் விட்டுப் போனால் என்ன என்று தோன்றியது.

விஜய் மனதில் ஏற்பட்ட உணர்வுகளின் கொந்தளிப்பைக் கொஞ்சம்கூட அறிந்திராத ரோஜா, இங்கிருந்து சீக்கிரமாகக் கிளம்பிவிட துடித்துக் கொண்டிருந்தாள். இன்று பார்க்குக்கு வேணுகோபாலனை ஒரு விதமாகக் கட்டாயப் படுத்தி அழைத்து வந்திருந்தாள். இந்த அமைதியான சூழ்நிலையில் செந்தூரின் விஷயத்தை சொல்லி விட எண்ணினாள்.

ஆனால் பார்க்கில் காலடி எடுத்து வைக்கும் போதே, தொலைவில், புல்வெளியில் மல்லாந்து படுத்து, வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த விஜய் கண்ணில் பட்டுவிட்டான். விஜயைப் பார்த்ததும், ''அட! விஜய் இங்கே இருக்காரே'' என்று உற்சாகமாகச் சொல்லிக்

கொண்டே, அவனை நோக்கி விடுவிடுவென்று நடக்கத் தொடங்கினார். திடுக்கிட்டுப் போனவளாய் நின்று விட்ட ரோஜாவுக்குத் தான் வந்த வேலை ஆகாது என்று தெளிவாகத் தெரிந்து விட்டது. கசப்பான உணர்வு ஏதோ மனதில் படர, ராதையை அழைத்துக் கொண்டு தொலைவாகச் சென்று விட்டாள்.

## 41

அன்று ரோஜா வரும் போதே வாசலில் ராதை நின்றிருந்தாள்.

"என்னம்மா? என்ன நடந்தது?" வாடியிருந்த ராதையின் முகத்தைப் பார்த்துக் கேட்டாள் ரோஜா.

ராதை, லாவண்யா அழுது கொண்டிருப்பதாகவும், தந்தை கோபமாய் இருப்பதாகவும் ஜாடை செய்து காண்பித்தாள்.

ராதையுடன் ரோஜா உள்ளே வந்தாள். வீடு முழுவதும் மயான அமைதி நிலவியிருந்தது. சாதாரணமாக அடிக்கடி தந்தை மகளுக்குமிடையே ஏதாவது விஷயத்தில் கருத்து வேற்றுமை வந்து கொண்டுதான் இருக்கும். விருப்பமில்லாவிட்டாலும், ரோஜாவுக்கு அதில் தலையிட வேண்டியதாயிற்று."

ராதையுடன் ரோஜா நேராகச் சமையலறைக்குச் சென்றாள். சமையல்காரன் பீடி பிடித்துக் கொண்டு ஓய்வாக இருந்தான். ரோஜாவைப் பார்த்ததும், பீடியை மறைத்துக்கொண்டு, அவள் கேட்காமலேயே சமாசாரத்தை சொல்லிவிட்டான். தந்தையும், மகளும் ஏதோ நகை விஷயமாகச் சண்டை போட்டுக் கொண்டார்களாம்!



காலையில் டிபன் காபி சாப்பிடவில்லை. மதியமும் சாப்பிட மாட்டார்கள் போல் இருக்கு. வீட்டில் வேலை எதுவும் இல்லாததால் தனக்கு விடுமுறை அளித்தால் வீட்டுக்குப் போவதாகச் சமையல்காரன் தெரிவித்தான்.

ரோஜா காபி தயாரிக்கச் செய்து, தானே கையோடு எடுத்துக் கொண்டு லாவண்யாவின் அறைக்குள் சென்றாள். தலையணையில் முகம் புதைத்து, அழுது கொண்டிருந்த லாவண்யாவைப் பார்த்ததும், ரோஜாவின் இதயம் கரைந்து விட்டது.

காலடிச் சத்தம் கேட்டதும் லாவண்யா தலையை உயர்த்திப் பார்த்து மறுபடியும் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"காபி கொண்டு வந்திருக்கேன்" மென்மையான குரலில் சொன்னாள் ரோஜா.

லாவண்யா பேசவில்லை...

ரோஜா காபி கோப்பையை மேஜைமீது வைத்து விட்டு, கட்டில் அருகில் சென்று லாவண்யாவின் தோளில் கையைப் பதித்தாள். அந்த ஸ்பரிசத்தில் இருந்த நட்பை, ஆறுதலை லாவண்யா உணராமல் இல்லை. மடை திறந்த வெள்ளமாய் அவளுக்குள் துக்கம் பொங்கியது.

"இது என்ன பைத்தியக்காரத்தனம்?" என்று உரிமையுடன் கடிந்து கொண்டாள் ரோஜா.

"ஆமாம்! நான் பைத்தியக்காரிதான்... எல்லோருக்கும் நான் வேண்டாதவளாக ஆகிவிட்டேன். நான் எப்போ சாகப் போகிறேன், எப்போ என் தொல்லை நீங்கும் என்று எல்லோரும் காத்துக்கிட்டு இருக்காங்க" என்றாள் லாவண்யா.

"இதென்ன பேச்சு?"

லாவண்யா பதிலளிக்கவில்லை. ரோஜாவுக்கு லாவண்யாவின் வேதனை புரிந்தது. லாவண்யாவிடம் நாளுக்கு நாள்

வளர்ந்து கொண்டு இருக்கும் இந்த அதிருப்திக்குக் காரணம் பயங்கரமான தனிமை. அதைப் புத்திசாலித்தனமாய்ப் போக்கிக் கொள்வதை விட்டுவிட்டு, வெகுளியாய், துடுக்கான நடத்தையால் இன்னும் அதிகப்படுத்திக் கொள்கிறாள்.

"காபி ஆறிப்போய் விடும்" கெஞ்சுவது போல் சொன்னாள் ரோஜா.

லாவண்யா சரேலென்று எழுந்தாள்... "யார் உன்னைக் கொண்டு வரச் சொன்னது?"

"ஒருத்தர் சொல்லணுமா? நீங்க எனக்கு சம்பளம் கொடுப்பது எதுக்கு? நீங்க காபி குடிக்க மறந்து விட்டால், நினைவு படுத்தும் பொறுப்பு என்னோடது இல்லையா?" சிரித்துக் கொண்டே சொன்னாள் ரோஜா.

"அந்தக்காபியில் கொஞ்சம் விஷத்தைக் கலந்து தா..."

"விஷத்தைக் கலக்க எனக்குத் தெரியாது. அமிருதத்தை கலந்து தரப்போகும் நபருக்காகத் தேடிக் கொண்டு இருக்கேன்."

"அப்படின்னா உன் எண்ணம்?"

"உங்க வேதனையெல்லாம் மந்திரம் போட்டு மாயம் செய்யக் கூடிய சிநேகிதர்கள் யாராவது இருந்தால், உங்களுக்காகத் தேடிக் கண்டு பிடிக்கலாம் என்றுதான்..."

ரோஜா யாரை உத்தேசித்து அப்படிச் சொன்னாள் என்று உணர்ந்து கொண்ட லாவண்யாவின் கண்கள் சிவந்தன.

காதுகளில் இருந்து முத்து ஜிமிக்கி வேகமாய் அசைந்தாட, "உண்மையைத்தான் சொல்கிறேன் ரோஜா! எனக்கு வாழவேண்டும் என்ற விருப்பம் கொஞ்சம்கூட இல்லை! பார்த்துகிட்டே இரு... என்றாவது ஒரு நாள் நீ



வரும்போது, தூக்க மாத்திரைகளை விழுங்கி, நிரந்தரமாகத் தூங்கி இருப்பேன். நான் யாருக்காக வாழணும்?" மறுபடியும் அழுத்தி வினவினாள் லாவண்யா.

ரோஜாவுக்கு லாவண்யாவை அணைத்து, ஆறுதல் சொல்லத் தோன்றியது.

"உண்மையைச் சொல்லு... நான் யாருக்காக உயிர் வாழணும்?"

"ஒருத்தருக்காக வாழ்கிறோம் என்றோ, வாழணும் என்றோ நினைப்பது வெறும் பிரமைதான். நாம் நமக்காகத் தான் வாழணும். இப்போ உங்க வாழ்க்கைக்கு என்ன குறைச்சல்?"

லாவண்யாவின் கண்களில் கோபம் எட்டிப் பார்த்தது. "அதோ! மறுபடியும் அதே வார்த்தை... எல்லோரும் அப்படித்தான் சொல்வாங்க. எனக்கு என்ன குறைச்சல் என்று உங்களுக்கு என்ன தெரியும்?"

"உண்மையிலேயே தெரியாது அம்மா, உங்களுக்கு என்ன தேவையோ, எதுக்காக நாங்க சலிக்கிறோமோ, அது உங்களிடம் நிறையவே இருக்கு. ஆனால் என்னைப் போன்றவர்களால் உங்களைப் புரிந்து கொள்ள முடியாது. அவர்களை விட்டு விடுங்கள்."

லாவண்யா திடீரென்று ரோஜாவின் கையைப் பற்றிக் கொண்டே, "ரோஜா! என் துரதிர்ஷ்டம் பணக்காரியாகவும் வரவேண்டாம். பணம் என்பது இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் இருந்தும், அனுபவிக்க முடியாது போனால், அதைவிட நரக வேதனை வேறு எதுவும் கிடையாது."

ரோஜாவுக்கு உண்மையாகவே புரியவில்லை. லாவண்யாவுக்கு என்ன குறைச்சல்? இதைவிட வேறு என்ன தான் வேண்டும்? லாவண்யாவின் பார்வையில் மகிழ்ச்சியின் அளவுகோல்தான் என்ன? லாவண்யாவை வற்புறுத்தி காபி குடிக்கச் செய்து, ரோஜா வெளியே வந்தாள்.

ரோஜா வேணுகோபாலன் அறைக்குச் சென்றபோது, அவர் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். காலடிச் சத்தம் கேட்டதும், பேப்பரை நகர்த்திக் கோபமாக ஏதோ சொல்லப் போனவர், ரோஜாவைப் பார்த்ததும் நின்று விட்டார். "நீயா ரோஜா! வாம்மா...இன்னிக்கு ஏன் இவ்வளவு நேரம்?" காபி கோப்பையை கையில் எடுத்துக் கொண்டே அன்புடன் கேட்டார்.

"நான் வந்து ரொம்ப நேரமாகிவிட்டது."

"ரொம்ப நேரமாகி விட்டதா?"

"ஆமாம், லாவண்யாவிடம் இருந்தேன்."

லாவண்யாவின் பெயரைக் கேட்டதும், அவருடைய முகம் கோபமாக மாறியது. மறுபடியும் பேப்பரை கையில் எடுத்துக் கொண்டு, மௌனமாகக் காபியை பருகத் தொடங்கினார்.

"லாவண்யா அழுது கொண்டிருக்கிறாள்." என்று மெதுவான குரலில் சொன்னாள் ரோஜா.

"அழட்டும், சிலருடைய பிறவிக் குணங்களில் அழுகையும் ஒன்று."

"நீங்க அந்தப் பெண்ணை இப்படி வேதனைப் படுத்துவது நன்றாக இல்லை."

"நானா?" அவர் நிமிர்ந்து பார்த்தார்.

"ஆமாம்...நீங்கதான்."

"நீ கூட என்னையே குற்றம் சாட்டுகிறாயா ரோஜா."

"குற்றம் சாட்டுகிறேன் என்று இல்லை. இன்று நடந்ததையே பாருங்கள், எவ்வளவு சின்ன விஷயம். லாவண்யா விரும்பிய அந்த நெக்லஸை அவளுக்குக் கொடுத்திருக்கலாமே."

"அது ராதையோடது. இதுவரை ராதைக்காக வாங்கியதெல்லாம் அவளுக்குக் கொடுத்து இருக்கிறேன். அசல் விஷயம் அது இல்லை. எது இல்லையோ அதுதான் வேண்டுமென்ற பிடிவாதம்."

"இதுக்கெல்லாம் லாவண்யாவின் மனதில் இருக்கும் அதிருப்திதான் காரணம். சின்ன விஷயம் கிடைத்தாலும், அது எரிமலைக் குழம்பாய்ப் பொங்கி வெளியேறுகிறது."

"உண்மையாக இருக்கலாம்! என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? பணம் தேவைப்பட்ட போதெல்லாம் தருகிறேன். எப்படி நடந்து கொண்டாலும் சத்தம் போடுவதையும் நிறுத்தி விட்டேன்."

"நல்ல பையனாகப் பார்த்து அவளுடைய திருமணத்தை முடித்துவிடுங்க."

"நான் தயாராகத்தான் இருக்கேன். ஆனால் நல்ல பையன் கிடைப்பது அவ்வளவு எளிதான விஷயம் இல்லையே! அவளுடைய மனதில் யாராவது இருந்தால் சொல்லச் சொல்லு. எனக்கு ஆட்சேபணை இல்லை. உண்மையைச் சொல்கிறேன் ரோஜா, அவளுடைய எதிர்காலம் பற்றித்தான் எனக்குக் கவலையாக இருக்கு. நான் போன பிறகு அவளுடைய வாழ்க்கை எப்படி இருக்குமோ என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கு..."

ரோஜாவுக்கு அவருடைய வேதனை புரிந்தது. லாவண்யாவை அவரால் கட்டுப்படுத்தவும் முடியாது... பார்த்துக் கொண்டு வெறுமே இருப்பதும் இயலாத காரியம்.

"அந்த நெக்லஸை இப்படிக் கொடுங்கள். லாவண்யாவிடம் தருகிறேன்."

என்ன நினைத்துக் கொண்டாரோ, உடனே எழுந்து பீரோவிலிருந்து நெக்லஸை எடுத்து ரோஜாவிடம் கொடுத்தார். ரோஜா நெக்லஸை எடுத்துக் கொண்டு வெளியே வந்துவிட்டாள்.

# 42

ரோஜா ஹாலுக்கு வரும்போது, லாவண்யா யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தாள்.

"உண்மையாய்ச் சொல்கிறேன், எனக்குச் செத்துப் போகணும்போல் இருக்கு. இன்று உன்னைப் பார்க்கா விட்டால், நிஜமாகவே உயிரை விட்டு விடுவேன்...பிராமிஸ்! மாலை ஆறு மணிக்கா...அது வரை என்ன செய்யட்டும்! ஓ.கே. குட் பை..." போனை வைத்து விட்டாள்.

லாவண்யா முகத்தில் தென்பட்ட மகிழ்ச்சியைக் கவனித்த ரோஜா, போன் யாருக்குச் செய்தாள் என்பதை எளிதாக ஊகித்து விட்டாள். ரோஜாவைப் பார்த்ததும் லாவண்யா சொன்னாள். "நான் ஜேம்ஸுக்குப் போன் செய்தேன். மாலையில் வெளியே போனால், திரும்பிவர நள்ளிரவுக்கு மேல் ஆகிவிடுமென்று அப்பாவிடம் சொல்லி விடு."

ரோஜா அதைக் காதில் வாங்காதவள் போல், ஜேம்ஸை அறிமுகப் படுத்துவதாகச் சொன்னதோட சரி... இது வரை அவரை வரச் சொல்லவேயில்லையே" என்றாள் பொய்ச் சினத்துடன்.

"எங்கே? வீட்டுக்கு வரச் சொன்னால் இதோ வருகிறேன் என்று சொல்வானே தவிர வரவே மாட்டான். இந்தத் தடவை தீபாவளிக்கு அழைக்கப் போகிறேன். என்ன ஆனோ? எதிரில் இருக்கும் போது உயிரையே கொடுப்பது போல் நடந்து கொள்வான். கண் மறைவானால் போதும் என் நினைவே இருக்காது."

"ஆண்கள் அப்படித்தான், அவர்களை நம்பக்கூடாது." நாக்கு நுனி வரை வந்த வார்த்தைகளை எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்ட ரோஜா, "நான் தைத்துக் கொடுத்த கைக்குட்டையைக் கொடுத்தீங்களா?" என்று கேட்டாள்.



"இன்று கொடுக்கப் போகிறேன்."

"அவரைப் பார்த்தால், நான் விஷயம் சொல்ல விரும்புகிறேன்."

"என்னவென்று?"

"எங்க லாவண்யாவின் இதயம் முழுவதும் அவர்தான் இருக்கிறார் என்று."

லாவண்யா சிரித்து விட்டாள். ரோஜாவின் மனம் இலேசாகி விட்டது.

"ஒரு முறை கண்களை மூடிக் கொள்ளுங்கள்" கைகளைப் பின்புறமாய் மறைத்தபடி ரோஜா பேசிக் கொண்டிருந்தாள்.

"எதுக்கு?"

"வேலை இருக்கு..."

"என்னவென்று சொல்லக்கூடாதா?"

"உங்களுக்குப் பிடித்தமானதுதான்..."

"என்னவாக இருக்கும்?" லாவண்யா கண்களை மூடிக் கொண்டாள்.

ரோஜா லாவண்யாவின் பின் பக்கமாய் நின்று நெக்லஸை எடுத்து லாவண்யாவின் கழுத்தில் அணிவித்தாள். நெக்லஸின் ஸ்பரிசம் உடலில் பட்டதும் திடுக்கிட்ட லாவண்யா, விரல்களால் தடவிப் பார்த்து, கண்களைத் திறந்தாள். உடனே ரோஜா பக்கம் திரும்பியவள், "இதை எதுக்கு எடுத்துக்கிட்டு வந்தாய்? யார் உன்னைக் கொண்டு வரச்சொன்னது?" என்று உடனே எடுத்து விடப் போனாள்.

"வேண்டாம்.. வேண்டாம். எடுக்காதீங்க. ரொம்ப நன்றாக இருக்கு." ரோஜா கெஞ்சுவது போல், லாவண்யா
வின் கைகளைத் தடுத்துப் பிடித்துக் கொண்டாள்.
"லாவண்யா கோபமாய்ச் சொன்னாள். "நான்
இதுக்காக அழுது கொண்டிருப்பதாக நீ எண்ணி விட்டாய்,

அது முற்றிலும் தவறு. நான் வருத்தப்படுவது அப்பா சொன்ன வார்த்தைகளுக்கு. எனக்கு பொறுப்பு கிடையாதாம். வீட்டு விஷயத்தில் அக்கறை கிடையாதாம். யாருடைய பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளணும்? அவருக்கோ என் நிழலைக்கூடப் பிடிக்கல. நீதான் வந்ததிலிருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கே. முன் பின் தெரியாத உன்னிடம் காண்பிக்கும் அன்பில் ஆயிரத்தில் ஒரு பங்காவது என்னிடம் காண்பித்து இருக்கிறாரா? உலகத்தில் மற்ற பெற்றோரைப் பார்க்கும் போது எனக்கு பொறாமையாய் இருக்கும். அவங்க தம் குழந்தைகளிடம் எவ்வளவு அன்பாக இருக்காங்க? நான் என்ன பாவம் செய்தேன் என்று எனக்கு இந்த நிலைமை? நான் ஊரைச் சுற்றுகிறேனாம். புடவைகள் இருந்தால் கட்டிக் கொள்வதும், நகைகள் இருந்தால் போட்டுக் கொள்வதும் ஒரு தப்பா? என்னைப் பார்க்கிறவங்க மேனா மினுக்கின்னு நினைத்துக்கிட்டால் நான் என்ன செய்யட்டும்? உண்மையாக நான் எப்படிப் போனால் இவர்களுக்கு என்ன? அவங்க விஷயத்தை விடு. என்னைப் பெற்ற தந்தையே என்னைப் புரிந்துக் கொள்ளாவிட்டால் எப்படி?'' ஆவேசமாய்ப் பதிலை எதிர்பார்ப்பவள் போல் கேட்டாள் லாவண்யா.

ரோஜா மென்மையான குரலில் பதில் அளித்தாள். ''நீங்க சொல்வது உண்மைதான். ஆனால் உங்க இருவருக்கும் இடையே ரொம்ப சின்ன விஷயம் தான் சுவராய் இருக்கிறது. இந்தக் கருத்து வேறுபாடு என்பது ரொம்ப வேதனை தரும் விஷயம். யாரும் புரிந்து கொள்ளவில்லை என்று நீங்க வருத்தப்படுவானேன்? எல்லோரையும் புரிந்து கொள்ள நீங்க ஏன் முயற்சி செய்யக்கூடாது?''

புதிய விஷயம் கேட்பது போல் லாவண்யா நின்று விட்டாள்! இதற்குள் சமையல்காரன் அழைக்கும் குரலைக் கேட்டதும் ரோஜா கீழே போகப் போனவள் சற்று நின்று, ''லாவண்யா! நீங்க எப்போதும் சுகமாக, மகிழ்ச்சியாக இருக்கணும். இந்த உலகில் நிறைய பேர் இல்லாதவேதனை



களை வளர்த்துக் கொண்டு, இருக்கிற சுகத்தை நாசமாக்கிக் கொள்வாங்க. அது போன்ற முட்டாள்களில் ஒருவராய் நீங்க இருக்கக்கூடாது'' என்று அங்கிருந்து போய் விட்டாள்.

சிநேகிதியாய், களங்கமில்லாத வெள்ளை மனதுடன் ரோஜா அளித்த இந்த அறிவுரைக்குப்பின் வேறு ஏதாவது அர்த்தம் புதைந்து இருக்குமோ என்று தேடிய லாவண்யா, ரோஜா போன திசையையே பார்த்துக்கொண்டிருந்தாள். கைவிரல் தன்னிச்சையாய்க் கழுத்தில் இருந்த நெக்லெஸைத் தடவிப் பார்த்தன. தான் கேட்டபோதே இதைக் கொடுத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? தான் சொல்வதை கொஞ்சம்கூடப் பொருட்படுத்தாதவர், ரோஜாவின் சொல்லை மட்டும் எவ்வளவு மதிக்கிறார்? ரோஜா என்ன மந்திரம் போட்டாள்? ரோஜாவுக்குந் திடீரென்று தன்மீது இவ்வளவு அக்கறை ஏற்படுவானேன்? சமீபத்தில் தன்னைச் சந்தோஷப்படுத்த பலவிதமாய் முயன்று வருகிறாள்.

நெக்லெஸைக் கொடுத்து விட்டால் தான் மகிழ்ந்துபோய் விடுவேன் என்று நினைத்தாள் போலும்! அவளுடைய எண்ணம் என்னவாக இருக்கும்? இந்த வீட்டில் நுழையும் போது இந்த எண்ணம் ஏற்பட்டிருக்காது. இந்த வீட்டு நிலைமை, இந்த சண்டை பூசல்களை கவனித்த பிறகு ரோஜா மனதில் ஏதோ திட்டம் உருவாகியிருக்க வேண்டும்! ராதையோ வாய் பேசமுடியாதவள், தன்னை நல்லவள் ஆக்கிக்கொள்ளத் திட்டம் போடுகிறாளாய் இருக்கும்.

எப்போதும் பெண்களின் ஜோலிக்கே போகாத தன் தந்தை ரோஜாவிடம் இவ்வளவு அபிமானமும், அக்கறையும் வைத்திருப்பது லாவண்யாவுக்கு விசித்திரமாக இருந்தது. யாருக்குத் தெரியும்? இந்த உலகில் எது வேணும்னாலும் நடக்கலாம். தான் ரொம்ப கவனமாக இருக்கணும். நட்பாய் இருந்துகொண்டே ரோஜாவின் சீட்டைக் கிழிக்கச் செய்யணும். அதுவும் கூடிய சீக்கிரத்தில் நடக்கணும்.

24166
41 A288

## 43

ஹோட்டலுக்கு வெளிப்புறமாய் இருந்த கார்டனில் சந்திரன சிகரெட் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தான். அழகான புல்வெளியில், அங்காங்கே வட்டமான டேபிள்கள், அதைச்சுற்றி வேலைப்பாடு மிகுந்த நாற்காலிகள் போடப் பட்டிருந்தன. தொலைவிலிருந்து இனிமையான இசை ஒலித்துக் கொண்டிருந்தது.

நாற்காலியில் சரிந்து உட்கார்ந்து இருந்த சந்திரன், கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். லாவண்யா சொன்ன நேரத்துக்கு ஐந்து நிமிடங்கள் முன்பாக வந்து விடுவாளே தவிர லேட்டாக வரமாட்டாள். சமீப காலத்தில் சந்திரன் லாவண்யாவுடன் நட்பைக் குறைத்துக்கொள்ள நிச்சயித்துக்கொண்டு, கிட்டத்தட்ட சந்திப்பதையே நிறுத்திவிட்டான். ஆனால் போன வாரம் மேலிடத்தி லிருந்து, லாவண்யா பல லட்சங்களுக்கு வாரிசு என்றும், அவர்கள் வீட்டில் பணமும் நகைகளும் நிறைய இருப்ப தாகவும், அந்தப் பெண்ணைக் கவர்ந்து, எப்படியாவது அந்த வீட்டில் நுழைய வேண்டுமென்று சந்திரனுக்கு ஆணை வந்தது. அவர்களின் எண்ணம் என்னவென்று சந்திரனுக்குப் புரிந்து போயிற்று. லாவண்யாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, அந்த வீட்டு நிலவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு அந்த வீட்டையே கொள்ளையடிக்க வேண்டும்.

எதையும் செய்யத் தன்னால் முடியும்—ஆனால் தன்னிடம் நம்பிக்கை வைத்து கல்மிஷமில்லாமல் பழகிவரும் லாவண்யாவை ஏமாற்றத் தன்னால் முடியாது. தன்னைப் பார்த்ததும் மின்னல் ஒளி வீசும் அந்தக் கண்களில்



பயத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்த இயலாது. என்றும் இல்லாத விதமாய், லாவண்யாவின் விஷயத்தில் சந்திரனின் மனதில் போராட்டம் துவங்கியது.

முதல் தடவை திருடிய போதே, தன் மனம் இறந்து போய் விட்டதாகவும், எந்த உணர்வுகளும் தன்னைப் பாதிக்காது என்றும் நினைத்திருந்த சந்திரனுக்கு, தன் இதயம் இன்னும் உயிருடன் இருப்பதையும், அது லாவண்யாவின் நட்பில் துளிர்ந்து பலம் பெற்றிருப்பது போலவும் உணர்ந்தான்.

முதல் முறையாய் லாவண்யாவைப் பார்க்கும்போது பணக்காரர்களிடம் ஏற்படும் துவேஷமும், பகை உணர்ச்சி யும் தான் சந்திரனுக்கு ஏற்பட்டது. அதனாலேயே லாவண்யாவிடம் அறிமுகம் ஏற்படுத்திக்கொண்டு, நட்பை வளர்த்துக் கொண்டான். ஆனால் லாவண்யாவுடன் நட்பு வளர வளர, அவளுடைய சுபாவம் புரிந்த பிறகு, அவனுக்குத் தன் மீதே வெறுப்பு ஏற்பட்டது. லாவண்யாவுக்குத் தன்னால் துளிக்கூட ஆபத்து வரக்கூடாது என்ற எண்ணம், அவன் அறியாமலேயே, மனதில் திடமாய்ப் படிந்துவிட்டது. போன மாதம் நடந்த முரளியின் கொலையால் அது மேலும் ஆழமாகப் பதிந்து போயிற்று.

முரளிக்குத் தன் வயதுதான் இருக்கும். தன்னைவிட இரண்டு வருடங்களுக்கு முன்பே இந்தக் கூட்டத்தில் சேர்ந்து விட்டான். சின்னக் குழந்தைகளைக் கடத்திக் கொண்டு வருவதில் ரொம்ப திறமை வாய்ந்தவன்.

முரளியின் பெற்றோர் சின்ன வயதிலேயே இறந்து விட்டார்களாம். உறவினர் வீட்டில் வளர்ந்து வந்திருக் கிறான். கன்யாகுமரியில் குக்கிராமத்தில் பிறந்த முரளிக்கும், இந்தக் கூட்டத்துக்கும் எப்படி தொடர்பு ஏற்பட்டதோ, அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும். "காற்று போன போக்கில் வந்து சேர்ந்தேன்" என்று சிரிப்பானே தவிர, வேறு எதையும் சொல்ல மாட்டான்.

நான்கு மாதங்களுக்கு முன் முரளி மேலிடத்து உத்தரவின் பெயரில், சேட் பன்னாலாலின் வீட்டில் டிரைவராகச் சேர்ந்தான். பன்னாலால் நகரத்தில் லேவாதேவியில்பெரிய வியாபாரி—மனைவி இறந்த பிறகு இரண்டாவது திருமணம் செய்து கொண்டான். இரண்டாவது மனைவியாக வந்த பெண், தொட்டாலே கன்றிவிடும் அளவுக்கு அழகாய் இருந்தாள். முரளி அந்த வீட்டில் சேர்ந்த இரண்டு மாதங்களுக்குள், அவளுக்கும், முரளிக்கும் நெருக்கம் ஏற்பட்டது. முரளியின் நண்பனாய் அவர்கள் வீட்டுக்கு சில தடவைகள் போயிருக்கிறான். குழந்தைத்தனம் மாறாத முகத்துடன் இருந்த அந்தப் பெண்ணுக்கு, நான்கு வயதில் மகன் இருப்பதாகத் தெரிந்தபோது அவர்களால் நம்பவே முடியவில்லை. அவ்வளவு இளமையாய், நாசூக்காக இருந்தாள்.

வயதான கணவன், வீட்டில் தனிமை! அந்தப் பெண் முரளியின்பால் கவரப்படுவதற்கு ரொம்ப நாட்களாகவில்லை. முரளியும், அந்தப் பெண்ணும் நெருக்கமாக இருந்தபோது, மேலிடத்து ஆணையின்படி சந்திரன் தான் போட்டோக்களை எடுத்தான். அந்தப் போட்டோக்களை வைத்துக்கொண்டு அவளை 'பிளாக் மெயில்' செய்யச் சொல்லி முரளிக்கு உத்தரவு வந்தது. அந்த ஆணையை மீற முடியாமல் முரளி எப்படித் தவித்தானோ, சந்திரன் நேரில் பார்த்திருக்கிறான். வேறு வழியில்லாமல் முரளி அவளை மிரட்டிக் கடிதம் எழுதினான். அந்தப் பெண் அழுதாள். தன் குடும்ப கௌரவத்தைக் குலைக்க வேண்டாமென்றும், கணவனுக்குத் தெரிந்தால் தன் வாழ்க்கையே நாசமாகிவிடுமென்றும் கெஞ்சினாள். முரளிக்கு அந்தப் பெண்ணிடம் இரக்கம் இருந்தாலும், வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்ல முடியாத நிலைமை கடைசியில் அவள் தற்கொலை செய்து கொண்டாள். தன் சாவுக்கு யாரும் காரணம் இல்லையென்றும், முழுப்பொறுப்பும் தன்னுடையது தான் என்றும் கடிதம் எழுதி வைத்தாள்—எந்தப் பிரச்னையும் ஏற்படவில்லை.



ஆனால் அந்தப் பெண் இறப்பதற்கு முன் முரளிக்குத் தனியாக கடிதம் எழுதியிருந்தாள். அதில் என்ன எழுதியிருந்தாளோ, அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும். முரளி பைத்தியம் பிடித்தவன் போலாகிவிட்டான். கூட்டத்திற்கு எதிராகச் செயல்படப் போவதாகச் சொன்னான். அப்ரூவராய் மாறி போலீசாரிடம் எல்லாம் சொல்லிவிடப் போவதாகச் சொன்னான்... இரண்டு நாட்களுக்குப் பிறகு, முரளியை பம்பாய்க்கு வரச்சொல்லி உத்தரவு வந்தது. அவனை பம்பாய் ரயிலில் ஏற்றிவிட்டது சந்திரன் தான். ஆனால், அவன் பம்பாய் போய்ச் சேரவில்லை. திரும்பி இங்கே வரவும் இல்லை — எங்கே போனானோ யாருக்கும் தெரியவில்லை...

''முரளி என்ன ஆனான்?'' என்று சிங்கிடம் கேட்டான் சந்திரன்.

''உயிருடன் எங்கே இருக்கப் போகிறான்? என்றைக்கோ அவன் கதையை முடிச்சிருப்பாங்க'' என்றான் சிங்.

''உண்மையாகவா?'' சந்திரனால் நம்பமுடியவில்லை.

''உண்மைதான்! எனக்கு நன்றாகத் தெரியும்!'' அந்த வார்த்தைகளைச் சொல்லும்போது சிங்கின் கண்களில் நீர் சுழன்றது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவன் லாவண்யாவைச் சந்திப்பதை விட்டு விட்டான்... லாவண்யா போன் செய்த போது தான் இருந்தும் இல்லையென்று சொல்ல வைத்தான். இன்று லாவண்யா போனில் பிடிவாதம் பிடித்ததால் அவனால் வராமல் இருக்கமுடியவில்லை. இப்போகூட அவள் வரும்முன் தான் இங்கிருந்து போய்விடுவது நல்லது என்று அவனுக்குத் தோன்றியது.

சேந்தா எழுந்து இரண்டடி வைத்தபோது, ''ஹலோ!'' என்றவாறே லாவண்யா எதிரே வந்து கொண்டிருந்தாள். வேறு வழி இல்லாமல் சேந்தா அப்படியே நின்று விட்டான்.

நளினமாய் நடந்து வந்த லாவண்யா, சேந்தாவின் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டே, ''வந்து

விட்டீங்களா? உங்களைப் பார்க்கும் வரை எனக்கு நம்பிக்கையே இல்லை. வரமாட்டீங்களோன்னு நினைச் சேன்'' என்றாள்.

''வர வேண்டாம்னுதான் நினைத்தேன்—ஆனால்...'' சந்திரன் திடீரென்று நிறுத்தி விட்டான். அவன் கண்கள் லாவண்யாவின் கழுத்தில் நிலைத்துவிட்டன. இருளும், வெளிச்சமும் கலந்த அந்தச் சூழ்நிலையில், லாவண்யாவின் கழுத்திலிருந்த நெக்லஸ் பளபளவென்று மின்லிக் கொண் டிருந்தது.

இதுபோன்ற நகையை எங்கேயோ பார்த்திருக்கிறான். எப்போ? எங்கே?

''என்ன அப்படிப் பார்க்கறீங்க. நெக்லஸ் புதுசாய் இருக்கே என்றா? என்னோடது இல்லை, என் தங்கை ராதையோடது.'' என்று இளமுறுவலுடன் மொழிந்தாள் லாவண்யா.

''ரொம்ப நன்றாக இருக்கு...'' தான் கண் இமைக் காமல் பார்ப்பதற்குக் காரணம் சொல்வதுபோல் சொன்னான்.

''இதைப்பற்றி வீட்டில் இன்று பெரிய ரகளை நடந்தது.''

''ரகளையா? எதுக்கு?''

''உனக்கு இருக்கிற நகைகள் போறாதா என்பார் என் தந்தை... நமக்குச் சொந்தமானதை விட, உரிமை இல்லாத பொருள்மீதுதானே விருப்பம் அதிகமாக இருக்கும்.''

சந்திரன் தலை அசைத்தான்.

லாவண்யா கழுத்திலிருந்த நெக்லஸை எடுத்து அவனிடம் கொடுத்தாள். ''இதற்குப் பின்னால் ஒரு சுவை யான நிகழ்ச்சியிருக்கு...''

''என்ன நிகழ்ச்சி?''

லாவண்யா சுருக்கமாக அன்று ரயில் நிலையத்தில் ஒரு இளைஞன் இந்த நகையைத் திருட முயன்று பிடிபட்ட விஷயத்தைச் சொன்னாள்.



சந்திரனுக்கு, இதயத்தை யாரோ பலமாய் அழுத்துவது போல் மூச்சு இரைந்தது. நெக்லஸைப் பார்க்கும் சாக்கில், குனிந்த தலையை நிமிரவில்லை.

''என்னிடம் பேப்பரில் வெளியான போட்டோ கட்டிங் இருக்கு... அடுத்த தடவை காண்பிக்கிறேன்—'' உற்சாக மாய்ச் சொல்லிக் கொண்டிருந்த லாவண்யாவின் அருகில் பேரர் வந்தான்.

சற்றுத் தொலைவில் இருந்த நாற்காலியில் அமர்ந்து இருக்கும் மாது அவளை அழைப்பதாகக் கூறவும்,லாவண்யா திரும்பிப் பார்த்தாள். அந்த மாது அவளைப் பார்த்து சிரித்து கை அசைத்தாள்.

''அட ராமா! இவங்க கிட்டே மாட்டிகிட்டேனா! ரொம்ப நாளாக கிளப் பக்கம் போகவேயில்லை. அதுக்கு விளக்கம் சொல்லியாகணும். ஒரு நிமிஷம் இருங்க ஜெம்ஸ், இதோ வந்து விடுகிறேன்...'' என்று எழுந்து போனாள் லாவண்யா.

கண் இமைக்கவும் மறந்து போனாற்போல், சந்திரன் கையிலிருந்த நெக்லஸைப் பார்த்துக் கொண்டிருந்தான். நெற்றி முழுவதும் வியர்த்துக் கொட்டியது. சற்றுமுன் லாவண்யாவிடம் அவனுக்கு ஏற்பட்ட இரக்கம் மாயமாய் மறைந்து போயிற்று.

# 44

ஆனந்த் கழுத்தில் விழாமல் தப்பிக்க வைத்த தூக்கு கயிறு, தன் கழுத்தில் விழுந்து இறுக்குவது போல் இருந்தது விஜய்க்கு...

சமீபத்தில் வேணுகோபாலன் வீட்டுக்குப் போகாமல் இருக்க அவன் எவ்வளவு விரும்பினானோ, அவ்வளவு அதிக

மாய்ப் போகும்படி ஆனது. வியாபார விஷயமாக அவர் செய்து கொண்டிருந்த மாறுதல்களில் அவனுடைய உதவி அவருக்கு அடிக்கடி தேவைப்பட்டது.

சாதாரணமாக அவன் போகும்போது, ராதை, ரோஜா, வேணுகோபாலன் மூவரும் ஒன்றாகத்தான் தென்படுவார்கள். விஜயின் காலடிச் சத்தம் கேட்டதும், ரோஜா ஏதோ வேலையிருப்பதுபோல் அங்கிருந்து எழுந்து போய் விடுவாள்... இரண்டு தடவை இதைக் கவனித்த வேணுகோபாலன் விஜயின் முன்னிலையிலேயே ரோஜாவை மென்மையாகக் கடிந்து கொண்டார்.

''இதோ பார் ரோஜா! விஜய் முன் நீ இப்படி வெட்கப்படுவது எனக்கு பிடிக்கவில்லை. அவன் நமக்கு வேற்று மனிதன் இல்லைன்னு உனக்குப் நிறைய தடவை சொல்லியிருக்கேன். என்னிடம் எப்படி உரிமையுடன் பழகுகிறாயோ, அதைவிட அதிகமான உரிமையுடன் அவனிடம் நீ பழகணும். அப்படி நீ நடந்துகொண்டால் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாய் இருக்கும்...

ரோஜாவின் பார்வை ஒரு விநாடி விஜயின் பார்வையை மின்னல் போல் சந்தித்துத் தாழ்ந்துவிட்டது. ரோஜா என்ன பதில் சொல்லப் போகிறாள் என்று ஆர்வத்துடன், குதூகலமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் விஜய்.

''வேறு யாரையாவது உங்களுக்கு இணையாக இருப்பதாகச் சொல்லுங்கள். ஆனால், தயவு செய்து இந்த நபரைப் பற்றி அப்படிச் சொல்ல வேண்டாம்...'' இந்த வார்த்தைகளை சொல்லப்போன ரோஜா நின்றுவிட்டாள்.

விஜயிடம் அவருக்குப் பாசம் அதிகம். அவனை ஏதாவது சொன்னால் எதுக்கு, ஏன் என்ற கேள்விகள் எழும். கேட்காதது போல் வெறுமே இருந்துவிட்டால், இந்த விஷயம் இத்துடன் நின்று விடும். விஜய்க்கும், தனக்கும் நடுவில் இருந்த பயங்கரமான கடந்த கால நினைவுகள் தன் இதயத்திலேயே புதைந்து இருக்கட்டும். இரண்டாவது ஆளுக்குத் தெரிய வேண்டியதில்லை, அதுவும் தன் மூலமாய் இப்போ தெரிய வேண்டாம்.



வேணுகோபாலன் அப்படிச் சொன்னபிறகு, அவரை வருத்தப்பட வைக்க விரும்பாமல், வலுக்கட்டாயமாக உட்கார்ந்து கொண்டாலும், முள்மீது அமருவது போல் தான் இருந்தது ரோஜாவுக்கு. அவருக்குச் சந்தேகம் வராதபடி, ஏதோ வேலை இருப்பதுபோல் அங்கிருந்து நகர்ந்து விடுவாள்.

வேணுகோபாலன் வற்புறுத்தியதால் விஜயும் அவர்களுடன் சாப்பிட அமர்ந்து கொண்டான். ரோஜாவையும் தங்களுடன் சேர்ந்து சாப்பிடச்செய்ய வேண்டுமென்று வேணுகோபாலன் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

''பரவாயில்லை, உட்கார்ந்து கொள் ரோஜா! நமக்குள் வித்தியாசம் ஏன்? என்னோடு சேர்ந்து நீயும் சாப்பிடு'' என்று அவர் சொன்ன போது, ரோஜா மென்மையாக மறுத்துவிட்டாள் அவர் எவ்வளவு உரிமை கொடுத்தாலும், தான் எல்லையைத் தாண்டாமல் பார்த்துக் கொண்டாள். தன்னுடைய நடத்தையில் யாரும் தவறு காணாதபடி கவனமாக இருந்து வந்தாள்.

ரோஜா வந்ததிலிருந்து வேணுகோபாலனுக்கு மதிய உணவு பரிமாறும் வேலையை ரோஜா மேற்கொண்டிருந்தாள். அவர் சாப்பிடும்போது, அருகில் இருந்து பார்த்துப் பார்த்து, பரிமாறுவது ரோஜாவுக்கு ரொம்ப திருப்தியை, மகிழ்ச்சியை அளித்துக் கொண்டிருந்தது.

இன்று விஜய் அவர்களுடன் சேர்ந்து சாப்பிட உட்கார்ந்ததும் ரோஜா சற்றுத்தொலைவாக நின்றுகொண்டாள். விஜய், வேணுகோபாலன் வியாபார சம்பந்தப்பட்ட பேச்சுகளில் ஆழ்ந்து போயிருந்தார்கள். கிட்டத்தட்ட சாப்பாடு முடியும் நேரம், ரோஜா தயிரைப் பரிமாறிக் கொண்டிருந்த போது, விஜய் போதும், என்பது போல் கையைக் குறுக்கே வைத்தான்.

''போடும்மா—போடு—அவன் போக்கே அப்படித்தான். எல்லாம் வேண்டாம்—வேண்டாம் என்பான்.'' என்றார் வேணுகோபாலன்.

அதற்கு முன் கறி, சாம்பார் பரிமாறியபோதும் அவன் மறுப்பதும், வேணுகோபாலன் வற்புறுத்தினால் ரோஜா மேலும் பரிமாறுவதும் நடந்தது. இந்த முறையும் அதே போல் ரோஜா தயிரைப் பரிமாறப் போனாள்.

"வேண்டாம்...வேண்டாம்" விஜய், ரோஜாவின் கையை அழுத்தமாய்ப் பற்றி, பரிமாற முடியாதபடி தடுத்து விட்டான். ரோஜாவின் உடல் விரைப்பாக மாறியது அவன் கவனத்திலிருந்து தப்பவில்லை.

"அதிகமாய்ச் சாப்பிடுவது என் வழக்கமில்லை. இன்று அதையும் மீறி அதிகமாய்ச் சாப்பிட்டு விட்டேன். உண்ட களைப்பு என்பது எனக்கு ரொம்ப எரிச்சல் தரும் விஷயம்" விஜய் ரோஜாவின் கையிலிருந்த தயிர் பாத்திரத்தை எடுத்து, மேஜை மீது வைத்து விட்டான்.

ரோஜா அங்கிருந்து நகர்ந்து விட்டாள். கையில் மணிக்கட்டு அருகில் விஜய் ஸ்பரிசம் பட்ட இடம் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. ஏன் இப்படிச் செய்தான்? தன்னை அறியாமல் செய்த காரியமா? இல்லை...அவளுக்கு எதிரில் சகஜமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் முயற்சியா? ரோஜாவுக்குப் புரியவில்லை.

வீட்டு நிலைமையின் காரணமாய் இந்த வீட்டுக்கு வர நேர்ந்தபோதும், இப்படி ஒவ்வொரு நிமிஷமும், விஜய் கண்களுக்கு முன் ஒன்றுமே நடவாதது போல் நடந்து கொள்வது ரோஜாவுக்கு தாள வேதனையாக இருந்தது. அவன் மனதில் எந்த உணர்வும் இல்லையென்று அவனுடைய போக்கிலிருந்தே புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் தனக்கு? இந்த இடத்தை விட்டு கொலைதூரம் போய்விட வேண்டுமென்று மனம் துடித்தாலும், யாரோ கட்டிப் போட்டதுபோல், பலவந்தமாக இருக்க வேண்டிய சூழ்நிலை.

முதல் முதலில் விஜய் மீது எப்படியாவது பகையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று தீவிரமாய்த் தோன்றியதுண்டு. ஆனால் போகப் போக அது சாத்திய



மில்லை என்று தெரிந்து போயிற்று. தன்னால் அவனை என்ன செய்ய முடியும்?

இங்கு வந்து சில நாட்களுக்குள்ளேயே விஜயிடம் வேணுகோபாலன் வைத்திருந்த அபிமானத்தை ரோஜா புரிந்து கொண்டாள். அவன் மீது தான் ஏதாவது புகார் செய்யப் போனால், அது தன் வேலைக்கே உலை வைத்து விடும். விஜயிடம் தனக்கிருந்த பகையை, துவேஷத்தை விஷம் போல் விழுங்குவதைத் தவிர ரோஜாவுக்கு வேறு வழியில்லை.

அடிக்கடி வேணுகோபாலன் வீட்டுக்கு வர வேண்டிய சூழ்நிலை விஜய்க்கு ஏற்பட்டது. அந்த வீட்டில் கால் பதித்ததும், விஜய் கண்கள், அவனறியாமலேயே ரோஜாவுக்காகத் தேடும். ரோஜாவின் நடையை, கரிய நீண்ட பின்னலை, பக்கவாட்டில் தெரியும் செழுமையான கன்னங்களைப் பார்த்துக் கொண்டே இருப்பான். சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல், ஏழ்மையிலிருந்து வந்த போதும் ரோஜாவின் அழகு சுடர்விட்டுப் பிரகாசித்தது. அழகைப் பாதுகாத்துக் கொள்ள பணக்கார வீட்டுப் பெண்கள் படும்பாடு, எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் அவனுக்கு தெரியாததில்லை. இந்த உலகில் அழகான பெண்கள் நிறைய பேர் இருக்கலாம். ஆனால் பார்ப்பதற்கு லட்சணமாக, இதயத்தைக் கவரும் குணாதிசயம், வாழ்க்கையைத் துணிவுடன் எதிர்கொள்ளும் தைரியம் இருக்கும் பெண்கள் ரொம்பக் குறைவு...

விஜய் வந்தபோது, ஏதாவது காரணத்தால் ரோஜா தென்படாமல் போனால், வெறுமையாய், அதிருப்தியாகத் தோன்றும். தன் இதயத்தில் மெள்ள மெள்ளமாக உயிர் பெற்றுவரும் இந்த உணர்ச்சியை உணர்ந்த போது, விஜய்க்குச் சில சமயம் புரியாமலும், பயமாகவும் இருந்தது. தன்னிடம் ஏற்படும் இந்த மாறுதல் அவ்வளவு நல்லது இல்லையென்றும், இதனுடைய விளைவுகள் விபரீதமாக இருக்குமென்றும் அவனுக்கு நன்றாகத் தெரியும். தன் மனம் எதை விரும்புகிறதென்று புரிந்து கொள்ள முடியாத

முட்டாளில்லை அவன்! இந்த உணர்ச்சியை ஆரம்ப நிலையிலேயே துண்டித்து விட வேண்டுமென்று அவன் விரும்பியபோதும், அவனால் அதில் வெற்றி பெற முடியவில்லை. வாழ்க்கையில் முதல் தடவையாக, தான் இடைஞ்சலில் மாட்டிக் கொள்ளப்போவது தெரிந்திருந், அவனால் அதை மாற்றிக் கொள்ள முடியவில்லை. மனம் கட்டுப்பட மறுத்தது.

விஜய் திடீரென்று லாவண்யாவிடம் மிகுந்த அக்கறை காண்பிக்கத் தொடங்கினான். அவளை அழைப்பது, சீண்டுவது...அந்த வீட்டுக்கு அவன் வரக் காரணம் லாவண்யாதானோ என்று, பார்ப்பவர்களுக்குத் தோன்றும் விதமாக நடந்துகொள்ளத் தொடங்கினான். முதல் முதலில் விஜய் தன்னிடம் காட்டிக் கொண்டிருந்த இந்த அபிமானத்துக்கு லாவண்யா திக்குமுக்காடி விட்டாள். இத்தனை நாட்கள் கழித்து, விஜய் தன்னை உணர்ந்து நெருங்கி வந்ததைக் கண்டு அகமகிழ்ந்து போனாள்.

ஆனால் வெகு விரைவிலேயே, விஜய் மனதில் புதைந்திருந்த உண்மையான காரணத்தை அவள் கண்டு கொண்டு விட்டாள். விஜய் தன் அருகில் உட்கார்ந்து இருப்பது உண்மைதான் என்றாலும், அவன் கண்கள் ஒவ்வொரு விநாடியும் ரோஜாவைத் தேடிக்கொண்டிருக்கும். அவளைப் பார்த்ததும், அவன் இதயத்துடிப்பு அதிகரித்தது போல் கண்கள் மின்னலாய் ஒளிவீசும்.

ஏற்கனவே தந்தை விஷயத்தில் ரோஜாவிடம் கணக்கமாய் இருந்த லாவண்யாவின் இதயம், இப்பொ விஜயும் ரோஜாவின்பால் கவரப்படுவதை உணர்ந்த போது, பொறாமையால் தீப்பற்றி எரிந்தது. ஆனால் அந்தப் பொறாமையை, மற்ற பெண்களைப் போல் வெளியில் காட்டிக் கொள்ள அவள் முயலவில்லை. ரோஜாவை வீட்டை விட்டு வெளியேற்றுவதற்கும், விஜய்க்கு சரியான பாடத்தைக் கற்பிப்பதற்கும், தகுந்த நேரத்துக்காகக் காத்திருந்தாள் லாவண்யா.

# சங்கமம்

(நாவல்)

இரண்டாம் பாகம்

தெலுங்கு மூலம்

யத்தனபூடி சுலோசனாராணி

தமிழில்

கௌரி கிருபாநந்தன்

கலா நிலையம்

244, ராமகிருஷ்ணாமடம் சாலை,

மயிலாப்பூர், சென்னை-600 004.

24167
4114398



# 45

தீபாவளிப் பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது. வேணுகோபாலன் வழக்கத்துக்கு விநோதமாய் உற்சாகமாய், ஆர்ப்பாட்டப் படுத்திக்கொண்டிருந்தார். அவருடைய விருப்பத்தின் பேரில் ரோஜா, அவருக்குப் பிடித்த இனிப்பு வகைகளைத் தயார் செய்ய முற்பட்டாள். பண்டிகைக்கு நான்கு நாட்கள் இருந்தபோது, அவர் ரோஜாவிடம் பணம் கொடுத்து புதிய உடைகள், பொம்மைகள், பட்டாசு வகைகளை வாங்கி வரச் சொன்னார். அவர்கள் வீட்டில் தீபாவளிக்குப் பொம்மைக் கொலு வைப்பது வழக்கமாம். ராதைக்கு மிகவும் பிடித்தமாயிருந்த இந்த வழக்கத்தை, லாவண்யா கடனே என்றுதான் கடைபிடிப்பாளாம்.

இந்தத் தடவை பண்டிகை முழுவதும் தம் வீட்டிலேயே இருக்கவேண்டுமென்று அவர் துடிப்பதுபோல் ரோஜாவுக்குத் தோன்றியது.

பழைய பொம்மைகள் இருந்தாலும், புது பொம்மைகளையும் வாங்கி வைக்க வேண்டுமாம். ரோஜாவுக்கு ஷாப்பிங் போவது என்றால் ரொம்பப் பிடிக்கும். பணத்தை அடிக்கடி எண்ணிப் பார்த்துக் கொண்டு இருக்காமல், நீர்ந்து

விடுமோ என்று பயப்படாமல், தேவையானதை வாங்கிக் கொள்ளும்போது ரொம்ப மகிழ்ச்சியாய் இருக்கும்!

தன் குடும்பத்திலும், தன்னைச் சுற்றி இருக்கும் மற்ற குடும்பங்களிலும் ரோஜா நிறைய தடவை கவனித்திருக்கிறாள்; ஒரு பண்டிகையை சற்று விமரிசையாக கொண்டாடி விட்டால் அதன்பிறகு எத்தனை விஷயங்களில் அந்த வீட்டு மனிதர்கள் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும்? யாராவது உறவினர்கள் வந்து நான்கு நாட்கள் தங்கி விட்டுப் போனால், அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு, அந்தக் குடும்பம், சில நாட்களுக்காவது, வெறும் ரசமும், மோர் சாதமும்தான் உணவாகக் கொள்ள வேண்டும்!

என்ன வாழ்க்கை இது? வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டியவை எல்லாம் இந்தச் சிக்கனத்துக்குப் பலியாகி, சாரமில்லாத வாழ்க்கையாய் முடிந்து போகிறது. சற்று யோசித்தால் ஓரளவாவது பணம் இருந்துவிட்டால் நிம்மதியான வாழ்க்கை வாழலாமென்று தோன்றியது ரோஜாவுக்கு

வேணுகோபாலன் கடைத் தெருவுக்குப் போகச் சொன்னதும், ரோஜா லாவண்யாவின் அறைக்குச் சென்று, அவளையும் தங்களுடன் வரச் சொல்லி அழைத்தாள்.

''நான் எதுக்கு? நீயும் ராதையும் போயிட்டு வாங்க'' என்றாள லாவண்யா. தந்தை தன்னிடம் ஒன்றும் சொல்லவில்லையே என்ற சிலேடை அவள் குரலில் தொனித்தது.

ரோஜா அதைப் புரிந்து கொண்டவள் போல், ''அப்பா நம் மூன்று பேரையும் போயிட்டு வரச் சொன்னார்'' என்றாள்.

''உண்மையில் அவர் அப்படி எண்ணியிருந்தால், என்னிடம் நேராகவே சொல்லியிருப்பார். அப்படி அவர் நினைக்காததும் நல்லதாய்ப் போச்சு. எனக்கும் வர நேரம் இடையாது. எங்க கிளப்பில் தீபாவளி இரவு ஸ்பெஷல் புரோகிராம் இருக்கு. அதுக்கு ரிகர்சல் பார்க்கும் பொறுப்பு என்



மீது இருக்கு. நீங்க போய் வாங்க... நான் வரமாட்டேன்'' ஆளுயரக் கண்ணாடியின் முன் நின்று புடைவையைச் சரி செய்துக்கொண்டே சொன்னாள் லாவண்யா.

ரோஜா லாவண்யாவின் போக்கைப் புரிந்து கொண்டவள் போல் அதிகம் பேசவில்லை. ராதையை அழைத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டாள்.

வாசலில் கார் தயாராக வைத்திருப்பதாய் டிரைவர் வந்து சொல்லிவிட்டுப் போனான்.

''சீக்கிரமாய்ப் போய்விட்டு வந்துடுங்க...'' என்று வேணுகோபாலன் கூறினார்.

ரோஜா தலை அசைத்துவிட்டு ராதையின் கையைப் பிடித்துக்கொண்டு வாசற்கதவைத் தாண்டும்போது, விஜய் உள்ளே வந்து கொண்டிருந்தான். விஜயைப் பார்த்ததும் ராதையின் முகம் மலர்ந்தது. விஜய் சட்டென்று ராதையைத் தூக்கிக் கொண்டான். ரோஜாவின் கையைப் பற்றியிருந்த ராதை, கையைவிடாமல் பிடித்துக் கொண்டிருந்ததால்; ரோஜாவின் கையும் உயரே எழும்பி, விஜயைத் தொட்டது, ரோஜா சட்டென்று கையை விடுவித்துக் கொண்டாள். ஒரு கணம் விஜயின் பார்வை ரோஜாவின் கண்களைச் சந்தித்து, சட்டென்று விலகியது.

இதற்குள் பின்னாலிருந்து வேணுகோபாலன், ''விஜய்... வா...வா... வீட்டுக்கு போன் செய்தால், நீ இன்னும் வரவில்லையென்று கோபால் சொன்னான்; உன்னோட சின்ன வேலையிருக்கு. இவர்களுடன் நீ கொஞ்சம் ஷாப்பிங் போகணும்...'' என்றார்

விஜய் ராதையை இறக்கிவிட்டு உள்ளே வந்தான். அவன் கையில் ஏதோ பேப்பர்கள் இருந்தன. வாசற்கதவைத் தாண்டிய ரோஜா, சட்டென்று நின்று விட்டாள். விஜய் தங்களுடன் கிளம்பிவிட மாட்டானே? விஜய் உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

''நானா? இன்று முழுவதும் ஒரே அலைச்சல்...''

என்றான்.

வாசலில் நின்று விட்ட ரோஜா, வர இருந்த ஆபத்து நீங்கிவிட்டதுபோல் எளிதாக மூச்சுவிட்டுக் கொண்டாள். ஆனால் அந்த நிம்மதி ரொம்பநேரம் நீடிக்கவில்லை. வேணு கோபாலன் ஒப்புக்கொள்ளவில்லை.

"எத்தனை நேரமாகிவிடும்? ஒரு மணி நேரத்தில் திரும்பிவிடலாம். அந்தக் கடைகளெல்லாம் ரோஜாவுக்குப் பழக்கமில்லை! ரோஜா... விஜய்க்கு சட்டென்று ஒரு கப் காபி கொண்டு வாம்மா..." என்றார்.

ராதை விஜய் அருகில் ஓடினாள். ரோஜா வேறு வழி இல்லாமல் சமையலறைக்குச் சென்றாள். விஜய் வரப் போவதாகத் தெரிந்ததும், அதுவரை குடிகொண்டிருந்த மகிழ்ச்சி அப்படியே அடங்கிவிட்டது. விஜய் மறுத்திருந் தாலோ, இல்லை வேணுகோபாலனாவது, அவனைவற்புறுத் தாமல் இருந்திருந்தாலோ நன்றாய் இருந்திருக்கும். ஆனால் இரண்டுமே நடைபெறவில்லை. விஜய் காபி குடித்துவிட்டு ராதையின் கையைப் பிடித்துக்கொண்டு கிளம்பினான்.

காரைச் செலுத்த டிரைவர் இருந்துவிட்டதால் விஜயும், பின் சீட்டிலேயே உட்கார்ந்து கொண்டான். விஜயுடன் சேர்ந்து இப்படி காரில் பயணிப்பது ரோஜாவுக்கு என்னவோ போலிருந்தது. வேண்டாமென்று நினைத்தாலும் பழைய நிகழ்ச்சி, கண்முன் நிழலாடிற்று. இந்தப் பயங்கரமான நினைவு தனக்கு மட்டும்தானா? அவனுக்கு இல்லையா? தலையைத் திருப்பி அவன் பக்கம் பார்க்க வேண்டுமென்றும், அம்முகத்தில் தென்படும் உணர்ச்சிகளைக் கவனிக்கவேண்டும் என்று மனம் துடித்தாலும், துணிச்சல் வராமல் வெறுமே இருந்து விட்டாள்.

உற்சாகமில்லாமல் கிளம்பிய ரோஜாவுக்குக் கடைத் தெருவுக்குப் போனபிறகு எல்லாம் மறந்து போய் விட்டது. ரெடிமேட் துணிக் கடை முதலாளி விஜய்க்கு நன்றாக அறிமுகமானவர் போலும். வேணுகோபாலனின் உடல்



நலனைப் பற்றிக் குசலம் விசாரித்தார். குளிர் பானங்களை வரவழைத்தார்; விஜய் பக்கத்தில் உட்கார்ந்து இருப்பதே ரோஜாவுக்குப் புதிய, அதேநேரம் இனிய அனுபவமாய் தோன்றியது.

விஜய் ராதைக்காகத் தேர்வு செய்த உடைகள் ரொம்ப அழகாய், நேர்த்தியாய் இருந்தன. திடீரென்று ரோஜாவுக்கு அனந்தின் வீடு நினைவுக்கு வந்தது. அந்த வீட்டில் ஒவ்வொரு பொருளையும் விஜய்தான் தேர்வு செய்ததாக அனந்த் சொன்னதும் நினைவுக்கு வந்தது.

விஜய் கையிலிருந்த டிரஸ் பாக்கெட்டுகளை டிரைவ ரிடம் கொடுத்துவிட்டு, பெரிய புடைவைக் கடையில் நுழைந் தான். புடைவைகளைப் பற்றி வேணுகோபாலன் ரோஜா விடம் ஒன்றும் சொல்லவில்லை. விஜய் ஏன் அந்தக் கடைக் குள் நுழைந்தான் என்று ரோஜாவுக்குப் புரியவில்லை. விஜய் புடைவைகளைக் காண்பிக்கச் சொன்னதும், விதவிதமான புடைவைகள் குவிக்கப் பட்டன. ரோஜா தலையைத் திருப்பிப் பார்த்தாள். அந்தப் புடைவைகளின் வண்ணம் நனறாய் இருந்த போதும், டிசைனும், தலைப்பும் பொருத்த மாயில்லை.

கடை ஆள் கேட்டுக் கொண்டதுபோல் விஜய், அவளிடம் அபிப்பிராயம் கேட்டுக் கொள்ளவில்லை. அந்தப் புடைவைகளைத் தள்ளி வைத்துவிட்டு, சின்னச் சின்ன ஜரிகை புட்டா போட்ட நான்கு புடைவைகளைத் தேர்வு செய்து பேக் செய்ய வைத்தான்.

புடைவை விஷயத்தில் அவன் கேட்டிருந்தாலும் ரோஜா அபிப்பிராயம் சொல்லியிருக்க மாட்டாள். அவன் கேட்கா மலேயே இருந்துவிட்டது ஏனோ அவளுக்குத் திருப்தியாகத் தோன்றவில்லை. மெலிதான கோபம் எட்டிப் பார்த்தது.

வந்து எத்தனை நேரமாகிறது? அவன் மரியாதைக்காகக் கூடத் தன்னிடம் ஒரு வார்த்தை பேசவில்லை; வேணு கோபாலனின் வற்புறுத்தலின் பேரில் அவன் வந்திருப்பது

தெளிவாகப் புரிந்தது!

துணிமணிகள், பொம்மைகள் வாங்குவது முடிந்தபிறகு, மூவரும் பட்டாசுக் கடைப்பக்கம் வந்தார்கள்; ஒரே இடத்தில் வரிசையாய் நிறைய பட்டாசுக் கடைகள் இருந்தன; வண்ண விளக்குகளின் ஒளியில், அந்த இடம் இரவு பகலாக ஜொலித்துக் கொண்டிருந்தது; பண்டிகை நெருங்கி விட்டதால் கடைகளில் கூட்டம் அதிகமாயிருந்தது!

விஜய் ஒரு கடையில் நுழைந்து தேவையான பட்டாசு வகைகளைப் பேக் செய்ய வைத்துக் கொண்டிருந்தான். இந்தக் கூட்டத்தில் விஜய் கண்மறைவாகி விட்டால் கண்டு பிடிப்பது கஷ்டம். அந்தப் பயத்தில் ரோஜா விஜய் பக்கத்திலேயே நடந்து வந்துகொண்டிருந்தாள். அந்தச் சூழ்நிலையைப் பார்க்கும் போது ரோஜாவுக்கு வேறு ஏதோ உலகில் நுழைந்து விட்டது போல் தோன்றியது. மந்திரத்தால் கட்டுண்டவள் போல் சுற்றுபுறம் பார்த்துக் கொண்டே வந்த ரோஜா, விஜய் பக்கமாய் வந்து நின்ற ஆளைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

அவளைச் சரியாகப் பார்க்க விடாமல் நடுவில் யாரோ குறுக்கே வந்தார்கள். ரோஜா சட்டென்று இரண்டடி முன்னே வைத்து. அந்த நபரைக் கூர்ந்து பார்த்தாள். உடனே கட்டுப்படுத்த முடியாத மகிழ்ச்சியில் தன்னை மறந்தவளாய், ஒரே எட்டில் அவன் அருகில் சென்று, கையைப் பற்றிக் கொண்டு "செந்தூ" என்று அழைத்தாள்.

விலையுயர்ந்த ஃபுல்சூட்டில் இருந்த அந்த நபர் திடுக்கிட்டாற்போல் திரும்பிப் பார்த்தான். கடை ஆளிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்த விஜயும் இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

"செந்தூ" மகிழ்ச்சியும், வியப்பும் கலந்த குரலில் அழைத்த ரோஜா, "நீ பம்பாயிலிருந்து எப்போ வந்தாய்?" என்று ஆர்வம் பொங்கக் கேட்டாள்.

அந்த நபர் தன் கையை ரோஜாவின் பிடியிலிருந்



மென்மையாய் விடுவித்துக் கொண்டே, "சாரி மேடம்... யு ஆர் மிஸ்டேகன் மீ ஃபார். சம்படி... ஐ— யாம் லால்... மதன்லால்" அழுத்தமாய்ச் சொன்னான்.

"ஹூ ஈஸ் தட் டார்லிங்?" ஸ்கர்ட், பிளவுஸ் அணிந்த ஆங்கிலோ இந்தியப் பெண் ஒருத்தி சட்டென்று அருகில் வந்தாள். அந்தப் பெண்ணின் கண்களில் மெலிதாகத் தெரிந்த பயமும் பதட்டமும், விஜயின் நிட்சண்யமான பார்வையிலிருந்து தப்பவில்லை.

"நதிங்! ஷி ஹேஸ் மிஸ்டேகன் மீ ஃபார் சம்படி" அவன் வந்த வேலை முடிந்து விட்டது போலும். பாக்கெட்டுகளையும், கடைக்காரன் கொடுத்த சில்லரையும் எடுத்துக் கொண்டு, ரோஜா, விஜய் இருவருக்கும் லேசாகக் குனிந்து மரியாதை செலுத்திவிட்டு, அந்தப் பெண்ணுடன் சென்று விட்டான்.

"யாரவன்?" விஜய் ரோஜாவைக் கேட்டான் ஆனால் ரோஜாவின் காதுகளில் அந்தச் சொற்கள் விழுந்தாற்போல் தெரியவில்லை. செயல் மறந்து போனவளாய் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டு நின்று விட்டாள். செந்தூவும், அந்தப் பெண்ணும் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கறுப்புநிற காரில் ஏறிக் கொள்ள, ரோஜா பார்த்துக் கொண்டிருக்கும் போதே கார் கண் மறைவாயிற்று. ரோஜா இன்னமும் கண்களை விரித்து அப்படியே நின்றிருந்தாள்.

"இனி போகலாமா" அருகில் வந்த விஜய் ரோஜாவின் தோளைப் பட்டும் படாமல் தொட்டான்.

ரோஜா திரும்பிப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் தளும்பிக் கொண்டிருந்தது. விஜய்க்கு என்னவோ போலாகி விட்டது.

"யாரவன்?" மறுபடியும் கேட்டான்.

"என் தம்பி செந்தூ" நாக்கு நுனி வரை வந்த வார்த்தைகளை எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டாள். அவன் தன் தம்பியென்று சொன்னால் விஜய், இந்த

நிகழ்ச்சியை வேணுகோபாலனிடம் சொல்வான். ஏற்கனவே செந்தூரனைப் பார்க்க அவர் துடித்துக் கொண்டிருக்கிறார். செந்தூரனிலிருந்து வந்ததும், அவனுக்குத் தன்னிடம் வர ஒய்வு கிடைக்காவிட்டால், தன்னையே அவனிடம் அழைத்துச் செல்லும்படி வற்புறுத்திச் சொல்லியிருந்தார்.

ரோஜா யாரையோ அடையாளம் கண்டு பேசியது. அவன் புரியாத மாதிரி நடித்து விட்டு, கூட வந்த பெண்ணுடன் சென்று விட்டது, வெளிறிப் போன முகத்துடன், கண்களில் குளமாய்த் தங்கிய கண்ணீருடன் ரோஜா நின்று விட்டது. இவையெல்லாம் சேர்ந்து விஜய்க்கு வேறு அர்த்தம் கற்பித்தன. அவன் யாரோ ரொம்ப பணக்காரனாய்த் தென்படுகிறான். ரோஜாவுக்குப் பணக்காரர்களைத் தவிர வேறு யாரும் கண்ணில் பட மாட்டார்களோ?

மூவரும் வெளியே வந்தார்கள். பத்து நிமிடங்களுக்கு முன், தன் தோளுடன் உரசும் அளவுக்குப் பக்கத்தில் நடந்து வந்த ரோஜா, அவனுக்கு ரொம்ப நெருக்கமானவளாய்த் தோன்றியது. அவளறியாமல் ஏற்பட்ட அந்த "ஸ்பரிசம்" அவனுக்கு இனிமையான தொரு உணர்வை ஏற்படுத்தியது. இந்த ஷாப்பிங் முடிந்ததும், ரோஜாவைக் காபி சாப்பிடும் சாக்கில் ஏதாவது ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று, அனந்த் விஷயத்தில் தான் தவறாகப் புரிந்து கொண்டு, கடினமாய் நடந்து கொண்டதற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்ள நினைத்தான். ஆனால், திடீரென்று நடந்துவிட்ட இந்த நிகழ்ச்சியால் அவன் எண்ணம் கலைந்து விட்டது.

விஜய் அன்று இரவு படுத்துக் கொண்டானே தவிர, ரொம்ப நேரம் தூக்கம் வரவில்லை. விழிகளில் நிறைந்த நீருடன் நின்றிருந்த ரோஜாவின் முகம் மறுபடியும் மறுபடியும் கண்முன் நிழலாடிற்று. கடைத் தெருவில், ஃபுல் சூட்டில் பார்த்த நபரும் நினைவுக்கு வந்தான். அவன்தான் ரொம்ப தவறு செய்து விட்டான். ரோஜாவை வேணுகோபாலன் வீட்டில் இறக்கி விடாமல், நேராய்த் தன் வீட்டுக்கு அழைத்து வந்திருக்க வேண்டும்! தோள்களைப்



பற்றி உலுக்கி எப்படியாவது, அவன் யாரென்று தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அவளுக்கு எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள்? யார் அந்த செந்தூர்? அவன் ஏன் பேச வில்லை? பக்கத்தில் தான் இருந்ததாலா, இல்லை அந்தப் பெண் அவனுடன் இருந்ததாலா? ஏனோ விஜய்க்கு முன் போல் ரோஜாமீது கோபம் வரவில்லை. சரியான பாது காப்பு இல்லாமல் வளர்ந்து விட்டாள் ஆண்களின் சுபாவமும் அவள் அறியாததல்ல.

எந்தப் பெண்ணாவது தனியாய்த் தென்பட்டால் போதும், அருகில் சென்று, இனிமையான பேச்சுகளால் அவர்களை மயக்குவதுதான் அவர்களுடைய வேலை. கொஞ்சம் புத்திசாலித்தனமும், தராதரம் அறியும் ஞானம் இருந்தாலொழிய, அந்த வலையில் விழாமல் தப்பித்துக் கொள்ள எந்தப் பெண்ணாலும் முடியாது.

எந்தக் காலத்திலும் பெண்ணுக்குப் படிப்பும், நல்லது, கெட்டது புரிந்து கொள்ளும் தன்மை, தனக்கு அநியாயம் நேராமல் பார்த்துக் கொள்ளும் புத்திசாலித்தனம் இருப்பது முக்கியம். ரோஜாவைப் பார்க்கும் போது அவனுக்கு இரக்கமாய் இருந்தது. ஒரு தடவை தானும், ரோஜாவும் ஒன்றாய் உட்கார்ந்து, மனம் விட்டுப் பேச முடிந்தால், ரோஜா தன் கடந்த கால வாழ்க்கையை ஒளிவுமறைவில்லாமல் சொன்னால், அது எப்படிப்பட்டதாய் இருந்தாலும், மன்னித்து முழு மனதுடன். அவளை ஏற்றுக் கொள்ள தான் தயாராக இருப்பான். ஆனால், அது நடக்குமா? இந்தச் சில நாட்களில் அவனுக்கு ஒரு விஷயம் தெளிவாய்ப் புரிந்து விட்டது. தன் வாழ்க்கையில் மனைவியென்று ஒருத்தி வரணும் என்றால், அது ரோஜாவாய்த்தான் இருக்க வேண்டும் பகையினாலோ, துவேஷத்தினாலோ, அந்தப் பெண்ணின் கழுத்தில்தான் மூன்று முடிச்சு போட்டு விட வேண்டும். அவளை மனைவியாய் அடைவது சாத்தியமில்லை என்றால் கடைசி வரை பிரம்மசாரியாகவே இருந்து விடவேண்டும்.

ரோஜா தன்னைப் புரிந்து கொள்வதோ, ஏற்றுக் கொள்வதோ அத்தனை எளிதான விஷயம் இல்லையென்று அவனுக்கு நன்றாகத் தெரியும். தன்னை விரும்பும் பெண்ணை அடைவதில் எந்தக் கஷ்டமும் இருக்காது. ஆனால் தன்னிடம் துளிக்கூட மதிப்பு இல்லாமல், அடியோடு தன்னை வெறுத்து ஒதுக்கும் பெண்ணிடம் சலனம் ஏற்படுத்தி, அன்பைத் துளிர்க்கச் செய்வது தன் சாமர்த்தியத்துக்கு ஒரு சவாலை.

ரோஜா அவளறியாமலேயே விஜயை 'சாலெஞ்' செய்து அவனுடைய உணர்வுகளைத் தூண்டிவிட்டாள்.

தூக்கம் வராத விஜய், எழுந்து உட்கார்ந்து கொண்டு அனந்துக்கு கடிதம் எழுத முற்பட்டான். அதில் ரோஜாவும், தானும் சேர்ந்து ஷாப்பிங் போன போது நடந்த நிகழ்ச்சியைச் சுருக்கமாய்த் தெரியப்படுத்தி, செந்தூா என்ற நபர் யாரோ, அவனுக்கும் ரோஜாவுக்குமிடையே இருக்கும் உறவு எப்படிப்பட்டதோ, தெரியபடுத்தும்படி எழுதினான்.

## 46

மூன்பு ஒருநாள் செண்ட்ரலுக்குப் பக்கத்தில் அதிகம் கூட்டம் இல்லாத பழைய ஹோட்டலில் செந்தூவுடன் பேசியது ரோஜாவின் நினைவுக்கு வந்தது. நேற்று இரவு செந்தூ தென்பட்டும், தன்னை அடையாளம் காண தது போல் போனதிலிருந்து, ரோஜாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இரவு முழுவதும் தூங்கவேயில்லை. முதல் முறையாய் அனந்த் அருகில் இல்லாத குறையை உணர்ந்தாள். இரவு முழுவதும் விழித்தவள், செந்தூவைப் பற்றி தான் படும் கவலையை, வேதனையை விவரித்து அனந்துக்கு கடிதம் எழுதினாள்.



மறுநாள் காலையில் எழுந்ததுமே பின்புற மதில் சுவருக்கு அருகில் சென்று ஆஞ்சனேயுலுவை கூப்பிட்டாள். காலையில் தேகப் பயிற்சிக்காகக் கொல்லைப்புறத்தில் ஓடிக் கொண்டிருந்த அஞ்சி, ரோஜாவின் அழைப்பைக் கேட்டதும், சுவருக்கருகில் வந்தான்.

"அஞ்சி... ஒரு உதவி செய்ய முடியுமா? என்னுடன் துணையாய் ஒரு இடத்துக்கு வர முடியுமா?" ரோஜா நயமாய்க் கேட்டாள்.

அன்று ஹோட்டலில் நடந்த நிகழ்ச்சி நினைவுக்கு வரவே அஞ்சி சந்தேகமாய்ப் பார்த்தான்.

அதைப் புரிந்து கொண்ட ரோஜா, "ரொம்ப நேரம் ஆகாது, போயிட்டு வர வேண்டியதுதான்! உனக்கு எந்த இடைஞ்சலும் வராது."

ரோஜாவுடன் தான் பேசிக் கொண்டிருப்பது, பாட்டி பார்க்கவில்லை என்று உறுதியாய்த் தெரிந்த பிறகு, "வர்றேன்" என்றான் அஞ்சி.

"தாங்க்ஸ்! இருவரும் சேர்ந்து போக வேண்டாம். நான் சரியாய் ஒன்பது மணிக்கு உனக்காகப் பஸ் ஸ்டாப்பில் காத்திருப்பேன், நீ வந்துவிடு..."

சரியாய் ஒன்பது மணிக்கு ரோஜா பஸ் ஸ்டாப்பை அடையும்போது, ஏற்கனவே ஆஞ்சநேயுலு வந்திருந்தான். அவளைப் பார்த்ததும் சட்டென்று அருகில் வந்தான்.

"எங்கே போகப் போகிறாய்?" தெரிந்து கொள்வது தன் உரிமை என்பது போல் கேட்டான்.

"சொல்கிறேன்..." காலியாய் வந்த டாக்ஸியை அழைத்தாள் ரோஜா. இருவரும் அதில் ஏறி சென்ட்ரலுக்குப் போனார்கள். அங்கிருந்து வழியை நினைவு படுத்திக் கொண்டு கொஞ்சம் சுற்றி அலைந்தாலும், எப்படியோ அந்த ஹோட்டலைக் கண்டுபிடித்து விட்டாள். பழைய கட்டிடம் போல் தென்பட்ட அந்த ஹோட்டலைப் பார்த்ததும் அவளுக்கு உயிர் வந்தது.

"நிறுத்து...நிறுத்து..." என்றாள். டாக்ஸி நின்றது.

ரோஜா இறங்கிக் கொண்டு டாக்ஸி டிரைவரிடம், "நாங்க சீக்கிரமாய்த் திரும்பி விடுவோம்; இருக்கேன்னு சொன்னால் வெயிட்டிங் சார்ஜ் கொடுத்துடறேன்" என்றாள்.

டிரைவர் காத்திருப்பதாக ஒப்புக் கொண்டான். இந்த ஹோட்டலுக்கு ரோஜா எதுக்கு வந்தாளென்று ஊகிக்கமுடியாத அஞ்சியும், வியப்படைந்தவளாய், அவளுடன் உள்ளே சென்றாள்.

ரோஜா நேராக முதலாளியிடம் சென்று, "சந்திரன் இருக்கானா?" என்று கேட்டாள்.

அவள் உள்ளே வருவதையே பார்த்துக் கொண்டிருந்த ஹோட்டல் முதலாளி, அவளது கேள்விக்கு உடனே பதில் அளிக்கவில்லை.

அவள் நயமாய்ச் சொல்வதுபோல் சொன்னாள். "நான் அவனுடைய சகோதரி! எங்க அம்மாவின் உடல் நலம் சரியில்லை... அவனுடன் ஒரு நிமிஷம் பேசிட்டுப் போய் விடுவேன்; என்னைச் சந்தேகிக்க வேண்டாம். இதற்கு முன் ஒருதடவை இங்கு வந்திருக்கிறேன்" என்றாள்.

ஹோட்டல் முதலாளி, சர்வரை கூப்பிட்டு மலையாளத்தில் ஏதோ கேட்க, அவனும் ரோஜாவைப் பார்த்து, தலை அசைத்து பதிலளித்தான். 'அன்று சந்திரனுடன் வந்தது இந்தப் பெண்தான்" என்று அவன் உறுதிப்படுத்துவது போல் அவளுக்குத் தோன்றியது. சர்வர் உள்ளே சென்றான்.

முதலாளி ஃபாமிலி அறையைக் காண்பித்து, "அங்கே போய் உட்கார்ந்து கொள்ளுங்கள். தகவல் அனுப்பியிருக்கிறேன்... வந்து விடுவான்" என்றார்.

"அஞ்சி! நீ இங்கே வெளியில் காபி குடித்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டிரு. நான் இதோ வந்து விடுகிறேன்" என்றாள் ரோஜா.



கறுத்துப் போன முகத்துடன், இஷ்டமில்லாமலேயே அஞ்சி தலையசைத்தாள்.

அவள் ஃபாமிலி அறைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டாள். பெயருக்குத்தான் அந்த அறை ஃபாமிலி அறையென்றும், அங்கு யாரும் சர்வ் செய்ய மாட்டார்கள் என்று பார்க்கும்போதே உணர முடிந்தது. ஒரே ஒரு மேஜையும், அதைச் சுற்றி நான்கு நாற்காலிகள் மட்டும் போடப் பட்டிருந்தன.

அவள் பொறுமையின்றி வாசற்பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள் ஒருகால் சந்திரன் வராவிட்டால்? ரோஜா யோசித்துக் கொண்டிருக்கும்போது, செந்தூ உள்ளே வந்தான். அவளைப் பார்த்ததுமே "நீயா?" என்றான்.

"யாரை எதிர்பார்த்தாய்?" எழுந்து கொண்டே வேகமாய் மொழிந்தாள் ரோஜா.

ஒரே கணத்தில் செந்தூ தன் வியப்பை உள்ளடக்கி, அருகில் வந்தான். "நீயாக இருக்குமென்று கனவில்கூட நினைக்கவில்லை. எனக்காக பெண் ஒருத்தி வந்திருக்கிறாள் என்றதும், வேறு யாரோ என்று நினைத்தேன்."

"உனக்காக நிறையப் பெண்கள்கூட வருவாங்களா என்ன?"

''ரோஜா! இங்கு எதுக்கு வந்தாய்?'' சந்திரன் முகத்தில் கோபம் எட்டிப் பார்த்தது.

"வரும்படிச் செய்தது நீதான்..."

"நானா?"

"இல்லையா? நேற்று இரவு கண்ணில் பட்டும் ஏன் பேசவில்லை? தெரியாதவன் மாதிரி எதுக்கு நடித்தாய்?"

கண நேரம் அவளின் முகத்தையே கண் இமைக்காமல் பார்த்த செந்தூ, அவளுடைய கோபத்தை உணர்ந்தவன் போல், நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே, "ரோஜா...

உட்காரேன்... காபி குடிக்கிறியா?'' என்று நயமாய்க் கேட்டான்.

''வேண்டாம்... முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு.''

''என்னுடன் வந்தவர்கள், உன்னுடன் இருப்பவர்கள் என்னை அடையாளம் கண்டுகொள்ளாமல் இருக்க அப்படிச் செய்தேன்.''

''உன்னுடன் இருந்த அந்தப் பெண் யார்?''

''என்னைப் போல் துரதிருஷ்டசாலிதான் ரோஜா! உனக்கு மூளை இருக்கா? அப்படி பொது இடத்தில் என்னை பேர் சொல்லி அழைக்கலாமா? அந்தச் சுற்றுவட்டாரத்தில் யாராவது சி. ஐ. டி. இருந்தால் என் பாடு என்ன ஆகுமோ உனக்குத் தெரியுமா?''

அவள் தன் தவறை உணர்ந்து விட்டவள் போல், பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். ''எதிர்பாராமல் உன்னைப் பார்த்ததும், யோசனையே ஓடவில்லை. உனக்கு இடைஞ்சல் வருமோ என்ற நினைப்பு வரவில்லை.''

''போகட்டும்... அந்த விஷயத்தை விட்டுவிடு... உன் பக்கத்தில் இருந்த அந்த ஆள் யாரு?''

''விஜய்... அனந்தோட அண்ணன்!''

''உனக்கு எப்படி அறிமுகமாயிற்று? நீ எப்பவும் அவனைப் பற்றிச் சொன்னது இல்லையே?''

''எங்களுக்குள் எந்த அறிமுகமும் கிடையாது... நான் வேலை செய்யும் வேணுகோபாலனுக்கு விஜய் ரொம்ப நெருங்கியவன்.''

''அந்த சின்னப் பெண் யாரு?''

''வேணுகோபாலனுடைய மகள் செந்தூ! இரவெல்லாம் எனக்குத் தூக்கமே வரவில்லை'' கண்களில் நீர் சுழன்றது ரோஜாவுக்கு.

''நானும் உறங்கவில்லை...'' சீரியஸாய்ச் சொன்னான் செந்தூ.



அவள் பதிலளிக்கவில்லை. சற்றுப் பொறுத்து, ''எதுக்காக என்று கேட்கமாட்டாயா?'' என்றான்.

''தனியாய் வேறு கேட்கணுமா? அதுகூடத் தெரியாதா எனக்கு?''

''என்ன தெரியும் உனக்கு?'' வியப்புடன் நோக்கினான்.

''உன்னைப் போல் வாழறவங்களுக்கு உறக்கம் எப்படி வரும்?''

சந்திரன் சிரித்து விட்டான். ''உன் மூஞ்சி... என்னைப் பற்றிய கவலை எனக்கு என்றோ போய் விட்டது. என் யோசனைகள் எல்லாம் உன்னைப் பற்றிதான். உன நினைவு வந்துவிட்டால் போதும் எனக்குத் தூக்கம் வராது.''

''செந்தூ...''

''ஆமாம் ரோஜா! மாமா, மாமிக்கு நம்மைப் பற்றிய கவலை எந்த அளவு இருக்கோ, எனக்குத் தெரியாததில்லையே. நான் இருந்தாலும், உன்னைப் பொறுத்தவரை இல்லாதவனாகி விட்டேன். நேற்று அந்த சின்னப் பெண்ணுடன், அவனையும், உன் அருகில் பார்க்கும்போது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? என்றாவது ஒருநாள் நீ நல்ல கணவனை அடைந்து, குழந்தை குட்டிகளுடன் சந்தோஷமாய் வாழ வேண்டும்...''

கல்யாணப் பேச்சு வந்ததும் ரோஜாவின் முகம் வாடி விட்டது. குனிந்த தலைநிமிராமலேயே, கம்மிவிட்ட குரலில், ''என் விஷயத்தை விட்டுவிடு. என் யோசனைகள் எப்போதும் உன்னைச் சுற்றித்தான் இருக்கும் செந்தூ! நீ மாறணும், சாதாரணமான மனிதனைப் போல் ஆகணும், பயமின்றி வாழணும். இதைவிட எனக்கு வேறு எதுவும் வேண்டாம்.''

அவளின் பேச்சில் ஆவேசத்தைக் கவனித்த செந்தூ பேச்சை மாற்றினான். ''அம்மாவுக்கு எப்படி இருக்கு?''

''நான் சொல்ல மாட்டேன். நீயே வந்து பாரு. என்

தெருக்களில் நடமாட முடியும்போது, உன்னால் வீட்டுக்கு வர முடியாதா?''

''உனக்குப் புரியாது ரோஜா... நான் வீட்டுக்கு வந்தால் என்னதான் இல்லைன்னாலும் சந்தேகம் வரும். அம்மாவை நீ கோவிலுக்கோ, சினிமாவுக்கோ அழைத்துச் செல்லக் கூடாதா?''

''அம்மாவையா? நானா? நல்லாயிருக்கு. அவள் அறையைவிட்டு வெளியே வருவதைகூட நிறுத்திவிட்டாள்.'' ரோஜா திடீரென்று நிறுத்தினாள்

''செந்தூ! வேடிக்கை என்ன தெரியுமா? வேணு கோபாலன்கூட இதே கேள்வியைக் கேட்டார். இதே பதில் தான் சொன்னேன், வேடிக்கையாய் இல்லை?''

வேணுகோபாலனின் பேச்சு வந்ததும், செந்தூவின் புருவங்கள் முடிச்சிட்டன. சமீபத்தில் அவள் அடிக்கடி அவருடைய பெயரை மந்திரம் போல் உச்சரித்துக்கொண்டிருக்கிறாள்.

நெற்றியைச் சுருக்கிக் கொண்டு கேட்டான், ''அம்மாவைப் பார்ப்பதில் அவருக்கென்ன ஆர்வம்?''

''என்னவோ? எனக்குத் தெரியாது.''

''அவ்வளவு துடிப்பாய் இருந்தால், நம் வீட்டுக்கே வந்து அம்மாவைப் பார்த்திருக்கலாமே.''

''வரலாம். ஆனால் அவர் ஹார்ட்பேஷண்ட்; வீட்டை விட்டு வெளியே வருவது ரொம்ப அபூர்வம். செந்தூ! நீ அவரைச் சந்திக்க எப்பொ வரப் போகிறாய்?''

''நான் அவரைச் சந்தித்துதான் ஆகணுமா ரோஜா...''

''ஆமாம்! கட்டாயம் சந்திக்கணும். உன்னை அவருக்கு ரொம்பப் பிடிக்கும்.''

சந்திரன் தோள்களைக் குலுக்கினான. ''என்னைப் பார்க்காமலேயே?''

''நான் ஏற்கனவே உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். எப்போ வரப் போகிறாய்? இன்று போகலாமா?''



''இன்றா! எனக்கு ரொம்ப வேலையிருக்கு.''

''பின் எப்போ? இந்தத் தடவை நீ தள்ளிப் போட முடியாது. நான் சும்மாயிருக்கமாட்டேன்.''

''சரி... தீபாவளிக்கு அடுத்த நாள் வர்றேன்.''

''உண்மையாகவா?''

''உண்மைதான்...''

''அவங்க வீட்டுக்கு நேராக வந்து விடுகிறாயா?''

''ஊஹூம்! அவரை நீ பார்க்குக்கு அழைச்சுகிட்டு வா''

''ஏன் வீட்டுக்கு வந்தால் என்னவாம்?''

''ஒன்றுமில்லை. ஏதாவது புதிய சூழ்நிலையில் நான்கு சுவர்களுக்கு நடுவில் இருக்கணும் என்றால் எனக்கு மூச்சு முட்டும்... வெட்ட வெளியாய் இருந்தால் நிம்மதியாய், சுதந்திரமாய் இருக்கும்.''

செந்தூ கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். ரோஜா எழுந்து கொண்டாள். சந்திரனும் எழுந்து கொண்டே சொன்னான், ''ரோஜா... இந்தத் தடவை இங்கு வந்தது போதும். இனி ஒரு நாளும் இப்படி வரக்கூடாது. உன்னைப் போன்ற பெண்கள் வரக்கூடிய இடம் இல்லை இல்லை இது.''

''நீதான் ஒரு தடவை அழைத்து வந்தாய்'' என்று நிஷ்டூரமாய்ச் சொன்னாள்.

''உன்னுடன் சற்று நேரம் இருக்கணும்னு நினைத்து, வேறு வழியில்லாமல் அப்படிச் செய்தேன். தயவு செய்து இனி ஒரு நாளும் இப்படி வராதே. அது உனக்கும், எனக்கும் நல்லது இல்லை.''

ரோஜாவுக்கு செந்தூவின் பயம் புரிந்தது. அதை ஆயுதமாய்க் கொண்டு செந்தூவை மிரட்டினாள்; ''நீ எனக்குக் கொடுத்த வாக்குபடி தீபாவளி கழிந்த மறுநாள் அவரைச் சந்தித்து விட்டால், நான் இந்தப் பக்கமே வரமாட்டேன். வராவிட்டால், என்றாவது ஒருநாள் அவரையும், அழைச்சு

கிட்டு இங்கேயே வந்து விடுவேன்."

ரோஜாவின் மிரட்டலுக்குச் சந்துரு சிரித்துவிட்டான். இருவரும் தீபாவளி மறுநாள் பார்க்கில் சந்தித்துக் கொள்ளும் நேரத்தை முடிவு செய்தார்கள்.

"மறந்து விடமாட்டாயே" போகப் போன ரோஜா மறுபடியும் கேட்டாள்.

"ஊஹூம்! உன் மேல் ஆணை, சரிதானே" சந்திரன் சத்தியம் செய்து கொடுத்தான்.

## 47

தீபாவளிப் பண்டிகை வந்தது. ரோஜாவுக்கு நினைவு தெரிந்த பிறகு என்றும் இல்லாதவிதமாய் சந்தோஷமாய், உற்சாகமாய் இருந்தது. அதுக்குக் காரணம், தீபாவளி மறுநாள் சந்துரு வேணுகோபாலனைச் சந்திப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளான், அது ஒன்று.

இரண்டாவதாக, நல்ல மனிதரும் உயர்ந்த உள்ளமும் கொண்ட வேணுகோபாலனின் ஆதரவில் இருந்த ரோஜாவுக்கு நிச்சிந்தையாயும் அமைதியாயும் இருந்தது. தனக்கு ஏதாவது ஆபத்தோ, அவசரமோ வந்தால், அவருடைய ஆதரவு தனக்கு முழுமையாக கிடைக்கும் என்ற தைரியம் ரோஜாவுக்கு இருந்தது. இதற்குமுன் போல் வாழ்க்கை சூனியமாய், தனிமையாய், பயங்கரமானதாய் தோன்றவில்லை. ஆலமரம் போன்ற அவரது நிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்த ரோஜாவுக்கு, முன்போல் உலகத்தாரின் குத்தல் பேச்சுகள், தாயின் சந்தேகங்கள் அவ்வளவாக வேதனையளிக்கவில்லை. அவர் காட்டும் அபிமானம், தன் குடும்ப விஷயங்களில் இரக்கம் காட்டி, அக்கறையுடன்



செயல்படும் அவருடைய கருணை உள்ளம், இவையெல்லாம் சேர்ந்து ரோஜாவுக்கு எதிர்காலத்தைப் பற்றிய பயமும், கவலையும் இல்லாமல் செய்து விட்டன. மற்ற வேலைக்காரர்களிடமும் அவருடைய போக்கு கிட்டத்தட்ட இப்படியே தான் இருக்கும்.

ரோஜா வந்த இத்தனை நாட்களில், அவருடைய பேச்சிலோ, செயலிலோ, முதலாளி என்ற அகங்காரமோ, அதிகாரமோ ஒரு நாளும் தென்பட்டதில்லை. எல்லோரிடமும் அன்பாய் நடந்து கொள்வது அவருடைய சுபாவம்... தான் அனுசரணையாய் நடந்து கொள்வதால், இன்னும் கொஞ்சம் கூடுதலான அன்பைத் தன்னிடம் காண்பித்து வருகிறார். அவ்வளவுதான் என்று ரோஜாவுக்குத் தோன்றிற்று.

நாளை தீபாவளி என்றால், வேணுகோபாலன் ரோஜாவை அழைத்து, "பண்டிகைக்காக என்ன இனிப்பு ஸ்பெஷலாய் செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்.

"உங்களுக்கு எது பிடிக்குமோ சொல்லுங்கள், அதையே செய்கிறேன்" என்றாள் ரோஜா.

மாமியின் தயவால், அன்று வேலை வாங்கிக் கஷ்டப் படுத்தினாலும், அந்தத் திறமைதான் இன்று வாழ வழி காட்டியது. ரோஜாவுக்கு நன்றாக சமைக்கத் தெரியும்.

"உனக்கு எது நன்றாகச் செய்யத் தெரியும் சொல்லு" என்று அவர் புன்முறுவலுடன் கேட்டார்.

"லட்டு, குலாப்ஜாமூன், மைசூர்பாக், போளி..."

"போளின்னா உங்க மாமாவுக்கு ரொம்பப் பிடிக்கும் இல்லையா" என்று வேறு ஏதோ நினைவில் மூழ்கியவாறே சொன்னார்.

"ஆமாம்... ஆனால் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

அவர் ஒரு நிமிடம் தடுமாறி விட்டு, பிறகு யதேச்சையாகச் சொல்வது போல் சொன்னார். "நீயே முன்பு என்னிக்கோ என்னிடம் சொன்னதாக நினைவு."

"நானா?" ரோஜாவுக்கு எத்தனை யோசித்தாலும், தனக்கும் அவருக்கும் இடையே இந்தப் பேச்சு வந்ததாக நினைவு இல்லை.

பண்டிகைக்கு முதல் நாள் லட்டு, மைசூர் பாக் செய்தாள். பண்டிகை அன்று அவருக்குப் பிடித்தமான போளி, புளியோதரை, மெதுவடை செய்தாள். என்றும் சமையலறைப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்காத வேணுகோபாலன், சின்ன பையனைப் போல், ரோஜா பின்னாடியே சுற்றிக் கொண்டு ஊர்க் கதைகள் பேசுவதையும், தானும் சிரித்து, ரோஜாவையும் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது லாவண்யாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. அந்தச் சமயம் யாராவது பார்த்தால் ரோஜாவை அந்த வீட்டுப் பெண்ணாகவும், லாவண்யாவை வேற்று இடத்துப் பெண்ணாகவும் எண்ணி விடுவார்கள். இதுவரை ராதை ஒருத்திதான் தனக்குப் போட்டி என்று நினைத்து இருந்த லாவண்யாவுக்கு, ரோஜா அவளையும் மிஞ்சிய எதிரியாகி விட்டாள். ராதையைத் தவிர வேறு யாராலும் தன் தந்தையின் அன்பைப் பெற்று விடமுடியாது என்று நம்பிய லாவண்யாவுக்கு ரோஜாவைப் பார்க்கும் போது அந்த ஊகமே தலைகீழாகி விட்டது. ரோஜாவிடம் ஏதோ மந்திர சக்தியிருக்கு. தந்தை, விஜய், ராதை, அனந்த், வீட்டு வேலைக்காரங்க... எல்லோருக்கும் ரோஜா பிரியமானவளாய் இருந்தாள்.

தன் பார்வையால், பேச்சுத் திறமையால் இவர்களை வசியப்படுத்துவது ரோஜாவுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. தனக்கு அந்த மாதிரி நடிக்கத் தெரியாததால், தன்னைக் கண்டால் யாருக்கும் பிடிக்கவில்லை. தன் வீட்டில் ரோஜா, ரொம்ப உரிமையாய் நடமாடுவது, லாவண்யாவுக்கு முள்ளாய்க் குத்தியது.

சமையலைக் கவனித்துக் கொண்டே, நடுவில் ஏதோ வேலையாய் ஹாலுக்கு வந்த ரோஜா, வேணுகோபாலன் போனில் யாருடனோ தன்னைப் பற்றிப் பேசுவதைக் கேட்டு அப்படியே நின்று விட்டாள்.

''கட்டாயம் வந்துதானாகணும் விஜய். நொண்டிச் சாக்குகளை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். ரோஜா



செய்த லட்டு, போளியெல்லாம் சாப்பிடாவிட்டால் உன் வாழ்க்கையே வேஸ்ட்.''

ரோஜாவின் கன்னங்களில் சிவப்பு ஏறியது. அவர் எப்போதும் அப்படித்தான், தான் செய்யும் எந்த சின்ன வேலையும், அவருக்கு ரொம்ப அபூர்வமாய்த் தோன்றும். அதை மற்றவர்களிடம் பறைசாற்ற துடிதுடிப்பார். வேறு யாரிடமாவது சொல்லட்டும்... போயும்... போயும்... விஜயிடமா? ரோஜாவுக்கு உயிரே போனாற் போலிருந்தது. விஜய் என்ன நினைத்துக் கொள்வான்? வேணுகோபாலனின் போக்கைக் கண்டு மனதிலேயே சிரித்துக் கொள்வானோ?

சமீபத்தில் அவனுடைய நடவடிக்கைகளை ரோஜா கவனித்துதான் வந்தாள். தனக்கும், அவனுக்குமிடையே பயங்கரமான நிகழ்ச்சி ஒன்று நடந்ததையே மறந்துவிட்டாற் போல் நடந்து கொள்கிறான். ரோஜாவால் எவ்வளவு முயன்றாலும், எதுவும் நடவாதது போல், சாதாரணமாய், அலட்சியமாய் இருப்பது சாத்தியப்படவில்லை. அவன் இந்தப் பக்கம் வருவது தெரிந்தால், வேறு பக்கம் போய்விட உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. முடிந்த வரை அவன் கண்களில் படாமல் கவனமாய் இருந்து வந்தாள். அவனைப் பார்த்தால் இன்னதென்று தெரியாத வேதனை, இயலாமை இதயத்தைச் சூழ்ந்து கொள்ளும்.

வேணுகோபாலன் போனை வைத்துவிட்டுச் சொன்னார். ''ப்ச! விஜய்க்கு வேறு இடத்தில் லஞ்ச் இருக்காம். வர முடியாதாம்... முடிந்தால் மாலையில் வருவானாம்.''

ஒருகணம் ரோஜாவுக்கு விஜய் வரப்போவதில்லை என்ற செய்தி மகிழ்ச்சியைத் தந்தாலும், உடனே ஏனோ ஏமாற்றமாய் உணர்ந்தாள். அவளுக்குத் தன் மீதே எரிச்சல் வந்தது. ஒரு பக்கம் அவனுடைய நிழலைக்கூட பார்க்க விரும்பாத போது, இன்னொரு பக்கம், அவனுக்கு தானே உணவு பரிமாற வேண்டுமென்றும், தன் கையால் காபி கொடுக்க வேண்டுமென்றும் மனம் ஏங்குவதைக் கண்டு திடுக்கிட்டாள்.

அவனுடைய அருகாமையில் ஒருவிதமான சந்தோஷம் உண்டானதை உணர்ந்த போது ரோஜாவுக்குத் தன் மீதே கோபம் வந்தது. எவ்வளவு வெட்கங்கெட்ட விஷயம்? வெறுத்து ஒதுக்க வேண்டிய நபரைப் பற்றித் தன் மனம் உயர்வாய் எண்ணியதைக் கவனித்த ரோஜா, தடுமாறி விட்டாள். இந்தப் பலவீனத்தை எப்படித் தடுப்பது?

சாப்பிட உட்காரும் முன் வேணுகோபாலன், தானே ஒரு காரியரை எடுத்து, அதில் சமைத்த உணவு வகைகளையும், இனிப்புகளையும் நிரப்பினார். டிரைவரை அழைத்து "இதைக் கொண்டு போய் ரோஜாம்மா வீட்டில் கொடுத்து விட்டு வா" என்றார்.

அதுவரை வேறு யாருக்காகவோ என்று நினைத்திருந்த அவள், இதைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தாள். மறுக்கப் போனவளை வேணுகோபாலன் கையசைவிலேயே தடுத்து விட்டு, டிரைவரைப் போகச் சொன்னார்.

அப்பொழுதுதான் வெளியிலிருந்து வந்து கொண்டிருந்த லாவண்யா வாசற்படி அருகே கேரியருடன் எதிரில் வந்த டிரைவரைப் பார்த்து, "யாருக்காக?" என்று கேட்டாள்.

"ரோஜாம்மா வீட்டில் கொடுத்துவிட்டு வரச் சொன்னாங்க" என்றான்.

"யார் சொன்னது?"

"அய்யா தான் கையாய்க் கொடுத்தாரு..." என்றபடி சென்று விட்டான் டிரைவர்.

லாவண்யா வந்து விட்டதைக் கவனித்த ரோஜா, அவளைச் சாப்பிட கூப்பிட வந்தாள்.

"ஜெய்மனை இன்னிக்குச் சாப்பிடக் கூப்பிடுவதாகச் சொன்னீங்களே?" என்று கேட்டாள் புன்முறுவலுடன்.

"கூப்பிடவில்லை. ஏன் என்று உனக்குப் பதில் சொல்லி ஆகணுமா?" என்று வெறுப்புடன் கேட்டாள் லாவண்யா.

ரோஜா விக்கித்துப் போனவளாய்ப் பார்த்தாள்.



லாவண்யா மேலும் துடுக்காய்ச் சொன்னாள். "இந்த வீட்டு நிலைமை முன்போல் இல்லை. ஒவ்வொன்றுக்கும் உன் அனுமதி பெறவேண்டுமென்று இப்பத்தான் தெரிந்து கிட்டேன்."

லாவண்யாவின் போக்கு சரியாக இல்லையென்று உணர்ந்த ரோஜா, மேலும் பேச்சை வளர்த்தாமல் கீழே வந்து விட்டாள். லாவண்யாவின் பேச்சிலிருந்த கூர்மை அவளின் மனதை ஆழமாய்க் காயப்படுத்தி விட்டது.

அனந்திடமிருந்து எல்லோருக்கும் தனித்தனியாய் தீபாவளி வாழ்த்துக் கடிதங்கள் வந்தன.

ரோஜா அனந்திடம் சொன்னபடி வாரம் ஒருமுறை கடிதம் எழுதி வந்தாள். ஆனால் அனந்த்தான் தன் வார்த்தையைக் காப்பாற்றவில்லை. போன புதிதில் அடிக்கடி கடிதம் எழுதியிருந்தாலும் வரவர கடிதம் எழுதுவது குறைந்து விட்டது.

சமீபத்தில் அவன் எழுதிய கடிதத்தில் அனுபமா என்ற பெண்ணைப் பற்றி எழுதியிருந்தான். இளம் வயதிலேயே கணவனை இழந்து விட்டாளாம். ரொம்ப நன்றாக பாடுவாளாம். வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்ட அந்தப் பெண்ணிடம் தனக்கு இரக்கம் ஏற்பட்டு இருப்பதாக எழுதி இருந்தான்.

மென்மையான இயல்பு கொண்ட அவன் மனம் வேதனையிலிருக்கும் அந்தப் பெண்ணைக் கண்டதும் இளகி விட்டதில் வியப்பேதும் இல்லை என்று ரோஜாவுக்குத் தோன்றியது.

மாலை ஆகிவிட்டது. வேணுகோபாலன் எல்லோருக்கும் புது உடைகளைக் கொடுத்தார். ரோஜாவுக்கு அந்தப் புடவை விலை அதிகமாகத் தோன்றினாலும், அவரைத் திருப்தி செய்ய, அவற்றைப் பெற்றுக் கொண்டாள். ராதைக்குப் புதிய டிரஸ்ஸைப் போட்டுவிட்டு, தானும் முகம் துடைத்து, புது புடவையைக் கட்டிக் கொண்டாள்.

ரோஜா சொல்லிக் கொடுத்ததுபோல் ராதை தந்தையின் கால்களில் விழுந்து வணங்கினாள். சின்ன மகளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டார் வேணுகோபாலன். ரோஜா, ராதையை அழைத்துக்கொண்டு பால்கனிக்குச் சென்றாள்.

ஒவ்வொரு வருடமும் வேலைக்காரர்கள் மெழுகு வர்த்திகளை ஏற்றி பால்கனியை அலங்கரிப்பார்கள். லாவண்யாவுக்கு இது போன்ற காரியங்களில் ஈடுபாடு என்றுமே இருந்ததில்லை.

வேணுகோபாலனுக்கு அகல் விளக்கு ஏற்றுவதுதான் பிடிக்கும் என்று பேச்சுவாக்கில் அவர் சொன்னதைக் கவனத்தில் வைத்துக் கொண்ட ரோஜா, காலையிலேயே அகல் விளக்குகளை வாங்கி வரச் செய்தாள். எண்ணை விட்டு, திரிகளைப் போட்டு, விளக்குகளை ஏற்றி ராதையின் உதவியுடன், பால்கனியில் வரிசையாக வைத்துக் கொண்டிருந்தாள்.

ரோஜா கட்டிக் கொண்டிருந்த புடவையைப் பார்த்த லாவண்யா தனக்குக் கொடுத்த புடவையை எடுத்துக் கொண்டு புயல்போல் தந்தையின் அறைக்கு வந்தாள். தீவிரமாய் அவரைப் பார்த்துக் கொண்டே, "உங்களுடைய எண்ணம்தான் என்ன? எனக்கும் ரோஜாவுக்கும் ஒரேமாதிரி புடவைகளை வாங்கியிருக்கீங்க? நானும் அந்த வேலைக்காரியும் ஒண்ணா?" என்றாள்.

"மறுபடியும் மறுபடியும் அவளை வேலைக்காரின்னு சொல்லாதே! வீட்டு மனிதர்களைவிட அதிகமான பொறுப்புகளை அவள் ஏற்றுக்கொண்டு திறமையாய்ச் சமாளிப்பதை நீயும் பார்த்துகிட்டுதானே இருக்கே!"

"அதைத்தான் நானும் கேட்கிறேன். எதுக்கு ஏற்றுக் கொள்ளணும்? அந்த உரிமையை யார் கொடுத்தாங்க? எதுக்குக் கொடுத்தாங்க?"

"உன் பைத்தியக்காரத்தனமான கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. பண்டிகை நாளில் வீட்டில் ரகளை பண்ணாதே" என்று எரிச்சலுடன் சொன்னார் வேணுகோபாலன்.



"இந்தக் கண்ணாமூச்சி எதுக்கு? உங்க மனதில் என்ன இருக்கோ தெளிவாய்ச் சொல்லிடுங்க. நான் வாயே திறக்க மாட்டேன்."

"வேறு ஒருநாள் சொல்கிறேன். இப்போ இங்கிருந்து போய் விடு. என் முன்னால் நின்று வாய்க்கு வந்தபடி பேச வேண்டாம்."

"ஆமாம்...ஆமாம்... நான் எது பேசினாலும் அதிகமாய்ப் படும் உங்களுக்கு! ராதையை மாதிரி ஊமையாய் பிறந்திருந்தால் நன்றாய் இருந்திருக்கும். கண்ணில்லாமல் கபோதியாய்ப் பிறந்திருந்தால் இன்னும் நன்றாய் இருந்திருக்கும் உங்க ஆட்டங்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்திருக்கும்."

"வாயை மூடு..." வேணுகோபாலன் உயர்த்திய கையை, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவராய் கீழே இறக்கி விட்டார். ஆள்காட்டி விரலால் வாசற்பக்கம் சுட்டிக்காட்டியவர், "போ... ஒருகணம்கூட என் முன் நிற்காதே! உன்னுடைய கேடுகெட்ட மனதில், வராத கீழ்த்தரமான எண்ணங்களே இல்லை" என்றார் ஆவேசமாய்.

லாவண்யா தலையைத் திருப்பிக்கொண்டு வேகமாய் வெளியே வந்து விட்டாள்.

ராதையுடன் சேர்ந்து, அகல் விளக்குகளை ஒவ்வொரு இடத்திலும் வைத்துக்கொண்டிருந்த ரோஜாவுக்கு, தந்தை மகளுக்குமிடையே நடந்த வாக்குவாதம் தெரியாது. நன்றாக இருட்டி விட்டது. அந்தத் தெரு முழுவதும் விளக்குகளால் ஜொலித்துக் கொண்டிருந்தது எங்கு பார்த்தாலும் விளக்குகளின் அணிவகுப்புகள்.

ராதைக்கு வெடியைக் கண்டால் ரொம்ப பயம். வெடி சத்தம் கேட்ட போதெல்லாம் ரோஜாவைக் கெட்டியாகப்

பிடித்துக் கொண்டாள். ரோஜா பெருமையாய் அவளை உற்சாகப்படுத்தி, தைரியமூட்டி, கம்பி மத்தாப்பைக் கொளுத்தச் செய்தாள்.

புதுப் புடவையில் அழகுப் பதுமையாய் இருந்த ரோஜாவையே வேணுகோபாலன் பார்த்துக் கொண்டிருந்தார். எவ்வளவு நேரம் பார்த்தாலும் திருப்தி ஏற்படவில்லை.

லாவண்யாவை ரொம்ப கவனமாய், கட்டுப்பாட்டுடன் வளர்த்த போதிலும், அவளுடைய சுபாவத்தில், நடத்தையில் ஒரு ஒழுக்கம் பார்க்க முடியாது. எந்தக் கட்டுப்பாடும், கவனமும் இல்லாமல் வளர்ந்த ரோஜாவிடம் இவ்வளவு ஒழுக்கமும், விவேகமும் எப்படி வந்தனவோ? அவளைப் பார்க்க பார்க்கப் அவருக்குப் பெருமையாய், மகிழ்ச்சியாய் இருந்தது.

அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த லாவண்யாவுக்கு, தந்தையின் பார்வை அடிக்கடி ரோஜாமீது நிலைத்திருப்பதும், கனவுலகில் சஞ்சரிப்பவர் போல் யோசனைகளில் ஆழ்ந்து போனதையும் அவள் கவனியாமல் இல்லை. அவரின் ஒவ்வொரு செயலையும் பூதக் கண்ணாடியால் பார்த்துக் கொண்டிருக்கும் லாவண்யாவின் இதயத்தில் பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிந்தது.

லாவண்யாவின் கண்கள் ஒருகணம் ரோஜா உடுத்தி இருந்த புடவைமீது நின்றன. மகிழ்ச்சியினால் பளபள வென்று மின்னிக் கொண்டிருந்த ரோஜாவின் முகத்தை நோக்கினாள். சாப்பாட்டுக்கு வழி இல்லாமல், இந்த வீட்டுக்கு வேலையைச் செய்ய வந்தவள். இந்த நிமிடம் அவளைப் பார்க்கும் போது, அவளைவிட அதிர்ஷ்டசாலிகள் யாரும் இருக்க முடியாது என்று தோன்றிற்று...

தனக்கு? தனக்கு எல்லாம் இருந்தும், சந்தோஷம் என்பதே கிடையாது. லாவண்யாவின் மனம் கோபத்தில், ஆவேசத்தில் பற்றி எரிந்தது. தன் மனதில் கனன்றுகொண்டி-



ருக்கும் பொறாமைத் தீயை அடக்கிக் கொண்டு, மெதுவாய் ரோஜா அருகில் சென்று கம்பி மத்தாப்பை கொளுத்தத் தொடங்கினாள்.

ரோஜா, ராதையின் கையைப் பிடித்துக் கம்பி மத்தாப்பை கொளுத்தச் செய்து கொண்டிருந்தாள். வேணுகோபாலனும் அங்கேயே நின்று சின்ன மகளுக்குத் தைரியம் சொன்னார்

இதற்குள் எதிர்வீட்டு மாடியில் புஸ்வாணம் புஸ்ஸென்று சீறி, வர்ணங்களைச் சிதறடித்துக் கொண்டு எழும்பியது. ரோஜா, ராதை, வேணுகோபாலன் மூவரும் ஒருகணம் தம்மை மறந்து கொத்துக் கொத்தாய் உதிரும் நெருப்புப் பூக்களைப் பார்ப்பதில் ஆழ்ந்து போனார்கள்.

கம்பி மத்தாப்பைக் கொளுத்திக் கொண்டிருந்த லாவண்யா எதுக்காகவோ குனிவதுபோல் கீழே குனிந்தாள். லாவண்யாவின் கையிலிருந்த கம்பி மத்தாப்பு, ரோஜாவின் புடவைக் கரையை ஒரு வினாடிக்குக் குறைவான நேரம், முத்தமிட்டு விலகியது.

மெலிதான பட்டுப் புடவையில் நெருப்பு உடனே பற்றிக் கொண்டது. கண் இமைக்கும் நேரத்தில் இதைச் செய்து முடித்துவிட்ட லாவண்யா, ஒன்றும் அறியாதவள்போல் கம்பி மத்தாப்பைக் கொளுத்திக் கொண்டிருந்தாள்.

ரோஜா கால்களில் அனலை உணர்ந்து, அது என்னவென்று குனிந்து பார்ப்பதற்குள், நன்றாக நெருப்புப் பற்றிக்கொண்டது. வீலென்று அலறிய ரோஜா, சட்டென்று குனிந்து நெருப்பை அணைக்க முயன்றாள். ஆனால் அது சாத்தியப்படவில்லை.

இதற்குள் பின்னால் மாடிப்படி கதவு அருகில் விஜய் எப்போ வந்து நின்றானோ, எத்தனை நேரமாய் நின்றானோ, யாரும் கவனிக்கவில்லை. மின்னல் போல் ஒரே எட்டில் ரோஜா அருகில் வந்த விஜய், நெருப்பை அணைக்க முயன்று கொண்டிருந்தான்.

"ரோஜா — புடவையை அவிழ்த்து விடு" என்று கத்தினார் வேணுகோபாலன்.

ரோஜா தயங்குவதற்குள், அதே எண்ணம் விஜய்க்கும் தோன்றியது போல், புடைவையின் கொசுவங்களை இழுத்து விட்டு, ரோஜாவின் தோள்களைப் பற்றி கிர்ரென சுழற்றி, புடவையை விடுவித்து, தொலைவில் வீசி எறிந்தான். உடன் பாவாடையில் பிடித்துக் கொண்ட நெருப்பையும் கைகளால் கசக்கி அணைத்து விட்டான். எல்லாம் கண் இமைக்கும் நேரத்திற்குள் நடந்து முடிந்துவிட்டது

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, புடவை திகுதிகுவென்று எரிந்து சாம்பலாயிற்று. துணி பொசுங்கிய நாற்றம் அந்த இடமெல்லாம் சூழ்ந்து கொண்டது.

மார்புக்கு குறுக்கே இருகைகளையும் வைத்துக் கொண்டு, தரையில் சரிந்து, உட்கார்ந்து விட்ட ரோஜாவின் முகம் ரத்தம் வற்றி விட்டாற்போல் வெளிறிப் போய் விட்டது. கண்கள் அகல விரிய, பயந்து போனவளாய்த் தென்பட்டாள். எல்லோருடைய மனதிலும் ஒரே எண்ணம், எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து தப்பினாள். ரோஜா ரொம்ப அதிர்ஷ்டசாலி... வேணுகோபாலன் தோளில் கிடந்த அங்கவஸ்திரத்தை எடுத்து ரோஜாவின் தோள்மீது போர்த்திவிட்டு, "கீழே போம்மா" என்றார்

அரைகுறையாய் அதைச் சுற்றிக் கொண்டு எழுந்து கீழே ஓடினாள் ரோஜா.

"நெருப்பு எப்படி பற்றி இருக்கும்?" தரையைக் கவனமாய்ப் பரிசீலித்துக் கொண்டே சொன்னார் வேணுகோபாலன். கீழே வைத்திருந்த அகல் விளக்கு அணைந்து இருந்தது. அது ரோஜா நின்ற இடத்துக்கு சற்றுத் தொலைவில்தான் இருந்தது.

நெருப்பைக் கைகளால் அணைத்ததில், உள்ளங்கைகளில் ஏற்பட்ட எரிச்சலை தணிக்க, வாயால் ஊதிக் கொண்டிருந்த



விஜய், லாவண்யா பக்கம் பார்த்தான். அவள் பார்வையில் கோபமும், ஆவேசமும் போட்டியிட்டன. வாயைத் திறந்து ஏதோ சொல்லப் போனான்.

ஆனால் லாவண்யாவின் பார்வையில் தென்பட்ட பயம், வெறுப்புகோபம் எல்லாம் சேர்ந்து, அவன் வாயிலிருந்து வர இருந்த வார்த்தைகளைத் தடை செய்து விட்டன. நடந்தது என்னவோ நடந்து விட்டது. இனி வெளிப்படுத்துவதால் என்ன பயன் என்று தோன்றியது. கிட்டத்தட்ட அரை மணி நேரம் கழித்து எல்லோரும் கீழே வந்து விட்டார்கள். லாவண்யா தலைவலி என்ற சாக்கில் தன் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு விட்டாள்.

வேணுகோபாலன் ரோஜாவைக் கேட்டு பர்னாலை எடுத்து, விஜய் வேண்டாமென்று மறுத்த போதும், தானே அவன் கைகளில் மருந்தைத் தடவினார்.

ரோஜாவுக்கு எப்படியோ இருந்தது. இன்று காலையிலிருந்துதான் அவ்வளவு மகிழ்ச்சியாய் இருப்பானேன்? எல்லாவற்றையும்விட வேணுகோபாலன் அன்புடன் அளித்த புதுப்புடவை எரிந்து சாம்பலாகி விட்டது. மனதில் ஏதோ மூலையிலேயோ, அபசகுனமாய், நடக்கக் கூடாதது நடந்து விட்டது போல் வேதனையாய் இருந்தது.

இன்று, தான் ஆபத்திலிருந்து தப்பியதற்குக் காரணம் விஜய்தான் என்ற விஷயம் அடிக்கடி நினைவில் வந்து மோதியது. அவன் தன்னைப் பிடித்துக் கொண்டது, வேகமாய்ச் சுழற்றியது, அந்த ஸ்பரிசம், பயம் எல்லாம் சேர்ந்து, ரோஜாவின் மனதில் இனம் புரியாத உணர்வையும், பதட்டத்தையும் ஏற்படுத்தின.

"இன்று எவ்வளவு பெரிய ஆபத்து தப்பியது!" என்று வேணுகோபாலன் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

விஜய்க்கும் அப்படித்தான் தோன்றியது. ஆனால் லாவண்யாவுக்கு ரோஜா என்றால் அவ்வளவு பகை ஏன்? அந்தப் பொறாமைக்குக் காரணம் என்னவென்று எத்தனை யோசித்தாலும், அவனுக்குப் புரியவில்லை.

# 48

செந்தூ வேணுகோபாலனைச் சந்திப்பதாகச் சொன்னது அன்றைக்குத்தான்! காலையில் எழுந்ததிலிருந்தே ரோஜா ரொம்ப உத்வேகமாய் இருந்தாள். செந்தூரவும், அவரும் சந்தித்துக் கொள்ளும் காட்சியை இதுவரை ஆயிரம் தடவை மனதால் ரசித்துக் கொண்டு விட்டாள். வழக்கத்தைவிட சீக்கிரமாகவே கிளம்பிவிட்டாள்.

"செந்தூ... இன்று மாலை உங்களைச் சந்திப்பதாகச் சொன்னான்" என்ற போது, வேணுகோபாலனின் முகத்தில் திடீரென்று ஏற்பட்ட உணர்வுகளின் கொந்தளிப்பைக் கவனித்த ரோஜா வியப்படைந்தாள்.

செந்தூ வீட்டுக்கு வரப் போவதில்லை என்றும், பார்க்குக்கு வரப் போவதாகவும் ரோஜா சொன்ன போது, அவர் சந்தேகமாய்ப் பார்த்தார். நேராக வீட்டுக்கு வருவதில் என்ன ஆட்சேபணை என்று கேட்டார்.

ரோஜாவால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. "அவன் கொஞ்சம் ஒரு மாதிரி. தான் சொன்னதுதான் சரி என்று பிடிவாதம் பிடிப்பான்... நீங்க மாட்டேனென்றால், நான் பார்க்குக்குப் போய், அவனை இங்கேயே அழைச்சு கிட்டு வர்றேன்.." என்றாள்,

"வேண்டாம்— நாமே அங்கு போகலாம். அதுவும் சரி தான். இங்கே யாராவது வந்துகிட்டே இருப்பாங்க, அமைதியாகப் பேசிக்கொள்ள முடியாது" என்றார். ரோஜா தலை அசைத்துவிட்டு வெளியே வந்துவிட்டாள்.

லாவண்யா அன்று முழுவதும் அறையிலிருந்து வெளியே வரவில்லை. சாப்பிட அழைக்கப் போனாள் ரோஜா. பத்து நாட்கள் பட்டினிக் கிடந்தவள் போல் வாடிய முகத்துடன் கட்டிலில் படுத்திருந்த லாவண்யாவைப் பார்த்துத் திகைத்துப் போனாள்.



"ஏன்? என்னவாச்சு? உடம்பு சரியாய் இல்லையா?", என்று பதட்டத்துடன் அருகில் வந்தாள்.

லாவண்யா முகத்தைத் திரும்பிக் கொண்டாள். ரோஜாவைப் பார்க்க விருப்பமில்லாதவள் போல் அவர் பக்கம் பார்த்துக் கொண்டே, "நல்லாதான் இருக்கு. இரவு தூங்கவில்லை, எனக்குப் பசியில்லை. சாப்பாடு வேண்டாம்" என்றாள்.

ரோஜா வற்புறுத்தி லாவண்யாவைச் சாப்பிட வைத்தாள். ரோஜா காண்பித்துக் கொண்டிருந்த களங்கமில்லாத அன்புக்கு லாவண்யாவின் மனம் சற்று இளகியது. தவறு செய்து விட்ட உணர்வும், அதனால் ஏற்பட்ட பச்சாத்தாபமும், அவளை வெட்கமுறச் செய்தன.

பாவம், ரோஜாவும் தன்னைப் போன்றவள்தான்! தனக்கு ஒருவிதமான கஷ்டம் என்றால், அவளுக்கு வேறுவிதமான கஷ்டங்கள். தந்தைக்குப் புத்தி சரியில்லாவிட்டால், பாவம் ரோஜா என்ன செய்வாள்? வழக்கம் போல் ரோஜாவுடன் நட்பாய் இருக்க லாவண்யா முடிவு செய்தாள்.

மாலை ஆயிற்று. ரோஜா, வேணுகோபாலன், ராதை மூவரும் பார்க்குக்குக் கிளம்பினார்கள். லாவண்யா கிடுகிடுவென்று உடைகளை மாற்றிக் கொண்டு கீழே வந்தாள். "ரோஜா, எனக்கும் பொழுதே போகலை. நானும் உங்களுடன் வர்றேன்" என்றாள்.

"நீங்களா? எங்களுடனா?" சங்கடத்தில் ஆழ்ந்து விட்டவள் போல் பார்த்தாள் ரோஜா.

ரோஜாவின் கண்களில் தெரிந்த எண்ணத்தைப் புரிந்து கொண்ட லாவண்யா "ஏன் வரக்கூடாதா?"

"ஆஹா...! அப்படி ஒன்றும் இல்லை. ஆனால்... தயங்குபவள் போல் பாதியிலேயே நிறுத்திவிட்டாள். "இருங்க. உங்க அப்பாவைக் கேட்கிறேன்" என்று அவருடைய அறைக்குள் சென்றாள்.

"நாம் ரொம்ப நேரம் இருக்கமாட்டோம், சீக்கிரமாய் வந்து விடுவோம் என்று சொல்லு."

ரோஜா கேட்டதற்குப் பதில் தெரிவிப்பது போல் அவர் சொன்னது, வெளியில் நின்றிருந்த லாவண்யாவின் காதுகளில் தெளிவாய்க் கேட்டது. ரோஜா வெளியில் வந்து அவர் சொன்னதை அப்படியே சொன்னாள்.

காலையிலிருந்து லாவண்யா வலுக்கட்டாயமாய் வரவழைத்துக் கொண்ட நட்பு, சிநேகபாவம் அப்படியே காற்றில் பறந்துவிட்டது. ரோஜாவைப் பார்க்கும்போது இருமடங்கு வெறுப்பாய்த் தோன்றியது. "இஷ்டம் இல்லைன்னு நேராகவே சொல்லியிருக்கலாமே?" என்றாள்.

செருப்புப் போட்டுக்கொண்டு வெளியே வந்தார் வேணுகோபாலன்

"இஷ்டம் இல்லைன்னே வைத்துக் கொள். சரிதானா, ஒவ்வொரு சின்ன விஷயத்துக்கும் ரகளை செய்வது உனக்கு வழக்கமாகி விட்டது" என்றார்.

லாவண்யா கற்சிலையாய் நின்று விட்டாள்... ரோஜா, வேணுகோபாலன், ராதை, மூவரும் பார்க்குக்குச் சென்றார்கள்.

தந்தையின் பேச்சில் தென்பட்ட எரிச்சலை உணர்ந்த லாவண்யா, அவர் தன்னை அவமதித்து விட்டதாய் எண்ணினாள். அவள் மனம் சந்தேகத்தால் எரிமலையாய்க் கொதித்துக் கொண்டிருந்தது. கன்றி விட்ட முகத்துடன், சிவந்துபோன கண்களுடன், துவேஷத்தால் உடல் முழுவதும் பற்றி எரிவது போல் தோன்ற, எத்தனை நாழி அப்படி நின்று விட்டாளோ அவளுக்கே தெரியவில்லை.

இதற்குள் "ஹலோ" என்ற அழைப்புக் கேட்டது... லாவண்யா திரும்பிப் பார்த்தாள்... விஜய் உள்ளே வந்தான்.

"என்ன அப்படித் தனியா நின்னுக்கிட்டு இருக்கே... அப்பா எங்கே?" என்று கேட்டான்.



"இல்லை."

"இல்லையா? எங்கே போனார்?"

"பார்க்குக்கு ரோஜாவும், அவரும் சேர்ந்து சென்றார்கள்" என்று கவனமாய் அவன் முகத்தைப் பரிசீலித்துக் கொண்டே சொன்னாள்.

லாவண்யாவின் ஊகம் சரிதான். சில விஷயங்கள் எவ்வளவு தெளிவாய்ப் புரிந்து விடுகின்றன! ரோஜா இல்லை என்றதும் விஜயின் முகத்தில் தெரிந்த ஏமாற்றம், லாவண்யாவின் பார்வையிலிருந்து தப்பவில்லை.

"சரி! நான் வர்றேன்." வந்த வேலை வாசலிலேயே முடிந்து விட்டது போல் சொன்னான் விஜய்.

"ஏன்? உனக்குக் கூட நான் வேண்டாதவளாகி விட்டேனா?" என்ற லாவண்யா எக்காளத்துடன், துடுக்காய்க் கேட்டாள்.

போகப் போன விஜய் சட்டென்று திரும்பினான். ஒரு நிமிடம் லாவண்யாவை கண் இமைக்காமல் பார்த்தவன், "ஏன்? எப்படியோ இருக்கியே? என்ன நடந்தது?"

விஜய் கண்களில் தென்பட்ட பரிவுக்கும், குரலில் தொனித்த நெருக்கத்துக்கும் கரைந்து போய் விட்ட லாவண்யா, அவனருகில் ஓடிச் சென்று, அவன் கழுத்தைச் சுற்றி கைகளைப் பிணைத்து, தலையை நெஞ்சில் சாய்த்து, ஓவென்று கதறி விட்டாள். எதிர்பாராத இந்த நிகழ்ச்சியில் விஜய் திக்பிரமை அடைந்து விட்டான்

"இரு... என்ன லாவண்யா? என்னவாச்சு?"

லாவண்யாவை மெதுவாய்த் தன்னிடமிருந்து விடுவிக்க முயன்றுகொண்டே பரிவுடன் கேட்டான். லாவண்யா அவனை விடவில்லை. அவன் தோளில் சாய்ந்து கொண்டே, அழுகையினூடே ரோஜாவுக்கு ஏற்பட்ட கெட்ட எண்ணத்தைப் பற்றிச் சொல்லி விட்டாள். விஜயின் முகம், சிவந்து போயிற்று.

"சீ... சீ... என்ன பேசுகிறாயோ உனக்குத் தெரியுமா? அப்பாவைப் பற்றியா இப்படிப் பேசுகிறாய்?" என்றாள் அதட்டிக் கொண்டே.

"உனக்குத் தெரியாது. அப்பாவாய் இருந்தால் என்ன? அவரும் ஒரு மனிதர் தானே? பார்த்துகிட்டே இரு. ஒரு நாள் உன் கண்ணாலேயே பார்க்கப் போகிறாய். இது போன்ற விஷயங்கள், ஆண்களைவிட பெண்களுக்குச் சட்டுன்னு தெரிந்துவிடும்" என்றாள்.

"ரோஜா அப்படிக் கீழ்த்தரமான வேலையைச் செய்வாள் என்றால் நான் நம்பமாட்டேன்."

"பிரச்னையே அதுதான்! நல்லதனமாய் இருந்து கொண்டே, எல்லோருடைய கண்களையும் கட்டிப் போட்டு விட்டாள். ரொம்ப புத்திசாலி! நீயே யோசித்துப் பாரு... என் இடத்தில் யார் இருந்தாலும் அவளை வெறுக்கத்தான் செய்வார்கள்."

விஜய்... லாவண்யா ரொம்ப பேசிக் கொண்டார்கள், லாவண்யா எவ்வளவு அழுத்திச் சொன்னாலும், விஜயால் நம்பமுடியவில்லை.

நேற்று இரவு அவன் எண்ணங்கள் முழுவதும் ரோஜாவைச் சுற்றியே பிணைந்து இருந்தன. காலையில் எழுந்ததிலிருந்து ரோஜாவைப் பார்க்க மனம் தவித்துக்கொண்டிருந்தது. காலையில் வேலை பளுவில் முடியவில்லை. கோர்ட்டிலிருந்து வந்ததும், கிளப்பில் முக்கியமான மீட்டிங் இருந்த போதும், அதற்குப் போகாமல் நேராக இங்கே வந்து விட்டான். வேணுகோபாலன், ரோஜாவுக்குமிடையே இருக்கும் நெருக்கத்தைப் பற்றி லாவண்யா சொன்ன விஷயம், அவனை ஒரு நிமிடம் ஊமையாக்கிவிட்டது.

இப்படி இருக்காது என்று உள்மனம் ஒருபக்கம் அடித்துச் சொன்ன போதும், இன்னொரு பக்கம் ஏதோ தயக்கம் அவனைப் பின்னால்} இழுத்தது. நேற்று மாலை நடந்த நிகழ்ச்சியால் ரோஜாவிடம் தனக்கு இருந்த தயக்கங்களை எல்லாம் உதறிவிட்டு, மனதில் எழும்பிய அன்பு ஊற்றானது,



லாவண்யா சொன்ன விஷயத்தைக் கேட்டதும், அப்படியே அடங்கிப் போய் விட்டது.

## 49

ரோஜா, வேணுகோபாலன் பார்க்கில் பெஞ்சில் அமர்ந்து கொண்டார்கள். சந்திரனின் குணங்களைப் பற்றி, சிறு வயதில் அவனுடைய மென்மையான சுபாவத்தைப் பற்றி ரோஜா சொல்லிக் கொண்டிருந்தாள்.

ரோஜா சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அவர் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார். செவிகள் ரோஜா சொல்லும் விஷயத்தைக் கேட்டுகிட்டு இருந்தாலும் கண்கள் மட்டும் பார்க்குக்கு வந்து கொண்டிருந்த நபர்களையே பார்த்துக் கொண்டிருந்தன அவர் இதயம் முழுவதும் உத்வேகத்தால் நிரம்பியிருந்தது.

பார்க்குக்கு அவர்கள் வந்து அரைமணி ஆனது. ஒரு மணி, இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. ஆனால் செந்தா வரவில்லை. இனி வருவான் என்ற நம்பிக்கையும் போய்க் கொண்டிருந்தது. ரோஜா பொறுமையை இழந்தாள். சாதாரணமாய்ச் செந்தா சொன்ன சொல்லைத் தவற மாட்டான்.

"அவனால் வர முடியாமல் போயிருக்கும்" என்றார் வேணுகோபாலன், உற்சாகம் குன்றியவராய்

ராதை ரோஜாவின் மடியில் தூங்கி விட்டாள். நன்றாக இருட்டி விட்டதால் பார்க்கில் மக்களின் நடமாட்டமும் குறைந்து விட்டது.

"நீ அவனை எப்போ பார்த்தாய்? அவன் வருவதாக சொன்ன இடம் இதுதானா?" என்று கேட்டார்.

"இங்கே வருவதாகத்தான் சொன்னான்... உங்களிடம் நான் இதுவரை சொன்னதில்லை செந்தூர் எங்களுடன் சேர்ந்து இருப்பதில்லை. மாமிக்கும், அவனுக்கும் ஆகாமல் போய் விட்டது" என்று மென்மையான குரலில் சொன்னாள் ரோஜா.

"என்ன?" வேணுகோபாலன் பதட்டத்துடன், புது விஷயம் கேட்பது போல் வியப்புடன் பார்த்தார்.

ரோஜா, செந்தூரின் பள்ளி இறுதி படிப்புக்குப் பிறகு மேலே படிக்க வைக்க முடியாதது, மாமியின் தொல்லை தாங்காமல் அவன் போக்கே மாறி விட்டன. அது பற்றிதான் படும் கவலை, பயம் எல்லாவற்றையும் சுருக்கமாய்ச் சொல்லி விட்டாள்.

"பெரியவரான உங்க உதவியால் அவனை மறுபடியும் நல்ல வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்பது என் எண்ணம். சமீபத்தில் எனக்கு இதே தியானமாய் போயிற்று. பெற்றோரின் கண்டிப்பு இல்லாத குழந்தைகள் கெட்ட வழிகளில் போய்விட வாய்ப்புகள் அதிகம். அவர்களைப் பற்றி யாராவது கொஞ்சம் கவனம் எடுத்துக் கொண்டால், நல்ல வழியில் திரும்பி விடுவார்கள் நீங்க சிரமம் என்று நினைக்காமல் எப்படியாவது எனக்கு இந்த உதவி செய்யணும்" என்றாள்.

வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்த வேணுகோபாலன் ரோஜா சொன்னதைக் கேட்டு பெருமூச்சு விட்டார். இத்தனை நாள் செந்தூர் தன் கண்ணில் ஏன் படவில்லை என்றும், செந்தூரைப் பற்றி ரோஜா சொல்லும் விஷயங்கள் சிலசமயம் முரண்பாடாய் இருந்தது ஏன் என்றும் அவருக்கு இப்பொழுது புரிந்தது. ஆனால் இது என்ன வேடிக்கை? ரோஜா, செந்தூர் இருவரும் ஒரே சூழ்நிலையில் ஒரே மாதிரி வளர்ந்தார்கள் செந்தூர் பாதை மாறிப் போனது இயற்கை தான். ஆனால் ரோஜாவிடம் இந்த ஒழுக்கம், பண்பு எப்படி வந்தது?



இரவு எட்டுமணியான பிறகு, செந்தூர் இனி வர மாட்டான் என்று உறுதியான பிறகு, கிளம்பி வீட்டுக்கு வந்துவிட்டார்கள். ரோஜாவுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து இத்தனை ஏமாற்றம் என்றும் அடைந்ததில்லை. செந்தூரால் உண்மையிலேயே வர முடியவில்லையா? இல்லாவிட்டால்... ஏதாவது நடந்து... நினைத்துக் கொள்ளும் போதே, உடல் நடுங்கியது ரோஜாவுக்கு.

செந்தூர் திருட்டுத் தொழிலில் ஈடுபட்டு விட்டானென்றும், அவன் பெயர் போலீஸ் லிஸ்டில் இருப்பதாக வேணுகோபாலனிடம் சொல்ல நினைத்தாலும், அவளால் சொல்ல முடியவில்லை. கெட்ட சகவாசத்தில் சீரழிந்து விட்டான் என்றும், போகக் கூடாத வழியில் போய்க் கொண்டிருப்பதாகச் சொன்னாளே தவிர அந்த வழி என்னவென்று மட்டும் சொல்லவில்லை.

வேணுகோபாலன் வீட்டுக்கு வந்த பிறகு இரவு உணவை முடித்துக் கொண்டார். ரோஜா, அவரிடம் "உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துவிட்டேன். அவன் வரமாட்டான்னு நினைக்கவேயில்லை" என்று கம்மிவிட்ட குரலில் சொன்னாள்.

"பரவாயில்லை. ஏன் வரவில்லை என்று விசாரித்துக் கொள். வருவதாகச் சொன்னால், நேராக நம் வீட்டுக்கே அழைச்சுகிட்டு வந்துவிடு" என்றார்.

ரோஜா வீட்டுக்குப் போகும் முன் மாடியில் லாவண்யாவின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, அங்கே போனாள். லாவண்யா சிலசமயம் புத்தகம் படித்துக் கொண்டே, விளக்கை அணைக்காமல், கொசுவலையை இழுத்து விடாமல் அப்படியே தூங்கி விடுவாள். ரோஜா அதைக் கவனித்தால், விளக்கை அணைத்து விட்டு, கொசுவலையைச் சரிசெய்துவிட்டு வருவாள். இன்று மாலை பார்க்குக்குக் கிளம்பும் போது, லாவண்யாவும் வருவதாகச் சொன்னது, வேணுகோபாலன் வேண்டாமென்று மறுத்ததும் ரோஜாவின் நினைவுக்கு வந்தது.

லாவண்யா விழித்திருந்தால் நட்பாக இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போகலாமென்று மாடிக்குப் போனாள்.

லாவண்யா விழித்துக் கொண்டுதான் இருந்தாள். ரோஜா அறைக்குள் எட்டிப் பார்த்ததும்,

"என்ன வேணும்?" என்று கேட்டாள் லாவண்யா.

"ஒன்றுமில்லை, சும்மா பார்த்துவிட்டுப் போகலா மென்று வந்தேன்."

"குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டு வந்து கொடு" என்றாள் லாவண்யா.

ரோஜா கீழே போய்த் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

"தூக்கம் வருகிறது. லைட்டை அணைத்து விடு" கழுத்திலிருந்த நெக்லெஸைக் கழட்டி மேஜைமீது வைத்துக் கொண்டே சொன்னாள்.

"அங்கே எதுக்கு? எழுந்து பீரோவில் வைத்து விட லாமே?" என்றாள் ரோஜா. விலை உயர்ந்த பொருட்களை கண்ட இடத்தில் வைப்பது அவளுக்குப் பிடிக்காது.

"பரவாயில்லை" லாவண்யா ஒருக்களித்துப் படுத்துக் கொண்டே சொன்னாள்.

ரோஜா லைட்டை அணைத்துவிட்டு, கதவை வெறுமே சாத்திவிட்டுக் கீழே வந்து விட்டாள்.

ரோஜா வீட்டுக்கு வரும் போது, செந்தூவின் நினைவே மறுபடியும், மறுபடியும் வந்தது. அவன் ஏன் வரவில்லை. வர இயலவில்லையா? இல்லாவிட்டால் ஏதேனும்...தம்பியின் நலனைப் பற்றிய கவலையுடனே வீட்டில் காலடி வைத் தாள்.

சுந்தரி வாசலிலேயே எதிரே வந்தாள். "என்ன இன்னிக்கு இவ்வளவு நேரமாகி விட்டதே?" என்று கேட்டாள்.

"கொஞ்சம் வேலையிலிருந்ததால் நாழியாகி விட்டது. என்ன விஷயம் மாமி..."



"யாரோ சின்னப் பையன் உனக்காக இரண்டு தடவை வந்துவிட்டுப் போனான். இரண்டாவது தடவை வந்த போது, நீ வரவில்லை என்று சொன்னதும், இதோ இந்தக் கவரை கொடுத்துவிட்டுப் போனான்..." என்று எரவாணத் தில் சொருகியிருந்த கவரை எடுத்துக் கொடுத்தாள்.

கவர் பிரிக்கப்பட்டிருந்தது. மாமிதான் பிரித்துப் பார்த்து இருக்க வேண்டும்! கடிதம் ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருந்தது. செந்தூதான் எழுதியிருந்தான். படபடக்கும் மனதை கட்டுப்படுத்திக்கொண்டே, கடிதத்தைப் படித்தாள்.

ரோஜா...

நான் பார்க்குக்கு வந்தேன்; உங்களைப் பார்த் தேன். உன்னுடன் என்னைச் சந்திக்கக் காத்திருந்த நபரைப் பார்த்ததும், எனக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. நீ இத்தனை நாளாக எனக்கு அறிமுகப்படுத்த துடிதுடித்துக் கொண்டிருக்கும் அந்த நபர் யார் தெரியுமா? அன்று ரயில் நிலையத் தில் என்னைப் போலீசுக்குப் பிடித்துக் கொடுத்த பெரியவர்தான்! இவரிடம்தான் நீ வேலை பார்த்து வருகிறாய் என்று கனவிலும் நான் நினைத்திருக்க வில்லை ரோஜா! உடனடியாக நீ அவர் வீட்டில் வேலை செய்வதை நிறுத்திவிடு நான் ஒரு வேலை யாய் பெங்களூருக்குப் போகிறேன் நான் வரவில் லையே என்று கவலைப்படுவாயே என்றுதான கடிதம் எழுதுகிறேன். ரோஜா! இதுவரை நான் எதுக்காக வும் உன்னை வற்புறுத்தியது இல்லை இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நான் சொல்வதை நீ கேட்க வேண்டும் என்று வேண்டுகிறேன். நீ உடனே அந்த வேலையை விட்டுவிடு... என்மீது ஆணை.

அடுத்த வெள்ளிக்கிழமை இந்த நம்பருக்குப் போன் செய்து ஜேம்ஸ் என்று கேட்கவும். 'செந்தூ' என்று கேட்க வேண்டாம்.

இப்படிக்கு உன்,
செந்தூ

பின் குறிப்பு :— எங்கள் விதிகளுக்கு எதிராய் நிறைய தடவை உன்னைச் சந்தித்து விட்டேன். எனக்கு மேலிடத்திலிருந்து வார்னிங் வந்துவிட்டது. ரொம்ப தேவைப்பட்டால் ஒழிய போன் செய்ய வேண்டாம்; நான் எங்கு இருந்தாலும் நலமாய்த் தான் இருப்பேன்; என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

கடிதத்தைப் படித்து முடித்ததும், ரோஜாவின் உடல் நடுங்கியது; உள்ளங்கைகளில் வியர்த்தது... வேணுகோபால னிடமா செந்தூ நகையைத் திருடினான்? ரோஜாவுக்கு உலகமே தட்டாமாலை சுற்றுவது போலிருந்தது.

"தட்டு வச்சிருக்கேன், சாப்பிட வா ரோஜா. கடிதாசு எழுதியது யாரு?" உள்ளே இருந்து குரல் கொடுத்தாள் சுந்தரி.

"எனக்குப் பசிக்கவில்லை மாமி. நீங்க சாப்பிடுங்க" என்றாள். அன்று இரவு முழுவதும் யோசித்த ரோஜா, கடைசியாய் ஒரு முடிவுக்கு வந்தாள்.

வேணுகோபாலன் நல்ல இதயம் படைத்தவர். அவரிடம் விஷயத்தை உள்ளது உள்ளபடி சொன்னால், கட்டாயம் புரிந்து கொள்வார். அவர் மூலமாய் செந்தூரவைக் காப் பாற்றிக் கொள்ள முடியாவிட்டால், இனி ஒருநாளும் அவனைக் காப்பாற்ற முடியாது. நாளைக்கு அவரிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு, முடிவை அவரிடம் விட்டு விடுவோம்; என்ன செய்ய வேண்டுமென்று அவரே சொல்லு வார். ரோஜா தைரியத்தையும், நம்பிக்கையையும் திரட்டிக் கொண்டாள்.

## 50

இரவு முழுவதும் உறங்காமல் ஏற்பட்ட களைப்பு கண்களில் தெரிய, ஏமாற்றமடைந்த மனதுடன், வழக் கத்தைவிட நேரம் கழித்து, வேணுகோபாலன் வீட்டுக்குப்



போனாள் ரோஜா. அவள் உள்ளே காலடி எடுத்துவைக்கும் போது, லாவண்யா, வேணுகோபாலன், விஜய், வேலைக் காரர்கள் எல்லோரும் வாசலில் நின்றிருந்தார்கள்.

இத்தனை காலையில், அவரவர்கள் வேலையை விட்டு விட்டு, அங்கே எதுக்காக அப்படி நின்றிருந்தார்களோ? ரோஜாவுக்கு முதலில் புரியாவிட்டாலும், நடக்கக் கூடாதது ஏதோ நடந்து இருப்பதாக உடனே தோன்றியது

உள்ளே வந்த ரோஜாவைப் பார்த்ததும் லாவண்யா ஏகத்தாளமாய் பழிப்பதுபோல் சொன்னாள். "இதோ வந்துவிட்டாளே... நீங்களே கேளுங்க நம் அஞ்ஞானம் தானே தவிர, எடுத்தவங்க தாம்தான் எடுத்ததாக ஒப்புக்கு வாங்களா?"

ரோஜா புரியாதவள் போல் வேணுகோபாலன் பக்கம் பார்த்தாள். கோபத்தை, எரிச்சலை வலு கட்டாயமாய் விழுங்கிக் கொண்டிருப்பதுபோல் அவர் முகம் தென்பட்டது.

ரோஜா பதட்டத்துடன் அவரிடம் சென்றாள். "என்னது... என்ன நடந்தது?"

அவர் தலையை உயர்த்தி ரோஜா பக்கம் பார்த்தார். அந்தப் பார்வையில் காணப்பட்ட வேதனையைக் கவனித்த அவள் திடுக்கிட்டாள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து எதுக் காகவோ, அவரை வற்புறுத்துகிறார்கள் என்று தோன் றியது.

அவருக்குச் சற்று தூரத்தில் நின்றிருந்த விஜய், கண் இமைக்காமல் ரோஜாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன பேச்சையே காணும்? வந்ததுமே கேட்பதாகச் சொன்னீங்களே?" என்று லாவண்யா இரட்டிப்பது போல் கேட்டாள்.

"என்ன லாவண்யா? என்ன விஷயம்?" ரோஜா பயந்து கொண்டே லாவண்யா பக்கம் திரும்பினாள்.

"என்னவா... நேற்று இரவு நான் படுத்த பிறகு, என் அறைக்கு நீ வந்தாயா இல்லையா?"

"வந்தேன்."

"மேஜைமீது நான் நெக்லஸ் வைத்ததைப் பார்த்தாயா இல்லையா?"

"பார்த்தேன்..."

"உனக்கப்புறம் யாரும் என் அறைக்கு வரவில்லை. காலையில் நான் எழுந்து பார்க்கும்போது நெக்லஸ் இல்லை. எங்கே போச்சு?"

ரோஜா கல்லாய்ச் சமைந்து விட்டாள். "லாவண்யா, எனக்கு... எனக்குத் தெரியாது. உண்மையைச் சொல்கிறேன்.." தடுமாறிக்கொண்டே சொன்னாள்.

"நீ அப்படிச் சொல்வாயென்று எனக்கு முன்னாடியே தெரியும். அதான் டிரைவர் வந்ததும், உங்க வீட்டுக்குச் சென்று தேடுவோம் என்றால், அவர் கூடவே கூடாது என்று வாசலுக்குக் குறுக்கே நின்று விட்டார். உனக்கு வருத்தம் ஏற்படும் என்று தயங்குகிறாரோ என்னவோ?"

"லாவண்யா!" என்று வேணுகோபாலன் அதட்டுவது போல் கத்தினார்.

லாவண்யா அலட்சியமாய்ச் சொன்னாள், "உங்க கூச்சலுக்கு நான் ஒன்றும் பயப்பட மாட்டேன். இந்த வீட்டுக் கௌரவம் என்றோ வீதிக்கு வந்துவிட்டது. இன்னிக்குப் புதுசா எதையும் இழக்கப் போவதில்லை. இந்த மகாராணி நம் வீட்டில் சேர்ந்து போடுகிற நாடகம் எல்லோருக்கும் தெரியும்."

"நீ வாயை மூடப் போகிறாயா இல்லையா?" வேணு கோபால் மகளை நோக்கி வேகமாய் நகர்ந்தார்.

"மூட மாட்டேன்! இந்த விஷயத்தை நெஞ்சிலேயே வைத்துக்கொண்டு நான் படும் வேதனை போதும். உண்மையைச் சொல்லுங்க, வேலைக்காரியாய் வந்தவளுக்கு இந்த வீட்டில் இவ்வளவு உரிமை எதுக்கு இருக்கணும்? நீங்க கொடுத்த சலுகைதானே! இன்று நகை தொலைந்துவிட்டது. நாளைக்கு வேறு ஒன்று போகும், எது வரையில் வாயை



மூடிக்கொண்டு இருக்கணும்? அது போகட்டும்...ஒரு விஷயம் சொல்லுங்க... நடந்தது நடந்து விட்டது போன பொருள் கைக்கு வராது என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொள்வோம் ஆனால் இந்த ரோஜாவைக் கழுத்தைப் பிடித்து உடனே வீட்டைவிட்டு வெளியேற்றுங்க! மாட்டேன்னு சொன்னால், நான் இப்பவே போலீசுக்குப் போன் செய்வேன். எத்தனை நாட்களுக்கு இந்த நாடகத்தைப் பார்த்துகிட்டு சும்மா இருப்பது? இனி என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது."

"வாயை மூடு" வேணுகோபாலனின் கைகாற்றில் எழும்பி, வேகமாய் லாவண்யாவின் கன்னத்தைத் தாக்கியது.

எதிர்பாராமல் நடந்து விட்ட இந்த நிகழ்ச்சிக்கு ஒரு கணம் எல்லோரும் கற்சிலையாகி விட்டார்கள்.

இத்தனைபேருக்கு நடுவில் தந்தை தன்னை இப்படி அவமானப்படுத்துவார் என்று கனவில்கூட எதிர்பார்த்திராத லாவண்யா, அடிபட்ட கன்னத்தைக் கையால் தாங்கிக் கொண்டு, பார்வையாலேயே தந்தையை எரித்துவிடும் அளவுக்குத் தீவிரமாய்ப் பார்த்துக்கொண்டு அப்படியே நின்று விட்டாள்.

இதற்குள் டாக்ஸி ஒன்று வேகமாய் வந்து போர்டிகோவில் நின்றது. வந்தது யாரென்று பார்க்க டிரைவர் ராமு வெளியே சென்றான்.

"ஐயா... பூனாவிலிருந்து மிஸ் ஜோஷியும், இன்னும் பெரியவங்க இரண்டு பேர் வந்திருக்காங்க" என்று ராமு சொன்னதும், லாவண்யா சட்டென்று திரும்பி வேகமாய்ப் படியேறி தன் அறைக்குச் சென்று விட்டாள்.

தர்மசங்கடமாய் உணர்ந்த வேணுகோபாலன் தன் அறைக்குள் சென்று விட்டார். வேலைக்காரர்களும் தம் வேலைகளுக்குத் திரும்பி விட்டார்கள் ஹால் நடுவில் பதுமையாய் நின்று விட்டாள் ரோஜா! விஜய் வாசல்

பக்கம் போகப் போனவன், திரும்பி ரோஜாவைப் பார்த்து, "உள்ளே போ" என்று மென்மையான குரலில் சொன்னான்.

ஒரு கணம் இருவரின் கண்களும் சந்தித்துக் கொண்டன. விஜயின் பார்வை ஆதரவு தருவது போல், சிநேக பூர்வமாய் இருந்தது. ஏனோ தெரியவில்லை, ரோஜாவுக்குத் துக்கம் பொங்கி வந்தது இதற்குள் வாசற் கதவு அருகில் "ஹலோ விஜய்!" என்று மிஸ் ஜோஸஃபின் குரல் கிரீச் என்று ஒலித்தது.

"ஹலோ" விஜய் வாசற்பக்கம் திரும்பி, அவர்களை வரவேற்றான்.

அங்கே நிற்க விரும்பாத ரோஜா, வேறு வழியில்லாமல், வேணுகோபாலனின் அறைக்குள் நகர்ந்தாள். உள்ளே வேணுகோபாலன் ஆயாசமாய் உட்கார்ந்து இருந்தார். ரோஜா அவர் அருகில் சென்றாள்.

"நான்... நான்... நீங்க..." தெளிவில்லாமல் சொன்ன ரோஜாவுக்கு அதற்கு மேல் பேச வார்த்தை வெளிவரவில்லை.

"ரோஜா" அவர் சட்டென்று ரோஜாவின் கையைப் பற்றித் தன்னருகில் இழுத்து, அவளுடைய தலையைத் தன் மார்பில் பதித்துக் கொண்டார்.

"ரோஜா... என் கண்ணம்மா... வலிமையற்ற எனக்கு, இந்த நேரத்தில் நீதான் துணையாய் இருக்கணும். இதை விட வேறு எதுவும் என்னால் சொல்ல முடியவில்லை. இந்த வீட்டில் நீ இருப்பது லாவண்யாவுக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்! இதை ஒன்றும் நீ மனதில் வைத்துக் கொள்ளாதே! உனக்குக் கஷ்டமாக இருந்தாலும், உன் தந்தையைப் போன்ற என்னை? நான் உன் தந்தையேதான்..."

அந்த ஸ்பரிசத்தில் ஏதோ நெருக்கம், அந்த நெருக்கத்தில் ஏதோ வேதனையை ரோஜாவால் தெளிவாக உணர முடிந்தது.



ரோஜாவின் இதயத்திலிருந்த பாரம் நீங்கிவிட்டது போல் இருந்தது லாவண்யா தன்மீது சுமத்திய திருட்டை அவர் நம்பவில்லை என்பதில் நிம்மதி ஏற்பட்டது. ஆனால் அந்த நிம்மதி ரொம்ப நேரம் நீடிக்கவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப்பிறகு, செந்தூரின் விஷயம் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. திருட்டுப் பட்டம் சுமத்தப்பட்டவள் தான் குற்றவாளி இல்லையென்று ஒரு பக்கம் மறுத்துக் கொண்டே, மறுபக்கம் தன் தம்பி திருடன் என்று எப்படிச் சொல்வது? செந்தூரை மீட்கும் வழி முழுவதுமாக அடைப்பட்டுப் போனதாக அவளுக்குத் தோன்றியது,

## 51

செந்தூர் வேணுகோபாலனைச் சந்திப்பது நடவாத காரியம் என்று தெரிந்ததும் ரோஜா அப்படியே இடிந்து போய் விட்டாள்... எத்தனையோ ஆசையாய், நம்பிக்கையால் செந்தூரின் எதிர்காலத்தைப் பற்றி யோசித்தது எல்லாம் திடீரென்று கனவு மாளிகையாய் மாறிவிட்டதை நினைக்கும் போது, அவளுக்கு ரொம்ப ஏமாற்றமாய், வருத்தமாய் இருந்தது.

செந்தூர் விஷயத்தில் எந்த ஆசையும் இல்லாத போது, நாலு பேர் சொல்லும் விதமாய், தாயை வேதனைப்படுத்திக் கொண்டு, இந்த வேலைக்கு வருவது அனாவசியமாய்த் தோன்றியது. ஆனால் இந்த நிலைமையில் உடனே வேலையை விட்டு விடுவது முடியாது. முதலாவது காரணம், ஒவ்வொரு விஷயத்துக்கும் வேணுகோபாலன் ரோஜாவைச் சார்ந்து இருந்தார். அவள் இல்லாமல் அவரால் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது என்பது போல் நடந்து கொள்கிறார்.

உடல் நலம் குன்றியிருந்த அவர், இப்போ மன அமைதியும் இருந்ததால் அப்படி நடந்து கொள்வதில் ஆச்சரியமேதும் இல்லை. இரண்டாவது... இப்போ தான் திடீரென்று நின்று விட்டால், நகை விஷயத்தில் லாவண்யா சுமத்திய குற்றம் உண்மைதான் என்று மற்றவர்கள் நம்பிவிடும் ஆபத்தும் இருக்கிறது. அதோடு வீட்டில் மாமிக்கு என்ன பதில் சொல்லுவது?

தான் இந்த வேலையை விட்டு விடுவது என்பது, யாருக்கும் எந்த சந்தேகம் வராதவாறு, ரொம்ப சகஜமாய் இருக்கணும். அதுவரை விருப்பம் இருந்தாலும், இல்லா விட்டாலும் இந்த வீட்டுக்கு வரத்தான் வேண்டும். தன் துரதிருஷ்டம் இல்லாவிட்டால், இவ்வுலகில் இத்தனை பேர் இருக்கும் போது, செந்தூ திருடிய நபர் வேணுகோபால னாய்தான் இருக்க வேண்டுமா? ரோஜா உதட்டை இறுகிக் கொண்டு, தன் உணர்ச்சிகளை அரும்பாடுப்பட்டு கட்டுப் படுத்திக் கொண்டு, ஒன்றுமே, நடவாதது போல் சகஜமாய் இருக்க முயன்றுகொண்டிருந்தாள். ஆனால் மனதுள்ளில் அவள் படும் வலை வேதனையானது, அடிக்கடி பதுமை யாய் நின்றுவிடுவதில், சூனியத்தை வெறிப்பது போன்ற அந்தப் பார்வையில், அவளறியாமல் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

ரோஜாவிடம் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்த முதல் நபர் விஜய்தான். வெளிறிப் போய் விட்ட முகத்துடன், வேதனை நிறைந்த கண்களுடன், வேறேதோ நினைவு களில் மூழ்கி, சுயஉணர்வே இல்லாதவள் போல் நின்று விட்ட ரோஜாவை ஓரிருமுறை அவன் கவனித்திருந்தான். ரோஜாவிடம் திடீரென்று ஏற்பட்ட இந்த மாறுதலுக்குக் காரணம், அன்று நகைக்காக லாவண்யா செய்த ரகளை தான் என்று எண்ணி விட்டான்.

அது மட்டும் உண்மையானால் எவ்வளவு நரகம்? தன் மானத்தை உயிரை விட அதிகமாய் மதிக்கும் மனிதர்கள், அதைக் கொன்றுவிட்டு வாழ வேண்டிய நிலைமை வந்தால்,



அதை விட கொடுமை வேறு இருக்க முடியாது... விஜய் மனதில் ரோஜாவின்பால் இரக்கம் ஏற்பட்டது. மெள்ள மெள்ளமாய் அவனுடைய இதயம் முழுவதும் ரோஜா நிறைந்து விட்டாள். ரோஜாவை, யாருமே இல்லாதது போல், இப்படித் தனிமையில் விட்டது, அவனுக்கு வேதனை அளித்தது.

எத்தனையோ முறை தயக்கத்தை விடுத்து "நடந்தது நடந்து விட்டது. நமக்கு நடந்த திருமணத்தை ஏற்றுக் கொண்டு, என் மனைவியாய் என் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டு, உன் வேதனையைத் தீர்க்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துவிடு. நான் துணையாய் இருக்கும் போது, எந்தத் துன்பமும் உன்னைத் தீண்டாது" என்று அவளிடம் நயமாகச் சொல்லி, சம்மதிக்கச் செய்ய அவன் மனம் தவித்தது. ஆனால் தான் இந்தப் பக்கம் வந்தால், அந்தப் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விடும் ரோஜாவிடம் தன் இதயத் துடிப்பை வெளிப்படுத்தும் வாய்ப்பே அவனுக்குக் கிடைக்கவில்லை.

வேணுகோபாலனிடம், "ரோஜா என்னவோ போல் இருக்கிறாளே? உடல் நலம் சரியாய் இல்லையா? என்ன வாச்சு?" என்று கேட்க எண்ணியிருந்தவன், தயக்கம் குறுக்கே நிற்க, நின்று விட்டான்.

ரோஜாவுக்கு தனக்குமிடையே நடந்ததை, வேணு கோபாலனிடம் சொல்லிவிட வேண்டுமென்றும், அவர் மூல மாய் ரோஜா தன்னைக் கணவனாய் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டுமென்றும், நிறைய தடவை அவனுக்குத் தோன்றியது. ரோஜாவுக்குத் தன்னிடம் அன்பு இல்லா விட்டாலும் பரவாயில்லை. வெறுப்பு மட்டும் இல்லாமல் இருந்தால் போதும். திருமணம் ஆனபின், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, வாழ்க்கை முழுவதும் சந்தோஷமாய் இருக்கும் கணவன் மனைவி எத்தனை பேர் இருக்கிறார்கள்?

ஆனால் அவரிடம் வெளிப்படுத்திய பிறகு ரோஜா ஒப்புக் கொள்ளா விட்டால்? அந்தத் திருமணம் தன் விருப்ப

மில்லாமல் நடந்தது என்றும், அதை தான் ஏற்கப் போவது இல்லையென்றும் சொல்லி விட்டால்? அதைவிட அவமானம் வேறு கிடையாது. இந்தத் தயக்கம்தான் விஜய் மனதில் எழும்பிய எண்ணத்தைத் தடுத்து விட்டது. ஆனால் தன் மனதில் இருக்கும் இந்த எண்ணங்களை ரோஜாவால் புரிந்து கொள்ள முடிந்தால்...?

ஒரு நண்பனாகவாவது அவளுக்கு தான் உதவி செய்ய முடிந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? அப்படி நடக்க வாய்ப்பே இல்லை என்று தெரிந்த பிறகும் அவன் மனம் அதையே விரும்பியது.

மிஸ் ஜோஷியும் அவளுடைய பெற்றோரும் வந்ததில், வீட்டில் தற்காலிகமாய், செயற்கையான அமைதி நிலவியது. லாவண்யா ஒன்றுமே நடவாதது போல், சகஜமாக இருக்க முயன்று கொண்டிருந்தாள். ஆனால் கவனித்துப் பார்த்தால் அது வெறும் நடிப்பு என்று சுலபமாய்த் தெரிந்துபோய் விடும்.

மிஸ் ஜோஷி விஜயிடம் தனக்கேற்பட்ட அபிமானத்தை ஆர்ப்பாட்டமாய் வெளிப்படுத்தத் துவங்கினாள். விஜய் மனதில் என்ன எண்ணம் இருந்ததோ, அந்தக் கடவுளுக்குத் தான் தெரியவேண்டும். அந்தப் பெண் எடுத்துக் கொள்ளும் உரிமையைக் கண்டு எரிச்சல் அடையாமல், சிரித்துக் கொண்டு, கலகலப்பாய்தான் இருந்தான்.

ஆனால் நடுநடுவில் திடீரென்று அவன் பார்வை மின்னல் போல் ரோஜாவின் முகத்தைக் கவனமாய்ப் பார்க்கும். வெளிறிப் போய்விட்ட அந்த முகத்தில் கொஞ்சமாவது பொறாமை தென்படுகிறா என்று அவன் மனம் துடிப்பாய்த் தேடும்.

ஆனால் ரோஜாவின் முகத்தில் அப்படிப்பட்ட உணர்ச்சிகள் ஏதும் தென்படவில்லை. அவளுடைய மனதில் இருப்பதைத் தெரிந்து கொள்ள, தனிமை ஏற்படுத்திக் கொண்டு பேசுவதை விட வேறு வழியே இல்லை என்று அவனுக்குத் தோன்றியது.



ரோஜாவுக்குத் திடீரென்று வேணுகோபாலன் வீட்டுக்கு வருவதில் இருந்த உற்சாகம், மகிழ்ச்சியெல்லாம் வடிந்து விட்டது போல் தோன்றியது. இதற்குமுன் எப்போ விடியும்? எப்போ இங்கே ஓடிவரலாம் என்று துடித்துக் கொண்டிருந்த மனம், இப்போ இந்த வீட்டில் கால் வைத்ததிலிருந்து மாலை எப்போது ஆகும், வீட்டுக்கு எப்போ போய்விடலாம் என்று, முள் மீது நிற்பதுபோல் தவித்துக் கொண்டிருந்தது. இப்போதெல்லாம் அவள் மனதில் ஒரே எண்ணம்தான் மேலோங்கி நின்றது. கூடிய சீக்கிரத்தில், ஏதோ விதமாய் இந்த வீட்டிலிருந்து சாசுவதமாய் வெளியேறிவிட வேண்டும். மிஸ் ஜோஷி வந்த பிறகு இந்த எண்ணம் மேலும் வலுவடைந்தது.

விஜய், மிஸ் ஜோஷி, அவளுடைய பெற்றோர், வேணுகோபாலன், லாவண்யா எல்லோரும் மாலை வேளையில் புல்வெளியில் உட்கார்ந்து கொண்டு, பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது, ரோஜாவின் மனம் இனம் புரியாத வேதனையில் துடிதுடிக்கும்.

அவர்களுக்காகத் தேனீரையோ, பழச்சாறையோ கொண்டு போய் கொடுத்தால், விஜய் முதலில் மிஸ் ஜோஷியிடம் கொடுத்து விட்டு, பிறகு தனக்காக எடுத்துக் கொள்வான்.

"தாங்க்ஸ்" விஜய். ஏதோ அமிருதத்தையே கொடுத்து விட்டது போல் முகம் பளபளக்கச் சொல்வாள் அந்தப் பெண். அப்படிச் சொல்வதிலும் என்ன நளினம்? எத்தனை ஒய்யாரமான பார்வை! விஜய் சிரிப்பான்.

ரோஜா ஒரு கணம் கூட அங்கு நிற்க முடியாதவள் போல், சட்டென்று நகர்ந்து விடுவாள். அங்கிருந்து வந்த பிறகும், ரொம்ப நேரம் ரோஜாவுக்குப் பொறாமையாய், அமைதியின்றி மனம் தவிக்கும். அவர்கள் எல்லோரும் கொடுத்து வைத்தவர்கள். தான் அதிருஷ்டமில்லாதவள். தனக்கும், அவர்களுக்கும் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதுபோல் தோன்றும்.

மிஸ் ஜோஷி, பெற்றோரையும் அழைத்துக்கொண்டு வந்திருப்பது எதற்காகவென்று எல்லோருக்கும் தெரிந்துதான் இருந்தது. விஜய், மிஸ் ஜோஷியுடன் திருமணத்துக்குச் சம்மதிக்கலாம்... ஒரே பெண், நிறைய சொத்து உள்ள இடம்...

"அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்பவன், அதிருஷ்டசாலியாக இருப்பான்" என்று ஒரு தடவை லாவண்யா சொன்னபோது, "ஆமாம், ரொம்ப அதிருஷ்டசாலியாய்த்தான் இருப்பான்" என்றான் விஜய்.

ராதைக்குத் தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்த ரோஜா, தன் செவிகளால், இந்தஉரையாடலைக் கேட்டாள். அனந்தன் பணத்துக்கு ஆசைப்படுவதாகத் தன்னைக் குற்றம் சாட்டிய பெரிய மனிதன்தானே விஜய்.

மிஸ் ஜோஷி விஜய்மீது அப்போதே தனக்கு அதிகாரம் ஏற்பட்டுவிட்டதாக, ரொம்ப உரிமையுடன் பழகும்போது, தனக்குச் சம்பந்தமே இல்லாததுபோல் நடந்துகொள்ள ரோஜாவல் முடியவில்லை. விஜய்மீது தனக்கு எந்த உரிமையும் கிடையாது என்று தெளிவாய்த் தெரிந்தபிறகும், தன் மனம் இவ்வளவு வேதனைப்படுவானேன்? இரக்கமே இல்லாமல் தன்னை வேதனைப்படுத்திய நபரைப் பற்றி எதுக்காக இவ்வளவு யோசிக்கணும்? தன் மனம் இப்படிக் கட்டுப்பாடு இல்லாமல் போய்விட்டதை நினைக்கும்போது, ரோஜாவுக்குத் தன்மீதே அருவருப்பு ஏற்பட தொடங்கியது. இந்த நரகத்தை அனுபவிப்பதைவிட இங்கிருந்து போய் விடுவதுதான் நல்லது.

மிஸ் ஜோஷிக்கும், விஜய்க்கும் ஆர்ப்பாட்டமாய்த் திருமணம் நடக்கும் காட்சி, ரோஜாவின் கண்முன் நிழலாடிற்று. விஜய் திறமையானவன்— அதற்குத் துணையாகப் பணமும் சேர்ந்தால், அவன் வாழ்க்கை பெரும் புகழுடன் எல்லாவிதமாகவும் நிறைவு பெற்று விடும்.



தன் வாழ்க்கை எப்போ எந்தத் திசை திரும்புமோ, அது எவ்வளவு பயங்கரமானதாக இருக்குமோ, அவளால் ஊகிக்க முடியவில்லை. சில நாட்களுக்குமுன் எதிர்காலத்தைப் பற்றி ஏற்பட்டிருந்த நம்பிக்கை பஞ்சாய்ப் பறந்துவிட, ரோஜாவின் மனத்தில் ஏமாற்றமும், பயமும் சூழ்ந்து கொண்டன.

இந்தச் சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்பது தன் சக்திக்கு மீறிய விஷயம்போல் ரோஜாவுக்குத் தோன்றிற்று. எத்தனை நாட்களுக்கு இப்படி எதிர்நீச்சல் போடுவது... செந்தூரவின் வாழ்க்கையை மீட்க தான் செய்யும் முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்துவிட்டன.

மிஸ் ஜோஷி, அவளுடைய பெற்றோரும் வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை கோர்ட்டுக்கு விடுமுறை என்பதால் விஜயும் சாப்பிட வந்திருந்தான். எல்லோரும் மேஜைமுன் அமர்ந்து உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பேச்சுக்கு நடுவில் மிஸ் ஜோஷியின் தந்தை மெதுவாக, தான் வந்த காரியத்தை வெளிப் படுத்தினார். அதற்கு முன்னுரையாக, விஜய் தம் எல்லோருக்கும், முக்கியமாகத் தன் மகளுக்கு எவ்வளவு பிடித்து இருக்கிறானோ என்று சொல்லிவிட்டு— கடைசியில் வேணுகோபாலனிடம் சொன்னார்: "நீங்க பெரியவங்க... அவனுக்கு உங்களைத் தவிர யாரும் இல்லை என்று கேள்விப் பட்டேன். அவனைக் கல்யாணத்திற்கு ஒப்புக் கொள்ளும் படிச் செய்யும் பொறுப்பு உங்களுடையது?"

வேணுகோபாலன் சங்கடத்தில் மாட்டிக்கொண்டவர் போல் பார்த்தார். "எனக்கொன்றும் இல்லை. எல்லாம் அவன் இஷ்டம்தான்" என்றார்.

லாவண்யா நடுவில் புகுந்தாள்.

"இந்தக் கண்ணாமூச்சி எதுக்கு? அவனையே கேட்டு விடலாம் என்ன சொல்கிறாய் விஜய்? வெட்கப்படாமல் சொல்லு" என்றாள்.

"அடடா! வெட்கமெதற்கு? இந்தக் காலத்தில் பெண்

களே அதை விட்டுவிட்டபோது, ஆண்கள் வெட்கப்பட வேண்டிய தேவை என்ன?'' என்றான் விஜய்.

அவன் போக்கைப் பார்த்தால் இந்த உரையாடல் தொடங்குமென்று முன்பே ஊகித்து விட்டதுபோல் இருந்தது.

''கிண்டல் செய்வது அப்புறம் இருக்கட்டும். முதலில் அவர்களுக்குப் பதில் சொல்லுங்க'' என்றாள் லாவண்யா.

அவன் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள, மிஸ் ஜோஷியை விட லாவண்யாதான் ஆர்வமாய் இருந்தாள்.

''அவ்வளவு அவசரப்படுத்துவானேன்? யோசித்தே சொல்லட்டும்!'' ஜோஷியின் தாய் மெதுவாகச் சொன்னாள்.

''யோசிப்பதற்கு எதுவும் இல்லை'' என்றான் விஜய்.

எல்லோரும் அவன் பக்கம் ஆர்வத்துடன் பார்த்தார்கள் விஜய் எல்லோரையும் பார்வையால் அளந்து விட்டு, பிறகு நிதானமாய், கம்பீரமாய்ச் சொன்னான். ''சாரி! உங்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறேனோ என்னவோ...''

''அப்படின்னா?'' என்று ஜோஷியின் தந்தை உடனே கேட்டார்.

''மன்னிக்கணும், எனக்குத் திருமணமாகிவிட்டது.''

''வாட்?'' மிஸ் ஜோஷி, அவளுடைய தந்தை ஒரே சமயத்தில் கத்திவிட்டார்கள் அவளுடைய தாய், உணவை வாயருகே கொண்டுபோனவள் அப்படியே நிறுத்திவிட்டாள். வேணுகோபாலன் நம்ப முடியாதவர்போல் பார்த்தார். அவன் சொன்னதை நம்பாதவள்போல் புறக்கணித்து விட்டது லாவண்யா மட்டும்தான்.

சற்றுக் கோபத்துடன் அவனைப் பார்த்துச் சொன்னாள்.

''விஜய்! போதும் இந்த விளையாட்டு... பெரியவர்களுடன் இப்படி வேடிக்கைப் பேச்சு பேசுவது முறையில்லை.''



''இல்லை லாவண்யா, நான் உண்மையைத்தான் சொல்கிறேன்...''

''இதோ பார்! இந்தத் தமாஷ் எல்லாம் என்னிடம் வேண்டாம். எனக்குத் தெரியாமல் உன் கல்யாணம் எப்போ நடந்தது?''

''ஆயிடுத்துன்னு இப்போ சொல்றேனே...''

''யார் அந்தப் பெண்? எங்கள் யாருக்கும் தெரியாமல் திடீரென்று வானத்திலிருந்து குதித்துவிட்டாளா?''

''உங்களுக்குத் தெரியாது?'' கம்பீரமாய்ச் சொன்னான் விஜய்.

லாவண்யா சந்தேகமாய்ப் பார்த்தாள். விஜய்யின் போக்கைப் பார்த்தால் தமாஷாகப் பேசுபவன்போல் தெரியவில்லை.

''திருமணம் எப்போ ஆச்சு?''

''ரொம்ப நாட்களுக்கு முன்பு...''

''தேதியைச் சொல்லு...''

''நினைவு இல்லை...''

''போகட்டும், உங்களுக்குத் திருமணம் செய்து வைத்த சாஸ்திரிகள் யாரென்று சொல்லு... அவரிடம் கேட்டுக்கிறேன்.''

''ஊஹூம். அப்படி யாரும் இல்லை...''

''என்ன? சாஸ்திரிகள் இல்லாமலே திருமணம் நடந்ததா?'' லாவண்யா வியப்புடன் கேட்டாள்.

''ஆமாம்!''

''பதிவுத் திருமணமோ என்னவோ?'' களையிழந்து விட்ட முகத்துடன் மிஸ் ஜோஷி சொன்னாள்.

லாவண்யா விஜய் பக்கம் பார்த்தாள்.

விஜய் இல்லையென்பது போல் தலை அசைத்தான்.

''பின்னே... காந்தர்வ மணமா?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

"இல்லை" தெளிவாக மறுத்துவிட்டவன் ஒரு நிமிடம் கழித்துச் சொன்னான்.

"ஒருவிதமாய், உண்மையைச் சொல்லணுமென்றால் ராட்சஸ விவாகம்" அவன் குரல் விநோதமாய் ஒலித்தது.

அதுவரை சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டிருந்த லாவண்யா, இதைக் கேட்டதும், கலகலவென்று நகைத்து விட்டாள்.

"நீ அதற்குத் துணிந்தவன்தான்! போகட்டும். யார் அந்த அதிருஷ்டசாலின்னு சொல்லு, பார்த்துப் பொறாமைப் படுகிறேன்."

"ஊஹூம்... மாட்டேன். சொன்னால், நீ எங்க இருவருக்கும் ஆகாமல் பண்ணி விடுவாய்" பயந்தாற்போல் நடித்துக் கொண்டே சொன்னான்.

லாவண்யா மறுபடியும் உரக்கச் சிரித்தாள். சூழ்நிலை கலகலப்பாகி விட்டதும் எல்லோரும் சகஜ நிலைக்குத் திரும்பினார்கள். லாவண்யா சிரித்துக் கொண்டே மிஸ் ஜோஷியின் தந்தையைப் பார்த்துச் சொன்னாள்.

"நீங்க அவனுடைய பேச்சைப் பொருட்படுத்தாதீங்க. மனிதர்களை ஏமாற்றுவதில் எங்க விஜய் ரொம்ப கெட்டிக்காரன். அவனுக்கு அது ஒரு விளையாட்டு. எனக்குத் தெரியும், அவனுக்கு என்னைத் தவிர வேறு பெண்ணிடம் அறிமுகம் கூட கிடையாது."

லாவண்யாவின் பேச்சில் தொனித்த நம்பிக்கையை, விஜய் ஏனோ மறுக்கவில்லை. அவனுடைய எண்ணம் வேறு இடத்தில் இருந்தது. சமையல் அறையில் ரோஜா இருந்தாள். ரோஜா காதில் விழ வேண்டுமென்ற எண்ணத்துடன், வேண்டுமென்றே அப்படிப் பேசினான். அந்தக் கணம் ரோஜாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று துடிப்பாய் இருந்தது. சாதத்தைப் பிசைந்து கொண்ட விஜய், "இதென்ன? இவங்க பரிமாறுவதையே மறந்துட்டாங்களா? எமையுமே கொண்டு வரலையே?" என்றான்.



வேணுகோபாலன் ரோஜாவுக்குக் குரல் கொடுத்தார். ஆனால் விஜய்க்கு ஏமாற்றம்தான் கிடைத்தது. நெய்க் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு சமையல்காரன்தான் வந்தான்.

உணவு உண்டு முடித்தப் பிறகு, விஜய் தனியாய் இருக்கும்போது லாவண்யா பொறுக்கமுடியாமல் கேட்டு விட்டாள், "விஜய் உண்மையைச் சொல்லு? மிஸ் ஜோஷியைப் பிடிக்காததால் தானே அப்படி நாடகம் போட்டாய்?"

"எனக்கு உன்னைத் தவிர வேறு பெண்ணிடம் அறிமுக மில்லைன்னு சொன்னது நீதானே? அதுக்குள்ளே மறுபடியும் சந்தேகம் வந்துவிட்டதா?" கேட்டதுக்குப் பதில் சொல்லாமல், எதிர்க்கேள்வி கேட்டான் விஜய்.

லாவண்யா அவனைப் பழித்து விட்டு உள்ளே போய் விட்டாள். விஜய் வீட்டுக்குக் கிளம்பும்முன், வேணு கோபாலனிடம் விடைபெற அவருடைய அறைக்குப் போனான். "உட்காரேன் போகலாம்" என்றார் அவர்.

விஜய் அமர்ந்து கொண்டான். இருவரும் கம்பெனி விஷயங்களைப் பற்றி, நிறையப் பேசிக் கொண்டார்கள். வேணுகோபாலனின் போக்கைப் பார்த்தால் சொத்து சம்பந்தப்பட்ட விவரங்களைச் சரிபார்த்து, உயில் எழுதி விட வேண்டுமென்ற துடிப்புடன் இருப்பதுபோல் தோன்றிற்று.

சமீப காலமாய் அவர் இந்த எண்ணத்தை அடிக்கடி வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் அந்த விஷயம் சொல்லும் போதெல்லாம், உடல் நலம் பற்றி அவர் கவனமாய் இருக்க வேண்டுமென்று விஜய் எச்சரித்துக் கொண்டிருந்தான். அன்று மதியமும் இது போன்ற உரையாடல் நடந்து கொண்டிருந்தபோது, வேணுகோபாலன் திடீரென்று சொன்னார்...

"விஜய்... மிஸ் ஜோஷியின் தந்தை கேட்டதுக்கு உன் அபிப்பிராயம் என்ன? அவர் உன்னை மறுபடியும் கேட்டு உன் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளச் சொன்னார்."

"எனக்கு விருப்பம் இல்லைன்னு சொல்லி விடுங்கள்" பக்கத்தில் கிடந்த பேப்பரை எடுத்து முதல் பக்கத்தை பார்வையிட்டுக் கொண்டே சொன்னான்

இதயத்திலிருந்து பெரிய பாரம் நீங்கியது போல் வேணு கோபாலன் பார்த்தார். சற்று நேரம்மௌனமாய்க் கழிந்தது. வேணுகோபாலன், "விஜய்— ரொம்ப நாளாய் உன்னிடம் ஒரு விஷயம் கேட்கணும்னு நினைச்சிக்கிட்டு இருக்கேன்... ஏனோ இதுவரை அதுக்கு வேளை வரவில்லை."

"என்ன விஷயம்?"

"ரோஜாவைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?"

பேப்பரை பார்த்துக்கொண்டிருந்த விஜய் திடுக்கிட்டாற் போல் தலை உயர்த்திப் பார்த்தான்.

வேணுகோபாலனின் பார்வை தரையில் பதிந்து இருந்தது. "விஜய்! ரோஜாவை நான் லாவண்யாவுக்குச் சம மாய் எண்ணி விடுகிறேன். அந்தப் பெண்ணுக்கு நல்ல பையனாகப் பார்த்து திருமணம் செய்துவிட வேண்டுமென்று ஒரு எண்ணம் எனக்கு இருக்கிறது. சமீபத்தில் அடிக்கடி உங்க இருவரையும் பார்க்கும் போது, ரோஜாவுக்காக நான் தேடும் மாப்பிள்ளை நீயாக ஏன் இருக்கக் கூடாது என்று தோன்றியது. ராதையை நீங்க இருவரும் உயிருக்கு மேலாய், பார்த்துக் கொள்வீங்க. ரோஜாவை நீ மனைவியாக்கிக் கொண்டால், என் கடைசி காலத்தை உங்களிடம் நிம்மதி யாகக் கழித்து விடுவேன். எனக்குப் பிறகு, உங்க நிழலில் ராதைக்கு எந்தக் குறையும் வராது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு."

நல்ல வேளையாய் விஜய் முகத்தைப் பேப்பர் மறைத்துக் கொண்டு விட்டது. இல்லாவிட்டால், அவன் முகம், இதற்கு முன் எப்போதும் காணாத விதமாய்ச் சிவந்து போய் விட்டதை அவர் கவனித்து இருப்பார்.

விஜய் பதிலும் சொல்லவில்லை. பார்த்துக் கொண்டி ருந்த பேப்பரையும் நகர்த்தவில்லை.



அதைக் கவனித்த வேணுகோபாலன் சொன்னார், "விஜய் ஆரம்பத்திலிருந்தே, நீ ஏழைவீட்டுப் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாய்ச் சொல்லி வந்தாய். என்னுடைய கண்ணோட்டத்தில் ரோஜா உனக்கு எல்லா விதத்திலும் பொருத்தமானவளாய் இருப்பாள் என்று தோன்றுகிறது உங்க இருவரின் குடும்ப வாழ்க்கை நல்ல விதமாய் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. என்ன சொல்கிறாய்?"

"நீங்க... நீங்க... அந்தப் பெண்ணிடம் கேட்டீங்களா?" தடுமாறியபடிக் கேட்டான் விஜய்.

"முதலில் உன் அபிப்பிராயம் என்னவென்று தெரிந்து கொள்வது முக்கியம் என்று தோன்றியது. ரோஜாவும் சம்மதிப்பாள் என்றே நினைக்கிறேன். என் பேச்சை தட்ட மாட்டாள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு..."

"கேட்டுப் பாருங்க... முதலில்..." விஜய் பேப்பரை மடித்து பக்கத்தில் வைத்துவிட்டு எழுந்தான்.

"விஜய்... அப்படின்னா... சற்றுமுன் சாப்பிடும்போது, உனக்குத் திருமணமாகி விட்டதென்று சொன்னது பொய் தானே? வேடிக்கைக்காகச் சொன்ன வார்த்தை தானே?"

கிளம்புவதற்காக என்பது போல் வாசற்பக்கம் திரும்பி இருந்த விஜய் பின்னாலிருந்து தன்னை உத்தேசித்து ஓடி வந்த கேள்விக்கு, ஒரு கணம் பதில் சொல்ல முடி யாதவன் போல் நின்று விட்டான் உணர்வுகளின் சுழற்சியில் அவன் இதயம் திக்குமுக்காடியது. அதிர்ஷ்டவசமாய் அதே நேரத்தில், மிஸ் ஜோஷி அறைக்குள் வந்ததில் விஜய்க்குப் பதில் சொல்ல வேண்டிய ஆபத்து தப்பி விட்டது.

"அப்பா, அம்மா கார்டெனில் இருக்காங்க. எல்லோரும் சேர்ந்து கார்ட்ஸ் விளையாடலாம். வர்றீங்களா விஜய்?" என்று கொஞ்சும் குரலில் மிஸ் ஜோஷி கேட்டாள்.

"எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு இன்னொருமுறை பார்க்கலாம்" மிருதுவாய் மறுத்துவிட்டு, விஜய் வெளியில் சென்று விட்டான்.

# 52

ஜோஷியின் குடும்பம் இங்கு வந்த பிறகு லாவண்யா நிம்மதியாக உணர்ந்தாள். வீட்டில் ஓரளவு ரகளை குறைந்து விட்டது. இந்த அமைதி அவளுடனே சென்று விடுமோ என்று பயந்துவிட்ட லாவண்யா, ஏதாவது ஒரு சாக்கில் மிஸ் ஜோஷியை மேலும் சில நாட்கள் தங்க வைப்பதற்காகத் திட்டம் போடத் தொடங்கினாள்.

வேணுகோபாலன், மிஸ் ஜோஷியின் தந்தையிடம், விஜய்க்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்று சொன்ன போதும், அவர் அதை நம்பவில்லை. ஏனென்றால், லாவண்யா சற்று முன்தான் விஜய் சம்மதமாய் இருப்பதாகச் சொல்லியிருந்தாள். தந்தை, மகள் இருவரில் யாருடைய பேச்சை நம்புவதென்று அந்தத் தம்பதிகளுக்குப் புரியவில்லை. கடைசியில் விஜயின் அபிப்பிராயத்தைத் தானே கவனமாய்த் தெரிந்து கொள்ள முடிவு செய்தாள் மிஸ் ஜோஷி.

யோசிக்க யோசிக்க லாவண்யாவுக்கு, விஜய் மிஸ் ஜோஷியைத் திருமணம் செய்து கொண்டால் நன்றாகத்தான் இருக்கும் என்று தோன்றியது. விஜயிடம் தனக்கு எப்படியும் உரிமை இருக்கு... மிஸ் ஜோஷியும் ஓரளவு நல்ல சிநேகிதிதான்... தந்தை வீட்டில் கிடைக்காத ஆதரவை, எதிர்காலத்தில் அவர்களிடம் பெறலாமே. அதான் விஜயிடம் மறுபடியும் கேட்டாள்...

''மிஸ் ஜோஷியைத் திருமணம் செய்துக்க உனக்கு என்ன ஆட்சேபணை? உண்மையைச் சொல்லு...''

''நீதான் யாரையுமே பண்ணிக்க விடமாட்டேன்னு சொன்னியே.''



''இந்த வேடிக்கைப் பேச்சு எல்லாம் அப்புறம்... உன் மனதில் இருக்கும் எண்ணம் என்னவென்று சொல்லு...''

''என் மனதில் மிஸ் ஜோஷியைப் பற்றிச் சொல்லும்படியாக எந்த எண்ணமும் இல்லை.''

''பணம் உன்னைத் தேடி வந்தால் இப்படி மறுப்பது விவேகமா?''

''பணம் தானே வந்தால் நல்லதுதான். அதனால் அது பின்னாடி நாம் ஓடுவது என் பார்வையில் முட்டாள்தனம். உழைக்காமல், அநியாயமாய் வரும் பணத்தின்மீது எனக்கு மதிப்பு கிடையாது.''

''உன்னைப் போன்ற பிடிவாதக்காரனை நான் எங்கும் பார்த்ததில்லை; உனக்கு வரப் போறவள் யாரோ, ரொம்பக் கஷ்டப்படப் போறாள்.''

''சட்...அந்த வார்த்தையை மிஸ் ஜோஷியிடம் சொல்லி விடு'' சிரித்துக்கொண்டே சொன்னான் விஜய்.

''நாளை மாலை அவர்கள் ஊருக்குக் கிளம்புகிறார்கள். நாளை காலை அவர்களை உன் வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிடு'' என்றாள் லாவண்யா.

''நானா... எதுக்கு?''

லாவண்யா பொய்க் கோபத்துடன் பார்த்தாள். ''என்ன மனுஷன் நீ? கொஞ்சங்கூடப் புரிந்து கொள்ளும் ஞானம் கிடையாது. அவர்கள் இந்த ஊருக்கு வந்தது யாருக்காக? உனக்காக! மரியாதைக்காகவாவது அவர்களை ஒருவேளை சாப்பிட நீ கூப்பிட வேண்டாமா?''

''மரியாதைக்காக என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை; அழைத்துவிட்டால் போச்சு...'' உடனே விஜய் அவர்களைத் தன் வீட்டுக்குச் சாப்பிட அழைத்தான். அவர்களுடன் வேணுகோபாலனையும், லாவண்யாவையும் அழைத்தான்.

விஜய் விருந்துக்கென்று தனியாய் அழைக்கவும் மிஸ் ஜோஷிக்கு லாவண்யாவின் பேச்சில் நம்பிக்கை வந்தது-

தான் இங்கேயே இருந்து அவன் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வது மட்டுமே இல்லை தேவையானால் எப்படியாவது அவனைத் தன் வசப்படுத்திக் கொள்ளும் வழியையும் கண்டு பிடிக்கணும்; இந்த விஷயத்தில் லாவண்யாவின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை! இந்த யோசனை வந்ததும் மிஸ் ஜோஷி லாவண்யாவுடன் இன்னும் நெருக்கமாய்ப் பழகத் தொடங்கினாள்.

மறுநாள் காலை ரோஜா வந்தபோது, வேணு கோபாலன் ஏற்கனவே குளித்து முடித்து, வழக்கத்துக்கு மாறாக, பஞ்சக்கச்சம், ஜிப்பா, அங்கவஸ்திரம் உடுத்திக் கொண்டு ஹாலில் யாருக்காகவோ, எதிர்பார்ப்பது போல் அமர்ந்து இருந்தார்.

உள்ளே வந்த ரோஜாவைப் பார்த்ததும், "வந்து விட்டாயா கண்ணம்மா... வா...வா..." என்றார்

அவள் அவரருகில் சென்றாள், "என்ன விஷயம்?" என்றாள்.

"விஜய் உனக்காக வந்து விட்டுப் போனான். இதோட இரண்டு தடவை போன் செய்தான்."

ரோஜாவுக்கு இதயத் துடிப்பு நின்று விட்டாற் போல் இருந்தது. "எதுக்கு?" என்று தடுமாறிக் கொண்டே கேட்டாள்.

"இன்று எங்களை விருந்துக்குக் கூப்பிட்டிருக்கிறான். சமையலுக்கு ஒரு மாமியை வரச் சொல்லியிருந்தானாம், அந்தம்மா இதுவரை வரவில்லையாம். கொஞ்சம் ரோஜாவை அனுப்பி வைய்யுங்க என்று கேட்டான்!"

ரொம்ப சகஜமாய், சாதாரணமாய் அவர் சொன்ன விஷயத்தைக் கேட்டதும், ரோஜாவின் கன்னங்கள் ரத்தம் தெறிக்கும் அளவுக்குச் சிவந்து விட்டன. ஜீவனே இல்லாத சோர்வாக இருந்த அந்தக் கண்களில், ரொம்ப நாட்களுக்கப்புறம் ரோஷம் பளபளத்தது.

சமையல்காரி வரவில்லையாம்; தன்னை வரச் சொன்னா



ளாம். எத்தனை துணிச்சல்? எவ்வளவு திமிரு? இப்படி வரச் சொல்லுவதில் அவன் எண்ணம்தான் என்ன? தான் சமையல்காரிக்குச் சமம் என்றுதானே!

ரோஷமும், அவமானமும் போட்டிபோட ரோஜா தலையை உயர்த்தினாள். போகட்டும், அதைவிட உயர்ந்த மதிப்பை அந்த ராட்சசனிடமிருந்து எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.

"சீக்கிரமாய்க் கிளம்பு ரோஜா, ராதையையும் உன்னுடன் அழைச்சுவிட்டுப் போகிறாயா..."

"நானா?"

ரோஜாவின் முகத்தில் காணப்பட்ட மாற்றத்தை அவர் கவனித்து விட்டார். உடனே அவளின் கைகளைப் பற்றிக் கொண்டு வெகுளித்தனமாய், "இதோ பாரு ரோஜா, விஜய் நமக்கு அன்னியனில்லை என்று நான் உன்னிடம் அடிக்கடி சொல்லி இருக்கிறேன். நீ என்னிடம் எத்தனை உரிமையுடன் இருப்பாயோ, அதற்கு இரு மடங்கு உரிமையுடன் அவனிடம் நீ பழகலாம். நான் அதிகமாய்ப் புகழ்வதாய் மட்டும் நினைக்காதே! அவனைப் போன்ற குணாதிசயம் படைத்தவர்கள் லட்சத்தில் ஒருவர் இருப்பார்களோ என்னவோ..."

விஜய் வீட்டுக்கு நான் போக மாட்டேன் என்று சொல்ல வாயெடுத்த அவள், அவருடைய பேச்சைக் கேட்டதும், திகைத்துப் போனவளாய், அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜய் போன்றவர்கள் லட்சத்தில் ஒருவர் இருந்தால் அதிசயம்!

அவர் சொல்வது உண்மைதான். அவ்வளவு கடினமான இதயமும், பகுத்தறிவு இல்லாத அகங்காரமும் சாதாரணமாய் யாருக்குமே இருக்காது. இது தன்னை அவமானப் படுத்தும் எண்ணம்தான். இல்லாவிட்டால் இன்று அவனுக்கு வேறு சமையல்காரியே கிடைக்கவில்லையாமா? — ரோஜா உதட்டைக் கடித்துக் கொண்டு தலையைத் திருப்பிக் கொண்டாள்.

விஜய்க்கு எங்கே இடைஞ்சல் ஏற்பட்டுவிடுமோ என்ற பதட்டத்துடன், எப்போதும் அவன் பக்கமே யோசித்துக் கொண்டிருக்கும் இவருக்கு, தன் நெஞ்சில் எரிமலையாய் கனன்று கொண்டிருக்கும் இந்தப் பயங்கரமான உண்மையை எப்படிச் சொல்லுவது?

அவளை விஜயிடம் அனுப்ப வேண்டும் என்றும், அவர்களுக்கிடையே தனிமை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அவர் துடிப்புடன் இருந்தார். அவர் மனதிலிருக்கும் இந்த எண்ணத்தைப் பற்றித் துளிகூட அறியாத ரோஜா முள்மீது நிற்பதுபோல் உணர்ந்தாள்.

"நேரமாகிவிடப் போகிறது. கிளம்பு...கிளம்பு..." என்று அவர் அவசரப்படுத்தினார்.

"நீங்க...நீங்களும் என்னுடன் வாங்க..." சன்னமான குரலில் சொன்னாள்.

"நானா? இப்போ லாயர் வரப் போகிறார். அவருடன் பேசவேண்டும். அந்த வேலை முடிந்ததும் வர்றேன்."

அவள் மறுப்பதுபோல் தலையசைத்தாள். "ஊஹூம்! நீங்க வராவிட்டால் நான் போகமாட்டேன். இங்கு வரப் போறவங்க அங்கேயே வரட்டும். எதிர் வீடுதானே" என்றாள் பிடிவாதமாய்.

கணநேரம் ரோஜா முகத்தைக் கூர்ந்து பார்த்தவர், என்ன நினைத்துக் கொண்டாரோ, "சரி, வா! போகலாம்" என்று எழுந்து கொண்டார்.

லாவண்யா, மிஸ் ஜோஷி அவனுடைய பெற்றோர் எல்லோரும் சேர்ந்து கடைத்தெருவுக்கு ஷாப்பிங்குக்காகச் சென்றிருந்தார்கள். ரோஜா, வேணுகோபாலன் சொன்னதன் பேரில் வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பினாள்.

விஜய் வீட்டில் மறுபடியும் இந்தவிதமாய்க் கால் வைக்க வேண்டி வருமென்று கனவிலும் நினைத்திராத அவளுக்கு, இன்று அந்த வீட்டு வாசற்படி ஏறும்போது, இதயம் படபடத்தது. வேண்டாமென்று நினைத்தபோதும், பழைய



நினைவுகள் மனதில் அலையாய் மோதின.

"விஜய்!" வேணுகோபாலன் குரல் கொடுத்தவாறு உள்ளே வந்தார்.

"வாங்க ஐயா,... வாங்க, பெரிய தம்பி மாடியில் இருக்காங்க. இதோ கூப்பிடறேன்" லக்ஷ்மி எதிரே வந்து வரவேற்றாள்.

வேணுகோபாலன் வீட்டைச் சுற்றிக் காண்பித்து, வீட்டை அழகுபடுத்துவதில் விஜய் எவ்வளவு ஆர்வம் காட்டுவானென்று, விலாவாரியாய்ச் சொல்லிக் கொண்டிருந்தார்.

மாடியில் தன் அறையில் ஃபைல்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த விஜய், இவர்கள் வந்துவிட்டதாக லக்ஷ்மி சொன்னதும், அந்தப் பேப்பர்களை அப்படியே எடுத்துக் கொண்டு கீழே வந்தான். படியிறங்கிக் கொண்டிருந்தவன், ரோஜாவைப் பார்த்ததும், நின்று விட்டான். அவளும் அவனைப் பார்த்தாள்! இருவரும் ஒரு நிமிஷம், அடுத்தவரின் திறமையை எடைபோடும் எதிரியைப்போல் பார்வையாலேயே அளந்து கொண்டார்கள்.

விஜய்யைப் பார்த்த வேணுகோபாலன், "விஜய் நான் இங்கே இருப்பதாகவும், நேராக இங்கு வரும்படி லாயர் சுவாமிநாதனுக்குப் போன் செய்துவிடு" என்றார்

"சரி, இதோ செய்கிறேன்..." ஆபீஸ் அறைப் பக்கம் திரும்பிய விஜய், ரோஜாவின் கையைப் பற்றிக்கொண்டு அவளுடன் ஒட்டினாற்போல் நின்றிருந்த ராதையைப் பார்த்ததும், நின்று அருகில் வந்து, "ஹலோ" என்றவன், லேசாகக் கன்னத்தில் தட்டிவிட்டு, ஆபீஸ் அறைக்குள் சென்று விட்டான்.

"வாம்மா... வா..." வேணுகோபாலன் ரோஜாவை அழைத்துக்கொண்டு சமையல் அறைப் பக்கம் வந்தார்.

சமையலறையில் அந்த வேளைக்குத் தேவையான எல்லாப் பொருட்களும் மேடைமீது தயாராக வைக்கப்

பட்டிருந்தன. லக்ஷ்மி காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தாள். வேணுகோபாலன் உணவு மேஜையருகே நாற்காலியில் அமர்ந்துகொண்டு பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார்.

ரோஜா புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டு சமையலறைக்குள் கால் பதித்தாள். அந்தப் பாத்திரங்களைத் தொட்டு புழங்கும்போது, ஒரு நிமிடம் கைகளில் நடுக்கத்தை உணர்ந்தாள்.

"இந்தப் பெண் யாருங்க ஐயா?" கறிகாயை நறுக்கிக் கொண்டே லக்ஷ்மி கேட்டாள்.

"எங்க வீட்டுப் பெண்தான்!"

"அப்படியா..."

சற்று முன் வரை, விஜய் தன்னை அவமானப்படுத்தி விட்டதாகப் புகைந்து கொண்டிருந்த ரோஜாவின் இதயம், வேணுகோபாலன் சொன்ன இந்தப் பதிலில் குளிர்ந்து, சற்று அமைதி அடைந்தது.

விஜய் உள்ளே வந்து, அந்த வேளை உணவுக்கான மெனுவைச் சொல்லிவிட்டுச் சென்றான். சற்றுநேரம் கழித்து யாரோ வந்ததும், அவருடன் பேச வேணுகோபாலன் முன் அறைக்குச் சென்றார்.

அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த விஜய், நடுவில் உள்ளே வந்தான். லக்ஷ்மி இஞ்சி பச்சைமிளகாய் வாங்கி வர வெளியே சென்றிருந்தாள்.

சமையல் அறை வாசலில் வந்து நின்ற அவனைக் கவனியாதவள்போல் ரோஜா தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"நாலு கப் காபி வேண்டும்" சமையலறையை உத்தேசித்துச் சொல்லுவது போல் சொல்லிவிட்டுச் சென்றான்.

அவன் மறுபடியும் வந்தபோது, அவள் டைனிங் டேபிள் மீது, டிரேயில் நான்கு கப்புகளை வைத்து, அவற்றில் காபியை நிரப்பிக் கொண்டிருந்தாள்.

"லக்ஷ்மி இன்னும் வரவில்லையா?"



அவள் பதில் சொல்லவில்லை. அவனுடைய கேள்வி காதில் விழாததுபோல் சமையலறைக்குள் சென்றுவிட்டாள். விஜய் ட்ரேயை எடுத்துக்கொண்டு சென்றான். பத்து நிமிடம் கழித்து ட்ரேயை உணவு மேஜைமீது வைத்தான். ரோஜா அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

"தாங்க்ஸ்! காபி ரொம்ப நன்றாக இருந்தது."

அவள் ஏதோ வேலையிருப்பதுபோல் சமையலறைக்குள் திரும்பினாள்.

"மைகாட்! உனக்குக் காது கேட்காதா?"

விஜய் அந்த வார்த்தையை உச்சரித்த விதத்தைக் அவளால் திரும்பிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. விஜயின் கண்களில் குறும்பு கொப்பளித்துக் கொண்டிருந்தது. உதடுகள் சிரிப்பை மறைத்துக் கொள்ள வீணாய் முயற்சி செய்து கொண்டிருந்தன.

அவனுக்கு இது ஒரு வேடிக்கை போலும்! தன்னை அழ வைப்பது அவனுக்கு ஒரு விளையாட்டாய் மாறிவிட்டது. ரோஜாவின் மனம் கோபத்தால் தீயாய் பற்றி எரிந்தது. கையிலிருந்த பொருளைத் தூக்கி, அவன் முகத்தில் விட்டெறிய வேண்டும் என்பது போல் ஆவேசம் வந்தது. எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டு தன் வேலையைப் பார்க்கத் தொடங்கினாள். அவள் எதிர்பார்த்தது போல் விஜய் அங்கிருந்து போகவில்லை. சமையல் அறை வாசலில் நின்றவன், கதவு மேல் கையைப் பதித்து நின்றான்.

"ரோஜா..." மென்மையாய் அழைத்தான்! எப்போதும், யாரிடமிருந்தும், அவ்வளவு மிருதுவான குரலில், கேட்டிராத அந்த அழைப்பு ரோஜாவின் இதயத்தைக் கொக்கிப் போட்டு இழுத்தது.

"ரோஜா! நான் உன்னுடன் பேச வேண்டும்" ரொம்ப இயல்பான குரலில் சொன்னான்.

அவனுடைய குரலில் அது போன்ற சகஜத் தன்மையை

ரோஜா என்றுமே கண்டதில்லை. விஜய் மரியாதையாகப் பேசுகிறான் என்றால், ஏதோ விஷயம் இருக்கும். அவன் ரொம்பப் பணிவாய் நடந்து கொண்டால், அது தன்பால் ஏதோ ஆபத்துக்குப் பிள்ளையார் சுழியைப் போடத்தான்! ரோஜா கண்முன் பழைய நிகழ்ச்சி நிழலாடிற்று. ஒரு பக்கம் பயந்து கொண்டே, மறுபக்கம், அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று வியப்படைந்தவளாய்க் காத்திருந்தாள்.

"ரோஜா..." விஜய் ஏதோ சொல்லப் போனான். இதற்குள் லக்ஷ்மியின் வெங்கலக் குரல் கணீரென்று ஒலித்தது.

"ச்ச... ச்ச... வர வர ரொம்பதான் கொள்ளையடிக்கறாங்க... ஆனாலும் இப்படிப் பகல் கொள்ளையா— பாருங்க தம்பி, இஞ்சியை இவ்வளவு குறைச்சலா கொடுத்திருக்கானே" என்றவாறே உள்ளே வந்தாள்.

பின்னால் திரும்பிய விஜய், பெருமூச்சொன்று விட்டு நகர்ந்ததை ரோஜா உணராமல் இல்லை. அதுவரை மூச்சை பிடித்துக் கொண்டு காத்திருந்த ரோஜா, எளிதாக மூச்சை விட்டுக் கொண்டாள்.

பதினோரு மணி அளவில் லாவண்யாவும், ஜோஷியின் குடும்பத்தினரும் வந்தார்கள். மிஸ் ஜோஷி விஜய்க்கு சிகரெட் லைட்டர் வாங்கி வந்தாள். அவளும் லாவண்யாவும் ரொம்ப உற்சாகமாய்த் தென்பட்டார்கள். சமையல் அறையில் இருந்த ரோஜாவைப் பார்த்த லாவண்யா, முகத்தைச் சுளித்துக் கொண்டு நகர்ந்து விட்டாள்.

விஜய்க்கு யாரிடமிருந்தோ அவசரமாய் வரச் சொல்லி போன் வரவும், "அரை மணியில் வந்து விடுகிறேன்" என்று கிளம்பிப் போய் விட்டான்.

சமையல் வேலை முடிந்ததும், ரோஜா எல்லாவற்றையும் டைனிங் டேபிள்மீது அழகாக அடுக்கி வைத்துவிட்டு, வேணுகோபாலன் அருகில் வந்தாள்.

"என்னம்மா! முடிந்து விட்டதா?" என்று கேட்டார்.



"முடிந்து விட்டது...நான் வீட்டுக்குக் கிளம்பறேன்" என்றாள் ரோஜா.

"அதற்குள்ளேயா? ஏம்மா?"

"ஒன்றுமில்லை, கொஞ்சம் தலைவலியாய் இருக்கு."

"என்னவோ போல் இருக்காயே? உடம்பு சுடறதா?" பதட்டத்துடன் கேட்டார்.

ரோஜா இல்லையென்பது போல் தலை அசைத்தாள்.

"சாப்பிடாமலேயே போய்விடப் போகிறாயா?"

"வேண்டாம், பசியே இல்லை..."

"விஜய் வரட்டும், சொல்லிவிட்டுப் போகலாம்."

வலியவந்த சிரிப்புடன் சொன்னாள் ரோஜா. "நான் இங்கு வந்தது அவர் கேட்டுக் கொண்டதால் இல்லையே? நீங்க வரச் சொன்னீங்க; வந்தேன். வேலை முடிந்து விட்டது, போய் வருகிறேன்."

வேணுகோபாலன் என்ன நினைத்துக் கொண்டாரோ என்னவோ, ரோஜாவை மேலும் வற்புறுத்தவில்லை. அவர் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். லாவண்யா, மிஸ் ஜோஷி, ரோஜாவைப் பார்வையாலேயே சுத்திக் கிழிப்பது போல் நடந்து கொண்டதை. அதனால் ரோஜா கிளம்புவதாகச் சொன்னதும், டிரைவரை அழைத்து, வீட்டில் கொண்டுவிட்டு வரச் சொன்னார்.

ரோஜா கிளம்பிப் போய் விட்டாள். அரை மணியில் திரும்புவதாகச் சொன்ன விஜய், கால் மணியிலேயே திரும்பி விட்டான் வீட்டிற்குள் நுழைந்ததும், நேராக உள்ளே வந்தான். உணவு மேஜையின் மீது எல்லாம் அழகாக, நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து, திருப்தி அடைந்தான். வாஷ்பேசின் அருகில் சென்று முகம், கைகளைக் கழுவிக் கொண்டே லக்ஷ்மியிடம், "சின்னம்மாவைக் கூப்பிடு" என்றான்.

"எந்தச் சின்னம்மா? இப்போ சமையல் செய்தாங்களே... அந்தச் சின்னம்மாவா?" என்றாள் லக்ஷ்மி.

"ஆமாம்."

"இல்லையே தம்பி... வீட்டுக்கும் போய்விட்டாளே."

"போய் விட்டாளா?"

"ஆமாம் தம்பி! இப்பத்தான் நீங்க வரும் முன் கிளம்பி போனாள்."

"ரோஜா போய் விட்டாளா?" நம்பமுடியாதவன் போல் வேணுகோபாலனிடம் வந்து கேட்டான் விஜய்.

"ஆமாம் விஜய், உடம்பு சரியில்லையென்று சொன்னதும், நான்தான் அனுப்பிவிட்டேன். வேலையெல்லாம் முடிந்து விட்டது." என்றார் வேணுகோபாலன்.

விஜய்க்கு என்றுமே இல்லாதவிதமாய், அவர் மீது கோபம் வந்தது. ரோஜா போய் விட்டாளா? வேலை முடிந்து விட்டதாம்... போய் விட்டாளாம். ரோஜாவை தான் இந்த வீட்டுக்கு வரச் சொன்னது, வேலைக்காகத் தானா?

ஜோஷ் குடும்பத்தாரைச் சாப்பிட அழைக்கச் சொல்லி லாவண்யா வற்புறுத்தியபோது, தட்ட முடியாமல் ஒப்புக் கொண்ட விஜய்க்கு அன்று இரவுதான், அந்த யோசனை வந்தது. எப்படியாவது ரோஜாவை இந்த வீட்டுக்கு வரச் செய்து, தனிமை ஏற்படுத்திக் கொண்டு, தன் மனதில் இருப்பதைக் கேட்டு விட வேண்டுமென்று நினைத்தான். முதலில் ரோஜா வர மாட்டாள், மறுத்து விடுவாள் என்று பயந்தான். ரோஜா இந்த வீட்டில் காலடி வைக்கும் வரை அவனுக்கு நம்பிக்கையே இல்லை.

சமையலறையில், வீட்டுக்கு உரியவளாய், உரிமையாய் காரியம் செய்து கொண்டிருந்த ரோஜாவைப் பார்க்கும் போது, அவன் மனதில் அந்தப் பெண்ணை தன் மனைவியாய் திருமணம் செய்து கொண்டதாகவும், அவள்மீது தனக்கு உரிமை இருப்பதாகவும் தோன்றத் தொடங்கியது. ரோஜாவுடன் தனிமையில் பேச விரும்பி, எதிர்பார்த்த அந்த வாய்ப்பு, கிடைத்துவிட்டது போல் பிரமையை ஏற்படுத்தி,



அதற்குள் நழுவி விட்டது. அந்த வீட்டில் காலையிலிருந்து குடியிருந்த மகிழ்ச்சி, உற்சாகம் திடீரென்று காணாமல் போய் விட்டது போல் தோன்றியது. மின் ஜோஷ், லாவண்யாவுடன் சாதாரணமாய்ப் பேச வேண்டுமென்றாலும் எரிச்சலாய் இருந்தது. வேறு வழியில்லாமல், மரியாதைக்காக, புன்முறுவலுடன் அவர்களைச் சாப்பிட அழைத்தான்.

## 53

வேணு கோபாலனின் வாயிலிருந்து செந்தூரைப் பற்றிய கேள்வி எப்போ வந்துவிடுமோ என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்த ரோஜாவுக்கு, அந்தக் கணம் வரத்தான் செய்தது. ஒரு பக்கம் செந்தூரைப் பற்றிய உண்மையை மறைப்பது தவறு என்று தெரிந்த போதும், மறுபக்கம் இந்த விஷயம் தெரிந்தால், தான் இந்த வீட்டிலிருந்து சாசுவதமாய் விடைபெற வேண்டியிருக்கும். அதன்பின் தன் எதிர்காலம் என்னவென்று ரோஜாவால் ஊகிக்க முடியவில்லை.

அன்று மதிய உறக்கத்துக்குப் பிறகு எழுந்த வேணு கோபாலுக்கு ஹார்லிக்ஸ் கலந்தெடுத்து வந்தாள் ரோஜா. டம்ளரை எடுத்துக் கொண்டே அவர் கேட்டார்:

"என்னம்மா? செந்தூர் வந்தானா?"

ரோஜாவின் இதயம் வேகமாய் இயங்கியது. தலை குனிந்து கொண்டு, அவர் கேட்டது காதில் விழாதது போல் போய்விட நினைத்தாள். வாசற்பக்கம் திரும்பி இரண்டடியும் வைத்து விட்டாள். பிறகு என்ன நினைத்துக் கொண்டாளோ, அவர் பக்கம் திரும்பினாள்!

"ஊரில் இருக்கானா?" ஹார்லிக்ஸை ஸ்பூனால் கலக்கிக் கொண்டே கேட்டார்.

"இருக்கிறான" என்பது போல் தலைஅசைத்தாள்.

"அன்று ஏன் வரவில்லையாம்?"

"வந்தானாம்!"

"வந்தானா? எப்போ? நாம் கிளம்பிப் போன பிறகா?" சரேலென்று தலையை உயர்த்திக் கொண்டே கேட்டார்.

"இல்லை! நாம் இருக்கும்போதே..."

வேணுகோபாலன் ஹார்லிக்ஸ் கோப்பையைப் பக்கத்தில் வைத்து விட்டார்.

"நாம் இருக்கும்போதே வந்தானா? பின் நமக்குத் தென்படவில்லையே ஏன்?" வியப்புடன் பார்த்தார்.

"உங்களை...உங்களை அவனுக்கு முன்பே தெரியுமாம்!" பூமிக்கடியில் புதைந்துவிட்டவள் போல் கூறினாள் ரோஜா. அவரிடம் இந்த விஷயத்தை வெளியிடுவது, நினைத்த அளவு எளிதாக இல்லை; நாக்கு வறண்டு விட்டது போல் தோன்றியது.

"என்னைத் தெரியுமா? எனக்குத் தெரிந்தவனா செந்தூர்?" அவர் நம்பமுடியாதவர் போல் பார்த்தார்

"ஆமாம்! எப்படின்னா..." அவள் உடலிலிருந்த சக்தி எல்லாம் திரட்டிக் கொண்டாள். "நீங்க முன்பு ஒருதடவை ரயில்வே ஸ்டேஷனில் நகையை இருட்டுக் கொடுத்து விட்டு, மீட்டதாகச் சொன்னீங்களே நினைவிருக்கா?"

அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? அவருக்குப் புரியவில்லை.

"ஆமாம், அதனால் என்ன?"

"அந்த நகையைத் இருட முயன்றவன்தான் செந்தூர்..." இடி விழுந்தாற்போல் பார்த்தார் வேணுகோபாலன்.

"உங்களைப் பார்த்து, உங்க முன்னால் வருவதற்குப்



பயந்து விட்டான்; நீங்க என்னையும், செந்தூரையும் மன்னித்து விடுங்க."

கண்களில் நீர் திரையிட பார்வையைத் தாழ்த்தியபடி கூறினாள் ரோஜா.

இத்தனை நாளும் தான் பார்க்க வேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருந்த ரோஜாவின் தம்பி யாரு? ரயில் நிலையத்தில் தன்னிடமிருந்து நகையைப் பறிக்க முயன்று, தன் கையால் கன்னத்தில் அறைவாங்கிய இருடனா? அவருக்குக் கண்களை இருட்டிக்கொண்டு வந்தது

"ரோஜா... நீ..." தடுமாறியவராய் அவளை நோக்கி எழுந்தார்.

அவள் தலை உயர்த்திப் பார்த்து, கம்மி விட்ட குரலில் சொன்னாள்

"நீங்க என் தந்தை போன்றவர். என்னை மன்னித்து விடுங்க. இந்த விஷயத்தை நான் அப்பவே சொல்லி இருப்பேன். ஆனால் லாவண்யாவின் நெக்லஸ் காணாமல் போய் விட்ட ரகளையில் பயந்துவிட்டேன். கடவுள்மீது சத்தியமாக சொல்கிறேன், அந்த நெக்லஸ் விஷயம் நிஜமாகவே எனக்குத் தெரியாது. இருடனுடைய அக்கா இருடியில்லை என்று சொன்னால் இந்த உலகில் யாருமே நம்பமாட்டார்கள்..." சொல்லும்போதே ரோஜாவுக்குத் துக்கம் பொங்கி வந்தது. இதைக் கேட்ட அவருக்கு அவ-மீது இரக்கம் ஏற்பட்டது.

அழுகையினூடே, அவள் செந்தூரின் எதிர்காலத்தைப் பற்றி தான் கவலைப்படுவதாயும், அவருடைய உதவியால் அவன் வாழ்க்கையைச் சீரமைக்கத் துடிதுடிப்பதையும் கூறி விட்டாள்

அவர் வேதனையுடன், "என்னிடம் ஏன் சொல்லவில்லை? நான் இருந்தும் இல்லாதவனாகி விட்டேன். என் போன்ற துரதிருஷ்டம் பகையாளிக்கும் வரவேண்டாம்."

ரோஜாவுக்குத் திடீரென்று நெஞ்சிலிருந்த பாரம் நீங்கி

விட்டது மாதிரி இருந்தது. இத்தனை நாளாய் தான் பட்ட வேதனை, வருத்தம் அவருடைய ஆறுதல் மொழியில் காணாமல் போய் விட்டது.

"ரோஜா... என் கண்ணே! உன்னிடம் எப்படிச் சொல்வேன்?" அவர் தனக்குத்தானே புலம்பிக்கொண்டு, அவளின் தலையை, கன்னத்தை வருடிக் கொண்டிருந்தார்.

அன்றுமாலை விஜயின் கிளப்பில் டான்ஸ் புரோகிராம் இருந்தது. அதற்கு மிஸ் ஜோஷி, லாவண்யாவை வரச் சொல்லிக் கூப்பிட வந்தான். அந்தச் சாக்கில் வந்தாலும், அவன் மனதில் வேறு எண்ணம் இருந்தது. இரவு ரொம்ப நேரம்வரை நடக்கும் இந்த நிகழ்ச்சிக்கு லாவண்யா, மிஸ் ஜோஷியுடன், வேணுகோபாலன் மூலமாய் சம்மதிக்க வைத்து, ரோஜாவையும் அழைத்துக்கொண்டு போகணும் என்று அவனுடைய எண்ணம்.

இரவு நேரமானதால் எப்படியும் டிரைவர் இருக்க மாட்டான். அவர்கள் இருவரையும் வீட்டில் இறக்கிவிட்டு, ரோஜாவை அவளுடைய வீட்டில் கொண்டு விடும் வழியில் தன் மனதில் இருப்பதை வெளிப்படுத்தி விடலாம்.

விஜய் டான்ஸ் புரோகிராமைப் பற்றிச் சொன்னதும் லாவண்யா துள்ளிக் குதித்தாள். "ஓ! கட்டாயம் வர்றோம். கொஞ்சம் இரு மாலையில் கார் எங்களுக்குத் தேவையாய் இருக்கும் என்று அப்பாவிடம் சொல்லிவிட்டு வர்றேன்" என்று உற்சாகமாய்த் தந்தையின் அறைப் பக்கம் வந்தாள்.

தந்தையின் அறையின் திரைச்சீலையை லேசாக விலக்கிய லாவண்யா, பாம்பு தீண்டியவள்போல் அப்படியே நின்று விட்டாள்.

ரோஜாவை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு மயக்கத்தில் ஆழ்ந்து விட்டவர்போல் கண்களை மூடி நின்றிருந்தார் வேணுகோபாலன்.

இந்தக் காட்சியைக் கண்டதும் லாவண்யாவுக்குப் பொறாமைத் தீ பகபகவென்று கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இத்தனை நாட்களாய் தான் எது ந'-ந் ய



விடுமென்று பயந்து வந்தாளோ அது நடந்தே விட்டது.

நெஞ்சின்மீது கையை வைத்து, என்ன செய்வதென்று புரியாமல் நின்று விட்டாள். மறுகணம் ஓட்டமும் நடையுமாக விஜய் இருந்த இடத்துக்கு வந்தாள்.

சட்டைப் பாக்கெட்டிலிருந்து சிகரெட் எடுத்து பற்ற வைக்கப்போன விஜய், லாவண்யாவைப் பார்த்து நின்று விட்டான்.

"விஜய், ஒரு நிமிஷம் வா... உடனே வரணும்" என்று அவன் தோளைப் பற்றி இழுத்தாள்.

"என்ன விஷயம்" என்றான் விஜய்.

"வாயேன்!"

அவள் அவன் கையைப் பற்றி இழுத்துச் சென்றாள். இருவரும் வேணுகோபாலன் அறை வாசலுக்கு வந்தார்கள். திரையை விலக்க வேண்டிய தேவைக்கூட இருக்கவில்லை. இரண்டு பிரிவாகப் போடப்பட்டிருந்த திரைச்சீலையின் இடைவெளியில் வேணுகோபாலன் ரோஜா ரொம்ப நெருக்கமாய் நின்ற காட்சி தெளிவாய்த் தெரிந்தது.

லாவண்யா விஜய் பக்கம் திரும்பினாள். அந்தக் காட்சியைப் பார்க்கமுடியாதவன் போல் விஜய் வெளியே வந்து விட்டான். ரத்தம் வற்றி விட்டாற்போல் அவன் முகம் வெளிறி விட்டது.

அவன் பின்னாடியே வந்த லாவண்யா தாழ்ந்த குரலில் கூறினாள். "விஜய்! இதற்குமுன் நான் சொன்னபோது நீ நம்பவில்லை இல்லையா? இப்பொவாவது அந்த மேனா மினுக்கியின் நாடகம் புரிந்ததா? இன்னும் ஆதாரம் வேணுமா?"

"லாவண்யா!" கண்களை இறுக்கமாய் மூடி இடைமறிப்பதுபோல் சொன்னான் விஜய்.

தன்னை மறந்த நிலையில் இருக்கும்போது, கால்களுக்கு அடியில் நிலம் நழுவி விட்டது போலிருந்தது விஜய்க்கு. தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ள அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தான்.

சற்று முன்வரை தன் இதயத்தில் அன்று மலர்ந்த ரோஜா மலராய், மென்மையான உணர்வுகளைத் தூண்டி விட்டு, இனிமையான கனவுகளில் தன்னை லயிக்கச் செய்த ரோஜா... அவளா இப்படி...?

இந்த உண்மையைக் கண்ணால் பார்த்தபிறகும் அவனால் நம்ப முடியவில்லை.

லாவண்யா கனமாய்க் கூறினாள். "விஜய்! இனி நான் சும்மாயிருக்க மாட்டேன். இதைவிட வேறு என்ன சாட்சியம் வேண்டும்? இப்பவே போய் அவர்களை நிற்க வைத்து கேட்கிறேன். அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்."

ஆவேசத்துடன் கூறிவிட்டு, தந்தையின் அறைப் பக்கம், திரும்பிய அவளை, விஜய் கையைப் பிடித்துத் தடுத்து விட்டான்.

"விடு! விஜய், கண்ணால் பார்த்த பிறகு நாம் யாருக்குப் பயப்படணும்?"

"லாவண்யா ப்ளீஸ்! ரோஜா வெளியே வரட்டுமே..."

அவள் நின்று விட்டாள்

வெளியே பேச்சுக் குரல் கேட்டதில் வேணுகோபாலன் இந்த உலகிற்கு மீண்டவர்போல், மெதுவாய் ரோஜாவை விடுவித்தார். அவருக்கு நெஞ்சு வலிக்கிற மாதிரி இருந்தது. நெற்றி முழுவதும் வியர்த்திருந்தது.

'நீங்க பதட்டப்படாதீங்க, உட்காருங்க" அவள் அவருடைய கையைப் பற்றி, கட்டில்மீது உட்கார வைத்தாள். மேஜை மீது வைத்திருந்த ஹார்லிக்ஸ் ஆறிப் போய் விட்டது.

"கொஞ்சம் தண்ணீர் எடுத்துக்கிட்டு வாம்'மா. நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக்கு. மாத்திரை போட்டுக்கறேன்" என்று புயலில் சிக்கிய சருகாய் நடுங்கிக் கொண்டிருந்தார்.

தண்ணி எடுத்து வர அவருடைய அறையை விட்டு



வெளியே வந்து கொண்டிருந்த ரோஜா, அறைவாசலில் செயல்மறந்து விட்டவர்களைப் போல், நிசப்தமாய் நின்றிருந்த லாவண்யாவையும், விஜயையும் பார்த்து திகைத்துப் போய் விட்டாள்.

விஜயின் கண்கள் ரோஜாவின் முகம்மீது நிலைத்து விட்டன. மின்னலைப் போல் இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன. அவனைக் கவனியாதவள்போல் ரோஜா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவளை ஏற இறங்க பார்த்துக் கொண்டே கடினமான குரலில், எக்காளத்துடன் கேட்டாள் லாவண்யா, "முடிஞ்சுடுத்தா உங்களுடைய சரச சல்லாபங்கள்?"

சிவந்துவிட்ட முகத்துடன் ரோஜா, லாவண்யாவையும் விஜய் பக்கமும் மாறி மாறிப் பார்த்தாள்.

லாவண்யா உதட்டைச் சுழித்துவிட்டுக் கூறினாள். "ஐயோ பாவம்! ஒன்றும் தெரியாத பாப்பா மாதிரி, எப்படி பார்க்கிறாள்?"

லாவண்யாவின் போக்கு ரோஜாவுக்குப் புரிந்தது. இன்னும் அங்கே இருந்தால், இதைவிட கடினச் சொற்களைக் கேட்க வேண்டி வரும். அதிலிருந்து தப்பிக்கணும் என்றால் அவர்களைப் பார்க்காதது போல் அங்கிருந்து போய் விடுவது தான் நல்லது.

அவர்களைத் தாண்டிப் போகும்போது, திடீரென்று விஜயின் கரம் நீண்டு வந்து ரோஜாவின் தோளில் பதிந்து, அழுத்தமாய்ப் பற்றி நிறுத்தியது.

திடுக்கிட்ட அவள் நின்றுவிட்டாள். ஆனால் பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை. அவளின் தோள் வலிக்கும் அளவுக்கு அழுத்தமாய்ப் பற்றி இருந்த விஜய், சட்டென்று இழுத்து அவளைத் தன்புறம் திருப்பிக் கொண்டான். விஜய் ரோஜா எதிரெதிரே நின்றிருந்தார்கள்.

ரோஜா தயங்காமல், பயப்படாமல் அவன் கண்களை நேராகப் பார்த்தாள். விஜயின் கண்கள் அக்னிப் பிழம்பு

களாய் இருந்தன. தவறு செய்து விட்டுப் பிடிப்பட்டு விட்ட பிறகும் இந்தப்பெண்ணுக்கு எவ்வளவு துணிச்சல்? எவ்வளவு அகங்காரம்? அவளிடம் வெறுப்பு ஏற்பட்டதோடு, எப்படி யாவது உண்மையைக் கக்க வைக்க வேண்டுமென்ற பிடி வாதம் ஏற்பட்டது விஜய் கையில் சிக்கிக் கொண்ட தோளை விடுவித்துக் கொள்ள ரோஜா முயன்றாள். ஆனால் சாத்தியப்படவில்லை

"லாவண்யாவின் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டுப் போ" என்று உறுமுவதுபோல் மொழிந்தான் விஜய்.

ரோஜா ஒருகணம் அவனையே கண் இமைக்காமல் பார்த்தாள். பிறகு அலட்சியமாய், தோள்களைக் குலுக்கி விட்டுச் சொன்னாள். "வேலை வெட்டி இல்லாதவங்க கேட்கிற குப்பையான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை."

ரோஜாவின் தோளைப் பற்றி இருந்த விஜயின் கை, சடேரென்று காற்றில் எழும்பியது. அப்படியே ரோஜாவின் கன்னத்தில் சரேலென்று இறங்கியது. திடுக்கிட்ட லாவண்யா, மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள். ரோஜாவுக்குக் கண்களை இருட்டுக் கொண்டு வந்தது.

அறையிலிருந்து வேணுகோபாலன் வெளியே வந்தார். "விஜய்! என்ன இது? என்னாச்சு?" அருகில் வந்து கொண்டே பதட்டத்துடன் கேட்டார்.

விஜய் அவர் பக்கம் திரும்பவில்லை. ரோஜாவையே தீவிரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"விஜய்! என்ன விஷயம்? ரோஜா... என்ன ஆச்சு?" இருவரையும் பார்த்துக் கொண்டே கேட்டார்

ரோஜா கன்னத்தைக் கையால் பற்றிக் கொண்டு உயிரற்ற பதுமையாகக் கண்கள் அகல, விஜய் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

லாவண்யா இடையில் புகுந்து சொன்னாள்.

"என்னவா? இன்னைக்கு இந்த மேனா மினுக்கியின் திருவிளையாடலை. நானும், விஜயும் கண்ணாரச் சுயமாய் பார்த்தோம்."

"வாயை மூடு" என்று மகள் பக்கம் திரும்பிய வேணு



கோபாலன் கத்தி விட்டார்.

அவர் பக்கம் திரும்பிய விஜய், "வாயை மூடிக் கொள்ள வேண்டிய தேவை லாவண்யாவுக்கு இல்லை. இந்தப் பெண் ணுடன், உங்களுக்கு இருக்கும் நெருக்கத்தைப் பற்றிக் கேள்வி கேட்கும் உரிமை லாவண்யாவுக்கு இருக்கு" என்றான்.

"விஜய்! உனக்குப் புத்தி கலங்கிவிட்டதா? அவளுடைய சின்ன புத்திக்குத்தான், எதுவும் விபரீதமாய் படும், ஆனால் நீ..."

"ஆமாம்! நானும் பதிலை எதிர்பார்க்கிறேன்" தாடை எலும்பை இறுக்கிக் கேட்டான் விஜய்.

"விஜய் உனக்கு மூளையே இல்லை. இப்படிவா... என் னோடு வா... நான் சொல்கிறேன்" என்று அவனுடைய தோளைப் பற்றி தன் அறைக்குள் தள்ளிவிட்டு தானும் உள்ளே போனார். அடுத்த நிமிடம் அந்த அறையின் கதவு கள் மூடிக் கொண்டன.

திக்பிரமை அடைந்து, பதுமையாய் நின்றுவிட்ட ரோஜாவை, லாவண்யா குத்திக் கிழிப்பது போல் சொன் னாள் "உனக்கு வெட்கம், மானம் என்று ஒன்று இருந்தால், மறுபடியும் இந்த வீட்டு வாசற்படியை மிதிக்காதே! நம்பிக்கைத் துரோகி! சாப்பாட்டுக்கு வழியில்லை என்று வந்தவளுக்கு, இந்த வீட்டில் வேலை கொடுத்து, ஆதரித்த தற்கு, நீ காட்டும் நன்றி இதுதானா? உன் தந்தையைப் போன்றவர் என்று கூடப் பாராமல் நீ செய்த காரியம் இதுதானா? போ வெளியே! மறுபடியும் இந்த வீட்டுக்குள் வர முயற்சி செய்தால், நான் பொல்லாதவளாகி விடுவேன்! வேலைக்காரியாக வந்து வீட்டுக்கே ராணியாகி விடலா மென்று நினைத்துவிட்டாயா?"

"என்ன லாவண்யா? என்ன நடந்தது?" என்று மிஸ் ஜோஷி வந்தாள்.

லாவண்யா சுருக்கமாக நடந்ததைச் சொன்னாள்.

"அம்மாடியோவ்! இந்தக் காலத்தில் வேலைக் காரர்களை நம்பவே கூடாது! ஒரு தடவை எங்க ஊரில் என்ன நடந்தது தெரியுமா?" என்று கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

லாவண்யா, மிஸ் ஜோஷி இருவரும் ரோஜாவை புழுவைப் பார்ப்பது போல், பார்த்து விட்டுப் போய் விட்டார்கள்.

## 54

காலை ஒன்பது மணியான பிறகும், இன்னும் எழுந்து கொள்ளாமல் அப்படியே படுக்கையில் உட்கார்ந்து இருந்த ரோஜாவை சுந்தரி எச்சரித்தாள்.

"என்ன ரோஜா? இன்னும் எழுந்திருக்கலை?"

"உடம்பு சரியாயில்லை மாமி"

"இன்னிக்கு வேலைக்குப் போகப் போறதில்லையா?"

இல்லை என்பது போல் தலை அசைத்தாள்.

"கொஞ்சம் வீட்டைப் பாத்துக்கோ. நான் கோவிலுக்குப் போயிட்டு வந்திடறேன்..."

"சரி மாமி"

சுந்தரி சமையல் அறைக் கதவை வெறுமே சாத்திவிட்டு ...அடுப்புப் பக்கத்தில் காபியை வைத்திருப்பதாகவும், சூடு பண்ணி குடிக்கும்படி ரோஜாவிடம் சொல்லிவிட்டுப் போய் விட்டாள். அவள் கிளம்பிப் போய் அரைமணி நேரம் ஆன பிறகும் ரோஜா அப்படியே உட்கார்ந்து இருந்தாள்.

பழிச் சொல் என்பது மனிதனை எத்தனை வேதனைப் படுத்துமென்று ரோஜா அனுபவித்துக் கொண்டிருந்தாள்.



தந்தையைப் போன்ற வேணுகோபாலனுடனா தகாத உறவு இருப்பதாக லாவண்யா பழியைச் சுமத்தியது? லாவண்யா வேண்டுமென்றே அப்படிச் சொன்னாளா? இல்லை மனப் பூர்வமாய் நம்பி வெளியிட்ட உண்மையா? எதுவாக இருந்தாலும் அந்தச் சொற்களுக்கு ரொம்ப சக்தியிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும், நினைவுக்கு வரும் போதெல்லாம் ஈட்டியால் குத்தியது போன்ற வேதனை ஏற்பட்டது.

ரோஜாவுக்கு வாழ வேண்டுமென்ற விருப்பம் நசிந்து போயிற்று. ஒவ்வொரு கணமும் எதிர்காலத்தை நினைத்து பயந்துகொண்டு, அவமரியாதைகளைச் சகித்துக் கொண்டு, அப்படியேனும் இந்த வாழ்க்கையை வாழத்தான் வேண்டுமா? தற்கொலையைப் பாவமான காரியமாய் இத்தனை நாள் நம்பியிருந்தவளுக்கு, வேதனையில் துடிக்கும் இதயத்துக்கு அது எவ்வளவு அமைதி தருமென்று இன்று புரிந்தது.

தன்னிலை மறந்து, யோசனைகளில் ஆழ்ந்துவிட்டவள், வீட்டின் முன் கார் வந்து நின்றதைக் கவனிக்கவில்லை. காரை விட்டு இறங்கிய ராதை உள்ளே ஓடிவந்தான். யோசனைகளிலிருந்து மீண்ட ரோஜா ராதையை அடையாளம் கண்டு கொள்ளும் முன் டிரைவர் ராமு உள்ளே வந்து, சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்துக் கொடுத்தான்.

"என்ன இது?" ரோஜா கேட்டாள்.

"ஐயா உங்களிடம் கொடுக்கச் சொன்னாங்க."

ரோஜா கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். வேணுகோபாலனின் கையெழுத்துதான்! வழக்கம் போல் இல்லாமல், கோணல் மாணலாய் இருந்தது.

"கண்ணம்மா... ரோஜா... நேற்று நடந்த நிகழ்ச்சி உன் மனதை எவ்வளவு பாதித்து இருக்குமென்று என்னால் ஊகித்துக் கொள்ள முடியும். விஜய் தன் தவறை உணர்ந்துவிட்டான். நேற்று இரவு எனக்கு

உடம்பு ரொம்ப சரியில்லாமல் போய்விட்டது. நடந்ததை மனதில் வைத்துக் கொள்ளாமல் உடனே கிளம்பி வா! உன்னிடம் நிறைய பேச வேண்டும். உனக்காக எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன், டாக்டர் என்னை கட்டிலை விட்டு இறங்கக் கூடாதென்று தடுத்து விட்டார். இல்லாவிட்டால் ராதையுடன் நானே வந்திருப்பேன்…"

உன் தந்தை
வேணுகோபாலன்…

கடிதத்தைப் படித்ததும், ரோஜாவின் கண்கள் பனித்தன… எவ்வளவு உயர்ந்த உள்ளம் படைத்தவர்? ரோஜாவின் பார்வை கடிதத்தின் கடைசியில் "உன் தந்தை" என்ற வார்த்தை மீது நிலைத்தது.

அவசரத்தில், உடல் நலம் குன்றிய நிலையில் அவர் "உன் தந்தையைப் போன்ற" என்று எழுதுவதற்குப் பதிலாக, 'உன் தந்தை' என்று எழுதிவிட்டார். நிஜமாகவே அவர் தன் தந்தையாக இருந்திருந்தால்…? ரோஜாவின் கண்களில் நீர் ஊற்றாய் பெருகியது.

"சீக்கிரமாய்க் கிளம்புங்கம்மா! டாக்டருக்காகக் காரை எடுத்துக்கிட்டுப் போகணும். அவரோடது ரிப்பேராம்…" டிரைவர் சொன்னான்.

"இதோ கிளம்பி விடுகிறேன்… ஒரே நிமிஷம்…" கன்னங்களில் வழிந்த நீரை துடைத்துக் கொண்டே ரோஜா சொன்னாள்.

சற்றுமுன் வரை ரோஜாவிடம் நிலவியிருந்த விரக்தியை, வேதனையை வேணுகோபாலனின் கடிதம் விசித்திரமாய்ப் போக்கி விட்டது. தான் எந்தத் தவறையும் செய்யாதபோது எதுக்காகப் பயப்பட வேண்டும்? செந்தூரைப் பற்றித் தெரிந்தபிறகும், தன்மீது துளிக்கூடச் சந்தேகப்படாத, வேணுகோபாலனைவிட, இந்த வேலையற்ற மனிதர்களின் பேச்சை லட்சியம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? தன்



வரவுக்காக அவர் எப்படி காத்துகிட்டு இருப்பாரோ ரோஜா அறியாதவள் அல்ல. உடனே கிளம்பி, ராதையுடன் காரில் ஏறிக் கொண்டாள்.

கார் வேணுகோபாலன் வீட்டு முன் நிற்காமல், நேராய் விஜய் வீட்டுக்கு முன் வந்து நின்றது.

"இதென்ன? இங்கே எதுக்கு?" என்று ரோஜா கோபமாய்க் கேட்டாள்.

"ஐயா இங்கேதான் இருக்காங்க. நேற்று மாலை பெரிய ஐயாவுக்கும், லாவண்யா அம்மாவுக்கும் ஏதனாலோ பெரிய சண்டை வந்தது. ஐயா, லாவண்யாம்மாவை அடிக்கப் போய் நிலைத்தடுமாறி கீழே விழுந்துட்டாங்க. நெஞ்சு வலி வந்து உடனே டாக்டர் வந்து பார்த்தாங்க. இரவு பதினொரு மணிக்குமேல் விஜய் தம்பி வந்து ஐயாவை இங்கே அழைச்சுகிட்டு வந்தாங்க" என்று டிரைவர் விளக்கமாய்த் தெரிவித்தான்.

வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டு விஜய் வெளியே வந்தான்.

ரோஜா காரிலிருந்து இறங்கவில்லை; அப்படியே உட்கார்ந்திருந்தாள். விஜய் கார் அருகில் வந்து கதவைத் திறந்தான். வேண்டாமென்று நினைத்தாலும், அவளால் விஜயைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அப்பொழுதுதான் குளித்து விட்டு வந்திருக்க வேண்டும். காலை இளம் காற்றில், அடர்த்தியான தலைமுடி கலைந்து முன் நெற்றியில் விழுந்திருந்தது. தூக்கமின்மையால் முகத்தில் களைப்பு தென்பட்டபோதும், மின்னல் ஒளிவீசும் கண்கள், பார்ப்போரை ஈர்க்கச் செய்தது.

கணநேரம் ரோஜாவைப் புன்முறுவலுடன் கவனித்த விஜய், அவளின் மனதைப் படித்து விட்டவன்போல், "கீழே இறங்காமல் முடியாது. அவர் இங்கேதான் இருக்கிறார்" என்றார்.

அந்த புன்முறுவலில் ரோஜாவை மருண்டச் செய்யும்

குறும்புத்தனத்திற்குப் பதில், குளிர்ச்சியான தோழமை உணர்ச்சி தென்பட்டது. பேச்சில் உரிமையும், நெருக்கமும் தெளிவாகத் தெரிந்தன.

அவன் போக்கைப் பார்த்தால், நேற்று நடந்த நிகழ்ச்சி பற்றி சந்தேகமோ, வெறுப்போ நினைவுக்கு வரவில்லை. விஜயின் இந்த சகஜத் தன்மையைக் கவனிக்கும்போது, ரோஜாவுக்கு தான் கனவு காண்கிறோமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது

இதற்குள் ராதையை இறக்கி விட்ட விஜய், ரோஜா இறங்குவதற்காக என்பதுபோல் கையை நீட்டினான்; ஆனால் அவள் அதைப் பாராதவள் போல், காரில் இருந்து இறங்கினாள்.

"மாடியில் இருக்காங்க." முன் அறைக்கு வந்ததும், ரோஜாவுக்கு மாடிப் பக்கம் கையைக் காண்பித்துவிட்டு, ராதை உடன்வர சமையலறைப் பக்கம் சென்றான் விஜய்.

மேனி முழுவதும் மெல்லிய நடுக்கம் பரவ, உத்வேகத்துடன் துடித்துக் கொண்டிருந்த மனதைக் கட்டுப்படுத்தி, ஒவ்வொரு படியாய் ஏறி, மாடிக்குப் போனாள் ரோஜா. திரைச்சீலை ஒருபக்கம் ஒதுங்கியிருந்தது. அனந்தின் கட்டில் மீது வேணுகோபாலன் படுத்திருந்தார்.

நிலைப்படியருகில் வந்த ரோஜா அங்கேயே நின்று விட்டாள் கண்கள் மூடிப் படுத்திருந்த வேணுகோபாலனின் கண்களிலிருந்து கண்ணீர் கோடாய் வழிந்து கொண்டிருந்தது. ரோஜாவின் வலது கை அவளறியாமல் நெஞ்சின் மீது பதிந்தது. அவர் அருகில் செல்வதா, கூடாதா என்று தெரியவில்லை.

எதுக்காகவோ கண்களைத் திறந்த வேணுகோபாலன் எதிரே நிலைப்படியில் பதுமை மாதிரி நின்றிருந்த ரோஜாவைப் பார்த்ததும், "ரோஜா" என்று எழப் போனார்.

இரண்டே எட்டில் அவர் அருகில் சென்று விட்டாள் அவள். எழுந்து கொள்ள முயற்சி செய்த வேணுகோபாலன்,



முடியாமல் பின்னால் சாய்ந்து விட்டார்.

"ரோஜா" குரல் கம்மிவிட, பேச்சும் தெளிவற்று இருந்தது; அவர் கைகளை நீட்டினார். சரேலென்று கட்டில் அருகில் சரிந்துவிட்ட ரோஜா, நீட்டிய அவர் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"வந்து விட்டாயாம்மா? வர மாட்டாயோ என்று நினைத்து விட்டேன்" வலது கையால் தலையை வருடி விட்டார்.

அவருடைய பேச்சில் என்ன மகிமை இருந்ததோ தெரியவில்லை; மடைதிறந்த வெள்ளமாய்த் துக்கம் பொங்கி வந்தது ரோஜாவுக்கு. நெஞ்சைப் பிளந்துகொண்டு வெளியே வரும் அந்தத் துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

நேற்றிரவு முழுவதும் அவள் பட்ட வேதனை, வருத்தம் எல்லாம் கண்ணீர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. சற்றுநேரம் கழித்து ரோஜா வேணுகோபாலன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, அவர் கையைத் தன் கைகளால் பற்றிக் கொண்டாள்.

அவர் முகத்தைப் பார்க்கும்போது ரோஜாவுக்கு வியப்பாக இருந்தது. ஒரே இரவில் இவ்வளவு மாறுதல் ஏற்படுவது சாத்தியமா? அவர் முகம் வீங்கி, கண்களின் கீழ் கருவளையம் படிந்து தெரிந்தது. அவர் சாதாரணமாகப் பேச முயன்றாலும், குரலில் வேதனை, கவலை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது

"செந்தூரவைப் பற்றி இப்பவாவது நீ சொன்னது ரொம்ப நல்லதாகி விட்டது. அவனைப் பற்றி இனி நீ கவலைப்பட வேண்டாம் அந்தப் பொறுப்பையெல்லாம் விஜயிடம் ஒப்படைத்து விட்டேன்" என்றார் வேணுகோபாலன்.

திடுக்கிட்டாற்போல் பார்த்தாள் ரோஜா. அதைப் புரிந்து கொண்டவர் போல் அவர் மேலும் சொன்னார்: "இதப் பாரு ரோஜா! நான் இருந்தாலும், இறந்து

விட்டாலும் ஒன்று மட்டும் நன்றாக நினைவில் வைத்துக் கொள். எனக்குப் பிறகு உன் நலனில் அக்கறை கொண்டவர்களில் விஜய்தான் முதல் ஆள் என்று தெரிந்து கொள். நான் போனாலும் ராதையுடன், உன் நலனைப் பற்றிய பொறுப்பையும் அவன் ஏற்க வேண்டுமென்று அவனிடமிருந்து வாக்கைப் பெற்றுக் கொண்டேன். நீ என்னை எப்படி மதிக்கிறாயோ, அதைவிட அதிகமாய் விஜயின் வார்த்தையை நீ மதிக்கணும். அப்படிச் செய்வதாக எனக்கு நீ சத்தியம் செய்து தாணும்.''

இதற்குள் படிகளில் காலடி அரவம் கேட்டது. ரோஜா எழுந்து கொண்டு, அவருடைய தலைமாட்டில் நின்று கொண்டாள். விஜய் டாக்டர் இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

டாக்டர் வேணுகோபாலனைப் பரிசோதனை செய்து கொண்டே, ''கொஞ்சம் வெந்நீர் வேண்டும்'' என்றார்.

விஜய் ரோஜா பக்கம் பார்த்தான். அவள் வெந்நீர் போட, படியிறங்கி மெதுவாகச் சமையல் அறைப் பக்கம் வந்தாள்.

## 55

இயந்திரத்தனமாய் ரோஜா அறையைவிட்டு வெளியே வந்து விட்டாளே தவிர, சமையல் அறைப்பக்கம் அவளால் போக முடியவில்லை. சலனமற்றவளாய் அங்கேயே நின்று விட்டாள்.

மாடியிலிருந்து அவருடைய குரல் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது, ''டாக்டர் ஒரு மாதம்... இல்லை இல்லை... ஒரு வாரமாவது நான் உயிருடன் இருக்க வேண்டும். நான் முக்கியமாக செய்ய வேண்டிய வேலைகள் சில இருக்கு. அதை முடிக்காமல் மட்டும் நான் இறந்து விட்டால், என் ஆத்மாவுக்கு அமைதி என்பதே கிடைக்காது.''



''அப்படிச் சொல்லாதீர்கள்... நீங்க இப்படி உணர்ச்சி வசப்படாமல் இருந்தால், ஒரு வாரமென்ன பத்து வருடங்கள் கூட நிம்மதியாய் வாழலாம்...'' டாக்டர் உரிமையுடன் அதட்டுவதுபோல் சொன்னார்.

''என்னவோ டாக்டர்! உயிர் இருப்பதும், போவதும் நம் கையிலா இருக்கிறது. விஜய் உனக்கும் சொல்கிறேன். நான் சொன்ன வேலையைச் சீக்கிரமாய் முடிக்க ஏற்பாடு பண்ணி விடு.''

''நீங்க கவலையே படாதீங்க. எல்லாம் நல்லபடியாக முடிக்கும் பொறுப்பு என்னோடது சரிதானே...'' வாக்குக் கொடுப்பதுபோல் சொன்னான் விஜய்.

பலவீனமான தன் இதயம் எந்தக் கணமும் நின்று விடலாம் என்ற எதிர்பார்ப்பில் அவர் சமீபத்தில் உயிலை எழுதுவதைப் பற்றி அடிக்கடி பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தார்.

ரோஜா பெருமூச்சை விட்டுக் கொண்டாள். தான் வந்ததிலிருந்து கவனித்துதான் இருக்கிறாள். லக்ஷ்மி கடாட்சம் அபரிமிதமாய் பெற்றிருக்க வேணுகோபாலன், ஒருநாள்கூட நிம்மதியாய், மகிழ்ச்சியாய் இருந்து பார்த்ததில்லை. லாவண்யா கொஞ்சம் விவேகத்துடன் நடந்து கொண்டால், அவருக்கு இந்த அமைதியின்மை இருந்திருக்காதோ?

வெந்நீருக்காக அவர்கள் காத்திருப்பார்கள் என்ற நினைவு வந்ததும், மெதுவாய் ஒவ்வொரு படியாய் இறங்கி வந்தாள். சமையல் அறைப் பக்கம் போக கால்கள் மறுத்தன.

ரோஜாவுக்கு அந்த வீடு சிறைச்சாலை போலவும், தன் அபிமானமும், ரோஷமும் அதில் அடைப்பட்டிருப்பது

போலவும் தோன்றிற்று. வேணுகோபாலனுக்காக இந்த வீட்டிற்கு வரும்படி ஆகி விட்டது. கூடிய சீக்கிரத்தில் இந்த வீட்டைவிட்டு வெளியேறி விடவேண்டும்.

இந்த வீடு அனந்துக்குத்தான் சொந்தம், விஜய்க்கு இதில் உரிமையில்லை என்று ஒருபுறம் மனம் எச்சரித்தாலும், அந்த வீட்டின் ஒவ்வொரு பொருளிலும், விஜயின் கைவண்ணம் தெளிவாகத் தெரிந்தன.

ஐந்து நிமிடங்கள் சென்றன. படிகளில் காலடி அரவம் கேட்டு ரோஜா தலையைத் திருப்பிப் பார்த்தாள். விஜய் வேகமாய் படியிறங்கி வந்து கொண்டிருந்தான்

படியருகில், அப்பொழுதுதான் அந்த வீட்டுக்குப் புதிதாக வந்தவள்போல் நின்றிருந்த ரோஜாவைப் பார்த்ததும், "வெந்நீர் எங்கே?" என்றான். அந்தக் கேள்வியில் 'இதென்ன... இங்கே நின்றுவிட்டாய்' என்ற வியப்பும் தொக்கி நின்றது.

அவள் பதில் சொல்லவில்லை. விஜய் சமையலறைப் பக்கம் சென்றான். ரோஜா பின்னாலிருந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்? எவ்வளவு விசித்திரமான மனிதன்? எவ்வளவு சகஜமாய்ப் பேசுகிறான்? எதுவுமே நடவாதது போல், எதையுமே அறியாதவன் போல் நடந்து கொள்கிறான்.

நிமிடத்தில் கோபித்துக் கொள்வதும், அந்தக் கோபத்தில் தன்னை மறந்து நடப்பது, அடுத்த கணமே நினைவேயில்லாதது போல் சகஜமாகப் பழகுவது அவனுக்கு வழக்கமான விஷயம் போலும்!

ஆனால் அவமானப்படுத்தியவர்களை விட, அவமானப் பட்டவர்களால், அதை அவ்வளவு எளிதில் மறக்க முடியாது என்ற விஷயம் அவனுக்குத் தெரியாதோ என்னவோ?

விஜய் வெந்நீரை எடுத்துக்கொண்டு படியருகில் ஒரு நிமிடம் நின்று கூறினான், "இப்படி இங்கு நின்று தவம் புரிவதை, சமையலறையில் போய் செய்யலாமே? டாக்டருக்குக் கலந்து தரணும்; அடுப்பில் பால் வைத்திருக்கிறேன்."



அவன் போகும்போது ரோஜாவால் தலையை உயர்த்தி அவனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவளுடைய பார்வையை உணர்ந்தவன் போல் தலையைத் திருப்பிப் பார்த்தான் விஜய்.

"பால் காய்ந்ததும், அடுப்பை அணைத்து விட்டால், நன்றி உடையவனாய் இருப்பேன். காபி கலக்க வேண்டுமோ என்ற பயம் வேண்டாம்; நான் வந்து கலந்து கொள்கிறேன்."

அவன் உதடுகளில் நெளிந்த புன்முறுவலைப் பார்க்கும் போது அவளுக்கு ரோஷம் பற்றிக் கொண்டு வந்தது. அவள் எதிர்பார்த்ததுபோல் விஜய் உடனே திரும்பி வரவில்லை. அடுப்பில் பால் வைத்ததையே மறந்து விட்டவன்போல் மாடியிலேயே இருந்து விட்டான்.

ரோஜா சமையலறைக்கு வந்தாள். பால் காய்ந்து விட்டதைக் கவனித்து உடனே அடுப்பை அணைத்து விட்டாள். பக்கத்து அடுப்பில் வெந்நீர் தளைத்துக் கொண்டு இருந்தது; மேடையில் தயாராக காபிபொடி போட்டு வைத்திருந்த ஃபில்டரில் வெந்நீரை ஊற்றி அந்த அடுப்பையும் அணைத்து விட்டாள்.

இதற்குள் விஜய் வந்துவிட்டான். வாசல்வரை வந்தவன் உள்ளே வாராமல் வெளியிலேயே நின்று விட்டான். நிலைப் படியின் மீது கையை ஊன்றி நின்றவன், "இந்த நேரத்தில் டாக்டர் காபி குடிக்க மாட்டாராம்; அந்த சாத்துக்குடியை எடுத்து சாறு பிழிந்து தந்தால், கொண்டுபோய்க் கொடுத்து மரியாதை தெரிந்தவன் என்ற பாராட்டைப் பெற்று விடுவேன். வரவர எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்ற துடிப்பு அதிகமாகி விட்டது."

கதவுக்குக் குறுக்கே அவன் நின்றவிதத்தைப் பார்த்தால், அந்த சாறு பிழிந்து தரும்வரை, வெளியில் வரவிட மாட்டான் போலிருந்தது.

மேடைமீது சாறு பிழியும் கருவியும் கத்தியும் இருந்தன. ரோஜா அவனுடன் வாதம் புரியவில்லை. இரண்டாவது முறை சொல்லும்படியாக வைத்துக் கொள்ளவில்லை. ஜெயில் அதிகாரியின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் கைதியை மாதிரி, சமையலறையில் அடைப்பட்டு விட்ட அவள் மறுபேச்சு பேசாமல், சொன்னதைச் செய்தாள்.

சாறு எடுத்து கண்ணாடி டம்ளரில் ஊற்றி விஜயின் கையில் தராமல், மேடைமீது வைத்து விட்டாள்.

அதைக் கவனித்த விஜய் கண்களில் குறும்புத்தனம் கொப்பளிக்கச் சொன்னான், "இளம் பெண் தனியாக இருக்கும் அறைக்குள் அடி எடுத்து வைக்கும் பழக்கம் எனக்கு இல்லை; அது சமையலறையாக இருந்தாலும் சரி. அந்த டம்ளரை எடுத்து இப்படிக் கொடுத்தால் எடுத்துக்கிட்டுப் போவேன்..."

ரோஜா பதில் பேசவில்லை; எடுத்து தரவும் இல்லை. அவன் சொன்னது காதில் விழாதது போல் மௌனமாக இருந்தாள்.

"உனக்குத்தான் சொல்கிறேன்; ஏற்கெனவே என்னை ரொம்ப கெட்டவனாக்கி விட்டாய். நான் உள்ளே வந்தால் என்ன நடக்குமோ, எனக்கே தெரியாது. பிறகு என்னைக் குற்றம் சொல்லக் கூடாது."

ரோஜா தீவிரமாய் அவனைப் பார்த்தாள். அவன் முகம் சீரியஸாய் இருந்தது. சற்று முன் வலிந்து பேசிய குறும்புத் தனம் தென்படவில்லை. விஜய் சீரியஸாய் இருந்தான் என்றால், சொன்னதை செய்தே தீருவான்.

அவள் என்ன நினைத்துக் கொண்டாளோ, சட்டென்று டம்ளரை எடுத்துக் கொடுக்கப் போனாள்... டம்ளரை அப்படியே கொடுத்தால், அவன் விரல்கள் தன் விரல்களில் பட்டுவிடுமோ என்று பயந்தவள்போல், உள்ளங்கையில் டம்ளரை வைத்துக்கொண்டு அவன் முன் நீட்டினாள்.



விஜய் உடனே டம்ளரை எடுத்துக் கொள்ளவில்லை. ஒருகணம் டம்ளரையும், தலைகுனிந்து நின்ற ரோஜாவையும் மாறிமாறிப் பார்த்தான்.

"ரோஜா" இனிமையாக அவன் குரல் ஒலித்தது. "ரோஜா... நேற்று நடந்ததற்கு நான் ரொம்ப வருத்தப்படு கிறேன். நான் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் என்று ஒப்புக் கொள்கிறேன். கண்ணால் பார்க்கும் சக்தியிருந்தும் குருடனாகி விட்டேன். வேணுகோபாலனிடம் எனக்கு தந்தையைவிட மதிப்பு அதிகம். அவருடைய நல்லதனம், கருணை உள்ளம்பற்றி என்னைவிட வேறு யாரும் அதிகமாய் அறியமாட்டார்கள். ஆனால் காமாலைக் கண்களுடன் பார்த்த நான் கயிற்றைப் பாம்பாக எண்ணிவிட்டேன். இரவெல்லாம் நான் உறங்கவில்லை; நீ நம்பினாலும், நம்பா விட்டாலும் இதுதான் உண்மை..."

ரோஜா தலை உயர்த்தி, கண்கள் அகலமாய் விரிய, அவன் முகத்தை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளின் கண்களை ஆழமாய் பார்த்துக்கொண்டே விஜய் சொன்னான், "காலையில் கார் அனுப்பியதும், நீ வந்தது ரொம்ப நல்லதாகி விட்டது. இல்லாவிட்டால் நானே உன் வீட்டுக்கு வந்திருப்பேன். இது மட்டுமில்லை. அனந்த் விஷயத்தில் நான் உன்னைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டேன் என்று தெரிந்ததிலிருந்து, உன்னுடன் தனிமையில் பேச எவ்வளவு முயன்று வந்தேனென்று உனக்குத் தெரியாது. தவறு செய்வது மனித இயல்பு. ஆனால் அதை உணர்ந்து சரிசெய்ய முயலுவதும், மன்னிப்புக் கேட்டுக் கொள்வதும, நல்ல மனிதர்களுக்கு அடையாளம். ஆனால் நம் விஷயத்தில் நான் 'சரி' என்று சொல்லிவிட்டால் என் தவறு நீங்கிவிடுமென்று நான் நினைக்கவில்லை.

தெரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தாலும் என்னால் உனக்கு ரொம்ப வேதனை ஏற்பட்டது. அதற்குப் பிரதிபலனாய், நீ எது கேட்டாலும், தருவதற்கு நான் தயாராய் இருக்கிறேன். எதைச் செய்யச் சொன்னாலும்

செய்கிறேன். மனப்பூர்வமாய்ச் சொல்கிறேன் ரோஜா, என்னால் உனக்கு ஏதாவது நன்மை ஏற்படணும். அது எப்படி நடக்குமோ? நான் எது செய்தால் உனக்கு நன்மை விளையுமோ எனக்குத் தெரியாது. என்னிடமிருந்து நீ எதை வேண்டுமானாலும் பெறலாம். உன் அபிப்பிராயம் எதுவாக இருந்தாலும் தயங்காமல் என்னிடம் சொல்லலாம். ரோஜா! இதுவரை உன்னை மிரட்டி வந்த விஜய் வேறு. அவன் உன் எதிரி. இப்போ உன் எதிரில் நிற்கும் இந்த விஜய் வேறு. இவன் உன் நண்பன். உனக்கு ஆதரவாய் இருக்க வேண்டுமென்று மனதார விரும்பும் மனிதன். இந்த விஜயைப் பற்றி யாரிடமாவது கேட்டுப் பாரு... நட்புக்காக உயிரைக் கொடுப்பான் என்று சொல்வார்கள்.''

விஜய் ரோஜா கையிலிருந்த டம்ளரை எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

ரோஜா பதுமையாய் நின்று விட்டாள். அவன் சொன்னதெல்லாம் உண்மைதானா? கனவு இல்லையே?

சற்றுநேரம் கழித்து டாக்டர் கிளம்பிப் போனார். அவருடன் விஜயும் கிளம்பினான். ரோஜா, வேணு கோபாலன் இருந்த அறைக்கு வந்தாள். அவர் தூங்கியிருக்கலாம் என்ற நினைப்புடன் உள்ளே எட்டிப் பார்த்தாள்.

''வாம்மா... உள்ளே வா'' என்று அவர் அழைத்தார்.

ரோஜா உள்ளே வந்தாள்.

''உட்காரும்மா...'' அனந்தின் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த அவர், விஜயின் கட்டிலில் அமரும்படி அவளுக்கு சைகை காட்டினார்.

ரோஜா அந்தக் கட்டிலில் அமர்ந்து கொள்ளவில்லை. பால்கனியிலிருந்த மடக்கு நாற்காலியைக் கொண்டு வந்து அவருக்குப் பக்கத்தில் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள்.

''விஜய் இன்னும் வரவில்லையா?''

''இல்லை.''



ஒருகணம் நிசப்தம் நிலவியது. ரொம்ப நாட்கள் கழித்து இந்த அறையில் அடியெடுத்து வைத்த ரோஜாவுக்குப் பழைய நினைவுகள் மனதில் அலைமோதின.

''ரோஜா...'' என மெல்லென்று அழைத்தார் வேணு கோபாலன்.

என்னவென்பதுபோல் பார்த்தாள் அவள்.

''விஜயிடம், செந்தூரனைப் பற்றி, நேற்று நீ என்னிடம் சொன்னதையெல்லாம் சொல்லி விட்டேன். செந்தூரனை வழிக்குக் கொண்டு வரும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து விட்டேன்.''

''விஜய்க்கா? செந்தூரனைப் பற்றியா?'' இடிக்கேட்டாற் போல் கேட்டாள் ரோஜா.

'எனக்கு வேறு யாரும் சரியான நபராய்த் தோன்றவில்லை. என்னைப் பற்றி உனக்குத் தெரியுமே! கூடிய சீக்கிரத்தில் அவர்களை ஒருவருக்கொருவரை அறிமுகப் படுத்தி விடு. நடுவில் என் பிரஸ்தாபனையே வேண்டாம்.'

விஜய்க்கு செந்தூர ஒரு திருடன் என்று தெரிந்து விட்டதா? தெரிந்த பிறகும் தன்னுடன் அப்படிப் பேசினானா? ரோஜாவால் நம்ப முடியவில்லை.

''இன்னொரு விஷயமும் உன்னை ரொம்ப நாட்களாய் கேட்கணும்னு நினைத்திருந்தேன்.''

''கேளுங்கள், என்ன விஷயம்?'' பணிவுடன் கேட்டாள்.

''விஜய் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?''

ரோஜா அதிர்ச்சி அடைந்தாள்! சட்டென்று எழுந்து ஜன்னலருகில் சென்றாள்; ஜன்னல் திரைச்சீலையை விலக்கி, சரி செய்வதுபோல் அங்கேயே நின்றுவிட்டாள்.

முதுகைக் காண்பித்துக் கொண்டு நின்ற ரோஜாவைப் பார்த்துக்கொண்டே அவர் சொன்னார்.

''ரோஜா சீக்கிரமாய் உனக்குத் திருமணம் முடித்து விட்டால்தான் எனக்கு நிம்மதி.''

ரோஜா ஜன்னல் வழியாய் வெளியில் பார்த்தாள்,

எதிரில் வேணுகோபாலன் வீடு தெரிந்தது. அன்று அனந்துடன் சேர்ந்து முதல் முறையாய் இந்த வீட்டுக்கு வந்த போது இதே ஜன்னல் வழியாய்ப் பார்த்த நிகழ்ச்சி கண் முன் நிழலாடிற்று. அன்று லாவண்யாவைப் பார்த்து எவ்வளவு பொறாமைப்பட்டாள்?

"பதில் சொல்லு ரோஜா..."

அவள் திரும்பிப் பார்த்தாள். வேணுகோபாலன் தலையணையில் சாய்ந்தாற்போல் அமர்ந்து கொண்டார்.

"வேறு சமயம் இதுபற்றிப் பேசிக் கொள்ளலாம். இப்போ நீங்க ஓய்வு எடுத்துக் கொள்ளுங்க."

"ஊஹூம்! உன் பதிலைக் கேட்டால்தான் எனக்கு நிம்மதியாக இருக்கும். உன் மனதில் வேறு யாராவது இருக்காங்களா?"

இல்லை என்பதுபோல் தலையசைத்தாள்.

"பின்னே..." சந்தேகத்துடன் நோக்கியவர் மேலும் கேட்டார். "அனந்துக்கும், உனக்கும் நெருக்கம் என்று எனக்குத் தெரியும். அந்த நெருக்கம் வெறும்...".

"இரு நண்பர்களுக்கிடையே இருக்கும் நெருக்கம் மட்டும்தான்" புன்முறுவலுடன் முடித்தாள் ரோஜா.

பெரிய பாரம் நீங்கினாற் போல் இருந்தது வேணுகோபாலனுக்கு.

"உன் மனதில் வேறு யாரும் இல்லை என்றபோது, விஜயை நீ கணவனாய் ஏற்றுக் கொண்டால் நான் ரொம்ப மகிழ்ச்சி அடைவேன். இந்தத் திருமணத்தில் என்னுடைய சுயநலமும் இருக்கு."

"உங்க சுயநலமா?" புதிய விஷயத்தைக் கேட்பதுபோல் கேட்டாள்.

"ஆமாம் எனக்குப் பிறகு ராதையை, அவள் பங்கு சொத்தை உங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று என் எண்ணம். உங்க இருவரின் பாதுகாப்பில் ராதைக்கு எந்தக்



குறையும் வராது. லாவண்யாவின் நலனைப் பற்றியும் நீங்க அக்கறையாக இருப்பீர்கள். விஜயைக் கணவனாக அடையப் போகும் பெண் ரொம்ப கொடுத்து வைத்திருக்க வேண்டும் அந்த அதிருஷ்டசாலி நீயாக இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவனைத் திருமணம் செய்து கொள்வதில் உனக்கு என்ன ஆட்சேபணை? உன் மனதிலிருப்பதைத் தெளிவாய் என்னிடம் சொல்லிவிடு ரோஜா."

அவள் பதில் பேசமுடியாதவளாய், கைவிரல்களை ஆராய்ந்துகொண்டு, பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"சொல்லு கண்ணம்மா? இப்படிக் கேட்கும் உரிமையும், அதிகாரமும் உன் தகப்பன் போன்ற எனக்கு இருக்கு என்கிற தைரியத்தில்தான் கேட்கிறேன்"

"ஊஹூம், இல்லை." ரோஜா திடமாய்ச் சொன்னாள்.

"ரோஜா..."

அவள் அவர் அருகில் சென்று, கண் இமைக்காமல் அவரைப் பார்த்துக்கொண்டே கூறினாள், "உங்களுடன் இணைத்துப் பேசும் தகுதி, என் தந்தை என்ன? இந்த உலகில் வேறு யாருக்கும் கிடையாது. நான் மனப்பூர்வமாய் நம்பிய உண்மையை இன்று உங்களிடம் சொல்கிறேன். தாயைவிட, மற்ற எல்லோரையும் விட நான் அதிகம் மதிக்கும் நபர் நீங்கதான். கடவுள் வேறு எங்கேயோ இல்லை! உங்களைப் போன்றவர்களின் இதயங்களில்தான் குடியிருக்கிறார். எனக்கு வேண்டியது, செந்தூர் நல்ல வழியில் திரும்ப வேண்டும், அதைவிட வேறு எதுவும் தேவையில்லை."

"அதுக்கும், இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையம்மா. செந்தூரின் நல்லது, கெட்டது பார்க்க வேண்டுமென்றால் விஜய்க்கும் ஒரு அதிகாரம் இருக்கணும் இல்லையா? இந்தத் திருமணத்தால் உங்கள் அனைவருக்கும் நல்லதே நடக்கும். யாரோ முன்பின் தெரியாதவனாய் விஜய் போனால், செந்தூர் அவன் வார்த்தையை லட்சியப்படுத்துவானா? அதே உன் கணவன் என்ற முறையில் போனால், அவனால் மறுக்க

முடியாது... நான் எல்லாவிதமாகவும் யோசித்துப் பார்த்துத் தான் இந்த முடிவுக்கு வந்தேன் ரோஜா.

ரோஜாவுக்கு திக்குமுக்காடுவது போலாயிற்று. சற்று முன் விஜய் சொன்ன வார்த்தைகள், மனதிலிருந்த சில அபிப் பிராயங்களைப் பார்த்தால், இப்போ இவர் சொன்ன விஷயம், அதனுடைய அஸ்திவாரத்தையே தகர்த்து எறிவது போலிருந்தது. அவளுக்கு என்ன சொல்வது? எப்படிச் சொல்வது என்று புரியவில்லை.

வேணுகோபாலன் நயமாகச் சொல்வதுபோல் சொன்னார்...

"இதுவரை உன் மனதில் எந்த எண்ணமும் இல்லாத தால், இது போன்ற அபிப்பிராயம் ஏற்படாமல் இருந்திருக் கலாம். அப்படி இருக்கும் பட்சத்தில், நீ என யோசனையை எந்தத் தயக்கமும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளலாம்."

"நீங்க ஓய்வு எடுத்துக் கொள்ளுங்க."

"நீ ஒப்புக் கொண் டன்னு சொல்லு."

"நீங்க...நீங்க...முதலில் அவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்..."

அவர் உதட்டில் இவ்வளவு நேரத்துக்குப் பிறகு புன்முறு வல் காணப்பட்டது.

"முதலில் உன் அபிப்பிராயம் தெரிஞ்சுக்கணும் இல்லையா... அதன் பிறகு அவனுடையது"

ரோஜா அருகில் வந்து தலையணையை சரிப்படுத்தி, அவரைப் சரியாகப் படுக்க வைத்தாள். அவளின் கையைப் பற்றி நெஞ்சின்மீது வைத்துக்கொண்ட வேணுகோபாலன் சொன்னார்...

"ரோஜா சற்றுமுன் நீ என்னை கடவுளுடன் ஒப் பிட்டாயே... அந்த சொல் எனக்குப் பொருந்தாது. நீ ஊகிப் பதில் ஆயிரத்தில் ஒரு பங்கு நல்லதனம்கூட என்னிடமில்லை. நான் எவ்வளவு சுயநலக்காரன் என்று என்றாவது ஒருநாள்



உனக்குத் தெரியாமல் போகாது. அன்று நீயே உன் அபிப் பிராயத்தை மாற்றிக் கொள்வாய்."

"ஊஹூம், உங்களைப் பற்றிய என் அபிப்பிராயத்தை யாரும், எப்போதும் மாற்ற முடியாது..." திடமாய்க் கூறினாள் ரோஜா.

சற்று நேரத்தில் அவர் உறங்கி விட்டார்.

ரோஜா ரொம்பநேரம் அவரருகில் அப்படியே உட்கார்ந் திருந்தாள். விஜய் இப்போதைக்கு வீட்டுக்கு வர மாட்டானோ? அவன் சாப்பிடவில்லை. வீட்டிலும் சமையல் செய்த அறிகுறி தென்படவில்லை. ரோஜா விஜயின் ஸ்டடி ரூமுக்கு வந்தாள். மேஜைமீது கிடந்த பத்திரிகையை எடுத்து படிக்க முயற்சி செய்தாள். பார்வை அதில் பதிந்தாலும், மூளையில் எதுவும் ஏறவில்லை. இதற்குள் கீழே காலிங்பெல் ஓசை கேட்டது. கீழே வந்தாள்.

அவள் இதயம் வேகமாய் துடிக்கத் தொடங்கியது. வந்தவன் விஜய்தானோ? கதவைத் திறந்தாள் ரோஜா. ஆனால் வந்தது விஜய் இல்லை... லக்ஷ்மி.

"நீங்களா அம்மா! நல்லாயிருக்கீங்களா?" ஒருமுறை தான் பார்த்திருந்தாலும், நன்றாகத் தெரிந்தவள் போல் குசலம் விசாரித்தாள்

"நல்லாயிருக்கேன்."

"பெரிய ஐயாவுக்கு எப்படி இருக்குதும்மா?" உள்ளே வந்துகொண்டே கேட்டாள்.

"பரவாயில்லை."

"தூங்கறாங்களா?"

"ஆமாம்."

"என்னவோ பாவம்! ரொம்ப நல்ல மனுஷன். ஆனால் கொஞ்சம்கூட நிம்மதியே இல்லாத வாழ்க்கை" லக்ஷ்மி உள்ளே சென்று விட்டாள்.

ரோஜா புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு

உணவு மேஜையருகில் நின்று கொண்டாள்.

சமையல் அறையைத் திறந்து பார்த்த லக்ஷ்மி, "இன்னிக்கு சமைக்கவே இல்லையா? பத்துப் பாத்திரமே இல்லை..." என்று சொல்லிக்கொண்டே இருந்த நான்கு பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவினாள். குளியலறைக்குச் சென்று மளமளவென்று துணிகளை தோய்த்துவிட்டு உலர்த்தினாள். வீட்டைப் பெருக்கி, ஈரத் துணியால் துடைத்துக் கொண்டே சொன்னாள்.

"என்னவோம்மா! அனந்த் தம்பி இல்லாவிட்டால் வீட்டில் சத்தடியே இல்லை. வெச்சது வெச்ச இடத்தில் இருக்கும். எனக்கும் அந்தத் தம்பிக்கும் ஒரு நிமிஷம்கூட ஆகாது. இந்தப் பெரிய தம்பி இருந்தாலும் ஒன்றுதான், இல்லாவிட்டாலும் ஒன்றுதான். சாப்பிட வருவாங்களா? சமைத்து வைத்துவிட்டுப் போகட்டுமா?"

"என்னவோ... எனக்குத் தெரியாது. என்னிடம் எதுவும் சொல்லவில்லை."

"அவர்க அப்படித்தான். ஒன்றும் சொல்ல மாட்டாங்க, எல்லாம் நாமா யோசிக்கணும். போகட்டுமேன்னு சமைச்சு வெச்சுட்டுப் போனால், அந்தச் சாப்பாடு அப்படியே இருக்கும். சரி சமையல் செய்யவில்லைன்னு வெச்சுக்குங்க, 'என்ன லக்ஷ்மி! இப்படிச் செய்துட்டேன்'னு சொல்லுவாங்க! சின்ன தம்பி போனபிறகு பெரிய தம்பி நேரத்துக்கு சரியா சாப்பிடறதே இல்லை. மாடியில் ஐயா தூங்கறாங்க...அப்புறமாய் வந்து துடைக்கிறேன்னு பெரிய தம்பிகிட்டே சொல்லிடுங்க. இந்தப் பெரியதம்பி இருக்குதே, பார்த்தால் சிரிச்சுக்கிட்டு இருக்காப்பலதான் இருக்கும். ஆனால் ரொம்ப கோபக்கார மனுசன். அந்தச் சிரிப்பைப் பார்த்து, வேலைக்கு டிமிக்கிக் கொடுத்தால் போதும், அவ்வளவுதான்! முறைக்கிற முறையில் உயிரே போய்விடும். ஆனால் ரொம்ப நல்ல மனுஷன். என் மகனுக்கு மறுபடியும் உயிரைக் கொடுத்துப் பிழைக்க வெச்சது இந்த தம்பிதான். உன்னால் இந்த வேலை ஆவணும் தம்பின்னு சொன்னா போதும். எப்படி



யாவது செய்து முடிச்சுடுவான். சின்ன தம்பி போனபிறகு பெரிய தம்பிக்கும் கலகலப்பு குறைஞ்சுடுத்து."

வீட்டைத் துடைத்துக்கொண்டே லக்ஷ்மி தன் பேச்சைத் தொடர்ந்தாள். வேலை முடிந்ததும், "நான் போயிட்டு வரேன். கதவைச் சாத்திக்குங்க. சாயங்காலம் சீக்கிரமாய் வரேன்னு சொல்லிடுங்க. கோடி வீட்டு ஐயர் வீட்டில் இன்னிக்குப் பூஜை. நிறைய வேலை இருக்கு" என்று கிளம்பி விட்டாள்.

ரோஜா கதவை வெறுமே சாத்திவிட்டு வந்தாள். லக்ஷ்மி வந்து கலகலவென்று பேசிவிட்டுப் போனபிறகு வீடு இன்னும் நிசப்தமாயிருப்பது போல் தோன்றிற்று. சுவர் கடியாரத்தின் டிக்டிக் ஒலியைத் தவிர வேறு எந்த சத்தமும் இல்லை.

ரோஜாவுக்கு என்னவோ போலிருந்தது. வேண்டாமென்று எண்ணினாலும் லக்ஷ்மியின் வார்த்தைகளே நினைவுக்கு வந்தன. எல்லோருடைய வாயிலிருந்தும் ஒரே வார்த்தை—விஜய் நல்லவன், ஆனால் ரொம்ப கோபக்காரன்.

ரோஜாவுக்கு அந்த வீட்டில் நடமாடும்போது, வெவ்வேறு காட்சிகள் கண்முன் தோன்றத் தொடங்கின! போகட்டும், வேணுகோபாலன் விரும்புவதுபோல் விஜயை, தான் திருமணம் செய்து கொண்டால்? விஜய் ரொம்பக் கோபக்காரன்... அந்தக் கோபத்தை தூண்டும் காரியங்களை எல்லாம்தான் செய்வாள்... அவன் வரும் நேரத்தில் வீட்டில் இருக்க மாட்டாள்... ஒன்றென்ன? அவனுக்கு இஷ்டம் இல்லையென்று தெரியும் காரியங்களை, தேடித் தேடிச் செய்வாள்.

அவனைப் பழி தீர்த்துக்கொள்ள எவ்வளவு நல்ல வாய்ப்பு? ரோஜாவுக்கு உற்சாகமாய் இருந்தது. வீட்டின் முன் கார் நின்ற ஓசை கேட்டது. கதவு [illegible] இருந்ததால், ரோஜா மாடிக்குச் சென்று [illegible]

பேச்சுக்குரல் கேட்டது.

விஜயுடன் யாரோ வந்திருக்க வேண்டும்! மாடிப்படிகளில் காலடி அரவம் கேட்டது.

வேணுகோபாலனுக்கு அப்பொழுதுதான் விழிப்பு வந்திருக்க வேண்டும். ரோஜா உள்ளே வந்ததும், "விஜய் வந்து விட்டானாம்மா" என்று கேட்டார்.

வந்து விட்டான் என்பதுபோல் தலை அசைத்தாள் ரோஜா.

"நீ சாப்பிட்டாயா?"

"இலலை."

"இல்லையா... ஏன்?"

அவள் பதில் சொல்வதற்குள், அறை வாசலில் சந்தடி கேட்டது. ரோஜா திரும்பிப் பார்த்தபோது, ராதை உள்ளே ஓடி வந்தாள். தந்தைமீது வேகமாக விழப் போனவளை, நடுவிலேயே தடுத்துவிட்ட ரோஜா, ராதையை அருகில் இழுத்துக் கொண்டாள்.

இதற்குள் விஜய் உள்ளே வந்தான். விழித்துக்கொண்டிருந்த வேணுகோபாலனைப் பார்த்து, "நீங்க தூங்கவே இல்லையா?" என்று கேட்டான்.

"தூங்கினேன்; இப்பதான் விழிநதேன்."

"ராதை! அக்காவை அழைச்சுகிட்டு கீழே வா சாப்பிடணும்!" ராதை, ரோஜா இருவரையும் பார்த்துச் சொன்னான்.

"லக்ஷ்மி வந்தாளா?" வேணுகோபாலன் கேட்டார்.

"ஹோட்டலிலிருந்து கேரியர் வரவழைத்தேன..."

ராதை, ரோஜாவின் கையைப் பிடித்து இழுத்தாள்.

"போய்ச் சாப்பிட்டு வாங்க" வேணுகோபாலன் வற்புறுத்திச் சொன்னதும், ரோஜாவால் ராதைக்காக எழுந்து கீழே வராமல் இருக்க முடியவில்லை.



அறையைத் தாண்டி, வெளியே வந்து கொண்டிருந்த ரோஜாவுக்கு, உள்ளே வேணுகோபாலன் சொல்வது காதில் கேட்டது.

"விஜய், லாவண்யா என்ன செய்துகிட்டிருக்கிறாள்?"

"நான் போனபோது வீட்டில் இல்லை. எங்கோ போனாளோ தெரியாதாம். வீட்டைப்பூட்டிவிட்டு, மாலியை வெளியில் உட்கார வைத்து, லாவண்யா வந்ததும் இங்கு வரச் சொல்லிவிட்டு வந்தேன்..." விஜய் பதில் சொல்வது கேட்டது.

ரோஜா கீழே வந்தாள். டைனிங் டேபிள் மீது கேரியரும், இரண்டு தட்டுகளும் வைக்கப்பட்டிருந்தது. அவள் கேரியரைத் திறந்து ராதைக்கு உணவு பரிமாறினாள். ராதை சாப்பிட்டு முடிக்கும் சமயம் விஜய் கீழே இறங்கி வந்தான்.

ரோஜா சாப்பிடாமல் இருப்பதைக் கவனித்தவன் டைனிங் டேபிள் அருகில் வந்தான்.

"நீ சாப்பிடவில்லையே ஏன்?"

"பசி இல்லை" தலையை உயர்த்தாமலேயே பதில் கூறினாள் ரோஜா.

"பசியில்லையா... இல்லை சாப்பிட வேண்டுமென்று தோன்றவில்லையா?"

விஜய் கேரியரிலிருந்து சாதம், கூட்டுகறி எடுத்து ரோஜாவுக்காக வைத்திருந்த தட்டில் பரிமாறிவிட்டு, "என் கையால் பரிமாறியது, எவ்வளவு கசப்பாக இருக்குமென்று கொஞ்சம் சாப்பிட்டுத்தான் பாரேன்" என்று கூறினான்.

ஆபீஸ் அறையில் போன் ஒலிக்கும் ஓசை கேட்டதும், விஜய் எழுந்து சென்றான். செல்லும்போது, பின்னால் திரும்பி, "சீக்கிரமாய்ச் சாப்பிட்டு விடு. உன்னுடன் கொஞ்சம் பேசவேண்டும்" என்று எச்சரித்து விட்டுச் சென்றான்.

விஜய் போனில் பேசி முடித்துவிட்டு வரும்போது,

அவள் தட்டில் உள்ளதை மறுபடியும் கேரியரில் வைத்துக் கொண்டிருந்தாள்.

விஜயின் புருவங்கள் முடிச்சேறின. எரிச்சல் கலந்த குரலில், "ரோஜா! ஒரே வார்த்தையில் பதில் சொல்லு. நான் செந்தூர விஷயத்தில் உனக்கு உதவி செய்ய வேண்டுமா இல்லையா? இந்த விஷயத்தில் நான் உனக்கு மனப்பூர்வமாய் உதவி செய்ய வேண்டுமென்று நீ எண்ணினால், ஒரு நிபந்தனை. நமக்கு இடையே இருக்கும் பழைய பகைமையை நீ மறந்து விடணும். இப்படி அடிக்கடி என்னைக் 'கெட்டவன்' என்று நினைவுபடுத்துவதை விட்டு விடணும். அது உனக்குக் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் முடியாத காரியம் மட்டும் இல்லை. செந்தூரவுக்காகவாவது இவ்விஷயத்தில் நீ உன்னை மாற்றிக் கொள்ளணும்."

தயக்கமே இல்லாமல், நேராகச் சொல்லிவிட்ட விஜய், "ராதை...வா... நாம் பாட்டு கேட்கலாம். அதற்குள் அக்கா சாப்பிட்டுவிட்டு வருவாள்" என்று அவளை அழைத்துக் கொண்டு அங்கிருந்து சென்று விட்டான்.

சற்றுநேரம் செயல் மறந்து போனவளாய், நின்றுவிட்ட ரோஜா, மெதுவாய் கேரியலிருந்து உணவை எடுத்து வைத்துக் கொண்டாள்

செந்தூ விஷயத்தில் விஜய் உதவி செய்து, அவனை வழிக்குக் கொண்டு வரமுடியும் என்ற பட்சத்தில், நடந்ததை எல்லாம் மறந்துவிட்டு, விஜயை மன்னித்துவிட நிச்சயித்துக் கொண்டாள்.

ஒரு மணி நேரம் கழித்து, வேணுகோபாலன் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்க, விஜய் அருகில் நிற்க, ரோஜா செந்தூ கொடுத்த நம்பரை டயல் செய்யத் தொடங்கினாள்.

"ஹலோ" மறுமுனையில் குரல் ஒலித்தது.

"ஹலோ... ஜேம்ஸ் இருக்கானா?"

"இருக்கான். ஒரு நிமிஷம் லைனில் இருங்க. கூப்பிடுகிறேன்."



மறுமுனையில் பதில் ரொம்பப் பணிவாக வந்தது. துடிக்கும் இதயத்துடன் ரோஜா காத்திருக்கத் தொடங்கினாள்.

# 56

சரியாய் அதே நேரத்தில் விலையுயர்ந்த ஹோட்டல் ஒன்றில், ஏர்கண்டிஷன் அறையில், செந்தூ நிலைக் கண்ணாடி முன் நின்று டையைக் கட்டிக் கொண்டிருந்தான். லாவண்யா சோபாவில் உட்கார்ந்து இருந்தாள்.

லாவண்யாவின் முகம் தூக்கமின்மையால் உப்பியிருந்தது. ரொம்ப நேரமாய் அழுதுபோல் கண்கள் வெந்து இருந்தன. கைக்குட்டையை எடுத்து முகத்தை துடைத்துக் கொண்டே, "ஜேம்ஸ், இந்த உலகிலேயே என்னைப் பற்றிக் கவலைப்பட யாருமே இல்லை" என்றாள் அழுகை கலந்த குரலில்.

"அப்படிப் பார்த்தால் யாருக்கும் யாரும் இல்லை. நமக்காக ஒருவர் இருப்பதாக நினைப்பது, வெறும் பிரமை தான்" என்றான் செந்தூ.

"போதும்! உன்னோட வேதாந்தம். நான் இவ்வளவு இக்கட்டில் உன்னிடம் வந்தால், உனக்கு விளையாட்டாய் இருக்கா?" கோபமாய்ச் சொன்னாள் லாவண்யா.

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? போகட்டும், உன் தந்தையை கைக்குள் போட்டுக் கொண்டு, உனக்கு இவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்த அந்தப் பெண்ணை எனக்கு அடையாளம் காட்டு. தோலை உரிச்சு ஆணியில் மாட்டி விடறேன்."

லாவண்யாவின் முகம் மலர்ந்தது. ரோஷத்துடன் சொன்னாள். "பெற்ற மகளான என்னைவிட, அந்தக் கேடு கெட்டவன் உசத்தி என்று தானே அவர் நினைக்கிறார். இந்தத் தடவை அவருக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்."

"என்ன செய்யப் போகிறாய்?"

"நான் இங்கேயே உன்னுடன் இருந்து விடுகிறேன். அவர் கண்ணிலேயே படமாட்டேன்! எங்களுடைய உறவுக் காரங்களுக்கு தந்தையின் நடத்தை பிடிக்காததால் தற்கொலை செய்து கொள்வதாய் கடிதம் எழுதிப் போட்டு விடுவேன்."

பிறகு நீ உயிரோடு இருப்பது தெரிந்து விட்டால்.

"எப்படித் தெரியும்? நான் இந்த ஊரில் இருந்தால் தானே?"

"எங்கே போகப் போகிறாய்?"

"நீ எங்கே அழைத்துப் போகிறாயோ அங்கே."

ஜேம்ஸ் ஒரு நிமிடம் சங்கடமாகப் பார்த்தான். உடனே புன்முறுவல் செய்தான். அந்த முறுவல் லாவண்யாவின் இதயத்தில் ஆயிரம் புல்லாங்குழல் இசைத்தது போல் இருந்தது.

"ஜேம்ஸ், இத்தனை தூரம் வந்த பிறகு, இன்னும் தயங்குவானேன்... உண்மையைச் சொல்லு. என்னைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?"

'ரொம்ப அழகான, வெகுளிப் பெண்."

"இந்தப் புகழ்ச்சியெல்லாம் இருக்கட்டும்."

"பார்த்தாயா! ஒரு பெண் என்பதை நிரூபித்து விட்டாய்... நீங்க எல்லாம் புகழ்ச்சியை உள்ளூர விரும்புவீங்க. ஆனால் புகழ்ந்தால், இஷ்டமில்லாதது போல் முகத்தைச் சுளித்துக் கொள்வீங்க."

"பெண்களைப் பற்றி உனக்கு ரொம்ப நன்றாகத் தெரியும் போலிருக்கு."



"எதுவும் தெரியாமலேயே இத்தனை வருடம் வளர்ந்து விட்டேனா? ஒன்றும் தெரியாதவன் போல் முகத்தை வைத்துக் கொள்ளட்டுமா?"

"வேண்டாம், வேண்டாம்! அழகான பொய்யை விட, கசப்பான உண்மைதான் உடலுக்கு நல்லது ஜேம்ஸ், என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"நேராய் உங்க வீட்டுக்குப் போ... உன் அப்பாவிடம் போய், இன்னொரு தடவை இது போல் நடந்தால் சும்மா இருக்க மாட்டேன்னு வார்னிங் கொடு. அந்த வீட்டில் உனக்கு எல்லா உரிமையும் இருக்கு."

லாவண்யாவின் முகம் ஏமாற்றத்தால் கறுத்து விட்டது. "அதாவது உன் உதவி எனக்குக் கிடைக்காது. அப்படித் தானே?"

டையை கட்டி முடித்த செந்தூ, டிரெஸிங் டேபிளை விட்டு நகர்ந்து, லாவண்யாவின் எதிரே வந்து நின்றான். பாண்ட் பாக்கெட்டில் கைகளை நுழைத்துச் சாய்ந்து அவளையே கவனமாய்ப் பார்த்தான்

"உன்னைத்தான்" ஒரு நிமிடம் கழித்துச் சொன்னான். "லாவண்யா! நிஜமா உன்னிடம் ஏதோ வெகுளித்தனம் இருக்கு. அதற்கு முன் என் மனம் என்றைக்கோ தலை வணங்கி விட்டது. அதனால்தான் நீ எவ்வளவு உரிமை கொடுத்தாலும், அதை நான் பயன்படுத்திக்கவில்லை, உலகின் முன் கெட்டவனாக நின்ற நான், உன் முன் நான் நல்லவனாக நின்று விட்டேன். லாவண்யா என் பேச்சைக் கேளு, வீட்டுக்குப் போ... என்ன இருந்தாலும் அவர் உன் தந்தை. உன் நலனை அவரை விட வேறு யாரும் அதிகமாய் விரும்பமுடியாது."

"ஜேம்ஸ், நீ வேறு எது சொன்னாலும் கேட்கிறேன்... அவரிடம் போ என்று மட்டும் சொல்லாதே. அவருக்கு மகளாய்ப் பிறந்தது என் துரதிருஷ்டம் தான்."

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?" இயலாதவன் போல் செந்தூ சொன்னான்.

"என்னைத் திருமணம் செய்து கொள்."

"லாவண்யா!" திடுக்கிட்டவன்போல் செந்தா இரண்டடி பின்னால் நகர்ந்தான்.

"என்ன? அப்படிப் பார்க்கிறாய்? நான் தப்பாக எதுவும் சொல்லவில்லையே? நீ எப்படிப்பட்ட வாழ்க்கையைக் கொடுத்தாலும் அதை நான் சுவர்க்கமாய் நினைப்பேன். பணத்தைப் பற்றிக் கவலை வேண்டாம். என் பங்கு நகையாகவும், வங்கியில் பணமாகவும் நிறையவே இருக்கு. அதைக் கொண்டு வருகிறேன். நாம் இங்கிருந்து வேறு எங்கேயாவது போய் விடலாம் நிம்மதியாய் வாழலாம்."

"லாவண்யா! எப்போதும் எந்த உரிமையையும் கொடுக்காத என்னைப் பற்றி, எப்படி உன்னால் கனவு மாளிகையை உருவாக்க முடிந்தது?"

"கனவு மாளிகையா?"

"இல்லையா பின்னே? நான் வாழ்ந்து வருவது எப்படிப்பட்ட இருட்டு உலகம் என்று தெரிந்தால், நீ இப்படிப் பேச மாட்டாய்..."

"எத்தனை இருட்டு உலகமாய் இருந்தால் என்ன? வழி காட்டும் விளக்காக நீ இருக்கும் போது எனக்கென்ன பயம்?"

பதில் சொல்ல முடியாதவன் போல் பார்த்தான் செந்தா. இதற்குள் வாசற்கதவு தட்டப்பட்டது.

தோள்களைக் குலுக்கி, தன்னைச் சமநிலைப் படுத்திக் கொண்டு, கண்ணாடி பக்கம் திரும்பி கலைந்த முடியை சீர் செய்து கொண்டான்.

"யெஸ்—கமின்" குரல் கொடுத்தான்.

வந்தது ஹோட்டல் பேரர். பாதிக் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்து, "சார் உங்களுக்குப் போன் வந்திருக்கு" என்றான்.

"இதோ வர்றேன்."

"இதென்ன! போன் இங்கேயே இருக்கே" அறையில் மூலையில் இருந்த போனைப் பார்த்து வியப்பாகச் சொன்னாள் லாவண்யா.



"எங்க விஷயங்களை, பேசிக் கொள்ள ரிசெப்ஷனில் தனியாய் வேறு போன் இருக்கு. இப்பவே வந்து விடுகிறேன், உட்கார்ந்து கொள்."

செந்தா கதவை வெறுமே சாத்திவிட்டுப் போய் விட்டான்.

என்ன ஆனாலும் சரி, இந்த நிகழ்ச்சியை ஆதாரமாய் வைத்துக் கொண்டு, ஜேம்ஸிடம் திருமணத்துக்குச் சம்மதம் வாங்கிவிட வேண்டும் என்று நினைத்தாள் லாவண்யா.

செந்தா போன் ரிசீவரை கையில் எடுத்து, "ஹலோ!" என்றான்.

"ஹலோ" மறுமுனையில் பெண்ணின் குரல் கேட்டது

"யெஸ், ஜேம்ஸ் ஸ்பீகிங்."

"செந்தா" ரோஜா சந்தேகத்துடன், பயந்துகொண்டே அழைத்தாள்...

"ரோஜா...நீயா!"

"ஆமாம்"

"என்ன விஷயம்?"

"நான் உடனே உன்னைச் சந்திக்கணும்... வேலை இருக்கு..."

"என்ன விஷயம். சீக்கிரம் சொல்லு."

"ஊஹூம்! போனில் சொல்ல முடியாது. நான் உன்னைப் பார்த்து நேரில் சில விஷயங்கள் பேசணும்."

"மறுபடியும் எனக்கு அறிவுரை வழங்கப் போகிறாயா?"

"இல்லை."

"நீ அவரிடம் வேலையை விட்டு விட்டாயா? இல்லையா?"

"முதல்ல இதுபத்திச் சொல்லு? நான் உன்னை எங்கே வந்து சந்திக்கணும்?"

"உண்மையாக, விஷயம் என்னவென்று சொல்லு ரோஜா—ஏதாவது நடக்கக் கூடாதது நடந்து விட்டதா?"

"ஹூம்... எங்கே சந்திக்கணுமோ சொல்லு..."

"மாலை ஆறுமணிக்கு ஹோட்டல் அட்லாண்டாவிற்கு வரமுடியுமா?"

"வர்றேன் செந்தூ" ரோஜா கொஞ்சம் தயங்கினாள். அவள் முகம் சிவந்து கன்றி விட்டாற் போலாயிற்று.

"என்ன விஷயம் ரோஜா? சொல்லு..."

"நான்... நான் தனியா வரப்போவதில்லை."

"பின்னே?"

"என்னுடன் ஒருத்தரை அழைச்சுக்கிட்டு வரப் போகிறேன். அவருடன் நீ பேச வேண்டும்."

'யார் அந்த நபர்?"

"நான்... என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்.,'

"ரோஜா... உண்மையாகவா?"

"ஆமாம்... செந்தூ..."

"என்னைப் பற்றி அவருக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"யார் அந்த ஆள்?"

"அன்னிக்கு தீபாவளிக்கு முன், பட்டாசுக் கடையில் என்னுடன் சேர்ந்து பார்த்தாயே?"

"ஓ...ஆமாம்... எனக்கு நினைவு இருக்கு."

"அவருடன் நீ பேச வேண்டும்."

"கட்டாயம் ரோஜா... என்னைப் பற்றி எதுவும் சொல்லாதே. பிசினஸ் செய்வதாகச் சொல்லு. திருமணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னாரா?"

"ஆமாம்! அவர் உன்னைச் சந்திக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நான்தான் அவரை உனக்கு அறிமுகப்



படுத்தி, நீ ஒப்புக்கொண்ட பிறகு என் அபிப்பிராயத்தைச் சொல்ல நினைத்தேன்..."

"எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாய் இருக்கு ரோஜா. இத்தனை நாட்களுக்குப் பிறகாவது ஒரு நல்ல முடிவு எடுத்துக் கொண்டதற்கு. மாலை ஆறுமணிக்கு ஹோட்டல் அட்லாண்டாவில் சந்திப்போம். நான் உங்களுக்காக ரிசப்ஷனில் காத்துகிட்டிருப்பேன்... பை!" செந்தூ போனை வைத்து விட்டான்.

அவனுக்கு இந்தச் செய்தி ரொம்ப சந்தோஷத்தைக் கொடுத்தது. உற்சாகம் பொங்க அறைக்குத் திரும்பி வந்தான்.

"போனில் யார்?" லாவண்யா ஆர்வத்துடன் கேட்டாள்.

"ஒரு பிரண்ட்."

"ஆணா... பெண்ணா?"

"பெண்தான்."

லாவண்யா பொறாமையாகப் பார்த்தாள். செந்தூ கலகலவென்று நகைத்தான்.

"எதுக்காக அந்தச் சிரிப்பு?"

"வா... ரொம்ப நேரமாகி விட்டது. சாப்பிடப் போகலாம் வா..." செந்தூ லாவண்யாவைப் பலவந்தமாக டைனிங் ஹாலுக்கு அழைத்துச் சென்றான்.

சாப்பிடும்போது லாவண்யா மறுபடியும் கேட்டாள்... "நான் கேட்டதுக்குப் பதிலே சொல்லவில்லையே?"

"திருமண விஷயம்தானே! நீ சொல்லிவிட்டாய். ஆனால் இதுவரை எனக்கு அந்த எண்ணமேயில்லை. எனக்கு யோசிக்கக் கொஞ்சம் அவகாசம் கொடு." சீரியஸாய் சொன்னான் செந்தூ.

சாப்பிட்டு முடித்ததும், மறுநாள் கட்டாயம் சந்திப்பதாக செந்தூ வாக்குக் கொடுத்தபிறகு லாவண்யா, அவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டாள். செந்தூ அறைக்குத்

திரும்பியபோது, அறையில் மேரி அவனுக்காகக் காத்து இருந்தாள். அந்தப் பெண்ணைப் பார்த்ததும், அவன் முகத்தில் இருந்த எரிச்சல், களைப்பு எல்லாம் மாயமாய் மறைந்து விட்டன.

"எத்தனை நேரமாச்சு நீ வந்து?" பதட்டத்துடன் கேட்டான்.

"அரைமணிக்கு மேல் ஆகிவிட்டது. நீ இல்லாததால், டைனிங் ஹாலில் இருப்பாய் என்று நினைத்து அங்கே போனேன். ஆனால் அங்கே நீ யாருடனோ சேர்ந்து சாப் பிட்டுக் கொண்டிருந்தாய். அந்தச் சமயம் உன் எதிரே வர வேண்டாமென்று நினைத்து, மறுபடியும் அறைக்கு வந்து விட்டேன்."

"ஓ மேரி... ஐயாம் சாரி..." சந்திரன் மன்னிப்பு கேட்டுக் கொள்வதுபோல் சொன்னான்.

"இதில் மன்னிப்பு கேட்க என்ன இருக்கு? மற்ற பெண் களுடன் நீ பேசுவதால், உன்னை இழந்துவிடுவேனோ என்ற பயம் எனக்குக் கிடையாது..." மேரி சிரித்துக்கொண்டே சொன்னாலும், அந்தச் சிரிப்புக்குப் பின் ஏதோ திகில், பயம் எட்டிப் பார்த்தன.

"தாங்க்யூ..." சந்திரன் சட்டென்று சரிந்து முழங் காலிட்டு அமர்ந்து, மேரியின் மடியில் தலையைப் புதைத்துக் கொண்டான்

"மேரி... நீ அப்படிச் சொல்லாதே, எனக்கு ரொம்ப வேதனையாய் இருக்கும். நான் மற்ற பெண்களுடன் பேசினால் பொறாமைப் படு... சண்டை போடு... ஒவ்வொரு நிமிஷமும் என்னைக் கண்காணித்துக் கொண்டிரு... ஆண் களின் மனம் எவ்வளவு பலவீனமானதோ... உனக்குத் தெரியாது."

மேரி அவன் தலைமுடியை விரல்களால் கோதிவிட்டுக் கொண்டே சொன்னாள். "ஜேம்ஸ், ரொம்ப நாள்வரை ஆண் என்றாலே ஏமாற்றுபவன், சுயநலக்காரன் என்று



நினைத்திருந்தேன். என் அக்காவின் வாழ்க்கை எப்படி நாச மாகி விட்டதோ சொல்லியிருக்கேனே! நீ என் வாழ்க்கையில் வந்தபிறகு என் கருத்துக்கள், எண்ணங்கள் எல்லாம் தலை கீழாகி விட்டன. இந்தப் பாவப்பட்ட வாழ்க்கையில் நீ மட்டும் கிடைத்திருக்காவிட்டால், நாம் என்றோ தற்கொலை செய்துக்கிட்டிருப்பேன் ஜேம்ஸ்! நான் உனக்கு எத்தனை நன்றிக் கடன் பட்டிருக்கேனோ, உனக்குத் தெரியாது."

சந்திரன் தலை மேரியின் மடியில் பொறுமையின்றி அசைந்தது. "மேரி... நம் மகன் இந்த உலகிற்கு வர இன்னும் எவ்வளவு நாள் ஆகும்?"

"நான்கு மாதங்கள்."

"நான்கு மாதங்களா? ரொம்ப நாட்கள் காத்திருக்க வேண்டுமே..."

"ஏன்? உன் வாரிசைப் பார்க்க அவ்வளவு துடிப்பாய் இருக்கா?"

சந்திரன் 'ஆம்' என்பதுபோல் தலை அசைத்தான்.

"ஜேம்ஸ்..."

"ஊம்!"

"உன்னிடம் ஒன்று கேட்கணும்."

"என்ன விஷயம் சொல்லு!"

"நமக்கு பிறக்கப் போகும் குழந்தையை நாம் பார்க்கக் கூட வேண்டாம். ஏதாவது அனாதை இல்லத்தில் கொடுத்து விடலாம்."

"நான்ஸென்ஸ்... எதுக்கு? நாமிருவரும் உயிரோடு இருக்கும்போது அந்த நிலை எதுக்கு?"

"ஜேம்ஸ்! உன்னுடன் பேசி என்னால் ஜெயிக்க முடி யாது... நான் சொல்வதைக் கேளு. நாம் உயிரோட இருக்கும் போது என்கிறாயே... உண்மையைச் சொல்லு! நம் வாழ்க் கையும் ஒரு வாழ்க்கையா? நம் குழந்தை இப்படி இருட்டு உலகத்தில், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்வதில்

எனக்கு விருப்பம் இல்லை. அதனால் ஏதாவது அனாதை இல்லத்தில் கொடுத்து விடலாம். நல்லகுடிமகளாக வளரும் வாய்ப்பை அந்தக் குழந்தைக்கு உண்டாக்குவோம்."

சந்திரன் பேசவில்லை. அவன் பதிலுக்காகக் காத்திருந்த மேரி, பொறுத்துக் கொள்ள முடியாதவள்போல் கேட்டாள்.

"ஜேம்ஸ் என்ன சொல்கிறாய்?"

சந்திரன் மேரி கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். "மேரி உன் பயம் எனக்குப் புரிகிறது. நம்ம குழந்தை மற்றவர்களைப் போல் நல்ல சமுதாயத்தில் வாழணும் என்ற உன் விருப்பத்தை நான் மறுக்கவில்லை. ஆனால் இதற்காக அனாதை இல்லத்தில் விடத் தேவையில்லை. சொல்ல மறந்து விட்டேன்... சற்றுமுன் ரோஜா போன் செய்தாள்."

"ரோஜாவா... என்ன விஷயம்?"

"என்னைச் சந்திக்க மாலையில் வரப் போகிறாள். திருமணம் செய்துகொள்ளப் போகிறாள் மேரி. நம் குழந்தையை யாரிடமோ கொடுக்கத் தேவையில்லை. நமக்கு ரோஜா இருக்கிறாள். அவளிடம் கொடுத்து விடலாம். நாமும் நடுவில் போய்ப் பார்த்துக் கொள்ளலாம்."

"ஆனால் ரோஜாவுக்கு நம் விஷயம்?"

"இன்று சொல்லி விடுகிறேன். இன்று மாலை நீயும் என்னுடன் வா... ரோஜாவுக்கு உன்னை அறிமுகப்படுத்து கிறேன்."

"ஜேம்ஸ்!"

"பரவாயில்லை! ரோஜா புரிந்து கொள்வாள். உன்னை அறிமுகப்படுத்தின மறுகணமே, உன் சார்பில் என்னை நன்றாகத் திட்டுவாள்... திருமணம் ஆகும்முன்பே உன்னைத் தாயாக்கியதற்கு."

சந்திரன் சின்னப் பையனை போல் சிரித்துக் கொண்டே சொன்னான்.



# 57

ஹோட்டல் அட்லாண்டா... விஜயுடன் சேர்ந்து ஹோட்டலில் காலடி எடுத்து வைத்துக் கொண்டிருந்த ரோஜாவின் இதயத் துடிப்பு அதிகரித்தது. அதற்கு முதல் காரணம், விஜயுடன் இணைந்து இப்படி உரிமையுடன், எதுவும் நேராததுபோல், பழைய விஷயங்களை மறந்துவிட்டு நெருக்கமாய் நடந்து வந்தது.

இரண்டாவது, சந்துரு வருவானா? அன்றுபோல் செய்ய மாட்டானே? இந்த முயற்சியும் வீணாகிவிடக் கூடாதே என்ற படபடப்பு. இவை இரண்டும் சேர்ந்து ரோஜாவின் இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்தன.

வெட்ட வெளியில் குளிர்ச்சியாய் இருந்தது அந்தச் சூழ்நிலை. ஆங்காங்கே போடப்பட்டிருந்த மேஜைகள். மக்கள் கூட்டம் அதிகமாய் இல்லை. இருந்த சிலரும் தங்களுடைய உலகில் மூழ்கிவிட்டவர்கள்போல், சாப்பிட்டுக்கொண்டே பேசிக்கொண்டிருந்தார்கள்.

உள்ளே வந்ததும் கண்களைச் சுழற்றி சந்துருவைத் தேடிப் பார்த்த ரோஜா, "இல்லை... இன்னும் வரவில்லை போலிருக்கு" என்றாள்.

விஜய் தொலைவில் காலியாகத் தென்பட்ட மேஜையைக் காண்பித்து "அங்கே போய் உட்கார்ந்து கொள்வோமா" என்று கேட்டான்.

ரோஜா தலையசைத்து சம்மதம் தெரிவித்தாள். விஜயைத் தொடர்ந்து, அந்தப் பக்கம் போகப் போன ரோஜாவுக்கு பின்னாலிருந்து குரல் கேட்டது.

"ரோஜா!"

சரேலென்று திரும்பிப் பார்த்தாள் ரோஜா. எதிரே செந்தூரா நின்றிருந்தான். கூடவே ஒரு பெண்ணும் இருந்தாள்.

"வந்து ரொம்ப நேரமாகி விட்டதா... உன்னைவிட முன்னாடியே வந்து இங்கே இருக்க நினைத்தேன். லேட்டாகி விட்டது. சாரி" என்று புன்முறுவலுடன் கூறினான்.

செந்தூரவைப் பார்த்ததும், அதுவரை யாரோ அழுத்தி வைத்ததுபோல் இறுகியிருந்த ரோஜாவின் மனம் இலேசாகி விட, எளிதாக மூச்சை விட்டுக் கொண்டாள். முகம் பளபள வென்று ஒளிவீச, விஜயை அறிமுகப்படுத்தினாள்.

"செந்தூரா... இவர்தான் விஜய்..." என்று விஜய் பக்கம் திரும்பி, "என் தம்பி செந்தூரா" என்றாள்.

விஜய் அதற்குள் கையை நீட்டி, "கிளாட் டு மீட் யூ..." என்றான்.

கைகுலுக்கிக் கொண்டிருந்த அந்தக் கணத்தில் ஒருவரை ஒருவர் கூர்ந்து கவனித்துக் கொள்வதை, ரோஜா கவனியாமலில்லை.

செந்தூரா தன் பக்கத்திலிருந்த பெண்ணை அறிமுகப்படுத்தினான். "என் சிநேகிதி மேரி."

அந்தப் பெண்ணுக்கு ரொம்ப கூச்ச சுபாவம் போலும். தலையை உயர்த்தாமலேயே வணக்கம் தெரிவித்தாள்.

"உட்காருவோமா?" மேஜை பக்கம் நடந்து கொண்டே விஜய் சொன்னான்.

"மாடிக்குப் போகலாம். ரூஃப் கார்டென் இருக்கு. அங்கிருந்து வ்யூ நன்றாக இருக்கும். மாலை நேரத்தில் கடல் அலைகளை ரசிக்கலாம். நான் அங்கே டேபிளை ரிசர்வ் செய்து விட்டேன்" என்றான் செந்தூரா.

"ஓ.கே." விஜய் சம்மதித்தான்.

நாலு பேரும் மாடிக்குப் போனார்கள். செந்தூரவைப் பார்த்ததும் பேரர் வந்து, இடத்தைக் காண்பித்துவிட்டுச் சென்றான். உண்மையிலேயே அங்கிருந்து பார்த்தால், கடல்



ரொம்ப அழகாக, பார்க்கப் பார்க்க பரவசமூட்டுவதாக இருந்தது. செந்தூரா மேரி பக்கத்தில் அமர்ந்து கொண்டதால் ரோஜா, விஜய்க்கு பக்கத்தில் உட்காரும்படி ஆகிவிட்டது.

செந்தூரா ஏற்கனவே ஆர்டர் செய்து இருக்க வேண்டும். பேரர்ஸ் வந்து ஸர்வ் செய்யத் தொடங்கினார்கள்.

இவர்களுக்கு நடுவில் எந்தவிதமாய் உரையாடல் துவங்கப் போகிறதென்று ரோஜா எதிர்பார்ப்புடன் காத்திருந்தாள். விஜய் புத்திசாலித்தனமாய் அரசியலைப் பற்றி, நாட்டு நடப்பு பற்றி உரையாடலைத் திருப்பிவிட்டான்.

அவர்கள் இருவரும் பேசும் விதத்தைப் பார்த்தால், ஏதோ மாலை நேரத்தில் அரட்டை அடிக்க வந்தவர்கள் போல் தோன்றியது. எதிரே இந்தப் பெண்ணும் இருப்பது ரோஜாவுக்கு சங்கடமாய் இருந்தது.

செந்தூரா இந்தப் பெண்ணை ஏன் அழைத்து வர வேண்டும்? வேற்று மனிதர்கள் முன்னிலையில் சொந்த விஷயங்கள், அதுவும் அந்தரங்கமான விஷயங்களை எப்படிப் பேச முடியும்?

பேச்சுக்கு நடுவில் விஜய் கூறினான், "உங்களையும், ரோஜாவையும் பார்த்தால் உங்களைத் தம்பி என்று யாரும் சொல்ல மாட்டார்கள். உங்களை விட அவள்தான் சின்னவள்போல் தெரிகிறாள்."

செந்தூரா சிரித்தான், "நான் எங்க அப்பாவின் ஜாடையென்று எங்கம்மா அடிக்கடி சொல்வாள்."

"ஐ ஸி..."

பேரர் காபி கொண்டு வந்து வைத்துவிட்டுச் சென்றான். காபி குடிக்கும்போது விஜய் சொன்னான். "உங்களை இதற்கு முன் வேறு எங்கேயோ பார்த்திருக்கிறேன். எங்கேயென்று சரியாக நினைவுக்கு வரமாட்டேங்கறது. ஆனால் பார்த்ததென்னவோ உண்மை."

விஜய் இப்படிச் சொன்னதும், செந்தூரவின் பார்வை

கணநேரம் காபி கோப்பையின்மீது நிலைத்து விட்டது. பிறகு தலையை உயர்த்தி, விஜயின் கண்களை நேராகப் பார்த்துக்கொண்டே முறுவலுடன் கூறினான்.

"இந்த வார்த்தையை சமீபத்தில் நான் அடிக்கடி கேட்கிறேன். புதிதாக அறிமுகமானவர்களில் ஒிருவர் இதையேதான் சொன்னார்கள். என்னைமாதிரி தோற்றம் கொண்ட யாராவது இருக்காங்களோ என்னவோ? தேடிப் பார்க்கணும்னு ஆவலாய் இருக்கு."

"இருக்கலாம்!" விஜய் எழுந்து தொலைவிலிருந்த பாரபெட் சுவர் பக்கம் நடந்தான். இங்கிருந்து வ்யூ நன்றாக இருக்குமென்று சொன்னீங்கயில்லையா" என்றான்.

செந்தூவும் எழுந்தான். ரோஜா பக்கம் பார்த்து, "ரோஜா, மேரி உன்னைப் பார்க்கணும்னு ரொம்பநாளாய் சொல்லிக்கொண்டு இருக்கிறாள். நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருங்கள், இப்பவே வந்திடறேன்" என்றவன் விஜய் நின்றிருந்த இடத்துக்குச் சென்றான்.

அவ்விரும் பாரபெட் வாலில் கைகளை ஊன்றி குனிந்து, வெளிப்புறம் பார்த்துக்கொண்டே ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். ரோஜா அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள். தானும் அங்கு சென்று அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று கேட்க எண்ணினாள். மேரியைத் தனியாய் விட்டுச் செல்வதும் பண்பான செயல் இல்லை.

இதற்குள் மேரி, "உங்களைப் பற்றி ஜேம்ஸ் எப்போதும் சொல்லிக்கிட்டே இருப்பான்" என்றாள்.

"ஜேம்ஸா..." திடுக்கிட்டாற் போல சொன்னாள் ரோஜா.

"அதான் செந்தூ... எங்களுக்கு ஜேம்ஸ் என்றுதான் பழக்கம்."

ஜேம்ஸ்... ஜேம்ஸ்... லாவண்யா வாயிலிருந்து இந்தப் பெயரை எத்தனையோ தடவைகேட்டிருக்கிறாள். இந்த நாட்டில் ஒரே பெயர் இருவருக்கு என்ன? ஆயிரம் பேருக்கு இருந்தாலும், அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது.



"செந்தூவை உங்களுக்கு எத்தனை நாளாகத் தெரியும்?"

"கிட்டத்தட்ட ஒரு வருடமாய்."

எப்படி அறிமுகமாச்சு? என்று கேட்க நினைத்தாலும் கேட்கவில்லை. அவளுக்கு மேரியிடம் பேச வேண்டு மென்றோ, விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்றோ, அவ்வளவு ஆர்வம் ஏற்படவில்லை அவளுடைய கவனமெல்லாம், தூரத்தில் நின்ற செந்தூ, விஜய் மீதே இருந்தது.

விஜய் இந்தப் பக்கம் திரும்பி, முழங்கையைச் சுவரில் ஊன்றி நின்றுகொண்டு, ஏதோ கேட்டுக் கொண்டிருந்தான். செந்தூ கடல் பக்கம் பார்த்துக்கொண்டு பதிலைச் சொல்லிக் கொண்டிருந்தான். விஜய் சட்டைப் பையிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து, அதிலிருந்து சிகரெட் எடுத்து வாயில் பொருத்திக் கொண்டான். செந்தூ உடனே லைட்டரை எடுத்து, விஜயின் சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

விஜய், செந்தூ இருவரும் அப்படி நெருக்கமாக நின்று கொண்டு, செந்தூ விஜயின் சிகரெட்டைப் பற்ற வைத்த அந்தக் காட்சி, ரோஜாவின் மனதில் என்றுமே அழியாதபடி, ஆழமாய்ப் பதிந்துவிட்டது.

இருவரும் கிட்டத்தட்ட ஒரே உயரம். செந்தூவால் எப்படி நிம்மதியாக, எந்தக் கவலையும் இல்லாதவன் போல் சிரிக்கமுடிகிறதென்று ரோஜாவுக்குப் புரியவில்லை. விஜய் சிகரெட்டை புகைத்துக்கொண்டே சீரியஸாய் ஏதோ சொல்லவும், செந்தூ யோசிப்பது போல் காணப்பட்டான்

அவ்விருவரும் என்ன பேசிக் கொண்டிருப்பார்கள்? விஜய் ஏன் சீரியஸாய் இருக்கிறான்? செந்தூ என்ன சொன்னான்? இந்த யோசனைகளில் மூழ்கியிருந்த ரோஜா, மேரி ஒிரு முறை தன்னுடன் பேச முயற்சித்ததைக் கவனிக்கவில்லை.

விஜய், செந்தூ மேஜை அருகில் வந்தார்கள். ரோஜா இருவரையும் பதட்டத்துடன் பார்த்தாள். அவ்விருவரின்

முகங்களிலும் அமைதி தெரிந்தது. ரோஜா விஜய் பக்கம் பார்த்தாள், அவன் கண்களில் நட்பு தெரிந்தது.

"இனி போகலாம்" என்றான் விஜய்.

கிளம்பும் முன் செந்தூர் சொன்னான், "ரோஜா, நாளை மதியம் சாந்தோம் சர்ச்சுக்கு வரமுடியுமா? நான் அங்கே ஒரு நண்பனைப் பார்க்க வரப் போகிறேன்."

அவள் சம்மதிப்பதுபோல் தலை அசைத்தாள். மேரி செந்தூர் இருவரும் விடைபெற்றுச் சென்று விட்டார்கள். அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்த ரோஜா, அவர்கள் கண்மறைவானதும், விஜய் பக்கம் திரும்பி பதைபதைப்புடன் கேட்டாள்.

"என்ன சொன்னான் செந்தூர்? என்ன பேசினீங்க நீங்க?"

விஜய் சிரித்தான். "அவ்வளவு அவசரப்பட்டால் எப்படி? இந்த ஹோட்டலுக்கும் உங்க வீட்டுக்கும் குறைந்த பட்சம் நாலைந்து மைல்களாவது தொலைவு இருக்கும். வழியில் எவ்வளவு வேணும்னாலும் பேசிக் கொள்ளலாம். வா போகலாம்."

அவன் குணமே அப்படித்தான். வேடிக்கை செய்து, விளையாடாவிட்டால் பொழுது போகாது. ரோஜா மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தாள். இருவரும் இறங்கி கீழே வந்தார்கள். விஜய் வேணுகோபாலின் காரை எடுத்துக் கொண்டு வந்திருந்தான். வீட்டுக்குப் போகும் வழியில் அவன் சொன்னான்.

"செந்தூரும், நானும் இன்று இரவு மறுபடியும் சந்திக்கப் போகிறோம்."

"இன்று இரவேயா? எங்கே?"

"எங்க ஆபீஸில்... டின்னருக்கு அழைத்தேன், வருவதாக வாக்குக் கொடுத்துள்ளான்."

ரோஜா எதுவும் பேசவில்லை. சாலையில் மக்களின் நடமாட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள். விஜயுடன்



தனிமையில் இப்படி வர நேர்ந்தது. இருவருக்கிடையே எந்தப் பகைமையும் இல்லாதது போல், ஒன்றுமே நடவாதது போல் பேசிக் கொள்வது. நினைத்துப் பார்க்கும்போது, இது கனவா இல்லை நினைவா என்று சந்தேகம் வந்தது

"ரோஜா" விஜய் அழைத்தான்.

அவள் தலையைத் திருப்பி அவனைப் பார்த்தாள். அவன் பார்வை சாலைமீது நிலைத்திருந்தது.

"அன்று தீபாவளிக்கு முன் பட்டாசுக் கடையில் தென்பட்டது செந்தூர்தானே?"

அவள் சாலையைப் பார்த்துக்கொண்டே சொன்னாள். "ஆமாம்."

"அதற்குமுன் குழந்தைகள் பூங்காவில் பார்த்தது?"

"செந்தூர்தான், மாறுவேடத்தில் இருந்தான்."

பழைய விஷயங்களை இப்பொழுது நினைவுபடுத்திக் கொள்வதை ரோஜா ஏனோ விரும்பவில்லை

விஜய் பெருமூச்செறிந்தான்.

"ஒரு வார்த்தை... ஒரு சின்ன வார்த்தை நீ என் காதில் போட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! நான் தவறாக புரிந்து கொண்டிருக்கிறேன் என்று தெரிந்தும், நீ வேண்டுமென்றே என் கோபத்தைத் தூண்டி விட்டாய்! என்னை... என்னை ராட்சசனாக்கினாய்..."

ரோஜா பதில் பேசவில்லை.

விஜய் மேலும் சொன்னான், "யோசித்துப் பார்த்தால், நான் தவறு செய்ததாகத் தோன்றவில்லை. நீயாக செய்து கொண்டதுதான். உனக்கு இந்தத் தண்டனை சரியானதுதான் என்று தோன்றுகிறது."

ரோஜாவுக்கு, விஜய் இந்த உரையாடலை நீட்டிக்காமல் இருந்தால் நன்றாக இருக்குமென்று தோன்றியது. மறுபடியும் வார்த்தைகள் தடித்து விட்டால் கஷ்டம். நினைத்தது சரியாக நடக்காமல் போய்விடும் ஆபத்தும் இருக்கிறது.

விஜய் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்பவன் போல் கூறினான்:

"ஒரு நிமிஷம் என் இடத்திலிருந்து யோசித்துப் பார்! உன்னை நான் தேவையில்லாமல் ஏதாவது சொன்னேனா? அனந்தின் திருமணத்தை நிறுத்துவதில் உன் எண்ணம், அவனைத் திருமணம் செய்து கொள்ளும் பேராசை என்று நினைத்து விட்டேன்... எனக்கு என்ன தெரியும்? என் பார்வை எப்போதும் அனந்தின் மீதுதான் இருந்தது."

"நான் உங்களை, இப்படி ஏன் நடந்து கொண்டீர்கள் என்று கேட்கவில்லையே? இப்பொழுது இந்த விளக்கம் எல்லாம் எதுக்கு?" மென்மையான குரலில் கூறினாள்.

"விளக்கம் நீ கேட்காவிட்டாலும், கொடுக்கவேண்டிய பொறுப்பு என்மீது இருக்கு."

"அப்புறம் எப்பவாவது சொல்லுங்கள். இப்போ வேண்டாம்." தாழ்ந்த குரலில், கெஞ்சுவது போல் சொன்னாள்.

விஜய் சற்று நேரம் பேசவில்லை. பிறகு கேட்டான், "உன்னை நான் ஒன்று கேட்கட்டுமா? உண்மையைக் கூறுகிறாயா?"

"அது நீங்க கேட்கும் வினாவைப் பொறுத்து இருக்கு. நான் உண்மையைக் கூறுவதால், யாருக்கும் தீங்கு வராது என்றால், நிச்சயம் உண்மையைக் கூறுவேன்."

விஜய் சிரித்துவிட்டு, அவளின் கையை தன் கையில் எடுத்துக் கொண்டான். அவள் மெதுவாய் விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் அவன் பிடி இன்னும் இறுகியதில், அவள் முயற்சி பலிக்கவில்லை.

"உண்மையைச் சொல்லு... எத்தனை இரவுகள் என்னைத் திட்டிக்கொண்டு கழித்தாய்."

"என்னை நானே திட்டிக் கொள்வதைத் தவிர, மற்றவர்களைத் தூஷிப்பது எனக்கு வராது."

"அது இன்னும் கொடுமை, மற்றவர்கள் செய்த தவறு



களுக்கு நம்மை நாமே தண்டித்துக் கொள்வது போல். நீ தேவையில்லாமல் என்னைக் கெட்டவனாக்கி விட்டாய், இதற்குத் தண்டனை என்ன தெரியுமா?"

"இங்கேயே காரை நிறுத்திவிட்டு, தனியாக வீட்டுக்குப் போய்க் கொள் என்பானோ? ரோஜாவுக்கு பயமாய் இருந்தது. பரவாயில்லை, வீடு அருகில்தான் இருக்கு. நடந்து போய் விடலாம். ரோஜா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

விஜயின் குரல் விநோதமாய் ஒலித்தது. "சொல்லட்டுமா? கேட்டுக் கொள்! நீ ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளாவிட்டாலும், உனக்கு விருப்பம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நீதான் என் மனைவி. எல்லோர் முன்னிலையில் மறுபடியும் உன்னை அக்னி சாட்சியாய் திருமணம் செய்து கொள்கிறேன். நடந்ததை செந்தூரிடம் சொல்லி விடணும்னு நினைத்துக்கிட்டிருக்கேன்."

ரோஜா தலையைத் திருப்பி அவன் பக்கம் பார்த்தாள். அவன் முகம் களையிழந்து தென்பட்டது. "வேண்டாம்... வேண்டாம், செந்தூரிடம் நீங்க இதெல்லாம் சொல்ல வேண்டாம்."

"ஏன்?"

"இப்போ என்னால் சொல்ல முடியாது. பிறகு சொல்கிறேன்."

விஜய் சாலை ஓரமாக ரோஜாவின் வீடு இருக்கும் தெரு முனையில் காரை நிறுத்தினான்.

"சட்டென்று இறங்கிக் கொள். இல்லாவிட்டால் என்ன நடக்குமோ எனக்குத் தெரியாது. என் கைகள் நான் சொன்ன பேச்சைக் கேட்கும் நிலையில் இல்லை. உன்னை வலுக்கட்டாயமாய் என் வீட்டுக்கு அழைத்துச் சென்று, விஷயத்தைச் சொல்ல வைக்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கின்றன."

ரோஜா இறங்கும் முன் அவன் பக்கம் பார்த்தாள்.

"நாளை காலையில் சீக்கிரமாய் வந்தால் செந்தூருடன் என்ன பேசினேன் என்று சொல்கிறேன். பத்து மணிக்குமேல் வந்தால், நான் வீட்டில் இருக்க மாட்டேன். கோர்ட்டுக்குச் சென்று விடுவேன்..." விஜய் எச்சரிப்பதுபோல் சொல்லி விட்டுக் காரைக் கிளப்பினான்.

ரோஜா நிம்மதியாக மூச்சை எடுத்துக் கொண்டாள். மறுபடியும் அதே நினைவு அலையாய் வந்து மோதிற்று... இது கனவா இல்லை நினைவா?

பரம எதிரியாய் இருந்த விஜய் இப்படி சகஜமாய் நட்புடன் பேசியது வியப்பாக, நம்பமுடியாததாக இருந்தது.

இரவு கிட்டத்தட்ட ஒன்பது மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. சாலையில் ஜன நடமாட்டம் அதிகமில்லை. ரோஜா கிடுகிடுவென்று நடையை எட்டிப் போட்டாள். பின்னால் யாரோ தொடரும் சத்தம் கேட்டு, முதலில் பயந்தாலும் பிறகு திரும்பிப் பார்த்தாள்.

"ரோஜா... இந்த நேரத்தில் எங்கிருந்து வருகிறாய்?" அஞ்சி வினவினான்.

அவன் குரலில் தென்பட்ட அதிகாரத்துக்கு, ஒரு நிமிடம் வியப்படைந்தாலும், "என்ன? ஒன்பது மணிதானே ஆகிறது..." என்றாள் அலட்சியமாய்.

"பெண்கள் இந்த நேரத்தில் வெளியே இருக்கலாமா? நீ எங்கிருந்து வருகிறாயென்று எனக்குத் தெரியும்."

அஞ்சியின் எண்ணம் அவளுக்குப் புரிந்தது.

"அந்த காரில் வந்து இறக்கிவிட்டுச் சென்றவன் யாரு?" உரிமையிருப்பவன்போல் அதிகாரமாய்க் கேட்டான் அஞ்சி.

"எனக்குத் தெரிந்தவர்..." சரேலென்று மனதில் எழும்பிய கோபத்தை அடக்கிக் கொண்டு, அமைதியாகப் பதில் சொன்னாள்.

"தெரிந்தவனாக இருந்தால், வீடுவரைக்கும் வந்து இறக்கி விட்டிருக்கலாமே! இப்படித் திருட்டுத்தனமாய் சாலையிலேயே இறக்கி விடுவானேன்?"



ரோஜா பேசவில்லை. அவனுடன் பேசுவது அநாவசியம் என்று நினைத்தாள்.

அவளுடன் இணைந்து நடந்து வந்து கொண்டிருந்த அஞ்சி, "ரோஜா, இந்த உலகில் சில புத்திசாலிங்க இருக்காங்க. மனிதர்களை நம் தேவைக்குப் பயன்படுத்திகிட்டு, பிறகு கண்டு கொள்ளாமல் போய் விடுவாங்க. என் உத்தேசத்தில் அவர்கள் புழுக்களைவிட கேவலமானவர்கள்."

"நிஜந்தான் அஞ்சி, ரொம்ப கரெக்ட். இந்த உலகில், அவர்களை விட அதிபுத்திசாலிங்க சிலர் இருக்காங்க. எந்தப் பெண்ணாவது அவசரத்துக்குக் கொஞ்சம் உதவி கேட்டால் போதும், விடாமல் பின்தொடர்ந்து பைத்தியம் பிடிக்க வச்சுடுவாங்க. என் பார்வையில் அவர்களும் புழுவுக்கு சமம்தான்."

"ரோஜா!"

"வர்றேன் அஞ்சி, தெருமுனையிலிருந்து வீடுவரை துணையாய் வந்ததற்கு தாங்க்ஸ்..." அவள் வீட்டிற்குள் சென்று விட்டாள்!

அஞ்சியின் முகம் சிவந்து விட்டது. பற்களை நறநறவென்று கடித்தவன், தன் வீட்டுப் பக்கம் திரும்பினான். சாப்பாட்டுக்கு இல்லாவிட்டாலும் இந்த ரோஜாவுக்கு திமிரு ரொம்ப அதிகம். அவளுடைய நடத்தைப் பற்றித் தெரிந்தும், தான் பெருந்தன்மையுடன், பாட்டியைச் சம்மதிக்க வைத்து, அவளைத் திருமணம் செய்துகொள்ள நினைத்தால், எப்படி திமிராகப் பேசுகிறாள்? இந்த ஆட்டமெல்லாம் அந்த மூன்று முடிச்சு கழுத்தில் விழும் வரைதான். அவளுடைய கழுத்தில் அந்த மூன்று முடிச்சை தானே போடவேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டான் அஞ்சி என்ற ஆஞ்சநேயலு.

# 58

மறுநாள் காலையில் எட்டுமணிக்கு வழக்கம்போல் கிளம்பிய ரோஜாவை சுந்தரி அழைத்தாள். "ரோஜா! இன்னிக்கு நீ வீட்டைப் பார்த்துக் கொள். பாகீரதி வீட்டில் சத்தியநாராயண விரதம் செய்யறாங்க. நான் போயிட்டு வந்தபிறகு நீ வேலைக்குப் போகலாம்."

ரோஜா இடிக்கிட்டாற்போல் பார்த்தாள். காலையில் எழுந்ததிலிருந்து, விஜய், செந்தூரின் சந்திப்பைப் பற்றித் தெரிந்து கொள்ள, கூடிய சீக்கிரம் விஜய் வீட்டுக்குக் கிளம்ப எண்ணியிருந்த அவளுக்கு, மாமியின் உத்தரவு காலுக்கு விலங்கிட்டது போலாயிற்று.

சுந்தரி தேங்காய், பழம் வகையறாக்களை எடுத்துக் கொண்டு பாகீரதி வீட்டுக்குக் கிளம்பிச் சென்று விட்டாள். ரோஜா ரொம்ப நாட்கள் கழித்து, ஓய்வாகத் தாயின் அறையில் உட்கார்ந்து கொண்டாள். கட்டிலில் எலும்பு கூடுக்குத் தோல் போர்த்தியது போலிருந்த தாயின் உருவத்தைப் பார்த்தாள். ரோஜாவுடன் அவள் தாய் பேசுவதை நிறுத்திவிட்டு ரொம்ப நாட்களாகி விட்டன.

தந்தை இல்லவே இல்லை, தாய் இருந்தும் இல்லாதவள் போல் ஆகிவிட்டாள். ரோஜா ஜன்னலிலிருந்து இறங்கி கட்டில் அருகில் சென்றாள். "அம்மா" ரொம்பப் பரிவுடன் அழைத்தாள். அந்தத் தாய்க்குக் கேட்டதோ இல்லையோ தெரியாது, பதில் வரவில்லை.

ரோஜா தாயின் காது அருகில் குனிந்து, "அம்மா செந்தூ வந்திருக்கான்" என்றாள்.

ரோஜா ஊகித்தது நிஜந்தான் குழிவிழுந்தாற் போல்



இருந்த அந்தக் கண்கள் மெதுவாக அசைந்து திறந்து கொண்டன. பார்வை ரோஜா முகத்தில் நிலைக்கவில்லை. சூனியத்தில் பார்ப்பது போலிருந்தது.

"அம்மா! செந்தூரைப் பார்த்தேன். நல்லாயிருக்கான். உன்னைப் பார்க்க நாளைக்குக் கட்டாயம் வருவான்" துக்கத்தால் கம்மிவிட்ட குரலில் சொன்னாள்.

சூனியத்தில் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கண்கள் மெதுவாக மூடிக் கொண்டன. விழிகளின் ஓரத்திலிருந்து வெளிப்பட்ட கண்ணீர்த் துளிகள் பக்கவாட்டில் சரிந்தன.

செந்தூருக்காக, அவனை ஒருமுறை பார்ப்பதற்காக அவன் குரலை கேட்க மட்டும்தான், உயிரானது அந்த உடலில் ஒட்டிக் கொண்டிருக்கிறது இது உண்மை.

இப்படி ஒவ்வொரு நாளும் நரக வேதனை அனுபவிப்பதை விட, செந்தூரை ஒருமுறை அழைத்து வருவது நல்லது. இன்று மதியம் செந்தூரைச் சந்திக்கப் போகும் போது, அம்மாவின் நிலைமையை விளக்கிச் சொன்னால், அவன் வராமல் இருக்கமாட்டான். ஒருக்கால் அவன் வருகை அம்மாவுக்கு புத்துயிர் ஊட்டுமோ என்னவோ? அது மட்டும் உண்மையானால், அதைவிட நான் வேண்டுவது எதுவும் கிடையாது.

சாப்பாடு முடிந்து, வெற்றிலையை மென்றுகொண்டே, மதியம் இரண்டு மணிக்குப் பிறகு சாவகாசமாய் வீட்டுக்கு வந்தாள். மாமி வந்ததும் ஏற்கனவே தயாராயிருந்த ரோஜா வெளியே கிளம்ப முற்பட்டாள்.

"ரோஜா சற்று இங்கே வா! இந்தச் செய்தியைக் கேளேன்." சுந்தரி அன்பாக அழைத்தாள். அருகில் வந்த ரோஜாவை உச்சிமுதல் உள்ளங்கால் வரை மகிழ்ச்சியாகப் பார்த்தாள்.

"என்ன விஷயம் மாமி?"

"உன் ஜாதகம் அதிருஷ்ட ஜாதகம் உற்சாகம்தான் போ... உன் முகத்தில் லக்ஷ்மி களை தாண்டவமாடுகிறது."

"என்னவாச்சு மாமி..."

சுந்தரி மகிழ்ச்சி பொங்க விளக்கினாள். "பாரேறு வீட்டுக்கு, அஞ்சியோட பாட்டியும் வந்திருந்தாள். பேச்சு வாக்கில் மெதுவாக விஷயத்தை வெளியிட்டாள். அவங்க வீட்டு அஞ்சி உன்னைத் திருமணம் செய்துக்கனும்னு விரும்புகிறானாம்."

"அஞ்சியா! என்னையா?"

"ஆமாம் கண்ணு! அந்த வார்த்தை கேட்டதும், நானும் இப்படித்தான் ஆச்சரியப்பட்டேன்."

ரோஜா கிளம்புவதற்காக வாசல் பக்கம் திரும்பினாள். நெஞ்சில் தீப்பற்றி எரிவது போலிருந்தது அவளுக்கு.

"நம்மால் வரதட்சணை, சீர் எதுவும் கொடுக்க முடியாதுன்னு சொல்லிடுங்க மாமி."

சுந்தரி மருமகளின் பின்னால் வாசல் வரை வந்தாள்.

"அட ராமா! எனக்கு அதுகூடத் தெரியாதா? நீ வேறு சொல்லித் தரணுமா? அவங்களுக்கு அந்த எண்ணமே இல்லையாம். நீ ஒப்புக் கொண்டால் போதுமாம். வரதட்சணையோ இல்லை, கல்யாணச் செலவுகளுக்காக ஒரு இரண்டாயிரம், நீ வேலை பார்க்கும் இடத்தில் கேட்டுப் பார்த்தால்...? இந்த விஷயத்தில் நீயே கேட்பது அவ்வளவு நன்றாய் இராது. ஒருதடவை என்னை அவரிடம் அழைத்துகிட்டுப் போ... நானே அவரிடம் நம் கஷ்டத்தைச் சொல்லி கடன் கேட்கிறேன்."

"மாமி" ரோஜா சட்டென்று திரும்பிப் பார்த்தாள்

கம்மி விட்ட குரலில் சுந்தரி சொன்னாள், "ஆமாம் ரோஜா! உனக்கு ஒரு கல்யாணம் செய்து மற்றவர்களைப் போல் குடியும் குடுத்தனமாய் இருப்பதைப் பார்த்து சந்தோஷப்படணும்னு, எனக்கு ரொம்ப துடிப்பாய் இருக்கு. எனக்கும் உடம்பு தளர்ந்து விட்டது. உங்க மாமாவின் விஷயம் நீ அறியாததல்ல. பெற்ற பெண்ணைவிட அபூர்வமாய் வளர்த்தார் உன்னை. உன் வாழ்க்கை இப்படிக் காய்ந்த



சருகாய்ப் போவதைப் பார்க்கும்போது எனக்கு ரொம்ப கஷ்டமாய் இருக்கு."

சூடாகப் பதில் சொல்ல வேண்டுமென்று சரேலென்று திரும்பிய ரோஜா, கவலை தோய்ந்த மாமியின் முகத்தையும், கம்மிய குரலில் பேசிய பேச்சையும் கேட்ட போது, அவளுடைய ஆவேசம் அப்படியே அடங்கிப் போய் விட்டது.

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. போயிட்டு வர்றேன் மாமி..." அமைதியாகச் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டாள்.

அவள் சாந்தோம் சர்ச்சை அடையும்போது, ஏற்கனவே செந்தூ வந்து காத்திருந்தான். அவளைப் பார்த்ததும் எதிரே வந்தவன், "என்னவாச்சு? ஏன் இவ்வளவு நேரம்?" என்று பதட்டத்துடன் கேட்டான்.

அவள் நடந்ததை சுருக்கமாகச் சொன்னாள். செந்தூ அவளை சர்ச்சுக்குப் பின்னாலிருந்த சந்தில் அழைத்துச் சென்றான். அங்கு ஆள் நடமாட்டம் அவ்வளவாக இல்லை.

"இங்கே உட்காருவோம்" என்று அங்கிருந்த படிகளில் அமர்ந்து கொள்ள, ரோஜாவும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவள் தாயின் நிலைமையை விளக்கினாள். செந்தூ கவனமாய்க் கேட்டுக் கொண்டான்.

"நான் இன்னிக்கு பூனா செல்கிறேன் வந்த பிறகு அம்மாவைக் கட்டாயம் சந்திக்கிறேன்" என்றான்.

"மறுபடியுமா... அந்த ஊரில் உனக்கு என்ன வேலை?"

செந்தூ சிரித்தான். "சும்மா ஊரைச் சுற்றிப் பார்க்கத் தான்."

"எல்லாம் பொய்."

"நீ ஒரு முட்டாள்! இல்லாவிட்டால் என்னைப் போன்றவர்கள் காரணமில்லாமல் ஒரு வேலை செய்வானா?

அவள் பேசவில்லை. செந்தூவின் பேச்சில், நடத்தையில் பெரிய மனிதனின் தோரணை தென்பட்டது.

"நேற்று இரவு நானும், விஜயும் மறுபடியும் சந்தித்துக் கொண்டோம்."

"ஆமாம், சந்திந்துக் கொள்ளப் போவதாக விஜய் சொன்னார். அவர் என்ன கேட்டார்? நீ என்ன சொன்னே?" பதட்டத்துடன் கேட்டாள்.

"ரோஜா, நீ இவ்வளவு முட்டாளாய் இருப்பாயென்று நான் நினைக்கவில்லை."

"அப்படின்னா?"

"உன் தலை! விஜயுடன் உன் திருமணத்துக்கு, என் எதிர்காலத்துக்கும் என்ன சம்பந்தம்?"

ரோஜா பதில் பேசவில்லை. விஜய் என்ன சொன்னானோ தெரியாது. அதுபற்றித் தெரியாமல், வெளிப்பட்டு விடுவது நல்லது இல்லையென்று மௌனமாய் இருந்து விட்டாள்.

செந்தூ தெருவில் நடமாடும் ஜனங்களைப் பார்த்துக் கொண்டே கூறினான்.

"ரோஜா! நீ ரொம்ப கொடுத்து வைத்தவள். இல்லா விட்டால் நாம் இருக்கும் நிலைமைக்கு விஜய் போன்ற கணவன் உனக்குக் கிடைப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? ரொம்ப திறமையானவன் என்று அவனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவனைச் சந்தித்த பிறகு அந்த அபிப் பிராயம் இரு மடங்காயிற்று. பைத்தியக்காரத்தனமான யோசனைகளை விட்டுவிட்டு, அவனுடன் திருமணத்துக்கு ஒப்புக் கொள்..."

"செந்தூ... ஆனால்?"

"இந்த விஷயத்தில் இனி நீ ஒண்ணும் பேசாதே! நான் அவனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன்."

"என்னவென்று?"

"இந்தத் திருமணத்துக்கு உன்னைச் சம்மதிக்க வைக்கும் பொறுப்பு என்னுடையது என்று. ரோஜா, நீ மாட்டேன் என்று சொல்லமாட்டாய், எனக்குத் தெரியும்.



ஒருக்கால் என் விஷயம் விஜய்க்குத் தெரிந்தால், பிறகு ஏதாவது மனவேற்றுமை வரக்கூடும்! நேற்று இரவு நல்லா யோசித்துப் பார்த்தேன். நான் ஊரிலிருந்து வந்தபிறகு செய்யப்போகும் முதல் வேலை என்ன தெரியுமா? விஜயிடம் என் கடந்த கால வாழ்க்கையைப் பற்றிச் சொல்லிவிடப் போகிறேன். நான் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும், அவன் ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. ரோஜா! நேற்று நீ மேரியுடன் சரியாகப் பேச வில்லையே ஏன்?" திடீரென்று பேச்சை மாற்றியபடி கேட்டான் செந்தூ.

"மேரியுடனா? நானா... பேசினேனே?"

"ஊஹூம்... இன்னும் நன்றாக, மனம்விட்டு நெருங்கிப் பேசுவாய் என்று நினைத்தேன்."

"இத்தனைக்கும் அந்தப் பெண் யாரு?"

"என்னைப் போன்ற துர்பாக்கியசாலி. வாழ்க்கையில் வழிதவறி அதிருஷ்டவசமாய் என்னிடம் வந்து சேர்ந்தாள் ரோஜா" சந்திரன் தயங்குவதுபோல் நிறுத்தினான்.

"சொல்லு! என்ன விஷயம் செந்தூ..."

"மேரி தாயாகப் போகிறாள்."

"ஆனால்..."

"அந்தக் குழந்தைக்கு தந்தை நான்தான்."

ரோஜா திடுக்கிட்டாள், "என்ன? நீயா? அந்தப் பெண்ணுடனா? திருமணம் ஆகாமலேயே..."

செந்தூ வெறுப்பு கலந்த சிரிப்பை உதிர்த்தான். "திருமணம், உரிமை, வழக்கம், சம்பிரதாயம் எல்லாம் உங்களுக்கு. நாங்க உங்க சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்ற விஷயத்தை நீ மறந்து விடாதே."

சற்றுநேரம் ரோஜாவுக்கு என்ன பேசுவதென்றே புரிய வில்லை. செந்தூ அவளுடைய கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். மென்மையாக, சிவப்பாக இருந்த அந்தக் கையைப் பார்த்துக் கொண்டே சொன்னான்,

"ரோஜா! நீ திருமணம் செய்துகொண்டு வாழ்க்கையில் ஸ்திரப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்வது ஏன் தெரியுமா? என்றாவது நான் வந்து ஓரிரு நாட்கள் தங்கி, உன் குடும்பத்தைப் பார்த்து மகிழ வேண்டுமென்ற ஆசைதான். இன்னொரு விஷயமும் சொல்கிறேன். நீ எனக்கொரு வாக்குக் கொடுக்க வேண்டும்."

"என்னவென்று சொல்லு?"

"ரோஜா! எந்த இடத்தில் ஆபத்து இருக்கிறதென்று தெரியாத சூழ்நிலையில் வாழ்க்கை நடத்துகிறேன். எத்தனை வருடங்கள் இப்படி இருப்பேன் என்றோ... அவை வருடங்களோ இல்லை நிமிடங்களோ என்று தெரியாத அநிச்சய வாழ்க்கை என்னுடையது. எந்தப் பந்தங்களுக்கும் கட்டுப்படாமல் இருந்த என் வாழ்க்கையில் மேரி எப்படி வந்தாளோ? எப்போ என் மனதில் இடம் பிடித்து விட்டாளோ... தெரியவில்லை. இரக்கத்தில் தொடங்கிய நட்பு, உயிருக்குச் சமமாய் மாறிவிடுமென்று நான் ஊகித்திருக்கவில்லை. எனக்கு சிநேகிதியானாலும், அக்காவானாலும் எல்லாம் நீதான். ஒருக்கால் எனக்கேதாவது நேர்ந்தால் மேரிக்கு நீதான் ஆதரவு தர வேண்டும்."

"செந்தா..." ரோஜா அவனின் வாயை கையால் மூடப் போனாள்.

செந்தா மென்மையாய் கையை விலக்கி விட்டான், அவன் முகத்தில் விரக்தியும், வேதனையும் எட்டிப் பார்த்தன.

"நாம் சொல்வதை நிறுத்திவிட்டால் மட்டும், நடப்பது நடக்காமல் இருக்காது, தெரியுமா?"

"தெரியும்! ஆனால் தயவுசெய்து நீ அந்தப் பேச்சை பேசாதே" குரல் கம்பிவிட்டது ரோஜாவுக்கு.

"ஆல்ரைட்... நான் சொல்ல நினைத்ததைச் சொல்லி விட்டேன். இனி நீ சொல்லு."

மேற்கொண்டு என்ன பேசுவதென்று புரியாமல் சாலைப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். செந்தா சீரியஸாக இருந்தான்.

ரோஜா நெஞ்சில் குடி கொண்ட துக்கத்தை மறைக்க முயன்று கொண்டிருந்தாள். செந்தா சொன்னது உண்மை ஆகிவிட்டால்? இதுவே தங்கள் கடைசி சந்தர்ப்பமாகி விடுமோ? அவள் தம்பியின் முகத்தையே தவிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ரோஜா, மனிதர்கள் புண்ணியத்தைச் சம்பாதிக்க பூஜைகள், தானதர்மங்கள் செய்வாங்க... பகவத்கீதை, குரான், பைபிள் எல்லாம் படிப்பாங்க. ஆனால் அதில் சொல்லப்பட்ட ஒரு சின்ன விஷயம்—எல்லோரையும், சமமாய், அன்புடன் நேசி—என்பதை மட்டும் ஏன் நடைமுறையில் செயல்படுத்துவதில்லை. இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட நபர் ஒருவராவது இருப்பாங்க என்று நீ நம்புறியா?" என்று கேட்டான் செந்தா.

"இருக்காங்க செந்தா... இருக்காங்க."

அவன் வியப்புடன் பார்த்தான்.

"ஆமாம் செந்தா... கடவுள் போன்ற அந்த மனிதரை நான் பார்த்திருக்கிறேன், பழகியிருக்கேன்."

"யாரு?"

"வேணுகோபாலன்."

அந்தப் பெயரைக் கேட்டதும் அவனின் முகம் மாறியது. புருவங்கள் முடிச்சேறின.

"வேணுகோபாலனா?"

"ஆமாம்" என்றாள் அழுத்தமாக.

"அவர் வீட்டுக்குப் போவதை நீ இன்னும் நிறுத்தவில்லையா?"

"இல்லை."

செந்தா நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் குரல் எச்சரிப்

பதுபோல் ஒலித்தது. "அப்படின்னா! அதைவிட்டுடு... உடனே... இன்னிக்கே "

"எதுக்காக விடணும்?" சாலைப் பக்கம் பார்த்துக் கொண்டே ரோஜா கேட்டாள்.

"ஏன் என்றால், இன்னும் சில நாட்களில் அவர் வீட்டைக் கொள்ளை அடிக்கப் போகிறார்கள் நீ அங்கே இருந்தால், நீயும் அதில் மாட்டிக் கொள்வாய்."

"செந்தூ!"

"நீ நம்பினாலும், நம்பாவிட்டாலும் இது உண்மை."

"என் உடம்பில உயிர் இருக்கிற வரைக்கும் அப்படி நடக்க விடமாட்டேன் இப்பவே போலீசுக்கு ரிப்போர்ட் கொடுக்கப் போகிறேன்."

அவன் அழுத்தமான குரலில் கேட்டான். "யாருக்கு? என்னவென்று கொடுக்கப் போகிறாய்?"

"போலீசுக்கு..."

"கொடு... நன்றாகக் கொடு... அது எங்க மேலிடத் துக்குத் தெரிந்துவிடும், இந்த விஷயம் எப்படி வெளியில் வந்ததென்று ஆராய்வார்கள். ஒருநாள், நல்ல முகூர்த்தத்தில் என் தலையை வெட்டி உனக்குப் பார்சலாக அனுப்பி வைப்பார்கள். அதை நீ விரும்பினால், அப்படியே செய்..."

"செந்தூ!" தீனமாய் பார்த்தாள் ரோஜா.

"ஆமாம், அவர்தான் கடவுளைப் போன்றவர் ஆற்றே? என்னைவிட உனக்கு ரொம்ப வேண்டியவர் ஆயிற்றே."

"செந்தூ... நீ இப்படிப் பேசினால் என் மனம் ரொம்ப வேதனைப்படும்."

"இல்லாவிட்டால்... அவர் யார்? நீ யார்? உண்மையைச் சொல் அவர்மேல் உனக்கு இவ்வளவு அபிமானம் ஏன்?"

"ஏனென்றால்..." ரோஜாவின் கண்கள் பனித்தன. "செந்தூ! உனக்கு என்ன தெரியும்? நீ கனவில்கூட ஊகித் திராத பயங்கரமான நிகழ்ச்சிகளை நான் சந்திக்க நேர்ந்தது.



அந்த நேரத்தில் அவருடைய ஆதரவு மட்டும் எனக்குக் கிடைத்திராவிட்டால், இப்படி உயிருடன் உன் முன்னாடி நின்று கொண்டிருக்க முடியாது."

"அது மட்டும் உண்மைன்னா... அதுக்குக் காரணம் அனந்தானே?"

"ஊஹூம், எனக்கு அப்படித் தோன்றவில்லை. அவன் வெறும் கருவி மட்டும்தான் என்று தோன்றுகிறது."

சந்திரன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். "ரொம்ப நேரமாகி விட்டது. போகலாம் வா...", என்றான்

இருவரும் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தார்கள்.

"ரோஜா" ஏதோ யோசித்துக் கொண்டிருந்த சந்திரன் திடீரென்று அழைத்தான்.

"என்ன செந்தூ?"

"வேணுகோபாலன் வீட்டில் வேலைக்காரி இருக் காளா?"

"இருக்கிறாள் "

"எத்தனை வயது இருக்கும்?"

"இருபத்தி ஐந்து வயதுக்குள் இருக்கலாம். ஏன்?"

"சும்மாதான்... அந்தப் பெண் என்னென்ன வேலை செய்வாள்."

"வீட்டைச் சுத்தப்படுத்தி, துணிகள் தோய்த்து, பத்து பாத்திரம் தேய்ப்பாள்."

"அந்த வேலைக்காரிக்கு வேணுகோபாலனிடம் ரொம்ப நெருக்கம் இருக்கிறதா?"

"வேலைக்காரிக்கு மட்டுமா? எங்க எல்லோருக்கும் அவரிடம் நெருக்கம் இருக்கு. சொந்த குழந்தைகளைப் போல் சகஜமாய் அன்பாய்ப் பழகுவார்... எதுக்காகக் கேட் கிறாய்?"

"அந்த வேலைக்காரிக்கும், அவருக்கும் ஏதோ தொடர்பு

இருக்கு என்று...''

''சீ...சீ... அப்படி எல்லாம் இல்லை! எனக்கு நன்றாகத் தெரியும். அந்தக் கட்டுக் கதையெல்லாம் யார் சொன்னாங்க உன்னிடம்?''

''அப்படின்னு கேள்விப்பட்டேன்...''

சந்திரனிடம் நகை தொலைந்துபோன விஷயம் கேட்க நினைக்கும்போதே பஸ் வந்து விட்டது. ரோஜா பஸ்ஸில் ஏறினாள். செந்தூர் கை அசைத்தான். பார்த்துக் கொண்டிருக்கும் போதே பஸ் கண் மறைவாகிவிட்டது. சந்திரனிடம் இருந்து பெருமூச்சொன்று வெளிவந்தது. கடவுள் அநுக்கிரகித்தால், அடுத்த தடவை ரோஜாவை விஜய் வீட்டில் அவனுடைய மனைவியாய்ச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியது.

## 59

ரோஜா ஏறிய பஸ் விஜயின் வீட்டுக்கு அருகில் இருக்கும் பேருந்து நிறுத்தத்தின் வழியாகத்தான் போகிறது. டிக்கெட்டை வீட்டுக்குப் போவதற்காக எடுத்திருந்தாலும், அந்தப் பஸ் நிறுத்தம் வந்ததும் ரோஜா இறங்கிவிட்டாள். இந்நேரத்துக்கு விஜய் எப்படியும் வீட்டில்இருக்க மாட்டான். ஒருமுறை வேணுகோபாலனைப் பார்த்துவிட்டு, அவர் அருகில் சற்று நேரம் உட்கார்ந்துவிட்டு, வீட்டுக்குப் போய் விடலாம் நமக்குப் பிடித்தமானவர்களின் அருகாமையில், மன அழுத்தம் குறையும் என்ற விஷயம் ரோஜாவால் சுயமாய் உணர முடிந்தது. அவருடைய அறிமுகத்தில் ரோஜா நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டாள். முன்போல் ஒவ்வொரு சின்ன விஷயத்துக்கும் ஆவேசப்படுவது நின்று



விட்டது. பொறுமையாய் இருக்கப் பழகிக் கொண்டாள். தனக்கு விருப்பம் இல்லாதவர்களிடம்கூட மரியாதையாகப் பேசுவது, யாராவது தவறு செய்தால், எந்தச் சூழ்நிலையில் அவர்கள் அதைச் செய்திருப்பார்கள் என்று யோசிப்பது. இவையெல்லாம் கற்றுக் கொண்டாள்.

ரோஜா மெதுவாக விஜய் வீட்டுப் பக்கம் நடக்கத் தொடங்கினாள். ''அவர் வீட்டை இன்னும் சில நாட்களில் கொள்ளை அடிக்கப் போகிறார்கள்'' மறுபடியும், மறுபடியும் செந்தூரின் குரல் காதில் ஒலித்தது. இந்த விஷயத்தை அவரிடம் உடனே சொல்லி விடணும். எப்படியாவது அந்தக் காரியம் நடக்காமல் தடுக்கணும்! அவரும், விஜயும் சேர்ந்து எப்படியாவது இந்த ஆபத்திலிருந்து மீளும் வழியைக் கண்டு பிடிப்பார்கள். தங்களுடைய குடும்ப நலனில் இவ்வளவு அக்கறை கொண்ட அவர் வீட்டில் செந்தூர் திருடுவதாவது? இதைவிடக் கொடுமையான விஷயம் வேறு என்ன இருக்க முடியும்? கூடாது... அப்படி நடக்கவிட மாட்டேன்! யோசனைகளில் மூழ்கியவாறே, அந்த வீட்டில் நுழைந்த ரோஜாவுக்கு எதிரே வந்தான் விஜய்

விஜய் ரோஜாவை மேலும் கீழுமாய் ஒரு பார்வை பார்த்து, ''அடடா... தம்பியின் நலனைப் பற்றித் தெரிந்து கொள்ள தவித்துக் கொண்டிருக்கும் சகோதரி அவர்கள் போலும்! காலையில் வருவதாகச் சொல்லிவிட்டு, நிதானமாய் மாலையில்வருகை தந்திருக்கிறார்கள்'' கிண்டலடிப்பது போல் சொன்னான்.

ரோஜா பதில் சொல்லவில்லை.

இதென்ன சோதனையோ? அவனைப் பார்த்துவிட்டால் போதும் வாயில் வார்த்தை வராது. அவன் முன்னிலையில் தனக்கு ஏற்படும் இந்தப் பலவீனத்தை நினைக்க நினைக்க ரோஜாவுக்குத் தன்மீதே கோபமாய் வரும். அவன் இந்தச் சமயத்தில் வீட்டில் இருக்க மாட்டான் என்று நினைத்து தைரியமாக வந்துவிட்ட ரோஜாவுக்கு, அவன் வாசலிலேயே எதிர்பட்டதும், என்ன சொல்லுவது என்று புரியவில்லை.

அவன் சொன்னது காதில் விழாததுபோல் மாடிக்குப் போகப் போனாள்.

"ஒரு நிமிஷம்..." விஜய் அழைத்தான்.

ரோஜா திரும்பிப் பார்த்தாள்.

"எப்படியும் மாடிக்கு போகப் போகிறாய். ஹார்லிக்ஸை எடுத்துக்கிட்டுப் போ. அவர் இப்பொழுதுதான் எழுந்து கொண்டார்" என்றான்.

ரோஜா மௌனமாகச் சமையலறைப் பக்கம் வந்தாள். ஆனால் அங்கு ஹார்லிக்ஸ் டம்ளர் தென்படவில்லை. உண்மையாகவே அவர் எழுந்து கொண்டாரா? ஹார்லிக்ஸ் குடிப்பதாகச் சொன்னாரா? இல்லை கலாட்டாவாகச் சொல்லியிருப்பானோ? ரோஜா சந்தேகத்துடன் விஜயைப் பார்த்தாள்.

"நன்றாகத்தான் இருக்கு... அப்படிப் பார்க்கிறாயே? அவர் குடிப்பார்ன்னு சொன்னேனே தவிர, கலந்து வெச்சிருக்கு எடுத்துக்கிட்டுப் போ என்றுசொல்லவில்லையே? அதுவும் பெண்களைப் பார்த்தபிறகு சமையல் அறை காரியம் செய்யணும் என்றால் சோம்பல் வந்துவிடும் எனக்கு... நீ இன்னும் பத்து நிமிடங்கள் வரை வராமல் இருந்திருந்தால், நானே கலந்து எடுத்துக்கிட்டுப் போயிருப்பேன். இப்போ சோம்பலாய் இருக்கு. அந்தக் கையாலேயே எனக்கும் ஒரு கப் டீ போட்டுக் கொடுத்தால், ரொம்ப சந்தோஷப்படுவேன்..."

ரோஜா உள்ளே போய் அடுப்பைப் பற்ற வைத்து, பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி சுட வைத்தாள்.

விஜய் சமையலறை நிலைப்படி அருகிலேயே நின்று விட்டான்.

"நேற்று இரவு செந்தூவுடன் பேசினேன்..." கையிலிருந்த பேப்பரைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

ரோஜா அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த தண்ணீ



ரின்மீது பார்வையைப் பதித்து, விஜய் வாயிலிருந்து வரப் போகும் வார்த்தைகளைக் கேட்கக் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு காத்திருந்தாள்.

எதிரே ஹார்லிக்ஸ் பாட்டில் இருந்தது ஆனால் சர்க்கரை டப்பாவில் தீர்ந்துவிட்டது

விஜய் உள்ளே வந்து அலமாரியில் இருந்த பெரிய சம்படத்தை எடுத்துக் கொடுத்தான்.

அதில் இருந்த சர்க்கரையை ரோஜா சின்ன டப்பாவில் மாற்றிக் கொண்டிருந்தாள்.

"ரோஜா! நீ விரும்புவதுபோல் செந்தூவை வழிக்குக் கொண்டுவர நான் தயாராக இருக்கேன். ஆனால் அதுக்குப் பிரதிபலன் என்ன?" என்று விஜய் கேட்டான்.

ரோஜா தலையை உயர்த்தி அவன் பக்கம் பார்த்தாள்.

"பலன் இல்லாமல் உழைப்பது எனக்குப் பழக்கம் இல்லை..." சிரிப்பாய் சொன்னான் விஜய்.

அவன் மனதில் இருக்கும் எண்ணத்தைக் கண்டு கொள்ள முயன்றவளாய், கண் இமைக்காமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள் ரோஜா.

"என்ன பேச்சையே காணோம்? செந்தூ விஷயத்தில் நீ விரும்புவதுபோல் செய்தால் எனக்கென்ன லாபம் என்று கேட்கிறேன்?"

"நான்...என்னால் உங்களுக்கு என்ன தர முடியும்?"

"கொடுக்க வேண்டியதில்லை. செய்தால் போதும்... சின்ன காரியம்தான்... செய்யமுடியுமா சொல்லு!"

"அது என்ன?" மிரண்டு விட்டவள்போல் கேட்டாள்.

"அனந்தை திருமணத்துக்கு சம்மதிக்க வைக்கணும்."

"நானா?"

"ஆமாம்! நீயேதான்."

"என் பேச்சைக் கேட்பானா?"

"கேட்பான். எனக்கு நம்பிக்கையிருக்கு. நீ எது சொன்

ணாலும் அனந்த் மறுக்க மாட்டான்.''

ரோஜா கண்கள் அகல விரிய, விஜய் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள் எந்தவிதமான வெறுப்பும், சந்தேகமும் இல்லாமல் முதல் தடவையாய் தன்னையே பார்த்துக்கொண்டிருந்த ரோஜாவைப் பார்த்ததும், விஜய் இதயத்தில் இனம் புரியாத சலனம் ஏற்பட்டது. உணர்ச்சிவசப்பட்டவன்போல் அவன் முகம் சிவந்தது.

''ரோஜா!'' விஜயின் கைகள் ரோஜாவின் தோள்களில் பதிந்தன.

''ரோஜா! நான் ரொம்ப நாட்களாய்ச் சொல்லவேண்டுமென்று நினைத்திருந்தேன்'' உணர்ச்சிவசப்பட்டதில் குரல் மாறியது.

ரோஜா அவன் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைக்காகத் துடிக்கும் இதயத்துடன் காத்திருந்தாள்.

இதற்குள் பின்னாலிருந்து ''ஓ'' என்ற குரல் ஒலித்தது. தலையைத் திருப்பிப் பார்த்தான் விஜய். அவன் கைகள் மின்னல் வேகத்தில் ரோஜாவை விடுவித்தன. கதவு அருகில் லாவண்யா நின்றிருந்தாள்.

''விஜய்! ஐயாம் சாரி! உங்களை டிஸ்டர்ப் செய்துவிட்டேன் போலிருக்கு. அப்பாவைப் பார்க்க வந்தேன். பேச்சுக் குரல் கேட்டதும் இந்தப் பக்கம் வந்து விட்டேன். என்னை மன்னித்து விடு'' லாவண்யா திரும்பிப் போக முற்பட்டவள் போல் வாசல் பக்கம் திரும்பினாள்.

''லாவண்யா...'' விஜய் ஹாலுக்கு வந்தான். அவன் முகம் கன்றி இருந்தது.

''மன்னிப்பு கேட்டு விட்டேனே'' வேகமாய்ச் சொன்னாள் லாவண்யா.

''வாயை மூடு... அப்படியே போய்விடுவானேன். உள்ளே வா...''

''ஊஹும்... வர மாட்டேன். இது எங்க விஜய் வீடுன்னு நினைத்துக்கிட்டு வந்தேன். அது தவறுன்னு இப்போ புரிந்து



விட்டது.''

''விளையாடாதே...'' போகப் போன லாவண்யாவின் கையைப் பிடித்துத் தன் ஆபீஸ் அறைக்கு இழுத்துச் சென்றான் விஜய்.

''அப்பாவைப் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன். நான் ஒரு பைத்தியக்காரி. அவருக்கு வேண்டியவர்கள் எல்லாம் அருகில் இருக்கும்போது நான் எதுக்கு?''

லாவண்யா முகத்தில் தென்பட்ட போட்டியை, பொறாமையை விஜய் கவனியாமல் இல்லை.

லாவண்யா விஜயை ஒருமுறை ஏற இறங்க பார்த்துவிட்டு, ''ஓஹோ! விஷயம் ரொம்ப தூரத்திற்கு வந்துவிட்டது போலிருக்கு'' என்றாள்.

லாவண்யாவின் பேச்சில் இருந்த குத்தலை, அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள் இல்லை அவன்!

''லாவண்யா... ப்ளீஸ்... உனக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றிப் பேசாதே.''

''கண்ணால் பார்த்த பிறகு என்னால் புரிந்து கொள்ள முடியாது என்கிறாயா? நிஜந்தான்! நான் ஒரு முட்டாள். அதான் இவ்வளவு சுலபமாய் ஏமாந்து போகிறேன்.''

லாவண்யாவைப் பார்த்ததில் ஒருகணம் திக்பிரமை அடைந்து விட்டவளாய் நின்றுவிட்ட ரோஜா, எப்படியோ சமாளித்துக் கொண்டு, ஹார்லிக்ஸை கலந்து, மாடிக்கு எடுத்துக்கொண்டு சென்றாள்.

வேணுகோபாலன் விழித்துக் கொண்டுதான் இருந்தார். தலையணையில் சாய்ந்து, புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் முகம் சற்று தெளிவாக இருந்தது. ரோஜாவைப் பார்த்ததும் அவர் புத்தகத்தைப் பக்கத்தில் வைத்து விட்டார்.

''என்னம்மா... நீ காலையிலேயே வருவதாக விஜய் சொன்னானே? வரவில்லையே ஏன்?''

அவள் நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னாள்.

"நேற்று இரவு விஜய் செந்தா மறுபடியும் சந்தித்துக் கொண்டார்களாம். ரோஜா நான் என்ன நினைக்கிறேன் என்றால்..." பாதியிலேயே அவர் நிறுத்தி விட்டார்.

விஜய், லாவண்யா உள்ளே வந்தார்கள். விஜய் கை லாவண்யாவின் தோளை இறுக்கமாய் பற்றி இருந்தது.

"வந்துவிட்டு உங்களைப் பார்க்காமல் செல்லப் போனாள், நான்தான் மாடிக்கு இழுத்து வந்தேன்" என்றான் விஜய்.

லாவண்யா அவன் கையை விடுவித்துக் கொண்டாள். "விஜய் ஒன்று கேட்கிறேன். உண்மையைச் சொல்லு. இவரை இப்படி அழைத்து வந்து உன் வீட்டில் வைத்துக் கொள்வதில் உன் உத்தேசம்தான் என்ன?"

விஜய் பதில் சொல்ல முடியாமல் பார்த்தான்.

"எல்லோரும் என்னைத் தூற்றணும், நாலு பேருக்கு முன் என்னை அவமானப்படுத்தணும், இதுதானே உன் திட்டம்..." எடுத்தெறிந்து பேசுவதுபோல் சொன்னாள் லாவண்யா.

"லாவண்யா... இப்படி வா... நாம் வெளியில் சென்று பேசிக் கொள்ளலாம்." விஜய் அவளின் கையைப் பிடித்து, வெளியில் அழைத்துச் செல்ல முயன்றான்.

அவள் ஒரே உதறலில் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

"விஜய்! போதும் உன் நாடகம்! இத்தனை நாட்கள் நீ என் நலனை விரும்புகிறவன் என்று நினைத்தேன். யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நீ என் பக்கம்தான் என்று எண்ணினேன். இந்தக் குள்ளநரிகளின் கூட்டத்தில் நீயும் சேர்ந்து விட்டாயென்று இப்பொழுதுதான் புரிகிறது. என்னை ஏன் எல்லோரும் இப்படி வெறுக்கிறீர்கள்? இந்தப் பிசாசு... மாயக்காரி... கடைசியில் உன்னையும் வலையில் சிக்க வைத்து விட்டாள்."



லாவண்யா அங்கு இருந்த நாற்காலியில் சரிந்து இரு கரங்களில் முகம் புதைத்து அழத் துவங்கினாள்.

விஜய் லாவண்யாவின் அருகில் வந்து தோளில் கையைப் பதித்து, தோழமையுடன் சொன்னான், "லாவண்யா, நீ கோபத்தில் இருக்கிறாய்... என்ன பேசுகிறோமென்று உனக்கே தெரியவில்லை."

லாவண்யா சிவந்து விட்ட கண்களை உயர்த்திப் பார்த்தாள். "எல்லோரும் என்னை எப்படித் தூற்றுகிறார்கள் தெரியுமா? அப்பாவிடம் எனக்குப் பாசம் இல்லையாம். அவர் உடல் நலம் கெட்டதற்கு நான்தான் காரணமாம்... அதிலேயும் அந்த மிஸஸ் ராமநாதன் இருக்காளே, ரொம்பப் பொல்லாதவள் என்னைப் பற்றி கதைகதையாய் அவள் செய்த பிரசாரத்தில், என்னால் வெளியில் தலைகாட்ட முடியவில்லை. எல்லோர் கண்களுக்கும் நான்தான் குற்றவாளியாகத் தெரிகிறேன். நீங்க எல்லோரும் சந்தோஷமாய் இருக்கும்போது எனக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை... கடவுளே எனக்கு ஏன் சாவு வரவில்லை?"

அவள் மறுபடியும் அழத் தொடங்கினாள்.

வேணுகோபாலனின் தலைமாட்டில் நின்றிருந்த ரோஜா கற்சிலையாக நின்று விட்டாள் ஆதரவில்லாதவள் போல் அழுது கொண்டிருந்த லாவண்யாவைப் பார்க்கும் போது, அவள் இதயம் இளகி விட்டது. சற்றுமுன்வரை அமைதியுடனிருந்த வேணுகோபாலனின் முகம் இந்நிகழ்ச்சியால் கலவரமடைந்து, சோர்வாகத் தென்பட்டது.

விஜய் அவளின் தலையை வருடிக் கொண்டே சொன்னான்.

"லாவண்யா! அங்கிள் வீட்டுக்குச் செல்வதாகத்தான் கூறினார். நான்தான் வற்புறுத்தித் தங்க வைத்துவிட்டேன்! இந்த விஷயம் உன்னை இவ்வளவு வேதனைப்படுத்தும் என்று எனக்குத் தெரியாது. தவறு என்னுடையதுதான்! இன்று மாலையே அவர் உங்க வீட்டுக்கு வந்து விடுவார், சரிதானே!"

# 60

"இந்த உலகில் சிலர் இருப்பாங்க. வீட்டு வாசற்படி ஏறாதேன்னு சொன்னாலும், வெட்கமேயில்லாமல் மறுபடியும் வந்துடுவாங்க. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதும்! இப்படிப்பட்டவர்களுக்கு என்ன செய்தால் புத்தி வருமோ தெரியவில்லை."

வேணுகோபாலனுக்காகச் சாத்துக்குடி சாறை எடுத்துக் கொண்டு இருந்த ரோஜாவுக்கு அவளின் சொற்கள் ஈட்டியாய் வந்து தாக்கின.

லாவண்யாவும், மிஸ் ஜோஷியும் ஹாலில் அமர்ந்து இருந்தார்கள். லாவண்யா கத்தியால் ஆப்பிள் பழத்தை நறுக்கிக் கொண்டிருந்தாள். மிஸ் ஜோஷி புத்தகத்தால் முகத்தை மறைத்துக் கொண்டிருந்தாள்.

லாவண்யா வேண்டுமென்றே வீசிய இச்சொற்கள் மனதைக் காயப்படுத்தாமலிருக்க, ரோஜா சக்தி முழுவதையும் திரட்டிக் கொள்ள முயன்றாள்.

வேணுகோபாலன் விஜய் வீட்டிலிருந்து வரும்போது தானும் அவருடன் செல்வதா, வேண்டாமா என்ற யோசனையில் தயங்கித் தயங்கி நின்ற ரோஜாவைப் பார்த்த விஜய், "கிளம்பு, கிளம்பு! ஏன் இங்கேயே நின்றுவிட்டாய்?" என்று அவசரப்படுத்தினான்.

தான் மறுபடியும் இந்த வீட்டுக்கு வருவதில், லாவண்யாவுக்குத் துளிகூட விருப்பமில்லையென்று அவளுக்குத் தெரியும். தெரிந்தும் இதைத் தவிர்க்க முடியவில்லை.

ரோஜா ராதைக்கு உணவு கொடுத்துவிட்டுத் தூங்க வைத்தாள். வேணுகோபாலன் படுத்துக்கொள்ளும் முன்



தேவையான மருந்துகளைக் கொடுத்து விட்டு, கொசு வலையைச் சரி செய்துவிட்டு, வெளியே வந்தாள்.

வெளியில் காரில் உட்கார்ந்து கொண்டிருந்த விஜய், அவளைப் பார்த்ததும், கார் கதவைத் திறந்து வைத்தான்.

ரோஜா சங்கடமாக உணர்ந்தவள் போல் நின்று விட்டாள்.

"ரொம்ப நேரமாகி விடவில்லை, நான் போய்க் கொள்கிறேன்" என்றாள்

"நான் உனக்காகத் தனியாய் வரவில்லை, எனக்கு அந்தப் பக்கம் வேலை இருக்கு."

எதிரே புல்வெளியில் லாவண்யா, மிஸ் ஜோஷி உட்கார்ந்து இருந்தார்கள். இருவருக்குமிடையே டிரான்ஸிஸ்டர் இருந்தது. பாட்டு கேட்கும் பாவனையில் உட்கார்ந்து இருந்தாலும், அவ்விருவரின் பார்வை இந்தப் பக்கமே இருந்ததை ரோஜா கவனியாமலில்லை.

"ஊம்" சீக்கிரமாய் ஆகட்டும் என்பதுபோல் பார்த்தான் விஜய்.

"நான் தனியாய்ப் போய் விடுகிறேன்."

"என் செவிகள் நன்றாகத்தான் செயல்படுகின்றன."

விஜய் குரலில் தென்பட்ட எரிச்சலை கவனித்த அவள், மறுமொழி பேசாமல், பின் கதவைத் திறந்து அமர்ந்து கொண்டாள்

கார் கிளம்பி, மறையும்வரை அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்த மிஸ் ஜோஷி பெருமூச்சை விடுத்தாள்.

"லாவண்யா... இனி பிரயோசனப் படாது. நான் நாளைக்குக் கிளம்புகிறேன்."

"என்ன திடீர்னு?"

"அதுதான் லாபம் இல்லைன்னு தெரிந்துவிட்டதே. எட்டாத கனிக்காக ஏங்கும் சுபாவம் இல்லை எனக்கு. நான் போகிறேன்."

லாவண்யாவின் மனம் ஆலகால விஷம் விழுங்கியது போல் ஆயிற்று. இந்த இரண்டு மூன்று நாட்களில் விஜய் எப்படி மாறி விட்டான்?

ரோஜாவிடம் ஏதோ வசிய மந்திரம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எல்லோரும் இவ்வளவு சுலபமாக ஈர்க்கப் படுவார்களா? விஜயை வழிக்குக் கொண்டு வரலாம் என்று ஆசைகாட்டி மிஸ் ஜோஸியைப் பலவந்தமாய்த் தங்க வைத்துக் கொண்டாள். மிஸ் ஜோஸியும் சென்றுவிட்டாள், தான் தனியாளாகி விடுவாள்.

இதற்கெல்லாம் காரணம் அந்த ரோஜாதான். அவள் மட்டும் இல்லாமல் இருந்தால், விஜய் கட்டாயம் ஒப்புக் கொண்டிருப்பான். அவளை இந்த வீட்டுக்கு வராமல் தடுப்பதும் முடியாத காரியமாகி விட்டது. தான் தலைகீழாக நின்றாலும், தன் தந்தை ரோஜாவை விரட்ட மாட்டார். இப்போ விஜயும் சேர்ந்து கொண்டதில், அவளுக்குப் பக்க பலம் அதிகரித்து விட்டது.

இதுக்கெல்லாம் ஒரே வழி. ரோஜா தானாகவே இந்த வீட்டுக்கு வராமல் செய்ய வேண்டும்!

இந்த வீட்டிடம், தன் தந்தையிடம், விஜயிடம் அவளுக்கு வெறுப்பு ஏற்படும்படிச் செய்ய வேண்டும். அவளாகவே இந்த வீட்டுடன் தன் உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும். லாவண்யா சுறுசுறுப்பாய் யோசிக்கத் தொடங்கினாள்.

## 61

ரோஜாவின் வீட்டுக்குச் செல்லும் வழியில் விஜய், "சொல்ல மறந்து விட்டேன். இன்று அனந்திடமிருந்து கடிதம் வந்திருக்கு" என்றான்.

அவள் பதில் பேசவில்லை. விஜய் சட்டைப் பையிலிருந்து



கடிதத்தை எடுத்து பின் சீட்டில் உட்கார்ந்து இருந்த ரோஜாவிடம் நீட்டினான். அவள் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை...

"எடுத்துக் கொள்."

"எனக்கு... எனக்கு... அடுத்தவர்களுடைய கடிதத்தைப் படிக்கும் பழக்கம் கிடையாது."

"இது அடுத்தவர்களின் கடிதம் இல்லை. உன்னுடையது தான். இதில் முழுக்க முழுக்க உன்னைப் பற்றித்தான் எழுதியிருக்கு."

அப்படியும் அவள் அதை வாங்கிக் கொள்ளவில்லை. விஜய் கடிதத்தைத் தன் பக்கத்து சீட்டில் வைத்து விட்டான். அவள் இறங்கிச் செல்லும்போது கொடுத்துவிடலாமென்று எண்ணிக் கொண்டான். சற்றுநேரம் மௌனம் நிலவியது.

அவளாக ஏதாவது பேசுவாள் என்று காத்திருந்த விஜய்க்கு ஏமாற்றம்தான் கிடைத்தது.

"நான் நாளை காலையில் பூனாவுக்குப் போகிறேன்..."

ரோஜா மௌனமாகக் கேட்டுக் கொண்டாள்.

"காதில் விழுந்ததா?"

"ஊம்!"

"எதுக்குன்னு கேட்க மாட்டியா?"

"எதுக்கு?"

"ஆஹா! நல்லா இருக்கு. கிளிப்பிள்ளைப் போல் சொன்னதையே திருப்பிச் சொல்றது. சேந்தா உன்னிடம் எதுவும் சொல்லவில்லையா?"

"சொன்னான்."

விஜய் உடனே எதுவும் பேசவில்லை. மௌனமாய்க் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான். ரோஜா பின்புறமாய் தெரிந்த அவனுடைய தோற்றத்தைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதுவரை அவனைக் கூர்ந்து பார்க்கும் வாய்ப்பு எப்போதும் கிடைத்ததில்லை.

"நான் போவது என்னவோ பாம்பேக்குதான்! அங்கு எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. செந்தூ இன்றிரவு பூனா போகப் போவதாகச் சொன்னானும். நானும் பூனாவுக்கு சென்று அவனுடன் இரண்டு நாட்கள் இருந்துவிட்டு பிறகு பாம்பே போகலாமென்று நினைக்கிறேன். நான் திரும்பி வர நான்கைந்து நாட்கள் ஆகலாம்."

அவள் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

"செந்தூவுடன் இருக்கும் இரண்டு நாட்களில், அவனைப் பற்றி, அவன் வாழ்க்கைப் பற்றி இன்னும் கொஞ்சம் விவரமாகத் தெரிந்துகொண்டால் நான் அவனை மீட்பது எப்படி யோசிக்க முடியும்."

ரோஜா மனதிலேயே கடவுளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டாள். விஜயை தன் வருங்கால கணவனாகச் செந்தூவுக்கு அறிமுகப்படுத்தச் சொல்லி, வேணுகோபாலன் சொன்னதன் அர்த்தம் இப்பொழுதுதான் விளங்கிற்று. இல்லாவிட்டால் செந்தூ விஜய்யை இவ்வளவு நெருக்கமாய் வரவிட்டிருப்பானா? நிச்சயம் மாட்டான்

"ரோஜா" அன்பும், பரிவும் கலந்த குரலில் அழைத்தான் விஜய்...

அந்த அழைப்பில் நெருக்கமும், மனதில் படிந்திருந்த மாறுபாடான உணர்வுகளைத் துடைத்தெறியும் தன்மையும் இருந்தது.

"நான் ஊருக்குப் போய் திரும்பி வரும் இந்த ஐந்தாறு நாட்களில் உனக்கு ஒரு சின்ன வேலையை ஒப்படைக்கிறேன்."

"என்னது?"

"நான் இல்லாத நேரத்தில் வேணுகோபாலன் அங்கிளைக் கவனமாய் பார்த்துக் கொள்ளணும். அவரைப் பற்றி உனக்குத்தான் தெரியுமே...! ரொம்ப சின்ன விஷயத்துக்கும் உணர்ச்சி வசப்படுவார். யாரும் இல்லாத சமயம் லாவண்யா அவரைத் தூண்டி விடுவாள். ஆவேசம் ஏற்படும் விதமாய் நடந்து கொள்வாள்."



இது உண்மைதான் என்று ரோஜாவுக்குத் தோன்றியது.

விஜய் மேலும், "இன்னொரு விஷயமும் உன்னிடம் சொல்லணும் ரோஜா. லாவண்யா ரொம்ப வெகுளி... சொல்லப்போனால் மனதளவில் இன்னும் அவள் ஒரு குழந்தைதான். என்ன சொல்கிறோமென்று அவளுக்கே தெரியாது. லாவண்யா எது சொன்னாலும் நீ பொருட்படுத்தாதே. லாவண்யாவுக்குத் தன் தந்தையை நீ வசப்படுத்திக் கொள்கிறாய் என்று சந்தேகம். அது உண்மையே இல்லாதபோது நீ பயப்பட வேண்டிய தேவையேயில்லை. நீ வழக்கம் போல் அந்த வீட்டுக்குப் போய் வருவதாக வாக்குக் கொடுக்கணும்..."

"அப்படியே செய்கிறேன்."

காரை ரோஜாவின் வீட்டுத் தெருமுனையில் நிறுத்தினான்.

"இன்னும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியவை ஏதேனும் பாக்கி இருக்கா?" என்று கேட்டான் விஜய்.

"இல்லை."

"கடிதத்தை எடுத்துக் கொள்." விஜய் கடிதத்தை எடுத்துக் கொடுக்கப் போனவன், அப்படியே நின்றுவிட்டான். அவன் பார்வை தெருக் கோடியில், ரோஜா வீட்டின் முன் கும்பலாய் நின்றிருந்த ஜனங்கள்மீது நிலைத்தது.

"யாரு அவங்க? என்ன ஆகியிருக்கும்?" என்று கேட்டான்.

"தெரியலியே?" அப்பொழுதுதான் அதைக் கவனித்த ரோஜா சட்டென்று இறங்கப் போனாள்.

"இரு, இறங்காதே" விஜய் காரை ஸ்டார்ட் செய்து நேராக வீட்டு வாசல் முன் நிறுத்தினான். "என்ன நடந்திருக்கும்?"

ரோஜா சட்டென்று இறங்கி விடுவிடுவென்று உள்ளே

போனாள். கும்பலாய்க் கூடியிருந்த மக்கள் ஆளுக்கொரு விதமாய் விமரிசித்துக் கொண்டு இருந்தார்கள்.

"அதோ வந்து விட்டாள் மகாராணி."

"பாவம்! வாழ்நாள் முழுவதும் அந்தம்மா நரகத்தைத் தான் அனுபவித்து இருக்கிறாள்."

ரோஜாவின் பின்னாலேயே விஜயும் உள்ளே போனான்! எதிரே ரேழியில் சாவித்திரியைக் கிடத்தியிருந்தார்கள். பக்கத்தில் உட்கார்ந்து இருந்த சுந்தரி ராகமெடுத்து விலாக்கணம் பாடிக் கொண்டிருந்தாள். ரோஜாவைப் பார்த்ததும் சுந்தரி ஓவென்று கதறினாள்.

"வந்தியாம்மா ரோஜா... முடிஞ்சுடுத்து எல்லாம் முடிஞ்சுடுத்து. உன் அம்மாவுக்கும், நமக்கும் இருந்த உறவு இன்றோடு தீர்ந்து விட்டது."

"அம்மா" ரோஜாவின் குரல் தெளிவில்லாமல் ஒலித்தது.

"இன்னும் அம்மா எங்கேடியம்மா ரோஜா? கட்டிலில் தூங்கிக்கிட்டு இருக்கான்னு நினைச்சேன். இப்படி என் தலையில் கல்லைத் தூக்கிப் போடுவான்னு நினைக்கவே இல்லையே..." என்று ஒப்பாரி வைத்தாள் சுந்தரி.

புயல் காற்றில் சிக்கிய இளம் தளிராய், ரோஜாவின் மேனி நடுங்கத் தொடங்கிற்று. வாயைத் திறந்து ஏதோ சொல்லப் போனாள் ஆனால் வார்த்தை வெளியில் வரவில்லை. தாயின் பிணத்துக்குப் பக்கத்தில் அப்படியே சரிந்து விட்டாள். இறந்த பிறகுதான் அமைதி கிடைத்தது போல் சாவித்திரியின் முகம் தெளிவாக இருந்தது.

"அம்மா..." வாய்விட்டு கதறிவிட்டாள் ரோஜா. மடை திறந்த வெள்ளமாய்த் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. பக்கத்தில் இருந்தவர்கள் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள்.

"என்ன ஜென்மமோ... உயிரோடு இருந்தவரைக்கும் சுகப்பட்டதே இல்லை. அந்த அறையைவிட்டு வெளியே



வந்து ஒருநாளும் பார்த்ததில்லை."

"ரொம்ப மரியாதைக்குரியவள். அவளுக்குப் போய் இப்படிப்பட்ட பசங்க பிறந்திருக்க வேண்டாம்."

"எல்லாம் தலையெழுத்து."

"ஈமக் காரியங்கள் யார் செய்யப் போறாங்களாம்?"

"என்ன செய்யப் போறாங்களோ? சங்கரனும் ஊரில் இல்லை. பொம்பளைங்க மட்டும்தான் இருக்காங்க."

விஜய் பிணத்துக்கருகில் நின்று, சாவித்திரியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் வேணுகோபாலனின் குரல் ஈனமாய், வேதனையாய் ஒலித்தது.

"விஜய், என்னோட குழந்தைகளான ரோஜா, சென்று. இருவருடன் சேர்ந்து சாவித்திரியின் முன் நின்றால், சாவித்திரி என்னை மன்னிப்பாள் என்ற ஆசை எனக்கு இருக்கு. அவள் முன் நிற்க வேண்டுமென்றால் என் குழந்தைகள்தான் எனக்குப் பக்க பலமாய் இருக்கணும் விஜய்! அந்த நாள் வரணும். அந்த நாள் வரை என் உயிர் போகாது. என் குழந்தைகள் பக்கத்திலில்லாமல் சாவித்திரியின் முன் நிற்கும் தைரியம் எனக்கு இல்லை."

விஜயின் கண்கள் பனித்தன.

அதே நேரத்தில், "காரியங்களை யார் செய்யப் போறாங்க?" யாரோ யாரையோ கேட்பது காதில் விழுந்தது. விஜய் ரோஜா அருகில் வந்தான். தோள்மீது கையைப் பதித்துச் சொன்னான், "ரோஜா... இப்போதே வந்து விடுகிறேன். நான் வரும் வரை பிணத்தை எடுக்க வேண்டாம்."

அவன் காரில் புறப்பட்டதும், எல்லோரும் வாயைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"யார் அந்த ஆள்?" யாரோ கேட்டார்கள்.

"தெரியலை!"

"ரோஜாவைத் தொட்டு உரிமையாய்ப் பேசுகிறானே."

"இப்போதைக்குப் பிணத்தை எடுக்க முடியாது போல் இருக்கு."

"என்னவோப்பா! ஆச்சன்று காரியம் முடிந்தால் தேவலை... எத்தனை நேரம் பட்டினி கிடக்க முடியும்?"

விஜய் பக்கத்துத் தெருவிலிருந்த நண்பன் வீட்டு முன் காரை நிறுத்தி, வீட்டுக் கதவைப் படபடவென்று தட்டினான்.

"இதோ வந்துட்டேன்." கதவைத் திறந்த சீனு விஜயைப் பார்த்ததும், "நீயா விஜய்? என்ன விஷயம்? பதட்டமாய் இருக்கியே? என்னவாச்சு?" என்று கலவரமாய் கேட்டான்.

"சீனு... உன்னோடு கொஞ்சம் வேலை இருக்கு. முதலில் நான் உடனே அங்கிளுக்குப் போன் செய்யணும்..." என்று போன் பக்கம் போனான். நம்பரை டயல் செய்யும் போது அவன் கைகள் நடுங்கின மறுபடியும்... மறுபடியும் வேணுகோபாலனின் குரல் காதில் எதிரொலித்தது.

"ஹலோ" மறுமுனையில் வேணுகோபாலனின் குரல் கேட்டது.

"ஹலோ..."

"யாரு? விஜய்தானே?"

"ஆமாம் நான்தான்! தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டேனா?"

"இல்லை... இல்லை... என்ன உன் குரல் என்னவோ போலிருக்கே? எங்கிருந்து பேசுகிறாய்?"

"சீனு வீட்டிலிருந்து."

"சீனு வீட்டிலிருந்தா!" அவன் குரலில் வியப்பு தெரிந்தது:

"ஆமாம், ரோஜாவை வீட்டில் கொண்டு விட வந்தேன்..." விஜய்க்கு நாக்கு வறண்டு விட்டாற்போல் இருந்தது



"என்னவாச்சு?" மறுமுனை குரலில் தூக்கக் கலக்கம் பறந்து விட்டது.

"அங்கே..." அவனால் சொல்ல முடியவில்லை.

"சொல்லு விஜய்... யாருக்காவது உடம்பு சரியாய் இல்லையா? நான் வரணுமா?"

"அவங்க... அவங்க... போயிட்டாங்க."

"விஜய்!"

"மாலை நான்கு மணியளவில் உயிர் போய்விட்டதாம். ரோஜாவை இறக்கிவிட நான் வந்தது நல்லதாய்ப் போய் விட்டது."

மறுமுனையில் பேச்சு குரல் கேட்கவில்லை!

"ஹலோ... ஹலோ..." பதட்டத்துடன் அழைத்தான்.

கிணற்றுக்கடியிலிருந்து கேட்பது போல் குரல் ஒலித்தது.

"இருக்கேன் விஜய்... இங்கேதான் இருக்கேன்."

"நான் உடனே அங்கு வருவதற்கு இல்லை. இங்கே தகன காரியங்களுக்கு ஏற்பாடு..."

"எல்லாம் நீயே பார்த்துக்கொள் விஜய்... உன்னை என் மகனாய் ஏற்றுக்கொண்ட நேரம் எப்படிப் பட்டதோ? என் மகனைப் போன்ற நீ, சாவித்திரிக்கும் மகன்தான்! அங்கே என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமோ எல்லாம் நீயே பார்த்துக் கொள்."

சக்தி முழுவதையும் திரட்டிக்கொண்டு பேசுவதுபோல் பலவீனமான குரலில் அவர் சொன்னார்.

விஜய் ஆறுதலாய்ச் சொன்னான்: "நீங்க வேதனைப் படாதீங்க. எப்படி நடக்கணும்னு எழுதியிருக்கோ, அப்படி நடந்துதான் தீரும். நாம்தான் அதற்குப் பொறுப்பு என்று நினைப்பது வெறும் பிரமைதான். நீங்க... நீங்க... எனக்கு ஒரு வாக்குக் கொடுத்தால்தான், நான் இங்கே காரியங்களைக் கவனிக்க முடியும்..."

"சொல்லு விஜய்! என்ன அது?"

"உங்க கட்டில் பக்கத்து மேஜைமீது பகவத்கீதை

புத்தகம் இருக்கும். கையை நீட்டினால் எட்டிவிடும். நான் வரும்வரை நீங்க அதைப் படித்துக்கிட்டு இருக்கணும். வேறு யோசனைகளில் எண்ணங்களில் மனதைத் தளரவிடக் கூடாது. எந்தத் தகுதியில் தகவ காரியங்களை என்னை செய்யச் சொல்றீங்களோ, அதே உரிமையுடன் நான் உங்களிடம் இதைக் கேட்கிறேன்.''

''நீ சொல்றபடியே செய்கிறேன். அங்கே ரோஜா...'' அவர் குரல் நடுங்கிற்று.

''அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். போனை வைத்துவிடட்டுமா?''

''விஜய்... அவனிடமிருந்து எனக்கு ஏதாவது அடையாள மாய்...'' அவரால் வார்த்தையை முடிக்க முடியவில்லை. குரல் கம்மி விட்டது.

விஜய்க்குப் புரிந்தது.

''அப்படியே செய்கிறேன். இங்கே வேலை முடிந்ததும், நேராக உங்களிடம் வருகிறேன்.''

''காத்துக்கிட்டு இருப்பேன் விஜய்...''

விஜய் போனை வைத்துவிட்டான். அவனிடமிருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது. சிலர் வாழ்க்கையில் தவறை உணர்ந்து, அதற்கு பிராயச்சித்தம் செய்வதற்குள், விதி அவர்களைக் கடுமையாகத் தண்டித்துவிடும். அந்த மனிதன் தன் தவறை நினைத்து நினைத்து வருத்தப்படுவது சகஜந்தான்.

''யாராவது இறந்துவிட்டார்களா விஜய்?'' அருகில் இருந்த சீனு கேட்டான்.

'ஆம்' என்பதுபோல் விஜய் தலை அசைத்துவிட்டு... ''சீனு பிணத்தைத் தூக்க நான்கு ஆட்கள் வேணும். யாராவது கிடைப்பாங்களா?''

''கிடைப்பாங்க... ஆனால் இரவு நேரம் ஆகி விட்டதே! பணம் அதிகமாய்க் கேட்பாங்களோ என்னவோ?''



''பணத்தைப் பற்றிக் கவலை வேண்டாம். கேட்பதைக் கொடுத்து விடலாம்.''

''ஒரு நிமிஷம் இரு... நானும் உன்னுடன் வருகிறேன்'' சீனு உடை மாற்ற உள்ளே போனான்.

விஜய் ஆட்களுடன் வரும்போது, ரோஜாவின் வீட்டின் முன் கும்பல் குறைந்துவிட்டிருந்தது. வந்தவுடனே விஜய் ஆகவேண்டிய காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினான்.

''கொள்ளி யார் வைக்கப் போகிறாங்க தம்பி... பணத்தைக் கொடுத்து யாரையாவது...'' சுந்தரி வார்த்தையை முடிக்கவில்லை.

''அந்த விஷயத்தில் நீங்க நிச்சிந்தையாய் இருங்க...'' என்றான் விஜய்.

ரோஜா தாயின் கன்னங்களைத் தடவிக்கொண்டு கையைப் பிடித்துக்கொண்டு, இன்னமும் அழுது கொண்டிருந்தாள். பிணத்தைத் தூக்க ஆட்கள் வந்தபோது, ரோஜா விடவில்லை. தாயாரின் பிணத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

''அம்மா! நான் உன்னோடு வந்துடறேன். இருவரும் சேர்ந்து போகலாம்... என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போகாதே'' தலையில் அடித்துக்கொண்டு கதறினாள்.

விஜய் ரோஜாவின் தோள்களைப் பற்றிப் பலவந்தமாய் விடுவித்து, சுந்தரியிடம் ஒப்படைத்தான்.

''அழாதே ரோஜா! மனதைத் தளர விடாதே... நான் இல்லையா உனக்கு...'' சுந்தரி ரோஜாவைத் தேற்றினாள்.

''மாமி'' சின்னக் குழந்தைபோல் மாமியை அணைத்துக் கொண்டு விசும்பினாள்.

அதுவரை... இந்தக் காரியம் தம்மால்தான் நடக்க வேண்டிவரும் என்றும், இத்தனை நாட்கள் யாரையுமே லட்சியம் செய்யாத ரோஜா, இன்று தங்களிடம் உதவி நாடாமல் இருக்கமுடியாது என்றும், இதை வாய்ப்பாக எடுத்துக்கொண்டு, அவள்மீது பகைமையைச் சாதிக்க

எண்ணியிருந்த சிலரின் முகங்கள் கறுத்துப் போய்விட்டன. ரோஜாவுக்குப் பாடம் கற்பிக்கக் காத்திருந்த சிலருக்கு விஜயின் வருகை ஏமாற்றத்தை அளித்தது. விஜய், ரோஜாவுக்குமிடையே இருந்த உறவைக் கொச்சைப்படுத்திப் பேசி, தம் அதிருப்தியைத் தணித்துக் கொண்டார்கள்.

ஃ ஃ ஃ

சிலமணி நேரம் கழித்து, பக்கத்து வீட்டு நார்மடி பாட்டி சாப்பாடு கொண்டுவந்து வைத்தாள். சுந்தரியை வற்புறுத்திச் சாப்பிட வைத்தாள். ரோஜாவைப் பலவந்தப் படுத்தி குளிக்கச் செய்தாள். பாட்டி கொடுத்த காபியையும் மறுத்துவிட்ட ரோஜா, தாயின் அறைக்குள் வந்து தரையில் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். தாயின் கடைசி நிமிடங்களில் தான் அருகில் இல்லை. ரொம்ப நாட்களுக்கு முன்பே சாவித்திரி மகளுடன் பேசுவதை நிறுத்திவிட்டாள். தன்னைப் பற்றிய தவறான அபிப்பிராயத்துடனே தாய் இறந்துவிட்டதை நினைத்தபோது, ரோஜாவின் இதயத்தில் துக்கம் பொங்கி வந்தது.

சுந்தரிக்கு சாப்பிட்டு முடித்ததும் தூக்கம் கண்ணைச் சுழற்றத் தொடங்கும். சுடுகாட்டுக்குப் போனவங்க வருவதற்குள் படுத்துக் கொண்டால் நன்றாய் இராது. அதனால் தூக்கக் கலக்கத்துடன் வராண்டாவில் உட்கார்ந்து கொண்டாள். விஜய் திரும்பி வந்தான்.

"வந்தீங்களா தம்பி, உங்க உதவியை இந்த ஜென்மத்தில் மறக்க மாட்டோம்..." என்று கொட்டாவி விட்டபடியே சொன்னாள் சுந்தரி.

"ரோஜா எங்கே?"

"உள்ளே இருக்கிறாள்."

"ரோஜாவைக் கொஞ்சம் கூப்பிட முடியுமா?"

"இப்போ எதுக்கு? தூங்கிப் போயிருப்பாள். உங்களுக்கும் நேரமாகி விட்டது. போயிட்டு வாங்க தம்பீ... உதவி செய்ததற்கு நன்றி..."



விஜய் ஒரு நிமிடம் சுந்தரியைக் கூர்ந்து பார்த்தான். பிறகு நேராக உள்ளே போனான். அறைவாசலில் நின்றவனுக்கு அங்கு தென்பட்ட காட்சியைப் பார்த்ததும் இதயம் கரைந்து போயிற்று. அறையில் ரோஜா தரையிலுட்கார்ந்து கொண்டு தாயின் தலையணையில் முகம் புதைத்து, தோள்கள் குலுங்க அழுது கொண்டிருந்தாள்.

விஜயின் கைகள் பின்புறமாய் நீண்டு அறைக்கதவைத் தாளிட்டன.

"ரோஜா..." என்று அருகில் சென்றான். பரிவாய் ஒலித்த அந்தக் குரலைக் கேட்டதும், ரோஜாவின் துக்கம் கட்டுக்கடங்காமல் வெளிவரத் தொடங்கிற்று.

"ரோஜா!" ரோஜா பக்கத்தில் முழங்காலிட்டுக் குனிந்து உட்கார்ந்த விஜய், இரண்டாவது முறை அழைத்தான்.

"அம்மா... அம்மா... உங்களுக்குத் தெரியாது." விக்கலுக்கிடையே தெளிவற்றுச் சொன்னாள்.

"ரோஜா... யாராலும் சாவிலிருந்து தப்பிக்கவே முடியாது. இது மட்டும் நினைவில் வைத்துக் கொண்டால் உனக்கு இவ்வளவு வேதனை இருக்காது. அதிலும் உங்க அம்மா பழுத்த இலை, உதிர்ந்து விட்டது."

"உங்களுக்குத் தெரியாது... எனக்கு...எனக்கு யாரும் இல்லை."

விஜயின் கை அவனறியாமல், ரோஜாவின் தோளைச் சுற்றி விழப் போனது... அதற்குள் தன்னைத்தானே கட்டுப் படுத்திக் கொண்டான்.

"யாரும் இல்லையா உனக்கு? செந்தூர் இல்லை, வேணு கோபாலன் அங்கிள் இல்லை? அனந்த், மாமா, மாமி இல்லையா? இத்தனை பேர் இருக்கும்போது யாருமே இல்லைன்னு நீ சொல்லலாமா?"

ரோஜாவின் அழுகை நிற்கவில்லை.

விஜய், "ஒரு விஷயம் சொல்ல... செந்தூரிடம் பூனாவிற்கு நானும் வரப்போவதாய் வாக்குக் கொடுத்திரு

கேன். நாளை காலையில் நான் கிளம்பட்டுமா? வேண்டாமா?''

''..............''

''சொல்லு!''

''போ...போயிட்டு வாங்க!''

''வெறுமே போயிட்டு வாங்கன்னு சொன்னா போதாது. நீ எனக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்தால்தான் என்னால் போக முடியும். தாயின் இழப்பு எவ்வளவு வேதனை தருமோ எனக்குத் தெரியாததில்லை. ஆனால் இதையே நினைத்துக் கொண்டு உருகிக்கொண்டு இருந்தாயானால், நான் சும்மா இருக்கமாட்டேன். இந்தத் துக்கத்தைத் தாங்கிக் கொள்வதாய் எனக்கு வாக்குத் தாணும்! மனப்பூர்வமாய் நீ அந்த வார்த்தையைச் சொன்னால்தான், நாளைக்கு என்னால் போகமுடியும், இல்லாவிட்டால் போக மாட்டேன்.''

ரோஜா தலையை உயர்த்தாமலேயே கையை மட்டும் நீட்டினாள். விஜய் அந்தக் கையை தன் இரு கரங்களால் பற்றிக் கொண்டான்.

ரோஜாவின் இதயத்தைத் தொடும்விதமாய், அபிமானத்துடன், அன்புடன் அவன் குரல் ஒலித்தது. ''ரோஜா இன்னும் ஒரு விஷயம், நாளை காலையில் நீ வேணுகோபாலன் வீட்டுக்குப் போகணும்... நான் இந்த விஷயத்தைப் போனில் சொன்னபோது அவர் எப்படி வேதனையடைந்தார் தெரியுமா? உன்னைப் பார்க்கத் தவித்துக் கொண்டிருக்கிறார். இங்கேயே வருவதாகச் சொன்னார். நான்தான் தடுத்துவிட்டேன் அவருடைய உடல்நிலை சரியில்லையென்றுதான் உனக்குத் தெரியுமே! நாளை காலையில் கட்டாயம் நீ வரப்போவதாகச் சொன்னபிறகு தான் ஒப்புக் கொண்டார். எனக்குத் தெரியும், அவரால் இன்று இரவு தூங்க முடியாது. உன்னைப் பார்க்கும் வரை அவர் மனதுக்கு அமைதி ஏற்படாது. சொல்லு ரோஜா... போகிறாயா?''



ரோஜா சம்மதிப்பதுபோல் தலை அசைத்தாள்.

விஜய் ஒரு நிமிடம் ஏதோ யோசித்துவிட்டு, இடது கையால் ரோஜாவின் கையைப் பிடித்துக் கொண்டே, வலது கையைப் பேண்ட் பாக்கெட்டில் நுழைத்து, கையில் வந்த பணத்தை எடுத்து, ரோஜாவின் கையில் வைத்து மூடி விட்டான்.

''இதை நீயே வைத்துக் கொள்... நான் திரும்பி வர தாமதம் ஆகலாம். நான் திரும்பி வந்தபிறகு, செந்தூர் விஷயத்தில் என்ன செய்யலாமென்று யோசிப்போம், சரிதானா?''

தலை உயர்த்தி அவனைப் பார்த்த ரோஜா, தன் கையில் இருந்தது ரூபாய் நோட்டுகள் என்று உணர்ந்ததும்... விட்டு விடப் போனாள்.

விஜய் மறுபடியும் ரோஜாவின் விரல்களை அழுத்தி மூடி விட்டுச் சொன்னான்.

''நாம் இருவரும் சமரசத்துக்கு வந்து விட்டோம். உன் நண்பனாய், செந்தூரின் நலனை விரும்பும் உறவினனாய், எனக்கு இந்த அதிகாரம் இருக்கு. உனக்குத் தேவையானதை வேணுகோபாலன் கொடுப்பார் என்று எனக்குத் தெரியும். இந்தச் சமயத்தில் நீ கேட்கமாட்டாய் என்றுதான் தருகிறேன்.''

விஜய் ரோஜாவின் கையை விட்டு விட்டான். இந்தத் தடவை ரோஜா பணத்தை விட்டு விடவில்லை. அப்படியே இறுக்கமாய் பிடித்துக் கொண்டாள்.

''நான் வரட்டுமா?''

ரோஜா தலை அசைத்தாள். விஜய் வெளியே வந்து விட்டான்.

ரோஜா தூங்கிக் கொண்டிருக்கிறாள் என்று சொன்ன பிறகும் கேட்காமல், தன்னை மீறி விஜய் உள்ளே போனதும் கதவைச் சாத்திக் கொண்டதும் பார்த்த சுந்தரிக்கு தூக்கம் பறந்து போய் விட்டது.

'உன்னே என்னதான் செய்துகிட்டிருப்பாங்க? யார் இந்தப் பையன்? ரோஜாவிடம் ஏதோ உரிமை உள்ளது போல் நடந்து கொள்கிறானே? அனந்த் போல் மென்மையான குணம் படைத்தவனாய்த் தெரியவில்லை...'

சுந்தரி கதவைத் தள்ளிப் பார்த்தாள். உள்ளே தாளிடப் பட்டிருந்ததால் திறந்து கொள்ளவில்லை தாள் போட்டுக் கொண்டு பேசவேண்டிய அளவுக்கு ரகசியங்கள் என்ன இருக்கக்கூடும்? அதுவும் அந்த நேரத்தில்? அந்தப் பையன் வெளியே வரட்டும்... இன்னொரு தடவை இந்த வீட்டு வாசற்படி ஏறாமல், நாலு கேள்வி சூடாகக் கேட்டுவிட வேண்டும்... சுந்தரி காளி அவதாரம் எடுத்து விட்டதுபோல் விஜய் வெளியே வருவதற்காகக் காத்திருந்தாள்.

கதவைத் திறந்துகொண்டு விஜய் வெளியே வந்தான்! சுந்தரிக்கு வாயைத் திறக்கும் வாய்ப்பு கிடைக்கவேயில்லை. அவன் காரில் உட்கார்ந்து கொண்டதும், காரை ஸ்டார்ட் செய்து கிளம்பியதும், நிமிடத்தில் நடந்து முடிந்து விட்டது.

சுந்தரி வாயடைத்துப் போனவளாக அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வைக்கே சக்தி யிருந்தால், விஜயின் கார் எரிந்து சாம்பலாகிவிட்டிருக்கும்.

## 62

மறுநாள் காலை ஒன்பதுமணி ஆகும்முன் வேணுகோபாலனின் கார் சங்கரன் வீட்டுக்கு முன் நின்றது. கொல்லைப் புறத்திலிருந்து தண்ணீர் எடுத்து வந்து, வராண்டாவைக் கழுவிக் கொண்டிருந்த சுந்தரி, வாசலில் வந்து நின்ற காரைப் பார்த்ததும் முகத்தைச் சுளித்துக்கொண்டு, கைக்காரியத்தை விட்டுவிட்டு, இடுப்பில் கையை வைத்து, காரிலிருந்து



இறங்கப் போகும் நபர் யாரென்று தெரிந்துகொள்ள, அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்ததால், அவளுக்கு நாத்தனார் இறந்துவிட்ட துக்கத்தை விட, முன்பின் தெரியாத எவனோ ஒருவன் ரோஜாவிடம் உரிமையாய்ப் பழகியது நினைவுக்கு வந்து, முள்ளாய் உறுத்திக் கொண்டிருந்தது.

'யார் அவன்?' எல்லோர் முன்னிலையில், நாலு பேர் ஏதாவது நினைப்பாங்க என்ற பயம்கூட இல்லாமல் ரோஜாவைத் தொட்டுப் பேசியது, சுந்தரியின் கண்களை உறுத்தியது.

எல்லாம் ரோஜா கொடுத்த இடம்தான்! இனி பொறுத்துக்கொள்ள முடியாது. இனிமேல் ரோஜாவைக் கட்டுப்பாட்டில் வைக்கணும். இதுநாள் வரை நடந்தது வேறு. இனி நடக்கப் போவது வேறு

காரிலிருந்து இறங்கி உள்ளே வருபவன், நேற்று வந்த பையனாய் இருந்தால், நிற்க வைத்து கேட்டுவிடலாம் என்று எதிரே போனாள் சுந்தரி. ஆனால் வந்தவன், வழக்கமாய் ரோஜாவுக்காக வரும் டிரைவர் ராமு. சுந்தரிக்கு அவனைப் பார்த்ததும் எரிச்சல் வந்தது

"இதோ பாருப்பா... ரோஜாவுக்காக வந்தியா? அந்தப் பெண் இப்பொ எங்கேயும் வர மாட்டாள். நாங்க ரொம்ப துக்கத்தில் இருக்கோம். நீ கிளம்பு..." என்றாள்.

ராமு ஒரு நிமிடம், கோபத்தால் சிடுசிடுவென்றிருந்த சுந்தரியின் முகத்தைப் பார்த்தான். பிறகு என்ன நினைத்தானோ, அவள் இருப்பதையே பொருட்படுத்தாதவன் போல் உள்ளே குரல் கொடுத்தான்

"ரோஜாம்மா... ரோஜாம்மா..."

அவனுடைய அலட்சியத்தைக் கண்டு சுந்தரிக்கு உடல் பற்றி எரிவது போலிருந்தது. "என்னப்பா... ஒருதடவை சொன்னால் போதாதா? அந்தப் பெண் வரமாட்டாள் என்று நான் சொன்னது உன் காதில் விழவில்லையா?"

அதற்குள் அடுத்த வீட்டு மீனாட்சி, அம்புஜம் எல்லோரும் கார் வந்ததை பார்த்துவிட்டு, ரோஜா போகப் போகிறாளா இல்லையா என்று வேடிக்கைப் பார்க்க, எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும், சுந்தரிக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போலிருந்தது.

"ரோஜாம்மா..." குரலை உயர்த்தி இரண்டாவது முறை அழைத்தான் ராமு.

அந்த அழைப்பு காதில் விழுந்ததும், ரோஜா மெதுவாய் வாசற்கதவு அருகில் வந்தாள். சிவந்து போன கண்களும், வாடிப் போன முகமுமாய்த் தோற்றமளித்த ரோஜாவைக் கண்டதும் ராமு திடுக்கிட்டான். அவனுக்கு ரோஜாவின் தாய் இறந்துவிட்ட செய்தி தெரியாது.

ராஜா அருகில் சென்றவன், "ஐயா உங்களை அழைச்சுகிட்டு வரச் சொன்னாங்க. நீங்க இல்லாமல் நான் மட்டும் போனால் சும்மா இருக்க மாட்டாங்க மறுபடியும் என்னை அனுப்புவாங்க. கிளம்பி வர்றீங்களா" என்றான்.

"இதோ வந்துடறேன். ஒரு நிமிஷம்" என்று ரோஜா உள்ளே போனாள்.

டிரைவர் சுந்தரி பக்கம் பாராமலே கார் அருகில் சென்றான்.

கையிலிருந்த விளக்குமாற்றைக் கீழே போட்டுவிட்டு, உள்ளே வந்தாள் சுந்தரி. தலையை வாரிக் கொண்டிருந்த ரோஜாவைத் தீவிரமாய்ப் பார்த்துக்கொண்டே, "என்ன ரோஜா... இன்னிக்குப் போகப் போறியா?"

"ஆமாம் மாமி."

"ஊக்கும்!" தோளில் இடித்துக் கொண்டாள் சுந்தரி. "நாலு பேர் என்ன நினைப்பாங்க தெரியுமா?"

தலை பின்னிக் கொண்டிருந்த ரோஜா பின்னால் திரும்பி விரக்தியும், வேதனையும் கலந்த குரலில் சொன்னாள்.



"தெரியும்! இந்தப் பொண்ணுக்குப் பாசம் இல்லைன்னு சொல்வாங்க. தாய் போனாலும் துளிகூட வருத்தமில்லை என்பாங்க..."

ரோஜாவின் குரல் துக்கத்தில் வெளிவர மறுத்தது. ஒரு நிமிஷம் கழித்துச் சொன்னாள், "சொல்லட்டும் மாமி உன்னைப் பற்றி யாராவது, என்னிக்காவது நல்லதா பேசியிருக்காங்களா என்ன? உண்மையைச் சொல்றேன் எங்கம்மா இறந்து போனதில் எனக்கு வருத்தமில்லை. உயிரோடிருந்தபோது என்ன சுகப்பட்டு விட்டாள் என்று இறந்ததற்கு நான் வருத்தப்படுவேன்?"

"ரொம்ப விசித்திரமாய்ப் பேசுறியே? இப்போ உன்னை யார் என்ன சொல்லிட்டாங்க? நாலு பேர் சிரிக்கிறாற்போல் இல்லாமல், கொஞ்சம் மரியாதையாய் நடந்து கொள் என்று சொன்னால் அது ஒரு குத்தமா?"

"இல்லை மாமி, இல்லை! இதில் தவறு யாரோடதும் இல்லை இந்த உலகத்தில் பணமில்லாமல் பிறந்தது தவறு. அதிருஷ்டக் கட்டையாய்ப் பிறந்தது மகா தவறு. அப்படிப் பிறந்த என் போன்ற துரதிருஷ்டசாலிக்கு மதிப்பு, மரியாதை என்று சமூக கோட்பாடுகளைக் கடைபிடித்துக் கொண்டிருப்பது முட்டாள்தனம். போதுமா?"

"அட ராமா! மறுபடியும் ஏடாகூடமாய்ப் பேசுறியே? இப்போ என்ன சொல்லிவிட்டேன் என்று இந்தக் கோபம்? மாமியார் மேலுள்ள கோபத்தை பாத்திரத்தின்மீது காண்பிப்பது போல் இதென்ன பேச்சு? தாயை இழந்த துக்கத்தில் இருக்கியே, ஒருநாள் வரமாட்டேன்னு சொன்னா என்ன ஆகிவிடும்? அவங்களும் மனிதர்கள்தானே? அந்த மட்டும் புரியாதா? அப்படிப் புரிந்து கொள்ள முடியாதவங்க வீட்டில் நீ வேலை செய்ய வேண்டிய தேவையில்லை."

சுந்தரி நறுக்கு தெறித்தாற்போல் சொல்லி விட்டாள்.

"அவங்க ஒன்றும் சொல்ல மாட்டாங்க. நான்தான் போகிறேன். அங்கே போனால்தான் எனக்கு நிம்மதியாய் இருக்கும். இங்கே இருந்தால் வேண்டாத யோசனைகள்

வந்து, நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கு.'' ரோஜா அமைதியாகப் பதில் சொன்னாள்.

இனி பிரயோஜனப்படாது என்று சுந்தரி ப்ளேட்டை மாற்றினாள்.

''நேற்று இரவிலிருந்து நீ பச்சைத் தண்ணீரைக்கூடத் தொடவில்லை.''

''பரவாயில்லை மாமி! எனக்குப் பசி, தாகம் இரண்டுமே செத்துவிட்டாற் போலிருக்கு...'' என்ற ரோஜா வெளியே வந்தாள்.

சுந்தரியின் முகம் சுருங்கி விட்டது. ''போகட்டும்... சீக்கிரமாவது வந்து விடு. இல்லாவிட்டால், நாலுபேர் காறித் துப்புவாங்க என் மூஞ்சியில்.''

''சரி மாமி.''

ரோஜா படியைத் தாண்டும்போது, அடுத்த வீட்டு பாட்டி எதிரே வந்தாள், எங்கேயடிம்மா கிளம்புகிறாய்?'' என்று கேட்டாள்.

ரோஜா காதில் விழாதது போல், பதில் சொல்லாமல் இடுவிடுவென்று போய் காரில் உட்கார்ந்து கொண்டாள்.

அடுத்த வீட்டுப் பாட்டியைப் பார்த்ததும், சுந்தரியின் முகம் கறுத்து விட்டது. உடனே செயற்கையாகச் சிரித்துக் கொண்டே, ''வாங்க...வாங்க...'' அன்பொழுக உள்ளே அழைத்தாள்.

பாட்டி விடவில்லை, ''ரோஜா எங்கே போகிறாள்?'' என்று ஆராய்வது போல் கேட்டாள்.

ஒரு நிமிடம் அக்கேள்விக்குப் பதில் சொல்ல முடியாதவள்போல் பார்த்தாலும், மறுநிமிடம் சுதாரித்து கொண்டு சொன்னாள் சுந்தரி. அவளுக்கு ரோஜா மேல் என்றுமில்லாத அளவு கோபம் ஏற்பட்டது.

''நான்தான் அனுப்பி வெச்சேன்! அழுதுக்கிட்டு உட்கார்ந்தால் போனவங்க வந்துடப் போறாங்களா? அவர்



எப்போ வருவாரோ என்னவோ? கையில் சல்லிக்காசு இல்லை. ரோஜா வேலை செய்து கொண்டிருக்கிற வீட்டில் முதலாளியைக் கேட்டுக் கொஞ்சம் பணம் வாங்கி வரச் சொல்லி அனுப்பினேன். என்னவோ பாவம்! ஆண் பிள்ளைக்குச் சமமாய் வெளிக்காரியங்களுக்கும் அவள்தானே அலைய வேண்டியிருக்கு!''

''என்னமோ சுந்தரி! எனக்கென்ன தெரியும்? மாவு அரைச்சுக்கிட்டு இருந்தேன். அஞ்சி வந்து, கார் வந்திருக்கு, ரோஜா வெளியே போய்விடப் போகிறாள். போக வேண்டாம்னு சொல்லச் சொன்னதால், அப்படியே கைக்காரியத்தைப் போட்டுவிட்டு வந்தேன். நாலு பேர் ஏதானும் சொல்லுவாங்கன்னு அவன் பயப்படுகிறான்.''

''ஆமாம்... ஆமாம்... அந்தப்பயம் எனக்கும் இருக்கு...'' என்றாள் சுந்தரி.

சுந்தரியின் பதிலில் பாட்டி திருப்தி அடைந்தாள்.

''ஒண்ணுமில்லை... நம்ம தெருவில் இருப்பவங்களைப் பற்றி உனக்குத் தெரியாதா? வதந்திகளைப் பரப்பாவிட்டால் அவர்களுக்கு உயிர் வாழ முடியாது. என் பேரனுக்கு ரோஜாவைக் கேட்ட விஷயம் நான் இன்னும் யாரிடமும் சொல்லவேயில்லை. அதற்குள்ளே செய்தி பரவிவிட்டது. அந்த அம்புஜம் நேரிலேயே கேட்டுவிட்டாள்.

''இதோ பார் சுந்தரி! நீ என் மகள் போன்றவள்... என் மனதில் இருப்பதைச் சொல்லட்டுமா? உன் முகத்தைப் பார்த்துத்தான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தேன். எனக்குத் துளிக்கூட விருப்பமில்லை. எனக்கு இருப்பதோ அவனொருத்தன்தான். அந்தப் பெண்ணை விட்டால் கல்யாணமே வேண்டாம்னு பிடிவாதமாய் இருக்கான். கடவுள்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு சம்மதிச்சேன்.''

சுந்தரி சட்டென்று பாட்டியின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"உங்களைப் போன்றவங்களை இந்த உலகில் காண்பதே ரொம்ப அரிது. இவ்வளவு நல்ல மனசு இருப்பவங்களை நான் எங்கும் பார்த்ததில்லை. உள்ளே வாங்க. ஒரு வாய் காபி குடித்துவிட்டுப் போகலாம். என்னவோ போங்க... சாவித்திரி இன்னும் கட்டிலில் படுத்துக் கிடக்கிறாள் என்று தோன்றுகிறது. சமையலறைக்குப் போனால் 'அண்ணின்னு' குரல் பின்னால் கேட்கிறாற் போலிருக்கு! ரொம்பத் திகிலாய் இருக்குன்னு சொன்னா நம்புங்க..." சுந்தரி பயந்துவிட்டவள்போல் நடித்துக் கொண்டே அறைக்கதவைச் சாத்திவிட்டாள்.

வரதட்சணை இல்லாமல் அஞ்சி, ரோஜாவைத் திருமணம் செய்துக்க சம்மதிச்ச செய்தி, சுந்தரியின் காதுகளில் தேன்போல் பாய்ந்தது.

ரோஜாவுக்குத் திருமணம் முடித்துவிட்டால், ஒருபக்கம் மருமகளை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டாள் என்ற நல்ல பெயர் கிடைப்பதோடு, பிற்காலத்தில் சங்கரன் சம்பாதித்தாலும், சம்பாதிக்காவிட்டாலும், எஞ்சிய காலத்தை அவர்கள் நிழலில் நிம்மதியாகக் கழித்து விடலாம். ரோஜா கிழித்த கோட்டை அஞ்சி தாண்டமாட்டான். இந்தச் செய்தி வெளியில் தெரிந்தால் யாராவது குறுக்கே விழுந்து, தடுத்து விடுவார்களோ என்ற பயம்தான் சுந்தரிக்கு. அதனால் கூடிய விரைவில் திருமணத்தை முடித்துவிட வேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருந்தாள்.

சங்கரன் வேலை செய்யும் டிராமா கம்பெனியில் தபாலா வாசிக்கும் ஆள் ஒருவன் இந்த ஊருக்கு வந்திருந்தானாம். வீட்டுக்குப் போய் விசேஷங்களைத் தெரிந்து வரச் சொல்லி சங்கரன் சொல்லி அனுப்பியதால் நேற்று மதியம் வந்திருந்தான்.

சுந்தரி, ரோஜா—அஞ்சி திருமண விஷயம் சுருக்கமாக எழுதியதோடு, "உங்கள் தங்கை சாவித்திரியின் உடல்நலம் சரியில்லை. எதுவும் சொல்வதற்கில்லை. உங்களுக்காக ஏங்கிகிட்டு இருக்கிறாள். இதைப் பார்த்ததும் உடனே



கிளம்பி வரவும்" என்று கடைசியாக எழுதி வைத்தாள்.

தங்கையின் நலனைப் பற்றிய அக்கறை சங்கரன்மீது உடனே வேலை செய்யும் என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். தான் எழுதிய வேளை எப்படிப்பட்டதோ... நிஜமாகவே சாவித்திரி இறந்துபோய் விட்டாள்! உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் சாவித்திரியின் மரணம், சுந்தரிக்கு நிம்மதியைக் கொடுத்ததென்றே சொல்லலாம். எந்த வீட்டில் வேணும்னாலும் இருக்கலாம். ஆனால் படுத்த படுக்கையாய் நோயாளிகள் இருக்கும் வீட்டில் மட்டும் இருக்க முடியாது என்று சுந்தரிக்குத் தோன்றும்.

## 63

"அழாதே ரோஜாம்மா... அழாதே... விஜய் போனில் இந்தச் செய்தி சொன்னதிலிருந்து, நான் எவ்வளவு வேதனைப்பட்டேனோ உனக்குத் தெரியாது. உன்னை எப்படித் தேற்றுவது என்று எனக்குப் புரியவில்லை..."

கைகளில் முகம் புதைத்து, விக்கி விக்கி அழுது கொண்டிருந்த ரோஜாவின் தலையை வருடிக் கொண்டே வேதனையுடன் சொன்னார் வேணுகோபாலன்.

அழுகையினூடே ரோஜா சொன்னாள்: "அம்மா என்னுடன் பேசவேயில்லை. இந்த வேலையை விடாததற்கு, அவள் என்னை மன்னிக்கவேயில்லை. அது நினைவுக்கு வரும் போதெல்லாம், என் மனம் தூள் தூளாகிக் கொண்டிருக்கிறது. வாழ்நாள் முழுவதும் என்னை இந்த வேதனை துரத்திக்கொண்டே இருக்கும்."

"இந்தப் பாவியால் உனக்கு எத்தனை துன்பம்?"

ரோஜாவின் தலையைத் தன் மார்போடு அணைத்துக் கொண்ட வேணுகோபாலன் தெளிவற்று முணுமுணுத்தார்.

அவர் சொன்னதைக் கவனியாத ரோஜா, தன் போக்கில் சொல்லிக் கொண்டிருந்தாள். "அம்மா வாழ்நாள் முழுவதும் நடைப்பிணமாய்த்தான் இருந்தாள். எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து, ஒருநாள்கூட அவள் முகத்தில் சிரிப்பைக் கண்டதில்லை. எப்போதும் ஏதோ தவறு செய்துவிட்டவள் போல், ஒதுங்கி ஒதுங்கியிருப்பாள். வாழ்க்கையில் பாதி நாட்கள் உபவாசத்தில் கழித்தாள். எத்தனை இரவுகள் தூக்கமே இல்லாமல், சூனியத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு, எப்படி படுத்துக் கொண்டிருந்தாளோ? குழந்தைகள் வளர்ந்தபிறகும், அவளுக்கு அவர்களால் எந்தப் பிரயோஜனமும் ஏற்படவில்லை. செந்தூரனைப் பார்க்கத் தவித்துக் கொண்டே, கடைசிவரை அவனைப் பார்க்காமலேயே உயிரை விட்டுவிட்டாள். யாராவது அதிருப்தியுடன் இறந்துபோனால், அவர்களின் ஆத்மாவுக்கு அமைதி இருக்காது என்பார்கள். என் அம்மாவுக்கு இறந்த பிறகாவது அமைதி கிடைக்குமா?" ரோஜாவின் துக்கம் கட்டுக்கடங்காமல் பொங்கிற்று.

வேணுகோபாலன் எதுவும் செய்ய முடியாத இயலாமையுடன், குற்றவாளியைப்போல் பார்த்தார்.

ரோஜா துக்கத்தை கட்டுப்படுத்திக் கொள்ள அரும்பாடு பட்டாள். "என் அம்மா, அப்பாவுக்குமிடையே என்ன நடந்ததோ, எனக்குத் தெரியாது. கொஞ்சம் நினைவு தெரிந்த பிறகு விஷயத்தைத் தெரிந்துகொள்ள, அம்மாவிடம் இதைப் பற்றிக் கேட்டபோது, ஓவென்று கதறி அழுது விட்டாள். தான் துரதிருஷ்டசாலி என்றும், நாங்க கொடுத்து வைக்காதவங்க என்றும், இந்த இரண்டு வார்த்தைகளைத் தவிர மூன்றாவது வார்த்தை அவள் வாயிலிருந்து என்னால் வரவழைக்க முடியவில்லை. அவளுக்கு இத்தனை தீங்கை இழைத்த அந்த நபரைப் பற்றித் தவறிப் போய்க்கூட கெடுதலாகச் சொல்ல மாட்டாள். என் தாயின்



வாழ்க்கையை இருளாக்கிய அந்த நபர் பற்றி நினைவுக்கு வந்தால்..."

மென்மையான இடத்தில் அடிபட்டு விட்டாற்போல், வேணுகோபாலனின் முகத்தில் வேதனை தென்பட்டது "போதும் ரோஜா... போதும்... இனி சொல்லாதே! என்னால் கேட்க முடியாது. எந்தத் தவறும் செய்யாதவர்களைத் தண்டிப்பதும், குற்றம் செய்தவர்களுக்கு சகல வசதிகளும் கொடுத்து அனுகிரகிப்பது, கடவுளுக்கு ஒரு விளையாட்டு போலும்... பழைய விஷயங்களை நினைவு கூர்வதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை... விதியின் கையில் நாம் வெறும் விளையாட்டுப் பொம்மைகள். அவ்வளவுதான்! மனதைத் திடப்படுத்திக் கொள். இதைவிட என்ன சொல்ல முடியும் என்னால்? ராதையைப் பார்... எப்படி விக்கித்துப் போய் உன்னையே பார்க்கிறாள்? அவளை உன் அருகில் அழைத்துக் கொள்" என்றார்.

ரோஜாவைப் பார்த்ததும் தலை வாரிக் கொள்ள சீப்பு, ரிப்பன்களை எடுத்துக்கொண்டு ஓடிவந்த ராதை, என்றும் இல்லாதவிதமாய் ரோஜா அழுது கொண்டிருப்பதைப் பார்த்து, மிரண்டுபோய், தொலைவிலேயே நின்றுவிட்டாள். தந்தை ஜாடை காட்டி அழைத்ததும் மெதுவாய் அருகில் வந்தாள்.

ராதையை இடது கையால் அருகில் இழுத்துக் கொண்டு, வலது கையினால் ரோஜாவின் தோளைச் சுற்றிப் போட்டுக் கொண்டார் வேணுகோபாலன். "ரோஜா! உன் தாயை என்னால் கொண்டுவந்து கொடுக்க முடியாது. ஆனால் அவள் இறப்பினால் நீ இழந்துவிட்ட அன்பை, அபிமானத்தை ஆயிரம் மடங்காய் நான் உனக்குத் தருகிறேன். ஆச்சரியப் படாதே... நடந்தது நடந்துவிட்டது... புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க முயற்சி செய்... இதுதான் என்னுடைய வேண்டுகோள்..."

அவருடைய ஸ்பரிசத்தினால் ஏற்பட்ட மகிமையோ... இல்லை அந்தப் பேச்சில் இருந்த பரிவோ தெரியவில்லை.

ரோஜாவின் நெஞ்சில் கனன்று கொண்டிருந்த வேதனைத் தீயானது, கொஞ்சம் கொஞ்சமாய்த் தணியத் தொடங்கிற்று.

அந்த நேரத்தில்—

அப்பொழுதுதான், லாயர் மாதவராவ் வீட்டிலிருந்து திரும்பி வந்தாள் லாவண்யா. நேராகத் தந்தையிடம் சென்று சூடாக ஏதோ கேட்க நினைத்து, அவ்வறைக்குள் நுழையப் போனவளுக்கு, கண்ணெதிரில் தென்பட்ட காட்சி முகத்தில் தணலை வாரிக் கொட்டியதுபோல் இருந்தது.

எதிரே கட்டிலில் தந்தை, ஒரு பக்கம் ராஜதுரை, மறு பக்கம் ரோஜாவை இரு கரங்களால் அணைத்து ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். ரோஜா ஏனோ கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் காட்சியைப் பார்த்ததும், லாவண்யாவின் இதயத்தில் எரிமலை பொங்கியது. பொறாமைத் தீயில் வெந்து கொண்டிருந்தாள். இன்னும் ஒருகணம் அங்கு இருந்தால், தன் மனம் கட்டுக்கு அடங்காமல் போய்விடும் என்று பயந்த லாவண்யா, விர்ரென்று திரும்பி, சூறாவளிக் காற்றாய், தன் அறைக்கு வந்தாள்...கட்டிலில் சரிந்து விழுந்தவள், தலையணையில் முகம் புதைத்து விக்கி விக்கி அழத் துவங்கினாள்.

லாவண்யா எரிச்சல்படுவதற்குக் காரணம் இருந்தது. நேற்று மதியம் லாயர் மாதவராவின் மனைவி, உடனே வந்து தன்னைப் பார்க்கச் சொல்லி வேலைக்காரி மூலமாய் லாவண்யாவுக்குத் தகவல் அனுப்பினாள். லாவண்யாவால் போக முடியவில்லை. இன்று காலை மறுபடியும் போன் வந்தது... கிளப் விஷயமாய் ஏதாவது பார்ட்டி நடக்கும் போது, அந்த அம்மாள் லாவண்யாவுக்காக அப்படித் தகவல் அனுப்புவது வழக்கம்தான்.

லாவண்யா காலையில் தயாராகி, வெளியே வந்தாள்... வேணுகோபாலன் டிரைவரிடம் ரோஜாவின் வீட்டுக்குப்



போய் அவளை அழைத்து வரும்படிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"நான் வெளியே போகணும் எனக்குக் கார் வேணும்" என்றாள் லாவண்யா.

"ரோஜாவுக்காக அனுப்புகிறேன்... வந்த பிறகு நீ போகலாம்" என்றார்.

"ஏன்? அந்த மகாராணியால் பஸ்ஸில் வர முடியாதா? இல்லாவிட்டால் நான் வந்த பிறகு காரை அனுப்பிவெச்சால் போதாதா?" என்று அடம் பிடிப்பதுபோல் கேட்டாள் லாவண்யா.

"அந்த வேலையை நீயே ஏன் செய்யக்கூடாது?" எரிச்சலுடன் சொன்னவர், டிரைவரிடம் "இன்னும் கிளம்ப வில்லையா?" என்றாற்போல் பார்த்தார். டிரைவர் சென்று விட்டான். லாவண்யாவின் முகம் அவமானத்தால் கன்றி விட்டது. சரேலென்று உள்ளே போனவள், சமையல்காரனை அனுப்பி டாக்ஸியை வரவழைத்துக் கொண்டு, கிளம்பிப் போனாள்.

மாதவராவும், வேணுகோபாலனும் குடும்ப நண்பர்கள். தூரத்து உறவும் இருந்தது. வேணுகோபாலனின் வியாபார விஷயங்களை அவர்தான் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நட்பு மேலும் வலுபெற்று ஸ்திரமாகி விட்டிருந்தது. மாதவராவ் வீட்டில் லாவண்யாவுக்கு உரிமை அதிகம்.

லாவண்யாவைப் பார்த்ததும் சரஸ்வதி, "வா... வா... நேற்றே வருவேன்று எதிர்பார்த்தேன்... வரலியே?" அன்புடன் வரவேற்றாள்.

"நேரமே கிடைக்கவில்லை..." ஹாலில் சோபாவில் உட்கார்ந்துகொண்டே சொன்னாள் லாவண்யா

"இங்கே வேண்டாம்... உங்க அங்கிளுக்காக யாராவது வருவாங்களோ என்னமோ? உன்னுடன் தனியாகப் பேச வேண்டும், உள்ளே போய்விடலாம்" என்று லாவண்யாவைப் படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றாள்.

ஏதோ முக்கியமான விஷயம் இருந்தாலொழிய ஆன்டி இப்படி உள்ளே அழைத்துப் போகமாட்டாள்...லாவண்யா கட்டிலில் அமர்ந்துகொண்டே, "என்ன விஷயம் ஆன்டி?" என்றாள்.

"இரு... இதோ வந்திடறேன்" என்று உள்ளே போனவள், சற்றுப் பொறுத்து காபி கோப்பைகளுடன் திரும்பி வந்தாள்.

"இன்னைக்கு எங்க வேலைக்காரி வரலில்லை, எல்லா வேலையும் என் தலையில்தான்" என்றாள் சரஸ்வதி.

பணக்காரர்களுக்கு வரும் தொல்லைகள்தான் இவை... சமையல்காரி வரவில்லை... வேலைக்காரி சரியாக இல்லை. இப்படி... "நல்ல சமையல்காரியாக இருந்தால் கொஞ்சம் பாரு" என்று வேண்டுகோள் விடுக்கப் போகிறாளோ என்று லாவண்யா பயந்துவிட்டாள்.

இருவரும் காபி அருந்தி கொண்டிருக்கும்போது சரஸ்வதி கேட்டாள், "உங்க அப்பா சமீபத்தில் உயில் எழுதியிருக்காங்க, உனக்குத் தெரியுமா?"

தெரியாது என்பதுபோல் தலை அசைத்தாள் லாவண்யா

"தெரியாதா? விஜய்கூடவா உன்னிடம் சொல்லவில்லை?"

"விஜய்யா...? இல்லையே?"

சரஸ்வதி லாவண்யாவை இரக்கம் ததும்பப் பார்த்தாள்.

"லாவண்யா! இத்தனை நாளாய் நீ, அந்த வேலைக்காரப் பெண்ணுக்கும் உங்க அப்பாவுக்கும் ஏதோ இருக்கு என்று சொன்னபோது நான் நம்பவில்லை. ஆனால், உன் வார்த்தையில் எவ்வளவு உண்மை இருக்கென்று இப்போ புரியுது."

"இப்போ என்ன நடந்துவிட்டது?" வெலவெலத்துப் போனவளாய்க் கேட்டாள் லாவண்யா.



"இருப்பது நீங்க இரண்டு பேர் தான் என்றபோது உயில் எழுத வேண்டிய தேவைதான் என்ன?"

"என்னவென்று எழுதியிருக்காங்க?"

"எனக்குச் சரியாய்த் தெரியாது. இவரிடம் எத்தனை தடவை கேட்டாலும் சொல்லவில்லை. ஆனால் பேச்சுவாக்கில் தான் புரிந்துகிட்டது என்னான்னா, உங்க அப்பா அந்த ரோஜா மீதுள்ள மோகத்தால், உங்களுக்கு அநியாயம் செய்யத் துணிந்துவிட்டார். இந்த விபரம் தெரிந்ததிலிருந்து என்னால் சும்மா இருக்க முடியவில்லை. உன் சார்பில் கேட்கிறவங்க யாரும் இல்லைன்னுதானே அவருக்கு இந்தத் துணிச்சல்?"

சரஸ்வதி சொன்ன கடைசி வார்த்தைகளைக் கேட்டதும் லாவண்யாவுக்குக் கண்ணில் கிர்ரென்று நீர் சுழன்றது.

லாவண்யாவின் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சரஸ்வதி, "பைத்தியக்காரியைப்போல் இப்படி அழுதுகிட்டிருந்தால் ஒன்றும் நடக்காது. இப்பவும் ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. என் காதில் இந்த சமாசாரம் முதலில் விழுந்தது உன் அதிர்ஷ்டம்தான். ஒரு வழி சொல்லித் தருகிறேன். அதன்படிச் செய்வாயா?"

சம்மதிப்பதுபோல் தலை அசைத்தாள் லாவண்யா

"நீ எப்படியாவது அந்த உயிலை வெளியே எடுக்க முயற்சி செய்...எங்களிடம் வந்து நியாயம் கேட்கிறமாதிரி ரகளை செய்...நான் உன் பக்கம் இருக்கேன்... உங்க அங்கிளிடம் சொல்லி, உன் தந்தையை நறுக்கென்று நாலு கேட்கும் விதமாய்ச் செய்கிறேன். அந்தப் பெண்ணிடம் அவ்வளவு மோகம் இருந்தால், ஏதோ கொஞ்சம் பணம் விட்டெறிந்துவிடச் சொல்லிவிடலாம். அதானே தவிர சொத்தில் பங்கு கொடுப்பதாவது? எதற்குக் கார்டியனாக நியமித்து, அவளுடைய பங்கு சொத்தின்மீது அதிகாரத்தையும் கொடுப்பதாவது? இந்த அநியாயத்தை எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கிறோமா? எத்தனை பேர் வீட்டில்

வேலைக்காரங்க இல்லை? சிலர் பார்க்க ரொம்ப சாதுவாய் இருப்பாங்க. ஆனால் போகப் போக நம்பளையே விரட்டி விட்டு ஸ்திரமாய் உட்கார்ந்து விடுவாங்க. நாம்தான் கவனமாய் இருக்கணும். போயும் போயும் இந்தச் சனியன் வந்து உன்னைத்தான் பிடித்துக்கொள்ளணுமா?''

லாவண்யா சரஸ்வதியின் கைகளைப் பற்றிக்கொண்டு, ''ஆன்டீ... உங்களைத் தவிர எனக்கு யாருமே இல்லை...'' என்றாள்.

''அதனால்தானே நான் இவ்வளவு தவிக்கிறேன்.''

சரஸ்வதிக்கு திருப்தி ஏற்பட்டது.

''என்னை என்ன செய்யச் சொல்றீங்க?'' தீனமாய்க் கேட்டாள் லாவண்யா.

''கூடிய சீக்கிரம் அந்த உயிலை வெளியில் எடு. உடனே எனக்கு போன் செய்துவிடு. நானும் உங்க அங்கிளும் வர்றோம். தேவையானால் பார்வதிக்கும் செய்தி அனுப்புகிறேன். இதோ பாரு! இந்த வேலை விஜய் ஊரிலிருந்து வரும் முன் நடக்கணும். அவன் வந்த பிறகு உயிலை ரிஜிஸ்டர் செய்யப் போகிறார்களாம்.''

லாவண்யா சரியென்பதுபோல் தலை அசைத்தாள். சரஸ்வதி வாசல்வரை வந்து லாவண்யாவை வழி அனுப்பி வைத்தாள்.

கிளப்பில் எந்த புரோகிராம் நடந்தாலும், எதுக்கு டொனேஷன் தேவைப்பட்டாலும் முதல் நபராய் நிற்கும் லாவண்யா என்பதால், சரஸ்வதிக்கு ஒருவித அபிமானம் இருந்தது. சமூக சேவகியாய் இருக்கும் அவளுக்கு, மற்றவருக்கு உதவிச் செய்வதாய் தன்னைச் சமுதாயத்தில் காட்டிக் கொள்வதில் ஆர்வம் அதிகம். வேணுகோபாலன் ரோஜாவுக்கு சொத்தில் பங்கு கொடுத்ததும், ராதைக்கு கார்டியனாக நியமித்ததும் அவள் கண்களுக்கு அநியாயம் என்று பட்டது. அதைத் தட்டிக் கேட்டு, லாவண்யாவுக்கு நல்லது செய்ய முயன்றாள் சரஸ்வதி.



எரிமலையாய்க் கொதித்துக் கொண்டிருந்த உள்ளத்துடன் வீட்டுக்கு வந்தாள் லாவண்யா... எவ்வளவு ஏமாற்று வேலை. விஜய்கூடச் சொல்லவில்லையே? எதுக்குச் சொல்லப் போகிறான்? ரோஜாவைத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்தில் இருக்கும்போது... திடீரென்று லாவண்யாவுக்குத் தன் நலனில் அக்கறை கொண்டவர்கள் யாருமே இல்லையென்று தோன்றியது.

ரோஜா வீட்டில் காலடி எடுத்து வைத்த வேளை என்னவோ? தனக்கும் தந்தைக்குமிடையே கருத்துவேற்றுமை அதிகமாயிற்று. இருந்த ஒரே நண்பன் விஜய், அவனும் தன் பக்கம் இல்லையென்று ஆகிவிட்டது. வீட்டுக்குப் போனதும், நேராய்த் தந்தையிடம் போய், ''உங்களுக்கு நான் முக்கியமா இல்லை அந்த ரோஜா முக்கியமா? இரண்டில் ஒன்றைச் சொல்லுங்க'' என்று கேட்க நிச்சயித்துக் கொண்டாள்.

ஆனால் வீட்டிற்கு வந்து, தந்தையின் அறைக்குள் நுழைந்தவளுக்கு, வாய் திறந்து கேட்காமலேயே பதில் கிடைத்து விட்டது. அவருக்கு ரோஜாதான் முக்கியம் என்பதற்கு இதைவிட வேறு என்ன நிதரிசனம் வேண்டும்?

தலையணையில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்த லாவண்யாவை மிஸ் ஜோஷி வியப்புடன் பார்த்தாள். படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை அருகில் வைத்து விட்டு, லாவண்யாவின் அருகில் அமர்ந்து தோளில் கையைப் பதித்தாள்

''என்ன விஷயம் லாவண்யா? என்ன நடந்தது?'' என்று பதட்டத்துடன் கேட்டாள்.

மனதில் எதையும் வைத்துக் கொள்ளும் பழக்கமில்லாத லாவண்யா, மிஸ் ஜோஷியிடம் நடந்ததை முழுவதும் சொல்லி விட்டாள்.

லாவண்யாவுக்கு நடந்த அநியாயத்தில் விஜய்க்கும் பங்கு இருப்பது தெரிந்து மிஸ் ஜோஷியின் முகத்தில் கோபம் எட்டிப் பார்த்தது. விஜய்க்கு அந்த வேலைக்காரப் பெண்ணிடம் இவ்வளவு அக்கறை இருப்பானேன்?

சற்றுநேரம் யோசித்துவிட்டு, லாவண்யாவின் தோளில் செல்லமாகத் தட்டி அழைத்தாள். "நான் ஒரு வழி சொல்லட்டுமா?"

"சொல்லுங்க உங்களைத் தவிர எனக்கு இந்த உலகில் யார் இருக்காங்க" என்றாள் லாவண்யா குரல் தழுதழுக்க.

மிஸ் ஜோஸியின் முகம் மலர்ந்து விட்டது. குனிந்து லாவண்யாவின் காதில் ரகசியமாய் ஏதோ சொன்னாள்.

"ஆனால், அதனால் என்ன பிரயோஜனம்?" லாவண்யா கேட்டாள்.

"பிற்பாடு உனக்கே தெரியும். நீ எது செய்ய முற்பட்டாலும், முதலில் அந்தப் பெண்ணை இந்த வீட்டுக்கு வராமல் தடுப்பது ரொம்ப முக்கியம்" என்று மிஸ் ஜோஸி ஆணித்தரமாய் கூறினாள்.

இதுவரை தான் போட்ட திட்டங்கள் எதுவும் பலிக்கவில்லை. இது மட்டும் சரியாய் வருமா என்ற சந்தேகம் இருந்தாலும், மிஸ் ஜோஸி சொன்னபடி செய்ய லாவண்யா ஒப்புக் கொண்டாள்.

## 64

இரண்டு நாட்களுக்குப் பிறகு...

அன்று காலையில்தான் சங்கரன் ஊரிலிருந்து வந்தார். கணவனைப் பார்த்ததும் சுந்தரிக்கு பெரிய பாரம் நீங்கினாற் போலிருந்தது. சாவித்திரி இறந்து நான்கு நாட்கள் ஆகி விட்டதென்று தெரிந்தபோது, சங்கரன் வேதனையால் அப்படியே சரிந்து விட்டார்.

எப்போதும் சாத்தியிருந்த கதவுகள் நன்றாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தன. சாவித்திரி படுத்திருந்த கட்டில், படுக்கையெல்லாம் அடுத்த வீட்டுப் பாட்டி சொன்னதன் பேரில், வெளியில் தூக்கிப் போட்டுவிட்டாள். சுந்தரி அழுதுகொண்டே நடந்ததையெல்லாம் கூறினாள்.



கண்ணீருடன் அருகில் வந்த ரோஜாவின் தலையை வருடிக்கொண்டே ஆறுதல் சொன்னார் சங்கரன்

"வருத்தப்படாதே ரோஜா! கொடுத்து வைத்தவள் போய் விட்டாள். இருந்தால் என்ன சுகப்பட்டு விட்டாள்?"

ஒரு மணிநேரம் கழித்து சங்கரன் குளித்து, உடை மாற்றி வந்தார். ரோஜா குளிக்க உள்ளே சென்றாள்.

சுந்தரி முன் அறையில் உட்கார்ந்து கொண்டு கணவனுக்குக் காபி கொண்டுவந்து தந்துவிட்டு, ரோஜாவின் நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். சங்கரன் 'உம்' கொட்டிக் கொண்டிருந்தார். இதற்குள் வீட்டின் முன் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது.

சுந்தரி முகத்தைச் சுளித்துக் கொண்டாள். "போகாதென்று சொன்னால் காதிலேயே போட்டுக் கொள்ள மாட்டாள் நீங்களாவது சொல்லுங்க. உங்க வார்த்தையை மீற மாட்டாள்..." என்றாள்.

சங்கரன் எழுந்து வெளியே சென்றார். குளியலறையிலிருந்து வெளிப்பட்ட ரோஜா, "மாமி! கார் வந்து விட்டதா?" என்று கேட்டாள்.

"ஆமாண்டியம்மா." எகத்தாளமாய்க் கூறினாள் சுந்தரி.

ஆனால் வாசலில் வந்து நின்றது வேணுகோபாலனின் கார் இல்லை, டாக்ஸி! அதிலிருந்து பணக்கார வீட்டுப் பெண்கள் போல் தோற்றமளித்த இரண்டு பெண்கள் இறங்கி வந்தார்கள்.

"யாரும்மா நீங்க? யார் வேணும் உங்களுக்கு?" என்று உள்ளே வந்து கொண்டிருந்த அவர்களைப் பார்த்து சங்கரன் பணிவுடன் கேட்டார்.

"ரோஜா குடியிருக்கும் வீடு இதுதானே?"

"ஆமாம்."

"எங்கே அவள்?"

"கூப்பிடுகிறேன், உள்ளே வாங்க" என்று வரவேற்றார் சங்கரன்.

அப்பொழுதுதான் முன் அறைக்கு வந்த ரோஜாவை ஏற இறங்கப் பார்த்தாள் லாவண்யா.

அதட்டுவதுபோல் அதிகாரத்துடன், "வெள்ளித் தட்டுகளை எங்கே ஒளிச்சு வெச்சிருக்கே?"

"வெள்ளித் தட்டுகளா?" ரோஜாவால் புரிந்துகொள்ள முடியவில்லை.

லாவண்யா ரோஜா அருகில் சென்றாள்.

"போதும், போதும்! அப்பாவியாய் நடித்தது... இந்தத் தடவை நான் சும்மாயிருக்க மாட்டேன். எங்கே வெச்சு இருக்கே? மரியாதையாய்ச் சொல்லிவிடு."

சுந்தரி புரியாதவள்போல் பார்த்தாள். ரோஜா தடுமாற்றமே இல்லாமல், கலக்கமடையாமல் லாவண்யாவின் மனதில் இருக்கும் எண்ணத்தை அறிந்து கொள்ள முயன்றவளாய் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சங்கரனால் சும்மா இருக்க முடியவில்லை. "யாரும்மா நீங்க? என்ன விஷயம்?"

"நான் யாரா?" லாவண்யா தலையைத் திருப்பி சங்கரனைத் தீவிரமாய்ப் பார்த்தாள். "உங்க ரோஜா வேலை பார்க்கும் வீட்டு எஜமானரின் மகள்! எங்க அப்பா பெரியவங்க, ரொம்ப சுலபமாய் எல்லோரையும் நம்பி விடுவாங்க. சில நாட்களுக்கு முன்புதான் நெக்லஸ் திருடு போயிற்று. இப்போ வெள்ளித் தட்டுகள் காணும். வீட்டு நிர்வாகம் முழுவதும் உங்க வீட்டுப் பெண்ணிடம்தான் தந்திருக்கிறோம். அவளைத் தவிர வேறு யாரும் வீட்டுக்கு வரவில்லை."



"வெள்ளித்தட்டுகளா? எங்க வீட்டுப் பெண் எடுத்தான்னு சொல்றீங்களா? அநியாயமாய்ப் பழியைச் சுமத்தாதீங்க. வேணும்னா, இந்த வீட்டில் வந்து தேடிப் பார்த்துக்குங்க."

லாவண்யா இளக்காரமாய்ப் பார்த்தாள். "திருடிய பொருளை யாராவது வீட்டிலேயே வைத்திருப்பார்களா என்ன?"

லாவண்யாவின் மிரட்டலுக்குச் சுந்தரி பயந்துவிட்டாள். அக்கம் பக்கத்தாரின் காதுகளில் இந்த ரகளை விழுந்துவிட்டால்... வேறு வினையே வேண்டாம்.

லாவண்யா ரோஜாவைப் பார்த்து, ஒற்றை விரலை உயர்த்தி மிரட்டிக் கொண்டே, "கடைசி தடவையாய்க் கேட்கிறேன். உண்மையை ஒப்புக் கொள்! என்ன செய்தாய் வெள்ளித் தட்டுகளை?"

ரோஜாவுக்குப் புரிந்து விட்டது... லாவண்யா வேண்டுமென்றே ரகளை செய்து, தன்னை இழிவுப் படுத்த வந்திருக்கிறாள் என்று. அவளுக்கு பதில் சொல்லுவது அநாவசியம். எது சொன்னாலும் சச்சரவு அதிகமாகுமே தவிர பிரயோஜனமில்லை. அவமானத்தை விழுங்கிக்கொண்டு கற்சிலையாய் நின்றுவிட்டாள் ரோஜா.

லாவண்யா, சங்கரன், சுந்தரி இருவரையும் பார்த்துக் கொண்டே சொன்னாள். "ஏழை வீட்டுப் பெண் என்று இரக்கப்பட்டு வேலை கொடுத்தால், என்ன செய்தாள் தெரியுமா? எங்க வீட்டு ஒற்றுமைக்கே கேடு விளைவித்தாள். எனக்கும் என் அப்பாவுக்கும் ஆகாமல் செய்து விட்டாள். இவள் என் தந்தையுடன் நெருக்கமாய் இருந்தபோது நானும், விஜயும் பிடித்தோம். உண்டா இல்லையா என்று கேளுங்க. அப்பவே கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளி இருக்கணும். இந்தக் காலத்தில் நல்லதுக்கே காலமில்லை, இப்பவும் ஒண்ணும் மிஞ்சிப் போய் விடவில்லை. மரியாதையாய் எங்க வெள்ளித் தட்டுகளை தந்துடுங்க. விற்றிருந்தால் அதன் விலையைத் தந்துடுங்க. இல்லாவிட்டால் போலீஸில்

ரிப்போர்ட் செய்து, கம்பி எண்ண வைப்பேன். நான் மறுபடியும் மாலையில் வருவேன். அப்போ பணத்தை யாவது, பொருளையாவது தந்தாகணும். வா, ஜோஷி போகலாம்'' என்று லாவண்யா தரை அதிர இறங்கிச் சென்றாள்.

சங்கரன் திக்பிரமை அடைந்தவர் போல் வாயடைத்து நின்று விட்டார்

''என்னடி ரோஜா? இதெல்லாம் என்ன?'' அழுது படியே சுந்தரி கேட்டாள்.

''அந்தப் பெண்ணுக்கு என்னைக் கண்டால் பொறாமை மாமி! வேறொன்றும் இல்லை.''

''அந்தப் பெண் அப்படிப் பொறாமைப்படுபவளாய் இருந்தால், நீ அந்த வீட்டுக்குப் போவதை என்றைக்கோ நிறுத்தியிருக்கணும்'' என்று சங்கரன் கடிந்து கொண்டார்.

அரைமணி நேரம் கழித்து ரோஜா தயாராகி, வெளியில் கிளம்ப முற்பட்டாள்.

சங்கரன் கடுமையான குரலில் கேட்டார், ''எங்கே கிளம்பி விட்டாய்?''

''நான் போய் வருகிறேன் மாமா, அவருக்கு நடந்ததைச் சொல்லிவிட்டு வந்து விடுவேன்.''

''நீ எங்கேயும் போகத் தேவையில்லை. உள்ளே போ.''

ரோஜா தலை உயர்த்தி நயமாகச் சொல்வதுபோல் தாழ்ந்த குரலில், ''அவர் ஏற்கனவே உடல் நலம் சரியில்லாதவர் மாமா! நான் போகாவிட்டால்...''

''வாயை மூடு! இதுவரை சொன்னது, செய்தது எல்லாம் போதும், ஜாக்கிரதை! படியைத் தாண்டினால், காலை உடைத்துப் போட்டு விடுவேன்.'' சங்கரன் ரோஜாவைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் உள் அறையில் தள்ளினார்.

ரோஜா விக்கித்துப் போய் விட்டாள். சுந்தரியும் வியப்பு



அடைந்து விட்டாள். சங்கரனுக்கு அவ்வளவு கோபம் வந்து யாருமே பார்த்ததில்லை.

கண்கள் அகல விரிய பார்த்துக் கொண்டிருந்த ரோஜாவைப் பார்த்ததும் சங்கரனின் கோபம் பனிக்கட்டி போல் உருகிவிட்டது. நாத் தழுதழுக்கச் சொன்னார், ''ரோஜா, நமக்கு நேரம் சரியாக இல்லாவிட்டால் கயிறே பாம்பாய் மாறி நம்மைக் கொத்த வரும். நான் எது செய்தாலும் அது உன் நன்மைக்காகத்தான். நீ அங்கு போவதில் எனக்கு விருப்பம் இல்லை. என் வார்த்தையில் உனக்கு லட்சியம் இல்லாவிட்டால் நீ போகலாம்'' என்று சொன்னவர், தோளில் துண்டை போட்டுக்கொண்டு சென்று விட்டார்.

உக்கிரமூர்த்தியாய்க் கோபித்துக் கொண்டு, உடனே தளர்ந்து விட்டதுபோல் பேசிய புருஷனைப் பார்த்தால் சுந்தரிக்கு எரிச்சல் வந்தது. அந்தக் கோபத்தை அப்படியே நீடித்திருந்தால், வேறு வழியில்லாமல் ரோஜா சொன்ன பேச்சைக் கேட்டிருப்பாள். அந்த எரிச்சலையெல்லாம் ரோஜாமீது காண்பித்தாள் சுந்தரி.

''என்னமோடியம்மா! எனக்கு ஒண்ணும் புரியலை. இத்தனை குடித்தனங்கள் இருக்கு. ஒவ்வொரு வீட்டில் ஒவ்வொரு பிரச்னை இருக்கத்தான் செய்யும். ஆனால் இந்த வீட்டில் நடக்கிற அதிசயத்தை நான் எங்கும் பார்த்த தில்லை. உன்னை அதட்டிக் கேட்கவும் முடியலை எல்லாம் எங்க தலையெழுத்து'' என்று சொல்லிக்கொண்டே சமையல் அறைக்குள் சென்று விட்டாள்.

ரோஜா தாயின் அறையில் ஜன்னலருகில் சிலையாய் நின்று விட்டாள். வேணுகோபாலன் வீட்டுக்குத் தான் போவதில் மாமாவுக்கு விருப்பமில்லை என்ற புதிய பிரச்னை இப்போ முளைத்திருக்கிறது.

வாழ்க்கைப் பிரவாகத்தில் இதுவரை மூழ்கிப்போகாமல், என்றாவது கரை தட்டுப்படாதா என்ற ஆசையில் இருந்த

வளுக்கு. திடீரென்று சூறாவளிக் காற்றில் சிக்கி மூச்சாடுவது போலிருந்தது.

இதிலிருந்து தன்னை மீட்கும் சக்தி ஒருவனுக்குத்தான் இருக்கு. விஜய் இன்றோ நாளையோ ஊரிலிருந்து வந்து விடுவான். வந்ததும் நிலைமையை உணர்ந்து செயல்படுவான். யாருக்கு எப்படி பதில் சொல்வதுமோ, அவன் பார்த்துக் கொள்வான். விஜயின் வருகைக்காக ரோஜா காத்திருக்கத் தொடங்கினாள்.

## 65

அன்று மதியம் பூனாவிலிருந்து தந்தி வந்தது. மிஸ் ஜோஷியின் தாய்க்கு உடல்நலம் சரியில்லை என்றும், உடனே அவளைப் புறப்பட்டு வரச் சொல்லி, அவளுடைய தந்தை தந்தி கொடுத்திருந்தார். உடனே மிஸ் ஜோஷி தன் பெட்டியில் துணிமணிகளை எடுத்து வைக்கத் தொடங்கினாள்.

"போகப் போறியா?" என்று வருத்தத்துடன் வினவினாள் லாவண்யா.

"என்ன செய்யட்டும்? எனக்குப் போக இஷ்டமில்லை தான். ஆனால், வேறு வழியில்லையே?" என்றாள் மிஸ் ஜோஷி

உண்மையிலேயே அவளுக்குப் போக இஷ்டமில்லை. இந்தக் குடும்பத்தில் நடக்கிற நாடகம் சுவாரஸ்யமாக இருக்கிறது. இனி என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பு மிஸ் ஜோஷிக்கு உற்சாகத்தைத் தந்தது. இதை முழுவதுமாகப் பார்த்து விட்டுத்தான் ஊருக்குப் போக நிச்சயித்துக் கொண்டு, இப்போதைக்கு வரமாட்டேன் என்று பெற்றோ



ருக்குக் கடிதம் எழுதிப் போட்டிருந்தாள். அவள் தாயும் அதற்கு அனுமதி வழங்கி இருந்தாள். ஆனால் அதற்குள் இப்படி ஆகி விட்டது.

லாவண்யா சிநேகிதியை வழி அனுப்ப ரயில் நிலையத்துக்குச் சென்றிருந்தாள்.

மிஸ் ஜோஷி ரயில் ஏறும்முன் லாவண்யாவைப் பார்த்து, "லாவண்யா... இங்கு நடக்கும் விஷயங்களை உடனுக்குடனே எனக்குத் தெரியப்படுத்துவாய் இல்லையா?" என்றாள்.

அவள் அப்படிக் கேட்பது அது நான்காவது முறை.

"கட்டாயம்! எழுதாமல் இருக்க முடியுமா என்னால்?" வருத்தம் கலந்த குரலில் சொன்னாள் லாவண்யா.

மிஸ் ஜோஷி கிளம்பிப் போனதால், தனக்கு பக்கபலம் குறைந்து விட்டது போல் உணர்ந்தாள் லாவண்யா. ரயில் கண் மறையும் வரை அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்த லாவண்யாவுக்கு, தாங்க முடியாத தனிமை ஏற்பட துக்கம் பொங்கி வந்தது. விழி நீர் பார்வையை மறைத்தது. வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை. கால் போன போக்கில் ஸ்டேஷனில் நடக்கலானாள்.

பின்னாலிருந்து யாரோ "ஹலோ" என்ற குரல் கேட்டது. நன்றாகப் பழக்கமான அக்குரலைக் கேட்டதும், லாவண்யா சரேலென்று திரும்பினாள். எதிரே ஜேம்ஸ் நின்றிருந்தான்.

தன் கண்களையே நம்பாதவள் போல் வியப்பும், மகிழ்ச்சியுமாய் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் உதட்டில் இளமுறுவல் பூத்தது. "சாரி, பயந்து விட்டீர்களா என்னைப் பார்த்து?" இல்லையென்று தெரிந்தும் அப்பாவிபோல் கேட்டான் ஜேம்ஸ்.

"நானா? உங்களைப் பார்த்து பயந்து விட்டேனா?" லாவண்யா கலீரென்று சிரித்தாள் அந்தச் சிரிப்பில் அதுவரை அவளைச் சூழ்ந்திருந்த தனிமை, கவலை மாயமாகி விட்டன.

"உங்கள் கண்களில் கண்ணீர்?" என்று சந்தேகமாய்ப் பார்த்தான்.

"இது உங்களைப் பார்த்ததால் வந்த ஆனந்தக் கண்ணீர்." லாவண்யா கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவன் டையை சரிசெய்து கொண்டான், "ரொம்ப அநியாயம், நான் தென்படுவதற்கு முன்பே..."

"என் சிநேகிதியை வழியனுப்ப வந்தேன்" என்று இடைமறித்துச் சொன்னாள் லாவண்யா.

"பார்த்தேன்."

"பார்த்தீங்களா? பின்னே அப்போதே ஏன் பேசவில்லை?"

"நானும் என் நண்பனை ரயிலேற்ற வந்தேன். என்னுடன் வந்தவங்க உங்களை, உங்களுடன் இருப்பவங்க என்னைப் பார்ப்பதை விரும்பாமல்தான்."

"நல்ல ஆள்தான்! பார்த்தால் என்ன ஆகிவிடுமாம்?" சிரித்து விட்டாள் லாவண்யா. இருவரும் சேர்ந்து நடக்கத் தொடங்கினார்கள்.

"என்ன விசேஷம்? எப்படி இருக்கீங்க?" குசலம் விசாரித்தான்.

லாவண்யா பெருமூச்சு விடுத்தாள், "விசேஷமா? எங்க வீடே பெரிய விசேஷமாகி விட்டது. என் வாழ்க்கையுந்தான். என்னைப் பார்த்தவங்க யாரும், எனக்குக் கவலைகள் இருக்குன்னு சொன்னா நம்ப மாட்டாங்க. அதுதான் பரிதாபம்! ஜேம்ஸ் உங்களைப் பார்த்ததில் மனம் கொஞ்சம் நிம்மதி அடைந்தாற் போலிருக்கு."

இருவரும் வெளியே வந்தார்கள்.

"ஜேம்ஸ்..."

"என்ன லாவண்யா?"

"உங்களுக்கு ஏதாவது வேலையிருக்கிறதா? எனக்கு உடனே வீட்டுக்குப் போகணும் என்று தோன்றவில்லை."



"எனக்கு ஒரு வேலையும் கிடையாது. உன்னை அனுப்பி விடவேண்டும் என்று எனக்கும் தோன்றவில்லை. பக்கத்தில் நல்ல ஹோட்டல் இருக்கு. காபி சாப்பிடுவோம். சற்று நேரம் உட்கார்ந்தாற் போலவும் இருக்கும்."

முகம் மலர சம்மதிக்கப் போன லாவண்யா உடனே, "ஊஹூம்! நான் வர மாட்டேன்" என்றாள் உதட்டைச் சுழித்துக்கொண்டே.

"ஏன்? எதுக்காக?" புரியாதவன்போல் பார்த்தான்.

"ஜேம்ஸ்! நான் ரொம்ப புத்திசாலி இல்லைதான். ஆனால் வெட்கங்கெட்டவ இல்லை நீ இதை முதலில் புரிஞ்சுக்கணும்."

"லாவண்யா..."

"இல்லாவிட்டால் என்ன? எத்தனை தடவை நான் உன் ரூமுக்கு வந்திருக்கேன்? எத்தனை தடவை உன்னோடு சாப்பிட்டிருக்கிறேன்? ஒரு தடவையாவது எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்களா?" என்று நிஷ்டூரமாய்ப் பார்த்தாள்.

அவன் சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு, எங்கேயோ பார்த்தான். அவன் கன்னங்களில் வேகமாய் ரத்தம் பாய்ந்தது லாவண்யாவுக்குத் தெரியாது. அவன் தேடிப் போன மூலிகையைத் தானே எடுத்து அவன் கையில் கொடுக்கப் போவதும் லாவண்யாவுக்குத் தெரியாது.

ஒரு நிமிடத்தில் சுதாரித்துக் கொண்டவன், லாவண்யா பக்கம் பார்த்தான். அவன் முகம் அமைதியாய், களங்கமற்ற புன்னகையுடன் தென்பட்டது.

"இந்தத் தடவை அழைத்துப் பார்... கட்டாயம் வருவேன்."

"உண்மையாகவா?"

"உண்மைதான்! நம் நட்புமீது எனக்கு நம்பிக்கை வந்து விட்டது."

லாவண்யா அடியுண்டவள்போல் பார்த்தாள். "அப்படின்னா? இதுவரை இல்லையா?"

''நீ நம்புவதுபோல் சுலபமாய் நான் மனிதர்களை நம்ப மாட்டேன். அது தொழில் லட்சணம்.''

''நல்ல ஆள்தான்! இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் சந்தேகப்பட்டு யோசித்துக்கிட்டிருந்தால் காரியம் ஆனாற் போல்தான். போகட்டும், எங்க வீட்டுக்கு எப்பொ வரப் போறீங்க?''

''நீ எப்பொ அழைத்தாலும் அப்போ... ஆனால் ஒரு நிபந்தனை. உங்க அப்பா வீட்டில் இருக்கும்போது மட்டும் நான் வர மாட்டேன்.''

''ஆனாற் போல்தான்! அவரோ இதய நோயாளி... வெளியே எங்கேயும் போகமாட்டாரே?''

''யாராவது இருந்தால் எனக்கு ஏனோ சங்கடமாய், இடைஞ்சலாய் இருக்கும்'' என்று தயங்குவது போல் சொன்னான்.

''எந்த இடைஞ்சலும் இல்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். அவர் வீட்டில் இருந்தாலும், இல்லாதவர் போல்தான். ஒய்வு என்ற பெயரில் முக்கால் வாசி நேரம் அறையிலேயே கட்டிலில் படுத்திருப்பார். நீங்க வந்ததாக நானாகச் சொன்னாலொழிய அவருக்குத் தெரிய வாய்ப்பே இல்லை. அறைக்கதவும் எப்போதும் சாத்தித்தான் இருக்கும். நான் எப்படிப்பட்ட தனிமையில் இருக்கேன் என்று வந்து தான் பாருங்களேன்!''

''ஆகட்டும் பார்க்கலாம். நாம் இங்கேயே நின்று விட்டோம். இனி போவோமா?'' என்றான்.

''கொஞ்சம் இருங்க. டிரைவரிடம் சொல்லிவிட்டு வந்திடறேன்...'' என்று போகப் போனவள் சட்டென்று நின்றாள். ''டிரைவர் நமக்காகக் காத்திருப்பானேன். காரை அனுப்பி விடுகிறேன். நாம் டாக்ஸியில் போகலாம், உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணையா?''

இல்லையென்பது போல் தலையசைத்தான்.

லாவண்யா கார் பார்க் செய்த இடத்துக்கு வந்தாள்.



அவள் வருவதை கவனித்த டிரைவர் கார் கதவைத் திறக்கப் போனான்.

''வேண்டாம், நான் இப்பொ வீட்டுக்கு வரவில்லை. ஒரு பிரண்டுடன் வெளியில் போகிறேன் வர நேரமாகிவிடும் என்று அப்பாவிடம் சொல்லிவிடு. நீ காரை வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போய் விடு. வேலைக்காரியை முன் ஹாலில் படுத்துக்கச் சொல். நான் வந்ததும் கதவைத் திறக்க சௌகரியமாய் இருக்கும்'' என்றாள்.

டிரைவர் ஏதோ சொல்ல வாயைத் திறந்தான். லாவண்யா அதற்குமுன்பே சந்திரனை நோக்கிப் போய் விட்டாள். சந்திரன் டாக்ஸியை அழைத்ததும், இருவரும் அதில் ஏறிக் கொண்டார்கள். டிரைவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே டாக்ஸி வேகமாய்ச் சென்று மறைந்து விட்டது.

ஃ ஃ ஃ

சந்திரனும், லாவண்யாவும் நைட் கிளப்பிலிருந்து வெளியே வந்தார்கள். சந்திரன் லாவண்யாவை டாக்ஸியில் வீட்டு வாசலில் இறக்கி விட்டான்.

டாக்ஸி நின்றதும் லாவண்யா சந்திரன் பக்கம் திரும்பிச் சொன்னாள். ''ஜேம்ஸ்! இன்று மட்டும் நீ தென்படாமல் இருந்திருந்தால், நான் என்னவாகியிருப்பேனோ? எப்படி நன்றி தெரிவித்துக் கொள்ளப் போகிறேனோ தெரியலை! ரொம்ப தாங்க்ஸ்...'' என்றாள்.

சந்திரனுக்கு லாவண்யாவின் வார்த்தைகள் புரிய வில்லை. ஒரு நிமிடம் அவள் கண்களைக் கூர்ந்து பார்த்தான். அந்தக் கண்கள் நட்சத்திரங்களைப்போல் ஜொலித்துக் கொண்டிருந்தன.

''வர்றேன், குட்நைட்...''

''குட்நைட்...''

டாக்ஸி கதவைச் சாத்தும்முன் லாவண்யா சொன்னாள்.

''பிறகு போன் செய்கிறேன். கட்டாயம் வீட்டுக்கு

வரணும். அடுத்த சந்திப்பு எங்க வீட்டில்தான்...'' என்றாள்.

''அப்படியே...'' வாக்குக் கொடுப்பதுபோல் சொன்னான் சந்திரன்.

லாவண்யா உள்ளே போய் விட்டாள்.

சந்திரன் டாக்ஸியிலிருந்து இறங்கினான். நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்ததால், எங்கும் நிசப்தமாய் இருந்தது. தெரு விளக்கின் வெளிச்சம் சந்திரன் முகத்தில் பட்டதும், நிழலில் நகர்ந்து கொண்டான். சட்டைப் பையிலிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். எதிரே வேணுகோபாலனின் பங்களா ஆடம்பரமாய், கோட்டையைப்போல் தென்பட்டது. மாடியில் வலப்பக்க அறை லாவண்யாவின் அறை போலும் விளக்கு எரிந்தது. அத்தனை நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பிய மகளை தந்தை கோபித்துக் கொள்ள மாட்டாரா? லாவண்யாவுக்கு வீட்டுக்கு திரும்புவதில் விருப்பமேயில்லை.

பேச்சுக்கு நடுவில் ஓரிரு தடவைச் சொன்னாள். ''நான் இப்போ வீட்டுக்குப் போனாலும், போகாவிட்டாலும் ஒன்றுதான்!''

காதில் விழாததுபோல் சும்மாயிருந்துவிட்டான். கடைசியாகக் கிளப்பிலிருந்து வெளியில் வரும்போது, தெளிவாகச் சொன்னாள். ''ஜேம்ஸ்! இரவு ரொம்ப நேரமாகிவிட்டது. நான் வீட்டுக்குப் போய் ஆகணுமென்று இல்லை. உங்க அறைக்குப் போவோம். சற்று நேரம் சீட்டாடுவோம். பொழுது விடிந்துவிடும்.''

''சாரி லாவண்யா! எனக்கு வேலையிருக்கு... இல்லாவிட்டால் நானே உன்னை அழைக்கமாட்டேனா?''

''இந்த நள்ளிரவில் என்ன வேலையிருக்கு?'' லாவண்யா செல்லமாய்ச் சிணுங்கினாள்.

''என் வேலை எப்போதும் இரவில்தானே?''

சந்திரனைக் கூர்ந்து பார்த்த லாவண்யா ஏதோ



புரிந்தவள்போல் சிரித்து விட்டாள்.

சந்திரன் தலை உயர்த்தி பார்க்கும்போது, லாவண்யா அறையில் விளக்கு அணைந்துவிட்டது.

அடுத்த வியாழன் இரவு சரியாய் இதே நேரத்துக்கு இந்த வீட்டைக் கொள்ளையடிக்கப் போகிறார்கள். வங்கி திவாலா ஆகப் போவதாய் லாவண்யாவிடம் சொல்லி, வங்கியில் இருக்கும் பணம், நகைகளை வீட்டில் வைத்துக் கொள்ளும் படிச் செய்ய வேண்டும். அடுத்த வியாழன் சரியாய் இதே நேரத்துக்கு...!

வேணுகோபாலன் வீட்டைக் குறிப்பிட்ட நாளில் கொள்ளையடிக்க வேண்டும் என்று மேலிடத்திலிருந்து ஆணை வந்தபோது, அவனுக்கு என்னவோ போலிருந்தது. எல்லாம் நல்லபடியாக முடிந்துவிட்டால் பரவாயில்லை. ஆனால் ஏதாவது தடங்கல் வந்தால்...? தான் பிடிபட்டு விட்டால்? சிநேக பூர்வமாய்ச் சிரித்துக் கொண்டிருக்கும் லாவண்யாவின் அழகிய முகம் கண்முன் நிழலாடிற்று. தன்னைப் பற்றிய உண்மை தெரிந்தால், அந்த முகம் எப்படி மாறுமோ! தன்னை எப்படிப் பார்க்குமோ? அவனுக்குத் தெரிந்துதான் இருந்தது. நம்பாதவர்களைவிட, நம்பியவர்களை ஏமாற்றுவது ரொம்ப சுலபம். ஆனால் அதற்கு மனசாட்சியை அடகு வைக்க வேண்டியிருக்கும்.

இதற்குமுன் சந்திரனுக்கு, தான் பிடிபட்டாலும் பரவாயில்லை என்ற துணிச்சல் இருந்தது. ஆனால் இப்போ, ரோஜாவின் வாழ்க்கை ஒரு நிலைக்கு வரும்நேரம், தன்னைப் பற்றி ஏதாவது வெளியில் தெரிந்து, அதனால் பிரச்னை ஏற்பட்டால், அவளுடைய எதிர்காலம் பாதிக்கப்படுமே என்ற பயம் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்தது.

அதனால்தான் பூனாவில் விஜயைச் சந்திக்கும்போது, தன்னைப் பற்றிய உண்மையைச் சொல்லிவிட நிச்சயித்துக் கொண்டான். தன் வாழ்க்கைக்கும் ரோஜாவின் எதிர்காலத்துக்கும் முடிச்சுப் போட வேண்டாமென்றும், தேவைப் பட்டால், அவர்கள் கண்ணில் படாமல் தொலைவுக்குத்

தான் போய் விடுவதாக வாக்குக் கொடுக்க நினைந்தான்.

சிலரைப் பார்த்தும் சில விஷயங்கள் புரிந்துவிடும். விஜயைப் பார்த்தும், ஏனோ இவன் மற்றவர்கள்போல் இல்லை என்று தோன்றியது. அவனிடம் தென்படும் பண்பு, உண்மையானது என்று தோன்றியது. நல்லது கெட்டது பிரித்துப் பார்க்கும் தன்மை உடையவன்போல் தோன்றியது. ஆனால், பூனாவில் விஜயைச் சந்திக்க முடியாமல் போய் விட்டது. விஜய் தன்னைச் சந்திக்கத்தான் பூனாவில்இறங்கப் போகிறான் என்று தெரியும். ஆனால் அன்றைக்கே சூட்கேஸ் ஒன்றை எடுத்துக் கொண்டு உடனே ஹைதராபாத் போகச் சொல்லி உத்தரவு வந்தது.

'அவசர வேலையாய் வெளியூருக்குப் போவதால் உங்களைச் சந்திக்க முடியவில்லை மன்னிக்கவும். வந்ததும் நானே உங்களைச் சந்திக்கிறேன்' என்று ஒரு பேப்பரில் இருக்கி, விஜய் தங்கப் போகிற ஹோட்டலுக்கு அனுப்பி விட்டுக் கிளம்பிப் போனான்

விஜய் என்ன நினைத்துக் கொண்டாளோ என்னவோ? என்ன செய்வது?

சந்திரன் கண்முன் அன்றைய தினம் தான் காரில் சூட்கேசுடன் ஹைதராபாத்துக்குக் கிளம்பிய காட்சி நிழலாடிற்று அந்த சூட்கேஸ் முழுவதும் நகைகள் இருந்தன.

பூனா அருகில் இருந்த ஒரு கிராமத்தில், சேட்டு வீட்டில் திருமணம். பெரும் செல்வந்தர். தன் ஒரே மகளின் திருமணத்தை ஆடம்பரமாய் ஏற்பாடு செய்திருந்தார். உறவினர் வருகையால் வீடு நிறைந்திருந்தது.

சரியாய்த் திருமணம் அடுத்த நாள் என்றபோது. அந்த வீட்டில் நகைகள், பணம் எல்லாம் கொள்ளையடிக்கப் பட்டன கேங்கைச் சேர்ந்த இருவர் ஏற்கனவே அந்த வீட்டில் வேலையாட்களாகச் சேர்ந்து இருந்ததால், நினைத்த காரியம் திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டது.



திருடப்பட்ட நகைகளை ஒரு சூட்கேசில் வைக்கப்பட்டு, சந்திரனிடம் கொடுக்கப்பட்டது. அவற்றை, உடனே ஹைதராபாத் எடுத்துக்கொண்டு போய் உருக்க ஏற்பாடு செய்யச் சொல்லி ஆணை வந்தது.

நகைகளைத் தட்டான் உருக்கும்போது, காவலாய் உட்கார்ந்திருந்த சந்திரன், அதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தக் குடும்பம் என்னவாயிற்றோ? அந்தத் திருமணம் நடந்ததோ? நின்று விட்டதோ! அந்த மணமகள் தற்கொலை செய்து கொண்டிருப்பாளோ? அந்தப் பாவம் தங்களுக்குச் சேராதா? அந்த மணமகள் ரோஜாவாய் இருந்தால்? சந்திரனின் உடல் நடுங்கிற்று.

கையில் இருந்த சிகரெட் தீர்ந்துவிடவே, அடுத்ததைப் பற்ற வைத்துக் கொண்டான்.

யோசனைகளில் மூழ்கியவனாய் மறுபடியும் அந்த வீட்டுப் பக்கம் பார்த்தான். இது வரைக்கும் நடந்தவை வேறு. அவர்கள் யாரென்று தனக்குத் தெரியாது. ஆனால் இந்த வீட்டு மனிதர்களைத் தனக்குத் தெரியும். லாவண்யா வுடன் நட்பு இவ்வளவு நெருக்கமாய் வளராமல் இருந் திருந்தால் நன்றாக இருந்திருக்கும். தனக்கு இவ்வளவு வேதனை இராது.

இந்த வீட்டுக்கும் ரோஜாவுக்கும் இருந்த நெருக்கத்தை' தான் மறந்து போகக்கூடாது. அவனுக்கு அந்தக் கணம் ரோஜாமீது ரொம்ப கோபம் வந்தது ரொம்பப் பிடிவாதக் காரி...!

ரோஜா பற்றிய நினைவு வந்ததும், அவன் மனதில் ஒரு புதிய எண்ணம் உதித்தது. விஜய் பாம்பேயிலிருந்து வந்ததும், இந்த விஷயத்தைத் தெரிவித்துவிட்டு, அந்த நேரத்தில் இயலாதவன்போல் பிடிபட்டு விட்டால்?

சந்திரனின் உடல் நடுங்கியது. நம்பிக்கைத் துரோகம் செய்தவர்களின் கதி என்னவாயிற்றோ அவன் கண்ணாரக்

கண்டிருக்கிறான். ஊஹூம்! தான் அவசரப்படக் கூடாது.

விஜயைச் சந்தித்து, தான் புதைகுழியில் சிக்கிக்கொண்ட விவரத்தைச் சொல்லிவிட வேண்டும். இதிலிருந்து ஆபத்து வராமல் மீளுவதெப்படி என்று அவனிடமே கேட்க வேண்டும். அதுவரை லாவண்யாவுடன் நட்புடனே இருப்பதாகக் காட்டிக் கொண்டு, மேலிடத்துக்கும் சந்தேகம் வராமல் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் சிறந்த வழி.

"சார்" தாழ்ந்த குரலில் அழைப்பு கேட்டது.

திடுக்கிட்டவனாய்த் திரும்பிப் பார்த்தான்.

"ரொம்ப நேரமாய் இங்கே நிற்கறீங்க" என்று டிரைவர் எச்சரிப்பதுபோல் சொன்னான்.

"ஓ, ஆமாம். இதோ வர்றேன். போகலாம்!"

சந்திரன் சிகரெட்டைக் கீழே போட்டுவிட்டு, டாக்ஸியில் ஏறிக் கொண்டான்

சூழ்நிலை மறந்து, தன்னையும் மறந்து, யோசனையில் ஆழ்ந்துவிட்டது அவனுக்கு இதுதான் முதல் தடவை.

## 66

"நீ சரியாகப் பார்த்தியா? ரோஜா வீட்டில்தான் இருந்தாளா?" தன் எதிரில் நின்ற டிரைவரை, நம்பாதவர்போல் மறுபடியும் கேட்டார் வேணுகோபாலன்.

"நல்லாத்தான் பார்த்தேன். நான் போகும்போது ரோஜாம்மா வாசலில்தான் இருந்தாங்க. கார் வந்து நின்றதும், என்னைப் பார்க்காததுபோல் உள்ளே போயிட்டாங்க. உள்ளே இருந்து அந்தப் பெரியம்மா வந்து, இன்னொரு தடவை என்னை இப்படி வர வேண்டாம்னு சொன்னாங்க, அவர்களுக்குத் தொந்தரவாய் இருக்காம்"



என்று பணிவாகச் சொன்னான் ராமு.

டிரைவர் திருப்பிக் கொண்டு வந்த கடிதத்தை அவர் கையில் வைத்துக்கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார்.

மதியமும் தாண்டிவிட்டது, ரோஜா வரவில்லை. எங்கே சின்னச் சத்தம் கேட்டாலும், ரோஜாதானோ என்ற தவிப்புடன் அவர் கண்கள் வாசற்பக்கம் பார்த்தன. ஒவ்வொரு தடவையும் ஏமாற்றம்தான் கிடைத்தது. அதன்பிறகு ரோஜா எதனால் வரமுடியவில்லையென்ற காரணத்தை எழுதி அனுப்பும்படி கடிதம் எழுதி டிரைவரிடம் அனுப்பினார். ரோஜாவிடம் அதைக் கொடுத்துவிட்டு பதில் கடிதம் எழுதித் தந்தாலொழிய வரவேண்டாமென்று எச்சரித்தார்.

டிரைவர் ரோஜா வீட்டிற்குப் போய்விட்டுத் திரும்பி வந்தான் அதே பதிலுடன், "ரோஜா வீட்டில் இல்லையாம்..."

"இந்தக் கடிதம் கிடிதம் எனக்குத் தெரியாது. நீ போகலாம்..." என்று சுந்தரி எரிந்து விழுந்தாளாம்...ரோஜா வீட்டிலேயே இருப்பதாக டிரைவர் ஆணித்தரமாய்ச் சொன்னான்.

வேணுகோபாலனுக்கு மூளை கலங்கிவிட்டது போலாயிற்று.

என்னவாச்சு ரோஜாவுக்கு? எதனால் வரவில்லை? தகவலைத் தெரிவித்தால்கூட போதும். தன் மனதுக்கு நிம்மதியாய் இருந்திருக்கும். ஏதோ பலமான காரணம் இருந்தாலொழிய ரோஜா இப்படி நடந்து கொள்ள மாட்டாள். அவர் மனம் பதட்டமடைந்தது. ஏதோ ஆபத்து வரப் போவதாகத் தோன்றியது. இங்கே யோசித்துக் கொண்டிருந்தால் பிரயோஜனமில்லை உடனே விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ளவேண்டும்.

"ராதாம்மாவை இன்று சர்க்கசுக்கு அழைத்துக்கிட்டு போகச் சொல்லியிருந்தீங்களே? நாங்க கிளம்பிப் போக

வாமா?'' என்று கேட்டான் டிரைவர். அவனுக்குக் காலையி லிருந்து எரிச்சலாய் இருந்தது. மூன்று தடவை ரோஜா வீட்டுக்குப் போய் வந்தது. அங்கே ஒரு பெரியம்மா ராட்சசி போல் கத்தியது ரொம்ப எரிச்சலை ஏற்படுத்தியது. இன்னும் இங்கே நின்றிருந்தால், மறுபடியும் அந்த வீட்டுக்கு அனுப்பி வைப்பார் என்ற சந்தேகம் எழ, மெதுவாய் சர்க்கஸ் என்ற சாக்கில் நழுவிக் கொள்ள விரும்பினான்.

''நீ வெளியில் போய் சற்று நேரம் இரு. நான் இப்பவே கூப்பிடுகிறேன்'' என்றார் வேணுகோபாலன்.

டிரைவர் வெளியே போய் விட்டான். வேணுகோபாலன் தன் அறையில் நடைபயின்று கொண்டிருந்தார். என்னதான் நடந்திருக்கும்? இனி வராதே என்று சுந்தரி டிரைவரிடம் சத்தம் போட்டாளாம். இனி ரோஜா இங்கு வரமாட்டாள் என்று அதன் பொருளாக இருக்குமோ? இந்த நேரம் பார்த்து விஜயும் ஊரில் இல்லை. வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாது என்று டாக்டர் தன்னை எச்சரித்திருக் கிறார். ரோஜாவுக்கு ஏதாவது நடந்துவிட்டால்? அவளைப் பார்க்காமல் தன்னால் உயிரோடு இருக்க முடியாது என்று தோன்றியது.

தான் போய்தான் தீரணும்! வேறு வழியில்லை. அவர் இதயத்தைக் கிழித்துக்கொண்டு பெருமூச்சொன்று வெளிப் பட்டது. சங்கரனும், சுந்தரியும் தன்னை அடையாளம் கண்டு கொள்ளட்டும். இத்தனை நாட்களாய்த் தன் இதயத்தில் நெருப்பாய் கனன்று கொண்டிருந்த இந்த உண்மையை ரோஜா தெரிந்து கொள்ளட்டும். தான் யார் முன் குற்றவாளியாய் நிற்க வேண்டுமோ, அந்த நபர் இப்போ அங்கே உயிரோடு இல்லை இன்னும் என் இந்தத் தயக்கம்! இனியும் காலம் தாழ்த்துவதில் என்ன பயன்? வேணுகோபாலன் அங்கவஸ்திரத்தை எடுத்துத் தோள்மீது போட்டுக் கொண்டார். அறையை விட்டு வெளியே வரும் போது, ஹாலில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டி ருந்த லாவண்யாவின் முதுகுப்புறம் தெரிந்தது. மகளைப்



பார்த்ததும் ஒரு நிமிடம் நின்றவர், ஏதோ நினைவு வந்தது போல் ஜிப்பாவின் பையைத் தடவிப் பார்த்தார். பிறகு பின்னால் திரும்பி அறைக்குள்போய், தலையணை அடியில் இருந்த சாவிக் கொத்தை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு வெளியில் வந்தார்.

அறைவாசலைக்கூடத் தாண்ட வேண்டாமென்று டாக்டர் போட்டிருந்த கட்டளையின்படியே நடந்து கொண்டிருந்த தந்தை, திடீரென்று எங்கேயோ கிளம்ப முற்பட்டது லாவண்யாவுக்கு ரொம்ப வியப்பை அளித்தது.

புத்தகத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு, ''எங்கே கிளம் பிட்டீங்க?'' என்றாள்.

எங்கே என்ற வார்த்தையைக் கேட்டதும் அவர் மனம் திடுக்கிட்டது. அந்த வார்த்தை அபசகுனமாய் தோன்ற ஒரு நிமிடம் நின்று விட்டார். திரும்பி அறைக்குள் போய் விடலாமா என்றுகூட எண்ணி விட்டார். ஆனால் அதற்குள் சுதாரித்துக் கொண்டார். வாழ்க்கையின் கடைசிக் கட்டத் தில் நுழைந்து, ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்த தனக்கு இன்னும் இந்த மூடநம்பிக்கை ஏன் என்று தோன்றியது. ரோஜா வீட்டுக்குப் போவதாய்ச் சொன்னால் லாவண்யா நிச்சயம் ரகளை செய்வாள்

''வக்கீல் வீட்டுக்கு! கொஞ்சம் பேச வேண்டியிருக்கு'' என்றார்.

''வக்கீல் வீட்டுக்கா? போனில் பேசலாமே?'' என்றாள்.

''போனில் பேசவேண்டிய விஷயம் இல்லை, நேரில் பேச வேண்டிய விஷயம்.''

லாவண்யா முகத்தில் தென்பட்ட பிரசன்னம் இந்த வார்த்தையைக் கேட்டதும் பறந்து போயிற்று.

''தகவல் சொன்னால் அவர் இங்கே நம் வீட்டுக்கு வர மாட்டாரா?''

''நானே போகலாமென்று கிளம்பினேன். வீட்டில் உட்கார்ந்து, உட்கார்ந்து அலுப்பாய் இருக்கு. ஒரு மணி

நேரத்தில் திரும்பி விடுகிறேன்."

"ஆனால் டாக்டர்..."

"பரவாயில்லை படி ஏறியோ, இறங்கியோ போறதில்லையே..." அவர் காரில் உட்கார்ந்துகொள்ள கார் கிளம்பியது.

வக்கீல் வீட்டுக்கா? இப்போ அவ்வளவு அவசர வேலை என்ன வந்துவிட்டது. தந்தை போன திசையையே பார்த்துக் கொண்டு, புதுமையாய் நின்று விட்டவள், மெதுவாய் உள்ளே வந்தாள். புத்தகத்தைக் கையில் எடுக்கப் போகும் போது, எதிரே தந்தையின் அறைக்கதவு திறந்திருப்பது கண்ணில் பட்டது. உடனே மின்னல் போன்ற எண்ணம் ஏற்பட, முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. சட்டென்று அந்த அறைக்கு ஓடியவள், அவருடைய தலையணை அடியில் வேறு ஃபோனில் இருக்கிறதென்று சாவிக் கொத்துக்காகத் தேடினாள். எங்கேயும் தென்படவில்லை. சற்று நேரம் அப்படியே நின்று விட்டவள், கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டே, போனிடம் சென்று டயல் செய்யத் தொடங்கினாள்.

"ஹலோ" மறுமுனையில் லாயரின் மனைவி சரஸ்வதி எடுத்தாள்.

"ஆன்ட்டீ... நான்தான் லாவண்யா பேசுகிறேன்."

"என்ன விஷயம்?" என்று பரிவுடன் கேட்டாள்.

"ஆன்ட்டீ, அப்பா உங்க வீட்டுக்கு வருவதாகக் கிளம்பிப் போயிருக்கிறார்."

"எங்க வீட்டுக்கா? ஆனால் டாக்டர் அவரை..."

"ஆமாம், ஆனால் அங்கிளிடம் அவசரமாய் ஏதோ பேசணுமாம்... நான் மறுபடியும் உங்களுக்கு போன் செய்யும் வரை அவரை அங்கிருந்து நகர விடாதீங்க... புரிந்ததா?"

சரஸ்வதிக்கும் புரிந்துவிட்டது. "அப்படியே செய்கிறேன்" என்று வாக்குக் கொடுத்து விட்டாள்.



லாவண்யா போனை வைத்துவிட்டாள். ஒரு கணம் யோசித்து வேறு நம்பருக்கு டயல் செய்தாள்.

"ஹலோ... ரெஜின் ஸ்பீக்கிங்" மறுமுனையில் கம்பீரமான குரல் ஒலித்தது.

"ரெஜின், நீதானா..." லாவண்யா படபடப்புடன் கேட்டாள்.

"யாரு லாவண்யாவா?"

"ஆமாம் நான்தான்! என்ன செய்துகிட்டிருக்காய்?"

"புத்தகம் படிச்சிட்டிருக்கேன்."

"நான் சும்மா ஓய்வாய்த்தான் இருக்கேன் ரெஜின்! அப்பா இல்லாதபோது, வீட்டுக்கு அழைக்கச் சொன்னாயே? அவர் இப்போ வீட்டில் இல்லை."

மறுமுனையில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

"என்ன பேச்சையே காணும்?" இரைப்பதுபோல் கேட்டாள்.

"உங்க அப்பா ஒரு இதய நோயாளி, வீட்டைவிட்டு நகர மாட்டார் என்றாயே?" அவன் குரலில் சந்தேகம் எட்டிப் பார்த்தது.

"இப்போ மட்டும் மறுத்தேனா? அவர் லாயரிடம் ஏதோ அவசரமாய் பேசணுமாம், அதுக்காகத்தான் போனார். வர ஒருமணி நேரமாவது ஆகும். ரெஜின் நீ சீக்கிரமாய்க் கிளம்பி வந்தாயானால், என் கையால் நல்ல காபி போட்டுத் தருகிறேன்."

"சரி."

"ரெஜின்... ஒரு சின்ன விஷயம்..." கெஞ்சுவதுபோல சொன்னாள்.

"என்னது?" போனை வைக்கப் போனவன் நின்று விட்டான்.

"நீ எனக்கு ஒன்னு உதவி செய்யணும்"

"உதவியா? என்ன செய்யணும் சொல்லு..."

"ஜேம்ஸ்..." லாவண்யா தயங்கினாள்.

"சட்டுன்னு சொல்லு! இன்னிக்கு உன் கையால் காபி குடிக்கும் அதிருஷ்டத்தை தவறவிடுவதாய் இல்லை நான்..."

"நீ சிரிக்க மாட்டேன்னா சொல்கிறேன்."

"சிரிக்க மாட்டேன். சொல்லு" சீரியஸாய் கேட்டான்.

"ஜேம்ஸ், நான் எங்க வீட்டில் திருடப் போகிறேன். அதில் நீ எனக்கு உதவி செய்யணும்" என்றாள்

சந்திரனுக்கு ஒரு கணம் தன் கையில் இருந்த ரிசீவர், கருநாகம்போல் தோன்றிற்று. அதையே வெறித்துப் பார்த்தான் லாவண்யா தன்னுடன் விளையாடுகிறாளா? இல்லை, தன் விஷயம் ஏதாவது கண்டுபிடித்துவிட்டிருப்பாளோ? சற்றுத் தடுமாறினான்.

"என்ன பேசவே மாட்டேங்கிறாய்?" என்று மறுமுனையில் கெஞ்சுவதுபோல் கேட்டாள் லாவண்யா.

ஆகட்டும்! லாவண்யா நாடகம் போடுகிறாளா, இல்லையா என்று இன்று தெரிந்துவிடும். ஒரு தடவை காரியத்தில் இறங்கிவிட்டால் பின்வாங்கும் பழக்கமே இல்லை. சந்திரன் குரலைச் செருமிக் கொண்டான்.

"என்ன பேசட்டும், நீ என்னை கலாட்டா செய்யும் போது?" வேண்டுமென்றே குரலில் சோர்வை வரவழைத்துக் கொண்டான்.

"கலாட்டாவா? சே...சே... கடவுள்மீது ஆணையாய்ச் சொல்கிறேன் அதுவும் இது திருட்டுத்தனம்கூட இல்லை. சும்மா சொன்னேன். எங்க வீட்டில் பழைய இரும்புப் பெட்டி இருக்கு அதில் எங்க அப்பா எழுதிய உயில் இருக்கு. அந்த உயிலுக்கும் என் எதிர்காலத்துக்கும் ரொம்ப நெருங்கிய தொடர்பு இருக்கு. அதில் என்ன எழுதியிருக்குன்னு தெரிந்து கொள்வதில் தவறு இல்லையே? ஜேம்ஸ் எனக்கு இல்லாத



தயக்கம் உனக்கு ஏன்? இந்த உலகில் எனக்கு நெருக்கமானவன் நீதானே? எனக்கு உதவி செய்ய நீ கடமைப்பட்டவன் இல்லையா?"

"ஆமாம்" இந்த முறை திடமாய் வந்தது பதில்.

"இரும்புப் பெட்டி திறக்கறவங்க யாராவது இருந்தால், அழைச்சுகிட்டு வா... தேவையான பணம் கொடுத்துவிடலாம்;"

"பார்க்கிறேன்!"

"பார்ப்பதற்கு ஒரு நேரம், செயல்படறதுக்கு ஒரு நேரம் என்று இரண்டு தடவை வாய்ப்பு கிடைக்காது. இந்த அவகாசம் மறுபடியும் கிடைக்காது. உடனே கிளம்பி வா, நேரமாக்காதே."

"சரி... கால் மணியில் அங்கே இருப்பேன்."

"தாங்க்யூ."

லாவண்யா போனை வைத்துவிட்டு, ஒரு தடவை நெஞ்சு முழுவதும் காற்றை உள்ளே இழுத்துக் கொண்டாள். வேகமாய் தன் அறைக்குச் சென்றவள், மளமளவென்று புடவையை மாற்றிக்கொண்டு, நகைகளை அணிந்து கொண்டாள். மெலிதான ஒப்பனைக்குப் பிறகு கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டாள். இனம் புரியாத மகிழ்ச்சி, சொல்லத் தெரியாத பயம், அவளை ஒரு இடத்தில் நிற்கவிடவில்லை. பேக்கை எடுத்துக்கொண்டு, சமையல் அறைப் பக்கம் வந்தாள். சமையல்காரனிடம், "நான் கிளப்புக்குப் போகிறேன். அப்பாவும் வீட்டில் இல்லை... இந்த வேளை சமைக்க வேண்டியதில்லை. நான் கதவைப் பூட்டணும்... நீ வீட்டுக்குப் போய்விடு" என்றாள்.

சமையல்காரனுக்கு விடுமுறை கிடைத்த மகிழ்ச்சியில், செய்து கொண்டிருந்த வேலையைச் சட்டென்று முடித்துவிட்டுக் கிளம்பிவிட்டான். அவன் போய்விட்டதை உறுதிப்படுத்திக் கொண்டாள் லாவண்யா. தோட்டக்காரன் இன்று

வரவே இல்லை. லாவண்யா கொல்லைப்புறத்துக் கதவை, ஜன்னல்களை எல்லாம் சாத்திவிட்டாள். மாடிக்குப் போய் அங்கும் ஜன்னல்களை எல்லாம் சாத்திவிட்டுக் கீழே வரும் போது, கார் வந்து நின்ற சத்தம் கேட்டது.

ஓட்டமாய் வந்தவள், வராண்டாவில் எட்டிப் பார்த்தாள். டாக்ஸியிலிருந்து கோட்டும், சூட்டும் அணிந்த ஒருவன் இறங்கினான். கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்ததால் வந்தவனை லாவண்யாவுக்கு அடையாளம் தெரியவில்லை. பிறகு படியேறி வந்து பெட்டியை எடுத்தான்.

"நீதானா? நான் யாரோன்னு நினைச்சு பயந்து விட்டேன். வெளிநாட்டுக்காரன்போல் அந்தத் தொப்பி எதுக்கு? எனக்கு அடையாளமே தெரியவில்லை" என்றாள்.

அவன் பின்னால் திரும்பி டிரைவரிடம் ஏதேதோ சொன்னான். டிரைவர் தலை அசைத்துவிட்டு காரை ரிவர்ஸ் செய்து கொண்டு சென்றுவிட்டான். லாவண்யா கேட் கதவை சாத்திவிட்டு வந்தாள். இருவரும் உள்ளே வந்தார்கள். சந்திரன் கறுப்புக் கண்ணாடியை எடுத்து சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

கண்கள் மின்னலாய் ஒளி வீச லாவண்யா அவனிடம் "நேரம் இல்லாமல் போய்விட்டது... இல்லாவிட்டால் பூமாலையுடன் உன்னை வரவேற்றிருப்பேன்" என்றாள்.

"அவ்வளவு தகுதி எனக்கு இல்லை."

"தகுதி என்பது நாம் நினைத்துக் கொள்வதால் வந்து விடாது... இல்லையென்று எண்ணுவதால் போய்விடாது..." லாவண்யாவுக்குத் திடீரென்று நினைவுக்கு வந்தது.

"இதென்ன நீ மட்டும் வந்திருக்கியே... கூட யாரையும் அழைச்சுகிட்டு வரலியா?"

"உண்மையிலேயே இரும்புப் பெட்டியைத் திறக்கணுமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

"விளையாட்டாய்ச் சொன்னேன்னு எண்ணிவிட்டாயா புரிந்து கொண்டு இருப்பாயென்று நினைச்சேன்..." நிச்சய



24167

மாய்ப் பார்த்தவள், ... கொண்டாள்.

சந்திரன் லாவண்யாவுக்கு ... இரு கைகளையும் நீட்டினான். லாவண்யாவும் நீட்டிய அந்தக் கைகளையும் புரியாதவளாய்ப் பார்த்தாள்.

"இந்தக் கைகளால் எந்தப் பெட்டியையும் திறக்க முடியும். உனக்கு நிஜமாகவே இரும்புப் பெட்டி திறக்கணும் என்றால், அதற்கு வேறு யாரும் தேவையில்லை, நானே உனக்கு உதவி செய்வேன்."

"நிஜமா!" லாவண்யா வியப்பு மேலிட அவன் பக்கம் பார்த்தாள்.

சந்திரன் கைகளைத் தாழ்த்திக் கொண்டான். "பார்க்க போனால் இந்த விஷயத்தை உன்னிடம் சொல்வதற்கு நான் வெட்கப்படணும். ஆனால் உன்னிடம் எனக்கு ஏற்பட்ட அழகான உணர்வு ஏதோ என் தயக்கத்தைப் போக்கிவிட்டது. நான் நல்லவன் இல்லையென்ற விஷயத்தை அடிக்கடி உன்னிடம் நினைவூட்டி வந்திருக்கிறேன் உண்டா? இல்லையா?"

"உண்மையைத் தயங்காமல் ஒப்புக்கொள்றவங்களைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நீ என்னை ஏமாற்றினாய் என்று ஒருநாளும் சொல்ல மாட்டேன். நான் பார்த்தவரையில் நல்லவர்களாய் நடிக்கிறவங்கதானே தவிர, உண்மையில் நல்லதனம் படைத்த மனிதன் யாரும் எனக்குத் தென்பட்டதில்லை."

"தாங்க்ஸ்! நல்ல காபி தருவதாகச் சொன்னாயே? எங்கே?" நினைவூட்டினான்.

"உட்கார்ந்து கொள். ஒரே நிமிஷத்தில் கொண்டு தர்றேன்" லாவண்யா சமையல் அறைப்பக்கம் ஓடினாள்.

சந்திரன் உட்காரவில்லை. ஹாலைக் கவனமாய் பரிசீலித்துக் கொண்டிருந்தான். லாவண்யா விளையாட்டுக்குச் சொல்லவில்லையென்று புரிந்தாலும், ஏதோ தயக்க

மாய் இருந்தது. ஏதாவது ஆபத்து வரும்முன் அவன் இதயத்தில் ஒருவிதமான துடிப்பும், பதட்டமும் ஏற்படும். இங்கே தனக்கென்ன ஆபத்து வரமுடியும்? யாராவது வந்தால் தன்னால் தப்பித்துக் கொள்ள முடியும். கொல்லைப் புறக் கதவு அருகில் சிங்கு, டார்ச்சியுடன் காத்திருக்கிறான்.

லாவண்யா டிரேயில் காபி கொண்டுவந்து வைத்தாள். காபி குடிக்கும்போது சந்திரன் கேட்டான், "யாராவது இப்போ வந்துவிட்டால்?"

"யாரும் வரமாட்டாங்க."

"உங்க அப்பா திரும்பி வந்தால்?"

"வரமாட்டார். நான் போன் செய்யும்வரை அங்கேயே அவரைத் தங்க வைக்கச் சொல்லி, வக்கீலின் மனைவிக்குப் போன் செய்துவிட்டேன். அவள் எனக்கு வேண்டியவள். கட்டாயம் செய்வாள்."

காபி குடித்த பிறகு வேணுகோபாலனின் அறைக்குப் போனார்கள். லாவண்யா மூலையில் இருந்த இரும்புப் பெட்டியைச் சுட்டிக் காண்பித்தாள். சந்திரன் அதன் அருகில் சென்று அதை நன்றாக ஆராய்ந்தான். ஃபுல் ஹேண்ட் ஷர்ட்டை முழங்கைவரை மடித்துக் கொண்டான். லாவண்யா அவன் பக்கமே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இதற்குள் போன் ஒலித்தது. லாவண்யா போனை எடுக்கப் போனாள். சந்திரன் மின்னலைப் போல் ஒரே எட்டில் அவளருகில் வந்தான். போனை எடுக்கப் போன அவள் கையைப் பற்றி தடுத்து விட்டான்.

லாவண்யா 'புரியாதவள் போல் அவன் பக்கம் பார்த்தாள். "வேண்டாம்! போனை எடுக்காதே. இந்த அறையில் இந்த சமயத்தில் நீ இருப்பதை யாரும் அறியாமலிருப்பதே நல்லது."

லாவண்யா அதை ஒப்புக் கொள்வதுபோல் பார்த்தாள். போன் சற்று நேரம் வரை இடைவிடாமல் ஒலித்தது.



பிறகு மௌனமாகி விட்டது. சந்திரன், லாவண்யாவின் கையை விடுத்து, மறுபடியும் இரும்புப் பெட்டியருகே வந்தான்.

## 67

வேணுகோபாலன் கார் ரோஜா வீட்டுப்பக்கம் சென்றுக் கொண்டிருந்தது. பாதி தூரம் சென்றதும், பின் சீட்டில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்திருந்த வேணுகோபாலன், "ராமு... காரைப் பின்னாடி திருப்பு! வீட்டுக்குப் போய் விடலாம்" என்றார்.

டிரைவர் வேகத்தைக் குறைத்து, ரிவர்ஸ் செய்துவிட்டுப் பக்கம் காரைச் செலுத்தினான்.

"ராமு வீட்டுக்கு வேண்டாம். பார்க் சைடு போக விடு" என்றார்.

கார் மறுபடியும் திரும்பி பார்க்கை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது ராமுவுக்கு உள்ளூரக் கோபம் வந்தாலும், வெளியில் காண்பித்துக் கொள்ளவில்லை

'முதலாளிக்கு மூளை ஏதானும் கலங்கி விட்டதா? இல்லாவிட்டால், இருட்டும் நேரம். இந்தக் குளிர் காற்றில் இப்போ பார்க்குப் போவாரா? ஏற்கனவே உடம்பு சரியில்லை. நாளைக்கு ஏதாவது ஆனால் மற்றவர்கள் நம்மைத் திட்டமாட்டார்களா? முதலாளியின் பேச்சைத் தட்டவும் முடியாது.'

முன்னுக்குப் பின் முரணாக அவர் பேசுவது கண்டு, முதலாளிக்குச் சித்தம் கலங்கிவிட்டதென்ற முடிவுக்கு வந்தான் ராமு.

கார் பார்க்கை அடைந்தது. அவர் காரைவிட்டு இறங்கி கொஞ்ச தூரம் நடந்து புல்வெளியில் அமர்ந்து கொண்டார்.

அவரால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. ஒருதடவை தானே நேரில் சென்று பார்த்தால் என்ன என்று தோன்றும்; உடனே வேண்டாம் என்ற நினைப்பு மேலோங்கும்.

யாருக்கு முன்னால், தன் இரண்டு குழந்தைகளையும் அழைத்துவிட்டுப் போய் "என்னை மன்னித்து விடு சாவித்திரி" என்று மனப்பூர்வமாய் மன்னிப்புக் கேட்க எண்ணியிருந்தாரோ, அவள் அந்த வாய்ப்பை அவருக்குத் தராமலேயே, இவ்வுலகைவிட்டுச் சென்று விட்டாள்.

இது போன்ற விஷயங்களில் நிதானமாகத்தான் செயல்படணும். முக்கியமாய் ரோஜாவிடம் இந்த விஷயத்தைத் தெரிவிக்கும் சமயம், விஜய் தன் அருகில் இருக்கவேண்டும். ஏதாவது பிரச்னை வந்தால் அவன் சமாளிப்பான். எப்படியும் நாளையோ, அதற்கு மறுநாளோ வந்து விடப் போகிறான். வேணும்னா கடைசி தடவையாய் டிரைவரை ரோஜா வீட்டுக்கு அனுப்பி, அவளிடமே நேரில் பேசி விஷயத்தைத் தெரிந்து வரச் சொல்லலாம்.

அதுதான் சரியான வழியாய் அவருக்குத் தோன்றியது. மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டவராய் எழுந்து காரில் அமர்ந்து கொண்டார்.

"ராமு, வீட்டில் என்னை இறக்கிவிட்டு, நீ மறுபடியும் ரோஜா வீட்டுக்குப் போ... அவளிடமே பேசி விஷயத்தைத் தெரிந்துகொண்டு வா... பதில் சொன்னாலொழிய போக மாட்டேன் என்று சொல்லு" என்றார்.

சரியென்பது போல் தலை அசைத்தானே தவிர, ராமுவுக்கு உள்ளூர உடல் பற்றி எரிந்தது. அய்யாவை வீட்டில் இறக்கிவிட்டு, ராதையை அழைத்துக்கொண்டு சர்க்கஸுக்குப் போய்விடலாம். இன்றுதான் கடைசி நாள். பிறகு அய்யாவிடம் பேசிக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டான்.

# 68

"எங்கே ரோஜா மறுபடியும் கிளம்பி விட்டாயா?" செருப்புப் போட்டுக் கொண்டிருந்த ரோஜாவை நிதானமாகப் பார்த்தபடியே கேட்டாள் சுந்தரி.

"இங்கேதான் மாமி. சீக்கிரமாய் வந்து விடுவேன்" என்றாள்.

"எனக்குத் தெரியாது. உங்க மாமாவிடம் சொல்லி விடுவேன். அப்புறம் உன் இஷ்டம்" என்று மிரட்டுவதுபோல் சொன்னாள் சாவித்திரி.

ரோஜா திரும்பிப் பார்த்தாள். கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அமைதியான குரலில், "நான் ஒன்றும் சின்னக் குழந்தையில்லையே நீங்க காவல் காப்பதற்கு. உங்க எல்லோரையும் விட, என் நலனைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். டி.எஸ்.பி. வீட்டுக்குச் சென்று போன் செய்துவிட்டு வந்திடறேன்" என்று பதிலுக்குக் கூடக் காத்திராமல் சென்று விட்டாள்.

சுந்தரிக்கு ரோஜாவைத் தாழ்த்திப் பேசவேண்டும் என்றோ, வருத்தமுறச் செய்ய வேண்டுமென்றோ எண்ணம் இல்லை. இப்படிக் கடினமாக நடந்து கொள்ளாவிட்டால், ரோஜா சொன்ன பேச்சைக் கேட்கமாட்டாள் என்று அவளுக்குப் பயம்.

ரோஜா—அஞ்சலியின் திருமணம் முடியும்வரை, ரோஜாவிடம் இப்படியே கடினமாய் நடந்துகொள்ள நிச்சயித்துக் கொண்டாள் சுந்தரி.

கதவைத் திறந்ததும் வாசலில் நின்றிருந்த ரோஜாவைப் பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டாள் டி.எஸ்.பி யின் மனைவி.

"ஒருதடவை போன் செய்துக்கலாமா?" பணிவுடன்

வினவினாள் ரோஜா.

"ஊம்..." வேண்டா வெறுப்பாய் கூறிவிட்டு நகர்ந்து கொண்டாள் அந்த மாது.

அந்தத் தெருவில் ரோஜாவைப் பார்த்தாலே பெரும்பாலானவர்களுக்குப் பிடிக்காது. ரோஜாவைப் பற்றி நிறைய செய்திகள் கதைகதையாய் அந்த அம்மாள் கேள்விப்பட்டிருக்கிறாள். காரில் யாருடனோ வருவதும், போவதும் வேலைக்காரி அவளிடம் நேரில் பார்த்ததுபோல் விலாவாரியாய்ச் சொல்லுவாள்.

ரோஜாவைப் போன்ற பெண்கள் கெட்டுப் போகாமல் வசதியாக வாழ முடியாது என்பதில் அந்த அம்மாளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

ரோஜா போன் அருகில் சென்று டயல் செய்யத் தொடங்கினாள். சற்றுமுன் டிரைவர் காருடன் வந்ததைக் கவனித்த அவள், சட்டென்று உள்ளே சென்று, ஒரு காகிதத்தில், "நான் நலமாய்த்தான் இருக்கேன். கவலைப் படவேண்டாம் வீட்டில் வேலையிருப்பதால் இரண்டு மூன்று நாட்களுக்கு வரமாட்டேன்" என்று எழுதி, வெளியில் வந்து பார்க்கும்போது, காரும் இல்லை... டிரைவரும் இல்லை...

டிரைவரைத் தான் அனுப்பிவிட்டதாக சுந்தரி பெருமையாய்ச் சொன்னாள்.

இரண்டு நாட்களாக தான் போகாவிட்டால், அவர் எப்படி தவிப்பாரென்று அவள் அறியாதவளில்லை. ஆனால் லாவண்யா செய்த ரகளையால், மாமா மாமிக்கு வந்த கோபம் குறைய வேண்டுமென்றால் தான் இரண்டு நாட்களுக்குப் போகாமல் இருப்பதே நல்லது. அதன் பிறகு பேசி மாமாவைச் சமாதானப்படுத்தி விடலாம்.

டிரைவர் திரும்பிப் போய் அவரிடம் ரோஜா வீட்டில் இல்லையாம் என்று சொன்னால் அவர் எவ்வளவு பதட்டப் பட்டிருப்பாரோ? டிரைவர் தன்னைப் பார்த்துவிட்டான்



என்பதை ரோஜா அறிந்துதான் இருந்தாள். பதட்டம் தாங்காமல் அவரே வந்தாலும் வரலாம். அந்தக் கவலையினால்தான் ரோஜா போன் செய்ய முடிவு செய்தாள்.

போன் ரிங் போய்க் கொண்டிருந்ததே தவிர யாரும் எடுக்கவில்லை. போன் அவருடைய கட்டில் பக்கத்திலேயே இருக்கு. கையை நீட்டினால் போதும் எட்டும் சற்றுப் பொறுத்து மறுபடியும் செய்தாள். இந்தத் தடவையும் யாரும் எடுக்கவில்லை.

போனை வைத்துவிட்டு, ரோஜா வெளியே வந்தாள். மனதில் ஆயிரம் எண்ணங்கள், சந்தேகங்கள் சூழ்ந்து கொண்டன.

மறுபடியும் அவருக்கு நெஞ்சுவலி வந்திருக்குமா? ஹாஸ்பிடலில் சேர்த்து இருக்கிறார்களோ? வீட்டில் யாரும் இல்லையோ என்னவோ? இல்லாவிட்டால் போனை எடுக்காமல் இருப்பானேன்? ஒரு தடவை அவரைப் பார்த்துவிட்டு, நடந்ததைச் சொல்லிவிட்டு வந்தால்? எவ்வளவு முட்டாள்தனம்? நேற்றே இந்தக் காரியத்தைச் செய்திருக்கணும். ஆனால் தனக்கென்ன தெரியும்? இன்று மாமாவுக்குக் கோபம் குறைந்துவிடும், நான் வழக்கம் போல் போய் விடலாம் என்று எண்ணி இருந்தாள்.

ரோஜா யோசித்துக் கொண்டே மெயின்ரோடுக்கு வந்தாள். போனுக்காக எடுத்து வந்த சில்லறை கையில் இருந்தது, நல்லதாய்ப் போயிற்று. அப்படியே பஸ்ஸில் ஏறி விட்டாள். மறுபடியும் வீட்டுக்குப் போய் கிளம்ப வேண்டுமென்றால் சுந்தரி ரகளை செய்ய ஆரம்பிப்பாள்.

## 69

சந்திரன் இரும்புப் பெட்டியைத் திறக்கச் செய்து கொண்டிருந்த ரூபாய் நோட்டுகளை லாவண்யா கண்கள் விரிய விநோதமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரகரகமான சாவிகளைப் போட்டு திருப்பிப் பார்த்தான் சந்திரன். ஆனால் பலனளிக்கவில்லை. கட்டில் மீது வைத்திருந்த கோட்டுப் பையிலிருந்து டார்ச் லைட் போன்ற கருவியை எடுத்தான். அதில் பட்டனை அழுத்தியதும், கூர்மையான இரம்பம் போன்ற ஒன்று வெளியே வந்தது. பேண்ட் பாக்கெட்டிலிருந்து சாக்பீஸை எடுத்து, இரும்புப் பெட்டியில் சாவி நுழைக்கும் இடத்தைச் சுற்றி வட்டமாக மார்க் செய்து கொண்டான். கையிலிருந்த கருவியின் விசையை அழுத்தியதும், மெலிதான சத்தத்துடன் அது இயங்கத் தொடங்கியது. சந்திரன் இரு கரங்களால் பற்றிக் கொண்டு இரும்புப் பெட்டியை அறுக்கத் தொடங்கினான்.

இதற்குள் மறுபடியும் போன் ஒலித்தது. சந்திரன் சட்டென்று லாவண்யா பக்கம் பார்த்தான். அந்தப் பார்வையைப் புரிந்துகொண்டவள் போல் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை.

போன் சற்றுநேரம் ஒலித்துவிட்டு நின்றுவிட்டது. பத்து நிமிடங்களுக்குப் பிறகு சந்திரனின் முயற்சி பலித்தது. இரும்புப் பெட்டியின் கதவு திறந்து கொண்டது. நெற்றியில் வியர்வைத் துளிகள் பொடித்திருக்க சந்திரன் லாவண்யாவை பார்த்துச் சிரித்தான்,

''திறந்து விட்டதா?'' என்று லாவண்யா ஆர்வம் பொங்க அருகில் வந்தாள்.

சந்திரன் கதவை அகலமாய்த் திறந்து காண்பித்தான். லாவண்யாவின் முகம் மலர்ந்தது.

இரும்புப் பெட்டியிலிருந்த இழுப்பு அறையைத் திறக்கப் போனவன், அப்படியே நின்று, ''நான் இதைத் தொடலாமா?'' என்றான்.

''ஓ! இந்த வீட்டில் உனக்கு எல்லா உரிமையும் இருக்கு'' என்றாள் லாவண்யா.

சந்திரன் முதல் அறையை இழுத்தான். அதில் நிறைய தஸ்தாவேஜுகள் இருந்தன. லாவண்யா அவற்றை கையில்



அள்ளிக் கொண்டு, கட்டில்மீது வைத்துத் தேடத் தொடங்கினாள்.

இரண்டாவது அறையை இழுத்தான் சந்திரன். அவன் கண்கள் மின்னலைப்போல் மின்னின. அதில் நிறைய நகைகள் இருந்தன. பின்னால் இன்னும் ஒரு அறை இருந்தது. அதையும் இழுத்துப் பார்த்தான் ஒரு சின்ன டப்பா மட்டும் இருந்தது. சந்திரன் அந்த டப்பாவை ஆர்வத்துடன் பார்த்தான்.

அதில் என்ன இருக்கும்? வைர நகையா? விலை உயர்ந்த பொருள் ஏதாவது இருக்கக்கூடும். ரொம்பப் பாதுகாப்பாக உள்ளே வைக்கப்பட்டிருந்த அந்தப் பெட்டியைத் திறந்தான். அவனுக்கு சொல்லொண்ணாத ஏமாற்றம்தான் கிட்டியது. அவன் எதிர்பார்த்தது எதுவும் அதில்லை. பழைய செய்தித் தாளின் கட்டிங் ஒன்று, அதன் அடியில் பேப்பரில் பொட்டலமாய் கட்டப்பட்ட பொருள் ஏதோ இருந்தது.

முதலில் அந்தச் செய்தித்தாளின் கட்டிங்கைப் பிரித்துப் பார்த்தான். அதில் தென்பட்ட படத்தைப் பார்த்ததும், முகத்தில் யாரோ நெருப்பை அள்ளி வீசியதுபோல் பின்னுக்கு நகர்ந்தான்.

ரொம்ப நாட்களுக்கு முன் ரயில் நிலையத்தில் அவன் வேணுகோபாலனிடம் நகை திருட முயன்று, பிடிபட்டுவிட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம் அது. அதைப் பார்த்ததும் அவன் முகம் கடினமாய் மாறியது. அவன் வாங்கிய அடிகள் நினைவு வந்ததும், உடலில் ரத்தம் சலசலவென்று கொதித்தது. அதைக் கிழித்து, சுக்குநூறாக்கி பேண்ட் ஜேபியில் திணித்துக் கொண்டான்.

அவன் பார்வை அந்தப் பொட்டலத்தின் மீதிருந்தது. குதூகலமாய் அதைப் பிரித்துப் பார்த்தான். ரொம்ப பாதுகாப்பாய் வைக்கப்பட்டிருந்த அந்தப் பொட்டலத்தில், தேய்ந்துபோன பித்தளை வளையல் இரண்டு இருந்தன. சற்று முன் தகதகவென்று மின்னிய பொன் நகைகளுக்கு முன் இவை ரொம்ப ஏழ்மையாய் தென்பட்டன.

சந்திரனுக்கு அவற்றை எங்கேயோ பார்த்த நினைப்பு வந்தது. கையில் எடுத்து பரிசீலனையாய் பார்த்தான். எங்கே பார்த்தோம்? யாரிடம் பார்த்தோம்?

சட்டென்று அவனுக்கு நினைவு வந்து விட்டது? இவை தன் தாயின் கைவளையல்கள். ஆனால் இவை இங்கே எப்படி? அவனுக்குப் புரியவில்லை.

"இதில் உயிலில்லையே?" காகிதங்களை அவசரமாய்ப் புரட்டிப் பார்த்து களேபரமாய்ப் போட்டபடிச் சொன்னாள் லாவண்யா.

சந்திரன் வளையல்களைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு லாவண்யாவின் அருகில் வந்தான்.

"சரியாய்த் தேடினாயா?"

"சரியாகத்தான் பார்த்தேன். இந்தக் காகிதங்களைப் படித்தால் எனக்கு மூளையே கலங்கிப் போறது. எல்லாம் பிராமிசரி நோட்டுகள். இத்தனை பேருக்கு அப்பா கடன் கொடுத்திருப்பதாய் எனக்குத் தெரியவே தெரியாது."

"கொஞ்சம் இரு! நான் தேடுகிறேன்" சந்திரன் கட்டிலின் அருகில் நின்று ஒவ்வொரு காகிதத்தையும் கிடுகிடு வென்று பரிசீலித்துக் கொண்டிருந்தான்

லாவண்யா எழுந்து இரும்புப் பெட்டி அருகில் சென்றாள். நகைகளைப் பார்த்ததும் அவள் கண்கள் மின்னல்போல் ஒளி வீசின. ஒவ்வொரு நகையாய் அணிந்து கொண்டு, கண்ணாடியில் தன் அழகைப் பார்த்தவாறே சொன்னாள்.

'இவையெல்லாம் என்னுடையதுதான். ஆனால் ஒரு நாள்கூட அப்பா எனக்குத் தந்ததே கிடையாது. இவற்றை அணிந்துகொண்டு எவ்வளவு நாளாச்சு தெரியுமா?"

"உயில் இல்லைன்னு சொன்னியே... இதோ பாரு?" சந்திர உயிலை வெளியில் எடுத்தான்.

கையிலிருந்த நகையை பெட்டியில் போட்டுவிட்டு லாவண்யா ஓடி வந்தாள்.



"உண்மையாகவா? உயில் கிடைத்து விட்டதா?"

"இதோ!" சந்திரன் லாவண்யாவிடம் கொடுக்கப் போனான். அதற்குள் வெளிகேட் திறக்கப்படும் சத்தம் கேட்டது.

இருவரும் திடுக்கிட்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். உயில் விஷயத்தை மறந்துவிட்டு, காதுகளை கூர்மையாக்கிக்கொண்டு நின்றிருந்தார்கள். கேட் மறுபடியும் சாத்திக்கொண்ட சத்தம் கேட்டது. சந்தேகமே இல்லை, யாரோ உள்ளே வருகிறார்கள்.

லாவண்யாவின் முகம் வெளிறிப் போயிற்று. சந்திரன் எதையும் கவனிக்கவில்லை. ஒரே எட்டில் விளக்கின் சுவிட்சை அணைத்து விட்டான். அறை முழுவதும் இருள் பரவியது.

"ஜேம்ஸ்!" என்று பதட்டத்துடன் அழைத்தாள் லாவண்யா.

"இங்கேயே இருக்கேன்" சந்திரனின் குரல் அருகிலேயே கேட்டது. சற்றுப் பொறுத்து காலிங்பெல் ஒலித்தது.

"யாராக இருக்கும்?" குரலைத் தாழ்த்திக்கொண்டு பேசினாள் லாவண்யா.

"ஷ்... பேசாதே!" சந்திரன் எச்சரிப்பது போல் சொன்னான்

"லாவண்யா..." வேணுகோபாலனின் குரல் கேட்டது.

"செத்தோம்... அப்பாதான் வந்திருக்காரு" என்றாள்.

"பதில் சொல்லாதே" என்றான்.

லாவண்யாவின் இதயத்தில் ரயில்கள் ஓடத் துவங்கின.

"இப்பொ என்ன செய்வது? வக்கீல் வீட்டுக்குப் போகவேயில்லையோ என்னவோ? அதைச் சொல்லத்தான் வக்கீலின் மனைவி போன் செய்திருப்பாளோ என்னவோ? நீதான் போனை எடுக்க வேண்டாமென்று சொல்லி விட்டாய்? அப்பாவுக்குக் கோபம் வந்தால் அவ்வளவுதான்! என்னைக் கொன்று போட்டு விடுவார். இப்பொ என்ன

செய்யட்டும்?'' லாவண்யாவுக்குப் பயத்தில் அழுகையே வந்து விட்டது.

''நீ அநாவசியமாய்ப் பதட்டப்படாதே. கொஞ்சம் என்னை யோசிக்க விடு'' என்றான் சந்திரன்.

நிலைமை இப்படி ஆகிவிடுமென்று அவனும் ஊகித்து இருக்கவில்லை. ஒரு நிமிடம் தன்னைத்தானே சுதாரித்துக் கொண்டால் ஏதாவது ஐடியா தோன்றலாம்.

''லாவண்யா கதவைத் திற! உள்ளே என்ன செய்துகிட்டு இருக்கே?''

அவருடைய குரலுடன் காலிங்பெல்லின் சத்தம், வீடு முழுவதும் எதிரொலித்தது.

''ஜேம்ஸ்... எனக்குப் பயமாக இருக்கு.'' சந்திரனுடன் ஒட்டினாற்போல் நின்றிருந்த லாவண்யாவின் குரல் தடுமாறியது.

சந்திரன் லைட்டைப் போட்டான்.

''இதென்ன?'' திடீரென்று வந்த வெளிச்சத்தில் கண்கள் கூச, கண்களை மூடித் திறந்தாள் லாவண்யா.

சந்திரன் உதட்டின்மீது விரலை வைத்து பேச வேண்டாமென்று ஜாடை செய்தான். சுறுசுறுப்பாய் இயங்கினான். கிடுகிடுவென்று கட்டில்மீது இருந்த காகிதங்களை அள்ளி இரும்புப் பெட்டியில் திணித்தான். கதவைச் சாத்தப் போன போது, கதவு கையோட வந்துவிட்டது. மறுபடியும் முயன்றான். ஆனால் அம்முயற்சி பலிக்கவில்லை. இதற்குள் லாவண்யா கட்டில்மீது கிடந்த அவனுடைய கோட்டை எடுத்து கட்டில் அடியில் தள்ளிவிட்டாள்.

வெளியிலிருந்து தந்தையின் குரல் பலமாய்க் கேட்டது. ''என்ன செய்துக்கிட்டிருக்கே? கதவைத் திற லாவண்யா... உன்னைத்தான்!'' என்று இரைந்து சத்தம் போட்டார்.

பார்க்கிலிருந்து வரும் வழியில், ரோஜா வீட்டுக்கு மறுபடியும் காரை அனுப்பும் எண்ணத்தைக் கை விட்டார் வேணுகோபாலன். ஏற்கனவே ரோஜாவை அனுப்ப மறுத்த



வர்கள், இருட்டிய பிறகு அனுப்ப மாட்டார்கள் என்று தோன்றியது.

நாளைக் காலையில் காரை அனுப்பி வைக்கலாம் என்று முடிவு செய்தார். கார் தன் வீட்டுமுன் நின்றதும், ''இங்கேயே நிறுத்து! ராதையை அழைச்சுகிட்டு சர்க்கஸுக்குப் போய்விட்டு வா, கவனம்'' என்று தெருவிலேயே இறங்கிக்கொண்டு காரை அனுப்பி விட்டார்.

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வரும்போதே தன் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருப்பதைக் கவனித்து விட்டார். அவருடைய புருவங்கள் முடிச்சேறின. லாவண்யா தன் அறையில் என்ன செய்துகிட்டு இருக்காள்?

அவர் வராண்டாவைச் சமீபித்துக் கொண்டிருந்த போது விளக்கு அணைந்து விட்டது. உடனே அவருக்குச் சந்தேகம் வந்தது. தான் வந்த சத்தம் கேட்டு விளக்கை அணைத்து விட்டது தெளிவாய்ப் புரிந்தது.

விடுவிடு என்று படியேறி கதவைத் தட்டினார். யாரும் பதில் அளிக்கவில்லை. காலிங்பெல் அழுத்தினார். குரல் கொடுத்தார். எதற்கும் பதில் வரவில்லை. கதவையெல்லாம் சாத்தியிருப்பதைப் பார்த்தால் லாவண்யா உள்ளே ஏதோ தவறான காரியத்தில் இறங்கி இருப்பதாகத் தோன்றியது.

அவருக்குப் பதட்டத்தினால் மூச்சு இறைத்தது. 'என்ன செய்யறே உள்ளே? கதவைத் திற! இல்லாட்டா கதவை உடைத்துவிட்டு உள்ளே வருவேன்'' எனக் கத்தினார்.

உள்ளே லாவண்யா செய்வதறியாமல் சந்திரன் பக்கம் பார்த்தாள்.

சந்திரன் லாவண்யாவின் அருகில் வந்தான், ''போய் கதவைத் திற'' என்றான்.

லாவண்யாவின் கண்கள் அகலமாய் விரிந்தன. ''நானா கதவைத் திறக்கணுமா?'' நெஞ்சுமீது கையை வைத்துக் கொண்டாள்.

"ஆமாம்! நீயேதான். பயப்படாதே. நான்தான் இருக்கேனே" தைரியமூட்டுவதுபோல் சொன்னான்.

"உன்னை அப்பா பார்த்துவிட்டால்?"

"நான் அவர் கண்ணில் படாமல் ஒளிந்துகொள்வேன்."

வெளியில் வேணுகோபாலன் கதவைக் காலால் உதைத்துக் கொண்டு கத்திக் கொண்டிருந்தார்.

"மரியாதையாய்க் கதவைத் திறந்துவிடு... இல்லாவிட்டால் கதவை உடைத்துவிடுவேன்."

சந்திரன் லாவண்யாவின் தோளைச் சுற்றி கையைப் போட்டு ஹாலுக்கு அழைத்து வந்தான். தாழ்ந்த குரலில் சொன்னான். "பயப்படாதே! நான்தான் இருக்கேனே. போய் கதவைத் திற. இல்லாவிட்டால் அவர் செய்யும் ரகளைக்கு அக்கம்பக்கத்தார் கூட்டம் கூடிவிட்டால் ரொம்ப ஆபத்து" என்று சொல்லி ஹால் விளக்கைப் போட்டான்

லாவண்யா நடுங்கிக் கொண்டிருக்கும் கால்களுடன், மிரளும் கண்களுடன் கதவு அருகில் சென்று, பின்னால் திரும்பிப் பார்த்தாள். சந்திரன் கதவைத் திற என்று சாடை காட்டிவிட்டு, இரும்புப் பெட்டி இருந்த அறைக்குள் சென்று, அங்கிருந்த விளக்கை அணைத்துவிட்டான்.

எப்படியோ ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு லாவண்யா கதவைத் திறந்தாள். கதவுக்கு வெளிப் பக்கம், மூச்சு இரைக்க நின்றிருந்தார் வேணுகோபாலன். தந்தையும், மகளும் ஒரு கணம் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டார்கள்.

"உள்ளே என்ன செய்துகிட்டு இருந்தே?" என்று பற்களைக் கடித்துக்கொண்டே கேட்டார்.

"தூ... தூங்கிக்கிட்டு இருந்தேன்."

அவர் மகளைக் கவனமாய் பார்த்தார். அவளிடம் தூங்கி எழுந்த லட்சணம் எதுவும் தென்படவில்லை.

"சீ...சீ... பொய்யும்...புளுகும் சொல்ல வெட்கமாய்



இல்லை உனக்கு?" உள்ளே வந்தார் அவர்.

ஹாலை கண்களால் சுழற்றிப் பார்த்த அவரது பார்வை நடுவில் இருந்த டீபாயின்மீது நிலைத்தன. அதன்மீது சந்திரனின் நோட் இருந்தது. அதைப் பார்த்ததும் லாவண்யாவின் உயிரே போனாற்போலாயிற்று. வேணுகோபாலனுக்கு ரத்தக் கொதிப்பு அதிகரித்தது.

"யாரு இருக்காங்க உள்ளே? உண்மையைச் சொல்லு." மகளின் கையைப் பற்றினார்.

லாவண்யா கையை விடுவித்துக் கொண்டாள். அவளுக்குத் துணிச்சல் வந்துவிட்டது. "யாரும் இல்லை! வேணும்னா போய்ப் பார்த்துக் கொள்ளுங்க" என்று அலட்சியமாய் மொழிந்தாள்.

வேணுகோபாலன் தன் அறைப்பக்கம் வந்தார். அவருக்கு தன் நிலைமை புரிந்துவிட்டது. நெஞ்சுவலி வரும் போல் இருந்தது. உடனே மாத்திரையைப் போட்டுக் கொள்ளணும்...அறைக்குள் நுழைந்து சுவிச்சைப் போட்டவர், ஒருகணம் திடுக்கிட்டாற்போல் அப்படியே நின்றுவிட்டார்.

கதவுக்குப் பின்னால், சுவரோடு சுவராய் ஒட்டி நின்ற சந்திரன், ஏற்கனவே அவிழ்த்து, கையில் தயாராய் வைத்திருந்த டையை எடுத்து அவர் கண்களை மறைக்கும் விதமாய் வீசி, ஒரே எட்டில் அவர் அருகில் வந்தான்.

"என்னது? யாரு?" அவர் வீலென்று அலறினார். கண்களை மறைத்த துணியைப் பிடுங்கி எறிய இரு கைகளையும் உயர்த்தினார்.

அவர் பின்னால் நின்றிருந்த சந்திரன், வலது கையால் டையை இறுக்கிப் பிடித்து, இடது கையால் அவருடைய இரு கரங்களையும் மேலே எழும்பவிடாமல், அவருடைய நெஞ்சின் மீது அழுத்திப் பிடித்தான் ஒரு நிமிடம் போல் இருவருக்குமிடையே இழுபறி நடந்தது. இளைஞனும், பலசாலிமான் சந்திரனுக்கு, ஏற்கெனவே நலிவுற்றிருந்த அவரைச்

சிறைப்படுத்த ரொம்ப நேரம் ஆகவில்லை. சந்திரன் லாவண்யாவை ஜாடை காட்டி அருகில் வரச் செய்தான். வேணுகோபாலன் கண்களுக்குக் கட்டியிருந்த டையை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் சொல்லி ஜாடை செய்தான். லாவண்யா டையை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள். சந்திரன் மறு கையைப் பேண்ட் ஜேபியில் விட்டு கைக்குட்டையை எடுத்து, வேணுகோபாலனின் கைகளைப் பின்னால் பிணைத்து முடிச்சுப் போட்டான்.

"யாரு அது... விடு... என்னை" வலையில் சிக்கிக் கொண்ட மிருகம்போல் வேணுகோபாலன் வேகமாய்க் கூவினார்.

"நீ இப்படியே பிடித்துக் கொள்... நான் வாசற்கதவைச் சாத்திவிட்டு வந்திடறேன்." சந்திரன் வெளியே ஓடினான்.

லாவண்யா எத்தனை அழுத்தமாக பிடித்துக் கொண்டாலும், அவர் கழுத்தை அப்படியும் இப்படியும் அசைத்ததில், டை சற்றுத் தளர்ந்து கீழே நழுவியது.

எதிர்பாராத இந்த ரகளையில் ஏற்கெனவே அரண்டு போய்விட்ட லாவண்யா, நழுவிவிட்ட டையை எப்படியோ மறுபடியும் கையால் பற்றிக்கொண்டு, பலத்தை முழுவது மாகப் பயன்படுத்தி அழுத்தமாக முடிச்சு போட்டுவிட்டாள்.

சந்திரனின் வருகைக்காகப் பின்னால் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டிருந்த லாவண்யாவுக்கு, தான் பற்றி இருந்த டையானது, வேணுகோபாலனின் கழுத்துக்கு நழுவி விட்டதையோ, அவர் சுவாசிக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பதையோ கவனிக்கவில்லை.

வாசற்கதவைச் சாத்திவிட்டு வந்த சந்திரன் ஒரு நிமிடம் அங்கேயே நின்றுகொண்டு நன்றாக மூச்சை இழுத்துக் கொண்டான். தொண்டை உலர்ந்துபோய், தாகமெடுத்தது, தண்ணீருக்காக உள்ளே போனான். உணவு மேஜைமீது வாட்டர் ஜெக் தென்பட்டது. ஒரே மூச்சில் அதில் இருந்த தண்ணீரைக் கடகடவென்று குடித்த பிறகுதான அவனுக்கு உயிர் வந்தாற்போல் இருந்தது.



அவனுக்கு இப்போ புரிந்தது. இதனால்தான் மாலையில் இருந்து தன் மனம் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தது. லாவண்யா நின்றிருந்த அறைக்குள் வந்தான்.

லாவண்யா இன்னும் டையைப் பிடித்துக் கொண்டுதான் இருந்தாள். ஆனால் வேணுகோபாலன் நின்ற வாக்கில் இல்லாமல் கட்டிலுக்கு அருகில், தரையில் சரிந்த நிலையில் இருந்தார். தலை முன்பக்கமாய்ச் சாய்ந்துவிட்டது.

சந்திரன் ஒரே எட்டில் உள்ளே வந்தான். லாவண்யாவின் தோளைப் பற்றி வேகமாய் இழுத்து, நகர்த்தியவன் "என்ன இது? கழுத்தில் ஏன் முடிச்சுப் போட்டாய்?" என்றான்.

லாவண்யா அப்பொழுதுதான் கவனித்தாள். தான் போட்ட முடிச்சு அவர் கழுத்தில் விழுந்திருந்தது.

சந்திரன் முழங்காலிட்டு உட்கார்ந்து விறுவிறுவென்று அவிழ்க்கப் போனான். பிணி முடிச்சு விழுந்துவிட்டதால் உடனடியாய் முடிச்சை அவிழ்க்க முடியவில்லை. எப்படியோ முடிச்சைத் தளர்த்தி, அவருடைய தோளைச் சுற்றி கைப் போட்டு பிடித்துக்கொண்டு முகத்தைஉயர்த்திப் பார்த்தான். அவனுக்கு முதுகுத்தண்டில் சில்லிட்டது. வேணுகோபாலன் முகம் நீலமாய் மாறி, கண்கள் வெளியே வந்து விகாரமாக தென்பட்டது.

சந்திரன் சட்டென்று அவர் கையைப்பற்றி நாடித் துடிப்பை பரிசோதித்தான். உடலை உலுக்கி, அசைத்துப் பார்த்தான் பலன் இல்லை. வாடிபோன, கீரைத் தண்டு போல் அவருடைய உடல் சரிந்துவிட்டது.

சந்திரன் கற்சிலையாய் சமைந்து விட்டான் "லாவண்யா..." என்று பைத்தியம் பிடித்தவன்போல் கத்தி விட்டான்.

லாவண்யா தந்தையின் பக்கம் கண்கள் அகல, விநோதமாகப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"நீ... நீ என்ன காரியம் செய்துவிட்டாய் தெரியுமா?"

"தெரியும்! என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டேன்." அலட்சியமாய்ச் சொன்னாள். அவள் கண்களில் துவேஷமும், பகை உணர்ச்சியும் தென்பட்டன.

சந்திரனுக்கு உடல் முழுவதும் வியர்த்தது. வேணுகோபாலனின் உடலை கட்டிலில் சாய்த்துவிட்டு, மெதுவாய் எழுந்து நின்றுகொண்டான். அவன் முகம் ரத்தம் வற்றி விட்டாற்போல் வெளிறிப் போய்த் தென்பட்டது.

"நீ...நீ... அவரைக் கொலை செய்துவிட்டாய்."

"ஜேம்ஸ்?"

"அவர்...அவர் உன்னோட தந்தை" வார்த்தைகளுக் காகத் தடுமாறுவதுபோல் சொன்னான்.

"அவர் ஒருநாளும் என்னை மகளாய் எண்ணிய தில்லை."

சந்திரன் தலையைத் திருப்பி வேணுகோபாலனின் உடலைப் பார்த்தான். அவன் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவதுபோல் இருந்தது. இதுவரை எத்தனையோ திருட்டு செய்திருந்தாலும், இதுவரை கொலையைக் கண்ணால் பார்த்ததில்லை லாவண்யா இவரைக் கொலை செய்து விட்டாள். இதில் தனக்கும் பங்கு இருக்கு; அவன் உடல் நடுங்கிற்று.

லாவண்யா தந்தையின்,பக்கமே பார்த்துக் கொண்டிருந் தாள். நடந்தது என்னவென்று அவளுடைய மூளைக்கு இப்பொழுதுதான் எட்டியது. பயந்து போனவளாய்ச் சந்திரன் பக்கம் நகர்ந்தாள். அவன் கையைப் பற்றிக் கொண்டே, "ஜேம்ஸ்! அவர் உண்மையாகவே இறந்து போய் விட்டாரா?" நம்பமுடியாதவள் போல் கேட்டாள்.

சந்திரன், 'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தான்

"நான் ஒன்றும் செய்யவில்லை! டை கீழே நழுவி விட்டதால் இறுக்கப் பிடித்துக் கொண்டேன்; அவ்வளவு தான்!" தனக்குத்தானே சொல்லிக் கொள்வது போல கூறினாள்.



"அதுதான் அவருடைய உயிரை எடுத்து விட்டது."

"ஜேம்ஸ்" பைத்தியம் பிடித்தவன்போல் பார்த்தான். லாவண்யாவுக்குத் தான் செய்த காரியம் புரிந்ததும், சட்டென்று ஜேம்ஸின் நெஞ்சில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். "ஜேம்ஸ்... எனக்கு பயமாயிருக்கு... இப்போ என்ன செய்யலாம்?" புயலில் சிக்கிய இளம் தளிராய் நடுங்கினாள்.

சந்திரன் பதில் சொல்லவில்லை; அவன் மூளை மரத்துப் போனாற் போலிருந்தது

"ஜேம்ஸ்... எனக்குப் பயமாயிருக்கு. என்னை எங்கே யாவது அழைத்துக்கொண்டு போய்விடு..." அழுகையினூடே சொன்னாள்.

"எங்கே சென்றாலும் போலீஸ் நம்மைத் தேடிக் கண்டு பிடிச்சுடுவாங்க லாவண்யா..."

"ஜேம்ஸ்! என்னை எப்படியாவது காப்பாற்று. போலீசுக்குத் தெரிந்து போய்விட்டால் அவ்வளவுதான்! என்னைத் தூக்கில் போட்டு விடுவாங்க. கடவுளே... இந்தப் பயத்திலேயே என் உயிர் போய்விடும் போலிருக்கு. ஜேம்ஸ், என்னை எங்கேயாவது அழைத்துகிட்டுப் போய்விடு..." லாவண்யா தரையில் சரிந்து, அவனின் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு ஹிஸ்டீரியா வந்தவள் போல் விக்கி விக்கி அழத் தொடங்கினாள்.

சந்திரன் பேச்சிழந்தவன்போல், லாவண்யா பக்கமே பார்த்துக் கொண்டிருந்தான்.

## 70

கிட்டத்தட்ட அரைமணி நேரம் கழிந்தது.

இதயத்தில் ஏற்பட்ட புயலைச் சமாளிக்க, சந்திரன் என்றைக்குமில்லாத அளவுக்குச் சக்தியைத் திரட்டிக்

கொண்டான். அந்த வீட்டில் மயான அமைதி நிலவியது.

அந்த வீட்டில் திடீரென்று நுழைந்துவிட்ட மரண தேவதை, அவனுடைய செயல்களைக் கவனித்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு சந்திரனின் இதயத்தை நடுங்க வைத்துக் கொண்டிருந்தது.

அழுது கொண்டிருந்த லாவண்யாவை வலுக்கட்டாயமாய் எழுப்பி டைனிங்டேபிள் அருகே நாற்காலியில் உட்கார வைத்தான். லாவண்யா இன்னும் அழுது கொண்டுதானிருந்தாள்.

"வீட்டில் ஏதாவது பெட்டி காலியாய் இருக்கா?" என்று கம்மிவிட்ட குரலில் கேட்டான் சந்திரன்.

"என் அறையில் பீரோவின் மேலிருக்கு." அழுது கொண்டே பதிலளித்தாள். அவன் என்ன கேட்டானோ, தான் என்ன பதில் சொன்னோமோ, லாவண்யாவுக்கு சுய உணர்வேயில்லை.

தந்தை தன் கையால் இறந்து போய் விட்டாரென்ற பயங்கரமான உண்மை, லாவண்யாவின் கண்கள் முன் பூதாகாரமாய்த் தென்பட்டது. இந்தக் கொடுமை எங்கேயாவது நடந்திருக்குமா? லாவண்யாவுக்கு உடலும், உள்ளமும் பதறத் தொடங்கின.

சந்திரன் லாவண்யாவின் அறைக்குள் சென்றான். பீரோ மேல் லெதர் சூட்கேஸ் காலியாய்த் தென்பட்டது. அதை எடுத்துக்கொண்டு வேணுகோபாலனின் அறைக்கு வந்தான்.

இரும்புப் பெட்டி அருகே சென்று நகைகளிருந்த அறையைத் திறந்தான். பளபளவென்று மின்னிய பொன் நகைகள் ஒருகணம் அவன் கண்களுக்குத் தன்னைக் கொத்த வந்த பாம்புகள்போல் தென்பட்டன. அவன் இங்கே வந்த உத்தேசம் வேறு. நடந்தது வேறு. சந்திரன் தயக்கத்தை உதறிவிட்டு, நகைகளை எடுத்துப் பெட்டியில் வைத்து மூடி விட்டான்.

கட்டில் மேே இருந்த காகிதங்களை, தஸ்தாவேஜுகளை



அறை முழுவதும் பரப்பினான். இரும்புப் பெட்டியின் கதவை அகலமாய் திறந்து வைத்தான். ஐந்து நிமிடங்களில் இந்த வேலையை முடித்து விட்டவன், அறை வாசலில் நின்று அறையைப் பார்வையிட்டான்.

அறை முழுவதும் களேபரமாய் தென்பட்டது. பார்த்ததும் திருட்டு நடந்திருப்பதுபோல் தெரியும். அருகில் போனாலொழிய வேணுகோபாலன் இறந்து விட்டது தெரியாது.

சந்திரன் மறுபடியும் அறைக்குள் போனான். மேே கிடந்த தன்னுடைய டையை, கைக்குட்டையை எடுத்துக் கொண்டான். தன் விரல் அடையாளங்கள் இருக்கக்கூடும் என்று சந்தேகப்பட்ட இடங்களைக் கைக்குட்டையா- துடைத்தான். ஒருக்கால் கண்டுபிடித்து விட்டாலும் தன்னைக் காப்பாற்றும் திறமை மேலிடத்துக்கு இருக்கிறது.

நகைகள் நிறைந்த சூட்கேஸை எடுத்துக்கொண்டு வெளியே வரும்முன் ஒரு நிமிடம் கட்டில் அருகில் நின்று வேணுகோபாலனின் முகத்தைப் பார்த்தான்.

அவன் வயிற்றில் ஏதோ சங்கடம் செய்தது. குரல் வளையை யாரோ இறுக்குவது போல் மூச்சுத் திணறியது. தன்னிடம் இந்த உணர்வு ஏற்படுவானேன்? அன்று ரயில் நிலையத்தில் இவரிடம் நகை திருட முயன்று பிடிப்பட்டு விட்ட போதும் நினைக்கவில்லை.

இவருடைய மகளுடன் பரிச்சயம் ஏற்பட்டு... கடைசியில் அவருடைய மரணத்துக்குத் தானும் ஒரு காரணமாக அமைந்து விடுவோமென்று... இதெல்லாம் விதியின் விபரீத விளையாட்டைத் தவிர வேறென்ன இருக்க முடியும்?

தன் வசமிழந்து, வைராக்கியத்தில் ஆழ்ந்துவிட்ட மனதை, தோளைக் குலுக்கி, சுவாதீனத்துக்குக் கொண்டு வந்தான். அறையைவிட்டு வெளியே வந்து கதவுகளை வெறுமே சாத்திவிட்டான். சிவந்துவிட்ட கண்களுடன் உணவு மேஜை அருகே நின்றிருந்த லாவண்யா சந்திரனிடம் ஓடி வந்தாள்.

"ஜேம்ஸ்! உண்மையைச் சொல்லு... என்னைப் போலீசார் பிடித்துக்கொண்டு போவார்களா? ஜேம்ஸ் கடவுள் சாட்சியாய் சொல்கிறேன். அவரைக் கண்டால் எனக்கு எரிச்சல் இருந்தது உண்மைதான். ஆனால் கொல்ல வேண்டும் என்ற அளவுக்குத் துவேஷம் என்றுமே இருந்த தில்லை... அந்த எண்ணம்கூட எனக்கு என்றுமே இருந்த தில்லை. அது ஒரு விபத்தாய் நடந்து விட்டது. பயத்தில் மூளை செயல்பட மறந்து விட்டது என்ன செய் கிறேன் என்று எனக்கே தெரியவில்லை... ஜேம்ஸ் நீயாவது என்னை நம்புகிறாய் இல்லையா?"

லாவண்யாவின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் கன்னத்தில் வழிந்தது.

சந்திரன் முகம் எந்த உணர்ச்சியுமில்லாமல் வெறுமை யாயிருந்தது. வலது கையில் சூட்கேஸைப் பிடித்துக்கொண்டு இடது கையால் லாவண்யாவின் தோளில் இதமாகத் தட்டி விட்டுச் சொன்னான்.

"லாவண்யா! அநாவசியமாய் மூளையைக் குழப்பிக் கொள்ளாதே நடந்ததென்னவோ நடந்து விட்டது. அதை மாற்ற நம்மால் முடியாது. இது விபத்து என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டாங்க. போலீஸ் உன் அருகில்கூட வராமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு என்னோடது. முதலில் நாம் இவ்விடத்தை விட்டு உடனே வெளி வெளியேறணும்..."

கையிலிருந்த பெட்டியைக் காண்பித்துக் கொண்டே சொன்னான். "இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது தெரியுமா? நகைகள்... எல்லா நகைகளையும் எடுத்துக் கொண்டு விட்டேன். நீயும் என்னோட வந்துவிடு. என் அறைக்குப் போய் நிதானமாய் யோசிப்போம். வீட்டில் திருட வந்தவர்கள் அவரைக் கொன்று விட்டதாகப் பிரமையை உண்டாக்குவோம். வா? உங்க வீட்டுக் கொல்லைப்புறம் சின்ன சந்து இருக்கில்லையா?" என்று



லாவண்யாவின் தோளைப் பற்றி அழைத்துச் சென்றான்.

வேறு சமயமாயிருந்தால் என்றுமே வீட்டுக்கு வராத வனுக்கு, வீட்டுக் கொல்லைப்புறம் சந்து இருக்கும் விஷயம் எப்படித் தெரியும் என்று வியப்பு அடைந்திருப்பாள். ஆனால் வாழ்வுக்கும் சாவுக்குமிடையே இருக்கும் இந்த நிலைமையில் லாவண்யா அந்த விஷயத்தைக் கவனிக்கவே இல்லை.

இருவரும் கொல்லைப்புற மதில் சுவருக்கு அருகில் வந்தார்கள். அந்த இடம் முழுவதும் இருள் பரவியிருந்தது. மரங்களின் நிழல்கள், அச்சூழ்நிலையை மேலும் பயங்கர மான உணர்வை ஏற்படுத்தின. மதில் சுவர் அருகில் வந்த சந்திரன், திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவன்போல் நின்று விட்டான்.

"லாவண்யா இரு... நீ இங்கேயே நில்லு. நான் உடனே வந்திடறேன். முன் ஹாலில் லைட்டைப் போட்டுவிட்டு, வாசற்கதவைத் திறந்து வைத்துவிட்டு வருகிறேன். நாம் போனபிறகு யார் இந்த வீட்டில் காலடி எடுத்து வைக்கப் போறாங்களோ, அவர்களுக்காகச் சாவு காத்திருக்கும்..." என்று பெட்டியை லாவண்யாவிடம் கொடுத்துவிட்டு, பதிலுக்குக் காத்திராமல் ஓட்டம் போன்ற நடையுடன் சென்று விட்டான் சந்திரன்.

லாவண்யா கற்சிலையாய் நின்றுவிட்டாள். இந்தச் சூழ்நிலையில் அவனுடன் இப்படி ஓடிப் போவதே நல்லதாய்ப்பட்டது. தந்தையின் நினைவு வந்ததும் அவள் மேனி நடுக்கமுற்றது. சந்திரன் திரும்பி வந்ததும், லாவண்யா அவனிடம் சூட்கேஸைக் கொடுத்துவிட்டு, "ஜேம்ஸ்... ஒரு நிமிஷம் இரு... என் அறையில் பீரோவில் நகைகள் சிலது இருக்கு... அவற்றைக் கொண்டு வர்றேன்..." என்றாள்.

"சீக்கிரம் வந்துடணும்" என்று எச்சரித்தான்.

"இதோ வந்து விடுகிறேன்" லாவண்யா போகப் போனாள்.

"நான் முன்னாடி போய் தெருமுனையில் எனக்காக வெயிட் செய்து கொண்டிருக்கும் டாக்ஸியைப் பின்பக்க சந்து முனையில் நிறுத்தச் சொல்கிறேன். முடிந்தால் கறுப்புப் புடவையை மாற்றிக் கொண்டு வா... சட்டுன்னு வந்துடணும்."

லாவண்யா தலை அசைத்தாள். சுவர் ஏறி குதிக்கும்முன் சந்திரன் கேட்டான். "நான் போனதும் மறுபடியும் அழுது கிட்டு உட்கார மாட்டாயே... நீ வரத் தாமதமானால், நான் திரும்பி வரணும்."

"ஊஹூம்! தேவை இல்லை... நானே வந்து விடுவேன்" என்று சற்று தேறிக் கொண்டவளாய்ச் சொன்னாள் லாவண்யா.

சந்திரன் சுற்றிலும் ஒருமுறை கவனித்துவிட்டு, மறு பக்கம் சத்தம் எழாமல் குதித்தான். அடர்த்தியாகப் பரவி யிருந்த இருளில் மறைந்து விட்டான்.

ஃ ஃ ஃ

இந்தச் சாந்திபுரம் இருந்த இடம் முன்பு பெரிய தோட்டமாய் இருந்தது. அதனுடைய சொந்தக்காரியான ஒரு முஸ்லிம் மாது, தன் தாய்நாடான பாகிஸ்தானுக்குக் குடி பெயர முடிவு செய்து இந்த இடத்தை விற்கப் போனாள். தோட்டமாக விற்பதைவிட, வீட்டு மனைகளாகப் பிரித்து விற்றால் அதிக லாபம் வருமென்று அவளுடைய லாயர் அறிவுரை வழங்கினார். தோட்டத்தை வீட்டு மனைகளாக்கி விற்கப் போவதை அறிந்து, அந்த இடத்தில் குடிசை போட்டுக்கொண்டு வாழும் தோட்டத்தில் வேலை செய்யும் பணியாளர்கள், அந்த அம்மாளிடம் போய்த் தங்களுக்குத் தங்க இடம் இல்லாமல் செய்ய வேண்டாமென்று வேண்டினார்கள்.

கருணை உள்ளம் படைத்த அந்த மாது, அவர்களுக்காகக் கொஞ்சம் நிலத்தை ஒதுக்கிவிட்டு, மற்ற இடத்தை விற்று விட்டாள். அதன் பிறகு அந்த இடத்தில் நிறைய



பங்களாக்கள் கட்டப்பட்ட போதிலும், அந்தக் குடிசைப் பகுதிகள் மட்டும் அப்படியே இருந்தன. தற்போது அங்கு வசித்து வந்தவர்கள், நாட்கணக்கில் கூலி வேலைக்காக வெளியூர்களுக்குச் சென்று வருவார்கள். சமீப காலமாய் அந்தக் குடிசைப் பகுதியில் யாரும் இல்லை.

சந்திரன் அந்தக் குடிசைகளுக்கிடையே புகுந்து மெயின் ரோடுக்கு வந்தான். அங்கே சிங் டாக்ஸியுடன் காத்திருந் தான்.

"டாக்ஸி" என்று குரல் கொடுத்தான். டாக்ஸி அருகில் வந்ததும் சந்திரன் ஏறிக் கொண்டான். சிங் உடனே காரை ஸ்டார்ட் செய்யப் போனான்.

"சிங்! நாம் பத்து நிமிஷம் காத்திருக்கணும்."

"சரி சார்..."

சிங் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கினான். பானெட்டைத் திறந்து ஏதோ பரிசீலிப்பதுபோல் செயல்பட் டான். தெருவில் போகும் யாராவது பார்த்தால், டாக்ஸி பழுதாகிவிட்டது போலவும், டிரைவர் அதைச் சரி செய்து கொண்டிருப்பது போலவும் தோன்றும்.

சந்திரன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். லாவண்யாவின் வருகைக்காகப் பொறுமையற்றுக் காத் திருக்கத் தொடங்கினான்.

லாவண்யா உள்ளே வந்து கறுப்புப் புடவை, பிளவுசை மாற்றிக் கொண்டாள். நகையெல்லாம் எடுத்துக் கொண்டு ஹேண்ட் பேக்கில் வைத்துக் கொண்டாள். கடைசி முறையாகத் தன் அறையைக் கண்களைச் சுழற்றிப் பார்த்தாள். ஒரேயடியாகத் துக்கம் பொங்கி வந்தது. தனக்கும் இந்த வீட்டுக்கும் உறவு இன்றுடன் முடிந்து விட்டது என்று நினைக்கும்போது அவளால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒருவாறு சமாளித்துக்கொண்டு விளக்கை அணைத்துவிட்டு, கதவைச் சாத்திவிட்டு வெளியே வந்தாள்.

இதற்குள் கீழேயிருந்து "ராதா" என்ற குரல்

கேட்டது.

வந்த நபர் வேறு யாரோ இல்லாமல் ரோஜாவாக இருந்துவிட்டதில் லாவண்யாவுக்குப் போன உயிர் திரும்பி வந்தாற்போல் இருந்தது. ரோஜாவாக இருந்தால் பயப்பட வேண்டியதில்லை. வேளை கெட்ட வேளையில் ரோஜா வந்தது தன் அதிருஷ்டம்தான்.

ராதைக்காக இரண்டு தடவை குரல் கொடுத்த ரோஜா, பழக்கப்பட்ட செயலாய் வேணுகோபாலனின் அறைக் கதவைத் திறந்து உள்ளே போனாள்.

லாவண்யா மாடியில் திரைச்சீலையைக் கைகளால் அழுத்தமாகப் பற்றிக் கொண்டாள். மூச்சை இழுத்துப் பிடித்து, அங்கேயே நின்றுவிட்டாள்.

இரண்டு நிமிடங்கள் கழிந்தன. "வீல்" என்று ரோஜாவின் அலறல் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு வீடு முழுவதும் எதிரொலித்தது.

அந்த அலறலைக் கேட்டதும், உயிர் பெற்ற பதுமை போல் லாவண்யா, கிடுகிடுவென்று படிஇறங்கி கொல்லைப்புறம் ஓடிப் போனாள். வேகமாய் ஓடியதில், இன்னும் நான்கு அடிகள் வைத்தால் நினைவு தப்பிவிடுமோ என்று பயந்த லாவண்யா, சற்று நின்று வேக வேகமாய் மூச்சை எடுத்துக் கொண்டாள்.

அந்த நிமிடத்தில் அவளை ஆயிரம் யோசனைகள் சூழ்ந்தன. இத்தனைப் பேர் இருக்கும்போது, இந்த நேரத்தில் ரோஜாவே வந்தது எவ்வளவு வியக்கத்தக்க விஷயம்? 'நாம் போனபிறகு இந்த வீட்டில் யார் காலடி எடுத்து வைப்பாங்களோ அவர்களுக்குச் சாவுதான்...' என்ற ஜேம்ஸின் குரல் லாவண்யாவின் காதுகளில் எதிரொலித்தன.

லாவண்யாவின் மூளை சுறுசுறுப்பாய் இயங்கத் தொடங்கியது.

'தான் எதுக்காக ஓடிப் போகணும்? ஓடிப் போவதால் கிடைக்கப் போவதென்ன? இந்த நகைகள் எத்தனை நாள் தன்னைக் காப்பாற்றும்? அதன்பிறகு எப்படி வாழ முடியும். எல்லா வசதிகளையும் இழந்து, யாருக்கும் தெரியாமல் இருட்டு உலகில் ஏன் வாழணும்? இதுக்கெல்லாம் காரணம் அந்த ரோஜாதான். அவளால்தான் தனக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. தான் ஓடிப் போய் விட்டால், சொத்து முழுவதும் ராதைக்குப் போய்விடும். ராதையின் காரியமாக அந்த மகாராணி எல்லாச் சுகங்களையும் அனுபவிப்பாள். எந்தத் தவறும் செய்யாத தான் தண்டனை அனுபவிப்பதா?'



'நடக்காது! இந்த உடலில் உயிர் இருக்கும்வரை அப்படி நடக்க விடமாட்டேன். கடவுள் தன்னை மன்னித்து விட்டார். அதனால்தான் ரோஜாவை இந்தச் சமயத்தில் அனுப்பி வைத்தார். இதில் பயப்பட ஒன்றுமேயில்லை. ஒன்றும் தெரியாதவள்போல் இப்பொழுதுதான் வெளியிலிருந்து வருபவள் போல் வருவாள். தந்தை இறந்து கிடப்பதை, அப்பொழுதுதான் பார்ப்பதுபோல் பார்ப்பாள்.

போலீசை அழைத்துத் தானே சுயமாய் ரோஜாவைப் பிடித்துக் கொடுப்பாள். போலீசார் ரோஜாவை கைது செய்யும் காட்சி லாவண்யாவின் கண்கள் முன் நிழலாடிற்று. தான் செய்த குற்றத்தை ரோஜாமீது சுமத்தும் வாய்ப்பு கிடைத்ததும், லாவண்யாவின் உடலில் புது ரத்தம் பாய்ந்தாற் போலிருந்தது. சற்று முன் அவளிடமிருந்த கோழைத்தனம் இப்போ மாயமாய் மறைந்து விட்டது.

லாவண்யா மெதுவாய் உள்ளே வந்து கொல்லைப்புறக் கதவைச் சாத்தினாள். தனக்காக ஜேம்ஸ் காத்திருப்பான் என்ற விஷயம் நினைவுக்கு வந்தது.

இருக்கட்டும், சற்று நேரம் காத்திருந்து விட்டு தானே போய் விடுவான். வெளியிலிருந்து அப்பொழுதுதான் வந்தாற்போல் லாவண்யா தந்தையின் அறை முன் நின்றாள்.

அறையில் குழப்பத்துடன், பைத்தியக்காரியைப் போல், இன்னும் உயிர் எங்கேயாவது ஒட்டிக்கொண்டு இருக்குமோ

என்ற அடிப்பில், வேணுகோபாலனின் கைகால்களை உலுக்கிக்கொண்டு மிரண்டு விட்டவளாய்ப் பார்த்துக் கொண்டிருந்த ரோஜா, காலடிச் சத்தம் கேட்டதும் தலை உயர்த்திப் பார்த்தாள்.

அறை வாசலில் லாவண்யாவைப் பார்த்ததும், "லாவண்யா அப்பா..." என்று அழுதுகொண்டே லாவண்யாவிடம் ஓடிவந்து கட்டிக் கொண்டாள்.

தன்னையறியாமல் ரோஜாவை அணைத்துக் கொண்ட லாவண்யா, உடனே சுதாரித்துக்கொண்டு, ரோஜாவை வேகமாய்த் தள்ளினாள்... கட்டிலருகில் சென்று தந்தையை பார்த்தாள். எந்த சலனமும் இல்லாமல் மரக்கட்டையாய்க் கிடந்த அவர் உடலைப் பார்த்ததும், லாவண்யாவின் முதுகுத் தண்டு சில்லிட்டது.

கீழே சிதறிக் கிடந்த தஸ்தாவேஜுகளை, திறந்து கிடந்த இரும்புப் பெட்டியை அப்பொழுதுதான் பார்த்தவள் போல் கண்களில் வியப்பைக் காட்டினாள். இரு கரங்களையும் நெஞ்சுமீது வைத்து, "ஐயோ! ஐயோ! நகைகள்... திருட்டு... கொலை..." என்றாள் உரத்தக் குரலில்.

ரோஜா லாவண்யா அருகில் ஓடி வந்தாள், "ஆமாம்! லாவண்யா... யாரோ திருட வந்திருக்காங்க... அவங்கதான் அப்பாவைக் கொலை செய்துட்டாங்க."

லாவண்யா ரோஜா எதிரில் நின்று, பார்வையாலேயே குத்திக் கிழிப்பது போல் பார்த்துவிட்டு, அவளை இறுக்கப் பிடித்துக் கொண்டாள். "நீதான் இதெல்லாம் செய்தாய்... இந்தத் திட்டத்தை மனதில் வெச்சிகிட்டுதான், எங்க வீட்டில் வேலைக்காரியாய்ச் சேர்ந்தாய்! வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து, நகைகளைத் திருடி அவரையும் கொன்றுவிட்டு மெதுவாய் நழுவப் பார்த்தாய்... உன் குட்டு வெளிப்பட்டு விட்டது, சமயத்தில் நான் வந்து விட்டேன்" என்றாள்.

எப்படியோ கஷ்டப்பட்டு லாவண்யாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.



"லாவண்யா! உனக்கு மூளை கலங்கி விட்டதா? எனக்கு ஒன்றும் தெரியாது. நான இப்பத்தான் வந்தேன். நான் வரும் போதே இப்படித்தானிருந்தது..." பயந்து விட்டவளாய் குரல் நடுங்கச் சொன்னாள் ரோஜா.

லாவண்யா எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல், ரோஜாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு இழுத்துச் சென்றாள். அவளின் பிடியிலிருந்து விடுபட ரோஜா செய்த முயற்சி பலனளிக்கவில்லை

லாவண்யா ரோஜாவைத் தந்தையின் அறையிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு வந்தாள்.

"லாவண்யா, என் பேச்சைக் கேளு... நீ தவறாய்ப் புரிஞ்சுகிட்டு இருக்கே" ரோஜா விடுபட முயன்றுகொண்டே சொன்னாள்.

ரோஜாவை கெஸ்ட்ரூமில் தள்ளி கதவை வெளி பக்கமாய் தாழ்போட்டு விட்டாள்.

"லாவண்யா கதவைத் திற..." ரோஜா கதவைப் பலமாய்த் தட்டிக்கொண்டே சொன்னாள்.

"திறக்கிறேன், போலீஸ் வந்தபிறகு..." என்று வெறுப்புடன் மொழிந்தாள் லாவண்யா.

"லாவண்யா! என்னை வெளியில் வர விடு... கடவுள் மீது ஆணையாய்ச் சொல்கிறேன்... எனக்கு ஒன்றுமே தெரியாது..."

லாவண்யா ரோஜாவின் பேச்சை பொருட்படுத்தவில்லை அவளை அறையில் சிறைப்படுத்திய பிறகு, நிம்மதியாய் மூச்சை விட்டுக் கொண்டாள்.

முகத்தில் அரும்பிய வியர்வையை, புடவைத் தலைப்பால் அழுத்தி துடைத்துக் கொண்டாள். மாடிக்குப் போய் பேக்கிலிருந்த தன் நகைகளைப் பழையபடி பீரோவில் வைத்துவிட்டாள், மளமளவென்று கீழே வந்தவள், நடுங்கும் கரங்களால் வக்கீல் வீட்டுக்குப் போன் செய்தாள்.

"ஹலோ..." மறுமுனையில் சரஸ்வதியின் குரல் கேட்டது.

"ஆன்ட்டி..." அழுது கொண்டே கூப்பிட்டாள் லாவண்யா.

"என்ன லாவண்யா... அப்பா வரப் போவதாகச் சொன்னாயே? வரவேயில்லையே?"

"ஆமாம் ஆன்ட்டி! உங்க வீட்டுக்குப் போவதற்குக் கிளம்பியவர், ஏனோ மனதை மாற்றிக் கொண்டு வீட்டிலேயே இருந்து விட்டார். நான் பார்க்குக்குப் போனேன். ஆன்ட்டி... நான் திரும்பி வருவதற்குள்..." லாவண்யா ஓவென்று கதறினாள்.

"என்னம்மா... என்ன விஷயம்? என்ன நடந்தது?" என பதட்டத்துடன் கேட்டாள் சரஸ்வதி.

"ஆன்ட்டி... அப்பாவை..." அவள் அழுகையைத் தொடர்ந்தாள்.

"அப்பாவுக்கு என்ன? என்ன நடந்தது... உன்னை ஏதாவது சொன்னாரா?"

"இல்லை..."

"அவருக்கு மறுபடியும் நெஞ்சு வலி வந்துடுத்தா?"

"இல்லை ஆன்ட்டி... அவர்... அவர்... இறந்து விட்டார்..."

"ஆ! என்ன? அடக்கடவுளே! இரு... ஒரு நிமிஷம்... உங்க அங்கிளைக் கூப்பிடுகிறேன்" என்றாள் சரஸ்வதி.

"என்னங்க நம்ம தலையில் இடி விழுந்துடுத்து. சட்டுன்னு இங்கே வாங்க" என்று அவள் கத்துவது கேட்டது.

ஐந்து வினாடிகள் பொறுத்து, "என்னமோ லாவண்யா! உண்மைதானா?" வக்கீலின் குரல் பதட்டமாய் ஒலித்தது.

"ஆமாம் அங்கிள்! நான் பார்க்கிலிருந்து வரும்போது வீட்டில் ரோஜா மட்டும்தான் இருந்தாள். ராதை, டிரைவர்



யாருமே இல்லை. இரும்புப் பெட்டி திறந்து இருக்கு... பணம் நகைகள் எதுவுமில்லை அப்பா கட்டில்மீது பிணமாய்க் கிடக்கிறார்."

"என்னது?"

லாவண்யா விக்கலுக்கிடையே சொன்னாள், "அங்கிள்... இதெல்லாம் ஏதோ கெட்ட கனவுபோல் தோணுது. நீங்களும் ஆன்ட்டியும் சீக்கிரம் இங்கே வாங்க. எனக்கு ரொம்பப் பயமாய், பதட்டமாய் இருக்கு."

"இதோ பத்தாவது நிமிஷம் அங்கே வந்துவிடுவோம்..." போனை வைக்கும்முன் வக்கீல் கேட்டார். "லாவண்யா! வேறு யாருக்காவது போன் செய்தாயா?"

"இல்லை, உங்களுக்கு மட்டும்தான் செய்தேன். முதலில் நீங்கதான் என் நினைவுக்கு வந்தீங்க."

"நல்ல காரியம் செய்தாய்... நாங்க இதோ வந்திடறோம். நாங்க வரும்வரை அங்கே எதையும் தொடாமல் இரு."

லாவண்யா அறையை விட்டு வெளியே வந்தாள். ரோஜா இருந்த அறையிலிருந்து எந்தச் சத்தமும் வரவில்லை. வக்கீலும், அவர் மனைவியும் வந்தபிறகு அவர்களிடம் எதை, எப்படிச் சொல்லவேண்டும் என்று ஒருமுறை நினைவு படுத்திக் கொண்டாள். பதினைந்து நிமிடங்கள், பதினைந்து யுகங்களாய்க் கழிந்தன. லாவண்யா வாசற்கதவைத் திறந்து வைத்துவிட்டு மாடிக்குப்போய், பால்கனியிலிருந்து வக்கீல் தம்பதிகளுக்காகக் காத்திருந்தாள்.

இரண்டு கார்கள் வீட்டைத் தாண்டிப் போய்விட்டன. லாவண்யாவுக்கு இந்த எதிர்பார்ப்பு ரொம்ப பயங்கரமான உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மூன்றாவதாய் வந்த கார் வீட்டின்முன் வந்து மெதுவாய் திரும்பி, கேட்டுக்கு உள்ளே வந்தது. லாவண்யாவுக்கு உயிர் வந்தாற் போலாயிற்று.

மின்னல் வேகத்தில் கீழே வந்து கதவைத் திறந்தாள்.

வக்கீல் மாதவராவ். அவர் மனைவியின் சரஸ்வதியின் முகங்களில் அதிர்ச்சியும், சோகமும் தென்பட்டன.

சரஸ்வதியைப் பார்த்ததும் லாவண்யா, "ஆன்ட்டி" என்று கட்டிக்கொண்டு, நினைவிழந்து விட்டவள்போல் தொய்ந்து விழுந்தாள்.

"ஐயோ! நினைவு இழந்துவிட்டாள்போல இருக்கு..." பதட்டத்துடன் சொன்னாள் சரஸ்வதி. இருவரும் சேர்ந்து லாவண்யாவைச் சோபாவில் படுக்க வைத்தார்கள். சரஸ்வதி, லாவண்யாவின் தலையைத் தன் மடியில் வைத்துக் கொண்டாள். மாதவராவ், வேணுகோபாலன் அறைக்குள் போய் பார்த்துவிட்டு வந்தார்.

"லாவண்யா சொன்னது நிஜந்தானா?" என்று கேட்டாள் சரஸ்வதி.

ஆமாம் என்பதுபோல் தலையசைத்தார். அவர் முகம் வெளிறிப் போய் காணப்பட்டது. கண்களில் நீர் குளமாய்த் தேங்கியது. இருவரும் வெகுநாளைய நண்பர்கள்.

"ஐயோ! ஐயோ! இதென்ன அக்கிரமம்? இந்தக் கொடுமை எங்கேயாவது கேட்டிருக்கோமா?" சரஸ்வதி மார்பில் கையால் அடித்துக் கொண்டாள்.

லாவண்யாவின் முகத்தில் தண்ணீர் தெளிக்க, அப்பொழுதுதான் விழிப்பு வந்தவள்போல் லாவண்யா கண்களைத் திறந்தாள். பயந்து போனாற்போல் அவள் கண் இமைகள் படபடத்தன.

"லாவண்யா! என் கண்ணே! உனக்கு எவ்வளவு கஷ்டம் வந்துடுத்து. இப்படிப்பட்ட கொடுமையை எங்கேயும்பார்த்த தில்லை" சரஸ்வதி உண்மையான சோகத்துடன் லாவண்யாவை அணைத்துக் கொண்டாள்.

லாவண்யா பலவீனமான குரலில் மெதுவாய்ச் சொன்னாள்.

"அங்கிள், அப்பா முதலில் உங்க வீட்டுக்குத்தான் கிளம்பினார். பிறகு ஏனோ மனதை மாற்றிக் கொண்டார். இந்த



விஷயத்தை ஆன்ட்டிக்குப் போன் செய்ய நினைத்தேன். ஆனால், அப்பா இருந்ததால் சாத்தியப்படவில்லை. வீட்டில் இருப்பது போர் அடிக்கவே பார்க்குக்குப் போகலாமென்று கிளம்பினேன். கார் விஷயத்தில் எனக்கும் அப்பாவுக்கும் தகராறு ஆனதிலிருந்து, நான் காரைப் பயன்படுத்துவதில்லை. ஆட்டோ ரிக்ஷாவில் பார்க்கு பக்கம் போய்க் கொண்டிருந்தபோது, ஒரு நண்பனைச் சந்தித்தேன். அவனுடைய காரில் அவன் ரூமுக்குப் போனேன். பேசிக்கொண்டு இருந்ததில் பொழுது போனதே தெரியவில்லை. அவன் என்னை வீட்டுக்கு வெளியில் இறக்கிவிட்டுப் போய் விட்டான். உள்ளே வரவில்லை, ஏன் என்றால் அப்பாவுக்கு அவனைக் கண்டால் பிடிக்காது. நான் அவனுடன் பேசினாலே என்னைக் கொன்றுவிடுவதாகச் சொல்லியிருந்தார். நான் மெதுவாய் உள்ளே வந்தேன். விளக்கு போடப் பட்டிருந்தது. வாசற்கதவைத் தள்ளிப் பார்த்தேன். திறக்க வில்லை. கொல்லைப்புறம் போய்ப் பார்த்தேன். அந்தக் கதவு திறந்திருந்தது. எனக்குச் சந்தேகமாகவும், பயமாகவும் இருந்தது. மெதுவாய் உள்ளே போனேன். ரோஜா அப்பாவுடைய அறையிலிருந்து வெளியே வந்தாள். பதட்ட மாய், கலவரப்பட்டவள்போல் தென்பட்டாள். பேரைச் சொல்லி அழைத்தேன். என்னைப் பார்த்ததும் நடுங்கி விட்டாள். எல்லாக் கதவுகளும் ஏன் சாத்தியிருக்கு என்று கேட்டதற்குப் பதில் சொல்லாமல் தடுமாறினாள்.

அவளுடைய போக்கைக் கவனித்தபோது எனக்குச் சந்தேகம் வந்தது. ஏதாவது திருடி இருப்பாளோன்னு நினைத்தேனே தவிர, இந்த மாதிரிக் கொலை செய்திருப்பாள் என்று நினைக்கவே இல்லை."

லாவண்யா இரு கரங்களில் முகத்தை மூடி அழத் துவங்கினாள். அவளுக்கு எதிரே சோபாவில் உட்கார்ந்திருந்த மாதவராவ், லாவண்யா சொல்வதை ரொம்பக் கவனமாய் கேட்டுக் கொண்டிருந்தார்.

"பிறகு என்ன நடந்தது?" என்று கேட்டார்.

"பிறகு...பிறகு நான் ரோஜாவின் கையை அழுத்த

மாய்ப் பிடித்துக் கொண்டேன். எதுக்கு இப்படி திருடியைப் போல் முழிக்கிறாய் என்று கேட்டதற்கு, அவள் பதில் சொல்லவில்லை. என் கையை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தாள், நான் விடவில்லை. அப்படியே அப்பாவின் அறைக்கு இழுத்துக்கிட்டு வந்தேன். அவரிடம் அசல் விஷயம் என்னவென்று கேட்க நினைத்தேன். அறையில் நுழைந்ததும் எனக்கு மூளை குழம்பிவிட்டது. இரும்புப் பெட்டி திறந்து இருந்தது. தஸ்தாவேஜுகள் கீழே சிதறிக் கிடந்தன. அப்பா கட்டிலில் படுத்திருந்தார். இத்தனை நடந்திருக்கும்போது, அவரால் எப்படித் தூங்க முடிந்தது என்று ஆச்சரியப் பட்டேன். அருகில் போய்ப் பார்த்தால் என் இதயமே ஒரு கணம் நின்றுவிட்டது. இதற்குள் ரோஜா என் கையை விடுவித்துக் கொண்டு வெளியே ஓடினாள். நான் அவளைப் பின் தொடர்ந்து ஓடிப் பிடித்துவிட்டேன். எப்படியோ அந்த அறையில் அவளைத் தள்ளிவிட்டுக் கதவை வெளியில் தாழ் போட்டு விட்டேன். நகைகள் திருடு போனது. அப்பா இறந்துவிட்டது, இதெல்லாம் எனக்கு ஏதோ கெட்ட கனவுபோல் இருக்கு'' என்று 'ஓ'வென்று கதறினாள் லாவண்யா.

''என்ன? இப்போ அந்தப் பெண் அந்த அறையில் இருக்காளா?'' சரஸ்வதி வியப்புடன் அந்த அறைப் பக்கமே பார்த்தாள்.

''ஒரு சத்தமும் காணுமே?'' என்று வக்கீல் எழுந்து அந்த அறையை நோக்கிப் போனார்.

''நில்லுங்க! கதவைத் திறந்து விடாதீங்க. அவள் கையில் கத்தியிருக்கோ, பிஸ்டல் இருக்கோ? யாருக்குத் தெரியும்?'' என்று சரஸ்வதி பதட்டத்துடன் சொன்னாள்.

அவர் அங்கேயே நின்றுவிட்டார். மனைவி சொன்னதை ஏற்பதுபோல் தலை அசைத்துவிட்டுத் திரும்பி வந்தார்.

''இப்போ என்ன செய்யலாம்?'' கணவனைப் பார்த்து கேட்டாள் சரஸ்வதி.

''செய்யறதுக்கு என்ன இருக்கு... போலீசுக்குப் போன்



செய்யணும்... அவங்க வந்ததும் நடந்ததை அப்படியே சொல்லணும்.''

''போலீஸ்'' என்ற வார்த்தையைக் கேட்டதும் லாவண்யாவின் முகம் வெளிறிப் போய்விட்டது. போலீஸார் வந்தால் ஆயிரம் கேள்விகள் கேட்டு உயிரை எடுத்துவிடுவார்கள். மூளையைக் கலங்க அடிப்பார்கள்.''

மாதவராவ் போன் பக்கம் போகப் போனவர் நின்று, லாவண்யாவைப் பார்த்து, ''லாவண்யா! நீ சொன்னது எல்லாம் உண்மைதானே! மறுபடியும் இதில் ஏதாவது பொய் இருப்பதாக நிரூபிக்கப்பட்டால், நாமெல்லாம் மாட்டிக் கொள்வோம்...''

''எல்லாம் உண்மைதான் சொன்னேன்! ஆனால்...''

''ஆனால்...'' லாவண்யாவின் அருகில் வந்தார் மாதவராவ்.

தீனமாய் அவரைப் பார்த்தாள் லாவண்யா ''அங்கிள்... நீங்க என் தந்தை போன்றவர். இந்த நேரத்தில் நான் பொய் சொல்வது சரி இல்லை. நண்பனைச் சந்தித்தேன் என்று சொன்னேனே? அவனைப் பற்றி வெளியில் சொல்ல முடியாது. நாங்கள் இருவரும் சந்தித்துக் கொண்டோம் என்று தெரிந்தால் அவன் மனைவி ரொம்ப ரகளை செய்வாள். அவளுடைய அண்ணன் ரொம்ப பொல்லாதவன். சாட்சிக்காக என் நண்பனிடம் போனால், நான் அவனுடன் இருந்ததை மறுத்துவிடுவானோ என்னவோ, எனக்காக குடும்பத்தை நாசமாக்கிக் கொள்ள அவன் துணிய மாட்டான்... கடவுளே! இன்னிக்குன்னு பார்த்து நான் அவனைச் சந்தித்திருக்கணுமா... எல்லாம் என் தலை எழுத்து.''

லாவண்யா சரஸ்வதியின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டாள். ''ஆண்ட்டீ... என்னை எப்படியாவது காப் பாற்றுங்க... போலீஸ் வந்தால் முன்னுக்குப் பின் ஏதாவது சொல்லிவிடுவேனோ என்னவோ... அவர்கள் என் னையே சந்தேகித்தால்...? எனக்கும் என் அப்பாவுக்கும்

இடையே மனக்கிலேசம் இருந்த விஷயம் ஊருக்கெல்லாம் தெரியும். என்மீது பழி வாங்கும்னுதான் அந்த ராட்சசி இப்படிச் செய்தாளோ என்னவோ? ஆன்ட்டீ, எனக்கு அம்மாவுக்குப் பிறகு எல்லாம் நீங்கதான்! எப்படியாவது காப்பாத்துங்க'' என்று லாவண்யா சரஸ்வதியின் மார்பில் முகம் புதைத்து அழுதாள்.

லாவண்யா சொன்னதைக் கேட்டதும் அந்தத் தம்பதி, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். லாவண்யா சொன்ன நண்பன் யாரென்று அவர்களால் ஊகிக்க முடிந்தது. டாக்டர் மனோகராகத்தான் இருக்க வேண்டும். அவனுக்கும், லாவண்யாவுக்குமிடையே நெருக்கமான நட்பு இருந்ததையும், அவன் மனைவி செய்த ரகளை பற்றி அவர்களும் அறிந்துதான் இருந்தார்கள்.

''அப்படின்னா, இந்த விஷயத்தைப் பற்றி நன்றாய் யோசிக்க வேண்டும்''

மாதவராவ் மறுபடியும் உட்கார்ந்துகொண்டு யோசித்தார். அநுபவத்தால் தலை நரைத்துப் போன அவருக்கு ஏனோ லாவண்யா சொன்ன கதை உண்மையென்று தோன்றவில்லை. எங்கேயோ ஏதோ, பொய் கலந்து இருப்பதாக மனம் உணர்த்திக் கொண்டே இருந்தது.

''லாவண்யாவுக்கு ஆபத்து வாராமல் சட்டுன்னு ஏதாவது யோசனை சொல்லுங்க'' என்றாள் சரஸ்வதி.

லாவண்யாவிடம் தன் மனைவிக்கு இருக்கும் வாஞ்சையைப் பற்றி அவர் அறியாதவரல்ல. தற்போதைக்கு லாவண்யாவின் பக்கம் இருப்பதற்கு அவர் நிச்சயித்துக் கொண்டார்...

''இதோ பாரம்மா லாவண்யா! நான் சொல்வதை மனதில் பதிய வைத்துக் கொள். நீ எந்த நண்பனையும் சந்திக்கவில்லை. உனக்குப் பொழுது போகாததால் நேராக எங்கள் வீட்டுக்கு வந்தாய். உன்னை வீடு வரைக்கொண்டு விட நாங்க இருவரும் வந்தபோது, வாசற் கதவு சாத்தி



இருந்தது. உள்ளே விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. குரல் கொடுத்தால் பதில் வரவில்லை. கொல்லைப்புறக் கதவு வழியாய் நாம் உள்ளே வந்தோம். திருடியைப் போல நழுவப் பார்த்த ரோஜாவை மூவரும் சேர்ந்து பிடித்துவிட்டோம். சரியா! யார் கேட்டாலும் இதைத்தான் சொல்லணும்...'' மனைவியையும் உத்தேசித்துச் சொன்னார்.

இருவரும் சம்மதித்து போல் தலையை அசைத்தார்கள்.

அவர் எழுந்து கொள்ளும்போது சரஸ்வதி கேட்டாள், ''முதலில் யாருக்குப் போன் செய்யப் போறீங்க?''

''வேறு யாருக்கு? நம்ப நாராயணனுக்குத்தான். இதில் ஏதோ குழப்பம் இருப்பது போல் தோன்றுகிறது'' என்றார்.

நாராயணன் சரஸ்வதியின் தங்கை மகன். டி.எஸ்.பி. யாக இருக்கிறார்.

மாதவராவ் போன் பக்கம் நகர்ந்ததும், லாவண்யா சரஸ்வதியைக் கட்டிக் கொண்டு, ''ஆன்ட்டி! இந்த உலகில் உங்களைத் தவிர வேறு யாருமில்லை. என்னைக் கைவிட்டு விடாதீங்க'' என்று அழுதாள்

''பைத்தியக்காரி! நீ அநாவசியமாய்க் கவலைப்படாதே! நான் இருக்கும்போது உனக்கு எந்த ஆபத்தும் வராது. வரவும் விடமாட்டேன்'' என்று ஆறுதல் சொல்லி சரஸ்வதி லாவண்யாவின் முதுகை ஆதரவுடன் தடவிக் கொடுத்தாள்.

க்ஷ க்ஷ க்ஷ

அடுத்த ஒருமணி நேரத்திற்குப் பிறகு போலீஸ் ஜீப்பும், ஆம்புலென்ஸும், கார்களும் அந்த வீட்டின் முன் இடம் கொள்ளாமல் நின்றன. மக்கள் கூட்டம் சேர்ந்து விட்டது. டி.எஸ்.பி. நாராயணன் எல்லா விவரங்களையும் கேட்டுக் கொண்டார். அவர் கேட்ட கேள்விகளுக்கு மாதவராவே பதில் அளித்துக் கொண்டிருந்தார்.

அந்த ஒருமணி நேரத்திற்குள் லாவண்யாவுக்கு இரண்டு தடவை ஃபிட்ஸ் வந்து விட்டது; அவளுடைய பரிதாபமான நிலைமை, பார்ப்பவர்களின் மனதை உருக வைத்தது

கொண்டிருந்தது.

கேள்விகள் எல்லாம் கேட்டு முடித்தபிறகு, நாராயணன் ரோஜாவை அடைத்து வைத்திருந்த அறைக் கதவை பிஸ்டலால் குறி பார்த்தவாறே திறந்தார். அவர் எதிர் பார்த்ததுபோல் உள்ளேயிருந்து யாரும் அம்பு போல் பாய வில்லை.

நாராயணன் கவனமாய் உள்ளே நுழைந்தார். ரோஜா ஜன்னலுக்கு வெளிப்புறம் பார்த்துக்கொண்டு நின்றிருந் தாள்.

"ஹான்ட்ஸ் அப்..." நாராயணனின் குரல் கடினமாக ஒலித்தது.

அவள் கையை உயர்த்தவில்லை; அறைக் கதவு திறப்ப தற்காகக் காத்திருந்தவள்போல் மெதுவாய் கதவை நோக்கி வந்தாள்.

"நில்லு" நாராயணன் கத்தியது அவள் காதுகளில் விழுந்ததாகவே தெரியவில்லை.

நாராயணன் சைகை செய்ததில் கான்ஸ்டபிள் ஒருவர் ரோஜாவின் கைகளில் விலங்கை மாட்டினார். அவள் எந்த விதமான எதிர்ப்பையும் காண்பிக்கவில்லை. அவர் அவள் அருகில் வந்தார்.

"நீங்க இந்த வீட்டுக்கு எத்தனை மணிக்கு வந்தீங்க, சொல்ல முடியுமா?" எனக் கேட்டார்.

"நினைவில்லை" மெதுவாய்ச் சொன்னாள் ரோஜா.

"நீங்க வரும்போது வேணுகோபாலன் என்ன செய்து கிட்டு இருந்தார்?"

"நினைவில்லை."

"நீங்க வீட்டினுள் நுழையும் போது வீட்டில் யார் யார் இருந்தாங்க?"

அவள் சற்று யோசித்தாள்; அவர் காத்திருந்தார்.

"நினைவில்லை" மறுப்பதுபோல் தலை அசைத்தாள்.



நாராயணன் ரோஜாவைக் கூர்ந்து பார்த்தார். அவளு டைய பார்வை நிலையாக இல்லை; தூக்கத்தில் நடப்பவள் போல் தென்பட்டாள்.

"இந்தப் பெண்ணுக்கு ஏதோ அதிர்ச்சி ஏற்பட்டிருக் கிறது. அவள் சுயநினைவிலேயே இல்லை" என்றார் நாராயணன்.

"ஆமா! எல்லாம் வெறும் நடிப்பு; இரண்டு அடி கொடுத் தால் எல்லாம் நினைவுகளும் வந்துவிடும்" என்றாள் சரஸ்வதி.

இந்தச் சொற்கள் ரோஜாவின் செவிகளில் விழுந்ததோ இல்லையோ தெரியாது. ஆனால் எந்தப் பிரதிபலிப்பும் அவளிடம் தெரியவில்லை. அவள் அரெஸ்ட் ஆனாள்!

அந்த அறையை நன்றாக ஆராய்ந்து பார்த்த டி.எஸ்.பி. விவரங்களைக் குறித்துக்கொண்டே மாதவராவிடம், "இந்தத் திருட்டில், கொலையில் இந்தப் பெண் மட்டுமே இல்லை; இன்னொரு நபரும் இதற்குத் துணை புரிந்திருக்க வேண்டும். அந்த நபர் ஒரு ஆண் என்று தோன்றுகிறது. அவன் யார் என்றும், அவனுக்கும் இந்தப் பெண்ணுக்கும் என்ன உறவு என்பதை முதலில் கண்டுபிடிக்கணும்" என்றார்.

# 71

மறுநாள் காலையில் இந்தச் செய்தி காட்டுத் தீயைப் போல் நகரம் முழுவதும் பரவிவிட்டது. நாளேடுகளின் முதல் பக்கத்தில் ரோஜாவின் போட்டோவும், வேணுகோபாலனின் கொலை பற்றிய விவரங்களும் பிரசுரிக்கப்பட்டன.

நகரத்தில் நடக்கும் மற்ற திருட்டுகளுக்கும் அவள்தான்

தலைமை வகித்திருப்பாளோ என்ற சந்தேகத்தைச் சில பத்திரிகைகள் வெளியிட்டன.

அந்த வீட்டில் ரோஜா வேலைக்காரியாய்ச் சேர்ந்து திட்டமிட்டு இந்தக் கொள்ளை, கொலையைச் செய்திருக்க வேண்டும் என்ற வதந்தியைச் சில பத்திரிகைகள் வெளியிட்டன

அன்றிரவே சங்கரன் வீட்டுக்குப் போலீசார் வந்தார்கள்; வீட்டை முழுவதுமாய்ச் சோதனைப் போட்டார்கள்; சந்திரனைப் பற்றியும், ரோஜாவைப் பற்றியும் விசாரித்தார்கள்.

சந்திரனைப் பற்றித் தனக்கு எதுவும் தெரியாதென்றும், அவனுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லாமல் போய் ரொம்ப நாட்களாகி விட்டதென்று சங்கரன் சொன்னதைப் போலீசார் நம்பவில்லை.

ரோஜா அரெஸ்ட் ஆனாள் என்ற செய்தியைக் கேட்டதும், சுந்தரி நெஞ்சில் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தாள்.

மனைவியை அதட்டிவிட்டு, உள்ளே தள்ளி கதவைச் சாத்தி விட்டார் சங்கரன். போலீசார் விதவிதமாய்க் கேட்கும் கேள்விகளுக்குப் பொறுமையாய் தனக்குத் தெரிந்த வரை பதில் சொன்னார்.

சுந்தரியின் அழுகையைக் கேட்டு அடுத்த வீட்டு நார்மடி பாட்டி காம்பவுண்ட் சுவர் அருகில் வந்து எட்டிப் பார்த்தாள். என்ன விஷயம் என்று தெரிந்துகொள்ள வந்த அஞ்சி, வாசலில் நின்றிருந்த போலீஸ் ஜீப்பையும், போலீசாரையும் பார்த்து பயந்து விட்டான்.

சங்கரன் வீட்டின் முன் போலீஸ் ஜீப் வந்து நின்றதை ஆர்வத்துடன் கவனித்த அக்கம்பக்கத்தார் போலீசார் சென்றபிறகு சங்கரன் வீட்டைச் சூழ்ந்து கொண்டார்கள்.

ரோஜா வேலை செய்து வந்த வீட்டு முதலாளி இறந்து விட்டதாகவும், ரோஜாதான் அவரைக் கொலை செய்தாள்



என்ற செய்தி நிமிடத்தில் அந்தத் தெரு முழுவதும் பரவி விட்டது.

"பேஷ்! பேஷ்! தம்பி எட்டடி என்றால் அக்கா பதினாறடி பாய்ந்து விட்டாள். தம்பி திருடுவதில் ஈடுபட்டால், அக்காக்காரி கொலையே செய்ய ஆரம்பித்து விட்டாள்" என்று ஒருவர் சொல்ல...

"இது போன்றவர்களை நம் தெருவில் குடியிருக்க அனுமதிக்கக் கூடாது" என்று சிலர் விமரிசனம் செய்தார்கள்.

"கால் தரிக்காமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தாள். என்றாவது ஒருநாள் நூலறுந்த காற்றாடியாய் தரையில் விழுந்துதானே ஆகணும். நன்றாக வேணும்... எவ்வளவு திமிரு?" மீனாட்சியைப் போன்றவர்கள் உள்ளூர சந்தோஷப் பட்டார்கள்.

சங்கரன் ரோஜாவைப் பார்க்கச் சென்றார், "உண்மையில் நடந்தது என்னவென்று சொல்லும்மா" என்று கெஞ்சினார்.

"எனக்கு நினைவு இல்லை. எதுவும் நினைவு இல்லை..." குழப்பமாய் பார்த்துக் கொண்டிருந்த ரோஜா, தலையை குறுக்கே அசைத்தாள்.

கிட்டத்தட்ட அரைமணி நேரம் முயற்சி செய்தும் அவரால் ரோஜாவிடமிருந்து எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை

சங்கரனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. உயிருக்கும் மேலான மருமகள் ரோஜா ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டாள் அவளைக் காப்பாற்ற அவரிடம் பணமோ, செல்வாக்கோ எதுவுமில்லை.

ரோஜா கொலையைச் செய்வதாவது? வீட்டில் எலி, கரப்பான் பூச்சிகள் தொல்லைதாங்காமல் சுந்தரி துடைப்பத்தால் அடிக்கும்போது... "மாமி அடிக்காதீங்க, பாவம்!" என்று இரக்கப்பட்டு அவற்றைப் பத்திரமாக வெளியில் கொண்டு போய் போட்டுவிட்டு வரும் ரோஜா... ஒரு

மனிதனின் உயிரை எடுப்பதாவது? இருக்காது... யாரோ திட்டமிட்டு அவளை இதில் சிக்க வைத்துள்ளார்கள். இதில் இருந்து அவளை மீட்க வேண்டும். ஆனால் எப்படி? தனக்கு யார் உதவி செய்வார்கள்?

அவருக்குத் தெரிந்த லாயரைப் பார்த்து என்ன செய்வது என்று கேட்டு அறிந்துகொள்ள நினைத்தார். போய் விசாரித்ததில் அயர் ஊரில் இல்லையென்று தெரிந்தது. ஊரைச் சுற்றிச் சுற்றி வீட்டுக்கு வரும்போது நள்ளிரவு தாண்டி விட்டது. கால்கள் வலுவிழந்து போய், சோர்வாக வீட்டை அடைந்தார்.

சுந்தரி கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே உறங்கிக் கொண்டிருந்தாள். இருமுறை தட்டியபோதும் கதவு திறக்க வில்லை.

நீண்ட பெருமூச்சை விடுத்த சங்கரன் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார். சுந்தரி கொடுத்து வைத்தவள். இருட்டி விட்டால் போதும், எப்படிப்பட்ட துன்பம் இருந்த போதும், நன்றாக உறக்கம் வந்துவிடும் அவளுக்கு.

திண்ணையில் தூணில் சாய்ந்து உட்கார்ந்த சங்கரனுக்கு ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால் உயிரற்ற பதுமை போல், வெற்றுப் பார்வையுடன் அமர்ந்திருந்த ரோஜாவின் முகம் கண்கள் முன் வந்து போயிற்று. இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போலிருந்தது.

என்றைக்கும் இல்லாத விதமாய்த் தன்மீதே கோபம் உண்டாயிற்று சங்கரனுக்கு. ரோஜாவும், சந்திரனும் மணியான குழந்தைகள். சிறுவயதில் தந்தையின் சுயநலத் திற்கும், பிறகு தன்னுடைய சோம்பேறித்தனத்திற்கும் அவர் களின் எதிர்காலம் பலியாகி விட்டது. இதற்கெல்லாம் காரணம் தன் இயலாமைதான்!

ஒரு நாளாவது வீட்டுப் பொறுப்பை தான் ஏற்றுக் கொண்டிருக்கிறோமா? ரோஜா இந்த வேலைக்குச் செல்ல காரணமாயிருந்தது தன்னுடைய பொறுப்பற்ற தன்மை தானே!



சாவித்திரிக்கு முதலிலிருந்தே ரோஜா வேலைக்குச் செல்வதில் விருப்பமில்லை. தங்கையின் நினைவு வந்ததும் அவர் கண்களில் நீர் திரண்டது.

'கொடுத்து வைத்தவள்... இதையெல்லாம் பார்க்கும்படி நேராமல் முன்னாடியே போய் சேர்ந்து விட்டாள்' மன திலேயே வேதனைப்பட்டுக் கொண்டார்.

# 72

மறுநாள் காலை விமானத்திலேயே விஜய் சென்னைக்கு வந்து விட்டான். நேற்று இரவே கோபால் எஸ்.டி.டி. செய்து வேணுகோபாலன் கொலை செய்யப்பட்டதாகவும், ரோஜாவை அரெஸ்ட் செய்திருப்பதாகச் சொன்னபோது, விஜய் இதயம் ஒருநிமிடம் இயங்க மறுத்தது.

பாம்பே வந்ததிலிருந்து, கூடிய சீக்கிரம் சென்னைக்குத் திரும்ப வேண்டுமென்ற துடிப்பில், அவன் மூச்சு விடக்கூட நேரமில்லாமல் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். வேலை கிட்டத்தட்ட முடியும் தருவாயிலிருந்தது நாளை இரவோ, அதற்கு மறுநாள் காலையோ சென்னைக்குக் கிளம்பத் திட்டமிட்டிருந்தான்.

அன்று மாலை எப்படியோ கொஞ்சம் நேரத்தை ஒதுக்கி ஷாப்பிங் சென்றான். அவன் வெளியூர்களுக்குச் செல்லும் போது, அங்கிருந்து ராதைக்கு, லாவண்யாவுக்கு ஏதாவது வாங்கி பரிசாகக் கொடுப்பது வழக்கம்.

இந்த முறையும் ராதைக்காக சாவிச் கொடுத்தால் நாட்டியமாடும் பொம்மை, லாவண்யாவுக்கு இரண்டு புடவைகள், வேணுகோபாலனுக்கு 'HOW TO LIVE PEACE FULLY' என்ற புத்தகத்தை வாங்கிக் கொண்டான். ரோஜா

வுக்காக ஏதாவது வாங்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் எதை வாங்குவதென்று தெரியவில்லை. எதை எடுத்தாலும் மனதுக்கு நிறைவு ஏற்படவில்லை. கடைசியில் 'கண்ணனுக்காகக் காத்திருக்கும் ராதை' என்ற ஓவியத்தைத் தேர்வு செய்தான்.

அந்த ஓவியத்தில் ராதையின் நளினம், கண்களில் தெரியும் எதிர்பார்ப்பு ரொம்ப இயற்கையாய், பார்ப்போரின் கண்களைக் கவரும் விதமாய் அமைந்திருந்தது. விஜய்க்கு அந்த ஓவியம் ரொம்பப் பிடித்திருந்தது.

வேலை மும்மரத்தில் பிசியாக இருந்து விட்டதில் விஜய்க்கு நண்பர்களுடன் மகிழ்ச்சியாய் கழிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. விஜய் ஊருக்குப் போய்விடுவான் என்று தெரிந்ததும், நண்பர்கள் அன்று இரவு டின்னரை ஹோட்டல் தாஜில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

விஜய் டின்னருக்குக் கிளம்பும் நேரம் கோபாலனிடமிருந்து போன் வந்தது. கோபாலனின் குரலைக் கேட்டதும் விஜயின் புருவங்கள் முடிச்சிட்டன.

ரொம்ப முக்கியமான விஷயம் இருந்தாலொழிய கோபாலன் போன் செய்ய மாட்டான். வேணுகோபாலன் உடம்புக்கு ஏதாவது... என்ற சந்தேகம்தான் விஜய்க்கு வந்தது.

வேணுகோபாலன் கொலை செய்யப்பட்டதாயும், அந்த கொலையைச் செய்தது ரோஜாவாக இருக்கலாமென்று அவளை அரெஸ்ட் செய்திருப்பதாய்க் கோபாலன் கூறிய போது அவனால் நம்ப முடியவில்லை நடந்ததை கோபாலன் சுருக்கமாய் விவரித்தான்... கண்கள் இருட்டி விட்டது போல் இருந்தது விஜய்க்கு.

அந்தக் கொலையை ரோஜா செய்தாளா? அந்த வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும் சக்தியை தான் இழந்துவிட்டது போலிருந்தது அவனுக்கு.

அவன் டின்னருக்கு போகவில்லை, உடனே சென்னைக்கு



பறந்துவிடத் துடித்தான்; ஆனால் விமானம் மறுநாள் காலைதான் என்ற நிலையில் அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

இரவு முழுவதும் உறக்கமில்லாமல், கூண்டில் அடைப்பட்ட சிங்கம் போல் தவித்துக் கொண்டிருந்தான். எத்தனை முறை பார்த்தாலும் கடிகார முள் ஒரே இடத்தில் நின்று விட்டதுபோல் தோன்றியது.

மீனம்பாக்கம் ஏர்போர்ட்டில் இறங்கிய விஜயை அழைத்துச் செல்ல கோபால் வந்திருந்தான். நடந்ததை மற்றொரு முறை சுருக்கமாக விவரித்தான். ஏர்போர்ட் புக் ஸ்டாலில் தொடங்கிய நாளேடுகளில் முதல் பக்கத்தில் ரோஜாவின் புகைப்படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. விஜய் பேப்பரை வாங்கிப் படித்தான். ரோஜாவின் போட்டோவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட செய்தியைப் படித்தபோது, அவனுக்கு இதயமே நின்று விட்டது போலிருந்தது.

டி.எஸ்.பி நாராயணன்கூட அதையே வலியுறுத்துவது போல் சொன்னார். "டிரைவர் சொன்ன சாட்சியத்தை வைத்துப் பார்த்தால், ரோஜா அந்த வீட்டுக்கு வர மறுத்து விட்டாள். அப்படி இருக்கும்போது மறுபடியும் எதற்காக வந்தாள்? இந்தக் கேசில் ஒருத்தி மட்டுமில்லை... பின்னால் துணையாக ஒரு ஆணும் இருந்திருக்கிறான். சாதாரணமானவனில்லை. இரும்புப் பெட்டி திறப்பதில் நிபுணன். கிடைத்த ஃபிங்கர் பிரிண்ட்ஸ்களைப் பரிசோதிக்க அனுப்பி இருக்கோம். ரிப்போர்ட் வந்ததும் ரோஜாவுக்கு இந்தக் குற்றத்தில் பங்கிருக்கா இல்லையா என்ற விஷயம் ஓரளவுக்காவது புரிந்துவிடும்."

விஜய் பெருமூச்சு விட்டான். அவனுக்குக் குழப்பமாக இருந்தது; ரோஜா இந்தக் கொலையைச் செய்திருக்க மாட்டாள் என்று தீர்மானமான நம்பிக்கை அவன் மனதில் வேரூன்றியிருந்தது. ஆனால் சாட்சியங்கள் எல்லாம் ரோஜாவுக்கு எதிராய் இருந்தது.

டி.எஸ்.பி.யுடன் கைக்குலுக்கிவிட்டு எழுந்து கொண்ட விஜய், "பிணம் இப்பொ எங்கே இருக்கு? போஸ்ட்மார்டத்துக்காக அனுப்பி இருக்கீங்களா?" என்று கேட்டார்.

"பிணமா? எந்தப் பிணம்?" மேஜை மீதிருந்த ஃபைலில் ஆழ்ந்துவிட்ட நாராயணன் நெற்றியைச் சுருக்கினார்.

"எந்தப் பிணமா? அவரோடதுதான்..."

"யாரு... வேணுகோபாலைப் பற்றித் தானே நீ கேட்பது? அவர் இறக்கவில்லை. அவரோட உயிர் ரொம்ப கெட்டியானது. போய் விட்டாரென்றுதான் நினைத்தோம். ஆனால் ஊசலாடிக் கொண்டிருந்த மூச்சு மீண்டு விட்டது ஐ.சி.யூ.வில் இருக்கிறார். எங்கள் எல்லோருக்கும் மேலிடத்திலிருந்து நன்றாக டோஸ் கிடைத்தது.

விஜய்க்கு ஒருநிமிடம் வாயடைத்துப் போய் விட்டது.

"ஃனிட்... அப்பொ இந்த நாளேடுகளில்..." வியப்பும் திக்பிரமையும் சூழ்ந்து கொள்ள அவன் இதயம் வேக வேகமாய்த் துடித்தது

"இதில் அவர்களின் தவறு எதுவுமில்லை. நாங்க கொடுத்த ஸ்டேட்மெண்ட்தான் அது. நாளை மறுப்பு செய்தி வெளிவரும். நான் ஹாஸ்பிடலுக்குச் செல்லுகிறேன். நீயும் என்னோடு வருகிறாயா?" என்றவாறே நாராயணன் எழுந்து கொண்டார்.

"வருகிறாயா என்று கேட்பதாவது... முதலில் அங்குதான் போகணும நான்." விஜய் வழி நடந்தான்.

வேணுகோபாலன் இறக்கவில்லை. உயிரோடுதான் இருக்கிறார். இந்தச் செய்தி கேட்டதும், விஜய் கண்களில் கொரெனறு நீர் சுழன்றது. இதுபோன்ற அற்புதமான உணர்வை அவன் இதற்கு முன் அனுபவித்ததில்லை.

இவ்வுலகில் பெற்றோரை விடவும், நண்பர்களை விடவும் தனக்கு மிகவும் நெருக்கமானவர் வேணுகோபாலன். மனிதர்களைப் பொம்மைகளாக்கி, வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்களை ஏற்படுத்தும் அந்தக் கடவுளுக்கு மனப்பூர்வமாய் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.



# 73

விஜய் ரோஜாவை ஜாமீனில் விடுவித்து, தன் வீட்டுக்கு அழைத்து வந்தான். லாயர் யச்வந்த ராவிடம் ரோஜா சார்பில் வாதிப்பதற்குக் கேட்டுக் கொண்டான்.

"விஜய்! அந்தப் பெண்ணை ஜாமீனில் விடுவித்த வரையில் சரி... ஆனால் வீட்டிலேயே வைத்துக் கொள்வது அவ்வளவு நல்லது இல்லையோ என்று தோன்றுகிறது. நான்கு பேர் நான்குவிதமாய் நினைக்கக்கூடும்..." என்று எச்சரித்தார் யச்வந்த ராவ்.

"என்ன செய்வது? இந்தச் சூழ்நிலையில் அந்தப் பெண் என் கண்ணெதிரில் இருப்பது ரொம்பவும் முக்கியம்" என்றான் விஜய்.

யச்வந்த ராவ் இந்தக் கேசில் விஜய் சொன்ன விவரங்களை எல்லாம் குறித்துக் கொண்டார். விஜய் வாசற்கேட் வரைச் சென்று அவரை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தான்.

காலையில் வந்ததிலிருந்து ஒரு இடத்தில் நிற்காமல் அலைந்து கொண்டே இருந்ததில் உடலும், உள்ளமும் களைப்புற்றன. நேற்று இரவு முழுவதும் உறங்கவில்லை. மனதில் ஏற்பட்ட உத்வேகத்தால் இன்னும் குளிக்கக்கூட இல்லை.

போன் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. தெரிந்தவர்கள், நண்பர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியாமல் எரிச்சல் ஏற்பட்டது

யச்வந்த ராவ் சென்றபிறகு வாசற்கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்து உட்கார்ந்து கொண்ட விஜய், சிகரெட்டைப்

பற்ற வைத்துக் கொண்டு, "லக்ஷ்மி" என்று குரல் கொடுத்தான்.

சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்த லக்ஷ்மி, கைகளைப் புடவையில் துடைத்துக்கொண்டே வந்தாள்.

"வெந்நீர் தயாராக இருக்கு தம்பி; சமையலும் முடிந்து விட்டது. சட்டுன்னு குளிச்சுட்டு சாப்பிட வாங்க. மறுபடியும் யாராச்சும் வந்துடப் போறாங்க" என்றாள்.

"அந்தப் பெண் என்ன செய்துகிட்டு இருக்கா?" ரோஜாவை உத்தேசித்துக் கேட்டான்.

"என்னான்னு சொல்லட்டும் தம்பி... காபி கொடுத்தால் குடிக்கவில்லை; அப்படியே வைத்து விட்டாள். குளிக்கப் போறியாம்மான்னு கேட்டால், வெறித்தப் பார்வையைத் தவிர, வேறு பதிலே இல்லை. பெரிய ஐயாவைக் கொல்லப் பார்த்த இந்தப் பெண்ணை நம் வீட்டுக்கு ஏன் அழைச்சுக் கிட்டு வந்தீங்க தம்பி..." என்று வெறுப்பை பார்வையில் காட்டியபடிக் கேட்டாள் லக்ஷ்மி.

"உனக்குத் தெரியாது லக்ஷ்மி, அந்தப் பெண் வேறு எங்கும் ஓடிப் போய்விடாமல் நம் கண்ணெதிரில்தான் வைத்துக் கொள்ளணும்."

"அப்படியா தம்பி..."

"நீ போய் வெந்நீர் எடுத்து வை... நான் இதோ வந்திடறேன்."

லக்ஷ்மி உள்ளே போனாள்.

விஜய் சற்று நேரம் ஏதோ யோசித்துக்கொண்டே உட்கார்ந்து விட்டான். பிறகு பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டைப் பாதியிலேயே ஆஷ் ட்ரேயில் போட்டுவிட்டு, மாடிக்குப் போனான். அங்கே அவனுடைய அறையில் ரோஜா நாற்காலியில் சிலைபோல் சலனமே இல்லாமல் அமர்ந்திருந்தாள. அறைக்கதவு அகலமாய்த் திறந்திருந்த போதும், விஜய் தன் வருகையை உணர்த்துவதுபோல், நிலைப்படியில் நின்று கதவில் விரலால் தட்டினான். ரோஜா



மெதுவாய்த் தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

"மே ஐ கமின்?"

ரோஜா அவனைப் பார்த்ததும் மெதுவாய் எழுந்து நின்று கொண்டாள்.

"உள்ளே வரலாமா?" வலிய வரவழைத்துக் கொண்ட புன்முறுவலுடன் மற்றொரு முறை கேட்டான் விஜய்.

ரோஜா பதில் பேசவில்லை. விஜய் உள்ளே வந்தான். தீர்ப்பு அளிக்கப் போகும் நீதிபதியின்முன் நிற்கும் குற்றவாளியைப் போல் ரோஜா கண்களைத் தாழ்த்தி நின்றாள். விஜய் ரோஜாவுக்கு ரொம்ப நெருக்கமாய் வந்து நின்றான். ரோஜாவின் பார்வை, விஜயின் பாதங்களில் நிலைத்து விட்டாற்போல், தலைகுனிந்து நின்றிருந்தாள்.

"ரோஜா" மென்மையாக விளித்தான் விஜய்.

ரோஜா தலையை உயர்த்தவில்லை. அவன் சொல்லப் போவதைக் கேட்க ஆர்வம் காட்டவில்லை. பதுமையைப் போல் மௌனமாக நின்றுவிட்டாள்.

"ரோஜா என்னதான் நடந்தது? நீ போனபோது வீட்டில் யார் யார் இருந்தாங்க? வேணுகோபாலன் எந்த நிலையில் இருந்தார்?" என்றான் விஜய்.

ரோஜா மெதுவாய்த் தலையை குறுக்கே அசைத்தாள் "எனக்கு... எனக்கு ஒன்றும் தெரியாது" என்றாள்.

"நினைவுபடுத்திக் கொள்ள முயற்சி செய். டிரைவர் உனக்காக வந்தபோது, நீ வர மறுத்துவிட்டாய். பிறகு என்ன நடந்தது? நீ அந்த வீட்டுக்கு மறுபடியும் போன காரணம்தான் என்ன? இந்த விவரங்கள் எனக்குத் தெரிய வேண்டியது ரொம்ப அவசியம் ரோஜா..."

ரோஜா தலையை உயர்த்தினாள். பார்வை எங்கேயோ சூன்யத்தில் நிலைத்திருந்தது. ஏதோ பயங்கரமான காட்சியைக் கண்டுவிட்டதுபோல், பயஉணர்வு அவள் கண்களில் தெரிந்தது.

விஜய் ரோஜாவை நோக்கி ஓரடி முன்வந்தான். ரோஜா சட்டென்று இரண்டடி பின்னுக்கு நகர்ந்து கொண்டாள். விஜய் நின்று விட்டான்.

மென்மையான குரலில், தோழமையுடன் சொன்னான். "இதில் நீ பயப்படத் தேவையே இல்லை ரோஜா!"

"நான்... உண்மைதான் சொல்கிறேன்... எனக்கு எதுவும் நினைவில்லை. ஆனால் யாரும் இதை நம்ப மாட்டார்கள்."

"நான் நம்புவேன்" விஜயின் குரல் திடமாய் ஒலித்தது. "நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் நான் நம்புவேன். நீ குற்றவாளி இல்லையென்று என் மனதுக்குத் தெரியும். அதனால்தான் உன்னை என் வீட்டுக்கு அழைத்து வந்தேன். உனக்காகப் போராடத் தயாராய் இருக்கேன். நடந்தது என்னென்று நீ சொல்லிவிட்டால் என் வேலை எளிதாக முடியும். ஒருக்கால் உன்னால் சொல்ல முடியா விட்டால்... பரவாயில்லை. எந்த நபர் மீது இந்தக் கொலை முயற்சி நடந்ததோ அவரே இந்த ரகசியத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவார். ரோஜா... வேணுகோபாலன் பிழைத்துக்கொண்டு விட்டார். உனக்குத் தெரியுமா?" சகஜமான குரலில், இயல்பாய்ச் சொன்னான் விஜய்.

ரோஜா திக்பிரமை அடைந்தவளாய்ப் பார்த்தாள்.

"அவருடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கு. உண்மையான குற்றவாளி யாரென்று அவர் சொல்லும் வரையிலாவது அவரைப் பிழைக்க வைக்க டாக்டர்கள் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அவரைப் பார்க்க நீ வருவதாக இருந்தால், உன்னை ஆஸ்பத்திரிக்கு நானே அழைத்துக் கொண்டு போகிறேன்..."

இன்னமும் நம்ப முடியாதவள்போல் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் ரோஜா.

அதை உணர்ந்துகொண்டவனாய், "உண்மைதான் ரோஜா! நான் பொய் சொல்லவில்லை."

ரோஜா ஏதோ சொல்ல வந்தவள்போல் வாயைத்



24167

திறந்தாள். இதழ்கள் நடுங்கின... வார்த்தைகள் வெளிவர மறுத்தது. அவள் முகத்தில் வியப்பு மெதுவாக மறைந்து அந்த இடத்தில் மகிழ்ச்சி பரவியது. இதுபோல் எழும்பிய துக்கம் அவளை மூழ்கடிக்க, இரு கரங்களில் முகம் புதைத்து, அழத் துவங்கினாள்.

ஒருகணம் தயங்கி நின்றவன், பிறகு ஓரடி முன் வைத்து, அவளுடைய தோள்களில் தன் வலிமையான கரங்களைப் பதித்தான். ரோஜா மறுக்கவில்லை. தலையை உயர்த்தி அவன் பக்கம் பார்த்து, "நீங்க சொல்லுவது உண்மை தானே! அவர் உயிரோட இருப்பது நிஜந்தானே?" என்று கேட்டாள்.

"உண்மைதான் ரோஜா! நீ சாப்பிட்ட பிறகு நானே உன்னை அவரிடம் அழைத்துப் போகிறேன்!" நம்பிக்கை தருவதுபோல் சொன்னான் விஜய்.

வெளிறிப்போய் இருந்த ரோஜாவின் முகத்தில் எல்லையில்லா மகிழ்ச்சி எட்டிப் பார்த்தது. "நான்... நான் இதுவரை இத்தனை நல்ல செய்தியை என்றுமே கேட்டதில்லை..." சொல்லும்போதே அவளுடைய கண்களில் நீர் நிறைந்து விட்டது.

விஜயின் கரங்கள் ரோஜாவை அருகில் இழுத்துக்கொண்டு நெஞ்சோடு அணைத்துக் கொண்டன. வலது கை ரோஜாவின் தலையை அன்புடன் வருடியது.

"இதைவிட நல்ல செய்தியை நீ கேட்கவேண்டும்" அவன் குரல் தெளிவற்று ஒலித்தது.

அவனுடைய ஸ்பரிசத்தில், தான் இழந்துவிட்ட சக்தியை மெள்ள மெள்ள மீண்டும் உருபெற்று வருவதுபோல் ரோஜாவுக்குத் தோன்றியது. சற்று நேரம் மௌனத்தில் கழிந்தது.

கீழிருந்து லக்ஷ்மியின் குரல் கேட்டது. "பெரிய தம்பி... உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க."

"இதோ வந்திடறேன்..." பதில் குரலைக் கொடுத்துக்

கொண்டே, விஜய் ரோஜாவை மெதுவாக விடுவித்தான்.

"நீ குளித்துவிட்டு சீக்கிரமாய்ச் சாப்பிட்டாயானால் நாம் ஆஸ்பத்திரிக்குப் போகலாம்" என்றான்.

ரோஜா நிற்பதற்கும் சக்தியற்றவள்போல் கட்டிலில் சரிந்துவிட்டாள். இனம் புரியாத அமைதி, ஏதோ மனம் முழுவதும் பரவியதுபோல் தோன்றிற்று.

விஜய் டிரெஸ்ஸிங் டேபிள் அருகே சென்று சீப்பை எடுத்து தலைவாரிக் கொண்டான். ரோஜாவின் நெருக்கத்தில் அவன் உடலும், உள்ளமும் அமைதி கொண்டது போல் இருந்தது. நேற்று இரவிலிருந்து அவன் பட்ட சிரமம், களைப்பு எல்லாம் நீங்கி, புத்துணர்வு பெற்றதுபோல் உணர்ந்தான்.

விஜய் கீழே வந்தான்.

அவனைப் பார்த்ததும் நாற்காலியில் ஒடுக்கமாய் உட்கார்ந்திருந்த சங்கரன் எழுந்து வணக்கம் தெரிவித்தார்.

"உட்காருங்க... யார் நீங்க? என்ன வேணும்?"

"என் பெயர் சங்கரன்! ரோஜாவுடைய தாய்மாமன். நீங்கதான் அவளை ஜாமீனில் விடுவித்து அழைத்துக்கிட்டு வந்திருப்பதாய்ச் சொன்னாங்க."

"நீங்களா... உட்காருங்க... உட்காருங்க..." என்றான் விஜய்.

சங்கரன் உட்கார்ந்து கொண்டார். தயங்கிக்கொண்டே மெதுவாய்க் கேட்டார்: "அவர் உயிரோட இருப்பதாகச் சொல்றாங்களே அது உண்மைதானா? வெறும் வதந்தியா?"

"உண்மைதான்... கடுகளவு உயிர் அந்த உடலில் கொண்டிருக்கு... அது நிலைத்து இருக்குமா இல்லையா என்று இப்போ உடனே சொல்ல முடியாது. டாக்டர்கள் இயன்ற அளவு முயற்சி செய்கிறார்கள்."

"என்னவோ தம்பி... ரோஜா இப்படி வேலைக்குப் போனதில், என் மனைவிக்கும், அவளோட அம்மா சாவித்



திரிக்கும் இஷ்டமேயில்லை ரொம்ப வேண்டியவங்க, நல்லவங்க என்று அனந்து தம்பி சொன்னதால் சரியென்று ஒப்புக் கொண்டேன். அது இப்படி சிக்கலில் கொண்டு போய் விடும் என்று கனவிலும் நினைக்கவில்லை நீங்க அனந்துடைய அண்ணன்னு சொன்னாங்க. தங்களைப் பார்க்கும் வாய்ப்பு இதுவரை கிடைக்கவில்லை."

"உடனே புறப்பட்டு வரச்சொல்லி அனந்துக்குத் தகவல் கொடுத்துவிட்டேன்" என்றான் விஜய்.

அனந்தின் பெயரைக் கேட்டதும் அவர் முகம் பிரகாசமாயிற்று.

"அனந்த் ரொம்ப நல்ல பையன். பணக்காரன் என்ற கர்வம் துளிகூட கிடையாது. அவனுடைய பிடிவாதத்தினால்தான் ரோஜா இந்த வேலையில் சேர்ந்தாள்."

"ரோஜா வேலை செய்யும் வீட்டு முதலாளியை நீங்க பார்த்ததேயில்லையா?" விஜய் பேச்சை மாற்றிக் கொண்டே கேட்டான்.

"நானா? இல்லை! அனந்துக்கு ரொம்ப தெரிந்தவர்கள் என்று கேள்விப்பட்டேன். ரோஜாவுக்கும் அவர்களின் நல்ல தனத்தில் நம்பிக்கை ஏற்படாவிட்டால் அங்கு போகவே ஒப்புக்கொண்டு இருக்க மாட்டாள். ரோஜா மற்ற பெண்களைப்போல் இல்லை. எது நல்லது, எது கெட்டது என்று நன்றாகத் தெரிந்தவள். அந்த நம்பிக்கையில்தான் ரொம்ப விசாரித்துக் கொள்ளவில்லை. அதுவுமில்லாமல் நான் பெரும்பாலும் ஊரில் இருக்க மாட்டேன். ஒருமுறை தன்னுடன் வந்து அவரைச் சந்திக்கச் சொல்லி, ரோஜா சொல்லிக் கொண்டுதான் இருந்தாள். நான்தான் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை."

"வெந்நீர் ஆறிப் போறது தம்பி" என்று லஷ்மி குரல் கொடுத்தாள்.

"நீங்க ரோஜாவிடம் பேசிக்கிட்டு இருங்க. நான் இதோ வந்துவிடுகிறேன்" விஜய் சங்கரனை ரோஜா இருந்த அறை வாசல் வரை கொண்டுவிட்டு, கீழே வந்துவிட்டான்.

# 74

விஜய் தன்னுடன் சங்கரனையும் ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் சென்றான்.

வேணுகோபாலன் நினைவு வந்தபிறகு என்ன சொல்லப் போகிறாரோ என்று சங்கரனுக்குப் பதட்டமாய்த்தான் இருந்தது. அவர் சொல்லப் போகும் விஷயத்தில்தான் ரோஜாவின் எதிர்காலமே அடங்கி இருக்கிறது.

சங்கரன் வருவதற்கு முன் ரோஜாவை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதாயிருந்த விஜய், சங்கரன் வந்தபிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

“நீ குளித்து, சாப்பிட்டுவிட்டுத் தயாராக இரு. எனக்கு நாராயணனிடம் கொஞ்சம் வேலையிருக்கு. அதை முடித்துக் கொண்டு மறுபடியும் வந்து உன்னை அழைக்கக்கிட்டுப் போகிறேன்” என்று விஜய் சொன்னபோது, ரோஜா மறுக்கவில்லை.

அவளை இந்த ஆபத்திலிருந்து மீட்பது எப்படி என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த சங்கரனுக்கு, விஜய் ஆபத்பாந்தவன் போல் தோன்றினான். மனதிலேயே விஜயை ஆசீர்வதித்தார் சங்கரன்.

சங்கரனை அழைத்துக்கொண்டு விஜய் ஸ்பெஷல் வார்ட் பக்கம் சென்றுக் கொண்டிருந்தபோது வேணுகோபாலனுக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த டாக்டர் எதிரே வந்தார்.

விஜய் அவருக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, “எனிதிங் பெட்டர்?” என்று கேட்டான்

“நோ! அப்படியேதான் இருக்கிறார். நாங்க முயற்சி



செய்துகிட்டுதான் இருக்கோம்” என்றார்.

சங்கரனும், விஜயும் பேஷண்ட் இருக்கும் அறைக்குள் நுழைந்தார்கள். அங்கே இருந்த நர்ஸ் வெளியில் சென்றாள்.

கட்டில்மீது சலனமேயில்லாமல் படுத்திருந்த வேணு கோபாலனின் சரீரத்தில் உயிர் நூலிழையாய் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு அடையாளமாய் மெலிதான மூச்சு மட்டும் வந்து கொண்டிருந்தது.

“வாங்க... இப்படி வந்து அருகில் நின்னு பாருங்க...” தொலைவிலேயே நின்றுவிட்ட சங்கரனை அழைத்தான் விஜய்.

சங்கரன் அருகில் வந்தார்.

முதலில் சாதாரணமாக, நோயாளியைப் பார்ப்பது போல் இரக்கமாய்ப் பார்த்தவர், உடனே திடுக்கிட்டது போல் அருகில் வந்தார்; புருவங்கள் முடிச்சிட, மறுபடியும் கூர்ந்து பார்த்தார்.

“இவரை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா?” என்று விஜய் நிதானமாக, எந்த உணர்வும் இல்லாமல் கேட்டான்.

சங்கரனின் கண்கள் அகலமாய் விரிந்தன.

“இவர்...இவர்...” தடுமாறினார்.

“இவருடைய இளம் வயது போட்டோ காண்பிக் கட்டுமா” என்று சட்டைப் பையிலிருந்து போட்டோ ஒன்றை எடுத்துக் கொடுத்தான் விஜய்.

அந்தப் போட்டோவிலிருந்த நபரைப் பார்த்ததும், சங்கரனுக்கு வெலவெலத்து விட்டது.

“என்ன அடையாளம் தெரியவில்லையா?” என விஜய் கேட்டான்.

“அவன் எங்கள்... எங்க வேணு...”

“ஆமாம் உங்களுடைய வேணு... எங்களுடைய வேணுகோபாலன்... உங்க தங்கையின் கணவர். எங்க

லாவண்யா, ராதையின் தந்தை. இப்போ உங்களுக்குப் புரிந்திருக்கும், ரோஜா யாரிடம் வேலை பார்க்கச் சென்றாள் என்று..."

சங்கரன் கல்லாய்ச் சமைந்து விட்டார். அவர் முகம் வெளிறிப் போய் விட்டது. மூச்சுக்காற்று கிடைக்காமல் திக்குமுக்காடி விட்டதுபோல் உணர்ந்தார்.

இதற்குள் டி.எஸ்.பி நாராயணன், டாக்டருடன் உள்ளே வந்தார், "ஹலோ விஜய்! நீ இங்கேதான் இருக்கியா? உனக்குத்தான் போன் செய்ய நினைத்தேன். ஃபிங்கர் பிரிண்ட் ரிப்போர்ட் வந்து விட்டன. அவன் யார் தெரியுமா?"

"யார் அது?" விஜய் பதட்டத்துடன் கேட்டான்.

நாராயணன் விஜய் பக்கத்தில் நின்றிருந்த சங்கரனைப் பார்த்தார். விஜயின் கையைப் பற்றி ஓரமாய் அழைத்துப் போய், தாழ்ந்த குரலில் சொன்னார், "வேறு யாரோ இல்லை... அந்த ரோஜாவின் தம்பி சந்திரன்... இதிலிருந்து அந்தப் பெண் அப்பாவியில்லையென்றும், அவளுக்கும் இதில் பங்கு இருக்கு என்று தெரிகிறது."

"சந்திரனா?" விஜய் நம்பமுடியாதவன்போல் பார்த்தான்.

"ஆமாம், பாம்பே போலீசாரும் அவனைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். அங்கு நடந்த சிலகொள்ளைகளில் இவனுடைய கைரேகையும் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நீ அவசரப்பட்டு அந்தப் பெண்ணை ஜாமீனில் விடுவித்தாய்... கடைசியில் இது ஏதாவது விபரீதமாய் உன் தலையில் வந்து விடியுமோ என்னவோ... கவனமாய் இரு..."

விஜய் திக்பிரமை அடைந்தவனாய்ப் பார்த்தான். அந்த விரல் ரேகைகள் சந்திரனுடையதா? செந்தூவுக்கு இதில் பங்கு இருக்கா? கொலை செய்ய வந்தது யாரென்று ரோஜாவுக்குத் தெரிந்துதான் இருக்கும். விஜய் கண்முன் ஆயிரம் காட்சிகள் வந்து போயின.



ரோஜா ரொம்ப புத்திசாலி... ரொம்ப ஆபத்தானவள். இதெல்லாம் வெறும் நடிப்பாக இருக்குமோ... தன்னை ஏமாற்றிப் படுகுழியில் தள்ள செய்த சதியாய் இருக்குமோ? அவளைத் தனியாக விட்டு வந்திருக்கிறோம். இப்போ அவள் வீட்டில் இருப்பாளா? இல்லை எங்கேயாவது ஓடிவிட்டிருப்பாளா?

"நாராயணன், இப்பவே வர்றேன்! நான் மறுபடியும் உனக்குப் போன் செய்கிறேன்..." விஜய் ஒரே எட்டில் வெளியே வந்தான். லிப்டுக்காகக் காத்திருக்கும் பொறுமை இல்லாதவன் போல் வேகமாய்ப் படி வழியாய் இறங்கி ஓடி வந்தான்.

சூறாவளிக் காற்றாய் வேகமாய் வீட்டுக்கு வந்த விஜய் வெறுமே சாத்தியிருந்த வாசற்கதவை ஒரே தள்ளில் திறந்து கொண்டு உள்ளே வந்தவன் "லக்ஷ்மி" வீடே அதிரும்படிக் கத்தினான்.

"என்ன பெரிய தம்பி" கலவரப்பட்டுக்கொண்டே லக்ஷ்மி ஓடி வந்தாள்...

"அந்தப் பெண் எங்கே?"

"எந்தப் பெண் தம்பி?"

"ரோஜா"

"அந்தப் பெண்ணா? மாடியில் இருக்கா. ரொம்ப சொன்ன பிறகு குளிச்சிட்டு வந்தாள். சாப்பிட வாங்கம்மான்னு இப்பத்தான் கூப்பிட்டேன்... என்ன விஷயம் தம்பி? என்ன வாச்சு?"

விஜய் லக்ஷ்மியின் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் வேகமாய்ப் படி ஏறி மாடிக்குப் போனான்...

அறையில் ரோஜா கட்டில்மீது அமர்ந்து, தலையில் சிடுக்கு எடுத்துக் கொண்டிருந்தாள். தெளிந்த நீரோடையைப் போன்று எந்தச் சலனமும் இல்லாமல் அமைதியாய்த் தென்பட்ட முகத்துடன், ஏதோ யோசனையில் இருப்பது போல், மெதுவாய் தலைவாரிக் கொண்டிருந்த ரோஜாவைப் பார்த்ததும், விஜய் நிலைப்படி அருகே ஒருகணம் நின்றுவிட்டான். வேகமாய்ப் படி ஏறி வந்ததில் அவனுக்கு மூச்ச

இரைத்தது. நெற்றியில் வியர்வை பொடிப் பொடியாய் துளிர்த்தது. காலடிச் சத்தம் கேட்டதும் ரோஜா தலையைத் திருப்பிப் பார்த்தாள்...

"ரோஜா" விஜய் அருகில் வந்தான்.

ரோஜாவுக்கு எதிரே வந்து நின்றவன், கூர்மையாய் அவளைப் பார்த்துக்கொண்டே கேட்டான்.

"ரோஜா உண்மையைச் சொல்லு... வேணுகோபாலன் மீது நடந்த கொலை முயற்சியில் உனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லையா? உனக்கு ஒன்றுமே தெரியாதா?"

ரோஜா புதிய மனிதனைப் பார்ப்பது போல் விநோதமாய் அவன் பக்கம் பார்த்தாள். சற்றுமுன் அன்பாய், பரிவுடன் பேசியது இவன்தானா?

உத்வேகத்தால், இனம் புரியாத சந்தேகத்தால் அவன் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. பொறுத்துக் கொள்ள முடியாதவன் போல், இருகரங்களை நீட்டி ரோஜாவின் தோள்களை அழுத்தமாகப் பற்றி எழுப்பினான். ரோஜாவின் கையில் இருந்த சீப்பு கீழே விழுந்தது.

விஜய் ஆவேசமாய் ரோஜா தோள்களைப் பற்றி உலுக்கிக் கொண்டே கேட்டான்.

"உண்மையைச் சொல்லு... நீ என்ன செய்திருந்தாலும் பரவாயில்லை... எந்தச் சூழ்நிலையிலும் உனக்குத் துணையாய் நான் இருப்பேன். உனக்காக இந்த உலகத்தையே எதிர்த்துப் போராடுவேன். உன்னை மனப்பூர்வமாய் என் மனைவியாய் ஏற்றுக் கொண்டு விட்டேன். தேவையானால் எல்லோர் முன்னிலையில் உன்னை மறுபடியும் அக்னிசாட்சியாய்த் திருமணம் செய்துக்கறேன்... ஆனால் உண்மையை மறைத்துவிட்டு, மற்றவர்கள் முன்னால் என்னை நீ முட்டாளாக்காதே! என்னதான் நடந்தது? உண்மையைச் சொல்லிவிடு" என்றான்.

"விஜய்... எனக்கு...எனக்கு ஒன்றும் தெரியாது..." திடீரென்று அவனிடம் தென்பட்ட இந்த ஆவேசத்தைக் கண்டு மிரண்டுவிட்டவள் போல், நடுங்கிக் கொண்டே சொன்னாள்.



"பொய் சொல்லாதே! நடிப்பதை இனிமேல் விட்டுவிடு. உனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் நான் நம்ப மாட்டேன். இந்தக் கொலை முயற்சி நடந்தபோது சந்திரன் அங்கே இருந்திருக்கிறான். உனக்குத் தெரியாமல் அவன் அங்கு வந்திருக்க முடியாது."

"சந்திரனா! செந்தூரா!" புதிய விஷயம் கேட்பதுபோல் பார்த்தாள்.

"ஆமாம், இதில் அவனுக்கும் பங்கு இருக்கு. ரோஜா, நீ என்னிடமிருந்து உண்மையை மறைத்தால், உன் தம்பிக்குப் பதில் நீ தூக்குமேடைக்குச் செல்ல வேண்டியிருக்கும். இத்தனை நேரமும், நீ அப்பாவியென்றும் யாரோ சதி செய்து உன்னை இதில் சிக்க வைத்துவிட்டார்கள் என்றும் தவறான அபிப்பிராயத்தில் இருந்தேன். இப்போ எனக்கு நம்பிக்கை போய்விட்டது. சந்திரன் அங்கே இருந்ததாகத் தெரிந்ததிலிருந்து, என் எண்ணங்கள் தலைகீழாகி விட்டன. சொல்லு ரோஜா... இப்பவாவது உண்மையைச் சொல்லிவிடு... பயப்படத் தேவை இல்லை. உனக்கு நான் துணை இருக்கேன். செந்தூர் அங்கே எப்படி வந்தான்? எதுக்காக வந்தான்?"

ரோஜாவின் காதுகளில் விஜயின் கேள்விகள் விழவில்லை. அதற்குப் பதில் செந்தூரின் குரல் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'இன்னும் ஒரு வாரத்தில் வேணுகோபாலன் வீட்டை கொள்ளை அடிக்கப் போகிறார்கள்... நீ அங்கே வேலைக்குப் போவதை நிறுத்திவிடு."

சந்திரன் விரல் ரேகைகள் அங்கு இருந்ததா? அப்படியானால் இது அவன் செய்த காரியம்தானா?" ரோஜா விஜய் பக்கம் பயந்து போனவளாய்ப் பார்த்தாள்.

"உண்மையைச் சொல்லு ரோஜா...என்னதான் நடந்

தது?'' கோபத்தில் சுய உணர்வை இழந்துவிட்டவன் போல் உலுக்கிக் கொண்டிருந்தவன், அரும்பாடுப்பட்டு, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''விஜய்...'' திக்பிரமை அடைந்தவள் போல் அவனையே பார்த்த ரோஜா, பலவீனமான குரலில், ''நான்...நான்தான் இந்த வேலையைச் செய்தேன். நான் சொன்னதால் அவன் இந்த வேலைக்கு ஒப்புக் கொண்டான். அவனை இந்த வேலைக்குத் தூண்டிவிட்டது நான்தான் அவனுக்கு ஒன்றும் தெரியாது விஜய்! என்னைப் போலீசாரிடம் ஒப்படைத்து விடுங்க. தயவு செய்து அவனை மட்டும் ஒன்றும் செய்ய வேண்டாம்'' என்றாள்

ரோஜாவுக்குத் திடீரென்று அழுகை பொங்கி வந்தது. விஜய் ரோஜாவை விட்டுவிட்டான்...பூமாலை என்று தான் கையில் எடுத்தது, காள சர்ப்பமாய் மாறி தன்னையே கொத்த வந்தது போலிருந்தது. நல்ல வேளை...தன் மனதில் ஏற்பட்ட காதலை அவளிடம் வெளியிடவில்லை. அவன் முகத்தில் கோபம், ஆவேசம் மறைந்துவிட்டன. அந்த இடத்தில் கடினமான பாறையைப் போன்ற நிர்தாட்சிண்யம் திரையாய் இறங்கியது. ஒரு நிமிடம் சித்தம் கலங்கி விட்டது போல் செயல் மறந்தவனாய் அப்படியே நின்று விட்டான்.

ரோஜா கட்டிலில் சரிந்துவிட்டாள். கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு அழுகையைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டு இருந்தாள். எந்த முகத்தை வைத்துக் கொண்டு இனி வேணுகோபாலனைப் பார்ப்பாள்? எந்த தைரியத்தில் அவர் முன்னிலையில் தன்னால் நிற்க முடியும்?

விஜய் சரேலென்று திரும்பி கீழே இறங்கி வந்து விட்டான். நேராகப் போன் அருகில் சென்று, சந்திரன் தனக்குக் கொடுத்த நம்பரை டயல் செய்யத் தொடங்கினான்.

''ஹலோ'' மறுமுனையில் குரல் கேட்டது.



''ஹலோ... ஜேம்ஸ் இருக்கானா?''

''ஒரு நிமிஷம் இருங்க... அழைக்கிறோம்.''

விஜயின் நெற்றியில் நரம்புகள் புடைத்துக் கொண்டன. பொறுமை இழந்தவன் போல் தலையை உலுக்கிக் கொண்டான்.

ஐந்து நிமிடங்கள் சென்றன; மறுமுனையில் போன் வைக்கப் பட்டு விட்டது.

விஜய் மறுபடியும் டயல் செய்தான். யாரோ எடுத்தார்கள்.

''ஜேம்ஸ் வேணும்...'' இந்த முறை ஆங்கிலத்தில் கேட்டான்

''சாரி... ராங் நம்பர். இங்கே அப்படி யாருமில்லை.''

மறுமுனையில் டக்கென்று போன் வைக்கப்பட்ட சத்தம் கேட்டது.

லக்ஷ்மியிடம் சொல்லி ரோஜாவை அழைக்கச் செய்தான்; ரோஜாவை விட்டுப் போன் செய்ய வைத்தான்; அதே பதில்தான் வந்தது.

''சந்திரன் ஜேம்ஸ் என்ற பெயரில் அங்கு யாருமில்லை'' இதுதான் அந்தப் பதில்.

போனை மெதுவாக வைத்துவிட்ட ரோஜா விஜய் பக்கம் திரும்பினாள். விஜய் பார்வை கேள்விக்குறியாய் ரோஜாவின் முகத்தில் நிலைத்து விட்டது. அவன் மனதை ஆயிரம் சந்தேகங்கள் சூழ்ந்து கொண்டன.

## 75

விஜய் லாவண்யாவைச் சந்திக்க மாதவராவ் வீட்டுக்கு வந்தான். அவன் போன போது, மாதவராவ் வீட்டில்லை. சரஸ்வதியும் கிளப்புக்குச் சென்றிருந்தாள். வேணுகோபால

னின் கொலை முயற்சி, ரோஜா அரெஸ்ட் ஆனது, லாவண்யா அவர்கள் வீட்டில் தங்கியிருப்பது இவை யெல்லாம் சேர்ந்து அவனுடைய வாய்க்கு வேண்டிய அளவு தீனியைக் கொடுத்தன.

லாவண்யா விருந்தாளி அறையில் உறக்கமும், விழிப்பும் இல்லாத நடுநிலையில் கட்டிலில் படுத்துக் கிடந்தாள். தந்தையின் உயிர் போகவில்லை, பிழைத்துக்கொண்டார் என்ற செய்தியை மாதவராவ் சந்தோஷ மிகுதியில் பதட்டத் துடன் தெரிவித்தபோது, லாவண்யாவுக்கு இந்த முறை நிஜமாகவே நினைவு தப்பியது.

அவள் இதயத்தில் எழும்பிய பயத்தைப் புரிந்து கொள்ளாத அந்தத் தம்பதியர், மகிழ்ச்சி அடைந்தவர் களாய்க் கடவுளுக்கு நன்றியைத் தெரிவித்தனர்.

லாவண்யாவின் கைகால்கள் சுவாதீனமில்லாதது போல் சக்தியிழந்து விட்டன. தந்தையின் உயிர் பிழைக்கக்கூடாது என்று மனதார நினைக்கத் தொடங்கினாள். தூக்க மாத்திரை போட்டுக் கொண்டாலும் உறக்கம் வரவில்லை. மயக்கமாய் வேறு ஏதோ உலகில் இருப்பது போலிருந்தது.

அறைக்குள் எட்டிப் பார்த்த வேலைக்காரன், "அம்மா! உங்களைப் பார்க்க விஜய் ஐயா வந்திருக்கார்" என்று தாழ்ந்த குரலில் சொன்னான்.

"நான் யாரையும் பார்க்க விருப்பமில்லையென்று சொல்லு" என்றாள் லாவண்யா

வேலைக்காரன் விஜயிடம் வந்து அப்படியே ஒப்பித் தான், "சின்னம்மா தூங்கப் போறாங்க; இப்பொ யாரையும் பார்க்க மாட்டாங்களாம்."

லாவண்யா தன்னைப் பார்க்க விரும்பவில்லை என்றால் அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

"வந்தது நான்தான் என்று சொன்னாயா?"

'சொன்னேன்' என்பது போல் தலை அசைத்தான் வேலைக்காரன்.



"சின்னம்மா இங்கே வர விரும்பாவிட்டால், நானே உள்ளே வந்து பார்க்கிறேன் என்று சொல்லு."

உள்ளே சென்ற வேலைக்காரன் மறுபடியும் வந்தான். "ஊஹூம், இப்பொ யாரையும் பார்க்க மாட்டாங்களாம்" என்றான்

ஒரு நிமிடம் யோசித்த அவன், "நான் அவங்களைப் பார்க்காமல் போக மாட்டேன். முக்கியமான விஷயமாய்ப் பேச வந்ததாகச் சொல்லு."

வேலையாள் சங்கடமான பார்வையுடன் உள்ளே சென்றான். சற்றுப் பொறுத்து லாவண்யா, வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் வெளியே வந்தாள்.

"லாவண்யா..." ஏதோ சொல்லப் போன விஜய் நின்று விட்டான். தான் காண்பது லாவண்யாதானா என்ற சந்தேகம் வந்தது. அவளின் முகம் களையிழந்து தென் பட்டது; கண்கள் உள்ளே போய், கண்ணுக்குக் கீழே கரு வளையங்கள் தெரிந்தன.

"என்ன விஷயம்? உனக்கு என்ன வேண்டும்?" விஜய் முகத்தைப் பார்க்கும் துணிச்சலில்லாதவள் போல், அவளின் பார்வை தரையில் பதிந்தது.

அவன் ஓரடி முன் வைத்து லாவண்யா அருகே வந்தான். "உனக்கு உடம்பு சரியாயில்லையா லாவண்யா?" என்று பதட்டத்துடன் கேட்டான்.

"என் உடம்பு எப்படி இருந்தால் உனக்கென்ன? நீ கேட்க வந்ததைக் கேளு" என்று முகத்தில் அடித்தாற்போல் வந்தது பதில்

விஜய் கண்கள் லாவண்யாவின் நிலைமையைச் சட் டென்று கண்டு கொண்டன எதற்காகவோ தெரியவில்லை, லாவண்யா மனதளவில் சித்ரவதையை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள்.

"நடந்தது என்ன என்று, உன் வாயாலேயே தெரிஞ்சுக் கணும்னுதான் வந்தேன் லாவண்யா... என்னதான்

நடந்தது?" மென்மையாகக் கேட்டான்.

"எனக்குத் தெரியாது. நான் யாரிடமும் இது பற்றிப் பேச விரும்பலை... உனக்கு விவரங்கள் தேவைப்பட்டால் அல்லியிடம் கேட்டுத் தெரிந்து கொள்."

மனதில் சுருக்கென்று தைத்தது விஜய்க்கு "நான்... உனக்கு வேற்று மனிதனா லாவண்யா?"

"இல்லாவிட்டால் நெருங்கியவனா?" அந்தக் கேள்வியில் எத்தனை எகத்தாளம்?

இதற்குள் அவனின் குரலைக் கேட்டு உள்ளே விளையாடிக் கொண்டிருந்த ராதை ஓடி வந்தாள். அவனும் வழக்கம்போல் ராதையைப் பார்த்ததும் கைகளை நீட்டினான்

"ராதை..." கர்ஜிப்பதுபோல் கத்திய லாவண்யா, விஜயை நோக்கி ஓடப் போன ராதையைத் தோளைப் பற்றி இழுத்து நிறுத்தினாள். "உள்ளே போ... இங்கே எதுக்கு வந்தாய்?"

ராதை கண்களை அகலமாய் விரித்து, அக்காளையும் விஜயையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"லாவண்யா... என்ன இது? என்ன ஆச்சு உனக்கு?" பொறுமையிழந்தவன்போல் கேட்டான் விஜய்.

ராதை விஜயிடம் போவதற்காக, லாவண்யாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

"அறிவில்லை? இப்படி நடந்துக்கிட்டால் விளாசி விடுவேன்... போ உள்ளே..." என்றாள்.

லாவண்யா ராதையின் முதுகில் பலமாய் இரண்டு அடிகளை வைத்தாள்; விஜய் திடுக்கிட்டான். ஒரே எட்டில் வந்து ராதையை விடுவிக்க போனான். லாவண்யா வேகமாய் அவனைத் தள்ளி விட்டாள்.

தீட்சண்யமாய்ப் பார்த்துக் கொண்டே, "விஜய்... உனக்குத் தேவையில்லாத விஷயத்தில் தலையிடாதே..." என்று சொன்னாள்.



"உனக்குப் புத்தி பிசகிடுச்சா லாவண்யா? வாயில்லாத சின்னப் பெண்ணை அப்படி அடிக்கிறாயே... நீ மனுஷி தானா?" கோபத்துடன் கேட்டான் விஜய்.

"நான் மனுஷி இல்லை... மிருகம்தான் நம்பிக்கை துரோகம் செய்யற மனிதர்களைவிட மிருகமாயிருப்பது ஒன்றும் மோசமில்லை." வேலைக்காரனை அழைத்தாள்

"வெங்கி இப்படிவா... வந்து ராதையை அழைச்சுவிட்டு உள்ளே போ..." உத்தரவிடுவது போல் கூறினாள்.

உள்ளே வந்த வேலையாள் ராதையைத் தூக்கி, பலவந்தமாகத் தோளில் சாய்த்துக் கொண்டு உள்ளே போகப் போனான்.

ராதை தன்னை விடுவித்துக் கொள்ள துடித்துக் கொண்டே, விஜய் பக்கம் கரங்களை நீட்டினாள்; அவனின் உயிர் பதைபதைத்தது.

"நீ வந்த வேலை முடிந்து விட்டதா? இன்னும் பாக்கியிருக்கா? அப்பாவின் கொலை முயற்சியைப் பற்றி உனக்குத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் அல்லி வந்தபிறகு வா... இப்போ எனக்கு தலைவலியாய் இருக்கு... நான் ரெஸ்ட் எடுக்கணும்." லாவண்யா உள்ளே செல்ல போனாள்.

"நான் உன்னோடுதான் பேச வந்தேன் லாவண்யா... உன்னிடம் சில முக்கியமான விஷயங்கள் பேசணும்."

லாவண்யா நின்று திரும்பிப் பார்த்தாள் "முக்கியமான விஷயங்களா... அப்படி ஏதாவது இருந்தால் சொல்ல வேண்டிய தேவை உனக்கு இருக்கோ என்னவோ, கேட்க வேண்டிய அவசியம் எனக்கில்லை."

"லாவண்யா! ஏன் இப்படிப் பேசுகிறாய்?" நிஷ்டூரமாய் சொன்னான். லாவண்யாவின் போக்கை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"பின்னே எப்படிப் பேசட்டும்? நீ எனக்கு என்ன உறவு என்று என் கஷ்ட சுகத்தைச் சொல்லச் சொல்கிறாய்..."

திடீரென்று லாவண்யா அழத் துவங்கினாள். "ப்ளேனை விட்டு இறங்கியதும் உனக்கு உன் நினைவு வந்ததா என்ன? உனக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தேனே நான்."

விஜய்க்கு விஷயம் புரிந்துவிட்டது. "சாரி லாவண்யா... என்னால் தவறு நடந்துவிட்டது" என்று நயமாய்ச் சொன்னான்.

"உன் மன்னிப்பு எல்லாம் எனக்குத் தேவையில்லை. போதும் உன் நடிப்பு... உனக்கு யார் இப்பொ முக்கியமானவர்கள் என்று நன்றாகவே எனக்குத் தெரியும்."

"ரொம்ப அநியாயமாய்ப் பேசுகிறாய் லாவண்யா..."

"ரோஜாவை ஜாமீனில் விடுவித்தாயா இல்லையா?"

"ஆமாம்!"

"இப்பொ அந்தப் பெண் உன் வீட்டில் இருக்கிறாளா? இல்லையா?"

"இருக்கிறாள்."

எவ்விதத் தயக்கமும், தடுமாற்றமும் இல்லாமல் விஜய் பதில் சொன்னதைப் பார்த்து லாவண்யாவின் மனம் வெதும்பியது.

"ரோஜாவுடன் உனக்கு எந்த உறவும் இல்லாதபோது, உனக்கென்ன அவ்வளவு அக்கறை? இறங்கியதும், இறங்காததுமாய் நேராக அவளிடம் போன காரணம்தான் என்ன?"

விஜய் பதில் பேசமுடியாதவன் போல் பார்த்தான்.

"பதில் சொல்லு... ஏதாவது பேசு!"

"என்ன பேசட்டும்? நீ இப்படி அநியாயமாய் என்மீது குற்றம் சுமத்தும்போது?"

"அநியாயமாகப் பேசுகிறேனா? நானா? போகட்டும், நேராகவே உன்னைக் கேட்டு விடுகிறேன். உண்மையைச் சொல்லு... ரோஜாவுடன் உனக்கு எந்த உறவும் இல்லையா?"

"லாவண்யா" விஜய் இயலாதவன்போல் பார்த்தான்.



"அந்தப் பெண்ணுக்கும் உனக்கும் எந்த உறவும் இல்லையென்று நெஞ்சுமீது கையை வைத்துச் சொல்லு."

விஜய் பதில் சொல்லவில்லை.

"எனக்குத் தெரியும்! நீ சொல்லமாட்டாய்... சொல்லவும் முடியாது உன்னால்? அதான் உன்னிடமிருந்து விலகியே இருக்க நினைக்கிறேன், இனி நீ போகலாம்."

"லாவண்யா... நான் உண்மையைத்தான் சொல்கிறேன். எனக்கு நீ எப்படியோ அந்த ரோஜாவும் அப்படித்தான்... உனக்கு..." அவன் வார்த்தையை இன்னும் முடிக்கவில்லை

"என்ன? நானும் அந்த வேலைக்காரியும் உனக்கு ஒன்றா? இதுதானே நீ சொல்ல வந்தது? இந்த வார்த்தையை வேறு யாராவது சொல்லியிருந்தால், அவங்களை இழுத்து ரெண்டு அறை விட்டிருப்பேன். தராதரத்தை உணரும் ஞானம் உனக்குப் போய்விட்டது போலும்! உன் இனிய பேச்சில், நடிப்பில் மயங்கிவிட நான் ஒன்றும் ஏமாளி இல்லை. உன் பக்கபலம் இருப்பது தெரிந்துதான், அந்த ராட்சசி இப்படித் துணிந்துவிட்டாள். ரோஜாவுடன் உனக்கு உறவு ஏதும் இல்லையென்று நீ பொய் சொன்னாலும், ரோஜா உனக்கு என்ன ஆவாளோ எனக்குத் தெரியும். என்னிடம் ஆதாரம் இருக்கு... பார்க்கிறாயா?"

லாவண்யாவின் மிரட்டல் பேச்சைக் கேட்டு விஜய் வியப்படைந்தவனாய்ப் பார்த்தான். "ஆதாரமா? என்ன ஆதாரம்?"

"இங்கேயே இரு ஒரு நிமிஷம்" தீவிரமாய்ப் பார்த்த லாவண்யா உள்ளே ஓடினாள். விஜய் வியப்புடன் அங்கேயே நின்றிருந்தான்.

'லாவண்யா ஏதாவது புது கதையை உருவாக்குகிறாளா என்ன?'

உள்ளே போன லாவண்யா பெரிய கவரை கையில் எடுத்துக்கொண்டு வந்தாள். அதிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து விஜயிடம் காண்பித்துக் கொண்டே, "இதென்ன

வாம்? இதுக்கென்ன பதில் சொல்லப் போகிறாய் நீ?" என்றாள்.

அதைப் பார்த்ததும் விஜய் லாவண்யாவை நோக்கி வேகமாய் இரண்டடி வைத்தான்.

லாவண்யா சட்டென்று மின்னல்போல் இரண்டடி பின்னாடி வைத்தவள், மிரட்டுவதுபோல் கோபமாய்ச் சொன்னாள்.

"விஜய்... ஜாக்கிரதை... அங்கேயிருந்தே பேசு. இல்லாவிட்டால் வேலைக்காரனை அழைத்து உன்னை வெளியேற்றுவேன்."

அந்தப் போட்டோவைப் பார்த்ததும், விஜய் முகத்தில் சூடான ரத்தம் பாய்ந்ததுபோல் சிவந்துவிட்டது. அது ரோஜாவின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போடும்போது எடுக்கப்பட்ட போட்டோ...

"இது...இது... உன்னிடம் எப்படி வந்தது?"

"சொல்ல மாட்டேன்..." தலையை உலுக்கிக் கொண்டாள்.

போட்டோவைப் பார்த்ததும் விஜய் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைப் பார்த்து லாவண்யாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

விஜய் லாவண்யாவை ஒருநிமிடம் கண் இமைக்காமல் பார்த்தான். லாவண்யாவின் மனதில் இருக்கும்எண்ணத்தைக் கண்டுபிடிக்க முயன்று கொண்டிருந்தான்.

அவன் மனதைப் படித்துவிட்டவள்போல் லாவண்யா, "விஜய்... நீயும், ரோஜாவும் திருமணம் செய்து கொண்டிருப்பதாக, இந்தப் போட்டோக்களைப் பார்க்கும்போது தெரிந்துவிட்டது. நீங்க ஏன் சேர்ந்து இல்லையோ உங்களுக்கு இடையில் என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளும் ஆர்வமும் இல்லை. எனக்கு வேண்டியதெல்லாம் இதில் உனக்கும் பங்கிருக்கா என்று. தேவைப்பட்டால் நிரூபிப்பது. உன்மீது எந்தவிதமான துவேஷம் இல்லை.



ஒன்று மட்டும் சொல்கிறேன். கேட்டுக் கொள்... நீ இந்த விவகாரத்தில் தலையிட்டாலோ, ரோஜாவுக்காக வாதாடினாலோ... நான் இந்தப் போட்டோக்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து உனக்கு எல்லாவிதமாகவும் இடைஞ்சலை ஏற்படுத்துவேன். நீ மட்டும் மௌனமாய் இருந்தால், நான் இதைப் பற்றிப் பேசவே மாட்டேன். இந்த ரகளையெல்லாம் முடிந்தபிறகு உன் போட்டோக்களை பத்திரமாய் உன்னிடம் ஒப்படைத்துவிடுவேன். இதை நீ மிரட்டலாய் எண்ணினாலும் சரி, நிபந்தனை என்று நினைத்தாலும் சரி, உன் விருப்பம்..."

விஜய் விநோதமான மனநிலையில் இருந்தான். வெடிக்கத் தயாராக இருக்கும் எரிமலையைப் போன்ற ஆவேசத்தை, கட்டுப்பாட்டில் கொண்டு வர அவனுக்கு ரொம்ப சக்தி தேவைப்பட்டது. தன் அலமாரியில் பத்திரமாய் வைத்திருந்த போட்டோக்கள் லாவண்யாவின் கைக்கு எப்படி வந்தனவோ அவனுக்குப் புரியவில்லை.

இரண்டே நிமிடங்களில் விஜய் சமாளித்துக் கொண்டான். அவன் முகத்தில் பழைய அமைதி மறுபடியும் குடிகொண்டது. அந்த அமைதிக்குப் பின்னால் இருக்கும் கொந்தளிப்பு அவனுக்கு மட்டும்தான் தெரியும். லாவண்யாவிடம் வேறு எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை. அவள் கையிலிருந்த போட்டோவுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாதவன்போல், அங்கே இருந்த சோபாவில் ஆற அமர உட்கார்ந்துகொண்டான். சட்டைப் பையிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து, நல்ல சிகரெட்டாய்ப் பார்த்து தேர்வு செய்து பற்ற வைத்துக் கொண்டான்.

லாவண்யாவுக்கு விஜயின் போக்குப் புரியவில்லை. மேலே பாயும் என்று நினைத்த புலியானது, சாதுவாய் நடந்து கொண்டதுபோல் வியப்படைந்தாள். விஜய் முன் தான் தோற்றுவிடப் போகிறோம் என்ற எண்ணம் அவளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. தன்னைக் கெஞ்ச வேண்டியவன், அல்லது சண்டை போட வேண்டியவன், இப்படி நிதான

மாய்ச் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருப்பது பார்த்து உடல் பற்றி எரிந்தது லாவண்யாவுக்கு...

''என்ன பதிலையே காணும்? நான் சொன்ன நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டாற் போல்தானே?'' என்றாள்.

விஜய் புருவங்களை உயர்த்தினான். ''நிபந்தனையா? அப்போ இது மிரட்டல் இல்லையா?'' என்றான்.

''நீ நிபந்தனைக்கு ஒப்புக் கொள்ளாவிட்டால், அது மிரட்டலாய் மாறும்.''

''சாதாரணமாய்க் கண்டிஷன் போடறவங்க கடைசியாய் செய்யற வேலை அதுதானே?'' என்று அலட்சியமாய்ச் சொன்னான்.

''அதெல்லாம் எனக்கு அநாவசியம். நீ ஒத்துக் கொள்வாயா மாட்டாயா?''

''என்னைக் கொஞ்சம் யோசிக்க விடு.''

இதற்குள் மாதவராவ் உள்ளே வந்தார். அவரைப் பார்த்ததும், லாவண்யா போட்டோவை உள்ளே வைத்து விட்டாள். மாதவ ராவ் விஜயைப் பார்த்து, ''விஜய் நீ இங்கே வந்தாயா? நான் உன்னைத் தேடி உன் வீட்டுக்குப் போனேன்'' என்றவாறே அவன் எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டார்.

''இப்பொழுதுதான் வந்தேன்'' சிகரெட் சாம்பலை ஆஷ் ட்ரேயில் தட்டிக் கொண்டே, சகஜமாய்ப் பதிலளித்தான்.

இப்போ அவனைப் பார்த்தவர்கள் யாராலும், சற்று முன் அவன்பட்ட ஆவேசத்தை, கொந்தளிப்பை அடையாளம் காணமுடியாது.

லாவண்யா இடையில் புகுந்து, ''விஜய்க்கு ஏதோ விவரங்கள் வேணுமாம். எனக்கு அதெல்லாம் சரியாய்த் தெரியாது. நீங்களே சொல்லிவிடுங்க'' என்று உள்ளே போய் விட்டாள். போகும்முன், தன் கையிலிருந்த கவரை



எச்சரிக்கை செய்வதுபோல் விஜய் பக்கம் உயர்த்திக் காண்பித்துவிட்டுப் போனாள்.

மாதவ ராவ் தலையைப் பிடித்துக்கொண்டார். ''விஜய், போலீஸ் டிபார்ட்மெண்டின் பொறுப்பற்ற செயலைப் பார்த்தாயா? இருக்கானா இறந்துவிட்டானா என்றுகூட சரியாய்த் தெரிந்து கொள்ளாமல், இப்படி ஸ்டேட்மெண்ட் கொடுப்பார்களா?''

புன்முறுவலுடன் விஜய் சொன்னான். ''அவர்களும் மனிதர்கள்தானே? தவறு செய்வது யாருக்கும் சகஜம். எதுவாய் இருந்தால் என்ன? அவர் உயிர் பிழைத்துக் கொண்டார்.''

''ஆமாம், அதுதான் நமக்கு வேண்டியது. நான் ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டுத்தான் வர்றேன். என்ன நடந்தது என்று ஸ்டேட்மெண்ட் கொடுக்கற வரைக்குமாவது அவருடைய உயிர் நிலைத்திருந்தால், நம் பொறுப்பு கொஞ்சமாவது குறையும். இல்லாவிட்டால் பெரிய பிரச்னை தான்.''

''அது நம் அதிருஷ்டத்தைப் பொறுத்திருக்கும்'' எழுந்து கொண்டே சொன்னான் விஜய்.

வேணுகோபாலன் இறந்துவிட்டார் என்ற நிர்மானத்தில்தான் மாதவ ராவ் லாவண்யாவுக்குத் துணையாய் நின்றார். அவருக்கு உயிர் இருப்பதாகத் தெரிந்தபோது, நண்பர் என்ற முறையில் மகிழ்ச்சி அடைந்தாலும் பிறகு தாம் சொன்னதற்கு எதிர்ப்பதமாய் அவர் வாயிலிருந்து ஏதாவது வெளிவந்தால் தன்னுடைய நிலைமை இக்கட்டாகி விடும் என்ற பயம் அவரைப் பிடுங்கி எடுத்தது.

லாவண்யா சொன்னது உண்மையென்றால் பரவாயில்லை. ஒருக்கால் பொய்யாக இருந்துவிட்டால், அவசரப்பட்டு லாவண்யாவுக்குத் துணை போனதற்கு, உள்ளூர வருத்தமடைந்தாலும், தேவைப்பட்டால் தான் சொன்னது சரி என்று வாதனை புரிய நிச்சயித்துக் கொண்டார்.

இந்தக் காலத்தில் நியாயம் எங்கே இருக்கு? வக்கீல்கள் வாதாடுவதுதானே நியாயம். உண்மையோ பொய்யோ... சாட்சியங்களுடன் நிரூபித்துவிட்டால் அதுதான் உண்மை... வேணுகோபாலன் பிழைத்துக் கொண்டுவிட்டார் என்று தெரிந்ததும், அவர் தன் வீட்டு வேலைக்காரர்களையும், வேணுகோபாலன் வீட்டுச் சமையல்காரன், டிரைவர், மாலி இவர்களைப் பணத்தால் விலை பேசிவிட்டார், எதற்கும் இருக்கட்டும் என்று.

# 76

இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றாவது நாள் அன்று காலையிலிருந்தே பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. விஜய் அலைந்து திரிந்து மதியம் மூன்று மணிக்குமேல் வீட்டுக்கு வந்தான். அவனுக்குப் பசி, தாகம், உறக்கம் எதுவும் இருப்பதாக உணரவில்லை.

வேணுகோபாலன் உயிருக்கு இனி பயமில்லையென்று டாக்டர்கள் நேற்று உறுதிப்படுத்தியிருந்தார்கள். ஆனால் அந்த மகிழ்ச்சி ரொம்ப நேரம் நிலைக்கவில்லை. இன்று மறுபடியும் அவருடைய நிலைமை கவலைக்கிடமாய் மாறி விட்டது.

விஜய், வேணுகோபாலன் வீட்டு டிரைவரை, சமையல் காரனை, மாலியைத் தனித் தனியாய்ச் சந்தித்துப் பேசினான். அவர்கள் சொன்ன பதில்கள் ஒரே மாதிரியாய் இருந்தாலும், அதை வைத்துக்கொண்டு எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை. அக்கம் பக்கத்தில் இருக்கும் பங்களா வாட்ச்மேன்கள் சொன்ன பதில்கள் வேறுவிதமாய் இருந்தன.

வேணுகோபாலனின் கார் அன்று மாலையில் வெளியில் போனபிறகு ஒரு டாக்ஸி வந்ததாகவும், அந்நியன் ஒருவன்



இறங்கி அந்த வீட்டிற்குள் போனதைப் பார்த்ததாக ஒரு வாட்ச்மேன் சொன்னான். எதிர்வீட்டிலிருக்கும் ஆயா, ரோஜா அந்த வீட்டுக்கு நடந்து வந்ததைத்தான் பார்த்த தாகச் சொன்னாள்

வீட்டிலிருந்து லாவண்யா வெளியில் போனதையோ, திரும்பி வந்ததையோ ஒருவரும் பார்க்கவில்லை. வேணு கோபாலனின் கார் வெளியே போனதால், லாவண்யா அதில் போயிருப்பாள் என்று சிலரும், மாட்டாள் என்று சிலரும் அபிப்பிராயங்களை வெளியிட்டனர்.

மாதவ ராவ் வீட்டு வேலையாட்கள் மட்டும் லாவண்யா அன்று மாலை அவர்கள் வீட்டுக்கு வந்திருந்ததாக உறுதி யாகச் சொன்னார்கள். தலையும், வாலும் இல்லாத இந்தப் பதில்களைக் கேட்டு விஜயின் மூளை குழம்பிவிட்டது. இந்தக் கேசின் புதிர் விடுபட வேண்டுமென்றால், இரண்டு வழிகள்தான் இருக்கு. ஒன்று வேணுகோபாலன் உயிர் பிழைத்து, நடந்தது என்னவென்று தெளிவாகச் சொல்ல வேண்டும். இரண்டாவது... சந்திரன் நேரில் வந்து, தான் அந்த வீட்டுக்கு எதுக்காகப் போனானென்றும், என்ன செய் தானென்றும் விளக்க வேண்டும்

தற்போதைக்கு இந்த இரண்டு விஷயங்களும் நடைபெறு வதாக இல்லை.

விஜய் சற்று முன்தான் சங்கரன் வீட்டுக்குப் போய் வந்தான். சங்கரன் வீட்டில் இல்லையென்று சுந்தரி சொன் னாள். ரோஜாவின் நலனைப் பற்றிக் கவலைப்பட்டு ஒப்பாரி வைக்கப் போனவளைத் தடுத்து, ஆறுதல் சொல்லி, ரோஜா தன் வீட்டிலிருப்பதாகவும், சங்கரன் வீட்டுக்கு வந்ததும், இருவரையும் தன் வீட்டுக்கு வரச் சொன்னான். சங்கரனுடன் தான் முக்கியமாய்ப் பேசவேண்டும் என்றும் கட்டாயம் வரச் சொல்லிவிட்டு வந்தான். ரோஜாவைப் பார்க்க வேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்த சுந்தரி, அப்படியே செய்வதாக வாக்களித்தான்.

எத்தனை முயற்சி செய்தாலும் விஜயால் சந்திரனைப்

பற்றி எந்தத் தகவலையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ரோஜா அரெஸ்ட் ஆன சமாசாரம் சந்திரனுக்குத் தெரிந்தால், எங்கேயிருந்தாலும் ரோஜாவைப் பார்க்கத் தன் வீட்டுக்குக் கட்டாயம் வருவான் என்ற நம்பிக்கை அவன் மனதில் வேரூன்றி இருந்தது.

ஆனால் இரண்டு நாட்கள் சென்றபிறகும் சந்திரன் வரவும் இல்லை. போனும் செய்யவில்லை. விஜய்க்குச் சந்தேகம் ஏற்படத் தொடங்கிற்று. சந்திரன் எந்த நிலையில் இருக்கானோ? அவனுக்கு ரோஜா அரெஸ்ட் ஆன செய்தி தெரிந்ததோ இல்லையோ? ஒருக்கால் தெரிந்தும் வர முடியாத நிலையில் இருக்கிறானோ என்று நினைக்கத் தொடங்கினான்.

சரஸ்வதியின் புண்ணியமாக விஜய், ரோஜாவை இணைத்து நிறைய கதைகள் உலாவத் தொடங்கின. ரோஜாவை ஜாமீனில் விடுவித்துத் தன் வீட்டில் வைத்துக் கொண்டதற்காக விஜய் நிறைய விமரிசனங்களை எதிர் கொள்ள வேண்டி வந்தது. எங்கே போனாலும் கேள்விகள் அவனைத் தொடர்ந்தன.

'என்னப்பா? அந்தப் பெண் உன் வீட்டில் இருப்பானேன்? அவளிடம் என்ன அப்படி தனிப்பட்ட அக்கறை?'' என்று சில பேர் நேராகவே கேட்டு விட்டார்கள்.

பதில் பேச முடியாமல் மௌனமாய் இருந்து விட்டான். அவனது மௌனம் அவர்களுடைய சந்தேகத்தைப் பலமடங்காக்கி விட்டது.

''சாயம் வெளுக்காத வரையில் எல்லோரும் பெரிய மனுசங்கதான்.''

''வேறு யாராவது இருந்தால் நம்பலாம்... ஆனால் நீ இப்படி நடந்து கொள்வது விசித்திரமாயிருக்கு...'' என்று முகத்திலடித்தாற்போல் சொல்லும்போது, விஜய் வலுக் கட்டாயமாய் இந்த அவமானங்களை விழுங்கிக் கொண்டான்.



இந்தக் கேஸ் முடியும்வரை தான் மௌனமாயிருப்பது தான் நல்லது என்று அவனுக்குத் தோன்றியது. அன்று அலைந்து திரிந்து மதியம் மூன்று மணியளவில் வீட்டுக்கு வந்த விஜய் களைத்துப்போய் ஆபீஸ் அறையில் உட்கார்ந்து கொண்டான்.

வெளியில் ஜோவென்று மழை பெய்து கொண்டிருந்தது. வேகமாய் வீசும் காற்றும் சேர்ந்துகொள்ள, மழையின் தீவிரம் அதிகமாயிருந்தது. மூடியிருந்த ஜன்னல் கதவுகளின் மேல் சாரல் அடித்து, அதிரச் செய்தது.

விஜய், வேணுகோபாலனின் நிலைமையைத் தெரிந்து கொள்ள, ஆஸ்பத்திரியிலிருந்து போன் வருமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். காலையிலிருந்து விடாமல் மழை பெய்வதால், மறுபடியும் ஆஸ்பத்திரிக்குப் போவது சாத்தியமில்லை என்று தோன்றியதால், காலையில் அங்கு போன போதே அவரைப் பார்த்துக் கொள்ளும் நர்ஸிடம் தனக்கு ஒருமணிக்கு ஒருதடவை போன் செய்து, அவருடைய உடல் நிலைமையைப் பற்றி தெரிவிக்கும்படி சொல்லிவிட்டு வந்திருந்தான்.

கடந்த சில நாட்களாகவே சரியான தூக்கம் இல்லாததால் விஜய்க்கு கண்கள் எரிவதுபோலிருந்தது. நாற்காலியில் சாய்ந்தவாக்கில் அமர்ந்தபடியே கண்களை மூடி, நெற்றிப் பொட்டை நீவி விட்டுக் கொண்டிருந்தான்.

லக்ஷ்மி, பாத்ரூமில் துணிகளை தோய்த்துக் கொண்டிருந்தாள். அந்தச் சத்தமே அவனுக்கு தலையில் இடி இடிப்பது போல் கர்ண கடூரமாயிருந்தது.

எழுந்து சென்று லக்ஷ்மியைத் துணிகளைத் துவைக்க வேண்டாமென்று சொல்ல நினைத்தாலும், நாற்காலியிலிருந்து எழுந்துகொள்ள உடல் ஒத்துழைக்காததால் அப்படியே இருந்து விட்டான்.

அதற்குள் வாசற்கதவை யாரோ தட்டிய சத்தம் கேட்டது... சங்கரனோ, நாராயணனோ வந்திருக்கக்கூடும்...

களைத்துப் போயிருந்த விஜய்க்கு எழுந்துகொள்ள சோம்பலாயிருந்தது.

"லக்ஷ்மி" என்று குரல் கொடுத்தான். அவளுக்குக் காதில் விழவில்லை போலும்; பதில் வரவில்லை. கதவை மறுபடியும் தட்டப்படுகிற ஒலி கேட்டது. அந்தத் தட்டலில் ஏதோ அவசரம், துடிப்பு இருந்ததை உணர்ந்த விஜய், சட்டென்று போய்க் கதவைத் திறந்தான்.

எதிரே ஒரு இளைஞன் ராஜஸ்தானி பாணியில் தலையில் முண்டாசைச் சுற்றி, தோளில் சால்வையைப் போர்த்தி இருந்தான். விஜய் கதவைத் திறந்ததும், சட்டென உள்ளே வந்து விட்டான்.

"யார் நீங்க? என்ன வேணும்?" என்று விஜய் தீவிரமாய் கேட்டான். விஜயின் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலேயே, வந்தவன் வாசற் கதவைச் சாத்தினான்.

விஜயின் கண்கள் வந்தவனை தீட்சண்யமாய்ப் பரிசீலித்தன... அவன் மதியில் ஏதோ மின்னுவது போலிருந்தது, அவன் ஊகித்தது சரிதான்.

"விஜய்... உங்களுக்கு என்னை அடையாளம் தெரியவில்லையா?" சந்திரன் முண்டாசை எடுத்தான்.

"சந்திரன்" வியப்பும் ஆச்சரியமும் கலந்திருந்தது விஜயின் குரலில்.

"வெளியில் டாக்ஸி இருக்கு, பணம் தரணும்" என்று சந்திரன் பணத்தை எடுத்தான்.

"இரு... நான் கொடுத்துவிட்டு வருகிறேன்!" விஜய் வெளியே சென்றான்.

மழை குறைந்திருந்தாலும், சிறு தூரல் இருந்துகொண்டுதானிருந்தது. டாக்ஸியின் மீட்டரைப் பார்த்ததும் விஜயின் புருவங்கள் உயர்ந்தன. சந்திரன் வெகு தொலைவிலிருந்து வந்திருக்க வேண்டும். பணத்தைக் கொடுத்து, டாக்ஸியை அனுப்பிவிட்டு உள்ளே வந்தான் விஜய்.

"இப்போ யாராவது இங்கே வருவாங்களா?" என்று



சந்திரன் பதட்டத்துடன் கேட்டான்.

"வந்தால் உங்க மாமாதான் வருவார்; வேறு யாரும் வர வாய்ப்பில்லை..."

இருவரும் ஆபீஸ் அறைக்கு வந்தார்கள்.

"ரோஜா இங்கு தானே இருக்கிறாள்?" என்று கேட்டான்.

"ஆமாம்."

"விஜய்! உங்க உதவியை நான் எப்போதும் மறக்க மாட்டேன்..." குரல் கம்மிவிட்டது சந்திரனுக்கு.

"உதவியா? நானா? என்ன செய்து விட்டேன்?"

"ரோஜாவை ஜாமீனில் விடுவித்து, யாருக்கும் பயப்படாமல், உங்க கௌரவத்தைப் பற்றி பொருட்படுத்தாமல், உங்கள் வீட்டில் அடைக்கலம் தந்ததற்கு..."

"அதுவா... அதில் என் சுயநலமும் கலந்திருப்பதாக, நீ ஏன் நினைக்கக் கூடாது?"

சந்திரன் பேசவில்லை. விஜய் அவனையே கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"விஜய்... ஐயாம் சாரி! அன்று பூனாவில் உங்களைச் சந்திக்க முடியவில்லை" என்றவாறே சந்திரன் சால்வையை எடுத்து பக்கத்திலிருந்த நாற்காலிமீது போட்டான்.

அப்பொழுதுதான் பார்த்தான் விஜய், சந்திரன் கையில் இருந்த சூட்கேசை. அதைப் பார்த்ததும் திடுக்கிட்டான். அந்த சூட்கேஸ் லாவண்யாவோடது. விஜய், அவளுக்காக டில்லியிலிருந்து வாங்கி வந்த சூட்கேஸ் அது.

"என்ன... அப்படிப் பார்க்கறீங்க? இது எப்படி என்னிடம் வந்தது என்றுதானே?" வலிய சிரித்துக்கொண்டே கேட்டான் சந்திரன்.

"ஆம்" என்பதுபோல் தலை அசைத்தான் விஜய்.

"இது யாரோடது என்று நான் தனியாக உங்களிடம்

சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன். இந்த வேணுகோபாலன் வீட்டு நகைகளிருக்கு. அன்று அந்த வீட்டிலிருந்து திருடி எடுத்துச் சென்றது. நான் அதை அப்படியே உங்களிடம் ஒப்படைக்க வந்திருக்கிறேன்."

சந்திரன் சூட்கேசை மேஜைமீது வைத்து திறந்து காண்பித்தான். பளபளவென்று மின்னும் நகைகள். எல்லாம் விஜய் அறிந்தவைதான். அவற்றைப் பார்த்ததும் விஜய் முகம் கற்பாறை போல் இறுகியது. மனதை யாரோ பாறாங்கல்லைக் கட்டி கிணற்றில் தள்ளிவிட்டது போல் தோன்றியது.

தான் ஊகித்ததே நிஜமாகி விட்டது. ரோஜா அப்பாவி ஒன்றும் இல்லை. அவளும், சந்திரனும் சேர்ந்துதான் இந்த வேலையைச் செய்திருக்கிறார்கள். ரோஜா தன்னிடம் பேசியது, சொன்னது எல்லாம் வெறும் நடிப்புதான்...

சந்திரன் பெட்டியை மூடிவிட்டு வேதனை நிறைந்த குரலில், "விஜய்... நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்" என்றான்.

தவிப்பாய் ஒலித்த அந்தக் குரலைக் கேட்டு விஜயின் மனம் இளகவில்லை, மென்மையான உணர்ச்சி ஏதோ மெல்ல மெல்லமாய் இறுகி, கல்லாக மாறிவிட்டது போலிருந்தது.

கடினமான குரலில் சொன்னான், "என்ன சொல்லப் போகிறாய்? இந்த திருட்டை நான் செய்யவில்லை. எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றா?"

"இல்லை... இல்லை... இந்தத் திருட்டை நான்தான் செய்தேன். இதெல்லாம் நடக்க, நான்தான் காரணம்... என்னால்தான் அவருக்கு இந்த ஆபத்து வந்தது... ஆனால் இதில் ரோஜாவுக்கு எந்தச் சம்பந்தமும் கிடையாது; அவளுக்கு ஒன்றும் தெரியாது."

ரோஜாவைப் பற்றி பேச்சு வந்ததும் விஜய் முகம் இன்னும் இறுகியது. "ஓஹோ... இதுவா விஷயம்? ரோஜா



களங்கமற்றவள் என்று சொல்லி, தன்மீது பழி போட்டுக் கொள்ள வந்திருக்காய் அருமைத் தம்பி!"

விஜய் கண்டிப்பான குரலில், "சந்திரன் விஷயம் இத்தனை தூரத்துக்கு வந்த பிறகும், நீ இன்னும் அதை மறைக்க முயற்சிப்பதைப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது எனக்கு... ரோஜாவுக்கு இதில் எந்த சம்பந்தமுமில்லை என்கிறாய்... உண்மையென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் ரோஜாவின் பிரமேயமில்லாமல், அவள் உதவி செய்யாமல் அந்த வீட்டுக்கு எப்படி வந்தாய்? அந்த வீட்டைப் பற்றிய விவரங்கள் உனக்கு எப்படித் தெரியும்? அதையாவது சொல்லு."

சந்திரன் பதில் அளிக்கவில்லை.

"நீ அந்த வீட்டில் நுழைவதற்கு, கட்டாயம் யாரோ ஒருத்தர் உதவி செய்திருக்க வேண்டும்... இல்லையா?" என்றான்.

சந்திரன் குனிந்த தலை நிமிரவில்லை. அவனுடைய மௌனம் விஜய்க்கு ஆத்திரமூட்டியது.

"ரோஜாவாக இல்லாத போது அந்த நபர் யாரென்று சொல்வதில் ஏன் இந்தத் தயக்கம்? சொல்லு... ஏன் பேச மாட்டேங்கிறாய்?" இரட்டித்தாற்போல் கேட்டான் விஜய்.

"விஜய்... நீங்க எது சொன்னாலும் செய்கிறேன். தயவு செய்து இந்த விஷயத்தை மட்டும் என்னைக் கேட்காதீங்க. என்னால் சொல்ல முடியாது" என்றான்.

அறையில் சற்று நேரம் பயங்கரமான மௌனம் நிலவியது. விஜயின் கண்கள் சந்திரனைத் தீவிரமாய்ப் பரிசீலித்துக் கொண்டிருந்தன.

சற்று நேரம் கழித்து விஜய் திடமான குரலில், "உன்னால் அந்த விஷயம் சொல்ல முடியாத போது, உன்னை நான் வற்புறுத்துவதில் நியாயமில்லை. ஆனால் இதில் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. ரோஜாவைப் போலீசாரிடம் ஒப்படைக்க வேண்டியதுதான். இதில்

அவளுக்குப் பங்கு இருக்கா இல்லையா என்று அவர்களே முடிவு செய்து கொள்ளட்டும்" என்றான்.

"விஜய்..." சாட்டை அடிபட்டவன் போல் பார்த்தான் சந்திரன்.

அந்தப் பார்வையில் விஜயின் மனம் இளகவில்லை. வேண்டுமென்றே இன்னும் கொஞ்சம் கடுமையாய், "நீ சொல்ல விரும்பவில்லை என்பதிலிருந்தே தெரிகிறது. அந்த நபர் ரோஜாவாகத்தான் இருக்க வேண்டும். அவளுக்குத்தான் அந்த வீட்டில் எது எங்கே இருக்கிறதென்று நன்றாகத் தெரியும். ரோஜாவை அந்த வீட்டில் மகளைப்போல் வைத்திருந்தார்கள். ச்...சீ... எப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகம்... இதைவிடக் கொடுமை வேறு எதுவும் இருக்க முடியாது" என்றான்.

சந்திரன் சட்டென்று விஜயின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டான்... அவன் முகத்தில் வேதனை தென்பட்டது.

"விஜய்... நீங்க தவறாகப் புரிஞ்சுகிட்டிருக்கீங்க. கடவுள் மீது ஆணையாய்ச் சொல்றேன்...ரோஜாவுக்கு ஒன்றும் தெரியாது... அவளுக்கு இதில் எந்தச் சம்பந்தமும் இல்லை" என்றான்.

"ரோஜா இல்லாவிட்டால் வேறு யாரு? வேறு யார் இதில் சம்பந்தப்பட்டிருக்க முடியும்?" முகத்தில் அடித்தாற் போல் கோபமாய்க் கேட்டான்.

"விஜய்" சந்திரன் இயலாதவன் போல் பார்த்தான்.

"அந்த நபர் ரோஜாவாக இல்லாதபோது, உனக்கு இந்தத் தயக்கம் எதுக்கு? நீ சொல்வதுபோல் ரோஜா குற்ற மற்றவளாக இருந்தால், அவளைக் காப்பாற்ற வேண்டு மென்று நீ மனப்பூர்வமாய் நினைத்தால், அந்த நபர் யாரென்று என்னிடமில்லாவிட்டாலும், போலீசாரிடமாவது சொல்லித்தானாக வேண்டும். ரோஜாவின் நலனைக்கூடப் பொருட்படுத்தாமல், நீ அந்த நபரை ரகசியமாக வைக்க நினைத்தாயானால் இதில் நான் என்ன செய்ய முடியும்?"



"விஜய்... நான்... நான்..." அவனுடைய கைகளை விட்டுவிட்டு, சந்திரன் நாற்காலியில் சரிந்தான்.

"விஜய் அந்த நபரைப் பற்றி வெளியில் சொல்லாமல் இருக்க வழியே இல்லையா?"

"இருக்கு..." விஜய் சட்டென்று சொன்னான்.

சந்திரன் தலை உயர்த்தி தவிப்புடன் கேட்டான் "என்னது அது?"

"ரோஜா மீது குற்றத்தைச் சுமத்திவிடுவது. அந்த நபர் உனக்கு அவ்வளவு முக்கியம் என்றால் அது ஒன்றுதான் வழி."

"இல்லை...இல்லை. ரோஜாவுக்கு எந்த ஆபத்தும் வரக் கூடாது..." சந்திரன் இரு கரங்களில் முகம் புதைத்து, மேஜைமீது சாய்ந்து கொண்டான். அமைதியின்மையினால் அவன் தலை அப்படியும் இப்படியும் அசைந்தது.

சந்திரன் ஏதோ புதைகுழியில் சிக்கிக் கொண்டிருக்கிறான் என்றும், அதை வெளியில் சொல்ல முடியாமலும் உள்ளேயே வைத்திருக்க முடியாமல் அவதிப்படுகிறான் என்றும் விஜயின் உள்மனம் கண்டுகொண்டது.

சற்று நேரம் ஏதோ யோசித்தவன், சந்திரன் பின்னால் நின்று, தலையைப் பரிவுடன் வருடிக் கொண்டே, "சந்திரன் மனப்பூர்வமாய்ச் சொல்கிறேன்... உன்னிடம் எனக்கு அன்பு இருக்கு... துரதிருஷ்டவசமாய் நீ மாட்டிக்கொண்ட விஷ வளையத்திலிருந்து உன்னை மீட்க வேண்டும் என்று நான் நினைக்காத நேரம் இல்லை. நீயும் உதவி செய்தால் என் வேலை எளிதாக முடியும். ரோஜா குற்றவாளியில்லை என்று நம்பியதால்தான், அவளை ஜாமீனில் விடுவித்து என் வீட்டுக்கு அழைத்து வந்தேன். நான்கு பேர் எள்ளி நகையாடியபோதும் பொறுத்துக் கொண்டேன்... சந்திரன் உனக்கும் ரோஜாவுக்கும் நான் செய்ய நினைக்கும் இந்த உதவி, விஷப்பாம்பாய் என் கால்களையே சுற்றிக்கொள்ளும் ஆபத்தை வரவிடாதே... இதுதான் நான் உன்னை வேண்டுகிறேன்..."

அன்பும், ஆதரவும் மழையாய் பொழிந்த அந்த சொற்களில் சந்திரன் இளகிவிட்டான்...

தன் தலையை வருடிக் கொண்டிருந்த விஜயின் கையைச் சட்டென்று இழுத்து அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்... அவன் குரல் தழுதழுத்தது...

"விஜய் உங்க உதவியை மறக்க மாட்டேன்! ஒருவிதமாய்ப் பார்த்தால் நானும், ரோஜாவும் கொடுத்து வைத்தவர்கள்."

"அவ்வளவு பெரிய வார்த்தைகள் சொல்லாதே! உண்மையை எந்தத் தயக்கமும் இல்லாமல் என்னிடம் சொல்லு. உனக்கு ரொம்ப வேண்டிய நபராய் இருந்தால், நானும் அந்த நபரைப் பற்றிய விவரங்கள் வெளிவராமல் பார்த்துக் கொள்வேன். நடந்தது என்னவென்று தெளிவாய்த் தெரிந்தால்தான் இந்தக் கேசை எடுத்துக்கொண்டு உனக்கு நியாயம் கிடைக்க வழி செய்ய முடியும்."

"விஜய்... என்னால் எப்படிச் சொல்ல முடியும்?"

"பெயர் மட்டும் சொல்லு... போதும்."

"அந்தப் பெயரை என் வாயால் சொன்னால், உயிரோடு இருக்கும்போது, நான் இறந்துவிட்டவன்போல் ஆகிவிடுவேன்..." என்றான்.

"ஆகட்டும்! அது இன்னும் நல்லது. பழைய வாழ்க்கையில் இறந்துவிட்டு, புதிய வாழ்க்கையைத் தொடங்கு..."

சந்திரன் மேலும் தயங்கினான்.

"சொல்லு சந்திரன்... யார் அந்த நபர்?" கெஞ்சுவது போல் கேட்டான் விஜய்...

"அந்த நபர்...வேணுகோபாலனின்..."

"சமையல்காரனா?"

சந்திரன் இல்லையென்பதுபோல் தலை அசைத்தான்.

"பின்னே டிரைவர் ராமுவா?"

"இல்லை... அவர் மகள் லாவண்யா..."



தலைமீது இடி விழுந்தாற்போல் பார்த்தான் விஜய்.

"லாவண்யாவா? நீ சொல்வது லாவண்யாவையா?"

"ஆமாம் விஜய்... அவளைத்தான்."

கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது விஜய்க்கு... அவனால் நம்ப முடியவில்லை லாவண்யா வேறு ஏதாவது செய்வாளாயிருக்கும். ஆனால் தன் வீட்டிலேயே திருடுவாளா? தன் தந்தையைக் கொலை செய்யத் துணை போவாளா? நடக்கவே நடக்காது. விஜய்க்குத் தலை சுற்று வதுபோல் இருந்தது... சந்திரன் குற்றத்தை லாவண்யாமீது தள்ளிவிடும் திட்டத்துடன் வந்திருப்பானோ? குழப்பமாக இருந்தது அவனுக்கு...

சந்திரன் மெதுவாக, "விஜய்...லாவண்யாவின் பெயர் வெளியில் வராமல் இருக்கும் வழி ஏதாவது இருக்கா?" என்றான்.

விஜய் அவன் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை...சந்திரனின் ஷர்ட்டை இருகரங்களால் கொத்தாய் பிடித்து உயரே தூக்கினான்...கோபம் கட்டுக்கடங்காமல் போயிற்று.

"நீ சொல்ல வந்தது என்ன? இதில் உனக்கு உதவி செய்தது லாவண்யாவா? சந்திரன் கடைசி முறையாய்க் கேட்கிறேன். நடிப்பதை விட்டுவிட்டு உண்மையைச் சொல்லப் போகிறாயா இல்லையா? நீ பொய் சொல்லச் சொல்ல, அது உனக்கும் ரோஜாவுக்கும் ஆபத்தாய்த்தான் முடியும்."

"விஜய், நான் உண்மையைத்தான் சொல்கிறேன். இதில் ஒரு வார்த்தைகூடப் பொய் இல்லை."

"ஷட்டப். லாவண்யாவுக்கும் உனக்கும் அறிமுகம் இல்லையே! முன்பின் தெரியாத உன்னை லாவண்யா வீட்டுக்கு அழைத்தாள் என்றால், என்னால் எப்படி நம்ப முடியும்?"

சந்திரன் தன் ஷர்ட்டை விஜயின் பிடியிலிருந்து மெதுவாய் விடுவித்துக் கொண்டான்... மேஜைமீது இருந்த

சூட்கேசைத் திறந்து, அதன் அடியில் பத்திரமாக வைக்கப் பட்டிருந்த உயிலை எடுத்துக் கொடுத்தான்.

"விஜய்...லாவண்யாவுக்கு என்னை ஜேம்ஸ் என்ற பெயரில் ரொம்ப நாளாகத் தெரியும். எங்களுடையது அறிமுகம் என்பதைவிட நட்பு என்றே சொல்லலாம். இதோ! இது வேணுகோபாலன் எழுதிய உயில்! இதில் லாவண்யாவுக்கு அநியாயம் ஏற்படுவதுபோல் எழுதப்பட்டி ருப்பதாக சரஸ்வதி ஆன்ட்டீ சொன்னாளாம்... வீட்டில் யாரும் இல்லாத அந்தநாள், மாலை வேளையில் என்னை வரச்சொல்லி போன் செய்தாள். நான் போனேன்... எதிர் பாராமல் அவர் வந்துவிட்டார். லாவண்யா பதட்ட மடைந்து விட்டாள்...நானும்..."

சந்திரன் சுருக்கமாய் அன்று மாலை நடந்த நிகழ்ச்சியை அப்படியே விவரித்தான்.

மேஜை விளிம்பை ஒட்டினாற்போல் நின்றுகொண்டு சந்திரன் சொல்வதை, ஒன்றுவிடாமல் கவனமாய்க் கேட்டுக் கொண்டு இருந்த விஜய் வாயடைத்துப் போனவனாய், கல்லாய்ச் சமைந்து விட்டான். அவன் மூளை மரத்துப் போனாற்போல் இருந்தது. லாவண்யா எங்கே? சந்திரன் எங்கே? இவர்களின் அறிமுகம் ஆனது விதியின் விளை யாட்டா? இல்லை விபரீதமா?"

சந்திரன் நாற்காலியில் சரிந்துகொண்டே சொன் னான்...

"ரொம்ப நேரம் காத்திருந்த பிறகும் லாவண்யா வராமல் போகவே, நான் ஹோட்டலுக்குச் சென்றேன். அன்றிரவு முழுவதும் உறங்கவில்லை. மேரியைப் போன் செய்யச் சொன்னேன்—யாரும் எடுக்கவில்லை. லாவண்யா வும் என்னுடன் வருகிறாள் என்ற எண்ணத்தில் நகைகளை எடுத்து வந்து விட்டேன். அவற்றை என்ன செய்வது? எங்கே வைப்பது? எனக்குப் புரியவில்லை. மறுநாள் இரவு என்னைக் கல்கத்தா போகச் சொல்லி மேலிடத்திலிருந்து எனக்கு உத்தரவு வந்தது. பத்து நாட்களாவது ஆகும்



நான் திரும்பி வர. அதுவரை நகைகளை எப்படிப் பாது காப்பது?

மறுநாள் பேப்பரில் ரோஜாவின் போட்டோவும், அந்தச் செய்தியைப் படித்ததும் என் உயிரே போய்விட்டது. ரோஜா தங்கள் வீட்டுக்கு வருவதில்லை என்றும், ஏதோ சண்டை போட்டு நின்று விட்டதாக லாவண்யா சொல்லி இருந்தாள். அப்படியிருக்கும்போது... அந்த நேரத்தில் அங்கு எப்படி வந்தாளோ, அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம் மேலிடத் துக்கு சந்தேகம் வராமலிருக்க மறுநாள் காலை ப்ளைட்டுக்கு டிக்கெட் ரிசர்வ் செய்துவிட்டு கல்கத்த வுக்குச் செய்தியும் அனுப்பி விட்டேன், நான் வரப் போவதாய்.

ஹோட்டல் அறையைக் காலி செய்து, ஏர்போர்ட்டுக்குக் கிளம்பியதாகப் போக்குக் காட்டி விட்டு, நடுவிலேயே பாதையை மாற்றி, இங்கிருந்து 50 கி.மீ. தொலைவிலிருக்கும் ஒரு கிராமத்துக்குச் சென்றேன். அங்கே ஒரு நண்பருடைய வீடு இருக்கு. நானும் மேரியும் சிலசமயம் அங்கு போய் தங்கி வருவது வழக்கம்தான் அன்று முழுவதும் அங்கே இருந்து விட்டு அன்றிரவு மறுபடியும் இங்கு வந்தேன். உங்களைச் சந்திக்க முயற்சித்தபோது, நீங்க ஊரிலிருந்து வந்து விட்டீர் களென்று தெரிந்தது. நான் கல்கத்தாவுக்குப் போகவில்லை யென்ற செய்தி மேலிடத்துக்கு இந்நேரம் தெரிந்து இருக்கும்.

ஏதாவது காரணத்தால் எங்களால் சொன்னபடி போக முடியாவிட்டால், அதற்கான சீக்ரெட் கோட் அனுப்ப வேண்டும் நான் அதையும் அனுப்பவில்லை. வேணு கோபாலன் வீட்டில் நடந்த கொலை, கொள்ளைகளில் என் பங்கு இருப்பதாக, பேப்பரில் பிரசுரிக்கப்பட்ட செய்தி களிலிருந்து அவர்களுக்குத் தெரிந்திருக்கும். இதற்கான விளக்கத்தை நான் அவர்களிடம் சொல்ல வேண்டும். எனக்காக, போலீசாரும், எங்கள் கூட்டத்தினரும் வேட்டை அடிக்கொண்டிருப்பதால் திக்குமுக்காடி விட்டேன். இந்த விஷயத்தில் மாட்டிக்கொண்ட என்னை உங்களால்தான்

காப்பாற்ற முடியும் என்று தோன்றியது. நேற்று மாலை இந்தத் தெருவுக்கு வந்தேன். ஆனால் போலீஸ் ஜீப் வாசலில் நின்றிருந்ததால் திரும்பிப் போய் விட்டேன். விஜய்! நடந்ததை அப்படியே உங்களிடம் சொல்லி விட்டேன். லாவண்யாவைப் பற்றி முதலிலேயே சொல்லாததற்கு காரணம், அவ ஒரு நல்ல குடும்பத்துப் பெண். அவளுக்கு இதில் பங்கிருப்பதாக வெளியில் தெரியறதில் எனக்கு விருப்பமில்லை. நீங்க எது சொன்னாலும் செய்யறேன். ரோஜா மீது அநியாயமாய் சுமத்தப்பட்ட குற்றம் நீங்கிவிடணும் என்பது தான்."

அதன்பின் ரொம்ப நேரம் மௌனம் நிலவியது. கம்மி விட்ட குரலில் விஜய், "சந்திரன் தவறாக நினைக்கா விட்டால் ஒரு கேள்வி. உனக்கும் லாவண்யாவுக்குமிடையே இருக்கும் உறவு..." நடுவிலேயே நிறுத்தி விட்டான் விஜய்.

இந்தக் கேள்விக்குச் சந்திரனின் முகம் வெந்துபோயிற்று. "வெறும் நண்பர்கள் தான்! நான் என்றுமே அந்த எல்லையைத் தாண்டியதில்லை..."

இந்தப் பதிலைக் கேட்டதும், இதயம் இலேசாகிவிட்டது போல் மூச்சைவிட்டுக் கொண்டான் விஜய். சந்திரன் சொன்னது எல்லாம் முற்றிலும் உண்மையென்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது.

இந்தக் கொலை, கொள்ளை முயற்சியில் லாவண்யாவுக்கும் பங்கு உண்டு என்பது எதிர்பாராத புதிய திருப்பம். விஷயம் போலீஸார் வரை போகாமலிருந்தால் அது வேறு விஷயம். இப்போ இத்தனை ஆன பிறகு சுமுகமாய் விஷயத்தை முடிப்பது கஷ்டம்தான்.

மேஜைமீது முழங்கைகளை ஊன்றி தலைமுடியில் கைவிரல்களை விட்டுக் குழப்பமாய் சூனியத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரன்.

அவனுக்கு அருகிலேயே கைகளைக் கட்டிக் கொண்டு, மேஜை விளிம்பில் சாய்ந்து, சூழ்நிலையை மறந்து போன



வனாய் நின்றிருந்தான் விஜய்.

ரொம்ப நேரம் கழித்து, சந்திரன் தலை உயர்த்தி, பலவீனமான குரலில், "விஜய்... இரண்டு நாட்களாக எதுவும் சாப்பிடவில்லை. வெட்கத்தைவிட்டு கேட்கிறதுக்கு மன்னிக்கணும். எனக்கு ரொம்ப பசியாயிருக்கு. கண்கள் இருட்டிக்கொண்டு வர்றது..." என்றான்.

விஜய் திடுக்கிட்டாற்போல் பார்த்தான்.

"அடடா! அப்பவே சொல்லுவதற்கு என்ன? இரு... இப்பவே வர்றேன்" என்று பரபரவென்று சமையல் அறைப் பக்கம் போனவன், அங்கே பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்த லக்ஷ்மியைப் பார்த்து, "லக்ஷ்மி, சாதமிருக்கா... ஒரு ஆளுக்குத் தேவையான அளவு" என்று கேட்டான்.

"இல்லையே தம்பி. அடியிலிருந்த கொஞ்சம் சாதத்தைக் குழம்பு போட்டு இப்பத்தான் சாப்பிட்டேன். வேணும்னா நிமிஷமாய்ப் பொங்கி போட்டு விடுவேன்..." என்றாள் லக்ஷ்மி.

"சட்டுன்னு சமையல் ஆகட்டும்! கறிகாய் இருக்கா பாரு. முதல்லே ரெண்டு கப் காபி கலந்து தா" என்றான்.

விஜய் பிஸ்கெட் ஏதாவது இருக்கா என்று டப்பாக்களை திறந்து பார்த்தான். அனந்த் இருந்தபோது ஏதாவது வாங்கி வைத்திருக்கும் பழக்கமிருந்தது.

சமையல் அறையைவிட்டு வெளியே வந்த விஜய்க்கு எதிரே டைனிங் டேபிள் மீதிருந்த பழக் கூடையில் ஆப்பிளும் ஆரஞ்சும் தென்பட்டன.

சட்டென்று இரு கரங்களிலும் அவற்றை அள்ளிக் கொண்டு, தன் அறைப்பக்கம் வரப்போனான். அப்பொழுது மாடியிலிருந்து மெதுவாய் படியிறங்கி ரோஜா வந்து கொண்டிருந்தாள். ரோஜாவைப் பார்த்ததும் விஜய் நின்று விட்டான்.

"ரோஜா, கீழே வராதே! எனக்காக 'க்ளையண்ட்ஸ்' வந்திருக்காங்க. அவங்களோட பேசிகிட்டிருக்கேன் நீ மாடி

யிலேயே இரு'' என்றான்.

படியிறங்கி வந்து கொண்டிருந்த ரோஜா அப்படியே நின்று விட்டாள். அவன் கையிலிருந்த பழங்களையும், அவனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''நானாக அழைக்கும் வரை நீ கீழே வரவேண்டாம். மாடியிலேயே இரு...'' தாழ்ந்த குரலில் ஆணையிடுவது போல் மொழிந்துவிட்டு, கிடுகிடுவென்று தன் அறைக்குள் சென்று விட்டான்.

வெறுமே உட்கார்ந்தால் வேண்டாத யோசனைகள் மனதில் சூழ்ந்து பைத்தியம் பிடித்துவிடுமோ என்று தோன்றியது ரோஜாவுக்கு. ஏதாவது வேலையில் மனதைச் செலுத்தினால் இந்த உளைச்சல் குறையும் என்ற நினைப்பில் லக்ஷ்மிக்கு உதவி செய்யும் எண்ணத்தில் கீழே வந்தாள் ரோஜா.

ரோஜாவுக்கு விஜயின் போக்கு விநோதமாயிருந்தது. வந்தது யாரென்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் எழுந்தது. விஜய் தன்னைக் கீழே வர வேண்டாமென்று சொன்னதால், திரும்பவும் மாடிக்குப் போகப் போனாள் ரோஜா. கீழிருந்து யாருடைய குரலோ காதில் வந்து மோதியது.

அந்தக் குரலைக் கேட்டதும் ரோஜா சட்டென்று நின்று விட்டாள். மேல் படியில் வைக்கப் போன கால், கீழ் படியிலேயே நின்று விட்டது... காதுகளைக் கூர்மையாக்கி அந்தக் குரலுக்காக மூச்சைப் பிடித்துக்கொண்டு காத்திருந்தாள். சந்தேகமே இல்லை! அது செந்தூரவின் குரல்தான்.

''விஜய்... உங்களுடைய அறிமுகம் ஆனபோது எங்களுக்கு இப்படி ஆபத்து வரும் என்றோ, இப்படி நீங்க எங்களுக்கு ஆதரவு கொடுப்பீங்க என்றோ நான் கனவிலும் நினைக்கவில்லை'' என்றான்.

''எதிர்காலத்தைப் பற்றி யாருக்குத்தான் தெரியும்?''

ஒவ்வொரு படியாய் நிதானமாய் ஏறிக்கொண்டிருந்த ரோஜா, சட்டென்று திரும்பி மளமளவென்று கீழே இறங்கி



வந்தாள். அவள் இதயம் வேகமாய்த் துடித்தது.

சந்திரன் இங்கே வந்திருக்கான். எந்த முகத்தை வைத்துக்கொண்டு விஜயிடம் வந்தான்? எவ்வளவு துணிச்சல்? ரோஜாவுக்கு ரோஷமும், துக்கமும் உள்ளிருந்து பொங்கி வந்தன.

கீழே வர வேண்டாமென்று விஜய் சொல்லியிருந்ததை ரோஜா லட்சியப்படுத்தவில்லை... ஆவேசமும், கோபமும் அவளை ஆட்கொள்ள வேகமாய் அந்த அறை வாசலுக்கு வந்தாள்.

விஜய் அவனிடம், ''முதல்ல பழங்களைச் சாப்பிட்டு விட்டுக் காபியைக் குடி. சமையல் ஆனதும் சாப்பிட்டு விடலாம்'' என்றான்.

''தாங்க்யூ...''

ரோஜா திரைச் சீலையை லேசாக விலக்கினாள். அறையில் சந்திரன் வாசலுக்கு முதுகைக் காண்பித்த... நாற்காலியில் உட்கார்ந்து இருந்தான். அவனுக்கு எதிரே, வாசலுக்கு நேராக விஜய் நின்றிருந்தான். சந்திரன் பசித்த மிருகம்போல் ஆப்பிளைக் கடித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்... விஜய் ஆரஞ்சுப் பழத்தை உரித்து அவனுக்கு எதிரே வைத்துக் கொண்டிருந்தான்.

ரோஜா அறைக்குள் காலடி எடுத்து வைத்தாள்.

## 77

''சந்திரன் நடந்தது நடந்துவிட்டது... இனி நடக்க வேண்டியதை நாம்...'' தலை உயர்த்தி ஏதோ சொல்லப் போன விஜய், ரோஜாவைப் பார்த்து நிறுத்திவிட்டான். திடீரென்று விஜய் நடுவில் பேச்சை நிறுத்தியதில், சந்திரனும்

தலையைத் திருப்பி, வாசல்பக்கம் பார்த்தான். அங்கே ரோஜா நின்றிருந்தாள். அவளைப் பார்த்ததும், சாப்பிடுவதை நிறுத்திவிட்டு சந்திரனும் எழுந்து நின்றான்.

தன் ஆணையை மீறி ரோஜா இங்கு வந்ததில், விஜயின் முகத்தில் கோபம் எட்டிப் பார்த்தது.

"ரோஜா" அவன் குரலில் அழுத்தமும், கோபமும் தென்பட்டன.

ரோஜாவுக்கு விஜய் அழைத்தது காதில் விழவில்லை. சந்திரனையே பார்த்துக் கொண்டிருந்தாள். வாடிப் போன மலராய் இருந்த அவள் முகத்தில் ரோஷமும், அபிமானமும் போட்டியிட்டன.

"இங்கே எதுக்காக வந்தாய்?" என்று தம்பியை நேராகக் கேட்டாள்.

"ரோஜா" விஜய் எச்சரிப்பதுபோல் அழைத்தான்.

ரோஜா விஜய் எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை... சந்திரனை நோக்கி, ஓரடி முன்னே வைத்தாள்

"இன்னும் என்ன வேணும் உனக்கு? என்ன பாக்கி இருக்குன்னு இங்கே வந்தாய்? உனக்கு வேண்டியது பணம்! அந்த வெறியில் இருப்பவங்களுக்கு நல்லது, கெட்டது தெரியாது. நீ செய்ய நினைத்ததைச் செய்து விட்டாய். இன்னும் என்ன இருக்கு? வெட்கமில்லாமல் எப்படி உன்னால் இந்த வீட்டில் அடியெடுத்து வைக்க முடிந்தது?" என்று கத்தினாள்.

சந்திரன் ரோஜாவின் குற்றசாட்டுக்குத் திகைத்துப் போனாற்போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீ இங்கே வந்தது ஏன் என்று எனக்குத் தெரியும். யாருடைய பொறுப்பும் நீ ஏற்க வேண்டியதில்லை. இந்த வீட்டை விட்டு உடனே வெளியேறி விடு."

"ரோஜா" தெளிவற்ற குரலில் அழைத்தான் சந்திரன். அவன் முகம் வெளிறிப் போயிற்று.

" 'ரோஜா' அந்தப் பெயரைச் சொல்ல உனக்கு வாய்



எப்படி வந்தது? நான் அத்தனைச் சொன்னபிறகும் நீ இந்த வேலையைச் செய்ய எப்பொ துணிந்துவிட்டாயோ, அன்றே ரோஜா இறந்துவிட்டாள் மனிதர்களைக் கொல்லத் துப்பாக்கியும் கத்தியும் தேவையில்லை. வார்த்தைகளும், செயல்களும் போதும். அதைவிடக் கூர்மையான ஆயுதங்கள் வேறு இல்லவே இல்லை."

விஜய் ஒரே எட்டில் ரோஜா அருகில் வந்து, அவள் தோளைப் பற்றிக் கோபமாய்க் கேட்டான். "ரோஜா என்ன இது? உனக்கு மூளை கலங்கிவிட்டதா?"

ரோஜா அவன் கையைத் தள்ளிவிட முயன்றாள் ஆனால் முடியவில்லை.

"மூளை கலங்குவதா? எனக்கு அத்தனை அதிர்ஷ்டமிருக்கிறதா?" என்றவள் சந்திரன் பக்கம் திரும்பி கடினமாய், எக்காளத்துடன் சொன்னாள்

"அம்மா போய் விட்டாள். அந்தச் செய்தி உனக்குத் தெரியுமா? இல்லை அதெல்லாம் கேட்டால் உனக்குத் தலைவலியாய் இருக்குமோ? ஒரு தடவை உன்னைக் கண்ணாரக் காண்பதற்கு அவள் உயிர் எப்படி துடிதுடித்தது தெரியுமா? வந்தாயா நீ? ஒரு தடவை வந்துவிட்டுப் போ என்று எத்தனை தடவை வேண்டியிருப்பேன் உன்னை? என் பேச்சைக் கேட்டாயா? ஏதோ ஒரு சாக்குபோக்குச் சொல்லுவதும், தள்ளிப் போடுவதுமாய் இருந்தாய். உன்னைப் பற்றி கவலையிலேயே உயிரைவிட்ட அவளுடைய ஆன்மாவுக்கு அமைதியில்லாமல் செய்து விட்டாய்... இனிமேல் நீ நிம்மதியாய் இரு... உன்னைப் பற்றிக் கவலைப்படுபவர்களோ... நினைப்பவர்களோ கிடையாது. உயிரோடு இருக்காயா? செத்தாயா என்று கேள்வி கேட்பவர்களும் இல்லை..." என்று கோபத்துடன் கத்தினாள்.

"ரோஜா..." விஜய் ரோஜாவின் தோளை அழுத்திப் பிடித்து, வலுக்கட்டாயமாய் வாசற்பக்கம் திருப்பினான். ரோஜா விஜயிடமிருந்து விடுபட முயற்சித்துக் கொண்டே தலையைத் திருப்பி செந்தூரனைப் பார்த்துச் சொன்னாள்.

"உன் போன்ற வெட்கங்கெட்டவனுக்கு அக்கா என்று வாழ்வதைவிட எதாவது குளம் குட்டையில் விழுந்து சாவது எனக்கு நல்லது. உனக்கு வேண்டியது என்ன? பணம்... யார் எப்படிப் போனால் உனக்கு என்ன? உன் போன்ற உடன்பிறப்பு பகையாளிக்கும் இருக்கக் கூடாது..."

விஜய் இனிப் பொறுக்க முடியாதவனாய்ச் சட்டென்று வலது கையால் ரோஜாவின் வாயைப் பொத்தி விட்டான். அப்படியே வெளியே இழுத்து வந்தான்.

"ரோஜா எனக்கு ரொம்ப கோபம் வரும்விதமாய் நடந்து கொள்கிறாய். சேந்தா என் விருந்தாளி என்பதை மறந்துவிட்டு வாய்க்கு வந்தபடி பேசுகிறாய்."

"அவன் உங்க விருந்தாளியாய் இருக்கலாம்... ஆனால் முதல்ல அவன் எனக்குத் தம்பி என்ற விஷயத்தை நீங்க மறந்திடாதீங்க..." என்று வேகமாய்ச் சொன்னாள் ரோஜா.

"இருக்கட்டும்... இந்த வாதனையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம்... முதல்ல நீ மாடிக்குப் போ!"

"ஊஹூம். போக மாட்டேன்..." திடமாய்ச் சொன்னாள்.

விஜய் வியப்புடன் பார்த்தான். "என் பேச்சைக் கேட்க மாட்டியா?"

"கேட்க மாட்டேன். நீங்கள் என்று இல்லை. கடவுளே வந்து சொன்னாலும் கேட்க மாட்டேன். என் வேதனை உங்களுக்குப் புரியாது. என்மீதே எனக்கு வெறுப்பாய் இருக்கு..." ரோஜாவின் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது.

விஜயின் கோபம் மறைந்து விட்டது. ரோஜா மனதில் எழும்பும் உணர்ச்சிகளின் கொந்தளிப்பை அவன் உணராமல் இல்லை.

"நீ இப்போ மாடிக்குப் போகப் போகிறாயா இல்லையா?" அவன் குரல் மென்மையாக ஒலித்தது.



"ஊஹூம்! நான் போக மாட்டேன். நீ அவனை
அனுப்பிவிடுங்க. அவன் சொல்லுவதை நீங்க நம்ப வேண்
டாம்... கேட்க வேண்டாம்..."
விஜய் கனிவாகச் சொன்னான்: "ரோஜா... ஒரே
விஷயத்தை இரண்டாவது தடவை சொல்லும் வழக்கம்
எனக்கு இல்லை. நீ கேட்காவிட்டால் எனக்கு ரொம்ப
கோபம் வரும். முன்னாடியே சொல்லிவிட்டேன்."
ரோஜா தலையை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.
பிறகு மறுப்பது போல் தலையசைத்துவிட்டு, திடமாய்ச்
சொன்னாள்.

"ஊஹூம்! நீங்க எதை வேணும்னாலும் சொல்லுங்க.
அவன் இந்த வீட்டை விட்டுப் போகும் வரை நான் இந்த
இடத்தைவிட்டு நகரவே மாட்டேன்."
"அப்போ என் பேச்சை நீ மதிப்பதாக இல்லை...
அப்படித்தானே!"
"இதில் உங்களை மதிக்கறது, மதிக்காமல் இருப்பதே
என்ற பேச்சுக்கே இடமில்லை."
"கடைசி முறையாகக் கேட்கிறேன். நீ மாடிக்குப்
போகப் போகிறாயா இல்லையா?"
விஜய்க்கு உண்மையாகவே கோபம் வந்துவிட்டது.
"நானும் இதோட இரண்டு தடவை பதில் சொல்லி
விட்டேன். ஒரே வார்த்தையைப் பத்து தடவை சொல்லும்
பழக்கம் எனக்கு இல்லை" என்று அழுத்தமாகச் சொன்னாள்
ரோஜா.

விஜய் ஒருகணம் ரோஜாவைக் கூர்ந்து பார்த்தான்.
அவனுடைய இடது கையைத் திடீரென்று ரோஜாவின்
தோளை சுற்றிக் கொண்டது. வலது கையை முழங்காலுக்குக்
கீழே முட்டுக் கொடுத்து, அப்படியே அலாக்காக மேலே
தூக்கிவிட்டது.

ரோஜாவுக்கு கண்கள் இருண்டது போலாயிற்று.

எப்படியோ சமாளித்துக்கொண்டு, விடுபட முயலுவதற்குள், விஜய் படியருகே வந்ததும், இரண்டு மூன்று படிகள் ஏறுவதும் நடந்துவிட்டது. ரோஜாவின் முயற்சி தீவிரம் அடைய அடைய, விஜயின் கைகள் ரோஜாவின் உடலை இன்னும் இறுக்கமாக, மார்போடு அழுத்திப் பிடித்து, அவளுடைய முயற்சியை தோல்வியுறச் செய்தன

ஏதோ வேலையாய் வெளியே வந்த லக்ஷ்மி, இந்தக் காட்சியைப் பார்த்து திகைத்துப் போனாள். கண்கள் தெறித்துவிடுவதுபோல் பார்த்தவள், மூக்கின்மீது விரலை வைத்துக் கொண்டாள்.

விஜய் ரோஜாவை மாடி அறையில் தன் கட்டில்மீது இறக்கிவிட்டான். "இப்போதாவது புரிந்ததா, நான் சொன்னதை, எந்த நிலையிலும் அமல்படுத்துவேன் என்று." அவன் கம்பீரமாய்ச் சொல்ல நினைத்தாலும், இதழ்களில் புன்முறுவல் தெளிந்து கொண்டுதான் இருந்தது.

வாசலை நோக்கித் திரும்பியவன், நின்று மறுபடியும் ரோஜா பக்கம் திரும்பி, "நிஜமாகவே உனக்கு மூளை கலங்கி விட்டது. சந்திரன் எந்தச் சூழ்நிலையில் இங்கே வந்தான் என்று தெரிந்தால் நீ இப்படிச் சொல்ல மாட்டாய். அவன் தன் கூட்டத்தை எதிர்த்துக்கொண்டு வந்திருக்கிறான். என்னை நம்பி வந்தவனுக்கு ஆதரவு அளிப்பது என் கடமை இல்லையா?" என்றான்.

ரோஜா வியப்புடன் அவன் பக்கம் பார்த்தாள்.

"நீ கொஞ்சம் ரகளை செய்யாமல், அமைதியாய் இரு... என்மீது நம்பிக்கை வைத்தாயானால், எல்லாம் நல்லபடியாக நடக்கும். இப்போ சொல்லு... என் பேச்சைக் கேட்பாயா?" என்றான்.

ரோஜா சம்மதிப்பதுபோல் தலை அசைத்தாள்.

சந்திரன் அவன் கூட்டத்திற்கு எதிராய், விஜயிடம் சரண் அடைய வந்திருக்கிறான் என்ற விஷயம் அவள் காதில் தேனாய் பாய்ந்தது.



"நான் சந்திரனை இங்கே அனுப்புகிறேன்... நீ சகஜமாய்ப் பேச, அவன் மனதை நோகடிக்கும் எந்த விஷயமும் பேச வேண்டாம்... சரிதானா..."

ரோஜா பார்வையாலேயே சம்மதம் தெரிவித்தாள்.

விஜய் படியிறங்கி, சமையல் அறைப் பக்கம் போனான். லக்ஷ்மி தயாராய் வைத்திருந்த காபியை எடுத்துக்கொண்டு ஆபீஸ் அறைக்குள் வந்தான்.

சந்திரன் மேஜைமீது கைகள் ஊன்றி, தரையில் பார்வை பதித்து, சிலையாய் அமர்ந்திருந்தான். அவன் சாப்பிட்டு வைத்த ஆப்பிள் பழம் பாதி மேஜைமீது அப்படியே கிடந்தது.

விஜய் காபி டம்ளரைச் சந்திரனிடம் கொடுத்தான். சந்திரன் அதை வாங்கிக் கொண்டு மேஜைமீது வைத்து விட்டான்.

"காபி குடித்துவிடு, ஆறிப்போய்விடும்" என்று எச்சரிப்பதுபோல் சொன்னான் விஜய்.

"வேண்டாம் விஜய்... எனக்குப் பசியில்லை..."

"நல்லாத்தான் இருக்கு... ரோஜா திட்டியதற்காகவா..."

"இல்லை... அவள் திட்டியதற்காக இல்லை. அவ்வளவு தீவிரமாய்ப் பேசினாள் என்றால், அதற்கு ஆயிரம் மடங்கு வேதனை அனுபவித்து இருப்பாள்."

சந்திரன் சட்டென்று விஜயின் கையைப் பற்றிக் கொண்டான்.

"விஜய், நீங்களே சொல்லுங்க... ரோஜா மற்ற பெண்களைப் போல் சுகமாய், சந்தோஷமாய் குடித்தனம் செய்வதை என் கண்ணால் நான் பார்க்கணும். அந்த அதிருஷ்டம் எனக்குக் கிடைக்குமா? அதற்காக நான் எதைச் செய்யவும் தயாராய் இருக்கேன்."

"முதலில் அந்த பழங்களைச் சாப்பிட்டுவிட்டு காபியைக் குடி... இதுதான் நீ செய்ய வேண்டிய முதல் காரியம். நீ

பசியோடு இருப்பதை ரோஜாவால் பொறுத்துக் கொள்ள முடியுமா?"

சந்திரன் காபி டம்ளரைக் கையில் எடுத்துக்கொண்டான்... காபி குடிக்க முற்பட்டபோது, வாசற் கதவை யாரோ தட்டிய சத்தம் கேட்டது. சந்திரன் திடுக்கிட்டான்.

யாராக இருக்கும் என்பதுபோல் விஜய் பார்த்தான்.

"நான்...நான் இங்கே இருப்பது பாதுகாப்பானது தானா?" சந்திரன் கேட்டான்.

"நீ மாடிக்குப் போய் ரோஜாவுடன் பேசிக் கொண்டிரு. நான் வந்தவர்களை அனுப்பிவிட்டு உடனே வந்திடறேன்."

"நானா...ரோஜாவிடமா..." சந்திரன் முகம் மாறியது.

"நீ எந்தச் சூழ்நிலையில் இங்கு வந்தாயென்று ரோஜாவிடம் சொல்லிவிட்டேன். அவளுடைய கோபம் தணிந்து விட்டது. நீ போய் அவளிடம் பேசு" என்றான்.

சந்திரன் மாடி ஏறும்வரை காத்திருந்து விட்டு விஜய் வாசற் கதவைத் திறந்தான்.

எதிரே சங்கரன். சுந்தரி வாசலில் நின்றிருந்தார்கள்,

"நீங்களா... உள்ளே வாங்க" என்றான் விஜய்.

"தம்பி, உங்க உதவியை இந்த ஜென்மத்தில் மறக்க மாட்டோம். இந்த ஆபத்தான நேரத்தில் கடவுள்போல் எங்களைக் காப்பாத்தினீங்க..." சுந்தரி நா தழுதழுக்க கைகளைக் கூப்பிக்கொண்டே சொன்னாள்.

"முதல்ல உள்ளே வாங்க" என்றான் விஜய்.

இருவரும் உள்ளே வந்தார்கள்.

"ரோஜா மாடியில் இருக்கிறாள். சந்திரன் இப்பொழுது தான் வந்தான். வாங்க" என்று வழி நடந்தான்.

சந்திரனின் பெயரைக் கேட்டதும், கணவன், மனைவி இருவரும், ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

"அந்தப் பாவியை இங்கே ஏன் வரவிட்டீங்க தம்பி!



அவனால் நாங்க பட்ட வேதனை கொஞ்சநஞ்சமில்லை..." என்றாள் சுந்தரி.

"ஷ்..." மனைவியைத் தடுப்பதுபோல் சொன்னார் சங்கரன். பிறகு தாழ்ந்த குரலில், "ரோஜாவுக்கு அவர் யாரென்று தெரியுமா? சொல்லிவிட்டீர்களா?"

"ஊஹூம்" விஜய் மறுப்பாகத் தலை அசைத்தான்.

சங்கரன் முகம் களை இழந்து தென்பட்டதை விஜய் கவனியாமல் இல்லை.

விஜய் மாடி அறைக்கு அவர்களுடன் போகும்போது, கீழே காலிங்பெல் ஒலித்தது.

"நீங்க உள்ளே போங்க. நான் கீழே போய்ப் பார்க்கிறேன்" என்று விஜய் சொன்னான்.

விஜய் வாசற் கதவைத் திறந்தான். வாசலில் போஸ்ட் மேன் நின்றிருந்தான்.

"டெலிகிராம் சார்" என்றான்.

அதைப் பிரித்து பார்க்கும் முன்பே தெரிந்துவிட்டது. அது அனந்திடமிருந்துதான் வந்திருக்கும் என்று...

"ஸ்டார்டிங் இம்மீடியட்லி...மீட் மி அட் ஏர் போர்ட்...அனந்த்."

விஜய் பெருமூச்சுவிட்டான். அனந்த் வந்தால் பாதி பாரம் குறையும்.

## 78

விஜய் டெலிகிராமை எடுத்துக்கொண்டு கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்தான். மாடியிலிருந்து சுந்தரி அழுகைக் குரலில் ஏதோ சொல்லுவது, ரோஜா பேசுவது

காதில் விழுந்தது. விஜய் மாடிக்குப் போகலாமா வேண்டாமா என்று தயங்குபவன் போல் ஒரு நிமிடம் அங்கேயே நின்று படிகள் பக்கம் பார்த்தான்.

பிறகு முடிவை மாற்றிக் கொண்டாற்போல் தன் அறைக்குள் போனான் ஏனோ அவனுக்கு மாடிக்குப் போக வேண்டுமென்று தோன்றவில்லை.

ஆபீஸ் அறைக்குள் வந்த விஜய் மேஜையில் சாய்ந்து நின்றுகொண்டான். எப்போதும், எந்தச் சூழ்நிலையிலும், பாலென்ஸைத் தவறாத அவன் மனம் இன்று உணர்ச்சிகளின் கொந்தளிப்பினால், குழம்பி திக்குமுக்காடியது. கனவில் ஊகித்திராத நிகழ்ச்சிகள், ஒரேயடியாய், வெள்ளம்போல் மூழ்கடித்தன. தன்னைத்தானே சுதாரித்துக் கொள்வதற்குத் தனிமை ரொம்ப தேவையாய் இருந்தது.

அனந்த் வந்தால் ரொம்ப நிம்மதியாக இருக்கும். அனந்திடம் சொல்ல வேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தன. ரோஜா இன்னாரென்று தெரிந்தால் அனந்த் எவ்வளவு மகிழ்ச்சி அடைவான் என்று தனக்குத் தெரியும்.

யோசித்துக் கொண்டு நின்றிருந்த விஜயின் பார்வை மேஜைமீதிருந்த போன்மீது விழுந்தது. சந்திரன் போலீசாரால் தேடப்படும் குற்றவாளி... அவன் தன் வீட்டில் இருப்பதை உடனே டி.எஸ்.பி. நாராயணனுக்குத் தெரிவிப்பது தன் கடமை! ஆனால் சந்திரனை தான் ஒப்படைப்பதைவிட, அவனாகவே போலீசாரிடம் சரணடைந்தால் தான் அவனுக்கு நல்லது. சட்டம் அவனிடம் கொஞ்சம் கருணை காட்டும். ஆனால் சந்திரன் ஒப்புக் கொள்வானா? தான் பிடிபட்டால், சட்டம் தன்னை மன்னித்தாலும், மேலிடம் தன்னை மன்னிக்காது என்று சந்திரனுக்குத் தெரியும். இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது?

விஜய் கண்களை மூடி யோசித்துக்கொண்டே நெற்றிப் பொட்டை விரல்களால் நீவிவிட்டுக் கொண்டிருந்தான் அறைக்குள் யாரோ ஓடி வருவதுபோல் காலடிச் சத்தம் கேட்டது. கண்களைத் திறந்துகொண்டு பார்த்தான்.



எதிரே ரோஜா நிலைப்படியில் நின்றிருந்தாள். ஒரு நிமிஷம் அவன் ரோஜாவின் முகத்தை ஆழ்ந்து நோக்கினான். அவளும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் மகிழ்ச்சி, நம்பிக்கையின்மை, பதட்டம் எல்லாம் கலந்து தென்பட்டது. உடல் முழுவதும் மெலிதாக நடுங்கிக் கொண்டிருந்தது.

விஜய்க்குப் புரிந்துவிட்டது. அவன் இதயம் வேகமாய்த் துடித்தது. எந்தக் கணத்துக்காகத் தான் காத்துக் கொண்டு இருந்தானோ, அந்தக் கணம் அப்படியே நழுவி விட்டது.

வேணுகோபாலனைப் பற்றி அவருக்கும் ரோஜாவுக்கும் இடையே இருக்கும் உறவைப் பற்றிய உண்மையைத் தானே சுயமாய், தனிமையில் ரோஜாவுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும், அந்தக் கணம் தம் வாழ்க்கையில் இனிமையான நினைவாகத் தங்கிவிட வேண்டுமென்றும் எவ்வளவு கனவு கண்டானோ, அந்தக் கனவு மணலில் விழுந்த மழைத்துளி போல் காணாமல் போய்விட்டது!

சில நேரங்களில் அப்படித்தான் எத்தனையோ விதமாய் ஊகித்துக்கொண்டு, உயிருக்கு மேலாக விரும்பிக் காத்திருக்கும் நிகழ்ச்சியானது, ரொம்ப சாதாரணமாய் முடிந்து விடும்.

"ரோஜா" தெளிவற்ற குரலில் அழைத்தான்.

அந்த அழைப்புக்குக் கட்டுண்டவளாய், கனவில் நடப்பது போல் வந்து அவனெதிரே நின்றாள்.

கண்கள் அகலமாய் விரிய, இதழ்கள் துடிக்க, "இது... இது... உண்மைதானா?" என்று நடுங்கும் குரலில் கேட்டாள் ரோஜா.

"எது? வேணுகோபாலனைப் பற்றி..." விஜய் வார்த்தையை முடிக்கும் முன்பே, ரோஜா சட்டென்று ஆமாம் என்பதுபோல் தலை அசைத்தாள்.

"உண்மைதான் ரோஜா! நானே உன்னிடம் சொல்லலாமென்று இருந்தேன். ஆனால்..."

எப்படிச் சொல்லுவது, எதைச் சொல்லுவது என்று புரியாததுபோல் நிறுத்தி விட்டான். ரோஜா அவனருகில் வந்தாள். உணர்ச்சிவசப்பட்டவளாய், தன் இரு கரங்களையும் விஜயை நோக்கி நீட்டினாள்.

''விஜய், எனக்கு...எனக்கு ஏனோ பயமாக இருக்கு... மூளைக் கலங்கிவிட்டதோ என்று தோன்றுகிறது. தரையில் கால் நிற்க மாட்டேங்கிறது.''

விஜய் ரோஜாவின் கரங்களைப் பற்றிக் கொண்டான். ரோஜா வாயிலிருந்து வெளிவந்த சொற்கள், விஜய் மனதில் குடியிருந்த தயக்கங்களை உதறித் தள்ளின. ரோஜாவைத் தன்னருகில் இழுத்துக்கொண்ட விஜய், அப்படியே இறுக அணைத்துக் கொண்டான்.

''உண்மைதான் ரோஜா! சந்திரன் கொலை—கொள்ளை நடத்தியதாகச் சொல்லப்படும் நபர் யாரோ இல்லை, உங்கள் தந்தைதான். நம்ப முடியாத செய்தியாக இருந்தாலும் இதுதான் உண்மை! நீ இன்னாரென்று தெரிந்ததிலிருந்து, அந்த உண்மையை மறைக்கமுடியாமல் அவர் எவ்வளவு தவித்தார் தெரியுமா? உங்க இருவரின் எதிர்காலம் பாழானதற்குக் காரணம் தந்தைதான் என்றும், அம்மாவின் நரக வாழ்க்கைக்கு அவருடைய பொறுப்பற்ற தன்மைதான் காரணம் என்று நீ அவரிடம் சொல்லும்போது, உன்னைத் தடுக்கமுடியாமல், தன்னைப் பற்றிய உண்மையை உன்னிடம் சொல்லவும் முடியாமல் எத்தனை வேதனை அனுபவித்தார் என்று எனக்குத் தெரியும். உங்களுடைய கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் தான்தான் என்று குமுறிக் கொண்டிருந்த அவரால், தன்னை உன் தந்தையாக அறிமுகப்படுத்திக் கொள்ளும் தைரியம் இருக்கவில்லை. இந்த விஷயத்தை உன்னிடம் தெரியப்படுத்தும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். நானும் எத்தனையோ தடவை உன்னிடம் இந்த விஷயத்தைச் சொல்ல முயற்சி செய்தேன். எதிர்பாராத இடைஞ்சல்கள் ஏற்பட்டு என்னை மௌனமாக்கி விட்டன. பூனாவில் சந்திரனிடம் சொல்ல நினைத்தேன்.



ஆனால் அவனைச் சந்திக்க முடியவில்லை. பாரிஸிலிருந்து வந்த உடனே உன்னிடம் சொல்ல நினைத்தேன். ஆனால் இதற்குள் இந்த ரகசியம்... இந்த விஷயத்தை நானே உன்னிடம் சொல்ல வேண்டுமென்று எவ்வளவு துடிப்பாய் இருந்தேன் தெரியுமா? ஆனால், நான் நினைத்தபடி நடக்கவில்லை.''

தரையில் கால் நிற்காததுபோல், ஆகாயத்தில் வேகமாய் மிதப்பது போன்ற உணர்விலிருந்த ரோஜாவுக்கு, விஜயின் ஸ்பரிசம், அவனுடைய வார்த்தைகள், ஏதோ பற்றுகோல் கிடைத்துவிட்டதுபோல் தோன்றிற்று. அவளுடைய கைகள் அவனுடைய தோள்களை இறுக்கமாய்ப் பற்றிக் கொண்டன.

அவன் மார்பில் முகம் புதைத்து, கண்களை மூடி நின்றிருந்த ரோஜா, விஜய் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''ரோஜா! கடந்த காலத்தில் நீங்க எப்படிப்பட்ட கஷ்டங்களை அனுபவித்திருந்தாலும், அதை மறந்துவிட்டு, சந்தோஷமாய் இருக்கப்போகும் காலம் வந்துவிட்டது. நடந்ததெல்லாம் நல்லதுக்குத்தான் என்பதுபோல் சந்திரன் இங்கே வந்ததும் நல்லதாகிவிட்டது. அவன் விஷயத்தில் என்ன செய்தால் சரியாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் ரோஜா. சொல்ல மறந்து விட்டேன். அனந்திடமிருந்து தந்தி வந்திருக்கு. நாளை வருகிறான்'' விஜய் சொல்லும்போதே போன் ஒலித்தது.

விஜய் இடது கையை நீட்டி ரிசீவரை எடுத்தான். ரோஜா விருப்பமில்லாதவள்போல், மெதுவாய் விஜயிடம் இருந்து விடுபட்டாள்.

விஜய் போனில் மறுமுனையிலிருந்து சொல்லப்படுவதைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தான்.

''ஐ.ஸி... சரி'' என்று போனை வைத்துவிட்டான். ரோஜா பக்கம் திரும்பியவன், ''அவருக்கு ரத்தம் ஏற்றப் போகிறார்களாம்'' என்றான்

ரோஜா சட்டென்று விஜய் கையைப் பற்றிக் கொண்டாள்.

"விஜய், நாம் உடனே அங்கே போகலாம். அவரை எப்படியாவது பிழைக்கச் செய்யும்படி டாக்டர்களிடம் வேண்டிக் கொள்கிறேன். அவருடைய மகளாய்ப் பிறந்த தற்கு நான் ரொம்ப பெருமைப்படுகிறேன். இன்னாரென்று தெரியாதபோது, கடினமாய்ப் பேசி அவர் மனதை வேதனைப்படுத்தியதற்கு அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளணும்..." சொல்லும்போதே ரோஜாவின் குரல் தழு தழுத்தது.

விஜய் ரோஜாவின் தலையை மென்மையாக வருடிக் கொண்டே ஆறுதலாய், "ரோஜா, இதில் உன் தவறு எதுவும் இல்லை. நடந்ததற்கு நீ பொறுப்பாளியில்லை."

"இல்லாவிட்டால் மட்டும்? ஆனால் இதென்ன விசித்திரம்? அவரைச் சந்தித்தும், அடையாளம் கண்டுகொள்ள முடியாத துரதிருஷ்டசாலி ஆகிவிட்டேன். விஜய் அவராவது என்னிடம் ஒருதடவையாவது லேசாக ஜாடை காண்பித்து இருந்தால்..." ரோஜாவால் வாக்கியத்தை முடிக்க முடிய வில்லை; பொங்கி வந்த துக்கம் வார்த்தைகளை விழுங்கி விட்டது.

இதற்குள் வெளியே சத்தம் கேட்டது. திரைச் சீலையை விலக்கிக் கொண்டு சங்கரன், சுந்தரி அவர்கள் பின்னால் சந்திரன் உள்ளே வந்தார்கள்

சங்கரன் விஜயைப் பார்த்து, "தம்பி மேற்கொண்டு என்ன செய்யணுமோ சொன்னீங்கன்னா..." என்றார்.

சங்கரன் பின்னால் நின்ற சந்திரனைப் பார்த்ததும் விஜய் திகைத்துப் போனான். அவன் முகம் களையிழந்து தென்பட்டது. சற்றுமுன் இதே அறையில் தன்னுடன் மனம் விட்டுப் பேசிய நபர் இவன்தானா என்று தோன்றியது. விடுதலையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கைதிக்கு, தூக்குதண்டனையை விதித்திருப்பதாகச் செய்தி தெரிவிக்கப் பட்டால் எப்படி கற்சிலையாய் சமைந்து போவானோ, அப்படி இருந்தான். விஜய் சந்திரனை நோக்கி ஓரடி வைத் தான்.



அதற்குள் ரோஜா சட்டென்று செந்தூரின் அருகில் சென்று அவன் கையைப் பற்றிக் கொண்டாள். "செந்தூர், ஆஸ்பத்திரியிலிருந்து இப்பத்தான் போன் வந்தது. அவருக்கு ரத்தம் ஏற்றப் போகிறார்களாம். வா நாம் அவரைப் பார்க்கப் போகலாம்" என்றவள் விஜயை நோக்கித் திரும் பினாள்.

"விஜய் வாங்க... நாம் ஆஸ்பத்திரிக்குப் போவோம்."

சந்திரனையே பார்த்துக் கொண்டிருந்த விஜய், "சந்திரன் ஹாஸ்பிடலுக்கு வருவதில் உனக்கு ஆட்சேபணை இருக்கா?" என்றான்.

ரோஜா இடை புகுந்து, "இருக்காது! சந்திரனைப் பார்க்க அவர் எப்படித் தவித்துக் கொண்டிருந்தார் என்பது எனக்குத் தெரியும். அவருக்கு நினைவு வந்து முதலில் பார்க்கும்போது எங்க இருவரையும் சேர்ந்துதான் பார்க் கணும்..."

சந்திரன், அவளின் பேச்சை ஆமோதிக்கவுமில்லை; மறுக்கவுமில்லை.

சங்கரன், "ஆகட்டும் தம்பீ... எல்லோரும் சேர்ந்தே போவோம்..." என்றார்.

விஜய் மேஜை டிராயரிலிருந்து கார் சாவியை எடுத்துக் கொண்டே சொன்னான், "ஒரு நிமிஷம் இருங்க. நான் காரை எடுத்துக்கிட்டு வர்றேன்."

## 79

ஆஸ்பத்திரியில் நினைவில்லாமல் கிடந்த வேணு கோபாலனின் உடலைச் சுற்றி விஜய், ரோஜா, சந்திரன், சங்கரன், சுந்தரி எல்லோரும் நின்றிருந்தார்கள். அத்தனை பேர் இருந்தாலும் அறையில் விநோதமான அமைதி நில

வியது. இதற்குள் டாக்டர் உள்ளே வந்தார்.

"விஜய்... அவருக்காக ரத்தம் கொடுக்கப் போவது யாரு?"

விஜய் ரோஜா பக்கம் பார்த்தான். தான் கொடுக்கப் போவதாக, ரோஜா ஓரடி முன் வந்தாள். அதுவரை வேணுகோபாலனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த சந்திரன் சட்டென்று ரோஜா பக்கம் திரும்பினான். அவனுடைய வலது கரம் ரோஜாவின் தோளில் பதிந்து அவளைப் பின்னால் இழுத்தது.

டாக்டர் முன்னே நின்று, "டாக்டர் முதலில் என் ரத்தத்லத டெஸ்ட் செய்யுங்கள். க்ருப் பொருந்தாவிட்டால் அவள் தருவாள்..." என்றான்.

"செந்தூ!"

"ரோஜா! என்னைத் தடுக்காதே." செந்தூவின் பார்வை கட்டிலிலிருந்த வேணுகோபாலனின் பக்கம் சென்றது. கம்மிய குரலில் தனக்குத்தானே சொல்லிக் கொள்வதுபோல் சொன்னான்.

"என்னால்தான் அவருக்கு இந்த ஆபத்து ஏற்பட்டது. என் ரத்தம் கொடுத்து அவர் உயிர் பிழைத்து எழுந்தால் போதும். வேறு எதுவும் எனக்கு வேண்டாம். அவர் பிழைத்துக் கொண்டால், எனக்கு சாபவிமோசனம் கிடைத்தாற் போல்தான். கடவுளும் என்னை மன்னித்து விட்டதாக எண்ணிக் கொள்வேன்."

ரோஜாவின் கண்கள் குளமாயின.

சந்திரனின் ரத்தம் பரிசோதிக்கப்பட்டு, அது பொருத்தமாய் இருக்கவே, அவனிடமிருந்து ரத்தத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்தன.

ஆஸ்பத்திரியின் மருந்து வாசனை, சுந்தரிக்கு வயிற்றைப் பிரட்டியது. விஜய் சொன்னதன் பெயரில் சங்கரன் அவளை வெளியே அழைத்துச் சென்றார்.

கட்டிலில் படுத்திருந்த சந்திரன் கையில் ட்யூப்



இணைக்கப் பட்டிருந்தது. அவன் கண்களிலிருந்து ஊற்று போல் பெருக்கெடுத்த கண்ணீர் தலையணையை நனைத்தது. நடப்பதெல்லாம் கனவா இல்லை நினைவா என்று தோன்றிற்று

ரயில் நிலையத்தில் நகை திருட முயன்ற தன்னை அவர் அடித்தது... லாவண்யாவின் அறிமுகம்... அவள் கையில் இருந்த வைர நெக்லஸைப் பார்த்து, அவளை அவருடைய மகளென்று புரிந்து கொண்ட...து அதன்பிறகு நடந்த நிகழ்ச்சிகள் கண்முன் நிழலாடிற்று.

தாய் வயிற்றில் தான் கருவாய் இருக்கும்போதே பிரிந்து விட்ட தந்தை, மறுபடியும் தன் வாழ்க்கையில் இந்தவிதமாய் இணைந்து கொண்டது எவ்வளவு அதிருஷ்டமானது. ஏன் இப்படி நடக்க வேண்டும்?

அங்கேயே நின்றிருந்த ரோஜா, உணர்வுகளின் கொந்தளிப்பால் திக்குமுக்காடிக் கொண்டிருந்தாள். ஒருபக்கம் சந்திரன்... மறுபக்கம் வேணுகோபாலன்... இல்லை...இல்லை தன் தந்தை..." அவர்தான் தன் தந்தை என்ற விஷயத்தை மனதில் மறுபடியும் மறுபடியும் பதித்துக் கொள்ளத் தோன்றியது.

அவ்விருவரையும் பார்த்துக் கொண்டிருந்த ரோஜா சற்றே விஜய் பக்கம் நகர்ந்து கொண்டாள்.

"விஜய்! அவர் பிழைத்துக் கொண்டால் போதும். கடவுளிடம் நான் வேறு எதையும் வேண்டமாட்டேன்."

அவன் பேசவில்லை. அவளின் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு மென்மையாக அழுத்தினான். அந்த ஸ்பரிசத்தில் ஏதோ நெருக்கம், தோழமை அவனிடமிருந்து தன்னுள் பாய்வதுபோல் உணர்ந்தாள் ரோஜா.

சற்றுநேரம் கழித்து சந்திரன் கட்டிலைவிட்டு இறங்கினான்.

"நீங்க கொஞ்ச நேரம் ஓய்வு எடுக்கணும்" என்றார் டாக்டர்.

சங்கரனும், சுந்தரியும் உள்ளே வந்தார்கள். விஜய் சந்திரனின் தோளில் கையைப் பதித்து, "வீட்டுக்குப் போகலாம் வா" என்றான்.

சந்திரனின் முகம் வாடிப் போயிருந்தது. ரோஜா அருகில் ஒருகணம் நின்றவன், "ரோஜா... எனக்கு ரொம்ப திருப்தியாய் இருக்கு. இறந்து போன அம்மாவுக்கு மகிழ்ச்சியைத் தரும் காரியம் ஒன்றாவது செய்தேன் என்ற நிம்மதி இருக்கு" என்றான்.

எல்லோரும் வாசலைத் தாண்டி நான்கு அடிகள் வைத்தார்களோ இல்லையோ சந்திரன் அப்படியே நின்று விட்டான்.

எதிரே டி. எஸ். பி. நாராயணன், இன்னும் இரண்டு போலீசார் மஃப்டியில் இருந்தார்கள்.

சந்திரனின் எதிரே நின்ற நாராயணன், "மிஸ்டர் சந்திரன் யூ ஆர் அண்டர் அரெஸ்ட்" என்றார்.

சந்திரன் திடுக்கிட்டான்! ஆழ்ந்த உறக்கத்திலிருந்தவன் திடீரென்று விழித்துக் கொண்டதுபோல் மிரண்டு விட்டான். கண்கள் தீட்சண்யமாய் மாறின.

"நாராயணன்..." விஜய் ஏதோ சொல்லப் போனான்.

"ஹி... ஈஸ் அண்டர் அரெஸ்ட்" திடமான குரலில் மறுபடியும் கூறினார் நாராயணன்.

அதற்குள் சந்திரன் நாராயணனை அப்படியே தள்ளி விட்டு, குறுக்கே வந்த போலீசாரின் வயிற்றில் முஷ்டியை இறுக்கி குத்துவிட்டு ஓட்டமெடுத்தான்.

கீழே விழப்போன நாராயணன் எப்படியோ சமாளித்துக் கொண்டார்.

"சந்திரன் நில்லு... ஓடாதே..." விஜய் குரல் கொடுத்தபடியே அவன் பின்னால் ஓடினான். அமைதியாயிருந்த அந்தச் சூழ்நிலையில் அந்த கத்தல்கள் எதிரொலித்தன.

சந்திரன் விஜய் அழைத்ததைப் பொருட்படுத்தவில்லை. எப்படியோ பலத்தை வரவழைத்துக்கொண்டு நீளமான



காரிடாரில் ஓடிக் கொண்டிருந்தான்.

அதற்குள் சுதாரித்துக் கொண்டுவிட்ட நாராயணன் ரிவால்வரை எடுத்து சந்திரனின் கால்களை நோக்கி சுடப் போனார்.

இதைப் பார்த்த ரோஜா வீலென்று அலறியவள், நாராயணன்மீது பாய்ந்து தடுக்க முயன்றாள். பக்கத்தில் நின்ற போலீசார் இருவரும் சட்டென்று அவளை இரு பக்கமும் பிடித்துக் கொண்டு, நகர முடியாமல் செய்து விட்டார்கள்.

மின்னல் போல் ஓடிய விஜய் சந்திரனை இரு கரங்களால் பிடித்து தடுத்து விட்டான்.

"விஜய், உங்களுக்குத் தெரியாது... விடுங்க... என்னை விடுங்க!" மூச்சிரைக்கச் சொன்ன சந்திரன், எப்படியோ விஜயின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டு முன்னோக்கி ஓடினான்.

ஆனால் அவனுடைய ஓட்டத்தின் வேகம் சட்டென்று குறைந்தது. உடல் தள்ளாடியது; கண்கள் இருண்டன.

"அம்மா" என்று கீழே விழப் போனவனை விஜய் ஓடி வந்து அணைத்துக் கொண்டான்.

"சந்திரன்... இப்பத்தான் ரத்தம் கொடுத்திருக்கே... இப்படி ஓடலாமா?" என்று அதட்டுவது போல் கூறினான் விஜய்.

"விஜய்... உங்களுக்குத் தெரியாது. நான் பிடிபடக் கூடாது. இது எங்க கூட்டத்துக்குத் தெரிந்த அடுத்த நிமிஷமே எனக்குச் சாவு வந்தாற்போல்தான். நான் பிடிபடக் கூடாது. ரோஜாவுக்காக... உங்களுக்காக..." மூச்சிறைத்துச் சொன்னவனாய் அதற்கு மேல் பேச முடியவில்லை. அப்படியே விஜய் கைகளில் நினைவிழந்து விட்டான்.

சந்திரன் ஓட்டம் தடைபட்டதையும், விஜய் அவனைப் பிணைத்துக்கொண்டு இருந்ததைப் பார்த்த நாராயணன், ரிவால்வரை உள்ளே வைத்து விட்டார். விஜய் அருகே சென்று, "ஹி ஈஸ் அண்டர் அரெஸ்ட்" என்றார்.

# 80

அனந்த் ப்ளேனை விட்டு இறங்கியதுமே கேள்விக் கணைகளைத் தொடங்கி விட்டான்.

"விஜய்! வாட் இஸ் திஸ்!"

விஜய் தம்பியின் கைகளைப் பற்றிக் கொண்டு, "முதலில் வெளியில் போவோம்... உன்னோட லக்கேஜ் ஏதாவது இருக்கா? நாம் காத்திருக்கணுமா?"

"நோ...நோ... அப்படியே கிளம்பி வந்தேன். பெட்டியில் துணிமணி எடுத்து வரணும்னுகூடத் தோன்றவில்லை... டிக்கெட் கிடைப்பது ரொம்பக் கஷ்டமாகி விட்டது. உன் டெலிகிராமைப் பார்த்ததும் எனக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை!"

வீட்டுக்கு வரும் வழியில் விஜய் நடந்ததையெல்லாம் சுருக்கமாய்ச் சொன்னான்.

விஜய் சொல்லும் ஒவ்வொரு விஷயத்துக்கும் அனந்த், "ஐஸிட்?" என்று எம்பிக் குதித்து, "ரியல்லி" என்று நம்ப முடியாதவன்போல் கண்களைப் பெரிதாக்கி முன்னோக்கிக் குனிந்து, "ஓ மை காட்!" என்று பின்னால் சாய்ந்து, இப்படி ரகரகமான அசைவுகளில் தன் உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான்.

கார் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்த போது, "இப்போ ரோஜா எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டான்.

"நம் வீட்டில்தான்."

அனந்தின் முகம் மலர்ந்தது. பின்னால் சாய்ந்து கொண்டே சொன்னான்.

"விஜய் நான் முன்பு சொன்னது சரியாய்ப் போச்சு



பார்த்தாயா. ரோஜா சாதாரணமான பெண் இல்லை... ரோஜாவைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ஏனோ தோன்றும். சாபத்தின் காரணமாய் அந்தப் பெண் இப்படிக் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக. ஏதோ ஒரு நன்னாளில் அதற்கு விடிவு காலம் வருமென்று திடமாய்த் தோன்றிற்று. என் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை."

கார் வீட்டின் முன் நின்றதும், அனந்த் காரைவிட்டுச் சரேலென்று இறங்கி, அதே வேகத்துடன் உள்ளே போனான்...

விஜய் நிதானமாய்க் காரைக் காரேஜில் நிறுத்திவிட்டு உள்ளே வந்தான்.

கார் வந்து நின்ற சத்தம் கேட்டு ரோஜா வெளியே ஓடி வந்தாள்.

"அனந்த்..." மகிழ்ச்சியுடன் அழைத்தாள்.

"ரோஜா... என் கண்ணம்மா..." அனந்த் இரண்டடி முன் வைத்து அவளின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"நான் இல்லாத நேரம் பார்த்து எவ்வளவு கஷ்டங்கள் உனக்கு வந்துடுத்து... நான்தான் வந்து விட்டேனே... இனி நீ பயப்படத் தேவையில்லை. எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ நிம்மதியாக இரு."

பெரிய மனிதன்போல் தைரியம் சொன்ன அவன் தோரணையில் ரோஜாவுக்குச் சிரிப்பு வந்தது; மகிழ்ச்சியாகவும் இருந்தது. தனிமையில் இருக்கும்போது பயப்படுத்தும் இன்னல்கள், துணையாய் யாராவது இருந்தால் அவ்வளவு பயமுறுத்தாதோ...!

விஜய் உள்ளே வந்ததை அனந்த் கவனிக்கவில்லை. ரோஜா கையைப் பற்றி தன்னருகில் சோபாவில் உட்கார வைத்துக் கொண்டான்.

"இப்போ சொல்லு..." அவளிடம் விவரங்களைக் கேட்டுக் கொண்டான். அனந்த் வந்திருப்பதாகத் தெரிந்ததும் உள்ளே வேலையாய் இருந்த லக்ஷ்மி ஓடி வந்தாள்.

"என்ன தம்பி நல்லா இருக்கீங்களா?"

"ஆங்! நல்லா இருக்கேன்..." லக்ஷ்மியை ஏறெடுத்துப் பார்க்காமலேயே பதில் சொன்னான் அனந்த். அவன் கவனம் முழுவதும் ரோஜா மீதுதான் இருந்தது.

லக்ஷ்மி அசடு வழிந்த முகத்துடன் மெதுவாய் உள்ளே சென்று விட்டாள்.

"நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன்" என்றான் விஜய்.

"போயிட்டு வா..." அனந்த் விஜய் பக்கம் திரும்பவே இல்லை.

வாசல்வரை சென்ற விஜய் பின்னால் திரும்பி, "அனந்த், முதல்ல குளிச்சுட்டு டிரெஸ் மாத்திக்கோ" என்றான்.

"நீ முதல்ல போயிட்டு வா..." என்றான் அனந்த்.

விஜய் கிளம்பி விட்டான். கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் கழித்து அவன் திரும்பியபோது—

அனந்த், ரோஜா அந்த இடத்தில் சோபாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நீ இன்னும் குளிக்கப் போகவில்லையா?" என்று விஜய் கேட்டதற்கு, "இதோ போகிறேன்" என்று சொன்னானே தவிர எழுந்துகொள்ளவில்லை.

விஜய் வந்ததைக் கவனித்து எழுந்திருக்கப் போன ரோஜாவை, "உட்கார்... நீ இன்னும் பழைய வழக்கங்களை மறக்கவில்லையா?" என்று தடுத்தான். இருவரும் மறுபடியும் பேச்சுகளில் மூழ்கி விட்டார்கள்.

விஜய் உணவு மேஜை முன் அமர்ந்து கொண்டான். அனந்துக்காக தான் காத்திருப்பதாகவும், அவனை வரச் சொல்லி லக்ஷ்மியிடம் தகவல் அனுப்பிய போதும் அனந்த் வரவில்லை.

தானும் அவளும் பிறகு சாப்பிடுவதாகவும், விஜய் தனக்காகக் காத்திருக்க வேண்டாமென்றும் லக்ஷ்மியிடம்



பதில் சொல்லி அனுப்பி விட்டான்.

விஜய் சாப்பிடத் தொடங்கினான். அவ்விருவரின் உரையாடல் தெளிவற்று கேட்டுக் கொண்டுதான் இருந்தது.

பேச்சுக்கு நடுவில் ரோஜா சட்டென்று எழுந்து நின்று அனந்த் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்?" என்று அனந்த் கேட்டான்.

"அனந்த்... உன்னிடம் ஏதோ மாறுதல் தெரிகிறது."

"மாறுதலா... கொஞ்சம் சதை போட்டிருக்கேனோ என்னவோ..."

"இல்லை... இல்லை..." கண்இமைக்காமல் பார்த்தவள், "மூக்குக் கண்ணாடி இல்லை."

அனந்த் திடுக்கிட்டான். "மைகாட், உண்மைதான்! கிளம்பும் பரபரப்பில், மூக்குக் கண்ணாடியை மறந்துவிட்டு வந்து விட்டேன். இதுவரை அந்த விஷயமே நினைவுக்கு வரவில்லை." வியப்படைந்தவனாய், "குளித்துவிட்டு வெளியே வந்ததும் டெலிகிராம் வந்தது. அதைப் பார்த்ததும் மூளை வேலை செய்ய மறுத்துவிட்டது."

"நல்லவேளை..." பளீரென்று சிரித்தாள் ரோஜா. அனந்தும் அந்தச் சிரிப்பில் சேர்ந்து கொண்டான். அவ்விருவரின் சிரிப்பு அலையாய் காற்றில் மிதந்து வந்து, உள்ளே உணவு அருந்திக் கொண்டிருந்த விஜய் செவிகளைத் தாக்கியது.

அனந்த் ரோஜாவுக்கு நெருங்கிய நண்பன் என்றும், இருவரும் ஒருவருக்காக மற்றவர் உயிரையும் கொடுக்கக் கூடியவர்கள் என்று விஜய்க்குத் தெரியும். அந்த நட்பில் எந்தக் களங்கமும் இல்லையென்று தெரிந்த பிறகும், விஜய் ஏனோ வெறுமையாய் உணர்ந்தான்.

# 81

போலீஸ் ஹெட் குவார்டர்ஸில் மூன்று போலீஸ் உயர் அதிகாரிகள் இருக்கைகளில் அமர்ந்திருக்க, அவர்கள் பக்கத்தில் டி.எஸ்.பி. நாராயணன் நின்றிருந்தார். அவர்களுக்கு எதிரே சந்திரன் கையில் விலங்கிடப்பட்டு அமர்ந்திருந்தான். அவனுக்குப் பின்னால் விஜயும், அனந்தும் நின்றிருந்தார்கள்.

ரொம்ப நேரமாய்த் தீவிரமாகச் சர்ச்சை நடந்து கொண்டு இருப்பதாக எல்லோருடைய முகங்களும் சீரியஸாகத் தென்பட்டன. அறையில் நிலவியிருந்த மௌனத்தை கிழித்துக் கொண்டு கமிஷனரின் குரல் ஒலித்தது.

"மிஸ்டர் சந்திரன்! நீங்க வெளிப்படையாகப் பேசாவிட்டால் எந்தப் பிரயோஜனமும் இல்லை இந்த மௌனம் உங்களுக்குத் தீங்காய் முடியும் என்று எச்சரிக்கிறேன்..." என்றார்.

சந்திரன் பேசவில்லை, தலை உயர்த்தவில்லை.

டெபுடி கமிஷனர் இடையில் புகுந்தார், "போகட்டும்! எங்களுக்கு எல்லா விவரங்களையும் சொல்ல வேண்டாம்; கூட்டத்தின் இருப்பிடத்தை மட்டும் சொன்னால் போதும். மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

சந்திரன் ஒருமுறை தலை உயர்த்திப் பார்த்து, மறுபடியும் தலைகுனிந்து கொண்டான். அவன் முகத்தில் வேதனையின் சாயல் தெரிந்தது.

விஜய் சந்திரனின் தோளில் கையைப் பதித்துச் சொன்னான், "சந்திரன், நீ இப்படித் தயங்குவது ஏன் என்று எங்களுக்குப் புரியவில்லை. இதை மறைத்து வைப்பதால் எத்தனை பேர் அநியாயமாய்ப் பலி ஆவார்களோ என்று ஒரு முறை எண்ணிப் பாரு..."



"விஜய், உங்களுக்குத் தெரியாது நான்..." ஏதோ சொல்ல வந்த சந்திரனை நடுவிலேயே தடுத்துவிட்டுச் சொன்னான் விஜய்.

"எனக்குத் தெரியும் சந்திரன்! நீ இதில் துரதிருஷ்டவசமாய் மாட்டிக்கொண்டு விட்டாய். இந்தப் புதைகுழியில் இருந்து உன்னை மீட்க வேண்டுமென்பதுதான் எங்கள் உத்தேசம். தெரியாமல் செய்த குற்றங்களுக்கு, வாழ்நாள் முழுவதும் வேதனையில் கழிக்க வேண்டிய தேவை இல்லை; மறுபடியும் சாதாரண மனிதனாய் மாற வாய்ப்பு கிடைத்த போது, அதைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளணும்..." என்றான்.

"இந்த நல்ல வாய்ப்பைத் தவற விடாதீங்க மிஸ்டர் சந்திரன்..." என்று போலீஸ் அதிகாரி நயமும், எச்சரிக்கையுமாய்ச் சொன்னார்.

மறுபடியும் அறையில் மௌனம் நிலவியது சற்றுப் பொறுத்து, சந்திரன் நிதானமாய்ச் சொல்லத் தொடங்கினான்.

"நான் ரொம்ப ஏழ்மையான சூழ்நிலையில் வளர்ந்து பெரியவனானேன். படிப்பு என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நன்றாகப் படித்தால், நல்ல வேலையில் சேர்ந்து விடலாமென்றும், எங்கள் கஷ்டங்கள் தீர்ந்து விடுமென்றும் கனவுக் கோட்டைகள் கட்டி இருந்தேன்; பள்ளி இறுதிப் பரீட்சையில் நல்ல மதிப்பெண்களும் பெற்றேன்; மேற்படிப்பு படிக்க வைக்க எங்க வீட்டில் வசதியில்லை; இனி படிப்புக்கு முற்றுப்புள்ளிதான் என்று தெரிந்தபோது குமுறிக் குமுறி அழுதேன்.

ரோஜா! எனக்கு அக்கா மட்டும் இல்லை; நல்ல சிநேகிதியாகவும் இருந்தாள். படிப்புக்கு வயது வரம்பு கிடையாது என்றும், வேலை பார்த்துக்கொண்டே படிக்கலாமென்றும் தைரியம் சொன்னாள்.

அதன்பிறகு வேலை தேடுவதில் மூழ்கினேன். தகுந்த வயது இல்லாததால் எனக்குச் சரியான வேலையும் கிடைக்க

வில்லை. சில இடங்களில் மாமா முயற்சி செய்தபோது, சிலர் பணமும், சிலர் சிபாரிசும் கேட்டார்கள். இரண்டும் எங்களிடம் இல்லாததால் வேலை கிடைக்கவில்லை.

இருபத்தி நான்கு மணிநேரமும் படிப்பில் மூழ்கி இருந்த எனக்குத் திடீரென்று எந்த வேலையும் இல்லாமல் பைத்தியம் பிடித்தது போலிருந்தது. எப்படி நேரத்தைக் கழிப்பது? வீட்டில் மாமியின் வசவுகள் அதிகமாகிக் கொண்டே வந்தன.

ஒருநாள் மாமியுடன் பெரிய சண்டை ஏற்பட்டுவிட்டது. என்னை வாய்க்கு வந்தபடி திட்டி விட்டாள். ஏற்கனவே மன அமைதி இழந்திருந்த என்னால் அந்தத் திட்டுகளைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எப்படியாவது சொந்தக் கால்களில் நின்றபிறகுதான் வீட்டுப் பக்கம் போகணும் என்ற வைராக்கியம் ஏற்பட்டது.

நேராக ரயில் நிலையத்துக்கு வந்தேன்... அங்கேயே இரண்டு நாட்கள் தங்கினேன். பசித்த போதெல்லாம் தண்ணீர் குடித்துத் தணித்துக் கொண்டேன். மூன்றாம் நாள் பசி முற்றிப் போய் தண்ணீரை குடிக்கப்போனால் வயிற்றைப் பிரட்டியது. வீட்டுக்குப் போய் விடலாமென்ற யோசனை தலை தூக்கியது. பசியால் இறந்து போனாலும் சரி... வீட்டுக்குப் போகக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன். பசி எவ்வளவு கொடுமையாய் இருந்தது என்றால், சீக்கிரமாய் உயிர் போய்விட்டால் நன்றாயிருக்கும் என்று தோன்றத் தொடங்கியது.

ஸ்டேஷனில் பெஞ்சியில் உட்கார்ந்திருந்தபோது, எதிரே ஒரு மாது இரு கைகளில் பழங்களும் பிஸ்கெட் பாக்கெட்களையும் சுமந்து வந்துகொண்டிருந்தாள். இதற்குள் கிட்டத்தட்ட என் வயதே இருக்கும். ஒரு பையன் எதிர்பாராமல் மோதிவிட்டதுபோல் அந்த மாதுவை மோதினான். கையில் இருந்த பொருட்களெல்லாம் ப்ளாட்பாரத்தில் சிதறி விழுந்தன. அவள் அவனைத் திட்டிக்கொண்டே அவற்றை பொறுக்கத் தொடங்கினாள். அந்தப் பையனும் மன்னிப்புக்



கேட்டுக்கொண்டே பழங்களைப் பொறுக்கி அவளிடம் கொடுத்தான். அந்த மாது பார்க்காதபோது சிலபழங்களைத் தன் நிக்கர் ஜேபியில் வைத்துக்கொண்டான். என்னால் நம்ப முடியவில்லை.

அவன் சாப்பிடும்போது நான் பசியுடன் பார்ப்பதைக் கவனித்து, எனக்கு ஒரு பழம் கொடுத்தான். சற்று நேரத்தில் நாங்கள் நண்பர்களாகி விட்டோம். அவனுக்கு ஊர் செங்கல்பட்டுதானாம். பெற்றோர் இல்லை. ஒருதடவை ஜெயிலுக்குப் போய்விட்டு வந்திருக்கானாம். அவனுடன் இன்னும் இரண்டு பேர் தங்கியிருப்பதாகச் சொன்னான். அவனுடன் வந்தால் அவர்களையும் அறிமுகப்படுத்துவதாகச் சொன்னான்.

ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தவன் என்று தெரிந்தபோது, எனக்குக் கொஞ்சம் அருவருப்பு ஏற்பட்டாலும், அவனுடைய பேச்சு, நடத்தை என்னைக் கவர்ந்தது. அவனுடைய நண்பர்களும் அவனைப் போலவே இருந்தார்கள். அதிகமாய்ப் படிக்காவிட்டாலும் நன்றாகப் பேசிப் பழகினார்கள்.

அன்று மாலை என்னை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று வயிறு நிறைய சாப்பிடவைத்தார்கள். அவர்களுடன் நட்பு அதிகமாயிற்று. சின்னச் சின்ன வேலைகளைக் கொடுத்தார்கள். கடிதங்கள் கொடுத்துவிட்டு வரச் சொல்வது, யாருக்காவது ஒரு செய்தி சொல்லிவிட்டு வருவது இப்படி... இதில் எனக்கு எந்தக் கஷ்டமும் தெரியவில்லை. தேவைக்கு மேல் பணமும் கொடுத்தார்கள்.

ஒருமுறை பம்பாய் போகும்போது என்னையும் அழைத்துச் சென்றார்கள். அங்கு ஒரு பெரியவரின் வீட்டுக்குச் சென்றோம். அவர் பெரிய பணக்காரர்... நல்லவர். எனக்கு வேலை போட்டுக் கொடுத்தார். துணிக்கடையில் கணக்கு எழுதும் வேலை. அவரிடம் வேலையில் இருப்பவர்களெல்லாம் கிட்டத்தட்ட என் வயதினராய் இருந்தனர். நல்ல உணவும், தங்க இடமும் கிடைத்ததும், வாழ்க்கையே கவர்க்க

மாகத் தோன்றியது.

அவரிடம் 'டிரெயினிங் ஸ்கூல்' ஒன்று இருந்தது தினமும் அங்கு எங்களுக்குப் பயிற்சி கொடுப்பார்கள். முதலில் கொடுக்கப்படும் பயிற்சி... ஓட்டப் பயிற்சி... சரியாக ஓடமுடியாதவர்களை வெளியில் அனுப்பி விடுவார்கள். அல்சேஷன் நாய்க்கு இணையாய் ஓடவேண்டும். முதலில் கஷ்டமாக இருந்தாலும் பிறகு பழகிவிட்டது.

பிறகு எங்களுடைய திறமையைப் பொறுத்து வேலையைக் கொடுப்பார்கள். பிறகு தினமும் ஒரு மணி நேரம் யாராவது சொற்பொழிவு ஆற்றுவார்கள். நாட்டில் நடக்கும் அநியாயங்கள், அரசியல்வாதிகளின் சுரண்டல்கள், பணக்காரர்களால் ஏழைகள் படும் துன்பங்கள் எல்லாம் விலாவாரியாய்ச் சொல்லுவார்கள். இதை எதிர்த்துப் போராடும்படி எங்களைத் தூண்டுவார்கள். கொஞ்சம் கொஞ்சமாய்க் நானும் கூட்டத்தில் ஒருவனாகி விட்டேன். எப்பவாவது வீட்டுக்குப் போனால் ரோஜா என்னைத் திட்டுவாள். அவள் வழங்கும் அறிவுரைகள் எனக்குப் பத்தாம்பசலியாய்த் தோன்றும்.

படிப்படியாய் கொள்ளையடிப்பதில் ஒரு த்ரில் ஏற்படத் தொடங்கியது. என் திறமையைக் கவனித்து, மேலிடம் எனக்குத் தனி அந்தஸ்து கொடுத்தது. இந்த உலகில் எல்லாவற்றுக்கும் பணம்தான் முக்கியம் என்று புரிந்து கொண்டேன்.

மேலிடத்து ஆதரவால் எனக்கு எங்கு போனாலும் தனியான கவனிப்பு கிடைத்து வந்தது. அந்த மாயா ஜாலத்தில் சிக்கிவிட்ட நான் என்னையே மறந்துவிட்டேன். பளபளவென்று இருக்கும் மேற்பூச்சைப் பார்த்து, அதுதான் உண்மை என்று நம்பி விட்டேன்.

மலையை ஏறும்வரை மகிழ்ச்சியைத் தவிர வேறெதுவும் தெரியாது. மலை உச்சியை அடைந்த பிறகு அங்கிருந்து கீழே பார்த்தால், குடலை நடுங்க வைக்கும் பள்ளம்... வெறும்



இருட்டு... அந்த மாதிரி கடைசியாகத்தான் தெரியும். அவர்கள் கைகளில் நாங்கள் நன்றாக மாட்டிக்கொண்டு விட்டோமென்று. எதிர்த்துக்கொண்டு வெளியே வரவும் முடியாது. அப்படி வெளியேற நினைத்த சிலரின் கதி என்ன வாயிற்றோ, யாருக்கும் தெரியாது.

எனக்கு வாழவேண்டுமென்ற துடிப்பு இருந்தது. அதனால் உள்ளூர அவர்களை வெறுத்தாலும், எதிர்க்கவில்லை. அவர்கள் சொன்னதையெல்லாம் செய்தேன். என் மதிப்பு இருமடங்காகிவிட்டது. ஆனால் என் வாழ்க்கையின் போக்கே மாறிவிட்டது.

என் மனமும், உடலும் இரு கூறாய்ப் பிளந்துவிட்டன. என் உடல் செய்யும் காரியங்களை என் மனம் வெறுக்கத் தொடங்கியது. நியாய, அநியாயப் போராட்டத்துக்கிடையே என் மனம் நலிந்து போயிற்று. ரோஜாவின் அருகில்தான் எனக்குக் கொஞ்சம் மன அமைதி கிடைக்கும். ஆனால் அவளைப் பார்க்கும்போதெல்லாம் என்னை நன்றாகத் திட்டுவாள். என்னைப் போலீசாரிடம் சரணடையச் சொல்லுவாள்.

நான் ஏதாவது முட்டாள்தனமாய்ச் செய்தாலோ, என் எல்லையைத் தாண்டினாலோ, அதன் பிரபாவம் ரோஜாமீது கடுமையாய் இருக்கும் என்று மேலிடத்திலிருந்து எனக்கு அடிக்கடி எச்சரிக்கைகள் வரும். அதனால்தான் நான் அதற்குத் துணியவில்லை உங்கள் கண்களுக்குத் தெரிவது நான் மட்டும்தான்! ஆனால் என் போன்றவர்கள் நூற்றுக் கணக்கில் இருக்கிறார்கள்."

சந்திரன் முகம் வெளிறிப்போய் இருந்தது. சற்று நிறுத்தினான்.

"மிஸ்டர் சந்திரன், இதெல்லாம் சரி. நீங்க செய்த கொலைகள், கொள்ளைகள் பற்றிய தகவல்களைச் சொல்ல முடியுமா?" என்று கமிஷனர் கேட்டார்.

"ரயில் நிலையங்களில், விலை உயர்ந்த ஹோட்டல்களில்

நாங்கள் இருந்து கொண்டிருப்போம். எங்களில் நிறையப் பேர் சாமியார்கள் போல், பிச்சைக்காரர்கள்போல், பெட்டிக் கடை முதலாளிகள்போல் உருமாறுவோம். மக்களிடையே ஊடுருவி அபிமுகங்களை வளர்த்துக் கொள்வோம். யாரிடம் பணம் அதிகமாக இருப்பதைத் தெரிந்துகொண்டு, பிறகு கொள்ளையடிப்போம்.

யாராவது பிடிபட்டுவிட்டாலும், எங்களுக்குப் பயம் கிடையாது. மேலிடம் தலையிட்டு எங்களுக்குத் தண்டனை கிடைக்காமல் பாதுகாக்கும். ஆனால் நம்பிக்கைத் துரோகம் செய்ய நினைத்தாலே போதும், மேலிடம் கடுமையாய்த் தண்டிக்கும்.

சிலசமயம் நாங்களாகவே முடிவு எடுத்து சில திருட்டு களைச் செய்து மேலிடத்துக்கு அந்தப் பொருட்களை ஒப்படைக்கணும். மாதத்தில் மூன்று திருட்டுகளையாவது செய்யணும்.

அன்று ஒரு நாள் ரயில் நிலையத்தின் கூட்டத்தில் ஏதாவது பார்ட்டி மாட்டாதா என்று பார்த்துக் கொண்டிருந்த எனக்கு வேணுகோபாலன் டைமண்ட் நெக்லஸை எடுத்து விஜய்க்குக் காண்பித்துவிட்டு, மறுபடியும் உள்ளே வைத்ததைக் கவனித்தேன். விஜய் போனபிறகு, அவரை வேகமாக மோதி பேக்கை எடுத்துக் கொண்டு ஓடினேன். அன்றிலிருந்துதான் என் வாழ்க்கையில் துரதிருஷ்டம் ஆரம்பமானது. பிடிபட்டு விட்டேன்! அவர் என்னோட..." குரல் கம்மி விட்டதால் அவனால் மேற்கொண்டு பேச முடியவில்லை.

"பார்த்தீர்களா சந்திரன்! நீங்க சிலரின் வாழ்க்கையில் விளையாடியதால், விதி உங்களுடைய வாழ்க்கையில் எப்படிக் கொடுமையாய் விளையாடி விட்டது..." கமிஷனர் சொன்னார்.

"யாருடைய தலைமையில் நீங்கள் இந்தக் காரியங் களை நிறைவேற்றி வந்தீர்களோ, அவங்களோட பெயர்



களை உங்களால் சொல்ல முடியுமா?" அஸிஸ்டெண்ட் கமிஷனர் கேட்டார்.

சந்திரன் இறுக்கமாகத் தலை அசைத்தான்.

"ஐயா! இதில் யாரோ பெரியவங்க இருக்காங்கன்னு தெரியுமே தவிர, அவர்கள் யாரோ, எங்கே இருப்பாங்களோ எனக்குத் தெரியாது. எனக்கு மட்டும் இல்லை... என்னைப் போன்றவர்கள் யாருக்கும் அதைப் பற்றித் தெரியாது. எங்களுக்குப் பயிற்சி அளிக்கும் நபர் வழியாய் எங்களுக்கு உத்தரவுகள் வரும்."

"அந்த நபரே ஏன் தலைவனாக இருக்கக் கூடாது?"

'இல்லை! அது எனக்குத் தெரியும் சில நாட்களுக்கு முன்புதான் அந்தப் பயிற்சியாளர் தன் கடமையைச் சரியாக செய்யாததால், அவர் இடத்தில் புதிய நபர் வந்தார். அவரும் எங்களைப்போல் இந்த விஷ வளையத்தில் மாட்டிக் கொண்டவரென்று பேச்சுவாக்கில் தெரிந்தது."

"மிஸ்டர் சந்திரன்! உங்க பேச்சுக்களிலிருந்து எங்களுக்கு ஒரு 'க்ளூ'கூடக் கிடைக்கவில்லை."

"மன்னிக்கணும். எனக்கு இடங்களின் பெயர்கள் மற்றும் 'கோட்' வார்த்தைகள் தவிர உண்மையான மனிதர் களின் பெயர்கள் தெரியாது."

"அதையாவது சொல்லுங்கள்."

விஜய் சந்திரனின் தயக்கத்தைக் கவனித்தவனாய், "சொல்லு... சொல்லு... நீ சொல்லப் போகும் விவரங்களால் எத்தனை பேருக்கு நன்மை ஏற்படும் தெரியுமா?"

"நன்மையா? நன்மை பற்றித்தானா நீங்கள் பேசியது?" அவன் உதடுகளில் விரக்தியான புன்னகை நெளிந்தது.

"இந்த நாட்டில் இன்னும் நன்மை என்பது இருக்கா என்ன? நமக்குத் தெரியாமலேயே இந்தச் சமுதாயத்தில் அராஜகம் என்ற விஷச்செடி முளைத்துவிட்டது. சுயநல நோக்குடன் சிலர் அதற்கு எருப் போட்டு, தண்ணீர் ஊற்றி மகா விருட்சமாய் வளரச் செய்து விட்டார்கள். அதை

தடுக்க சாதாரண கோடாலி போதாது. உங்களைப் போன்ற நல்ல இதயம் படைத்த சிலர் அதன் ஒரு கிளையை வெட்டினால், மறுபக்கம் துளிர்த்துக் கொண்டு விடும். பலமாக வேரூன்றி விட்ட இந்த மரத்தை, வேரோடு அழிக்க சிலர் மட்டும் முன் வந்தால் போதாது.

சந்திரனின் முகம் உத்வேகத்தால் சிவந்து போயிற்று.

"நம்மால் முடிந்தவரை போராடுவோம். நீங்களும் ஒத்துழைத்தால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை..." என்றார் கமிஷனர்

சந்திரன் தனக்குத் தெரிந்த சில கோட் வார்த்தைகளை, இடங்களின் பெயர்களைச் சொன்னான். அதிகாரிகள் அவற்றைக் குறித்துக் கொண்டார்கள்.

சந்திரன் கையில் விலங்குகளுடன் வெளியில் வந்தான். இரு பக்கமும் போலீசார் காவல் இருந்தார்கள். விஜய், அனந்த் பின்னாடியே வந்தார்கள். சந்திரன் வெளியே வந்தானோ இல்லையோ, பத்திரிகை நிருபர்கள் சந்திரனைப் பளிச் பளிச்சென்று போட்டோ எடுத்தார்கள். டி.எஸ்.பி. நாராயணனைச் சுற்றிக் கும்பலாய்ச் சூழ்ந்துகொண்டு கேள்விக் கணைகள் தொடுத்தார்கள்.

சந்திரன் போலீஸ் வேனில் ஏறப் போனவன் நின்று விஜய் பக்கம் திரும்பினான். அதைக் கவனித்த விஜய் சட்டென்று சந்திரனின் அருகில் வந்தான்.

கரகரத்த குரலில் சந்திரன், "விஜய்! ஒருக்கால் எனக்கு ஏதாவது நேர்ந்தால்..."

விஜய் சந்திரனின் தோளில் கையைப் பதித்தான். அந்த ஸ்பரிசத்தில் ஏதோ வாக்குறுதி. தோழமை தன் உடலில் பாய்ந்தாற் போல் உணர்ந்தான் சந்திரன்.

"எதைப் பற்றியும் கவலைப்படாதே! நிம்மதியாய் இரு. உன்னுடைய பொறுப்புகளை எல்லாம் நான் ஏற்றுக் கொள்கிறேன். போதுமா?" என்றான் விஜய்.

சந்திரன் கண்கள் நன்றியால் பனித்தன. அவன் வேனில்



ஏறியதும், வேன் கிளம்பிவிட்டது. தொலைவில் மறைந்து கொண்டிருந்த வேனையே பார்த்துக் கொண்டிருந்த அனந்த் விஜயின் இதயங்கள் பாரமாகிவிட்டன.

## 82

அன்று— சந்திரன் அரெஸ்ட்டாகி ஒரு வாரமாகிவிட்டது. அவன் தகவல் தெரிவித்த அன்று இரவே போலீஸ் ரெய்ட் நடந்தது. ஆனால் எதிர்பார்த்த அளவு வெற்றி கிடைக்கவில்லை. மலையைக் கிள்ளி எலியைப் பிடித்ததுபோல் ரொம்ப குறைந்த நபர்களைத்தான் பிடிக்க முடிந்தது. அதில் முக்கியமான இருவர் ஜெயிலில் தற்கொலை செய்துகொண்டு விட்டார்கள். சந்திரன் அரெஸ்ட் ஆனதும், போலீசாரிடம் விவரங்களைச் சொல்லிவிட்ட விஷயம் அவர்களுக்குத் தெரிந்து போயிருக்க வேண்டும். அதான் முன்னாடியே அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டார்கள்.

கடந்த ஏழு நாட்களாக சந்திரனைப் பற்றிய செய்திகள் இன்னும் நாளேடுகளில் வந்து கொண்டுதான் இருந்தன. நாளேடுகள் இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் பொதுமக்களிடம், சந்திரனை நேரில் பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்தது.

இதற்கிடையே வேணுகோபாலனின் உடல்நிலைமை ஓரளவு முன்னேறியது. சந்திரன் அவருக்கு ரத்தம் கொடுத்ததையும், அவன் அரெஸ்ட் ஆன செய்திகளை விஜய், ரோஜா தெரிவித்தார்கள்.

ரோஜா வேணுகோபாலனை விட்டு நகரவேயில்லை. இருபத்தி நான்கு மணி நேரமும் அவரையே கவனித்துக் கொண்டாள். அவருக்கும் கொஞ்சம் தெம்பு வந்ததும்,

ஜெயிலுக்குப் போய் மகனைப் பார்ப்பதற்குப் பிடிவாதம் பிடித்தார். ஆனால் டாக்டர்கள் அனுமதி தரவில்லை. இந்த நிலைமையில் உணர்ச்சி வசப்பட்டால், முகனுக்கே மோசமாகிவிடுமென்று எச்சரித்தார்கள்.

விஜய், அனந்த் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி சந்திரனுக்குக் குறைந்த அளவில் தண்டனை கிடைக்க முயன்று கொண்டிருந்தார்கள். சந்திரனைப் பார்க்க யாருக்கும் அனுமதி கிடைக்கவில்லை.

சந்திரன் என்ற பெயரில் அரெஸ்ட் ஆன ஜேம்ஸின் போட்டோவைப் பேப்பரில் பார்த்ததும், லாவண்யாவின் தலையில் இடி விழுந்தது போலாயிற்று. தன் உயிர் நண்பன் என்றும், தன் உலகமே அவன்தான் என்று நம்பிய இந்த ஜேம்ஸ், கொள்ளைக் கூட்டத்தில் முக்கியமான நபர் என்றும் தன் தந்தையின் முதல் மனைவியின் மகன்... அதாவது தன்னுடைய சகோதரன் என்றும் தெரிந்தபோது, லாவண்யாவுக்கு மூளையே மரத்து விட்டது போலாயிற்று. மடியில் கிடந்த பேப்பரை, இந்த உலகத்தையே மறந்து விட்டவள் போல் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

உடனே விஜயிடம் ஓடிப் போய் உண்மை விவரங்களைத் தெரிந்து கொள்ள துடித்தாள். ஆனால் ரோஜாவும் அங்கே இருப்பாள் என்று நினைவு வந்ததும் போகப் பிடிக்கவில்லை. சாப்பாடு, தூக்கம் இரண்டையும் மறந்து போனவள் போல் கட்டிலில் படுத்துக் கிடந்தாள் லாவண்யா. நடுவில் அனந்த் அவளைப் பார்க்க வந்தான். தான் யாரையும் பார்க்க விரும்பவில்லை என்றும், அவர்களுக்கும் தனக்கும் எந்த உறவும் இல்லையென்றும் சொல்லி அனுப்பிவிட்டாள்.

விஜய், வேணுகோபாலன் உடல்நிலை சற்று தேவலை என்றும், அவர் லாவண்யாவைப் பார்க்க விரும்புகிறார் என்றும் போன் செய்தான். லாவண்யா பதில் பேசாததோடு, அடுத்த முறை போன் ஒலித்தபோது, ரிசீவரை எடுக்கவே இல்லை.



லாவண்யா ஜேம்ஸிடம் நேராகச் சென்று ஒருமுறை அவனைச் சந்திக்க வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டாள். ஜெயில் அதிகாரிகள் அனுமதி கொடுக்காததால் நேராக ஐ.ஜி. வீட்டுக்குப் போனாள். அவர் மனைவி லாவண்யாவுக்கு நன்றாகத் தெரிந்தவள். ஐ.ஜி.யும் லாவண்யாவுக்குத் தெரிந்தவர் தான். அவரே சுயமாய் போன் செய்ததால், ஜெயில் அதிகாரி லாவண்யாவைச் சந்திரன் இருந்த செல்லுக்குத் தானே அழைத்துச் சென்றார்.

பத்து நாள்களாக கம்பிகளுக்குப் பின்னால் இருந்த சந்திரன் தாடியுடனும், சிவந்த கண்களுடனும இருந்ததைப் பார்த்ததும், லாவண்யாவின் இதயம் பனிப்பாறையாய் இளகியது. இந்த ஒரு வாரமாய் அவள் அனுபவித்துக் கொண்டிருந்த வேதனை அந்த முகத்தில் பிரதிபலித்தது.

"ஜேம்ஸ்..." லாவண்யாவின் இதழ்கள் தெளிவற்று அசைந்தன வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

லாவண்யாவைப் பார்த்ததும் சந்திரனுக்கு ஒரு நிமிடம் வாயடைத்துப் போனது போலாயிற்று. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"லாவண்யா என்னை மன்னித்துவிடு."

"மன்னிப்பதா? நீ என்ன தவறு செய்தாய் என்று மன்னிக்கணும்" என்றாள்.

"என்னைப் பற்றிப் பேப்பர்களில்..."

"பார்த்தேன்! நான் அதைக் குற்றமாக எண்ணவில்லை... இந்த உலகில் நேர்மையுடன் வாழணும் என்றால், நெருப்புமீது நடப்பது போல் என்று எனக்குத் தெரியாதா?"

இந்த வார்த்தையைக் கேட்டதும் அவன் முகத்தில் கொஞ்சம் ஒளி வந்தது. கல்மிஷமில்லாத புன்னகை ஒன்று உதடுகளில் மலர்ந்தது.

"லாவண்யா... நாமிருவரும்..." அவன் முடிக்கும் முன்பே—

லாவண்யா, "தெரிந்து கொண்டேன். கடவுள் கருணை இல்லாதவர் என்றும் மனிதர்களின் வாழ்க்கையில் இப்படிக் கொடூரமாய் விளையாடுவார் என்றும் எனக்குத் தெரியாது..." லாவண்யாவின் கண்களிலிருந்து கண்ணீர் கோடாய் வழிந்தது.

"லாவண்யா... அழுகிறாயா என்ன? எனக்கு இவ்வளவு மகிழ்ச்சியைத் தந்த விஷயம் உனக்கு வேதனையைத் தருகிறதா?"

லாவண்யாவின் கண்கள் வியப்பாய் அகலமாய் விரிந்தன.

"உனக்கு மகிழ்ச்சியாய் இருக்கா? அப்போ உனக்கு இதயமே இல்லைன்னு அர்த்தம்" என்றாள்.

"லாவண்யா!"

"இல்லாவிட்டால் என்ன? இந்த உலகில் இத்தனைபேர் இருக்கும்போது, நீதான் என் உடன்பிறப்பாய் இருக்கணுமா? நீதான் என் அண்ணன் என்றால் சின்ன வயதிலிருந்தே ஏன் ஒரே இடத்தில் வளரவில்லை? திடீரென்று இன்று அண்ணன் என்று தெரிந்ததும், "அண்ணா" என்று உன்னை அழைக்க வேண்டுமா நான்? என்னால் முடியாது. கடவுள் உன்னிடம் எனக்கு அன்பைக் கொடுத்து, இந்த உறவையும் கொடுப்பானேன்?"

சந்திரனால் உடனே பேச முடியவில்லை. லாவண்யா மனதில் வீசிக் கொண்டிருந்த புயலை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. சற்றுப் பொறுத்துச் சொன்னான்.

"லாவண்யா! நீ தவறாக எண்ணுகிறாய். அன்பு என்றால் என்ன? அற்புதமான உணர்வு அது. உண்மையான அன்பு சுயநலத்துக்கு அப்பாற்பட்டதாய் இருக்கவேண்டும். உன்னை நான் முதலிலிருந்தே சிநேகிதியாய்க் கருதி வந்தேன். இன்று நீ என் தங்கையென்று தெரிந்தபோது மகிழ்ச்சியாய் இருக்கு லாவண்யா எனக்கே தெரியாமல் உன்



மனதில் சலனம் ஏற்படுத்தி இருந்தால் என்னை மன்னித்துவிடு..." சந்திரன் உள்ளே கட்டில்மீது வைத்திருந்த புத்தகத்தை எடுத்து வந்து கம்பி வழியாய் லாவண்யாவிடம் கொடுத்தான்.

"என்னது?"

"பகவத்கீதை... விஜய் படிக்கச் சொல்லி என்னிடம் கொடுத்தான். இது என்னைவிட உனக்குத்தான் பயன்படும்..." என்றான்.

லாவண்யா புத்தகத்தைப் பெற்றுக் கொண்டே, "ஜேம்ஸ்... இதுதான் நம் கடைசிச் சந்திப்பு..." என்றாள்.

"அப்படி வெறுக்கும்படி நான் என்ன தவறு செய்து விட்டேன்?"

"நீ ஒன்றும் செய்யவில்லை. எனக்குத்தான இந்த வாழ்க்கையிடம் விரக்தியாய் இருக்கு. அந்தச் சூழ்நிலையிலிருந்து, இந்த மனிதர்களிடமிருந்து, தொலைவுக்குப் போய் விட வேண்டுமென்று எண்ணுகிறேன். இன்றோ, நாளையோ கிளம்பி விடுவேன்"

"லாவண்யா... நீ எங்கேயிருந்தாலும் மகிழ்ச்சியாய் இருக்கணும் உன் நண்பனாய் நான் விரும்புவது இதுதான்! வாழ்க்கையை அப்படியே ஏற்றுக் கொண்டால் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். இதுதான் என் வேண்டுகோள்."

லாவண்யா சந்திரனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்தவள், எதிரே வந்து கொண்டிருந்த நபர்களைப் பார்த்து, பாம்பை மிதித்துவிட்டவள் போல் நின்று விட்டாள். அவள் கைகள் சந்திரன் கொடுத்த பகவத்கீதையை இறுகப் பற்றிக் கொண்டன.

எதிரே அனந்த், ரோஜா இருபக்கமும் தாங்கலாய்ப் பிடித்துக் கொண்டு வர, வேணுகோபாலன் மெதுவாய் வந்து கொண்டு இருந்தார்.

ஒரு நிமிஷம் போல் லாவண்யாவின் இதயத் துடிப்பு

நின்று, மீண்டும் வேகமாய்த் துடிக்கத் தொடங்கியது. சுய நினைவு வந்தது போல் நடையின் வேகத்தை அதிகரித்து, அவர்களைப் பார்க்காதது போல் வேகமாய்ச் சென்று விட்டாள்.

வேணுகோபாலன் எழுந்து நடமாடக் கூடாது என்றும், ஓய்வு தேவையென்று டாக்டர்கள், விஜய் எத்தனை முறை சொன்னாலும், அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை. தன் உயிர் ரொம்பக் கெட்டி என்றும், அவ்வளவு சீக்கிரத்தில் தான் சாகமாட்டேன் என்றும், சந்திருவைப் பார்க்க வேண்டுமென்று வேணுகோபாலன் பிடிவாதம் பிடித்தார்.

விஜய் வேறு வேலையாய் வெளியில் சென்று இருந்ததால் ரோஜா, அனந்த் இருவரும் அவரை ஜெயிலுக்கு அழைத்து வந்தார்கள். ஃபாமிலி டாக்டரும் உடன் வந்திருந்தார்.

தலைகுனிந்து மெதுவாய் நடந்து வந்து கொண்டிருந்த வேணுகோபாலன் லாவண்யாவைக் கவனிக்கவில்லை.

"அட... லாவண்யா..." என்றாள் ரோஜா. அந்த வார்த்தையைக் கேட்டதும் அவர் திடுக்கிட்டுத் தலையை உயர்த்தினார்.

"லாவண்யாவா? எங்கே?" என்றார்.

"நம்மைப் பார்த்ததும் பார்க்காதது போல் போய் விட்டாள்" என்றான் அனந்த்.

அதைக் கேட்டதும் அவருடைய முகம் களையிழந்தது.

"போம்மா... போய் அவளை அழைச்சுக்கிட்டு வா... நான் ஒன்றும் சொல்ல மாட்டேன் என்றும், நடந்ததையெல்லாம் மறந்து விட்டேன் என்றும் சொல்லு."

ரோஜா அவருடைய கையை விட்டுவிட்டுப் பின்னால் திரும்பி ஓடினாள்.

"லாவண்யா..." குரல் கொடுத்துக் கொண்டே வந்தாள் ரோஜா.

லாவண்யா நிற்கவில்லை. ரோஜா ஓடி வந்து லாவண்யாவின் கையைப் பற்றிக் கொண்டாள்.



"லாவண்யா அப்பா உன்னை அழைச்சுக்கிட்டு வரச் சொன்னார்..."

ரோஜாவின் ஸ்பரிசத்தை விரும்பாதவள் போல் லாவண்யா கையை வேகமாய் உதறிவிட்டாள்.

"வரமாட்டேன்னு சொல்லு" போய்க்கொண்டே சொன்னாள்.

"லாவண்யா! அப்பா உன்னை ஒன்றும் சொல்ல மாட்டார். உனக்கு எந்தப் பயமும் வேண்டாம்" என்றாள்.

முன்னால் சென்று கொண்டிருந்த லாவண்யா நின்று, பின்னால் திரும்பி ரோஜாவின் முகத்தை நேராகப் பார்த்தாள்.

"பயமா? எனக்கா? எதுக்கு? நான் பயந்துவிட்டதாக உன்னிடம் யார் சொன்னது? நான் வரமாட்டேன்னு சொன்னது அவரிடம் பயந்ததினால் இல்லை. உங்க எல்லோருக்கும் ரொம்ப தள்ளி இருக்கலாம்னு... உங்க உறவுகள் எனக்குத் தேவையில்லை. நீங்க எல்லோரும் ரொம்ப நல்லவங்க. நானோ ரொம்பக் கெட்டவள். இதயமே இல்லாதவள். உங்களுக்கும் எனக்கும் எப்படி ஒத்துப் போகும்? மனதில் இல்லாத அன்பை, நல்லத்தனத்தை இருப்பது போல் போலியாக நடிக்க எனக்கு நடிக்க வராது. நான் ரொம்ப சாதாரணமானவள். பெரிய மனிதர்களைப் போல் நடிக்கும் உங்களைக் கண்டால் எனக்கு வெறுப்பு. உங்க நிழலைக்கூட என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. அவரைப் பொறுத்தவரை நான் என்றோ இறந்துவிட்டேன். எங்க இருவருக்குமிடையே தந்தை, மகளென்ற பந்தம் என்றைக்கோ அறுந்துவிட்டது. இப்போ நான் இல்லா விட்டாலும் பரவாயில்லை... அதான் நீ இருக்கியே..." என்று சொல்லி, லாவண்யா முகத்தைத் திருப்பிக் கொண்டு வேகமாய்ச் சென்றுவிட்டாள்.

ரோஜா பேச்சிழந்தவள்போல் அங்கேயே நின்று விட்டாள்.

லாவண்யாவின் நடை ஓட்டமாய் மாறியது. அவள் முகத்தில் துக்கமும், அதிருப்தியும் போட்டியிட்டன. வாழ்க்கையில் அபூர்வமானது எதையோ இழந்துவிட்டது போல் வெறுமையாய்த் தோன்றிற்று. இதுக்கெல்லாம் காரணம் தன் தந்தை... சின்ன வயதிலிருந்தே தந்தையென்றால் தனக்கு லட்சியமில்லை... அவர் தன் முதல் மனைவி, மக்களை, தன் இரண்டாவது மனைவி, அதாவது தன் தாய்க்காக உறவைத் துண்டித்துக் கொண்டதாகத் தெரிந்தபோது, அந்த வெறுப்பு இன்னும் அதிகரித்தது. எல்லாவற்றையும் விட துரதிருஷ்டமான விஷயம் அந்த ரோஜாவின் தம்பி சந்திரன் தன் வாழ்க்கையில் ஜேம்ஸாய் வந்தது... இந்த நினைப்பே லாவண்யாவுக்குப் பயங்கரமானதாய்த் தோன்றியது.

கற்சிலையாய் நின்றுவிட்ட ரோஜா அருகில் அனந்தும், வேணுகோபாலனும் வந்தார்கள்.

"லாவண்யா எங்கே?"

"போய் விட்டாள்" என்றாள் ரோஜா.

அவர் பெருமூச்செறிந்தார். "நான் அவளை மன்னித்தாலும், அவள் என்னை மன்னிக்க மாட்டாள்."

மூவரும் சந்திரன் இருந்த அறை பக்கம் நடக்கத் தொடங்கினார்கள்.

லாவண்யாவுக்குத் தந்தைமீது அவ்வளவு வெறுப்பு ஏன் என்று ரோஜாவுக்குப் புரியவில்லை.

## 83

லாவண்யா போன பிறகு சந்திரன் கட்டில்மீது சரிந்தாற் போல் உட்கார்ந்து கொண்டான். லாவண்யாவிடம் தான் என்றைக்கும் எல்லைமீறி நடந்து கொண்டதில்லை. ஆனா



லும் லாவண்யா படும் இந்த வேதனைக்குத் தான்தான் காரணம் என்று அவனுக்குத் தோன்றியது. என்றைக்கோ அறுந்துவிட்ட இந்தப் பந்தமே மறுபடியும் இப்படி பிணைத்துக் கொள்ளத்தான் வேண்டுமா? ஏமாற்றமும், வேதனையும் நிறைந்த லாவண்யாவின் முகம் தன்னை வாழ்நாள் முழுவதும் துரத்தப் போகிறது.

நெற்றிமீது கைகளை வைத்துக் கொண்டு, கண்களை மூடியிருந்த சந்திரனுக்குச் "செந்தூ" என்ற அழைப்புக் கேட்டது. திடுக்கிட்டாற்போல் தலையை உயர்த்திப் பார்த்தான்.

எதிரே ரோஜா, அனந்த், வேணுகோபாலன் மூவரும் நின்றிருந்தார்கள். லாவண்யா பற்றிய யோசனைகளில் மூழ்கியிருந்த சந்திரன் அவர்கள் வந்ததைக் கவனிக்கவில்லை.

"செந்தூ..." ரோஜாவின் அழைப்பு அமிருதமழையாய்ப் பொழிந்தது. சந்திரன் எழுந்து கம்பிகளின் அருகே வந்தான்.

அவன் இதற்குமுன் என்றுமே கண்டிராத விதமாய், ரோஜாவின் முகம், திருப்தி நிறைந்து தென்பட்டது. கண்கள் மகிழ்ச்சியில் பளபளவென்று மின்னின. தன் பக்கத்திலிருந்த வேணுகோபாலனைக் காண்பித்தாள். "அவர் தங்களுடைய தந்தை" என்று சொல்ல முயன்றாள். அவள் வாயிலிருந்து வார்த்தை வெளிவர மறுத்தது

சந்திரனின் பார்வை ஒரு விநாடி அவர்மீது நிலைத்து, உடனே தரையில் தாழ்ந்துவிட்டது. திடீரென்று, எதிர்பாராமல் அவனுக்கு ரோஜாமீது கோபம் வந்தது.

அவரைப் பார்த்தால் தன் மனம், ரோஜாவின் உள்ளம் போல் மலரவில்லை என்று ரோஜாவிடம் எப்படித் தெரிவிப்பது? தவறு செய்து விட்டோம் என்ற குற்ற உணர்வு, தன்னிரக்கத்துடன் கூடிய பச்சாதாபம் தன்னைத் தகித்துக் கொண்டிருப்பதை அவளுக்கு எப்படி புரிய வைப்பது? அவள் மட்டும் தனியாக வந்திருக்கக்கூடாதா?

வேணுகோபாலனின் நிலைமை விசித்திரமாயிருந்தது.

எத்தனையோ ஆண்டுகளாகப் பார்க்க வேண்டுமென்று துடித்துக் கொண்டு இருந்தவனைக் கண்ணாரக் கண்டு, அந்த மகிழ்ச்சியை மனதில் பூரணமாய் உணருவதுபோல் தென்பட்டார். "செந்தூ" அவர் உதடுகள் அசைந்தனவே தவிர வார்த்தை வெளி வரவில்லை.

அவர் பக்கத்திலேயே நின்றிருந்த அனந்த், அபூர்வமான காட்சியைக் காண்பது போல் அவரையும், சந்திரனையும் கவனித்துக் கொண்டிருந்தான்.

தான் வேண்டிக் கொண்டது நிறைவேறி விட்டதுபோல் உணர்ந்தாள் ரோஜா.

சந்திரன் எதையும் கவனிக்கவில்லை. தரையை நோக்கித் தாழ்ந்திருந்த அவன் பார்வை உயரவே இல்லை. இப்படி அவர்கள் முன்னால் எந்த உணர்ச்சியும் இல்லாமல் நிற்க வேண்டி வந்தது, ரொம்ப இடைஞ்சலாய் இருந்தது. தன்னைச் சமாளித்துக் கொள்வதற்காக கம்பிகளைப் பலமாகப் பற்றிக் கொண்டான்.

சற்று நேரம் மொழியின் தேவையே இல்லாததுபோல் எல்லோரும் மௌனமாக இருந்தார்கள். வேணுகோபாலனின் கை மெதுவாக சந்திரன் கைமீது விழுந்து அழுத்தியது.

செந்தூரின் உடல் நடுங்கிற்று. மெதுவாய்த் தலையை உயர்த்திப் பார்த்தான். அவன் பார்வை தன் கையைப் பற்றி இருந்த அவருடைய விரல்கள்மீது நிலைத்தது. அந்த விரலில் விலையுயர்ந்த வைர மோதிரம் இருந்தது.

எந்த நகையைப் பார்த்தாலும், அதனுடைய விலையை துல்லியமாக சொல்லக்கூடிய திறமை அவனுக்கு இருந்தது. அவனையறியாமலேயே அந்த மோதிரத்தில் ரொம்ப அபூர்வமான வைரம் பதிக்கப்பட்டிருப்பதை அவன் மனம் எடைபோட்டு விட்டது.

"செந்தூ..." வேணுகோபாலனின் குரல் தடுமாறியபடி ஒலித்தது. "உங்க வாழ்க்கை இப்படி நலிந்து போனதற்குக்



காரணம் நான்தான். ஆனால் நான்... நான்... உங்களுக்கு வேண்டுமென்றே அநியாயம் செய்யவில்லை. நான் எழுதிய கடிதம் உங்க அம்மாவுக்குக் கிடைத்திருந்தால், நாம் இப்படிப் பிரிந்து போய் இருக்க மாட்டோம். உங்களை இழந்து விட்டேன் என்று தெரிந்த விநாடியிலிருந்து நான் நடைப்பிணமாய்த்தான் இத்தனை வருடங்கள் வாழ்ந்து வந்தேன்; உங்களுடைய நினைவுகள் என்னை எப்படி வேதனைக்குள்ளாக்கியதோ உங்களுக்குத் தெரியாது. என் வேதனையை உங்களிடம் வாய்விட்டு சொல்லக்கூடிய அதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. இதற்காகத்தான் நான் மறுபடியும் பிழைத்தேனோ என்னவோ...! செந்தூ நடந்ததை எல்லாம் மறந்து விடு. உன் தண்டனையைக் குறைக்க விஜய் முயன்று வருகிறான். நீ திரும்பி வந்ததும், நாம் எல்லோரும் சேர்ந்து புதிய வாழ்க்கையைத் தொடங்குவோம். உன் விடுதலைக்காக, அந்த நன்னாளுக்காகக் காத்துகிட்டு இருப்பேன்."

அவருடைய கை சந்திரனின் கையை இறுக்கியது.

ரோஜா அவருடைய கையைப் பற்றி, "நீங்க ரொம்ப ஆவேசப்படறீங்க" என்று மென்மையாகச் சொன்னாள்.

"இது ஆவேசமில்லை ரோஜா! எந்தத் தந்தைக்கும் கிடைக்காத ஆனந்தம்" வேணுகோபாலன், சந்திரன், ரோஜா இருவரின் கைகளையும் எடுத்து தன் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

"ஒரே ஒரு குறைதான். இந்த சமயத்தில் உங்க அம்மாவும் இருந்திருந்தால் எனக்கு விமோசனம் கிடைத்திருக்கும்; என் மகிழ்ச்சி முழுமை அடைந்திருக்கும்."

ரோஜா அவருடைய நிலையைக் கவனித்து விட்டாள். அவரால் பேச முடியவில்லை; மூச்சு இரைத்தது. சற்றுத் தொலைவிலிருந்த டாக்டர் சட்டென்று அருகில் வந்தார்.

"நேரம் முடிந்து விட்டது. இனி போகலாம் வாங்க..." டாக்டர் அவரை தாங்கியபடியே சொன்னார்.

"இருங்க டாக்டர். ஒருமுறை என்னைக் கண்குளிர பார்க்க விடுங்க." டாக்டரின் கைகளிலிருந்து விடுவித்துக் கொண்டு சந்திரனின் அருகில் சென்றார். கம்பி வழியாக அவனுடைய கன்னங்களை, தலைமுடியை வருடி விட்டார். அவருடைய செய்கைகளுக்கு அனந்த்—டாக்டர் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

டாக்டர் ஜாடை காட்டியதில் ரோஜா, "இனி போகலாம் வாங்க. நாளை காலை மறுபடியும் வருவோம்" என்றாள்.

"வந்து விட்டேன்... இதோ ஒரு நிமிஷம்..." அவர் கைகளை வெளியே எடுத்தார். அப்படி எடுக்கும்போது விரலிருந்த வைர மோதிரம் பளிச்சென்று மின்னியது. அதைப் பார்த்ததும் அவர் நின்று விட்டார். உடனே அதைக் கழட்டி சந்திரனின் விரலில் அணிவித்தார்.

அதற்குமேல் டாக்டர் அவரை அங்கே தங்கவிடவில்லை. டாக்டரும், அனந்தும் அவரை இருபுறமும் தாங்கி, வலுக்கட்டாயமாய் அங்கிருந்து அழைத்துச் சென்றார்கள்.

சந்திரன் ஜெயில் கம்பிகளைப் பற்றி அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒருநாளும் பார்த்திராத தன் மீது அவருக்குத் திடீரென்று அன்பு பொங்கி வந்ததைக் கண்டு, அவனுக்கு வியப்பாக இருந்தது. இதே அன்பு அவர் தன் தந்தை என்று தெரிந்த போது தனக்கு ஏன் வரவில்லை.

"செந்தூ..." ரோஜா அழைத்தாள்.

எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த செந்தூரின் பார்வை ரோஜா பக்கம் திரும்பியது.

"நான்... நான் முன்பே சொல்லவில்லை... நீ பிடிபட்டு விட்டால், எல்லாம் நல்லபடியாக முடிந்து விடுமென்று..."

அவன் சிரித்தான். அதே சிரிப்பு... விரக்தியும் வெறுப்பும் கலந்த சிரிப்பு.

அதைப் பார்த்ததும் ரோஜாவுக்குச் சற்று கோபம் வந்தது.



"என் பேச்சில் உனக்கு இன்னமும் நம்பிக்கை வரவில்லையா?" என்றாள்.

"நம்பிக்கைதான்... ஆனால் எனக்கு ஏனோ கவலை விடுமோ என்று பயமாயிருக்கு..."

ரோஜா சட்டென்று கம்பி வழியாகக் கையை நீட்டி அவன் வாயைப் பொத்தினாள்.

"செந்தூ அப்படிச் சொல்லாதே... எத்தனை பேர் குற்றங்களைச் செய்யவில்லை? எத்தனை பேர் செய்யாத குற்றங்களுக்குத் தண்டனை அனுபவிக்கவில்லை? மனிதன் தவறு செய்வது குற்றமில்லை. ஆனால் வாய்ப்பு கிடைத்த போது, அதைச் சரி செய்து கொண்டு இருந்தாலிட்டால், அவன் மனிதனே இல்லை."

"ரோஜா! ஒரு சின்ன வேண்டுகோள்."

"சொல்லு செந்தூ! என்ன விஷயம்?" பதட்டத்துடன் கேட்டாள் ரோஜா.

"என்றாவது ஒருநாள் வேசியிடமிருந்து உனக்குத் தகவல் வரும். தகவல் வந்ததும் அவளை நீ சந்திப்பதாக எனக்கு வாக்குக் கொடு."

"கட்டாயம் போகிறேன். இப்போ வேசி எங்கே இருக்கிறாள்?"

"எனக்குத் தெரியாது... நான் பிடிபட்டு விட்டான் என்று தெரிந்ததும், தலைமறைவாகி விட்டாள். நிறைமாதக் காரி. பிரசவம் ஆகும்வரை அங்கேயே இருப்பாள் என்று நினைக்கிறேன். ஒருக்கால் அடைக்கலம் தேடி உன்னிடம் வந்தாலும் வரலாம். அந்தப் பெண் வந்தால் அவளுக்கு ஆதரவு கொடுப்பாயா ரோஜா... எனக்காக..."

"இதை நீ தனியாகச் சொல்லவேண்டுமா செந்தூ?"

செந்தூரின் முகம் ஒருகணம் களையிழந்து தென்பட்டது.

"ரோஜா, வேசி தனியாக இருந்தால் எங்கேயாவது, எப்படியாவது பிழைத்துக் கொள்வாள். கருவுற்றிருப்பதாக

தெரிந்ததும், அபார்ஷன் செய்துக்கச் சொன்னேன். அவள் ஒப்புக்கொள்ளவில்லை. எனக்குக் குழந்தை வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள். இந்தக் குழந்தையால் அவள் கஷ்டப் பட்டால் என்னால் தாங்க முடியாது ரோஜா."

"செந்து..." இதழ்கள் நடுங்க அழைத்தாள் ரோஜா. "நீ பெண்ணாகப் பிறந்திருந்தால் உனக்குத் தெரிந்திருக்கும். தான் உயிருக்கு உயிராய் நேசித்தவனின் குழந்தைக்கு உயிர் கொடுத்து வளர்த்து ஆளாக்க வேண்டுமென்று ஒவ்வொரு பெண்ணும் துடித்துக் கொண்டிருப்பாள். மேரிக்கு எந்த ஆபத்தும் வராது. அவளிடமிருந்து செய்தி வந்ததும், பறந்து போய் அவளுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறேன். மேரிக்குப் பிறக்கப் போகும் குழந்தை எனக்கு மட்டும் உறவில்லையா? செந்து நீ ஜெயிலிலிருந்து வரும்போது உன் மகனோ, மகளோ உனக்காக எதிர்பார்த்துகிட்டு இருப்பார்கள். நீயே பார்த்து ஆச்சரியப்படும் விதமாய் அவர்களைக் கவனமாய் வளர்த்து ஆளாக்குவேன். அப்பா எப்போ வருவார்? எப்போ அவரைப் பார்க்கலாம் என்று அந்தப் பிஞ்சு மனம் துடிப்புடன் காத்திருக்கும் விதமாய் வளர்ப் பேன். சரிதானா?"

அவனின் முகத்தில் மெள்ள மெள்ளமாய் ஒளி வந்தது. ரோஜா சொன்ன இனிமையான காட்சிகள் கண்ணுக்கு எதிரே தென்படுவது போலிருந்தது.

"உன் போன்ற அக்கா எத்தனை பேருக்குக் கிடைப் பாள்? ரோஜா! நான் ரொம்ப கொடுத்து வைத்தவன். இப்போ நீ சொன்ன இனிய கனவை ரஸித்துக்கொண்டு, அதில் வாழ்ந்து கொண்டு இந்தத் தண்டனையை நிமிஷமாய் கழித்து விடுவேன். இந்த வாழ்க்கையைப் பற்றி கொஞ்சம் கூடச் சலித்துக் கொள்ள மாட்டேன்."

ஜெயில் அதிகாரி நேரமாகிவிட்டதென்று தெரிவித்ததும் ரோஜா தம்பியிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்து விட்டாள்.



சந்திரன் கட்டில்மீது அமர்ந்து கொண்டான். இந்த முறை அவனிடம் விரக்தி தென்படவில்லை. வாழ்க்கையில் ஏதோ பற்றுகோல் கிடைத்தது போலிருந்தது.

அவன் பார்வை தன் விரலில் இருந்த மோதிரத்தின் மீது விழுந்தது... வேணுகோபாலன் போகும் போது கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் அவன் செவிகளில் எதிரொலித்தன.

ஒரு தந்தையாக அவருடைய இதயத்தில் இருந்த அன்பு, தவிப்பு புரிந்தது. தன் வருகைக்காக காத்திருப்பதாகச் சொன்னதில் இருந்த வேட்கையை உணர முடிந்தது. அந்த மோதிரம், வெறும் மோதிரமாகத் தோன்றவில்லை. தனக்காகக் தவிப்புடன் காத்திருக்கும் தந்தையின் அன்புச் சின்னமாய்த் தென்பட்டது.

## 84

சந்திரனின் கேஸ் கோர்ட்டில் அன்றுதான் விசாரிக்கப் பட இருந்தது.

சந்திரனைப் பார்க்க வந்த இளைஞர்கள் கூட்டத்தால் கோர்ட் நிரம்பிவிட்டது. சந்திரன் தான் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டு விட்டதால் கேஸ் சீக்கிரமாகவே முடிந்து விட்டது.

சந்திரன் செய்த குற்றங்கள் எல்லாம் எவ்வளவு பயங்கர மானவையோ, சமுதாயத்தின் அமைதி, பாதுகாப்புக்கு எவ்வளவு தீங்கு ஏற்படுமோ விவரமாகச் சொல்லி முடித்த பிராஸிக்யூட்டர், இது போன்றவர்களைக் கடினமாய்த் தண்டிப்பது மற்றவர்களுக்குப் பாடமாக இருக்கும் என்று தன் வாதனையை முடித்துக் கொண்டார்.

சந்திரனின் சார்பின் வாதாட விஜய் எழுந்து கொண்டான். அவன் குரல் முதலில் மென்மையாய் ஒலித்தது. போகப் போக ஆவேசமாய்ச் சிங்க கர்ஜனைப் போல் ஒலிக்கத் தொடங்கியது. எல்லோரும் அவனுடைய வாதத்தைக் கவனமாய், ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"யுவர் ஆனர், மதிப்பிற்குரிய பிராசிக்யூட்டர் சொன்னது போல் இந்தக் கால இளைஞர்கள் பொறுப்பற்று இருப்பது உண்மைதான். அராஜகச் செயல்களில் அவர்கள் இறங்குவதும் உண்மைதான். ஆனால் அதற்குக் காரணம் என்ன? அந்த நிலைமைக்கு அவர்களைத் தள்ளியது யார்?

இதோ! இந்தக் குற்றவாளி கூண்டில் நிற்கும் இளைஞன், ஓரளவுக்குப் படித்தவன், துடிப்பானவன். மேற்படிப்புக்கு வசதியில்லாமல் வேலைக்குப் போகவும் வயது போதாமல் இடைப்பட்ட காலத்தில் பசியின் கொடுமையைத் தாங்காமல் இப்படிச் சீரழிந்து விட்டான்.

பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கே வேலையில்லாத் திண்டாட்டம் பரவி விட்ட இந்த நாட்டில் இவர்கள் எதை நம்பி வாழ முடியும்... பள்ளி நாட்களில் கற்பிக்கப்பட்ட நேர்மை, வெளி உலகில் வந்து பார்த்தால், கண்ணுக்கு எட்டாத தொலைவில் இருப்பதை உணரும்போது, இவர்களால் என்ன செய்ய முடியும்? வேலை கிடைக்காமல், சாப்பிட வழியில்லாமல், தண்டச்சோறு என்று வீட்டினராலேயே அழைக்கப்படும்போது, அந்தக் கொந்தளிப்பு அவர்களை அடியோடு மாற்றிவிடுகிறது.

வாழ்க்கையில் தோற்றுப் போய்விட்டோம் என்ற தாழ்மை உணர்வு அவர்களை இது போன்ற குற்றங்களைச் செய்யத் தூண்டி விடுகிறது. இப்படிப்பட்ட இளைஞர்களைக் கவனமாய் தம் வலையில் போட்டுக்கொண்டு அராஜகச் செயல்களைச் செய்ய வைத்து, கோடி கோடியாய்ச் சம்பாதித்துக் கொண்டிருப்பவர்களைப் பிடிக்க வேண்டுமே தவிர, ஒரு சாண் வயிற்றுக்காக இந்த வலையில் விவரம் தெரி



யாமல் சிக்கிக் கொண்டுவிட்ட இளைஞர்களைத் தண்டிப்பது நியாயமில்லை. உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டிக்கப்பட வேண்டும்.

எந்த நாட்டில் இளைஞர்களுக்குச் சரியான அங்கீகாரம் கிடைக்காமல் அதிருப்தியில், ஏமாற்றத்தில் அவர்கள் மூழ்கியிருந்தால் அந்த நாடு முன்னேற முடியாது. அவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்ளும்விதமாய் அரசாங்கம் தம் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

ஆகையால் இந்தக் குற்றவாளி செய்த குற்றத்தின் பின்னணியைக் கவனமாக ஆராய்ந்து, நடந்ததில் அவனுடைய பொறுப்பு எவ்வளவு என்பதைப் பரிசீலித்து தண்டனை அளிக்குமாறு நீதிபதி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்..."

விஜய் தன் வாதத்தை முடித்துக் கொண்டான்

நேரமாகிவிட்டதால் நீதிபதியும், ஜூரி மெம்பர்களும் உள்ளே போனார்கள். மற்ற லாயர்கள் விஜயைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அனந்த், ரோஜா, வேணுகோபாலன் எல்லோரும் தீர்ப்புக்காக உத்வேகத்துடன் காத்திருந்தார்கள். சந்திரன் குனிந்த தலை நிமிரவில்லை. அவன் இதயத்தில் வெறுமையும், விரக்தியும் நிறைந்திருந்தன.

நீதிபதியும், மற்றவர்களும் வந்து தம் இருக்கைகளில் அமர்ந்துகொள்ள, எல்லோரும் அவர் சொல்லப் போகும் தீர்ப்பைக் கேட்கத் துடிப்புடன் காத்திருந்தார்கள்.

நீதிபதி இந்தக் கேஸ் பற்றிய விவரங்களை, அதன்மீது தன் அபிப்பிராயத்தை விவரமாய் சொல்லிவிட்டு, கடைசியாகத் தண்டனையாய் எட்டு வருடம் கடுங்காவலில் வைக்கப்படவேண்டும் என்றும், குற்றவாளி தன் தவறை உணர்ந்து நல்ல மனிதனாய் மாறி, சமுதாயத்துக்குத் திரும்ப வேண்டுமென்று விரும்புவதாகவும் தீர்ப்பு அளித்தார்.

சந்திரன் சரேலென்று தலை உயர்த்தி எல்லோரையும் பார்த்தான்.

ரோஜாவின் கண்களில் நீர் சுழன்றது. வேணுகோபாலன் மகிழ்ச்சியில் திக்குமுக்காடுவது தெரிந்தது.

விஜய்க்கு நெஞ்சிலிருந்து பெரிய பாரம் நீங்கியதுபோல் இருந்தது.

சந்திரனை இரு காவலர்கள் வேன் அருகில் அழைத்து வந்து கொண்டிருந்தார்கள். வேணுகோபாலன், ரோஜா, விஜய், அனந்த் அவன் அருகில் வந்தார்கள். வேணு கோபாலன் அவனை இறுக அணைத்துக்கொண்டு, "சந்துரு! கடவுள் நம்மிடம் கருணை காட்டிவிட்டார். இந்த அதிருஷ்டம் என்னோடு..." இன்னும் ஏதோ சொல்ல முயன்ற அவரைக் காவலர்கள் தடுத்துவிட்டு, சந்திரனை அழைத்துச் சென்றுவிட்டார்கள். முன்னால் போகப் போன சந்திரன் விஜயிடம் ஒரு கணம் நின்றான்.

"விஜய்... உங்க உதவியை..." அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை.

விஜய் சந்திரனின் தோளில் தன் கையைப் பதித்துவிட்டு, "சந்துரு... இதில் நான் செய்தது ஒன்றுமில்லை..."

சந்திரன் ரோஜா பக்கம் பார்த்தான். உதட்டில் புன்னகை மிளிர, "ரோஜா! நீ சிருஷ்டித்த இனிமையான கனவுலகில், நான் இந்த எட்டு வருடங்களை எட்டு நிமிடங்களாய் கழிக்க முயற்சி செய்வேன்."

"நீ வரும் நாளை நோக்கி ஆவலுடன் காத்திருப்பேன் சந்துரு..." என்று உறுதியாகச் சொன்னாள் ரோஜா.

காவலர்களுடன் சந்திரன் நான்கு அடிகள் வைத்தானோ இல்லையோ, மக்களின் வெள்ளம் கும்பலாய் அவனைச் சூழ்ந்து கொண்டது. அவர்களைக் கலைக்க காவலர்கள் லத்திகளால் தள்ளிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையே யாரோ 'ஸ்மோக் பாம்ப்' வீசினார்கள்.

திடீரென்று அங்கே புகை சூழ்ந்து கொண்டதில்,



மக்களின் கூச்சல்கள், கத்தல்கள் அதிகரித்தன. மூச்சு திணறியதில் எல்லோரும் திக்குமுக்காடி விட்டார்கள்.

சற்று நேரம் கழித்து புகையின் தீவிரம் குறையத் தொடங்கியது. மக்களின் கூட்டமும் கலைந்து விட்டிருந்தது. போலீசார் நிலைமையைச் சீர்படுத்த மக்களை வெளியேற்றிக் கொண்டிருந்தார்கள். புகையின் தீவிரம் குறைந்து விட எல்லோருடைய உருவமும் தெளிவாகத் தெரியத் தொடங்கியது.

அப்போ அங்கே தென்பட்ட காட்சியைப் பார்த்து எல்லோரும் கல்லாய்ச் சமைந்துவிட்டார்கள். கையில் விலங்கிடப்பட்டிருந்த சந்திரன் தரையில் விழுந்து கிடந்தான். முதுகில் கத்தியால் குத்திய காயங்கள் இருந்தன. காயங்களிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த ரத்தம் குளமாய்த் தேங்கி இருந்தது.

நிமிடத்தில் இந்தச் செய்தி பரவி விட்டது. புகை சூழ்ந்து கொண்டதில் மக்களின் கூட்டத்தில் இடிபட்டுத் தொலைவுக்குப் போய்விட்டிருந்த விஜய், அனந்த் இந்தச் செய்தி தெரிந்ததும், சந்திரன் அருகில் ஓடி வந்தார்கள்.

சந்திரனைத் தூக்கி, அங்கேயிருந்த மேஜைமீது படுக்க வைத்தார்கள். யாரோ டாக்டருக்குப் போன் செய்ய ஓடினார்கள். கும்பலைத் தள்ளிவிட்டு எப்படியோ சந்திரனின் அருகில் வந்தான விஜய்.

"சந்துரு..."

சந்திரனின் பார்வை நிலையாக இருக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தது. விஜயின் குரலைக் கேட்டதும் சந்திரன் அந்தப் பக்கமாய்ப் பார்க்க முயன்றான். கைகளால் விஜய்க்காகத் தேடினான். சட்டென்று விஜய் அந்தக் கைகளைப் பற்றிக் கொண்டான். உயிர் போகும் அந்தக் கடைசி நிமிடங்களில், பேச முடியாமல், ஒவ்வொரு வார்த்தையாய்க் கூட்டிக் கொண்டு சொன்னான் சந்திரன்.

"விஜய்! இது அவர்களோட வேலைதான். நான் முன்பே

சொல்லவில்லை? ஆனால் இப்போ எனக்கு வாழவேண்டும் என்ற துடிப்பு இருக்கு. நல்லவனாய் சாதாரண மனிதனாய் கொஞ்ச காலமாவது நான் வாழணும், எப்படியாவது என்னைக் காப்பாற்றுங்கள்... எனக்கு உயிர்... கொடுங்கள்... நான் வாழணும்..." ஈனமான வேண்டுகோளாய் ஒலித்த அவனது குரல் நின்று விட்டது.

எங்கிருந்தோ டாக்டர் ஓடிவந்தார்! ஆனால் அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. விஜயின் கைகளைப் பற்றியிருந்த சந்திரனின் கைகள் இனி யாருடைய உதவியும் தேவை இல்லை என்பதுபோல் கீழே சரிந்துவிட்டன.

சந்திரன் இறந்துவிட்டதாய் டாக்டர் தெரிவித்தபோது, வேணுகோபாலன் துடிதுடித்துப் போய் விட்டார். மகனை மடியில் வைத்துக் கொண்டு கதறிவிட்டார் "சந்துரு! உன் ரத்தத்தைக் கொடுத்து என்னைக் காப்பாற்றினாயே, உன்னை நான் எப்படி பிழைக்க வைப்பேன்... என்னைப் போன்ற அதிருஷ்டசாலி இல்லைன்னு சற்றுமுன்தானே பெருமைப்பட்டேன்..." என்று பார்ப்பவரின் இதயம் கரைந்துவிடும் அளவுக்குக் கதறிக் கொண்டிருந்தார். ரோஜா சந்திரன்மீது விழுந்து அழுதாள். அனந்த் ரோஜாவின் தோள்களைப் பற்றி எழுப்பினான். அவனைப் பார்த்ததும் ரோஜாவால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"அனந்த்... நான்தான் பிடிவாதமாய் அவனைப் போலீஸிடம் சரணடைந்துவிடச் சொல்லித் தூண்டிவிட்டேன்... அவன் பயந்து கொண்டுதான் இருந்தான் நான்தான் அவனைக் கட்டாயப்படுத்தினேன், என்னால்தான் அவன் இறந்து போனான்."

விஜய் சந்திரனைப் பார்த்துக் கொண்டே சற்சிலையாக நின்றிருந்தான்.

"விஜய்! என்னைக் காப்பாற்றுங்கள்... எனக்கு வாழணும்னு ஆசை இருக்கு... எனக்கு உயிர் கொடுங்கள்..."



சந்திரனின் ஈனமான குரல் அவன் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

மாலை நேரம்; அஸ்தமிக்கும் சூரியனின் ஒளி சிவப்பாய், வானத்தில் பரவியிருந்த நேரம்.

ஊருக்கு வெளியே மயானத்தில் சிதை எரிந்து கொண்டு இருந்தது. ஆளுயரத்துக்கு எழும்பிய அந்த நெருப்பில் சந்திரனின் உடலைத் தகனம் செய்து கொண்டிருந்தார்கள்.

அன்று அவனுடைய பிறந்த நாள் வேறு அமைந்து விட்டது. விஜய், அனந்த் சற்று தொலைவில் நின்றுகொண்டு எரியும் சிதையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் சந்திரனின் காரியங்களை விஜய் ஏற்றுக் கொண்டான்.

இரவு ரொம்பநேரம் கழித்து, வீட்டுக்கு வந்தான் விஜய். வீடு முழுவதும் மயான அமைதி நிலவியிருந்தது. குளித்து உடை மாற்றிக் கொண்டு வேணுகோபாலனின் அறைக்கு வந்தான் விஜய். சந்திரன் இறந்தபோது அவர் கதறிய கதறலுக்கு, அவருக்கு மூளை கலங்கி விடுமோ என்றுதான் தோன்றியது. ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை. இரண்டு மணி நேரம் கழித்து அவர் சாதாரணமாக மாறிவிட்டார். அவரிடம் குடிகொண்ட மௌனத்தில் ஒருவிதமான அமைதி, விரக்தி தென்பட்டுக் கொண்டிருந்தன.

விஜய் அவர் அறைக்குள் வந்தபோது, அவர் ஈஸிசேரில் சாய்ந்த வாக்கில் படுத்திருந்தார்.

"எல்லாம் முடிந்து விட்டதா?"

'ஆம்' என்பது போல் தலையசைத்தான்.

இதயத்தைக் கிழித்துக் கொண்டு பெருமூச்சொன்று அவரிடமிருந்து வெளிப்பட்டது. விஜய் அவர் அருகில் வந்து, சட்டைப் பையிலிருந்து எதையோ எடுத்துக் கொடுத்தான்.

"இந்தாங்க..."

"என்னது?"

விஜய் மோதிரத்தை எடுத்து அவரது கையில் வைத்தான். ஒருகணம் அவர் மோதிரத்தை வெறித்துப் பார்த்தார். பிறகு எழுந்து ஜன்னல் அருகில் சென்று, அதை வேகமாய் விசிறியெறிந்தார்.

விஜய் திகைத்துப் போனாற் போல் பார்த்தான்.

"விஜய் கூடிய சீக்கிரத்தில் என்னை இந்த இடத்திலிருந்து அனுப்பிவிடு... என் பயணத்துக்கான ஏற்பாடுகளை உடனே கவனி."

அதன் பிறகு அவர் ஒன்றும் பேசவில்லை. கண்களை மூடி சவிச்சரில் சாய்ந்துவிட்டார்.

விஜய் வெளியே வந்து கதவை வெறுமே சாத்திவிட்டு அந்த இடத்தைவிட்டு நகரப் போனான். பக்கத்து அறையில் ஆனந்தன் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

"ரோஜா... என் கண்ணம்மா... அழாதே... நீ இப்படி அழுவதால் நடக்கப் போவது எதுவும் இல்லை. எது எப்படி நடக்கணும்னு இருக்கோ... அதன்படி நடக்கும்... நம் கையில் எதுவும் இல்லை. இந்த வாழ்க்கையே ஒரு நாடகம் தான் ரோஜா..."

விஜய் அங்கிருந்து நகர்ந்துவிட்டான்.

## 85

நான்கு நாட்கள் கழித்து...

வேணுகோபாலன் கேரளாவில் இருக்கும் கிராமத்துக்கு நிரந்தரமாகப் போக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இந்த நான்கு நாட்களில் அவர் சொத்து விவரங்களைப் பங்கீடு செய்துவிட்டார்.

சந்திரனின் பெயரில் பள்ளி நிறுவனங்களுக்கு டொனே



ஷன் கொடுத்தார். அநாதை நிலையம் ஒன்றைப் புதிதாகத் துவக்கி வைத்தார்; வாலண்யாவுக்கும் சொத்தைப் பிரித்துக் கொடுத்தார்; ராஜாதை சம்பந்தப்பட்ட வரை பொறுப்புகளையும், சொத்தின்மீது உரிமையையும் ரோஜாவிடம் ஒப்படைத்தார்.

வேணுகோபாலன், வாலண்யாமீது தனக்கு எந்தக் கோபமும் இல்லை என்றும், ஒரே ஒருதடவை வந்து பார்த்து விட்டுப் போகும்படி மாதவராவிடம் வாலண்யாவுக்குச் சொல்லச் சொன்னார்.

"நான் வீட்டுக்குப் போனதும் எப்படியாவது அவளை அனுப்பி வைக்கிறேன்..." என்று மாதவராவ் எழுந்து கொண்டார்."

"வேண்டாம்... வேண்டாம்... கட்டாயப் படுத்த வேண்டாம். அவளுக்கு விருப்பம் இருந்தால் மட்டும் வரச் சொல்லுங்க."

வேணுகோபாலன் தெளிவாகச் சொல்லி விட்டார்.

விஜய், ஆனந்த், ரோஜா மூவரும் அங்கேயே இருந்தார்கள்

மாதவராவ் கிளம்பிப் போன பிறகு வேணுகோபாலன் விஜய் பக்கம் திரும்பினார்.

"விஜய் எல்லா வேலைகளும் முடிந்து விட்டன. இனி ஒரே ஒரு வேலைதான் பாக்கி. அதுவும் முடிந்து விட்டால் அல்லது ஒரு முடிவுக்காவது வந்து விட்டால் நான் நிம்மதியாகக் கிளம்பி விடுவேன்."

"சொல்லுங்க, அதைப் பற்றி"

"ரோஜாவின் திருமண விஷயம்!"

இந்த வார்த்தையைக் கேட்டதும் திடுக்கிட்ட ரோஜா சட்டென்று ஏதோ வேலையிருப்பதுபோல் அங்கிருந்து போய் விட்டாள். ரோஜாவின் முகம் களையிழந்தபோல் ஆனதை விஜய் கவனிக்காமல் இல்லை.

சற்று நேரம் தலைகுனிந்து யோசித்தான். பிறகு தலை உயர்த்தி நட்பான குரலில், "இந்த முடிவு செய்ய இன்னும் என்ன இருக்கு? அனந்த்—ரோஜா இருவரின் நட்பைப் பற்றி தெரிந்தது தானே..."

"ஆமாம் விஜய்..." வேணுகோபாலன் பதட்டமாய் இடைமறித்தார்.

விஜய் அவர் சொல்வதைக் காதில் வாங்காதவன் போல் சொன்னான் "எனக்கு ஆட்சேபணை இல்லை. முழு மனதுடன் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன்."

விஜய் வாயிலிருந்து இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அனந்தின் முகம் மகிழ்ச்சியால் பளபளத்தது. ரொம்ப நாளாய் எதிர்பார்த்தது கிடைத்துவிட்ட திருப்தி கண்களில் தெரிந்தது. விஜய் அருகே சென்று அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு, "தாங்க்ஸ் விஜய், மெனி... மெனி... தாங்க்ஸ்" என்றான்.

விஜய் ஒரு நிமிடம் தம்பியின் கண்களில் மின்னிய மகிழ்ச்சியைக் கனமாய் பார்த்தான். பிறகு மெதுவாய் தன் கைகளை விடுவித்துக் கொண்டான்.

வேணுகோபாலனை பக்கம் திரும்பி, "இனி இதில் நீங்க யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. கவலையில்லாமல் இருங்க..." என்றவன் வாட்சைப் பார்த்துவிட்டு, "நான் வருகிறேன். ஒருவரைச் சந்திப்பதாகச் சொல்லி இருக்கிறேன்" என்று கிளம்பிப் போனான்.

அறையில் வேணுகோபாலன், அனந்த் இருவர் தானிருந்தார்கள்; விஜய் திடீரென்று அப்படிக் கிளம்பிப் போனது அவருக்கு ஏனோ சரியாகப் படவில்லை... அனந்திடம் கேட்டார்.

"அனந்த்! ரோஜாவும் நீயும் இதுபற்றி பேசிக்கொண்டு விட்டீர்களா? அவள் தன் விருப்பத்தை உனக்குத் தெளிவாய் சொன்னாளா?"

அனந்த் தலை அசைத்தான். "முடிவு எல்லாம் செய்த



பிறகுதான் ரோஜாவை உங்க வீட்டுக்கு அழைத்துவிட்டு வந்தேன். இந்த ஒரு வருடம் விஜய் ரோஜாவை நன்றாகக் கவனித்த பிறகுதான், இந்தத் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்து இருக்கிறான். ரோஜா வேறு யாரோவாக இல்லாமல், உங்களுடன் இப்படி உறவு ஏற்படுவதில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாயிருக்கு" என்றான்.

வேணுகோபாலன் பின்னால் சாய்ந்து அமர்ந்து கொண்டார்; அவருக்கு ஏனோ இந்தச் செய்தி மகிழ்ச்சியைத் தரவில்லை.

அனந்தின் மனைவியாய் ரோஜாவை, அவர் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. விஜய், ரோஜாவின் ஜோடி ரொம்பப் பொருத்தமாக இருக்கும் என்றும், இணையாகப் பார்த்து, அவ்விருவரை ஒரு இடத்தில் சேர்த்து வைத்தார் என்று எண்ணியிருந்தார்.

விஜய் கிளம்பிப் போனதும் வேணுகோபாலன் தன் யோசனைகளில் மூழ்கி, தான் ஒருவன் அங்கிருப்பதையே மறந்துவிட்டது போல் தோன்றிய, அனந்த் அங்கிருந்து கிளம்பி வெளியேறினான்.

விஜய் செய்த இந்த முடிவு அவருக்குத் திருப்தியாக இல்லை என்று அனந்தால் எளிதாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

அவருடைய உத்தேசந்தான் என்ன? தான் ரோஜாவுக்கு தகுந்தவன் இல்லை என்றா? ரோஜாவே சம்மதிக்கும் போது இவருடைய அபிப்ராயம் யாருக்கு வேண்டும்? அனந்த் நேராக ரோஜாவிடம் போனான்.

ரோஜா, ராஜுவுடன் பொம்மைகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

அனந்த் அறையினுள் காலடி எடுத்து வைத்தபடியே "ரோஜா, கங்கிராஜுலேஷன்ஸ்!"

"எதுக்கு?" தலையை உயர்த்தாமலேயே கேட்டாள் ரோஜா.

"விஜயைத் தோற்கடித்ததற்கு... இந்த ஜென்மத்தில் நம் திருமணத்துக்கு ஒப்புக்கொள்ள மாட்டேன்னு சொன்ன விஜய், உன் தகுதியை உணர்ந்து விட்டான். நம் திருமணத்துக்கு மனப்பூர்வமாய்ச் சம்மதித்து விட்டான்."

குனிந்து இருந்த ரோஜாவின் முகம் இதைக் கேட்டதும் வெளிறிப் போய்விட்டதை அனந்த் கவனிக்கவில்லை.

"ரோஜா! எனக்குத் தெரியும். நீ என் பேச்சைக் காப்பாற்றுவாய் என்று. தாங்க்ஸ் ரோஜா! மெனி மெனி தாங்க்ஸ்..."

ரோஜா பதிலுக்கு எதுவும் பேசவில்லை.

அனந்த் ரோஜா அருகில் உட்கார்ந்த கொண்டே கேட்டான்.

"என்ன ரோஜா, பதிலே சொல்லவில்லை? உனக்கு இன்னும் சந்தேகமாயிருக்கா?"

ரோஜா தலை உயர்த்தி அவன் பக்கம் பார்த்தாள். அந்தக் கண்களில் எல்லாவற்றையுமே இழந்து விட்டதுபோல் தென்பட்ட உணர்ச்சியைப் பார்த்ததும் அனந்த் திடுக்கிட்டான்

"அனந்த்! உண்மையைச் சொல்லட்டுமா?"

"சொல்லு ரோஜா! இப்போ இல்லாவிட்டால், பின்னே எப்போ சொல்லப் போகிறாய்?"

"எனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை. நீ இதைத் தவிர வேறு ஏதாவது விஷயமிருந்தால் என்னிடம் பேசு, ஆனால் இந்த விஷயத்தை மட்டும் பேசாதே!"

"ரோஜா!!!"

"இந்த உலகில் உன்னைத் தவிர எனக்கு வேறு நண்பர்கள் கிடையாது. நமக்கிடையே இருக்கும் இந்த அபூர்வமான நட்பை அப்படியே இருக்கவிடு அனந்த். இதை விட வேறு எதையும் என்னிடமிருந்து எதிர்பார்க்காதே! இது என்னுடைய வேண்டுகோள்."

குழப்பமாய்ப் பார்த்தான் அனந்த்.



"ரோஜா... நீ...நீ... எதையோ என்னிடமிருந்து மறைக்கிறாய். தெளிவாக, நேராகச் சொல்லிவிடு. விஜய் சுயமாய் ஒத்துக்கொண்ட பிறகும் இந்தத் தயக்கம் எதுக்கு?"

விஜயின் பெயரைக் கேட்டதும் ரோஜாவின் முகத்தில் ரோஷம் மீறிப் பாய்ந்தது

"அனந்த்! முதலில் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு. விஜயிடம் திடீரென்று மாறுதல் எப்படி வந்தது? நம் திருமணத்துக்கு ஆட்சேபித்துக் கொண்டிருந்தவன், இப்போ திடீரென்று எப்படிச் சம்மதித்தானாம்?"

"ரோஜா, இத்தனை நாள் உன்னைக் கவனித்து வந்திருப்பான். முன்பு உன்னிடம் ஏற்பட்ட அபிப்பிராயம் தவறு என்று உணர்ந்து இருப்பான்."

"அது இல்லை! இந்தத் திடீர் மாற்றத்துக்கு உண்மையான காரணம் என்ன தெரியுமா? நான் இப்போ வேணுகோபாலின் மகளாகி விட்டேன். அவருடைய சொத்து, ஹோதா, அந்தஸ்து எல்லாம் எனக்கு வந்து விட்டது. அதனால்தான் விஜய் சம்மதித்து இருக்கிறான். அவன் தோற்கவில்லை. இந்தத் திருமணம் நடந்தால் அவன் வெற்றி பெற்றவனாகி விடுவான்."

"ரோஜா!"

"பணக்கார வீட்டுப் பெண் உனக்கு மனைவியாக வரவேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அனந்த்! நீ ஏழைப் பெண்ணாக பார்த்துத் திருமணம் செய்து கொள் அப்போதான் அவனுடைய திமிர் அடங்கும்."

அனந்த் திகைத்துப் போனாற்போல் பார்த்தான்.

விஜய், ரோஜா இருவருக்கிடையே உள்ள பகைமை மறைந்துவிட்டிருக்கும் என்று எதிர்பார்த்தவனுக்கு ரோஜாவின் பேச்சு திகைப்பை ஏற்படுத்தியது.

"என்ன சொல்றே நீ! விஜயின் திமிரை அடக்க நான் வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதா? இதை விடத் திருமணமே செய்துகொள்ளாதே என்று சொன்னால்

கூட எனக்கு மகிழ்ச்சியாய் இருந்திருக்கும்...'' என்று நிஷ்டூரமாய்ச் சொன்னான் அனந்த்.

இயலாதவளாய்ப் பார்த்தாள் ரோஜா. ''அனந்த்! நான் சொல்வது உனக்குப் புரியாது... உனக்குப் புரியும் விதமாய் என்னால் சொல்ல முடியாது...''

''வெளிப்படையாய்ச் சொல்லு ரோஜா! உடனே திருமணம் வேண்டாமென்று நீ நினைத்தாயானால்... ஒரு வருஷம் என்ன... பத்து வருடங்கள்கூடக் காத்திருப்பேன்.''

''வேண்டாம் அனந்த்... வேண்டாம்... உண்மையில் எனக்கு திருமணத்திலேயே விருப்பமில்லை.''

''எதுக்காக?''

''காரணத்தை மட்டும் கேட்காதே அனந்த். என்னால் பதில் சொல்ல முடியாது.''

அனந்த் செயல் மறந்தவனாய் உட்கார்ந்துவிட்டான். கோபத்தால் அவன் முகம் சிவந்துவிட்டது.

''எனக்குப் புரிகிறது ரோஜா. உன் வேதனையை என்னால் புரிந்து கொள்ள முடியும்.''

முகம் மலர ரோஜா அவன் பக்கம் பார்த்தாள்.

கோபத்தை தஅடக்கிய குரலில் மேலும், ''இந்த திருமண விஷயமாய் உன்னைக் கட்டாயப்படுத்துவது என் தவறு தான். நீ முதலில் இருந்த ரோஜா இல்லை! அந்த விஷயத்தை மறந்துவிட்டேன்.''

''அனந்த்!''

''அந்த ரோஜாவுக்கு நெருங்கியவர்கள் யாரும் இல்லை. பணம் கிடையாது. ஏன் என்று கேட்க யாருமே இல்லை. அப்பொ நான் தேவைப்பட்டேன். ஆனால் இப்பொ எல்லாம்தான் கிடைத்துவிட்டதே. என்னைவிட உயர்வான கணவன் வேணும் உனக்கு. இதை நீ நேராகவே என்னிடம் சொல்லி இருந்தால் நான் மகிழ்ச்சி அடைந்து இருப்பேன். எதை வேணுமானாலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியும்...ஆனால் நட்பாய் இருந்துகொண்டே



ஏமாற்றுவதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது...''

''அனந்த்! நீ... நீ...'' பைத்தியக்காரியைப் போல் பார்த்துக் கொண்டிருந்த ரோஜா வார்த்தைகள் வெளி வராமல் தடுமாறினாள்.

''வர்றேன் ரோஜா! காதலித்த பெண் முகத்துக்கு நேராக சீ... போ... என்ற பிறகும், எதிரே உட்கார்ந்து புன்னகை செய்யும் சக்தி எனக்குக் கிடையாது.'' அனந்த் எழுந்தான்.

ரோஜா சட்டென்று அவன் கையைப் பற்றினாள்.

''அனந்த்... நீ... நீ தவறாகப் புரிஞ்சுக்கிட்டிருக்கே...''

எழப் போன அனந்த் மறுபடியும் உட்கார்ந்து கொண்டான்.

''சரி... நான்தான் தவறாய்ப் புரிஞ்சுக்கிட்டிருக்கேன். ஒப்புக்கொள்கிறேன். உன் மனதில் இருப்பதைத் தெளிவாகச் சொல்லி, ஏன் அதை சரி செய்யக் கூடாது?''

ரோஜாவின் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது. அதை அனந்த் பார்த்துவிடாமல் இருக்க முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''அனந்த்! நீ குறைந்தவன் ஒன்றும் இல்லை. மனதைக் காயப்படுத்துவதில், எல்லோரையும் மிஞ்சிவிட்டாய்!'' என்று அங்கிருந்து எழுந்து போய்விட்டாள்.

அனந்த் அங்கேயே உட்கார்ந்துவிட்டான்.

என்னவோ நடந்து இருக்கணும். ரோஜா சொல்ல மறுக்கிறாள் என்றால் ஏதோ பலமான காரணம் இருக்க வேண்டும். ரோஜா மனதில் வேறு யாராவது இருக்கலாமோ? அதைச் சொல்ல முடியாமல்தான் இப்படித் தவிக்கிறாளோ?

உள்ளே வந்த ரோஜா சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டாள். சீ...சீ... தன் மனஉறுதி, தைரியம் இதெல்லாம் எங்கே போயிற்று? மறுபடியும் மறுபடியும் இந்த மனம் இப்படிக் குமுறுவானேன்?

சற்றுமுன் வேணுகோபாலின் முன்னிலையில் ரோஜா வுடன் அனந்தின் திருமணத்துக்கு, தனக்கு எந்தவித ஆட்சேபணை இல்லையென்று விஜய் சொன்னதிலிருந்து ரோஜாவின் இதயத்தில் பகீரென்று நெருப்பு பற்றிக் கொண்டது. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்? பெண்களை விளையாட்டுப் பொம்மைகளாய் எண்ணி விட்டானா? சமீபகாலமாய் அவன் தன்னிடம் காட்டிக் கொண்டிருந்த நெருக்கமும், பழகிவந்த முறையும் பார்த்து, அவன் தன்னை முழுவதுமாகப் புரிந்துகொண்டு இருப்பான் என்று நினைத்தாள் ஆனால் அது வெறும் பிரமை...

வேணுகோபாலனின் மகள் என்று தெரிந்த பிறகு, கொஞ்சம் அன்பாக, பொறுப்புடன் பழகியிருப்பான். அதை ஆதாரமாய் வைத்துக்கொண்டு கனவு மாளிகையைக் கட்டி விட்டது தன் தவறுதான். தன் முட்டாள்தனத்தை நினைத்து அவளுக்கு வெட்கமாக இருந்தது.

இதற்கு முன்பு இருந்த சூழ்நிலை வேறு. இப்பொழுது தந்தையின் துணை தனக்கு பக்கபலமாய் இருக்கும்போது பயப்படுவானேன்? விஜய் ஏற்றுக் கொள்ளாவிட்டால் வாழ்க்கையே சூனியமாகிவிடுமா என்ன? அனந்திடம் நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டு, திருமணத்தில் தனக்கு விருப்பமில்லையென்று சொன்னால் என்னவாகும்? ஒன்றும் ஆகாது.

ரோஜா திடமான முடிவுடன் வெளியில் வரப் போனாள் ஆனால் அதற்குள் நின்றுவிட்டாள். இதெல்லாம் கேட்ட பிறகு அனந்த், ரோஜாவை ஏற்றுக் கொள்ளச் சொல்லி விஜயைக் கட்டாயப்படுத்தினால்? ரகளை செய்தால்? அனந்த் அப்படிச் செய்யக் கூடியவன்தான். ஊஹூம்! அவனிடம் இதையெல்லாம் சொல்லக்கூடாது. திருமணத்தில் விருப்பம் இல்லையென்று மட்டும் சொல்லணும்.

ரோஜா அறைக்குத் திரும்பியபோது...அங்கே அனந்த் இல்லை, போய்விட்டான்.



24167
86 4114398

அனந்த் வீட்டுக்கு வந்தான். அவனுக்கு மூளை கலங் கினாற்போல் இருந்தது. எத்தனை யோசித்தாலும்... ரோஜாவின் போக்கு அவனுக்குப் புரியவில்லை.

ரோஜா தன்னிடமிருந்து எதையோ மறைக்கிறாள்... அவளுடைய போக்கைப் பார்த்தால், விஷயத்தை வெளிப் படையாகச் சொல்ல முடியாமல் தவிப்பதுபோல் இருந்தது.

இந்தத் திருமணத்துக்குத் தடையாய் இருந்த விஜய் ஒப்புக் கொண்டுவிட்ட பிறகும் ரோஜா தயங்குவதன் காரணம் என்னவாக இருக்கும்? ரோஜாவின் போக்கே அவனுக்கு வித்தியாசமாய்ப் பட்டது...மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு வெளியில் ஒன்றைசொல்வது ரோஜாவின் இயல்புக்கே விரோதம்... அதுவும் இப்படிப்பட்ட முக்கிய மான விஷயங்களில் முகத்துக்கு நேராகப் பேசுவதுதான் வழக்கம்...

யோசனைகளில் ஆழ்ந்து உலகத்தையே மறந்து போனவன்போல் உட்கார்ந்திருந்த அனந்த், 'காலிங் பெல்' ஒலித்த சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தான். எதிரே லாவண்யா நின்றிருந்தாள்... அவள் வந்த டாக்ஸி வாசலில் இருந்தது.

"விஜய் இருக்கானா?" சுற்றி வளைக்காமல் நேராகக் கேட்டாள்...

"இல்லை... உள்ளே வாயேன்..."

லாவண்யா மறுப்பாக தலை அசைத்தாள்.

"ஏன் எதுக்காக வரமாட்டாய்?"

"உங்க எல்லோருடைய வீடுகளுக்கு வரும் தகுதி எனக்கு இல்லை."

"இந்தப் பேச்சையெல்லாம் எங்கே கற்றுக்கொண்டாய்? உள்ளே வா..." நயமாக அழைத்தான் அனந்த்.

லாவண்யா கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள்.

"ஹூஹூம்... நான் ஊருக்குப் போகிறேன். ரயிலுக்கு நேரமாகி விட்டது. விஜய் எங்கே போயிருக்கான்? சீக்கிரம் திரும்பறதுக்கு வாய்ப்பு இருக்கா?"

"சொல்ல முடியாது. இரண்டு நாட்களாய் வேலை மும்மரத்தில் வெளியே சுற்றிக் கொண்டிருக்கிறான்..."

லாவண்யா ஒரு நிமிடம் ஏதோ யோசித்துவிட்டு, பிறகு தன் ஹேண்ட் பேக்கைத் திறந்து, "விஜய் சம்பந்தப்பட்ட பொருள் ஒன்று என்னிடம் தங்கிவிட்டது. அதைக் கொடுத்து விட்டுப் போகலாம்னு வந்தேன்" என்ற அவள் கவர் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

அனந்த் அதை வாங்கிக் கொண்டான். கவர் கனமாக இருந்தது. சீல் செய்யப்படாமல்தான் இருந்தது.

"என்ன இருக்கு? நான் பார்க்கலாமா?" என்று ஆர்வத்துடன் கேட்டான்.

"என்னவோப்பா! உங்க அண்ணன் தம்பிகளுக்கு நடுவில் ரகசியங்கள் இருக்கோ இல்லையோ... எனக்கெப்படித் தெரியும்?" பேக்கை மூடிக்கொண்டே அலட்சியமாய்ச் சொன்னாள் லாவண்யா. மேலும், "அனந்த்... எங்க அப்பாவிடம் நான் ஊருக்குப் போவதாகச் சொல்லிவிடு... அவருக்காக நான் கடிதம் எழுதி அதிலேயே வைத்திருக்கிறேன். கொஞ்ச நாள் மிஸ் ஜோஷியிடம் இருந்துவிட்டு, பிறகு எங்கேயாவது போவேன் எனக்கு நேரமாகிவிட்டது நான் வர்றேன்..."

"உள்ளே வந்து கொஞ்ச நேரம் உட்கார்ந்து கொள் லாவண்யா" என்று வேண்டுவது போல் சொன்னான் அனந்த்.

"ஹூஹூம்! நான் வரமாட்டேன்... உங்களைப்போல்



நல்லவங்க என்று அழைக்கப்படறவங்க எல்லோரும், தவறு செய்தவர்களைப் புழுவைவிடக் கேவலமாய் மதிப்பீங்க. என் தவறுகளை நீங்க மன்னித்தாலும், என்னால் மறக்க முடியாது... நானே உங்களை விட்டு விலகிப் போவது நல்லது."

"லாவண்யா!"

"அனந்த் உண்மையைச் சொல்லட்டுமா... சற்றுமுன் போன் செய்தபோது, நீங்க இருவரும் இல்லையென்றும் உடனே வர வாய்ப்பும் இல்லையென்று லக்ஷ்மி தெரிவித்தாள். அதன் பிறகுதான் நான் வந்தேன். உங்களைச் சந்திப்பதில் எனக்கு விருப்பமில்லை. இதை லக்ஷ்மியிடம் கொடுத்து விட்டுப் போய்விடலாமென்று நினைத்தேன். எதிர்பாராமல் நீ தென்பட்டாய்... வர்றேன். பை... பை..." லாவண்யா வேகமாய்த் திரும்பிப் போனாள்.

அனந்த் பார்த்துக் கொண்டிருக்கும்போதே லாவண்யா போய் டாக்ஸியில் அமர்ந்து கொள்ள, டாக்ஸி வேகமாய்க் கிளம்பி விட்டது.

லாவண்யா தான் செய்த தவறை நினைத்துப் பச்சாத்தாபப்படுகிறாளோ இல்லையோ அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்... ஒருக்கால் அப்படி ஏதாவது தோன்றினாலும் அந்த நினைப்பை யாரிடமும் தெரியப்படுத்த மாட்டாள். தாம் தவறு செய்ததாக என்றுமே ஒப்புக் கொள்ளாதவர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ, லாவண்யா அதுபோலவே நடந்து கொண்டாள்.

அனந்த் கவரை கையில் எடுத்துக்கொண்டு விஜய் ஆபீஸ் அறைக்கு வந்தான். லாவண்யாவின் வருகையால் தற்காலிகமாய் மறைந்திருந்த ரோஜாவின் நினைவுகள், இருமடங்காய் வந்து சூழ்ந்து கொண்டன.

கவரை மேஜைமீது வைத்துவிட்ட அனந்த் மறுபடியும் யோசனைகளில் மூழ்கிவிட்டான். ரோஜாவின் ஆட்சேபனை என்னவென்று எப்படித் தெரிந்து கொள்வது? அவன்

பார்வை மேஜைமீது இருந்த போன்மீது விழுந்தது. ரோஜாவுக்கு போன் செய்து, உண்மையைச் சொல்லா விட்டால் தான் வீட்டை விட்டுப் போய் விடுவதாய் மிரட்டினால்? அவள் மனதில் புதைந்திருக்கும் அந்த ரகசியம் வெளியே வருவதுதான் நம் இருவருக்கும் நல்லது என்று சொல்லிப் பார்த்தால்? அதைவிட அவளுக்குத் திருமணத்தில் ஏன் விருப்பமில்லையென்று தெரிந்து கொள்வது ரொம்ப முக்கியமானதாகத் தோன்றியது.

ஏதோ முடிவுக்கு வந்தவன்போல் வேணுகோபாலன் வீட்டு நம்பரை டயல் செய்தான் அனந்த்.

அவன் இதயம் வேகமாய்ப் படபடத்தது. என்றும் இல்லாதவிதமாய் ரோஜாவை மிரட்டப் போகிறான். அவளிடம் கோபமாகப் பேசப் போகிறான். அவள் தவறாக நினைக்கமாட்டாளோ? கடவுளே... ரோஜாவுக்கு வேதனை தராமல் அந்த ரகசியத்தைச் தெரிந்து கொள்ள முடிந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்?

மறுபக்கம் போன் அடிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டு இருந்தது அவனுக்கு நாக்கு வறண்டு விட்டதுபோல் இருந்தது. கை விரல்கள் மெலிதாக நடுங்கிக் கொண்டிருந் தன. ரோஜாவின் நன்மைக்காகத்தானே இப்படி நடந்து கொள்ளப் போகிறோம். தனக்குத்தானே தைரியம் சொல்லிக் கொண்டான்.

கைவிரல்களின் நடுக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள, அனந்த் தன்னையறியாமலேயே, மேஜைமீது வைத்திருந்த கவரை கையில் எடுத்துக்கொண்டு இப்படியும் அப்படியும் திருப்பினான்.

திறந்தே இருந்த அந்தக் கவரிலிருந்து இரண்டு கடிதங் கள், நான்கைந்து போட்டோக்கள் நழுவி மேஜைமீது விழுந்தன.

அனந்த் அவற்றை எடுத்து ஒவ்வொன்றாய் உள்ளே வைத்துக் கொண்டிருந்தான்.



மறுமுனையில் போனை யாரும் எடுக்கவில்லை. ரோஜா ஏதாவது வேலையாய் இருந்திருப்பாளோ? 'ஹலோ' என்று ஒலிக்கப் போகும் ரோஜாவின் குரலுக்காக அவனது உடலும் உள்ளமும் காத்திருந்தது.

மேஜைமீது கிடந்த போட்டோவைக் கையில் எடுத்து ஆர்வமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்த அனந்த் திடுக் கிட்டதுபோல் ஆனான்... அவன் கண்கள் அகலமாய் விரிந்தன. தன்னறியாமல் விரைப்பாக நின்றான்.

எதிரே இருந்த போட்டோவில் ரோஜா—விஜய் இருந்தார்கள். இருவரின் நெற்றியில் கல்யாணத் திலகம் இருந்தது. விஜயின் கை ரோஜாவின் தோளைச் சுற்றி யிருந்தது. ரோஜாவின் தலை அவன் தோளில் சாய்ந்து இருந்தது. வெட்கத்தினாலோ என்னவோ ரோஜாவின் கண்கள் தாழ்ந்து இருந்தன.

அனந்துக்கு கண்களை இருட்டிக் கொண்டு வந்தது அது உண்மையா? பிரமையா என்று உடனே புரியவில்லை.

இதற்குள் மறுமுனையில் போன் எடுக்கப்பட்டு. "ஹலோ" என்று ரோஜாவின் குரல் மென்மையாக ஒலித்தது.

அனந்த் 'ஹலோ' என்று சொல்ல நினைத்தான். ஆனால் வார்த்தை வெளிவர மறுத்தது. கண்களுக்கு முன்னாடி இருள் பரவியதுபோல் சூனியமாய்த் தோன்றியது.

"ஹலோ" ரோஜாவின் குரல் இரண்டாவது முறை பலமாய் ஒலித்தது.

அனந்த் பதில் சொல்லவில்லை. மெதுவாய் ரிசீவரை வைத்து விட்டான். நெற்றியில் வியர்வை பொடிப் பொடி யாய் அரும்பியது. மூச்சுவிட முடியாமல் இக்கு முக்காடுவது இருந்தது.

போனை வைத்துவிட்ட அனந்த் நடுங்கும் கரங்களால், மற்ற போட்டோக்களையும் எடுத்துப்பார்த்தான். எல்லாமே கல்யாணத்தில் எடுத்த போட்டோக்கள்தான். எந்த

ரகசியத்தைத் தெரிந்து கொள்ள நினைத்தானோ அந்த உண்மை கண்ணுக்கு எதிரே நிற்பதுபோல் இருந்தது. இந்தப் போட்டோக்கள் லாவண்யாவிடம் எப்படிப் போயிருக்கும்? உடனே லாவண்யா எழுதிய கடிதத்தைப் படித்தான்.

விஜய்...

நான் இன்று ஊருக்குப் போகிறேன் உங்களைச் சந்திப்பதில் எனக்கு விருப்பமில்லை. என் கடந்த காலத்தைக் கெட்ட கனவுபோல் மறந்துவிட்டு, புதிய வாழ்க்கையைத் தொடங்க வேண்டுமென்று விரும்புகிறேன். அது சாத்தியப் படுமா இல்லையா என்று என் அதிருஷ்டம்தான் முடிவு செய்ய வேண்டும்.

விஜய்... இந்தக் கடிதத்துடன் உன் ரகசியத்தை உன்னிடம் திருப்பி அனுப்புகிறேன். இந்தப் போட்டோக்கள் என்னிடம் எப்படி வந்தது என்று உனக்குப் புதிராக இருந்திருக்கும்.

அப்பா ரோஜா பெயரில் உயில் எழுதியிருப்பதாக தெரிந்ததும், அதை உன்னிடம்தான் பத்திரப்படுத்தி வைத்திருப்பார்கள் என்று எண்ணி, நீ பம்பாய் போனபோது, 'டுப்ளிகேட்' சாவியால் உன் அலமாரியைத் திறந்து பார்த்தேன். உயில் கிடைக்கவில்லை. ஆனால் அதைவிட மதிப்பு வாய்ந்த இந்தப் போட்டோக்கள் கிடைத்தன. முதலிலிருந்தே ரோஜாவிடம் நீ காட்டும் பரிவும், அபிமானமும் கண்டு எனக்குச் சந்தேகம் இருந்து கொண்டுதான் இருந்தது. அந்தச் சந்தேகத்தை இந்தப் போட்டோக்கள் உறுதி படுத்தின. ரோஜாமீது எனக்குப் பகையும், துவேஷமும் ஏற்பட இதுவும் ஒரு காரணம்... நீங்கள் இருவரும் கணவன் மனைவியானாலும், சேர்ந்து வாழவில்லை. உங்க இருவருக்கிடையே ஏதோ நடந்திருக்க வேண்டுமென்று ஊகித்தேன். விஜய்... இந்தப் போட்டாக்களைக் காட்டி அன்று உன்னை மிரட்டியதற்கு என்னை மன்னித்து விடு. என் நிலைமையில் யார் இருந்தாலும் அப்படித்தான் நடந்து கொள்வார்கள். இன்று நான் ஊருக்குக் கிளம்பும்போது இந்தப் போட்டோக்கள்



நினைவுக்கு வந்தன. உன்மீது எனக்கு எந்தக் கோபமும் இல்லையென்பதற்கு அடையாளமாய் இவற்றைத் திருப்பி அனுப்புகிறேன். விஜய்... என்றாவது ஒருநாள் நான் திரும்பி வருவது என்று ஒன்று இருந்தால்... அது உன்னிடம்தான்... தவறு செய்தவர்கள், எந்தச் சூழ்நிலையில் அந்தத் தவறுகளைச் செய்திருப்பாங்க என்று யோசிக்கும் குணம் உன்னிடம்தான் இருக்கு. என்னைச் சரியாகப் புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கையுடன் என் அகங்காரத்தை விட்டு விட்டு உனக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன்... வரட்டுமா...

—லாவண்யா.

அனந்த் அந்தக் கடிதத்தை இருமுறை படித்தான். அந்த போட்டோக்களைப் பலதடவை பார்த்தான். அவனுக்கு ரத்தம் கொதிப்பது போல் தோன்றிற்று. இத்தனை ஆவேசத்தை என்றுமே அவன் உணர்ந்ததில்லை. அந்தக் கணத்தில் விஜய் கண்ணில்பட்டால் அடித்துக் கொன்றுவிட வேண்டும் என்ற அளவுக்கு ஆவேசம் பொங்கியது.

விஜய் ரோஜா இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள்... எப்போ செய்து கொண்டார்கள்? எப்படிச் செய்து கொண்டார்கள்? அதெல்லாம் தேவையில்லாத விஷயங்கள்... இப்போ அவர்கள் கணவன் மனைவி... அனந்துக்குத் திடீரென்று பனித்திரை விலகியதுபோல் இருந்தது. ரோஜா படும் வேதனை புரிந்தது... தன் மனதை விஜய்க்கு அர்ப்பணித்து விட்டதாகவும், அவனுக்கு மனைவியாகி விட்டேன் என்றும் சொல்ல முடியாமல் தவிக்கிறாள். ஒருக்கால் விஜய், தானே சொல்லுவதாய்ச் சொல்லி அவளைத் தடுத்திருப்பானோ? இல்லாவிட்டால் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு வந்திருக்குமோ?

இந்த விஜய்க்கு எவ்வளவு துணிச்சல்? தான் மணம் புரிந்த பெண்ணை ஒன்றும் தெரியாதவன் போல், இன்னொருத்தனுக்கு மணம் முடித்து வைக்கச் சம்மதிக்கிறான். சீ...சீ என்ன மனிதன்?

முதலில் இந்த இடத்தைவிட்டுப் போய்விட வேண்டும்... போட்டோக்களை, கடிதங்களைக் கவரில் வைத்து, பார்த்ததும் அவன் கண்ணில் படும் விதமாய் மேஜைமீது வைத்தான்.

யாரோ பின்னால் துரத்துவது போல் வேகமாய் மாடிக்கு வந்தான். போட்டோக்களை ரோஜாவின் முகத்தில் வீசிவிட்டு, "இதுக்கென்ன சொல்லப் போகிறாய்", என்று கேட்க மனம் துடித்தது. ஆனால் உடனே அந்த எண்ணம் மாறி விட்டது. அவளை எதுக்காக பார்க்கணும்? அதனால் என்ன பிரயோஜனம்?"

அனந்த் சூட்கேஸை எடுத்து கட்டில்மீது வைத்தான். வெளியில் கிடந்த தன் துணிகளை எடுத்து சூட்கேஸில் திணிக்கத் தொடங்கினான். அவன் மனம் குழம்பி இருந்தது. ரோஜாவுக்குத் திருமணம் ஆகி விட்டது. அவளைத் திருமணம் செய்துகொண்டது வேறு யாரோ இல்லை; தன் அண்ணன் விஜய். இந்த உண்மை அவனைத் திக்குமுக்காட வைத்தது.

ரோஜா இந்த உலகில் வேறு யாரையாவது திருமணம் செய்து கொண்டிருந்தால் தனக்கு இவ்வளவு வேதனை— வியப்பு ஏற்பட்டிருக்காது. ஆனால் விஜயை!! அவன் பெயரைச் சொன்னாலே எரிந்து விழும் ரோஜா... அவனை முழு மனதுடன் வெறுக்கும் ரோஜாவா இப்படிச் செய்தாள்? அதெல்லாம் நடிப்புதானா? தன்னை ஏமாற்றப் போட்ட நாடகமா? விஜய் ரோஜாவை எவ்வளவு அவமானப் படுத்தினான்? அந்த அவமானத்தை அவள் எப்படி மறந்தாள்?

உடைகளைப் பெட்டியில் திணித்துக் கொண்டிருந்த அனந்த், யாரோ மந்திரம் போட்டதுபோல் நின்று விட்டான். அவன் பார்வை, கட்டிலின் தலைமாட்டில் இருந்த சின்ன மேஜைமீது தென்பட்ட விஜயின் போட்டோ மீது நிலைத்தது.



கையிலிருந்த துணிகளை அப்படியே போட்டுவிட்டு, அந்த போட்டோ அருகில் சென்றான்; போட்டோவில் விஜயின் புன்னகை, அவனது தோல்வியைப் பரிகாசம் செய்வதுபோல் தோன்றியது. பற்களை இறுகக் கடித்துக் கொண்டு அந்தப் போட்டோவைக் கையில் எடுத்துக்கொண்டான். அதைச் சுக்குநூறாக்க வேண்டுமென்று ஆவேசம் பொங்கி வந்தது.

ஆனால் மலர்ந்த புன்னகையுடன், கம்பீரமாய்த் தென்பட்ட அந்த முகத்தைப் பார்த்ததும், அவனுடைய ஆவேசம் அப்படியே தணிந்து விட்டது. விஜய்மீது கோபம் கொள்வானேன்? அவனுடைய அழகான தோற்றத்தின்பால் ஈர்க்கப்படாத பெண்கள் இருக்க முடியுமா?

தான் இல்லாத இந்தப் பத்து மாதங்களில் விஜய், ரோஜாவுக்குமிடையே எது வேணுமானாலும் நடந்து இருக்கலாம். வேணுகோபாலனின் உடல்நிலை சரியில்லாதபோது, ரோஜாவின் தாய் சாவித்திரி இறந்தபோது, சந்திரன் அரெஸ்ட் ஆனபோது... இப்படி அவர்கள் நெருக்கமாய்ப் பழக எத்தனையோ சந்தர்ப்பங்கள் விஜய், ரோஜா இருவரும் ஒருவருக்கொருவர் விரும்புவதில் தவறேதுமில்லை. தனக்குத் தெரியக் கூடாது என்று அவர்கள் நினைப்பதைத் தான், தன்னால் மன்னிக்க முடியவில்லை.

இதற்கு மேல் ஒன்றுமே நடவாததுபோல் ரோஜாவுடன் தன் திருமணத்துக்கு விஜய் ஒப்புதல் அளித்தது ரொம்ப கொடுமை. இந்த விஷயம் வெளியில் வராமலே இருந்துவிடும் என்று எப்படி நினைத்தான்? ரோஜாவிடம் தான் உயிரையே வைத்திருப்பது தெரிந்து, விஜய் இந்தத் திருமணத்தை ரகசியமாக வைக்க முடிவு செய்தானா? ரோஜாவையும் சொல்ல வேண்டாமென்று தடைவிதித்திருப்பானோ? அதான் ரோஜா தன்னிடம் சொல்ல முடியாமல் தவிக்கிறாளா? ச்ச...ச்ச... என்ன மனிதர்கள்? யோசிக்க யோசிக்க

வெறுப்பாயிருந்தது. கையிலிருந்த போட்டோவை அங்கேயே வைத்து விட்டான்.

"எனக்காக யாராவது வந்தாங்களா லஷ்மி?" விஜயின் குரல் கீழிருந்து கேட்டது. படிகளில் வேகமாய் ஏறிவரும் காலடி ஓசையும் கேட்டது.

அனந்துக்கு தூக்கிவாரிப் போட்டது. உடனே பெட்டி அருகில் வந்து துணிமணிகளை ஒழுங்கு படுத்தினான். அவன் முகம் கலங்கி, சிவந்து விட்டது போலிருந்தது.

விஜய் உள்ளே வந்தான். நன்றாக அலைந்து திரிந்து வந்திருப்பவன் போல் அவன் முகம் களைப்புற்றுத் தென்பட்டது.

"என்ன? துணிகளை எடுத்து வெச்சிக்கிட்டு இருக்கியா? என்ன விஷயம்?" தம்பியின் பக்கம் சரியாகப் பார்க்காமலேயே கேட்டான் விஜய்.

"ஊம்... ஊருக்குப் போகிறேன்." அண்ணனைப் பார்க்காமலேயே பதில் அளித்தான் அனந்த்.

முகம் கழுவ பாத்ரூம் பக்கம் போகப் போன விஜய் அப்படியே நின்று விட்டான்

"ஊருக்கா? எந்த ஊருக்கு?"

அவன் பதில் சொல்லவில்லை.

"தனியாகவா? ஜோடியாகவா?" விஜய் பரிகாசம் செய்வதுபோல் கேட்டான்.

"ஜோடியாகவா... அந்த அதிர்ஷ்டம் இந்த ஜென்மத்தில் இல்லை" என்று முணுமுணுத்தான்.

"என்ன முணுமுணுத்துகிட்டு இருக்கே? சொல்றதை உரக்கத்தான் சொல்லேன்."

"ஒன்றுமில்லை! நான் ஊருக்குப் போகிறேன்..." சத்தமாகச் சொன்னான் அனந்த்.

"அதான் எந்த ஊருக்கு? எதுக்குன்னு கேட்கிறேன்."

"கல்கத்தா போகிறேன். போன பிறகு கடிதம் போடுகிறேன்."



விஜய் தம்பி அருகில் வந்தான்; அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"என்ன அனந்த்? சொல்லாமல் கொள்ளாமல் இப்போ இந்தப் பயணம் ஏன்?"

"நீ எல்லோருக்கும்... எல்லாவற்றையும் சொல்லிட்டு தான் செய்யறியா? இல்லை செய்துட்டுதான் சொல்றியா?" என்று ரோஷத்துடன் கேட்டான் அனந்த். கண்களில் பொங்கி வந்த கண்ணீரைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தான்.

"அப்படின்னா?" என்றான் விஜய்.

"அப்படின்னா அப்படித்தான்..." தலையை உலுக்கிக் கொண்டு வேகமாய்ச் சொன்னான்.

விஜய்க்கு அவனின் போக்கு என்னவென்று புரியவில்லை. ஒருநிமிடம் கவனமாய்த் தம்பியைப் பார்த்து "ரோஜாவிடம் சொன்னாயா?" என்று கேட்டான்.

"அவளிடம் சொல்ல வேண்டிய தேவை எனக்கென்ன?" என்று முகத்தில் அடித்தாற் போல் பதில் வந்தது.

"புத்தி இருக்கா உனக்கு? உன் வருங்கால மனைவி..."

"விஜய்..." கத்திவிட்டான் அனந்த். விஜய் பக்கம் திரும்பினான்.

"விஜய்... நீ எது வேணும்னாலும் சொல்லு. அந்த வார்த்தையை மட்டும் சொல்லாதே..." கண்டிப்பான குரலில் சொன்னான்.

"அனந்த் ஏன் இப்படிப் பேசற? என்னதான் நடந்தது?" என்று கேட்டான்.

"ஒன்றும் ஆகவில்லை. நீ சற்று நேரம் பேசாமலிருந்தால் நான் ஊருக்குப் போய் விடுகிறேன்" என்று பெட்டியில் துணியை எடுத்து வைக்கத் தொடங்கினான்.

விஜய் தம்பியின் தோள்களைப் பலமாகப் பற்றித் தன் புறம் திருப்பிக் கொண்டு கேட்டான்.

"அனூர்... உண்மையைச் சொல்லு? என்ன நடந்தது? உனக்கும் ரோஜாவுக்கும் ஏதாவது சண்டையா? என்னிடம் கூடச் சொல்லக் கூடாத விஷயம் ஏதாவது நடந்ததா?"

"சண்டையா? ஊஹூம்... சண்டை போடாம இருக்கத் தான் நான் ஊருக்குப் போறேன்."

"என்னதான் நடந்தது? நீ இப்படி எரிச்சலுடன் என்றுமே தென்பட்டதில்லையே?"

"உண்மையைச் சொல்லட்டுமா?" விஜய் கண்களை நேராகப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

"சொல்லு!"

"ரோஜா என்னை ஏமாற்றி விட்டாள். அந்த விஷயம் எனக்கு இன்னிக்குத்தான் தெரிந்தது."

"அனந்த்!"

"என்னைக் கல்யாணம் செய்துக்க மாட்டாளாம்... என்னைக் கண்டால் பிடிக்கவில்லையாம்."

விஜயின் கைகள் அவனை அறியாமலேயே அனந்தின் தோள் களிலிருந்து சரிந்துவிட்டன. அவன் முகம் களையிழந்து தென் பட்டது.

"உண்மையாகவே அவள் அப்படிச் சொன்னாளா? காரணம் என்னவாம்?"

"காரணம் என்னான்னு எப்படிக் கேட்பேன்? எந்த முகத்தை வைத்துக்கொண்டு இன்னும் அங்கே நிற்கட்டும்? அந்த வார்த்தையைக் கேட்டதும் உலகமே சுழலுவது போல் இருந்தது எனக்கு. விஜய் முதலிலிருந்தே நீ எச்சரித்துக் கொண்டுதான் இருக்கிறாய். நான்தான் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அதற்குச் சரியான தண்டனை கிடைத்து விட்டது. ரோஜா இப்போ பழைய ரோஜா இல்லையே... வேணுகோபாலனின் மகள்... பல லட்சங்களுக்குச் சொந்தக் காரி... அவளுக்கு இப்போ என்னுடன் என்ன வேலை? சீ...சீ... இந்தப் பெண்களை நம்பவே கூடாது..."



"அனந்த்! நீ தவறாகப் புரிந்துகிட்டிருக்கே..." விஜய் ஏதோ சொல்லப் போனான். ஆனால் சொல்ல முடியாமல் நின்று விட்டான்.

அனந்த் அதைக் கவனிக்கவில்லை. "இந்த உலகில் வேறு பெண்ணா இல்லை? பார்த்துகிட்டே இரு. ஒரு மாசத்துக்குள் ரோஜாவைவிட எல்லாவிதத்திலும் உயர்வான பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளாவிட்டால் என் பெயர் அனந்த் இல்லை. எதை வேணும்னாலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் சிநேகத்தில் நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது."

"அனந்த், அவசரப்படாதே! நான் இப்பவே போய் ரோஜாவை அழைச்சிட்டு வரேன். அவள் ஏதோ தெரியாமல் தவறாகச் சொல்லி இருக்கணும். இதைச் சரி செய்யும் பொறுப்பு என்கிட்ட இருக்கு. நான் வரும் வரை எங்கேயும் போகாதே..." என்று கூறிவிட்டு விஜய் கிளம்பிப் போனான்.

"சாரி...விஜய்... உன் பேச்சைக் கேட்காததற்கு என்னை மன்னித்துவிடு. நான் போகிறேன். நீ திரும்பி வரும்போது நான் ஸ்டேஷனில் இருப்பேன்."

அனந்த் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்து விட்டான். இப்பொழுதாவது விஜய் மனம் திறந்து... அனந்த் இதுதான் விஷயம் என்று சொல்லியிருந்தால் அவனால் ஏற்றுக்கொள்ள முடியும். விஜய்க்காகவாவது ரோஜாவை மன்னித்து இருப்பான். ஆனால் விஜய் விஷயத்தை வெளிப்படுத்தவில்லை. அனந்துக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

ஒரு நிமிஷம் ஆபீஸ் அறையில் இருந்த அந்த போட்டோக்களை எடுத்து வந்து விஜயிடம் காண்பித்து "மகானுபாவா... இதுக்கென்ன பதில்?" என்று கேட்டு விட ஞாயமென்று தோன்றியது. ஆனால் ஏனோ துணிச்சல்

வரவில்லை. தன் பலவீனத்தைக் கண்டு தன்மீதே வெறுப்பு வந்தது.

விஜயும் அனந்த் பின்னாடியே கீழே இறங்கி வந்தான்.

"ஒரு நிமிஷம் இரு. போன் செய்து ரோஜ விடம் பேசு கிறேன்..." என்றான் விஜய்.

"வேண்டாம் விஜய்... முடிந்தால் என்னுடன் ஸ்டேஷனுக்கு வா... ஒழுங்காய் ரயிலேற்றி விடு..." என்றான் அனந்த்.

அனந்த் வற்புறுத்தியதால் விஜய் ஸ்டேஷனுக்குப் போனான். போகும் வழியில் அவன் அனந்தை, இந்த ஒரு நாளுக்காவது பயணத்தைத் தள்ளி வைக்கும்படிக் கெஞ்சிக் கொண்டுதான் இருந்தான். அனந்த் காரணத்தைச் சொல்லவுமில்லை, பயணத்தை ரத்து செய்யவுமில்லை.

யோசிக்க யோசிக்க அவனுக்கு விஜய்மீது ஏற்பட்ட கோபம் குறைந்து விட்டது. இதில் விஜயின் தவறு ஏதும் இல்லை. விஜய், தானும் மனம் விட்டுப் பேசும் பழக்கம் என்றுமே இருந்ததில்லை. விஜய் தன்னிடம் இந்த விஷயத்தைச் சொல்லாததில் வியப்பொன்றும் இல்லை. ஆனால் ரோஜா...? ரோஜா தன்னிடமிருந்து இந்த விஷயத்தை மறைத்தது, இதயத்தை இருகூறாய்ப் பிளப்பது போல் இருந்தது. ஒருமுறையாவது கடிதத்திலாவது, குறிப்பாக உணர்த்தியிருக்கலாமே... தனக்கு வேதனையாய் இருந்தாலும், அவள் தேர்ந்து எடுத்தது விஜயை என்பதால் மகிழ்ச்சியாய் ஒப்புக் கொண்டிருப்பேன். அவளுடைய சந்தோஷம்தான் தனக்கு முக்கியம் என்று ரோஜாவுக்குத் தெரியாதா? உண்மையை வெளிப்படையாகச் சொல்ல முடியாத ரோஜாவின் கோழைத்தனத்தை நினைக்கும்போது வெறுப்பாக இருந்தது.

ரயில் பிளாட்பாரத்தை விட்டு நகரும்போது, அனந்த் அதில் ஏறிக் கொண்டான்.

விஜய் சற்று கோபத்துடன், "நான் சொன்ன பேச்சைக்



கேட்காமல் போய்க் கொண்டிருக்கிறாய் இல்லையா? நீ அங்கு போவதற்குள் ரோஜாவைப் ப்ளேனில் ஏற்றி அங்கே அனுப்பா விட்டால் பாரு... உன்னை வேதனைப்படுத்தியதற்கு ரோஜா உன்னிடம் மன்னிப்புக் கேட்டுத்தான் ஆகணும்."

அனந்துக்குச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. குத்தலாக பேசி, விஜய் மனதைக் காயப்படுத்த வேண்டும் போல் தோன்றியது. ஆனால் ஏனோ மௌனமாய் இருந்து விட்டான். ரயில் நகரத் தொடங்கியபோது அனந்த், "விஜய்... லாவண்யா வந்து விட்டுப் போனாள். அவள் உனக்காகக் கொடுத்து விட்டுப் போன கவரை மேஜைமீது வைத்திருக்கிறேன். வீட்டுக்குப் போனதும் பார்த்துக் கொள்..." என்றான்.

# 87

அனந்த் தன்னைத் தவறாகப் புரிந்துகொண்டு கோபத்துடன் ஊருக்குப் போய்விட்ட விவரம் தெரியாத ரோஜா தந்தை அருகில் அமர்ந்துகொண்டு, கண்கள் வியப்பால் அகல விரிய அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

வேணுகோபாலன் மறுநாள் ஊருக்குக் கிளம்பிக்கொண்டிருந்தார். வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இரவு தூங்குவதற்குமுன் அவருக்கு மருந்து கொடுக்க வந்த ரோஜாவின் கையைப் பற்றிக் கொண்டு, "ஒரு நிமிடம் இப்படி உட்காரும்மா... உன்னிடம் சில பொறுப்புக்களை ஒப்படைக்கணும்" என்றார்.

ரோஜா அவர் எதிரில் அமர்ந்துகொண்டாள். அவர் தன் சொத்து விவரங்களைச் சொல்லத் தொடங்கினார்.

"இந்தப் பொறுப்புகள் எல்லாம் எனக்கு வேண்டாம். முதலில் லாவண்யாவை வீட்டுக்கு அழைத்து வரச் செய்யுங்கள். நீங்க போவதற்குமுன் லாவண்யா இந்த வீட்டுக்கு வரவேண்டியது ரொம்ப முக்கியம்..." என்றாள் ரோஜா.

சற்று நேர மௌனத்துக்குப் பிறகு வேணுகோபாலன், "ரோஜா... லாவண்யாவை எந்த விஷயத்திலும் கட்டாயப் படுத்துவதில் எனக்கு விருப்பமில்லை. லாவண்யா தானாக இஷ்டப்பட்டு இந்த வீட்டுக்கு வந்தால் சரி... நான் போன பிறகு நீ லாவண்யாவைப் போய்ப் பாரு. அவளுடைய விருப்பத்துக்கு எதிராக எதுவும் நடக்காது என்றும், அவள் விரும்பியபடி இருக்கலாம் என்றும் நான் சொன்னதாகச் சொல்லு..." என்றார்.

ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று அவரிடமிருந்து வெளிப்பட்டதை ரோஜா கவனிக்கத் தவறவில்லை.

"ரோஜா, இன்னொரு விஷயமும் உன்னிடம் சொல்லணும்... உங்க அம்மாவுக்கும்... எனக்கும்..."

"இப்போ அந்தப் பேச்செல்லாம் எதுக்கு? நடந்தது நடந்துவிட்டது. இப்போதான் நாம் மறுபடியும் சந்தித்து விட்டோமே..." சட்டென்று ரோஜா சொன்னாள்.

இதற்கு முன்பும் அவர் இது பற்றிச் சொல்ல வந்தபோது ரோஜா வேண்டுமென்றே பேச்சை மாற்றிவிட்டாள்.

எறும்புக்குக்கூடக் கெடுதல் செய்யாத தன் தந்தை, தமக்கு வேண்டுமென்றே அநியாயம் செய்யவில்லையென்றும் வயதுக் கோளாறினால் செய்த சின்ன தவறால், வாழ்நாள் முழுவதும் தண்டனை அனுபவித்தார் என்றும், மாமாவின் பேச்சிலிருந்து ரோஜா உணர்ந்து கொண்டாள். அந்தத் தவறு என்ன என்பது மட்டும் தெரியாது. தெரிந்துகொள்ளும் ஆர்வமும் இல்லை.

ஆனால் வேணுகோபாலன் சும்மா இருக்கவில்லை. ரோஜா அந்தப் பேச்சை விரும்பாதவள் போல் எழுந்துபோக முயன்றபோது தடுத்துவிட்டார்



"என் மனதில் இருப்பதை சொல்லாவிட்டால், எனக்கு நிம்மதியே இருக்காது. நான் செய்தது குற்றம் இல்லை என்ற நம்பிக்கை இன்னும் எனக்கிருக்கு. உங்க அம்மா எனக்கு மாமன் மகள். சின்ன வயதிலிருந்தே அவள்தான் என் மனைவி என்று சொல்லி வந்தார்கள். எல்லோரும் சேர்ந்துதான் இருந்தோம்.

நான் பி.ஏ. படிக்கும்போது நீ இரண்டு வயது குழந்தை. உங்கம்மா படிக்காதவள் என்று எனக்கு என்றுமே தோன்றிய இல்லை. வாழ்க்கை இனிமையாக, திருப்தியுடன் கழிந்த நாட்கள் அவை. விடுமுறையில் கிராமத்துக்கு வரும்போது, உன்னையும் சாவித்திரியையும் அழைச்சுகிட்டு சினிமாவுக்குப் போய் வருவேன். என் லட்சியமெல்லாம் பி.ஏ.வுக்குப் பிறகு 'லா' படிக்க வேண்டுமென்று இருந்தது.

பி.ஏ. கடைசி வருடத்திலிருக்கும்போது லாவண்யாவின் தாய் லலிதாவுடன் அறிமுகமாயிற்று. அவளுக்கு என்னைப் போல் நிறைய பேருடன் பரிச்சயமிருந்தது. அவளுடைய தாய் ஒரு பெங்காலி. தந்தை தமிழ்க்காரர். அவர்களுடையது காதல் திருமணம். அந்தக் காலத்தில் அதைப் பற்றிக் கதை கதையாய்ப் பேசிக் கொள்வார்கள். அவர் எங்க காலேஜில் லெக்சரராக இருந்தார். அவர் அடிக்கடி எங்களை தம் வீட்டுக்கு சாப்பிட அழைப்பது வழக்கமாய் இருந்தது. லலிதா எங்க எல்லோரிடமும் நெருக்கமாக, நட்பாகப் பழகி வந்தாள். எனக்குத் திருமணம் ஆகி, இரண்டு வயதில் மகள் இருப்பதாகத் தெரிந்தபோது லலிதாவின் தாய் ஆச்சரியப்பட்டாள். லலிதாவுக்கு அப்பொழுது பதினெட்டு வயது இருக்கலாமோ என்னவோ...

அவர்கள் வீட்டுக்குப் பக்கத்துத் தெருவில் ஒரு அறையில் நான் குடியிருந்தேன். என்னுடன் ஆனந்த் என்ற பையனும் தங்கியிருந்தான். லலிதா அடிக்கடி எங்க அறைக்கு வந்து போவது வழக்கம்தான்... ஆனந்தும், லலிதாவும் நெருங்கி பழகுவது போல் தோன்றியது. விடுமுறையின் போதும்

ஊருக்குப் போகாமல் அங்கேயே இருக்கத் தொடங்கினான் ஆனந்த்.

ஒருதடவை விடுமுறை முடிந்து ஊரிலிருந்து நான் வந்த போது ஆனந்த் இல்லை. ஊருக்குப் போயிருந்தான். காலேஜ் திறந்த பிறகும் வரவில்லை. லலிதாவோ ஆனந்த் வந்து விட்டானா என்று இரண்டு மூன்றுதடவை கேட்டுவிட்டாள். அவள் பதட்டமாய் இருந்தாள்.

ஆனந்துக்கு உடல்நிலை சரியில்லையென்று கடிதம் வந்தது. ஒரு வாரம் கழித்து அவன் இறந்து விட்டதாகத் தந்தி வந்தது. அவனிடம் எனக்கு ரொம்ப பழக்கம் இல்லை. ஒரே இடத்தில் வசிக்க நேர்ந்ததால் ஏற்பட்ட நட்புதான்... ஆனந்த் இறந்து விட்டதாகத் தெரிந்த பிறகு லலிதா ஓரிரு முறை என் அறைக்கு வந்தாள். அந்தப் பெண்ணின் போக்கைப் பார்த்தால், ஆனந்துடன் அவள் பழக்கம் கொஞ்சம் கூடுதலாகவே இருந்திருக்கும் என்று தோன்றியது. நடந்தது நடந்துவிட்டது. ஆனந்த்தை மறந்து விடு என்று அவளை எச்சரித்தேன். அவ்வளவுதான்... அவள் ஓவென்று அழத் துவங்கினாள். ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அவளிடம் அதிகம் பழக்கம் இல்லாவிட்டாலும், என்ன விஷயம் என்று பரிவுடன் கேட்டதற்குத் தான் தாயாகப் போவதாகச் சொன்னாள். ஆனந்துடன் நெருக்கமாகப் பழகியதன் விளைவு அது... நான் திகைத்துப் போய் விட்டேன்.

''வீட்டில் பெற்றோருக்குத் தெரியுமா?'' என்று கேட்டேன்.

தெரியாது என்றும், அவர்களுக்குத் தெரிந்தால் கொன்று போட்டு விடுவார்கள் என்றும் அழத் தொடங்கினாள்.

என்னால் என்ன சொல்ல முடியும்? பெற்றோரிடம் சொல்லி விடுவதுதான் நல்லது என்று அறிவுரை வழங்கினேன்.



மறுநாள் வந்தபோது ''சொல்லி விட்டாயா?'' என்று கேட்டேன்.

சொல்லப் பயமாக இருப்பதாகவும், இந்த விஷயம் வெளியில் தெரிந்துவிட்டால் அவமானம் தாங்க முடியாது என்றும் அழுதாள். விஷம் குடித்துச் சாகப் போவதாக என் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறினாள்.

அவளுடைய பெற்றோரிடம் நானே வந்து விஷயத்தைச் சொல்வதாகச் சொன்னபோது, அதற்கும் ஒப்புக் கொள்ளவில்லை.

லலிதா என் அறைக்கு அடிக்கடி வருவதைப் பற்றி, அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் வம்பு பேசத் தொடங்கினார்கள். அடுத்த நாள் லலிதா வந்தபோது, தனக்கு என்னிடம் இருந்து உதவி தேவை என்றும், நான் அதைச் செய்யாவிட்டால் தற்கொலை செய்து கொள்ளப் போவதாய்ச் சொன்னாள்.

என்னவென்று கேட்டபோது, தன்னைக் கல்யாணம் செய்துக்கச் சொன்னாள். எனக்கு வாயடைத்துவிட்டது போல் ஆயிற்று. தான் உயிர் வாழ வேண்டும் என்றால் இது ஒன்றுதான் வழி என்று என் கால்களைப் பிடித்துக் கொண்டாள்.

எனக்குத் திருமணமாகி மகளும் இருப்பதை நினைவுபடுத்தியபோது, இரண்டாவது மனைவியாக இருக்கத் தயார் என்றும், தனக்கு வாழ்வு கொடுக்கச் சொல்லி கெஞ்சினாள். வாழ்நாள் முழுவதும் நன்றியோடு இருப்பதாகச் சொன்னாள்.

அந்தப் பெண்ணைப் பார்க்கும்போது எனக்கு இரக்கம் ஏற்பட்டது. இந்த உலகில் பணம், அந்தஸ்து இருந்தாலும், தவறு செய்துவிட்ட பெண்ணைச் சமுதாயம் மன்னிக்காது. பெண் இனத்துக்கு கட்டுப்பாடுகள் தீவிரமாய் இருந்த காலம் அது.

கடைசியில் லலிதாவுக்கு உதவி செய்ய முடிவெடுத்தேன்.

இந்தத் திருமணம் முடியும் வரைதான் என் பொறுப்பு... பிறகு ஏதாவது காரணம் காட்டி பிரிந்துவிட வேண்டும். நமக்கு இடையே எந்த உறவும் இருக்கக் கூடாது என்று நான் சொன்னபோது, லலிதா எல்லாவற்றுக்கும் ஒப்புக் கொண்டாள்.

நான் கிராமத்துக்குப் போனேன். உண்மையைச் சொன்னால், உங்க அம்மா சம்மதிக்க மாட்டாள் என்று தெரியும். அதனால் லலிதாவுக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு தகப்பன் நான்தான் என்று பொய் சொன்னேன். அப்பொ அவள் செந்தூரை வயிற்றில் சுமந்துகொண்டு இருந்தாள். நிறைமாதம்...

இதைக் கேட்டதும் அவள் முகம் களையிழந்துவிட்டது... நான் சொன்ன பொய்யை நம்பிவிட்ட சாவித்திரி... லலிதாவுடன் என் திருமணத்துக்குச் சம்மதிப்பதாக ஒப்புதல் கடிதம் எழுதிக் கொடுத்தாள். இந்த விஷயம் வீட்டில் யாருக்கும் தெரியாது. கவலைப்பட வேண்டாமென்று சாவித்திரியிடம் தைரியம் சொல்லிவிட்டு வந்தேன்.

லலிதாவுடன் எனக்குத் திருமணம் நடக்கப் போவதாகத் தெரிந்தபோது, உங்க மாமா சங்கரன் நான்கு பெரிய மனிதர்களுடன் வந்து கல்யாணப் பந்தலில் ரகளை செய்தான். லலிதாவின் தந்தைக்கும் அவர்களுக்கும் வாக்குவாதம் நடந்தது. சாவித்திரியின் அனுமதியைப் பெற்றுதான் இந்தத் திருமணம் நடைபெறுவதாகக் கடிதத்தைக் காண்பித்த போது, அவர்கள் மௌனமாகத் திரும்பிப் போய் விட்டார்கள்.

லலிதாவின் பெற்றோர் என்னையும், லலிதாவையும் வட நாட்டுக்கு ஊர் போய்விட்டு வரச் சொன்னார்கள். அதற்குள் இந்த நிலைமை சரியாகி விடுமென்று அவர்கள் வற்புறுத்தினார்கள். அதன்படி ஊர் போய்விட்டு வந்தபிறகு கிராமத்துக்குச் சென்றேன். உன் மாமா சங்கரன் என்னை வீட்டுக்குள்ளேயே வரவிடவில்லை. உன் அம்மா கண்ணில்பட



வில்லை. அக்கம்பக்கத்தாரும் சேர்ந்து தூஷித்ததில், அந்த அவமானம் தாங்காமல் திரும்பி விட்டேன்.

சென்னைக்கு வந்ததும் உன் அம்மாவுக்குக் கடிதம்போட்டேன். அதில் என்மீது நம்பிக்கை வைக்கும்படியும், விரைவில் வீடு பார்த்து ரோஜாவையும், அவளையும் சென்னைக்கு அழைத்து வருவதாக எழுதியிருந்தேன். ஆனால் அந்தக் கடிதத்தைத் தபாலில் சேர்க்க விடாமல் லலிதா தடுத்து விட்டாள் என்று ரொம்ப நாட்கள் கழித்துத்தான் தெரிந்தது.

லலிதாவின் தாய்க்குக் கல்கத்தாவில் சணல் ஃபாக்டரி இருந்தது. அதைக் கவனித்துக் கொள்ள நானும், லலிதாவும் கல்கத்தா போக நேர்ந்தது. ஒரு முறை கிராமத்துக்குக் கிளம்பியபோது, லலிதாவின் தந்தை என்னை வியாபார விஷயமாக சிம்லா அனுப்பினார். எல்லாம் முடித்துக் கொண்டு நான் திரும்பிவர ஒருமாதம் மேல் ஆகிவிட்டது. எப்படியோ வாய்ப்பு ஏற்படுத்திக்கொண்டு நான் கிராமத்துக்குப் போனேன்.

நான் போன சமயம் வீடு பூட்டியிருந்தது. உங்க அம்மாவுக்கு டெலிவரியில் சிக்கல் ஏற்பட்டதாகவும், பட்டணத்துக்கு அழைத்துப் போய்விட்டதாக அக்கம் பக்கத்தில் சொன்னார்கள். ஊரில் தலைகாட்ட முடியாமல் தங்கையை அழைத்துக்கொண்டு உங்க மாமா வேறு ஊருக்குப் போய் விட்டதாக சிலர் சொன்னார்கள். உங்களுடைய இருப்பிடத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அந்தச் சமயத்தில் லலிதாவின் தந்தை இறந்துவிட்டார். லலிதாவின் தாய் கல்கத்தாவில் செட்டில் ஆகிவிட்டாள். நான் அவர்களுடன் போக விருப்பப்படவில்லை. ஆனால், லலிதா ரகளை செய்ததால் கல்கத்தாவுக்குக் குடி பெயர்ந்தோம்.

லலிதாவுக்குப் பெண் குழந்தை பிறந்தது. லாவண்யா என்று பெயர் வைத்தாள் லலிதா... நான் வியாபாரத்தைக்

கவனித்துக் கொண்டதில் நல்ல லாபம் கிடைத்து வந்தது. உங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள நான் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. கடைசி வரை தகவல் தெரியவே இல்லை..."

"அப்படியென்றால் லாவண்யா?" வியப்புடன் கேட்டாள் ரோஜா.

"என் சொந்த மகள் இல்லை... ஆனால் அவளை நான் அப்படி நினைத்ததே இல்லை... உங்களைப் பற்றிய கவலையில் நான் தவித்ததைப் பார்த்தால், லலிதாவுக்கு எரிச்சலாய் இருக்கும். லாவண்யாவிடம் நான் அன்பாக இல்லையென்றும் குற்றம் சாட்டுவாள்.

உங்களைச் சாசுவதமாக இழந்துவிட்டதாக எண்ணி வேதனையிலிருந்த சமயத்தில் லலிதாவுடன் வாழ்க்கையில் உடன்பட்டு விட்டேன். ஆனாலும் உங்க விஷயம் எங்களுக்கு இடையே தடுப்புச் சுவராக இருந்து கொண்டுதான் இருந்தது. லாவண்யாவை எனக்கு எதிராக வளர்ப்பதில் லலிதா என்மீது பகையைச் சாதித்து வந்தாள். ராதை பிறந்தபிறகும் லலிதா மாறவில்லை. ராதா ஊமையாக பிறந்துவிட்டதில் ரொம்ப அப்செட்டாகி விட்டாள் நோய் வாய்ப்பட்டு ஆறே மாதத்தில் லலிதா இறந்துவிட்டாள். இந்த விஷயம் எதுவும் லாவண்யாவுக்குத் தெரியாது. ஒரு தடவை நம் உறவை விஜய் தவறாகப் புரிந்து கொண்ட போது, விஜயிடம் சொன்னேன். இன்று உன்னிடம் சொல்கிறேன்."

பழைய நிகழ்ச்சிகள் அவர் கண்முன் நிழலாடிற்று. சோர்வுடன் சுவிச்சேரில் பின்னால் சாய்ந்து கொண்டார்.

ரோஜா மெதுவாகத் தந்தையின் கையைப் பற்றிக் கொண்டாள். 'மனிதர்களில் நல்லதனம் இருக்கும் என்று நம்பி மோசம் போய்விட்டேன் ரோஜா' என்று தாய் அடிக்கடி சொல்லி வந்தது நினைவுக்கு வந்தது.

அம்மாவை இவர் ஏமாற்றினாரா? இல்லை... இல்லை...



விதி ஏமாற்றிவிட்டது. இல்லாவிட்டால் இவர்கள் எப்படியா வது சந்தித்து இருப்பார்களோ என்னவோ?

"ரோஜா! இப்போ சொல்லு... உன் தந்தை ஏமாற்றுக் காரரா?"

ரோஜாவின் கண்களில் நீர் பொங்கி வந்தது. "இல்லை... உங்களைப் போன்ற தந்தைக்கு மகளாய்ப் பிறந்ததில் பெருமைப்படுகிறேன். உங்க இதயம் அமிருதம் போன்றது என்று உங்களைப் பார்த்த உடனேயே கண்டு கொண்டேன். உங்க சுபாவம்தான் அனந்துக்கும். அதனால்தான் அவனைக் கண்டால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். மற்றவர்களுக்கு நல்லது செய்ய, எத்தனை இடைஞ்சல்கள் வந்தாலும் ஏற்றுக் கொள்வான்."

அனந்த் பற்றிய பேச்சு வந்ததும் வேணுகோபாலனின் புருவங்கள் முடிச்சேறின.

"பேச்சு வந்ததால் கேட்கிறேன்... அனந்த் பற்றி உன் அபிப்பிராயம் என்னம்மா? உனக்கு விருப்பமிருந்தால், நான் இருக்கும் போதே..."

திருமணப் பேச்சு எழுந்ததுமே ரோஜாவின் முகத்தில் சௌஜன்யம் மறைந்தது.

"ஊஹூம்! வேண்டாம்... எனக்கு விருப்பமில்லை... இப்போ திருமணம் பற்றிய பேச்சே வேண்டாம்."

"அனந்துக்கு உண்டு—இல்லைன்னு ஏதாவது ஒரு பதில் சொல்ல வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன ரோஜா..."

"நான்...நானே அனந்திடம் சொல்கிறேன்" என்றாள் ரோஜா.

"சரிம்மா... உன் இஷ்டம்" என்றார் வேணுகோபாலன்.

# 88

விஜய் ஸ்டேஷனிலிருந்து நேராக வேணுகோபாலன் வீட்டுக்கு வந்தான்; கீழ்ப் பகுதியில் விளக்குகள் எரிய வில்லை; மாடியில் ராதையின் அறையில் விளக்கு வெளிச்சம் தென்பட்டது.

அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான்; இரவு பத்துமணியைத் தாண்டவில்லை. கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

லாவண்யா இருக்கும்போது இரவு பன்னிரெண்டு மணி வரை கத்தலும், கூச்சலுமாய் சந்தடியாக இருந்த வீடு, இன்று நிசப்தமாய், வெறிச்சென்றிருந்தது.

விஜய் காலிங்பெல் அழுத்தினான். சற்றுப் பொறுத்து, ஹாலில் விளக்கு எரிந்தது; கதவு திறக்கப்பட்டது. அவனது ஊகம் சரியென்பது போல் ரோஜா எதிரே நின்றிருந்தாள்.

அவனைப் பார்த்ததும் ரோஜா நின்று விட்டாள். இத்தனை நேரமாக யாரைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தாளோ, யாரால் தன் வாழ்க்கையே நாசமாகி விட்டது என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாளோ, யாரை இரக்கமற்றவனாய், இதயமே இல்லாதவனாய் எண்ணி வெறுத்துக் கொண்டிருந்தாளோ, அவனே எதிரில் நின்றிருந்தான்.

கதவைத் தட்டியது அனந்த் ஆகத்தான் இருக்கும் என்றும், அவனிடம் தன் மனதிலிருக்கும் வேதனையைச் சொல்லிவிட வேண்டும் என்ற தவிப்புடன் ஓடி வந்து கதவை திறந்தாள். ஆனால் வாசலில் நின்றது அனந்த் இல்லை விஜய்.

அவனைப் பார்த்ததும் ரோஜா மனதில் இரண்டு



விதமான எண்ணங்கள் அலையாய் எழும்பின. ஒன்று தன் கோபத்தையெல்லாம் வெளிப்படுத்தும் விதமாய், அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுக்கணும். இரண்டாவது, அவனைப் பார்ப்பதே விஷம்போல் நினைத்து, முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே போவது... ஏனோ அவளால் இந்த இரண்டையுமே செய்ய முடியவில்லை.

''அவர் தூங்கி விட்டாரா?'' உள்ளே வரும் எண்ணம் இல்லாதவன்போல் வெளியே நின்றபடியே கேட்டான் விஜய்.

ரோஜா 'ஆம்' என்பதுபோல் தலை அசைத்தாள்.

''ராதை?''

''தூங்கி விட்டாள்'' கம்மி விட்ட குரலில் கூறினாள்.

அவன் ஒரு நிமிஷம் தயங்கினான். பிறகு திடமான குரலில், ''உன்னுடன் கொஞ்சம் பேசணும். ஒரு நிமிஷம் இப்படி வெளியில் வருகிறாயா?''

ரோஜா சரேலென்று தலையை உயர்த்திப் பார்த்தாள். அவள் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை.

'வர மாட்டேன்' என்பதுபோல் மறுப்பாக தலையசைத்தாள் ரோஜா.

''ஐந்து நிமிடம் போதும்'' அவன் குரலில் தென்பட்ட வேண்டுகோளை அவள் கவனிக்கவில்லை.

''ஊஹூம், வர மாட்டேன்! எனக்கு தூக்கம் வருகிறது'' அலட்சியமாய்ச் சொன்னவள் ஓரடி பின்னால் வைத்து, உள்ளே போகத் திரும்பினாள்.

சரியாய் அதே நேரத்தில் விஜய் ஓரடி முன்னால் வைத்து சட்டென்று ரோஜாவின் கையைப் பற்றி நிறுத்தினான்.

''ஒரு ஐந்து நிமிடம் போதும். அதற்குள் ஒன்றும் குடி முழுகி விடாது'' என்றவன் ரோஜாவின் பதில் தேவையில்லை என்பதுபோல் அவள் கையை அப்படியே பிடித்துக் கொண்டு, வெளியில் இழுத்து வந்தான்.

அவள் அவனுடைய பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள்; சாத்தியப்படவில்லை.

விஜய் அவளைத் தோட்டத்திலிருந்த சிமெண்ட் பெஞ்சியில் வலுக்கட்டாயமாய் உட்கார வைத்தான்.

ரோஜா அவனைச் சுட்டெரிப்பது போல் பார்த்தாள். அவன் தன் கையை விட்டதும், சட்டென்று கிளம்பப் போனாள்.

அவன் இந்த முறை இரு கரங்களையும் ரோஜாவின் தோள்களில் பதித்து, அழுத்தி உட்கார வைத்தான். வேறு வழியில்லாதவளாய், ரோஷத்தை விழுங்கிக் கொண்டு உட்கார்ந்தாள அவள்.

"அனந்த், ஊருக்குப் போய் விட்டான் தெரியுமா?" எந்த முன்னுரையும் இல்லாமல் நேராகச் சொன்னான் விஜய்

ரோஜா திடுக்கிட்டாற்போல் பார்த்தாள். அவள் முகம் களையிழந்ததை, மங்கிய நிலவு வெளிச்சத்தில் விஜய் கவனிக்கவில்லை.

"அவன் திடீரென்று கிளம்பிப்போன காரணம் என்ன?" என்றான்.

"என்னவோ? எனக்கென்ன தெரியும்?" வேகமாய் சொன்னாள.

அவள மனம் தியாய் எரிந்தது. அனந்த் ஊருக்குப் போய் விட்டானா? தன்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல் லாமல் போய்விட்டான் என்றால் தன்னிடம் கோபம் வந்தாற் போல்தானே? இதற்கெல்லாம் காரணமாயிருந்த விஜய், தன்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்பது எந்த விதத்தில் நியாயம்?

"உங்க இருவருக்குமிடையே ஏதாவது சண்டைவந்ததா? ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டே போனான்."

"அவனுடன திருமணத்தில் விருப்பமில்லை என்று சொனனேன" என்று பலவீனமான குரலில் கூறினாள ரோஜா.



"அதுதான் ஏன் என்று கேட்கிறேன்."

விஜய் குரலிலிருந்த மென்மையைக் கவனிக்கும் நிலைமையில் இல்லை ரோஜா 'அனந்த் போய் விட்டான்... தன்னைத் தவறாக நினைத்துக் கொண்டு போய்விட்டான்.' அவனுக்கு எவ்வளவு வேதனை ஏற்பட்டால் அந்த வேலையைச் செய்திருப்பானோ... ரோஜாவால் நன்றாகவே உணர முடிந்தது.

"சொல்லு ரோஜா, ஏன் அவனை வேண்டாமென்று சொல்லி விட்டாய்? காரணம் என்ன?"

"அது என் தனிப்பட்ட விஷயம். இதில் யாருக்கும் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை."

"ரோஜா, நான் உன்னிடம் விளக்கம் கேட்கவில்லை' அனந்த் வேண்டாமென்று நீ முடிவு செய்தால், அந்த முடிவு சரியில்லை என்று எச்சரிக்கை செய்ய வந்தேன். அனந்தை நீ ஏன் மறுத்தாய் என்று தெரிந்துகொள்ளும் பொறுப்பு எனக்கு இருக்கு" என்றான்.

அவள் வாயடைத்துப் போனவளாய் உட்கார்ந்து இருந் தாள். 'இவனுடைய உத்தேசம்தான் என்ன? தன்னிடமிருந்து எந்தப் பதிலை எதிர்பார்க்கிறான்?'

விஜய் தன் போக்கில் சொல்லிக் கொண்டிருந்தான்.

"ரோஜா... அனந்தின் நல்ல குணங்களைப் பற்றி நான் வேறு தனியாக உன்னிடம் சொல்ல வேண்டியதில்லை. அவன் வாழ்க்கை உன்னுடன் இணைந்தால் சுகமாய், சந்தோஷமாய் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு. நீங்க இருவரும் நல்ல நண்பர்கள். அப்படி இருக்கும்போது நடுவில் திடீரென்று இந்த மாறுபாடு ஏன? அவனை நீ மறுக்கக் காரணம்தான் என்ன?"

அவள் எழுந்து கொண்டாள். குரலில் ஏகத்தாளமும், குத்தலும் தொனிக்கக் கேட்டாள்.

"உங்க அறிவுரைகள்... எச்சரிக்கைகள் எல்லாம் முடிந்து விட்டனவா?"

விஜய் சீரியஸாகக் கேட்டான். "சற்று நேரம் உன் குத்தல் பேச்சுகளை விட்டுவிட்டு, கேட்டதுக்கு நேராகப் பதிலை சொல்கிறாயா?"

ரோஜாவின் கோபம் இரு மடங்காகி விட்டது. "நானும் நேராகவே கேட்டு விடுகிறேன். அதற்கு முதலில் பதில் சொல்லுங்கள். ஒரு தடவை கல்யாணம் ஆன பெண், அதை மறைத்துவிட்டு இரண்டாவது திருமணத்துக்குச் சம்மதிப்பாளா ? அதுவும் உயிருக்கு மேலாய் எண்ணும் நண்பனுடன்? அது ஏமாற்றுவதுபோல் ஆகாதா? குற்றமில்லையா?"

சற்று நேரம் மௌனம் நிலவியது.

அவன் பதில் சொல்லமுடியாதவன்போல் ரோஜாவையே பார்த்துக்கொண்டு கற்சிலையாய் நின்று விட்டான்.

எந்தத் தயக்கமும் இல்லாதவள் போல் சொன்னாள் ரோஜா

"எந்நேரமும் தம்பியின் நலனைப் பற்றியே யோசிக்கும் பொறுப்பு மிக்க அண்ணன் ஆகிய தங்களுக்கு இந்தச் சின்ன விஷயம் மூளையில் உரைக்காமல் போவானேன்?"

"ரோஜா... அந்தத் திருமணம் உன் விருப்பமில்லாமல் நடந்தது. அதில் உன் தவறு ஏதுமில்லை. பலவந்தமாய் நடந்த கொடுமைக்கு நீ எப்படி பொறுப்பு ஆக முடியும்? நீ செய்யாத குற்றத்துக்கு அனந்த் எப்படி உன்னை கோபித்துக் கொள்வான்? அசல் இந்த விஷயம் வெளியில் வர வேண்டிய தேவை என்ன இருக்கு?"

"ஒருக்கால் தேவை ஏற்பட்டால்? அனந்துக்குத் தெரிந்து விட்டால்?"

"ஒருக்கால் தெரிந்து விட்டாலும் இதில் நல்லது கெட்டதைப் பற்றி யோசிக்கும் பகுத்தறிவு அவனுக்கு இருக்கு. உண்மையைச் சொல்லு! உன் ஆட்சேபணை இது மட்டும்தானா?"

அவள் பதில் சொல்லவில்லை. தான் குறிபார்த்து வீசிய அம்பு வேலை செய்யவில்லை. தான் எதிர்பார்த்த இடத்தில்



அவன் மனதில் தைக்கவில்லை. ஏமாற்றத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

விஜய் நயமாகச் சொன்னான். "அதைப் பற்றித்தான் நீ பயப்படுவதாய் இருந்தால், நீ நிச்சிந்தையாய் இருக்கலாம். அதுக்கு நான் பொறுப்பு. இதில் உன் தவறு ஏதும் இல்லையென்றும், என் தவறுதான் என்று அவனுக்குப் புரிய வைப்பேன்."

"அப்படின்னா... அன்று நடந்தது உங்க தவறுதான் என்று ஒப்புக் கொள்ளுகிறீர்களா?"

விஜய் ரோஜாவை ஒரு நிமிடம் கண் இமைக்காமல் பார்த்தான் ஒருத்தர் சொன்ன வார்த்தைகளை, அவர்களுக்கே திருப்புவதில் ரோஜாவுக்கு இருக்கும் திறமை வேறு யாருக்கும் கிடையாதோ? எப்படி வேணும்னாலும் இருக்கட்டும்... இன்று வார்த்தைகளின் ஜாலங்களையெல்லாம் விட்டுவிட்டு, உண்மையைத் தயக்கமில்லாமல் இவள் முன் வெளிப்படுத்த வேண்டும் தான் செய்த தவறுக்கு அனந்துக்குத் தண்டனை கிடைக்கக் கூடாது என்று தோன்றியது. குரலில் மென்மையை வரவழைத்துக் கொண்டு சொன்னான்.

"உண்மைதான் ரோஜா... இல்லைன்னு எப்படி மறுக்க முடியும்? இந்தத் தவறு அன்று அனந்த் சாந்திநிகேதன் போகும் முன்புதான் தெரிந்தது. அந்தக் கணம் நான்பட்ட வேதனையை உனக்கு விவரித்துச் சொல்ல முடியாது. அகங்காரத்துடன் அநியாயமாய் உன்னை வேதனைக்குள்ளாக்கியதற்கு, பிரதிபலனாய் நான்கு பேருக்கு நடுவில் மறுபடியும் உன்னைத் திருமணம் செய்துகொண்டு, உன்னை எல்லாவிதமாகவும் மகிழ்ச்சியாய் வைத்துக் கொள்ளணும் என்று தோன்றியது ரோஜா... திருமணத்தைப் பற்றி உன் அழகான கனவை, விவரித்து அனந்துக்கு நீ எழுதிய கடிதத்தைப் படித்தேன். அதைப் படித்தபிறகு உன்னை என் வாழ்க்கையில் வரவேற்று, உன்னை அபுருபமாய் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று ரொம்பவும் தீவிரமான வேட்கை ஏற்பட்டது. இன்னும் கொஞ்சநாள் சென்று இருந்தால்,

அப்படியே நடந்திருக்குமோ என்னவோ? ஆனால் எதிர் ஒன்றுக்குப் பின் ஒன்றாய் நிகழ்ச்சிகள் நடந்து என்னைத் திக்குமுக்காட வைத்துவிட்டன. நீ வேணுகோபாலன் மகள் என்று தெரிந்தது. பணக்கார வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வது என் கொள்கைக்கே விரோதம். அதிருஷ்டமானது உன்னை என் வாழ்க்கையுடன் பிணைத்து விட்டு, அதற்குள் எட்டாத தொலைவுக்கு உன்னைக் கொண்டு போய்விட்டது. சங்கரனின் மருமகளான ரோஜாவாய் உன்னை நான் ஏற்றுக் கொண்டு இருப்பேன்... ஆனால் வேணுகோபாலனின் மகளாய், பல லட்சங்களுக்கு வாரிசாய் உன்னை என் வாழ்க்கையில் வரவேற்பது என்னால் முடியாது. அதனால்தான் செந்தா விஷயத்தில் என்னால் முடிந்த உதவியெல்லாம் செய்ய நினைத்தேன். செய்தேன்... நமக்கிடையே நடந்துவிட்ட அந்த நிகழ்ச்சியைக் கெட்ட கனவாய் மறந்து விடு... அனந்துக்கு எல்லாவிதமாய் ஏற்றவள் நீதான்... அவசரப்படாமல் யோசித்து நல்ல முடிவுக்கு வரணும் என்று வேண்டுகிறேன்" என்றான்.

ரோஜா மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள். விஜய் வாயிலிருந்து மடைதிறந்த வெள்ளம்போல் வந்து கொண்டிருந்த இந்த வார்த்தைகள், அவள் மனதில் எரிமலையாய்க் கனன்று கொண்டிருந்த ரோஷத்தை அமைதிப்படுத்தியது. ரோஜா விரும்பிய ஏதோ ஒன்று விஜய் வார்த்தைகளில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் சரியாக உருவகப்படுத்த முடியவில்லை

விஜய் தன்னை ஏற்றுக் கொள்வதாய் இருந்தானாம், ஆனால் நடுவில் இந்தப் பணம் குறுக்கே வந்து விட்டதாம்... ரோஜாவுக்கு ஏனோ திருப்தியாக இல்லை. தான் உள்ளூரப் பட்டுக் கொண்டிருந்த வேதனையை அவன் அநுபவிக்கவில்லை என்று தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்தாள். நடந்ததையெல்லாம் மறந்து விடணுமாம்... அனந்தைத் திருமணம் செய்து கொள்ளணுமாம்... எவ்வளவு சுலபமாகத் தீர்வைக் கண்டுபிடித்து விட்டான்?

குரலில் கடுமை கொப்பளிக்க ரோஜா கேட்டாள்.



"முடிந்துவிட்டதா உங்கள் சொற்பொழிவு...இன்னும் பாக்கி இருக்கா?"

"ரோஜா!" விஜய் ஸ்தம்பித்துப் போனவனாய்ப் பார்த்தான்.

"போகட்டும்... அறிவுரை சரிதானா? உங்களுடைய எண்ணம் எனக்குப் புரிந்துவிட்டது. பணக்கார வீட்டுப் பெண்ணை மனைவியாய் ஏற்றுக்கொள்ள உங்களுடைய கொள்கை குறுக்கே வந்துவிட்டது ஆனால் அந்தச் சொத்து கைவிட்டுப் போய்விடுமோ என்று பயம்... அதான் அனந்தைத் திருமணம் செய்துக்கச் சொல்லி, உங்க அபிமானத்தையும் விட்டுவிட்டுக் கெஞ்சறீங்க... சரிதானா!" என்றாள்.

விஜய் முகம் சிவந்து விட்டது.

எதற்கும் துணிந்துவிட்டவள்போல் தொடர்ந்தாள் ரோஜா... "நீங்க என்னை மனைவியாக ஏற்றுக்கொள்வதாக இருந்தீங்களா? என்னுடைய சொத்து குறுக்கே வந்து விட்டதா! ஐயோ பாவம்... போகட்டும்! 'உங்க காலடியில் எனக்குக் கொஞ்சம் இடம் கொடுங்கள்' என்று உங்க கால்களைப் பிடித்துக் கெஞ்சட்டுமா! அடடா... எத்தனை முயன்றாலும் என் கண்களில் கண்ணீர் வர மறுக்கிறதே! இல்லாவிட்டால் தம்பிக்காக நீங்க செய்யப் போகும் தியாகத்துக்கு ஆனந்தக் கண்ணீர் வடித்து... உங்க கால்களை கழுவி இருப்பேன்..."

"ரோஜா!" இடைமறிப்பதுபோல் உரத்த குரலில் சொன்னான் விஜய். அவன் முகம் செக்கச் சிவந்து விட்டது.

எரியும் தீயில் இன்னும் கொஞ்சம் நெய்யை ஊற்றுவது போல் ரோஜா மேலும், "உங்க அறிவுரைகள்...யோசனைகள் எதுவும் எனக்குத் தேவையில்லை. எப்படிப்பட்ட நபரை எனக்குக் கணவனாய்த் தேர்ந்து எடுத்துக் கொள்ளணுமோ எனக்குத் தெரியும். உண்மைதான்... நீங்க சொல்வதுபோல் நான் இப்பொழுது பல லட்சங்களுக்கு வாரிசு... அப்படியிருக்கும் போது அனந்தைத் திருமணம் செய்துக்க வேண்டிய அவசியம் என்ன? இதற்குமுன் உங்க அந்தஸ்துக்கு நான் தகுதியானவள்

இல்லைன்னு நீங்க மறந்தீங்க... இப்போ நான் உங்களுக்குத் தகுதியில்லைன்னு சொல்றேன் புரிந்ததா?'' என்றாள்.

விஜயின் வலிமை நிறைந்த கரம், சீறிப் பாயும் பாம்பு போல், ரோஜாவை எட்டிப்பிடிக்க முன் வந்தது. அதைக் கவனித்துவிட்ட ரோஜா மின்னல்போல் தொலைவுக்கு நகர்ந்து கொண்டாள்.

'உங்க அண்ணன் தம்பி இருவரும் இருக்கும் திசைக்கே ஒரு நமஸ்காரம்... நான் நாளை அவருடன் ஊருக்குப் போகிறேன். சில காரணங்களால் என் மனம் தூள் தூளாகச் சிதறி விட்டது. நான் திரும்பி வரமாட்டேன்... நீங்க அதற்காக மறுபடியும் வேட்டையைத் துவங்குவது நல்லது. உங்களுடன் உறவு ஏற்படாமல் போனது என் அதிருஷ்டம்தான்...''

போகப் போனவள், பின்னால் திரும்பிச் சொன்னாள். ''சொல்ல மறந்து விட்டேன்... சற்றுமுன் செந்தூருக்காக ஏதோ உதவி செய்ததாகச் சொன்னீங்களே... அதனுடைய விலை என்னவென்று சொல்லிவிடுங்க... நான் போகும் முன் கொடுத்துவிட்டுப் போகிறேன்... உங்களுடன் எந்தக் கணக்கு வழக்கும் வைத்துக் கொள்வதில் எனக்கு விருப்ப மில்லை. பின்னால் ஒரு பேச்சு வரக்கூடாது இல்லையா!''

மளமளவென்று சொல்லி முடித்துவிட்ட ரோஜா, ஓட்டம் போன்ற நடையுடன் உள்ளே போய் விட்டாள்.

வீட்டுக்குள் வந்து கதவைச் சாத்திவிட்ட ரோஜாவுக்கு மடை திறந்த வெள்ளம்போல் துக்கம் பொங்கி வந்தது. தன்னுடைய வார்த்தைகளால் அவனைக் காயப்படுத்தி விட்டதில் திருப்தி ஏற்பட்டபோதும், மகிழ்ச்சி ஏற்பட வில்லை. அவன்மீது பகையைச் சாதித்துவிட்டது உண்மை தான் என்றாலும்— ஏனோ மனம் அமைதியின்றி தவித்தது. கைக்குக் கிடைத்த ஒரே ஒரு வாய்ப்பை நழுவவிட்டதுபோல் இருந்தது. நிதானமாய், மிருதுவாய் தன் மனதைத் திறந்து சொல்லியிருந்தால் ஒப்புக் கொண்டிருப்பானோ? தன்னை ஏற்றுக் கொண்டிருப்பானோ...?

செயல் மறந்து போனவனாய் நின்றுவிட்ட விஜய், சற்று நேரம் கழித்து, சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான். அவன் கைகள் மெலிதாக நடுங்கிக் கொண்டிருந்தன. சட்டைப் பையிலிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். அவன் கோபத்தை இந்த அளவுக்குத் தூண்டிவிட, ரோஜாவைத் தவிர வேறு யாராலும் முடியாது என்று தோன்றிற்று.

விஜய் கட்டாயம் திரும்பி வருவான் என்றும் அவன் கதவைத் தட்டியதும்...அவன் கைகளில் அடைக்கலம் புகுந்து தன் மனதில் இருப்பதையெல்லாம் வெளிப்படுத்திவிட வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த ரோஜாவுக்கு, சற்று நேரத்துக்கு பிறகு, வாசல் கேட் திறந்து மூடும் சத்தம் காதில் விழுந்தது.

விஜய் போய்விட்டான்.

ரோஜாவின் இதயம் ஏமாற்றத்தால் நிரம்பிவிட்டது. தன்னால் அபிமானத்தை விடமுடியாததுபோல், அவனால் அகங்காரத்தை மறக்க முடியாது. தம் இருவருக்குமிடையே சௌஜன்னியம் ஏற்படுவது சாத்தியமில்லையோ என்று தோன்றிற்று.



# 89

''நன்றாக யோசித்துக்கொள் ரோஜா... நான் போகும் இடம் உன்னைப்போல் சின்ன வயதினருக்கு ஏற்றது இல்லை. நீ அங்கே ஒருநாள்கூட இருக்க முடியாது...'' வேணுகோபாலன் ரோஜாவுக்குப் புரிய வைக்க முயன்று கொண்டிருந்தார்

அவர் அன்று இரவு கிளம்பப் போகிறார்... எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. ரோஜா விஷயத்தில்தான்

ரோஜாவின் கண்களில் நீர் தளும்பி நின்றது. தான் யாரிடமிருந்தும் கண்காணாமல் போய்விட வேண்டுமென்று நினைக்கிறானோ. அவரால் புரிந்துகொள்ள முடிந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?

''என்ன சொல்கிறாய்?'' மறுபடியும் கேட்டார்.

ரோஜா பதில் சொல்லும்முன் போன் ஒலித்தது. வேணுகோபாலன் போனை எடுத்தார்... மறுமுனையில் யார் என்ன சொன்னார்களோ தெரியவில்லை... அவருடைய புருவம் முடிச்சேறியது.

''இங்கேதான் இருக்கிறாள்... ஒரு நிமிடம்'' ரோஜாவிடம் கொடுத்தவாறே... ''உன்னைத்தான் கேட்கிறாங்க'' என்றார்.

ரோஜாவின் இதயம் படபடத்தது. விஜயாக இருக்குமோ? ரிசீவரை எடுத்து ''ஹலோ'' என்றாள். மறுமுனையில் சொன்னதைக் கேட்டதும் ரோஜாவின் முகம் வெளிறிப் போய்விட்டது.

''இப்போதே வருகிறேன்... அட்ரெஸ் என்ன?'' மாறிய குரலில் கேட்டாள்.

## 90

இரவு ரொம்ப நேரமாகிவிட்டிருந்தது. தொலைவில் சர்ச்சிலிருந்து மணி அடிக்கும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. சாந்திநகர் முழுவதும் இருளில் மூழ்கியிருந்தது. விஜய் வீட்டில் மட்டும் விளக்குகள் எரிந்துகொண்டு இருந்தன... லக்ஷ்மி வேலைகளை முடித்துவிட்டு விஜயின் வருகைக்காக வாசலில் தூக்கக் கலக்கத்தில் உட்கார்ந்து இருந்தாள்.

இதற்குள் வீட்டின் முன் ஸ்கூட்டர் வந்து நின்றது.



வண்டியைவிட்டு இறங்கிய விஜய், உள்ளே வரும்போது, லக்ஷ்மி எழுந்து வந்தாள்.

''இவ்வளவு ராத்திரி ஆகிவிட்டதே தம்பி, சீக்கிரமாய் வந்துடுவீங்கன்னு நினைச்சேன்... என் புருஷனுக்கு உடம்பு சரியில்லை...டாக்டரிடம் காட்டி ஊசி போடணும். கொஞ்சம் பணம் வாங்கிக்கிட்டு போகலாம்னு காத்துக்கிட்டு உட்கார்ந்தேன்...'' என்றாள்

விஜய் மௌனமாய்ச் சட்டைப்பையில் கையைவிட்டு கிடைத்த ரூபாய் தாள்களை அப்படியே எடுத்து லக்ஷ்மியின் கையில் வைத்தான்.

லக்ஷ்மி பணத்தைத் தலைப்பில் முடிந்து வைத்துக் கொண்டே, ''நான் போயிட்டு வர்றேன் தம்பி. சீக்கிரம் சாப்பிடுங்க. சோறு பொங்கி நாழியாச்சு... ஆறிப் போய் விட்டிருக்கும்'' என்று எச்சரித்துவிட்டுப் போய்விட்டாள்.

விஜய் ஸ்கூட்டரை எடுத்து உள்ளே வைத்துவிட்டு வாசல் கேட்டைப் பூட்டிவிட்டு உள்ளே வந்தான். ஹால் விளக்கின் வெளிச்சம் கண்களைக் கூசவும், விளக்கை அணைத்துவிட்டு வாசற் கதவைச் சாத்திவிட்டான். ஒரு அடி வைக்கக்கூட சக்தியில்லாதவன்போல் அங்கிருந்த சோபாவில் அப்படியே சரிந்துவிட்டான். கண்களை மூடி சோபாவில் பின்னால் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

ஏனோ அவன் மனதில் வேதனை சூழ்ந்து கொண்டது. இதுவரை என்றும் அறிந்திராத ஏமாற்றம் நெஞ்சு முழுவதும் பரவிக் கிடந்தது. இதற்குக் காரணம், போகும் முன் வேணுகோபாலனைச் சந்திக்கமுடியாமல் போனதுதானா?

மதியம் அவருடைய வீட்டுக்குக் கிளம்பிய போது, எதிர்பாராமல் ஒரு புதிய வழக்கு ஒன்று வந்து விட்டது. மாலையில் போன் செய்து ஸ்டேஷனுக்கு வருவதாகத் தெரிவித்து விட்டான். மாலையில் மீட்டிங் ஏற்பாடாய் இருந்தது. கிளப் செகரட்டரி ஆனதால் அதைத் தவிர்க்கமுடியாமல், சீக்கிரமாய் மீட்டிங்கை முடித்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடினான்.

பிளாட்பாரத்தின் மீது ஓட்டம் போன்ற நடையுடன் போய்க் கொண்டிருந்தவனை எதிரே வந்த கோபாலன் நிறுத்தினான். ரயில் கிளம்பிப் போய் விட்டதாகச் சொன்னான். அந்த நிமிடம் விஜய் அடைந்த வேதனையை வார்த்தைகளால் வருணிக்க முடியாது.

வேணுகோபாலன் கடைசி நிமிடம்வரை அவனுக்காக எதிர்பார்த்ததாகவும், ஏதோ முக்கியமான வேலை வந்திருக்கும். இல்லாவிட்டால் விஜய் வராமல் இருக்க மாட்டான் என்று சொன்னாராம். போனதும் கடிதம் போடுவதாகச் சொல்லச் சொன்னார் என்று கோபால் தெரிவித்தான்.

'ரோஜா என்ன சொன்னாள்?' என்று கேட்கத் துடித்தவன், ஏனோ அந்தப் பெயரையே உச்சரிக்க முடியாதவன் போல் நின்று விட்டான்.

கோபாலனை பஸ் ஸ்டாப்பில் இறக்கிவிட்டு, மறுபடியும் ஷாப்புக்குப் போய் விட்டான். அங்கேயும் இருப்புக் கொள்ளவில்லை.

'ரோஜா போய் விட்டாள்; அவளைத் தன்னால் நிறுத்த முடியவில்லை. தன் திறமை, சாதுரியம் எல்லாம் பயனற்றுப் போய் விட்டன.' இந்த விஷயம் அடிக்கடி நினைவில் வந்து அவனை வேதனைப் படுத்தியது.

ஷாப்பில் ஒரே இரைச்சலாய் இருந்ததால், வீட்டுக்கு வந்தான். அமைதி கிடைக்கும் என்று வீட்டுக்கு வந்த விஜய்க்கு, இந்த மௌனமான, நிசப்தமான சூழ்நிலை பயங்கரமாய்த் தாக்கியது. வீடு முழுவதும் கலகலப்பாக, சந்தடியாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. தான் தவறு செய்து விட்டோம். வீட்டுக்கு வராமல் அப்படியே எங்கேயாவது கொஞ்ச நாட்களுக்குப் போயிருக்க வேண்டும். அப்படிப் போக முடியாமல் தன்மீது இருக்கும் பொறுப்புகள், கடமைகளை நினைக்கும்போது ஒருகணம் எரிச்சல் ஏற்பட்டது. சட்டைப் பையிலிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.



டைனிங் ரூமில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சம், திரைச்சீலையினூடே, முன்னறையில் மங்கலாய் விழுந்து கொண்டிருந்தது.

சிகரெட்டைக் கொளுத்தப் போன விஜய் சடேரென்று நின்று விட்டான். டைனிங் ரூமுக்கும், ஹாலுக்குமிடையே இருந்த நிலைப்படி அருகில், திரைச்சீலைக்குப் பக்கத்தில் யாரோ நின்று கொண்டிருப்பது போல் தோன்றிற்று. இருட்டில் உட்கார்ந்திருந்த விஜய்க்கு வெளிச்சமும், இருளும் கலந்த மங்கலான வெளிச்சத்தில், திரைச்சீலைக்குப் பக்கத்தில் நின்று இருப்பது யாரென்று தெளிவாகத் தெரியவில்லை.

"யாரது?" என்றான்.

அந்த உருவம் பேச்சு மூச்சில்லாமல் அப்படியே நின்றது; பதில் சொல்லவில்லை.

"யார் அங்கே?" விஜய் குரலை உயர்த்திக் கேட்டான்.

அப்போதும் பதில் இல்லை.

விஜய் கண்கள் தீட்சண்யமாய் மின்னின. அவன் கையில் இருந்த நெருப்புக்குச்சி கடைசிவரை எரிந்து கையில் சுட்டது. கையை உதறிக்கொண்டு, எழுந்து விளக்கைப் போட்டான். எதிரே திரைச்சீலைக்குப் பக்கத்தில் சுவரோடு ஒட்டி, பதுமையாய் நின்றிருந்தாள் ரோஜா. விஜய்க்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

ரோஜாவை அங்கே அப்படிப் பார்க்கும் போது, காலையிலிருந்து தன்னைச் சூழ்ந்துகொண்டிருந்த எண்ணங்கள் உருவகம் பெற்று எதிரே நிற்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

"நீயா?" என்றான்.

"விஜய்!" அவள் மிரண்டு விட்டவள் போல் தாழ்ந்த குரலில் மெதுவாக அழைத்தாள்.

ஒரே எட்டில் அவளருகில் சென்று இறுக அணைத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது. எப்படி அந்த உணர்வைக் கட்டுப்படுத்திக் கொண்டானோ அவனுக்கே தெரியாது. செயல் மறந்து போனவனாய் அவளையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

ரோஜா மெதுவாக அவனை நோக்கி நான்கு அடிகள் வைத்தவள், நின்று விட்டாள்.

"விஜய்... நான்... நான்..." பாதியிலேயே நிறுத்தி விட்டாள்.

ரோஜாவின் முகத்தைப் பார்க்கும்போது, அவளிடம் ஏதோ சொல்ல வேண்டுமென்ற துடிப்பும், வார்த்தைகள் சரியாக வராமல் திக்குமுக்காடுவது போலிருந்தது. விஜய் அவள் அருகில் வந்தான்.

"நீ...நீ ஊருக்குப் போகவில்லை?"

ரோஜா இல்லை என்பதுபோல் தலை அசைத்தாள்.

"ஏன்?"

அவள் பதில் பேசவில்லை.

"பதில் சொல்லு. ஏன் போகவில்லை?"

"விஜய்!"

"போகாவிட்டால் சரி, அது உன் விருப்பம். ஆனால் இங்கே எதுக்காக வந்தாய்? யாரைக் கேட்டுக்கிட்டு வந்தாய்?"

ரோஜா பதில் பேச முடியாதவள்போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இந்த ஜென்மத்தில் மறுபடியும் உன்னைப் பார்க்கப் போவதில்லை எனறே நினைத்தேன். நமக்கிடையே பந்தம் என்று ஏதாவது ஒன்று இருந்திருந்தால், நேற்று இரவோடு அது அறுந்து விட்டதென்றே நினைத்தேன். உண்மையைச் சொல்லு. மறுபடியும் ஏன் வந்தாய்?"



பதில் அளிக்கமுடியாதவள் போல் அவள் உதட்டைக் கடித்துக்கொண்டு அவன் முகத்தையே கண் இமைக்காமல் பார்த்தாள்.

ஏகத்தாளமும், ஆத்தலும் நிறைந்த குரலில் விஜய், "உங்கள் காலடியில் கொஞ்சம் இடம் கொடுங்கள் என்று கேட்க வந்தாயா? இல்லை உன் கண்ணீரால் என் பாதங்களைக் கழுவ வந்தாயா?" என்றான்.

"விஜய்!" பாம்பின் சீறலாய் ரோஷம் வெளிப்பட்டது அவளிடமிருந்து.

விஜய்க்கு ஆவேசத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"ச்சீ... ச்சீ... அந்தப் பெயரால் என்னை அழைக்காதே. நமக்கிடையே பெயரைச் சொல்லி அழைத்துக் கொள்ளும் நெருக்கம் இன்னமும் இருக்கா என்ன? மரியாதையாய்ப் போய் விடு. நான் இப்போ மனிதனாய் இல்லை. மிருகமாய் மாறி விட்டேன். என்ன செய்வேனோ எனக்கே தெரியாது. நேற்று இரவிலிருந்து நான் எத்தனை வேதனையை, நரகத்தை அனுபவித்தேன் தெரியுமா? இன்னும் ஒரு நிமிஷம் நீ இங்கே இருந்தாயானால், அதற்கெல்லாம் சேர்த்து உன் மீது பழி தீர்த்துக் கொள்வேன்" என்றான்.

ரோஜா தன் தயக்கங்களையெல்லாம் உதறித் தள்ளி, சட்டென்று அவன் தோள்களைப் பற்றிக் கொண்டு, அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"விஜய்! என்னை மன்னித்துவிடு. என் மனம் ஏற்கனவே அரண்டு போயிருக்கு. நீயும் கோபித்துக் கொண்டால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். என் அபிமானத்தையும், ரோஷத்தையும் விட்டுவிட்டு எப்படி நான் வந்தேன் என்று உனக்குத் தெரியாது. நேற்றிரவு உன்னைவிட ஆயிரம் மடங்கு வேதனையை நான் அனுபவித்தேன்."

விஜய் ரோஜாவின் தோள்களைப் பற்றித் தொலைவுக்குத் தள்ளிவிடப் போனான். ஆனால் அவள் இன்னும் நெருங்கி விஜயை ஒட்டினாற்போல் நின்று கொண்டாள்.

"விஜய்! என் பேச்சை முழுவதும் கேள். கேட்டபிறகு தீர்ப்பு வழங்கு" என்று வேண்டுவதுபோல் சொன்னாள்.

"இன்னும் நீ சொல்ல வேண்டியது, நான் கேட்க வேண்டியது... ஏதாவது பாக்கியிருக்கா?" கடினமாய் அலட்சியமாய் கேட்டான் விஜய்.

"விஜய்... இன்று மதியம் எனக்கு மேரியிடமிருந்து போன் வந்தது. அவளை டெலிவரிக்காக ஆஸ்பத்திரியில் சேர்த்து இருக்கிறார்களாம். நான் ஆஸ்பத்திரிக்குப் போனேன். மேரிக்கு மகன் பிறந்தான். டெலிவரி ரொம்ப கஷ்டமாகி விட்டது. நான்கு நாட்கள் போனால்தான் மேரியின் உயிரைப் பற்றி உறுதியாகச் சொல்ல முடியும் என்று டாக்டர்கள் தெரிவித்தார்கள். சேந்தா இறந்துவிட்ட செய்தியைக் கேட்டதும் மேரி நினைவு இழந்துவிட்டாளாம். அதன்பின் அவளது மனநிலை, உடல்நிலை இரண்டும் பாதிக்கப்பட்டு விட்டன."

ரோஜா சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும், அவன் முகத்தில் குடியிருந்த கடினம், பனிக்கட்டிபோல் உருகி விட்டது. அவள் சொல்வதைக் கவனமாய் கேட்டுக்கொண்டு இருந்தான்.

"விஜய் இதெல்லாம் விதியின் விளையாட்டு... இல்லாவிட்டால் அந்தப் போன் நான் போன பிறகு வந்திருக்கக் கூடாதா? மேரியின் நிலைமையைப் பார்த்தபிறகு எனக்குக் கையும், காலும் ஓடவில்லை. அங்கிருந்தே உனக்குப் போன் செய்தேன். வீட்டில் இல்லையென்று சொன்னாங்க. மேரியையும், கைக்குழந்தையையும் விட்டுவிட்டு எப்படி என்னால் போக முடியும்? பயணத்தை ரத்து செய்து விட்டேன். முதலில் இருந்தே அவருக்கு நான் வருவதில் விருப்பமில்லை...



நான் பயணத்தைக் கைவிட்டது தெரிந்து மகிழ்ச்சி அடைந்தார்."

"சரி... இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்கிறாய்? இதில் எனக்கு என்ன சம்பந்தம்?"

"விஜய்! நான் இப்போ உன்னிடம் வேணுகோபாலனின் மகளாக, சொத்து சுகம் உள்ள பெண்ணாக வரவில்லை. சங்கரன் அக்காவின் மகளாய் உதவி கேட்க வந்தேன். அதை நீ கட்டாயம் செய்து தரணும்... மறுக்கக் கூடாது..." என்றாள்.

விஜய் கைகள் ரோஜாவை விடுவித்தன. "ஓஹோ... அப்படியா?" என்றான். அந்தச் சொல்லில் தென்பட்ட கிண்டலை ரோஜா பொருட்படுத்தவில்லை.

விஜய் சற்று தொலைவாக நகர்ந்து போய் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

ரோஜா அங்கேயே நின்றிருந்தாள்.

"விஜய்!" ரோஜா மறுபடியும் நின்று விட்டாள். விஜய் வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

"உத்தரவு கொடுங்கள் மகாராணி" என்றான் கிண்டலாய்... விஜய் மனதில் சற்று முன்பு சூழ்ந்து கொண்டிருந்த சூனியம் மறைந்துவிட்டது. ரோஜாவின் வருகை இந்த வீட்டையும், தன் மனதையும் வெளிச்சத்தால் நிறைத்து விட்டதுபோல் இருந்தது.

தாழ்ந்த குரலில் ரோஜா, "விஜய் நான் வேணுகோபாலனின் மகளாக இல்லாமல், சங்கரனின் அக்காள் மகளாக இருந்தால் என்னைக் கட்டாயம் ஏற்றுக் கொண்டிருப்பேன் என்று நீ நேற்று சொல்லவில்லை?"

ரோஜாவின் மனதில் இருக்கும் உத்தேசத்தைக் கண்டு கொள்ள முயலுபவன்போல் விஜய் ரோஜாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தால் தான் சொல்ல நினைத்ததைச் சரியாகச் சொல்ல முடியாது என்று எண்ணிய ரோஜா, சோபாவுக்குப் பின்னால் வந்து நின்றாள்.

''விஜய்... நான் எப்போதும் சங்கர மாமாவின் அக்காள் மகள்தான்... அம்மாவுக்கும், சந்திரனுக்கும் எந்தவிதமாகவும் பயன்படாத பணத்தை நான் எற்றுக்கொண்டு, மகிழ்ச்சியாக இருப்பேன் என்று எப்படி நினைத்துக் கொண்டாய் விஜய்? அவருடைய சொத்து முழுவதும் லாவண்யா, ராஜைக்குத்தான் சேரும். நான் பழைய ரோஜாதான் விஜய். நீ என்னை ஏற்றுக் கொண்டால், செந்தூவுக்குக் கொடுத்த வாக்குறுதியை என்னால் நிறைவேற்ற முடியும்'' என்றாள்.

''ஆஹா... என்ன?'' விஜய் தலையைத் திருப்பி ரோஜா பக்கம் பார்த்து ஏதோ சொல்லப் போனான்.

ரோஜா சட்டென்று கையை நீட்டி அவன் வாயைப் பொத்தினாள். ''விஜய் போதும்... இன்னும் என்னை வேதனைப்படுத்தாதீங்க... நேற்று இரவு நான் சொன்ன வார்த்தைகளுக்கு என்னைப் பழி தீர்த்துக் கொள்ளாதீங்க... உங்களைவிட ஆயிரம் மடங்கு வேதனையை நான் அநுபவித்துவிட்டேன் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்...''

விஜய் ரோஜாவின் கையைப் பற்றித் தனக்கு எதிரே அவள் வந்து நிற்கும் விதமாய் இழுத்துக் கொண்டான்.

அவனுக்கு எதிரே நின்று கொண்டிருந்த ரோஜா, தீர்ப்புக்காகக் காத்திருக்கும் குற்றவாளியைப்போல் தலை குனிந்து நின்றாள்.

விஜய் சற்று நேரம் அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, பிறகு சீரியஸாகக் கேட்டான்.

''செந்தூரின் மகனை வளர்க்கும் நிபந்தனையின்



பெயரில் என் மனைவியாக வருவதற்கு ஒப்புக் கொள்கிறாய். அப்படித்தானே?''

''இது நிபந்தனை இல்லை... வேண்டுகோள்...''

செந்தூரின் மகனை வளர்க்க என் உதவி எதுக்கு? அந்தக் காரியத்தை உன்னால் செய்ய முடியாதா?''

''முடியும்... ஆனால் அதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கு? கல்யாணமாகாதவள் குழந்தையைக் கொண்டுவந்து வளர்த்துக் கொண்டால் ஊர் உலகம் சும்மா இருக்குமா? தாய் எவ்வளவு கவனமாய் வளர்த்தாலும், தந்தையின் மேற்பார்வையில்லாவிட்டால் குழந்தைகள் முக்கியமாக ஆண் குழந்தைகள் எப்படிச் சீர்கெட்டுப் போவார்களோ... செந்தூரின் வாழ்க்கையே ஓர் எடுத்துக்காட்டு... உங்களுடைய உதவியால் செந்தூரின் மகனை நல்ல குடிமகனாய், பண்பு நிறைந்த மனிதனாய், சமுதாயத்தின் முன் நிற்க வைத்த அன்றுதான் செந்தூரின் ஆத்மாவுக்கு உண்மையான அமைதி கிடைக்கும்'' என்றாள்.

விஜய் சற்று நேரம் யோசனைகளில் மூழ்கிவிட்டவன் போல் கையிலிருந்த சிகரெட் பெட்டியை அப்படியும் இப்படியும் புரட்டிக் கொண்டிருந்தான். கடைசியில் தலை உயர்த்திக் கேட்டான்.

''சரி... நீ சொன்னதற்கு ஒத்துக் கொள்கிறேன் என்று வைத்துக் கொள். ஆனால் பிரதிபலன் இல்லாமல் நான் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டேனே? இதில் என் வெகுமானம்தான் என்ன?''

ரோஜா ஒரு நிமிடம் யோசித்துவிட்டு நேர்மையாக, ''வாழ்நாள் முழுவதும் நீங்கள் சொல்லுவதைக் கேட்டு நடப்பேன். அன்புள்ள மனைவியாய், நல்ல இல்லத்தரசியாய், உங்கள் உள்ளத்தில், எண்ணங்களில் ஊடுருவி, உங்கள் வாழ்க்கையுடன் என்னைப் பிணைத்துக் கொள்வேன்'' என்றாள்.

விஜய் வியப்பைக் காட்ட முயன்று தோற்று விட்டான். கலகலவென்று நகைத்தாள். அந்தச் சிரிப்பில் சற்றுமுன் வரை அவன் மனதில் குடிகொண்டிருந்த எரிச்சல், கோபம், வெறுப்பு எல்லாம் மாயமாய் மறைந்துவிட்டன. சிரித்துக் கொண்டே ரோஜாவைப் பார்த்து நம்ப முடியாதவன்போல் கேட்டான்.

"நீயா...? நல்ல இல்லத்தரசியாகவா? என்னைப் பார்த்தாலே சண்டை போடாமல் இருக்க முடியாதே உன்னால்?"

"விஜய்... இது ஆனாலும் அநியாயம்..." ரோஜா அநியாயமான குற்றச்சாட்டுக்கு ஆளானவள்போல் பார்த்தாள்.

விஜய் ரோஜாவின் இரு கரங்களையும் பற்றி தன்னருகில் இழுத்துக் கொண்டான். குரலில் அன்பு ததும்ப, "சரி... உன் நிபந்தனைக்கு ஒப்புக் கொள்கிறேன். அதற்குமுன் நான் சொல்லும் ஒரு வேலையை நீ செய்து தருவதாய் வாக்குக் கொடுக்க வேண்டும்" என்றான்.

அவனுக்கு ரொம்ப நெருக்கமாய் வந்து நின்ற ரோஜா, தலையை உயர்த்தி அவன் கண்களை ஆழமாய்ப் பார்த்துக் கொண்டே, "என்ன வேலை அது? கட்டாயம் செய்கிறேன். எத்தனை கஷ்டமானதாய் இருந்தாலும் சரி..." என்றாள்.

"கஷ்டமான வேலை இல்லை. ஆனால் கொஞ்சம் நாசூக்காய் தீர்வு காண வேண்டிய விவகாரம்... என்னை இந்த இக்கட்டிலிருந்து மீட்க உன்னால் மட்டும்தான் முடியும்..."

விஜய்க்கு இடைஞ்சலா! தன்னால் மட்டும்தான் தீர்க்க முடியுமா? "என்ன விஷயம்?" என்று பதட்டத்துடன் கேட்டாள்.



"அனந்துக்கு நம் விஷயத்தைச் சொல்லணும். எப்படிச் சொல்வாயோ எப்படிப் புரிய வைப்பாயோ உன் இஷ்டம். அவன் மனம் துளிகூட வேதனைப்படக்கூடாது. நான் அவனை ஏமாற்றிவிட்டேன் என்ற தவறான எண்ணம் கூடாது. ரோஜா, அவன் திடீரென்று ஏன் வெம்பிப் போனான் தெரியுமா? நம் கல்யாணப் போட்டோக்களைப் பார்த்து விட்டான். ஸ்டேஷனிலிருந்து திரும்பி வந்த பிறகு தான் எனக்கு அந்த விஷயம் தெரியும். அவன் மறுபடியும் பழைய அனந்தாக என்னுடன் பேசும்வரை என் மனம் ஒரு நிலையில் இருக்காது. அவன்மீது உனக்கிருந்த அபிப்ராயம் நட்பு வரைதான் என்று நிச்சயமாய் தெரிந்து கொண்டேன், அதனால் உன்னை எந்தத் தயக்கமும் இல்லாமல் ஏற்றுக் கொள்கிறேன்..."

ரோஜாவின் கண்கள் திருப்தியாய் மின்னின. மென்மையான குரலில், "இந்த இக்கட்டு உங்க ஒருவருடையது மட்டும்தானா... எனக்கு மட்டும் இல்லையா? நமக்கு என்று சொல்லுங்க. அனந்துக்கு நான் புரிய வைப்பேன். புரிய வைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு. அவனுக்கு உயிர்ச் சிநேகிதியாய் வாழ்நாள் முழுவதும் இருக்க நினைத்த எனக்கு, அவனுடைய மென்மையான மனம் காயப்படாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் இருக்கு. இது மட்டும் இல்லை. அவன் மனதுக்கு ஏற்ற பெண்ணைப் பார்த்து அவன் திருமணத்தை முடிக்கும் பொறுப்பும் என்னுடையது தான்" என்றாள்.

விஜயின் கை ரோஜாவின் தலையை நெஞ்சோடு அழுத்திக் கொண்டது. "அப்போ நாளை பயணத்துக்குப் ப்ளேனில் டிக்கெட் புக் செய்கிறேன். கல்கத்தா செல் கிறாயா?"

சரியென்பது போல் தலை அசைத்தாள்.

"மேரி எங்கே இருக்கிறாள் என்று சொல்லு. நீ திரும்பி வருவதற்குள் நல்ல சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்கிறேன்.

மேரியைக் காப்பாற்ற நாம் எல்லாவிதமாக முயற்சி செய்வோம். மேரி என்றுதான் இல்லை. ஆபத்தில் இருப்பவர்களுக்கு, வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, நம்மால் முடிந்தவரை உதவி செய்வோம். இதுதான் என் லட்சியம். இனிமேல் உன் லட்சியமாகவும் மாற வேண்டும்" என்றான் விஜய்.

ரோஜா வேறு ஏதோ யோசனையில் வெறுமே தலை அசைத்தாள்

"என்ன யோசிக்கிறாய்? உன் யோசனைகள் இங்கே இல்லை" என்று தோள்களைப் பற்றி மெதுவாக உலுக்கினான் விஜய்.

ரோஜாவின் பார்வை விஜய் முகத்தில் நிலைத்தது.

"நீங்கள் எனக்கு அநியாயம் செய்துவிட்டதாகவும் நீங்கள் செய்துவிட்ட காரியத்தால் என் வாழ்க்கை நாசமாகி விட்டதாகவும் நினைக்கும் அந்த நிகழ்ச்சி... என்பால் இன்று கனிவாய் மாறும் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. வாழ்க்கையில் நான் எதிர்கொண்ட விசித்திரமான நிகழ்ச்சிகளில் உங்கள் உதவி மட்டும் எனக்குக் கிடைக்காவிட்டால், நான் பைத்தியமாகி விட்டிருப்பேன். அந்த நிகழ்ச்சி... அநியாயத்தின் உருவில் எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம்... இல்லையென்று உங்களால் மறுக்கமுடியுமா?"

"ரோஜா!" விஜய் முகம் மலர்ந்தது.

"எங்கே அந்தப் போட்டோக்கள், உண்மையிலேயே இருக்கா? ஒருமுறை என் கண்ணால் பார்க்க விடுங்கள் என் இனிய கனவுக்குச் சாட்சியங்களான அந்தப் போட்டோக்களைப் பத்திரமாக வைத்துக் கொள்கிறேன். அவற்றை என்னிடம் கொடுத்து விடுங்கள். பின்னால் என்றாவது ஒருநாள் நீங்கள் என்னை, 'நீ யாரு?' என்று மிரட்ட முடியாமல் அத்தாட்சியாக வைத்துக் கொள்கிறேன்."

விஜய் ரோஜாவை விடுவித்தான். ரொம்ப நாட்களுக்குப்



பிறகு அவன் உதட்டில் குறும்புப் புன்னகை தெளிந்தது.

"மாடியில் என் அலமாரியில் இருக்கு. உடனே போய் எடுத்துக்கொள். இல்லாவிட்டால் இப்பவே நீ யாரென்று கேட்டுவிடுவேன்" என்றான்.

ரோஜா எழுந்து படிகளை நோக்கி நடந்தாள்.

"நில்லு!"

ரோஜா நின்று விட்டாள்.

"இதோ கொத்துச் சாவி. அலமாரி பூட்டி இருக்கு..." என்று பேண்ட் பாக்கெட்டிலிருந்து சாவிக் கொத்தை எடுத்துக் கொடுத்தான்.

ரோஜா அவனருகில் வந்து கையை நீட்டினாள்.

"கையில் கொடுப்பதா? ஊஹூம்... நான் கொஞ்சம் பழங்காலத்து ஆசாமி..." விஜய் ரோஜாவின் கையைப் பற்றி அருகில் இழுத்துக்கொண்டு, புடைவைத் தலைப்பில் சாவிக் கொத்தை முடிந்தான்.

ரோஜா எழுந்து போனாள். நான்கடி வைத்தாளோ இல்லையோ... பின்னாலிருந்து, "நில்லு" என்று விஜயின் குரல் மறுபடியும் கேட்டது.

ரோஜா வியப்படைந்தவளாய் நின்று பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

விஜய் எழுந்து வந்தான். "வா இருவரும் சேர்ந்து போவோம்" என்றான்.

இருவரும் படி அருகில் வந்தார்கள். ரோஜா ஓரடி முன் வைத்து படிகளை ஏறப் போனாள். பின்னால் வந்த விஜய் திடீரென்று அவளை இரு கரங்களால் தூக்கிக் கொண்டான். ஒவ்வொரு படியாய் ஏறிக்கொண்டே, மென்மையான குரலில், "ரோஜா, இனிமையான கனவு, எதிர்காலம், அதிர்ஷ்டம் என்று ஏதேதோ சொன்னாயே... அவற்றுக்குள் உன்னை நான் இது போலவே அழைத்துச் செல்லணும், இந்தக் கணத்திலிருந்து வாழ்க்கையில் உனக்கு எந்தக்

குறையும் இருக்கக்கூடாது. எதற்கும் வேதனைப் படக் கூடாது. நீ மகிழ்ச்சியாய் இருப்பதுடன் அந்த மகிழ்ச்சியில் பாதியை எனக்கு அளிக்க வேண்டும். உன்னை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதுதான் என் முக்கிய வேலை... தெரிந்ததா!'' என்றான்.

ரோஜாவின் கைகள் விஜய் கழுத்தைச் சுற்றி மாலையாய் விழுந்தன. முகத்தை அவன் மார்பில் புதைத்துக் கொண்டாள். கண்களில் நீர் நிறைந்தது. வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட பிரச்னைகளிலிருந்து விஜயின் வலிமையான கரங்கள் தன்னைத் தூக்கிச் செல்வதாய் ரோஜாவுக்குத் தோன்றியது.

இந்த வாழ்க்கை எவ்வளவு விசித்திரமானது! எங்கேயோ பிறந்து, எங்கோ பாய்ந்து... கடலில் சங்கமிப்பதுதான் லட்சியமாய்க் கொண்ட நதியைப் போல் வாழ்க்கைப் பயணமும் முன்னோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.

வாழ்க்கைப் பயணத்தில் அன்பும், நேசமும் நிறைந்த துணை மட்டும் கிடைத்துவிட்டால் போதும். அந்தப் பயணம் இனிமையாய், சுகமாய் இருக்கும். அந்த வாழ்க்கைக்கே ஒரு முழுமை கிடைக்கும்.

ரோஜாவுக்கு இன்று அந்தப் பூரணத்துவம் கிடைத்தது போல் இருந்தது. வாழ்க்கையில் முதல் தடவையாய், நிம்மதியை, மகிழ்ச்சியை இன்னதென்று புரியாத இனிமையானதொரு உணர்வை அனுபவித்துக் கொண்டிருந்த ரோஜா... அந்த உணர்வு உள்ளத்திலும் நிறைந்துவிட, திருப்தியாகக் கண்களை மூடிக் கொண்டாள்.

———

24167